V2:11.31 N59
N60.2154

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## FIFTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**Volume XXI (Nos. 1 to 7).**

*11th to 14th and 16th to 18th March* 1959.

## TABLE OF CONTENTS.

*Wednesday, 11th March* 1959

| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 1-26<br>90-91 |
| II Budget for the year 1959-60—Voting on Demands for Grants for the year 1959-60—<br>(1) Demand I—Land Revenue Department.<br>(2) Demand III—Stamps Administration.<br>(3) Demand XII—District Administration and miscellaneous.<br>(4) Demand XXXIV—Compensation to Zamindars. | 26-89 |
| III Papers laid on the table of the House .. .. .. .. .. | 89 |

*Thursday, 12th March* 1959.

| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 99-122<br>188-190 |
| II Voting on Demands for Grants for the year 1959-60—*cont.*<br>(1) Demand II—Excise Department<br>(2) Demand XV—Police | 122-187 |
| III Paper laid on the table of the House .. .. .. .. .. | 187 |

*Friday, 13th March* 1959.

| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 191-208<br>278-286 |
| II Privilege motion *re* a report in the 'Dinamani' .. .. .. | 208-209 |
| III Government motion *re* Election of members to the Committee of Privileges for the financial year 1959-60 .. .. .. | 209 |
| IV Voting on Demands for Grants for the year 1959-60—*cont.*<br>(1) Demand IX—Head of State, Ministers and Headquarters Staff .. .. .. .. .. .. ..<br>(2) Demand XI—Elections .. .. .. .. .. | 209-277 |

*Saturday, 14th March* 1959.

| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 287-307<br>366-367 |
| II Privilege motion *re* incorrect publication of proceedings in the "Dinamani" .. .. .. .. .. .. | 307 |

[11th March 1959

சொல்லப்படுகிறது. இருந்தாலும் ஆனால் இந்த இடங்களில் எல்லாம் மின்சார வசதி கிடைக்காமல் இருப்பதற்கு காரணம் லைஸன்ஸி எல்லையாக இருப்பதுதான் என்று தெரிகிறது. ஆகவே இந்தத் தடையை நீக்கி அந்த இடங்களுக்கு எல்லாம் மின்சார வசதி கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : பிளானிங் போர்டிலிருந்து இது பற்றிய எந்த கோரிக்கையும் அரசாங்கத்திற்கு வரவில்லை. உடையார் பாளையம் தாலுகா பிற்பட்ட இடம் என்று கருதி, அங்கு லைஸன்ஸி முறையில் மின்சாரம் நடப்பதாக இருந்தாலும் பல இடங்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் ஆண்டிமடம் போன்ற கிராமங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேலும் கூடுதலாக தென் ஆற்காடு பகுதியிலிருந்து மின்சார வசதி கொடுப்பதற்காக சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. PERIANNAN : தலைவர் அவர்களே, பெரம்பலூர் தாலுகாவில் இவ்வாண்டு எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க திட்டம் இருக்கிறது என்று தனியாகச் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்ல முடியும். இருந்தாலும், உடையார்பாளையம், பெரம்பலூர் பகுதிகள் பிற்போக்காக இருப்பதால் லைஸென்ஸிகளிடத்திலிருந்து மின்சார போர்டே எடுத்துக்கொள்ளலாமா என்பது இப்போது கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI K. R. VISWANATHAN : இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட போவது மின்சார போர்டு எடுத்துக்கொண்ட பிறகா ? அல்லது முன்பாகவே நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

THE HON SRI V. RAMAIAH : நான் குறிப்பிட்ட அந்தத் திட்டம் இப்போது பரிசீலிக்கப்பட்டு, கூடிய சீக்கிரம் நடைமுறையில் கொண்டுவரப்படும் என்று கருதுகிறேன்.

SRI K. PERIANNAN : பெரம்பலூர், உடையார்பாளையம் பகுதிகள் பிற்பட்ட பகுதிகள் என்று அரசாங்கம் அறிந்திருந்தும் கூட, கம்பெனியார் நடத்துவதால், மின்சாரம் விஸ்தரிப்பதில் தடையாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்த ஏரியாக்களை மின்சார போர்டுக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கேள்விக்கு கனம் அங்கத்தினருடைய முதல் கேள்வியிலேயே பதில் கொடுத்து விட்டேன். உடையார்பாளையம், பெரம்பலூர் பகுதிகள் பிற்போக்காக இருக்கிறது என்ற காரணத்தினால், லைஸென்ஸீக்கள் போதுமான விஸ்தரிப்பு செய்ய இது வரையில் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், அந்தப் பகுதியை மின்சார போர்டே எடுத்துக்கொள்ளலாமா என்று பார்த்து, இப்போது பேச்சு வார்த்தை நடக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : ஸார், லைஸென்ஸீக்கள் இம்மாதிரி பிரதேசங்களில் விஸ்தரிப்பதில், அவர்கள் செலவு செய்யும் தொகையை மூலதனமாகக் கருதுவதால் 15 சதவீதம் உத்திரவாதம் இருந்தால்தான் விஸ்தரிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். மின்சார போர்டில் 10 சதவீதம் என்று வைத்திருக்கிறார்கள். அதே போல் லைஸென்ஸீக்களும் 10 சதவீதம் உத்திரவாதம் இருந்தால் விஸ்தரிக்க வேண்டுமென்று ஒரு உத்திரவைப் போட அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது இருக்கக் கூடிய புகாரெல்லாம் 10 சதவீதமோ, 15 சதவீதமோ, 25 சதவீதமோ எப்படியாவது மின்சாரம் வந்தால் போதும் என்பதுதான். பத்து சதவீதம் என்றால் கூட



11th March 1959]

இரண்டு கிராமங்களுக்குக்கூட இல்லாமல் போய்விடும். லைஸென்சி பகுதிகளிலுள்ள கிராமங்களை அறிந்து, லைஸென்ஸீக்குக் கொடுக்கப்பட்டிருப்பதில் எந்த வித கஷ்டமுமில்லாமல் மின்சார போர்டே அந்தப் பகுதியில் ஏன் மின்சாரத்தைப் பரப்பக்கூடாது என்று அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

* 695 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether this Government have received any grant from the Centre in 1958 for rural electrification?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

SRI N. K. PALANISAMI : கிராமப் புறங்களில் மின்சார அபிவிருத்திக்காக மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் ஏதாவது உதவித் தொகை கேட்டதா ?

THE HON. SRI V. RAMAIAH : அவர்களுடைய உதவி இல்லாமலேயே போதுமான அளவு செய்துகொண்டிருக்கிறோம்.

*Municipal Electrical undertakings*

* 696 Q.—SRI S. LAZAR (on behalf of Sri P. S. K. Lakshmipatbi Raju.) கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) முனிசிபாலிட்டிகளால் நிர்வகிக்கப்படும் மின்சார ஸ்தாபனங்களில் எத்தனை அரசாங்கம் எடுத்து நடத்துகிறது ?

(ஆ) அவைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Twenty.

(b) 1. Palani.
2. Dharapuram.
3. Dindigul.
4. Kancheepuram.
5. Kodaikanal.
6. Ootacamund.
7. Tiruppur.
8. Tiruvallur.
9. Tiruvannamalai.
10. Udamalpet.
11. Virudhunagar.
12. Coonoor.
13. Periyakulam.
14. Sivakasi.
15. Alandur.
16. Thiruvothiyur.
17. Sembium (belonging to the Corporation of Madras)
18. Villivakkam.
19. Tiruppathur (North Arcot district).
20. Bodinaickanur.

சொல்லப்படுகிறது. இருந்தாலும் ஆனால் இந்த இடங்களில் எல்லாம் மின்சார வசதி கிடைக்காமல் இருப்பதற்கு காரணம் லைசென்ஸி எல்லையாக இருப்பதுதான் என்று தெரிகிறது. ஆகவே இந்தத் தடையை நீக்கி அந்த இடங்களுக்கு எல்லாம் மின்சார வசதி கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : பிளானிங் போர்டிலிருந்து இது பற்றிய எந்த கோரிக்கையும் அரசாங்கத்திற்கு வரவில்லை. உடையார்பாளையம் தாலுகா பிற்பட்ட இடம் என்று கருதி, அங்கு லைஸென்ஸி முறையில் மின்சாரம் நடப்பதாக இருந்தாலும் பல இடங்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் ஆண்டிமடம் போன்ற கிராமங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேலும் கூடுதலாக தென் ஆற்காடு பகுதியிலிருந்து மின்சார வசதி கொடுப்பதற்காக சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. PERIANNAN : தலைவர் அவர்களே, பெரம்பலூர் தாலுகாவில் இவ்வாண்டு எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க திட்டம் இருக்கிறது என்று தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்ல முடியும். இருந்தாலும், உடையார்பாளையம், பெரம்பலூர் பகுதிகள் பிற்போக்காக இருப்பதால் லைசென்ஸிகளிடத்திலிருந்து மின்சார போர்டே எடுத்துக்கொள்ளலாமா என்பது இப்போது கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI K. R. VISWANATHAN : இந்தத் திட்டம் நிறைவேற்றப்படபோவது மின்சார போர்டு எடுத்துக்கொண்ட பிறகா ? அல்லது முன்பாகவே நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

THE HON SRI V. RAMAIAH : நான் குறிப்பிட்ட அந்தத் திட்டம் இப்போது பரிசீலிக்கப்பட்டு, கூடிய சீக்கிரம் நடைமுறையில் கொண்டுவரப்படும் என்று கருதுகிறேன்.

SRI K. PERIANNAN : பெரம்பலூர், உடையார்பாளையம் பகுதிகள் பிற்பட்ட பகுதிகள் என்று அரசாங்கம் அறிந்திருந்தும் கூட, கம்பெனியார் நடத்துவதால், மின்சாரம் விஸ்தரிப்பதில் தடையாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்த ஏரியாக்களை மின்சார போர்டுக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கேள்விக்கு கனம் அங்கத்தினருடைய முதல் கேள்வியிலேயே பதில் கொடுத்து விட்டேன். உடையார்பாளையம், பெரம்பலூர் பகுதிகள் பிற்போக்காக இருக்கிறது என்ற காரணத்தினால், லைசென்ஸீக்கள் போதுமான விஸ்தரிப்பு செய்ய இது வரையில் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், அந்தப் பகுதியை மின்சார போர்டே எடுத்துக்கொள்ளலாமா என்று பார்த்து, இப்போது பேச்சு வார்த்தை நடக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : ஸார், லைசென்ஸீக்கள் இம்மாதிரி பிரதேசங்களில் விஸ்தரிப்பதில், அவர்கள் செலவு செய்யும் தொகையை மூலதனமாகக் கருதுவதால் 15 சதவீதம் உத்திரவாதம் இருந்தால்தான் விஸ்தரிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். மின்சார போர்டில் 10 சதவீதம் என்று வைத்திருக்கிறார்கள். அதே போல் லைசென்ஸீக்களும் 10 சதவீதம் உத்திரவாதம் இருந்தால் விஸ்தரிக்க வேண்டுமென்று ஒரு உத்திரவைப் போட அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது இருக்கக் கூடிய புகாரெல்லாம் 10 சதவீதமோ, 15 சதவீதமோ, 25 சதவீதமோ எப்படியாவது மின்சாரம் வந்தால் போதும் என்பதுதான். பத்து சதவீதம் என்றால் கூட



இரண்டு கிராமங்களுக்குக்கூட இல்லாமல் போய்விடும். லைசென்சி பகுதிகளிலுள்ள கிராமங்களை அறிந்து, லைசென்ஸீக்குக் கொடுக்கப்பட்டிருப்பதில் எந்த வித கஷ்டமுமில்லாமல் மின்சார போர்டே அந்தப் பகுதியில் ஏன் மின்சாரத்தைப் பரப்பக்கூடாது என்று அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

* 695 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether this Government have received any grant from the Centre in 1958 for rural electrification?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

SRI N. K. PALANISAMI : கிராமப் புறங்களில் மின்சார அபிவிருத்திக்காக மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் ஏதாவது உதவித் தொகை கேட்டதா ?

THE HON. SRI V. RAMAIAH : அவர்களுடைய உதவி இல்லாமலேயே போதுமான அளவு செய்துகொண்டிருக்கிறோம்.

### *Municipal Electrical undertakings*

* 396 *Q.*—SRI S. LAZAR (on behalf of Sri P. S. K. Lakshmipathi Raju.) கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) முனிசிபாலிட்டிகளால் நிர்வகிக்கப்படும் மின்சார ஸ்தாபனங்களில் எத்தனை அரசாங்கம் எடுத்து நடத்துகிறது ?

(ஆ) அவைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Twenty.

(*b*) 1. Palani.
2. Dharapuram.
3. Dindigul.
4. Kancheepuram.
5. Kodaikanal.
6. Ootacamund.
7. Tiruppur.
8. Tiruvallur.
9. Tiruvannamalai.
10. Udamalpet.
11. Virudhunagar.
12. Coonoor.
13. Periyakulam.
14. Sivakasi.
15. Alandur.
16. Thiruvothiyur.
17. Sembium (belonging to the Corporation of Madras)
18. Villivakkam.
19. Tiruppathur (North Arcot district).
20. Bodinaickanur.

[11th March 1959

*Andimadam-Kodukkur road*

697 *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Divisional Engineer, Tiruchirappalli, recommended to the Government the change of alignment of the formation of road between Andimadam and Kodukkur in Udaiyarpalayam taluk, Tiruchirappalli district, so as to pass through Idaiyankurichi village in the same taluk; and

(*b*) the nature of orders passed by the Government?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) Government did not accept the recommendation. The original alignment was allowed to stand.

Sri K. R. VISWANATHAN : மேற்படி சாலையானது இடையன் குறிச்சி வழியாகப் போனால் பல கிராமங்கள் அந்தப் பாதையின் வழியில் இருக்குமாதலால், இப்போது இருக்கக்கூடிய வழி காட்டு வழியாகச் செல்லுவதால் அந்த கிராமம் வழியாகச் சென்றால் வசதியாக இருக்கும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. மேற்படி கிராம மக்களாலும் மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அரசாங்கம் இதைச் சிந்தித்து அந்தப் பாதையை மாற்ற முயற்சிப்பார்களா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : இந்த ரோடு இப்போது 5 மைல் தூரம் சிராக்கப்பட்டிருக்கிறது. அந்த ரோடில் இந்த விதமான பாதை அமைப்பை எடுத்துக்கொள்ள 15,000 ரூபாய் கூடுதல் செலவாகும் என்று இருப்பதால் முன்பு எடுத்த சாலையையே எடுத்திருக்கின்றோம்.

*Andimadam-Alathur road*

* 698 *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any mahazar, dated 26th August 1958 from the villagers of Andimadam, Udayarpalayam taluk, Tiruchirappalli district, regarding the alignment of road between Andimadam and Alathur (via) Agaram, Mudukulam and Pukkizhi villages; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri K. R. VISWANATHAN : 1956-ம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் சர்க்காருக்கு மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. நான் கூட இரண்டு தடவைகள் இத்தகைய மகஜரை அனுப்பியிருக்கிறேன். சர்க்கார் மகஜர் கிடைக்கவில்லை என்றால் எனக்குப் புரியவில்லை. இருந்தாலும், இத்தகைய ரோடு அமைக்கவேண்டுமென்பதன் அவசியத்தை அறிந்து அமைக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : 26-8-1958 தேதியிட்ட மகஜர் வந்ததா என்று குறிப்பாகக் கேட்டிருப்பதால் இல்லை என்று சொன்னேன். மார்ச் மாதத்தில் இதைப் பற்றி ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதை கவனித்தபோது இப்போது இந்த ரோடை எடுத்துக்கொள்ள வசதி இல்லை என்று தோன்றுகிறது.



11th March 1959]

*Tractors*

* 699 *Q.*—Sri A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of tractors available, district-war;

(*b*) the date of purchase;

(*c*) the number of tractors under repair and why the old ones have not been replaced;

(*d*) whether any new tractors were purchased recently; and

(*e*) the number of tractors condemned so far?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The answer[a] is placed on the table of the House.

Sri A. GOVINDASAMY : மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கிற விடைத்தாளில் 67 டிராக்டர்கள் ரிப்பேராக இருப்பதாகவும், 3 டிராக்டர்கள் கெட்டுவிட்டதால் கன்டெம் செய்யப்பட்டதாகவும் இருக்கிறது. ரிப்பேர் ஆகிவிட்ட டிராக்டர்களை மறுபடியும் ரிப்பேர் செய்ய அரசாங்கம் என் நீண்ட காலம் எடுத்துக்கொள்ளுகிறது.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சாதாரணமாக ஒரு டிராக்டரின் ஆயுள் காலம் 7 ஆண்டுகள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 7 ஆண்டுகள் வரையில் டெப்ரிஸியேஷன் மதிப்பிடப்படுகிறது. சில டிராக் டர்கள் [illegible] கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன் 12 ஆண்டுகள் கூட ஆகின்றன. ரிப்பேர் செய்ய எந்தெந்த அளவு சாத்தியம் இருக்கிறதோ அந்தந்த அளவு செய்யப்படுகிறது. ரிப்பேர் செய்ய ஸ்பேர் பார்ட்ஸ் வேண்டும். ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. கிடைக்கும் அளவுக்கு ரிப்பேர் செய்து அவைகளை ஓட்டுவதிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri A. GOVINDASAMY : தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ள 17 டிராக்டர்களில் எவ்வளவு உபயோககரமாக இருக்கிறது ? எவ்வளவு பழுதுபட்டிருக்கிறது.?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அந்த விவரம் என்னிடம் இல்லை.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்த ஜாபிதாவில் பார்க்கும் போது 1953-ம் வருஷத்திற்கு மேல் எந்த டிராக்டரும் வாங்கப்படவில்லை. அதுவும் 142 டிராக்டர்கள் தான் காணப்படுகின்றன. அதனால் நிறைய டிராக்டர்களை உபயோகப்படுத்தும்படியான நிலையில் இங்கே விவசாய மக்கள் இல்லை என்பது புலனாகிறது. இவைகளை உபயோகப்படுத்தி பெரிதும் பயன் படுத்த என்ன முயற்சி அரசாங்கம் எடுத்துக் கொள்கிறார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : டிராக்டர்களை அதிகமாக உபயோகப்படுத்த விவசாயிகள் முன் வருகிறார்கள். ஆனால் புதிதாக டிராக்டர்களை வாங்குவதிலே தயக்கம் இருக்கிறது. முன்பே குறிப்பிட்டது போல ஒரு டிராக்டரின் ஆயுட் காலம் 7 ஆண்டுகள் தான். 7 ஆண்டுகளுக்கு டெப்ரிஸியேஷன் எல்லாம் போட்டு, மூலதனத்திற்கு உரிய வட்டி போட்டு, ஸ்பேர் பார்ட்ஸுக்கு 4 சதவீதம் போட்டுப் பார்த்தால் லாபம் வருவதில்லை. லாபமும் வேண்டாம், நஷ்டமும் வேண்டாம் என்று தான் இப்போதே போட்டிருக்கிறோம். இருந்தாலும் நஷ்டம் வருகிறது. அதனால் தான் மேற்கொண்டு டிராக்டர்கள் வாங்கவில்லை. ஹயர் பர்சேஸ் ஸிஸ்டத்தின் கீழ் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு வருஷத்திற்கு 10 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது பயன்படுத்தப் பட்டு வருகிறது. அரசாங்கம் டிராக்டரை வாங்கி வைப்பது லாபகரமாக

[a] Printed as Appendix IV on page 94 infra.

[11th March 1959

இல்லை. விவசாயிகள் ரொம்ப வேண்டுமென்கிறார்கள். ரஷ்யாவிலே கூட சென்ட்ரல் டிராக்டர் ஆர்கனைஸேஷன் வேலை செய்வதிலே 10 வருஷம், 9 வருஷம் ஆயுள் காலம் என்று இருந்தாலும் 3 வருஷத்திற்குள் பிரயோசனமில்லாமல் போய்விடுகிறது என்று கருதி கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**Mr. SPEAKER** : இந்தக் கேள்வி மீது உப கேள்வி போட அநேக அங்கத்தினர்கள் கைதூக்குகிறார்கள். கேள்வி நேரம் 9–30 மணிக்கு மேல் போனால் மான்யக் கோரிக்கை காலம் குறைந்து போய் விடும். ஆகையால் இதைப் பற்றி மான்யக் கோரிக்கை வரும்போது பேசவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் அனுமதி கொடுப்பது கஷ்டம் தான் என்று நினைக்கிறேன். அடுத்த கேள்வி.

[Sri S. M. Annamalai rose . . .]

**Mr. SPEAKER** : இன்னும் என்ன சொல்லப்போகிறீர்கள் ? இன்னும் பதிலளிக்க வேண்டிய கேள்விகள் 31 இருக்கின்றன. அதனால், நீங்கள் ஏதாவது சொல்லவேண்டுமானால் மான்யக் கோரிக்கையின் மீது பேசும்போது சொல்லலாம். மூலக் கேள்வி போட்ட கனம் அங்கத்தினர் ஏதாவது கேள்வி கேட்கவேண்டும் என்று சொன்னால், அதில் அர்த்தம் உண்டு. நீங்கள் எப்படிக் கேட்க முடியும் ? ஸ்ரீ கோவிந்தசாமி அவர்களே மேற்கொண்டு கேள்விகள் இதில் கேட்காமலிருக்கும்போது, அதற்குமேல் நீங்கள் சொல்லவேண்டுமானால் மான்யக் கோரிக்கையின்போது சொல்லுங்கள்.

### *Training centres in Carpentry*

* 700 *Q.*—**Sri P. G. MANICKAM** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷத்திலே கோயம்புத்தூர் ஜில்லாவில் தச்சுவேலை பயிற்சி கொடுப்பதற்காக சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த இடங்களிலே தச்சுவேலைப் பயிற்சி சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(இ) எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது ?

(ஈ) இவர்களுள் எத்தனை பேர் ஹரிஜனங்கள் ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) Rs. 27,980.

(*b*) Karadibavi, Pollachi and Periyanaickenpalayam.

(*c*) One hundred and forty-nine.

(*d*) Thirty-two.

**Sri P. G. MANICKAM** : ஹரிஜனங்களில் ஒரு சிலர்தான் இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட தொழிற் பயிற்சி அனேக ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டால் தான் பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைய முடியும். ஆகையால், இப்படிப்பட்ட தொழிற் பயிற்சியிலே 50 சதவிகிதமாவது ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட சர்க்கார் கவனம் செலுத்துமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பயிற்சிக்கு வருகின்றவர்களை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், நிர்ப்பந்தம் பண்ண முடியாது. 149 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அதில் 32 பேர்கள் ஹரிஜனங்கள் என்ற தகவல் கொடுத்திருக்கிறேன். இன்னும் அதிகமான எண்ணிக்கையில் ஹரிஜன மக்கள் வந்தால் அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.



11th March 1959]

### *Agricultural pump-sets*

* 701 *Q.*—**Sri K. SATTANATHA KARAYALAR** : (on behalf of Sri D. S. Authimoolam) : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் பதிலளிப்பாரா—

விவசாய பம்புகளுக்கு எக்ரிமெண்ட்டில் உள்ள ஷரத்துக்கள்படி இல்லாமல் குறைந்த H. P. மோட்டார்கள் வைத்தால் அந்தக் குறைந்த H. P. மோட்டாருக்கு கட்டணம் வசூலித்தால் போதுமென்று உத்தரவிட சர்க்கார் யோசிக்குமா ?

**The Hon. Sri V. RAMAIAH** : No Sir. There is however a provision in the rules, that before the execution of an extension scheme, if a party to an agreement finds that the capacity of the motor mentioned in the agreement is more than his actual requirements and therefore instals a motor of lower capacity, the agreement may be altered, after recording reasons for such alterations, provided the remunerative nature of the main scheme is not affected.

### *Palmyra brushes*

* 702 *Q.*—**Sri P. G. MANICKAM** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பனை மரத்தின் மட்டைகளிலிருந்து பிரஷ்கள் செய்யப்படுவதற்காக அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டிருக்கும் ஒவ்வொரு பயிற்சி சாலைகளிலும் (Departmental-training-*cum*-Production Centres) 1955-ம் வருஷத்திலே எத்தனை பேர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது?

(ஆ) இப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் என்னென்ன உதவிகள் அளிக்கப்படுகின்றன ?

(இ) இப் பயிற்சி காலம் முடிந்ததும் தொழில் செய்வதற்காக என்னென்ன உதவிகள் இவர்களுக்கு அளிக்கப்படுகின்றன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) Training-*cum*-Production Centre at Vedaranyam, Tanjore district—6.

Training-*cum*-Production Centre at Devipatnam, Ramanathapuram district—8.

Training-*cum*-Production Centre at Kulasekarapatnam, Tirunelveli district—9.

(*b*) During the period of training, the trainees were each paid a daily wage of Re. 1. They were trained in extraction of fibre from stems, in cleaning and sorting the fibre, and in manufacture of brushes under the supervision and guidance of an Instructor and a Carpenter appointed for the purpose.

(*c*) Arrangements are being made to organise industrial Co-operative societies at Devipatnam and Kulasekarapatnam with the ex-trainees so as to enable them to continue the industry and to take up production on commercial basis. As there is no scope of forming such a Society at Vedaranyam, a proposal to give financial assistance to the trainees of this place under the State Aid to Industries Act is under consideration.

[11th March 1959

**Sri A. VEDARATHNAM:** வேதாரண்யத்தில் நடந்த அந்த சொஸைட்டியைக் கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு பத்து பேருக்கு அதிகமாக மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் அங்கே பயிற்சி அளிக்கப்பட்டதே ஆறு பேருக்கு, அந்தக் காரணத்தை வைத்து, அந்தத் தொழிலை அங்கே மூடிவிடாமல் புதிய நபர்களுக்குப் பயிற்சியளிக்கும் முறையில் அங்கே மீண்டும் அதை வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** கூட்டுறவுமுறையிலே நடத்துவதற்குக் குறைந்தபட்சம் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எண்ணிக்கை இல்லாமல் கூட்டுறவு ஸ்தாபனம் அமைப்பதற்கில்லை. ஆனால், கூட்டுறவு ஸ்தாபனம் அமைக்க முடியாத நிலையிலே ஸ்டேட்-எய்ட் இன்டஸ்ட்ரீஸ் சட்டப்படி அவர்களுக்கு உதவி அளித்து, பயிற்சிபெற்ற ஆறு பேர்களும் தனியாக தொழிலை ஸ்தாபிப்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**Sri M. K. SOMASUNDARAM:** திருநெல்வேலி ஜில்லாவில் குலசேகரப்பட்டிணத்தில் நடந்துவரும் பயிற்சி நிலயத்தில் சேர அதிகமாணவர்கள் அப்ளிகேஷன் அனுப்பியும் இடம் கொடுக்கப்படாதது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதை விஸ்தரிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** இதைப்பற்றி எனக்குத் தகவல் கனம் அங்கத்தினர் கொடுத்தால் நான் அதைக் கவனிக்கிறேன்.

### *Refugees from Ceylon*

* 703 *Q.*—**Sri S. M. ANNAMALAI** (on behalf of Sri M. P. Sarathi): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷம் இலங்கையிலிருந்து இந்த ராஜ்யத்துக்கு வந்துள்ள அகதிகள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் புனர் வாழ்விற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

(இ) மத்திய அரசாங்கம் இதற்கு உதவி செய்தார்களா ? அந்த உதவியின் அளவு என்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** (*a*) During the period from 1st January to 28th December 1958, 9,252 persons have come to this State from Ceylon.

(*b*) The Government had appointed a Special Officer to go into the question of the rehabilitation of Ceylon repatriates. The recommendations of the Special Officer are being examined and orders have been issued on some of the recommendations. As regards employment in Government services, Government have ordered that rules should be relaxed in deserving cases where a repatriate is found *prima facie* suitable for appointment. Repartiates are also given second preference after war service candidates for appointment to the Last Grade Service in this State.

(*c*) No, Sir.

**Sri S. B. ADITYAN:** May I know whether the report of the Special Officer will be made available to the Members of this House?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** Some of the recommendations of the Special Officer have not yet been considered fully. When all the recommendations have been considered, this Government will look into the question of placing the report on the table of the House.



11th March 1959]

* **Sri M. KALYANASUNDARAM:** இது வரை முடிவெடுக்கப்பட்ட சிபார்சுகள் யாவை என்று இப்பொழுது சொல்ல முடியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** Those recommendations are what I have stated—preference in employment of War Service candidates and relaxation, in certain deserving cases, of the rules. There are a few other recommendations also and if the hon. Member puts a separate question, I may give the information.

**Sri S. NAGARAJA MONIGAR:** இவர்களை "அனாதைகள்" என்று சொல்கிறபோது, இவர்களில் அங்கு சில தலைமுறைகளாகவே இருந்து வாழ்ந்தவர்கள், இப்பொழுது சமீபமாகச் சென்றவர்கள் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு கணக்கிடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** அங்கிருந்து வந்தவர்களிலே இப்பொழுது அவர்களுடைய பொருளாதார நிலை என்ன என்பதுதான் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

**Sri A. GOVINDASAMY:** சிலோனிலே வியாபாரம் செய்து பாதிக்கப்பட்டு இங்கே திரும்பிய வியாபாரிகளுக்கு இங்கே புதிதாக வியாபாரம் செய்வதற்கு ஏதாவது அரசாங்கம் கடனுதவி அளிக்கிறதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** அதுவும் கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது. அவர்கள் நிமித்தம் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலைகூட வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**Sri S. LAZAR:** இதுபோன்று வந்திருக்கும் அகதிகளிலே ஒரு சிலர் கல்வி பயின்றவர்கள். ஆனால், அவர்கள் அரசாங்க உத்தியோகம் வேண்டுமென்று பப்ளிக்சர்விஸ் கமிஷனுக்கு மனுச்செய்துகொள்ளும்போது, அவர்களுடைய படிப்பு வேறு முறையிலே சிலோனிலே அமைந்திருப்பதாலும், ஒரு சிலருக்கு வயது அதிகமாய்விட்ட காரணத்தாலும் வேலை வாய்ப்பு கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதற்கு ஏதாவது சர்க்கார் சலுகை கொடுக்க முன்வருமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். தகுதிக்கேற்றவாறு உத்தியோகங்கள் கொடுக்கப்படும். அவசியமானால் விதிகளும் ரிலாக்ஸ் செய்யப்படும்.

**Sri M. JAGANNATHAN:** இன்னும் இந்த அகதிகளெல்லாம் நம் நாட்டுக்கு வந்துகொண்டிருக்கிறார்களா ? அல்லது அது தடை செய்யப்பட்டிருக்கிறதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** இங்கே வருவது ஒன்றும் தடை செய்யப்படவில்லை. அப்போதைக்கப்போது வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். போய்க்கொண்டே இருந்ததுபோல் வந்துகொண்டிருக்கிறார்கள்.

**Sri K. VINAYAKAM:** Since this problem of rehabilitating these refugees from Ceylon is a huge one which should be tackled on a larger basis and since also this happens to be an international question concerning two nations, why did not the Government make representations to the Central Government for more aid so that we may go to the succour of these refugees in an adequate measure?

[11th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Whether this is an international question or not, the Government of India have also been looking into this question and I have just now mentioned that there is a proposal to start a Co-operative Spinning Mill for the benefit of the refugees. In that matter the Government of India are very much interested.

*The Madras Public Health Act*

* 704 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Madras Public Health Act, 1939 (Madras Act III of 1939) has been extended to the Kanyakumari district?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

SRI T. T. DANIEL: Will the Government consider the desirability of extending the Madras Public Health Act, 1939 to the transferred territory also as early as possible?

THE HON. SRI M. A. MANICKAVELU: The difficulty now is that area is covered by the Travancore-Cochin Public Health Act whose provisions are substantially different from those of the Madras Act. The Government have issued instructions for a scrutiny of these provisions with a view to finding out whether there will be any need for amending our own Act to suit certain peculiar conditions there. After that examination, necessary action will be taken.

SRI T. T. DANIEL: May I know approximately within what time the Government will be able to bring in necessary legislation?

THE HON. SRI M. A. MANICKAVELU: As early as possible.

*Import of rice*

* 705 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any representations have been made to the Government of India for the allotment of imported rice to the State; and

(b) if so, the quantity allotted for the current year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) In view of the answer to clause (a) this does not arise.

* 706 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether this Government have requested the Centre in 1958 to arrange for the import of Chinese rice for supply to this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.



11th March 1959]

SRI M. KALYANASUNDARAM: இந்த அரிசி கேட்டு கொடுக்கப் பட்டதால் நியாய விலைக் கடைகள் மூடப்பட்டனவா? அல்லது இங்கே நியாய விலைக் கடைகளுக்கு அவசியம் இல்லை என்பதால் மூடப்பட்டனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நியாய் விலைக் கடைகள் அரிசியைப் பொருத்தமட்டில், மூடப்பட்டன. இந்த அரசாங்கத்தைப் பொருத்தவரையில் சீன அரிசியோ ரஷ்ய அரிசியோ வேண்டுமென்று கோரவில்லை. மத்திய அரசாங்கம் என்ன கோரினார்கள், என்ன கிடைத்தது என்று இந்த அரசாங்கத்திடம் தகவல் இல்லை.

SRI N. K. PALANISAMI: நம் மாகாணத்திற்குப் போதுமான "பப்பர்ஸ்டாக்" ஆக அரிசி வேண்டுமென்று மத்திய சர்க்காரை எப்போதாவது கேட்டதுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கேட்கவில்லை; கேட்க வேண்டிய நிமித்தம் ஏற்படவில்லை.

SRI S. LAZAR: ஒரு சில மேற்கத்தி நாடுகளிலிருந்து பால் பௌடர் 9-0
உணவு பொருள்கள் இங்கே வந்துகொண்டிருப்பது போன்று கிழக்கத்திய p.m.
நாடுகளிலிருந்து இனமாக அரிசியைக் கொண்டு வருவதற்கு முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அரிசி பிச்சை எடுக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை.

SRI A. GOVINDASAMY: போதுமான அரிசி நமக்குக் கிடைக்காமல் இருப்பதாலும், அதன் விலை அதிகமாக இருப்பதாலும், பதுக்கல்காரர்கள் அரிசியை பதுக்கி வைத்துக்கொண்டிருப்பதாலும், வெளியிலிருந்து அதாவது பர்மா முதலிய இடங்களிலிருந்து இங்கு கொண்டு வந்து குறைந்த விலைக்கு விற்கும்படியான ஏற்பாடு செய்வதோடு பதுக்கல்காரர்களுக்கு ஒரு ஏமாற்றத்தை உண்டு பண்ணுவதற்கு இந்த சர்க்கார் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பதுக்கல்காரர்கள் அரிசியை பதுக்கி வைத்துக்கொண்டிருந்தால் அதை வெளியே கொண்டு வருவதற்கு அரசாங்கத்திடம் வழி இருக்கிறது. அதற்காக பர்மாவிலிருந் அரிசியைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை.

*City hospitals*

* 707 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government are aware of the over-crowding in the hospitals in the Madras City; and

(b) if so, the action taken to increase the bed-strength of the hospitals?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Yes, Sir.

(b) All possible steps have been taken to provide more facilities for in-patient treatment at the City Hospitals.

SRI A. A. RASHEED: When was the bed strength increased recently in the Hospitals?

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, we have been increasing the bed strength. Last time the bed strength of the General Hospital was raised from 887 to 1,125. Proposals for improvements to the out-patient department at a cost of Rs. 90,000

has been recently sanctioned. A proposal for extension of spurs in both sides of Wards Nos. 3, 4, 6 and 7 in the Hospital so as to provide more accommodation for in-patient treatment is under consideration.

With regard to the Government Stanley Hospital, the bed strength was increased from 724 to 800. There is also a proposal to construct a three-floor men chronic medical block of 90 beds.

With regard to the Government Hospital of Integrated Medicine, the bed strength was increased from 210 to 270. Like that, there is some increase in other hospitals also.

SRI A. A. RASHEED : Has any extension been made in the Mental Hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. In the Government Mental Hospital, the bed strength was increased from 888 to 1,800.

SRI K. B. S. MANI : இம்மாதிரி சென்னை நகரத்தில் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஜனத்தொகை காரணமா, அல்லது சென்னைக்கு வந்து போகிற ப்ளோட்டிங் ஜனத்தொகை காரணமா அல்லது ப்ளோட்டிங் ஜனத்தொகையால் ஏற்படுகிற வியாதிகள் அதிகமாவதன் காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜனத்தொகை அதிகமாக இருப்பதன் காரணம்தான். ப்ளோட்டிங் ஜனத்தொகை சென்னைக்கு அதிகமாக வந்து போவதன் காரணமும்தான். அதனால் அதிக வியாதிகள் ஏற்படுவதும் காரணமாக இருக்கிறது.

*Pest attack on paddy crops*

* 708 *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the extent of paddy crops affected by pest in October and November 1958 in the Lalgudi taluk, Tiruchirappalli district;

(*b*) the measures taken to fight this menace;

(*c*) whether there is any proposal to provide every District Agricultural Officer with at least 200 sprayers to be given on hire to ryots;

(*d*) if not, whether there is any other scheme with the Government to solve the scarcity of sprayers; and

(*e*) whether there is any proposal to award prizes to officers who have taken prompt action for the effective control of the pests?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*e*) The answer[a] is placed on the table of the House.

SRI S. LAZAR : அதற்குப் பிறகு பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற முறையில் சலுகைகள் வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு சலுகைகள் என்ன வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க முடியுமா ?

[a] Printed as Appendix V on pages 95 infra.



THE HON. SRI M. BHAKTAVATSALAM : பூச்சி மருந்துகளை குறைந்த விலைக்கு அதாவது பாதி விலைக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : இவ்வளவு அதிகமான அளவில் இந்த நோய் பரவுவதற்குக் காரணங்கள் என்ன என்பது ஆராயப்பட்டனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வப்போது ஆராயப்பட்டு வருவது அல்ல. அதைத் தடுப்பதற்கு எல்லாவித அவசியமான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாய இலாகா முன்னமேயே அதைத் தெரிந்துகொள்ள முற்படுகிறார்கள். அப்படி தெரிந்துகொண்டும் வருகிறார்கள். சில சமயங்களில் இயற்கையாகவே பரவலாக வந்துவிடுகிறது. அப்பொழுது ஒன்றும் செய்ய முடிவதில்லை. மருந்துகள்தான் போடப்படுகிறது.

SRI S. LAZAR : இந்த வருஷம் அதிகமாக இருந்தபோதிலும் சென்ற வருஷமும் இதைப்போல் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி நாலைந்து வருஷங்களாக பாதிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. அதனால் கோயம்பத்தூர் ரிசர்ச் ஸ்டேஷனில் ஒரு பிரிவை இங்கே வைத்து அதைப் பற்றி ஆராய்ச்சி செய்து அதன் மீது ஒரு முடிவு எடுக்கும் அளவில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக இந்த பூச்சி விபத்துக்களை தடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. விசேஷமாக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

SRI A. GOVINDASAMY : போதுமான ஸ்ப்ரேயர் கிடைக்காத காரணத்தாலும், ஒரு சில விவசாயிகள் அவைகளை சரியான முறையில் கையாளாத காரணத்தாலும் சிலர் இறக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது என்பது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதனால் போதுமான ஸ்ப்ரேயர்களை விநியோகிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தந்த மாவட்டங்களில் ஒரு சில ஸ்ப்ரேயர்கள் வைக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் ரிசர்வ் ஸ்டாக் வேறு வைக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு அந்த ரிசர்வ் ஸ்டாக்கிலிருந்தும் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த பூச்சி அரிப்பு என்பது எவ்வளவு காலமாக இருக்கிறது, இப்பொழுதுதான் வந்ததா அல்லது பழைய காலத்திலிருந்து இருந்துகொண்டிருக்கிறதா ? அப்படி பழைய காலத்திலிருந்தே இருந்துகொண்டிருந்தால் பழைய காலத்தில் அதைத் தடுப்பதற்கு என்ன முறையைக் கையாண்டு வந்தார்கள். அந்த முறையை ஏன் இப்பொழுதும் கையாளக்கூடாது என்பதாகக் கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பூச்சி தொல்லை என்பது புதிது அல்ல. பழைய காலத்திலிருந்தே எல்லா இடங்களிலும் இருந்திருக்கிறது. விவசாயத்தில் முன்னணியில் இருக்கக்கூடிய ஜப்பானில்கூட பூச்சித் தொல்லை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பூச்சி தொல்லை அவர்களைக்கூட விட்டபாடில்லை என்றும் அதை நாள்தோறும் சமாளிக்க வேண்டியதாக இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, since the operation of spraying these insecticides over pests involves a tedious process, will the Government consider the possibility of spraying from the sky by means of helicopters, as it is done in foreign countries.

[11th March 1959

(b) if so, what the cost of the scheme is?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) None at present, Sir.

(b) Does not arise.

SRI T. T. DANIEL : Sir, in view of the fact that the present dispensary at Kulasekaram has not sufficient space where many of the workers working in the Estates have to go and as there is no dispensary within a range of 9 or 10 miles, will Government consider the desirability of raising the status of this dispensary to the status of a hospital as early as possible?

THE HON. SRI M. A. MANICKAVELU : Though it is called a dispensary, there are 16 beds in that dispensary and there is in-patient accommodation and also there is a hospital in Padmanabhapuram with a bed strength of 46 which is near that place.

*Ambar charkha*

* 712 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have examined the possibility and desirability of operating Ambar Charkhas by power; and

(b) if so, what the conclusions are?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The possibility and desirability of operating Ambar Charkhas by power has not been examined or taken up for consideration by the State Government.

(b) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR : சார், கிட்டத்தட்ட 16 "ஸிபிண்டில் யூனிட்டைப்" போல் அதற்கும் சிறிய யூனிட்டாக இதை ஏன் பவரில் "ஆபரேட்" செய்யக்கூடாது ? இதர மாகாணங்களில் பவரில் ஆபரேட் செய்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காவின் திட்டம் பவரால் ஆபரேட் செய்வது என்பதல்ல. சர்க்கா என்பது கையால் நூற்பது என்னும் திட்டந்தான்.

SRI P. M. MUNUSAMI GOUNDER : தற்போது இந்த அம்பர் சர்க்கா மூலம் வேலை இல்லாதவர்களுக்கு—ஆயிரக் கணக்கானவர்களுக்கு—வேலை கிடைக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமையை உத்தேசித்து இதைப் பவரிலோ, மின்சாரத்திலோ உபயோகிக்கக் கூடாது என்பதைச் சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி வேறு அபிப்பிராயம் இருக்க முடியாது.

SRI G. G. GURUMURTHI : இப்பொழுது இருக்கக்கூடிய அம்பர் சர்க்காவில் அதிகமான நூலை நூற்கலாம் என்பதுபற்றி ஆராய்ச்சி நடை பெற்று வருகிறது என்பது சர்க்காருக்கு தெரியுமா ? அது எப்பொழுது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆராய்ச்சிக்கு முடிவே இல்லையென்பதை கனம் அங்கத்தினர் தெரிந்திருப்பார்கள். அவர்கள் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்து முடிவு ஏற்பட்டால் அது ஏற்றுக்கொள்ளப் படும்.



11th March 1959]

SRI A. R. MARIMUTHU : இப்பொழுது அம்பர் சர்க்காவில் பயிற்சி பெற்றவர்கள் .பயிற்சி பெற்று முடிந்த பிறகு நூற்பதில் சிரமம் இருப்பதால் விட்டு விடுகிறார்கள். அதில் சில மாறுதல்கள் செய்து "பால் பேரிங்" போட்டு சுலபமாகச் சுற்றுவதற்கு வசதி செய்து தரப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்பர் சர்க்கா பயிற்சி பெற்றவர்கள் பின்னர் அதை பயன்படுத்தாமல் இல்லை. இன்னும் சுலபமாகச் சுற்றுவதற்கும், வருவாயை அதிகப்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

* 713 Q.—SRIMATHI KAMALAMBUJA AMMAL (on behalf of Srimathi T. N. Anandanayaki) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have received any petition from weavers stating that carding is found to be very difficult in the Ambar Charkha; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No such petition has been received so far.

(b) Does not arise.

*Travancore Central Co-operative Bank*

* 714 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the reserve funds deposited and shares taken in the Travancore Central Co-operative Bank at Trivandrum by the Co-operative Societies and individuals in the Kanyakumari district and Shencottah taluk are transferred to the Kanyakumari District Central Co-operative Bank and the Tirunelveli District Central Co-operative Bank; and

(b) if not, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Not yet, Sir.

(b) In March 1958, the Registrar of Co-operative Societies, Madras requested his counterpart in Kerala to instruct the Kerala State Co-operative Bank to transfer the assets and liabilities held by it in respect of the societies in the areas transferred to this State, to the Kanyakumari District Co-operative Central Bank. But he has not so far received any reply. This Government therefore propose to address the Government of Kerala on the subject.

SRI T. T. DANIEL : Sir, may I know the reasons why the Kerala Government have not sent a reply? Is there any legal impediment in transferring the shares?

THE HON. SRI R. VENKATARAMAN : I am sorry I cannot say why the Kerala Government have not sent a reply.

[11th March 1959

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இது போன்று மலபாரில் இருக்கக்கூடிய பாங்குடைய 'அஸெட்ஸ அண்டு லயபிலிட்டிஸஸை நாம் 'ட்ரான்ஸ்பர்' செய்த கொடுத்து விட்டோமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : That question may be put separately.

SRI T. T. DANIEL : May I know the amount of the shares which the people of Kanyakumari district have taken in these societies?

THE HON. SRI R. VENKATARAMAN : The amount due by the Kerala State Co-operative Bank as share capital in these societies is Rs. 22,350 and in respect of reserve fund, it is Rs. 75,589.53 nP. Interest on Reserve Capital is Rs. 3,986·63 nP. The total amount due by the Kerala State Co-operative Bank is Rs. 1,92,616. Sir, the answer would be incomplete unless I tell how much is due to them. So far as the amount due to the Kerala State Co-operative Bank on loan is concerned, Principal is Rs. 44,351.43 nP. Interest is Rs. 2,161.46 and the total is Rs. 46,512.89 nP.

*Thirukattupalli Co-operative Bank*

* 715 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri V. Sankaran) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Thirukattupalli Co-operative Bank has gone into liquidation and a liquidator has been appointed for the same; and if so, when;

(*b*) how much of the dues and outstandings have been realised up till date; and

(*c*) whether it is a fact that till now no dividend has been leclared?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. The iquidator took charge of the work on 27th December 1955.

(*b*) Up to 31st December 1958, a sum of Rs. 1,14,791·97 was ealised by the liquidator.

(*c*) Yes, Sir. As numerous disputed and doubtful claims have een preferred, the accounts of the Bank for the period from 1st uly 1951 to 30th June 1954 are being re-audited. On completion f the re-audit, the exact amount of liabilities will be known and teps will be taken to pay the dividend to the creditors.

*Gypsum*

* 716 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. ne Minister for Industries be pleased to state—

(*a*) the names of the firms to which lands have been leased ut by the Government for mining gypsum in Tiruchirappalli istrict; and

(*b*) the rate of royalty collected from these firms?



11th March 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) (1) Trichinopoly Mining Works (Private), Ltd., Ariyalur.

(2) India Cements, Ltd., Thalaiyuthu.

(3) Dalmia Cements (Bharat), Ltd., Dalmiapuram.

(4) Gypsum Industries, Tiruchirappalli.

(5) P.A.C. Ramasamy Raja, Ariyalur.

(6) Avva Bibi, Tiruchirappalli.

Particulars in respect of leases in patta lands are being gathered.

(*b*) Particulars are awaited from the Collector of Tiruchirappalli. A statement containing the necessary particulars will be placed in the Legislature Library soon after their receipt.

SRI K. SATTANATHA KARAYALAR : சார், "ஆண்டி பயாடிக்" செய்வதற்கு தற்சமயத்தில் அகில இந்திய ரீதியில் சில "ஆண்டி பயாடிக்" யூனிட் போடுவதாக இருக்கிறதா ? நம்முடைய மாகாணத்தில் வைக்கவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : முயற்சி எடுக்கப்படும்.

*Manufacture of drugs.*

* 717 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to help the industrialists to manufacture drugs locally; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) There is no special proposal to help the industrialists to set up plants for the manufacture of drugs locally. However, facilities such as supply of water and electric power, acquisition of land under the Land Acquisition Act for location of factory and financial assistance under the State Aid to Industries Act will be afforded to any promising enterpreneur who approaches the Government for these facilities.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the Russian Government have offered to start a drug factory in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : They have not offered to start a drug factory, but they have examined the possibility of starting drug factories in various parts of India, including Madras State.

SRI M. JAGANNATHAN : How do the Government come to the conclusion that a particular entrepreneur is promising or not?

THE HON. SRI R. VENKATARAMAN : That really is the test of a good Government. They cannot accept any man that comes and says he would start a factory, without previous experience, without facilities and capital; all that are needed.

[11th March 1959

SRI S. NAGARAJA MONIGAR : இந்திய நாட்டு மருந்துகளைத் தயாரிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது ? அதற்கான தொழிற்சாலைகளை அதிகரித்து வருகிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : That question may be addressed to my colleague, the Minister for Health.

MR. SPEAKER : Starred questions Nos. 718, 719 and 720 are all about powerlooms and they may be taken up together.

*Powerlooms*

* 718 Q—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழிலமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ல் விசைத்தறிகள் நம் மாநிலத்தில் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன ?

(ஆ) இதற்கு மத்திய சர்க்கார் கடனாகவும் மான்யமாகவும் எவ்வளவு தொகை கொடுத்துள்ளனர் ?

(இ) இதைப் புகுத்தக் கூடாதென பொது மக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதாகிலும் வந்ததா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No powerlooms were installed in our State during the year 1958.

(*b*) & (*c*) : Do not arise.

* 719 *Q*.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government of India have sanctioned any loan so far, for the implementation of the scheme for the experimental conversion of handlooms into powerlooms; and

(*b*) if so, the amount of loan sanctioned?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir,

(*b*) Rupees forty-six thousand five hundred (Rs. 46,500).

* 720 *Q*.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of applications received in 1958 so far for the installation of powerlooms to work on non-cotton yarn; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Ninety-four applications were received during 1958.

(*b*) Out of the ninety-four applications, twelve related to acquisition and installation of authorised powerlooms by *transfer* from one person to another which were permitted. The remaining eighty-two cases were rejected.



11th March 1959]

*SRI K. VINAYAKAM : Sir, is it not the policy of this Government to discourage powerlooms? Is it not our avowed policy to encourage handlooms in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : It is the policy of this Government not to encourage powerlooms in this State.

SRI N. R. THIAGARAJAN : நமது ராஜ்யத்திற்கு எத்தனை விசைத் தறிகள் ஒதுக்கப்பட்டன ? எவ்வளவு உபயோகத்தில் இருக்கின்றன ? மற்ற இடங்களிலும் ஏற்படுத்தாதற்குக் காரணம் என்ன ? கைத்தறி நெசவாளர்கள் இல்லாத இடங்களிலாவது இந்த விசைத்தறிகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கைத்தறி நெசவாளர்கள் இல்லாத இடங்களில் விசைத்தறிகளை உபயோகப்படுத்தினால் இங்கே உற்பத்தியாகிற துணி கைத்தறி நெசவாளர்கள் இருக்கிற இடத்தில் விற்கப்பட்டு அங்குள்ள கைத்தறித் துணிக்குத் தேக்கம் ஏற்பட்டுவிடும். இந்த ராஜ்யத்திற்காக பரிட்சார்த்தமாக 15 விசைத் தறிகளை வாங்கியிருக்கிறோம். 5 திருப்பூர் கோவாப்ரேடிவ் சொஸைடிக்கும், பாக்கி இரண்டு இடத்தில் ஐந்து ஐந்தாக தனியாரிடத்திலும் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, the number of loanees who have taken loans from the Government so far?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put in respect of loans for powerlooms.

SRI K. SATTANATHA KARAYALAR : நாம் நம்முடைய ராஜ்யத்தில் விசைத்தறிகளை வைக்கவில்லை என்றாலும் அண்டையில் இருக்கக் கூடிய ராஜ்யங்களில் விசைத்தறிகளை அதிகமாக வைப்பதனால் அங்கெல்லாம் உற்பத்தியாகக்கூடிய துணி நம்முடைய ராஜ்ய வர்த்தகத்தையும், தொழிலாளர்களையும் பாதிக்காதா ? தென்மண்டல ராஜ்யங்ள் முழுவதிலுமாவது இதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பக்கத்து ராஜ்யங்களிலிருந்து போட்டி வரும் என்பது நமக்குத் தெரியும். அவர்கள் எவ்வளவு தூரம் விசைத் தறிகளை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதை நாம் கண்காணிப்பாகப் பார்த்துக்கொண்டு வருகிறோம். பத்திரிகையில் பக்கத்து ராஜ்யங்களில் அதிகமான விசைத்தறிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக செய்திகள் வரலாம். உண்மையில் அவ்வாறு வரவில்லை என்ற கணக்கு சர்க்காரிடத்தில் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : Sir may I know whether this particular scheme of experimental conversion of handlooms into powerlooms is working successfully or not?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The Tiruppur Co-operative society has an income of Rs. 73,000 and odd, and it is working successfully. The average wage per worker will be Rs. 2 per day.

SRI S. M. ANNAMALAI : இந்தப் 15 விசைத்தறிகளை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் மானியமாகவும், கடனாகவும் பெற்ற தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : So far as the financial position is concerned, a separate question may be put.

[11th March 1959

SRI M. D. RAMASAMY : அமைச்சர் அவர்கள் விசைத்தறிகளை ஆரம்பிப்பது இந்தச் சர்க்காரின் கொள்கை அல்ல என்று சொல்லுகிற நேரத்தில் 15 விசைத்தறிகளை வாங்கி இங்கே பரிட்சார்த்தமாக ஏற்படுத்தியிருப்பது முரண்பாடாக இருக்கிறதே, அதற்கு என்ன காரணம் என்று கேட்கிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதாவது ஒரு காலத்தில் நம் ராஜ்யத்திலும் விசைத்தறிகள் ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால் அதனுடைய எக்கனுமிக்ஸ் என்ன என்று தெரிந்து கொள்வதற்கும், அதன் மூலமாக தொழிலாளர்களுக்கு என்ன அளவு ஊதியம் கிடைக்கும் என்பதை நாமே அனுபவ பூர்வமாக கண்டு கொள்வதற்கும் உதவியாக இருக்கும் என்பதற்காகத்தான் பரிட்சார்த்தமாக 15 விசைத்தறிகளை வைத்திருக்கிறோம்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—BUDGET FOR THE YEAR 1959-60—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959-60.

### DEMAND I—LAND REVENUE DEPARTMENT.
### DEMAND III—STAMPS ADMINISTRATION.
### DEMAND XII—DISTRICT ADMINISTRATION.
### DEMAND XXXIV—COMPENSATION TO ZAMINDARS.

MR. SPEAKER : From to-day the Demands for Grants are to be discussed and voted upon. A number of cut motions have been received from hon. Members for each Demand. It is the usual custom to move only one cut motion for each Demand and hon. Members can take part in the discussion. The same procedure may be followed this year also.

To-day the following Demands are to be discussed :—

I. Land Revenue Department.

III. Stamps Administration.

XII. District Administration and Miscellaneous.

XXXIV. Compensation to Zamindars.

As soon as the Demands are moved by the respective Ministers, one cut motion for each Demand may be moved. Cut motions need not be seconded. At the end of the discussion, the cut motions will be put to vote and then the Demands will be put to vote.

It has been agreed that one member of the Opposition group will initiate the discussion on each Demand. It is also agreed that the leader of one of the opposition parties will take part finally before the Minister replies. It is also agreed that the Minister in moving the Demand need not make a long speech but circulate copies of whatever he has to say to the Members. Half an hour will be allotted to the Minister for reply to the discussion on the Demand. It has been agreed that ten minutes will be enough for each member. On this basis, I allot fifteen minutes to the member initiating the debate and fifteen minutes to the leader who speaks before the Hon. Minister replies, half an hour to the Hon. Minister, and ten minutes to each hon. Member.



The Hon. Minister will now move the Demands—

(1) Demand I—Land Revenue Department.

(2) Demand III—Stamps Administration.

(3) Demand XII—District Adiministration and Miscellaneous.

(4) Demand XXXIV—Compensation to Zamindars.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 1,69,96,800 under Demand I—Land Revenue Department.

SRI K. RAMACHANDRAN : Sir, I move—

That the allotment of Rs. 1,69,96,800 under Demand I—Land Revenue Department—be reduced by Rs. 100.

THE HON. SRI M. A. MANICKAVELU, Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 19,26,100 under Demand III—Stamps Administration.

SRI A. R. MARIMUTHU : Sir, I move—

That the allotment of Rs. 19,26,100 under Demand III—Stamps Administration—be reduced by Rs. 100.

THE HON. SRI M. A. MANICKAVELU, Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 4,04,66,800 under Demand XII—District Administration and Miscellaneous.

SRI A. GOVINDASAMY : Sir, I move—

That the allotment of Rs. 4,04,66,800 under Demand XII—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 55,00,000 under Demand XXXIV—Compensation to Zamindars.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

That the allotment of Rs. 55,00,000 under Demand XXXIV—Compensation to Zamindars—be reduced by Rs. 100.

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion. I am told that the opposition parties have selected Sri K. Ramachandran to initiate the debate. He is given fifteen minutes. He will now speak.

**Sri K. RAMACHANDRAN :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற இந்த வெட்டுப் பிரேரணை பொதுவாக பல நாளும் பேசப்பட்டு வருகிற பிரச்சனையேயன்றி வேறு இல்லை. இதில் நிலச் சீர்திருத்தத்தைப்பொறுத்த வரையிலும் முக்கியமான விஷயம் நிலவுடமைக்கு உச்சவரம்பு கட்டுவது என்பது எல்லோருக்கும் தெரிந்தது. இதை அரசாங்கக் கட்சியும் மற்ற கட்சிகளும் வற்புறுத்தி வந்த போதிலும் கூட அரசாங்கம் இதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வருவதும், இதிலேயே பலவிதமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுக்கொண்டு வருவதும் பொதுவாக மக்களுக்கு இதைப் பொறுத்த வரையில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் இது அவசரமாக செய்யப்படவேண்டிய விஷயமாகிறது.

அதுவும் தவிர ஐ.என்.டி.சி. கட்சியைப் பொறுத்த வரையில் இந்தக் கொள்கைக்கு நாங்கள் எதிர்ப்பாக இருப்பது போல வெளியில் அனுவசியமாகப் பிரசாரம் வேறு செய்யப்பட்டு வருகிறது. இதை நான் இங்கே மறுத்துக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் நாங்கள் யாரும் இந்தக் கொள்கையை ஆட்சேபிக்கவில்லை. ஆட்சேபிக்கவும் போவதில்லை. இதை அவசியமாக, அவசரமாகக் கொண்டு வரவேண்டும் என்பதைத்தான் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டத்திற்கு நாங்கள் விரோதமாக இருக்கிறோம் என்ற புகாரும், அனுவசியமான பிரசாரமும் சிலர் செய்து வருவதற்கு ஆதாரமே இல்லை, அது தவறு என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமண்யம்.—நாங்கள் என்றால் யார்?) ஐ.என்.டி.யு.சி. கட்சியைச் சேர்ந்தவர்கள். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமண்யம்.—அந்தக் கட்சித் தலைவர் இந்தமாதிரி ஆதரித்துப் பேசினது இல்லை.) அதுதான் தப்பான அபிப்பிராயம். நிலவுடமைக்கு வரம்பு கட்டுவது வேண்டும் என்று மட்டும் தலைவரும், நாங்களும் கேட்கவில்லை. அத்துடன் அர்பன் இன்கம்முக்கும் வரம்பு கட்ட வேண்டும் என்று சொல்லி வருகிறோம். இந்த இரண்டையும் தலைவரும், நாங்களும் வற்புறுத்தி வரும்போது அமைச்சர் அவர்கள் நாங்கள் இதற்கு எதிராக இருப்பதாகப் பிரசாரம் செய்வது சரியல்ல. நிச்சயமாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். காலம் தாழ்த்தாமல் உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியின் கொள்கை என்பதை நான் இதன் மூலம் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

9-30 a.m. அதைக்கூட எதற்காக தெரிவிக்கிறேன் என்றால், பொதுவாக இந்தக் சட்டம் பல வருஷ காலமாக காலதாமதமாயிருக்கிறது. ஆகவே நிலச் சீர்திருத்தம் உடனடியாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நிலம் அதிகமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் தங்களுக்குள்ள நிலங்களை Fraudulent Transfer செய்துகொள்கிறார்கள். இதைப் பற்றி கனம் மந்திரி அவர்கள் பேசும்போது அவ்வாறு அவர்களாகவே பிரித்துக்கொள்வது ஒரு விதத்தில் நல்லதுதான் என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டத்தை ஏமாற்றுவதற்காக இம்மாதிரி பிரித்துக்கொள்கிறார்கள் என்றால் இதனால் ஏழை விவசாயிகள் தான் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே மிகவும் நல்ல முறையில் இந்தச் சட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். இன்னொரு சந்தோஷமான விஷயம் என்னவென்றால், இதை மேல் சபையில் முன்னதாகவே கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடுகூட நிலத்திற்கு உச்சவரம்பு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுகொள்ளுகிறேன். இதை அரசாங்கம் தயங்காமல் செய்ய வேண்டும். இதில் பலவிதமான நிலங்கள் இருக்கின்றன. நீர்ப்பாசனம் உள்ள நிலங்கள் இருக்கின்றன. நீர்ப்பாசனம் இல்லாத நிலங்கள் இருக்கின்றன. வளமுள்ள நிலங்கள் இருக்கின்றன. வளம் இல்லாத நிலங்கள் இருக்கின்றன. இப்படியெல்லாம் பலவிதமான நிலங்கள் இருக்கின்றன. இன்னும் பிஞ்சை நிலங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் மிகவும் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து நிலத்திற்கு உச்சவரம்பு



காண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு I. N. C. பொருத்தவரையில் இந்தச் சட்டத்தை எந்த விதத்திலும் ஆட்சேக்கவில்லை. இதை நாங்கள் வரவேற்கிறோம். எனவே அரசாங்கம் பக்கப்படாமல் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்காள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

நம் நாட்டிலே தரிசு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. Cultivation-க்கு மற்கொண்டு உற்பத்தி அதிகமாக பெருக்குவதற்கு தரிசு லங்களின் மீட்சி விஷயத்தில் அரசாங்கம் அதிக அக்கரைக்காட்ட வண்டும். ஆகவே தரிசு நிலங்களின் மீட்சி விஷயத்தில் அரசாங்கம் வ்வளவு அக்கரைக் காட்ட வேண்டுமோ அவ்வளவு அக்கரைக் காட்ட வண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக ராமனுதபுரத்ல் லட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. இதில் லவிதமான சாயில்கள் இருக்கின்றன. ரெட், சான்டி முதலிய பல யிரக்கணக்கான நிலங்களை சாங்ஷன் செய்திருக்கிறார்கள். அவைகளை யல்லாம் பூராவும் பயிருக்குக் கொண்டுவந்தால்தான் உணவு உற்பத்தி பருகும். மேலும் விவசாயிகளுக்கு உற்சாகம் ஏற்படுவதற்கு அந்நிலங்ள் பூராவிற்கும் வரி வஜா செய்ய வேண்டும். இதனால் வெளி நாணய சலாவணிகளைக் கூட அதிகப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். உதாணமாக நெல்லை அதிகமாக பயிரிட்டால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். ஆகவே அரசாங்கம் இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து ல்ல முறையிலே வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுறேன்.

அடுத்தபடியாக, புயலாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட பிரதேங்களில் நிவாரணம் அளிப்பதுபற்றி கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்டப்பட்டிருந்தது. ராமனுதபுரம் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசம். மூன்று இடங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. ஆனால் அந்த பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு எந்த விதத்தில் நிவாரணம் அளிக்கப்படுகிறது என்பதைப்பற்றி குறிப்பிடப்படவில்லை. அங்குள்ள மக்கள் இந்த பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டுமென்று மகஜர் கொடுத்துள்ளார்கள். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு இன்று வரி வஜா செய்யப்படவேண்டும். 15 கோடி வருஷகாலமாக வரி வஜா செய்யாத நிலங்களுக்கும் கூட இன்றைக்கு அவைகளை எல்லாம் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று ரெவின்யு இன்ஸ்பெக்டர் கேட்டு வருகிறார். அவர்கள் கொடுக்கமுடியாத நிலையில் மிகவும் கஷ்டப் பட்டு வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு இந்த வருஷம் பூராவும் வரி வஜா செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தப் பிரதேசம் அதிகமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாகையால் அங்கே எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அவ்வளவு தூரம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக எல்லா வரி வசூலையும் தள்ளிப்போடவேண்டும். அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கை துரிதமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கஷ்டப்படும் மக்களுக்கு உண்மையாக நிவாரணம் அளித்தவர்களாவோம். இதைத் தாமதம் செய்வது சரியல்ல. ஆகவே அரசாங்கம் உடனடியாக பரிசீலனை செய்து அங்கிருக்கும் மக்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு ஏற்படுத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுகொள்ளுகிறேன். மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய நிலைமையிலே என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள், எந்தவிதமான நிவாரணம் அளிக்கப்படும் என்று கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கலெக்டர் அவர்கள் அதைப்பற்றிஎழுதியிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ராமனுதபுரம் ஜமீன் பிரதேசத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ராமனுதபுரத்தில் சிறு சிறு ஜமீன் பிரதேசங்கள் இருக்கின்றன. இதில் உள்ள ஊழியர்கள் இரண்டு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். திருவாடானையும் கூட மிகவும் பிற்பட்ட பகுதி. கோர்ட்டில் கூட 100 வருஷங்களாக அனுபவித்துவந்த நிலங்களை அவர்களுக்கே பட்டா கொடுத்துவிடவேண்டுமென்று தீர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே பலரின் நன்மையைக் கருதி அரசாங்கம் நல்ல முடிவு எடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் கோர்ட்டுக்கு போகமுடியாத ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் தீர்மானம் செய்தார்கள். ராமனுதபுரம் சிப்பந்திகளுக்கு கிட்டத்தட்ட உபயோகமற்ற நிலங்களை வைத்துகொண்டு பெரும்பான்மையான நல்ல நிலங்களை மிராஸ்தார்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜமீனில வேலை செய்யும் ஊழியர்களுக்கு பென்ஷன், ப்ராவிடண்ட் பண்ட் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜமீன் பிரதேசத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த ஆயிரம் பேருக்கு ஒரே வேலை முறையைக் கொண்டுவரும் காலத்திலே மற்ற சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சமமாக அவர்களுக்கும் சம்பளம், பிராவிடண்ட் பண்ட், மற்ற சலுகைகள் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கே முக்கியமான வேலை அந்தப் பகுதியில் ஸெட்டில்மென்ட்டை இண்ட்ரொட்யூஸ் செய்வது ஆகும் என்பது சர்க்காருக்குத் தெரியும். அந்த முக்கியமான வேலையில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் பணியை இவர்கள் பல ஆண்டுகளாகச் செய்துவருகிறார்கள் என்பதை மனதிற்கொண்டு இவர்களுக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்குக் கிடைக்கும் சலுகைகளை அளிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே செய்யவேண்டிய நிவாரண வேலைகளைப் பற்றி மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். சாதாரணமாகவே மழையையே நம்பியிருப்பது அந்தப் பிரதேசம். அப்படிப்பட்ட அந்தப் பிரதேசத்தில் மழையில்லாத காரணத்தால் இப்போது அங்குள்ள மக்கள் ஆயிரக்கணக்கில் வெளி ஜில்லாக்களுக்கு வேலை தேடித் செல்லவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருவ தற்காக நேற்று இந்த சபையில் 40-வது விதியின்படி ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தேன். அங்கே முக்கியமான நிவாரண வேலைகளை செய்யவேண்டும். அங்கே அவசியமான பல நிவாரண வேலைகளை நிரந்தரமான முறையில் செய்யவேண்டும். அங்கே நிரந்தரமாகச் செய்யவேண்டிய நிவாரண வேலைகள் எவை என்பது பற்றி என் அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இத்தகைய ஜமீன்தாரிப் பிரதேசங்களில் உள்ள கண்மாய்களும், கால்வாய்களும் பல ஆண்டுகளாக கவனிக்கப்படவில்லை. அங்கே புயல் வந்த பிறகு கண்மாய்கள் சர்க்காரால் ஓரளவு சீர்செய்யப்பட்டன. சர்க்கார் சிறிது பணம் செலவழித்து அங்குள்ள மொத்தக் கண்மாய்களில் ஏறக்குறைய பாதியை செப்பனிட்டிருக்கிறார்கள். பாக்கியுள்ள கண்மாய்களைச் செப்பனிடுவதற்கு இது சரியான சந்தர்ப்பமாக இருக்கிறது. அவைகளைச் செப்பனிடும் வேலையை சர்க்கார் மேற்கொண்டால் அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். எனவே அங்குள்ள கண்மாய்களை செப்பனிடும் வேலையை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கண்மாய்களுக்கு தண்ணீர் கொண்டுவரும் பல கால்வாய்கள் அங்கே இருக்கின்றன. சிவகெங்கையில் நடந்த விவசாயத் திட்டம் சம்பந்தமாகவும் நான் ஒன்று சொல்லியிருக்கிறேன். குடிமராமத்துப் பகுதிக்குள் வராத, ஒரு மைல் அல்லது இரண்டு மைல் தூரம் உள்ள கால்வாய்களை விவசாயிகளே செப்பனிட்டுக் கொள்ளலாம். சுமார் 10,000 ஏக்கர் வரை பாயக்கூடிய கால்வாய்கள் பல இருக்கின்றன. அவைகளை சர்க்கார் தான் செப்பனிட்டுத்



தர வேண்டும். அப்படிப்பட்ட கால்வாய்கள் 50—60 கண்மாய்களுக்குத் தண்ணீர் கொண்டுசெல்கின்றன. அவைகள் இப்போது தூர்ந்துபோய் தண்ணீர் கொண்டுசெல்லமுடியாத நிலையில் இருக்கின்றன. உதாரணமாக கூதங்கால், வேங்கடகுரிச்சி முதலியவை அத்தகைய கால்வாய்கள். மேலும் முதுகுளத்தூரில் உள்ள ரகுநாதக் காவேரி, நாராயணக் காவேரி முதலியவையும் அப்படிப்பட்ட கால்வாய்கள் தான். இவைகள் தூர்ந்து போயிருக்கின்றன. இவைகளைச் செப்பனிட வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம ரஸ்தாக்கள் ராமநாதபுரம் ஜில்லாவில் மிக மோசமான நிலையில் இருக்கினறன. அவைகளையும் சர்க்கார் மராமத்து செய்ய வேண்டும். இந்த வேலைகளையெல்லாம் செய்தால் இந்தப் பகுதி முன்னேற்றம் அடைவதுடன், அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளும் ஏற்படும். நான் கூறிய எல்லா விஷயங்களையும் கவனிக்க வேண்டுமென்றும், அந்தப் பகுதியில் உடனடியாக வரிவஜா செய்ய வெண்டுமென்றும், கடன்களை திரும்ப வசூலிப்பதை தள்ளிப்போட வேண்டுமென்றும், இன்றுள்ள நிலைமையில் அங்கே செய்யவேண்டிய நிவாரண வேலைகளைச் செய்ய வேண்டும் என்றும், அங்கே நிரந்தரமான நிவாரணங்களையும் செய்ய வேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI K. R. VISWANATHAN: மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, இந்த மான்ய கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவதாக, இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிராம உத்தியோகஸ்தர்களின் குழந்தைகளுக்கு படிப்புச் சலுகை அளித்திருப்பதை நான் மனமார வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்தில் அவர்களுக்கும், கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்துள்ள ஊதிய உயர்வைக் கொடுக்காதது குறித்து நான் வருந்த வேண்டியிருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் கெஜட் பதவியில்லாத உத்தியோகஸ்தர்களாகக் கருதப்படாது போனாலும்—முழுநேர சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகக் கருதப்படாத போனாலும்—அவர்களுக்கு தற்போது கொடுக்கப்படும் ஊதியம் மிகவும் குறைவாக இருப்பதால், அவர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டியது அவசியம் என்று சொல்ல விரும்புகிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்கள், கிராம முன்சீபாக இருந்தாலும், கணக்கப்பிள்ளையாக இருந்தாலும் அவர்களை நியமிக்கும் முறை மிகவும் தொல்லை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. அவர்களை நியமிப்பதற்கான அதிகாரம் தற்போது தாசில்தார் முதல் சர்க்கார் வரையில் பலரிடம் இருக்கிறது. இதனால் கிராம முன்சீபோ, கணக்குப் பிள்ளையோ தன் உத்தியோகத்தை நிலைப்படுத்திக் கொள்ள விரும்பினால் அவர் குறைந்தது ஆயிரம் ரூபாயாவது செலவழிக்க வேண்டியிருக்கிறது. அவர்களை நியமிப்பதற்கான அதிகார வரம்பு சுருக்கமான முறையில் இருக்க வேண்டும். அதாவது அந்த அதிகாரம் கலெக்டர் கையில் இருக்கலாம். கடைசியாக அப்பீல்களை கவனிப்பதற்குரிய அதிகாரம் கலெக்டரிடம் இருக்கலாம். கிராம உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்குரிய அதிகாரங்களை அதிகாரிகளிடம் அந்த முறையில் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கிராம உத்தியோகஸ்தர்கள் உத்தியோகம் பரம்பரை பாத்தியமாக இருக்கிறது. அந்த முறையில் மாநிலத்தில் சில மாவட்டங்களில் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த முறையானது பல கிராமங்களில் கிராம நிர்வாக காரியங்கள் சரிவர நடப்பதற்கு இடையூறாக இருக்கிறது என்பது இந்த சபையில் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

[Sri K. R. Viswanathan] [11th March 1959

அவர்களை பரம்பரை அடிப்படையில் நியமிக்கும் முறையை நீக்கிவிட்டு அவர்களை தகுதி அடிப்படையில் நியமிக்கும் முறையைக் கொண்டுவர வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுகொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிஸ்தி வாங்கும் முறையானது இந்த ஆண்டில் தான் ரசீது மூலம் வாங்கும் முறையில் வந்திருக்கிறது. இந்த முறை பல ஆண்டுகாலமாக வற்புறுத்தப்பட்டு வந்தது. கடைசியாக இந்த் ஆண்டில் தான் இந்த முறை வந்திருக்கிறது. இந்த முறை, பல தவறுகளும் குற்றங்களும் நிகழாமல் இருப்பதற்கு உதவுவதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், கிராம உத்தியோகஸ்தர்கள் ஏதாவது குற்றம் செய்தார்கள் என்றால் வியாஜ்யத்தில் "ஸஸ்பென்ஷ"னில் வைக்கப்படுகிறார்கள்—உத்தியோகத்திலிருந்து நீக்கிவைக்கப்படுகிறார்கள். அவ்வாறு ஸஸ்பென்ஷனில் வைக்கப்படுபவர்கள் மறு உத்தரவு வரும் வரை அவ்வாறு வைக்கப்பட்டிருப்பார்கள் என்று சொன்னாலும், ஸஸ்பென்ஷன் காலம் ஆண்டு கணக்கில் செல்கிறது. சில இடங்களில் அவர்கள் ஓராண்டு காலம், ஈராண்டு காலம் வரையில் கூட ஸஸ்பென்ஷனில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எதற்காக உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டார்களோ அதுபற்றி அவர்கள் விசாரிக்கப்படுவதில்லை. அவர்கள் செய்த தவறு சிறு தவறாக இருக்கக் கூடும். இருந்தாலும் அவர்களுடைய மேலதிகாரிகளான தாசில்தார்களும் டெபுடி கலெக்டர்களும் அவர்களை விசாரிக்காமல் இருந்துவருவதால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இவ்வாறு ஸஸ்பென்ட் செய்யப்படுபவர்களை ஓராண்டு அல்லது ஆறு மாதங்களுக்குள் விசாரித்து முடிவு தெரிவிக்க வேண்டும் என்று சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஜயகொண்டத்தைத் தலைமையிடமாகக் கொண்ட உடையார்பாளையம் தாலூகா என் தொகுதி. மழையின்மையால் மிகவும் வறண்டு போயிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த ஆண்டு, அங்கே பருவமழை பெய்யாததால் விளைச்சல் குறைந்திருக்கிறது. எனவே அங்கே கிஸ்தியைத் தள்ளிப்போட வேண்டும். விளைச்சல் அறவே இல்லாத இடங்களில் தான் கிஸ்தி தள்ளிப்போடப்படும் என்று சொல்லி, அங்கே கிஸ்தியைத் தள்ளிப்போட மறுக்கிறார்கள். இதன் காரணமாக அங்கே இன்று நிலமில்லாத விவசாயிகளும் சிறு குடியானவர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவ்வாறு கஷ்டப்படும் மக்கள் அங்கிருந்து குடும்பம் குடும்பமாக வெளியேறி பக்கத்திலுள்ள தஞ்சாவூர் ஜில்லாவிலும் சிதம்பரம் தாலூகாவிலும் குடியேறி தங்கள் பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இன்னும் 8 மாத காலம் எவ்வாறு வாழ்க்கை நடத்தப்போகிறார்கள் என்று தெரியவில்லை. எனவே அங்கு பஞ்ச நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அங்கே கட்டிடங்கள் கட்டுதல், கிணறுகள் வெட்டுதல், சாலைகள் அமைத்தல் போன்ற வேலைகளை ஆரம்பித்து மக்களுக்கு வேலை கொடுத்தால் தான் அவர்கள் ஓரளவு காலந்தள்ள முடியும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கே இப்போது விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை வசூலிக்கும் வேலை இப்போது துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. அவர்கள் இப்போது மிகவும் கஷ்டப்படுவதால் கிணறு வெட்டுவதற்கான கடன்களானாலும் சரி, விதைகள் வாங்குவதற்கான கடன்களானாலும் சரி, உரம் வாங்குவதற்கான கடன்களானாலும் சரி, எல்லாக் கடன்களையும் துரிதமாக வாங்குவதை கொஞ்ச காலத்திற்கு நிறுத்திவைக்க வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். விதை, உரம் முதலியவைகளை வாங்குவதற்குக் கொடுக்கப்படும் கடன்கள் ஓராண்டு காலத்திற்குள்ளாகவே ஒரு தடவையில் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனையின்படி அவைகளை ஓராண்டு காலத்திற்குள் திருப்பிக்கொடுக்க முடியாமல் அங்குள்ள விவசாயிகள் இப்போது கஷ்டப்படுகிறார்கள்.



11th March 1959] [Sri K. R. Viswanathan]

ஆகவே, எரு விதை கடன்கள் சிறிய தொகையாக இருந்தாலும் அதை இரண்டு தடவையாக வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, உடையார்பாளையம் தாலூகாவில் ஜமீன் பகுதிகள் இருக்கின்றன. அங்கு சர்வேஸெட்டில்மெண்ட் இன்னும் செய்து முடிக்காதபடியினால் அங்குள்ள விவசாயிகள் சர்க்கார் விவசாயிகளுக்கு கொடுக்கிற கடன் வசதிகளை பயன்படுத்த முடியாமல் இருக்கிறார்கள். இன்னும் சர்க்கார் ஜமீன் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு கடன் வசதிகளை செய்து கொடுப்பதற்கான எந்தவித ஏற்பாட்டையும் செய்யவில்லை. "ஸெட்டில்மெண்ட்" செய்து முடித்தால் தான் அவர்களுக்கு கடன் கொடுக்க முடியும் என்ற நிலையிருந்தால் அங்குள்ள விவசாயிகள் எப்படி விவசாய வளர்ச்சியைக் கவனிக்க முடியும் என்று கேட்கிறேன். ஆகவே அத்தகைய இடங்களில் மிக விரைவில் "ஸெட்டில்மெண்ட்" செய்வதோடு கூட, அப்படி "ஸெட்டில்மெண்ட்" செய்து முடிப்பதற்கு முன்னமேயே அங்குள்ள விவசாயிகளுக்கு கடன் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சமயத்தில் "ஸெட்டில்மெண்ட்" டிபார்ட்மெண்டில் இருக்கிற தலைமை அதிகாரிகளைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். "ஸெட்டில்மெண்ட்" டிபார்ட்மெண்டில் இருக்கிற "டெப்டி டயரக்டர் ஆப் சர்வே அன்ட் லான்ட் ரிக்கார்ட்ஸ்", மற்ற இலாக்காகளில் இருக்கிற, விவசாய இலாகாவில் இருக்கிற "டெப்டி டயரக்டர்" அல்லது கால்நடை இலாகாவில் இருக்கிற "டெப்டி டயரக்டர்" போன்ற டெப்டி டயரக்டர்களை போன்றிருப்பவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம், சலுகை இவருக்கு இல்லை. 800லிருந்து 1,200 ரூபாய் வரை சம்பளம் கொடுக்கப்படுகிறது, அந்த இலாகாக்களில் இருக்கும் டெப்டி டயரக்டர்களுக்கு. ஆனால் டெப்டி டயரக்டர் ஆப் சர்வே அண்ட் லான்ட் ரிக்கார்ட்ஸ்க்கு 650—800 வரை தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவருக்கு கீழ் இருக்கக்கூடிய அஸிஸ்டண்ட் டயரக்டர் ஆப் லான்ட் சர்வே ஆண்ட் ரிகார்ட்ஸ்க்கு 650யிலிருந்து 700 வரையில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆகவே இந்த "டெப்டி டயரக்டர் ஆப் சர்வே அன்ட் லான்ட் ரிக்கார்ட்ஸ்" மற்ற டெப்டி டயரக்டர்களைப் போன்று ஒரு உயர்ந்த நிலையில், அவர்களுக்கு ஒத்த நிலையில் இருந்தால் தான் அந்த இலாகாவை நல்ல முறையில் ஒழுங்காக நிர்வகிக்க முடியும் என்ற நிலையை "போர்ட் ஆப் ரெவின்யூவும்" சர்க்காருக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலையை பரிசீலனை செய்து மிக விரைவில் சர்க்கார் உத்தரவு இடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, உடையார்பாளையம் போன்ற பிற்பட்ட பகுதிகளில் நியமிக்கிற ரெவின்யூ அதிகாரிகள், டெப்டி கலெக்டர் போன்றவர்களை சர்க்கார் அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, ஒரு டிவிஷனில் உத்தியோகம் ஏற்கிற ஒருவர் அந்த டிவிஷனைப் பற்றி அறிந்து கொள்வதற்கு குறைந்தது ஆறல்லது எட்டு மாதங்களாவது ஆகும். ஆகவே அந்த அதிகாரி அந்த டிவிஷனைப் பற்றி அறிந்து கொண்டு அங்கு செய்ய வேண்டிய வேலைகளை தொடங்குவதற்குள் அவரை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுகிறார்கள். அரியலூர் டிவிஷனைப் பொறுத்த மட்டில் நான்கு வருட காலத்திற்குள் ஐந்தாறு பேர்களை அங்கு போட்டு மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, பிற்பட்ட பகுதியாகிய அந்த டிவிஷனுக்கு வேண்டிய நலன்களையும் வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு, உத்தியோக பூர்வமான முறையில் அந்த அதிகாரிகளால் செய்யமுடியவில்லை, ஆகவே "டெப்டி கலெக்டர்" போன்ற பொறுப்புள்ள அதிகாரிகளை குறைந்தது மூன்று வருடங்களுக்காவது ஒரே இடத்தில் வைத்திருக்க வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்தினாலொழிய அந்தப் பகுதிகளில் செய்யவேண்டிய காரியங்களை சாதாரணமாக செய்து விடமுடியாது. ஆகவே, இத்தகைய நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இப்பொழுது சர்க்கார் அலுவலகங்களில் எங்கு சென்றாலும் துரிதமாக வேலைகள் நடப்பதில்லை. எந்த விஷயத்திற்காக ஒரு மனு கொடுத்தாலும் அந்த மனுவிற்கு பின்னால் ஓடிக்கொண்டிருந்தா

[Sri K. R. Viswanathan] [11th March 1959

லொழிய அது எங்கே போகிறது என்பதே தெரிவதில்லை. சட்டசபை உறுப்பினர்களாக இருந்தாலும்கூட அவர்கள் எழுதுகிற மனுக்களுக்கும் எந்தவிதமான பதிலும் கொடுப்பதில்லை. அவர்கள் எழுதியனுப்பும் மனுக்கள் அங்கே சென்று சேருகிறதா என்பதே தெரியவில்லை. சில வருடங்களுக்கு முன்பு சட்டசபை உறுப்பினர்கள் எழுதினால் அவர்களுக்கு பதில் எழுத வேண்டுமென்று ஒரு உத்தரவு சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டது. அந்த முறை ஒரு சில மாதங்களுக்கு அனுஷ்டிக்கப்பட்டு வந்தது சர்க்கார் அலுவலகங்களில். அதற்கு பிறகு அந்த உத்தரவு காற்றில் பறக்கவிடப்பட்டது. இன்று சட்டசபை உறுப்பினர்களாகயிருந்தாலும் சரி அல்லது வேறு எவராக இருந்தாலும் சரி அவர்கள் எழுதியனுப்பும் மனுக்களுக்கு பதில் எழுதுவது என்பதே இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இது, மிகவும் மனவேதனையை அளிக்கிறது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். உதாரணமாக சொல்கிறேன், எங்கள் ஊரிலிருந்து ஒருவர் துப்பாக்கி லைசென்ஸுக்காக மனு செய்து கொண்டார். முதலில் ஒரு மனு போட்டார். அதற்குப் பதிலைக் காணோம். பின், ஆறு மாதங்களுக்கு பின்பு வேறு ஒரு மனு போட்டார். அதற்கும் மூன்று மாதங்களாகியும் ஒரு பதிலும் இல்லை. அதற்குப் பிறகு என்னிடம் வந்து, "நீங்கள் சட்டசபை அங்கத்தினராயிற்றே, உங்களிடம் சொல்கிறேன்" என்று என்னிடம் வந்து சொன்னார். மாவட்ட அலுவலகத்தில் சென்று பார்த்தபோது, அந்த இரண்டு மனுக்களையும் காணோம். அந்த இரண்டும், "ரெஜிஸ்டர்" செய்யப்பட்டு அனுப்பபட்ட மனுக்கள். அவைகளை கலெக்டர் அலுவலகத்தில் காணோம் என்று சொன்னால் இதை யாரிடம் போய் சொல்வது? என்று தெரியவில்லை. அதற்குப் பிறகு மூன்றாவதாக ஒரு மனுவைத் தயாரித்து நேரிலேயே போய் கலெக்டரிடம் கொடுத்து அதன் மேல் நடவடிக்கைகள் எடுத்துகொள்ள வேண்டிய அவசியம் நேரிட்டது. அதுபோன்றே, ஒரு கண்ட்ராக்டர் தன் வேலைகளை செய்து முடித்து விட்டு "பைனல் பேமெண்டை"யும் வாங்கிக் கொண்டு "டெபாஸிட்டை" திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று மனு செய்தார். மூன்று வருடங்களாகியும் அவரது மனுவின் பேரில் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கக்காணோம். அலுவலகத்திற்கு சென்று கேட்டால் உங்கள் மனுவை காணவில்லையென்று சொல்கிறார்கள். ஆக, மூன்று வருடங்களுக்குப் பிறகு அவர் அந்த டிபாஸிட் தொகையை இழக்க வேண்டிய நிலையில் இருந்தார்கள். அந்த டிபாஸிட்டை இழந்தும் விட்டார்கள். இத்தகைய நிலை அலுவலகங்களில் இருந்தால், இத்தகைய நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டியிருக்கிறது என்பதைத்தான் அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர ஆசைப்படுகிறேன். ஆகவே ஆங்காங்குள்ள அதிகாரிகள் மேல்நிலையில் இருந்தாலும் சரி அல்லது கீழ் நிலையில் இருந்தாலும் சரி, அவரவர்கள் தமக்கு கீழுள்ள உத்தியோகஸ்தர்களை, நல்ல நிலையில் அவர்களது அலுவல்களை செய்யும்படி தூண்ட வேண்டியது அவசியம். அவர்கள், தாங்கள் நாட்டுக்கு தொண்டு செய்ய வந்திருக்கிறோம். நாட்டு மக்களுக்கு தொண்டு செய்ய வந்திருக்கிறோம் என்று நினைக்கக் கூடிய மனப்பான்மையை உண்டாக்குவது அவசியம். (பெல்) ஆகவே அத்தகைய மனப்பான்மை ஏற்பட்டாலொழிய இன்றுள்ள நிலைதான் நீடிக்க முடியும் என்று சொல்லிக் கொண்டு இத்தகைய நிலைகளை மாற்றியமைக்க வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு நான் அமர்கிறேன்.

Sri M. JAGANNATHAN : On a point of elucidation, ஸார், கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, சர்க்கார் அலுவலகங்களில், போடப்படுகிற மனுக்கள் எல்லாம் காணாமல் போய் விடுகின்றன என்று சொல்கிறார்கள். அவர்கள், அந்த மனுக்கள் எல்லாம் அந்தந்த அலுவலகங்களில் "பர்க்" செய்யப்படுகிறது என்பதை மறைமுகமாக குறிப்பிடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : அங்கத்தினரிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கிறார்.



11th March 1959]

*Sri K. R. VISWANATHAN : காணாமல் போகிறது என்றால் அலுவலகங்களில் அவைகள் மறைக்கப்படுகின்றன என்பது பொருள் அல்ல. காணாமல் போகிறது என்றால் காணாமல் போகிறது என்பதுதான் அர்த்தம்.

Sri S. LAZAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மூன்று மான்யக் கோரிக்கைகளையும் வரவேற்று, அதற்கு வெட்டுப் பிரேரணை கொடுத்திருப்பதையும் எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது சம்பந்தமாக தக்க காலத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை என்ற முறையில் வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது விசித்திரமாகத்தான் இருக்கிறது. காரணம், ஏற்கனவே அமைச்சர்களும், இந்த அரசாங்கமும் திட்டவட்டமாக சொல்லிவிட்டது, உச்சவரம்பை கட்டுவோம் என்று. அப்படி சொல்லிவிட்டு, அதிலுள்ள கஷ்டங்களையும் நன்கு விளக்கி காண்பித்துள்ளார்கள். அப்படி அவர்கள் சொல்லிய பின்னரும் கூட இதுபோன்ற வாதங்களை கிளப்பினால் அவைகள் அர்த்தமற்றமுறையில்தான் அமைகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்த உச்சவரம்பு கட்டுகிற நேரத்தில் ஏற்கனவே அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் பேசுகிறபோது நன்கு குறிப்பிட்டிருக்கிறார்கள், எந்த அடிப்படையில் அது இருக்கப்போகிறதென்று. அதே சமயத்தில் அவர்கள் வேறு ஒன்றிரண்டு காரியங்களையும் மனதில் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்டுகிறபோது இப்பொழுது இருக்கக்கூடிய " எக்ஸிஸ்டிங் ஹோல்டிங்க்ஸ்"க்கும், (Existings ho dings) Future holdings-க்கும் ஒரு வித்தியாசம் வைக்க வேண்டும். இப்பொழுதுள்ள ஹோல்டிங்ஸ்க்கு அதிகப்படியாக உச்ச வரம்பும், இனிமேல் வாங்குகிற நிலங்களைப் பொறுத்த மட்டில் உச்சவரம்பை குறைத்தும் வைக்க வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்து. அதோடுகூட இப்பொழுது இருக்கக் கூடிய பண்ணைகள் நல்ல முறையில் விஸ்தரிக்கப்பட்டு விவசாயத்தில் பெரும் அளவில் உற்பத்திப் பெருக்கம் காண்பித்திருக்கக்கூடிய பண்ணைகளைப் பொறுத்த வரையில் அவைகளுக்கு இதிலிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டியது அவசியம். இதுபோன்ற விதிவிலக்கு கொடுப்பது என்பது ஏதோ நம் நாட்டில் புதிதாக செய்யப்படும் ஒரு முறை என்று நினைக்கவேண்டாம். தீவிரமான, முறையில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமென்றிருந்த சீனாவில் கூட இதுபோன்ற உத்தரவாதம் 25 வருடங்களுக்கு, பெரும் பண்ணைகளுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். அதே போல எகிப்து தேசத்தில் 10 a.m.
பெரிய புரட்சி கொண்டு வந்த நேரத்திலே கூட நல்ல முறையில் நடக்கும் பண்ணைகளுக்கு விதிவிலக்கு கொடுத்துத் தான் இருக்கிறார்கள். மேலும், இப்பொழுது சிலருக்கு இருக்கக்கூடிய பயத்தை போக்கக்கூடிய முறையில் கண்டிப்பாக நஷ்டஈடு கொடுக்கப்படும் என்று அறிவிப்பதோடு கூட, எந்த அளவு நஷ்ட ஈடு கொடுக்கப்படும், " லாண்டு அக்விஸிஷன் ஆக்ட் பிரின்ஸிபிள் " படியா அல்லது வேறு எந்த அடிப்படையில் கொடுக்கப்படும் என்பதை திட்டவட்டமாகச் சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும்.

ஏற்கனவே நாம் இரண்டு சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். விவசாயிகளை வெளியேற்றக்கூடாது என்ற சட்டம் 1955-ம் ஆண்டிலும், நியாய வாரச் சட்டம் 1956-ம் ஆண்டிலும் கொண்டுவரப்பட்டது. ஆனால், அதே சமயத்தில் அமைச்சர்களுடைய கவனத்திற்கும், அரசாங்கத்தின் கவனத்திற்கும் பல சந்தர்ப்பங்களிலே கொண்டுவரப்பட்டிருக்கும் விஷயம் என்னவென்றால், சிறு நிலச் சொந்தக்காரர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் பெருவாரியாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தான். சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்பதை கொள்கை ரீதியாக எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் உள்பட எல்லோரும் இதற்கான அவசியத்தைத் தெரிவித்

திருக்கிறார்கள் பல சந்தர்ப்பங்களில். அதை அனுசரித்து அரசாங்கம் சில புள்ளி விவரங்களை சேகரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் ஏற்கனவே இரண்டு ஆண்டுகளாக சிறு நிலச் சொந்தக்காரர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மற்ற சட்டங்கள் வரும் வரை பொறுத்திராமல், கூடிய சீக்கிரம் உடனடியாக இதற்கு ஒரு சட்டம் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏற்கனவே இருக்கக்கூடிய நியாயவாரச் சட்டத்தை அமுல் நடத்துவதில் ஒரு சில கஷ்டங்கள் இருக்கின்றன. காரணம், அதிலே விளையப்போகிறதில் 60—40 என்று இல்லாமல், விளையக்கூடியதில் 60—40 என்ற முறையிலே அமைந்திருப்பதுதான். இதனால் பல இடங்களில் இந்த சட்டத்தை நேரடியாக அமுல் செய்ய முடியாமல் கஷ்டமாக இருக்கிறது. ஆங்காங்கு தங்களுடைய குத்தகையை ஓரளவு குறைத்துக்கொடுத்து தங்களுக்குள் தீர்த்துக்கொள்ளுகிறார்கள். இந்த சட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு சில இடங்களிலேதான் இதை நேரடியாக அமுல் நடத்த முடிகிறது. ஆகவே, இந்தக் கஷ்டத்தை அவசியம் அகற்றியாக வேண்டும். அதோடுகூட, இதுபோன்ற காரியங்களை கவனிப்பதற்கு ரெவின்யூ கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது நல்ல முறையில் இருக்காது என்பதைத் தெரிவிப்பதோடுகூட, வேறு சில மாகாணங்களில் கூட, பீஹார், ஒரிஸா, வெஸ்ட் பெங்கால், ஆகிய ராஜ்யங்களிலே இது போன்ற காரியங்களை கவனிப்பதற்கு சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அதிகாரத்தை நம்முடைய ராஜ்யத்திலும் சிவில் கோர்ட்டுகளுககு மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். " ரெவிஷனரி பவர் " உயர் நீதி மன்றத்தில் வைத்திருப்பதின் காரணமாக ஏழை விவசாயிகள் பெரிய அளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள் என்று பல முறையில், பல சந்தர்ப்பங்களில் இந்தச் சபையிலே எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அடிப்படையை மாற்றி, இந்த அதிகாரத்தை ஆங்காங்கு இருக்கக்கூடிய ஜில்லா நீதிபதிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, ஸ்டாம்பு அட்மினிஸ்டிரேஷன் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய ஸ்டாம்பு ஆக்ட் விதிகளின்படி சாதாரணமாக ஒரு டிரான்ஸ்பர் ஏற்படுத்துவது என்று சொன்னால், அதற்கு ரூ. 3 ஸ்டாம்பு டியூடி கட்டவேண்டும். அதோடுகூட, முனிசிபல் அல்லது மற்ற இடத்தில் இருப்பதற்கு தக்கவாறு ஸ்தல ஸ்தாபனத்திற்கு சேர வேண்டிய கட்டணம் 4 அல்லது $4\frac{1}{2}$ ரூபாய் சேர்த்து கட்டவேண்டியதாக இருக்கிறது. ஆக, இப்பொழுது இருக்கிற விதிகளின்படி 100-க்கு 7 அல்லது $7\frac{1}{2}$ ரூபாய் கட்டணம் கட்டவேண்டியதாக இருக்கிறது. இம்மாதிரி நிலை இருக்கிற காரணத்தினால், 10,000 ரூபாய்க்கு டிரான்ஸாக்ஷன் நடக்கிறது என்று சொன்னால், 4,000 அல்லது 3,000-க்குத்தான் பத்திரம் எழுதப்படுகிறது. இது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்ததே. அதன் காரணமாக அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருவாய் பெரும் அளவுக்கு குறைந்து போகிறது. ஆகவே, உயர்வாக இருக்கக்கூடிய இந்த விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது போன்று முன்பு " பெட்டிங் டாக்ஸை " குறைத்தபோது, அதற்குப் பிறகு வருவாய் அதிகரித்தது. அதுபோலவே இதிலும் ஸ்டாம்பு கட்டணத்தைக் குறைத்தால், அதிக வருவாய் கிடைக்கும். ஆதலால், இந்தக் கட்டண விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஜுடிஷல் ஸ்டாம்பைப் பொறுத்தவரைக்கும் இந்த நிர்வாகத்தைப் பொறுத்த வரைக்கும், ஏதோ வருவாய் வர வேண்டிய ஒரு நிர்வாகமாக இருக்கிறதே தவிர, நீதி வழங்கக்கூடிய நிர்வாகமாக, நீதியை மட்டும் மனதில் கொள்ளக்கூடிய நிர்வாகமாக இல்லை, ஏற்கனவே " லா கமிஷன் " ரிபோர்ட்டில் எடுத்துச் சொல்லி



யிருக்கிறபடி " ஸிவில் அட்மினிஸ்டேரஷனைப் " பொறுத்தவரைக்கும் அதிலே செலவழிக்கக்கூடிய அளவுக்கு மட்டுமே ஸ்டாம்பு டியூடி, கோர்ட்டு பீஸ் விதிக்கவேண்டும், அப்படியல்லாமல் அதிகப்படியான அளவுக்கு அதை நிர்ணயித்து இப்பொழுது அரசாங்கம் அதிலிருந்து ஏறக்குறைய 50 லட்சம் ரூபாய்க்கு மேலாக, செலவு போக (" கிரிமினல் ஜஸ்டிஸுக்கு" செலவழிக்கக்கூடிய பணம் உள்பட) வருவாய் தேடுகிறது. " கிரிமினல் ஜஸ்டிஸை " பொருத்த வரைக்கும், அது அரசாங்க செலவிலே நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கை உலக ரீதியிலே ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. " லா கமிஷனும் " அதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இப்பொழுது இருக்கக்கூடிய 100-க்கு 7 ரூபாய் என்ற முறையிலே இருக்கக்கூடிய கோர்ட்டு பீஸை மாற்றி அமைத்து, குறைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக " ஸ்டாம்பு அட்மினிஸ்டேரஷனை " பொறுத்தவரையில் அது வருவாய் வரக்கூடிய துறையாக இருக்கிறது. இந்தத் துறையில் அடிப்படையில் ஏற்படக்கூடிய கஷ்டம் என்னவென்றால், எதிர்பார்த்த அளவுக்கு, ஆங்காங்கு வாஙகுகின்ற அளவுக்கு ஸ்டாம்பு பத்திரங்கள் கிடைப்பதில்லை. பல சந்தர்ப்பங்களிலே சென்ற ஆண்டு "பார் அஸோஸியேஷன்களும்," நீதிபதிகளும்கூட இதுபற்றி சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் கூட, எதிர்பார்க்கின்ற அளவுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை. சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பு கூட உயர் நீதி மன்றத்தில் கூட ஸ்டாம்பு பேபர்கள் கிடைக்கா நிலைமையை நான் நேரில் பார்த்திருக்கிறேன். ஸ்டாம்பு பேபர்கள், ஸ்டாம்புகள் எல்லா இடங்களிலும் தாராளமாக கிடைக்கவேண்டிய முறையை அவசியம் ஏற்படுத்த வேண்டும். முன்கூட்டியே வேண்டிய அளவு வாங்கி வைத்துக்கொள்ள " டிரெஷரிகளுக்கு " உத்தரவு போட வேண்டும். இப்பொழுது நாஸிக் அச்சகத்திலிருந்துதான் இந்தியா பூராவுக்கும் இந்த ஸ்டாம்புகள் விநியோகிக்கப்படுகின்றன. அவசியம் இருந்தால் இந்த அச்சகத்தின் ஒரு பிரிவை சென்னையில் அமைத்து, நமக்கு வேண்டிய அளவு ஸ்டாம்புகள் எல்லா இடங்களிலும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக, " டாகுமெண்டுகள் இம்பவுண்டிங்குக்கு " செல்லும் பொழுது, ரெவின்யூ ஆபீஸருக்கு செல்லும்பொழுது அதிகமாக காலதாமதம் ஏற்படுகிறது. சமயத்தில் 6 மாதங்கள், ஒரு ஆண்டு கூட காலதாமதம் ஆகிறது. அந்தக் காரணத்தினால் நீதி மன்றங்களிலும் அதிகமாக காலதாமதம் ஏற்படுகிறது. இந்த காலதாமதத்தைத் தவிர்த்து துரிதமாக வேலை செய்யக்கூடிய ஒரு வாய்ப்பை தேடித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, " அட்மினிஸ்டிரேஷனைப் " பொறுத்தவரைக்கும் இப்பொழுது வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கும்பொழுது 73 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருகிறது என்று சொன்னால், உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு சம்பளம் ரீதியாக கொடுக்கக்கூடியது மட்டும் அதோடு, கூட ஆபீஸில் இருக்கக்கூடிய " எஸ்டாபிளிஷ்மெண்டையும் " சேர்த்து ஏறக்குறைய 25 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அப்படிப் பார்க்கும்பொழுது வருவாயில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு இதற்காக செலவழிக்கப்படுகிறது. அதே சமயத்தில் இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால் சம்பளம் போதாது, அதிகப்படியான ஆள்கள் தேவை என்பதுதான். இதற்கான காரணத்தை நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது, அதிகப்படியான சம்பளம் கொடுத்துவிடுகிறோம் என்பது அல்ல, அல்லது தேவைக்கு அதிகப் படியான உத்தியோகஸ்தர்களை நியமித்துவிடுகிறோம் என்பதும் அல்ல. இப்பொழுது இருக்கக்கூடிய " ப்ரோஸீஜர்" பல ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டது. அதிலே இருக்கக்கூடிய

[Sri S. Lazar] [11th March 1959

காலதாமதம்தான் இதற்குக் காரணம். இதை மாற்றி அமைக்க முயற்சி செய்யவேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகளிலே எந்தக் காரியமும் வெகு துரிதமாகச் செய்யப்படுகிறது. அதே முறையில் நாமும் காரியங்களை துரிதமாகச் செய்வதற்கு வேண்டிய ஒரு முறையை வகுக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய முறையினால்தான் செலவு அதிகமாக ஆகிறது. எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் விஸ்வநாதன் அவர்கள் சொன்னதுபோல காலதாமதத்தை தவிர்ப்பதற்கு இப்பொழுது இருக்கக்கூடிய முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, இப்பொழுது இருக்கக்கூடிய கிஸ்து முறையினால் சர்க்காருக்கு வரக்கூடிய வருமானம் 5 லட்ச ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் அதற்காக நாம் செலவழிக்கக்கூடிய பணத்தைப் பார்க்கும் பொழுது ஏராளமாக நாம் செலவு செய்து கொண்டு வருகிறோம். "வில்லேஜ் ஆபீஸர்களுக்கும்" அவர்களுடைய எஸ்டாபிளிஷ்மெண்டுக்கும் நாம் செலவழிக்கக்கூடிய பணம் 263 லட்ச ரூபாயாக இருக்கிறது. அதே சமயத்தில் நிலத்தில் இருந்து வரக்கூடிய வருமானம் ரூ. 490 லட்சமாக இருக்கிறது. வில்லேஜ் ஆபீஸர்கள் என்று சொல்லுகிறபொழுது இப்பொழுது இருக்கக்கூடிய தாலூகா, ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர்கள் இவர்களையும் சேர்த்து இவர்களுக்காக செலவழிக்கக்கூடிய பணம் 169 லட்ச ரூபாய் என்று சொன்னால், ஏறக்குறைய அவர்களுக்கு பாதி வேலை இந்த கிஸ்து வசூல் செய்வதாக இருக்கிறது. அந்த முறையில் அதிலே ஒரு பாதி பணத்தை இதிலே சேர்த்துப் பார்க்கும் பொழுது செலவு ரூபாய் 263 லட்சம். வரக்கூடிய வருவாய் ரூ. 490 லட்சமாக இருக்கிறது. அதிகப்படியாக நமக்கு வரக்கூடிய வருவாய் ரூ. 227 லட்சம் தான். "டாக்ஸேஷன் என்கொயரி கமிட்டி" சொல்லியிருக்கிறபடி, இப்பொழுது நாம் வருமான வரியைக் கொண்டு வந்திருக்கிறோம், விவசாய வருமான வரியைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்தத் துறையில் வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் அதிகமான வருவாயை தேடிக்கொண்டு, இதிலே கொஞ்சம் விட்டுக்கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்தை நான் ஆதரித்து, அந்த முறையில் சாதாரண கிஸ்தை எடுத்துவிட்டு, வருவாயின் அடிப்படையிலே வரியை விதிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

10-10 a.m. அடுத்தப்படியாக பொதுவாக இப்பொது என்.ஜி. ஓ.க்களுடைய சம்பளப் பிரச்னை கமிஷனின் கையில் விடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதைப் போலவே வில்லேஜ் ஆபீஸர்களுடைய சம்பள பிரச்னையைப்பற்றியும் இந்த கமிஷன் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு இப்போது கலெக்டர்களுக்கு அதிகமான வேலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் சிறிதளவு குறைத்தால்தான் அவர்கள் சில முக்கியமான வேலைகளில் ஈடுபடுவதற்கு வசதியாக இருக்கும். இதைப்பற்றியும் அரசாங்கம் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக இந்த அட்மினிஸ்ட்ரேஷனை பொறுத்த வரையில் இந்த இலாகாக்களின் கீழ் வேலை செய்கின்ற உத்யோகஸ்தர்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் நமது திட்டங்களை எல்லாம் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். அந்த முறையில் அவர்கள் வேலை செய்து வருவதற்காக அவர்களை நான் பாராட்டிக்கொள்வதோடு அதற்காக அவர்களுக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI T. IRUSAPPAN : கனம் சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, இன்றையதினம் திரு. ராமச்சந்திரன் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று நாம் பல வருடங்களாக சொல்லிக்கொண்டிருக்கிறோம். எல்லாக் கட்சி



11th March 1959] [Sri T. Irusappan]

களும் இதை ஆதரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இதை கொண்டு வருவதில் காலதாமதம் ஆகிறது. இவ்விதம் காலதாமதம் ஆவதால், இதை அறிந்து கொண்டு பல நிலச்சொந்தக்காரர்கள் தங்கள் நிலங்களை எல்லாம் தங்கள் சொந்தக்காரர்கள் பேருக்கு எழுதி வைத்துவிடுகிறார்கள். அதோடு மீதி இருக்கின்ற நிலங்களை எல்லாம் விற்று பணத்தை திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரியே போய்க்கொண்டிருந்தால் நிலத்திற்கு உச்ச வரம்பு ஏற்பட்டபின்னாலும் அதனால் ஏழைகளுக்கு எந்த விதமான பயனும் கிடைக்காமல் போய்விடும். ஆகவே இந்தச் சட்டத்தை உடனடியாக கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியாகிய ஆத்தூர் வட்டத்தில் மழை இல்லாததின் காரணமாக அங்குள்ள மக்கள் பயிர் செய்வதற்காக விட்டிருந்த நாற்றை பிடுங்கி நடுவதற்குகூட முடியாமல் ஆகிவிட்டது. அதே போன்று தான் ஏற்கனவேசெய்திருந்த பயிர்களையும் அறுவடை செய்ய முடியாமல் ஆகிவிட்டது. இந்த நிலைமையில் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நிலவரி வஜா செய்து கொடுக்க வேண்டுமென்று அங்குள்ள மக்கள் மனு செய்து கொண்டார்கள். அவ்விதம் மனு செய்திருந்தும்கூட அதன் படி வரி வஜா செய்து கொடுக்கப்படாததின் காரணமாக அவர்களுடைய மாடுகள், ஆடுகள், இவைகளையெல்லாம் ஜப்தி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் அங்குள்ள மக்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அதோடு அவர்கள் அங்கு குடியிருக்க இடமும் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு உடனடியாக வரிவஜா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக என்னுடைய தொகுதியாகிய ஆத்தூர் வட்டத்தின்கீழ் இருக்கும் வீரகனூர், காமகபாளையம், வேப்பம் பூண்டி, ஆரகலூர்,பெரியேரி, புளியங்குறிச்சி, தலைவாசல் சுற்றியுள்ள கிராமங்களில் எல்லாம் இந்த ஆண்டு மழை இல்லாததன் காரணமாக அங்குள்ள நிலங்கள் எல்லாம் காய்ந்து போய்விட்டது. மழையில்லாததின் காரணமாக ஏரி, குளங்களில் எல்லாம் தண்ணீர் இல்லாமல் போய் விட்டது. இப்படி ஏரிகளில் எல்லாம் தண்ணீர் இல்லாததின் காரணமாக அங்குள்ள மக்களுக்கு விவசாயம் செய்ய வேறு வழியில்லாமல் அந்நிய இடங்களுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். அதோடு அங்குள்ள ஏரிகளிலுள்ள மதகுகள் எல்லாம் சீர்கேடு அடைந்து இருக்கின்றன. இதை மராமத்து இலாகா அதிகாரி வந்து பார்வையிட்டனர். இருந்தாலும்கூட இன்னும் அவைகள் எல்லாம் சீர்ப்படுத்தப்படவில்லை. இதைப்பற்றி மனுக்கள் அனுப்பியிருந்தோம். அந்த மனுக்கள் எல்லாம் எங்கே போனது என்றே தெரியவில்லை. கனம் அங்கத்தினர் விசுவநாதன் அவர்கள் சொன்னது மாதிரி அனுப்பக்கூடிய மனுக்கள் எல்லாம் எங்கே போகின்றன என்றே தெரிவதில்லை. காங்கிரஸ் அங்கத்தினர்கள் அனுப்பக்கூடிய மனுக்களே இவ்விதம் போய்க்கொண்டிருக்கிறது என்றால் எதிர் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் அனுப்பும் மனுக்களுக்கு எந்த நிலை ஏற்படும் என்று சொல்லத்தேவையில்லை. இந்த நிலையில் நிர்வாகம் நடந்துகொண்டிருந்தால் ஏழை மக்கள் எவ்விதம் வாழ முடியும் என்று கேட்க விரும்புகிறேன். இம்மாதிரி அனுப்பப்படும் மனுக்கள் எல்லாம் சரியான விதத்தில் கவனிக்காததின் காரணமாகத்தான் இந்த குறைகளை எல்லாம் கூற வேண்டியதாக இருக்கிறது. அதல்லாமல் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் ஏதோ பிரமாதமாக அரசாங்கத்தைப்பற்றி குறைகூறி பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவதில் ஒரு அர்த்தமும் இல்லை. இந்த ஏரிகள் எல்லாம் பாழடைந்து நாலைந்து ஆண்டுகள் ஆகியும்கூட இது வரையிலும் அந்த ஏரிகள் எல்லாம் சீர்படுத்தாதின் காரணமாக அந்த ஏரிகளில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. இதன் காரணமாக அங்குள்ள மக்களுக்கு இந்த ஏரியினால் ஒரு வித பயனும் ஏற்படாமல் போகின்றது. ஆகவே இந்த ஏரிகளை எல்லாம் உடனடியாக பழு

பார்க்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு நிலத்தை அடமானம் செய்து பணத்தை வாங்கி விவசாயம் செய்யலாம் என்று நினைத்து அங்குள்ள மக்கள் மனு செய்தால் அவர்களுக்கு அடமானம் செய்து கொடுப்பதில்லை. இதற்காக எத்தனையோ டிப்பார்ட்மெண்ட்கள், எத்தனையோ தாசில்தார்கள் எல்லாம் போடப்பட்டிருந்தும் கூட இதுவரையிலும் அவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி கழிந்த சட்டமன்றக்கூட்டத்திலும் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது அங்குள்ள கணக்குப்பிள்ளையும் அதிகாரிகளும் சேர்ந்து ஒருவருடைய நிலத்தை இன்னொருவருக்கு அடமானம் செய்து கொடுத்து விடுகிறார்கள். இதைப்பற்றி போலீஸில் கேஸ் போட்டும் கூட ஒரு வித பயனும் ஏற்படவில்லை. அதோடு அங்கிருக்கின்ற நிலங்களை கிட்டத்தட்ட 3,000 பேர்களுக்கு அஸைன்மெண்ட் செய்து கொடுத்திருக்கிறார்கள். இவ்விதம் அஸைன்மெண்ட் செய்து கொடுத்து ஐந்து வருட காலம் இருக்கும். சாதாரணமாக மூன்று வருடமாக தீர்வையும் கொடுக்கப்படாமல இருந்தால் அஸைன்மெண்ட் செய்து கொடுத்தது செல்லுபடியாகாது என்று இருந்தும், பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் இன்னும் அஸைன்மெண்ட் செய்து கொடுத்திருப்பதாகவே காண்பிக்கப்படுகிறது. இவ்விதம் நடந்து கொண்டிருந்தால் எவ்விதம் ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னுக்கு வர முடியும் என்று கேட்கிறேன். அதோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் சர்க்காரிலிருந்து கொடுக்கிறார்கள். கொடுக்கப்படுகின்ற நிலம் கரடு முரடாக இருக்கிறது. அதில் சாகுபடி செய்ய வேண்டும், அதற்காக பண உதவி வேண்டும் என்று கேட்டால் அதற்கு கடன் கொடுக்க முடியாது, இந்த நிலம் கடன் கொடுப்பதற்கு போதுமானதல்ல என்று சொல்லி பணவசதி செய்து கொடுப்பதில்லை. இவ்விதம் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவில்லை என்றால் எவ்விதம் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னுக்கு வர முடியும் என்று கேட்கிறேன். இந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால் எப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரத்தில் முன்னுக்கு வர முடியும் என்று கேட்கிறேன். ஆகவே இதையெல்லாம் கவனித்து ஏழை மக்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதிலும் குறிப்பாக ஆத்தூர் பகுதியில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களை போக்குவதற்காக எல்லா உதவிகளையும் செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தினிடத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே ஆத்தூர் பகுதியில் பல பகுதிகளிலும் குடியிருக்க மனையில்லாத மக்கள் ப்ளாட்பாரத்திலும் குடியிருந்து கொண்டிருந்தார்கள். சமீபத்தில் மாவட்ட அதிகாரிகள் வந்து இந்த மாதிரி குடியிருக்கக்கூடாது, இந்த இடங்களை எல்லாம் காலி செய்ய வேண்டும். இந்த மாதிரி இருப்பதை உடனே காலி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இவ்விதம் சொன்ன தினத்தில் ராத்திரியிலேயே அவர்கள் காலி செய்து விட்டார்கள். அதன் பின்னால் அவர்கள் குடியிருக்க இடமில்லாமல் சர்க்கார் வகையாக இருக்கக்கூடிய நத்தம் புறம்போக்கில் போய் குடியிருந்தார்கள். அங்கு அவ்விதம் குடியிருப்பதற்கு சுமார் ஒரு மாதம் வரை எந்தவிதமான ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை. இந்த இடத்தை குடியிருக்க தர வேண்டும் என்று அதில் குடியிருந்த ஏழை மக்கள் மாவட்ட அதிகாரிகளுக்கும் தாசில்தாருக்கும் மனு செய்து கொண்டார்கள். தந்தி மூலமாகவும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் ஒன்றும் பொருட்படுத்தாமல் அங்கேயும் தங்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். இவ்விதம் அங்குள்ள ஏழை மக்களுக்கு ஒரு அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்காக பல அதிகாரிகளை கண்டு சொன்ன பின்னும் அந்த இடத்தில் இருக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள்.

(Mr. Speaker in the Chair.)

என்ன காரணம் என்று தெரியவில்லை. அதன் பின்னால் அந்த இடத்தை எல்லாம் காலி செய்ய வேண்டும் என்று சொல்லி 7-ம் நம்பர் நோட்டீஸ் கொடுத்தார்கள். இதைப்பற்றி மனுசெய்தும்கூட அதன் பேரில் ஒரு



நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதன் பின்னால் திடீரென்று 6-ம் நம்பர் நோட்டீஸ் கொடுத்தார்கள். உடனே அதாவது மூன்று தினங்களுக்குள் காலி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதன்படி அவர்கள் காலி செய்வதற்காக தங்களுடைய செலவில் கட்டியிருந்த குடிசையிலிருந்து குச்சிகளைப் பிரித்துக்கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் பிரித்துக்கொண்டு போகவேண்டுமென்றால் காலதாமதம் ஆகிவிடும் என்றும், ஆகவே உடனடியாக வெளியில் போகவேண்டும் என்று சொன்னதின் பேரில், அவர்கள் போக மறுத்ததும் அவர்கள் பிரித்து வைத்திருந்த குச்சிகளை எல்லாம் போலீஸ் லாரியில் தூக்கிக்கொண்டு சென்று விட்டார்கள். அதோடு போலீஸ்காரர்கள் அங்குள்ள மக்களையும் தாக்கியிருக்கிறார்கள். ஜாதி இந்துக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் ஒரே நிலையில் வாழவேண்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து அவர்கள் குடியிருப்பதற்கேனும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய ராமநாயக்கன்பாளையத்தில் ஒரு கூட்டுப்பண்ணை ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரு திட்டம் (ப்ரபோஸல்) இருந்து வருகிறது. அதை அங்குள்ள அரிஜன மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதோடு அதற்கு உதவியாக இருக்கும்படியான நிலையில் கல்வராயன்மலையில் பக்கத்தில் ஒரு ஏரி கட்டி நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதற்கும் வசதியிருக்கிறது. இதனால் இந்தக் கூட்டுப்பண்ணை ஏற்படுத்துவதற்கு மிக உதவியாக இருக்கும். ஆகவே இதைப்பற்றியும் ஆலோசனை செய்து இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, மலைவாசிகளுக்காக ஓராசிரியர் பள்ளிகள் திறந்திருக்கிறார்கள். அந்த இடத்திற்குப் போக ஆசிரியர்கள் அஞ்சுகிறார்கள். மலையில் போய்த் தங்கினால் குளிர் காய்ச்சல் வந்து விடும் என்று பயப்படுகிறார்கள். அவர்கள் போனாலும் தங்குவதற்கு இடம் கிடையாது. அவர்களுக்கு இடம் ஏற்படுத்திக்கொடுத்து மலையில் இருக்கக் கூடிய மலைவாசிகள் கல்வி அறிவு பெறுவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நிலத்திற்கு உச்ச வரம்பை உடனடியாகக் கொண்டுவரவேண்டுமெனறு கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* Sri P. M. MUNUSAMI GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கும் மானியத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முக்கியமாக நம்முடைய மாகாணம் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக, பல ஜில்லாக்களாக, பல தாலுக்காக்களாகப் பிரிக்கப்பட்டது என்பது நன்றாகத் தெரியும். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு நம் சர்க்காரால் ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டபோது என்ன ஜனத்தொகை இருந்தது, இப்போது என்ன ஜனத்தொகை இருக்கிறது, அதே மாதிரி வேலையை எடுத்துக்கொண்டால் வேலை விதாசாரம் முன்பு என்ன இருந்தது, தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது பன்மடங்கு உயர்ந்து போயிருக்கிறது. இந்த நிலையில் இருக்கும்போது நாம் எப்படி நம் ஜில்லாக்களை சரியான முறையில் பரிபாலிக்க முடியும். சரியான முறையில் பரிபாலிக்க என்ன செய்யவேண்டுமென்று சர்க்கார் நன்றாக ஆராய்ச்சி செய்து அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் நண்பர் விஸ்வநாதன் அவர்கள் சொல்லும்போதும், நண்பர் லாஸர் அவர்கள் பேசும்போதும் ஏதாவது விண்ணப்பங்கள் சர்க்காருக்கோ, அல்லது கலெக்டருக்கோ எழுதினால் பதில் வருவதில்லை என்று சொன்னார்கள். எப்படி வரும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். வர முடியாத நிலையில் இருக்கிறது. அவர்களுக்கு வேலை பலமடங்கு உயர்ந்துகொண்டு போகும்போது, ஜில்லா அட்மினிஸ்ட்ரேஷன்

[Sri P. M. Munusami Gounder] [11th March 1959

வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இதிலே கவனம் செலுத்த முடியவில்லை. எது சொன்னாலும்கூட, சொல்லும்போது ஒரு காதால் கேட்டு விட்டு மற்றொரு காதால் விட்டு விட்டு, பார்க்கலாம் என்ற முறையில் போகிறார்களே தவிர நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையில் இல்லை. அதற்கு நான் என்ன சொல்லுகிறேன் என்றால், சென்னையானது இன்றைக்கு 13 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ஜில்லா கலெக்டரின் கீழ் பரிபாலனம் நடக்கிறது. என் சிறு சிறு ஜில்லாக்களாகப் பிரித்து மேலும் பல கலெக்டர்களைப் போட்டு நடத்த முடியாது ? நமக்கு வருமானம் பன் மடங்கு உயர்ந்திருக்கிறது. இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு முன்பு எடுத்துக்கொண்டாலும், தற்போது எடுத்துக்கொண்டாலும், ஒவ்வொரு வருஷத்திற்கும் இரண்டு கோடி மூன்று கோடி உயர்ந்துகொண்டே போகிறது. செலவினங்கள் அதே மாதிரி ஜாஸ்தி ஆனாலும் ராஜ்ய பரிபாலனத்தில் சரியான கவனம் செலுத்தவில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சில ஜில்லாக்களில், குறிப்பாக சேலம் ஜில்லாவிலும், கோயம்புத்தூர் ஜில்லாவிலும் ஜில்லா அதிகாரிகளுக்கு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமென்றால் ஒரு மாதத்திற்கு ஒரு முறை கூட வர முடியவில்லை. ஒரு மாதத்திற்கு அவர் சுற்றுப்பிரயாணத் திட்டத்தைப் போட்டு வர சாத்தியமில்லாமல் ஹெட்க்வார்ட்டர்ஸ் திரும்பிவிட்டதாகவும் சுற்றுப் பிரயாணத் திட்டம் மாற்றப்பட்டதாகவும் வருகிறது. சாதாரணமாக ஒரு இடத்திலிருந்து கலெக்டரைப் போய்ப் பார்க்கவேண்டுமானால் ஜில்லா தலைநகரத்திற்குப் போய்த்தான் பார்க்கவேண்டும். அப்படிப் போனாலும் பார்க்க முடிகிறதா என்றால் அதுவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அதுவும் இப்போது இருக்கக்கூடிய ஜில்லாக்களில் முக்கியமாக சேலம் ஜில்லாவில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கஷ்டத்தை உத்தேசித்து சர்க்காரிலே இரண்டு ஜில்லாக்களாக பிரிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களேயொழிய, இன்னும் பிரித்தபாடு கிடையாது. பொது ஜனங்களுடைய நன்மையை உத்தேசித்து பிரிக்கவேண்டுமென்று கூறுகிறோமே தவிர இதிலே வேறு என்ன இருக்கிறது ? எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் ஹோசூர் தாலூக்காவிலிருந்து ஹெட்க்வார்ட்டர்ஸ்க்கு 120 மைல் போகவேண்டும். ஹெட்க்வார்ட்டர்ஸில் ஒரு நாள் வேலை இருந்தால், மூன்று நாள் ஆகிவிடுகிறது. அங்கே போனபோது அதிகாரி இல்லை என்றால் திரும்ப வரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள் மக்கள். ஆகையால் உடனடியாக ஜில்லாக்களை ஏன் பிரிக்கக் கூடாது ? அதனால் என்ன கஷ்டம் ? ஆகவே பொது மக்களுக்கு நன்மை செய்யவேண்டி இந்த ஜில்லாக்களைப் பிரிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுவும் குறிப்பாக, தாலூக்காக்களில் எடுத்துக்கொண்டால், நான் இருக்கும் பகுதியை எடுத்துக்கொண்டால், கிருஷ்ணகிரி தாலூகா ஒரு பெரிய தாலூகா. நம்முடைய மாகாணத்திற்கு அருகிலே இருக்கிற பாண்டிச்சேரி ஸ்டேட் எவ்வளவு இருக்கிறது என்றால், கிருஷ்ணகிரி தாலூக்கா எவ்வளவு இருக்கிறதோ அதைப் போன்று இருக்கிறது. அதற்கு பல மந்திரிகள், பல அதிகாரிகள், நம்முடைய மாகாணத்தில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். தாலூக்காக்களில் தாசில்தார்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் எல்லா வேலைகளையும் செய்யவேண்டியிருக்கிறது. அடிப்படை வேலைகளையெல்லாம் செய்வது யார் என்றால், இந்தத் தாசில்தார்கள் தான். அவர்களுக்கு நல்ல வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்படவில்லை. பிளாக் டெவலெப்மெண்ட் ஆபீஸர்களைப் போன்று ஜீப் வாகனம் கொடுத்தால் பல காரியங்களைச் செய்யக்கூடிய நிலையில் அவர்கள் இருப்பார்கள். ஆகையால் தாசில்தாருக்கு குறிப்பாக ஜீப் கொடுத்து வேலைகளை உடனடியாகப் பார்க்கும்படியான நிலைமையை ஏன் உண்டாக்கக்கூடாது என்பது தான் என்னுடைய கோரிக்கை. சப்-கலெக்டர்களாக இருக்கக்கூடியவர்களுக்குக்கூட ஜீப் வசதி கிடையாது. தேசீய அபிவிருத்தித் திட்டத்தில் பிளாக் டெவலெப்மெண்ட்



11th March 1959] [Sri P. M. Munusami Gounder]

ஆபீஸருக்குத் தான் இருக்கிறது. அந்த மாதிரி ஒவ்வொரு தாலூக்காவிலும் தாசில்தாருக்கும் ஜீப் கொடுத்து வேலைகளைத் துரிதப்படுத்தவேண்டும். அதுவும் சட்ட சபை அங்கத்தினர்கள் குறிப்பாக ஒரு விஷயத்தைக் கேட்டாலும், சொல்லக்கூடிய நிலையில் இல்லை சில தாலூக்காக்களில்கூட என்பது பல அங்கத்தினர்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது. இந்த மாதிரியான நிலைமையைச் சீர்படுத்த வேண்டுமானால் ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும், தாலூக்காக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதிகமான குமாஸ்தாக்களைப் போட்டு வேலை செய்தால் வேலை உடனடியாக நடக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஒரு தாலூக்கா ஆபீஸுக்குச் சென்றால் சட்ட சபை அங்கத்தினர்களும், பெரிய மனிதர்களும் உட்காரக்கூடிய சரியான நிலை கிடையாது. பியூன்கள் போல வெளியில் நின்று கொண்டு வேலையைப் பார்த்து வரக்கூடிய நிலை இருக்கிறதென்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். நாம் கோடிக் கணக்காகச் செலவழிக்கிறோம். பல சீர்திருத்தங்களைச் செய்யும்போது நாம் மரியாதை என்ற முறையில் இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஜமீந்தார்களுக்கு காம்பென்ஸேஷன் கொடுக்கும் விஷயத்தைப் பற்றிச் சொல்லும்போது இந்த வருஷத்தில் 55 லட்சம் ரூபாய் காம்பென்ஸேஷன் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஜமீன்களை எடுத்துக்கொண்டு 6 அல்லது 7 ஆண்டுகள் ஆகின்றன. இதற்குப் பூராப் பணத்தையும் ஒதுக்காதது வருந்தத் தக்கது. ஆந்திராவில் ஜமீந்தார்கள் வருவாயை வைத்துக்கொண்டு பல விதத்தில் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். சேலம் ஜில்லாப் பகுதியில் இருக்கும் ஜமீந்தார்களுடைய நிலை வருந்தத் தக்க விஷயமாக இருக்கிறது. என்றும் ஒரே மாதிரியாக இருக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். காம்பென்ஸேஷன் பூராவும் உடனடியாக வந்தால் எந்தத் தொழிலிலாவது ஈடுபட்டிருக்க முடியும். 5 அல்லது 6 ஆண்டுகளாக இப்படியே கொடுத்துக் கொண்டு போவதால் எந்த வித உபயோகத்திற்கும் இல்லாத நிலையில் வருகின்ற பணம் அவ்வப்போது செலவாகி விடுகின்றது. அடுத்த வருஷமே எல்லாப் பணத்தையும் கொடுக்கும் நிலையை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும்.

கிருஷ்ணகிரி தாலூகாவைப் பார்க்கும்போது ஜமீன்களை எடுத்துக்கொண்ட பிறகு செட்டில்மெண்ட் வகையில் கால தாமதம் ஏற்பட்டு, மார்க்கண்டேயா நதியில், தென் பெண்ணையாறு ஆற்றில் தென்னை மரம் உற்பத்தி செய்ய ஜமீந்தார்கள் காலத்தில் உபயோகித்துக்கொண்டு வந்த நிலையில், இது சர்க்கார் நிலம், உங்களுக்குக் கொடுக்க முடியாது என்று கஷ்டப்படுத்தி சர்க்காரே ஆர்ஜிதம் செய்வதோடு, மரம் ஒன்றுக்கு 20 ரூபாய் வரை கொடுக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. 10 மரம் வைத்துக் கொண்டிருந்தால் 200 ரூபாய் அதில் வரும்படி வருமா என்று யோசித்துப் 10-30 a.m.
பார்க்கவேண்டும். இதையெல்லாம் ஒரு நல்ல நிலையில் யோசித்துப் பார்க்காமல் ஏதோ ஜமீந்தார்களை ஒழித்துவிட்டோம், எடுத்துவிட்டோம், மரங்களைத் தூக்கிக்கொண்டோம் என்றால் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். ஏதோ அவர்கள் தொன்றுதொட்டு அனுபவத்தில் இருந்து வந்ததை அவர்களுக்கு ஆர்ஜிதம் செய்து, அதன் மூலமாக வரி வசூல் செய்து கொள்வது தான் நியாயம். மரம் ஒன்றுக்கு இருபது ரூபாய் என்ற முறையில் அவர்களை நிர்ப்பந்தம் செய்வதில் அர்த்தம் இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நமக்கு நிலவருமானம் சம்பந்தப்பட்ட வரையில், நிலவுடமைக்கு உச்ச வரம்பு விஷயமாக பல அங்கத்தினர்கள் சொல்லும் போது, உச்ச வரம்பு உடனடியாக வரவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அது அவசியம் தான். யாரும் மறுப்பதற்கில்லை. எல்லா நிலங்களையும்

[Sri P. M. Munusami Gounder] [11th March 1959

ஜமீந்தார்களே அனுபவிக்கவேண்டுமென்று சொல்லக்கூடியவர்கள் தற்போது ஒருவரும் இல்லை. சர்க்காரே நல்ல அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினரும் அக்கரை கொண்டிருக்கிறார்கள். இதற்காகத் தனிப்பட்ட வெட்டுப்பிரேரணையோ மற்றதோ அவசியம் இல்லை. நிலவுடமைக்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பது உடனடியாக வரும் என்று நமது ரெவினியூ அமைச்சர் அவர்களே சொல்லியிருப்பதால், அது கூடியசீக்கிரம் வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

கிராமப் பக்கத்தில் மேய்ச்சல் தரை என்று சர்க்கார்ப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்று பேசப்படுகிறது. ஆனால், கிராமத்தில் இருக்கக்கூடிய ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் தரை இருப்பது அவசியம், அப்படி இருக்கும்போது சர்க்கார்ப் புறம்போக்கு நிலங்களில் ஆடு மாடுகள் மேய்ச்சலுக்கென்று ஒரு பகுதியை ஒதுக்கிவிட்டு, மீதியிருப்பதை நிலமில்லாதவர்களுக்கு ஒதுக்கினால் நல்லதே தவிர, நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டும் என்ற முறையில், இந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்வது அவ்வளவு சரியல்ல. கடந்த மாதம் 23, 24-ந் தேதி சேலத்தில், சேலம்–கோயமுத்தூர்–நீலகிரி ஜில்லாக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட ஸெமினார் நடந்தபோதுகூட, முக்கியமான தீர்மானம் போடப்பட்டது. அதில் இந்தத் தீர்மானம் முக்கியமானது என்று எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு இது சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆடு மாடுகள் மேய்ச்சலுக்காக நிலம் ஒதுக்கப்படவேண்டியது அவசியம் என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. T. DANIEL: Mr. Speaker, Sir, while supporting this Demand, I would like to bring to the notice of the Government certain matters for their kind consideration. At present applications of the Harijans for educational fee concession are considered and disposed of by the Collector. As a result of the tight work in the Collector's Office, there is considerable delay in disposing of these applications and many of the Harijans do not get actually the benefits of the concession and even the stipends that are given to them for purchasing books, they do not get in time. I would, therefore, suggest that instead of the Collector doing the entire business of scrutinising these applications, the applications of the Harijan students of the primary schools can be dealt with by the Inspector of Schools and that of the Harijan students of the high schools by the District Educational Officer. If that is done, the Harijans will be getting their concession in time.

Now, Sir, the policy of the Government is to assign Government lands in favour of Harijans. In spite of our recommendations to the Government that this policy should be extended to the Kanyakumari district, it has not so far been extended. At present lands are given to the Harijans in the district only on the basis of lease and that at any time the village officers can evict these poor Harijans who have been squatting by building huts on those lands. I would, therefore, urge that the Government should immediately assign such of those lands where these Harijans have constructed their huts and who have been squatting there, in favour of the Harijans.



11th March 1959] [Sri T. T. Daniel]

There was a proposal to constitute a separate Devaswam Board for the management of Devaswam properties in that district. A Bill was also prepared and sent to the Central Government. We do not know what has happened to that Bill. I request the Government to introduce it as early as possible and also constitute a separate Board for the management of Devaswam properties in the district.

Sir, the Collector of the district has recommeended the constitution of a separate Soldiers' Board to ameliorate the conditions of the ex-servicemen in that district and the Government have no so far given sanctioned to that proposal.

We are really thankful to the Government for issuing a Stay Order staying the recovery of the Maniyankaram tax in that district by the revenue authorities of the Kerala Government. A Bill has been introduced in the Kerala State Legislature and a copy of it has been forwarded to our State Government also for expressing their opinion on the Bill. I would suggest that in all matters concerning the settlement of the Maniyankaram tax with the Kerala Government, a top level committee may be constituted by the Government, as a preliminary step, consisting of the members of the Legislature and the member of the Manivankaram committee working in that district, so that they may be in a position to negotiate on this issue with the Kerala Government properly and settle the matter finally.

Sir, there is a basic tax system prevailing in that district. I would request the Government that the principle of collecting the tax as prevalent in other districts, should not be extended to that district.

I would also bring to the notice of the Government that recently by an order of the Government, nearly 3,000 primary school teachers have been seriously hit. By that order of the Government one-year trained S.S.L.C. teacher of the district is considered as an elementary grade school teacher which may be equivalent to a trained III Form teacher of the Madras State Service. This is improper and offends all principles of commonsense and also the fundamentals of the States Reorganization Act. So, I would request the Government to reconsider this order immediately and consider the one-year trained S.S.L.C. teachers of the former Travancore-Cochin State, S.S.L.C. basic trainees and Ninth Class trainees of that district as equivalent to the secondary grade teachers of the Madras State Service.

Sir, we have decided to form a classless society. A socialistic pattern of society is our goal. With the introduction of land reforms, an agrarian revolution is set in motion which in turn, I am sure, will bring about an industrial revolution in our country, perhaps unknown in the history of the world, accompanied by a

cry from all quarters, of fixing a ceiling on all incomes and resulting in the form of a classless society. If this is to be our objective, surely, Sir, there must be a planned economy at the village level. We should try to create model villages in each district, where the people of those villages should have enough food, clothing and housing. If that is done, the faith of the people in the Second Five-Year Plan will be increased and their faith in the National Savings Scheme will also be increased. For that I would also request the Government to give instructions to municipalities and panchayats to prepare a record of the number of the physically handicapped, unemployed and houseless who are living within their respective jurisdiction and these agencies, Sir, should try their level best, with the co-operation of the public and the Government, to ameliorate the conditions of these people.

There should be an economic card; there should be a health card for every individual in the State. This should be the first thing that our Government should do so that we should have a planned economy and we will be in a position to tell the people how far we have achieved in solving the problems concerned, so that we may be in a position to tell the public how far out of the Second Plan allotments money has reached the lowest strata in society.

I would also say this. I understand that the Kerala Government is trying to get royalty for the water of Neyyar Dam. As far as the Neyyar Irrigation Scheme is concerned, I urge upon our Government that this Government should stoutly refuse the demand. The Kerala Government has no right to claim any royalty for the water of the Neyyar Dam, as Neyyar Irrigation Scheme is one that had been sanctioned under the Second Plan while the transferred territory was in the erstwhile Travancore-Cochin State.

I wish to bring to the notice of the Government that recently by an order of the Forest Department, there has been a ban on the collection of fuel and consequently there is unrest in that district. I request the Hon. Minister concerned to revise that order and allow the people to collect fuel as they had been doing so far.

Regarding integration of services, I would say that there is a directive by the Partition Committee and from the Government level also in regard to that. But unfortunately, the heads of departments delay the process of integrating the services and as a result those who have been transferred from the erstwhile Travancore-Cochin State, do not get their legitimate promotions. I would also inform the Government that Rs. 12 of dearness allowance should be given to the N.G.Os. of that district.



Coming to the question of collection of court-fees, I would say that the court fee that is now prevelent in Madras State, if applied there, would be burdensome and uneconomic for the poor people of the Kanyakumari district. I would request the Government to ponder over this before introducing the court fee and stamp fee regulations to that district.

* **Sri A. R. MARIMUTHU** : *கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நிலவரி வசூல் என்கிற முறையில் சர்க்காருக்கு ஆறு கோடி அறுபத்தி எட்டு லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. பொதுவாக நாட்டில் விவசாயத் தொழில் செய்கிறவர்களுடைய நிலை மோசமாக இருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். தேசத்திலேயே உழைப்புக்குக் குறைந்த வருவாய் உடையவர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் என்பதில் கொஞ்சம்கூட சந்தேகம் கிடையாது. தேசத்தினுடைய வருவாயில் சரி பாதி அதாவது ஐம்பது சத விகிதம், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாயிகள் உற்பத்தி செய்கிறார்கள். என்றாலும்கூட 70 சத விகிதம் ஜனத்தொகையை நிலம் தாங்கிக்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு சர்க்காரில் மிகுந்த சலுகைகள் அளிக்க வேண்டுமென்பது தெளிவாகப் புரியும்.*

*அதோடு கூட இன்றைக்குப் போய்க்கொண்டிருக்கக்கூடிய முறையில் சர்க்காருடைய கொள்கை, சர்க்காரில் இருக்கக்கூடியவர்களுடைய பேச்சு, இவைகளையெல்லாம் பார்க்கும்போது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களை தொழில் துறையில் மாற்ற வேண்டும் என்றும் அந்த முறையில் விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். சர்க்காருடைய தொழில் கொள்கைப்படி தேசத்தில் பெரிய தொழில்கள் ஏற்பட்டு அபிவிருத்தி அடைந்து அதில் விவசாயிகளை ஈடுபடுத்த முடியுமா என்பதைப் பார்த்தால் நீண்ட காலத்திற்கு முடியாது என்றுதான் தோன்றுகிறது. ஜனத்தொகை அபிவிருத்தியைப் பார்த்தால் நிச்சயமாக முடியாது என்று சொல்லலாம். 1951-ம் வருஷத்தில் சென்சஸை எடுத்துப் பார்த்தால் வருஷம் ஒன்றுக்கு $1\frac{1}{4}$ லட்சம் பேர்கள் தொழில் துறையில் ஈடுபட வேண்டியவர்கள் அதிகரித்து வருகிறார்கள் என்பதும், வருஷம் ஒன்றுக்கு $2\frac{1}{2}$ லட்சம் ஜனத்தொகை விவசாயத்துறையில் அதிகரித்து வருகிறது என்பதும் தெரியவரும். இந்த அடிப்படையில் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறது. இந்த $1\frac{1}{4}$ லட்சம் பேர்களை தொழில் துறையில் ஈடுபடுத்துவதாக இருந்தால் அவர்களுக்கு என்று 150 கோடி ரூபாய் மூலதனம் போட வேண்டியதாக இருக்கிறது. அப்படிப் போட்டால்தான் அவர்கள் எல்லோரையும் தொழில் துறையில் ஈடுபடுத்தமுடியும். இதைக் கொண்டு சர்க்காரின் கொள்கை அடிப்படையில் பார்த்தால் இன்னும் பத்து அல்லது இருபது வருஷம் ஆனாலும் இப்படிப்பட்ட மாறுதலை எதிர்பார்க்க முடியாது. ஜனத்தொகை அதிகரிப்புக்குத் தகுந்த அளவில் மூலதனம் போட்டால்தான் எல்லோரையும் தொழில் துறையில் ஈடுபடுத்த முடியும். அதற்கு வேண்டிய மூலதனம் சர்க்காரிடத்தில் இல்லை. ஆகவே இன்றைக்கு விவசாயிகளை தொழில்துறையில் ஈடுபடுத்த முடியவில்லை என்றால் விவசாயம் செய்கிறவர்களுக்கு ஏதாவது வழிகளில் பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.*

*அப்படிப்பட்ட வசதிகளை எப்படிக் கொடுக்கலாம் என்று பார்க்கும்போது இன்றைக்கு விவசாயிகளுக்கு அதிகப்படியான வரிச்சுமையைப் போட்டிருப்பதைக் குறைக்கலாம். விவசாய வருமான வரி என்று போட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்லலாம், அது பெரிய நிலச்சுவாந்தார்களைத்*

[11th March 1959

MR. SPEAKER : முன்பு ஒவ்வொரு அங்கத்தினரும் பேசுவதற்கு 10 நிமிஷங்களும், மந்திரி பதிலளிப்பதற்கு ½ மணி நேரமும் ஒதுக்கப் பட்டது. குறைந்தபட்சம் ¾ மணி நேரம் பதிலளிக்க நேரம் வேண்டுமென்று மந்திரியவர்கள் கேட்டிருப்பதால் ஒவ்வொரு அங்கத்தினரும் பேசவேண்டிய நேரத்தில் குறைவு ஏற்படும்.

* SRIMATHI KAMALAMBUJA AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மானிய கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நிர்வாகம் நல்ல முறையில் நடக்கவேண்டுமானால் ஜில்லா அடிப்படையில் உள்ள நிர்வாகம் நல்ல முறையில் அமையவேண்டும். ஜில்லா நிர்வாகம் நல்ல முறையில் அமையவேண்டுமானால் கிராம அடிப் படையில் உள்ள நிர்வாகம் மிக நல்ல முறையில் அமையவேண்டும். கிராம நிர்வாகம் என்று சொல்லும்போது கிராம அடிப்படையில் உள்ள நிர்வாக இயந்திரங்கள்—கிராம முன்சீப், கணக்கப்பிள்ளை ஆகியவர்கள் நல்ல முறையில் உழைக்கவேண்டும். இவர்கள் நல்ல முறையில் இயங்கு வார்களேயானால் அதைக் கொண்டு நல்ல முறையில் ஒவ்வொரு படிக் கட்டுகளாக கட்டிடத்தைக் கட்டுவது போல் கிராம நிர்வாகத்தை அமைக்க முடியும். கிராம முன்சீப், கணக்கப் பிள்ளை என்று சொல்லும்போது, அமைச்சர்கள் இங்குள்ள சட்டசபைக்கு எவ்வாறு பொறுப்பாக இருக் கிறார்களோ, அந்த முறையில் கிராமத்தைப் பொறுத்தவரை கிராம முன்சீப்பும், கணக்கப் பிள்ளையும் பொறுப்பாளிகளாவார்கள். பொறுப்பு வாய்ந்த அவர்கள் நல்ல முறையில் இயங்காவிட்டால் ஒன்றுக்கும், பிரயோஜனம் இல்லாத நிலைமை ஏற்பட்டுவிடும். அரசாங்கம் செய்யும் காரியங்களைக் கிராம மக்களுக்குத் தெரியப்படுத்த கிராம முன்சீப் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏதாவது விசேஷ காரியங்களைக் கிராம மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமானால் எவ்வாறு தலையாரி அல்லது வெட்டியான் மூலமாகத் தெரியப்படுத்துகிறார்களோ அந்த முறையில் அரசாங்கம் செய்கிற திட்டங்களையெல்லாம் கிராம மக்களுக்கு தலையாரி, வெட்டியான் மூலமாகத் தெரியப்படுத்தவேண்டும். தலையாரி, வெட்டியான் முதலிய வர்களால் அரசாங்கம் செய்யும் கிராமத் திட்டங்களை எடுத்துச் சொல்லுவதில் சிரமம் ஏற்பட்டால் கிராம அதிகாரிகள் காரியாலயமாவது அரசாங்கம் என்னென்ன காரியங்களை மக்களுக்காகச் செய்து வருகிறார்கள் என்பதற் கான பட்டியலைத் தயாரித்து கிராம அதிகாரிகளின் காரியாலயத்தில் தொங்கவிட வேண்டும். அந்தப் பட்டியலில் அரசாங்கத்திற்கு எப்படி மனுச் செய்துகொள்வது போன்ற கிராம மக்களுக்குத் தேவையான விவரங்களையெல்லாம் கொடுத்து அந்தப் பட்டியலைக் காரியாலயத்தில் தொங்கவிட்டால் கிராம மக்களுக்குச் சௌகரியமாக இருக்கும். தாலுகா காரியாலயங்களில் கொடுக்கப்படும் மனுக்களைப்பற்றி முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பாகச் சொன்னார்கள். உண்மையில் கொடுக்கப் படும் மனுக்கள் சில காணமல் போகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. தாலுகா ஆபீஸில் மனுக்கள் கலெக்டர் ஆபீசுக்குப் போய்விட்டது என்று சொன்னதின் பேரில் அங்கு சென்று விசாரித்தால் வரவில்லை என்று கூறுகிறார்கள். கலெக்டருக்கு அனுப்பிவிட்டோம் என்று சொல்லக்கூடிய மனுக்கள் இன்னும் வந்து சேரவில்லை என்ற நிலை நிலவுகிறது. இதற்கு விரிவான காரணம் என்னவென்று விசாரித்துப் பார்த்ததில், தபால்கள் ஓரிடத்தில் போய் குவிந்து விடுவதால் அதைப் பிரிப்பதற்குக் காலதாமதம் ஆகிவிடுகிறது, என்கிறார்கள். எந்தெந்தத் தபால்கள் எந்தெந்த இலாகா விற்குப் போகவேண்டுமென்று பிரித்து தாமதம் இல்லாமல் போய்ச் சேரும்படி செய்தால் யார் யார் என்னென்ன கோரிக்கைகளைச் செய் திருக்கிறார்கள் என்பதைக் கவனித்து உடனடியாக பரிசீலனை செய்ய வாய்ப்பு ஏற்படும். தபால்களையெல்லாம் வாரத்திற்கு ஒரு முறை பிரிப்பது அல்லது 4, 5 நாட்களுக்கு ஒரு முறை பிரிப்பது என்று வைத்துக் கொண்டால் அது வேலைக்குத் குந்தகமாக இருக்கும்; முன்னேற்றத் திற்குச் சாதகமாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



11th March 1959] [Srimathi Kamalambuja Ammal]

கிராமங்களில் வரி வசூல்கள் தண்டுவதில் மிகவும் சிரமம் ஏற்படு கிறது. சில முன்சீப்புகள் பணத்தை வசூல் செய்வதற்கு முன்னாலேயே ரசீதுகளைக் கொடுத்துவிட்டுப் பின்னால் வசூல் செய்கிறார்கள். பணத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ரசீது கொடுக்கக்கூடாது என்று சட்டத்தில் இருந் தால்கூட, அனுபவ ரீதியாக நடந்துகொண்டிருப்பது ரசீதுகளைக் கொடுத்து விட்டு 4, 5 மாதங்களுக்குப் பிறகோ அல்லது ஒரு மாதம் கழித்தோகூட வசூல் பண்ண வேண்டிய நிலைமை இருக்கிறது. திடீரென்று டெபுடி கலெக்டர் கள் வந்து கணக்குகளைப் பரிசீலனை செய்யும்போது "இருசால் செய்யவில்லை" என்ற நிலைமை ஏற்பட்டு கிராம முன்சீப்புகளுக்கு ஒரு ஆபத்தான நிலைமை ஏற்படுகிறது. இந்த மாதிரி முறைகள் நீங்கவேண்டுமென்றால் முன் கூட்டியே ரசீதுகளைக் கொடுக்கக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவு போட வேண்டும். சில வேளைகளில் சில முனிசீபுகளைச் சந்திக்கும்போது கேள்விப்பட்டேன். "கிராம கர்ணம் இன்னும் கணக்குக் கொடுக்கவில்லை. அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் வசூல் பண்ண முடியவில்லை" என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி நிலைமை இருப்பதற்குக் காரணம் கிராமதிகாரிகளை நியமிப்பதில் உள்ள குறைபாடுதான் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. எழுதப் படிக்கத் தெரியாத ஒருவரைக்கூட நாம் கிராம முனிசீபு என்ற முறையில் நியமித்துவிடுகிறோம். கிராம முனிசீபாக இருக்கக்கூடியவர்களுக்குப் பிரதேச மொழியாவது தெரிந்திருக்கவேண்டுமென்ற ஓர் நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே வந்து பல காரியங்களை உடனுக்குடன் செய்ய முடியாதவர்களாகிறார்கள். ஆகை யால் நிலச்சீர்திருத்தத்தைக் கொண்டுவரும்போது இதையும் சீர்திருத்தி அமைக்கவேண்டும். பரம்பரை பாத்தியதையே ஒழித்துவிட்டு எஸ்.எஸ். எல்.ஸி. வரையில் படித்தவர்களையாவது இதற்குப் போட்டால்தான் நன்றாக இருக்கும்.

(Sri R. Subramaniam in the Chair.)

கிராமங்களிலே புறம்போக்கு நிலங்களில் குடியேறிவிடுகிறார்கள். அப்படிக் குடியேறியவர்களுக்கு, அல்லது சாகுபடி செய்கிறவர்களுக்கு 11
முதல் வருஷத்தில் அபராதத் தொகை வசூல் செய்கிறார்கள். அவர்களை a.m.
உடனே வெளியேற்றுவது கிடையாது. பல வருஷங்கள் அபராதத் தொகையை செலுத்திக்கொண்டே அதில் சாகுபடி செய்து வருகிறார்கள். இப்படி பத்தாண்டு, இருபதாண்டுக்குமேல் அந்த நிலம் அவர்களிடத்தி லேயே இருக்கிறது. அவர்களை அந்த நிலத்திலிருந்து வெளியேற்றுவது என்றால் ஆரம்பத்தில் செய்துவிடவேண்டும். இல்லாவிட்டால் பத்துப் பதி னைந்து ஆண்டு அனுபவித்து வந்தவர்கள் என்றால் அவர்களுக்கு உடனடி யாக அந்த நிலத்தை பட்டா செய்து கொடுக்க உத்தரவு போடவேண்டும். பத்து ஆண்டுகளுக்குமேல் நிலத்தில் சாகுபடி செய்தவர்களை வெளியேற்றக் கூடாது.

மேலும் ஜில்லா அடிப்படையில் பல மகாநாடுகள் கூட்டுகிறார்கள். இதைப்பற்றி ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் கூட்டப்பட்ட நீர்ப்பாசன மகாநாட்டில் ஆரணியாறு தண்ணீரை மங்கலம் என்ற இடத்தில் அணைக்கட்டி தேக்க வேண்டுமென்று அதில் மூன்றாண்டுக்கு முன்னால் ஒரு தீர்மானம் செய்தோம். அரசாங்கத்துக்கே சென்ற ஆண்டுதான் அது வந்திருப்பதாகத் தெரிகிறது. இதுவரையில் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இப்படி ஏதாவது தீர்மானம் செய்தால் உடனடியாக அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதாவது தெரியவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்.டி. ஓர்க்ஸ் மிகவும் முக்கியமானது. நாம் பல ஜில்லா அதிகாரி களுக்கு ஜீப் கொடுத்திருக்கிறோம். எல்.டி. ஓர்க்ஸ் சம்பந்தமாக பல நல்ல காரியங்கள் உடனுக்குடன் நடக்கவேண்டியிருப்பதனால் அதன்

ஹரிஜன மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் எவ்வளவு நன்மை செய்து வந்திருக்கிறார்கள்? சர்க்காரே எடுத்து முடித்தார்கள், ஜமீந்தாரி ஒழிப்பு, ஆலயப் பிரவேசம், மது ஒழிப்பு முதலிய சட்டங்கள் கொண்டுவந்தது. மத்திய அரசாங்கம் ராஜாக்களை ஒழித்தது. பாக்கி இருப்பது நிலச்சீர்த்திருத்தம்தான். ஸ்ரீ பிரகாசம் அவர்கள் இருந்தகாலத்தில் நிலச்சீர்த்திருத்தம் ஆரம்பிக்கப்பட்டது. சர்க்கார் இன்னும் காலதாமதம் செய்யாமல் உடனடியாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதால் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று நான் உணருகிறேன். ஆனால் இந்தக் கஷ்டங்கள் இருந்தாலும் நிலச் சீர்திருத்தத்தை உடனடியாக செய்ய வேண்டும். அதற்கு ஆட்சேபனை கிடையாது. உச்சவரம்பு கட்டுவதில், சிரமம் அதிகம் இருக்கும். அதற்குத்தான் முதலில் சிறிய அளவு எடுத்துக்கொண்டு அதனால் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு பெரிய அளவிற்குப் போகலாம். மொத்தமாக எடுத்துக்கொள்வதினால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. முதலிலே ஓரளவு குறைந்த அளவு உச்சவரம்பு ஏற்படுத்தினபிறகு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதிகமான அளவு உச்சவரம்பு ஏற்படுத்துவதற்கு யோசிக்கலாம்.

சாதாரணமாக இந்த ஜில்லாவில் உள்ள அதிகாரங்கள் பற்றி சொல்ல விரும்புகிறேன். இந்த அதிகாரங்கள் மூன்று இடங்களில் குவிந்து இருக்கின்றன. மாகாண அமைச்சரும் இந்த நிர்வாக அதிகாரங்களை வைத்திருக்கிறார்கள். அடுத்தபடியாக ஜில்லா கலெக்டரிடமும் இருக்கிறது. அடுத்தபடியாக கிராம அதிகாரிகளிடமும் இருக்கிறது. ஆர்.டி.ஓ. தாசில்தார்கள் கூட ஒன்றும் செய்யமுடியாது. போதாக்குறைக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் சேர்ந்துவிட்டால் சொல்லவே தேவையில்லை. ஆகவே இந்த கிராம அதிகாரிகளின் சம்பளம் ஜாஸ்தியாக இருந்தால் அவர்களுக்கு நல்லது தான். ஆனால் அவர்கள் முழு நேர ஊழியர்களாக மாற்றும் அளவிற்கு வழி செய்தால் தான் ஜனங்களுக்கு நன்மை ஏற்படுமென்று சொல்ல விரும்புகிறேன். அட்மினிஸ்ட்ரேஷன் காஸ்ட் மிக அதிகமாக இருக்கிறது என்று பயப்படுகிறார்கள். புது புது திட்டங்கள் ஏற்படுத்தும்போது இம்மாதிரி வேஸ்ட்தான் ஏற்படும். அதற்காக பயப்பட வேண்டியதில்லை. ஜில்லாக்களின் ஏரியா மிக அதிகமாக இருக்கின்றன. ஜில்லாக்களின் அளவைக் குறைக்கவேண்டும்.

சூரமங்கலம் , ராசீபுரம், நாமக்கல் தாலுக்காக்களை முக்கியமாக கவனிக்கவேண்டும். இவை மிகச் சிறியவை. வடக்கில் உள்ள தாலுக்காக்கள் பெரியவை. முன்பு வடக்கில் ரயில்வே லைன் போடப்பட்டிருந்தது. ஆனால் மறுபடியும் கொண்டுவரவில்லை. அரசாங்கம் அந்த இடத்திற்கு ரயில்வே லைன் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜில்லா தாசில்தாருக்கு ஒரு ஜீப் கொடுக்கவேண்டும்.

*Sri N. K. PALANISAMI: கனம் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கும் வெட்டுப்பிரேரேபணையை நான் ஆதரிக்கிறேன். 1959-ம் வருஷத்தில் நிலத்திற்கு உச்ச வரம்பு சட்டத்தை கொண்டுவருவதாக கனம் ரெவின்யூ மந்திரி அவர்கள் சொன்னார்கள்.

என் கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய சமயத்தில் உச்சவரம்பு கட்டுவதானால் உணவு உற்பத்தி பாதிக்கப்படுமா அல்லது பாதிக்கப்படாதா என்ற பிரச்னை எழுகிறபோது இதுவும் கொஞ்சம் நிஜம், அதுவும் கொஞ்சம் நிஜமாகவே இருக்கிறது என்று ரெவின்யூ மந்திரி சொன்னார்கள். ஹைதராபாத்தில் உச்சவரம்பு அவசியத்தைப்பற்றி ஞானோதயம் ஏற்படாத சர்க்காருக்கு நாகபுரியில் ஏற்பட்டதுபற்றி சந்தோஷப்படுகிறேன். நாகபுரியில் நேருஜி அவர்கள் பேசியகாலத்தில் 'உச்சவரம்பு கட்டுவது என்பது உணவு உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்ல, கோடிக்கணக்கான மக்கள் பிரச்னையைத் தீர்க்கும் விஷயமாகும். அடிப்படையான இந்த





நிலச்சீர்திருத்தத்தை கொண்டுவராவிட்டால் நாம் வெகுதூரம் பின் தங்கிவிடுவோம். நம் நாடும் வெகுதூரம் பின்தங்கிவிடும்' என்று சொன்னார். யூனியன் உள்விவகார மந்திரி கனம் பந்த் அவர்கள் உச்சவரம்பு கொண்டுவருவதன் காரணமாக அடிப்படையான உணவு உற்பத்தி அதிகரிக்கும் என்று திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்கள். ஆகவே உச்சவரம்புபற்றி சந்தேகத்துடன் இருந்த சர்க்காருக்கு சந்தேகம் நீங்கி இருக்குமென்று நினைக்கிறேன். நாகபுரி மாநாட்டில் உச்சவரம்பு தீர்மானம் வரக்கூடிய காலத்தில் இதில் மாகாண காங்கிரஸ் தலைவர்கள் பலபேர்கள் எதிர்த்து பேசினார்கள். ஆனால் தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்ட போது யாரும் எதிர்த்து வோட்டு அளிக்கவில்லை. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. ஆந்திராவைச்சேர்ந்த விவசாய மந்திரி ஸ்ரீ திம்மா ரெட்டி போன்றவர்கள் ஒரிஸ்ஸா முதல் மந்திரி இன்னும் நம் சர்க்காரில் இருக்கக்கூடிய மந்திரிகள் உச்சவரம்பு பற்றி எதிர்த்துப் பேசியிருக்கின்ற போதிலும் தீர்மானத்திற்கு எதிராக வோட்டு அளிக்கவில்லை. காரணம் உச்சவரம்பு கட்டக்கூடிய விஷயம் மாநில சர்க்காருடையது. மாநில சர்க்காரில் சட்டமாகிறபோது இதைப் பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலும். நாகபுரியில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு நம் மாநிலத்தில் பல இடங்களில் பல மந்திரிகள் ஊர் ஊராக சென்று உச்சவரம்பு கட்டுவதினால் யாருக்கும் பாதகம் ஏற்படாது என்று பிரசாரம் செய்துவருகிறார்கள். உச்சவரம்பு கட்டினால் எப்படி பெரிய நிலச்சுவாந்தார்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே உச்சவரம்பு கொண்டுவருகின்ற காலத்தில் நிலப்பிரபுக்களிடத்தில் பூமி ஒன்றும் இருக்கக்கூடாதென்று சர்க்கார் விரும்புகிறதா? ஏற்கெனவே சர்க்கார் விவசாயிகளுக்குச் சாதகமாக சிறு சிறு சட்டங்கள் செய்துவருகிறார்கள். அந்த அளவிற்கு விவசாயிகளுக்கு சாதகமாக இருக்கிறது. உதாரணமாக 60, 40 சட்டம் பாஸ் செய்து மூன்று வருஷத்திற்குமேல் ஆகிவிட்டது. கோபியில் நடந்த தமிழ் நாடு காங்கிரஸ் மாநாட்டில் உச்சவரம்பு பற்றியெல்லாம் மிகவும் அழகாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால் இந்த 60, 40 வார சட்டம் கோபியில் அமுலில் இருக்கிறதா? அதை அமுல் நடத்த ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டார்களா? அது போகட்டும் அங்கு நிலச்சுவாந்தார் விவசாயிகளிடமிருந்து குத்தகை $4\frac{1}{2}$ படி போடக்கூடிய வள்ளத்தில் குத்தகை வாங்குகிறார்கள். ஆனால் நிலப்பிரபுக்கள் கூலி கொடுக்கும்போது மட்டும் மூன்று படி கொடுக்கக்கூடிய வள்ளத்திலே கொடுக்கிறார்கள். நியாயமான வள்ளத்தில் போடவேண்டுமென்று சர்க்கார் ஏதாவது பாதுகாப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறதா?

இந்தச் சிறு காரியங்கள் கூட செய்யாத சர்க்கார் எந்த அளவுக்கு உச்சவரம்பு கட்டி விவசாயிகளுக்கு நிலம் பிரித்துக்கொடுக்கிறார்கள் என்பது எனக்கு மிகவும் சந்தேகமாய் இருக்கிறது. இது போகட்டும் ஏற்கெனவே திட்டக் கமிஷன் இந்த 60, 40 வாரம் சட்டம் இந்த மகாணத்தில் கொண்டுவரக்கூடிய சமயத்தில் அவ்வாறு வகுத்த முறையில் 6-ல் ஒரு பங்காக இருக்கவேண்டும். அல்லது 5-ல் ஒரு பங்காக இருக்கவேண்டும் என்று இந்தச் சர்க்காருக்கு சொல்லியும் நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக்கும் முறையிலே 60, 40 வாரம் விகிதம் சட்டம் செய்தார்கள். ஆனால் திட்டக்கமிஷனுடைய ஆலோசனையை கேட்கவில்லை. ஆகவே, ஏற்கெனவே சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்ட சில சலுகைகளைகூட அமுல் நடத்த சர்க்காரால் முடியவில்லை. நிர்வாகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள். உதாரணமாக பல குத்தகை கேஸ்கள் ஆர்.டி.ஓ. கோர்ட்டில் விசாரணைக்கு வரக்கூடிய சமயத்தில் குத்தகை விவசாயி எத்தனை சாட்சிகள் கொண்டு வந்தும் குத்துகைதாரன் சொல்லக்கூடிய சாட்சியத்தை ஒப்புக்கொள்வதில்லை மணியக்காரர்கள். ஆனால் அதே சமயத்தில் கிராமக்கர்ணம் சொல்லக் கூடிய சாட்சியத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே உச்ச வரம்பு சட்டம் வரக்கூடிய காலத்திற்கு முன்பாகவே உச்ச வரம்புக்கு ஏற்றதாக இருக்கக்

கூடிய நிர்வாகத்தை மாற்றி அமைக்காவிட்டால் உச்சவரம்பு சட்டம் வந்தாலும் பிரயோசனப்படாது. இந்த விஷயமாக நிர்வாகத்தில் இருப்பவர்கள், அதிகாரிகள் விவசாயிகளுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய முறையிலே நடந்துக்கொள்ளுமாறு ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும், 1951-ல் வங்காளத்தில் உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது வரம்புக்கு மேல் சுமார் 6 லட்சம் நிலம் இருக்கும் அவைகளை எடுத்துப் பகிர்ந்துகொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் சட்டம் போட்டபிறகு 60,000 எக்கர்கூட கிடைக்கவில்லை. அதே மாதிரி தெலிங்கானுவில் 90,000 எக்கர் எதிர்பார்த்ததில் 1,000 எக்கர்கள்கூட கிடைக்கவில்லை. அதையும் இப்போதைய சர்க்கார் ரத்து செய்துவிட்டது. ஏற்கெனவே ப்ளானிங் கமிஷன் என்ன சொல்லியிருக்கிறது ? சட்டம் வந்தவுடன் எல்லா பினுமி டிரான்ஸாக்ஷன்ஸையும் உடனடியாக தடைசெய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது ஏனென்றல் சட்டம் வருவது தெரிந்தவுடன் மிராசுதார்கள் ஏராளமான பினுமி டிரான்ஸாக்ஷன்ஸ் செய்கிறார்கள். குழந்தைகள் மீதும் மற்றவர்கள் மீதும் நிலங்களை எழுதி வைத்து விடுகிறார்கள் என்று திட்டக் கமிஷன் சொல்லியிருக்கிறது. அப்படி சொல்லியிருக்கும்போது சர்க்கார் இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள், அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மைசூர் சர்க்காரின் உச்சவரம்பு கட்டும் மசோதாவில் 83-வது பிரிவில், ஒருவனுக்கு எவ்வளவு பூமி தேவையோ அதற்கு மேற்பட்ட பூமியை அவர் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆந்திர சர்க்காரின் மசோதாவில் 14-வது பிரிவிலும் இதே மாதிரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நோடிபிகேஷன் கொடுத்தபிறகு, சட்டம் அமுலுக்கு வரும். ஆகவே இந்தச் சட்டம் நிலப்பிரபுக்களுக்கு எச்சரிக்கை நோட்டீசாக இருக்கிறது. ஆகவே உண்மையாக உச்சவரம்பு கட்டி, உபரி நிலங்களை விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பது உண்மையானல் பொய்யாக எழுதி வைக்கக்கூடிய காரியங்களை என் சர்க்கார் தடை செய்யக்கூடாது. இன்னும் பொதுவாக மெக்கனைஸ்டு பாரம் டீ, காப்பி டீ, மிஷின்கள் வைத்து நடத்தக்கூடிய பண்ணைகள் அவர்களுக்கு இந்த உச்ச வரம்பிலிருந்து விதிவிலக்கு கொடுப்பதாக பத்திரிகைகளிலே பார்த்தோம். இம்மாதிரியான பூமிகள் உயர்ந்த தரம் உள்ளதாகவும் நன்ருக வளரக்கூடியதாகவும் இருக்கிறது. அவைகளையெல்லாம் நீக்கி உச்ச வரம்பு கட்டுவது என்பது சிறு நில விவசாயிகளினுடைய பூமியை மட்டும் தான் உச்சவரம்புக்குக் கொண்டு வருவதா ?

சர்க்கார் உச்ச வரம்பு சட்டம் கொண்டுவந்து அதிகப்படியாக இருக்கும் பூமிகளைக்கொண்டு கூட்டுறவு பண்ணைகளை ஏற்படுத்தி அவைகளை பஞ்சாயத்து நிர்வாகத்தில் விடுவதாக சிலர் சொல்லுகிறார்கள். கோவாப்ரேடிவ் சொசைடி பண்ணை முறையில் தான் விவசாயிகளுக்கு பூமி, இல்லாவிட்டால் பூமி கிடையாது என்ற முறை ஏற்படுகிறது. இவ்விதம் இருக்கக்கூடாது. உச்ச வரம்பு கட்டி அதிகப்படியாக இருக்கக்கூடிய பூமிகளை ஏழை விவசாயிகளுக்கும் நிலம் இல்லாத விவசாயிகளுக்கும் பிரித்துக் கொடுத்து அவர்கள் பெயரில் பட்டா செய்து கொடுத்து அவர்கள் கூட்டாக சேர்ந்து வேலை செய்யக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றல் நம் தேசத்தில் பூமி உரிமை தனக்கு வேண்டுமென்ற உணர்ச்சி தொன்று தொட்டு இருந்து வருகிறது. ஒரு சிறிய வரப்பை பெறவேண்டும் என்றாலும் அல்லது மாற்ற முயன்றாலும் கொலை போன்ற தகராறுகள் ஏற்படுவது சகஜமாக இருக்கிறது. ஆகவே பூமிகள் விவசாயிகளுக்கு என்று இருந்தால்தான் இந்த உரிமை கொடுத்தால்தான் அவர்களுக்கு புதிய உற்சாகம் ஏற்படும். இது சம்பந்தமாகத்தான் அதிகப்படியான உணவு உற்பத்தி செய்ய ஊக்கமும் ஏற்படும். இல்லாவிட்டால் அவர்கள் உற்பத்தியில் ஊக்கம் இருக்காது. ஆனால் கூட்டுறவு பண்ணைகளில் சேர்ந்தால்தான் அவர்களுக்கு பூமி கொடுப்பது என்று வந்தால். எந்தவிதமான பிரயோஜனமும் இருக்காது. ஒரு சமயம் மந்திரி அவர்கள் சைனுவை எடுத்து உதாரணம் காண்பிக்க





லாம். சைனுவில் 100-க்கு 70 பங்கு பூமி நிலப்பிரபுக்களிடம் இருந்தது. ஆகவே இன்று அவர்கள் நிலம் பூராவும் விவசாயிகளுக்கு கொடுத்து கம்யூனன்களாக ஏற்படுத்திய போதிலும் அவர்களுக்கு எவ்விதமான உணர்ச்சியும் இல்லை. ஆனல் இங்கே 35 பங்கு பூமிதான் நிலப்பிரபுக்களுடன் இருக்கின்றது. பாக்கியெல்லாம் சிறு நில விவசாயிகள். அவர்களுக்கு இயற்கையாக தங்களுக்கு சொந்தபூமிகள் வேண்டுமென்ற உணர்ச்சி இருப்பது நியாயமே. ஆனல் பிரித்துக்கொடுத்த பிறகு அவர்கள் இஷ்டப்பட்டால கூட்டுறவு பண்ணையில் சேருவதற்கு ஆட்சேபணை இல்லை. அவை உடனடியாக ஏற்படக்கூடிய சம்பவம் அல்ல. சர்க்கார் நினைக்கின்ற கூட்டுறவு முறையல்ல. கூட்டுறவு பண்ணை என்பது ஒன்ருக விவசாயம் செய்வது, விளைந்ததை ஒன்ருக விற்பது, சரியாக பங்கு கொள்வது. “ மெகனைஸ்ட் பார்ம்ஸ் ”-க்கு விதி விலக்குக் கொடுப்பது பற்றி ஆலோசித்துக்கொண்டிருப்பதாக நேற்று கனம் அமைச்சர் சொன்னர். அப்படியானல் மெஷின்கள் வைத்து நடத்தப்படும் பண்ணைகளாகிய காப்பி எஸ்டேட்டுகளுக்கு விதி விலக்கு கொடுத்துவிட்டு சிறு விவசாயிகளின் நிலங்களுக்கா உச்ச வரம்பு கட்டுவது? நல்ல “ பொர்டைல் பூமிகளுக்கு ”விதி விலக்குக் கொடுத்துவிட்டு மோசமான நிலங்களாசிய. சிறு விவசாயிகளின் நிலங்களுக்கா உச்ச வரம்பு கட்டுவது ? மேலும் “ கோவாப்ரேடிவ் பார்ம்ஸ் ” நடத்தப்படும் என்று சொன்னர்கள். இன்றைக்கு கிராமப்புறங்களில் வரப்பு கட்டுதல் மாற்றியமைத்தாலே கொலை போன்ற பல தகராறுகள் ஏற்படுவதைப் பார்க்கிறேம். உழவர்களுக்கு நிலங்களை பட்டா செய்து கொடுத்தால்தான் நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்படும். சைனுவில் 70 பங்கு பூமி நிலபிரபுக்களிடமிருந்தது. எல்லோரும் குத்தகை விவசாயிகள். சைனுவில் 70 பர்செண்ட் பூமி நிலபிரபுக்களிடம் இருந்தது. அதில் வேலை செய்த குத்தகை விவசாயிகள் மூலமாக இப்பொழுது கம்யூன்கள் ஏற்படுத்தியிருக்கிறர்கள். குத்தகைதாரர்களாய் இருந்த காரணத்தால் அவர்களுக்கு பூமி வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்படவில்லை. ஆனல் இங்கு 35 பர்செண்ட் பூமிதான் நிலபிரபுக்களிடமிருக்கிறது,பாக்கி எல்லாம் சிறு நில விவசாயிகள். எனவே அங்கே கவலை இல்லை. ஆனல் நம் நாட்டில் அப்படி இல்லை. இங்கே, ஒவ்வொரு விவசாயிக்கும் தனக்குச் சொந்த நிலம் இருக்கவேண்டும் என்ற உணர்ச்சி இருக்கிறது. இந்த நிலையில் நிலங்களை விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்பது நாகபுரியில் வற்புறுத்தப்பட்டது. விவசாயிகளுக்கு அவைகளைப் பங்கிட்டுக் கொடுத்த பிறகு, அவர்களுக்கு பூமி பிரித்து பட்டா செய்துகொடுத்த பிறகு “ ஜாயிண்ட் சேவிங்ஸ் கோவாப்ரேடிவ் சொசைடி ”களை ஏற்படுத்தவேண்டும். ஏற்கெனவே கோவாப்ரேடிவ் சொசைடிகள் இருக்கின்றன. இவை சம்பந்தமாக பிளானிங் கமிஷன் எவால்யுவேஷன் ரிபோர்ட்டு கொடுத்திருக்கிறர்கள். இந்த சொசைடிகள் அந்த அறிக்கைப் பிரகாரம் ஒழுங்காக நடக்கவில்லை, எல்லா சொசைடிகளிலும் கடன்கள் ஏராளமாக இருக்கின்றன எனறு.

* **Sri V. VEDAYYAN :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கும் இந்த டிமாண்டை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். “ ரெவின்யூ இஸ் ஸ்டேட் ” என்று எட்மண்ட் பர்க் சொல்லியிருக்கிறர். அதாவது, ரெவின்யூ ஒரு நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் ரொம்ப முக்கியமானது, அது தான் உயிர்நாடி. நமது நாட்டிலும் ரெவின்யூ இலாகா ஒரு பழமையான இலாகா. அது ரொம்ப முக்கியமான இலாகா. சர்க்கார் எந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பித்தாலும், எந்தப் புதிய திட்டத்தை மேற்கொண்டாலும், அதை முதலில் ரெவின்யூ இலாகாவிடம்தான் ஒப்படைக்கிறர்கள். அவ்வளவு பெருமை வாய்ந்தது இந்த இலாகா. அந்த இலாகாவில் விதிகளும் அதிகாரங்களும் “ ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் ஆப் தி போர்ட் ஆப் ரெவின்யூ ” என்ற புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. அந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு விதிக்கும் பல திருத்தங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு விதிக்கும் 30—40 கரெக்ஷன் ஸ்லிப்ஸ் இருக்கும். விதிக்கு வந்துள்ள கடைசியான திருத்தம் எது, எந்த உத்தரவை கையாள வேண்டும் என்று கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கஷ்டம் அதிகாரிகளுக்கும் இருக்கிறது. இந்தக் கஷ்டம் கனம் அமைச்சருக்கும் ஏற்பட்டிருக்கலாம். இப்போது போர்ட்ஸ் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் நான்கு புத்தகங்களாக இருக்கின்றன. அந்த நான்கு புத்தகங்களிலுமுள்ள ஸ்டாண்டிங் ஆர்டர்ஸை கடைசியாக வந்த திருத்தங்களுடன் "இங்கார் பொரேட்" செய்து புதியனவாகத் தொகுத்து நல்ல புத்தகங்களாகக் கொடுக்கவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மனைக்கட்டுப் பிரச்னை சர்க்காருக்கே பெரிய தலைவலி போல இருக்கிறது. இந்தப் பிரச்னையில் சர்க்கார் விழிப்புடன் காரியங்களைச் செய்தால் பாதிப் பிரச்னை தீர்ந்துவிடும். கிராமங்களிலும் சிறிய நகர்ப்புறங்களிலும் இருக்கின்ற மனை கட்டுகள் அநேகமாக சர்க்காருக்கு சொந்தமான நிலங்கள். வில்லேஜ் ஸைட்ஸ், அதாவது கிராம நத்தங்கள், மற்ற புறம்போக்கு நிலங்களைப்போல் அடமானம் செய்யப்படுவதில்லை. மற்ற புறம்போக்கு நிலங்கள் அடமானம் செய்யப்படும்போது அடமானம் செய்யப்படுபவர் பெயருக்கே பட்டா செய்யப்படுகிறது. அந்த நிலங்கள் ரெஜிஸ்டர்களில் அவரவர் பெயர்களில் இருக்கின்றன. ஆனால் கிராம நத்தங்கள் அங்கே குடியிருப்பவர் பெயர்களில் இல்லை. அவை ரெஜிஸ்டர்களில் "வில்லேஜ் ஸைட்ஸ்" என்ற பெயரிலேயே இருக்கின்றன. அதாவது அவை சர்க்காருக்குச் சொந்தமானவை என்ற நிலையிலேயே இருக்கின்றன. இப்போதுள்ள விதிகளின்படி பார்த்தாலும், அவை, யார் யார் அவைகளில் குடியிருக்கிறார்களோ அவர்களுக்குச் சொந்தமாக வேண்டும். கிராம நத்தங்களில் 30 செண்டுக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது. அவைகளை என்னென்ன காரியங்களுக்காக உபயோகப்படுத்த வேண்டுமென்று கூறும் விதிகள் இருக்கின்றன. ஆனால் அந்த விதிகள் இப்போது பெயருக்குத்தான் இருக்கின்றன. சில ஊரிலுள்ள கிராம நத்தங்கள் பூராவும் ஒருவர் அல்லது இருவர் பெயரிலேயே இருக்கின்றன. இதனால், ஏழை எளியவர்கள் அவர்களுடைய கருணையை நம்பி வாழ வேண்டியிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். கிராம நத்தங்கள் அவைகளில் குடியிருப்பவர்களுக்கே சொந்தமானவை என்று சட்டம் கொண்டுவரவேண்டும். அவைகளெல்லாம் இப்போது சர்க்கார் நிலங்கள். அதனால்தான் நான் குறிப்பிட்ட முறையில் சட்டமியற்ற வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். எங்கள் திருத்துறைப்பூண்டியில் கூட இம் மாதிரியான நிலை இருக்கிறது. திருத்துறைப்பூண்டி ஒரு தாலூகா தலை நகரம். ஓர் மேஜர் பஞ்சாயத்து அங்கே உள்ள குடியிருப்பு மனைகள் எல்லாம் கோயில்களுக்கும் இன்னும் இரண்டு பேர்களுக்குமே சொந்தமாக இருக்கின்றன. சாதாரணமாக செண்ட் 15—20 ரூபாய் பெறுத மனைக்கட்டுகளுக்கு 200—300 ரூபாய் கேட்கிறார்கள். அங்கே குடியேறியுள்ளவர்கள் அவ்வளவு ரூபாய் கொடுக்காவிட்டால் அவைகளின் சொந்தக் காரர்கள் கோர்ட்டுகளுக்குச் சென்று "டிக்ரீ", வாங்கி அவர்களை அங்கிருந்து வெளியேற்றுகிறார்கள். பல கட்டிடங்களை இடிக்கிறார்கள்.
11-30 a.m. இப்படிப்பட்ட நிலைமை அங்கே இருப்பதால், இத்தகைய நிலங்கள் குடியிருப்பவர்களுக்குச் சொந்தமானவை என்று சட்டமியற்றவேண்டும். அப்படி இல்லாவிட்டால், நியாயமான வாடகையை வாங்கிக்கொண்டாவது அவர்களை அங்கே இருக்கவிடவேண்டும். இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவர வேண்டும். இந்த சட்டத்தைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்கள். புறம்போக்கு நிலங்கள் சர்க்காருக்குச் சொந்தமானது. இந்த புறம்போக்கு நிலங்களை ஏழை எளியவர்களுக்கு, நிலமில்லாதவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்க வேண்டுமென்று ஒரு கொள்கை வகுத்திருக்கிறோம். ஆனால் இப்பொழுதுள்ள விதிகளின்படி, அந்நிலங்களை இப்பொழுது ஆக்கி



மித்துக் கொண்டிருப்பவர்களை அதிலிருந்து வெளியேற்ற முடியாது. சில இடங்களில் பெரிய பணக்காரர்கள் பெரிய நிலச்சுவாந்தார்கள், 200, 300 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந் நிலங்களில் இருந்து வெளியேற்றி அந்நிலங்களை ஏழை எளியவர்களுக்கு கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன. இப்பொழுதுள்ள விதிகள். சாதாரணமாக, ஒரு பொதுக் காரியத்திற்காக ஒரு இடம் தேவையானால் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்து ஒருவருக்கு சொந்தமான நிலத்தைத் கூட ஆறு மாதங்களுக்குள் ஆர்ஜிதம் செய்து சர்க்கார் எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் சர்க்காருக்கே சொந்தமான புறம்போக்கு நிலங்கள் விஷயத்தில் அப்படி செய்யமுடியாது. சர்க்காருக்கு சொந்தமாக அவைகள் இருந்தபோதிலும் கூட அப்படி செய்யமுடியாது. அதற்கு ஆர்.டீ.ஓ. எவிக்ஷன் நோட்டீஸ் கொடுத்து, அது கலெக்ட்ரிடம் சென்று பிறகு ரெவின்யூ போர்டிற்குச் சென்று, பின்னர் அது சர்க்காருக்கு வந்து, அதற்குமேல் ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட்வரை கூடச் சென்று இப்படியாக நாலைந்து வருடங்கள் கடத்தப்பட்டு விடுகிறது. எங்கள் பகுதியில்கூட சில இடங்களில் இப்படிப்பட்ட பிரச்னைகள் எழுந்தன. தியாகிகளுக்கு அடமானம் செய்வதற்காக சர்க்கார், மேலமருதூர் என்ற கிராமத்தில் ஒரு பெரிய மிராசுதார் ஆக்கிரமணம் செய்து கொண்டிருந்த சுமார் 300 ஏக்கர் புறம்போக்கு நிலங்களைக் கேட்டார்கள். அவைகள் கிடைப்பதற்கு முன்பு, ஹைக்கோர்ட்வரை சென்று வருடங்கள் நான்கு ஆகிவிட்டன. தியாகிகளுக்கு கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டும் கூட கொடுக்கவில்லை. ஹைக்கோர்ட்வரை சென்று வருடங்கள் மூன்று, நான்கு கழிந்த பின்னர் தான் சர்க்கார் ஒரு அமெண்ட்மெண்ட் போட்டும் கூட அதில் பாதி நிலம் கூட வாங்க முடியவில்லை. பாக்கியுள்ள நிலங்கள் அந்த மிராசுதாரிடம் தான் இருக்கின்றன. இந்த நிலை மாறவேண்டுமென்றால், ஆர்.டி.ஓ.க்கு மேல் கலெக்ட்டரிடம் அப்பீல் செய்வதோடு நின்று விடவேண்டும். அதற்கு மேல் ரெவுன்யூ போர்ட், கவர்ன்மெண்ட் இவர்களுக்கு போகிற அப்பீல்கள் எல்லாம், பேப்பர்களைப் பார்த்து செய்யக்கூடிய அப்பீல்கள் தான். ஆகவே கலெக்டருக்கு மேல் அப்பீல் வேண்டியதில்லை. கலெக்டர் வேண்டுமானால் நேராகப் போய் பார்த்து, அந்த இடம் அப்புறப்படுத்த வேண்டியதுதானா, இல்லையா என்று பார்த்து தீர்மானிக்கும் கடைசி அதிகாரம் கலெக்ட்டருக்கு வழக்கப்படவேண்டும். அதற்குமேல் ரெவின்யூ போர்டுக்கோ, கவர்ன்மெண்டிற்கோ அல்லது கோர்ட்டிற்கோ செல்லும் அதிகாரம் இருக்கக் கூடாது. நான் சொல்வேன், இந்த புறம்போக்கு நிலத்தைப் பொறுத்தமட்டில் ஒரு சட்டமே கொண்டு வர வேண்டுமென்று. பதினைந்து அல்லது இருபது ஏக்கர்களுக்குமேல் சொந்த நிலம் வைத்திருக்கக் கூடிய பெரிய நிலச்சுவாந்தார்கள் புறம்போக்கு நிலங்களை ஆக்ரமணம் செய்வதை பீனலைஸ் செய்ய வேண்டும். சில நாடுகளில்கூட, இந்த மாதிரி "என்க்ரோச்மெண்ட்"-க்கு காப்பிட்டல் பனிஷ்மெண்ட் கூட கொடுக்கிறார்கள். அப்படிப்பட்டதொரு நிலைமை ஏற்படுத்தாவிட்டாலும், பெரிய நிலச்சுவாந்தார்கள், பெரிய பணக்காரர்கள் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமனம் செய்து வைத்திருப்பதைத் தடுப்பதற்கு கடுமையானதொரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்டதொரு நிலைமை ஏற்பட்டால்தான் இந்த புறம்போக்கு நிலங்கள் ஏழை மக்களுக்கு கிடைப்பதற்கு வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, நாம் உச்சவரம்பு கட்டப் போகிறோம். ஆனால் உச்சவரம்பு கட்டுவதற்கு முன்பு, அதைக் கூட பின்னால் பார்த்துக்கொள்ளலாம், முதலாவதாக, புறம்போக்கு நிலங்களை எல்லாம் உடனடியாக, பெரிய மிராசுதார்கள் கையில் இருப்பதை எடுத்து ஏழை மக்களுக்கு கொடுப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். எங்கள் பகுதியில் கிட்டத்தட்ட 10,000 ஏக்கருக்கு மேல் புறம்போக்கு நிலங்கள் பல இடங்களில் முக்கியமாக வாய்மேடு மேலமருதூர், குன்னலூர், தில்லைவிளாகம் முசல்வெளி முதலிய கிராமங்களில் இருக்கின்றன. அவைகளை ஏழை மக்களுக்கு அடமானம் செய்துகொடுக்கவேண்டும். அதை முதலில் செய்ய வேண்டும். ஸீலிங் வந்தாலும் இந்த புறம்போக்கு நிலங்களுக்கு அவர்

களுக்கு பட்டா இல்லாததால், அதிலிருந்து இவர்கள் தப்பித்துக் கொள்வார்கள். ஆகவே, அதற்கு முன்பாகவே பெரிய பணக்காரர்களிடம், பெரிய நிலச்சுவாந்தார்களிடம் இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களைப் பிடுங்கி அவைகளை ஏழைகளுக்கு கொடுக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

TEMPORARY CHAIRMAN (SRI R. SUBRAMANIAM): The hon. Member has one minute more.

*SRI V. VEDAYYAN: எங்கள் பகுதியில் பல இடங்களில் ஆயிரக்கணக்கான எக்கர் புறம்போக்கு நிலங்களை, இரண்டு எக்கர்கள் வீதம் பல ஏழைகள் சாகுபடி செய்துகொண்டுவருகிருர்கள். அங்கு உடனடியாக ஸ்பெஷல் சர்வே பார்ட்டி போட்டு, அவைகளை ஏழைமக்களுக்கு அடமானம் செய்து தரவேண்டும். வேதாரண்யம் பகுதியில் இப்பொழுது விதைக்குக்கூட நெல் கிடைக்காத அளவு பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அங்குள்ள விவசாயிகளுக்கு விதை வாங்குவதற்கும், மற்ற காரியங்களுக்கும் கடன் வசதி அளித்து, வரி வஜாவும் செய்து தரவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI P. JAYARAJ: தலைவர் அவர்களே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவிக்க நான் முன்வந்திருக்கிறேன். இப்பொழுது கிராம அதிகாரிகளின் பிள்ளைகளுக்கு கல்விச் சம்பள சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்கதே. கிராம அதிகாரிகளுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டியது அவசியமே. இருப்பினும் சமீபத்தில் என்.ஜி.ஓ.க்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பள நிவாரணம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. சர்க்கார் இன்று பல திட்டங்களைத் தீட்டுகிருர்கள். அத்தகைய திட்டங்கள் கிராம மக்களுக்கு பயன்படத்தக்க விதத்தில் செய்ய வேண்டியது கிராம அதிகாரிகள் வேலையாகும். ஆகவே கிராம அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். நியாயவாரச் சட்டம் தஞ்சை ஜில்லாவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அந்த நியாயவாரச் சட்ட அடிப்படையில் பல்வேறு ஏழை மக்கள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் அவர்கள் நிலத்தில் உழுகிருர்களா இல்லையா என்பதைப் பார்த்து, அப்படி அவர்கள் உழுகிருர்களா இல்லையா என்பதை கோர்ட்களில் நிரூபிக்க வேண்டிய வேலை, கிராம அதிகாரிகளுக்குத்தான் இருக்கிறது. ஆகவே சர்க்காரின் திட்டங்கள் கிராமப் புறங்களில் உள்ள ஏழை ஹரிஜனங்களுக்கும், விவசாய மக்களுக்கும் பயன்படும்படிச் செய்வது, கிராம அதிகாரிகளின் கையில்தான் இருக்கிறது. கிராமங்களில் சர்க்காரின் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்ருல் அதற்கு முதுகெலும்பாக இருக்கிருர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள். ஆகவே கிராம அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமுமாகும். இன்று கிராமப் புறங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் சர்க்காரின் திட்டங்கள் கிராம மக்களுக்கு பயன்படுவதற்கு கிராம அதிகாரிகள் உதவியாக இருக்கிருர்களா இல்லையா என்பது பிரச்னைக்குரியது. ஆகவே அத்தகைய கிராம அதிகாரிகளுக்கு தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இன்று ஒவ்வொரு ரெவின்யூ வட்டத்தையும் எடுத்துக்கொண்டால் 500, 1,000, 1,500 எக்கர் என்று இருக்கின்றன. இது பற்றி ஒரு திட்ட வட்டமான முடிவு இல்லை. ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. ஆகவே இந்த மாறுதல்களைப் போக்குவதற்கு திட்டவட்டமான அடிப்படையில் 500 எக்கர் கொண்டது ஒரு வட்டம் என்று ஏதாவது ஒரு நிர்ணயம் செய்தால், எல்லா வட்டங்களும் ஒரேபோல் இருக்கவேண்டும். ஒரு இடத்தில் 500 எக்கர்கள் என்றும், இன்னொரு இடத்தில் 1,000 எக்கர்கள் என்றும், இன்னொரு இடத்தில் 1,500 எக்கர்கள் என்றும் இருந்தால் கிராம அதிகாரிகளின் வேலை, இடத்திற்குத் தகுந்தாற்போல கூடுகிறது குறைகிறது. சில இடங்களில் 1,500 எக்கருக்கு 1,000 பட்டாதார்கள் இருக்கிருர்கள். அவர்கள் கிஸ்தி செலுத்துகிருர்கள் என்று சொன்ருல், கிஸ்தி வசூல் செய்யும் வேலை அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு வட்டத்திலும் இவ்வளவுதான் எக்கர்கள் இருக்கலாம் என்று நிர்ணயம் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மிக மிக அவசியம். அப்படிச் செய்தால் வேலைகள் துரிதமாக நடைபெறும்.



அடுத்தபடியாக நத்தம் புறம்போக்குகள் இருக்கின்றன. அவைகள் மக்களுக்கு பயன்படும் முறையில் இல்லை. எனக்கு முன் பேசிய ஒரு நண்பர், புறம்போக்கு நில முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொன்ஞர்கள். 174-ம் நெம்பர் பட்டாதாருக்கு பத்து எக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்ருல், அடங்கலில் பார்த்தால் அது காணப்படவில்லை. நத்தம் அடங்கல் மிராசுதாரர்கள் பேரில் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதனுல் அதில் குடியிருக்கும் ஹரிஜனங்கள், ஏழை மக்கள் அவர்கள் இப்பொழுது குடியிருக்கும் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப் படுகிருர்கள். ஆகவே, சர்க்கார் இதுபற்றி நன்கு விசாரித்து, இப்பொழுது இப்படிப்பட்ட மனைகளில் குடியிருக்கிறவர்களை எந்த விதத்திலும் அப்புறப்படுத்த முடியாத நிலையில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இவைகளை ரீ சர்வே செய்ய வேண்டும். 20, 25 வருடங்களுக்கு முன்பு சர்வே செய்தது, அதற்குப் பிறகு ரீ சர்வே செய்யப்படாததால் அந்த இடங்களில் பிணக்கும், பூசல்களும் ஏற்படுகின்றன. ஒரு எக்கர் நிலத்தில் 20 பட்டாதாரர்கள் இருக்கிருர்கள். இவர்கள் இருபது பேர்களுக்கு எப்படி சாகுபடி செய்கிருர்கள் என்று கேட்டால் கணக்குப் பிள்ளையை அருகில் வைத்துக்கொண்டு நிலத்தை அளந்து, வித்திட்டு, நாற்று பறித்து, பயிரிட வேண்டி இருக்கிறது. கூட்டுப் பட்டா என்று இருப்பதால் விவசாயிகளுக்கு இடையே சண்டை ஏற்படுகிறது. ஆகவே, இதைத் தவிர்ப்பதற்கு ரீ சர்வே செய்ய வேண்டும். 30 வருடங்களுக்கு முன சர்வே செய்ததை இன்னும் வைத்துக்கொண்டிருப்பதால் ஒருவர் நிலம் இன்னொருவருக்கு போய்ச் சண்டை சச்சரவு ஏற்பட்டு கோர்ட்டுகளுக்கு போகக் கூடிய நிலை ஏற்படுகிறது; சிறு நிலச்சுவான்தார்களுக்கு. ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, திரும்பவும் ரீ சர்வே செய்ய வேண்டும். புறம்போக்குகளில் பத்து வருடங்களாக இருந்தவர்களை திடீர் திடீரென்று "எவிக்ட்" செய்கிருர்கள். அத்தகைய நிலையில் களம் புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு போன்ற புறம்போக்குகள் இருக்கின்றன. ஆகவே, புறம்போக்கு நிலங்களில் பத்துப் பதினைந்து வருடகளாக இருந்துவரும் ஏழை மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்தாதபடி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் கைக்கொள்ள வேண்டுமென்று நான் அரசாங்கத்தை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் உச்ச வரம்பு வரப்போகிறது, வரப்போகிறது என்று மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். உச்ச வரம்பு வரப்போகிறது என்று அறிந்தவுடனே பெருநிலக்கிழார்கள், எப்படி எப்படி தாங்களாகவே உச்ச வரம்பைச் செய்து கொள்ள முடியும் என்று பார்த்து, ஒரு குடும்பத்தில் 100 எக்கர்கள் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், அதை 25 எக்கர்கள் மனைவிக்கு, இவ்வளவு இவ்வளவு பிள்ளைகளுக்கு என்று பங்கிட்டு வைத்துக்கொள்கிருர்கள். அதனுல் அக்கிரிகல்சரல் இன்கம் டாக்ஸில் இருந்தும் தப்பித்துக் கொள்ள முடிகிறது. இப்படி சிறிது சிறிதாகப் பிரிததுக்கொண்டால் அக்கிரிகல்சுரல் இன்கம் டாக்ஸிலிருந்து விதி விலக்கு கேட்கும் நிலை ஏற்படுகிறது. இது பற்றியும் அரசாங்கம் பரிசீலித்து வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri S. Ramasami Thevar] [11th March 1959

அதிகாரிகள் வேறு பேர்வழிகளுக்குக் கொடுத்துவிட்டார்கள். இந்த மக்களை முதலில் வரச்சொல்லி, வந்த பிற்பாடு, "நாளை வா" என்று சொல்லிவிட்டு வேறு ஒரு வகையிலே கொடுத்துவிட்டார்கள். வெகுகாலம் ஆகியும் தங்களுக்கு பணம் கிடைக்கவில்லை என்று அவர்கள் மனுச்செய்து கொண்டிருக்கிறார்கள். வருஷங்கள் 5, 6 ஆகியும் அவர்களுக்கு இன்னும் பணம் போய்ச் சேரவில்லை. அதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. போலீசார் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் பணம் வந்து சேரவில்லை. ஒருவர் வரி கட்டத் தவறிவிட்டால் அல்லது வரியை கிராம அதிகாரியை விட்டு வேறு ஒருவரிடம் கொடுத்துவிட்டால்கூட; சர்க்கார் அதற்கு சம்மதிப்பார்களா? சர்க்காருக்கு வர வேண்டிய வரியை எப்படி கண்டிப்பாக வசூலிக்கிறார்களோ, அம்மாதிரி மக்களுக்கு சேரவேண்டிய பணத்தையும் அவர்களுக்குச் சேரும்படி செய்ய வேண்டும். ஆனால், மக்களுக்குச் சேர வேண்டிய பணம் வேறு வழியில் போனதை இன்னும் சர்க்கார் கவனிக்காமல் இருக்கிறார்கள்.

அதோடுகூட, எங்கள் தாலூகாவில் இருக்கும் பாதிரிக்குடி என்ற கிராம மக்கள் சர்க்காருக்கு ஒரு வரியும், வேறு ஒரு வரியையும் செலுத்துகிறார்கள். அடுத்த கிராமத்தில் மக்கள் என்ன வரி செலுத்துகிறார்களோ அந்த வரி அளவும் செலுத்துகிறார்கள். அதோடு கூட, அர்த்தமான்யம் என்று ஐந்தில் ஒரு பங்கு வாரமாக இன்னொருவருக்கு வரி செலுத்துகிறார்கள். அவர்கள் இரட்டை அடிமைகளாக இருக்கிறார்கள். ஒன்று சர்க்கார் கிராமமாக இருக்கவேண்டும். அல்லது வார கிராமமாக இருக்க வேண்டும். அது அல்லாமல் இரண்டு பேர்களுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள் அந்தக் கிராம மக்கள். இதுபற்றி அவர்கள் எத்தனையோ மனுக்கள் அனுப்பி இருக்கிறார்கள். நேரடியாகவும் இதுபற்றி நான் ரெவின்யூ அமைச்சர் அவர்களிடம் பல தடவை சொல்லியிருக்கிறேன். ஆண்டு இரண்டாகியும் இந்த விஷயம் கவனிக்கப்படாமல் இருக்கிறது. நிர்வாகத்தில் ஓரளவு கண்டிப்பும், கண்காணிப்பும் இருந்தால்தான் மக்கள் நல்வாழ்வு வாழ முடியும் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் தாலூகாவிலே கோவில் கிராமங்கள் பல இருக்கின்றன. கோவிலுக்கு கிராமங்கள் எப்படிச் சேர்ந்தன, நிலங்கள் எப்படி குவிந்தன என்று பார்க்கும்பொழுது, ஏற்கனவே இருந்த ஜமீன்தார்களும் நிலப்பிரப்புக்களும் அவைகளை தானமாக கொடுத்திருக்கின்றனர். அந்தக் கிராமங்களை சர்க்கார் வசப்படுத்திக் கொள்ள தயங்குகிறார்கள். அங்குள்ள மக்கள் படும் கஷ்டத்தை நினைப்பது கிடையாது. அந்தக் கிராமாங்களிலுள்ள குளங்கள் மராமத்து செய்யப்படவில்லை. இதையும் சர்க்கார் கவனிப்பது இல்லை. கோவில் நிர்வாகஸ்தர்களும் இந்த கிராமங்களை என்ன என்று கூட திரும்பிப் பார்ப்பதில்லை. இந்த நிலையிலே அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விளைச்சல் இல்லை. காரணம், அங்குள்ள குளங்கள் பல ஆண்டு காலமாக மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. இதை சர்க்கார் தயக்கமில்லாமல் உடனடியாக கவனித்து இந்தக் கிராமங்களை வசப்படுத்திக் கொண்டு, அங்குள்ள மக்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER :** உங்களுக்கு நேரம் ஆகிவிட்டது.

***SRI T. R. RAMAMIRTHA THONDAMAN :** கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்த ரெவின்யூ மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில விஷயங்களை சொல்ல விரும்புகிறேன். எங்கள் தஞ்சை ஜில்லாவில் நீண்ட காலமாக ஒரு சம்பிரதாயம் இருந்து வருகிறது என்பதை ரெவின்யூ அமைச்சர் முதல் மராமத்து இலாகா அமைச்சர் வரை எல்லா இலாகா அமைச்சர்களுக்கும் தெளிவாக விளக்கித் தெரிவித்திருக்கிறேன். அதுதான் "பண்டமென்டல் ரைட்ஸ்" என்று சொல்லிக் கொண்டு, நத்தம், சாரி, புறம்போக்கு, சமுதாயம் என்ற பெயரால் உள்ள நிலங்களை பட்டாவோ கிரயமோ எதுவுமில்லாமல் பட்டா மானியம் என்ற பெயரால் தங்களுடையதென்று சொல்லி கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி நிலங்களை இதுவரையில சட்டப்பிரகாரம் சர்க்கார் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். அதுமாதிரி சர்க்காரிடமிருந்து கிரயத்துக்கும் வாங்காமல் சாரி, நத்தம் என்ற பெயரால் தங்களுடையது என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய நிலங்களை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அதை ஏழைகட்கு குடியிருப்புக்கு கொடுக்கவேண்டுமென்றும் நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். நத்தம், சாரி போன்ற இடங்கள், எதற்கும் தகுதியற்ற நிலைமையில் தரிசாக கிடக்கக்கூடிய நிலங்கள் அங்குள்ள மக்களுக்கு குடியிருப்பு மனைகளுக்கு வேண்டும் என்று நீண்டகாலமாக சர்க்காரிடமும் அதிகாரிகளிடமும் கேட்டுக்கொண்டிருந்தபோதிலும், தர்மபுரம் போன்ற ஆதீனங்கள் இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்றால் குறிப்பாக திருப்புவனத்தில் புளியங்கொட்டை விதைப்பதற்கு குழிதோண்டுகிறார்கள், லாரிகளில் தென்னம்பிள்ளைகளைக் கொண்டுபோய் அந்த இடங்களில் வைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஷி இடங்களில் ஏழைகள் குடியிருக்க இடம் கேட்டவுடன் இப்படி செய்கிறார்கள். இந்த லட்சணத்தில் இருக்கிறது தர்மபுரம் ஆதீனம் அவர்கள் தர்மம் என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



11th March 1959] [Sri T. R. Ramamirtha Thondaman]

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்த சட்டம் வரப்போகிறது என்பது பற்றியும், நிலத்துக்கு உச்ச வரம்பு கட்டப்போகிறார்கள் என்பது பற்றியும் நான் சர்க்காரை பாராட்டுகிறேன். பூமி தோன்றிய முதல் உழவர்களுடைய சென்ற கால நிலைமையையும், வருங்கால நிலைமையையும் சென்ற காலத்திலிருந்து இன்று வரை நான் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறேன். அந்த முறையில் வள்ளுவர், ஔவையார், முதல் காந்திஜீ, கவி பாரதி வரையில், இப்பொழுது விநோபாஜி கூட முக்கியமாக உழவர் நிலைமை உயர்த்தப்படவேண்டும், அவர்களுக்கு நியாயமான உரிமை இருக்கவேண்டும் என்பதை தெளிவாக்கி இருக்கிறார்கள். நிலம் உழவனுக்கு சொந்தம் என்று காந்திஜி கனவு கண்டபடி நமது அமைச்சர் அவர்கள் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும் சட்டத்தையும் இங்கு கொண்டுவரப் போகிறார்கள். அதுவும் இந்த ஆண்டிலேயே அந்த சட்டத்தைக் கொண்டுவரப்போகிறார்கள் என்பது பற்றி நான் மிகவும் பாராட்டுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். அந்த மாதிரியான சட்டம் எந்த அமைப்பில், எந்த அடிப்படையில், எந்த முறையில் இருக்கவேண்டுமென்பதைப் பற்றிதான் தெளிவாக்க விரும்புகிறேன். சென்ற காலத்திலே சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம் போன்ற பல சட்டங்களை நாம் இயற்றியிருக்கிறோம், ஆனால், அந்த சட்டங்களிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதையும் நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்ற காலத்தில் இந்த சட்ட சம்பந்தமாக இரண்டு கோர்ட்டுகளுக்கு போக வேண்டியிருந்தது ; ஒன்று சமரச கோர்ட்டு, ஒன்று ரெவின்யூ கோர்ட்டு ஷி கோர்ட்டுகளை விட இப்பொழுது முனிசீப் கோர்ட்டுக்கும் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் சாகுபடியாளர்களுக்கு ஏராளமான சிக்கல்கள், நஷ்டங்கள், சாகுபடியை இழக்கும் நிலைமைகள் ஏற்படுகின்றன. மேலும், ஒரு குடும்பத்தில் நம்பிக்கையின் காரணமாக பலபேர்களுக்காக ஒருவர் நின்று சீட்டு எழுதிக் கொடுத்தாலும், சாகுபடிதார் நம்பிக்கை காரணமாக மற்றொருவர் பெயரால் சாகுபடிவைத்திருந்தாலும் அதாவது கூட்டு சாகுபடி அல்லது கரை வழி சாகுபடி இவைகள் பெயரால் சாகுபடி செய்பவர்கள் எல்லோருக்கும் அது செல்லாது, யார் சீட்டு எழுதிக் கொடுத்தார்களோ அவர்களுக்குத்தான் செல்லும் என்ற முறையில் உண்மையான சாகுபடியாளருக்கு பாத்தியதை மறுக்கப்படுகிறது. மேலும் சீட்டுகள் இல்லையென்றும் பல தப்பான காரணங்களாலும் உரிமை மறுக்கப்படுகிறது. அதே மாதிரி தர்ம ஸ்தாபனங்களில் நிலங்களை மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர் உள்குத்

[Sri T. R. Ramamirtha Thondaman] [11th March 1959

தகைக்கு விட்டுக்கொண்டிருந்தாலும் மொத்தக் குத்தகைக்காரர் "எவிக்ட்" செய்யப்பட்டால், பூரா நிலமும் "எவிக்ட்" செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்று சொல்லப்படுகிறது. இதனால் உண்மையான சாகுபடி செய்யும் சாகுபடியாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், புறம் போக்கு நிலம் தஞ்சை ஜில்லாவில் ஏராளமாக இருக்கின்றன. புதிய ஆற்றுப் பாசனங்கள் வந்த பிறகு ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகள் எந்த விதத்திலும் எடுத்துக் கொள்ளப்பட்டு விநியோகிக்கப்படாமல் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள், சமுதாய நிலங்கள், நத்தம், சாரி போன்ற நிலங்கள் பலர் கைப்பொருப்பில் இருக்கின்றன. எந்தவிதமான நஷ்ட ஈடும் இல்லாமல் சர்க்கார் இந்த நிலங்களை எடுத்துக்கொண்டு ஏழைகளாக இருப்பவர்களுக்கு சாகுபடி செய்வதற்குக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

கூட்டுறவு முறையில் நாம் சாகுபடி செய்ய வேண்டுமென்று பல துறைகளிலும் முயன்று வருகிறோம். என் தொகுதியில் பந்தநல்லூர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்களில் 4 கிராமங்களில் கூட்டுறவு முறையில் 3 கூட்டுறவு சங்கங்கள் அமைத்து சாகுபடி செய்யப்பட்டது. அது எந்த அளவு பிரயோஜனப்படுகிறது, எந்த அளவு உற்பத்தி பெருகி இருக்கிறது, உழவர்களின் பொருளாதாரம் எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது, சென்ற காலத்தில் இருந்த கடவுள் அங்கு இன்று எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறார் என்பதையெல்லாம் கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்த்தார்கள். அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சென்ற காலத்தில் தெய்வ பக்தியற்ற நிலைமையில் அந்த ஆலயத்துக்குச் செல்ல முடியாதிருந்த உழவர்கள் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபொழுது ஆயிரக்கணக்கில் கூடி "இன்றுதான் நாங்கள் கோவிலுக்குள் வரும் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்று மகிழ்ச்சியோடு அவர்களிடம் தெரிவித்தார்கள். அந்த முறையில் கூட்டுறவு முறை சாகுபடியால் சென்றகாலத்தில் கடனில் இருந்த கடவுள் பல முன்னேற்றமடைந்திருப்பதோடு உழவர்களும் முன்னேறியிருப்பதை காணலாம். அதே நேரத்தில் உணவு உற்பத்தி பெருக்கும் அதிகரித்திருக்கிறது.

12 noon

இந்த முறையில் விவசாயத்தில் ஒரு மாறுதல் வந்த உடன் அந்த ஆலய நிர்வாகத்தில் ஏற்பட்டிருந்த கடன்கள் எல்லாம் இப்பொழுது தீர்ந்துவிட்டன. கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதற்கு உழவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற முறை ஏற்பட்டு கோவிலுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ரெண்ட் கொடுக்கவேண்டும் என்றுள்ள முறை ஏற்பட்ட பிறகு அங்குள்ள விவசாயிகளும் நல்ல முறையில் விவசாயம் செய்து வருகிறார்கள். அதோடு அங்கு கோவில் எந்த விதமான தப்புக் கணக்கும் எழுதுவதற்கு முடியவில்லை. இப்போது உண்மையான கணக்கைத்தான் தயாரிக்கவேண்டிய நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது. இப்போது ஷை கோவிலுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் மிகுதி ஏற்பட்டிருக்கிறது. நிலச்சீர்திருத்தம் வந்த பின்னால் நிச்சயமாக உழவர்களுக்கு நிலம் கிடைக்கும் அதன் மூலமாக தாங்கள் கஷ்டமின்றி வாழலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த எண்ணத்தின் பேரில் சாகுபடி செய்ததின் காரணமாகத்தான் இன்றைக்கு எடுத்துக் காட்டாக பந்தணநல்லூரில் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்து உற்பத்தி பெருகியிருப்பதையும் அதேநேரத்தில் உழவர்கள் பொருளாதாரம் உயர்ந்திருப்பதையும், கடவுள் லாபத்தில் காக்ஷியளிப்பதையும் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். மேலும் பல தேவஸ்தான நிலங்களை கூட்டுறவு சாகுபடிக்குக் கேட்டு கிடைக்கவில்லை. குறிப்பாக கள்ளப்புலியூர் கிராமக் கூட்டுறவு சாகுபடிக்கு கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நமது நிதி அமைச்சர் அவர்கள் தனது உரையில் சாதாரணமாக பருவ மழை இல்லாதிருந்தும், பூச்சிகளினால் பாதிக்கப்பட்டிருந்தும், உணவு உற்பத்தி வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன



11th March 1959] [Sri T. R. Ramamirtha Thondaman]

வென்றால், நிலத்தில் சாகுபடி செய்யக்கூடிய உழவர்கள் மழை இல்லாது இருந்தும் வருங்காலத்தில் நிலச்சீர்த்திருத்தம் வரும்போது நிச்சயமாக தங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற உணர்ச்சியுடன்தான் பாடுபட்டு விவசாயம் செய்ததின் பலனாகத்தான் உற்பத்தி பெருகியிருக்கிறது; என்பது இந்த உரையிலிருந்து தெளிவாகிறது. ஆனால் இன்றைக்கு இவ்வளவு நம்பிக்கையை வைத்துக்கொண்டிருக்கும் உழவர்களுக்கு நிலச்சீர்த்திருத்தம் கொண்டு வரும்போது நிலம் கிடைக்காத அளவில் இன்றைக்கு பல முயற்சிகள் நடந்து வருவதாக நாம் அறிகிறோம். ரெஜிஸ்டர் ஆபீஸ்களிலெல்லாம் பாகப்பிரிவினைகள் எல்லாம் நடந்து கொண்டிருப்பதின் காரணமாக உழவர்கள் எல்லாம் வருங்காலத்தில் தாங்கள் ஏமாற்றமடைய வேண்டிய நிலை ஏற்படுமோ என்று அஞ்சக் கூடிய நிலையிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே சீக்கிரமாகவே நிலச்சீர்திருத்தத்தை கொண்டுவரவேண்டுமென்று ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட பாகப்பிரிவினை செட்டில்மெண்ட் செல்லாதென்ற முறையில் சட்டமியற்றக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கிராம அதிகாரிகளைப் பற்றி பலர் சொன்னார்கள். அவர்களுக்கு சம்பள உயர்வைப் பற்றி பரிசீலிக்கவேண்டும் என்றும் பலர் சொன்னார்கள். அது உண்மைதான். அவர்களுடைய சம்பள விஷயத்தில் ஒரு கமிட்டி நியமித்து ஆலோசனை செய்துபார்த்து தக்க முடிவு எடுக்க வேண்டியது அவசியம். அதோடு, சாதாரணமாக வேதம், பிரம்மா என்று சொல்வதையெல்லாம் நாம் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளவில்லையானாலும் சரி இன்றைக்கு பல கிராமங்களில் கர்ணம் தான் பிரம்மாக்களாகவும் அவர்கள் கையில் இருக்கும் அடங்கல் தான் வேதமாகவும் இருந்து கொண்டிருக்கிறது. இதன் மூலமாக அவர்கள் ஏராள தவறுகள் செய்துவிடுகிறார்கள். ஆகவே அந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும். அஸ்திவாரமாக உள்ள கர்ணம் வேலையையும் அவர் அடங்கலையும் பற்றி எனக்கு நேரிடையாக ஒரு சம்பவம் தெரியும், இப்போது ரெவின்யூ போர்டு கமிஷனராக இருக்கும் ஆர். எம். சுந்தரம் அவர்கள் தஞ்சாவூரில் கலெக்டராக இருந்த நேரத்தில், திருப்பனந்தாளில் புறம்போக்கில் குடியிருந்த தோட்டி ஷை இடத்தில் குடியிருப்பை காலிசெய்ய சொல்வதாக புகார் செய்துகொண்டதன் பேரில் மேற்படி இடத்தை அவனுக்கு கொடுக்கும்படி அடங்கலில் எழுதிவிட்டு தோட்டியை அவ்விடத்தில் வீடுகட்டிகொள்ள சொன்னார். அதன் பின்னால் அதாவது ஏழு நாட்களுக்கு பின்னால் அந்த இடத்தை திரும்பவும் ஆதீனகர்த்தர் ஆட்கள் பிரித்தெறிந்தார்கள். இது விஷயத்தை ஷையூர் கர்ணத்திடம் கேட்ட போது ஒரு மைலுக்கு அப்பால் சுடுகாட்டிலுள்ள ஒரு இடம் கொடுக்கப்பட்டிருப்பதாக அடங்கலில் எழுதப்பட்டிருக்கிறது, என்று அடங்கலை காண்பித்தார். அந்த அளவு கர்ணம் மேல் அதிகாரிகளை ஏமாற்ற முடிகிறது. இந்த முறையில்தான் கலெக்டர் அவர்கள் கையெழுத்திட்டிருப்பதாக அடங்கல் கூறுகிறது. இந்த நிலைமையில் இவர்களுடைய வேலை இருக்கிறது. இதையெல்லாம் மாற்றுவதற்கு இவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து இவர்களை முழு நேர ஊழியர்களாக மாற்றி இவர்களது வேலையை சீர்த்திருத்த வேண்டும். அதோடு நிலங்களையெல்லாம் ரீ-செட்டில்மெண்ட் செய்து வரிகளையெல்லாம் திருத்தி அமைக்கவேண்டும். பழைய கிஸ்தி முறை அதாவது 20-வது வருஷ முன் கலம் ஒரு ரூபாய் கணக்கில் கிஸ்தி வசூலிப்பதை மாற்றி இப்போதிருக்கும் விலைக்கு நடைமுறையில் வசூலிக்கவேண்டும். மேலும் தேவஸ்தான மடாலய நிலங்களையும் நிலச்சீர்த்திருத்தத்தின்கீழ் கொண்டுவரவேண்டும் என்றும், விவசாய தினக்கூலிகளுக்கு எல்லாம் தினக்கூலி நிர்ணயம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும், அதற்குரிய சட்டத்தை உடனடியாக கொண்டுவரவேண்டும் என்றும் மடாலய தேவஸ்தான நிலங்களை இந்த ஆண்டு முதலே கூட்டுறவு சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri A. R. SUBBIAH MUDALIAR**: தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் ஒன்றுவது மான்யத்தின் மீதும்

[Sri A. R. Subbiah Mudaliar] [11th March 1959

12-வது மான்யத்தின் மீதும் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதில் நிர்வாக சம்பந்தமாக அதிகச் செலவுகள் ஏற்படுகின்றன. வசூலாக வேண்டியது 6 கோடி 42 லட்சம் ரூபாய், இதற்கு நிர்வாகச் செலவு 3 கோடி 22 லட்சம் ரூபாய் ஆகின்றது. இவ்விதம் இருந்தும் கூட நிர்வாகத்தில் ஊழல்களும் தாமதமும்தான் அதிகமாக இருந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கு விவசாய வருமான வரி மூலமாக கிடைக்கப்போவது 18 லட்சம்தான், ஆனால் அதன் நிர்வாகச் செலவுக்காக 2 லட்சம் 82 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவையும் எடுத்துக் கொண்டால், உதாரணமாக எங்கள் ஜில்லாவாகிய திருநெல்வேலியை எடுத்துக்கொண்டால் அங்கு கலெக்டருக்கு இரண்டு பி.ஏ.க்கள் இருக்கிறார்கள். கலெக்டர் மாதத்தில் இருபது நாட்கள் ப்ளாக்குகளை சுற்றிப்பார்க்க போய் விடுகிறார்கள். சாதாரணமாக ஆபீஸில் நடைபெற வேண்டிய காரியங்களை பார்வையிடுவதற்கு இரண்டு பி.ஏ.க்கள் இருந்தும் ஒருவிதமான முன்னேற்றத்தையும் காணமுடிவதில்லை. சங்கரன்கோயில் தாலுகாவை எடுத்துக் கொண்டால் தாலுகா பூராவும் நான்கு ப்ளாக்-களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக அந்த தாலுகாவிற்கு ஒரு தாசில்தார், ஒரு டெப்டி தாசில்தார், இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு அங்கு என்ன வேலை இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது தவிர எக்ஸ் ஜமீன்தாரி பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் அந்த இடங்களில் வசூல் $1\frac{1}{2}$ கோடி ரூபாய். அதற்கு நிர்வாகச் செலவக்கு 54 லட்சம். ஜமீன் கிராமம் அயன் கிராமம் பக்கத்தில் இருக்கும். ஆனால் இரண்டு கிராமத்திற்கும் தனித்தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். இம்மாதிரிப்பட்ட இடங்களில் ஒரு கால்வாயிலிருந்து நான்கு மடைகள் இருந்தால் அதில் இரண்டு மடைகள் அயன் கிராமத்திற்கு சொந்தமானதாக இருக்கும். மற்ற இரண்டு மடைகள் ஜமீன் கிராமத்திற்குச் சொந்தமாக இருக்கும். இந்த மடைகளில் ஏதாவது தாவா வந்து அதை தீர்த்துவைக்க வேண்டுமென்றால் அயன் கிராமத்திலுள்ள தாசில்தாருக்கும் ஜமீன்தாரி கிராமத்திலுள்ள தாசில்தாருக்கும் மனு கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. அதோடு செலவும் அதிகமாகிறது. ஆகவே இப்போதிருக்கின்ற இந்த லேவல் ஸிஸ்டத்தை மாற்றி அமைத்தால் நிர்வாக செலவு குறையும் என்பதை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஜமீன்தாரி கிராமத்திற்கும் அயன் கிராமத்திற்கும் தனித்தனியாக அதிகாரிகள் இருக்கிறார்கள். இரட்டிப்பான அதிகாரிகளை எல்லாம் எடுத்துவிட்டால் குறைந்தது 50 லட்சம் ரூபாயாவது மிச்சமாகும் என்று கணக்கு ரூபமாக தெரிகிறது. அடுத்ததாக இப்போது இருந்து வருகின்ற வில்லேஜ் ஆபீஸர்கள் எல்லாம் பரம்பரை உத்தியோகஸ்தர்கள்தான். இந்த நிலைமையை மாற்றவேண்டுமானால் கிராமங்களில் வேலை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற கிராம சேவக்-களின் கையில் இந்த பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். அதோடு எல்லா கிராமங்களிலும் வில்லேஜ் சாவடி ஏற்படுத்தவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. உத்தியோகஸ்தர்கள் கிராமங்களுக்கு வந்தால் தனிப்பட்டவர்களின் வீடுகளில் தங்க நேரிடுகிறது. ஆகவே இதை தவிர்ப்பதற்கு கிராமச் சாவடிகள் இருந்தால் வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கிராமத்திலுள்ள irregular irrigation க்கு penalty போடப்படுகிறது. இந்த penalty-யை ஜமாபந்தி சமயத்தில் குறைத்துவிடுகிறார்கள். 20—19 என்று குறைத்துவிடுகிறார்கள். இதனால் ஜனங்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒழுங்கீனமாக தண்ணீர் எடுப்பதினால்தான் இந்த தண்டத் தீர்வை போடப்படுகிறது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் நன்றாகத்தெரியும். இவ்வளவு தெளிவாக தெரிந்தும்கூட பின்னால் இந்த தீர்வை குறைக்கப்படுகிறது. இதன் காரணமாக அசல் நஞ்சைகளுக்கு கிடைக்கவேண்டிய தண்ணீர் குறைகின்றது. ஒரு பக்கம் விளைவு குறைகிறது, ஒரு பக்கம் விளைவு கூடுகிறது. ஆகையால் விதியை கடுமையாக நடத்தினால்தான் இந்த irregular irrigation குறைவதற்கு வகை ஏற்படும்.



11th March 1959] [Sri A. R. Subbiah Mudaliar]

மைனர் இர்ரிகேஷன் ரெவினியூ இலாகாவில் இருப்பது பொருத்தம் இல்லை. நான்-டெக்னிகல் பீபிளுக்கு பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. இப்பொழுது நன்றாக நடக்கும் 'புட் ப்ரொடெக்ஷன் டிபார்ட்மெண்டில்' மைனர் இர்ரிகேஷனையும் ஒப்புவித்தால் நல்லது.

'அக்காமடேஷன் கன்ட்ரோல்' தனியாக ஆபீஸ் தேவை இல்லை. அதிக நிர்வாகச் செலவு ஏற்படுகிறது. மதராஸ் கலெக்டருக்கு என்ன வேலை இருக்கிறது என்பதே தெரியவில்லை. அநேகமாக மேல் நாட்டிலிருந்து வரக்கூடிய பெரியார்களை வரவேற்கக்கூடிய ஜோலிதான் அவருக்கு இருப்பதாகத் தெரிகிறது. அவரிடத்தில் அக்காமடேஷன் கண்ட்ரோல் சம்பந்தமான ஜோலியையும் கொடுத்தால் சிக்கனம் ஏற்படுவதற்கு வழி ஏற்படும்.

அதேமாதிரி, ஜில்லாக்களை பாப்புலேஷன் பேஸிஸ்ஸிலோ, ஏரியா பேஸிஸ்ஸிலோ பிரித்தால், அதிலும் சிக்கனம் ஏற்படும். அதற்கு உதாரணம் திருநெல்வேலி ஜில்லாவில் எடுத்துக் கொண்டால் திருநெல்வேலி ஜில்லாவின் விஸ்தீரணம் 4,397 சதுர மைல். தென்காசி தாலுகாவின் விஸ்தீரணம் 403 சதுர மைல். செங்கோட்டை தாலுகாவின் விஸ்தீரணம் 100 சதுரமைல்தான். ஆனால் அதற்கும் ஒரு தாசில்தார், டெபுடி தாசில்தார், ஆபீஸ் எல்லாம் இருக்கின்றன. இவர்களுக்குப் போதுமான ஜோலி இல்லை, இப்படியெல்லாம் நிர்வாகச் செலவு அதிகம் ஏற்படுகிறது. 100 சதுர மைல் விஸ்தீரணம் உள்ள செங்கோட்டை தாலுகாவிற்கு ஒரு தாசில்தார், டெபுடி தாசில்தார் என்று செலவு செய்துகொண்டிருந்தால், எப்படி சிக்கனம் ஏற்படும் என்று கேட்கிறேன். டாப் ஹெவி அட்மினிஸ்ட்ரேஷன் இருக்கிறது. அதைக் குறைக்கவேண்டும். அப்பொழுதுதான் சிக்கனம் ஏற்படுவதற்கு வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களில் ரேடியோ செட்டுகள் வைத்துக் கொள்ள மெயிண்டினென்சுக்கு ரூபாய் 120 வருஷத்திற்குக் கேட்கப்படுகிறது. ஆனால், செட் கிரயம் ரூபாய் 200 தான். அதனால் பஞ்சாயத்துக்கு அதிகச் செலவு ஏற்படுகிறது. மெயிண்டினென்ஸ் செலவு கொடுத்தால் தான் ரேடியோ செட் கொடுக்கப்படும் என்ற கண்டிஷன் இருக்கிறது. ஒரு வருஷத்தில் 120 ரூபாய் மைனர் பஞ்சாயத்து கொடுப்பது சிரமம். **Rural area**வை விருத்தி பண்ண வேண்டுமென்ற குறிக்கோளை அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கும்போது, இம்மாதிரியெல்லாம் கட்டு திட்டங்கள் வைப்பதால் அந்த ஏரியாவில் வளர்ச்சி ஏற்படுவதற்குத் தடை ஏற்படுகிறது.

டிஸ்க்ரிஷனரி கிராண்ட் 36 லட்சம் ரூபாய்தான் மாகாணம் பூராவுக்கும் கொடுக்கப்படுகிறது. அது காணாது. அதைக் கூடுதலாகக் கொடுத்தால், அவசரப்பட்ட காலத்தில் கலெக்டர் பார்த்து செய்யக்கூடிய காரியங்களைச் செய்ய வாய்ப்பு ஏற்படும்.

இன்னும் ஒரே ஒரு வார்த்தை. ஜமீந்தார்களுக்குக் கொடுக்கக்கூடிய நஷ்ட ஈட்டுத் தொகை காலாகாலத்தில் கிடைக்கவில்லை என்று பலவிதமான ஆவலாதிகள் இருந்துகொண்டு, காலாவதி ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. காரணம் காலாகாலத்தில் அவர்கள் மனுச் செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை உடனடியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

**Sri P. S. SANTHANAM**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த வெட்டுப் பிரேரணையைப்பற்றி சில கருத்தினைச் சொல்ல முற்படுகிறேன். இப்பொழுது இந்த வெட்டுப் பிரேரணையிலே குறிப்பிட்டிருக்கும் அம்சத்தையும் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் பட்ஜெட் மான்யத்தையும் ஒத்துப் பார்க்கும் காலத்தில், ஜில்லா நிர்வாகத்தின் கீழ்

அனேக குறைபாடுகள் இருக்கின்றன என்று அங்கங்கே உள்ளவர்கள் கூறிக்கொண்டேதான் வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிய குறிப்புகள் எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் நாமக்கல் வட்டத்தைப்பற்றி சில கருத்தினைச் சொல்லப் பிரியப் படுகிறேன்.

நாமக்கல் வட்டத்தில் வெற்றிலை விவசாயிகள் வேதனை உள்ளத்துடன் இருக்கிறார்கள். ஏறத்தாழ 2,000 ஏக்கருக்குமேல் வெற்றிலை விவசாயம் செய்யப்பட்டு வந்தது. அந்த வெற்றிலை கொடிகள் ஏறத்தாழ ஏழு, எட்டு ஆண்டுக் காலமாக வியாதியால் பீடிக்கப்பட்டு வருவதைச் சர்க்காருக்குச் சொல்லியும், சர்க்கார் அந்த வியாதியைத் தடுப்பதற்கு வேண்டி 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்து வெற்றிலைப் பண்ணையொன்றை ஏற்படுத்தியும் அதில் பலன் இல்லை என்று கைகழுவி விட்டார்கள். அதே நிலையில் அங்குள்ள இரண்டாயிரம் ஏக்கருக்குமேல் வெற்றிலை விவசாயம் செய்து வந்த மக்கள்—ஏறத்தாழ ஒரு லட்சம் பேர்கள்—ஜீவனத்திற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை கொடுத்து வந்த அந்த வெற்றிலை விவசாயம் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அங்குள்ள விவசாயிகளுக்குப் போதிய உணவு வசதி கிடைக்காத காரணத்தால் வெளியேறும் நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலையில் நமது சர்க்கார் ஜில்லா நிர்வாகம் அங்குள்ள ஏழை வெற்றிலை விவசாயிகளை நேரில் பார்வையிட்டு, அந்த வியாதியை போக்குவதற்குத் தகுதியான முறையிலே பரிகாரம்கண்டு பிடிப்பதற்கு இதுவரை எந்த விதமான திட்டமும் தீட்டவில்லை. அந்தத் திட்டத்தை தீட்ட கை கழுவி விட்ட சர்க்கார் உடனடியாக அவர்களுக்கு வரி வஜா செய்து பஞ்ச நிவாரண வேலையையாவது ஏற்படுத்திக்கொடுத்திருந்தால் நம்முடைய சர்க்காரை ஏழை வெற்றிலை விவசாயிகள் பாராட்டுவார்கள் என்று இந்தச் சபை முன்னே சொல்ல பிரியப்படுகிறேன்.

கொத்தனூர், வேலூர், கரூர் முதலிய பகுதிகளில் உள்ள ஏழை எளியவர்கள், இதை நம்பி வாழ்ந்தவர்கள் இன்றைக்கு வெளியிடங்களுக்குப் போயிருக்கிறார்கள். வட்டாரத்திலே உள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அங்கே உடனடியாகச் சென்று அவர்களுக்கு வேண்டிய திட்டத்தை ஏற்படுத்தியும், அவர்களுக்கு வரி வஜா செய்வதோடு அவர்கள் பிழைப்பதற்கும் தகுந்த வழி காட்டவேண்டுமென்று இந்தச் சபையில் ரெவினியூ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்று ஜில்லா நிர்வாகம் கிராம அதிகாரிகள் கையில் தான் இருக்கிறது. இன்றைக்கு ஜில்லா நிர்வாகம், அதன் அடியிலே இருக்கும் தாலூகா நிர்வாகம், அதன் கீழே இருக்கும் கிராம நிர்வாகம் கிராம மணியக்காரர், கிராம கணக்குப் பிள்ளையையும், அவர்களோடு ஓடி ஓடி பாடுபடுகின்ற தோட்டி, தலையாரி, வெட்டியான் என்று சொல்லக்கூடியவர்களை நம்பி நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், இந்த மூன்று பகுதியாளர்கள் இருக்கும் நிலையை சர்க்கார் ஆய்ந்து பார்க்காமல் இருக்கிறது. உண்மையிலேயே நாட்டுக்கு முதுகெலும்பாகவும், கிராம வளர்ச்சிக்கும் நமது சர்க்காருக்கும் கைதூக்கி விடுபவர்களாகவும், ஊன்றுகோலாகவும் இருந்து காட்சியளிக்கிற கிராம சிப்பந்திகள் செய்து வரக்கூடிய வேலை மிகக் கஷ்டமான ஒரு காரியமாகும். அப்படிப்பட்டவர்கள் அரை வயிற்றுக்குக் கூட கஞ்சி இல்லாத நிலையில்தான் சர்க்கார் நடத்துகிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்கு நமது சர்க்கார் அவர்களை முழு நேர ஊழியர்களாகக் கருதி, தகுந்த வசதி செய்துகொடுத்து, அவர்கள் வாழ்க்கை வளம்பெற போதிய சம்பளம் கொடுப்பதன்றி, அவர்களை கேவலமாக மதிக்கும் நிலையையும் போக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். வெள்ளையர் காலத்தில் 'வில்லேஜ் போலீஸ்' என்ற பெயரில் இவர்களை வைத்திருந்தார்கள். கிராமத்தைக் காக்கக் கூடியவர்கள், கிராம பாதுகாப்பாளர் என்று சொல்லி, அவர்களுக்குப் போதிய உடை கொடுத்தால் பார்ப்பதற்குக் கௌரவமாக இருக்கும். ஆனால், அமைச்சர்கள் பவனி வரும் நேரத்





தில் கூட தலையாரிகள் முன்னே ஓடி ஓடி போய்க்கொண்டிருப்பவர்களை—உண்மையிலேயே வேதனை உள்ளத்தில் குமுறிக்கொண்டு வருகிறவர்களை நமது அமைச்சர்கள் பார்க்காமலே, அந்தத் தோட்டி, தலையாரி, வெட்டியான்கள் என்னதான் குறை சொல்ல இருக்கிறது, அதைக் கேட்போம் என்று கூட சிந்திப்பதில்லை. அங்கிருக்கும் சட்டசபை அங்கத்தினர்கள், கௌரவம் வாய்ந்தவர்கள், செல்வச் சீமான்கள் வீட்டில் தங்கி அவர்கள் சூழ்ந்திருக்கும்போது, தோட்டி, தலையாரிகள் இவர்கள் கண்களில் படுவதில்லை. அவர்களுடைய குறைகளை கேட்பதில்லை நமது அமைச்சர்கள் என்று நான் உண்மையிலேயே வேதனையோடு சொல்கிறேன். தோட்டி, தலையாரிகள் என்ன வேலை செய்கிறார்கள் என்பதுகூட நமது அமைச்சர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ. நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன்—ஒரு கிராமத்தில் ஒருவன் செத்துவிட்டாலோ, தூக்குப் போட்டுக்கொண்டாலோ, கிணற்றில் விழுந்தாலோ, அவனைக் கரையில் தூக்கி வைத்திருந்து காவல் புரியும் வேலையும், போலீசுக்கு ரிபோர்ட் கொடுக்கிற வரையில் காவல் புரிவதும் அந்தத் தொழிலாளியின் வேலையாகிறது. அப்படிப்பட்டவருக்கு சம்பளம் எல்லோரையும்விட கேவலமான நிலையில் இருக்கிறது. வாழ்வதற்கு வேறு ஏதாவது சர்க்கார் கொடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை. வெள்ளையர் காலத்தில், தோட்டி மானியம், தலையாரி மானியம் என்று கொடுத்திருந்தார்கள். அந்த மானியம் நாளடைவில் செல்வச் சீமான்கள் கைக்கு மாறி, அவர்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அதைத் திரும்பவும் உரியவர்களுக்கு மாற்றுவதற்கு இந்த சர்க்கார், சுதந்திரம் பெற்று 11 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் சர்க்கார், ஏதாவது நன்மை செய்திருக்கிறார்களா என்றால் கிடையாது. ஒரு தாலுகாவை எடுத்துக் கொண்டால், அதில் ஒரு கிராமத்தில் நாலைந்து ஏக்கர் நிலம் தோட்டி மான்யம், தலையாரி மான்யம் என்று கொடுக்கப்பட்ட நிலங்களாக இருக்கும். அத்தனையும் இன்றைக்கு தோட்டி தலையாரி கையில் இல்லை. அந்தக் காலத்தில் இருந்த செல்வந்தர்கள் அவைகளை மடக்கிக் கொண்டார்கள். சர்க்காரால் கொடுககப்பட்ட அந்த மான்யங்களை சர்க்கார் ஆக்கிரமித்துக் கொண்டு தோட்டி தலையாரிகளுக்கு அந்த பாத்தியதைகளை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதுதான் சர்க்காரால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் நன்கொடை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நெய்வேலித் திட்டத்தை நாம் பார்போமானால், இன்றைக்கு நெய்வேலியில் உள்ள ஏழை விவசாயிகள், ஐந்து, பத்து ஏக்கர் நிலங்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். வைத்துக் கொண்டிருந்ததை நெய்வேலித் திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டபோது 1947-க்கு முன்னால் கொடுத்துவந்த விலை நிர்ணயத்தின் அடிப்படையில் சர்க்கார் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுத்து இருக்கிறது. சர்க்கார் இன்று அதை ஆண்டு அனுபவிக்கிறார்கள். இந்த நிலையில் அங்குள்ள விவசாயிகள் நீதி மன்றத்தில் நியாயம் கோரினார்கள். நில ஆர்ஜிதம் செய்த போது தற்கால விலைப்படிதான் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படவேண்டும் என்று நீதி மன்றத்தில் தீர்ப்புக் கூறினார்கள். அன்றைய தினம் அக்கம் பக்கத்திலுள்ள நிலங்கள் என்ன விலைக்கு விற்கப்பட்டதோ அந்த விலைக்குத்தான் நஷ்டஈடு கொடுக்கப்படவேண்டும் என்று தீர்ப்புக் கூறினார்கள். அங்குள்ள ஜில்லா அதிகாரிகள் அப்படி அக்கம் பக்கத்திலுள்ள நிலங்கள் என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்று எழுதி மத்திய சர்க்காருக்கு அனுப்பினால் அந்த முறைப்படி நஷ்டஈடு கொடுக்க அவர்கள் முன் வருவார்கள். இந்த முறையில் நமது ஜில்லா சர்க்கார் நல்ல முறையில் நடந்துகொள்ளவில்லை, நடந்து கொள்ள தவறி விட்டார்கள். அதனால் உள்ளபடியே அங்குள்ள விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். ஆகவே சர்க்கார் அங்குள்ள அதிகாரிகளுக்கு உடனடியாக ஒரு உத்தரவைப் போடவேண்டும், அதாவது அங்கு அக்கம் பக்கத்திலுள்ள நிலங்கள் எந்த விலைக்கு விற்கப்படுகிறது என்றும், அங்குள்ள நிலங்களை ஏ தரம், பி தரம் என்று பாகுபாடு செய்து அந்த முறையில் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க மத்திய சர்க்காருக்கு

[Sri P. S. Santhanam] [11th March 1959

எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அப் படிச் செய்தால் தான் அங்குள்ள விவசாயிகள் இந்த சர்க்காரை வாழ்த்து வார்கள்.

அது மாத்திரம் இல்லை. மற்றொரு விஷயத்தையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நமது நேரு அவர்கள் 1952-ம் வருஷம் என்ன சொல்லி இருக்கிறார் என்றால் உணவு பற்றாக்குறையைப் போக்க வேண்டு மென்றும் உணவை அதிகப்படியாக உற்பத்தி செய்ய வேண்டும் என்றும், என்னைப் போலுள்ள பாட்டாளி மக்களுக்கும் நிலம் இல்லாதவர்களுக்கு நிலத்தையும் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். அவர்க ளுடைய உழைப்பால் சாகுபடி செய்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதன் பிறகு கரும்பு, வாழையிலை, புகையிலை, வெற்றிலை பயிரிட்டவர்கள் உணவு உற்பத்தி செய்வதற்கு முன் வந்தார்கள். ஆனால் இப்பொழுது என்ன நடக்கிறது என்று சொன்னால் வெள்ளையர்கள் காலத்தில் 6-ம் நம்பர் நோட்டீஸ் கொடுத்து வெளியேற்றுவது போல் இப்பொழுது ஜில்லா அதிகாரிகள் வெளியேற்றி வருகிறார்கள். இதைக் கண்டு உண்மையிலேயே ஏழை விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். சுமார் பத்து ஆண்டுகளாக தங்களுடைய பணத்தைச் செலவு செய்து நிலத்தைப் பண்படுத்தி பயிர் செய்து கொண்டு வந்தவர்களை இப்பொழுது 6-ம் நம்பர் நோட்டீஸ் கொடுத்து வெளியேற்றுகிறார்கள். இது சரியல்ல. இதைத் தடுக்க ஒரு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் அங்குள்ளவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், அதாவது தாசில்தார், ரிவினியூ இன்ஸ்பெக்டர், கணக்குப்பிள்ளை, மணியகாரர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் அங்கேயெல்லாம் நீர்பிடிப்பு இருக் கிறது, அதனால் வெளியேற்றப்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள். ஏரிக்கு நீர் பிடிக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு என்று வேறு திட்டங்கள் இருக்கின்றன. ஏரிக்கு நீர் பிடிப்பு என்று சொன்னால் ஏரிக்கு அருகாமையில் ஏரக்தாழ 400 கெஜத்திற்கு அப்பால் தான் நீர் பிடிப்பு எல்லை என்று இருக்கிறது. அதற்கு அப்பால் புரம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகளைக் கொடுக்க வேண்டும். அதற்கு அடுத்தாற்போல் போனால் அங்கே பாரஸ்ட் வருகிறது. அங்கு போனாலும் தடை ஏற்படுகிறது. அதனால் இவைகளை யெல்லாம் போக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ரிவினியூ டிபார்ட்மெண்ட் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல பிரியப்படுகிறேன். இப்பொழுது டிபுடி கலெக்டர், களைப் போடுகிறார்கள். இரண்டு மூன்று வருஷங்கள் ஆனாலும் அவர்களை ரெகுலர் சர்வீசில் போடுவது இல்லை. சாதாரணமாகப் பார்க்கலாம் நீதி மன்றங்களில் ஜட்ஜுகளையும், முன்சீப்புகளையும் போடும்போது அவர்களை ரெகுலர் சர்வீசாகவே போடுகிறார்கள். பி.டபிள்யூ. டி. யில் போடக்கூடிய அசிஸ்டெண்ட் இஞ்சினியர்களையும் அப்படியே ரெகுலர் சர்வீசாகப் போடு கிறார்கள். அந்த முறையிலேயே என் டிபுடி கலெக்டரையும் போடக் கூடாது என்று கேட்கிறேன். ரெகுலர் சர்வீஸ் இல்லாமல் அவர்கள் இரண்டு மூன்று வருஷங்கள் வேலை பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் அவர்களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதனால் டிபுடி கலெக்டர்களை போடும்போது அவர்களை ரெகுலர் சர்வீசில் போடும்படி யாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**Mr. SPEAKER :** அடுத்தபடியாக கனம் கலியாணசுந்தரம் அவர்கள் பேசுவார். அவர் பேசுவதற்கு 15 நிமிஷங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**Sri M. KALYANASUNDARAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரே பணையை ஆதரித்துப் பேசுகிறேன். அநேகமாக ஜில்லா நிர்வாகத்திலுள்ள



11th March 1959] [Sri M. Kalyanasundaram]

குறைபாடுகளை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென் பதுதான். ஜில்லா நிர்வாகத்தில் குறிப்பாக ஜில்லா மட்டத்திலும் சரி தாலூகா மட்டத்திலும் சரி காகிதங்கள் போனால் பதில் வருவதே இல்லை. காகிதங்களுக்கு பதில் வரவில்லை என்று அந்தந்த ஆபீஸ்களில் போய் காகிதங்களைத் தேடிப் பார்த்தாலும் அங்கேயும் அவைகள் அகப்படுவது இல்லை. கேட்டால் வேறு எழுதிக்கொடுத்து விடுங்கள் என்று சொல்லி விடுகிறார்கள். இந்த அளவில் அங்கே நிர்வாகம் நடைபெற்று வருகிறது. எம். எல். ஏ.க்களுக்கு இப்படிப்பட்ட பதில் என்றால் சாதாரணமாக விவ சாயிகளுடைய காகிதங்களுக்கும் பொது மக்களுடைய காகிதங்களுக்கு என்ன முடிவு காணலாம் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த அளவில் ஜில்லா நிர்வாகமும் தாலூகா நிர்வாகமும் இப்படி பலஹீனமாக இருந்தால் நாம் என்ன திட்டங்களைப் போட்டாலும் எவ்வளவு செலவு செய்தாலும் அவைகளுடைய பலன் மக்களுக்குக் கிடைக்குமா என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண் டும். நாம் போடக்கூடிய திட்டங்களின் வெற்றி எங்கே இருக்கிறது ? திறமையான நிர்வாகத்தை சிருஷ்டிக்க வேண்டுமானால் அதற்கு ஓரளவு, அவசியமாக பணத்தை ஒதுக்கியாக வேண்டும். அப்படிச் செலவு செய்வது தான் கிரமமான செலவு என்று கருதப்படும். அதிகப்படியான பணத்தை மட்டும் ஒதுக்கி வைத்துவிட்டால் போதாது. அது நல்ல முறையில் செலவு செய்யப்பட வேண்டும். நல்ல முறையில் நிர்வாகம் நடைபெற வேண்டும். அதனுடைய பயனை மக்கள் அடைய வேண்டும். நிர்வாகம் மேலோங்கி நின்றால்தான் மக்கள் நல்ல பயனை அடைய முடியும். ஆகவே நிர்வாகம் திறமையாக இருக்க வேண்டுமென்பதைப்பற்றி அரசாங்கம் கொஞ்சம் சிந் திக்க வேண்டும். பணத்தைச் செலவு செய்யும்போது அதைக் கிரமமான முறையில் செலவு செய்யப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட விரும்பு கிறேன்.

ஒரு அரசாங்கம் திறமையாக நடைபெற வேண்டுமானால் அதனுடைய நிர்வாகம் திறமையாக நடைபெற வேண்டும். மந்திரிகள் திறமையாக வேலை செய்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது. அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து திறமையாக வேலை செய்கிறோம் என்று சொன் னால் மட்டும் போதாது. சட்டசபையில் பேசும்போதுகூட பைல்களை இங்கே வைத்துக்கொண்டு பார்ப்பதால் மட்டும் திறமையாக வேலை பார்க்கிறோம் என்று சொல்லிவிட முடியாது. அதிகப்படியாக வேலை செய்து கொண் டிருந்தால் மட்டும் போதாது. “A bad government and a good adminis- tration cannot co-exist.” பேலே இருக்கக்கூடிய சர்க்கார் திறமையாக இருந்து நிர்வாகம் மோசமாக இருந்தாலும் சரியல்ல, சர்க்கார் மோசமாக இருந்து நிர்வாகம் திறமையாக இருந்தாலும் சரியல்ல. இரண்டும் தொடர்ந்து திறமையாக நடக்க வேண்டும். நிர்வாகமும், சர்க்காருக்கும் தொடர்ந்து திறமையாக வேலை செய்தால்தான் சிறந்த நிர்வாகம் என்று கருதப்படும். அதில் ஏதாவது ஒன்று திறமை அல்லாமல் இருந்தால் அது திறமையான நிர்வாகம் என்று கருத முடியாது. நிர் வாகம் திறமையாக நடக்கிறது என்பதற்கு அடையாளம் கீழே தாலூகா எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. அதைப் பார்த்துத் தான் மக்கள் ஒரு முடிவுக்கு வருவார்கள்.

இதைத் தவிர இப்பொழுது பார்த்தால் தாலூகாவின் விஸ்தீரணம் அதிகமாக இருக்கிறது என்பதை மந்திரிகளும் ஒப்புக்கொள்ளுவார்கள். அப்படி அதிகமாக இருக்கிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராய மும். ஜில்லா நிர்வாகத்தைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமித் தார்கள். அந்தக் கமிட்டி விசாரணை செய்து தன்னுடைய அறிக்கையையும் வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையை இன்னும் சட்டசபையில் வைக்க வில்லை. அப்படி இங்கே வைக்காவிட்டாலும் அதில் சொல்லியபடி ஏதா வது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா ? இரண்டு வருஷங் களாகியும்

வாகியும் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. அந்த ரிப்போர்ட் என்னவாயிற்று. அது இன்னும் ரகசிய மாகவே இருக்கிறது.

ஜில்லாவின் விஸ்தீரணம் மிகவும் அதிகமாக இருக்கிறது. இதைப் பற்றி பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மற்ற ராஜ்யங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய ராஜ்யத்தில் பல ஜில்லாக்களின் விஸ்தீரணம் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. நம்மிடமிருந்து பிரிந்து போன ஆந்திரப் பகுதியில் நம்மை விட்டு பிரிந்து போன பகுதியை விட்டுவிட்டால் பாக்கிப் பகுதிகள் இப்படி அதிக விஸ்தீரணமுள்ளதாக இல்லை. அதைப் போலவே கேரளாவிலும் பிரிந்து போன பிறகு விஸ்தீரணம் அதிகமாக இருக்கிறது என்று சில பகுதிகளை எடுத்து மூன்று தாலூகாக்களாக பிரித்திருக்கிறார்கள். அதைப்போலவே ஹைதராபாத் பகுதிகளும் இவ்வளவு பெரியதாக இல்லை. இப்படி ஜில்லாக்களின் விஸ்தீரணம் அதிகமாக வைத்துக் கொண்டு நிர்வாகத்தை திறமையாக நடத்துவோம் என்று சொல்வது அவ்வளவு சாத்தியம் இல்லை என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். டிபுடி டெவலப்மெண்ட் கமிஷனரையும், பர்ஸனல் அசிஸ்டெண்டையும் நியமித்து விட்டால் மட்டும், அதிகாரிகளை அதிகப்படியாக நியமித்து விட்டால் மட்டும் நிர்வாகம் திறமையாக நடந்துவிடும் என்பது அல்ல. அதிகாரிகளை நியமிக்கும் விஷயமாக அதிகப்படியான பணத்தைச் செலவு செய்தால் மட்டும் போதாது. அதனால் திறமையான நிர்வாகம் நடக்காது என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக எங்களுடைய அனுபவத்தைக் கொண்டு சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அதைப்பற்றி தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு வந்தேன். அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்துக்கொள்வதற்கு சர்க்கார் இன்னும் காலதாமதம் செய்யக்கூடாது. ஜில்லாவின் விஸ்தீரணத்தை பிரித்தாக வேண்டும். இப்பொழுது நான்கு ஜில்லாக்களைப் பிரிக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். அப்படி பொறுக்கி எடுத்து நான்கு அடிஷனல் கலெக்டரைப் போடலாம் என்று சொல்லுவதாகவும் கேள்விப்படுகிறேன். அந்த யோசனை எந்த அளவில் இருக்கிறது அது எந்த அளவில் பலன் அளிக்கும் என்பது தெரியவில்லை. அதன் மூலம் பல புதிய பிரச்னைகள் உண்டாக்கலாம். அதன் மூலம் போதிய பலன் ஏற்படாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்படி அடிஷனல் கலெக்டரைப் போடுவதால் எந்தப் பகுதியை எந்த கலெக்டரிடம் கொடுப்பது என்ற பிரச்னை வரும். அதனால் பல குழப்பங்கள் ஏற்படலாம். நிர்வாக காரியாலயத்தை எங்கே வைப்பது போன்ற பிரச்னைகள் வரலாம். இப்பொழுதே சில வதந்திகள் வந்து பெரிய குழப்பம் ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். சேலம் ஜில்லா, திருச்சி ஜில்லா சம்பந்தமாக ஏதோ குழப்பங்கள் வந்திருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். திருச்சி ஜில்லாவிலிருந்து குளித்தலை தாலூகாவிலிருந்து கொஞ்சம் எடுத்து புதுக்கோட்டையுடன் சேர்க்கப்போவதாகக் கேள்விப்பட்டவுடன் இரண்டு இடங்களிலிருந்தும் எதிர்ப்பு வந்திருப்பதாகவும் அதனால் பெரிய குழப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட வதந்தி வருவதால் மக்களிடத்தில் அதிருப்தி வளர்ந்து வருகிறது. இது சம்பந்தமாக விவகாரங்கள் என்ன ? அதை சட்டசபையின் முன்பு வைத்து விவாதிக்க சந்தர்ப்பம் கிடைக்காதா ?

12-30 p.m. நமக்குக் கிடைக்கக்கூடிய தகவலை வைத்துக்கொண்டு பேசக்கூடிய நிலையில் இருக்கிறேன். எந்த ஏற்பாடாக இருந்தாலும் இன்றிருக்கக்கூடிய ஜில்லா விஸ்தீர்ணத்தை அப்படியே வைத்துக்கொண்டு அதிக்கப்படியான அதிகாரிகளை நியமித்தால் போதுமான பலன் ஏற்படாது என்பதுதான் நமது அனுபவம். ஜில்லா கலெக்டரைப் பார்க்கவேண்டுமென்றால் 15 நாட்களுக்கு மேல் காத்திருந்து ஒரு நாள் காண வேண்டியிருக்கிறது. கலெக்டர்கள் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. சுற்றுப் பிரயாணம் செய்வது தவறு என்று நான் சொல்லவில்லை. மக்களிடையே



நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களுடைய குறைகளைத் தெரிந்து தீர்ப்பதற்குச் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டியது அவசியம்தான். ஆனால் நீண்ட நாட்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டே இருந்தால் அது அவசியம் இல்லையென்பதுதான். இன்று இவ்வளவு அதிகமான நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்தும்கூட ஜில்லாவின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்ல முடிவதில்லை. அவர்கள் ஒரு மாதத்தில் பல கூட்டங்களிலும், கமிட்டிகளிலும் கலந்துகொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. ஜில்லா நிர்வாகத்தில் இன்று தரம் குறைந்திருப்பதோடு, திறமையும் குறைந்திருக்கிறது. ஜில்லா நிர்வாகம் சீர்பட ஜில்லா விஸ்தீர்ணத்தைப் பிரிக்க வேண்டியது அவசியம். மேலும் தாலூகா மட்டத்தில் அதிகாரிகளின் அந்தஸ்தை உயர்த்த வேண்டியது அவசியம். தாசில்தார்களைக் "கெஜடெட்" ஆபீசர்களாக ஆக்கிவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் என்று ஜில்லா கலெக்டருக்கும் தாலூகா ஆபீசருக்கும் இடையில் ஒரு தபால் ஆபீஸ் வேண்டியதில்லை. ஒவ்வொரு தாலூகாவுக்கும் ஆர்.டி.ஓ. அந்தஸ்தில் அதிகாரிகளை நியமித்து அவர்களுக்கு உதவி செய்ய தாசில்தார் அந்தஸ்தில்—என்ன பெயர் கொடுத்தாலும் சரி—அதிகாரிகளை நியமித்து அவர்களுக்குப் போதிய அதிகாரத்தையும் கொடுக்கவேண்டும். ஆனால் ரெவினியூ இன்ஸ்பெக்டர் என்று கூறி அதிகாரத்தைக் கொடுத்து அந்த வேலையில் லோயர் டிவிஷன் கிளார்க்கைப் போடக்கூடாது. பெயரையும் கொடுத்து போதுமான அதிகாரத்தையும் கொடுத்தால் தான் தாலூகா நிர்வாகம் சீர்பட முடியும். தாலூகா ஆபீஸ்களில் இருக்கக்கூடிய குமாஸ்தாக்களுக்கோ தாசில்தார்களுக்கோ தாங்கள் செய்யக்கூடிய வேலையில் உற்சாகம் இருக்கிறதா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. ஒரு டிபுடி தாசில்தார் என்னிடம் சொன்னதைக் கேட்டேன். அவர் டிபுடி தாசில்தாராக வேலை பார்த்து வந்தாலும் கூட பர்மனென்ட் ஆக்கப்படவில்லையாம். லோயர் டிவிஷன் கிளார்க்கில்கூட பர்மனென்ட் ஆக்கப்படவில்லையாம். லோயர் டிவிஷன் கிளார்க் போஸ்டிலும் டெம்பரரி, அப்பர் டிவிஷன் க்ளார்க் போஸ்டிலும் டெம்பரரி, தாசில்தார் போஸ்ட்டும் டெம்பரரி. இன்று ஒரு இடத்தில் இருப்பவன் நாளைக்கு எந்த இடத்தில் இருப்பான் என்று சொல்ல முடியாது. தாலூகா ஆபீஸ்களில் வேலை பார்க்கிற உத்தியோகஸ்தர்களிலும் பலர் பெரும்பாலும் டெம்பரரியாகத்தான் வைக்கப்பட்டிருக்கின்றனர். ஏன் இவ்வாறு டெம்பரரியாகவே வைத்துக்கொண்டிருக்கவேண்டும்? மேலே இருக்கக்கூடிய மந்திரி சபை துரிதமாக முடிவுகளை எடுக்காமல் இருப்பது போலவே கீழே இருக்கின்ற இலாகாவிலும் காரியங்கள் நடக்கின்றன. ரெவினியூ டிபார்ட்மெண்டில் இருக்கிற செக்ரடரியில் இருந்து கீழே இருக்கிற கலெக்டர் வரை எது நிச்சயம் என்று தெரியாமல் துரிதமாக நடவடிக்கை எடுக்காததன் காரணமாகப் பல குமாஸ்தாக்கள் டெம்பரரியாகவே வைக்கப்பட்டிருக்கின்றனர். அடிக்கடி மாறுதல்கள் ஏற்படுகின்றன. குறைகளை எடுத்துச் சொன்னேன். குறைகளுக்குக் காரணம் போதுமான குமாஸ்தாக்கள் இல்லாதது தான்; தாலுகா ஆபீஸ்களுக்கு வரக்கூடிய காகிதங்களைப் பதிவு செய்யும் முறை இல்லாதது ஆகியவைகள். ஜில்லாக் காரியாலயங்களில் வரக்கூடிய காகிதங்களைத் தேடிக் கண்டு பிடிக்கவாவது முடிகிறது. ஆனால் தாலூகா ஆபீஸ்களிலோ காகிதங்கள் எப்பொழுது வந்தது? எங்கு போயிற்று என்றே தெரிவதில்லை. இதைப் [illegible]ாக்க போதுமான குமாஸ்தாக்களை நியமித்து வருகிற காகிதங்களைப் பதி[illegible] செ[illegible]யச் [illegible]சால்ல வேண்டும். மேலும் அங்கு பணியாற்றுபவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வசதி மிக்க குறைவானது. இன்னும் அங்கு பங்கா இழுக்கும் ஆளைப் போட்டுக் கொண்டு பங்கா இழுக்கச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கெஜடெட் ஆபீசர்களுக்குத் தான் "எலெக்டிரிக் பான்" போடலாம்; நான் கெஜெடெட் ஆபீசர்களுக்கு "எலக்டிரிக் பான்" போடக்கூடாது என்று சொல்லுகிறார்கள். "பானுக்கும்" அதிகாரிகளுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இந்த விஷயத்தில் என்.ஜி.ஓக்கள், கெஜடெட் ஆபீசர்கள் என்று பாகுபாடு செய்வது தவறு. அங்கு வேலை செய்யக்கூடியவர்களுக்கு நல்ல முறையில் வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் அவர்கள் நன்றாக வேலை செய்ய முடியும்.

[Sri M. Kalyanasundaram] [11th March 1959

அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்து நல்ல முறையில் வேலை வாங்க வேண்டும். இதைப் பற்றி எல்லாம் இந்த சபையில் இருக்ககூடிய எல்லாக் கட்சிகளின் அபிப்பிராயங்களையும் அறிந்து கொண்டு தீர்மானம் செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சிகளெல்லாம் ஒத்துழைக்கவேண்டும், ஒத்துழைக்க வேண்டும் என்று ஆட்சியாளர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்க் கட்சிகளின் கருத்துக்களை ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்னாலேயே கேட்டு அறிகிறார்களா என்றால் இல்லை. இந்தச் சபையில் இருக்கக் கூடிய கட்சிகளின் அபிப்பிராயங்களைக் கேட்டு சம்பளக் கமிஷன் நியமிப்பார்கள் என்று எதிர் பார்த்தேன். ஆனால் அது மாதிரி செய்யவில்லை. ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் காரியத்தைச் செய்து விட்டு அவர்கள் செய்யக்கூடிய முறையில் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள் சம்பளக் கமிஷனோ, அல்லது வேறு எந்தக் கமிட்டியோ நியமித்தாலும் தங்கள் இஷ்டம் போல் செய்து விட்டு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அல்லது ஒத்துழைக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். இது சரியல்ல.

நமது சர்க்கார் சம்பளக் கமிஷனை நியமிப்பதற்கு முன்பே எதிர்க் கட்சிகளைக் கலந்திருந்தால் நாங்கள் யோசனைகள் கொடுத்திருக்க முடியும். அந்தச் சம்பளக் கமிஷன் பிரச்னைகளை எந்த முறையில் அணுக வேண்டும்; முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி எங்கள் யோசனைகளைக் கூறி இருக்க முடியும். இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் இந்தச் சம்பளக் கமிஷனில் இருக்கக்கூடிய 3 மெம்பர்களும் ஐ.சி.எஸ். ஆபீசர்கள். ஒருவர் ஜட்ஜாக இருக்கலாம். அவரும் ஐ.சி.எஸ்.தான். தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஒருவர்கூட இதில் சேர்க்கப்படவில்லை. எதிர் கட்சிகளைக் கேட்டிருந்தால் இதுபற்றி யெல்லாம் யோசனைகளைக் கூறி இருக்க முடியும். "டர்ம் ஆப் ரெபரன்ஸ்" இந்த சபையின் முன் வைக்கப்படவில்லை. எல்லாம் தங்கள் இஷ்டம் போல் செய்து கொண்டு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும் என்று சொன்னால் அது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. இந்தச் சம்பளக் கமிஷன் என்.ஜி.ஓ. பிரச்னைகளை மட்டுமின்றி கிராமத்தில் இருக்கக்கூடிய கணக்கப்பிள்ளை, மணியக்காரர் ஆகியவர்களுடைய வேலைமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான விசாரணையையும் செய்ய வேண்டும் என்று நாங்கள் யோசனை கூறி இருக்க முடியும். இப்பொழுதும் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சம்பளம் சம்பந்தமான விஷயங்களைப் பற்றி மட்டும் பரிசீலனை செய்தால் போதாது. வேலைமுறை நிர்வாக அமைப்பு ஆகியவைகள் எல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் பரிசீலனை செய்து பார்த்தால் மிகவும் உபயோககரமாக இருக்கும். சம்பளத்தைக் பற்றி மட்டும் பரிசீலனை செய்வது, அதுவும் என்.ஜி.ஓ.க்களுக்கு மட்டும் பரிசீலனை செய்வது என்பது சரியல்ல என்கிற யோசனையையும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அதோடுகூட அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே இருக்கக் வேண்டிய தொடர்பு ஓரளவு நல்ல முறையில் இருக்க மந்திரிகள் உதாரணமாக இருக்க வேண்டும். அரசியலைக் கொண்டு போய் நிர்வாகத்தில் புகுத்தக்கூடாது. மாணவர்களிடையே அரசியலைப் புகுத்தக்கூடாது என்று—தங்களைப் பாதிப்பதால்—கூறுகிற அவர்கள் கிராம அதிகாரிகளைத் தங்களுடைய அரசியல் சுய நலத்திற்கு—தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை—பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது பற்றிய பல சம்பவங்களை நான் கொண்டு வர முடியும். அமைச்சர்கள் நேரடியாகச் செய்யாமல் இருக்கலாம். அமைச்சர்கள் சார்ந்துள்ள கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த மாதிரி நடந்து கொள்ளுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட அதிகாரிகள் அவர்களை மதிக்கவேண்டுமென்ற உணர்வைப் பெறவேண்டும்.



11th March 1959] [Sri M. Kalyanasundaram]

சிறு சேமிப்பு திட்டத்தைப் பற்றி நிதியமைச்சர் கூறும்போது பஞ்சாயத்து ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து கட்டாயப்படுத்தி வசூல் செய்வதில்லை என்ற வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்கள் வாக்குறுதி தந்த முறையில் இன்று இருக்கிறதா? பஞ்சாயத்தில் இருந்து வசூல் செய்யக்கூடாது என்பதல்ல என் கருத்து. ஆனால் அவர்கள் கையாளுகிற முறை என்னவென்று பார்க்க வேண்டும். பரமக்குடி பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுக்கு சம்மன் அனுப்புகிறார்கள். பரமக்குடி பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுக்கு............

நேராய் ஆஜராக ரிவினியூ சம்மன்.

பரமக்குடி தாலூகா, பரமக்குடி கிராமத்திலிருக்கும் பஞ்சாயத்து பிரசிடெண்டுக்கு இப்பொழுது நம்முடைய முன்பாக நடந்து கொண்டிருக்கிற ரெவினியூ விசாரணையில் சாக்ஷியஞ் சொல்லவும், இதனடியிற் கண்ட தஸ்தாவேஜுக்களை ஆஜர் செய்யவும் நீர் ஆஜராக வேண்டியது அவசியமாக இருக்கிறபடியால் இதனால் உமக்கு கட்டளை இடுகிறதென்னவென்றால் :—சிறு சேமிப்புக்கு வசூல் செய்யும் விஷயமாக 1959-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 26-ம் தேதி காலை 10 மணி நேரத்திற்கு பரமக்குடி கவர்ன்மெண்டு தாலூகா ஆபீசில் நம்முன்பாக ஆஜராக வேண்டியது. நம் உத்திரவு கொடுக்கிற வரையிலும் மேற்குறித்த இடத்தை விட்டுப் போகக் கூடாது.

1959-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ம் தேதி நம்முடைய கையொப்பமும் முகரும் போடப்பட்டது.

(Sd.) P. RATHINAM
தாசில்தார், பரமக்குடி.

முத்திரை.

இப்பேர்ப்பட்ட தாசில்தார்களை நம்பியிருந்தால் நம்முடைய சிறு சேமிப்புத் திட்டம் வெற்றி பெறுமா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே போன்று சேலம் ஜில்லாவில் உள்ள ஓமலூர் தாலூகா தாசீல்தாரைப்பற்றி நான் எழுத்திலேயே புகார் செய்திருக்கிறேன். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவரை அழைத்து மக்களுடைய முன்னிலையிலேயே மரியாதைக் குறைவாகப் பேசி, அவர் 300 ரூபாய் தருகிறேன் என்று ஒத்துக்கொண்டபோதுகூட "இது போறுதுடா, ஆயிரம் ரூபாய் கொடேண்டா" என்பதாக கண்டபடி பேசியிருப்பதைப் பற்றி நான் ஏற்கெனவேயே புகார் அனுப்பியிருக்கிறேன். சிறு சேமிப்புத் திட்டத்தை எதிர்க்கட்சிக்காரர்கள் யாரும் எதிர்க்கவில்லை. ஆனால் சுமுகமான முறையில் வசூல் செய்யவேண்டும். கொடுக்கச் சக்தியுள்ளவர்களிடத்திலும் கூட நிர்ப்பந்தம் இல்லாத முறையில் வசூலிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. அதை விட்டு இந்த மாதிரி முறையைப் பின்பற்றினால் வெற்றி ஏற்படாது என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பல அங்கத்தினர்கள் பேசினார்கள். பல பிரச்சினைகள்—சின்ன பிரச்சினைகள் எல்லாம் கூடச் சொல்லப்பட்டன. ஆகையால் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லவேண்டுமென்றால் எனக்குக் கொடுத்திருக்கிற காலத்திற்குள் சொல்ல முடியாது. ஆகையால் பெரிய பிரச்சினைகள் முதலில் எடுத்துக்கொண்டால்—அதைப் பற்றி எவ்வளவு சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லுகிறேன். பாக்கியுள்ளவற்றுக்குப் பதில் சொல்லாது விட்டு விட்டால் அதற்கு நான்

ரெஸ்பான்ஸிபிள்—ஜவாப்தாரி அல்ல என்று சொல்வேன் (மிஸ்டர் ஸ்பீக்கர். —மந்திரி அவர்கள் 45 நிமிஷம் கேட்டார்கள். அதற்கு மேலேயே நேரம் இருக்கிறது.) மேலே இருக்கிற மூன்று நிமிஷங்களில் எவ்வளவு சொல்ல வேண்டுமோ அதைச் சொல்ல நான் தயார்.

முதல் பிரச்சினை நிலப்பிரச்சினைதான். இந்தப் பெரிய பிரச்சினையைப் பற்றியோ நாம் சில ஆண்டுகளாக இங்கே விவாதம் செய்கிறோம். அதோடு சில நிலச்சீர்திருத்தங்களையும் செய்திருக்கிறோம். குறிப்பாக விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்ற முறையில் கல்டிவேடிங் டெனண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் (பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்) இயற்றப்பட்டிருக்கிறது. நியாயமான ஊதியமும் கிடைக்கவேண்டுமென்று (பேர் ரெண்ட் ஆக்ட்) நியாய வாரச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படி இரண்டு கட்டம் முடிந்திருக்கிறது. மூன்றாவது கட்டமாக உச்ச வரம்பு நிர்ணயிப்பது ஆலோசனையில் இருக்கிறது. இதைப் பற்றி நாம் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கும் விஷயத்தில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது இரண்டு விஷயம். ஒன்று இந்தச் சீர்திருத்தம் (சோஷலிஸ்டிக் பாடர்ன்) பொதுவுடைமை என்ற முறையில் இருக்க வேண்டும் என்பது. இரண்டாவது உணவு உற்பத்தி அதனால் பாதிக்ககூடாது, அதிகமாக வேண்டும். இந்த இரண்டு விஷயத்தையும் இந்த மூன்றாவது கட்டத்து சீர்திருத்தத்தைச் செய்ய நினைக்கும்போது நாம் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அதிலும் பத்திரிகைகளில் இதைப் பற்றி பலவிதமாகச் சொல்லப்படுகிறது. நான் படிக்கிற காலத்தில் ஷேக்ஸ்பியர் வொர்க்ஸ்க்கு பலவிதமான அனொட்டேஷன் சொல்வார்கள். ஒரு வார்த்தைக்குப் பத்துப் பதினைந்து விதமாக இருக்கும். அவைகளை நாங்கள் படிக்க வேண்டியதாகவும் இருக்கும். அவர் என்ன கருத்தில் எழுதி வைத்துவிட்டுப் போனாரோ தெரியாது. அவர் செத்துப் போய்விட்டார். ஆனால் ரெவினியூ மினிஸ்டர் உயிரோடு இருக்கிறார். அவர் சொன்னதற்கு யார் எப்படி வியாக்யானம் செய்தாலும்—சொன்னதற்கு அவரே விளக்கம் கொடுக்க முடியும். அதோடு பத்திரிகையில் எப்படி எண்ணுகிறார்களோ அப்படிச் சொல்வது மாத்திரம் இல்லை. பெரிய கொட்டை எழுத்தில் சில போடுகிறார்கள். அப்படி கொட்டை எழுத்தில் அவர்கள் போடுவது ஒரு அர்த்தத்தைக் கொடுக்கும். உள்ளே படித்துப் பார்த்தால் அது வேறு விதமாகக்கூட இருக்கும். சில தமிழ் பத்திரிகைகளில்தான் இப்படி ஒன்றுக்கு ஒன்று முரணாக வருவது உண்டு. இப்போது நிதானமாக எழுதும் பத்திரிகைகளில் கூட கொட்டை எழுத்தில் சில வருகின்றன—உள்ளே பார்த்தால் வேறு விதமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவம் ஏற்பட்டிருப்பதற்கு நான் வருந்துகிறேன்.

உச்ச வரம்பு என்று நாம் இப்போது சொல்லும்போது நிச்சயமாக இதுதான் அளவு என்று சொல்ல முடியாது. தோராயமாகச் சொல்ல முடியும். குறைந்த அளவு ஒரு ஏக்கரிலிருந்து 100 ஏக்கர் என்றால் 100 ஏக்கரை உச்ச வரம்பு என்பது சரியல்ல. அப்படியே 1 ஏக்கர்தான் உச்ச வரம்பு என்பதும் சரியாக இருக்காது. ஆகையால் எதையோ எழுதி ஜனங்களுக்கு பீதியோ திருப்தியோ, கொடுப்பது என்பது சரியாகாது.

எல்லா நிலங்களையும் ஒரே மாதிரியாகவும் கணக்கு எடுத்துக்கொள்ள முடியாது. ஐந்தாறு தரமாகப் பிரித்து அந்த அந்தத் தரத்திற்கு ஏற்றபடி வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ராமநாதபுரம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் நீர்ப்பாசன வசதி கிடையாது. மானம் பார்த்த பூமி. அதைவிட மோசம் கரடுமுரடான பூமி. அங்கே 80 ஏக்கரா வைத்துக் கொண்டு சாகுபடி செய்கிறவனுக்குக்கூட தஞ்சை ஜில்லாவில் 5 ஏக்கரா வைத்துக்கொண்டிருக்கிறவனுக்கு வரும் வரும்படி கிடைக்காது. ஆகவே உச்ச வரம்பு என்றால் தஞ்சாவூருக்கும் ஒன்று, ராமநாதபுரத்திற்கும் ஒன்று, வடார்க்காட்டுக்கும் ஒன்று என ஒரேவிதமாக வைக்க முடியாது.





ஆகவே நிலத்தின் தரத்தைப் பிரித்து தஞ்சாவூரில் 5 ஏக்கரா உச்ச வரம்பு என்றால் ராமநாதபுரத்தில் அதிக ஏக்கர் உச்ச வரம்பு என்று வைத்தால்தான் பொருத்தமாக இருக்கும். கனம் ராமச்சந்திரன் நூறு ஏக்கரா வைக்கவேண்டும் எனக்கூடச் சொல்வார். ஆகவே இப்படிப் பரிசீலனை செய்யாத வரையில் நாம் இப்போது உச்ச வரம்பு என்ன என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆகவே பத்திரிகைகளில் வரும் கொட்டை எழுத்தைப் பார்த்து திருப்தியோ, பீதியோ கொள்வதில் பயனில்லை. (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்.—நீங்கள் இப்போது கொடுக்கிற விளக்கத்திலேயே இரண்டு மூன்று விதமாக பத்திரிகையில் அபிப்பிராயம் வரலாமே.) திட்டமாக இப்போது என்ன சொல்ல முடியும்? எல்லா ஜில்லாவிற்கும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. தோராயமாகத் தான் இப்போது சொல்கிறேன்.

ஹைதராபாத்தில் இதைப் பற்றி நிதி மந்திரி பேசினார்கள். நிதி மந்திரி சீலிங்கை ஒப்புக்கொள்ளவில்லை. சீலிங் வேண்டாம் என்று சொன்னார் என்று பத்திரிகையில் வந்திருந்ததைப் பார்த்தேன். நிதி மந்திரி பேசியபோது நான் அங்கேயேதான் இருந்தேன். அவர் சொன்னது எல்லாம் என்ன? சீலிங் கொண்டு வந்து விட்டால் உபரி நிலத்தை என்ன செய்வது? யார் யாருக்குக் கொடுப்பது? கொடுத்தாலும் உணவு உற்பத்தி பாதிக்காத அளவுக்கு அவர்களால் சாகுபடி செய்ய முடியுமா? ஒருவனுக்கு 5 ஏக்கர் நாம் கொடுத்தால் அந்த நிலத்தைப் பண்படுத்தி, விதையிட்டு, உரம் போட்டு சாகுபடி செய்யக்கூடிய வசதி அவனிடத்தில் இருக்க வேண்டும். திட்டவட்டமாக அதற்கு ஏற்பாடு செய்துகொண்டு சீலிங் கொண்டு வந்தால்தான் நல்லது என்று சொன்னார். வேறு ஒன்றுமில்லை. ஆனால் என்ன சொல்லுகிறார்கள்—"ஹைதராபாத்திலே அம்மாதிரி பேசினார்கள், ஆனால் நாக்பூரிலே பல்டி அடித்தார்கள் நிதி மந்திரி" என்று. இரண்டு இடங்களிலும் அவர் ஒரே மாதிரியாகத்தான் பேசினார். அவர் சொன்னது—"நல்ல முறையிலே விவசாயம் செய்வதற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்துகொண்டு, அப்பொழுது நிலத்தை பிரித்துக் கொடுத்தால்தான் பிரயோஜனம் இருக்கும், அப்படியில்லாவிட்டால் பிரயோஜனம் இல்லை" என்று சொன்னார்களேயொழிய சீலிங்குக்கு விரோதமாக அவர் சொல்லவில்லை.

(Deputy Speaker in the Chair.)

கண்கூடாகப் பார்க்கிறோம்—சேலம் ஜில்லாவில், ஆத்தூர் தாலுகாவில் 35 ஆயிரம் ஏக்கர் நிலம், நிலம் இல்லாதவர்களுக்கு பிரித்துக்கொடுத்தோம். இப்பொழுது என்ன இருக்கிறது? சரியாக சாகுபடியே ஆகவில்லை. காரணம் என்ன? நிலத்தைப் பெற்றவர்கள் நல்ல முறையிலே காபிடல் போட்டு விவசாயம் செய்யக்கூடிய நிலைமையில் இல்லை. கடன் கொடுத்தோம் மாடு வாங்கிக் கொடுத்தோம். என்ன கொடுத்தும் சரியான முறையிலே விவசாயம் செய்யப்படவில்லை. ஆகையால் இப்பொழுது அதைப்பற்றி பிரச்னை இருக்கிறது. அரசாங்கமே ஏன் அதை புல்டோசர் வைத்து திருத்திக் கொடுத்தபிற்பாடு அவர்களிடத்தில் கொஞ்சம் கொஞ்சமாக செலவு பணத்தை வாங்கிக்கொள்ளலாமே என்று சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் சின்ன அளவிற்கு அசைன்மெண்ட் செய்த 35,000 ஏக்கருக்கு இந்தக் கதி ஏற்பட்டால், பெரிய அளவிலே ' லட்சக்கணக்கிலே நிலம் உபரியாகப் பயிர் செய்யப்படாமல் இருந்தால் உணவு உற்பத்தி என்ன ஆவது. அதுவும் இந்த சந்தர்ப்பத்தில் உணவு உற்பத்திக் குறைந்தால் மிகுந்த கஷ்ட ஏற்படும் என்ற முறையிலே இந்த விஷயத்தில் கொஞ்சம் யோசித்துச் செய்ய வேண்டியிருக்கிறது.

இன்னொரு விஷயம். முன்பு நிலத்தின் விஸ்தீர்ணத்தை ஒட்டித்தான் நிலத்திற்கு உச்ச வரம்பு வைக்க வேண்டுமென்று, அது விஷயமாக மத்திய நிலச் சீர்திருத்தக் கமிட்டியின் யோசனைப்படி, 3,600 ரூபாய்க்கு வருஷத்திலே வருமானம் வந்தால் அந்த அளவிற்கு எவ்வளவு நிலமோ

அதைத்தான் ஒதுக்கி வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதை ஒட்டி மைசூர் மாகாணத்திலே 3,600 ரூபாய் வருஷ வருமான அடிப்படையிலே இவ்வளவுதான் நிலம் என்று வைத்தார்கள். ஆந்திர மாகாணத்திலே 5,400 ரூபாய் என்ற அடிப்படையிலே அவர்கள் அங்கே மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள்.

நாக்பூரிலே என்ன முடிவாயிற்று என்றால்—வருமானமும் மனதிலே இருக்கிறது. வருமான அடிப்படை என்பது போகவில்லை—வருமானம் இல்லையென்றால் அதிக ஏக்கர் வைக்கலாம் என்பது நாக்பூரில் செய்யப் பட்ட திருத்தம். ஏதோ 3,600 ரூபாய் வருகிற வருமானத்தை மனதில் வைத்துக்கொண்டு, 5 ஏக்கர், 10 ஏக்கர், 20 ஏக்கர் என்று வைத்தால் அதன் மூலமாக அவன் கண்டிப்பாக நல்ல முறையிலே—ஜப்பான் முறையிலோ, ரஷ்ய முறையிலோ—விவசாயத்தை செய்து அதிலே அதிகமாக உற்பத்தி செய்து 3,600 ரூபாய்க்கு மேலே பயன் அடையலாம். 10 ஆயிரம் ரூபாய்க்கு மேலே வருமானம் வரக்கூடிய அளவிற்கு உற்பத்தி செய்து காட்டினால் அப்பொழுது இருக்கிற அந்த முறைப்படி, "நீதான் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் அவ்வளவு வருமானம் அடைகிறாயே, 3,600 ரூபாய் வருமானம் வரக்கூடிய அளவிற்கு நிலம் இருந்தால் போதும், ஆகவே உன்னிடத்தில் இருக்கிற நிலத்தில் பாதியைக் கொடுத்து விடு" என்று கேட்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும். ஆனால் இந்த மாறுதலிலே அது இல்லை. நிதானமாகத் தன்னுடைய சுயமுயற்சியினால் உற்பத்தியை அதிகப்படுத்தி எவ்வளவு வருமானம் கிடைக்கிறதோ அதை அவர்களே எடுத்துக் கொள்ளலாம் என்பதுதான் நல்ல முறை. அப்பொழுதுதான் உற்பத்தி செய்வதற்கு இன்செண்டிவ் இருக்கும். பழைய உத்தேச முறைப்படி வைத்தால், அதிக உற்பத்தி செய்ய பிரயாசை எடுத்துக்கொள்ளாதீர்கள். ஜாஸ்தி உற்பத்தி பண்ணினால் பாதி நிலத்தை கொடுத்து விடு, அதுதான் உச்ச வரம்பு என்று அரசாங்கம் கேட்டு வாங்கி விடுவார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டுவிடும். ஆகவே இப்பொழுது கொண்டுவர இருக்கிறது ஒரு நல்ல முறையாகும். ஏதோ நியாயமான வரம்பு என்பதை மனதில் வைத்துக்கொண்டுதான் செய்ய முடியுமே தவிர வருமானத்தையே அனுசரித்து அல்ல, சொந்த பிரயாசையினால் அதிகப்படி உற்பத்தி செய்தால் அதற்குத் தகுந்த ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது ரொம்ப நல்லது என்றுதான் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சோஷலிஸ்ட் பாட்டர்ன் இருக்க வேண்டியது அவசியம்தான். அதோடு உணவு உற்பத்தியும் சேர்ந்திருக்க வேண்டும். சோஷலிஸ்ட் பாட்டர்ன் ஐடியாலஜி கொண்டுவர வேண்டுமென்றாலும் கூட இந்த சந்தர்ப்பத்திலே அதை, உணவு உற்பத்தியை அதிகம் பாதிக்கும்படியாக தப்பிதமாகச் செய்தால் ரொம்ப தப்பாக இருக்கும். அதை மனதில் வைத்துக்கொண்டு இந்த சோஷலிஸ்ட் பாட்டர்ன் என்ற புது முறையை அமைக்கப் பார்க்க வேண்டும். ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்திலே உணவு உற்பத்தி அதிகம் ஏற்படும்படியாக செய்வது மிகவும் அவசியம். இந்த இரண்டையும் மனதில் வைத்துக்கொண்டு இதைப்பற்றிய சட்டம் இந்த வருஷத்திலே வரும். சட்டம் இயற்றிய பிறகு அதை அமுலில் கொண்டு வருவதற்கு உடனடியாக ரூல்ஸ் பிரேம் பண்ணவேண்டும். மற்ற ஏற்பாடுகள் பண்ணவேண்டும். அதன் பிறகு சட்டம் அமுலில் வரக்கூடிய நிலைமை ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிலம் இல்லாதவர்களுக்கு நிலத்தை ஜாரி செய்வது சம்பந்தமாக சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஏதோ ஏராளமாக நிலம் இருப்பது போலவும், அதையெல்லாம் ரொம்ப மெதுவாக கொடுப்பதாகவும், ஏன் சீக்கிரமாக கொடுத்துவிடக்கூடாது என்ற முறையிலே சொன்னார்கள். கொடுக்கக்கூடிய பூமியைத் தான் கொடுக்கலாம்.



இம்மாதிரியான வேஸ்ட் லாண்டை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அஸெஸ்ட் வேஸ்ட், அன்அஸெஸ்ட் வேஸ்ட், புறம்போக்கு லாண்டு. புறம்போக்கு நிலத்தைக் கொடுப்பதில்லை. ஏனென்றால் அவை கால் நடைகளை மேய்ப்பதற்கும், நத்தம் கிராம நத்தம் இவைகளுக்குக் கொடுக்கக்கூடியது. அசெஸ்ட் வேஸ்ட், அன்அசெஸ்ட் வேஸ்ட் இவைகளைக் கொடுக்கலாம். அம்மாதிரி இருக்கும் நிலம் 3,62,000 ஏக்கர்தான் இருக்கிறது என்று புள்ளி விவரம் கூறுகிறது. அதிலே இப்பொழுது கொடுக்கப்பட்டிருப்பது சுமார் 1,62,000 ஏக்கர்; இப்பொழுது வினியோகமாகியிருக்கிறது. இப்படி அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற ஜில்லா சேலம் ஜில்லாவாகும். அங்கே சுமார் 58 ஆயிரம் ஏக்கர் ஜாரி ஆகி இருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் 53 ஆயிரம் ஏக்கரும், வட ஆற்காடு ஜில்லாவில் 12 ஆயிரம் ஏக்கரும், தஞ்சாவூர் ஜில்லாவில் 13 ஆயிரம் ஏக்கரும் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று ஜில்லாக்களிலே கொஞ்சம் அதிகப்படியாக இருக்கிறது. அதற்குப் பிரத்தியேகமாக தாசில்தார்கள், டெபுடி தாசில்தார்கள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் போட்டு அங்கே ஒரு டிரைவ்—சீக்கிரம் செய்யவேண்டுமென்று எங்கெங்கே நிலம் அதிகமாக இருக்கிறதோ அங்கே அது செய்யப்பட்டு வருகிறது. ஆகையால் இந்த முறையிலே இது போனால் சீக்கிரத்தில் மற்ற நிலங்களையும் கொடுக்க முடியும். சிலர் நினைக்கிறார்கள், காலியாக இருக்கும் நிலங்களையெல்லாம் ஏன் கொடுத்துவிடக் கூடாதென்று. ஒரு நிலம் காட்டிலாகாவைச் சேர்ந்ததாக இருக்கலாம். இன்னொன்று டாங்க் பெட் ஆக இருக்கலாம். தண்ணீர் பிடிப்பு நிலமாக இருக்கலாம். இதையெல்லாம் ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்டால், எப்படிக் கொடுப்பது. ஏதோ பார்க்கிற நிலங்களை எல்லாம் ஏன் சும்மா வைத்திருக்கிறார்கள் என்ற முறையில் கேட்டால், கொடுக்கும் நிலத்தைத்தான் கொடுக்கலாமே ஒழிய, எல்லாவிதமான நிலத்தையும் கொடுத்துவிட முடியாது. சில நிலத்தைக் கொடுத்தால் மற்றவர்களுடைய விவசாயம் பாதிக்கப்படும். அதனால் எந்த முறையிலே நல்ல மாதிரியாக எதை எதை கொர்டுக்க முடியுமோ அது கொடுக்கப்பட்டு வருகிறது.

குளம், கோர்வைப்பற்றி முதலிலே பேசிய அங்கத்தினர்கள் சொன்னார்கள் அது ஒரு சிக்கலான பிரச்னை. அது அதிக அளவிலே ராமநாதபுரம் ஜில்லாவில் இருக்கிறது. ஏனென்றால் அங்கே இரண்டு ஜமீன்கள்—ராமநாதபுரம், சிவகெங்கை ஜமீன்கள் இருந்திருக்கின்றன. அதன் ரகசியம் என்னவென்றால் அந்தக் காலத்தில் ஜமீன்தார்கள் நிலத்தை தங்கள் இஷ்டம்போல் யார் யாருக்கோ கொடுத்துவிட்டதினால் அவர்கள் அதிலே சாகுபடிசெய்து அனுபவித்து வருகிறார்கள். நீர்ப்பிடிப்பு நிலமானாலும்சரி, டாங் பெட் ஆனாலும்சரி பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். பட்டா இல்லாமலும் அங்கே சாகுபடி செய்துக்கொண்டு வந்திருப்பவர்களும் உண்டு. ஆனால் இப்பொழுது சர்வே செட்டில்மெண்ட் செய்யப்படும் போது எது எது கொடுக்கப்படக்கூடாது என்று சொல்லுகிறார்களோ அதைக் கொடுக்கக்கூடாத முறையில் அவர்களுக்கெல்லாம் பட்டா கொடுக்க முடியவில்லை. "நாங்கள்தான் ஜமீந்தாரிடம் பட்டா வாங்கியிருக்கிறோமே, இந்த செட்டில்மெண்ட் வந்து உபத்திரவம் கொடுக்கிறதே என்று சொல்லுகிறார்கள். அதற்காக கொஞ்சம் விதியைத் தளர்த்தி உத்திரவுகள் போடப்பட்டிருக்கிறது. நீர்ப்பிடிப்பாக இருந்தாலும்கூட மூன்று வாரத்திற்கும் அதற்குள்ளாகவும் இருந்தால் அதைக்கூட கொடுக்கலாம், மேலும் ஒரு மாதம் இரண்டு மாதம் இருந்தால் கொடுக்கக்கூடாது என்றும் உத்திரவு போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி நீர்ப்பிடிப்பிலே சாகுபடி செய்கிறவர்கள், அந்த நிலத்தை அதற்குமேலே இருக்கும் ஏரியிலே 'வெட்' என்று கொடுத்திருந்தால் அதைக்கூட அனுமதிக்கலாம். ஏனென்றால் ஏற்கெனவே இன்னொரு ஏரியின் கீழே 'வெட்' என்று இருப்பதால் அதைக்கூட கொடுக்கலாம் என்று விதியைத் தளர்த்தியிருக்கிறோம். அந்த வகையிலே அரசாங்கம் கூடுமானவரை ஜனங்களுக்கு அதிக தொந்தரவு

[Sri M. A. Manickavelu] [11th March 1959

இல்லாமல் எந்தெந்த பகுதியிலே கொடுக்கமுடியுமோ அதைக்கொடுக்க
ஏற்பாடு செய்துகொண்டுதான் வருகிறது என்று நான் சொல்ல விரும்பு
கிறேன்.

1 பருவ மழை சரியாகப் பெய்யாதது பற்றி கனம் அங்கத்தினர்கள்
p.m. குறிப்பிட்டார்கள். குறிப்பாக, ராமநாதபுரம் ஜில்லா, வட ஆற்காடு ஜில்லா,
தென் ஆற்காடு ஜில்லா, திருச்சி ஜில்லா, உடையார்பாளையம் தாலுகா,
அரியலூர் தாலுகா இவைகள் குறிப்பிடப்பட்டன. தென் ஆற்காட்டைப்
பொறுத்தவரையில், அங்கே வரி வஜா செய்ய உத்திரவு போடப்பட்டி
ருக்கிறது. கள்ளக்குறிச்சி தாலுகா, வெல்லிங்டன் ரிசர்வாயர் இவை
சம்பந்தமாக வரிவஜா செய்து உத்திரவு போடப்பட்டிருக்கிறது. மற்ற
ஜில்லாக்களைப் பொறுத்தவரையில், சில தகவல்கள் வந்த பிறகு அவசிய
மான உத்திரவுகள் போடப்படும். கூடியசீக்கிரம் திருச்சி, வட ஆற்காடு,
ராமநாதபுரம் இந்த ஜில்லாக்களுக்கும் இந்தச் சலுகை அளித்து
உத்திரவுகள் போடப்படும்.

அடுத்தபடியாக, கிராம அதிகாரிகளின் சம்பளம் குறைவாக இருக்கிறது
என்றும், அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும்,
என்.ஜி.ஒ.-க்களுக்கு இப்போது அளிக்கப்பட்ட ஊதிய உயர்வு அவர்களுக்கு
அளிக்கப்படவில்லையே என்றும் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள்.
கிராம அதிகாரிகள் பார்ட் டைம் உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள்
என்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் சர்க்காரின் முழு நேர
ஊழியர்கள் அல்ல. அவர்களுடைய உத்தியோகம் "ஆனரரி" உத்தி
யோகம் மாதிரி இருக்கிறது. எனவே அவர்களுக்கு சம்பளமும் "ஆன
ரேரியம்" மாதிரித்தான் கொடுக்கிறோம். கர்ணம்களுக்கு அதிக வேலை
கள் இருக்கின்றன. கிராம ஹெட்மென்களுக்கு அவ்வளவு அதிக வேலை
கள் இல்லை. ஆனால் அவர்களுக்கு கிஸ்தி வசூல் காலங்களில் அதிக
வேலைகள் இருக்கும். மற்ற காலங்களில் அவர்களுக்கு அதிக வேலைகள்
இல்லை. மற்றபடி அவர்களுக்கு இதர வேலைகளும் இருக்கின்றன. தேசீய
விஸ்தரிப்புத் திட்டங்கள் போன்ற திட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டு வரும்
நிலையில் அவை சம்பந்தப்பட்ட வேலைகளும் அவர்களுக்கு வருகின்றன.
எனவேதான் அவர்களுடைய சம்பளத்தை இரண்டு வருடங்களுக்கு முன்பு
அதிகப்படுத்தியிருக்கிறோம். அவர்களுக்குப் பிரயாணப் படி (டி.ஏ.) கொடுக்
கிறோம். மேலும் இப்போது அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்விச்
சலுகைகள் அளித்திருக்கிறோம். இவர்களுடைய பிரச்னைகளை நன்றாக
ஆராய வேண்டும். அதற்காக ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறோம்.
இவர்களை முழு நேர உத்தியோகஸ்தர்களாக என் நியமிக்கக்கூடாது
என்பது அக் கமிட்டியின் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஒன்று
சொல்ல விரும்புகிறேன். முன்பு கிராம உத்தியோகஸ்தர்களுடன் கலந்து
ஆலோசிப்பதற்காக ஒரு கூட்டம் போட்டோம். தங்கள் உத்தியோக நியமன
முறையில் இப்போதுள்ள முறையே (ஹெரிடிடரி ஸிஸ்டமே) தொடர்ந்து
இருக்க வேண்டும், ஆனால் தங்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க
வேண்டும் என்று தமிழ் நாட்டு கிராம உத்தியோகஸ்தர்கள் சொல்லுகிறார்கள்.
ஆனால் கேரளா பகுதிகளிலுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள், ரெவின்யூ
இன்ஸ்பெக்டர்கள், க்ளார்க்குகள் இவர்களைப் போல் தாங்களும் முழு
நேர ஊழியர்களாக நியமிக்கப்படுவதுடன் அவர்களுக்குக் கொடுக்கப்படு
வதைப்போல் தங்களுக்கும் அதிகமாகச் சம்பளம் கொடுக்கப்படவேண்
டும் என்றும், தங்களுக்கும் லீவ், அலவன்ஸ், பென்ஷன் ஆகிய சலுகை
கள் அளிக்கப்படவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களை
முழு நேர உத்தியோகஸ்தர்களாக நியமிப்பது சம்பந்தமாகவும் அவ்வாறு
அவர்களை நியமிப்பதானால் என்ன என்ன மாறுதல்களையும் ஏற்பாடுகளை
யும் செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாகவும் இப்போது பரிசீலனை
செய்யப்பட்டு வருகிறது. அதாவது பென்ஷன், லீவ், அலவன்ஸ், ரிஸெர்வ்
ஆபீசர்கள் முதலிய விஷயங்கள் சம்பந்தமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.
முழுநேர ஊழியர்களாக அவர்களை நியமித்தால் அவர்களுக்கு அளிக்கப்





11th March 1959] [Sri M. A. Manickavelu]

படும் கிராமங்களின் எண்ணிக்கையை மாற்ற வேண்டும். இப்போது ஒரு
கிராமத்திற்கு ஒரு கிராம முன்சீபும், ஒரு கர்ணமும் இருக்கும் முறையில்
அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முழு நேர ஊழியர்களாக இவர்
களை நியமித்தால் இந்த விகிதத்தை மாற்ற வேண்டும். அப்போது
இரண்டு கிராமங்களைச் சேர்த்து ஒரு முன்சீபிடம் கொடுக்க வேண்டும்.
கர்ணத்திற்கு நிறைய வேலைகள் இருந்தாலும், கிராம முன்சீபிற்கு ஒரு
கிராமம் மட்டும் கொடுத்தால் அவருக்குள்ள வேலை மிகக் குறைவாக
இருக்கும். ஆகவே அவர்களை முழு நேர ஊழியர்களாக மாற்ற வேண்டு
மானால் அப்போது இரண்டு கிராமங்களை ஒன்றாகச் சேர்க்க வேண்டியது
அவசியமாக இருக்கும்.

SRI K. ANBAZHAGAN: தஞ்சாவூர், சேலம், திருச்சி ஆகிய
மூன்று மாவட்டங்களிலும் இப்போதே கிராமக் கர்ணங்களுக்கு பரம்பரை
பாத்தியம் இல்லை. இவர்கள் "பார்ட் டைம்" ஊழியர்களாக இருந்தா
லும், இவர்களுக்கு பரம்பரை பாத்தியம் இல்லாமல் இருப்பதாலும், இவர்
களுக்கு வேலைகள் அதிகமாக இருப்பதாலும், இவர்களுக்கு இப்போது
அளிக்கப்படும் 30 ரூபாய் சம்பளம் குறைவானது என்று கருதி இவர்
களுடைய சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் திட்டமிடுமா ? இவர்களுக்கு
பரம்பரை உரிமை இல்லை என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

*THE HON. SRI M. A. MANICKAVELU: நமது மாநிலத
தில் இப்போது சில ஜில்லாக்களில் இவர்களுக்கு பரம்பரை உரிமை இல்லை
என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இவர்களுக்கு பரம்பரை உரிமை
இல்லை என்ற ஒரு வித்தியாசத்தைத் தவிர, மற்றெல்லா விஷயங்களிலும்
இவர்கள் பரம்பரை உரிமையுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் இருக்கும்
நிலையில்தான் இருக்கிறார்கள். இந்தப் பிரச்னைகள் எல்லாம் ஆராயப்
பட்டு கூடியசீக்கிரம் முடிவு எடுக்கப்படும். இவர்களை என்.ஜீ.ஒ.-க்களுடன்
சேர்க்காததற்குக் காரணம் என்னவென்றால், என்.ஜீ.ஒ.-க்கள் முழு நேர
சர்க்கார் ஊழியர்கள், ஆனால் இவர்கள் பகுதி நேர (பார்ட் டைம்) சர்க்கார்
ஊழியர்கள். மேலும், இவர்களை நியமிக்கும் முறை எவ்வாறு இருக்க
வேண்டும் என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. இப்போது இவர்கள்
பரம்பரை பாத்திய முறையில் நியமிக்கப்படுகிறார்கள். எனவே இப்போ
துள்ளபடியே இவர்களை என்.ஜி.ஒ.-க்களுடன் சேர்த்தால் "க்ளாஷ்"
வரும். இப்போது இது சம்பந்தமாக நியமிக்கப்பட்டுள்ள கமிட்டி பிரச்னைகளை
முக்கால்வாசி ஆராய்ந்துவிட்டது. கூடிய சீக்கிரத்திலேயே இது சம்பந்தமாக
ஏதாவது முடிவு எடுக்கப்படும்.

அடுத்தபடியாக, ஜில்லாப் பிரிவினைகள் பற்றி இங்கே பேசப்பட்டது.
ஜில்லாப் பிரிவினைகள் இப்போது அவசியம் என்று தெரிந்துதான் இந்தத்
திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கோயம்புத்தூர், தஞ்சாவூர்,
சேலம், திருச்சி ஆகிய நான்கு ஜில்லாக்களில் முதலில் பரீட்சார்த்தமாக
ஏற்பாடுகளைச் செய்து பார்த்து அதற்குப் பிறகு மற்ற இடங்களில் இத்
திட்டத்தை விஸ்தரிக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறோம். சில பிரச்
னைகள் வருகின்றன. முதலில் ஒரே இடத்திலேயே இன்னொரு ஹெட்
குவார்டர்ஸை வைத்து ஒரு அடிஷனல் கலெக்டரை நியமிக்கலாம் என்று.
ஆனால், அப்படிச் செய்தால் என்ன பிரயோஜனம் என்று தோன்றுகிறது.
பிரித்து வைத்தால் அதிகாரிகள் சுற்றிவருவதற்கும் சௌகரியமாக இருக்
கும். இதர விஷயங்களுக்கும் சௌகரியமாக இருக்கும். ஆகவே ஹெட்
குவார்டர்ஸை ஒரே இடத்தில் வைக்கலாமா அல்லது பிரித்து இரண்டு
இடங்களில் வைக்கலாமா என்பதையெல்லாம் ஆராய்ந்து முடிவுசெய்ய
வேண்டும். இது போர்டு மெம்பர்களால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இன்னும்
ஒன்றும் முடிவு செய்யப்படவில்லை. திட்டங்களையெல்லாம் நன்றாக நிறை
வேற்றுவதற்காக, ஜில்லாக்களைப் பிரிக்க வேண்டும். இப்போது அபி
விருத்தி வேலைகள் நிறைய இருக்கின்றன. எனவே ஜில்லாப் பிரிவினைத்
திட்டத்தை கூடிய சீக்கிரம் நிறைவேற்ற வேண்டிவரும்.

கடிதங்களுக்குப் பதில்கள் வருவதில்லை என்றும் பதில்கள் காலா காலத்தில் அனுப்பப்பட வேண்டும் என்றும் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். கடிதங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று பொதுப் பிரச்னைகள் பற்றி எழுதப்படும் கடிதங்கள். இரண்டாவது "அது, இது" சிபார்சு என்று சொல்லி எழுதப்படும் கடிதங்கள். இரண்டாவது வகைக் கடிதங்களுக்கு பதில் கொடுக்க முடியாது. பொது விஷயங்கள் சம்பந்தமாக வரும் கடிதங்களைப் பொறுத்தவரையில் அவைகளை ஆராய்ந்து பார்த்த பிறகு பதில் அனுப்பப்பட வேண்டும் என்று கனம் அங்கத்தினர்கள் விரும்புகிறார்களா அல்லது "அக்னாலெட்ஜ்" என்று எழுதினால் போதும் என்று கனம் அங்கத்தினர்கள் நினைக்கிறார்களா? "ஐ அக்னாலெட்ஜ்" என்று எழுதுவது போதாது. ஏராளமான பெட்டிஷன்கள் வருகின்றன. அவைகளில் பெரும்பாலானவற்றிற்கு கட்டாயம் பதில் அனுப்புகிறோம். அவைகளுக்கு இன்னும் துரிதமாக பதில் அனுப்புவதற்கு முயற்சி செய்யலாம் என்று நினைக்கிறேன்.

எஸ்டேட் காம்பென்ஸேஷன் விஷயமாக கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். அந்த வேலை துரிதமாகச் செய்யப்படவில்லை என்றும் அது சம்பந்தப்பட்ட சட்டம் 1948-ல் ஏற்பட்டது என்றும் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். இப்போதுள்ள 4,820 எஸ்டேட்டுகளில் மொத்தம் எடுத்துக் கொள்ளப்பட்டவை 4,782. ஆக 38 தான் இன்னும் எடுததுக்கொள்ளப்படவில்லை. காரணம் லீகல் சிக்கல்களும் கோர்ட்டு சிக்கல்களும் இருக்கின்றன. இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அட்வான்ஸ் காம்பென்ஸேஷன் மொத்தம் 3·22 கோடி ரூபாய் "இண்டெரிம் பேமெண்டாக" கொடுக்கப்பட்டது மொத்தம் 1·23 கோடி ரூபாய் இருக்கும் 11,066 சதுர மைல்களில் மொத்தம் ஸர்வே செய்யப்பட்டது 10,588 சதுர மைல்கள். ஆக இன்னும் ஸர்வே செய்யப்படாதது மொத்தம் 478 சதுர மைல்கள்தான். ஸெட்டில்மெண்ட் பீல்ட் ஆபரேஷன்கூட இதுவரையில் 9,802 சதுர மைல்கள் ஆகியிருக்கின்றன. இதற்கு பீல்ட்மென், ஸர்வே பார்டி முதலியவைகள் எல்லாம் வேண்டியிருக்கின்றன. இவைகளை யெல்லாம் போட்டு இந்த மாநிலத்தில் இந்த வேலைகளை துரிதமாகச் செய்து வருகிறோம். ஸர்வே அனேகமாக முடிந்ததாகக் கருதலாம். "பீல்டு ஆபரேஷன்ஸ்" ஆகிவிட்டது. செட்டில்மெண்டு இனிமேல் நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. அதுவும் 2, 3 வருஷங்களில் முடிந்துவிடும் என்று நினைக்கிறேன்.

மேலும் அவர்களுக்கு உரிய மொத்த காம்பென்ஸேஷன் இன்னும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. அநேக "கிளைமண்ட்ஸ்" இருக்கிறார்கள்: சில சமயங்களிலே கொடுக்க வேண்டிய "காம்பென்ஸேஷன்" குறைவாக இருக்கலாம். முதலில் பணம் அதிகமாக கொடுத்துவிட்டால், பிறகு திருப்பி வாங்குவது கஷ்டமாக இருக்கும். அவர்களுக்கு ஓரளவுக்கு அட்வான்ஸ் காம்பென்ஸேஷன் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஜீவனத்திற்காக "இண்டரீம் பேமெண்டு" வருஷா வருஷம் கொடுக்கப்படுகிறது. ஆகவே காம்பென்ஸேஷன் கொடுக்கும் வேலை சட்டப்பிரகாரம் நல்ல முறையில் நடந்து கொண்டுவருகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறிய பட்டாதாரர்களுக்கு நில வரியை ரத்து செய்துவிடவேண்டுமென்று சொல்லப்பட்டது. சிறிய பட்டாதாரர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ரூ. 15-க்குள் வரி கொடுக்கக்கூடிய பட்டாதாரர்கள்தான் 100-க்கு 80 பங்கு இருக்கிறார்கள். அவர்களுடைய வரியை ரத்து செய்துவிடுவது என்றால மொத்த நில வரியையே ரத்து செய்துவிடலாம். ஏனென்றால் அவர்கள் மூலம்தான் பெரும்பகுதி வருமானம் வருகிறது. அந்த அளவுக்கு நில வரியை விட்டுக்கொடுப்பது என்றால் நம்முடைய நிதி நிலைமை அதிகம் பாதிக்கப்படும். மேலும் சிறிய பட்டாதாரர்களுக்கு நிலவரி கிடையாது என்று சொன்னால் இன்னும் மேலும் மேலும் நிலத்தைப் பிரித்துவிடு





வார்கள். "பிராக்மெண்டேஷன்" அதிகமாகப் போகும். ஆகவே இந்த இரண்டு காரணங்களுக்காக இம்மாதிரி நில வரியை ரத்து செய்வதற்கில்லை. மேலும், இப்பொழுது நாம் எவ்வளவோ புதிய திட்டங்களைப் போட்டிருக்கிறோம். அந்த சமயத்தில் இந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டு ஏதாவது நிவாரணம் கொடுக்கவேண்டுமென்றால், அது திட்டங்களைப் பெரிதும் பாதிக்கும். அநேக காலமாக நில வரியை ஒரு கடமை என்ற முறையில் மக்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நில வரி கொடுப்பதில் நம்முடைய ஜனங்கள் பழகி விட்டார்கள். ஏதோ விற்பனை வரி போன்ற வரியைக் கொடுப்பதற்கு வேண்டுமானால் கொஞ்சம் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆனால் நில வரி ரொம்ப நாளாய் "ஸ்டெபிலைஸ்" ஆகி விட்டது. நிலம் இருந்தால் வரி கொடுக்க வேண்டுமென்ற பழக்கத்துக்கு வந்துவிட்டார்கள். யாரும் சாதாரணமான சமயத்தில், சாதாரணமாக மகசூல் கிடைக்கக்கூடிய சமயத்தில் வரி கொடுக்க கஷ்டப்பட மாட்டார்கள். மழை சரியாக பெய்யாவிட்டால், மகசூல் கிடைக்காத சமயத்தில் வேண்டுமானால் வரி கொடுப்பதற்கு கஷ்டப்படுவார்கள். ஆனால் அம்மாதிரி காலங்களில் வரி வஜா, "ஸ்பெஷல் ரெமிஷன்" போன்ற சலுகைகளை அரசாங்கம் வழங்குவதற்கு முன்வருகிறது.

அடுத்தபடியாக, ரெவின்யூ நிர்வாகத்திற்கு இவ்வளவு செலவாகிறதே என்று சொன்னார்கள். சுமார் 6 கோடி ரூபாய் வருமானத்தில் $2\frac{1}{2}$ கோடி அல்லது 3 கோடி ரூபாய் செலவாகிறதே என்று கூறினார்கள். வருமானத்தில் 50 சதவிகிதம் ஏன் செலவு செய்யவேண்டுமென்று கேட்டார்கள். ரெவின்யூ நிர்வாகம் வரி வசூல் செய்வதற்கு மாத்திரம் அல்ல. எல்லா டிபார்ட்மெண்டும் எதற்கும் ரெவின்யூ டிபார்ட்மெண்டு தலை மேல் தான் உட்காருகின்றன. எல்லாவற்றிற்கும் கலெக்டர், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள்தான் போகவேண்டியிருக்கிறது. அம்மைக் குத்துவது, அம்மை குத்திக்கொள்ளாதவர்களைப் பிடித்துத் தருவது எல்லாவற்றிற்கும் வில்லேஜ் ஆபீஸர்கள்தான் போகவேண்டியிருக்கிறது. யாராவது கிணற்றில் விழுந்து விட்டால், தலையாரிதான் போகவேண்டியிருக்கிறது என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். அது வாஸ்தவம்தான். ஒருவர் தூக்குபோட்டுக்கொண்டால், தலையாரிதான் முதலில் போகவேண்டியிருக்கிறது. இந்தத் தலையாரியைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. அவர்தான் "லோயஸ்டு ஆபீஸர்". வில்லேஜ் ஆபீஸர்கள் மீது நிறைய புகார்கள் வருகின்றன. அவர்கள் பணத்தைச் சாப்பிட்டு விட்டார்கள், ஸ்மால் ஸேவிங்ஸ் பணத்தைச் சாப்பிட்டுவிட்டார்கள் என்று புகார்கள் சொல்லப்படுகிறது. ஆனால் தலையாரி பேரில் ஒரு விதமான குற்றம் சொல்லப்படுவதில்லை. அவரிடம் 1,000, 2,000 ரூபாய் பணம் கொடுத்தால் கூட அப்படியே ஜாக்கிரதையாக எடுத்து கஜானாவில் கட்டுகிறார்கள். அவர்கள் பணத்தைச் சாப்பிடுகிறார்கள் என்ற புகாரே கிடையாது. அந்த விதத்தில் பார்க்கும்பொழுது, என்ன தெரிகிறது என்றால், ரொம்ப எளிய நிலையில் இருப்பவர்கள் நல்லவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. (சிரிப்பு.) அவர்களை நான் இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டுகிறேன்.

**Sri A. GOVINDASAMY:** அவர்கள் சம்பளத்தை 5 ரூபாயாவது உயர்த்திக் கொடுங்களேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU:** அவர்கள் பிள்ளைகள் இப்பொழுது இலவசமாக படிக்கலாம். வில்லேஜ் ஆபீஸர்கள் சம்பளத்தை அதிகரித்தபொழுது, அவர்களுக்கும் கொஞ்சம் சம்பளம் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

அடுத்தபடியாக கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பைபற்றியெல்லாம் கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். கோர்ட்டு பீஸைப்" பொறுத்தவரையில், இரண்டு வருஷங்களுக்கு முன்பு நன்றாகப் பரிசீலனை செய்து அதை திருத்தினோம்.

[Sri S. Lazar] [11th March 1959

சொல்லப்பட்டது. அதன் பின்னாலும் அதைப்பற்றி சொல்லப்பட்டது. அதன் நிலைமை இப்போது எப்படியிருக்கிறது என்பதை தெரிவிக்கவேண்டுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்குரிய காலத்தில் அந்தப் பிரச்னையைப்பற்றி கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்பற்றி இப்போது பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. அதன் பேரில் முடிவு எடுக்கப்பட்டதும் அந்த முடிவின் பிரகாரம் அமல் செய்யப்படும்.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether our Government are negotiating with the Kerala Government to abolish the 'Maniamkaram' tax, and whether any Bill has been forwarded by the Kerala Government to this Government for opinion ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மணியங்கரம் பண்டாரவகை, பாட்டம், திருப்புவாரம் என்றெல்லாம் பல முறைகள் இருக்கின்றன. இது ஒரு சிக்கலான முறை. இதைப்பற்றியுள்ள ரிப்போர்ட்டை அனுப்பியிருக்கிறார்கள். அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இன்னும் கொஞ்ச காலத்திற்குள் இதற்கு ஒரு முடிவு எடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

That the allotment of Rs. 1,69,96,800 under Demand I—Land Revenue Department—be reduced by Rs. 100.

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 1,69,96,800 under Demand I—Land Revenue Department.

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is—

That the allotment of Rs. 19,26,100 under Demand III—Stamps Administration—be reduced by Rs. 100.

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 19,26,100 under Demand III—Stamps Administration.

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is—

That the allotment of Rs. 4,04,66,800 under Demand XII—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100.

The cut motion was put and lost.



11th March 1959]

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 4,04,66,800 under Demand XII—District Administration and Miscellaneous.

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is—

That the allotment of Rs. 55,00,000 under Demand XXXIV—Compensation to Zamindars—be reduced by Rs. 100.

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 55,00,000 under Demand XXXIV—Compensation to Zamindars.

The Demand was put and carried and the Grant was made.

1-28 p.m.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. STATUTORY ORDERS, RULES AND NOTIFICATIONS.

104. *Notification issued with G.O. Ms. No. 266, Home, dated 29th January 1959, exempting Motor Car MSX 3996 belonging to the Consul of France in India from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931. [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

105. *Notification issued with G.O. Ms. No. 284, Home, dated 31st January 1959, exempting Motor Car MSX 3353, belonging to French Trade Commissioner from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931. [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

## APPENDIX I.

[Vide answer to starred question No. 642 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 11th March 1959, page 3 supra.]

(a) *and* (b) During the first eleven months of 1958, 763,866 births and 369,867 deaths were recorded in the Madras State The figures for December 1958 have not yet been compiled.

(c)—

| *Age group.* | *Number of deaths recorded during January to November 1958.* | | |
|---|---|---|---|
| | *Males.* | *Females.* | *Total.* |
| (1) | (2) | (3) | (4) |
| Under one year .. .. | 42,113 | 36,309 | 78,422 |
| One and under five years .. .. | 36,833 | 33,165 | 69,998 |
| Five and under ten years .. .. | 8,121 | 8,029 | 16,150 |
| Ten and under fifteen years .. | 3,843 | 4,095 | 7,938 |
| Fifteen and under twenty years .. | 4,201 | 5,703 | 9,904 |
| Twenty years and above .. .. | 90,160 | 97,295 | 187,455 |
| Total .. | 185,271 | 184,596 | 369,867 |



## APPENDIX II.

[Vide answer to starred question No. 961 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 11th March 1959, page 4 supra.]

*Potters' Co-operative Societies functioning in the Tirunelveli district.*

| *Serial number and name of the Potters' Co-operative Society.* | *Place of location.* | *Functioning from* | *Financial assistance provided.* | | | | *Remarks.* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | *For purchase of equipments.* | | *Sales establishment.* | *Working capital.* | |
| | | | *Grant.* | *Loan.* | *Grant.* | *Loan.* | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | RS. | RS. | RS. | RS. | |
| 1 Thenpothai Potters' Co-operative Society. | Thenpothai .. | 15th December 1947. | .. | .. | 1,037 | .. | .. |
| 2 Nellai Potters' Co-operative Soceity. | Nellai .. | 10th December 1947. | 60 | 60 | 536 | 3,000 | Was dormant from 1955 to 1957. Has been revived during the year. |
| 3 Karukurichi Potters' Co-operative Society. | North Karukurichi. | 5th November 1955. | 150 | 150 | 2,227 | 7,000 | .. |
| 4 Urkad Potters' Co-operative Society. | Urkad .. .. | 29th July 1956. | 990 | 990 | 2,049 | 7,000 | .. |
| 5 Kuruvikulam Potters' Co-operative Society. | Kuruvikulam .. | 8th August 1957. | .. | .. | .. | 3,000 | .. |
| 6 Vavenagaram Potters' Co-operative Society. | Vavenagaram, Vadakarai P.O. | 18th September 1957. | .. | .. | .. | 3,000 | .. |
| 7 Perungulam Potters' Co-operative Society. | Perungulam P.O. | 8th March 1958. | .. | .. | .. | 3,000 | .. |

APPENDIX III.

[Vide answer to starred question No. 692 asked by Sri S. Lazar at the meeting of the Legislative Assembly held on 11th March 1959, page 4 supra.]

*(a) The details in brief of the Sugarcane Research Station, Cuddalore.*

Till the partition of Andhra State in 1953, the Sugarcane Research Scheme for the composite State was being worked at Anakapalle with the financial assistance of the Indian Central Sugarcane Committee. Consequent on the partition of the State in 1953, a separate Sugarcane Research Station had to be started to cater to the needs of the residuary Madras State. The Government accordingly ordered in 1955 that the Agricultural Research Station at Palur should be converted into a Central Sugarcane Research Station to carry on research work on sugarcane along with the research work done in respect of paddy, millets, etc.

2. The land available at Palur was subsequently found to be quite inadequate for successful experimentation on sugarcane in all aspects of research. The Government therefore ordered in 1956 the establishment of a full-fledged Central Sugarcane Research Station at Nellikuppam under the Second Five-Year Plan, on a separate compact block over an extent of 100 acres. The Station could not, however, be located anywhere round about Nellikuppam for want of a compact block of about 100 acres. The Station had, therefore, to be located in Vilvarayanatham, near Cuddalore just in the southern bank of the river Pennar, where a compact block of over 100 acres comprising of different soil types with adequate sub-soil water representing Nellikuppam cane tract was available. The proximity to the district headquarters was another important factor that contributed to its selection.

3. The Station was opened on 17th March 1957 with an area of 77·56 acres taken on lease in the first instance. An extent of 136·19 acres have since been acquired and handed over to the Agriculture Department. All the important trials on sugarcane research such as varietal, manurial, cultural, nutrition trials, trials to control pests and diseases, etc., were laid out in the first year. More experimental plantations were laid out in 1958–59 season. Now that the entire area of 136·19 acres for permanent location of the Station has been acquired, all the trials will be laid out as per programme in 1959–60 season, when the new area is expected to be reclaimed. Foundation stone for the construction of residential and non-residential buildings have been laid and the construction of these buildings is expected to be taken up shortly.



*(b) The nature of research to be carried on at the Central Sugarcane Research Station, Cuddalore.*

The new varieties received from the Sugarcane Breeding Institute, Coimbatore, will be tested under normal conditions of irrigation and manuring for selection of suitable varieties for the tract. Tests on quality of gur obtained from different varieties and from different manurial treatments will be undertaken to prescribe the best varietal and manurial schedules for gur making. Experiments on graded dose of nitrogen, phosphorus, potash, bulky organic and green manures will be conducted to prescribe the correct dosage of chemical and bulky organic manures and the right time of application to obtain the maximum return. Irrigation experiments to determine the correct amount of irrigation to be given to Sugarcane, time of planting to fix up the right time of planting of different varieties and harvest, cultural and chemical control of weeds, propping trials to prevent canes from lodging, foliar fertilization of cane, analysis of plant tissue and soil to determine the nutrition required for the crop, etc., and trials to control pests and diseases are undertaken at this Station.

*(c) How it is proposed to make use of the knowledge obtained by research.*

By having the results of the above items of research, it would be possible to prescribe the correct time of planting different varieties, the varieties to be grown in different soils, the optimum quantity of manure to be applied at right time, irrigation and cultural schedules to be adopted in cane cultivation and right time of harvest to obtain better return. By adoption of the improved methods, the cost of cultivation of sugarcane can be reduced and the production increased per unit area. The adoption of the improved methods based on results of research is expected to improve the national wealth. To a certain extent, the rural economic condition would be bettered by taking to the improved methods as the operation in cane fields are spread out throughout the year.

*(d) The steps taken to make this station serve the needs of the sugarcane areas in the State.*

This being the main station with the two sub-stations, one in Tiruchirappalli (Kumaramangalam) and another in North Arcot (Gudiyatham) district, steps will be undertaken to study problems which cannot be undertaken at the sub-stations for want of adequate facilities there. The fundamental work on several aspects of sugarcane will be confined to this station only. However, results of such trials that are of State-wide importance will be utilized for laying out further experiment at the sub-stations and the zonal farms which are situated at the respective sugarcane growing pockets in the State. This being the headquarters of the Sugarcane Specialist who directs research at these centres, problems relating to different areas are being considered by him while designing experiments for different stations and certain problems which are of State-wide importance are also investigated at the main station.

## APPENDIX VI.

[Vide answer to starred question No. 709 asked by Sri A. Govindasamy at the meeting of the Legislative Assembly held on 11th March 1959, page 18 supra.]

*Amounts allotted for concessional sale of pesticides in 1958-59.*

| | *Name of the District Agricultural Officer.* | *Amount allotted within the monetary limit Rs. 15,000 as per G.O. No. 2458, dated 14th August 1957.* | *Additional amount sanctioned by Government over and above Rs. 15,000.* |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | RS. | |
| 1 | District Agricultural Officer, Pattukkottai .. | 15,000 | Rs. 10,000. (G.O. Ms. No. 3989, Food and Agriculture, dated 6th December 1958.) |
| 2 | District Agricultural Officer, Tanjore | 15,000 | Rs. 10,000. (G.O. Ms. No. 3800, Food and Agriculture, dated 19th November 1958 and G.O. Ms. No. 4100, Food and Agriculture, dated 16th December 1958.) |
| 3 | District Agricultural Officer, Mayuram | 15,000 | Rs. 10,000, (G.O. Ms. No. 3990, Food and Agriculture dated 6th December 1958. |
| 4 | District Agricultural Officer, Villupuram .. | 15,000 | .... |
| 5 | District Agricultural Officer, Madurai .. | 15,000 | .... |
| 6 | District Agricultural Officer, Kumbakonam. | 15,000 | Rs. 10,000. (G.O. Ms. No. 35- Food and Agriculture dated 5th January 1959.) |
| 7 | District Agricultural Officer, Tiruchirappalli (North). | 15,000 | Rs. 10,000 applied for and sanction of Government awaited. |
| 8 | District Agricultural Officer, Tiruchirappalli (South). | 15,000 | .... |
| 9 | District Agricultural Officer, Vellore | 10,000 | .... |
| 10 | District Agricultural Officer, Tirunelveli (South). | 15,000 | .... |
| 11 | District Agricultural Officer, Erode .. | 15,000 | Rs. 12,400. (G.O. Ms. No. 4267, Food and Agriculture, dated 31st December 1958. |
| 12 | District Agricultural Officer, Polur | 10,000 | .... |
| 13 | District Agricultural Officer, Coimbatore .. | 15,000 | Rs. 10,000. (G.O. Ms. No. 1, Food and Agriculture, dated 2nd January 1959.) |
| 14 | District Agricultural Officer, Dindigul .. | 10,000 | .... |
| 15 | District Agricultural Officer, Tirunelveli (North). | 10,000 | .. |



## APPENDIX VII.

[Vide answer to starred question No. 710 asked by Sri M. Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 11th March 1959, page 19 supra.]

Investigations on the remedial measures for betelvines against a widespread disease called wilt are in progres in the Madras State. The present position is indicated below :—

(1) *Trials to test the efficacy of various fungicides in controlling the wilt disease of betelvine.*—Bordeaux mixture was found comparatively better than the other treatments in controlling the disease although, in unusually severe cases of infection, no difference could be noticed between treated and untreated plots.

(2) *Varietal trials.*—Both the varieties of this tract namely 'Pachai Kodi' and 'Karpuri Kodi' were found to be susceptible to the wilt disease caused by the fungus Phytopthora sp. and the branch wilt caused by a bacterium.

(3) *Cultural trials on spacing and irrigation.*—No large difference could be observed between the different treatments.

(4) *Manurial trials.*—It was found that nitrogenous fertilizers tended to increase the incidence of the disease.

(5) *Grafting studies.*—Wilt pepper plants were collected from Kodaikanal hills and Yercaud and are grown in pots. They were tested for their resistance to diseases before grafting. Betelvine was grafted on wild pepper rootstocks. The successful grafts are under observation.

Betelvine seed vines obtained from Malabar have been planted in pots to observe their resistance to the wilt disease.

2. The expenditure incurred during the current year up to January 1959 is Rs. 6,287.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 12th March 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Re-employment of retired Health Officers*

* 646 Q.—SRI A. VEDARATHNAM (on behalf of Sri M. D. Thiagaraja Pillai) : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நம் மாகாணத்தில் எத்தனை ஓய்வு பெற்ற சுகாதார ஆபீஸர்கள் மறுபடியும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் ?

(ஆ) சுகாதார இன்ஸ்பெக்டர்கள் சங்கத்திலிருந்து தங்கள் உத்தியோக உயர்வு சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஏதாவது கோரிக்கைகள் வந்திருக்கிறதா ?

(இ) அந்த கோரிக்கைகளின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) 21.

(b) Yes, Sir.

(c) The representations are receiving the attention of the Government.

SRI S. M. ANNAMALAI : இந்த சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கு "டிரஸ்" கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி ஹெல்த் ஆபீஸர்களைப் பற்றியது. ஹெல்த் இன்ஸ்பெக்டர்களைப் பற்றியது அல்ல.

### *District Health Officer for Kanyakumari District*

MR. SPEAKER : The hon. Member (Sri Daniel) is not in his seat. The question and answer will be printed in the official proceedings.

* 647 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government propose to appoint a District Health Officer in Kanyakumari district; and

(b) if not, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) The volume of Public Health work in Kanyakumari district does not justify the appointment of a separate District Health Officer for that district.

[12th March 1959

Mr. SPEAKER : நீங்கள் படிக்கக் கூடாது. கேள்வி கேளுங்கள்.

Sri S. S. RAMASAMY PADAYACHI : பொது இடங்களிலோ, கடைகளிலோ, நிர்வாகிகளாக இருந்து நடத்தும் பொது பணிமனையிலோ ? அமைக்கக் கூடாதென்று சர்க்கார் அறிக்கை விடுவதற்கு அமைச்சர் முயற்சிப்பாரா என அறிய விரும்புகிறேன் ?

Mr. SPEAKER : நீங்கள் சொல்வது என்ன வென்று எனக்கு கேட்கவே இல்லை.

Did the Hon. Minister hear it?

*Panchayat Courts in the North Arcot District*

* 722 Q.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Panchayat Courts in the North Arcot district, talukwise, together with their places of location?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Two copies of the statement showing the number of Panchayat Courts in the North Arcot district, taluk-wise and indicating their places of location, have been placed in the Legislature Library for reference by the Members of the Legislature.

Sri V. K. KOTHANDARAMAN : நீதியும், நிர்வாகமும் ஒருவரிடத்தில் இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டது. அந்த அடிப்படையிலே வேறு வேருக அமைக்கப்படுமா ? அதற்கு எவ்வளவு நாள் செல்லும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கிராமப் பஞ்சாயத்து சட்டம் புதியதாக இந்த மன்றத்திலே இயற்றப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அந்தச் சட்டப்படி பழைய முறையிலே பஞ்சாயத்து கோர்ட்டுக்கள் தேர்ந்தெடுக்கப்பட மாட்டாது. இரு வித பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கள் இருக்கின்றன. இந்தச் சட்டம் அமுலுக்கு வருவது முதற்கொண்டு அது மாற்றப்படும்.

Sri G G. GURUMURTHI : புது பஞ்சாயத்துச் சட்டப் பிரகாரம் பஞ்சாயத்துப் போர்டு கேஸ்களை விசாரிக்கக்கூடிய அதிகாரம் இல்லை. அப்படி இல்லாத இடங்களிலே தனியாக பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு தான் நடவடிக்கை எடுக்கப்படும்.

*Prize scheme for teachers*

*723 Q.—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கக் கல்வி இலாகா ஏற்படுத்தியிருக்கும் ஆசிரியர் பரிசுத் திட்டத்திற்கு நம் மாநிலத்தில் பரிசுக்குரிய ஆசிரியர்கள் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டுவிட்டனவா ?

(ஆ) இல்லையானல் எப்போது செய்யப்படும் ?

(இ) இப் பரிசுத் திட்டத்திற்கு ஆசிரியர்கள் எந்த அடிப்படைக் கொள்கையின் பேரில் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள் ?



12th March 1959]

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) Does not arise.

(c) On the basis of—

(i) the Teachers' reputation in the local community,

(ii) the Teachers' Academic efficiency and the desire for its improvement,

(iii) the Teachers' genuine interest in and love for Children, and

(iv) the Teachers' share in Social life and activities.

Sri A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம் ஆசிரியர்களுடைய கவனத்தை நல்ல உயர்ந்த லட்சியங்களை நோக்கித் திருப்புவதற்காகவும், அவர்களுடைய தொழிலிலே அவர்கள் அக்கரை உள்ளவர்களாக, சிறந்தவர்களாகத் திகழும்படிச் செய்யவும் நம்முடைய மாநில சர்க்கார் இத்தகைய பரிசுத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பரிசுகள் அதிகமாகிவிட்டால் அதற்கு ஒரு மதிப்பு இல்லாமல் போய்விடும். பரிசுகள் குறைவாக இருந்து, அதைத் தகுதியுடையவர்கள் பெறும்போதுதான் அதற்கு ஊக்கமும் ஏற்படுகிறது. ஆகையினுல் இங்கேயும் அம்மாதிரி பரிசுகள் வைக்க வேண்டிய அவசியமில்லை. வேறு முறையில் அவர்களை ஊக்குவிப்பதற்கு முயற்சி செய்யலாம்.

*Construction of sluices for irrigation tanks*

* 724 Q.—Sri M. A. B. ARUMUGHASAMY (on behalf of Sri V. Arunachala Thevar): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether sluices are constructed for the irrigation tanks of Kummukulam, Pappankulam, Chettikulam and Palankulam in Narangampatti village, Vizthoor vattam, Kolathur taluk; and

(b) if they are not already provided for with sluices, when the Government propose to do the same?

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) & (b). All the four tanks are provided with pot sluices. The construction of masonry sluices for all of them has been taken up during the current financial year and is expected to be completed by 31st March 1959.

Sri V. SUBBIAH : குளம், ஏரி இவைகளை மராமத்து செய்யும்பொழுது, அவைகளுக்கான கலிங்கல், வாய்க்கால் போன்றவைகளையெல்லாம் சேர்த்து மராமத்து செய்யும்படி உத்தரவு இடப்பட்டிருக்கிறதா ? அல்லது குளத்தை மட்டும் ரிப்பேர் செய்துவிட்டு, அதனுடைய வாய்க்கால், கலிங்கல் போன்றவைகளை எல்லாம் ரிப்பேர் செய்யாமல் விட்டுவிடுவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி பதில், அதாவது, ஸ்லூயிஸைப் பற்றியது. இதற்கு முன்னுல் சாதாரண முறையில் கட்டப்பட்டிருந்ததை இப்பொழுது நல்ல சுண்ணும்பு கட்டிடமாகக் கட்டப்படுகிறது. மற்றப்படி ஏரி ரிப்பேர் செய்யும்பொழுது எல்லாவற்றையும் சாதாரணமாகக் கவனிக்கலாம்.

பெரும்பாலும் பொள்ளாச்சி, தாராபுரம், பல்லடம் முதலிய தாலுகாக்கள் வசதி பெறும். எத்தனை எக்கர்கள் பாசன வசதி பெறும் என்று இப்போது சொல்வதற்கில்லை.

SRI A. A. RASHEED: May I know, Sir, whether the Union Government and the Kerala Government will bear the cost of construction of this project?

THE HON. SRI P. KAKKAN: நமக்குப் பலன் கிடைக்கப்போவதால் இதற்கு நாம்தான் செலவு செய்ய வெண்டும்.

SRI N. R. THIAGARAJAN: இந்த அணைக்கட்டு கட்டினாலும் அது போக மீதி தண்ணீர் கேரளத்தில் வீணாக சமுத்திரத்தில் போய்த்தான் விழும் என்று சொல்லப்படுவது வாஸ்தவமா? அப்படியானால் இதைத் தடுத்து நிறுத்துவதற்காக வேறு ஒரு அணைக்கட்டு கட்டுவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா? அவ்விதம் அணை கட்டுவதாக இருந்தால் இப்போது வரண்ட பிரதேசமாக இருக்கும் பழனி போன்ற தாலுகாக்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியுமா என்பதைப் பற்றியும் அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN: கோயம்புத்தூர் ஜில்லாவில் பல தாலுக்காக்களும் இதனால் நன்மை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதைக்கொண்டு வேறு வேறு தாலுகாக்களுக்கு பயன்படுத்த முடியாது. வேறு ஏதாவது அணைக்கட்டுகள் கட்டுவதாக இருந்தால் அதன் மூலம் தண்ணீர் வசதி வேறு இடங்களுக்குக் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி பின்னால்தான் ஆலோசனை செய்ய வேண்டும்.

SRI A. GOVINDASAMY: இந்தப் பரம்பிக்குளம் திட்டத்தை நடத்துவதற்கு ஏற்படுகின்ற செலவு பூராவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுமா?

THE HON. SRI P. KAKKAN: தற்போது அது முடியாத காரியம்.

SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, பரம்பிக்குளம் திட்டத்திலிருந்து பொள்ளாச்சி தாலுகாவுக்கு இரண்டாயிரம் கூடுதலான எக்கர்களுக்கு பாசன வசதி ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் பொள்ளாச்சி தாலுகாவில் அதிகமான அளவில் பாசன வசதி கிடைக்கும் என்று சொல்லும்போது மற்ற மூன்று தாலுக்காக்களுக்கு குறைவான அளவிலேயே பாசன வசதி கிடைக்கும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே இவ்விதம் இல்லாமல் எல்லோருக்கும் தகுந்த ரீதியில் பாசன வசதி கிடைப்பதற்காக இப்போது இரண்டு அணைகளாக கட்டவேண்டும் என்று திட்டமிட்டிருப்பதை மாற்றி ஒரே அணையாக இணைத்துக் கட்டினால் எல்லா தாலுகாக்களுக்கும் பாசன வசதி கிடைக்கும் என்று தெரிகிறது. ஆகவே இவ்விதம் அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN: இந்தப் பரம்பிக்குளம் திட்டத்திலிருந்து எந்த முறையில் தண்ணீர் விநியோகம் செய்யவேண்டுமென்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலாக இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை. இன்னும் கூடுதலாகத் தண்ணீர் கிடைப்பதற்கு வேறு ஏதாவது வழிகள் உண்டு என்றால், அதைப்பற்றியும் பின்னால் ஆலோசனை செய்யலாம்.

SRI A. A. RASHEED: Sir, may I know whether the excavation work has commenced this year?

THE HON. SRI C. SUBRAMANIAM: Only investigation is being done now. And some preliminary works also are being undertaken.



SRI A. R. SUBBIAH MUDALIAR: நவம்பர் மாதம் இதற்காக பேச்சு வார்த்தைகள் நடைபெற்றபோது, வேறு ஆறுகளைப் பற்றியும், பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI P. KAKKAN: வேறு பல காரியங்களைப் பற்றியும் பேசியிருக்கலாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இது இன்னொரு ராஜ்யத்துடன் நடத்துகிற பேச்சு வார்த்தைகள், இதைபற்றி எல்லாம் அரசாங்கம் தான் முடிவு செய்ய வேண்டும். அதோடு இம்மாதிரிப்பட்ட பேச்சு வார்த்தைகளில் பல விஷயங்கள் பேசியிருக்கலாம். அதில் சிலவற்றைத்தான் வெளியில் தெரிவிக்க முடியும். சில காரியங்களை வெளியில் தெரிவிக்க முடியாமலும் இருக்கலாம். ஆகவே நம்முடைய ராஜ்யத்தின் நன்மையைக் கருதி இதைப்பற்றி அதிகமான கேள்விகள் கேட்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Merkanam National Extension Service Block*

* 728 *Q*.—SRI M. JAGANNATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total amount spent up to 31st March 1958 in the Merkanam National Extension Service Block in the South Arcot district; and

(*b*) the details of the works executed up to 31st March 1958?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The total amount spent in the Merkanam Block up to 31st March 1958 was Rs. 77,568–37 nP. (both loan and non-loan).

(*b*) The following were the items of works executed in the Block up to the quarter ended 31st March 1958:—

(i) Portions of road works at Vittalapuram and Kovadi villages.

(ii) Construction of a school for Harijans.

SRI M. JAGANNATHAN: Sir, may I know whether this sum includes the amount spent on establishment?

THE HON. SRI C. SUBRAMANIAM: It includes the amount on establishment also.

SRI M. JAGANNATHAN: Are the Government aware of the fact that the execution of works in Merkanam National Extension Service Blocks is not progressing in proportion to the amount spent there?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I think in April 1957 this block was included. The hon. Member asked the question relating to the amount only up to 31st March 1958. In the initial stages, there is some delay, because the preparations have got to be made. I do not have the figures with me with reference to the current year.

SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, இந்த மரக்கோணம் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஆதி திராவிட மக்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு வருவதாகச் சொல்லப்பட்டது. இதனுடைய செலவை அரசாங்கமே ஏற்றுக்கொண்டதா, அல்லது அங்குள்ள ஆதி திராவிட மக்களிடமிருந்துதான் வ்சூலிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப் பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. சாதாரணமாக ஹரிஜனங்களுக்கு எந்த முறையில் பள்ளிக்கூடம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறதோ அந்த முறையில் இதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## *A murder case*

* 729 *Q*.—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether some persons were prosecuted in Mangampalayam, Thondamuthur firka, Coimbatore taluk, on a charge of murdering one Ponnuswamy of the same village during 1956;

(*b*) whether the case against them was withdrawn by the Police during 1957 when it was pending in Sessions; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir.

(*c*) Does not arise.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்த பொன்னுசாமி கொலை செய்யப்பட்டதாக யார் யார் மீது எல்லாம் வழக்குத் தொடரப்பட்டிருந்தது? இந்த வழக்கினுடைய முடிவு என்ன ஆயிற்று ? 1957-ல் வாபஸ் வாங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது, அதற்கு பின்னாலாவது வழக்கு வாபஸ் பெறப்பட்டதா ? அவ்விதம் வாபஸ் பெறப்பட்டது என்றால் என்ன காரணத்திற்காக வாபஸ் பெறப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொன்னுசாமி என்கின்ற பெயரில் எப்போதும் கேஸ் வாபஸ் வாங்கப்படவில்லை. 1957-ல் வேறு ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்விதம் பதிவு செய்யப்பட்ட கேஸில் உட்பட்டிருந்த தொண்டதேதூர் பிர்க்காவைச் சேர்ந்த மங்கலபாளையத்தைச் சேர்ந்த பெரியதுரை அல்லது துரைசாமி என்பவர் இறந்து போய்விட்டார் என்ற காரணத்திற்காக வாபஸ் பெறப்பட்டது. அதன் பின்னால் இறந்து போனவர் உயிரோடு இருக்கிறார் என்ற செய்தி கிடைத்தது. இதில் சரியானபடி நடவடிக்கை "எடுக்காத காரணத்திற்காக போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மீதும் போலீஸ் டிஸ்ட்ரிக்ட் சூப்பரின்டென்டெண்ட் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM :—

MR. SPEAKER : After the Hon. Minister's reply, I do not know what exactly the hon. Member is going to ask.

SRI M. KALYANASUNDARAM : இறந்தவருடைய மனைவியும், மாமியாரும் அவர் இறக்கவில்லை, உயிரோடு இருக்கிறார் என்று கூறியும் வழக்கு தொடரப்பட்டதென்பது உண்மையா ?

MR. SPEAKER : That is another case. The hon. Member is asking about an entirely different case.



THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுதான் நான் சொன்னேன். உயிரோடு இருந்தவரை இறந்ததாக கேஸ் போட்டு நடவடிக்கை எடுத்ததற்காக குறிப்பிட்ட உத்தியோகஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

MR. SPEAKER : I cannot allow any more supplementaries. If the hon. Members want to refer to other cases, let them put separate questions.

## *Crimes*

* 730 *Q*.—SRI A. A. RASHEED (on behalf of Sri M. P. Sarathi) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த ராஜ்யத்தில் கிரிமினல் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டு வருவது உண்மையா ?

(ஆ) குற்றங்களைப் புலன் கண்டுபிடிக்கப் போதிய பயிற்சி பெற்ற நிபுணர்கள் இருக்கிறார்களா ?

(இ) குற்றங்கள் அதிகரிக்காமல் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir. On the other hand during recent years crime has been progressively decreasing.

(*b*) Yes, Sir.

(*c*) Scientific methods of investigation and the study of footprints and finger-prints are employed. Whenever there is increase in crime and cases are frequently reported in particular areas, action in border Police stations is co-ordinated and special parties are drafted from different stations to comb the areas simultaneously. The Police Radio network and the Dog Squad are made use of, wherever possible.

SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, மதுவிலக்குக் குற்றங்களும் கிரிமினல் குற்றத்தில் சம்பந்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எல்லாம் குற்றங்கள்தான்.

SRI A. A. RASHEED : Is there any proposal to license private firm for detective work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal Sir.

SRI A. GOVINDASAMY : மது விலக்குக் குற்றங்கள் கிரிமினல் குற்றத்தில் வருகிற காரணத்தினால், மதுவிலக்கு குற்றங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால் மதுவிலக்குக் குற்றவாளிகளைப் பிடிக்க போலீஸ் நாய்களை உபயோகிக்க அரசாங்கம் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸ் நாய்கள் சில சமயங்களில் அதற்குக் கூட உபயோகப்படுத்தப்படுகின்றன.

[12th March 1959

SRI K. B. S. MANI : இந்தக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் இரண்டு மாதங்களுக்கு முன்பு கே. டி. மூர்த்தி என்ற இன்ஸ்பெக்டரால் புதிய முறைகள் சர்க்காருக்கு அனுப்பப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது பற்றி என்னிடம் தகவல் இல்லை.

*Tanjore Headquarters Hospital*

* 731 Q.—SRI M. KALYANASUNDARAM, SRI S. LAZAR AND SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any proposal is under consideration for shifting the Headquarters Hospital at Tanjore to any new site;

(b) if so, what the details of the proposal are; and

(c) when a final decision would be taken?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) & (c) Does not arise.

*Chinnaselam tank*

* 732 Q.— SRI A. GOVINDASAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957–58-ல் சின்னசேலம் ஏரிக்குத் தண்ணீர் வராதக் காரணத்தால் நிலங்கள் எல்லாம் சாவியாகிவிட்டதை அரசாங்கம் அறியுமா ?

(ஆ) ஏரிக்குத் தண்ணீர் வராத காரணம் என்ன ?

(இ) தண்ணீர் தொடர்ந்து வர என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : (a) It has been reported that the area cultivated under the tank during 1956–57 and 1957–58 was as follows :—

| Year | First crop | Second crop |
|---|---|---|
| 1956–57 | 400·02 acres. | 275·84 acres. |
| 1957–58 | 325.92 ,, | 322.97 ,, |

The reduction in cultivation of ayacut under first crop was due to partial failure of north-east monsoon.

(b) The Chinnasalem tank gets its supply from the Mayuranadhi whenever there is adequate rainfall. There was partial failure of north-east monsoon and consequently there was poor flow in the river.

(c) Necessary special repairs to the Chinnasalem tank, silt clearance to the supply channel to the tank and repairs to the Chinnasalem anicut were carried out recentlv. The anicut, supply channel and tank are reported to be fairly in good condition.

SRI A. GOVINDASAMY : வாய்க்கால்கள் தோண்டுகிற காரணத்தினால் ஏரிக்கு வரவேண்டிய தண்ணீர் போதுமான அளவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? ரிப்போர்ட் வந்த பிறகுதான் அந்த வாய்க்கால் பழுதுபார்க்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.



12th March 1959]

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்லி பொது மக்கள் ரிப்போர்ட் வந்த பிறகு ரிப்பேர் செய்யவில்லை. அதற்கு முன்னாலே எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன என்று நினைக்கிறேன். இப்போது நல்ல முறையில் செலவு செய்து ரிப்பேர் செய்திருக்கிறார்கள். இப்போது தண்ணீர் தாராளமாக வருகிறது.

*Gazetted Officers*

MR. SPEAKER : அங்கத்தினர் ஸ்ரீலாஸர் இடத்தில் இல்லாததால் 733 எண்ணுள்ள கேள்வியும், அதற்கான பதிலும் சபையின் விவாதவெளியீட்டில் அச்சிடப்படும்.

(Sri M. K. Somasundaram rose to put the question.)

MR. SPEAKER : I am sorry. The hon. Member is too late.

* 733 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state the number of Gazetted Officers who are themselves converts to Christianity from the Scheduled Castes?

THE HON. SRI C. SUBRAMANIAM : Five officers.

*Wattle plantations in Madurai District*

* 734 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri V. Sankaran) : Will the Hon. the Minister for Home be pleased to State the measures taken to raise wattle plantations in Madurai district and the results expected of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Extensive grass lands of no particular use in the Upper Palnis of Madurai district are being converted into wattle plantations. An area of 4,533 acres has been planted with wattle up to the end of 1956. From 1956–57 to 1958–59, an extent of 2,917 acres has been planted with wattle and it is proposed to plant about 1,400 acres annually with wattle in Madurai district during the remaining period of the second Five-Year Plan. Matured wattle plantation will be felled on a 10 to 12-year rotation and an acre of wattle plantation may yield on an average of about 4 to 5 tons of bark and 20 to 25 tons of air dry wood. While the bark of wattle yields tanning useful for tanning industry, the wood, besides being a good fuel, also yields pulp suitable for paper and rayon industries and also for manufacture of chip boards and fibre boards.

SRI N. R. THIAGARAJAN : கோடைக்கானலில் இன்னும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் வாட்டில் பார்க் பயிர் செய்ய முடியும் என்று கூறுகிறார்கள். இப்போது பயிரிடுவது அதிகமாக இல்லை என்று பொது மக்கள் கூறுவதால் துரிதமாக அதிக லட்ச ஏக்கர்கள் பயிரிட சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு சாத்தியப்படுகிறதோ அந்த அளவு அதிகமாக நிறைவேற்றி வருகிறோம். ஆயிரத்திநானூறு ஏக்கர்கள்அடுத்த ஆண்டில் வாட்டில் செடி வைப்பதாக இருக்கிறது. அதற்கு மேல் வைக்க வேண்டுமானால் அதிலே வேறு சில கஷ்டங்கள் இருக்கின்றன.

*Cattle wealth*

* 735 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கால்நடைகளை வளர்ப்பதற்காக கவர்ன்மெண்டால் நிறுவப்பட்ட கேந்திர கிராமங்களும், விஸ்தரிப்பு நிலையங்களும், ஆட்டுப் பண்ணைகளும் எந்தெந்த இடங்களிலே இருக்கின்றன ?

(ஆ) என்னென்ன கால்நடைகள் மேற்கண்ட இடங்களிலே வளர்க்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) : A statement [a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : ஸார், கால்நடை வளர்ப்புக்காக என்னென்ன உதவிகள் நியூஸிலந்து நாட்டு சர்க்காரிடமிருந்து கிடைக்குமென்று நமது சர்க்கார் எதிர்பார்க்கிருர்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மாதவரத்தில் ஒரு பால் பண்ணை வைக்க ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதற்குத்தான் நியூஸிலந்திலிருந்து உதவி கிடைக்கிறது.

SRI R. SRINIVASA IYER : Considering the all-round improvement in cattle-wealth, will the Government consider the feasibility or necessity of opening key village centres in every district at least where there are Livestock Farms in the districts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : To the extent of availability of funds and availability of technical personnel, this is being taken up.

SRI M. KALYANASUNDARAM : இருக்கிற மாடல் பார்ம்களை எல்லா ஜில்லாக்களுக்கும் சமமாக விநியோகிக்கக்கூடாது. ஒரு சில ஜில்லாக்களுக்கு அதிகமாகக் கொடுத்திருப்பானேன் ? ஒரு சில ஜில்லாக்களுக்கு ஒன்றிரண்டு மட்டும் இருப்பானேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிலைமை எப்படி இருந்தாலும், ஜில்லாவைப் பொறுத்து பாரபட்சம் ஒன்றுமில்லை என்று அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI P. G. MANICKAM: இவ்வருஷத்தில் கால்நடை கல்வி கல்லூரி ஒன்று திறக்கப்படும் என்று பட்ஜெட்டிலே கூறப்பட்டிருக்கிறது. எப்போது, எந்த இடத்தில் திறக்கப்படும் என்று தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பட்ஜெட்டில் குறிப்பிட்டிருப்பதால் இந்த ஆண்டில் திறக்கப்படும் என்று அங்கத்தினர்கள் யூகித்துக் கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு தனியாக ஒரு கேள்வி கேட்டால் பார்த்து பதில் சொல்லுகிறேன்.

SRI A. VEDARATHNAM : தஞ்சை ஜில்லாவிலே கீ வில்லேஜ் ஸ்கீமே கிடையாது. முக்கியமான பிரீடாகிய உம்பளச்சேரி பிரீடை விருத்தி செய்ய அங்கே ஒரு கீ வில்லேஜ் ஸ்கீமை அமுலாக்க திட்டமிட்டிருந்தது என்ன ஆயிற்று? இப்போதாவது அதைத் ஆரம்பிக்க முயற்சி எடுத்துக் கொள்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தஞ்சை ஜில்லாவிலே புதிதாக கால்நடை வளர்ப்புப் பண்ணையே இருக்கிறது. கூட, உம்பளச்சேரி மாடுகளை வளர்க்க தனியாக ஒரு திட்டம்போட்டு இந்த இனத்தை விருத்தி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்ய முயற்சி செய்து வருகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், ஆடு வளர்ப்பதிலே, நீலகிரீஸ், பிகானீர் என்ற இரண்டு மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலே தனியாக ஒரு தரம் இல்லையா? இருந்தால், அதை வளர்க்க முயற்சி செய்யப்படுமா?

---

[a] Printed as Appendix II on pages 189-190 infra.



THE HON. SRI M. BHAKTAVATSALAM: மூன்றாவது செங்கற்பட்டு ஜில்லாவில் இருக்கிறது. அதாவது மட்டன் அண்டு ஹேர் டைப், மட்டன் டைப்பெல்லாம் நம் ஊர்தான்.

SRI A. R. SUBBIAH MUDALIAR: பஞ்சாப் மாகாணத்தில் நல்ல மாடுகள் கிடைக்கின்றன. இனமாகக் கொடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அதை வாங்கி சர்க்கார் வளர்ப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இனமாகக் கொடுக்க தேவையில்லை. அது தெருவிலே விடப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு வந்தால் வளர்க்கலாம் என்று இருக்கிறது. அது ஒங்கோல் மாடு மாதிரி இருக்கிறது. மத்திய சர்க்கார் அதைப் பிடித்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ரயில் சத்தம் தான் நாம் கொடுக்கவேண்டும். அது 100 ரூபாய்க்கு மேல் ஆகாது. நல்ல மாடுகளாக வாங்கி இங்கே வளர்ப்புக்கு விடலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : வளவனூரிலே ஒரு சப்ளிமெண்டரி எக்ஸ்டென்ஷன் சென்டர் வைப்பதாக பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வளவனூரில் எப்பொழுது திட்டம் அமுலுக்கு வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? 9 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஆண்டிலே வரும். ஆனால், எப்பொழுது தொடங்கப்படும் என்பதற்கு இப்பொழுது என்னிடம தகவல் இல்லை.

* 736 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri V. Sankaran) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) how much money was allotted for increasing the cattle-wealth of the State in the Second Five-Year Plan period; and

(b) the amount actually spent during the said period till now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Rs. 133·07 lakhs.

(b) Rs. 34·67 lakhs.

*Fair rent*

* 737 Q.—SRI R. SRINIVASA IYER (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal before the Government to revise the definition of 'Fair Rent' in the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

*Hostel for Harijans*

* 738 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வாடகைக் கட்டிடங்களிலிருக்கும் ஹரிஜன மாணவர்கள் மாணவிகளுடைய ஹாஸ்டல் கட்டிடங்களுக்கு அரசாங்க மூலம் கட்டிடங்கள் கட்டப்படுவதற்காக 1958–59–ம் வருஷத்திலே ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த இடங்களிலே ஹாஸ்டல் கட்டிடங்கள் கட்ட இத் தொகை செலவழிக்கப்படும்?

THE HON. SRI P. KAKKAN : (a) Rs. 6·6 lakhs has been allotted for the year 1958–59.

(b) Government have sanctioned the construction of Government hostels in Madras, South Arcot, and Tanjore during 1958–59.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஹரிஜன ஹாஸ்டல் கட்டவேண்டுமென்று நான் கூறியிருந்தேன், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN: திருநெல்வேலி ஜில்லாவில் மட்டுமல்ல எல்லா ஜில்லாக்களிலும் ஜில்லாதோறும் இரண்டு ஹாஸ்டல்கள் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. ஜில்லாத் தலை நகரில் ஒன்றும், ஜில்லாவின் இதர பாகங்களில் முக்கியமான இடத்தில் ஒன்றும் திறக்கப்படும். இதுபற்றி ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்களை ரிபோர்ட் கேட்டிருக்கிறோம். அவரிடமிருந்து ரிபோர்ட் வந்த பிற்பாடுதான் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

SRI P. G. MANICKAM : 1958–59–ல் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து எந்த எந்த ஹாஸ்டல்கள் கட்டப்பட தீர்மானிக்கப்பட்டன? இப்பொழுது எந்த எந்த ஹாஸ்டல்கள் கட்டப்பட்டுவருகின்றன. ?

THE HON. SRI P. KAKKAN: சென்னை நகரத்திலே எம்.ஸி. ராஜா ஹாஸ்டலுக்கு 1,94,000 ரூபாயிலே கட்டுவதற்காக முடிவு எடுக்கப்பட்டது. அந்த இடமெல்லாம் இப்பொழுது வாங்குவதற்கு ஏற்பாடு செய்து, எஸ்டிமேட், ப்ளான் வந்துவிட்டது. அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிற்பாடு வேலை ஆரம்பிக்கப்படும். அடுத்தப்படியாக, தென்னாற்காடு ஜில்லாவில், சிதம்பரத்தில் நந்தனார் ஹாஸ்டல் பெண்களுக்காக கட்டுவதற்கு 3,60,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்த வேலை வெகு சீக்கிரம் ஆரம்பிக்கப்படும். சிதம்பரத்திலேயே பையன்களுக்காக ஒரு ஹாஸ்டல் கட்டுவதற்காகவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அங்கே அந்த வேலை ஒரு பகுதி கட்டி முடிந்திருக்கிறது. இன்னொரு பகுதி வேலை நடந்துகொண்டிருக்கிறது. தஞ்சையில் மாணவர்களுக்காக ஹாஸ்டல் கட்டுவதற்குப் பணம் ஒதுக்கப்பட்டது. அந்த வேலை நடந்து பூர்த்தியாகும் கட்டத்தில் இருக்கிறது. வெகு சீக்கிரத்தில் ஹாஸ்டல் திறக்கப்படும். அந்த நான்கு இடங்களில்தான் ஹாஸ்டல் கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI M. K. SOMASUNDARAM: பாளையங்கோட்டையில் இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. அவைகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்கள் மூன்று இடங்களில் உள்ள ஹாஸ்டல்களில் வாடகை கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு முதல் இடம் கொடுத்து மூன்று ஹாஸ்டல்களையும் ஒரே இடத்தில் இருக்கும்படி கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN: நான் முன்பே சொன்னேன். நான்கு இடங்களில் கட்டிடம் கட்டுவது ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டு திட்டப்படி பணம் செலவழிக்கப்படுகிறது. இனிமேல் கட்டப்படும் ஹாஸ்டலைத் திருநெல்வேலி நகரத்திலா, பாளையங்கோட்டை நகரத்திலா அல்லது எந்த இடத்தில் கட்டினால் மாணவ, மாணவிகளுக்கு சௌகரியமாக இருக்கும் என்று தெரிந்தால் அங்கே கட்டலாம்.

*Administration Reports*

* 739 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have examined the possibility of avoiding the avoidable delay in issuing Administration Reports; and





(b) whether the Government propose to make available to the Legislature by the time of presentation of the Budget, the Administration Reports of all Departments for the year preceding the financial year in which the Budget Estimates for the succeeding years are presented?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes.

(b) Every step has been taken to publish the Administration Reports as early as possible after the close of the year to which the reports relate.

SRI K. SATTANATHA KARAYALAR : சமீபத்திலே வந்திருக்கும் ஆட்சி அறிக்கையைப் பார்த்தால் 1955–56 நிதி ஆண்டுவரைதான் எல்லா டிபார்ட்மெண்டுக்கும் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஒன்றிரண்டு டிபார்ட்மெண்டைப் பொறுத்தவரையில் 1956–57–க்கும் வந்திருப்பதாகத் தெரிகிறது. இப்படி அதிகம் கால தாமதம் ஆவது ஏன்? அப்படிக் கால தாமதம் ஆகிற அந்த சில ஆண்டுகளை விட்டுவிட்டு, கடைசியாக உள்ள ஆண்டுக்காவது அறிக்கை தயாரிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது 1956–57 ஆண்டுக்குள்ள அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் தயாராகி வெளியாகி மெம்பர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1957–58–க்கு இப்பொழுது அதைக் கோர்வையாக எடுத்து அச்சுக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், அதிகக் காலதாமதம் இப்பொழுது இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Veterinary Dispensary at Vedaranyam*

* 740 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம் கால்நடை ஆஸ்பத்திரிக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாய் ஏதேனும் வேண்டுகோள் வந்ததா ?

(ஆ) அதன்பேரில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKATAVATSALAM : (a) No request relating to the acquisition of land for the Veterinary Dispensary at Vedaranyam has been received. But the Block Development Officer, himself, had taken up the question of adding some more land for the Minor Veterinary Dispensary when it was under the Community Development administration.

(b) The matter is under correspondence with the Collector.

SRI A. VEDARATHNAM : அங்கே வருகின்ற கால்நடைகள் நிற்பதற்குக் கூட இடம் இல்லாத சிரமமான நிலை ஏற்படுகிறதால், அருகாமையிலுள்ள புறம்போக்கு நிலத்தை அதோடு சேர்க்கவேண்டுமென்ற தீர்மானம் ப்ளாக் டெவலெப்மெண்ட் அட்வைசரி கமிட்டியில் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறதே; அதை உடனடியாக கவனித்து, அது கிடைக்கும்படி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்லியது போல் நிலம் வேண்டியிருக்கிறது. ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் குறிப்பிட்டதுபோல், ஜில்லா வெடரினரி ஆபீசரும், கலெக்டரும் இதை அக்வையர் செய்வதற்காக கவனம் செலுத்தி வருகிறார்கள்.

*Electrification of railways*

*741 Q.—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the attention of the Government has been drawn to the statement made by the Deputy Minister for Railways that only Tambaram-Chingleput line would be electrified during the Second Five-Year Plan and that the question of electrification of Madras-Arkonam line would also be considered; and

(b) if so, whether this Government have any information as to when the electrification of Madras-Arkonam line will be taken up by the Central Government?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) No, Sir.

Sri A. A. RASHEED: Is the Hon. Minister aware that the Madras-Arkonam line is more frequently used than the Tambaram-Villupuram line? Will the Government recommend to the Union Government to give priority for this line?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: There need not be any competition between one line and another, between Broad Gauge and Metre Gauge. There is no question of priority as between the two since the Tambaram-Villupuram scheme has already been taken up for execution as has been announced by the Railway Minister in his Budget speech. A survey was undertaken some time ago to assess the traffic on the Broad Gauge between Madras and Arkonam and it was felt that there was not sufficient traffic to justify electrification. This Government urged that this scheme also should be taken up. The Government of India have now undertaken a new survey. We have also pointed out to them that certain new industries have sprung up between Madras and Avadi and Tiruvellore. A new survey is being undertaken now.

Sri A. A. RASHEED: May I know whether the Tambaram-Villupuram electrification scheme will be completed within the second Five-Year Plan period?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I would invite the hon. Member's attention to the speech of the Railway Minister in Parliament.

*Scholarships to students*

*742 Q.—Sri P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-59-ம் வருஷத்துக்கு ஒதுக்கப்பட்ட (Residential scholarships) தொகையிலிருந்து காலேஜ்களிலும், உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலும் படிக்கும் எத்தனை ஹரிஜன மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன?

(ஆ) இந்த உபகாரச் சம்பளங்களுக்குள் Fresh scholarships எத்தனை?



The Hon. Sri P. KAKKAN: (a) Scholarships are given from the provision made in the budget for the award of scholarships. No separate provision is made for residential scholarships. So far 789 college students and 1,295 high school students belonging to the Scheduled Castes have been granted residential scholarships.

(b) Six hundred and sixty-six scholarships for college courses and 607 scholarships for high school courses have been granted.

Sri P. G. MANICKAM: காலேஜ்களிலே படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக இந்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்ட தொகை எப்பொழுது கிடைத்தது? அது ஹரிஜனங்களுக்கு எந்த மாதத்தில் வழங்கப்பட்டது?

The Hon. Sri P. KAKKAN: அந்தத் தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

Sri M. P. PERIASAMI: சட்டக் கல்லூரியில் பயிலும் ஹரிஜன மாணவர்களுக்கு இன்னும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

The Hon. Sri P. KAKKAN: எல்லா மாணவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் கொடுக்கப்படவில்லையென்றால் அதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கலாம். விண்ணப்பம் போட்டதில் காலதாமதம் போன்று இப்படி ஏதாவது காரணம் இருக்கலாம். எப்படியிருந்தாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் எனக்குத் தகவல் தெரிவித்தால் கவனிக்கலாம்.

Sri T. S. RAMASWAMY PILLAI: May I know whether these scholarships are given to all Harijan College students or only to a stipulated few? What are the standards or criteria on the basis of which these scholarships are given?

The Hon. Sri P. KAKKAN: சர்க்கார் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

*Block Development Scheme*

*743 Q.—Sri P. S. SANTHANAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, செங்கம் தாலூகா, கன்ராம்பட்டு பிர்க்கா தாணியம்பாடி பிர்க்காக்களை தேசிய வளர்ச்சி (பிளாக் டெவலப்மெண்ட்) திட்டத்தின் கீழ்க் கொண்டுவர சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படி உத்தேசம் இருந்தால், எப்போது கொண்டு வரப்படும்?

The Hon. Sri C. SUBRAMANIAM: (a) Yes.

(b) It cannot categorically be stated when they will be taken up. They will have to wait for their turn.

Sri P. S. SANTHANAM: தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு கிராமத்தையும் ப்ளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சென்ற ப்ளானிங் கமிட்டிக் கூட்டத்தில், அதாவது 1958-ம் ஆண்டில், வேலூரில் நடந்த கூட்டத்தில், குலுக்குச் சீட்டு போட்டு எடுத்தபொழுது தண்டராம்பட்டைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விழுந்தது. அது இதுவரையிலும் எடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால், அதை உடனடியாக எடுத்துக் கொள்ள சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இந்த சீட்டு போட்டு முடிவு செய்யும் வழக்கத்தை சர்க்கார் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

*"Ideal Police Station"*

*744 Q.—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have opened an 'Ideal Police Station' in the City;

(b) the extra expenditure incurred for the same; and

(c) the details of its functioning?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) "Yes, Sir".

(b) No extra expenditure has been incurred.

(c) This 'Ideal Police Station' is functioning in the Law College Police Station which is manned by the men who are educated up to S.S.L.C. Improvement of Police Public relationship and ensuring better conduct and behaviour on the part of the Police are the objectives of this Ideal Police Station. It is working satisfactorily.

SRI M. JAGANNATHAN: தலைவர் அவர்களே, "போலீஸ் ஸ்டேஷன்" என்ற இந்த ஆங்கிலப் பதங்களுக்கு தமிழில் "காவல் நிலையம்" என்று மொழி பெயர்த்திருப்பது தவறு என்று கனம் உள்விவகார இலாகா அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று பேப்பர் மூலமாகப் படித்திருக்கிறேன். அவருடைய உத்தரவு அப்படி இருந்த போதிலும், எதற்காக போலீஸ் ஸ்டேஷன்களிலெல்லாம் "காவல் நிலையம்" என்று எழுதப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அது என்னுடைய அபிப்பிராயம்தான். அது சரியான அபிப்பிராயம் என்றுதான் நான் கருதுகிறேன். அதெல்லாம் மந்திரியைக் கேட்டு எழுதுவது இல்லை. ஏதோ தமிழிலே தோன்றியதை எழுதியிருக்கிறார்கள். "காவல்" என்றால் "போலீஸ்" என்பதனுடைய அர்த்தம் வராது. பின்னால் கோர்ட்டிலே சிக்கல்கள் கூட ஏற்படலாம். அதற்குப் பதிலாக தகுந்த வார்த்தையை கனம் அங்கத்தினர் சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளலாம். இல்லையென்றால், நாங்களாக யோசித்து என்ன வார்த்தை போடலாம் என்று பார்க்கிறோம். 'காவல் நிலையம்" என்பது சரியல்ல என்பது என் அபிப்பிராயம்,

SRI A. A. RASHEED: Until we find out a proper word will the Hon. Minister continue to allow the word 'Police' to be used for Tamil translation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: போலீஸ் என்பதும் அப்படியேதான் இருக்கிறது, போலீஸ் ஸ்டேஷனும் அப்படியேதான் இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN: அரசாங்கத்தாரால் வெளியிட்டுள்ள ஆட்சிச் சொல் அகராதியில் போலீஸ் என்பதற்குக் காவல் என்றும், "போலீஸ் ஸ்டேஷன்" என்பதற்குக் "காவல் நிலையம்" என்றும் மொழிபெயர்ப்பு தரப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதை மாற்று வதற்கு அரசாங்கத்திற்கு ஏதேனும் அவசியம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அரசாங்கம் வெளியிட்டுள்ள அகராதியையே ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் சில வார்த்தைகள் தவறாக இருக்கின்றன என்பதை, சமீபத்தில் ஒரு வெளியீட்டு விழா நடந்தபோது நானும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சில வார்த்தைகள் பொருத்த மில்லாமல் தவறாக இருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறேன்.





SRI A. GOVINDASAMY: நாட்டிலுள்ள மக்களுக்கும் சொத்துக்கும் பாதுகாப்பாக இருக்கிற போலீஸ்காரர்களை காவல்காரர்கள் என்று சொல்வது தவறாக இருக்கிறது. அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: காவல்காரர்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல. போலீஸ்காரர்கள் மட்டும் காவல் காரர்கள் என்பது அல்ல. காவல்காரர்கள் என்றால் போலீஸ்காரர்களை மட்டும்தான் குறிக்கும் என்பது அல்ல.

*Construction of an anicut across Marudhiar*

*745 Q.—SRI M. A. B. ARUMUGHASAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state the action taken on the mahazar, dated 29th March 1957, presented to the Government by the public of Davarappanpatty, hamlet of Ayampalayam village, Dindigul taluk, Madurai district, regarding the construction of an anicut across the river Marudhiar for purposes of irrigation?

THE HON. SRI P. KAKKAN: The matter has been referred to the Chief Engineer for Irrigation. His final report is awaited.

*Hindu Religious and Charitable Endowments Act, 1951*

*746 Q.—SRI N. S. RAMALINGAM (on behalf of Sri S. Lazar): Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal before the Government to amend the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1951, for enabling new trustees appointed by the "Area Committees" to take immediate charge of the respective trust properties from the removed trustees?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

*Loans for digging wells*

*747 Q.—SRI P. S. SANTHANAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் ஏழை விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவ தற்கு என்று 1958–59 வருடங்களுக்கு என எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டுள்ளது?

(ஆ) வடாற்காடு ஜில்லாவுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) இவற்றில் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது?

(ஈ) தொகை வாங்கியும் கிணற்று வேலையை பூர்த்தி செய்யாதவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Rs. 10 lakhs.

(b) Rs. 1·5 lakhs.

(c) The Collectors have been instructed to inquire into the applications received and complete the enquiry before 15th February 1959. Disbursement of loans will take place after that date. Information as to the number of persons to whom loans have been actually disbursed will be known only later.

(d) Does not arise.

Sri P. S. SANTHANAM : வட ஆற்காடு ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் அம்மாதிரி கொடுக்கப்படாமல் இருந்தால் அதை உடனடியாகக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அம்மாதிரி இல்லாததோடு அல்ல. இன்னும் 25,000 ரூபாய் கொடுத்து 50 கிணறுகள் வெட்டுவதற்கும் இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

Sri V. SUBBIAH : இந்த வருஷத்தில் அம்மாதிரி குடி தண்ணீர் அல்லது நீர்பாசன வசதிக்கு என்று வெட்டப்படும் கிணறுகளை வெட்டும்போது பஞ்சப் பிரதேசமாகவும், வரண்டப் பிரதேசமாகவும் இருக்கக்கூடிய இடங்களுக்கு முதலிடம் கொடுக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இப்பொழுது நீர்பாசனத்திற்கு வேண்டிய கிணறுகள் வெட்டப்படுகின்றன. எங்கே அத்தியாவசியம் ஏற்படுகிறதோ அந்த மாவட்டங்களில் வெட்டப்படுகின்றன. எங்கேயெல்லாம் நீர்பாசனத்திற்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிறதோ, அங்கேயெல்லாம் கிணறுகள் வெட்டும் திட்டம் துரிதமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் எண்ணம்.

Sri S. M. ANNAMALAI : கிணறுகள் வெட்டுவதற்காக பணம் கொடுக்கும்போது பத்து எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் பணம் உள்ளவர்களுக்கும்தான் பணம் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு ஏன் கொடுக்கப்படுவது இல்லை என்று கேட்டால் சரியாக விண்ணப்பங்கள் வரவில்லை என்று அதிகாரிகள் சொல்லி விடுகிறார்கள். சரியாகவும் விளம்பரம் செய்வதும் இல்லை. ஆகையால் இரண்டு எக்கர் முதற்கொண்டு ஐந்து எக்கர் வரையில் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் பணம் தர வேண்டும் என்ற உத்தரவை சர்க்கார் போடுமா, என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அம்மாதிரி ஐந்து எக்கருக்கு உட்பட்டவர்களுக்கு பணம் கொடுக்கப்படுவதில்லை என்ற தகவல் எனக்கு இதுவரையிலும் வரவில்லை. கனம் அங்கத்தினர் அதைப்பற்றிய தகவல் கொடுத்தால் அதில் கவனம் செலுத்தவேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளுகிறேன்.

### *Residential quarters for N.G.Os.*

* 748-A *Q*.—Sri S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் N.G.O.-க்களுக்கு குடியிருக்க எவ்வளவு அரசாங்கத்தாரால் கட்டப்பட்ட வீடுகள் உள்ளன ?

(ஆ) புதிதாக இந்த ஆண்டு எத்தனை வீடுகள் கட்டப்படும் ?

(இ) அரசாங்க வீடுகளில் குடியிருப்பவர்களிடம் வாடகை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) 1,944 including 1,355 for the police subordinate staff.

(*b*) A scheme for the construction of 300 houses for the workers of the Government Press, Madras, spread over a period of three years has been sanctioned and taken on hand. But it is unlikely that any house will be completed during the current financial year.





(*c*) *Todhunternagar* (*Saidapet*).—The rent ranges from Rs. 20 to Rs. 30 per mensem according to type of quarters or 10 per cent of the occupants' emoluments whichever is higher.

*Government Estate* (*Mount Road*).—Ten per cent of the occupants' emoluments or standard rent plus service tax whichever is less.

Sri K. ANBAZHAGAN : என்.ஜி.ஓ.வினருக்குக் கட்டப்பட்டுள்ள வீடுகளில் இதர தரப்பினர் அனுமதிக்கப்பட்டுவருவது உண்மையா ? அப்படித் தரப்பட்டிருந்தால் அவைகளைப் பெற்று என்.ஜி.ஓ.வினருக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri P. KAKKAN : அந்தத் தகவல் எனக்குத் தெரியாது, கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Sri S. M. ANNAMALAI : இப்படி வீடுகள் கட்டுவதற்கு ஏதாவது சப்சிடி அல்லது மானியம் தரப்படுகிறதா என்று கேட்கிறேன்.

The Hon. Sri P. KAKKAN : அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

Sri S. PAKKIRISAMI PILLAI : கவர்ன்மெண்ட் ப்ரஸ் தொழிலாளர்களுக்குக் கட்டப்படும் வீடுகள் எவ்வளவு மதிப்புக் கொண்டது. அதற்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி பி.டபிள்யூ. டி. தொழிலாளர்களுக்குக் கட்டப்படும் வீடுகளின் மதிப்பு என்ன ? அதில் மத்திய அரசாங்கத்தினருடைய பணம் எவ்வளவு ?

The Hon. Sri P. KAKKAN : மத்திய அரசாங்கத்திலிருந்து ஒன்றும் கிடையாது. ப்ரெஸ் தொழிலாளர்களுக்கு செலவாகும் தொகையைச் சென்னை அரசாங்கம் கொடுக்கிறது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri P. G. MANICKAM : என்.ஜி.ஓ.க்களுக்கு வீடுகள் கட்டும் திட்டமானது சென்னை நகரில் மட்டும்தான் இருக்கிறதா அல்லது மேற்கொண்டு இதர நகரங்களிலும் மேற்கொள்ள சர்க்கார் ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் இதற்கு தனியாகக் கேள்வி போட வேண்டும்.

Sri A. GOVINDASAMY : சென்னை நகரத்திலுள்ள [illegible]களுக்கு வீடு வாடகை அலவன்சு ஏழு ரூபாய் கொடுக்கப்படுவதால் அவர்க[illegible] வீடுகள் வைத்துக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படி அலவன்சு கொடுத்தும் அவர்களுடைய பிரச்னை தீரவில்லை. அதனால் அவர்களுக்கு அதிகமாக வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : தொழிலாளர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு அரசாங்கம் பல தொழிற்சாலைகளை வீடுகள் கட்டிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு வீடுகள் கட்டுவதைப்பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டு வருகிறது. சிலருக்கு வீடுகளும் கட்டிக்கொடுத்துக்கொண்டும் வருகிறார்கள்.

### *The Madras Dramatic Performances Act*

*749 *Q*.—Sri M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of dramatic performances prohibited in 1958 under the Madras Dramatic Performances Act, 1954; and

(*b*) the reasons therefor?

[12th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Two, Sir.

(b) The two dramas 'Poreval' and 'Dasavatharam' enacted by Sri M. R. Radha and party were considered to be objectionable performances in that they deliberately intended to outrage the religious feelings of a class of citizens of India by insulting, blaspheming and profaning the religious beliefs of that class and were grossly indecent, and obscene.

### *State Transport Advisory Committee*

* 750 Q.—SRI A. R. SUBBIAH MUDALIAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of small Bus Operators in the State Transport Advisory Committee constituted after 15th July 1958?

THE HON. SRI V. RAMAIAH: In the Committee, there are four members representing bus operators' interests.

SRI A. R. SUBBIAH MUDALIAR: இந்த நாலு பேர்களில் ஸ்மால் பஸ் ஆபரேட்டர்கள் இருக்கிறார்களா ? அப்படி இல்லாவிட்டால் அவர்களையும் சேர்ப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH: அட்வைசரி கமிட்டியில் ஸ்மால் பஸ் ஆபரேட்டர்களையோ அல்லது பெரிய பஸ் ஆபரேட்டர்களையோ போட வேண்டும் என்ற முறையில் அமைக்க வேண்டுமென்ற அவசியம் ஒன்றுமே கிடையாது. இது ஒரு அட்வைசரி கமிட்டி. மாகாணத்தில் இருக்கிற பஸ் போக்குவரத்தை திறமையாக நடத்துகிறவர்களையும் பஸ் போக்குவரத்து சம்பந்தப்பட்டவர்களையும் தனிப்பட்டவர்களையும் சேர்த்த கமிட்டிதான். ஸ்மால் பஸ் ஆபரேட்டர்கள்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

SRI K. PERIANNAN: இந்தக் கமிட்டியில் ஏதாவது ஹரிஜன மெம்பர்கள் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: கனம் அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்கள் இருக்கிறார். அவர் ஹரிஜன மெம்பர் என்றே நினைக்கிறேன்.

MR. SPEAKER: Questions are over.

## II. VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959-60—*cont.*

### DEMAND II—EXCISE DEPARTMENT AND DEMAND XV—POLICE.

MR. SPEAKER: இன்றையதினம் 15-வது டிமாண்ட் போலீஸும் இரண்டாவது டிமாண்ட் எக்ஸைஸ் பற்றிய விவாதமும் நடக்கும். கனம் கோவிந்தசாமி அவர்கள் தனது 73-வது வெட்டுப் பிரேரணையையும், இரண்டாவது டிமாண்டிலுள்ள 89-வது வெட்டு பிரேரணையையும் பிரேரேபிப்பார். அவைகளுக்கு ஆதரவாக எதிர் கட்சியில் முதலில் கனம் கோவிந்தசாமி அவர்கள் பேசுவார். தலைவர் என்ற ஹோதாவில் கனம் பி. எஸ். சின்னதுரை அவர்கள் கடைசியில் 20 நிமிஷங்கள் பேசுவார். கனம் அமைச்சர் அவர்கள் 45 நிமிஷங்கள் பேசுவார். இப்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தலைக்கு பத்து பத்து நிமிஷங்கள் பேசலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. முதல் முதலில் கனம் கோவிந்தசாமி அவர்களைத் தன்னுடைய வெட்டுப் பிரேரேபணைகளை பிரேரேபிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையை பிரேரேபிக்கலாம்.



12th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,17,200 under Demand II—Excise Department".

SRI A. GOVINDASAMY: Sir, I move—

"That the allotment of Rs. 6,17,200 under Demand II—Excise Department—be reduced by Rs. 100."

My object in moving the cut motion is to discuss about the failure of the Government—

(i) to prevent smuggling of liquor from the border areas of Pondicherry and Karaikal;

(ii) to put down corruption in the Department; and

(iii) to abolish the system of issue of liquor permits.

THE HON. SRI C. SUBRAMANIAM: A cut motion can relate to only one subject; there are three subjects in this cut motion.

SRI A. GOVINDASAMY: They are marked separately as (i), (ii) and (iii).

THE HON. SRI C. SUBRAMANIAM: Even then?

SRI A. GOVINDASAMY: It is admitted, Sir.

MR. SPEAKER: That does not mean it is correct. It is printed as given by the hon. Member. I will rule it out here if he wants. (Laughter)

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"The Government be granted a sum not exceeding Rs. 5,85,73,000 under Demand XV—Police."

SRI A. GOVINDASAMY: Sir, I move—

"That the allotment of Rs. 5,85,73,000 under Demand XV—Police—be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and the Cut Momtions are before the House for discussion. Sri Govindasamy may speak now. He will be given 15 minutes.

*SRI A. GOVINDASAMY: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தப் போலீஸ் மானியத்தின் மீதும், மது விலக்கு மானியத்தின் மீதும் எனது வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவுக்குச் சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகையைவிட இந்த ஆண்டு 10,94,000 ரூபாய் கூடுதலாக அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். எதற்காக இந்தக் கூடுதலான தொகையைக் கேட்கிறார்கள் என்று பார்க்கும்போது டார்ச் லைட் வாங்குவதற்கும், குடி தண்ணீர் பாட்டில்கள் வாங்குவதற்கும் 'கண்ணீர்ப்புகை' ஸ்குவாடுக்காவும் இந்தக்

தொகையைக் கூடுதலாகக் கேட்கிறார்கள். இந்தக் கண்ணீர்ப்புகையை (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் :—கண்ணீர்த் துளிகள். . . . . . .) கண்ணீர்த் துளிகள் மீது—அமைச்சர் அவர்கள் பாஷையின்படி—எங்கள் மீது கண்ணீர்ப்புகை குண்டை வீசுவதற்காக இவ்வளவு அதிகமான தொகையைக் கேட்கிறார்கள் என்று அமைச்சர் அவர்களைக் கண்டித்துப் பேசும்படியான நிலைமையில் இருக்கிறேன். இந்தக் கண்ணீர்ப் புகைக்கு எதிராக வெங்காயம் வேலை செய்கிறது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இதன் காரணமாக இதற்காக ஒதுக்கப்படும் பணம் வீண் என்று தான் சொல்லவேண்டும். நீங்கள் கண்ணீர்ப் புகைக்காக செலவழிக்கிற பணமும், அதை நிர்வகிக்கும் குழுவுக்குச் செலவு செய்யும் பணமும் வீண் வீண் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தொகை கூடுதலாக்க் கேட்ட நேரத்தில் ஏதோ போலீஸ்காரர்களுக்கு—இந்த நாட்டு மக்களையும், அமைச்சர்களையும் காப்பாற்றக் கூடிய போலீஸ்காரர்களுக்கு—சம்பளத்தை உயர்த்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் உயர்த்தவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றையதினம் சாதாரணமாகப் போலீஸ்காரர்கள் சம்பளம் என்னவென்று பார்க்கும் போது 30 ரூபாயில் ஆரம்பித்து ஆண்டு ஒன்றுக்கு அரை ரூபாய் உயர்த்தப்படுகிறது. இது எவ்வளவு தாராளமான போக்கு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இருபது ஆண்டு காலம் அவர்கள் வேலை செய்தால்தான் 40 ரூபாய் சம்பளத்தை அவர்கள் அடையும்படியான நிலைமை இருக்கிறது. போலிஸ்காரர்கள் நல்ல முறையிலும் திறமையாகவும் வேலை செய்து ஹெட் கான்ஸ்டபிளாக வருகிறபோது எவ்வளவு சம்பளம் பெறுகிறார்கள் என்று பார்க்கும்போது 40 ரூபாயில் ஆரம்பித்து ஆண்டு ஒன்றுக்கு 1 ரூபாய் உயர்த்தப்பட்டு 10 ஆண்டுகள் கழித்து 50 ரூபாய் பெறக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். முப்பது ஆண்டுகள் வேலை பார்த்தால்தான் "**efficency bar**" என்பதில் 60 ரூபாயில் வந்து முடிகிறது. அந்த அந்த நிலைமையில் சில ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு அவர்களுடைய திறமையின் காரணமாக சப் இன்ஸ்பெக்டராக வேலை உயர்வு கொடுக்கப்பட்டது. அந்த மாதிரி வேலை உயர்வு கொடுக்கப்பட்டவர்களை இன்றையதினம் பதவியில் இருந்து இறக்கிவிட்டிருக்கிறார்கள். ஆதித் திராவிடர்கள்கூட தங்களுடைய திறமையின் காரணமாக சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்துக்கு உயர்த்தப்பட்டார்கள். அவர்களெல்லாம் இன்றைய தினம் கீழே இறக்கப்பட்டிருக்கிறார்கள். பி.ஏ. படித்தவர்கள்தான் சப் இன்ஸ்பெக்டராக வரலாம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்ததன் காரணமாக அவர்களுக்கெல்லாம் இந்த நிலைமை ஏற்பட்டது. இந்தத் திட்டத்தை ராஜாஜி அவர்கள் காலத்தில் கொண்டு வந்தார்கள். போலீஸ்காரர்களுடைய திறமையை அனுசரித்து அவர்களுக்கு சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று சொன்ன நேரத்தில் படிப்படியாகக் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த நிலைமை இன்னும் பூரணமாகக் கவனிக்கப்படவில்லை. இன்று சப் இன்ஸ்பெக்டர் வேலையில் ஆக்டிங் ஆக இருக்கிற பல பேர் 10, 15 ஆண்டுகளாக வேலை செய்திருந்தாலும்கூட அவர்களைப் பர்மனெண்ட் செய்வதில்லை என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் உற்சாகத்தோடு வேலை செய்ய உத்தியோகத்திற்கு உத்தரவாதம் இருக்கவேண்டும். சில ஆண்டுகள் சரிகைத் தலைப்பாகையைப் போட்டு கொண்டிருந்துவிட்டு மீண்டும் பழைய தலைப்பாகையையே போட்டுக்கொள்ள வேண்டி இருப்பதால் அவர்களுக்கு உத்தியோகத்தில் சலிப்பு ஏற்படுகிற நிலைமை வந்துவிடுகிறது. போலீஸ்காரர்களானாலும் சரி, சப் இன்ஸ்பெக்டர்களானாலும் சரி, அவர்களுக்குப் படிப்படியாக சம்பள உயர்வு கொடுத்தாக வேண்டும். சாதாரணமாக ஒரு போலீஸ்காரருக்கு அடிப்படைச் சம்பளம் 100 ரூபாயாக இருந்தால்தான் சரியான முறையில் வாழ்க்கையை நடத்த முடியும். அப்பொழுதுதான் அவர்களுக்குத் தப்பான வழிகளில் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வராது. அவர்கள் தப்பான வழிகளில் சம்பாதிப்பதற்கு நாமே மறைமுகமாக உதவுவது போல இன்றைய நிலைமை இருக்கிறது. இந்தச்



சம்பளம் குறைந்தது 100 ரூபாயாக இருக்க வேண்டுமென்பதோடு உத்தியோகத்திற்குத் தகுந்தவாறு படிப்படியாக உயர்ந்துகொண்டு போக வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது சி.ஐ.டி.இலாகாவில் வேலூரில் இருந்து பணியாற்றக் கூடியவர்கள் இன்ஸ்பெக்டர்களாக இருந்தாலும் சப் இன்ஸ்பெக்டர்களாக இருந்தாலும் சுருக்கெழுத்துத் தெரிந்தவர்களாக—போலீஸ் சுருக்கெழுத்தாளர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கும் சாதாரண சப் இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் ஆகியவர்களுக்கும் சம்பள விகிதத்தில் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. சுருக்கெழுத்துத் துறையில் பணியாற்றக் கூடிய சப் இன்ஸ்பெக்டர்களும், இன்ஸ்பெக்டர்களும் அதிகப்படியாகப் படித்திருக்கிற காரணத்தினால் அவர்களுக்குச் சம்பளத்தில் கொஞ்சம் உயர்வு இருக்க வேண்டும்.

போலீஸ்காரர்கள் வீட்டைப் பார்த்தால்—வெள்ளைக்காரர்கள் காலத்தில் கட்டிய வீடுகள் என்று தட்டிக் கழிக்க முடியாது. 12 அடி நீளம் 7 அடி அகலம்கூட இல்லை. பழைய போலீஸ் லைன்கள் இந்த நிலைமையில் இருக்கின்றன. அரசாங்கம் நாங்கள் புதிதாகப் பல வீடுகளைக் கட்டிவிட்டிருக்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் அந்த பழைய வீடுகள் பல ஆண்டுகளாக சீர்திருத்தம் செய்யப்படாமல் இருக்கின்றன. 4, 5 குழந்தைகள், வயதானவர்கள் இருக்கும்படியான ஒரு குடும்பத்தில் அவ்வளவு பேரும் படுக்கக் கூட வசதி இல்லாமல் இருக்கிறது. உறவினர்கள், நண்பர்கள் வந்தால், அங்கு இருக்கும் இடம் போதுமானதாக இல்லை. ஒரு ஆள் உள்ளே வந்தால் ஒரு ஆள் வெளியே போகும்படியான நிலைமை இருக்கிறது. ஆகவே இரண்டு போலீஸ்காரர்கள் இருக்கக் கூடிய வீட்டை ஒன்றாக மாற்றி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 3 போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. இரண்டு போலீஸ் ஸ்டேஷன்களிலுள்ள சப் இன்ஸ்பெக்டர்களுக்கும் கான்ஸ்டபிள்களுக்கும் வீடு கிடையாது. கண்டமங்கலத்திலும் வளவனூரிலும் இருக்கும் போலீஸ் ஸ்டேஷன்களில் இருக்கக் கூடியவர்களுக்கு அந்த நிலைமை இருக்கிறது. எங்கெங்கு போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி இல்லையோ அங்கெல்லாம் அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க முன்வர வேண்டும். கவனிக்கிறேன் என்று சொல்லிக் காலம் கடத்தக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது வீடு கட்டிக்கொடுத்திருக்கும் போலீஸ்காரர்கள் காலனியில் இருக்கும் குடி தண்ணிர் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. 40 குடும்பத்திற்கு 2 குழாய்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக் கூடிய இந்தக் கஷ்டங்களைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அமைச்சர்கள் வெளியூர்களுக்குச் சென்றாலும் அல்லது இந்த நாட்டுப் பிரதம மந்திரியோ, ஜனாதிபதியோ நம்முடைய மாகாணத்திற்கு வந்தாலும், அல்லது வெளிநாட்டுத் தலைவர்கள் இந்த நாட்டுக்கு வந்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக அவர்கள் வருவதற்கு முதல் நாளே இந்தப் போலீஸ்காரர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஒரு அமைச்சர் மாலை 6 மணிக்கு ஒரு ஊருக்கு வருவதாக இருந்தால் காலை 6 மணிக்கே மரத்துக்கு மரம் போலீஸ்காரர்களை நிறுத்தி வைத்துவிடுகிறார்கள். இதனால் போலீஸ்காரர்கள் மிகுந்த சிரமத்தை அடைய வேண்டி இருக்கிறது. முன்பெல்லாம் அமைச்சர்கள் காரில் கொடி கட்டிக்கொண்டு பறந்து கொண்டிருந்ததால் கொடியைப் பார்த்து அமைச்சர் வருகிறார் என்று தெரிந்துகொண்டு தங்களை உஷார் படுத்திக்கொண்டனர். ஆனால், இன்று அமைச்சர்கள் கொடி கட்டிக்கொள்ளாததால் பெரிய கார்கள் பறந்து வரும்போதெல்லாம் அமைச்சர்கள்தான் போகிறார்களோ என்று போலீஸ்காரர்கள் தங்களை அடிக்கடி உஷார்படுத்திக்கொள்ளவேண்டி இருக்கிறது. ஆகவே அமைச்சர்களை மீண்டும் கொடிகளைப் போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக மதுவிலக்குக் குற்றம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருவதாகத் தெரிகிறதே தவிர, குறைவதாகத் தெரிவதில்லை. குறிப்பாக ஒரு லட்சத்து இருபத்தாறுயிரத்து நூற்று நாற்பது பேர் முன்பு மதுவிலக்குக் குற்றம் இழைத்தார்கள் என்றால், இன்றைக்கு அது ஒரு லட்சத்து முப்பத்தேழாயிரத்து நானூற்றி எண்பத்தேழு கேஸாக உயர்ந்திருக்கிறது. மதுவிலக்குக் குற்றம் குறையவில்லை. இன்னும் அகப்படாத கேஸ்கள் எத்தனையோ. பணம் வாங்கிக்கொண்டு பல கேஸ்கள் விடப்பட்டு வருகின்றன. குறிப்பாக என் தொகுதியில் கண்டமங்கலத்தைச் சேர்ந்த நலமால்மருதூர் சேரியில் 6 பேர்களிடத்திலிருந்து பணம் வாங்கிக்கொண்டு அவர்கள் அந்தக் குற்றத்தை இழைத்திருந்தும் விட்டிருக்கிறார்கள். இதைக் கண்டித்து நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. பணம் கொடுக்கிறவர்கள் தப்பித்துக்கொள்ளும் நிலைமையும், பணம் கொடுக்க முடியாதவர்கள், குற்றம் இழைக்காவிட்டாலும் தண்டனை அடையக் கூடிய நிலைமையும்தான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்குச் சட்டம் கடுமையாக இருப்பதினால் குடிக்காதவர்கள்கூட அகப்பட்டுக்கொள்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக தோட்டத்தில் உள்ள வைக்கோல் போரில் ஒரு புட்டி சாராயத்தைச் சொருகிவிட்டு, அவன் சாராயம் காய்ச்சினான் என்று சொல்லி, ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்கிற நிலைமைக்கு இது உதவியாக இருக்கிறது. குடிக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. மதுவிலக்குத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்கின்றோம். அந்தத் திட்டம் வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்பதற்கு ஆவன செய்து வருகின்றோம். காங்கிரஸில் ஒரு சிலர் கொள்கை அளவில் இதை ஒப்புக்கொண்டவர்களே இன்றைக்கு பர்மிட் வைத்துக்கொண்டு சாப்பிடுகிறார்கள். சில பேர் பர்மிட் இல்லாமலும் சாப்பிடுகிறார்கள். இல்லை என்று மறுக்க முடியாது. அதோடு சில பகுதிகள் நம் ராஜ்யத்திற்குள்ளேயே துண்டாகத் தனியாக இயங்கும்போது அவர்கள் இந்த மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவராமல் இருக்கும்போது இது வெற்றி அளிப்பது கஷ்டமாகவே இருக்கிறது. இதை அவர்களும் தடுக்கும்படியாகச் செய்வதற்கு நம அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று முன்பு கேட்டுக்கொண்டதற்கும்கூட அது முடியாது என அமைச்சர் சொன்னார்கள்.

இன்றையதினம் பங்களூரிலிருந்து வெளிநாட்டுச் சாராயம் எவ்வளவு இறக்குமதி ஆகியிருக்கிறது என்பதற்குப் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். இதை எல்லாம் பார்க்கிறபோது பக்கத்தில் இருக்கிற அண்டை ராஜ்யங்களில் இந்தச் சாராயம் இருக்கிறவரைக்கும் நமக்கு ராஜ்யத்தில் பூரண வெற்றி ஏற்படுவதற்கு இடையூறாகத்தான் இருக்கும். குறிப்பாக விழுப்புரம் மார்க்கமாகவோ, கடலூர் மார்க்கமாகவோ, திண்டிவனம் மார்க்கமாகவோ, லாரிகளிலும், பஸ்களிலும் எவ்வளவு வருகிறது என்பதைப் போலீஸார் கவனிப்பது இல்லை. அதுவும் உயர்ந்த வகுப்பில் வருகிறவர்கள் சட்டைப் பைக்குள்ளேயே போட்டு வருகிறார்கள்.

நோய்வாய்ப்பட்டவர்களுக்கு இது தேவை என்றால் ஆஸ்பத்திரியில் போய்ச் சாப்பிடட்டும், அல்லது பாதுகாப்பான வேறு இடத்தில் இருந்து சாப்பிடட்டும். பர்மிட் அளவு என்ன என்பதே இல்லாமல் அவர்கள் சாப்பிடுவதும், பர்மிட் இல்லாதவர்கள் அவர்களோடு சேர்ந்து சாப்பிடுவதும் தடுக்கப்பட வேண்டும். சில போலீஸ் அதிகாரிகளும் சேர்ந்து குடிக்கிறார்கள் என்றால் அவர்களும் மனிதர்கள்தான். அவர்கள் குடிக்கவில்லை என்றுதான் சொல்ல முடியாது. குறிப்பாகப் பாண்டிச்சேரிக்குச்சென்று குடித்துவிட்டு ரயில் மார்க்கமாகப் போலீஸ் அதிகாரி வருகிறார் என்று நான் சொன்னால் வேண்டுமானால் போலீஸ் அமைச்சருக்குக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொடுக்க முடியும். ஆனால் போலீஸ் அமைச்சரே இந்தப் புகாரை பரிசீலனை செய்ய ஒரு அதிகாரியை அனுப்பி, அதைக் கண்டுபிடித்து இப்போது அந்த அதிகாரியையே மாற்றிவிட்டதாகச் சொன்னதை நான் பாராட்டுகிறேன். இன்னொன்று, திறமையாகப் போலீஸ்காரர்கள் இந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் போகிறார்கள் என்றால் அவர்களுக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட தக்க பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் ஒரு கிராமத்தில் பத்துப் பேர்கள் சேர்ந்து





கொண்டு சாராயம் காய்ச்சுகிறார்கள் என்கிற தகவல் கிடைத்தாலும் இவர்கள் இரண்டு பேராக அந்தக் கூட்டத்தைப் போய்ப் பிடிக்க அஞ்சுகிறார்கள். அப்படியே துணிந்து போனாலும் ஓரளவு இவர்களுக்கே ஆபத்து வருகிறது. பல வீண் தொந்திரவுகளும், சண்டை சச்சரவுகளும் ஏற்படுகிறது.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றால், பர்மிட் கொடுக்கும் வழக்கம் போகவேண்டும். பக்கத்து ராஜ்யங்களிலும் இதை அமுல் செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த இலாகா ஓர் தனியான இலாகாவாக இயங்க வேண்டுமே தவிர, போலீஸ் இலாகாவுடன் இணைந்து இருக்கக்கூடாது.

ஆளும் கட்சிக்காரர்கள் எவ்வளவு மோசமாக நடந்தாலும் அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. உதாரணமாக காரில் ஒலி பெருக்கியை வைத்துப் பிரசாரம் செய்கிறார்கள். அதே சமயத்தில் எங்களுக்குப் பிரசாரத்திற்கு லைசென்ஸ் கொடுப்பதில்லை. ஏன் அவர்களை மட்டும் அனுமதித்தீர்கள் என்று டி.எஸ்.பி.யைக் கேட்டால் அவர்கள் லைசென்சு இல்லாமல் செய்கிறார்கள். நீங்களும் செய்வதுதானே என்று சொல்கிறார். ஆகவே எங்கள் உரிமை பறிக்கப்படுகிறது என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*Sri V. K. KRISHNAMURTHY: தலைவர் அவர்களே, இன்று நம் முன் நிற்கும் மதுவிலக்கு மான்யக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பழம் மலிந்த சருக்கத்தைப் பிழை மலிந்த சருக்கம் ஆக்கும் நிலை இல்லாமல் இல்லை என்றாலும், எவ்வளவுக்கெவ்வளவு நன்மையாக இருப்பினும்கூட மாறுபட்ட முறையில் நல்ல மெருகிட்டுக் கூறுகிற இயல்பு நம் நாட்டில் வளர்ந்துகொண்டிருக்கிறது. எதையும் நாம் ஆழ்ந்து, ஆராய்ந்து பேச வேண்டிய நிலையில் இருக்கிறோம். போலீஸ் பகுதியைப் பற்றிக் கூறும்போது அமைச்சருக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள் என்று அதைக் குற்றமாகப் பேசுகிறபோது நமது நாட்டின், சமுதாயத்தில் நிலை என்ன? லண்டன் மாநகரில் என்ன நடந்தாலும் கூட்டம் கூடிப் பார்க்கிற வழக்கமில்லை. யாரையாவது பார்க்க வேண்டுமென்றால், விண்ணப்பம் அனுப்பிப் பார்க்கிறார்கள். நம் நாட்டைப் பொறுத்தவரையில் யார் வந்தாலும், எவர் வந்தாலும், ஒரு நடிகர் வந்தாலும்கூட கூட்டம் கூடி மக்கள் சென்று பார்த்து, ஒழுங்காக இருக்கக் கூடிய போக்கு வரத்துக்குப் பல தடைகள் ஏற்படுகின்றன. இது போன்ற தொல்லை இல்லாமல் இருக்க, மந்திரிகளுக்கும், மக்களுக்கும் மற்ற மேலதிகாரிகளுக்கும் போலீஸ் அனுப்பப்படுகிறதே தவிர, அவர்களுடைய உயிருக்கும், உடலுக்கும் ஆபத்து வருகிற கேவல நிலை தமிழ் நாட்டில் ஏற்படவில்லை என்று தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ் அதிகாரிகளுக்கும், போலீஸ்காரர்களுக்கும் அதிகப் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, அதிகப்படி பணம் எப்படிக் கொடுப்பது என்று பார்க்கும்போது, மக்களிடத்தில் அரசாங்கம் வரி போட வேண்டிய நேரத்தில் எதிர்க் கட்சிகள் அதே நேரத்தில் மக்களிடம் சென்று பணம் கொடுக்க வேண்டாம் என்று கிளர்ச்சி செய்கிறார்கள். கிளர்ச்சி ஒரு பக்கத்தில் இருக்க, பணம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி எதிர்க் கட்சிகள் ஒரு இரண்டுங்கெட்ட நிலையில் வேலை செய்கிற நிலையைப் பார்க்கும்போது இது தமிழ் நாட்டின் துர்பாக்கியம் என்று கூற வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

(Sri R. Subramaniam in the Chair.)

கள்ளர்கள், கொள்ளை அடிக்கிறவர்கள், கொலை செய்பவர்கள், இந்த நாட்டில் எந்த அளவு குறைந்திருக்கிறார்களோ, அந்த அளவுக்குப் போலீஸ் அதிகப்படுத்தாமல் இருக்கக் கூடிய நிலை இருக்கும். எந்த அளவு நாட்டில் தீய சக்திகள், தீய கொள்கைகள், தீய எண்ணங்கள் வளர்ச்சி அடைகிறதோ, அந்த அளவுக்குக் கொள்ளைகளும், கொலைகளும், குற்றங்களும் வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்த வளர்ச்சியைத் தடுக்க பல வழிகளில் தொண்டு செய்ய வேண்டும். போலீஸ் துறையில் செலவைக்

குறைக்க வேண்டுமென்ற நிலை ஓரளவு இருந்தாலும்கூட, மக்கள் சமுதாயத்தில் அன்பு, அறம், நியாயமான முறை எல்லாம் இருந்து நல்ல மனப்பான்மையைத் தூண்டச் செய்து, தீங்குகளை, தீய சக்திகளை சமுதாயத்தில் இல்லாமல் இருக்கச் செய்து, போலீஸ் மீது குறை சொல்லிக்கொண்டு இருப்பதைவிட, போலீஸ் மேலும் மேலும் பெருக வேண்டுமென்பதைவிட சமுதாயத்தில் நல்ல எண்ணங்கள், நல்ல அறங்கள், அன்பு ஆகியவைகளை மக்களுக்கு அறிவுறுத்துகின்ற ஒரு நிலை இருக்க வேண்டும். இத்தகைய நிலையைப் பார்க்கும்போது, 2,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டின் நிலையைப் பார்க்கும்போது வள்ளுவர் போன்ற அரசியல் தத்துவ ஞானிகள் என்ன கூறியிருக்கிறார்—

திருமணப் பெண்டிரும் கள்ளும் கவரும்
திரு நீக்கப்பட்டார் தொடர்பு.

பெரிய ஞானிகளால் கூறியிருப்பதைப் பார்க்கும்போது இன்றளவு இது மாறவில்லை என்றால் நம் சமுதாயத்தில் தீய எண்ணங்கள், தீய சக்திகள், தீய கொள்கைகள் வேரூன்றி இருக்கின்றன என்று பார்க்கவேண்டும். அதே நேரத்தில் சமுதாயத்தில் யாராவது ஒருவரை மரணம் செய்விப்பதற்கும், ஒருவருக்குத் தீங்கு செய்வதற்கும், அடிப்படை எது என்று பார்க்கும்போது அது மதுதான். மதுவைக் குடித்துவிட்டால் எல்லாவறறையும் மறநது அவனுடைய தீய சக்திகளை எந்த அளவு தூண்ட வேண்டுமோ அத்தகைய ஒரு நிலையில் இந்த மது இருக்கிறது என்று உணர்தல் வேண்டும். மது விலக்கு காரணத்தினால் மனிதன் மனத்திலிருந்த தீய எண்ணங்கள் தணிந்து நல்ல முறையில் இருக்க முடிகிறது. மது விலக்கு இன்னும் சரிவர நடைமுறையில் வெற்றிகரமாக இருக்கவேண்டுமென்றால், அது போலீஸ் மூலம்தான் முடியும் என்பது முடியாது. இதிலே மக்கள் ஒன்றுபட்டு இருக்க வேண்டும். மது விலக்குத் திட்டத்தை எகிப்து போன்ற தேசங்களில் வரவேற்று அங்கே புகுத்த வேண்டுமென்று நல்லெண்ணம் இருக்கக் காரணம் மது விலக்கினால் நன்மைகள் என்ன என்று உணரக் கூடிய நிலை என்பதுதான்; இந்த மது விலக்குத் திட்டம் சிறந்து விளங்குவது என்பதுதான்.

அது மட்டுமல்ல, இந்த மதுவைப் பற்றிக் கூறும்போது நாணம் உடையவர்கள் எவரும் இந்த மது அருந்தியவர்கள் முன்பாக நிற்க மாட்டார்கள். 2,000 ஆண்டுகளுக்கு முன்பாகவே நாணம் என்பதில் தலை சிறந்த தான கற்பு நெறி இருக்கக் கூடியவர்கள் மது அருந்தக் கூடியவர்களை எதிர்த்திருக்கிறார்கள். சமுதாயத்தில் இந்தத் தீய சக்தி, இந்தத் தீய உணர்வு, குடும்பத்தில் கூட இருக்கக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய மது விலக்கு வெற்றி பெறுததற்குக் காரணம் சமுதாயத்தில் உள்ள மக்கள் இன்னும் தாழ்ந்த நிலையில் இருப்பது மாத்திரமல்லாமல், சமுதாயத்தில் மேன்மேலும் ஒன்றுபட்டு, சேர்ந்து வாழக்கூடிய நல்ல எண்ணத்தை மக்களிடத்தில் பரப்ப வேண்டும்.

போலீஸ் பற்றிக் கூறும்போது, சென்னை மாகாணத்தில் நல்ல முறையில் சிறந்த முறையில், தொண்டு செய்துகொண்டு வருகிறது. ஒரே ஒரு உதாரணம் சொல்லுகிறேன், ஒரு எம்,எல்.ஏ.யின் மனைவி வெளியில் சென்றபோது அந்த இடத்தில் வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களைச் சுற்றிக் கூட்டம் போட்டு நகர முடியாமல் செய்யும் கேவலமான நிலை நம் நாட்டில் இருந்தால், இந்த நிலை அரசியல் கட்சிகளில் இருக்கக்கூடிய மக்களிடத்தில் இருந்தால், இத்தகைய கேவலமான நிலை வளர்ந்திருப்பதால், ஏன் மந்திரிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக் கூடாது. குறிப்பாகக் கூற வேண்டுமானால், மக்கள் மனதில் அத்தகைய கேவலமான நிலை இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு கொள்கையுடையவர்களை எதிர்க்கும் நிலை சில பகுதிகளில் இருக்கின்றன.

**If a fool throws a diamond into the ocean a thousand wise men can never bring it out.** ஒரு முட்டாள் கடலில் வைரத்தை எறிந்தால் **1,000** அறிவாளிகளாலும்கூட அதை வெளியே கொண்டுவர முடியாது. எல்லோரையும் பாதிக்கிறது. அந்த ஒருவன் தவறு செய்யாது பார்ப்பது





தான் போலீஸ்காரன் வேலை. நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில் போலீஸ் அதிகாரிகள் சிறந்த முறையில், நல்ல முறையில், சமுதாயத்திற்கு நல்ல பாதுகாப்பு மாத்திரமல்லாமல் ஓரளவு உதவி செய்துகொண்டு இருக்கிறார்கள். அந்த தலை சிறந்த முறையில் தொண்டு செய்கிற காரணத்தினால், அனைத்திந்தியாவிலும் சென்னை ராஜ்ய ஐ.ஜீ.க்குக் கௌரவமாகப் பட்டம் வழங்கியதில் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய போலீஸ் நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது மாத்திரமல்லாமல், மேலும் தொண்டு செய்வதற்கு ஊக்கம் அளிக்கக் கூடியதாக இருந்தது. எத்தனையோ குறைகள் இருக்கின்ற மதுவிலக்கைப் பற்றியவரையில், மலைப் பகுதிகளில் மக்கள் அங்கு கூடாத இடத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். போலீஸ் உதவி கோரும்போது போலீஸ்கரர்கள் உதவி செய்கிறார்கள். நான் பல சமயங்களில் போலீஸ்காரர்களை அழைத்துக்கொண்டு போய்ப் பல கேஸ்களைப் பிடித்திருக்கிறேன். எங்கள் ஊரில் இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் ஒத்துழைத்து வருகிறார்கள். சமுதாயமும் போலீஸும் ஒன்றாகச் சேர்ந்து தொண்டு செய்தால் மதுவிலக்குப் போன்ற ஒப்பற்ற நல்ல திட்டங்கள் சமுதாயத்தில் நல்ல முறையில் செயல்படும் என்று சொல்லிக்கொண்டு, போலீஸிலே இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் கனம் நண்பர் கோவிந்தசாமி அவர்கள் கூறியது போல பொருளாதார வளர்ச்சி தேவை என்று உணர்ந்தாலும், அவர்களுக்குக் கொடுப்பதற்காக வரி போடக்கூடிய காலத்தில் கிளர்ச்சி செய்து தடுக்காமல் இருந்தால்தான் முடியும், இல்லையென்றால் முன்னுக்குப் போக முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். **வணக்கம்.**

* **Sri S. THANGAVELU** : கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் போலீஸ் மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இங்கிலாந்து போன்ற மற்ற நாடுகளிலெல்லாம் போலீஸ் மக்களிடத்தில் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள், மக்கள் நல்ல தன்மையில், நல்ல முறையில் எப்படி வாழவேண்டும் என்பதை ஆராய்ந்து ஒரு நல்ல முறையை வழி வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக போலீஸ்காரர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் செய்கிறார்கள் இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்வது முறையல்ல; சரியல்ல. யாரையாவது பார்த்து அவர்கள் குற்றம் செய்கிறார்கள், குற்றம் செய்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருப்போமேயானால், அவர்கள் உண்மையிலேயே குற்றம் செய்யாமல் இருந்திருந்தாலும் அவ்வாறு நாம் வெறுமனே குற்றம் சாட்டுவதன் காரணமாக அவர்கள் அதற்குப் பிறகு குற்றம் செய்ய ஆரம்பித்து விடுவார்களே தவிர குற்றத்தைத் தடுக்க முன் வரமாட்டார்கள். இது மனித இயல்பு. எனவே அவர்கள் பேரில் குற்றங்கள் சொல்ல வேண்டும் என்ற மனப்பான்மையுடன் நாம் இருக்கக்கூடாது. போலீசாருக்கு மேலும் சலுகைகள் தரவேண்டும், அவர்களுடைய சம்பளத்தை 100 ரூபாயாக உயர்த்தினால் அவர்கள் லஞ்சம் வாங்குவது போன்ற காரியங்களில் ஈடுபட மாட்டார்கள், அப்போது நிர்வாகம் நன்றாக நடக்கும் என்றெல்லாம் சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதையெல்லாம் நான் வரவேற்கிறேன். சபையின் சென்ற கூட்டத்தில், மக்களுக்கு வரி போட்டு அதன் மூலம் வரும் பணத்தைக் கொண்டு போலீசாருக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் சர்க்கார் வரிகளைக் கொண்டு வந்தபோது, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அந்த வரிகளை எதிர்த்துப் பேசினார்கள். சர்க்கார் இந்தப் புறம் போனால், "வரி போட்டு மக்களை நசுக்காதீர்கள்" என்று இவர்கள் சொல்கிறார்கள்; அந்தப் புறம் போனால், அரசாங்க ஊழியர்களுக்கு—என்.ஜி.ஓக்களுக்கு—நன்மைகள் செய்வதற்கு தாங்கள்தான் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பது போல் அவர்களுக்குப் பரிந்து பேசுகிறார்கள். இதைப் பார்க்கும் அரசாங்க ஊழியர்கள் என்ன நினைக்கிறார்கள்? எதிர்க்கட்சிக்காரர்களே தங்கள் நன்மைகளைக் கருதி சட்டசபையில் தங்களுக்குப் பரிந்து பேசுவதாகவும், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தங்களைப் பற்றிப் பேசாமல் இருப்பதாகவும் நினைக்கிறார்கள். நான் கூட போலீஸ் இலாகாவில் பல வருட காலம் சேவை செய்திருக்கிறேன் என்பதை இங்கே பெருமையோடு சொல்லிக்

[Sri S. Thangavelu] [12th March 1959

களுக்குத் தண்டனை வாங்கித் தர வேண்டிய பொறுப்பு போலீசாருக்கு இருக்கிறது. இந்தப் பொறுப்பை உடைய போலீசார் எல்லோருக்கும் நல்லவர்களாக இருக்கமுடியாது.

சர்க்கார், போலீசாருக்கு வீட்டு வசதிகளையும் வைத்திய வசதிகளையும் அளிக்க வேண்டும். அத்தோடு ஜில்லா விட்டு ஜில்லா வந்து உத்தியோகம் பார்க்கும் போலீஸ் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் மீண்டும் தன் சொந்த ஜில்லாவிற்குப் போக வேண்டும் என்று மனு கொடுத்தால் ஜில்லா D. S. P. கள் மனுவை அங்கீகரித்து மாற்றுதல் வேண்டும் என்ற உத்திரவை கனம் அமைச்சர் அவர்கள் செய்தல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாட்டின் நிர்வாகத்திற்கு பங்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்காக, போலீஸ் சிப்பந்திகளுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் மேலும் மேலும் நல்ல சலுகைகள் கொடுத்து அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடிக்கிறேன்.

10. a.m. *SRI V. SUBBIAH : தலைவர் அவர்களே, டிமாண்ட் 15ன் கீழ், போலீஸ் மான்யத்திற்காக 5,85,73,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமக்குச் சுதந்திரம் கிடைத்ததற்குப் பிற்பாடு, ஒவ்வொரு ஆண்டையும் எடுத்துப் பார்த்தால் இந்த போலீஸ் இலாகாவிற்குக் குறைச்சல் இல்லாமலேயே பணம் செலவழித்து வருகிறார்கள். பாதுகாப்பு இலாகா என்று இருக்கக்கூடிய போலீஸ் படையினருக்கு, நமக்கு கிடைக்கும் வருவாயில் ஒரு பெரும் பகுதியைச் செலவு செய்கிறோம். ஒரு ராஜ்யத்தின் அமைப்பிலே, சமுதாய அமைப்பிலே போலீசே அவசியமில்லை என்றதொரு நிலை வரவேண்டுமென்றுதான் நம் நாட்டில் இருக்கக்கூடிய பெரியோர்களும், இன்று உலகத்திலேயே பெரிய அறிஞர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் சொல்கிறார்கள். அந்த நிலையில் ஒரு சமுதாய அமைப்பு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சமுதாய அமைப்பு இன்று நம் நாட்டில் இருக்கிறதா என்று பார்த்தால், போலீசுக்காக நமது ஆட்சியில் தொகை கூடுதலாக, கோடி கோடியாக செலவு செய்யப்படுவதைத்தான் நாம் பார்க்கிறோம். அதைக் குறைக்கும் அளவிற்கு இன்று நிலையில்லை. சென்னை நகரில் வேண்டுமானால், போலீஸ் கமிஷனர், சார்ஜண்ட்கள் போன்றவர்களை வைத்துக் கொள்ளலாம். அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் இந்த நாட்டில் வெளி ஜில்லாக்களில் எத்தனையோ போலீஸ் உயர்தர அதிகாரிகள் இருக்கிறார்கள். ஐ. ஜி., டி.ஐ.ஜி. போன்றவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். நம் ராஜ்யத்தில் டி.ஐ.ஜி. க்கள் நான்கு பேர்கள் இருக்கிறார்கள். டி.எஸ்.பி. க்கள் 19 பேர்கள் இருக்கிறார்கள். டெப்டி சூப்பரின்டெண்ட் ஆப் போலீஸ் 56 பேர்கள் இருக்கிறார்கள் என்ற நிலைதான் இன்று இருக்கிறது. அதோடு, கீழ் நிலையில் உள்ள எத்தனையோ போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். இந்த நிலை எதற்காக இந்த நாட்டில் இருக்கவேண்டுமென்று நான் கேட்கிறேன் ? ஒரு ஜில்லா போலீஸ் சூப்பரன்டென்ட்டென்ட் மாத்திரம் இருந்தால் போதாதா ? ஏன் உயர்ந்த அதிகாரிகளை சிருஷ்டித்துக் கொண்டே போகிறீர்கள் என்று கேட்கிறேன் ? ஏன் இப்பொழுது இருக்கும் அத்தனை பேர்களையும் அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று அமைச்சர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நாட்டில் வாழும் மக்களின் 80 சதம் கிராமப்புறங்களில்தான் வாழ்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. அரசாங்கப் புள்ளிவிவரங்களே அதைக் கூறுகின்றன. அந்த நிலையில் கிராம மக்களுக்கு நீங்கள் எந்தளவு வசதிகள் செய்து கொடுக்கிறீர்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்று கிராமங்களில் இருக்கும் நிலையைப் பார்த்தால், கிராம மக்கள் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்களும், கால்நடைகளும் கொள்ளையடிக்கப்படுகிறது, வைக்கோல் போர்கள் தீ வைக்கப்படுகின்றன. அவைகளுக்கு இன்றையதினம் பாதுகாப்பு கொடுக்கப்படுவதில்லை, என்ற குற்றச்சாட்டு இருந்துகொண்டேயிருக்கிறது. இன்றையதினம் ஒரு பக்கத்தில் வறுமையும், இன்னொரு பக்கத்தில் லஞ்சமும் தாண்டவமாடுகிறது. போலீஸார் பலரும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று மக்களிடையே பரவலாக ஒரு பேச்சு இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று நாம்



12th March 1959] [Sri V. Subbiah]

ஆராய வேண்டும் ? சஞ்லம் வாங்குவதற்குக் காரணம், இன்று நம் நாட்டில் இருக்கும் வறுமைதான். போலீஸாருக்குக் கொடுக்கப்படும் சம்பளக் குறைவுதான் அதற்கு இன்னொரு காரணம் என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இன்று நம் நாட்டில் சாதாரணமாக களவாடவோ, பொய் சொல்லவோ, தகுதியற்ற, நேர்மையற்ற முறையில் நடக்கவோ, சத்தியத்திற்கு மாறுபட்ட முறையில் நடக்கவோ மக்கள் விரும்புவதில்லை. ஆனால் வறுமை வரும்போது, தங்கள் வாழ்க்கை நிலையை சரிக்கட்டுவதற்கு பொய் சொல்கிறார்கள். லஞ்சமும் வாங்க முற்படுகிறார்கள். இதுதான் இன்றிருக்கும் ஒரு நிலை. இந்த நிலை நீக்கப்படவேண்டுமென்றால் இன்றுள்ள போலீஸ் உயர்தர அதிகாரிகளை வேறு இலாகாக்களுக்கு மாற்றி விட்டு கீழ்தர போலீஸ் அதிகாரிகளுக்கு, கானஸ்டேபிள்களைப் போன்றவர்களுக்கு உயர்தரமான சம்பளம் அளிக்கப்பட வேண்டும். அவர்களின் குடும்பங்கள் நல்லமுறையில் வாழ்வதற்கு, அவர்களுக்கு வீட்டு வசதி, அவர்களது பிள்ளைகள் படிப்பதற்கு வசதி, சுகாதார வசதி போன்றவைகளை நாம் செய்து கொடுப்போமேயானால், போலீஸ் இலாகாவின் தரமும் உயரும், அவர்களிடம் இப்பொழுது இருக்கும் சில பழக்க வழக்கங்களும் மாறும். இன்றைக்கு போலீஸ் இலாகாவில் நீங்கள் ஏதாவது மாறுதல் செய்திருக்கிறீர்களா என்று பார்த்தால், கிராம மக்கள் சொல்கிறார்கள் போலீஸ்காரர்களின் தொப்பி மாத்திரம்தான் மாற்றப்பட்டிருக்கிறதென்று. அந்த அளவில்தான் இன்று போலீஸ் இலாகாவில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய தினம் போலீஸ்காரர்களின் வேலைகள் எப்படியிருக்கிறது என்று பார்த்தால், அமைச்சர்கள் வெளியே செல்லும்போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும், கிராமப்புறங்களில் சில குறிப்பிட்ட வேலைகளைப் பார்ப்பதற்கும் தான் அவர்களது முழு நேரமும் செலவிடப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஒரு கிராமத்தில் ஒரு கொலை நடந்தால், அங்கு இரண்டு தினங்கள் சென்ற பின்பும் போலீஸ் அதிகாரிகள் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டுகள் கிராமப்புறங்களில் இருந்துகொண்டேயிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் நான் வேறு ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அதாவது, இன்றையதினம் நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? இன்று, மதுவிலக்குக் குற்றங்கள், கொலைக்குற்றங்கள், கொள்ளைக் குற்றங்கள் இவைகளில் நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். இன்றையதினம் நம் சமுதாய அமைப்பிலுள்ள பல கோளாறுகள் காரணமாகவும், வறுமை காரணமாகவும், நேர்மையற்ற தன்மை நாட்டில் இருப்பதின் காரணமாகவும்தான் குற்றங்கள் பல செய்யப்பட்டு, நிரபராதிகளும் தண்டிக்கப்படுகிறார்கள். போலீஸ் அதிகாரிகளில் நல்லவர்களும் இருக்கிறார்கள். உயர்தரமானவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் அப்படிப்பட்டவர்கள்கூட எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அரசியல் வாதிகளின் தலையீட்டால், இன்று யார் கையில் அதிகாரம் இருக்கிறதோ அவர்களின் தலையீட்டால், நேர்மை உள்ளம் படைத்தவர்களும், உண்மைக்குப் புறம்பாக நடக்கக்கூடாது என்று நினைப்பவர்களும், சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று நினைப்பவர்களும்கூட இன்று தப்பு செய்ய முன் வந்துவிட்டார்கள். இது, இன்றையதினம் இருக்கக்கூடிய சூழ்நிலையினால் ஏற்பட்டதாகும். அவர்களுடைய கஷ்ட காலமும் அதற்குக் காரணமாகும். இந்த நிலை மாற வேண்டும். ஆகவே, இது விஷயத்தில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அடுத்தபடியாக, இன்று அரசியல் வாதிகளின் தலையீடு காரணமாகப் பல கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை அடைந்திருக்கிறார்கள். கொலைக்குற்றங்கள் போன்ற குற்றங்கள் இன்று நாட்டில் பெருகிவிட்டன. போலீஸ் இலாகாவில் ஊழல்கள் மலிந்து இருக்கின்றன. இவைகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தைரியமாக முன் வரவேண்டும். யாராயிருந்தாலும் சரி, தப்பு செய்வதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. இது விஷயத்தில் அமைச்சர் அவர்கள் மிக உறுதியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. போலீஸ் இலாகாவில் இருப்பவர்களுக்கு நிறைய வாகன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

[Sri V. Subbiah] [12th March 1959

சமுதாய நல இலாகா அதிகாரிகளுக்கு இன்று ஜீப் போன்றவைகள் கொடுக்கப்படுகின்றன. அதேபோன்று, கிராமப்புறங்களில் உள்ள மக்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கு போலீஸாருக்கும் வாகன வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களும், கிராம மக்களும் முன்னேற்றம் அடைந்தால்தான் நாடு முன்னேறமுடியும் என்பதை எல்லோரும் அறிவர். இன்று கிராமங்களில் இருப்பவர்கள் நகரங்களுக்கு வந்து குடியேறுவது என்பது இயற்கையாகவே அமைந்திருக்கிறது. கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்குத் தக்க பாதுகாப்புகள் கொடுப்பதற்கு போலீஸ் இலாகா போன்ற இலாகாக்கள் தவறி விடக்கூடாது என்பதுதான் என்போன்றோரின் கவலை. அதை அமைச்சர் அவர்கள் கவனித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

10-10. a.m. SRIMATHI RAJATHI KUNHITHAPATHAM : சட்டமன்ற தற்காலிக தலைவர் அவர்களே, நான் இந்தப் போலீஸ் மான்யக் கோரிக்கையை ஆதரித்துப் பாராட்டி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் போலீஸ் ஆட்சியைப் பற்றி, போலீஸ்காரர்களுடைய நடவடிக்கைகளையும், அவர்களிடத்தில் இருக்கிற குற்றம் குறைகளையும்பற்றியும் எதிர்த் தரப்பிலே இருக்கிற அங்கத்தினர்கள் சொல்லும்பொழுது கண்ணீர் புகையை விடுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்தக் கண்ணீர் புகையைக் கண்டு கண்ணீர்த் துளிகள் ஏன் பயப்படவேண்டும் என்று என் போன்றவர்களுக்குத் தோன்றுகிறது. கண்ணீர்ப் புகைக்குப் பதிலாக வெங்காயத்தை உபயோகிக்கலாம் என்று சொன்னார்கள். வெங்காயத்திற்குப் பதிலாக மண்ணைத் தூவலாம் என்று ஒரு யோசனையைக்கூட அவர்கள் சொல்லியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏதோ குற்றம் குறைகளைக் கூறவேண்டுமென்பதற்காக இம்மாதிரி அங்கத்தினர்கள் சொல்லுவதைக் கேட்டு வருத்தப்படவேண்டியிருக்கிறது. மேலும் ரூ. 1–4–0 கொடுத்து விட்டு முதல் அமைச்சர் காமராஜ அவர்கள "சாப்பிட்டீர்களா" என்று கேட்டார்கள் ஆறுதல் அளிப்பதற்கு என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். காமராஜ் அவர்கள் மட்டும் அல்ல. தமிழ் நாட்டில் பிறந்த தமிழன் அத்தனை பேர்களும் "மருந்துண்டாலும் விருந்தோடு உண்ணல்", கூழானாலும் கூடிக்குடி" என்ற பண்புடையவர்கள். அந்த நிலையைத் தெரிந்து கொண்டிருப்பவர்கள் நம்முடைய நாட்டு மக்கள் பசி என்று வந்தவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள். அதுதான் இந்த நாட்டுப் பண்பு. ஆகவே, சர்க்கார் அவர்களுக்கு ரூ. 1–4–0 படி கொடுத்துவிட்டதால் அவர்களுக்கு நிம்மதி அளிக்கவில்லை. அவர்களுக்கு இந்தப் படி போதாது என்பதை உணர்ந்துதான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டுப் பண்பு இந்த நாட்டில் எல்லோரிடத்திலும் வளர வேண்டுமென்பதற்காக முதல் அமைச்சர் மட்டுமல்ல, மற்ற அமைச்சர்களும் எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பது நமக்கு மிகவும் ஆறுதல் அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, மந்திரிகள் போகும்பொழுது பந்தோபஸ்து ஏன் என்று கேட்டார்கள். இம்மாதிரி வெகுவாகப் பல கூட்டங்களிலும், பொது மேடைகளிலும் மந்திரிகளுக்கு இத்தனை பந்தோபஸ்து ஏன், மண்ணோடு மண்ணாக போலீஸ்காரன் எவ்வளவு நேரம் நின்று கொண்டிருப்பான் என்றெல்லாம் பேசப்படுகிறது. இம்மாதிரி வெளியிலே பல கூட்டங்களில் பேசப்படுவதை நாம் கேட்டிருக்கிறோம். மேல் நாடுகளில் சில சமயங்களில் கோழி முட்டையும் அழுகிய தக்காளியும் எரியப்படும்பொழுது, நம் நாட்டில் ஏன் கல்லை எரியக்கூடாது என்று இந்த சட்ட சபையில் எதிர்க் கட்சியில் பேசப்பட்டது இப்பொழுது என் நினைவுக்கு வருகிறது. அழுகிய தக்காளியும், முட்டையும் விட்டு எரிந்தால் மேலே உள்ள உடையை கழற்றி விட்டால் போய்விடும். ஆனால், இன்று எதிர்த் தரப்பிலுள்ளவர்கள் நம் நாட்டு மக்களிடையே கற்களை எரிவதோடுகூட சாணி உருண்டையை எரியும் பண்பையும் வளர்க்கும்பொழுது நாம் ஏன் மந்திரிகளுக்கு பந்தோபஸ்து செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். அதோடுகூட மேல் நாட்டில் செயற்கை சந்திரனை ஆகாயத்தில் பறக்கவிடும்பொழுது, நம் நாட்டில்



12th March 1959] [Srimathi Rajathi Kunchithapatham]

செருப்பை ஆகாயத்தில் பறக்க விடும் பண்பை எதிர்க்கட்சிகள் வளர்க்கும்பொழுது மந்திரிகளுக்கு பந்தோபஸ்து இருக்கத்தான் வேண்டும். அவர்களும் பொது மக்களைப்போல்; சாதாரண மக்களைப்போல் நடத்தப் படக்கூடாது என்று நான் இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மந்திரிகள் காரில் வரும்போது கொடி வைப்பது கூடாது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னார்கள். இப்பொழுது மந்திரிகள் காரில் கொடி வைப்பதில்லை. இப்பொழுது காரில் கொடி இல்லாமல் தான் மந்திரிகள் செல்லுகிறார்கள். ஏதோ குற்றச்சாட்டைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னார்கள். இப்பொழுது மந்திரிகள் காரில் கொடி இல்லாமல்தான் போகிறார்கள். எல்லோரும் இப்பொழுது பெரிய கார்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மந்திரிகள் கார் எது என்று தெரியவில்லை. கனம் அங்கத்தினர் ஒருவர் ஒரு மாற்று யோசனையைத் தெரிவித்தார்கள். அது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. மந்திரி கார் வரும்பொழுது ஒருவர் அங்கே கொடி வைத்துக்கொண்டு நிற்கலாம், போலீஸ்காரர் நிற்கவேண்டியதில்லை என்று சொன்னார்கள். மந்திரி கார் வரும்வரையில் ஒருவரோ அல்லது இருவரோ கொடியை வைத்துக்கொண்டு நிற்கவேண்டியிருக்கும். அதற்குப் பதிலாக போலீஸார்கள் நிற்கிறார்கள். ஆகவே, ஒருவர் நின்று கொடியை காட்ட வேண்டிய அவசியமில்லை. இம்மாதிரி யோசனையைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ளாமல் இருக்க முடியாது. போலீஸ்காரர்களுக்கு சம்பளம் போதாது, ரூ. 1–4–0 படி போதாது என்பதையும் நாம் எல்லோரும் உணர்கிறோம். எங்கள் தரப்பிலே பேசிய அங்கத்தினர் கூட இதைப்பற்றிச் சொன்னார்கள். வரி போடும்பொழுது, வரி எதற்கு என்று கூச்சல் போடுகிறார்கள். வரி போடாமல் எப்படி இவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்க முடியும், படியை உயர்த்த முடியும் ? கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது என்ற முறையில் வேலிக்குப் பரிந்து கொண்டு ஓணான் பேசுவதுபோல் பேசிவிட்டால் போதாது. அவர்களுக்குப் படி ரூ 1–4–0 போதாது என்பது எல்லோரும் அறிந்ததுதான். பேசுவது எளிது, ஆனால் சுமப்பது கடினம் என்பதை அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, போலீஸ்காரர்களின் நிலைமையை ஆளும் தரப்பில் இருப்பவர்களும் அதிகமாக அதைப் பற்றி உணர்ந்துதான் இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 1–4–0 போதாது என்பது தெரிந்ததுதான். அந்த ரூ. 1–4–0 பெற்றுக்கொண்டுதான் இன்று எவ்வளவோ சேவகர்கள் சேவிகைகள் வேலை செய்து வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் படி இவைகள் போதாதுதான். அதை அதிகப் படுத்தவேண்டியது அவசியம்தான். அந்த நிலையை எல்லோரும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் நிலைமை உணர்ந்துதான் போலீஸ்காரர்களுடைய மனைவிமார்கள் வீட்டில் இருந்தபடியே பல குடிசைத் தொழில்களில் ஈடுபட்டு அவர்களும் கொஞ்சம் சம்பாதிக்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் வாங்கும் ரூ. 30 சம்பளம் போதாத. அவர்கள் மனைவிமார்கள் வீட்டில் இருந்து கொண்டே சமையல் செய்து கணவன்மார்களுக்கு வேண்டிய பணியைச் செய்து ஆபீஸுக்கு அனுப்பிவிட்டு, குழந்தைகளைப் கவனிப்பதோடும், குடும்பத்தை பராமரிப்பதோடும் கூட குடிசைத் தொழிலில் ஈடுபட்டு மாதம் ரூ. 30 சம்பாதிக்கும்பொருட்டு அம்பர் ராட்டையில் நூற்பதில் பல மாதர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி மாதர் பகுதிகளில் பல இடங்களில் நடந்துகொண்டிருக்கிறது. அம்பர் ராட்டை மட்டுமல்ல; அச்சுத் தொழிலிலும் இம்மாதிரி சில மாதர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். சமீபத்தில் பாளையங்கோட்டையில் மந்திரி அவர்கள் திருக்கரத்தினாலேயே ஒரு சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இதைத் தவிர அவர்களுக்கு தையல் வேலை, பூ வேலை போன்ற வேலைகள் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போலீஸ்காரர்களுக்கு முன்னேற்றம் ஏற்படுவதற்கு இம்மாதிரி எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், சட்டங்களை வாழ்விலே நிலைநிறுத்துகின்ற போலீசார்கள், அதோடுமட்டும் நில்லாமல் நடைபாதைகளை அமைத்துக்

[Srimathi Rajathi Kunchithapatham] [12th March 1959

கொடுக்கிறார்கள். பாலங்களை அமைத்துக் கொடுக்கிறார்கள்; ரோடுகளை செப்பனிட்டுக் கொடுக்கிறார்கள். இன்னும் இம்மாதிரி எத்தனையோ சமூக சேவைகள் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. முக்கியமாக சேரிகளிலே அவர்கள் ஹரிஜனங்களுக்குப் பல வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள், நடை பாதைகளை அமைத்துக்கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக போலீஸ் புலி வருகிறது, வருகிறது என்று பயங்காட்டாமல் அவர்கள் சமூக சேவையிலும் ஈடுபடத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் மரியாதை வாரம் கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல், சமூக சேவையிலே ஈடுபட்டு, கிராமப்புறங்களில் மக்களுக்கு அந்த வழியிலும் சேவை செய்கிறார்கள். திருநெல்வேலியில் இம்மாதிரி போலீஸ்காரர்கள் பல சமூக சேவையில் ஈடுபட அங்கு இருக்கும் டி.எஸ்.பி. அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர் ஊக்கமுள்ள ஒரு அதிகாரியாக இருப்பதால் அங்கே சர்க்கார் திட்டங்களெல்லாம் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டு வருகிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

கடைசியாக, பெண் போலீசைப் பற்றி ஒரு வார்த்தை. பெண்கள் போலீஸ்காரர்களாக நியமிக்கப்படவேண்டும் என்று சமூக சேவிகைகள் பல பேர்கள் பல இடங்களில் எடுத்துக் கூறியிருப்பது நினைவு இருக்கலாம். பெண்கள் போலீஸ் வேலைக்குத் தகுதியற்றவர்கள், அவர்கள் ஆண்களுக்குச் சமமாக வீரத்துடனும் தீரத்துடனும் நிற்க முடியாது என்று சிலர் சொல்லுகிறார்கள். அதை ஒரு விதத்தில் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளுகிறேன். இல்லை என்று சொல்லவில்லை. இருந்தபோதிலும், அவர்கள் முற்றிலும் தைரியம் அற்றவர்கள் என்று சொல்ல முடியாது. முன் காலத்தில் சாந்துபீபீ, துர்க்காபாய், லக்ஷ்மி பாய் போன்ற வீரப்பெண்மணிகள் கோட்டை கொத்தளங்களில் தைரியத்துடனும், தீரத்துடனும் கடைசி சொட்டு ரத்தம் சிந்தும்வரையில் நின்று, வெற்றி வாகை சூடியிருக்கிறார்கள். அவர்கள் ஆண்களுக்குச் சமமாக சண்டைக்குச் செல்ல வேண்டும். சமர் புரியவேண்டுமென்று நான் கூறவில்லை. இருந்தபோதிலும், அநேக பெண்கள் வாழ்க்கையில் வழி தவறி நடந்துவிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரி வாழ்க்கையில் வழி தவறி நடந்த பெண்களை "விஜிலன்ஸ் ஹோமுக்கு" அழைத்துச் செல்லும்போதும், அவர்கள் தண்டிக்கப்பட்ட பிறகும், தண்டனை அடைவதற்கு முன்பும் சில மணி நேரங்களாவது ஆண் போலீஸ்காரரர்கள் கையில் ஒப்படைக்கப்படுகிறார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் சொல்லொண்ணா கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்பது என் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். அம்மாதிரி குற்றம் செய்த பெண்களை "விஜிலன்ஸ் ஹோமுக்கு" அழைத்துச் செல்வதற்கும், கோர்ட்டுக்கு அவர்களை அழைத்துச் செல்லும்போதும், கோர்ட்டில் அவர்களுக்கு நீதி வழங்கப்படும்வரையில் அவர்கள் தங்கும்போதும் அவர்களைப் பெண் போலீசார் கையில் ஒப்படைத்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான விண்ணப்பம். அவர்கள் பெண் போலீஸார் பாதுகாப்பில் இருந்தால் அவர்களுக்கும் சிறிது ஆறுதலாக இருக்கும். இம்மாதிரி பெண்களை போலீஸ்காரர் பாதுகாப்பில் சில மணி நேரம் விட்டு வைக்கும்போது, அவர்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற புகார் என் போன்றவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதைக் கேட்கும்பொழுது மனம் வேதனைப்படுகிறது. ஆகவே இம்மாதிரி வேலைகள் செய்வதற்குப் பெண் போலீஸ்காரர்களை நியமித்து பெண் குற்றவாளிகளை அவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

10-20 a.m. **SRI D. S. AUTHIMOOLAM :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த போலீஸ் மான்யத்தின் மீது பேசும்போது திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த வரையில் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். திருநெல்வேலி ஜில்லாவில் அம்பாசமுத்திரம் தாலூகாவில் சில விவசாயச் சங்கங்கள்



12th March 1959] [Sri D. S. Authimoolam]

இருபது வருஷ காலமாக ஓரளவு வேலை செய்து வருகின்றது. அதை திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள டி.எஸ்.பி. அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு அந்த விவசாய சங்கங்கள் எல்லாம் வேலை செய்யவொட்டாமல் எப்படியாவது ஒழித்து விடவேண்டும் என்று பலவிதமான பொய் கேஸ்களைப் போட்டு வருகிறார்கள். மேலும் பல ஜாமீன்களை எல்லாம் போட்டிருக்கிறார்கள். இந்த கேஸ்களில் எல்லாம் கொடுக்கப்பட்ட சார்ஜ்கள் எல்லாம் எப்படியிருக்கின்றன என்று பார்த்தால் மிகவும் அற்பத்தனமாக இருக்கின்றன. ஒரு ஓட்டை உடைத்துவிட்டான், ஒருவன் அதை செய்துவிட்டான், ஒருவன் இதைச் செய்து விட்டான் என்றெல்லாம் கேஸ் போடுகிறார்கள். உண்மையில குற்றம் யார் செய்தார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். இம்மாதிரிப்பட்ட கேஸ்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போகும்போது இவைகள் எல்லாம் பொய் கேஸ்கள் என்று தள்ளப்பட்டிருக்கின்றன. அதே மாதிரிதான் ஆம்பூர் என்ற ஊரில் ஒரு விவசாய சங்கம் இருக்கிறது. அந்த இடத்திலுள்ள சங்க ஊழியர்கள் எல்லாம் காங்கிரசுககு எதிராக வேலை செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக அங்குள்ள ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் கீழ் வேண்டுகோளின் பேரில் விவசாயச் சங்க தொழிலாளர்களின் மீது கேஸ் போட்டார்கள். இந்த கேஸ் கோர்ட்டுக்குப் போனபோதுகூட இந்தக் கேஸ் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் தூண்டுதலின் பேரில்தான் போடப்பட்டிருக்கிறது என்று ஜட்ஜ்மெண்டில்கூட சொல்லியிருக்கிறார்கள். . . . .

**MR. SPEAKER :** தயவு செய்து பொதுவாகச் சொல்லுங்கள், குறிப்பிட்ட ஆட்களைப்பற்றிச் சொல்லுவது சரியல்ல என்பது என் அபிப்பிராயம்.

**SRI D. S. AUTHIMOOLAM :** ஜட்ஜ்மெண்டில் சொல்லியிருப்பதைத் தான் நான் சொல்லுகிறேன் . . . .

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** ஜட்ஜ்மெண்டில் சொல்லி இருப்பதைதான் சொல்லுகிறீர்கள் என்றிருந்தால், ஜட்ஜ்மெண்டை கையில் வைத்துக் கொண்டு சொல்ல வேண்டும். அதல்லாமல் சொல்லுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** பொதுவாகச் சொல்லுவதுதான் நல்லது என்பதை நான் சொன்னேன். போலீஸ் அதிகாரிகளைப்பற்றி குறைகளைச் சொல்லுவதாக இருந்தால் அதற்குப் பதில் சொல்லுவதற்கு அமைச்சர் அவர்கள் இங்கு இருக்கிறார்கள். அதல்லாமல் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களைபபற்றி யெல்லாம் குறை சொல்லிக் கொண்டிருந்தால் அதை மறுத்துச் சொல்வதற்கு அவர்கள் இங்கு இல்லை. ஆகவே பொதுவாகச் சொல்லுவதுதான் நல்லது, அதுதான் பொதுவான கொள்கையுமாகும்.

***SRI D. S. AUTHIMOOLAM :** இப்பொது என் கையில் ஜட்ஜ்மெண்ட் இல்லை. கூடிய சீக்கிரத்திலேயே அதை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன் . . .

**Mr. SPEAKER :** அதற்கு முன்னால் நீங்கள் எப்படி இதை சொல்ல முடியும் ?

***SRI D. S. AUTHIMOOLAM :** இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால், பரந்த அளவில் பொதுஜனங்களுக்காக வேலை செய்து கொண்டிருக்கும் விவசாயச் சங்கங்களை யெல்லாம் நசுக்குவதற்காக திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள டி.எஸ்.பி. வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் ஏன் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அவருடைய சூழ்நிலை அந்த விதத்தில் அமைந்திருக்கிறது. இப்போது நாட்டிலிருக்கின்ற சூழ்நிலையை அவர் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய பெண்டு பிள்ளைகள் நல்ல முறையில் வாழ வேண்டும், தனக்கு நல்ல முறையில் ப்ரமோஷன் முதலியவை கிடைக்கவேண்டும் என்றெல்லாம் எண்ணம் இருந்து கொண்டிருப்பதால்தான் இப்படிப்

[Sri D. S. Authimoolam] [12th March 1959

பட்ட கொள்கைகளை யெல்லாம் கடைபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் விக்ரமசிங்கபுரம் எல்லையில் உட்பட்ட பொதுக்குடி என்ற இடத்தில் ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது. அங்கு பஞ்சாயத்து போர்டு மெம்பராக இருக்கும் ஒருவருடைய தகப்பனார் இறந்துபோனார். அவர் மிகவும் வயதானவர், அவர் இறந்து போனது மிகவும் மர்மமாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு அங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள், விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த—இந்தச் சங்கம் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நடந்து கொண்டிருக்கிறது—தொழிலாளர்கள்தான் அடித்துக் கொலை செய்து கிணற்றில் கொண்டு போய் போட்டு விட்டார்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதன் பின்னால் பிரேதத்தை எடுத்து எக்ஸ்பர்ட் அபிப்பிராயத்திற்காக அனுப்பினார்கள். அதன் பின்னால் இது விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருக்கிறது என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னால் போலீஸ் அதில் தலையிடவே இல்லை. தலையிட்டால் அதில் சில காங்கிரஸ்காரர்கள் உட்படுவார்கள் என்ற பயத்தால் அந்த கேஸை அப்படியே அமுக்கிவிட்டார்கள். அதோடு அந்த கேஸும் போய் விட்டது. குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்ததாம் என்று சொல்வதுபோல இந்த மாதிரியான சம்பவங்கள் ஏற்பட்ட பின்பும்கூட பல அக்கிரமங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்குள்ள விவசாயச் சங்கத்தொழிலாளர்களின் மீது, அவர்கள் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் மீது ப்ளிம்ஸி சார்ஜ் (flimsy charges)களை கொண்டு ஜாமீன் கேஸ் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி நடந்து கொண்டிருந்தால் இந்த நாட்டில் நியாயத்திற்கும் சட்டத்திற்கும் எந்த விதத்தில் மதிப்பு இருக்கும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தப் பகுதிகளில் பல சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி நடப்பதற்குக் காரணம் என்னவென்றால், கனம் போலீஸ் அமைச்சர் அவர்களுடைய ஆதரவை சில பெரிய மனிதர்கள் வைத்துக்கொண்டு என்னவேண்டுமென்றாலும் செய்யலாம் என்று நினைத்து நடந்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில், ஒரே சமயத்தில் ஐந்தாறு சப்-இன்ஸ்பெக்டர்கள், இம்மாதிரிப்பட்ட பெரிய மனிதர்கள் எல்லோரும் சேர்ந்து கள்ளச் சாராயங்களையும், இங்கிலீஷ் சாராயங்களையும் குடிக்கிறார்கள். இதைப்பற்றியுள்ள விவரங்கள் எல்லாம் டி.எஸ்.பி.க்குத் தெரியும், டி. எஸ்.பி.-க்கு இதில் தலையிடுவதற்குப் பயம், ஏனென்றால் தனது பதவிக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என்று அவர் பயப்படுகிறார். இது தவிர நான்கு தினங்களுக்கு முன்னால் கிடைத்த தகவலின்படி, முப்பது மைலுக்கு அப்பால் இருக்கும் ஒரு எல்லையிலுள்ள ஹெட் காண்ஸ்டபிள் ஒருவர், இன்னொரு கிராமத்திற்கு வந்து ஆட்களை அடித்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் போலீஸ் அமைச்சருக்கு வேண்டிய சில ஆட்களின் தூண்டுதலின் பேரில் தான். . . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்கு வேண்டியவர்கள் அங்கு சிலர் இருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், அவ்விதம் சிலர் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவ்விதம் யாராவது இருப்பது அங்கத்தினர்களுக்குத் தெரியுமென்றால் இங்கு வைத்தே-இந்த சபையில் வைத்தே—சொல்லலாம், இங்கு வைத்து பகிரங்கமாகச சொல்ல முடியவில்லை என்றால் தனியாக என்னிடம் சொல்லலாம். எனக்குத் தெரிந்தவரையில் அவ்விதம் யாரும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* SRI D. S. AUTHIMOOLAM : அவர்களைப்பற்றி நான் அமைச்சர் அவர்களிடத்தில் தனியாகச் சொல்லுகிறேன். அவர்களுடைய தூண்டுதலின் பேரில் பல சம்பவங்கள் அங்கு நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் சொல்லுவதில்கூட சில கஷ்டங்கள் இருக்கின்றன. இப்போதுகூட என்னுடைய—(லைப்) (life)—உயிரை ரிஸ்க்-காக வைத்துக்கொண்டுதான் நான் இவ்வளவையும் சொல்லுகிறேன். அங்கு பல அக்கிரமங்கள் போலீஸ் அதிகாரிகளால் நடத்தப்படுகின்றன. இவைகள் எல்லாம் டி.எஸ்.பி.-க்குத் தெரியும். தெரிந்தும் போலீஸ் அமைச்சர் அவர்களுடைய ஆட்களுடைய



12th March 1959] [Sri D. S. Authimoolam]

வேண்டுகோளின்படி ஒன்றும் செய்ய முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார். இந்த விதத்தில் தனது கையாலாகாததனத்தை காண்பிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார். ஆகவே இந்த முறையில் போலீஸ் நிர்வாகம் போய்க்கொண்டிருந்தால் நமது நாட்டில் எப்படி நியாயமும், சட்டமும் எந்த விதத்தில் இருக்கும் என்பதை கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் நான்கு தினங்களுக்கு முன்னால் வல்லநாடு எல்லையிலுட்பட்ட ஹெட்கான்ஸ்டபிள் முப்பது மைலுக்கு அப்பால் இருக்கிற முக்கூடல் என்கிற இடத்தில் வந்து ஆட்களை அடித்திருக்கிறார். கேஸ் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதற்காக எங்கேயோ கொண்டு செல்லுகிறார்கள். இதைப்பற்றிக் கேட்டால் கள்ளச் சாராயம் காய்ச்சினதாக கேஸ் போடப்பட்டிருக்கிறது என்றும், பல கன்காக்ஷன் கேஸ் போட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விடுகிறார்கள் சமீபத்தில் பாப்பாங்குளம் என்கின்ற ஊரில் ஒரு கொலை கேஸ் நடந்தது. அந்த கேஸ் செஷன்ஸ்-ஷில் விசாரணைக்காக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் போலீஸ் அதிகாரிகள்—அம்பாசமுத்திரம் பேலீஸ் சூப்பிரண்டண்டன்ட் தலைமையில்—போய் பிரதிவாதிகளின் வீட்டுக்குப்போய்—ரெயிட்—(raid) செய்து சட்டிபானைகளை எல்லாம் கீழே போட்டு உடைத்து பலவிதத்திலும் துன்புறுத்தியிருக்கிறார்கள். இந்த மாதிரியெல்லாம் நடந்து கொண்டிருந்தால்—எதிர்க்கட்சிக்காரர்கள் கேஸில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக—இவ்விதமெல்லாம் நடந்து கொண்டிருந்தால் 1·30 a.m. இந்த நாட்டில சட்டத்திற்கும் நியாயத்திற்கும் என்ன மதிப்பு இருக்கும் என்பதை இந்த அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இது விஷயமாக போலீஸ் அமைச்சர் அவர்கள் தகுந்த விதமாக நடவடிக்கை எடுத்து, இந்த நாட்டிலே சரியான ஒரு போலீஸ் நிர்வாகம் நடக்க வேண்டியதாகச் செய்யவேண்டும். திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கக்கூடியவர்களை மாற்றுவதற்குச் சிபாரிசுகள் நடக்கின்றன. நான்கு வருஷம் ஒரு இடத்தில் இன்ஸ்பெக்டராக இருந்துவிட்டார் என்பதற்காக டிரான்ஸ்பர் கொடுக்கக்கூடாது. திருநெல்வேலி ஜில்லாவிலே—திருநெல்வேலி ஜில்லா என்று சொல்லும்போது அங்கே மற்ற ஜில்லாக்களைப் போலல்லாமல், கொஞ்சம் அரசியல் ஆதிக்கக்காரர்கள் ஜாஸ்தி என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியும். டி.எஸ்.பி. ஆக இருக்கக்கூடியவர்கள், மற்றும் இன்ஸ்பெக்டராக இருக்கக்கூடியவர்களை எல்லாம் வயது முதிர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ரைப் எக்ஸ்பீரியன்ஸ் (ripe experience) இருந்தால் உத்தியோகம் போனால் போகிறது என்ற மனப்பான்மையினால் இருப்பார்கள். அத்தகைய டி.எஸ்.பி.-க்களை வேண்டும். அப்படி இருந்தால்தான் திருநெல்வேலி ஜில்லாவில் பாரபட்சமில்லாமல் போலீஸ் நிர்வாகம் நடைபெறும், ஆகையால் அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தான்குளத்தில்கூட ஏதோ ஒரு கொலை கேஸ் வந்து சரியானபடி விசாரணை செய்யாமல் ரெபர் செய்யப்பட்டு விட்டதாகக் கேள்விப் பட்டேன். கேள்விப்பட்ட அளவுக்குத்தான் நான் இதைச் சொல்கிறேன். அது அப்படியானால் ஏன் என்று விசாரிக்கவேண்டும்.

மேலும் ப்ரொஹிபிஷன் கேஸை வைத்துக்கொண்டு இப்போது தனக்கு வேண்டாதவர்கள் மீது கேஸ் போட்டு கன்காக்ட் செய்யும் மனப்பான்மை தமிழ் நாட்டில் உள்ள ஜனங்களிடம்—சில பேர்களிடம்—இருக்கிறது. எங்கள் பக்கத்தில் அந்த மாதிரி போலீஸை உபயோகித்து கேஸ் போட்டு கோர்ட்டுக்குப் போய் விடுதலையாகி வருகிறார்கள். அதற்கு 300 ரூபாய், அல்லது 400 ரூபாய் செலவு ஆகிறது. அதிலே கேஸ் நடத்தத் தெரியவில்லை என்றால் அவர்கள் ஜெயிலுக்குப் போகிறார்கள். Concocted செய்து கேஸ் போட்டு, விடுதலை செய்யப்பட்ட அப்படிப்பட்ட கேஸ்கள் விஷயத்தில், சார்ஜ் செய்து கேஸ் போடக்கூடிய ஆபீஸர்களிலே, ஒன்றிரண்டு தடவைகள் தொடர்ந்து தப்பு செய்தால் அவர்கள் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். Prohibition கேஸ் சம்பந்தப்பட்ட மட்டில் கன்காக்ஷன் செய்து கேஸ் போடப்பட்டது என்று 3 அல்லது 4 ஜட்ஜ்மெண்டுகள் வந்தால் டிஸ்மிஸல் வரைக்கும் அந்த ஆபீஸர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

என்று அந்த அளவுக்கு இந்த மாகாணத்தில் ஒரு சர்க்குலர் அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாகாணத்தில் போலீஸ் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு ஹெல்த் அட்மினிஸ்ட்ரேஷன் ஏற்பட சர்க்கார் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, இவைகளை கனம் மந்திரி அவர்கள் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, போலீஸ் மான்யத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*SRIMATHI A. S. PONNAMMAL: மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த போலீஸ் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசும்போதெல்லாம் கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கூறினார்கள்—வெளியிலே பேசும்போதும், இங்கே பேசும்போதும் திராவிட நாடு, திராவிட நாடு என்று பேசுகிறார்கள்—இவர்கள் இங்கே மலபார் போலீஸ் வைத்திருப்பதாகக் குறை கூறினார்கள். நம் பாஷை தெரியாதவர்களை வைத்திருப்பதாகக் கூறினார்கள். இதைப் பார்க்கும்போது இவர்களுடைய திராவிடநாட்டுக் கொள்கை எந்த அளவு இருக்கிறது என்று என்னைப் போன்றவர்கள் புரிந்துகொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. ஒரு சமயத்தில் திராவிட நாடு என்று அப்படியே போராடி வாங்கினாலும்கூட, தமிழர்கள், மலையாளிகள், ஆந்திரர், கன்னடக்காரர்கள் என்ற இந்த பாகுபாட்டை வைத்துக் கொண்டு அடித்துக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்குமே தவிர, ஒரு நல்ல ஆட்சியின் கீழ் இருக்க முடியாது என்று அந்த அங்கத்தினர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் பந்தோபஸ்தைப் பற்றிக் கூறினார்கள். அதற்கு ராஜாத்தி அம்மாள் பதில் கூறி விட்டார்கள். இருந்தாலும் போலீஸ் பந்தோபஸ்து எந்த அளவு நாட்டில் இருக்கவேண்டும் என்று சொல்லாமல் இருக்க முடியாது. நாங்கள் திண்டிவனத்திற்குச் சென்று, மூன்று பெண் எம். எல். ஏ.-க்கள் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது கூட்டத்தில் கற்கள் வந்து விழுந்துகொண்டிருந்தன. போலீஸ் சென்று அடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் தமிழன் பண்பு என்று சொல்லக்கூடிய நேரத்தில் தமிழன் உச்ச நிலையில் இருந்தான் என்று கூறக்கூடிய நேரத்தில் சில மக்களுடைய அறிவு பின்னுக்குச் சென்று கொண்டிருக்கிற காரணத்தினால்தான் போலீஸ் பந்தோபஸ்து தேவைப்படுகிறது. நம் மக்கள் ஒரு சில மேலை நாடுகளிலே செயற்கைச் சந்திரனைப் பறக்கவிட்டு இன்பம் காணுகிறார்கள், ஆனால் இங்கே—ஆகாயத்தில் கல்லையும், செருப்பையும் விட்டெறிந்து அதைப் பார்த்து இன்பம் அடையக்கூடிய நிலையில் இருந்தால், மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் போலீஸ் பந்தோபஸ்து வேண்டாமென்று எப்படி கூற முடியும்.

அது மட்டுமல்லாமல் சில அங்கத்தினர்கள் கண்ணீர்ப் புகை, கண்ணீர் புகை என்று கூறினார்கள். கண்ணீர் புகை உபயோகப்படுத்த வேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கிவிடுகிறார்கள்—தொட்டிலையும் ஆட்டி விட்டு, தொட்டிலில் இருக்கிற பிள்ளையையும் கிள்ளி விட்டுக்கொண்டு இருப்பது போன்ற ஒரு நிலை இந்த நாட்டில் இருப்பதின் காரணமாகத்தான் சில சமயங்களில் அம்மாதிரியான அசம்பாவிதம் ஏற்பட்டு விடுகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அது மாத்திரமல்ல. இன்னும் பல இடங்களில் போலீஸ் பந்தோபஸ்து ஏற்படக்கூடிய நிலைமையை கிராமாந்திரங்களில்கூட செய்து விடுகிறார்கள். இது மிகவும் வருந்தக்கூடிய நிலைமையாக இருக்கிறது. போலீஸ் பந்தோபஸ்து இல்லாமல் மக்கள் வாழக் கூடிய நிலைமை ஏற்படவேண்டுமானால் இங்கே வந்திருக்கிற அத்தனை அங்கத்தினர்களும்—ஏன்? பொது மக்கள் அனைவரும்—ஒத்துழைத்தால்தான் நல்லதொரு நிலைமை ஏற்படும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



அடுத்தபடியாக போலீஸ் இலாகாவை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கும் என்.ஜி.ஓ.-க்களுக்குக் கொடுத்திருப்பது போலக் கல்விச் சலுகை அளித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதற்காக அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். டவுன் போலீஸ்காரர்களுக்கு ஹவுஸ் ரெண்ட் 7 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது போதாத நிலைமையாக இருக்கிறது. அவர்களுக்கு இந்த ஹவுஸ் ரெண்டை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுத்தால் அவர்கள் நல்ல வீட்டில் குடியிருக்க வசதி செய்து கொடுத்தவர்களாக ஆவோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ்காரர்களுக்கு டிரெஸ் அலவன்ஸ் இரண்டு ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதைச் சற்று உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும். எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் இந்தச் சலுகையைத் தரக்கூடாதா அந்தச் சலுகையைத் தரக் கூடாதா என்று பேசினார்கள். ஆனால் மக்களிடத்தில் சென்று வரி கொடுக்காதீர்கள், வரி போட்டுக் கசக்கி கொண்டிருக்கிறார்கள் என்று பேசுகிறார்கள். அத்தனை அங்கத்தினர்களும் வெளியிலே பேசும்போது வரி கொடுக்காதீர்கள் என்று அந்த மாதிரிப் பேசுகிற நிலைமையை மறந்து வரிகள் கொடுக்கவேண்டுமென்று பேசினால் இன்னும் பல துறைகளில் பணத்தை வசூலித்துப் பலருக்குக் கொடுக்கிற சம்பளத்தை உயர்த்தக் கூடிய நிலைமை வரும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இப்போது எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் அவர்கள் டி.எஸ்.பி.-ஐப்பற்றி குற்ற கூறிக்கொண்டிருந்தார்கள். நான் வெளியே இருந்தேன். அது அவ்வளவு சரியாகக் கேட்கவில்லை. நாம் குறை கூறலாம். நமக்கு எதைப்பார்த்தாலும் குறையாகத் தோன்றக் கூடாது. எதையும் குற்றயாகப் பேசிக்கொண்டு போனால் நாடு உருப்படாது.

மதுரை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், என்னுடைய தொகுதியைப் பொருத்த வரையில் மதுவை அதிகமாகக் குடித்து தண்டனை அடையக் கூடிய நிலைமை இருந்தது. ப்ரொஹிபிஷன் அட்வைசரி கமிட்டிக்குச் சென்றபோது டி.எஸ்.பி.-யிடம் சொன்னேன். உடனே, ஓரிரண்டு மாதங்களில் சாராயம் இருந்த இடமே தெரியாமல் மறைந்து விட்டது என்றால், அதிகாரிகளோடு நாம் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். என்னென்ன குறை இருக்கிறது என்று கூறினால் டி.எஸ்.பி. ஆனாலும், ஸப்-இன்ஸ்பெக்டர் ஆனாலும், யாராக இருந்தாலும் அதைத் தீர்ப்பதற்குத் தயங்கமாட்டார்கள். இப்போதும் செய்துகொண்டிருக்கிறார்கள். குறை கூற வேண்டும் என்ற எண்ணம் எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு இருந்தால், அது நல்ல தல்ல என்று என்னைப் பொறுத்த வரையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னும் இந்த மதுவை ஒழிக்க வேண்டுமானால் எல்லோரும் இதிலே ஒத்துழைக்க வேண்டும். மதுவை அறவே அகற்ற வேண்டுமானால் அங்கத்தினர்கள் மட்டுமல்லாமல் பொது மக்கள் அனைவரும் ஒத்துழைத்தால் தான் முடியும், இல்லையென்றால் முடியாது என்பதையும் இங்கே நான் அங்கத்தினர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் சில ஜில்லாக்களிலே ஒருசில கிராமங்களிலே இருக்கும் மக்கள் 10-40
கள்ளச் சாராயம் காய்ச்சுவதாகக் கேள்விப்படுகிறேன். இந்த நிலையை a.m.
மாற்றவேண்டுமானால், அந்தந்தப் பகுதியிலே இருக்கும் அங்கத்தினர்கள் சற்றுக் கதை கிதை எழுதுவதைக் கொஞ்சம் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, அவரவர்களுடைய தொகுதியிலே சற்று வேலை செய்ய வேண்டும். தங்களுடைய தொகுதிக்குச் சென்று கட்சிப் பிரசாரம் செய்வதுதான் தங்களுடைய கொள்கை, அதுதான் தங்களுடைய லட்சியம் என்று அதை ஓரளவு ஒதுக்கிவைத்துவிட்டு தொகுதியிலே சென்று இம்மாதிரி குறை இருக்குமானால், அதை நிவர்த்தி செய்வதற்குப் பாடுபடவேண்டுமென்று இங்கே இருக்கும் சர்வ கட்சி அங்கத்தினர்களையும் நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் அந்தந்தப் பகுதியிலே சென்று வேலை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[Srimathi A. S. Ponnammal] [12th March 1959

பெண் போலீசைப்பற்றி கனம் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக இந்தப் பெண் குற்றவாளிகளைப் பிடிப்பதற்காகவாவது,—பெண் குற்றவாளிகளுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்கக்கூடிய அந்த முறையிலே பெண் போலீஸ்காரர்களை நம்முடைய நாட்டிலே நிறுவ வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் அன்போடும் பணிவோடும் கேட்டுக் கொள்கிறேன். ரெஸ்க்யூ ஹோமுக்கு வருகிற பெண்கள் ஆண் போலீஸ் காரர்கள் கையில் அகப்பட்டு ஒரு சில தவறான காரியங்களில் இறங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டி, அப்படிப்பட்டவர்களுடைய பாதுகாப்பை உத்தேசித்தாவது பெண் போலீஸைப் போடுவதிலே இன்னமும் காலம் நீடிக்காமல் வெகு விரைவில் ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று பெண்கள் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒருசில கிராமப் புறங்களில் கொலைக் குற்றங்கள் நடக்கும் போது அவைகளை யாராவது நூற்றில் ஒரு சில சப்-இன்ஸ்பெக்டர்கள் சற்று கவனக் குறைவோடு இருந்து வருகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, எங்கள் வத்தலைக்குண்டு தொகுதியில், இரண்டு மூன்று இடங்களில் கொலைக் குற்றம் நடந்தது பற்றி பல முறை சப்-இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன். அது எந்த நிலையில் இருக்கிறதென்பதை நான் அறிந்துகொள்ள முடியவில்லை. அமைச்சர் அவர்கள் கவனித்து, மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய அளவிலே ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி செய்துகொடுக்க வேண்டியது அவசியம். மதுரையில் சென்று பார்த்தால், ஒரு போலீஸ் காரருக்கு நாலைந்து குழந்தைகள் இருந்தால், அதுவும் வயதுவந்த குழந்தைகளாக இருந்தால், அவர்கள் உட்கார்ந்து படிப்பதற்குக் கூட இடமில்லாமல் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி ஓரளவு எல்லா போலீஸ்காரர்களுக்கும் அரசாங்கமே வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தையாவது வகுத்து, வீடு கட்டிக் கொடுத்தால் அவர்களுக்கு உண்மையிலேயே நல்ல வீட்டுவசதி செய்து கொடுத்தவர்கள் ஆவோம் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri K. G. PALANISWAMY GOUNDER :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நம்முடைய மாகாணத்திலுள்ள போலீசானது இந்தியாவிலே உள்ள பல மாகாணங்களைக்காட்டிலும் திறமையான முறையிலே நல்ல பல காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். ஸ்பெஷல் ப்ராஞ்ச் போலீசாகட்டும் மற்ற போலீஸாகட்டும் நம்முடைய ராஜ்யத்திலே திறமையாக நல்ல முறையிலே நடந்து கொண்டு இருப்பது நாம் பெருமையுடன் பாராட்ட வேண்டிய ஒரு விஷயமாகும்.

நம்முடைய ராஜ்யத்திலுள்ள போலீஸ் எல்லாம் மதுவிலக்கு சோதனைகளைத் திறம்பட செய்து குற்றங்களைக் கண்டிபிடித்து வருவதன் மூலம் வருஷா வருஷம் குற்றங்கள் குறைந்துகொண்டு வருவதைப் பார்க்கிறோம். எங்கள் கோயம்பத்தூர் ஜில்லாவிலே, மதுவில்க்குச் சோதனை சமயத்தில் தெலுங்கபாளையம் என்ற இடத்தில் ஒரு பெரிய மதுவிலக்குச் சோதனை போடப்பட்டதில் ஒரு போலீஸ்காரருக்கு ஆபத்து ஏற்பட்டது. அதன் காரணமாக எங்கள் ஜில்லா மதுவிலக்குக் கமிட்டியிலே கூட அதைப்பற்றி பேசினோம். அந்த போலீஸாரின் குடும்பத்திற்கு நாங்களாக ஒத்தாசை செய்துள்ளோம். அரசாங்கம் அம்மாதிரி ஏற்படக்கூடிய போலீஸாரின் குடும்பத்திற்கு ஒத்தாசை செய்ய வேண்டும். அந்த குடும்பத்தினுடைய நிலை எப்படி இருக்கிறது என்றால், நாலைந்து குழந்தைகளைக் கொண்ட பெரிய குடும்பம் இன்று அவதிக்கு உள்ளாகி கஷ்டப்படுகிறது. போலீஸ் நமக்கு பாதுகாப்புக் கொடுப்பது ஒரு புறம் இருந்தாலும் போலீசுக்கும் நாம் பாது



12th March 1959] [Sri K. G. Palaniswamy Gounder]

காப்புக் கொடுக்கவேண்டிய நிலையில் ஒத்தாசை செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கம் உதவியளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுவிலக்குக் குற்றங்களைப் பொருத்த வரையிலும் நாம் அதற்கு அதிக தண்டனையும் அபராதமும் விதிக்கக்கூடிய நாளிலே சில தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. அதிகமான அளவுக்குக் குற்றம் செய்பவருக்கு அதிகமான அபராதங்கள் விதிக்கச் சந்தர்ப்பம் ஏற்படும்போது சிலகேசுகள் லஞ்சம் மூலமாக அமுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அதை நல்ல முறையிலே கவனிப்பதற்கு போலீஸை இரண்டாகப் பிரித்தமைத்தால் தான் நன்றாக இருக்கும். எக்ஸைஸை தனியாகவும் போலீஸை தனியாகவும் வைப்பது தான் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

சில இடங்களில் போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி இல்லாததோடு போலீஸ் ஸ்டேஷனுக்கும் இடமில்லாத நிலையில் இருக்கிறது. என் தொகுதியிலுள்ள ஊதியூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் வசதி இல்லை. போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டருக்குக்கூட வீட்டு வசதி கிடையாது. போலீஸ்காரர்களுக்கும் வீட்டு வசதி இல்லை. இந்த வகையிலே நாலைந்து வருஷங்களாக அல்லல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குற்றங்கள் ஏற்படுவதை அமைச்சர் அவர்களுக்கு ரகசியமாக எழுதியனுப்பினால் கவனிப்பதாக பல சந்தர்ப்பங்களில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய காங்கேயம் சரகத்தில் சப்-இன்ஸ்பெக்டர் இருந்தார். அவருடைய எல்லையில் பத்து கொலை கேஸுகளுக்கு மேல் நடந்திருக்கின்றன. இருந்தாலும் ஐரு கேஸ் கூட தண்டிக்கப்படவில்லை. இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லி இருந்தேன். தனியாகவும் கடிதம் எழுதி இருந்தேன். கடைசியாக போலீஸ் ஸ்டேஷனுக்கே வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்குப் பின்பு பக்கத்திலே இருக்கும் தாராபுரம் ஸ்டேஷனுக்கு எழுதிய கடிதம் மாற்றல் செய்யப்படிருக்கிறார்கள். அந்த நிலை மோசமாக இருக்கிறது. அந்த நிலை மாறவேண்டும். குற்றங்களைச் செய்பவர்களே குற்றங்களைக் கண்டுபிடிப்பவர்களாகவும் உளவாளிகளாகவும் இருக்கிறார்கள். மனிதப்பண்பு படைத்தவர்கள், அநேகமாக நல்ல முறையிலே நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணம் படைத்தவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஒரு சில அதிகாரிகள் இம்மாதிரி தவறுகளைச் செய்யக் கூடிய நிலை ஏற்படுகிறது. அதை எல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

போலீஸ்காரருடைய குடும்பங்களுக்கு ராட்டை கொடுப்பது போன்ற பல சௌகரியங்கள் செய்து கொடுக்கிறார்கள். போலீஸ்காரர்கள் எல்லோருக்கும் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுத்தால்தான் லஞ்சம் இன்னும் இதுபோன்ற கையாளக்கூடிய தவறான முறைகளையெல்லாம் தடுப்பதற்கு முடியும். ஆகவே அவர்களுடைய சம்பளத்தை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பனை, தென்னைமரங்களிலிருந்து தெளிவுகள் இறக்கப்படுகின்றன. அவர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. லைசன்ஸ் கொடுக்க பத்து நாள் எட்டு நாள் அதிகரித்தால் அந்தச் சமயத்தில் போலீஸ்காரர்கள் கேஸ் போடுகிறார்கள். அதனால் சில மரமேறிகள் அவதிப்படுகிறார்கள். லைசன்ஸ் கொடுப்பதை காலந்தவறி கொடுத்தாலும் அவர்கள் குற்றத்திற்கு ஆளாக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு உடனடியாக லைசன்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் அவர்கள் குற்றத்திற்கு உள்ளாகாமல் மரம் ஏறி தெளிவுகள் இறக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[12th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த வருஷம் எப்பொழுது நடந்தது என்று சொன்னால் நலமாக இருக்கும். அதைப்பற்றி விசாரிக்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : 1957 இறுதியில் நடந்தது. போராட்டம் அப்பொழுது நடந்தது. குடியாத்தம் திருமகள் மில் போராட்டம்.

MR. SPEAKER : ஏற்கெனவேயே பெயரைச் சொல்ல வேண்டாம் என்று சொன்னேனே.

SRI V. K. KOTHANDARAMAN : இதே போல ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு முறை தொழிலாளர்களுடைய மத்தியில் மோதல் ஏற்பட்டது. அந்த நேரத்தில் அது போலீசுக்கு கம்ப்ளெயின்ட் போகவில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் எப்பொழுது நடந்தது என்று சொல்ல வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : 1958-ல் குடியாத்தம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேஸ் நடந்தது. அது தள்ளுபடியாகி விட்டது. போலீசுக்குக் கம்ப்ளெயின்ட் கிடையவே கிடையாது. முதலாளிகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்றவுடன் கேஸ் தள்ளுபடியாகக் கூடிய அளவுக்கு நிலைமை போய்விட்டது. இப்படிப்பட்ட சம்பவங்கள் சொல்ல வேண்டுமானால் எவ்வளவோ இருக்கின்றன. ஆகவே தான் இன்றைக்கு போலீஸ் இலாகாவை உண்மையிலேயே நல்ல முறையில் திருத்தி அமைக்கவேண்டும். அங்கு அடக்கு முறை தலைதூக்கியே இருக்கிறது. அதற்குள்ள சட்டங்கள் நல்ல முறையில் திருத்தி அமைக்க வேண்டும். இன்றைக்கு கோளாறை எடுத்துக்கொள்ளுங்கள். முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கு தகராறுகள் ஏற்பட்டால் இப்பொழுது போலீஸ்காரர்கள் எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று சட்டத்தைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள். ஜாதி, வகுப்பு, மதம், துவேஷம் முதலியவைகள் இல்லாத அளவில் திருத்தி அமைக்க வேண்டும். அந்த அளவில் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லவே இல்லை. அந்த முறையில் சட்டத்தைத் திருத்தி அமைத்தால் ஒரு விதத்தில் மக்களுக்குச் சௌகர்யமாக இருக்கும். மக்களுக்கு உதவி செய்ததாக ஆகும். ஒரு சமயம் அவர்களைக் காவல்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். இன்றையதினம் கேள்வி நேரத்தில் கூட அவர்களைக் காவல்காரர்களாக கருத வேண்டுமா என்ற கேள்விகள் கேட்கப்பட்டன. அவர்கள் இருக்கக்கூடிய இடங்களுக்குக் காவல் நிலையம் என்று குறிப்பிடலாமா என்றுகூட கேள்விகள் கேட்கப்பட்டது. அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டாமா? அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்க வேண்டாமா? இப்பொழுது உதவி செய்யக் கூடிய முறையில் ஒரு ஸ்டேஷனை சென்ட்ரல் ஸ்டேஷனில் வைத்திருக்கிறார்கள். அதனால் நல்ல பயன் ஏற்படுகிறது. அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டியதாக இருக்கிறது.

சில இடங்களில் போலீஸ்காரர்கள் தவறுகளும் செய்கிறார்கள். சில நபர்களைப் பிடித்துக்கொண்டு போய் லாக்கப்பில் அடைத்து அடித்துத் துன்புறுத்துகிறார்கள். இப்படி இரண்டு மூன்று பேர்களை கொலை செய்திருக்கிறார்கள். கேட்டால் அவர்கள் இரண்டு பேரும் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து விட்டார்கள் என்றும் காக்கா வலிப்பு வந்து இறந்து விட்டார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அந்த அளவுக்கு வந்திருக்கிறது போலீஸ் நிர்வாகம் சில இடங்களில். இப்படி அனாவசியமாக துன்புறுத்துகிறார்கள் என்று இரண்டு மூன்று தடவை அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு போயிருக்கிறோம். எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. ஒரு குற்றம் சம்பந்தமாக ஒருவர் மாஜி எம்.எல்.ஏ-க்கு உறவினராக இருந்ததால் அவர் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவர்கள் அதிகாரிகளை அணுகி ஒன்று



12th March 1959] [Sri V. K. Kothandaraman]

மில்லாமல் செய்து விடுகிறார்கள். இதைப்பற்றி ஸ்ரீ கரிய கௌண்டருக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் பொறுப்பு இல்லாமல் பேசமாட்டோம். எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் தான் பொறுப்பு இல்லாமல் நாங்கள் பேசுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன. ஆகவேதான் போலீஸ் இலாகாவில் பெரிய அளவில் நாம் மாறுதல் செய்ய வேண்டும். அடக்குமுறை சட்டங்களாகிய செக்ஷன் **41, 144, 107** போன்ற சட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும்.

இப்பொழுது பேச்சுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது, அப்படிக் கொடுத்து விட்டு அதுவும் பறிக்கப்பட்டிருக்கிறது. பேச்சுரிமையை உபயோகிக்க முடியாமல் கட்டுப்படுத்துகிறார்கள். அரை மணி தான் பேசலாம் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையில் மோசமான அளவில் சட்டங்கள் இருக்கின்றன. தேர்தல் பிரசாரம் செய்ய மூன்று மணிதான் பேச வேண்டும் என்று சொல்லுகிறார்கள். முனிசிபல் எலெக்ஷனைப்பற்றி இரண்டு மணிக்கு மேல் பேசக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஒலி பெருக்கி வைத்துக்கொள்வதற்குக் கூட கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். வான் ப்ராபகேண்டாவுக்கு அனுமதி கிடையாது. டாப்பிலிருந்தே அப்படிக் கட்டுப்பாடு செய்யப்படுகிறது.

போலீஸ்காரர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிட்டால் லஞ்சம் தாண்டவம் ஆடும் என்று சொல்லுகிறார்கள். அது வாஸ்தவந்தான். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய படி போதாது. இதற்கு முன்னதாக முக்கால் ரூபாய் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது $1\frac{1}{4}$ ரூபாய் கொடுக்கிறார்கள். அது எந்த அளவில் போதுமானது என்பதை கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. போலீஸ்காரர்கள் ராத்திரி பகல் எந்த வேளையிலும் வெளியே போக வேண்டியதாக இருக்கிறது.

a * * * * *

இந்த நிலைமையில் அவர்களுக்கு $1\frac{1}{4}$ ரூபாய் படி கொடுத்தாலும் கூட அவர்கள் ஒரு மாதம் வெளியே போனாலும் கூட அவர்களால் முழு மாதத்திற்கும் டி.எ. வாங்க முடியவில்லை. அவர்கள் முப்பது நாட்களுக்கு வெளியே போனால் பதினைந்து நாட்களுக்குள்ள டி.எ.யைத்தான் வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற விதி இருக்கிறது. அப்படி இருப்பது சரியல்ல. அந்த மாதிரி இல்லாமல் அவர்கள் எத்தனை நாட்களுக்கு வெளியே செல்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு டி.எ. கொடுக்க வேண்டும். ஐந்து மைலுக்கு அப்பால் போனால் டி.எ. என்று சொல்லப்படுகிறது. அந்த முறையில் பதினைந்து நாட்களுக்கு மட்டும் தான் என்று இல்லாமல் எத்தனை நாட்களுக்கு அவர்கள் வெளியே போகிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்குப் படி கொடுக்கவேண்டும்.

அதே போன்று மதுவிலக்கு என்ற பெயரில் பல ஊழல்கள் நடைபெறுகின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் ஊருக்கு இளைத்தது பிள்ளையார் கோவில் ஆண்டி என்று எங்கள் ஊரில் சொல்லுவார்கள். அதைப் போல . .

அது ஒரு குடிசைத் தொழில் போலாகிவிட்டது. ஆகவே எப்படியும் 11
கேஸ் போடவேண்டும் என்ற காரணத்தினால் தாழ்த்தப்பட்ட மக்கள் a.m.
இருக்கிற இடத்தில் போய்ப் போடுவார்கள். அதற்குப் பிறகு உயர்ந்த சாதிக்காரர்கள் இருக்கிற பகுதிக்குப் போய்ப் போடுவார்கள். இதுபற்றி உண்மையில் நாங்கள் யாரும் சொல்ல வேண்டியதில்லை. வேண்டுமென்றால் பொதுவான ஆட்களை அனுப்பி வைத்துக் கேட்டால் உண்மை தெரியவரும். போலீஸ்காரர்களுக்காகப் பயந்து கொண்டிருக்கிற நிலைமை இருக்கிற காரணத்தால் அவர்கள் இல்லாத நிலைமையில் கிராமத்தில் சென்று விசாரித்தால் அங்கு இருக்கக்கூடிய மக்கள் தெள்ளத்தெளிய இதை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். "முலாசஸ்"

---

a Expunged as ordered by the Chair.

எருவாக உபயோகப்படுத்தப்படுகிறது. அந்தச் “ சல்பேட் ” டைச் சாராயம் காய்ச்ச உபயோகப்படுத்துகிற காரணத்தினால் சல்பேட் தண்ணீர் என்று சொன்னால் சாராயம் என்ற அர்த்தம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இது சாராயம் காய்ச்ச உபயோகப்படுத்துவதன் காரணமாக உரத்திற்காக இதை வாங்குவதற்குக் கூடச் சங்கடமாக இருக்கிறது. வெல்லமும் சாராயம் காய்ச்ச உபயோகப்படுத்துகிறார்கள். அப்படியானால் வெல்லமும் விற்க அனுமதிக்க முடியாது என்று சொல்லுவார்களா ? ஆகவே “ மூலாசஸ் ”

**Sri A. S. SAHAJANANDA** : கனம் தலைவர் அவர்களே இப்பொழுது போலீஸ் மானியமும் எக்ஸைஸ் மானியமும் ஒன்றாக வருகிறது. இரண்டையும் கலந்து பேச வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது கடைசியில் பேசியவர் மதுவிலக்கை அடியோடு எடுத்துவிடவேண்டுமென்று சொன்னார்கள். பார்லிமெண்டில் இருக்கக்கூடிய சிலரும் கூட அவ்வாறு பேசி இருக்கிறார்கள். இங்கும் சிலர் அப்படி அபிப்பிராயப்படுகிறார்கள். ரொம்ப யோசனை பண்ணி மகாத்மா காந்தியடிகளாலும், ராஜாஜி அவர்களாலும் இந்த மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. மதுவிலக்குக் கொண்டு வந்ததில் இருந்து ஏழைத் தொழிலாளர்கள் ஓரளவு சந்தோஷமாக இருக்கிறார்கள். ஏதோ வாரத்திற்கு 2 நாள் கூலி கிடைத்தாலும் அரிசி வாங்கிச் சமைத்துச் சாப்பிட்டுச் ஜீவனம் பண்ணுகிறார்கள். இந்தக் கள்ளுக் கடைகளை மறுபடியும் வைத்து விட்டால் ஏழைகள் மறுபடியும் பசியாலும் பட்டினியாலும் வாடும் நிலைமை ஏற்படும். ஆகவே, ரொம்பத் தீர்க்கமாக ஆலோசனை செய்து 17 கோடி ரூபாய் நஷ்டம் வந்தாலும் வரட்டும் என்று ஏழைகள் மீது ரொம்ப இரக்கத்தோடு இந்த மதுவிலக்கை சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த ஏழை மக்கள் குடிக்க வேண்டுமென்று யாராவது அபிப்பிராயப்படுவார்களானால் முதலில் அப்படி அபிப்பிராயப்படுபவர்கள் குடிக்க வேண்டும். அப்படியானால் தான் அவர்கள் அந்த வார்த்தையைச் சொல்லலாம். இந்த வார்த்தையைச் சொல்லுவதற்காக என் மேல் கோபித்துக்கொள்ளக்கூடாது. அப்படிச் சொல்லுபவர்கள் யாராக இருந்தாலும்—இங்கிருக்கிற மெம்பர்கள், மந்திரிகள் உட்பட—அவர்கள் முதலில் குடிக்கத் தயாராக இருக்கவேண்டும். கிராமத்தில் உள்ளவர்கள் இதுமாதிரி சொன்னாலும் கூட அவர்கள் ஏதோ அர்த்தம் இல்லாமல் சொல்லுகிறார்களே தவிர, அறிவோடு சொல்லுகிற வார்த்தையல்ல. ஆகவே பூரண மதுவிலக்கை எடுக்கக் கூடாது. அதை எடுத்துவிடுவதாக இருந்தால் என் போன்றவர்கள் உயிரைக் கொடுத்தாவது மதுவிலக்கை நீக்குவதைத் தடுப்போம்.

கிராமங்களில் சிலர் சாராயம் காய்ச்சும் தொழிலைச் செய்கிறார்கள். அப்படிச் செய்கிறவர்கள் யாரென்று கேட்டால், ஹரிஜனங்கள் அல்ல. ஏதோ இரண்டொரு ஹரிஜனத் தொழிலாளர்கள் அந்தச் சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டிருக்கலாம். சில பிற்பட்ட சமூகத்தார்தான் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். முக்கியமாக நாட்டார்கள் பிழைப்புக்காகச் சாராயம் காய்ச்சி விற்கிறார்கள். பிள்ளைமார்களில் சிலர் கூட சாராயம் காய்ச்சி வியாபாரம் செய்கிறார்கள். சிதம்பரத்தில் இருக்கக் கூடிய நிலைமையைச் சொல்லுகிறேன். இது விஷயமாகப் பல நாட்கள் கலெக்டரோடும், டிஸ்ட்ரிக்ட் சூப்பிரண்டோடும் பேசி இருக்கிறோம். சமீபத்தில் தீர்க்கமாகச் சிந்தித்து சத்தியவாகீச ஐயர் என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டரைப் போட்டார்கள். அதற்கு முன்னால் இருந்தவர்கள் சாராயம் காய்ச்சுகிறவனைப் பிடித்துக்கொண்டு வராமல் அவர்களுக்கு அனுகூலமாக இருந்துகொண்டு 1,000, 2,000 என்று சம்பாதித்துக்கொண்டிருந்தார்கள். யாராவது அதில் சம்பந்தமே இல்லாதவனைப் பிடித்துக்கொண்டு வந்து கேஸ் போடுவார்கள். அந்தச் சத்தியவாகீச ஐயர் எந்தப் போலீஸ்காரர்கள் சாராயம் காய்ச்சுகிறவர்களுக்குச் சாதகமாக இருந்து வந்தார்களோ அவர்களையே காட்டிற்குள் அழைத்துக்கொண்டு போய் உண்மையில் யார் யார் சாராயம் காய்ச்சுகிறார்களோ அவர்களையெல்லாம் பிடித்துக் கொண்டு வந்தார். இப்பொழுது அங்கு சாராயம் காய்ச்சும் தொழில்



பெரும்பாலும் இல்லை. அப்படிச் செய்தவர் ஒரு ஹரிஜன சப்-இன்ஸ்பெக்டர். அவர் அவ்வாறு செய்ததினால் இப்பொழுது மற்றவர்களுக்கும் விவேகம் ஏற்பட்டு இப்பொழுது நல்ல முறையில் காரியங்களைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

சிதம்பரம் டவுனில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருந்தார். அவர் இருந்தவரை எந்தவித குறையும் நடக்க விடமாட்டார். புவனகிரியில் ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் கலகம் நடந்தது. பஸ்களில் போகிறவர்கள், வருகிறவர்களை அடிக்க ஆரம்பித்தார்கள். அந்த இன்ஸ்பெக்டர் அவ்விடத்திற்குப் போய் அந்தக் கலவரத்தை அடக்கினார். மேலும் பல நல்ல காரியங்களைச் செய்து வந்தார். இப்பொழுது அவரைப் பண்ருட்டிக்கு மாற்றிவிட்டார்கள். சிதம்பரம் தாலூகாவிலேயே அவரைப் போடலாம். வடிவேலு என்பவரைச் சிதம்பரம் டவுன் ஸ்டேனுக்குப் போடலாம். தாழ்மையாகச் சிபாரிசு செய்கிறேன். சர்க்கார் ஏற்றுக் கொள்வதானால் ஏற்றுக்கொள்ளலாம். இல்லையென்றால் விட்டுவிடலாம்.

போலீசை நாட்டில் நடக்கக்கூடிய கலகங்களை அடக்கவும், பாதுகாப்புகாகவும் வைத்திருக்கிறார்கள். சில இடங்களில் நம்முடைய கண்ணைக் குத்துகிறதைப் போல் மிராசுதார்களுக்குத் துணையாக இந்தப் போலீஸ்காரர்கள் வருகிறார்கள். மிராசுதார்கள் சொல்லுகிற பொய்க் கேசை வைத்துக்கொண்டு ஹரிஜனங்களைப் பிடித்துக்கொண்டு போய் அடிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அப்படி உரத்தூர், சாத்தமங்கலம் ஆகிய இடங்களில் நடந்தது. போலீசார் நியாயத்தை அறிந்து அதன்படி நடக்கவேண்டும். யாருக்கும் துணை போகக்கூடாது. பொதுவாகப் போலீசார் இல்லாமல் போனால் முழு அக்கிரமம் நாட்டில் நடக்கும்.

சமீபத்தில் சென்னையில் கார் ஓட்டுகிற டிரைவர்கள்—பேபி டாக்ஸி ஓட்டுகிறவர்கள்—ஸ்ட்ரைக் பண்ணினார்கள். ஸ்ட்ரைக் பண்ணித் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொண்டார்கள். முக்கியமாக எங்களைப் போன்றவர்கள் போய்க்கொண்டிருக்கும்போது கார் வந்தால் நிறுத்த முடிவதில்லை. அவர்கள் ஸ்டாண்டுக்கு வரும்படி சொல்லுகிறார்கள். அந்தக் கார்களை வேறு இடங்களில் நிறுத்தக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. அந்த மாதிரி சட்டம் வைத்திருப்பது நல்லதல்ல. நான் மலேயா போயிருந்தேன். எந்த இடத்தில் இருந்தாலும் அந்த இடத்தில் கார் வந்து பக்கத்தில் நிற்கும். அதைப் போல் பிரயாணிகள் எந்த இடத்தில் நின்றாலும் அந்த இடத்தில் காரை நிறுத்தி ஏற்றிச் செல்லலாம்; அதைத் தடை செய்யக்கூடாது என்று போலீஸ்காரர்களுக்கு உத்தரவு போடவேண்டும். அந்தக் கார்களில் மீட்டர்கள் வலது புறத்தில் வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இடது புறத்தில் வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். வலது பக்கத்தில் வண்டிகள் தாண்டிச் செல்லுமாதலால் வலது பக்கம் கதவைத் திறக்கக்கூடாது என்ற காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது என்பது சரியாக இருந்தாலும் கூட டிரைவர்கள் ஒவ்வொரு தடவையும் இறங்கி வந்து இடது பக்கம் வந்து மீட்டரைப்பார்க்க வேண்டி இருப்பதால் முன்போலவே வலது பக்கத்தில் இந்த மீட்டர்கள் இருக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மேலும் அந்தக் கார் ஓட்டுகிறவர் காரை நிறுத்திவைத்து விட்டுத் தாகத்திற்குப் போயிருந்தால் கூட யாராவது அவர்கள் கூப்பிட்டதற்கு வரவில்லை என்று கார்டு எழுதிப் போட்டு விட்டால் அவர்களைத் தண்டிக்கிறார்கள். மாஜிஸ்ட்ரேட் அவர்களைக் கூப்பிட்டு விசாரித்துப் பார்த்து அவர்கள் மேல் குற்றம் இருந்தால் தண்டிக்கவேண்டும். ஆகையால் இந்த டிரைவர்கள் விஷயத்தில் கொஞ்சம் பொது ஜனங்களுடைய நன்மையைக் கருதி சர்க்கார் இரக்கம் காட்டும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கு விஷயமாக அதை ரத்து செய்யவேண்டுமென்று எந்தச் சர்க்கார் சொன்னாலும், எந்தப் பெரியவர்கள் சொன்னாலும் அதை சர்க்கார் காதில் வாங்கிக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

[12th March 1959

* SRI S. M. ANNAMALAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மானியத்தின் மீது கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சட்டத்திற்கு அடுத்தபடியாக போலீஸ் இலாகா சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பது ஜனநாயக ஆட்சியில் காணவேண்டிய உண்மை. ஆனால் இன்றைக்கு நம் ராஜ்யத்திலே போலீஸ் இலாகாவினரின் மனப்பான்மை ஆளும் கட்சியினர் சொல்வதற்கு ஏற்றபடி நடக்க வேண்டும் என்கிற ரீதியில் மாறிவருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக வடாற்காடு மாவட்டத்தில் நடந்து வருகிற நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுப் பேச ஆசைப்படுகிறேன். வடாற்காடு மாவட்டத்தின் போலீஸ் நிர்வாகத்துறையில் இந்தச் சர்க்கார் அடிக்கடி தலையிட்டு போலீஸ் நிர்வாகம் சரிவர நடக்க முடியாதபடி செய்து வருகிறார்கள். அதற்கு அறிகுறியாக வடாற்காடு மாவட்ட காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவருடைய கட்டைத் தொட்டி போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்கிற காரணத்தில் இப்போது இருக்கும் இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும்—நியூசென்சாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டும் அவர் காலி செய்ய முடியாது என்று மறுக்கவே அதன் மூலமாக போலீஸ் இலாகா பிராசிக்யூஷன் நடவடிக்கையை மேற்கொள்ள அவர் மேலிடத்திற்கு வந்து ஹோம் டிபார்ட்மெண்டு மூலம் ஸ்டே ஆர்டர் வாங்கிச் சென்றிருக்கிறார் என்பதைக் கேட்கும்போது யாரும் வேதனை அடைய வேண்டித்தான் இருக்கிறது.

முனிஸிபல் தேர்தல் என்றால் அப்போதும் மாற்றுக் கட்சிகளை அங்குள்ள போலீஸ்காரர்களைவிட்டு அடக்கி ஒடுக்கத் தக்க நடவடிக்கைதான் எடுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நின்ற ஒருவர் மீது சதி வழக்குப் போட்டு, அந்த வழக்கின் மூலம் அவரைச் சிறையில் தள்ளிவிடவேண்டுமென்று—டி.எஸ்.பி.யை அணுகிக் கேட்க அவர் உண்மை இல்லாத ஒன்றை நான் செய்ய முடியாது என்று சொன்னதற்கு இணங்க மேலிடத்தில் அணுகி அவரை எப்படியாவது அந்த மாவட்டத்தைவிட்டே மாற்றிவிடவேண்டுமென்று செய்த முயற்சியின் பயனாக டிரங்க் கால் மூலமாகவே அவர் அவ்விடத்தில் இருந்தே மாற்றப்பட்டிருக்கிறார் என்பதை அறியும்போது வருத்தப்படவேண்டிய நிலைமையில்தான் இருக்கிறது. வாடற்காடு மாவட்டத்தில் போலீஸ் நிர்வாகம் எப்படி நடக்கிறது, ஆளும் கட்சியினர் எப்படி எப்படியெல்லாம் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்பதைப் பற்றி ஒயிட் காப்ட் ராஜா ஆப் ஆற்காட் (**White Capped Raja of Arcot**) என்கிற தலைப்பில் 58-ம் ஆண்டு நவம்பர் மாதத்து பிளிட்ஸ் பத்திரிகையில் வந்திருக்கிறது.

1958-ம் வருஷம் முதல் மாதங்களிலிருந்த அந்த மாவட்ட டி.எஸ்.பி. அவர்களுடைய கார், காங்கிரஸ் தலைவருடைய வீட்டின் முன்னால் அடிக்கடி நிற்பதுண்டு. நானும் கூட அவரைப் பார்க்கும்போது " உங்களுக்கும் காங்கிரஸ் தலைவருக்கும் சம்பந்தம் என்ன ? " என்று கேட்பதுண்டு. நாங்கள் கூட்டத்திற்குச் செல்ல வேண்டும். கூட்டத்திற்குப் போகும்போது அவரையும் வீட்டிலிருந்து அழைத்துச் செல்லவேண்டும் என்று அவர் சொல்வார். இப்படி ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்குப் போலீஸ் நிர்வாகத்திலே உள்ள சலுகையைக் கண்டு அந்த மாவட்ட மக்கள் மிக்க பீதி அடைந்திருக்கிறார்கள். நாட்டில் நடப்பது ஜனநாயக ஆட்சியா என்பது சந்தேகப்படக்கூடியதாகிறது.

அடுத்தப்படியாக டி.ஏ. வாங்குவது குறித்து நண்பர் கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். டி.ஏ. அதிகம் வாங்கக் கூடாது என்று சர்குலர் இருக்கிறது. அந்த இலாகாவினிடத்திலேயே மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தச் சொல்லி ஒப்புடைத்திருக்கிறோம். இதற்காக அவர்கள் பலவிடங்களுக்குப் போகவேண்டியதாக இருக்கும்போது மாதம் 15 நாட்களுக்கு மேல் டி.ஏ. வாங்கக் கூடாது என்ற சர்குலர் விட்டிருப்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பென்ஷன் வாங்குவதிலும் கூட ரிடையர் ஆகி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தான் பெ...யச்சு வாங்க



12th March 1959] [Sri S. M. Annamalai]

வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அது ஏன் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மதுவிலக்குத் திட்டத்தை மாற்றுக் கட்சியார் ஆதரிக்கவில்லை யென்று அம்மையார் சொன்னார்கள். உண்மையில் அதிகமாக ஆதரிக்கின்றவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தான். இதற்கு ஒரு உதாரணம்—அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய கதையிலேயே இந்தக் கருத்தை வைத்துத் தீட்டி நல்லதம்பி என்ற சினிமாப்படமாக—மதுவிலக்குத் திட்டம் எவ்வாறு அமுல் நடத்த வேண்டும், இந்த நாட்டில் மட்டும் அமுல் நடத்தினால் போதாது. மேல் உலகத்தில் கடவுள் சாப்பிடுகிறார்கள், அவர்களுக்கும்கூட மதுவிலக்குத் திட்டம் அமுல் நடத்தப்பட வேண்டுமென்ற அளவில் அப்போதே தயாரித்திருக்கிறார்கள். 1960-க்குள் திட்டம் வெற்றிபெற வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆனால் 1960-ம் ஆண்டுக்குள்ளாக இந்தச் சர்க்கார்தான் அதை வெற்றிகரமாக அமுல் நடத்தமுடியாத—இயலாத—முறையில் இருக்கிறது.

இதற்கு அடிப்படையான காரணம் மக்கள் என்னவென்று நினைக்கிறார்கள் ? வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் குடிசைத் தொழிலாகச் சாராயம் காய்ச்சுவதனால் எட்டணா, பத்தணா கூலி கிடைக்கிறது என்கிற நிலை இருக்கிறது. இவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கக்கூடிய அளவில் சிறுதொழில்களை கிராமப்புறங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்று நாங்கள் மதுவிலக்கு அட்வைசரி கமிட்டியில் அடிக்கடி எடுத்துச்சொல்வதுண்டு. அதுமட்டுமல்ல, போலீஸ் இலாகாவில் உள்ளவர்களுக்குப் பர்மிட் கொடுத்து வைத்திருப்பதானது இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு முடியாமல் இருக்கிறது. குடிக்காமல் இருக்க முடியாது, பர்மிட் அவர்களுக்குக் கொடுக்கத்தான் வேண்டும் என்கிறவர்களுக்கு போலீஸ் இலாகாவில் உத்தியோகம் தரக்கூடாது என்று வற்புறுத்தியிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, ப்ரொகிபிஷன் அட்வைசரி கமிட்டியில் வந்து பேசுகின்ற உறுப்பினர்களே இங்கே ஒன்று சொல்வது—உடனே வீட்டுக்குப் போனால் மறைமுகமாகக் குடிப்பது என்றால் இப்படிக் குடிக்கிறவர்களுக்கு இந்தக் கமிட்டியில் இடம் கொடுக்கக்கூடாது ; அப்படிக் கொடுப்பது என்றால் இந்தத் திட்டம் வெற்றிபெற முடியாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இரவில் லாரி போகக்கூடாது என்று இப்போது ஓர் விதி இருக்கிறது. ஆனால் லாரிகள் போய்க் கொண்டுதான் இருக்கின்றன. அவர்களை மடக்கிக் கேட்டால் எங்களுக்கு இரவு பகல் இல்லை. இரவும் பகலாகத் தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். போலீஸ் இலாகா அவர்களுடன் ஒத்துழைப்பதனால்தான் அவர்கள் இரவில் ஓட்டுவதாகச் சொல்கிறார்கள். ஆகையால்தான் அவர்கள்—போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள்—லஞ்சம் வாங்குகிறார்கள். இப்படி வாங்குகிறார்களே என்றால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம். மிகமிகக் குறைவு. நண்பர் கோவிந்தசாமி பேசும்போது ஆண்டு ஒன்றுக்கு அரை ரூபாய் அவர்களுக்கு உயர்வு என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். மொத்தமே அவர்களுக்கு நாற்பது ரூபாய் வராது. அவர்களால் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் ? ஆகவே அவர்களுக்குக் கொடுக்கிற சம்பளத்தை உயர்த்த வேண்டும். அதுமட்டுமல்ல, கிராமப்புறங்களில் அவர்கள் வசிப்பதற்கு இடம் கிடையாது. உடனடியாக அவர்களுக்கு எல்லாம் வீட்டு வசதி செய்து கொடுத்தால்தான் நல்ல முறையில் நேர்மையாக அவர்களிடத்தில் வேலை வாங்கமுடியும் என்று கூறிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. B. S. MANI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 11-2
மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். a.m
இந்தப் போலீஸ் என்ற வார்த்தை ஒவ்வொரு மக்கள் மனதில் பட்டால் குற்றம் செய்தவர்களாக இருந்தால் பீதி ஏற்படும், குற்றத்தினால்

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்கள் ஏற்படும். போலீஸ் ஸ்டேஷன் என்பதற்கு க்காவல் நிலையம் என்று வைத்திருப்பதுபற்றி காலையில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் சொல்லப்பட்டது. காவல் என்றால் மற்றவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படுகிறதாக அர்த்தப்படுகிறது என்று பதில் சொல்லப்பட்டது. பாதுகாப்புள்ள காவலுக்கு அர்த்தம் படாது சில அங்கத்தினர்கள் போலீசைப்பற்றி பெருமையாகப் பேசினார்கள். சிலர் அவர்கள் மீது பல குறைகளை எடுத்துச் சொன்னார்கள். குறை என்பது மனிதனுடைய வாழ்கையிலேயே இயற்கை. குறையில்லாத மனிதன் உலகத்திலேயே இருக்க முடியாது. எவ்வளவு தூரம் உண்மை இருந்தாலும் அவர்கள் மீது குறை சொல்லத்தான் செய்வார்கள். ஆட்சியாளர் திறம் படைத்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்குக் கீழ் உள்ள சிப்பந்திகள் சரிவர நடப்பார்கள் என்று சொல்லுவதற்கில்லை. அவர்கள் மீது குறை சொல்லுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. நாம் ஜனநாயக ஆட்சியிலே இருக்கிறோம். நாம் ராம ராஜ்யம் நடத்துகிறோம் என்று பேசுகிறோம். ராமனுடைய ஆட்சியை எடுத்துக்கொண்டால் ராமனுடைய ஆட்சியிலே ஜனநாயக பண்பாடு அமைந்திருக்கிறது. ராமன் தனது மனைவி சீதையை காட்டுக்கு அனுப்பினான் என்றால் மக்களுடைய சொல்லுக்கு எவ்வளவு மதிப்பு அந்தக்காலத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஜனநாயக பண்பு என்பதைப் பற்றி கம்பர் தன் ராமாயணத்தில் வருணித்திருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் அந்தக் காலத்திலே மகாராஜாவாக இருந்தாலும் கூட மக்களுக்குப் பயந்து நீதி முறைக்கு மரியாதை செலுத்தி நடந்தார்கள் என்று தெரிகிறது. அதற்குக் காரணம் அப்போது இருந்த மக்களுக்கு நல்ல பண்பாடு, ஒழுங்கு, இருந்தன. ஆனால் இப்பொழுது ஓரளவிற்கு குறைந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. இந்தக் காரணத்தினால்தான் மக்களிடத்திலே கலகம் ஏற்படுவதற்கு ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அரசியல் ஒரு கருவியாக மக்களுடைய பண்பாடு ஒரு சூதாட்டமாக்கப்படுகிறது. மக்களிடம் நல்ல பண்பாடு இல்லாததினால்தான் போலீஸ்காரர்களுடைய வேலை அதிகரிக்கிறது. அதை விட்டுவிட்டு போலீஸ் அதிகாரிகளிடத்தில் இவ்வாறு கட்டுப்பாடு இல்லை என்று சொல்வது அவ்வளவு சரி அல்ல. அவர்களும் மிகவும் பொறுப்புடன்தான் நடக்கிறார்கள். சாதாரணமாக ஐ.ஜி. யை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு அறிவுதான் முக்கியம். அவர்களின் கீழ் வேலை செய்யும் சிறிய அதிகாரிகளுக்கு அதே அறிவும், அதே திறமையும் வேண்டும். அதன் கீழ் உள்ள கான்ஸ்டெபில்களுக்கு அதிக உடல் உழைப்பும் கஷ்டமும் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆண்டி முதல் அரசன் வரை பாதுகாப்புக் கொடுக்கும் அவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 10 லட்சம் ஒதுக்கியிருந்தும் கூட அவர்கள் தங்குவதற்கு இடவசதி கிடையாது. ஆகவே அது தவிர அவர்களுக்கு இன்னும் அதிக நன்மைகளைச் செய்யவேண்டும். அவர்களுக்காக இன்னும் அதிகப் பணத்தை ஒதுக்கவேண்டும். தஞ்சையிலிருந்து சென்னைக்குப் போலீசார் கோர்ட்டுக்கு வந்தால் அவர்கள் தங்குவதற்கு வசதியில்லாமல் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். போலீசார் தவறுதல் செய்தால் அதைத் திருத்துவதற்கு அரசாங்கம் மெல்ல மெல்ல நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்னும் அதற்கான விதி முறைகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கம் அதிகமான செலவு இல்லாமல் பல வசதிகள் செய்து கொடுக்கலாம். குறிப்பாக போலீஸ் கான்ஸ்டெபிள்கள் தஞ்சையிலிருந்து கெமிகல் டெஸ்டுக்காக சென்னைக்கு வருவதாக இருந்தால் அவர்கள் சென்னையில் தங்குவதற்கு வீடு கிடையாது. அவர்களுக்கு வீடுவேண்டுமென்றால் ரூம் வாடகைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் குறைந்த சம்பளத்திலிருந்து எப்படி ரூம் வாடகை கொடுக்கமுடியும். அவர்களுக்கு எங்கெங்கு பண்டகசாலை ஏற்படுத்த வேண்டுமோ அங்கெல்லாம் பண்டகசாலை ஏற்படுத்தவேண்டும். உதாரணமாகச் சென்னைக்கு வந்தாலும் சரி, ஜில்லா ஹெட்குவாட்டர்ஸ்க்குச் சென்றாலும் சரி, தாலூகா ஹெட்குவாட்டர்ஸ்க்குச் சென்றாலும் சரி, அவர்கள் தங்குவதற்கு வீடும், சாப்பாட்டிற்குப் பண்டகசாலையும் ஏற்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும். இம்மாதிரி வசதிகள் செய்து கொடுத்தால்,



அவர்களுக்கு அதிகமான வசதிகள் செய்து கொடுக்க நேரிட்டால் அவர்கள் நன்றாக வாழமுடியும். அரசாங்கம் என்றால் போலீஸ் இலாகா இருக்கத்தான் செய்யும். எந்த அரசாங்கம் இருந்தாலும் போலீஸ் இலாக்கா ராஜ்யம் இருக்கத்தான் செய்யும்.

**(Sri R. Subramaniam in the Chair.)**

தவிர இவர்கள் ரிடையர் ஆனபிறகும் பென்ஷன் மிகவும் குறைவாக இருப்பதனால், இவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக போலீஸ் கான்ஸ்டேபிளை எடுத்துக்கொண்டால் நிம்மதி இல்லாமல்தான் வாழ்கையில் உழைத்து வந்திருக்கிறார்கள். இதை யெல்லாம் பார்க்கும்போது அவர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தவிர போலீஸ் கான்ஸ்டபிள்கள் அடிக்கடி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்படும்போது மிக கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு தினப்படி ரூ. $1\frac{1}{4}$ தான். இது மிகவும் குறைவு. பொதுவாக கான்ஸ்டெபில்கள் 30 நாளைக்கு தினப்படி போட்டால் அதை 21 நாளைக்குதான் அவர்கள் claim பண்ணவேண்டுமென்று அவர்களுக்கு மேல் அதிகாரிகளால் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி சில தவறுகள் ஏற்படுகின்றன. டிஸ்மிஸ், சஸ்பெண்ட் செய்யப்படுகிறவர்கள் பெரும்பாலும் கான்ஸ்டெபிள்களாக இருக்கிறார்கள். ஒரு சிலர் ஹெட் கான்ஸ்டெபிளாக இருக்கிறார்கள். ஒரு சிலர் சப்-இன்ஸ்பெக்டராக இருக்கிறார்கள். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மிகமிகக் குறைவு. மற்றைய மேல் அதிகாரிகள் அவ்வாறு செய்யப்படுவது கிடையாது. நான் கிராம ஊழியராக இருப்பதனால் அவர்களுடன் அதிகமாக பழகியிருப்பதால் அவர்களைப்பற்றி தெரிவதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது. பாவம் அவர்கள் செய்யாத குற்றங்கள்கூட அவர்கள் மீது சுமத்தப்படுகிறது ; இதற்குக் காரணம் அவர்கள் மேலுள்ள அதிகாரிகள்தான். அவர்கள் ஏதோ பழிவாங்கும் தோரணையின் கீழ் மேல் அதிகாரிகள் தங்களுடைய போலீஸ் கான்ஸ்டெபில்களைச் செய்கிறார்கள். அவர்கள் இரண்டு ரூபாய் லஞ்சம் வாங்கினால் கூட அவர்களை வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள். சிறிய பெரிய கேஸ்களில் மாஜி போலீஸ்காரர்கள் ஈடுபட்டுள்ள பல குற்றங்களை இப்போதும் நாம் பார்க்கிறோம். காரணம் அவர்களுக்கு வேறு வழியில்லை. கிராமத்திலிருந்து வந்து கேட்பவர்களிடம் 'அதை எழுது, இதை எழுது' என்று சொல்லி அவர்களை தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. போலீஸ்காரர்கள் ரிடையரான பிறகு மிகவும் கஷ்டப்படுகிறார்கள், ஏனென்றால் அப்போது அவர்கள் ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைத்து தன் வாழ்க்கையை நடத்தக் கூட முடியாமல் இருக்கிறார்கள். அதற்கு அவர்களிடம் பணம் இல்லை. அவர்களுக்கு அதிக ஊதியம் அளிப்பதற்காக இன்னும் அதிகமாக செலவு செய்தாலும் நன்றாக இருக்கும் என்பது என்போன்றவர்கள் அபிப்பிராயம். நமது நிதி நிலை இதற்கு மேல் இடம் கொடுக்காததாலேயே சர்க்கார் இந்தத் தொகையை 10 லட்சம் ரூபாயோடு நிறுத்திவைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். போலீஸ் இலாகாவினர் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் எல்லாச் சலுகைகளும் ஆதரவும் அளிக்கிறார்கள். மற்றவர்களுக்கு எதுவும் அளிப்பதில்லை, மற்றவர்கள் சென்று ஏதாவது சொன்னால் கேட்பதேயில்லை என்று சிலர் சொன்னார்கள். இவ்வாறு சொன்னது குறித்து நான் வேதனைப்படுகிறேன். என்போன்றவர்கள் பல போலீஸ் அதிகாரிகளிடம் பேசும்போது அவர்கள் நாங்கள் சொல்வது சரியாக, ஒழுங்காக இருந்தாலொழிய அதை ஏற்றுக்கொள்வதே இல்லை. கடந்த 15 வருஷங்களில் போலீஸ் அதிகாரிகளிடமும் பெரிய பெரிய அதிகாரிகளிடமும் நான் நெருங்கிய தொடர்புடன் இருந்திருக்கிறேன், நாம் அவர்களிடம் பேசும்போது நாம் ஒழுங்காகப் பேசினால் அவர்கள் நாம் சொல்லுவதற்கு மரியாதை கொடுக்கிறார்கள். ஒழுங்கின்றி ஏதாவது சொன்னால், தவறாக ஏதாவது சொன்னால், அவர்கள் அதை மறுக்கிறார்கள். அவர்கள் மறுத்துப்பேசுவது நமக்குச் சாதகமாகவும் இருக்கலாம், பாதகமாகவும் இருக்கலாம். எது சரியானது என்று அவர்களுக்குத் தோன்றுகிறதோ அதன்படி அவர்கள் பேசுகிறார்கள். அதன்படி அவர்கள் நாம்

[Sri K. B. S. Mani] [12th March 1959

சொல்லுவதை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ செய்கிருர்கள். ஒரு சில இடங்களில் தவறுகள் ஏற்படலாம். இதற்காக, அரசாங்கமே தவருன கருத்தையும் கொள்கையையும் கொண்டிருக்கிறது என்று வாதிப்பதும், அந்த மாதிரியான எண்ணங்களை மக்களிடம் பரப்புவதும் தமிழ் நாட்டின் பண்புக்கே விரோதமான காரியம். நாம் நல்ல பண்பைக் கடைப்பிடித்தால், பல இடங்களில் சிலரால் தவறுகள் செய்யப்பட்டாலும் மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளையும் உதவிகளையும் நாம் ஒழுங்காகச் செய்ய முடியும், இதற்கு போலீஸ் மிக அவசியம். போலீஸ் இலாகாவுக்கான மானியத்தை இன்னும் அதிகரிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

11-30 a.m. ***Sri M. JANGAL REDDIAR :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது சென்னை மாநிலப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இந்த தேசத்திலேயே மிகத் திறமையுள்ளவர்கள் என்று புகழ் பெற்றிருக்கிருர்கள். இப்படி இருக்க இங்கே மலபார் போலீஸை வைத்திருக்க வேண்டியது அவசியமா? மலபார் போலீஸை இங்கே இன்னும் வைத்திருப்பதில் நமக்கு லாபமா அல்லது நஷ்டமா என்று கேட்க விரும்புகிறேன். மேலும் நமது மாநிலத்தில் நடக்கும் சிறு சண்டைகளைப் போக்குவதற்கு வெளி மாநிலத்திலிருந்து போலீஸ் வரவழைக்கப்படுகிறது. நமது மாநிலம் போலீஸ்காரர்களைக்கொண்டே செய்ய வேண்டிய காரியங்களை நமது மாநிலப் போலீஸ்காரர்களைக் கொண்டு செய்வதற்கு பதிலாக ஆந்திர மாநிலப் போலிஸைக் கொண்டு செய்வதால் நமக்கு செலவு அதிகமாகிறது. இவ்வாறு செய்வதால் செலவை வீணுக அதிகரித்துக்கொண்டு போகிருேம் என்று கருதுகிறேன். நமது ராஜ்யத்திற்குப் பெண் போலீஸ் தேவை என்று சிலர் சொல்கிருர்கள். பெண் போலீஸ் போட்டு நிர்வாகம் நடத்த வேண்டிய அளவிற்கு நாம் இன்னும் முன்னேறவில்லை என்று நான் நினைக்கிறேன். இது கனம் மந்திரி அவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இப்போது போலீசுக்காக 5,85,73,000 ரூபாய் செலவிடப்படுவதாகத் தெரிகிறது. இந்தச் செலவு அதிகமான செலவாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. மந்திரிகள் ஊர் சுற்றும்போது அவர்களுடன் கூடவே போலீஸ் போவதால்தான் இவ்வளவு அதிகமாகச் செலவாகிறதோ என்று நினைக்கிறேன். சர்வாதிகார நாடுகளில் தான் மந்திரிகள் அதிகப் போலீஸ் பந்தோபஸ்தோடு சுற்றுப்பிரயாணம் செய்வது வழக்கம். நமது பொதுஜன சர்க்காரில் பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகள் இவ்வளவு போலீஸை உடன் வைத்துக்கொண்டு சுற்றுவது நியாயமா, அதற்கு இவ்வளவு பணம் செலவழிக்க வேண்டுமா என்று கேட்கிறேன். இந்தப் பணத்தை, போலீஸ்காரர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்குச் சம்பள உயர்வு அளிப்பதற்குச் செலவழித்தால் போலீஸ் நிர்வாகம் நன்ருக நடக்கும் என்று நினைக்கிறேன்.

போலீஸ் இலாகாவில் சூப்பரின்டென்டெண்ட், ஏ.டி.எஸ்.பி. இந்த இரண்டு பேர்களும் ஒரேமாதிரியான உத்தியோகஸ்தர்கள். இந்த இரண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் பெயர் (டெஸிக்னேஷன்) வித்தியாசத்தைத் தவிர வேறு எந்த வித்தியாசமும் இல்லை. இரண்டு பேர்களும் ஒரே டியூடி தான் செய்கிருர்கள். அப்படி இருக்க, சூப்பெரின்டென்டெண்டிற்குப் "பனிஷ்மெண்ட்" கொடுக்க வேண்டியவர் ஐ.ஜி.-யாகவும், ஏ.டி.எஸ்.பி.-க்கு "பனிஷ்மெண்ட்" கொடுக்க வேண்டியவர்கள் சர்க்காராகவும் இருக்கிருர்கள். இரண்டு பேர்களுமே யாராவது ஒருவரிடம் இருக்க வேண்டும். சர்க்காரே இரண்டு பேர்களுக்கும் பனிஷ்மெண்ட் கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும் அல்லது ஐ.ஜீ.யே இருவருக்கும் பனிஷ்மெண்ட் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

இப்போது நம் மாநிலத்தில் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் திடீரென்று பதவி உயர்வு பெற்றிருக்கிருர். முதுகுளத்தூரில் நடந்த கலகத்தின்போது



12th March 1959] [Sri M. Jangal Reddiar]

அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததற்காக ஒரு சாதாரண ஸர்கிள் இன்ஸ்பெக்டராக இருந்தவர் முதல் லிஸ்டில் முதல் தரமாக டெபுடி சூபரின்டென்டெண்ட் பதவி அளிக்கப்பட்டிருக்கிருர். அவருடைய பூர்வீக ரெகார்டுகள் சரியாக இல்லை, அவருடைய பூர்வீக ரெகார்டுகளில் அவரைப்பற்றி நல்ல அபிப்பிராயங்கள் இல்லை என்று தெரியவருகிறது. அவர் பல தடவை சட்டவிரோதமாக நடந்திருப்பதாக அவருடைய பூர்வீக ரெகார்டுகள் கூறுவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்டவருக்கு இப்போது டெபுடி சூபரின்டென்டெண்ட் உத்தியோகம் அளிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் இவ்வாறு உத்தியோக உயர்வு அளிப்பதைப் பார்க்கும் மற்ற உத்தியோகஸ்தர்கள் "நாமும் அதிகமான தப்புகள் செய்தால் நமக்கும் உத்தியோக உயர்வு கிடைக்கும்" என்று நினைப்பார்கள்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** எனக்குத் தெரிந்த வரையில் கனம் அங்கத்தினர் குறிப்பிடும் நியமனம் பப்ளிக் ஸெர்விஸ் கமிஷனுல் செய்யப்பட்டது. அதைப்பற்றி குறை கூறுவது சரியா என்று கனம் அங்கத்தினர் சிந்திக்க வேண்டும்.

***Sri M. JANGAL REDDIAR :** அவருடைய பூர்வீக ரெகார்டுகளில் அவரைப்பற்றி நல்ல அபிப்பிராயங்கள் எழுதப்படவில்லை என்று எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே பப்ளிக் சர்விஸ் கமிஷனிடம் இவருடைய பூர்வீக ரெகார்டுகள் மறைக்கப்பட்டிருக்குமோ என்று நான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

திண்டிவனம் தாலூகாவில் கீழச்சேவூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ஹரிஜனங்களுக்கும் கிராமத்தார்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. கிராமத்தாரில் மெஜாரிடியினர் ஹரிஜனங்கள் வேலைக்கு வரக்கூடாது என்று சொன்னதுடன், பலாத்காரத்தாலும் ஆளும் கட்சியினரின் உதவியாலும் அவர்களை வேலைக்கு வர முடியாமல் செய்துவிட்டார்கள்; அதாவது அவர்களை மெஜாரிடியினர் வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். மைனுரிடியினர் அவர்களை வேலைக்கு வைத்து வேலை வாங்கி அவர்களுக்குத் தகுந்த கூலி கொடுத்து அவர்களை ஆதரித்து வந்தார்கள். இதைப் பார்த்த, அதே கிராமத்தில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள் அங்கே மூன்று வீடுகளுக்குத் தீ வைத்து அவைகளைக் கொளுத்திஞர்கள்; நான்கு வைக்கோற் போர்களுக்குத் தீ வைத்தார்கள்; ஒருவனைக் கிணற்றில் கட்டிப்போட்டுவிட்டார்கள். இவை சம்பந்தமாக எல்லோரும் போலீசில் புகார் செய்திருந்தும் அங்கே நாளது வரையில் போலீசாரால் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, ஒரு விசாரணையும் செய்யப்படவில்லை. மேற்கொண்டு போலீஸைப் போட்டு மேலும் கலாட்டாக்கள் நடக்காமல் மட்டும் செய்திருக்கிருர்கள். போலீஸ் பக்கத்திலிருக்கும்போதே வீடுகள் கொளுத்தப்பட்டன.

***Sri J. MATHA GOWDER :** காங்கிரஸ்காரர்கள், வீடுகளுக்குத் தீ வைத்தார்கள் என்று இந்த சபையில் சொல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**TEMPORARY CHAIRMAN (Sri R. SUBRAMANIAM) :** பொதுப்படையாகச் சொல்லலாம்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** பொதுப்படையாகச் சொல்லும்போது காங்கிரஸ்காரர்கள் என்ற சொல்லை உபயோகித்தால் அவர்கள் யார் என்று பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசுவது சரியே தவிர, பொதுப்படையாகக் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்வது சரியல்ல என்று நான் நினைக்கிறேன்.

***Sri M. JANGAL REDDIAR :** இந்தக் காரியங்களைச் செய்தவர்களில் முக்கியமானவர் அந்தக் கிராமத்திலுள்ள காங்கிரஸ்காரர்களில் முக்கியஸ்தர். அவர் ஐ.எல். நாயுடு எனப்படுபவர். பெயரைச் சொல்லவேண்டுமென்று கனம் மந்திரி சொன்னதால் அவர் பெயரைக் குறிப்பிட்டேன். அவர் மண்டலக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்.

இந்தச் சச்சரவில் போலீஸ்காரர்கள் பக்கத்தில் இருக்கும்போதே ஒருவனைக் கிணற்றில் கட்டிப்போட்டுவிட்டார்கள். போலீஸ்காரர்கள் பக்கத்தில் இருக்கும்போது மற்ற ஹரிஜனங்கள் அவனைக் கிணற்றிலிருந்து தூக்கியெடுத்து விட்டு மற்ற போலீஸ் அதிகாரிகளிடம் ரிப்போர்ட் பண்ணினார்கள். ஆனால் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக போலீசார் அந்த மைனாரிட்டியின் பேரில் தவறான வழக்கு ஜோடித்தார்கள். மேல் அதிகாரிகளின் தூண்டுதலின் பேரிலோ, ஆளும் கட்சியின் செல்வாக்காலோ, போலீசார் யார் வீடு கொளுத்தப்பட்டதோ, யார் கிணற்றில் கட்டிப்போடப்பட்டானோ அவன் பேரிலேயே பொய்யான வழக்கு ஜோடித்திருக்கிறார்கள். அந்த வழக்கு இப்போது செஷன்ஸுக்குப் போயிருக்கிறது. கேஸ் கடலூர் செஷன்ஸ்-ல் இருக்கிறது.

TEMPORARY CHAIRMAN (SRI R. SUBRAMANIAM) : அந்தக் கேஸ் கோர்ட்டில் இருப்பதால், அதைப்பற்றி பேசவேண்டாம்.

*SRI M. JANGAL REDDIAR : கேஸ் செஷன்ஸில் இருக்கிறது. நடந்தது உண்மையா, பொய்யா என்பது ஜட்ஜ்மெண்ட் வந்த பிறகுதான் தெரியும். ஆகவே, அதைப்பற்றி நான் அதிக விளக்கமாகப் பேசுவதற்கில்லை. போலீஸார் ஓரவஞ்சனையோடு நடந்துகொண்டிருப்பதற்குக் காரணம், ஆளும் கட்சியினரின் தூண்டுதல்தான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இதற்கு, பல ருசுக்கள் எங்களிடம் இருக்கின்றன. நிலைமை இப்படியிருக்கும்போது, இப்படிப்பட்ட போலீஸை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சிகள் எப்படி வளர முடியும்? எதிர்க் கட்சிகள் சரியாக வளரவில்லை என்றும், சரியாகப் பணியாற்றவில்லை என்றும் அமைச்சர்கள் மிக அழகாகப் பேசுகிறார்கள். போலீஸையும், ராணுவத்தையும், மலபார் போலீஸையும் வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளை அழிக்க முற்பட்டால் எதிர்க் கட்சிகள் எப்படி வளர முடியும் என்று நான் கேட்கிறேன். எப்படி இந்த நாட்டில் ஜனநாயகம் வளர முடியும் என்றும் கேட்டுக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI K. ANBAZHAGAN : சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, காவல் இலாகா மான்யத்தின் மீதும், மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பொருட் செலவுத்திட்ட மான்யத்தின் மீதும் பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு அளித்ததற்கு நான் முதலில் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் மதுவிலக்கை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை இந்த அரசாங்கம் நல்ல முறையில் ஆராய்ந்து பார்த்துச் செம்மையாக, சீர் குலைவின்றி நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தைத்தான் திரும்பத் திரும்ப நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கிறோம். வார்த்தைகளால் ஏற்படுகிற தடுமாற்றத்தால்கூட "மதுவிலக்கை ஒழிக்க வேண்டும்" என்று பேசுகிறவர்கள் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை என்பதனை நான் மகிழ்ச்சியோடு அவைத்தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சென்னை மாநில அரசாங்கம் முயன்று வருகிற சமயத்தில், கேரள ராஜ்யத்தில் மதுவிலக்குத்திட்டம் முழு அளவில் நிறைவேற்றப்படாத காரணத்தினால், அங்குள்ள எல்லாப் பகுதிகளிலும் அதை நிறைவேற்றாத காரணத்தினால், கேரளத்தையொட்டித் தமிழ்நாடு அமைந்திருப்பதினால் அந்தப் பகுதிகளில் சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. அதே போன்று, தமிழ் நாட்டின் உட்பகுதிகளாக இருக்கும் புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளில் மதுவிலக்குத் திட்டம் கைக்கொள்ளப்படாத காரணத்தினால், அங்கு மது நிறைந்து அது தமிழ்நாட்டில் சென்னை மாநிலத்தில் வழிகிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தமிழ்நாட்டைச் சேர்ந்த, கேரளத்தையொட்டிய பகுதிகளில், எனக்குத் தெரிந்தவரையில் மதுவிலக்கு அமுலில் இருக்கிறது. ஆகவே அந்தத் தொல்லை இல்லை. புதுச்சேரி, காரைக்காலில்தான் இந்தத் தொல்லை.





*SRI A. GOVINDASAMY : பெரியாறு தேக்கடி பாகத்தில் இது அமுலில் இல்லை. அங்கு கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

*SRI K. ANBAZHAGAN : கேரள மாநிலத்தில், சில பகுதிகளில் மதுவிலக்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டும், சில பகுதிகளில் அது அமுலாக்கப்படாமலும் இருக்கின்றது. ஆக, மதுவிலக்குத் திட்டம் நிறைவேற்றப்படாத மாவட்டங்களில் இருந்து மதுவிலக்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும் மாவட்டங்களுக்குப் பரவி, அதன் மூலம் தமிழ் நாட்டில் புகுகிறது என்ற கருத்தினைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அதேபோல், புதுச்சேரி, காரைக்கால் போன்ற இடங்களில் மது விற்கப்படுவதால், இங்கு நாம் மதுவிலக்குத் திட்டத்தை முற்றும் நிறைவேற்றவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தபோதிலும், அது ஒரு பெரும் இடையூறாக இருக்கிறது. அழகானதொரு மாளிகையைக் கட்டி அமைச்சர் அவர்கள் அதைத் திறந்து வைத்ததற்குப் பின்னரும் பக்கத்திலுள்ள சுவரில் ஓட்டை ஒன்று இருந்தால் கள்ளன் புக அது எப்படி வழியாகுமோ அப்படித்தான் புதுச்சேரியும், காரைக்காலும் தமிழ் நாட்டில் உள்ள இரண்டு பெரும் துளைகளாக இருக்கின்றன. துளைகள் மூலம் எலி எப்படிப் புகுகின்றதோ அதேபோன்று அந்த வட்டாரத்தின் மது புகுந்து நமது மதுவிலக்குத் திட்டம் அழிக்கப்படுகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் சமுதாயத்தில் நல்ல தெளிவை உண்டாக்க வேண்டும். நமது அமைச்சர்களும், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் மதுவிலக்குத் திட்டத்தில் அவ்வளவு கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அமைச்சர்களாவது, மதுவிலக்கு திட்டத்தை நன்கு விளக்கி அதை மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் தெளிவுபடுத்த வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களின் மீது இருக்கும் மதிப்பை வைத்தாவது மது அருந்துவதையும், காய்ச்சுவதையும் கொஞ்சம் நிறுத்துவார்கள். அப்படி மதுவிலக்குப்பற்றிப் பிரசாரம் செய்வதை விட்டு விட்டு எதிர்க் கட்சிகளை எந்த அளவு தாக்கமுடியுமோ அந்த அளவு தாக்கியும், எதிர்க்கட்சியினரால் நல்ல திட்டங்கள் தரமுடியவில்லை என்று பொதுமக்களிடம் குறையாகச் சொல்லும் வேலையிலும்தான் அமைச்சர்கள் ஈடுபட்டு வருகிறார்களே தவிர அவர்கள் இந்த மதுவிலக்குத் திட்டத்தில் முழு ஆர்வம் செலுத்துகிறார்கள் என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அமைச்சர்களைப்பற்றிப் பொதுமக்கள் குறை கூறுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் நாங்கள் அதைத் தெரிவித்தால் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு குறை கூறுவதுதான் வழக்கம் என்று பிறர் சொல்லக் கூடும். அமைச்சரவையில் இருப்பவர்களே இந்த மதுவிலக்குத் திட்டத்தில் முழு நம்பிக்கை கொள்ளாமல் இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். நான் கேள்விப்பட்டது சரியா இல்லையா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களேயானால் நான் அதை வரவேற்கிறேன். நண்பர் திரு. கோவிந்தசுவாமி அவர்கள் உடுத்தியிருப்பது கைத்தறியா இல்லையா என்று ஐயுறுவதற்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது! அதேபோன்று, பொதுமக்களுக்கு அமைச்சரவையிலேயே இந்த மதுவிலக்குத் திட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்ற ஐயப்பாடு இருக்கும்போது, அந்த ஐயத்தை அரசாங்கந்தான் தெளிவுபடுத்த வேண்டும். காந்தியடிகளின் பெயரைச் சொல்லி வாக்குகள் கேட்பதற்கு வேண்டுமானால் ஆளும் கட்சியினர் தயாராகிருக்கிறார்களே தவிர அவர்கள் சொன்னதைப் பின்பற்ற அவர்கள் தயாராயில்லை. அவரிடம் இருந்த வாய்மையும், அவர் காட்டிய நன்னெறியும் இன்று செயலளவில் பின்பற்றப்படுவதில்லை, ஆளும் கட்சியினராலும், அமைச்சர்களாலும்.

கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்த அதை வாங்குவதற்காக நாங்கள் இவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறோம் என்று அமைச்சர் பெருமைப்படலாம். கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்தப்படுவது குறித்து வருத்தப்படுபவன் அல்ல, நான். ஏனெனில் அதைப் பயன்படுத்துவதால் அடிக்கடி செய்யப்படும் "துப்பாக்கிப் பிரயோகங்கள்" ஓரளவு குறைவதற்கு வாய்ப்பேற்படும். ஆகவே கண்ணீர்ப் புகையை அதிகமாகப் பயன்படுத்தவேண்டு

மென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். கண்ணீர்ப்புகைக்கு இவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறீர்களே, போலீஸாரின் சம்பளம் மிகக் குறைவாகயிருக்கிறதே என்று நாங்கள் சொன்னால், "கண்ணீர்த்துளிகளுக்கு இதில் என்ன அக்கறை ? என்று கேட்கிறார்கள். ஆம், நாங்கள் கண்ணீர்த் துளிகள்தான். திராவிட முன்னேற்றக் கழகம், கண்ணீர்த் துளிதான். இந்த அமைச்சரவையின் அவலத்தைக் கண்டு சிந்துகிற, கண்ணீர்த்துளிகள்தான். போலீஸ் நிர்வாகத்தில் பெரிய அதிகாரிகள் செய்யும் தவறுகளைக் கண்டு பிடிப்பதில் அக்கறை காட்டாது, சிறிய சாதாரண போலீஸ்காரர்கள் செய்யும் சிறு தவறுகளைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்குவது கண்டு சிந்துகிற, கண்ணீர்த் துளிகள்தான். போலீஸ்காரர்களின் குறைகள் போக்கப்படவில்லை. சிறு குற்றமாக இருந்தாலும் சாதாரண போலீஸ்காரர் பழிவாங்கப்படுவதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். சாதாரண போலீஸார் லஞ்சம் வாங்கினால், அது பெரிய குற்றம்; ஆனால் பெரிய அதிகாரிகள் லஞ்சம் வாங்கினால் அரசாங்கத்திற்கு அது புலனாவதில்லை. அப்படித் தெரிந்தாலும் அதைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. ஆகவே, துப்பறியும் இலாகாவை கையில் வைத்துக்கொண்டிருந்துங்கூட அவைகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் நாட்டின் நிலை இப்படியிருக்கிறது என்பதையாவது அமைச்சர் அவர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும். பெரியவர்கள் செய்த தவறுகள் மறைந்துவிடுகின்றன, சிறியவர்கள் செய்த தவறுகள் வெளிப்படுகின்றன. அதனால் தாழ்ந்த பதவிகளில் உள்ளவர்கள் உடனடியாகத் தண்டிக்கப்படுகிறார்கள். சாதாரண போலீஸார்கள் தண்டிக்கப்படும் அளவு, குற்றம் இழைக்கும் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் தண்டிக்கப்படுவதில்லை. சப்-இன்ஸ்பெக்டர்கள் தண்டிக்கப்படும் அளவு இன்ஸ்பெக்டர்கள் தண்டிக்கப்படுவதில்லை, இன்ஸ்பெக்டர்கள் தண்டிக்கப்படும் அளவிற்கு அதற்கு மேல் இருக்கக்கூடிய அதிகாரிகள் தண்டிக்கப்படுவதில்லை. ஆனாலும், லஞ்சம் வாங்குவதிலும் தவறுகள் செய்வதிலும் இதில் ஒரு தொடர்பு இருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன். மாறாகப் போலீஸ் இலாகாவில், நல்லவர்களும் இருக்கிறார்கள். நேர்மையாக இருக்கவிரும்பி கெட்ட பெயர் எடுத்துக்கொள்கிறவர்களும் இந்த இலாகாவில் இருக்கிறார்கள். பூந்தமல்லியில் நேர்மையுள்ளம் படைத்த ஒரு சப்-இன்ஸ்பெக்டர் பணியாற்றினார். கொடுமை உள்ளம் படைத்தவர்களும் ஆளும் கட்சியோடு தொடர்பு உள்ள சிலரும் அவரைக் கடுமையாகத் தாக்கியதனால் அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவருக்கு என் பராராட்டுதலையும், அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நேர்மையாக இருப்பவர்கள் தாக்கப்படுகிறார்கள். ஆளும் கட்சியோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற மனப்பான்மையோடு இப்படிச் செய்ததாகக் கூறப்படுகிறது. அதைப்பற்றிக் கூடுதலாக விளக்கவேண்டிய அவசியமில்லை. உள்நாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பல வருடங்களாக அமைச்சராக இருந்து அனுபவம் பெற்றுள்ளவராவார். அநீதி எப்படி எப்படி, எங்கெங்கு தாண்டவமாடுகிறது என்பது அவர்களுக்குத் தெரியும். அவர் மனது வைத்தால் அதைத் தடுக்க முடியும் என்பதினால்தான் நான் இதைச் சொல்லுகிறேன். அக்கிரமங்கள் நடப்பதைத் தடுப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது மிகமிக அவசியம். அதனால் உள்துறை அமைச்சர் அவர்களின் பெயர் கெட்டுப்போவதாகயிருந்தாலும் சரி, அநீதிகளைத் துடைப்பதற்கு அவர்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்தாலொழிய போலீஸ் இலாகவில் காரியங்கள் செம்மையாக நடைபெற முடியாது. போலீஸ் இலாகா நியாயமாக காரியங்கள் செய்யாவிட்டால், அதன் விளைவு ஆளும் கட்சியைத்தான் பாதிக்கும். எதிர்க்கட்சியினராகிய நாங்கள் ஆளும் கட்சியினரைப் பற்றிக் குறைகண்டு அதைக் கூறவேண்டுமென்ற ஒரே ஒரு நோக்கம் மட்டும் கொண்டிருந்தால், போலீஸ் இலாகா மீது கண்காணிப்பாக இருங்கள் என்று வலியுறுத்திச் சொல்லமாட்டோம். அதற்குப் பதிலாக குற்றங்குறை வளரட்டுமென்று நினைத்து அதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்வோம். போலீஸ் இலாகாவில் இருக்கக்கூடிய குறைகளைப் போக்கி





னால்தான் மக்கள் அந்த இலாகாவினால் பயன் அடைய முடியும் என்ற காரணத்தினால்தான் இதை நாங்கள் வலியுறுத்துகிறோம். அது மட்டுமல்ல. போலீஸ் இலாகாவைப் பொறுத்த வரையில், முன்னர் பல தவறுகள் நடைபெற்று யார் யாருக்கெல்லாமோ பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பதவி உயர்வுகள் நியாயமான முறையில் கிடைக்கவில்லை என்ற குறை அதன் பல்வேறு நிலையிலும் இருக்கின்றது. போலீஸ் இலாகாவிலே உள்ள பதவிகளைப் பொறுத்த வரையிலும், உயர்வு நல்ல முறையிலே ஒழுங்காக அளிக்கப்படுவதற்கும், திறமை மதிக்கப்படுவதற்கும், லஞ்ச லாவண்யத்தில் ஈடுபட்டவர்கள் ஒழிக்கப்படுவதற்கும் ஏதேனும் புதிய முறையிலே அமைச்சர் அவர்கள் திட்டமிட்டு வழி காணவேண்டும். அதிகார வர்க்கத்தினரின் தவறுகள், மேலே போகப் போக ஊழல்கள் அதிகமாகின்றன. அந்த ஊழல்கள் எல்லாம் ஆளும் கட்சியினரைத்தான் பாதிக்கும். அந்த ஊழல்களைத் தடுக்க, நல்லவர்கள் மேலிடத்திற்கு உயர்ந்து வர வழி வகை காணவேண்டும். திருச்சி டி.எஸ்.பி. அவர்களைப்பற்றி—அந்தப் பதவி குறித்து எனக்குச் சரியாக நினைவு இல்லை—குற்றச்சாட்டு திருச்சி மாவட்டத்தில் பெரிதாகப் பேசப்பட்டு வந்தது. குற்றச் சாட்டுகள் இப்படி மக்களிடையே பேசப்படுகின்ற அளவுக்கு இருக்கும்பொழுது, அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ? எத்தனை பேர்கள் வேலையை விட்டு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் ? யார் யார் மீது என்னென்ன காரணத்திற்காக என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி போலீஸ் இலாகாவிற்கு மான்யம் கோரும் நேரத்தில் சட்ட மன்றத்தில் அமைச்சர் அவர்களே தெரிவிக்க வேண்டும். இத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, இவ்வளவு குற்றச்சாட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனைகள் கொடுக்கப்பட்டன, இவ்வளவு நேர்மையாளர்களுக்குப் பாராட்டு அளித்திருக்கிறோம் என்ற முறையில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லத் தொடங்கினாலே அதிகாரிகள் உண்மையாகவே பயப்படுவார்கள். போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆட்சிக்குப் பயப்படவேண்டுமென்ற அக்கறை எனக்கு அதிகம் உண்டு. நான் அவர்களுக்கு எப்பொழுதும் அடங்கி நடப்பவன்தான். சில பேர்கள் போலீசாருக்குப் பயப்படுபவர்கள் அல்ல என்பதும் எனக்குத் தெரியும். போலீஸ் அதிகாரிகள் யாருக்கும் பயப்படத் தேவையில்லாத ஒரு நிலை காரணமாக, எதையும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் அவர்களுக்கு வந்துவிடுமேயானால், இந்த மாநிலம் போலீஸ் ராஜ்யமாகத்தான் இருக்கும், பக்தவத்சலம் ராஜ்யமாக இருக்காது, காமராஜ் ராஜ்யமாக இருக்காது. ஆளும் கட்சியினருக்கு அதனால் பெருமை இருக்காது. ஆகவே, வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நிலையைச் சரி செய்ய வேண்டும். அதிகாரிகளின் பதவி உயர்வைக் குறித்து அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். நேற்றையதினம் இராசிபுரம் பட்டணத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அங்கு யாரோ குற்றம் செய்தார்கள் என்பதற்காக போலீஸ் இலாகாவினால் அவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளை இந்தக் கடிதத்திலே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அதை நான் விளக்கத் தேவையில்லை. அவ்வளவு வெட்கக் கேடான செய்திகள் அந்தக் கடிதத்தில் இருக்கின்றன.

நான் இன்னொன்று சொல்லுவேன். இந்தப் போலீஸ் இலாகாவைச் சார்ந்த தீ அணைக்கும் படைக்கு ஒதுக்கப்பட்ட மான்யத்தை சென்ற ஆண்டு மிகச் சிக்கனமாகச் செலவழித்திருக்கிறோம். சிக்கனமாக என்று பெருமையாக கூறிக்கொள்ளுகிறார்கள். சென்ற ஆண்டு நாட்டில் நெருப்புப் பிடித்த சம்பவங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் பார்க்கவேண்டும். செலவைக் குறைத்து சிக்கனம் செய்திருக்கிறோம் என்று கூறினார்கள். ஊரில் அதிகமாக நெருப்புப் பற்றிக்கொண்டு எறிந்ததற்கும், இவர்கள் சிக்கனமாக செலவு செய்ததற்கும் இடையே உள்ள ஒற்றுமையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த ஆண்டில் கொஞ்சம் அதிகமாகச் செலவு செய்ய கூடுதலாக தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். அதன் விளைவாக நிச்சயமாக புதிய தீ அணைக்கும் நிலையங்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்படும் என்பதை வரவேற்கிறேன். அதிகமாக தீ அணைக்கும் நிலையங்களை

[Sri K. Anbazhagan] [12th March 1959

ஏற்படுத்துங்கள். நாட்டில் கண்ணீர்த்துளிகளைப் பெருக்க விடாதீர்கள். கண்ணீர்த்துளிகள் வளர்ந்தால் இந்த ஆட்சி நிலைக்காது என்பதை அமைச்சருக்குத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI M. RAMACHANDRA REDDI : தலைவர் அவர்களே, இந்தச் சபை முன்பு வைக்கப்பட்டிருக்கும் போலீஸ் மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சபையிலே இந்த விவாதத்திலே கலந்துகொண்ட சில அங்கத்தினர்கள், வட ஆற்காடு ஜில்லாவில் இருந்த டி. எஸ். பி.-யை ஏதோ அங்கு இருக்கும் காங்கிரஸ் தலைவர்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி "டிரான்ஸ்பர்" செய்யும்படியான நிலைமை ஏற்படுத்தப்பட்டது என்றும், போலீஸ் நிர்வாகத்தில் அனாவசியமாக காங்கிரஸ்காரர்கள் தலையிடுகிறார்கள் என்றும், அதற்கு அமைச்சர் அவர்கள் ஆதரவாக இருந்தார்கள் என்றும் சொன்னார்கள். அம்மாதிரி குற்றச்சாட்டு ஆதாரமற்றது. வட ஆற்காடு ஜில்லா, அந்தத் தொகுதியிலிருந்து வந்தவன் என்ற முறையில் எனக்கு அதுபற்றி நன்றாகத் தெரியும். அந்த டி. எஸ். பி. அவர்கள் தானாகவே மாறுதல் கேட்டிருந்தார்கள் ஒரு காலத்திலே. அந்த மாறுதல் இப்பொழுது நேர்ந்தது. அவர்கள் பேரில் புகார் செய்யப்பட்டு, அந்தப் புகார் காரணமாக அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, ஆதரவு காட்டி அவர்கள் மாற்றப்பட்டார்கள் என்பது சரியல்ல. அவர்கள் சொந்த விருப்பத்தின் பேரில்தான் இந்த மாறுதல் செய்யப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் கட்டை தொட்டி வியாபாரம் செய்கிறார்கள், கட்டை தொட்டி வைத்திருக்கிறார்கள். அது பொதுஜன போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதினால் கேஸ் போட்டார்கள் என்று சொல்கிறார்கள். நீண்டகாலமாக அங்கே கட்டை தொட்டி வியாபாரம் நடந்துகொண்டு வருகிறது. பல டி. எஸ். பி.-கள் அதைப் பார்த்தும் இருக்கிறார்கள். அப்பொழுது ஆட்சேபம் இல்லாது இருந்தும் இப்பொழுது மாத்திரம் ஆட்சேபம் வந்ததால் அதில் ஏதோ ஒரு உள் நோக்கம் இருப்பதாகத்தான் அறிய முடியுமே தவிர வேறு ஒன்றும் இல்லை. அம்மாதிரி உள்நோக்கம் இருந்தாலும்கூட, அதற்காக நிர்வாகத்திலே தலையிடுவதில்லை. எந்தக் காங்கிரஸ்காரரும் அமைச்சரிடம் இதுவரையில் போலீஸ் நிர்வாகத்தைப் பற்றி புகார் சொன்னது கிடையாது. டி. எஸ். பி.-யை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதனால் தான் இந்த மாறுதல் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஆகவே, காங்கிரஸ்காரர்கள் போலீஸ் நிர்வாகத்தில் தலையிட்டார்கள் என்று சொல்லுவது ஆதாரமற்றது, பொருத்தமானது அல்ல. அமைச்சர் அவர்கள் அவர்களுடைய திறமையை முழு அளவு செலுத்தி, போலீஸ் நிர்வாகத்தைச் செம்மையாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். அந்த முறையில் நான் அவர்களைப் பாராட்டவேண்டும். இப்பொழுது இந்த மான்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை சிறிய அளவுதான். அதை இரட்டிப்பாக ஆக்கி, அவர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து, அவர்களுக்கு அதிகச் சம்பளத்தைக் கொடுத்து அவர்களிடையே உயர்ந்த பண்பை எதிர்பார்க்க வேண்டும். அவர்களைக் காணும்பொழுது சிலருக்கு எம கிங்கரர்களாகத் தோன்றுகிறது. நல்லவர்கள் அவர்கள் சேவையைப்பற்றி ரொம்பவும் நிர்ப்பயமாக இருக்கிறார்கள். நல்லவர்களுக்கு நல்லவர்களாகவும், கெட்டவர்களுக்கு அதிகக் கெட்டவர்களாகவும் போலீசார் இருக்கத்தான் வேண்டும். அவர்களுக்கு இருவித சுபாவம் இருக்கத்தான் வேண்டும். எல்லாத் துறைகளிலும் நல்ல முறையில் அவர்கள் நாட்டைப் பாதுகாக்க வேண்டும். அதுவும் இப்பொழுது பண்பாடும், அன்பும் குறைந்து அவைகளுக்கு எதிர்ப்பு இருக்கும் சமயத்திலே போலீஸார் இருந்துதான் ஆகவேண்டும். ஆட்சியற்ற சமுதாய அமைப்பிலே போலீசார் தேவையில்லை. இப்பொழுது போலீசார் இருந்துதான் ஆகவேண்டும். அவர்களுடைய பண்பு வளர வேண்டும். மேலே இருக்கிற அதிகாரிகள் நல்ல முறையிலே வேலை செய்கிறார்கள். அதுபற்றி ஆட்சேபணையில்லை. அவர்களுக்குக் கீழே இருக்கிற அதிகாரிகள் சிலருக்கு தவறான எண்ணம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி அமைக்கவேண்டும். அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கவேண்டும். அதிகமான எண்ணிக்கையில் வைத்து



12th March 1959] [Sri M. Ramachandra Reddi]

விட்டால் மாத்திரம் நமக்கு பாதுகாப்பு வந்துவிடாது. எண்ணிக்கையைக் குறைத்து, அவர்களுக்கு இருப்பதற்கு வசதி, சம்பள உயர்வு இவைகளையெல்லாம் கொடுத்து, அவர்கள் நேர்மையோடும், பண்போடும் நடந்து கொள்ளும்படி செய்யவேண்டும். அவர்களுடைய மனோபாவத்தை மாற்றிக் கொள்ள போதிய வசதிகளைச் செய்துகொடுத்து, நிர்வாகத்தை திறம்படச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருத்தப்பட்ட மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்தபிற்பாடு, அதிகமான அபராதம் விதிக்கப்படுவதால், குற்றங்கள் குறைந்துகொண்டு வருகின்றன. போலீஸார் ஒத்துழைப்பு ரொம்பவும் ஜாஸ்தியாக இருக்கிறது. அதில் சந்தேகமே இல்லை. மதுவிலக்குச் சட்டம் நல்ல முறையில் அமுல் நடத்தப்படவில்லை, போலீஸ் ஒத்துழைப்பு இல்லை, அது வருமானத்திற்கு வழியாகவே இருக்கிறது, அது ஒரு குடிசைத் தொழில் போல் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். எங்கேயாவது ஒரு இடத்தில் அம்மாதிரி இருக்கலாம். அம்மாதிரி இருப்பதை வைத்துக்கொண்டு பொதுவாக குறை சொல்லுவதில் பயன் இல்லை. அம்மாதிரி குறை கூறி மது விலக்கை ரத்து செய்துவிட வேண்டுமென்று சொன்னால் அது காந்தியத்துக்கு விரோதம். புதுச்சட்டம் வந்த பிறகு மதுவிலக்கு நல்ல முறையில் நடத்தப்படுகிறது என்று நிச்சயமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

போலீஸ் மான்யத்தை இரட்டிப்பாக ஆக்கி, போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி, சம்பள வசதி, முதலிய வசதிகளை அளித்து மேலும் அவர்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் நிவர்த்தி செய்யவேண்டும். எல்லா மான்யத்தையும் விட போலீஸ் மான்யத்திற்கு நான் அதிக ஆதரவு கொடுக்கிறேன். போலீஸ்காரர்கள் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும், அவர்களுடைய பண்பு வளரவேண்டும். அதற்கு அவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் ஜில்லா டி. எஸ். பி.யை மாற்றுவது சம்பந்தமாக காங்கிரஸ்காரர்கள் தலையிட்டார்கள் என்று சொல்லுவது முற்றிலும் ஆதாரமற்றது. அம்மாதிரி நடைபெறவில்லை. அதோடுகூட எங்கள் ஜில்லா டி. எஸ். பி.க்கள் போலீஸ்காரர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு பல நல்ல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் விசுவநாதன் அவர்களும், முன்பு இருந்த நாராயணன் அவர்களும் போலீஸ்காரர்கள் மனைவிமார்கள் நல்ல முறையில் ஒரு கைத்தொழிலில் ஈடுபட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளுவதற்கு, ஊதியத்தை உயர்த்திக்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் நேரிடையாக இந்த வளர்ச்சியைக் கண்டு பாராட்டியிருக்கிறார்கள். இதுபோன்று எல்லா ஜில்லாக்களிலும் நிர்வாகம் நல்ல முறையில் தான் நடந்துகொண்டு வருகிறது. ஏதோ ஒன்று, இரண்டு ஜில்லாவில் வேண்டுமானால் இம்மாதிரி ஏதாவது புகார்கள் சொல்லலாம். பொதுப்படையாக இம்மாதிரி புகார் சொல்லுவது சரியல்ல.

போலீஸ் அதிகாரிகள் பொது மக்கள் செய்கின்ற குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலேயே கவனம் செலுத்துகிறார்களே தவிர, இலாகா அதிகாரிகள் செய்யும் குற்றங்களைக் கவனித்து, அதைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு இல்லை. அவர்கள் பேரில் பொதுமக்கள் ஏதாவது புகார் செய்தால், பிறகு அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கிறார்களே தவிர, அவர்களே நேரடியாகச் சென்று பல்வேறு இலாக்காக்களில் அதிகாரிகள் செய்கின்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பது கிடையாது. கலெக்டராக இருந்தாலும் சரி, அவர் பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டும். டி. எஸ். பி. க்கு ஏதாவது "இன்பர்மேஷன்" வந்தால் அவர்கள் "இனிஷியேடிவ்" எடுத்துக்கொள்ளவேண்டும். அம்மாதிரி ஒரு சம்பிரதாயம் இருக்கவேண்டும். இம்மாதிரி இலாகா அதிகாரிகள் மீது யாராவது புகார் செய்தால்தான், தூண்டுதல் இருந்தால்தான் [illegible]

செய்கின்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பதோடு அல்லாமல், மற்ற இலாகா அதிகாரிகளின் பேரில் சந்தேகம் ஏற்பட்டால் போலீஸார் அதைப் பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

12 noon. **Sri M. KALYANASUNDARAM** : அவைத் தலைவர் அவர்களே, போலீஸ் மான்யத்தைப் பற்றி, அதற்காக மான்யம் கோரக் கூடிய இந்த சமயத்தில் போலீஸைப்பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன். போலீஸையும் மதுவிலக்கையும் ஒரே அடியாகச் சேர்த்திருப்பது ஒருவிதத்தில் பொருத்தம்தான். ஆனால் மதுவிலக்குக் குற்றங்கள் ஆகட்டும். அல்லது வேறு விதங்களில் நடக்கக் கூடிய குற்றங்களாகட்டும், எந்தக் குற்றங்களாக இருந்தாலும் அவைகள் எல்லாம் அதிகரிக்காமல் இருந்தால் போதுமானது. ஆனால் இதற்காக எவ்வளவுக் கெவ்வளவு சட்டங்களையும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்தும் கூட குற்றங்கள் எல்லாம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறதே தவிர குறைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. எத்தனையோ சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தாலும்கூட குற்றங்கள் எல்லாம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. கிராமப்புறங்களில் வேலையில்லாத்திண்டாட்டம் போக வேண்டும், அதே நேரத்தில் மக்களுடைய வாழ்க்கைத்தரமும் உயர வேண்டும். அவ்விதம் ஒரு நிலை ஏற்பட்டால் குற்றங்கள் குறைவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அதற்காக போலீஸ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பது அல்ல என்னுடைய கருத்து. போலீஸ் திறமையாக நடக்கவேண்டும் என்பதுதான். ஆனால் இவ்விதம் திறமையாக நடந்திருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட குற்றங்கள் குறையவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. கொலைக்குற்றங்களுக்காக பல கேஸ்கள் நடத்தப்படுகின்றன. இந்த நேரங்களில் எல்லாம் போலீஸ் எந்த விதத்தில் நடந்துகொள்ளுகிறது, எந்தவிதத்தில் வேலை செய்து வருகிறது என்பதைப் பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். சில கேஸ்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போகும்போது பயனில்லாமல் போய்விடுகிறது. இதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். சில கேஸ்களை கோர்ட்டுகள் தள்ளிவிடக் கூடிய நிலையில் தஸ்தாவேஜுகளை போலீஸ்காரர்களே தயார் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தவிதமான ஒரு சந்தேகமில்லாத முறையில் போலீஸார் நடந்துகொள்ளக்கூடிய வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒவ்வொரு தீர்ப்பிலும் போலீஸாரின் குற்றத்திற்கு எதிராக தீர்ப்பு தரப்படுகின்றன. அந்த விதமான தீர்ப்புகள் தரப்படுகின்ற சமயத்தில் எல்லாம் அதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றி பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இதற்காக ஒரு விசேஷ அதிகாரியை நியமித்தாவது இவ்விதமான தீர்ப்புகள் வருகின்ற நேரத்தில் தீர்ப்புகளை எல்லாம் வரவழைத்து அதில் போலீசினுடைய திறமைக் குறைவு என்ன என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்வது நல்லது என்பது எனது கருத்து. இவ்விதம் ஒவ்வொரு வருஷமும் செய்வார்களானால் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் போலீஸார் எடுக்கின்ற நடவடிக்கைகள் ஓரளவுக்கு சீர்திருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் போலீஸ் நடவடிக்கைள் எல்லாம் கட்சிகளின் விருப்பு வெறுப்புகள் இல்லாமல் செயலாற்றவேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இதைப்பற்றிச் சொல்லும்போது ஆளும் கட்சிக்குத்தான் இதில் அதிகப் பொறுப்பு இருக்கிறது. போலீஸினுடைய கடமை என்ன என்பதைப் பற்றி இன்று காலையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் "ஐடியல் போலீஸ்" ஸாக இருப்பதுதான் நம்முடைய குறிக்கோள் என்ற முறையில் சொன்னார்கள், அந்த முறையில் ஐடியல் போலீஸ் ஸ்டேஷன் அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். போலீஸார் எந்த முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் இம்மாதிரிப்பட்ட ஸ்டேஷன்கள் அமைத்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். போலிஸ்க்கு எந்தவிதமான லட்சியம் இருக்க முடியும்? அரசாங்கத்தினுடைய லட்சியம்தான் போலீஸுக்கும் இருக்க



முடியும். தொழிலாளர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், இந்த நாட்டில் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய லட்சியம். அந்த லட்சியத்திற்குட்பட்டு தான் போலீஸும் நிர்வாக இலாகாக்களும் நடக்க முடியும். அந்த விதத்தில் நடப்பது குற்றம் என்று நான் சொல்ல முன்வரவில்லை. ஆனால் இன்றைக்கு போலீஸ் எந்த முறையில் நடந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பார்ப்போமானால் இந்த நாட்டிலுள்ள மக்களுடைய முன்னேற்றத்திற்கான வகையில் போலீஸ் எந்தவிதமாக நடந்து கொள்ளுகின்றது என்பதை நாம் பார்க்கவேண்டும். அமைச்சர் அவர்கள் கேட்கலாம், நாட்டிலுள்ள எல்லா நடவடிக்கைகளிலும் போலீஸ் ஈடுபட்டு, எல்லா லட்சியங்களையும் நிறைவேற்றுவதற்கு போலீஸ் வேலை செய்ய முடியுமா என்று கேட்கலாம். ஆனால் நாம் சட்டசபையில் நிறைவேற்றுகின்ற சட்டங்களை அமுல் செய்கின்ற காரியங்களிலாவது போலீஸ் சாதகமாக நடந்து கொள்ளுகின்றதா அல்லது பாதகமாக நடந்துகொள்ளுகிறதா என்பதை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. இதில் கட்சிகளின் விருப்பு வெறுப்புகளுக்கிடமின்றி நாம் நிறைவேற்றுகின்ற சட்டங்களை நிறைவேற்றுவதிலாவது சாதகமாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, அதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுடைய தகராறுகளிலும், தொழிலாளர்களுடைய தகராறுகளிலும் போலீஸ் எவ்விதமாக நடந்துகொள்கின்றது என்பதைப் பற்றி பல அங்கத்தினர்கள் இங்கு எடுத்துக் காட்டினார்கள். நண்பர் ஆதிமூலம் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் நடப்பதைப்பற்றியும், நண்பர் எஸ். எம். அண்ணாமலை அவர்களும், நண்பர் வி. கே. கோதண்டராமன் அவர்களும் வடாற்காடு ஜில்லாவில் நடந்துகொண்டிருப்பதைப் பற்றியும் இங்கு எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் எப்படியிருக்கிறது என்றால் இன்னமும் பழைய மனோபாவம் தான் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. இதை அமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஒருவேளை இதே மனோபாவம் தான் இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களும் விரும்புவதாக இருந்தால் அதைப்பற்றி நமக்கு வருத்தமில்லை. வெறும் வோட்டு பெறுவதற்காக மட்டும் தான் இம்மாதிரி சட்டங்களைக் கொண்டு வருகிறோம் என்ற எண்ணம் அமைச்சர் அவர்களுக்கும் இருந்தால் அதைப்பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் இங்கு நிறைவேற்றக்கூடிய சட்டங்களை எல்லாம் அமுல் செய்வதில் போலீஸ் சாதகமாக இருக்கவேண்டும். விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றக் கூடாது என்று சட்டத்தை நிறைவேற்றுகின்றோம். அந்தச் சட்டத்தையும் மீறி வெளியேற்றப்படுகின்றபொழுது விவசாய சங்கம் அதைத் தடுப்பதற்காக முயற்சி செய்கின்றது. ஆனால் போலீஸாரால் சட்டப்படி விவசாய சங்க ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அதற்காக வேறு விதத்தில் 107-வது செக்ஷன், 109-வது செக்ஷன், 151-வது செக்ஷன் என்று பல செக்ஷன்களின் கீழ் பல முக்கியமான ஊழியர்கள் மீது வழக்குப் போட்டுவிடுகிறார்கள். கோர்ட்டுகளில் போனால் இந்த வழக்குகள் நிற்பதில்லை. இந்த நிலைமையில் வழக்குகளை போலீஸ் போட்டுக்கொண்டிருக்கிறது. திருச்சி ஜில்லாவைப் பொறுத்தவரையில் சொல்லுவதாக இருந்தால், அங்கு சீனிவாசநல்லூர் என்ற இடத்தில் பஞ்சாயத்து போர்டு மெம்பர் உட்பட பல பேர்களின் மீது ஜாமீன் வழக்கு போடப்பட்டது. கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த விவசாய சங்கத்தில் இவர்கள் எல்லாம் வேலை செய்கிறார்கள், அதற்காக சந்தாவசூல் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரி குற்றச் சாட்டுகளைச் சொல்லவேண்டியதின் அவசியமென்ன? இப்படி யார் தலையிட்டு இவ்விதம் குற்றச்சாட்டுகளை போடச்சொல்லுகிறார்கள் என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதுபோன்று தொழிலாளர்களுடைய போராட்டத்தை எடுத்துப்பார்த்தால், அதில் எல்லாம் போலீஸ் முதலாளிகள் பக்கம் தான் நிற்கிறது. சம்பள உயர்வு வேண்டும் என்று பீடித்தொழிலாளர்கள் போராட்டம் செய்தபோது—குறிப்பாக பேர்ணம்பட்டு பீடித் தொழிலாளர்கள் சம்பள உயர்வு வேண்டும் என்று போராட்டம் நடத்தக் கூடிய சமயத்தில் பீடி முதலா

[Sri M. Kalyanasundaram] [12th March 1959

மில்லை; அரசாங்கம் நினைத்தால் அவர்களுடைய பெயரை கண்டுபிடிக்க முடியும்—ஒரு தொழிலாளியினுடைய வீடு உட்பக்கத்தில் தாளிடப்பட்டிருந்தும், முதலாளியால் அமர்த்தப்பட்ட அடியாட்கள் வீட்டில் மேற்கூரையைப் பிரித்துக்கொண்டு உள்ளே புகுந்து அங்கேயிருந்த பெண் பிள்ளைகளையும் இம்சித்திருக்கிறார்கள். இதைப்பற்றி போலீசினிடத்தில் தகவல் கொடுத்தால் போலீஸ் தக்க சமயத்தில் வருவதில்லை. இதற்குக் காரணமாயிருந்தவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதற்காக அவர்கள் மீது எந்தவிதமான கேஸும் போடவில்லை. இம்மாதிரி நடந்து கொண்டிருந்தால் இது எங்கே கொண்டு போய்விடும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் வண்டலூர் தொழிற்சாலையில் பல தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டது எல்லோருக்கும் தெரியும். அந்தச் சமயத்தில் தொழிலாளர் இலாகாவும், போலீஸ் இலாகாவும் இந்த அமைச்சர் அவர்களிடத்திலேயே இருந்தன. ஒப்பந்தப்படி நடப்பதற்கு நிர்வாகத்தினர் மறுத்தார்கள். அதோடு 252 தொழிலாளர்களையும் பழி வாங்கினார்கள். ஒப்பந்தப்படி நடந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. ஒப்பந்தப்படி நிர்வாகம் நடக்கவேண்டும் என்று சொல்வதற்கு சர்க்காருக்கு சக்தியில்லை. ஒப்பந்தம் அமுல் செய்யவேண்டும் எனபதற்காக அவ்வளவு தொழிலாளர்களும் உள்ளேயிருந்து சமாதானமான முறையில் வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக தொழிற்சாலையின் உள்ளே புகுந்து அடித்திருக்கிறார்கள். இவ்விதம் சமாதானமாக உள்ளேயிருந்து கொண்டிருந்த தொழிலாளர்களை அடிக்கவேண்டியதின் காரணம் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதலாளிகள் கம்ப்ளெய்யின்ட் எழுதிக் கொடுக்ககூடும், போலீசாரே கம்ப்ளெயின்ட் எழுதிக்கொடுங்கள் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள். தொழிலாளர்களைப் பழி வாங்கக் கூடாது, தொழிலாளர்கள் அவசியமில்லாமல் துன்புறுத்தக் கூடாது என்று நாமெல்லாம் சொல்லுகிறோம், அதுதான் எங்களுடைய லட்சியம் என்றெல்லாம் சொல்லுகிறோம், ஆனால் அவர்கள் கதவடைப்பு நடத்தி தொழிலாளர்களைத் துன்புறுத்தும்போது நாம் தொழிலாளர்களைப் பாதுகாப்பதில்லை. முதலாளிகள் கதவடைப்பு செய்கின்றபொழுது போலீஸார் முதலாளிகளுக்குத்தான் உதவி செய்கின்றார்கள். இந்த முறையில் போலீஸார் ஏன் நடந்துகொள்கின்றார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதோடு இந்தமாதிரியான நிலைமை இருந்துகொண்டிருந்தால் முதலாளிகளும் பெரிய நிலப்பிரபுக்களும்தான் பாதுகாக்கப்பட்டு வருவார்களே தவிர எந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்தாலும் அதன் மூலம் தொழிலாளர்களைப் பாதுகாக்க முடியாத ஒரு நிலைதான் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குக் துப்பாக்கி பிரயோகம் அதிகமாக நடக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் போலீஸாரின் நிர்வாகத் திறன் அல்ல, இந்த நாட்டிலிருக்கின்ற தொழிற்சங்கங்களும் விவசாய சங்கங்களும் அதன் தலைவர்களும்தான் காரணம். அவர்களுடைய சமாதானப் போக்கினால்தான் துப்பாக்கிப் பிரயோகம் ஏற்படவில்லை என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே இவ்விதம் முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் மட்டும் பாதுகாப்பு கொடுக்கின்ற போலீஸ் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்கு சர்க்கார் திட்டவட்டமாக வழிகாட்டியாக வேண்டும். இதற்கு மந்திரிசபை தான் பொறுப்பு. ஒன்றிரண்டு இடங்களில் அதிகாரிகள் தன்னிச்சையாக நடந்துகொண்டிருந்தாலும்கூட விவசாயப் போராட்டங்களிலும், தொழிலாளர் போராட்டங்களிலும் போலீஸ் எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்று சர்க்கார் திட்டவட்டமாக உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும். இப்போது இருந்துகொண்டிருக்கின்ற முறைப்படி "கொல்வதற்காக சுடுவது" (Shoot to kill) என்றிருக்கின்ற கொள்கையை மாற்றிக்கொண்டால் தான் மக்களுடைய நன்மதிப்பைப் போலீஸ் பெறமுடியும். அந்த முறையில் இப்போது இருக்கின்ற ஸ்டான்டிங் ஆர்டர்
12-10 p.m. களை எல்லாம் மாற்றுவதற்கு யோசனை செய்யவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பிரிட்டிஷ்காரர்கள் நம் நாட்டு தேசீய இயக்கத்தை அடக்கி ஒடுக்க வேண்டுமென்று, அதற்காக போலீஸை



12th March 1959] [Sri M. Kalyanasundaram]

உபயோகப்படுத்திவந்தவர்கள் போட்ட சட்டங்களை இன்னும் அமுலில் வைத்திருப்பது சோஷலிஸ சமுதாயத்தை நோக்கிப் போவதற்குச் சாத்தியமானதாக இருக்குமா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் சோஷலிஸ சமுதாயத்தை நோக்கிப் போகிறோம் என்பது வெறும் பிரசாரமாக இருக்கிறது. உண்மையான சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டுமானால் அதிலே மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றால்தான் நடைபெறமுடியும். போலீஸின் தன்மை, அது பணியாற்றுகின்ற முறை, இவைகளில் தீவிரமாக மாற்றத்தை உண்டாக்க வேண்டும். போலீஸ், ஸ்டான்டிங் ஆடர்ஸை மாற்றவேண்டிய யோசனையையும் இங்கே கூறிக் கொள்ளவிரும்புகிறேன். மற்ற பிரச்னைகளில் இந்தச் சபையிலுள்ள கட்சிகளின் ஒத்துழைப்பு வேண்டும், உணவுக் கமிட்டியில் ஒத்துழைப்புவேண்டும், கல்விப் பிரச்னையில் ஒத்துழைப்பு வேண்டும் என்று அந்தந்தத் துறைகளில் ஒத்துழைப்பைக் கோருவதுபோல, போலீஸ் ஸ்டான்டிங் ஆர்டர்கள் மாற்றப்படவேண்டும், விவசாய சங்கங்கள் எந்த முறையில் நடைபெற வேண்டும், தொழிற் சங்கங்கள் எந்த முறையில் நடைபெறவேண்டும் என்று எல்லோரும் பேசி, சகல கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து, போலீஸ் விதிகளில் மாற்றங்கள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு யோசனை கூற விரும்புகிறேன்.

அதேசமயத்தில் போலீசுக்குச் செலவழிக்க ஒதுக்கப்பட்ட தொகை மிக அதிகமாக இருக்கிறது என்று சில அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். இவ்வளவு அதிகமாகச் செலவாகாது, நான் சொல்லக்கூடிய யோசனைகளை ஏற்றுக்கொண்டால். போடக்கூடிய சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் அதிக கவனம் செலுத்த முடியும். செலவை இன்னும் குறைக்கக் கூடச் செய்யலாம். போலீசுக்கு அதிகமாகச் செலவு செய்வதில் கண்ணீர் புகைக்கு அதிகம் செலவாகிறது என்று சொன்னார்கள். கணக்குகளை ஒழுங்காகப் பரிசீலனை செய்து பார்த்தால், மோட்டார் போக்குவரத்துக்கு அதிகமாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். இதைப் பல இடங்களில் சேர்த்து வைத்திருக்கிறார்கள். பட்ஜெட் தயாரிப்பதில் இருக்கின்ற சாமர்த்தியம் காரணமாக அவ்வளவாகத் தெரியாமல் செய்திருக்கிறார்கள். கணக்குப் பார்த்ததில் இந்த இனத்தில் மட்டும் 35 லட்சம் ரூபாய் வருகிறது. காம்போஸிட் ஸ்டேட்டாக, ஆந்திரா, மலபார் எல்லாம் சேர்ந்து இருந்த காலத்தில் எவ்வளவு செலவாயிற்றோ அந்த அளவு இன்றைக்கும் மோட்டார் போக்குவரத்துக்கு செலவாகிறது, என்பதைப் பார்க்கும்போது நமது ராஜ்யத்தின் விஸ்தீர்ணம் குறைந்தும் செலவு குறைந்திருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும். இவ்வளவு ஜீப்புகள், வான்கள், கார்கள் எல்லாம் அவசியமா? ஏற்படக்கூடிய செலவு அவசியமா? இதில் ஏதாவது துஷ்பிரயோகம் இருக்கிறதா? இதைப் பற்றியெல்லாம் பரிசீலிக்க வேண்டும் என்ற யோசனையைக் கூற விரும்புகிறேன். இது விஷயத்தில்—ஒரு தனி அதிகாரி என்று நினைக்கிறேன்—அவர் பரிசீலனை செய்து சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார். தனியாக போலிஸ் இலாகாவிற்கு இவ்வளவு ஜீப்புகளும், இவ்வளவு வான்களும் தேவையா என்று பரிசீலிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அந்த சிபாரிசு என்ன ஆயிற்றோ தெரியவில்லை, இருந்தாலும் இவ்வளவு அதிகமாகச் செலவு ஏற்படுவதைப்பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் நான்கு பேர்கள் அவசியமா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டும். நமது ராஜ்யத்தின் விஸ்தீர்ணம் குறைந்திருக்கக்கூடிய காலத்தில் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல்களை அதிகப்படுத்தவேண்டிய அவசியம் என்ன? அதைக் குறைத்து இன்னும் தீ அணைப்பு பகுதிக்கு அதிகமாகச் செலவு செய்யலாம். இப்போது அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரொம்பக் குறைவு. திருச்சி ஜில்லாவில் பெரம்பலூர் பகுதியில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. திருச்சியிலிருந்து போவதற்குள்ளாக கிராமம் பூராவும் சாம்பலாகி விடுகிறது. திருச்சி ஜில்லாவிலும் சேலம் ஜில்லாவிலும் தீயணைக்கும் படை குறைவாக இருக்கிறது. அவர்களைக் குறை

சொல்லிப் பிரயோசனம் இல்லை. அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற பணம் போதாது. இந்தப் பகுதியில்—போலீஸ் பகுதியில்—ஆகக்கூடிய செலவைக் குறைத்து, தீயணைக்கும் பகுதியில் செலவை அதிகப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய யோசனை. டெபுடி இன்ஸ்பெக்டர் ஜென ரல்களைக் குறைத்து, மோட்டார் போக்குவரத்துக்கு எவ்வளவு செலவாகிறதோ அதைப் பார்த்து அதில் சிக்கனம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, போலீஸ் நிர்வாக வேலைகளில் அமைச்சர்களாகட்டும், காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களாகட்டும், குறுக்கிடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் அமைச்சர் அவர்கள், இதை நிறைவேற்றி பணி யாற்றக்கூடிய நிலை இருந்தால் தான் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடி யும். தேர்தல் காரணமாகவும், அரசியல் சுயநலம் காரணமாகவும் போலீஸ் நிர்வாகத்தில் தலையிட ஆளும் கட்சி மறைமுகமாமக ஆரம்பித்தாலும், நேர்முகமாக ஆரம்பித்தாலும், அது ஜனநாயகத்திற்கு முடிவு கட்டக்கூடிய செயலாகும்.

போலீஸை உபயோகித்தால் எதிர்க் கட்சிகள் பலஹீனம் ஆகிவிடும் என்று எண்ணவேண்டாம். எதிர்க் கட்சிகள் போலீஸ் தயவை வைத்துக்கொண்டு வளர விரும்பவில்லை. எதிர்க் கட்சிகளைப் போலீஸைக் கொண்டு அடக்கிவிட முடியும் என்றும் எண்ணவேண்டாம். ஆகவே, போலீஸ் நிர்வாகத்தில் குறுக்கிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். போலீஸ் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறத் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஸ்டாண்டிங் ஆர்டர்களைத் திருத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri P. S. CHINNADURAI : 'மதிப்பிற்குரிய சபைத்தலைவர் அவர்களே, இந்த சபையின் முன்பாக இன்று காலை முதல் போலீஸ் மான்யக் கோரிக்கை மீதும், கலால் இலாகா மான்யக் கோரிக்கை மீதும் விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மது விலக்கு சம்பந்தப்பட்ட வரையில் மது விலக்கில் பூர்ணமாக வெற்றியடையவேண்டும். மதுவிலக்குக் கொள்கையில் வெற்றி அடைவதன் மூலம் நம் நாட்டு மக்க ளின் பண்பாடு இன்னும் சிறப்பு அடையவேண்டும் என்ற நம்பிக்கை கொண்ட தோழர்களில் நானும் ஒருவன். எனது கட்சியாகிய பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி இதிலே பெரும் நம்பிக்கை கொண்டு உழைத்து வருகிறது என்று இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த மதுவிலக்குக் கொள்கையை அமுல் நடத்துவதிலே தயவு-தாட் சண்யத்திற்கும் இடம் வைக்கக் கூடாது என்று பன்முறை இந்தச் சபை யிலே வற்புறுத்தியிருக்கிறேன். பெரிய மனிதர்கள் என்று சமூகத்திலே கருதப்படுபவர்களாக இருந்தபோதிலும், அல்லது வேறு உயரிய அதிகார பதவியில் இருக்கிறவர்களாக இருந்த போதிலும், அந்தக் கொள்கையைச் சரிவர அமுல் நடத்தவேண்டுமென்பதிலே தகுந்த அக்கரை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள். அதற்கு அடிப்படையாகச் செய்யவேண்டிய காரியங்களிலே, சிலருக்கு மாத்திரம் குடிப்பதற்கு அனுமதி கொடுக்கிறோமே அதனை ரத்துசெய்யவேண்டுமென்பது மிகவும் முக்கியமானது. அந்த சிலருக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதி கொடுப்பதை வரவேற்கமாட்டேன். சென்ற ஆண்டிலும், அதற்கு முந்திய ஆண்டிலும் மிக விஸ்தாரமாக இதைப்பற்றி விவரித் திருக்கிறேன். எனது கட்சியைப் பொறுத்த வரையில் உறுதியாகச் சொல் லுவேன்—எனது கட்சியைச் சேர்ந்தவர்கள் எவருக்கும் குடிப்பதற்கு பெர்மிட் கிடையாது. அதே போல ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எவரும் பெர்மிட் வைத்துக் கொண்டு இருக்கவில்லை என்று சொல்வதற் குரிய துணிவு சர்க்கார் கட்சித் தலைவருக்கு இருக்குமா என்பது சந்தேகமே. ஒரு கட்சியை ஏற்றியோ அல்லது ஒரு கட்சியைக் குறைத்தோ பேசவேண்டு மென்ற நோக்கத்தில் அல்ல நான் இதைச் சொல்வது, யார் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்று மக்கள் அறிந்து கொள்ளவேண் டும் என்பதற்காகத்தான் இதனைக் கூறுகிறேன். எந்தக் கொள்கையை சரி என்று ஏற்று நடத்துகிறோமோ அதன்படி நம்மாலே நடந்து கொள்ள முடியவில்லையென்றால் அப்படிப்பட்டவர்கள் நடத்துகிற ஆட்சியிலே





சரியானபடி அந்தக் கொள்கைகள் மக்களாலே எப்படி ஏற்றுக்கொள்ளப்பட முடியும், எப்படி இதிலே மற்றவர்களை மாத்திரம் குறை சொல்ல முடியும் என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். விரைவில் இதர ராஜ்யங்களில் மது விலக்கைப் பரிபூரணமாக அமுலுக்குக் கொண்டு வரச் செய்வதில் மற்ற கட்சிக்காரர்களை விட ஆளும் கட்சிக்கு பூர்ண பொறுப்பு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதர ராஜ்யங்களிலும் மது விலக்கு பூர்ணமாக வெற்றிகரமாக நடந்தாலொழிய மக்களிடத்திலே ஆங்காங்கு தோற்றுவிக்கப்படுகிற அவநம்பிக்கை காரணமாக அவர்களிட மிருந்து பூர்ணமான ஒத்துழைப்பைப் பெற முடியாது. ஆகையால் ஆளும் கட்சியைச் சேர்ந்த தலைவர்களைக் குறிப்பாக கேட்டுக்கொள்கிறேன். இதர ராஜ்யங்களிலும் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் அதிகாரத் தில் இருக்கிறார்கள், ஆகையால் பூர்ணமாக மது விலக்கு அமுலுக்கு வருவதிலே அதிகமாக வலியுறுத்த வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கையை தீவிரமாக அமல் படுத்துவதிலே சிலர் குறை செய்கிறார்கள் ; ஜனங்கள் அல்ல ; சில அதிகாரிகள் குறை செய்கிறார்கள். அப்படிக் குறை செய்கின்ற அதிகாரிகள் சம்பந்தமாக இங்கே நிறையப் பேசி ஆய்விட்டது. இந்தக் கொள்கையைச் சரிவர அமல் நடத்துகிற நல்ல அதிகாரிகளைக் குறித்து நாம் இங்கே நினைத்துக் கொள்ள வேண்டும். சென்ற ஆண்டிலே கோவைக்குப் பக்கத்திலே ஒரு சம்பவம் நடந்தது, அந்த சமயத்தில் ஒரு நல்ல போலீஸ்காரர் கொல்லப்பட்டார். இந்த ஆண்டிலே இன்னொரு போலீஸ்காரர் கொல்லப்பட்டிருக்கிறார். கோவைக்குப் பக்கத்திலே இன்னொரு கிராமத்தில் இந்த நல்ல கொள்கையை அமல் படுத்துவதற்கு தம் கடமையை செய்கின்ற போலீஸ்காரர் உயிரை இழக் கிறார். உயிரைப் பணயம் வைத்துத்தான் இரவு நேரங்களில் இப்படிப்பட்ட குற்றங்களைக் கண்டு பிடிக்க நேருகிறது. தேசிய போராட்டத்தில் தேச பக்தர்கள் ஆற்றிய தொண்டையும் அவர்கள் புரிந்த தியாகத்தையும் விட மிகவும் மேன்மை வாய்ந்தது, கடமையை நிறைவேற்றுவதற்கு போலீஸ் காரர்கள் செய்கின்ற தியாகம் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகின்றேன். அப்படிப்பட்டவர்களுடைய குடும்பங்கள் பின்னால் தவிக்கும்படியாக சர்க்கார் விட்டுவிடக் கூடாது என்று வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் அந்தக் குடும்பம் எவ்வளவு தூரம் மேன்மை பெற்றிருக்குமோ அந்த அளவு அவர்களுடைய குடும்பத்திற்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று நான் இந்த அரசாங் கத்தை மிகவும் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் இந்த இலாகாவில் இருக்கிற மற்றவர்களுக்கும் தியாக உணர்வு பெருகுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும், அவர்களுடைய துணிவு வளருவதற்கு வகை ஏற்படும். அதிலே அரசாங்கம் சற்று கவனம் செலுத்தவேண்டும் என்று மேலும் நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அந்நிய ஆட்சியினர் பல தீமைகளையும் விட்டுச்சென்றார்கள். சில நன்மைகளையும் விட்டுச்சென்றார்கள். அவர்கள் விட்டுச் சென்ற சில நன்மைகளில் போலீஸ் இலாகாவும் ஒன்று என்று நான் கருதுகிறேன். அந்நிய ஆட்சி இங்கு இருந்த காலத்திலேகூட, அவர்கள் கடுமையான அடக்குமுறைகளிலே ஈடுபட்டிருந்த காலத்திலே கூட என்னைப் பொறுத்த வரையில், நான் அவர்கள் பேரிலே பெருமதிப்பு வைத்திருந்தேன். அவர் கள் தங்களுடைய கடமையை அந்தக் காலத்தில் இருந்த அரசாங்கத்தின் கொள்கைக்கேற்ப, தங்களுடைய கடமைகளைச் சிரமேல் தாங்கி நடத்தி வைத்தார்கள். அன்று ஆட்சி புரிந்தவர்கள் பேரில் எனக்கு வருத்தம் இருந்ததே தவிர, அவர்கள் பேரில் ஆத்திரம் இருந்ததே தவிர எனக்கு தனிப்பட்ட முறையிலே ஒரு பொழுதும் அன்றைய ஆட்சியின் கொள்கையை அமல் நடத்திய போலீஸ் இலாகாவின் பேரிலே அன்றைக்கும் கூட எனக்கு வருத்தம் இருந்தது கிடையாது. அப்படிப்பட்ட நல்ல இலாகா என்று நான் பொதுப்படையாகக் கருதுகிறேன். ஏதோ தனிப்பட்டவர்கள் குற்றங் கள் செய்யலாம். கோடம்பாக்கம் சம்பவம் போல சில சம்பவங்கள் இருக்க லாம். அதை நான் உதாரணமாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை.

[Sri P. S. Chinnadurai] [12th March 1959

தனிப்பட்ட முறையிலே நடக்கும் குற்றங்களுக்குப் பரிகாரம் தேடுவதற்கு நல்ல அரசாங்கத்தாலே முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு போலீஸ் இலாக்கா எந்த அளவிலே வளர்க்கப்படுகிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். அந்நிய ஆட்சிக் காலத்திலேதான் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கும் அது போன்ற பல காரியங்களுக்கும் அன்றைய காலத்தில் பயன்படுத்தப்பட்டதென்றால் இன்றைய நிலையில் எவ்வாறு பயன் படுத்தப்படுகிறது என்று நாம் சற்று கவனித்துப் பார்க்கும்போது அன்றைக்கு இருந்ததைக்காட்டிலும் இன்றைக்கு போலீஸ் இலாகாவிலே எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது என்று நாம் காண்கிறோம். சுதந்திரம் அடைவதற்கு ஒரு ஆண்டு காலத்திற்கு முன்னால், 1945–46-ம் ஆண்டிலே சுமார் 2 கோடியே 98 லட்சம் ரூபாய் தான் போலீஸ் மான்யம். ஆனால் இன்றைக்கு 5 கோடியே 29 லட்சம் ரூபாய் வரையில் ஒதுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட இரண்டு மடங்கு உயர்ந்திருக்கிறது. 1945-வது ஆண்டிலே சென்னை ராஜ்யத்தில் ஆந்திராவின் ஒரு பகுதியும் கேரளாவின் ஒரு பகுதியும் கர்நாடகத்தின் ஒரு பகுதியும் இருந்தன. சுமார் இருபத்தைந்து ஜில்லாக்கள் இருந்த காலத்திலே 2 கோடி 98 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு 10, 12 ஜில்லாக்கள் இருக்கும் சமயத்தில் 5 கோடி 85 லட்சம் ரூபாய் செலவழிக்கப்போகிறோம் என்றால், ஒன்று சம்பளம் மும்மடங்கு நான்கு மடங்கு உயர்ந்திருக்கவேண்டும், அல்லது எண்ணிக்கை உயர்ந்திருக்க வேண்டும். எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

இந்த எண்ணிக்கை உயர்வினால் மாத்திரம் சமூகத்திற்கு பத்திரத்தையும் பாதுகாப்பையும் அளிக்கப்போகிறோமா ? இன்றைக்கு ராஜ்யத்திலுள்ள ஜனத்தொகையில் ஆயிரம் பேருக்கு ஒரு போலீஸ்காரர் வீதம் இருக்கிறார் என்று நான் தோராயமாகக் கணக்கிடுகிறேன். ஆயிரம் பேருக்கு ஒரு போலீஸ்காரர் வீதம் இருப்பதன் மூலமாகத்தான் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாத்து விட முடியும் என்று நம்புகிறீர்களா ? போலீஸ்காரர்கள் சிறந்த சேவை புரிகிறார்கள், குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலே. சமூகத்திற்குப் பாதுகாப்பு அளித்து மக்களுக்கு ஒத்துழைப்பு அளித்து உதவி புரியக்கூடிய வகையில் ஓரளவு சேவை புரிகிறார்கள். ஆனால் மக்களுடைய பண்புதான், மக்களுடைய உள்ளத்திலே தொன்றுதொட்டு வளர்ந்து வந்திருக்கிற நல்ல சம்பிரதாய உணர்வுகள்தான் சட்டத்தைப் பாதுகாக்கின்றன, ஒழுங்கைப் பாதுகாக்கின்றன, சமுதாயத்திற்குப் பத்திரத்தையும் பாதுகாப்பையும் அளிக்கின்றன என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தூரத் தொலைவிலே இருக்கும் கிராமங்களிலே போலீஸ் ஸ்டேஷன்கள், போலீஸ்காரர்கள் இவர்களால்தான் ஒழுங்கு இருக்கிறதா என்று பார்த்தால், பெரிய நகரங்களில்தான் போலிஸ்காரர்கள் அதிகம், போலீஸ் படை அதிகம். கிராமங்களைப் பார்த்தால் அங்கு போலீஸ் தேவையில்லை. போலீஸ்காரர்களைக் கண்டாலே ஓடி ஒளிந்துகொள்ளத்தோன்றுகிறது கிராமவாசிகளுக்கு. அப்படிப்பட்ட நிலைமையில் கிராம மக்கள் வாழ்கிறார்கள். இருந்தாலும் சென்னை நகரத்தைக் காட்டிலும் அங்கெல்லாம் நல்ல பாதுகாப்பு இருக்கிறது என்று என்னால் கூறுவதற்கு முடியும். ஆகையால், போலீசை நம்பி மாத்திரம் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பையும் அமுல் படுத்திக் கொள்ளலாம் என்று நினைப்பது சரியானதல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவேன். ஆகையால், போலீசாரின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் நம்முடைய கவனத்தைச் செலுத்தவேண்டாம். அதற்குப் பதிலாக போலீஸ்காரர்களுடைய சம்பளத்தை அதிகரிப்பதற்கு நாம் அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். போலீஸ்காரர்களுடைய சம்பளம் முப்பது ரூபாய். அவர்களுக்கு அலவன்ஸ் முப்பத்தொன்று ரூபாய். இந்த 61 ரூபாயை மொத்தமாகப் பெறுகிறார்கள். சாதாரண பஞ்சாலைத் தொழிலாளிக்குக் கிடைப்பதைக் காட்டிலும், அங்கே வேலை செய்கின்ற கூட்டுகின்ற தொழிலாளிக்குக் கிடைப்பதைக் காட்டிலும் அவசர காலத்தில் பாதுகாப்புக்கே உத்தரவாதம் அளிக்கும் நிலையிலே உள்ள போலீஸ்காரர்களுக்குக் குறைவான சம்பளம் கொடுக்கின்றோம்.



12th March 1959] [Sri P. S. Chinnadurai]

அரசாங்கம் அதற்கென நியமித்திருக்கும் கமிட்டியார் இதையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து சரியான அளவுக்குப் போலீஸ்காரர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கும் சப்-இன்ஸ்பெக்டர் போன்றவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கும், இதர சலுகைகளைக் கொடுப்பதற்கும் நல்ல ஏற்பாடுகளை அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

முந்திய நாட்களில்தான் அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்கென்று அந்த அன்னியர்கள் போலீஸ் இலாகாவைப் பயன்படுத்தி வந்தார்கள். இப்பொழுதும் அதே நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். அது துரதிருஷ்டமானது என்று நான் சொல்கிறபோது கனம் அமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. கனம் அமைச்சர் விரும்பி அதைச் செய்கிறார்களா இல்லையா என்று நான் சொல்ல வேண்டாம், அவர்களே சொல்ல விட்டு விடுகிறேன். சர்க்கார் கொள்கை—சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் ஒரே மாதிரியாக மாறுதல் இல்லாமல் விரும்பியோ விரும்பாமலோ போய்க்கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டுவதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன்.

சுதந்தரத்திற்கு முன்னால் நான் பேசிய கூட்டங்களிலே அன்றைக்கும் போலீஸ்காரர்கள் ஆஜராகி சுருக்கெழுத்தில் எடுத்துக்கொண்டுதான் இருந்தார்கள். அன்றைக்கு எனக்கு வந்த கடிதங்களையும் தணிக்கை பண்ணிக் கொண்டிருந்தார்கள். சுதந்திரத்திற்குப் பின்னால், "சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று மகத்தான பெருமையோடு கூட்டங்களில் பேசுகிற இன்றைக்கும் போலீஸ்காரர்கள் வருகிறார்கள்—எனக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக அல்ல ; அது தேவை இல்லை—பேசுவதை சுருக்கெழுத்தில் எடுத்துக்கொள்வதற்காக. என்ன எழுதிக்கொள்கிறார்கள், நான் பேசுவதை சரியாக எழுதுகிறார்களா, என்ன எழுதுகிறார்கள் என்றே எனக்குத் தெரியாது. எழுதி அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்கள். அதன் நகலாவது, யார் பேசுகிறார்களோ அவர்களுக்குக் கிடைக்க வகை செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இந்த சர்க்காரைப் பொறுத்தவரையில், கனம் அங்கத்தினர்கள் யாராகிலும் பேசிய பேச்சைப்பற்றி ரிபோர்ட்டு வேண்டுமென்று கோரினால் அது கொடுக்கலாமா என்பதைப் பற்றி நான் யோசிக்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI :** சபைத் தலைவர் அவர்களே, மேலும் இப்படி எனது கட்சியைச் சார்ந்தவர்கள், இதர எதிர்க் கட்சிகளைச் சார்ந்தவர்கள் பேசுகிறார்களே, அதை மாத்திரம்தானா சுருக்கெழுத்தில் போலீஸ்காரர்கள் எழுதிக்கொள்ளவேண்டும் ? அவர்களுக்குத் தானா இந்த நிலைமை ஏற்படவேண்டும் ? ஏன் ஆளும் கட்சியைச் சார்ந்த, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும் கூட்டங்களிலும் இம்மாதிரி சுருக்கெழுத்து எழுதுவது இல்லை ?

(Mr. Speaker in the Chair.)

நாளை ஒருக்கால் நான் காங்கிரசிலே சேர்ந்துவிடுவதாக வைத்துக்கொள்ளுங்கள். இன்று என்னுடைய கூட்டங்களுக்கு வந்து சுருக்கெழுத்து எழுதும் போலீஸ்காரர்கள் அப்பொழுது அங்கே இருக்க மாட்டார்கள். இது என்ன கொடுமை ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** கனம் அங்கத்தினர் அவர்களிடம் என்ன தகவல் இருக்கிறதோ எனக்குத் தெரியாது. ஆனால், காங்கிரஸ்காரர்கள் பேசுகிற பேச்சிலிருந்துகூட சில விவரங்கள் அரசாங்கத்திற்குப் போலீஸ் மூலமாக வருகின்றன என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI :** எனது கடிதங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன என்று இந்த மன்றத்தில் நான் புகார் பண்ணினேன். நான் வெளியிடங்களுக்குப் போனால் எனக்கு எப்படியோ கடிதங்கள் வந்து

கொண்டுதான் இருக்கின்றன. எனது முகவரிக்குப் போகும் கடிதங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன என்ற காரணத்தால் நான் மனைவிக்குக்கூட கடிதம் எழுதுவது இல்லை. உண்மையாகச் சொல்கிறேன். மனதாரச் சொல்கிறேன். 'கடிதங்கள் எழுதவேண்டும்' என்று எனக்குச் சொல்லிக் கூட அனுப்பியிருக்கிறார்கள். நான் மனைவிக்கு எழுதும் கடிதம்கூட தணிக்கை செய்யப்படுகிறது என்ற நிலையிலே நான் மனைவிக்கு மனதார எழுதுவதற்கு முடிவதே இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சிறைவாசம் இருக்கும் காலத்திலேகூட கடிதங்கள் தணிக்கை செய்யப்பட்டுத்தான் வந்தன. தணிக்கை செய்யப்படுவதைத் தெரிந்துங்கூட கடிதம் எழுதிக்கொண்டுதான் இருந்தார்கள்.

*SRI P. S. CHINNADURAI: இந்தத் தணிக்கை செய்கின்ற நிலைமையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இதெல்லாம் தேவை இல்லாதது. சமூக விரோத சக்திகள் எங்கே இருக்கின்றனவோ அங்கேதான் போலீசுக்கு வேலை இருக்கவேண்டும். நான் சமூக விரோதி அல்லவே. ஒரு கட்சியைச் சார்ந்தவன். சமூக விரோதிகளில் ஒருவனா நான்? இல்லையே. அப்பொழுது ஏன் இந்தத் தணிக்கை? சமூக விரோத சக்தி எங்கிருந்தாலும், அதைக் களைந்தெறிய சர்க்காருக்கு முழு மனதோடு ஒத்துழைப்பு காட்டுவதற்கு நான் பரிபூரணமாக தயாராக இருக்கிறேன். அதைக் களைந்தெறிவதற்குத் தயாராக இருக்கவேண்டும், இதற்கு ஒத்துழைப்பு காட்டுகின்றேன் என்று சொல்கிற என்னைப்போன்ற ஒருவருக்கே இந்த கதி ஏன் வரவேண்டும்? சமூக விரோத சக்திகள், கொள்ளைக்காரர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள், பதுக்கல்காரர்கள் போன்ற அவர்களிடத்தில் போலீஸ்காரர்கள் செல்ல வேண்டும், அங்கே ஸி. ஐ. டி. போகவேண்டும், அவர்கள் கடிதங்கள் தணிக்கை செய்யப்படவேண்டும், அப்படிப்பட்ட கடிதங்கள் தணிக்கை செய்யப்படுவது அவசியம். அதை ஒப்புக்கொள்கிறேன். அரசாங்கம் நடத்தும் போது, ஒற்றர்கள் இருக்கவேண்டியது மிக இன்றியமையாதது. அதன் மேன்மையை நான் உணருவேன்.

யாருக்கு ஒற்று வேண்டும்? யாருடைய நடவடிக்கைகளுக்கு ஒற்று வேண்டும் என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். குற்றங்களை புரிகிறவர்களைக் கண்காணிக்க ஒற்று வேண்டியது அவசியம். அப்படி யார் குற்றம்புரிகிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து அவர்களுடைய ஜாப்தாவைத் தயாரித்து அவர்களுக்குத்தான் ஒற்று தேவையாக இருக்க வேண்டும். இன்னின்னாருடைய கடிதங்களைத் தணிக்கை செய்ய வேண்டியதில்லை என அறிவிக்கும் ஒரு ஜாபிதா தயாரிக்க வேண்டும். அந்த ஜாப்தாவில் என் பெயர் இருக்க வேண்டும் என்பது எனது ஆசை. தணிக்கை செய்யப்படக்கூடாத லெட்டர்களின் பேரில் எழுதப்படும் முகவரிக்கு ஒரு ஜாபிதா தயாரிக்கவேண்டும். அந்த ஜாபிதாவில் நிச்சயம் என் பெயர் இருக்கவேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவர்களுடைய பெயர் கவரில் இருக்க வேண்டும். கவரில் எழுதப்பட்ட விலாசத்தார்களுடைய பெயர் ஜாப்தாவைத் தயாரிக்கும்போது அந்த லெட்டர்களை எழுதக்கூடியவர்களுடைய ஜாப்தாவும் தயாரிக்க வேண்டியதாக இருக்கும்.

SRI P. S. CHINNADURAI: மற்றப்படி ரயில்வே போலீசுக்கு நாம் செலவழிக்கிறோம். அதற்கு மத்திய சர்க்கார் ரயில்வே இலாகாவிலிருந்து நமக்கு வருமானம் இல்லை என்று தெரிய வருகிறது. நாம் அவர்களுக்கு 19 லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். ஆனால் நமக்கு எட்டு லட்சம் ரூபாய் தான் அதில் இன்றைக்குக் கிடைக்கிறது. ரயில்வே இலாகாவிடமிருந்து அந்த 19 லட்சம் ரூபாயையும் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அதைப் போலவே பெண் போலீஸ் படை அமைக்கவேண்டும் என்று சிலர் சாதகமாகவும் பேசினார்கள். சிலர் வலியுறுத்தியும் பேசினார்கள். என்னைப் பொறுத்த வரையில் தாழ்மையான ஒரு விண்ணப்பத்தை கனம் மந்திரிக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கு சாதகமாக பேசியவர்களைக் கேட்கிறேன் அது வேண்டுமா என்று. என்னுடைய கருத்து என்னவென்றால் பெண்மணிகள் கையில் தடியையும் துப்பாக்கியையும் கொடுத்து விடாதீர்கள். அவர்களுடைய சேவை போலீசுக்குத் தேவைப்படாது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: துப்பாக்கி இல்லாமல்கூட போலீஸ் வேலை செய்யலாம் என்பதை கனம் அங்கத்தினருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*SRI P. S. CHINNADURAI: செய்யலாம்; ஆனால் எதற்கும் பயிற்சி அவசியம் அல்லவா? அவர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி மட்டும் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆண் போலீஸ்காரர்கள் மீது இவ்வளவு அவநம்பிக்கை இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆண் போலீஸ்காரர்கள் உண்மையிலேயே நல்ல விதமாகத்தான் நடந்துகொள்ளுகிறார்கள். அவர்களைக் கொண்டு பெரிய பெரிய குற்றங்களை அதாவது கொலை, களவு, பதுக்கல், கொள்ளை லாபம் அடித்தல் போன்ற குற்றங்களைக் கண்டு பிடிக்க நாம் அவர்களை அனுப்புகிறோம். அப்படிப்பட்டவர்கள்மீது அவநம்பிக்கை வைக்க வேண்டிய அவசியமே இல்லை. ஒரு இடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் பெண் கைதிகளைக் கூட்டிச்செல்வதற்கு என்று பெண் போலீசை நியமிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. பெண் கைதிகளை அழைத்துச்செல்லும்போது அவர்களை நம்பக்கூடாதா. அவர்கள் அப்போது தவறுகள் செய்வார்கள் என்று நினைப்பது சரியல்ல. அவர்களும் பெண்டு பிள்ளைகளுடன்தான் வாழ்கிறார்கள். சகோதர, சகோதரிகளுடன் பிறந்தவர்கள்தான் அவர்களும். தவறுகள் செய்வார்கள் என்று நினைக்கக்கூடாது. அவர்கள் நேர்மையான உணர்ச்சியுடையவர்கள்தான். அவர்கள் மீது அவநம்பிக்கை வர வேண்டுமா? அவர்களும் நம்முடைய சகோதரர்கள் தான். அவர்களுக்கும் சகோதர உணர்ச்சி நிச்சயமாக இருக்கிறது. ஆகவேதான் பெண் போலீஸ் படை வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த போலீஸ் இலாகா மானியத்தின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப்பிரேரபனையையும், கலால் இலாகா மானியத்தின்மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரபனையையும் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அந்த முறையில் என்னுடைய கொள்கையை வலியுறுத்துகிறேன் என்று சொல்லிக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபா நாயகர் அவர்களே, இன்றைய விவாதத்தில் இருப்பது போலீசைப்பற்றியதும், மது விலக்கு அதாவது கலால் இலாகாவைப் பற்றியதும். மதுவிலக்கு போலீஸ் இலாகாவின்கீழ் முக்கியமாக இருக்க வேண்டும் என்றுதான், அதாவது இந்த இரண்டும் சேர்ந்துதான் விவாதிக்கப்பட வேண்டும் என்று உணர்ந்துதான் இந்த இரண்டையும் சேர்த்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது நல்லதுதான். கலால் இலாகாவின் கீழ் இந்த மதுவிலக்குத் திட்டம் அமுல் நடந்ததை இப்பொழுது போலீஸ்தான் நடத்துகிறார்கள். மதுவிலக்கு முக்கியமாக கலால் இலாகாவின் கீழ் வந்து மது விலக்கு சட்டத்தின்கீழ் செய்யப்படும் குற்றம் ஒரு குற்றம் என்று கருதப்பட்டு அதற்காக அது போலீஸ் இலாகாவுடன் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சமீபத்தில்கூட அந்தச் சட்டமும் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் குற்றம் செய்கிறவர்களைக் கண்டு பிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அந்த இலாகா போலீஸ் இலாகாவுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கும், குற்றங்கள் நடைபெறாமல் பாதுகாப்பதற்கும், குற்றங்களைக்கண்டு பிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் போலீஸ் இலாகா பொறுப்புஏற்று இருக்கிறது. இவைகள்

[Sri M. Bhaktavatsalam] [12th March 1959

அவர்களுடைய பொறுப்பாகும். அதற்கு ஏற்றவாறுதான் போலீஸ்காரர்கள் மதுவிலக்குத் திட்டத்தையும் அமுல் நடத்தி வருகிறார்கள், கன்யாகுமரி மாவட்டம் தவிர. வெட்டுப் பிரேரேபணையைப் பிரேரேபித்த திரு. கோவிந்தசாமி குறிப்பிட்டார், இந்த மதுவிலக்கு திட்படத்தை அமுல் நடத்துவதற்கு இந்த போலீவசார் வேண்டாம் என்றும், அதற்கு தனியாக ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். தனியான இயந்திரம் அதற்கு எது என்பது எனக்குப் புரியவில்லை. என்னுடைய அனுபவத்தையும் சொல்லுகிறேன், அபிப்பிராயத்தையும் சொல்லுகிறேன். கனம் அங்கத்தினர் பெரும்பாலோர் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்றே நினைக்கிறேன். பல குற்றங்கள் நடந்தால் அைதக் கண்டு பிடித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அதைப்போலவே மதுவிலக்கு சம்பந்தப்பட்ட குற்றங்களைச் செய்கிறவர்களைக் கண்டு பிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் போலீஸ்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் மது விலக்குத் திட்டத்தின்கீழ் வரக்கூடிய குற்றங்களும் மற்ற குற்றங்களைப்போல்தான். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு போலீஸ்காரர்களைத் தவிர வேறு திறமையான இயந்திரம் இருப்பதற்கு இல்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம், என்னுடைய அனுபவம். சமீபத்தில் நான் கன்யாகுமரிக்குச் சென்றிருந்தேன். அங்கே நான் விசாரித்ததில் இன்னும் எச்சைஸ் இலாகாவின்கீழ்தான் மதுவிலக்குத் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது என்றும், அது அவ்வளவு திருப்திகரமாக நடைபெறவில்லை என்றும், அதை அமுல் நடத்துவதில் அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்றும் அங்குள்ள உத்யோகஸ்தர்களும், உத்யோகப் பற்றற்றவர்களும், பெரிய மனிதர்களும், முக்கியமானவர்களும் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட முக்கியமானவர்களைக் கண்டு பேசியதில் நான் தெரிந்துகொண்டேன். ஆகவே மதுவிலக்குத் திட்டத்தை போலீசாரைக் கொண்டு அமுல் நடத்துவ்துதான் சிறந்த வழி என்று தெரிந்து கொண்டேன். அதையே நான் இந்த சமயத்தில் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, பேசிய கனம் அங்கத்தினர்களில் பெரும்பாலும், எதிர்கட்சியில் பேசியவர்களும் சரி, இந்தப் பக்கத்தில் பேசியவர்களும் சரி, எல்லோரும் போலீசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்களுக்கும், மற்ற உத்யோகஸ்தர்களுக்கும் கொடுக்கக்கூடிய சம்பள விகிதத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு அதிகமாக சம்பளம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள் அதில் எனக்கு மிகுந்த திருப்தி. பொதுவாக எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் போலீஸார்களுடைய வேலையைப்பற்றிப் பாராட்டி வருவதைக் கண்டு எனக்கு மிகுந்த திருப்தி. கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை அவர்களும் இதைப்பற்றி குறிப்பிட்டார். போலீஸ்காரர்கள் நேர்மையாக இருந்து கஷ்டமான வேலையில் ஈடுபடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அவர்கள் மிகுந்த உணர்ச்சியுடன் வேலை செய்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மிகவும் கவலைக்கு இடம் கொடுக்கக் கூடிய அளவில் அவர்கள் வேலையில் ஈடுபடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்தும்போது அவர்கள் பல குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க வேண்டியதாக இருக்கிறது. மதுவிலக்குத் திட்டத்தைக் கெடுக்க வேண்டுமென்று சிலர் குற்றங்களைச் செய்து வருகிறார்கள். அதை அவர்கள் தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய வறுமையின் காரணமாக சிலர் அதை வருமானம் அடையக் கூடிய வகையில் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். இவைகளில் சில இடங்களில் போலீஸ்காரர்கள் ஈடுபடுகிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டது. அவ்வாறு போலீஸ்கார்ரகள் இதை ஒரு தொழிலாக வைத்துக்கொண், வருமானம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கிறவர்கள், " வெஸ்ட்டட் இன்ட்டரஸ்ட் " என்று சொல்லக்கூடிய அளவில் பல சாரார் இருக்கிறார்கள். ஆனால் போலீஸ்காரர்களுடைய நிலைமையையும் கொஞ்சம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. போலீஸ்காரர்கள் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கப்போகும்போது போலீஸ்காரர்கள் மீது அவர்களுக்கு ஆத்திரம்



12th March 1959] [Sri M. Bhaktavatsalam]

வருகிறது. அதனால் போலீஸ்கார்ரர்கள் மீது ஏதாவது குற்றங்களைச் சுமத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். குற்றவாளிகளைப் பிடிக்கச் சென்றால் போதிய அளவு பலன் அடைவது இல்லை. ஆனால் கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார், போலீஸ்காரர்களுக்கு அதிகப்படியான வாகனங்கள் இருக்கின்றன என்றும் அவற்றை அவர்கள் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள் என்றும் குற்றம் சாட்டினார். ஆனால் இப்போதைய நிலையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய வாகனங்கள் போதவே போதாது. மதுவிலக்கு குற்றங்களைக் கண்டு பிடிக்க துரிதமாகப் போக வேண்டுமானால் அவர்களுக்கு இப்பொழுது இருக்ககூடிய வாகனங்கள் போதவே போதாது. துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களிடம் வேண்டிய வாகனங்கள் இல்லை. சில ஊர்களுக்கு ராத்திரி போக வேண்டியதாக இருக்கிறது. அங்கு துரிதமாகச் சென்றால் தான் குற்றங்களைக் கண்டு பிடிக்கலாம். அப்படிச் செல்லும் போது அந்த ஊரில் எல்லோரும் சேர்ந்து போலீஸ்கார்களைச் சூழ்ந்து கொண்டால் அதை சமாளித்துக்கொள்வதற்கு அவர்களிடம் வேண்டிய ஆள் பலம் இல்லை. அங்கேயிருந்து சமாளித்துக்கொண்டு வருவதற்குக் கூட அவர்களிடம் போதிய வாகனங்கள் கிடையாது. எந்த வேலையையும் துரிதமாகச் செய்ய வேண்டுமானால் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. வசதிகள் செய்து கொடுக்காமல் இருக்கும்போது அவர்கள் மீது குற்றம் கூறுவதற்கு இல்லை. கனம் அங்கத்தினர் சின்னதுரை சொன்னது மாதிரி சில சமயங்களில் அவர்களுடைய உயிருக்கே ஆபத்து வருகிறது. தங்களுடைய உயிரைக்கூட பார்க்காமல் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கப் போகிறார்கள். சாதாரணமாக குற்றவாளிகள் போலீஸ்காரர்கள் மீது குற்றம் சாட்டுவது போல் மதுவிலக்குக் குற்றவாளிகளும் போலீஸ்காரர்கள் மீது குற்றம் சாட்ட முற்படுகிறார்கள். அதனால்தான் போலீஸ்காரர்கள் குற்றவாளி[illegible]ளைக் கண்டு பிடிக்கப்போகும்போது போலீஸ்காரர்கள் மீது குற்றம் [illegible]ாட்டுகிறார்கள். இப்படி பல புகார்கள் வருகின்றன. இப்படிப்பட்ட பல புகார்கள் என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இந்த போலீஸ் இலாகாவை நான் ஏற்றுக்கொண்ட பிறகு பல விதமான புகார்கள் அவர்கள் மீது வந்திருக்கின்றன. யார் வந்து குற்றம் சொன்னாலும் அதைப்பற்றி உடனே நான் கவனித்து வருகிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக்கொண்டு வருகிறேன். அதைப்பற்றிய விசாரணைக்கும் ஏற்பாடு செய்கிறேன். ஆனால் பெரும்பாலும் வருகிற புகார்கள் விசாரணை செய்யப்படும்போது ஆதாரமற்றவைகளாகத்தான் இருக்கின்றன. சில சமயங்களில் புகார் செய்கிறவர்களே யார் என்று தெரியாமல் போய் விடுகிறது. மேலும் செய்யப்பட்ட புகாருக்கு ஆதாரம் இல்லை என்றுதான் ஏற்படுகிறது.

ஆனால் சில இடங்களில் ஆதாரம் கிடைத்திருக்கிறது. உண்மை என்று ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரி ஆதாரம் கிடைத்தால் தயங்காமல் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். சில சமயங்களில் போலீஸ்காரர்கள் குற்றங்களைக் கண்டு பிடிக்கிறார்கள், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்கள் என்பதன் காரணமாக அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக அவர்கள் மீது அவதூறு சொல்கிற மனப்பான்மை வளர்ந்து வருகிறது. இதையெல்லாம் போலீசார் சமாளிக்க வேண்டி இருக்கிறது. முன்பு ஒரு சமயம் சொன்னது போல் போலீஸ் வேலை என்பது ஒரு கம்பி மேல் நடப்பது போலாகும். அவர்கள் இந்த வேலையைச் செய்துகொண்டு வருகிறார்கள். கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்களும் மற்ற அங்கத்தினர்களும் சொன்னது போல அவர்கள் தங்கள் வேலையைச் சீராகச் செய்து வருகிறார்கள். ஆனால் தவறுதல் செய்யக்கூடியவர்கள் இல்லையென்று நான் சொல்லவில்லை. எனக்கே தெரியும். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் நட்வடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். " பெரிய அதிகாரிகள் மீது நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயங்குகிறோம். சிறிய அதிகாரிகள் மீது தான் எடுத்துக்கொள்ளுகிறோம் " என்று சிலகனம் அங்கத்தினர்கள் நினைக்கிறார்கள். குற்றம் செய்தவர்களாக இருந்தால் சின்ன அதிகாரிகளாக இருந்தாலும் பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் ஒரே

[Sri M. Bhaktavatsalam] [12th March 1959

விதமாகத்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறோம் என்று நான் முதலில் குறிப்பிட விரும்புகிறேன். எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும்கூட நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

சில ஜில்லா அதிகாரிகளைப் பற்றிக் கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஜில்லா அதிகாரிகள் சிலர் மீது—3, 4 , 5 என்றுகூடச் சொல்லலாம்—நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசீலனை நடந்து வருகிறது. எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஜில்லா அதிகாரிகள் என்ற காரணத்தால் விட்டுவிடுவதில்லை. ஆனால் கீழே இருக்கிற அதிகாரிகளாக இருந்தாலும் குற்றம் குற்றந்தான். போலீசாருடைய திறமை அவர்களுடைய கட்டுப்பாட்டைப் பொறுத்தது. சின்ன அதிகாரிகள் ஏழைகள், அதிகச் சம்பளம் இல்லை—2 ரூபாய்தான் வாங்கினார்கள், 50 ரூபாய் வாங்கவில்லை, ஆயிரம் ரூபாய் வாங்கவில்லை. அதனால் பரவாயில்லை என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது தவறு. குற்றம் செய்வதைவிட மோசமானது எதிரடித்துப் பேசுவது; " நீ யார் கேட்பது ? நான் என்ன சொல்லுவது ? நான் மேலே போய்ப் பார்த்துக்கொள்ளுகிறேன் " என்று பேசுவதை எங்கும் அனுமதிக்க முடியாது. அதிலும் முக்கியமாகப் போலீசில் அனுமதிக்க முடியாது. அனுமதித்தால் திறமை குறைந்துவிடும்.

பொதுவாக போலீசார் வேலையைப் பாராட்டிய கனம் அங்கத்தினர்கள், அவர்களுடைய சம்பள விகிதத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். கடைசியாக பேசிய பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். செலவு அதிகமாக இருந்தாலும் போலீஸ்காரர் சம்பளத்தை இன்னும் கொஞ்சம் உயர்த்தினால் நல்லது என்று சொன்னார்கள். முக்கியமாக அவர்கள் ஒரு கணக்கைக் கொடுத்தார்கள். முன்பு போலீசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையைப் போல் இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை இரட்டிப்பாக இருக்கிறது என்று சொன்னார்கள். சில போலீசார் சம்பளம் உயர்த்தப்பட்டுத்தான் இருக்கிறது. முன்பு இருந்ததற்கு இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். போன பொதுத் தேர்தலுக்கு முன்பு என்று நினைக்கிறேன். அப்பொழுது முதலில் 5 ரூபாயும், பின்னால் 7 ரூபாயும் பஞ்சப்படியில் அதிகப்படுத்தப்பட்டது. அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஓரளவு இவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது நம்முடைய கவர்னர் அவர்கள் அறிவித்தபடி—ஜனவரியில் இருந்து என்று நினைக்கிறேன்—5 ரூபாய் உயர்த்தப்பட்டது. இதையெல்லாம் சேர்த்துப்பார்த்தால் 20 ரூபாய்க்கு மேல் போகிறது. இந்தப் பட்ஜெட்டில் போலீசுக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும். கனம் அங்கத்தினர்கள் சொன்னது போல், கடைசியாகப் பேசிய அங்கத்தினர் சொன்னது போல் இதில் கவனம் செலுத்தாமல் இல்லை. சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை இருந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் நன்றாக ஆராய்ந்து எப்படி ஏற்பாடு செய்யலாம், என்ன வழியில் முடிவு செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன்தான் "பே கமிஷன்" நியமிக்கப்பட்டிருப்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். அந்த "பே கமிஷன்" போலீசார் சம்பள விகிதங்கள் பற்றியும், அலவன்ஸ் பற்றியும் பரிசீலனை செய்வார்கள். நிதி நிலைமையை வைத்துக்கொண்டு எந்த அளவுக்கு வசதி அளிக்க முடியுமோ அவ்வாறு அளிக்கப்பார்க்கிறோம்.

வீட்டு வசதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்று அரசாங்கம் பொதுவாக அரசாங்க ஊழியர்களுக்கு வீட்டு வசதியைச் செய்து கொடுக்கவேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வீட்டிற்காகச் சாதாரண மக்களுடைய தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது என்று அரசாங்கம் கருதுகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்களாக இருந்தால் வீட்டுத் தொல்லை இருக்கக்கூடாது. இந்த வசதி நிச்சயம் செய்து கொடுக்கப்பட வேண்டியது. வேறு இடத்



12th March 1959] [Sri M. Bhaktavatsalam]

திற்கு மாற்றலாகிப் போனால் இன்னொருவர் தயவை வீட்டிற்காக நாடவேண்டி இருக்கும். போலீஸ் என்று வைத்துக்கொண்டாலும் சரி, வேறு எந்தச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, பள்ளிக்கூட ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஏற்ற வீடு இருக்கவேண்டும். மற்றதெல்லாம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். இது விஷயத்தில் போலீசைப் பொறுத்தவரை முதன்மையாகக் கவனம் செலுத்தப்பட்டு சீக்கிரமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் இதற்காக வசதிகளைத் தர ஒப்புக்கொண்டிருக்கிறது. இதிலே கொஞ்சம் அக்கறை காட்டுகிறது. இது " ப்ளானில் " (திட்டத்தில்) வரவில்லை என்றாலும்கூட இதற்குத் தனியாக ஆதரவளித்து வருகிறார்கள். ஏன் கட்டவில்லை என்று கேட்டால் பணம் இல்லை என்ற காரணத்தால் அல்ல. நாங்கள் வேகமாக காரியங்களைச் செய்துகொண்டுதான் வருகிறோம். பல லட்சக்கணக்கான வீடுகளைக் கட்டிக்கொண்டு வருகிறோம். ஆனால் இருக்கிற வீட்டை மாற்றி இரண்டு வீடுகளை ஒன்றாக மாற்றுவது என்பது இப்போது முடியாது. கிராமங்களிலும் இந்த வசதியைச் செய்து கொடுக்கவேண்டியதுதான். பொதுவாக வீடுகள் கட்ட அதற்கு வேண்டிய மனைகள் கிடைப்பதில்லை. ஆனாலும் கலெக்டர் அவர்களிடம் சொல்லி மனைகள் கிடைக்கத் துரிதமாகக் கவனம் செலுத்தி வருகிறோம். இப்பொழுதும் வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சீராக இந்தத் தொகை செலவழிக்கப்பட வேண்டும்.

இப்பொழுது, அதிகாரிகள், கான்ஸ்டபிள்கள் இத்தனை பேர் வேண்டுமா என்று கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். ஆனால் இன்னும் அதிகரிக்கப்படவேண்டும் என்று நான் சொல்லுவேன். குற்றங்களைப் பற்றிச் சொன்னார்கள். குற்றங்களைப் பொறுத்தமட்டில் குறைந்திருக்கிறது என்று காலையில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போதுகூடச் சொன்னேன். கனம் கோவிந்தசாமி அவர்கள் சொன்ன " ப்ரொஹிபிஷன் " குற்றங்கள்கூட 1956–57-ம் ஆண்டைப் பொறுத்தது. இப்பொழுது " ப்ரொஹிபிஷன் " சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். இந்தச் சட்டம் கடுமையான சட்டம். இந்தச் சட்டத்தைச் சென்ற ஆண்டுதான் நிறைவேற்றி இருக்கிறோம். அதற்குப் பிறகு விசாரித்து வருவதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் குற்றங்கள் குறைந்து கொண்டே வருகின்றன என்ற தகவல்கள் கிடைக்கின்றன. சாதாரணமாகப் பேசும்போதுகூட குற்றங்கள் குறைந்து வருகின்றன என்று பொதுமக்கள் கூறுகிறார்கள். நீதிபதிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இந்தச் சட்டம் வந்த பிறகு குற்றங்கள் குறைந்து கொண்டு வருகின்றன என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஓரளவு குறைந்திருக்கிறது. குற்றங்கள் குறைவதும் அதிகப்படுவதும் குறிப்பிட்ட ஒரு காரணம் என்று நினைக்கிறார்கள். பொருளாதார நிலையில் உயர்ந்திருக்கிற வேறுசில நாடுகளில்கூட குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. சமீபத்தில் உலகநாடுகள் பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்தேன். அதைப்பார்த்தால் நம்முடைய நாட்டில் ரொம்பக் குறைவு என்று தெரிகிறது. மற்ற நாடுகளை விட இங்கு குறைவு. ஆனால் கொலையைப் பார்த்தால் நம்முடைய நாடு முதன்மையாக இருக்கிறது. மற்ற நாடுகளில் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. வாழ்க்கைத் தரம் உயர உயர புதிது புதிதாகக் குற்றங்களைச் செய்கிறார்கள். மதிப்புக்குரிய சில நண்பர்கள், பொறுப்புள்ள பதவிகளில் இருக்கக்கூடிய நண்பர்கள் வேறு சில நாடுகளுக்குப் போய்வந்தார்கள். ரஷ்யா போனவர்கள்கூட அங்கு மக்கள் புதிது புதிதாகக் குற்றங்களைச் செய்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். அவ்வளவு கடுமையாக ஆட்சி நடத்துகிற இடங்களிலும், பொருளாதார நிலைமையிலும் வாழ்க்கைத்தரத்திலும் முதன்மையாக இருக்கிற இடங்களிலும்கூட குற்றங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன என்று அனுதாபத்தோடு போய்ப் பார்த்து வந்தவர்கள் சொன்னார்கள். வசதியோடு சென்று பார்த்து விட்டு வந்தவர்கள் என்னிடம் அந்த நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். ஆகையால் இப்போது நாம் குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு குற்றங்கள் அதிகமாக 12-50 p.m. வொட்டாமல் தடுக்க வேண்டும். அது நமக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இதற்கெல்லாம் போலீஸ் வேண்டியதாக இருக்கிறது. நம்மைவிட மிக மிகஉயர்ந்தவர்கள் என்று நினைக்கிற இதர நாடுகளைப்

[Sri M. Bhaktavatsalam] [12th March 1959

பார்த்தால் அங்கே நம் நாட்டைவிட மிக அதிகமாகக் குற்றங்கள் செய்யப்படுகின்றன. அங்கே எல்லாம் போய்விட்டு வந்த பொறுப்புள்ள ஒருவர் சொன்னார் ரஷ்யாவில் புதுப்புதுக் குற்றங்கள் நடக்கின்றன என்று சொன்னதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. (ஸ்ரீ வி. கே. கோதண்டராமன்.—புதுப்புதுக் குற்றங்கள் என்றால் என்ன என்ன என்று சொல்வார்களா ?) அதை இப்போது நாம் சொல்லக்கூடாது. இன்னொரு நாட்டைப்பற்றியும் நாம் அதிகமாகப் பேசக் கூடாது. (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்.— அதைச் சொல்லிவிட்டாலும்கூடப் பரவாயில்லை. இப்படிச் சொல்வது மோசமாக இருக்கிறது.) அதைச் சொல்லக்கூடாது என்பது இரகசியம் என்பதால் அல்ல. அது வேறு ஒன்றும் இல்லை. மோட்டார் காரை வெளியே விட்டுவிட்டுப்போனால் போதும். வந்து பார்த்தால் கார் போய்விடுகிறது. (ஸ்ரீ எ. கோவிந்தசாமி.—இங்கே சைக்கிள் தான் அப்படிப் போகிறது.) அங்கே மோட்டாரே போய்விடுகிறது. அம்மாதிரி குற்றங்கள் தவிர்க்கவேண்டும். அந்த நாடுகளை எல்லாம் பார்த்தால் போலீஸ் அதிகமாகத்தான் வேண்டியிருக்கிறது. நம் தேசத்திலேயே பம்பாய் நகரத்தை எடுத்துக்கொள்ளலாம். கல்கத்தா நகரத்தை எடுத்துக்கொள்ளலாம். அங்கே இருக்கிற ஜனத்தொகை, அங்கே இருக்கிற போலீஸ், இங்கே இருக்கிற ஜனத்தொகை, இங்கே இருக்கிற போலீஸ் இவற்றின் விகிதாசாரத்தை எடுத்துப்பார்த்தால் நம் ராஜ்யத்தில் குறைவு.

என்னிடத்தில் போலீஸ் இலாகா இருக்கிறது. இந்த ஆதிக்கத்தை பெருக்கிக்கொள்ளவேண்டும் என்கிற ஆசை ஒன்றும் எனக்கு இல்லை. என்னுடைய ஆசை போலிஸ் இல்லாமலேயே சமாளிக்க முடிந்தால் சமாளிக்கலாம். அந்த இலாகாவைக் குறைக்கலாம். ஆனால் என் ஆசைக்காக இதில் பரிட்சை பார்க்கமுடியாது. மக்களுக்குப் பாதுகாப்பு முக்கியமானது. மக்களுடைய வாழ்க்கைத்தரத்தைமட்டும் உயர்த்திக்கொண்டே போவதனால் பயன் இல்லை. மக்கள் நிம்மதியாக வாழ வகை செய்ய வேண்டும். பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டவர்களினாலே அவர்களுக்குத் தீங்கு உண்டாக இடம் இருக்கக் கூடாது. போலீஸ் இல்லாமல் இப்படிப்பட்ட லட்சியத்தோடு அரசாங்கத்தை நடத்த முடியும் என்றால் அதை வரவேற்கலாம். அதை ஓர் 'யுடோபியன் ஐடியல்' என்று தான் சொல்லலாமே தவிர வேறு இல்லை. என்னுடைய ஆசையும் கனம் அங்கத்தினர் கூறினது போல இந்த இலாகாவின் செலவைக் குறைக்கவேண்டும் என்பதுதான். செலவை அதிகப்படுத்திக்கொள்வதில் பெருமை இல்லை. 5 கோடி என்பதற்குப் பதிலாக 4 கோடியாகக் குறைத்துவிட்டேன் 4 கோடிக்குப் பதிலாக 3 கோடியாகக் குறைத்துவிட்டேன் என்றால் எனக்கும் பெருமைதான். அந்த ஆசை எனக்கு இல்லாமல் இல்லை. ஆனால் அதில் பரீட்சை பண்ண முடியாது. எந்த அளவு அவசியமாக வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் வைத்திருக்கிறோம். ஆகவே அந்த மானியத் தொகையை இந்த மன்றம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

வெட்டுப் பிரேரணையைப் பிரேரித்த கனம் அங்கத்தினர் சப்-இன்ஸ்பெக்டர் பிரமோஷனைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இதில் திறமை முக்கியம். நாம் சில இடங்களில் பார்க்கிறோம், "திறமை போதவில்லை" என்று. இதை கனம் அங்கத்தினர் யாவரும் ஒப்புக்கொள்வார்கள். தகுதி உடையவர் இன்ஸ்பெக்டர் ஆகலாம், ஐ. ஜி. யாகக் கூட ஆகலாம். திறமை என்று பார்க்கும்போது உயர்ந்தபட்ச தகுதியும் இருக்க வேண்டும். அது இல்லையென்பதற்காக இப்போது பிரமோஷன் ஆனவர்களைத் தள்ளிவிடவேண்டும் என்று அல்ல. குற்றம் செய்யாதவரைக்கும் அவர்கள் அந்தப் பதவியில் நீடிக்கலாம். பொதுவாக திறமை முக்கியமானது. திறமையைப் பொறுத்தே தகுதியையும் நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கிறது. எல்லோருக்கும் பெரிய பதவிக்குப் பிரமோஷன் ஆனால் தேவலை என்றுதான் இருக்கும். இருந்தாலும் நல்ல தகுதி உடையவர்கள், நல்ல திறன் படைத்தவர்கள் உயர்ந்த பதவியில் இருந்தால்தான் நிர்வாகம் நல்லமுறையில் நடக்கும். அந்த அடிப்படையில் எல்லோருக்கும் மேலே செல்வதற்கு வேண்டிய வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது.



12th March 1959] [Sri M. Bhaktavatsalam]

இப்போது முக்கியமாக, அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் குறைவு, அதை உயர்த்த வேண்டும் என அநேகம் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். கொடுக்கிற சம்பளம் போதும் என்று யாரும் சொல்லவில்லை. அவர்களுக்கு வேண்டியது கொடுக்கலாம். அதுவும் இப்போது சாத்தியம் இல்லை. பே கமிஷன் வருகிறது. ஆனால் இதன் மத்தியில் போலீசாரின் குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுவதாக கனம் கோதண்டராமன் அவர்கள் உணர்ச்சி மிகுந்து பேசினார்கள். அதை உணர்கிறோம். போலீஸ்காரர்கள் இரவு பகல் என்று பாராமல் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. மணிநேரம் பார்க்கவும் முடியாது. பார்க்காமல்தான் செய்கிறார்கள். அப்படிச் செய்வதிலும் உற்சாகமாகச் செய்கிறார்கள். இதில் குடும்பத் தொல்லை கூடாது தான். வீட்டுத் தொல்லையை அகற்றிவிட்டால் மட்டும் போதாது. அவர்கள் வீட்டிலுள்ள பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டே சிறுசிறு தொழில்களிலும் பயிற்சி பெற்று குடும்ப வருமானத்தையும் ஓரளவு பெருக்கிக்கொள்ளவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கொள்கை. அதற்கு ஏற்றவகையில் பல திட்டங்களையும் போட்டிருக்கிறார்கள். அதிலும் அவர்களும் உற்சாகத்தோடு ஈடுபட்டு பயன் அடைந்து வருகிறார்கள். இதை மேலும் மேலும் விருத்தி செய்யத்தான் அரசாங்கமும் விரும்புகிறது.

போலீஸ்காரர்கள் என்றால் கையில் தடியை எடுத்துக்கொண்டு, துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, டியர் காஸை எடுத்துக்கொண்டு ஜனங்களை அடிப்பது, மிரட்டுவது என்பது மாத்திரம் வேலை இல்லை. போலீஸ்காரர்கள் முக்கியமாகச் செய்கிறது பாதுகாப்பு வேலை. மக்களுடைய நல்வாழ்வுக்குரிய வேலை. அவர்களும் அதை உணரவேண்டும். பொதுமக்களும் சந்தேகம் இல்லாமல் அதை உணரவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கருத்து. அந்தக் காரணத்தைக் கொண்டு அங்கங்கே ஒவ்வொரு கிராமத்தை எடுத்துக்கொண்டு போலீஸ்காரர்களே ரோடு போடுவது, இதர காரியங்களை செய்வது முதலிய அபிவிருத்தி வேலைகளிலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஹரிஜனங்களை அவர்கள் ஹிம்சிப்பது இல்லை. ஹரிஜனங்களுக்கு அவர்களே வீடு கட்டியும் தருகிறார்கள். இந்த மாதிரியெல்லாம் கிராம அபிவிருத்தித் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதை மக்கள் பாராட்டுகிறார்கள். அதோடு மட்டும் அல்ல. நான் அங்கங்கே போகும்போது அந்த போலீஸ்காரர்களை இந்த ஊரிலேயே எங்களுக்குத் தொண்டு செய்ய நிரந்தரமாக வையுங்கள் என்றும் கேட்கிறார்கள். அப்படி அவர்கள் பல கிராமங்களில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஓரிடத்தில் வைக்க முடியாது. பொதுவாக எங்கே போனாலும் யாரும் போலீஸ்காரர்களை வெறுப்பது இல்லை. இங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் வையுங்கள். இங்கே ஒரு அவுட் போலீஸ் ஸ்டேஷனாவது வைக்கவேண்டும், போலீஸ் ஸ்டேஷனுக்கும் இதற்கும் 3 மைல் இருக்கிறது என்பது போல ஊருக்கு ஊர் கேட்டுக்கொள்கிறார்கள். அன்றாடம் பல மனுக்கள் புது போலீஸ் ஸ்டேஷன் வைக்கவேண்டும் என்று வந்துகொண்டிருக்கிறது. யாரும் வேண்டாம் என்று சொல்கிறதே இல்லை. ஆகவே போலீஸ்காரர்களைக் கண்டு பயப்படவே வேண்டாம் என்று நான் சொல்வேன். ஆனால் அடியோடு பயம் இல்லாமல் போய்விட்டால் எதற்காக போலீஸ்? நிரபராதிகளுக்குப் பயம் வேண்டாம். குற்றவாளிகளுக்கு அவர்களைப்பற்றி பயம் இருக்கத்தான் வேண்டும். ஒரு தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பு போல இருக்கவேண்டும். தாயைக்கண்டு குழந்தைக்குப் பயம். அதே சமயம் தாயிடம் பயமின்றி அன்பாகவும் பழகும். அப்படி குற்றம் செய்தால் பயம் இருக்கவேண்டும். இல்லாதபோது நிம்மதியாக பயமின்றி இருக்கவேண்டும்.

பல கனம் அங்கத்தினர்கள் ஆளும் கட்சியோடு சேர்ந்து போலீஸ்காரர்கள் மாற்றுக் கட்சிகளை அடக்கி, உருக்கி, மிரட்டுவதாகச் சொன்னார்கள். ஆட்சியாளர்கள் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது முற்றிலும் தவறு என்று நான் சொல்வேன், கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் சொன்னார்கள். ஐடியல் போலீஸ் என்று. என்ன விதத்தில் ஐடியல்? சட்டம் இருக்கிறது, கொள்கை இருக்கிறது, அதை அனுசரித்து நடக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்படித்தான் இன்று

நடக்கிறார்கள். கீழே இருக்கிறவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அவர்கள் இஷ்டப்படி பீனல் கோடை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பது இல்லை. நாம் செய்திருக்கிற சட்டம், நாம் வகுத்து வருகிற கொள்கை இவற்றை வைத்துக்கொண்டு தான் அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். சர்க்காரும் அதைத்தான் வற்புறுத்துகிறது. கீழே இருக்கக் கூடிய போலீஸ் அதிகாரிகளும் இதை உணர்ந்து கொண்டு நடக்கத் தான் வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். இதிலே பட்சபாதம் ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் பிரஜா சோஷலிஸ்டு கட்சித் தலைவரும் ஒப்புக் கொள்வார்கள். எத்தனையோ முறை என்னிடம் வந்து அவர் சொல்வார்கள். தவறான ஒன்றை எந்தக் கட்சி செய்தாலும் தவறு தான். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் செய்தாலும் தவறு தான். இந்த அடிப்படையில் சில காரியங்களைச் செய்யும்போது என்பேரில் அவர்களுக்கே வருத்தம் உண்டு. அவர்களுக்கே தெரியும். அதை யாரும் மறுக்கமாட்டார்கள். போலீசாரிடம் சொல்லி நியாயம் இருக்கிற பக்கத்தில் உதவி செய்யுங்கள் (அவுட் ஆப் தி வேயில் இல்லை) என்று சொல்லியிருக்கிறேன். இதில் ஒரு கட்சிக்கு ஒன்று, இன்னொரு கட்சிக்கு ஒன்று என்று இல்லவே இல்லை.

போலீஸாரும் மனிதர்கள் தான், அவர்களுக்கும் மனித உணர்ச்சி இருக்கும், அந்த வகையில் தான் போலீசார் நடந்துக் கொண்டிருக்கிறார்கள். சில சில கட்சிகளில் சிலருக்கு நம்பிக்கை இருக்கலாம். காங்கிரஸ் கட்சியில் மட்டும் அல்லாமல் வேறு கட்சிகளிடம் பற்று இருக்கலாம். அந்த கட்சிகளுக்கு கொஞ்சம் சாதகம் அனுதாபம் இருப்பதாகவும் சொல்கிறார்கள். எந்தக் கட்சியையும் விரும்பும் முறை அவசியம் கூடாது. எந்தக் கட்சிமீதும் நீங்கள் மோகம் கொள்ளக்கூடாது. எந்தக் கட்சிக்கும் நீங்கள் உடன்பாடு கொள்ளவேண்டாமென்று கூறியிருக்கிறேன்.

இதுமாதிரி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ஒன்றும் சொல்வதில்லை., ஆனால் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் சொன்னால் அப்படியே ஏற்றுக்கொள்வது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொன்னால் அப்படியே தள்ளிவிடுவதில்லை. எதுவாக இருந்தாலும் விசாரிக்கிறேன். காங்கிரஸ்காரர்கள் சொல்வது எல்லாம் பாதிக்கு மேலே நிச்சயமாக சொல்லலாம், முக்கால் வாசி நான் விசாரித்ததிலே எத்தனையோ ஏற்றுக் கொள்ளாத நிலையில் இருக்கின்றன. என் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக போலீஸ்மீது குற்றத்தை நான் அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. சிலசமயங்களில் சரி என்று ஏற்பட்டால் ஏற்றுக்கொள்ளுகிறேன். இதை கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இந்த வெட்டுப் பிரேரணையை பிரசுரித்த கனம் அங்கத்தினரே முதலில் ஏற்றுக் கொண்டார்கள். என்னிடமே வந்து பேசினார்கள். டி.எஸ்.பி. கலெக்டரிடம் சொன்னார்கள். குறிப்பிட்ட ஒரு ஸ்டேஷனிலே சில நிலவரங்களைப்பற்றி சொன்னார்கள். ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படியே இருக்கும் என்று என்னிடம் சொன்னார்கள். சொன்னவுடனே ஒரு மணி நேரத்திற்குள்ளே சம்பந்தப்பட்ட அதிகாரியை வீட்டிற்கு வரவழைத்து இதற்குத் தகுந்த அதிகாரியை வைத்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னேன். அவர்கள் உடனடியாக கவனித்து அது அவசியம் என்று ஏற்பட்டது. குறிப்பிட்ட அதிகாரியை அந்த இடத்திலிருந்து மாற்றினோம். மாற்றினதோடுமட்டும் அல்லாமல் மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அம்மாதிரி அதிகாரியை மாற்றுவதென்றால் எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. பொதுவாக நிர்வாகத்துறையிலே மாற்றுதல் ஏற்படும். இந்த வட ஆற்காடு டி. எஸ். பி. அவர்கள் மாற்றப்பட்டதுபற்றி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தென்னாற்காடு ஜில்லாவிலே டி.எஸ்.பி. மாற்றப்பட்டார். ஸ்ரீ ஸஹஜானந்தா அவர்கள் எவ்வளவு நேரம் வேலை செய்கிறார் என்று பாராட்டுகிறார்கள். அதிகாரிகளை மாற்றுகிறார்கள் என்றால் எத்தனையோ காரணங்கள் உண்டு. பொதுவாக போலீஸ் இலாக்காவில் மட்டும் அல்ல அதிகாரிகள் மாற்றாமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். ஆனால் வேறிடத்தில் மாற்றவேண்டிய நிமித்தம் ஏற்பட்டிருக்கிறது. அதோடு மூன்று ஆண்டுகள் முடிந்தால் மாற்றப்படுகிறது. அங்கு இருப்பவரை எடுத்து





வேறு இடத்தில் போட்டால் அங்கு இருப்பவர்களை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். பொதுவாக நிர்வாகத்துத்துறைகளில் மாற்றவேண்டும். ஆனால் அதற்கெல்லாம் காரணங்கள் சொல்லமுடியாது. சொல்லவேண்டாதமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால் சில சமயங்களில் புகார் இருந்தாலும் மாற்றுகிறோம். வேலைக்குத் தகுதி இல்லை என்றும் மாற்றுகிறோம். அப்படி பல காரணங்களையொட்டி மாற்றுகிறோம். வட ஆற்காடு பற்றி ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யாரோ காங்கிரஸ் கட்சியில் இருப்பவர் சொன்னார் என்பதற்காக இதில் அக்கரை உண்டு என்பதல்ல. அதற்கு கொஞ்சங்கூட ஆதாரம் இல்லை. தகுந்த காரணங்களைக்கொண்டு தகுந்த நியதியோடுதான் மாற்றுகிறோம். ஆனால் ஒரு அதிகாரியின் மீது குற்றம் குறைகள் இருந்தால் அந்த அதிகாரி அங்கு இருக்கக்கூடாது. ஒரு அதிகாரியைப் பொறுத்தவரை கனம் வி. கெ, கோதண்டராமன், கனம் அங்கத்தினர் அண்ணாமலை அவர்கள் ஏதோ அதிகாரத்தைப் பற்றியாவது நல்லபேச்சு சொன்னார்களே. அப்படி நல்ல பேச்சு சொல்லி வரும் பழக்கம் வளரும் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

**SRI S. M. ANNAMALAI**: நான் டி. எஸ். பி.ஐ நேரடியாக பார்த்ததே இல்லை வெள்ளையா கருப்பா என்று கூட சொல்வதற்கில்லை. ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் மிகவும் குழப்ப நிலை இருந்து வந்தது. டி.எஸ்.பி. யிடம் நான் தெரிவித்ததே கிடையாது.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: இதற்கு மேல் இருப்பதினால் அதை நான் வரவேற்கிறேன்.

பார்க்கவேண்டிய பிரமயம் அவசியம் வராது. ஏதோ மனதில் கொண்டு அதைப் பிரமாதப்படுத்தி அப்படி அதிகமாக பேசிக்கொண்டு போனார்கள். அவர்கள் அந்த அதிகாரிகளைப்பற்றி சொல்கிறார்களே அது அவ்வளவு நல்லதல்ல. இவ்வளவு அக்கரை எடுத்துக் கொள்ளக்கூடாதென்று மீண்டும் சொல்கிறேன். இதில் எந்த கட்சியாக இருந்தாலும் ஒருவர் சொல்கிறாரே என்பதற்காக நான் ஒன்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

**SRI M. KALYANASUNDARAM**: கனம் மந்திரி அவர்கள் சொன்னதின் அர்த்தம் விளங்கவில்லை.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM**: ஒரு அதிகாரியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு பல காரணங்கள் உண்டு என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். சர்தாரண காரணம் இந்த இடத்தில் மாற்றவேண்டிய நிமித்தம் ஏற்பட்டிருந்தால் இந்த இடத்திற்கு மாற்றுவதில்லை என்றாலும் மற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இல்லையென்றால் மற்றொரு இடத்திற்கு மாற்றவேண்டிய அவசியம் உண்டு. அதையொட்டி இன்னொரு மாறுதல் ஏற்படும். ஏன் மாற்றுகிறார்கள் என்றால் அட்மினிஸ்ட்ரேடிவ் ரீசன்ஸ் என்று சொன்னார்கள். மற்றொன்று சொன்னார்கள் ஒரு அதிகாரி தகுதி உடையவராக இல்லாவிட்டால் மாற்றவேண்டுமென்று சொன்னோம். கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் சொன்ன புகாருக்கு ஆதாரம் இருக்கிறது என்று ஏற்பட்டால் அந்த சமயத்தில் மாற்றுகிறோம். கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்களும், சின்னதுரை அவர்களும் ஏன் லிக்கர் பர்மிட் கொடுக்க வேண்டும், ஏன் எடுத்துவிடக்கூடாது என்று சொன்னார்கள். நான் முன்பே சொல்லியிருக்கிறேன் இந்தச் சட்டத்தின் கீழ் இம்மாதிரி பர்மிட் எதற்காக கொடுக்கிறோம். போதிய காரணங்களையொட்டிதான் கொடுக்கிறோம். டாக்டர் சர்டிபிகேட்டின் பேரில்தான் என்று சொல்கிறோம். இல்லையென்றால் அவர்கள் செத்தே போய்விடுவார்கள். டாக்டர் சர்டிபிகேட் கொடுத்தால்கூட அனுமதி மறுக்கக் கூடாதா என்று கேட்டால், அவ்வாறு செய்ய முடியாது. ஏனென்றால் 1-10 p.m.
அவ்வாறு மறுப்பதற்கு நமது கான்ஸ்டிட்யூஷன் இடம் கொடுக்கவில்லை

[Sri M. Bhaktavatsalam] [12th March 1959

என்று சொல்லிக் கொள்கிறேன்; அவ்வாறு மறுக்க ஆரம்பித்தால். இந்தப் பிரச்னையைக் கோர்ட்டிற்குச் கொண்டுபோய் மதுவிலக்குச் சட்டத்தையே ரத்துசெய்துவிட முடியும். எனவே டாக்டர் சர்டிபிகேட் கொடுத்தால் அனுமதி கொடுக்கிறோம். டாக்டர் சர்டிபிகேட்டுகள் வரும் விஷயத்தில் டாக்டர்களைப்பற்றி நாம் குறை சொல்லக் கூடாது. டாக்டர் சர்டிபிகேட்டுகள் வரும்போதுகூட, சில சமயங்களில், எங்களுக்கு திருப்தி இல்லாது போகும் சமயத்தில், டி.எம்.எஸ். சம்பந்தப்பட்டவரைப் பார்த்து அவர் சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்று சொல்லி மனுவைத் திருப்பி அனுப்பிவிடுகிறோம். எனவே சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவைகளை எடுத்துக் கொண்டு தான் இருக்கிறோம், என்னென்ன கண்காணிப்புகள் இருக்க வேண்டுமோ அவைகளை இருக்கும்படி பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம்.

மதுவிலக்குத் திட்டத்தில் அமைச்சர்களுக்கே நம்பிக்கையில்லை என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ அன்பழகன் சொன்னார்.அவ்வாறு சிலர் சொல்வது சகஜம். ஆனால் அவர் சொல்வது சரியல்ல. எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : அப்படியானால் என் பிரசாரம் செய்ய வில்லை ?

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : நாங்கள் போகிற இடங்களிலெல்லாம் அவர்களைப் பற்றித் தான் பேசுகிறோம். மதுவிலக்குப் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் இப்போது இல்லை. நாங்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்தாகி விட்டது. முன்பு நாங்கள் மது விலக்குப் பிரசாரம் நன்றாகச் செய்தோம். அப்போது அவர்கள் இங்கே இல்லை. அப்போது அவர்கள் வேறு இடத்தில் இருந்தார்கள். பிரசாரம் செய்வது ஒரு விஷயம், சட்டத்தை அமல் நடத்துவது வேறு விஷயம். நாங்கள் முன்பு நிறையப் பிரசாரம் செய்தோம். இப்போது பிரசாரம் தேவையில்லை. இப்போது சட்டத்தை அமல் நடத்துகிறோம். இப்போது எங்களுக்கு வரும் மனுக்களில் சொல்லப் படுவதும் நாங்கள் போகும் இடங்களிலெல்லாம் மக்கள் எங்களிடம் சொல்வதும் இன்தாது; சட்டத்தை இன்னும் கடுமையாக அமல்நடத்த வேண்டும், போலீஸ் அதிகாரிகள் இத் திட்டத்தில் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. இவ்வாறு தான் நேரில் பார்க்கும்போது சொல்கிறார்கள். மனுக்களிலும் எழுதுகிறார்கள். ஆகவே இச் சட்டம் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பது அல்ல இப்போதுள்ள பிரச்னை. எனவே, எங்களுக்கு இத்திட்டத்தில் நம்பிக்கை இல்லை, நாங்கள் ஏதோ பராமுகமாக இருக்கிறோம் என்று சொல்வது தவறு.

ஸ்ரீ ஆதிமூலம் சில விஷயங்கள் சொன்னார்கள். அவருக்கு திருநெல்வேலிப் பிரச்னைகள் இருக்கின்றன. அவருடைய "பாலிடிக்ஸ்" எத்தனையோ விதமாக மாறிக்கொண்டு வருகிறது. அவருடைய "பாலிடிக்ஸ்" மாறி மாறி வருகிறது. அவருடைய பாலிடிக்ஸ் மாறுவதற்கேற்ப சில சில பேர்கள் மீது புகார் சொல்கிறார். அவர் புகாரை கூடமாகச் சொன்னார். எனக்கு வேண்டியவர்கள் யாரும் இல்லை என்றும் நான் கண்டிப்பாக இருக்கிறேன் என்றும் முன்பே சொன்னேன். திருநெல்வேலியில் போலீசார் சரியாகப் பணியாற்றுவதில்லை என்று அவர் சொன்னார். போலீசார் தவறே செய்வதில்லை என்று நான் சொல்லவில்லை. சில இடங்களில் சில போலீசார் தவறுகள் செய்யக்கூடும். அங்குள்ள டி.எஸ்.பி மீது கனம் அங்கத்தினர் குற்றம் சாட்டினார். அவர் திறமையுள்ளவராக இல்லை என்று கனம் அங்கத்தினர் சொன்னார். அந்த அதிகாரியைப் பற்றி, அவா குறிப்பிட்டதால் நானும் சில விஷயங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. அவரைப் பற்றி இங்கே நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. அந்த டி. எஸ். பி. இண்டியன் போலீஸ் ஸெர்விஸைச் சேர்ந்தவர். அவர் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர் 5 வருஷங்களுக்கு மேல் டி. எஸ். பி.யாக இருந்து வருகிறார். நமது ராஜ்யத்திலுள்ள சிறந்த போலீஸ் உத்தியோகஸ்தர்களில் அவரும் ஒருவர். அவரைப் பற்றி,



12th March 1959] [Sri M. Bhaktavatsalam]

கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆதிமூலம் சொல்வதற்கு முன்பு ஒருவிதமான புகாரும் வரவில்லை. போலீஸ் அதிகாரிகள் பலரைப் பற்றி பல புகார்கள் வருகின்றன. பல கட்சிகள் என்னைச் சந்தித்து போலீஸ் அதிகாரிகளைப் பற்றி புகார் சொல்கிறார்கள். ஆனால் இதுவரையிலும், அந்த ஜில்லா அதிகாரியைப் பற்றி, எல்லோரும் நல்ல அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்களே தவிர யாரும் புகார் சொல்லவில்லை. சுலபமாகக் குற்றம் சொல்பவர்கள் கூட அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். ஸ்ரீ ஆதிமூலம் சொன்னதிலிருந்து தான் அவர் மீது புகார் வரத் தொடங்குகிறது என்று சொல்ல வேண்டும்.

கனம் அங்கத்தினர்கள் ஏதோ சில குற்றங்கள் சொன்னார்கள். அவைகளுக்கு நான் எப்படி பதில் சொல்வது? அவர்கள் அக்குற்றங்களை சரிவரத் தெரிவிக்கவில்லை. இன்னின்ன தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன, இன்னின்ன மாதிரியான காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று காகிதத்தில் எழுதிக் கொடுத்திருந்தால் நான் கவனிக்கலாம்.

காரைக்கால், புதுச்சேரி போன்ற இடங்களிலும், பெரியாறு திட்டப் பிரதேசங்களிலும் மக்கள் குடிப்பதாக கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள் கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ அன்பழகன் அவர்களும், பெரியாறு திட்டப் பிரதேசத்தைக் குறிப்பிட்டார்கள். மற்ற ராஜ்யங்களில் குடிப்பதைப் பற்றி நாம் ஒன்றும் சொல்லமுடியாது. மற்ற ராஜ்யங்களில் மதுவிலக்குச் சட்டம் இல்லை என்றால் நாம் ஒன்றும் சொல்லமுடியாது. நமது ராஜ்யத்தில் இக்குற்றங்கள் ஏற்படாதபடி கண்காணிக்க வேண்டும். மதுவிலக்குச் சட்டமே வேண்டாம் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். சர்க்கார் மது விலக்குச் சட்டத்தை சரிவர அமல்நடத்த, விரும்புகிறது.

காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களே குடிப்பதற்கு பெர்மிட் வாங்குகிறார்கள் என்று ஸ்ரீ சின்னதுரை சொன்னார். யார் டாக்டர் சர்டிபிகேட் கொண்டுவந்தாலும் அவர்களுக்கு பெர்மிட் மறுக்க முடியாது. காங்கிரஸ் பெரிய கட்சி. ஸ்ரீ சின்னதுரை அவர்களுடைய கட்சி சிறிய கட்சி. காங்கிரஸோ சமுத்திரம் போன்ற பெரிய கட்சி. நானாகச் சென்று காங்கிரஸ்காரர்களுக்கு பெர்மிட் கொடுப்பதில்லை. டாக்டர் சொர்டிபிகேட் வந்துவிட்டால் ஒன்றும் சொல்வதற்கில்லை.

புதுச்சேரி, காரைக்கால் போன்ற இடங்களில் குடிப்பது சம்பந்தமாக போலீசார் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். "செக்" பண்ணுகிறோம். "செக்ஸ்" இருக்கின்றன. இருந்தாலும் நடவடிக்கைகள் போதவில்லை என்பதை நானும் உணர்கிறேன். மேலும் கடுமையாக நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. போலீசார் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள்.

உருப்படியான யோசனைகளை கனம் அங்கத்தினர்கள்—எதிர் கட்சிஅங்கத்தினர்கள் ஆனாலும் சரி, ஆளும் கட்சி அங்கத்தினர்களானாலும் சரி—குறிப்பிட்டால், வேண்டியதைச் செய்யலாம்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம், பொதுவாக சில போலீசார் தொழிலாளர்களுக்கு விரோதமாகவும் முதலாளிகளுக்குச் சாதகமாகவும் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அந்த மாதிரி ஒன்றும் இல்லை என்று நான் முன்பே சொன்னேன். எங்கேயாவது தவறுகள் நடந்தால், அவை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது கவனிக்கிறோம். பொதுவாக, போலீசார் எங்கேயும் பாரபட்சமாக நடந்துகொள்ளக் கூடாது என்று நாங்கள் சந்தேகமறச் சொல்லியிருக்கிறோம். வண்டலூர் மோட்டார் வர்க்ஷாப்பில் ஏற்பட்ட அமைதியின்மை பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் குறிப்பிட்டார். அங்கே, போலீசார் நடவடிக்கை,

எடுத்தது; தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தவுடன் அதன் பேரில் அல்ல, ஆனால் அங்கே சில மோட்டார்கள் நாசமாக்கப்பட்டவுடன்தான் என்று என்னிடமுள்ள தகவலிலிருந்து தெரிகிறது. அங்கே புதிதாக மோட்டார் கார்கள் செய்கிறார்கள். அங்கே சிறிய ஸ்டாண்டர்டு மோட்டார் கார்கள் செய்கிறார்கள். ஸ்டாண்டர்டு மோட்டார் கார் வேண்டும் என்று எல்லோரும் கேட்கிறார்கள். அவைகளை அங்கே உற்பத்தி செய்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததுடன் மட்டுமன்றி புதிதாகச் செய்யப்பட்டிருந்த மோட்டார் கார்களை நாசம் செய்யவும் செய்தார்கள். அப்போது தான் போலீசார் நடவடிக்கை எடுத்தார்கள்.

Sri M. KALYANASUNDARAM: எத்தனை மோட்டார் கார்கள் நாசமாக்கப்பட்டன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அந்த விவரம் என்னிடம் இல்லை. சில கார்கள் நாசப்படுத்தப்பட்டன.

Sri M. KALYANASUNDARAM: அவ்வாறு முதலாளிகள் புகார் செய்தார்கள். அவ்வளவுதான்.

*The Hon. Sri M. BHAKTAVATSALAM: போலீசார் மூலமாக மட்டுமின்றி நான் நேராக விசாரித்ததிலும், அங்கே சில கார்கள் நாசமாக்கப்பட்டன என்று அறிந்தேன். அந்த முறையில் தான் போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. எனவே, போலீசார் பாரபட்சமாக இருக்கிறார்கள் என்று சொல்வது தவறு.

டி. ஐ. ஜி.க்கள் ஏன் அதிகமாக நியமிக்கப்படுகிறார்கள் என்று கேட்கப் பட்டது. வேலைகள் ஒழுங்காக நடப்பதற்கு இவர்கள் தேவைப்படுகிறார்கள். இப்போது ராஜ்யத்தில் நான்கு டி. ஐ. ஜி.-க்கள் இருக்கிறார்கள். "ஸி.ஐ.டி அண்ட் ரெயில்வேஸ்"க்கு ஒரு டி. ஐ. ஜி. இருக்கிறார். மதுரைக்கு என்று ஒரு டி. ஐ. ஜி., கோயம்புத்தூருக்கு என்று ஒரு டி. ஐ. ஜி., திருச்சிராப் பள்ளிக்கு என்று ஒரு டி.ஐ.ஜி. என்று மற்ற மூன்று டி.ஐ.ஜி.க்கள் இருக்கிறார்கள். இந்த மூன்று பேர்களுக்கும் வேலை சரியாக இருக்கிறது. இருக்கும் வேலையைப் பார்த்தால் இந்த மூன்று டி. ஐ. ஜி.-க்கள் போத வில்லை. மேலும் கமிஷனர் ஆப் போலீஸும் இருக்கிறார். அவருக்கு டி. ஐ. ஜி.-க்கள் யோசனைகளும் உதவிகளும் அளிக்க வேண்டும். ஒரு டி. ஐ. ஜி.யை இங்கேயிருந்து எடுத்துவிட்டு பயர் ஸ்டேஷன் வைக்கலாம் என்று சொல்வது சரியான யோசனை அல்ல. அது "பென்னி வொய்ஸ்" ஆகும். இத்தனை டி.ஐ.ஜி-க்களை சர்க்கார் அனாவசியமாக வைத்துக் கொண்டிருக்கவில்லை. நிறைய வேலைகள் இருப்பதால் தான் இவர்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். வேலை நிமித்தம், நிறைய வேலைகள் இருப்ப தால், இன்னும் டி. ஐ. ஜி.-க்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் நாங்கள் "முடியாது" "பிறகு பார்க்கலாம்" "அடுத்த வருஷம் பார்க்கலாம்" என்று தள்ளிவருகிறோம்.

பெண் போலீஸ் நியமிப்பது பற்றி பேசப்பட்டது. பெண் போலீசாரை நியமிப்பது பற்றி கனம் அங்கத்தினர்கள் அதிகம் கவலைப்பட வேண்டாம். அவர்கள் பரீட்சார்த்தமாக நியமிக்கப்படலாம். பரீட்சார்த்தமாக 3–4 பேர்கள் தான் இருப்பார்கள். எனவே இதைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் கவலைப்படவேண்டியதில்லை.

ஷார்ட்ஹாண்ட் ரிப்போர்டர்கள் பேச்சுக்களை எழுதுவது பற்றி பேசப்பட்டது. நமக்கு வேண்டிய சில தகவல்களுக்காக இவர்களைக் கொண்டு பேச்சுக்களை எழுதச்செய்கிறோம். "ஸென்ஷூரிங்"-கைப் பொறுத்த வரையில், நாங்கள் கண்ணை மூடிக்கொண்டு எல்லோர் மீதும் ஸென்ஷூர் செய்வதில்லை என்று சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை கேட்டதைப்



பொறுத்தவரையில் "ஸென்ஷூரிங்" இல்லை என்று சொன்னேன். ஸென்ஷூரிங் அவசியமாயிருந்தால் ஸென்ஷூரிங் செய்கிறோம். சிற்சில சமயங்களில் சிற்சிலவற்றின் நிமித்தம் ஸென்ஷூர் செய்கிறோம். யாரோ புரட்சிகரமானவர்கள் என்று எண்ணியோ, யாரோ ஆபத்தானவர்கள் என்று எண்ணியோ, யார் மீதும் ஆத்திரம் கொண்டோ, நாங்கள் இதை யெல்லாம் செய்யவில்லை. ஷார்ட்ஹாண்ட் ரிப்போர்ட்டர் பேச்சுக்களை எழுவது நல்லதுதானே? அந்தப் பேச்சுக்களின் பேரில் பிறகு கேஸ் வந்தால், ஷார்ட்ஹாண்ட் ரிப்போர்ட்டர் எழுதியது இருக்கும்போது, உண்மையில் பேசப்பட்டது என்ன என்பது தெரியும் தவறான சாட்சியங்கள் வெற்றியுறாது. ஷார்ட்ஹாண்ட் ரிப்போர்டர்கள் பேசுவதை அப்படியே எழுது கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் பேசுவதை இவர்கள் எழுதவில்லையே என்றால், காங்கிரஸ்காரர்களின் பேச்சுக்கள் பற்றியும் எங்களுக்குத் தகவல் வருகிறது. ஆகையால் நாங்கள் எதிர்கட்சிகளின் மீது ஆத்திரப்பட்டோ, எதிர் கட்சிகளைக் கண்டு பயந்தோ, ஆளும் கட்சியின் பலத்தைப் பெருக்கு வதற்காகவோ, எதிர்க் கட்சிகளை பலவீனப்படுத்துவதற்காகவோ இவ்வாறு செய்கிறோம் எனபதில்லை. இதை நாங்கள் செய்வதற்குக் காரணங்கள் அவை அல்ல.

கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் சொன்னார்கள், எங்களுக்கு என்ன போலீஸைப் பற்றி பயமா என்று. எங்களுக்கு மட்டும் என்ன பயமா என்று நான் கேட்கிறேன். பிரிட்டிஷ் ஆட்சி இருந்தபோது போலீசை வைத்துக்கொண்டா சுதந்திரம் பெற்றோம்? போலீஸை வைத்துக் கொண்டா முனிசிபல் தேர்தல்களில் வெற்றி பெற்றோம்? காங்கிரஸ் கட்சிக்கும் போலீஸ் வேண்டியதில்லை. போலீஸ் நியாயமாக நடக்கவேண்டும், பாரபட்சமில்லாமல் நடக்க வேண்டும். போலீசார், அவர்களது வேலைகளை ஒழுங்காகத்தான் செய்து கொண்டு வருகிறார்கள், அவர்களது வேலை கடினமானதுதான். அவர்களின் குறைகள் எனக்குத் தெரியாமல் இல்லை. இன்னின்ன குறைகள் இருக்கின்றன, இன்னின்ன இடத்தில் இப்படி இப்படி குறைகள் இருக்கிறது என்றெல்லாம் நானும் சொல்லத்தான் செய்கிறேன். இன்னின்ன அதிகாரி இன்னின்ன தவறு கள் செய்துவிட்டார் என்று சொல்கிறேன், அவர்களும் சொல்கிறார்கள். ஆகவே, குறைகளைப் பற்றி, குறைகள் ஏற்படும்போது நாங்கள் கண்ணை மூடிக் கொண்டு இருக்கவில்லை. கூடியமட்டில் கலாட்டா இல்லாமல், தொந்தரவு இல்லாமல் காரியங்கள் செய்துகொண்டு வருகிறோம். ஒரு வீட்டை மூடாமல் வைத்தால் திருட்டு போகும். ஆக, போலீஸின் [illegible] சேவைகளை இந்த சமயத்தில், இந்த மன்றத்தின் முன் பாராட்ட [illegible]ரும்பு கிறேன். அதே சமயத்தில், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, போலீஸ் மக்களின் நல்வாழ்விற்காக செய்யும் பணிகளுக்கு வேண்டிய ஒத்துழைப்பையும், ஆதரவையும் தயங்காமல் அளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ப்ரமோஷனைப் பற்றி முன்பே சொன் னேன். பிரமோஷன் என்று வரும்போது திறமையையும் பார்க்கவேண்டி யிருக்கிறது. ப்ரமோஷன் ஆனவர்களை தள்ளிவிடப் போவதில்லை. சில சமயங்களில் தகுதியையும், திறமையும் பார்த்துத்தான் செய்யவேண்டி யிருக்கிறது. இனிமேல் உங்கள் நேரத்தை நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இந்த வெட்டுப் பிரேரணைகளை கொடுத்திருக்கும் கோவிந்த சுவாமி அவர்கள் அதை வற்புறுத்தமாட்டார்கள் என்று நம்பிக் கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

(Sri M. Kalyanasundaram rose.)

Mr. SPEAKER: How can the hon. Member rise? He cannot make another speech.

Sri M. KALYANASUNDARAM: I am not going to make another speech. On a point of personal explanation. கனம் மந்திரி அவர்கள் சொன்னதின் அர்த்தம் விளங்கவில்லை.

Mr. SPEAKER: No point of personal explanation.

[12th March 1959

SRI M. KALYANASUNDARAM: The Hon. Minister is willing . . . .

MR. SPEAKER: No. The hon. Member must observe the rules of debate. According to rules, he can rise on a point of personal explanation only at the end of the Minister's speech and not now. In the middle of the speech, he can rise onlyon points of orders.

SRI V. K. KOTHANDARAMAN: எதிர்கட்சியில் இருக்கக் கூடிய நாங்கள், வட ஆற்காடு ஜில்லா டி. எஸ். பி. யை மாற்றியது விஷயமாக சொன்னதுபற்றி பதில் சொன்னார்கள். இதுபோல் அவரைப்பற்றி சொல்வது அவருக்கு நன்றாயிருக்காது என்று சொன்னார்கள். எதிர்கட்சிக்காரர்கள் இதுபோல் சொல்வதால், அவர் எதிர்கட்சிக்காரர்களை ஆதரிக்கக்கூடியவ ராகயிருக்கிறார் என்று அவருக்கு உத்தியோக தாழ்வு கொடுத்து விடுவார்களா? அவர் பேரில் நடவடிக்கைகள் எடுக்கும் அளவிற்கு போகுமா? நாங்கள் நல்லது கெட்டது ஒன்றும் இங்கே சொல்லக்கூடாதா?

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் எந்தகட்சியைச் சார்ந்தவராகயிருந்தாலும் சரி, ஒரு அங்கத்தினர் அல்லது சிலர் குறிப்பிட்ட அதிகாரிகளைப் பற்றி சொன்னால் அது அந்த அதிகாரிகளுக்கு நல்லதல்ல.

(ஸ்ரீ ஆதிமூலம் எழுந்தார்.)

MR. SPEAKER: நீங்கள் சொன்னதை தவறுதலாக எடுத்துக் கொண்டு பதில் சொல்லியிருந்தால், கேளுங்கள். கோதண்டராமன் அவர்கள் சொன்னதைப் போன்று புது விஷயத்தை எடுத்துச் சொல்ல முடியாது.

SRI D. S. AUTHIMOOLAM: நான் கட்சி விட்டு கட்சி போவது மாதிரி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு டிக்கட்கள் வந்ததைக் கூட நான் வேண்டாமென்று சொன்னேன். டிக்கட்டிற்காக கட்சி மாறுபவன் அல்ல, நான். திருநெல்வேலி டி. எஸ். பி.யின் மனப்பான்மை அல்லது நடவடிக்கைகள் பற்றி தெரியும், அம்பாசமுத்திரம் தாலுகாவில் நடந்துள்ள காரியங்களை எடுத்துப் பார்த்தால். அம்பாசமுத்திரம் தாலுகாவில் பல பொய் கேஸ்கள் போடப்பட்டு, யார் மேல் கேஸ் போடப்பட்டதோ அவர்கள் விடுதலை அடைந்து வந்திருக்கிறார்கள். எதிர்கட்சிகளை நசுக்க வேண்டுமென்றுதான் . . .

MR. SPEAKER: நீங்கள் புது குற்றச்சாட்டு சாட்டுகிறீர்கள். இது, "அவுட் ஆப் ஆர்டர்".

SRI G. GOMATHISANKARA DIKSHITAR: நல்லமுறையில் . .

MR. SPEAKER: I am sorry, it is not a point of personal explanation.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR: நல்ல முறையில் பணியாற்றிவரும் திருநெல்வேலி போலீஸ் அதிகாரியைப் பற்றி அவர் நல்ல முறையில் பணியாற்றவில்லை என்று எனது மதிப்பிற்குரிய நண்பர் சொல்வதை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

MR. SPEAKER: அதற்கு இது சந்தர்ப்பம் இல்லை.

SRI S. M. ANNAMALAI: ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர். நான் ஏதோ டி. எஸ். பி.க்கு பரிவு காட்டிப் பேசியதாக பேசினார்கள். நான் சொன்ன விஷயம் வேறு. ரோட்டின் பக்கத்தில் மரக்கட்டைகளைப் போட்டு வைத்திருப்பதின் மேல் எடுக்கப்பட்ட போலீஸ் நடவடிக்கைகளின் மேல் ஸ்டே ஆர்டர் வாங்கப்பட்டிருக்கிறது. ஹோம் டிப்பார்டுமெண்டில் இருந்தே . . .



12th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதெல்லாம் முற்றிலும் தவறு. நான் கடுமையான வார்த்தையை உபயோகித்தால் அதை ஆட்சேபிப்பீர்கள்.

SRI A. GOVINDASAMY: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஸார், நான் பேசும்போது ஒரு விஷயத்தைப்பற்றி குறிப்பிட்டேன். அதற்கு பதில் அமைச்சர் அவர்களிடமிருந்து வருமென்று எதிர்பார்த்தேன். வரவில்லை. அதற்கு இப்பொழுதாவது பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் கேட்டதற்கு எல்லாம் பதில் சொல்லமுடியுமா? இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டராகாது. I cannot allow this. The Minister may or may not refer to it. Is Mr. Govindasamy withdrawing his cut motions?

SRI A. GOVINDASAMY: No, Sir.

MR. SPEAKER: I shall put them as well as the Demands to vote. The question is:

"That the allotment of Rs. 5,85,73,000 under Demand XV—Police—be reduced by Rs.100."

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is:

"That the Government be granted a sum not exceeding Rs. 5,85,73,000 under Demand XV—Police."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: The question is:

"That the allotment of Rs. 6,17,200 under Demand II—Excise Department—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is:

"That the Government be granted a sum not exceeding Rs. 6,17,200 under Demand II—Excise Department."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: I adjourn the House to meet again at 8-30 a.m. tomorow. 1.3 p.m.

The House then adjourned.

## III.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A.—Statutory Orders, Rules and Notifications.*

106. *Notification issued with G.O. Ms. No. 285, Home, dated the 31st January 1959, exempting certain vehicles belonging to Kerala State Transport Department from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931. [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].*

## APPENDIX I.

[Vide answer to starred question No. 727 asked by Sri N. K. Palanisami, Sri K. Sattanatha Karayalar, Sri A. Govindasamy, Sri N. R. Thiagarajan, Sri P. S. Chinnadurai, Sri S. Lazar and Sri A. A. Rasheed, at the meeting of the Legislative Assembly held on 12th March 1959, page 105 supra.]

*Main features of the tentative agreement reached between the Madras and the Kerala Governments in regard to division of the waters of Parambikulam and other connected rivers.*

The Project on the Madras side aims at harnessing and utilising the flow of the Parambikulam Aliyar and Nirar rivers and the surplus flows of Sholayar for irrigation in Coimbatore district and Power Development.

The Kerala State has agreed to the diversion of the waters of Parambikulam river and its tributaries by Madras State from dams constructed in Kerala State limits. The Parambikulam Project of Madras consists of two parts:

Under the first part, a large storage will be built on the Parambikulam river by building dams across the river and its tributaries, Tekkady and Thunnakkadavu with suitable inter connections. Flows from Sholayar river which are surplus to the requirements of Sholayar Hydro-Electric Scheme of Kerala State will be diverted by a suitable diversion works into the Parambikulam Reservoir. This surplus will be of the order of 2,500 m.c.ft. in an average year. In addition to this surplus 16,500 m.c.ft., from out of the flows of Parambikulam, Thekkady and Thunakkadavu rivers will be diverted towards east through a tunnel 2½ miles long. At the end of the tunnel there is a drop of 500 feet which will be utilized for Power Development of 33,000 K.W. at 0·6 L.F. From the tail race of this Power House at Sirkarpathi a contour canal at the foot of the hill will be taken to Aliyar river which also will be dammed. Two canals will take off from this Aliyar Reservoir to irrigate areas in Pollachi taluk of Coimbatore district.

The other part of the Project consists of diverting the waters of Nirar, a sub-tributory of Periyar river, through a tunnel 6½ miles long into the Aliyar river. All waters in the river subject to the requirements of Irrigation of Periyar Valley in Kerala State limited to the natural flows during October to January will be diverted to Madras side. The water so diverted as well as the flows of the Aliyar at that site will be drawn through a short tunnel into the Nallar valley where a reservoir will be formed. From this reservoir, water will be conveyed through another tunnel and dropped over a head of 1,700 feet. Power of 80,000 K.W. at 0.6 L.F. will be developed at this spot. The water will then be picked up and let into the Palar river where also a small reservoir will be formed. Canals will take off from this reservoir to irrigate areas in Dharapuram, Udumalpet and Palladam taluks.



The total areas benefited by the scheme will be about 2 lakhs of acres which may have mixed crops of paddy, cotton and millets. The total power output will be 1,13,000 K.W. at 0.6 L.F. The cost of the scheme will be about Rs. 30 crores. The return on the project will be about 6 per cent.

The Kerala State has proposed a Hydro-Electric Project on the Sholayar river, a tributary of Parambikulam, as part of the intergrated development of the waters of the Chalakudi river basin. The flows of Sholayar can be utilized in Madras State limits also for Power development and Irrigation in Coimbatore district. As a result of the Inter-State talks, the Madras Government has agreed to all the waters of Sholayar to be utilised for the full designed requirements of the Project in Kerala and divert only the surplus for use by the Madras State. The Sholayar Hydro-Electric Project which will be proceeded with by Kerala will cost about Rs. 4 crores. The capacity of the Reservoir is 4,500 m.c.ft. and the Power draft will be of the order of 380 cusecs and the gross head 982 feet. The installed capacity of the Power House will be 54,000 K.W.

Besides feeding the canals located in Madras State, the Aliyar Reservoir will also enable stabilisation of irrigation on about 20,000 acres of wet lands in the Chittur taluk of Kerala State. At present there are no storage works in this area for stabilising the irrigation of these lands.

The reservoir proposed on the Parambikulam will also help Kerala State in utilising any excess water over and above 16,500 m.c.ft. drawn by Madras. The excess up to 2,500 m.c.ft will be conveyed through the tunnels and canals and let into the Aliyar river for utilisation by Kerala State in Chittur area. In case the excess is less than 2,500 m.c.ft. it is proposed to be supplemented by diverting flows from Vettiar, another tributary of Parambikulam, by building a dam across that river by the Kerala State.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 735 asked by Sri P.G. Manickam at the meeting of the Legislative Assembly held on 12th March 1959 page 112 supra.]

*I. Statement showing places where the key village centres are located and the different kinds and breeds of cattle found in the centres.*

| Centres. (1) | District. (2) | Breeds of Cattle. (3) |
|---|---|---|
| 1 Hosur Cattle Farm .. .. .. | Salem .. .. | Hallikar. |
| 2 Kangayam .. .. .. .. | Coimbatore .. | Kangayam. |
| 3 Vellakovil .. .. .. .. | Do. .. .. | Do. |
| 4 Malayandipatnam .. .. .. | Do. .. .. | Do. |
| 5 Sivagiri .. .. .. .. | Do. .. .. | Do. |

[12th March 1959

*I. Statement showing places where the key village centres are located the different kinds and breeds of cattle found in the cen'res*—cont.

| *Centres.* (1) | *District.* (2) | *Breeds of Cattle.* (3) |
|---|---|---|
| 6 Mulanur | Coimbatore | Kangayam |
| 7 Sankarandampalayam | Do. | Do. |
| 8 Chikkanapuram | Do. | Do. |
| 9 Pettaikalipalayam | Do. | Do. |
| 10 Sultanpet | Do. | Do. |
| 11 Pongalur | Do. | Do. |
| 12 Muthur | Do. | Do. |
| 13 Vadugapatty | Do. | Do. |
| 14 Neikarapatty | Madurai | Do. |
| 15 Idayakottai | Do. | Do. |
| 16 Thoppampatty | Do. | Do. |
| 17 Kallimandyam | Do. | Do. |
| 18 Ayakudi | Do. | Do. |
| 19 Vedasandur | Do. | Do. |
| 20 Gujilamparai | Do. | Do. |
| 21 Kilacheri | Chingleput | Non-descript. |
| 22 Poonamallee | Do. | Do. |
| 23 Kancheepuram | Do. | Do. |
| 24 Chidambaram | South Arcot | Do. |
| 25 Thennilai | Tiruchirappalli | Kangayam. |
| 26 Aravakurichi | Do. | Do. |
| 27 Chinnadharapuram | Do. | Do. |
| 28 Nagercoil | Kanyakumari | Non-descript. |

*II. Places where the supplementary extension centres are located and the breeds of cattle found.*

| *Name of the place.* (1) | *District.* (2) | *Breeds of Cattle.* (3) |
|---|---|---|
| 1 Madurantakam | Chingleput | Non-descript. |
| 2 Sunkuvarchatram | Do. | Do. |
| 3 Valavanur | South Arcot | Do. |
| 4 Polur | North Arcot | Do. |
| 5 Namakkal | Salem | Do. |
| 6 Bagalur | Do. | Do. |
| 7 Tiruchengode | Do. | Do. |
| 8 Karur | Tiruchirappalli | Do. |
| 9 Alangudy | Do. | Do. |
| 10 Vellianai | Do. | Do. |
| 11 Dindigul | Madurai | Do. |
| 12 Uthamapalayam | Do. | Do. |
| 13 Tirumangalam | Do. | Do. |
| 14 Sivakasi | Ramanathapuram | Do. |
| 15 Eral | Tirunelveli | Do. |
| 16 Vasudevanallur | Do. | Do. |
| 17 Valparai | Coimbatore | Do. |

*III. Places where the Sheep Farms are located and the breeds of sheep found.*

| *Places.* (1) | *District.* (2) | *Breeds.* (3) |
|---|---|---|
| 1 Sheep Farm Dunsandle, Ootacamund. | The Nilgiris | Nilgiris Woolly Sheep. |
| 2 Sheep Breeding Research Station, Chinnasalem. | South Arcot | Bikanir Woolly Sheep. |
| 3 Sheep Farm, Kavanur Reserve Forest. | Chingleput | Mutton and hairy type. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, the 13th March 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ என். கே. பழநிசாமி அவர்கள் இன்று ஊரில் இல்லாததால் அவர்களுடைய கேள்விகள் எல்லாம் 18-ம் தேதி எடுத்துக்கொள்ளப்படும். கேள்வி எண் 754.

SRI M. KALYANASUNDARAM : Sir, there is the short notice question to be answered.

MR. SPEAKER : The Hon. the Minister for Industries will come a little late. Therefore I will take up the short notice question a little later.

*Mathematics and Science Graduate Teachers*

*754 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில், கணித, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறை எவ்வளவு ?

(ஆ) இவர்களில் அரசாங்கம், ஸ்தல ஸ்தாபனம், தனியார் பள்ளிகள், ஒவ்வொரு இனத்திலும் எத்தனை பேர் தேவை ?

(இ) இந்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன முயற்சி வகுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) *to* (*c*) The time and labour involved in collecting the particulars for answering the question will not be commensurate with the public interest which it may serve.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது பி.டி. கல்லூரிகளில் போதிய பயிற்சிக்கான மாணவர்கள் வருவது இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். மற்றவைகளுக்கு நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் வருகின்றன. இதற்கு அவ்வளவு விண்ணப்பங்கள் வரவில்லை என்றால், அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியம் குறைவாகக் கொடுப்பதால் அல்லவா? அதனால் ஒரத்தநாடு பி.டி. கல்லூரிக்கு சலுகை காட்டி ஸ்டைபண்ட் போன்ற வசதிகளை அளித்து பி.டி பயிற்சிக்கு இன்னும் அதிகப்படியான மாணவர்கள் வருவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி கணக்கு விஞ்ஞான பட்டதாரிகளைக் குறிப்பிட்டது. அங்கே ஒரத்தநாட்டில் இருப்பது பேசிக் எஜுகேஷனைக் கொண்டது. ஆகையால் அதை தனியாகக் கவனிக்க வேண்டியதாக இருக்கும்.

SRI A. VEDARATHNAM : அங்கும் ஹைஸ்கூல்களில் வெவ்வேறு உயர்தரப் பள்ளிகளிலும் கணித விஞ்ஞான பட்டதாரிகள் இல்லாமல் இப்பொழுது பள்ளிகள் நடந்து வருகிறது. இவைகளை அதிகரிக்கும்படி செய்வதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த விஷயத்தை அடுத்த ஆண்டு ஆரம்பத்திற்குள் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்க உத்தேசித்து இருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, due to the paucity of trained teachers in these subjects, were any instances brought to the notice of the Government that in some of the district board-managed high schools, teachers trained in Social Studies, English, Science and Geography subjects were made to handle classes in Mathematics and Science subjects?

THE HON. SRI C. SUBRAMANIAM : No specific instance has been brought to our notice. But I am aware of the fact that there is scarcity of Mathematics and Science teachers in high schools.

*B.T. Colleges*

* 755 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government propose to start B.T. Colleges in the State; and

(b) whether there is any proposal to start a B.T. College in the Kanyakumari district?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) No, Sir.

SRI T. T. DANIEL : Sir, may I know whether at present in the State we are having enough number of B.T. colleges for giving admission to B.T. students, and may I also know, in view of the fact that a number of candidates are going from the district to other districts for getting admission to B.T. class, will the Government think of giving permission to start a B.T. College if any private agency comes forward to do so?

THE HON. SRI C. SUBRAMANIAM : I think we already have 16 or 17 training colleges, and we do not get sufficient number of applicants to fill all the seats. In the circumstances I do not think any purpose will be served by starting another college.

SRI P. G. MANICKAM : எலிமெண்டரி பாடசாலைகள் ஒன்று முதல் மூன்று வகுப்புகளில் பாடம் நடத்துவதற்கு ஆசிரியைகள் நியமிக்க வேண்டுமென்பது சர்க்காருடைய கொள்கை. ஆகவே அதிகப்படியான ஆசிரியை பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த சர்க்கார் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இப்பொழுது இருக்கிற பள்ளிகளுக்கே ஆசிரியர்கள் வரவில்லை என்று மந்திரி பதில் சொல்லியிருக்கிறாரே.

SRI A. A. RASHEED : Sir, may I know the number of B.T. colleges for women in our State ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Four for women and thirteen for men.



SRI K. ANBAZHAGAN : போதிய பயிற்சிக் கல்லூரிகள் ஏற்படுத்த இயலாவிட்டாலும் பயிற்சிக் கல்லூரிகளில் மேலும் சில புதிய பயிற்சி வகுப்புக்களை ஏற்படுத்த முன்வருவார்களா ? தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கு வித்துவான்கள் பயிற்சி பெறப் போதுமான இடம் இல்லையாதலால், தமிழ் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதில் குறை இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை.

SRI K. VINAYAKAM : Sir, in spite of the large number of B.T. colleges in our State, is the Hon. Minister aware that graduates who have specialised in History and Economics only seek admission, whereas there is paucity of graduates seeking admission in Science and Mathematics subjects? Will the Government think of the possibility of giving larger remuneration to those graduates who are becoming scarcer and scarcer nowadays?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think we can show any favourable treatment to Mathematics and Science teachers alone. It is a general question with reference to getting graduate teachers for secondary schools. As a matter of fact, the Pay Commission is expected to go into this question also.

*Aiyirakalavan Peria Eri*

* 756 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any mahazar, dated 18th November 1958, from the villagers of Aiyirakalavan, hamlet of Ulkottai village in Udayarpalayam taluk, Tiruchirappalli district, requesting renovation of supply channel to the Peria Eri in the village was received by the Executive Engineer, P.W.D., Tiruchirappalli; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) It is reported that a petition from the ayacutdars of Aiyirakalavan Peria Eri, dated 18th November 1958, requesting silt clearance of the supply channel and construction of an anicut across the drainage course was received by the Executive Engineer, Tiruchirappalli division, through the honourable member and transferred to the Collector of Tiruchirappalli.

(b) The ryots are reported to have agreed to desilt the supply channel to the Peria Eri, free of cost, under the guidance of Government Officials. The Collector is taking steps to help the ryots in the matter.

As regards construction of a dam across the drainage course, the Executive Engineer, Tiruchirappalli division, is examining the feasibility.

[13th March 1959

### *P.W.D. Workers' Union*

* 757 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the demands of the Public Works Department Workers' Union; and

(*b*) the steps taken to ameliorate their grievances?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) Attention is invited to the statement[a] placed on the table of the house.

SRI K. SATTANATHA KARAYALAR : பி.டபிள்யூ.டி.யில் வேலை செய்யக் கூடிய ஊழியர்கள் மொத்தம் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் ? அவர்களில் டெம்பரவரியாக உள்ளவர்கள் எத்தனை பேர்கள் ?

THE HON. SRI P. KAKKAN : இங்கே தகவல் ஒன்றும் இல்லை. அங்கே இருக்கிற ஊழியர்களில் 192 பேர்களை பர்மனென்டாக்கி இருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : பொது மராமத்து இலாகா கன்டின்ஜென்சி ஊழியர்கள் கடைத்தர வகுப்பாளர்கள் இருக்கிறார்கள். சென்ற ஐந்தாறு ஆண்டுகளாக அவர்கள் வேலை செய்து வந்தும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களை நிரந்தரமாக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : யார் யார் ஐந்து வருடங்களுக்கு மேலாக வேலை செய்து வருகிறார்களோ அவர்களை நிச்சயமாக நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யப்படும்.

### *Gudiyatham Municipality*

* 758 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the schemes for which the Gudiyatham Municipality has applied for loans and grants, and the amounts so applied for in 1957–58; and

(*b*) whether they have been sanctioned?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) & (*b*) A statement[b] showing the list of schemes for which the Gudiyatham Municipality asked for loans and grants in 1957–58 and the action taken thereon is placed on the table of the house.

SRI V. K. KOTHANDARAMAN : மேஜையின்மீது வைக்கப்பட்ட ஸ்டேட்மெண்டில் கண்டபடி "டி" யில் இருக்கக்கூடிய ஆனியார் ஸ்ட்ரீட் கொச அண்ணாமலை தெருவுக்கு லோனும் கிராண்டும் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. "ஏ.,பி.,சி." யில் கண்ட ரோடுகளுக்கு சாங்க்ஷன் செய்யப்படவில்லை என்று கண்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? இனி மேலாவது கவனித்து சாங்க்ஷன் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : நிதி நிலைமையைப் பொறுத்துக் கடன் கொடுக்கப்படுகிறது. எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று முக்கியமாகக் கருதப்படுகிறதோ அவைகளுக்கு முதன்மை கொடுக்கப்படுகிறது.

[a] Printed as Appendix I on pages 278–280 infra.

[b] Printed as Appendix II on page 281 infra.



13th March 1959]

SRI V. K. KOTHANDARAMAN : தண்ணீர் வசதி வேண்டும் என்றும், ட்ரெயினேஜ் முதலியவும் டவுன் ஹால் கட்டுவதற்கும் அவர்கள் அங்கேயிருந்து கேட்டிருக்கிறார்கள். அவைகளும் இந்த ஸ்டேட்மெண்டில் காணப்படவில்லை. அதே நேரத்தில் ஒரு ரெஸ்ட் ஹவுஸ் கட்டுவதற்கு ரூ. 20,000 சாங்க்ஷன் செய்யப்படவில்லை. தனியார் துறையிலும், பொது துறையிலும் ஒரு ரெஸ்ட் ஹௌஸ் கட்டுவது அவசியமாக இருக்கிறது. மந்திரிகள் வந்தாலும் அங்கே தங்க இடம் இல்லாமல் பெரிய முதலாளிகள் பங்களாவில் தங்குகிறார்கள்.

SRI K. VINAYAKAM : ரெஸ்ட் ஹௌஸ் அங்கே இருக்கிறது.

MR. SPEAKER : I think the Hon. Minister must reply and not the hon. Member Sri Vinayakam.

SRI V. K. KOTHANDARAMAN : நீங்கள் சும்மா இருங்கள். ரெஸ்ட் ஹௌஸ் இடிந்துவிட்டது. இப்பொழுது ஒருவரும் தங்குவதில்லை. அதனால் அங்கே ஒரு ரெஸ்ட் ஹௌஸ் கட்டுவதற்கு சாங்க்ஷன் செய்யப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : குடியாத்தத்தில் ரெஸ்ட் ஹௌஸ் இருக்கின்றது. நானே அதில் தங்கி இருந்திருக்கிறேன். அங்கே எவைகளுக்குத் தேவை அதிகமாக இருக்கிறதோ, அவைகளை உடனடியாகப் பார்த்து செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

### *Madras-Trivandrum Express*

* 760 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri P. Urkavalan) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

சென்னையிலிருந்து போகும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரெயிலில் 3-வது வகுப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஸ்லீப்பிங் கோச் (sleeping coach) பெட்டியை மதுரையுடன் கழற்றிவிடாமல் திருவனந்தபுரம் வரை கோர்க்க ஏற்பாடு செய்யும்படி மத்திய சர்க்காருக்கு நம் சர்க்கார் சிபார்சு செய்ய உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No such recommendation has been made to the Central Government. But the Southern Railway Administration has intimated that this question is under its consideration.

### *Government employees declared medically unfit for service*

* 761 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of Government employees, district-war, who were certified as unfit for service by the various District Medical Officers in 1957–58 and 1958–59; and

(*b*) the various causes or diseases on account of which they were declared unfit?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix III on pages 281–282 infra.

[13th March 1959

SRI K. R. VISWANATHAN : இப்படிப் பல நோய்களிலிருந்து சர்க்கார் சிப்பந்திகள் எந்த நோயின் காரணமாக அதிகமான எண்ணிக்கையில் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த நோய்களின் விவரங்கள் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நோயை முதலில் போட்டிருப்பதால் அதில் அதிகமாக இருக்கிறார்கள் என்ற அர்த்தம் இல்லை. ஏதோ வரிசைக் கிரமமாக போட்டிருக்கிறார்கள், அவ்வளவுதான்

*Government employees declared medically unfit for service.*

*762 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of appeals to the Medical Board preferred by Government employees, declared unfit by the various District Medical Officers in 1957–58 and 1958–59;

(*b*) the number of cases in which reinstatement was ordered; and

(*c*) the diseases from which the persons reinstated were suffering?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) *to* (*c*) A statement[a] is placed on the table of the House.

SRI K. R. VISWANATHAN : இந்தப் பல நோய்களில் நீரிழிவு நோய் (டயபிடிஸ்) இருப்பதால் வேலை செய்வதற்கு அவ்வளவு பாதகம் இருக்காது என்ற காரணத்தினால் அந்த தடையால் பாதிக்கப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்குவதைச் சர்க்கார் தடை செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது சாதாரண அளவில் இருந்தால் அதனால் பாதகம் ஒன்றும் ஏற்படாது. ரொம்ப அதிகமாக இருந்தால்தான் "டிஸ் க்வாலிபை" பண்ணுகிறார்கள். குறைவாக இருப்பவர்கள் அநேகம் பேர் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

*House-sites for Harijans.*

*763 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

கோயம்புத்தூர் ஜில்லாவிலே ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்கட்டு நிலங்களை ஆர்ஜிதம் செய்து வழங்குவதற்கான திட்டத்தை தீவிரமாக அமுலுக்குக் கொண்டுவருவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN : A statement[b] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : ஸார், வீட்டு மனைகட்டுகளுக்காக 300 விண்ணப்பங்கள் வந்திருப்பதாகவும், 1958–59-ல் 17 விண்ணப்பங்கள் எடுத்துக்கொண்டிருப்பதாகவும், 6 விண்ணப்பங்கள் நோடிபிகேஷன்படி பரிசீலிக்க அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. ஸ்பெஷல் டிபுடி தாசில்தார், மற்ற அதிகாரிகள் ஆகியவர்களை அதிகப்படுத்துவது "கன்ஸிடரேஷனில்" இருப்பதாகக் கொடுத்திருக்கிறார்கள். மேற்கொண்டு ஸ்பெஷல் தாசில்தார், மற்ற அதிகாரிகளை நியமிக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

[a] Printed as Appendix IV cn page 282 infra.

[b] Printed as Appendix V on page 283 infra.



13th March 1959]

THE HON. SRI P. KAKKAN : பரிசீலனை செய்து தக்க ஏற்பாடு செய்யப்படும்.

*764 *Q.*—SRI K. ANBAZHAGAN (on behalf of Sri A. Govindasamy). கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், வீராநந்தபுரம் சேரி மக்களுக்கு மனைக்கட்டு வழங்க வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து மகஜர் வந்ததா ?

(ஆ) அதன் மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Collector is taking action to assign available lands and tc acquire additional lands.

SRI K. ANBAZHAGAN : விண்ணப்பம் கொடுத்து எவ்வளவு காலம் ஆகிறது ? தாமதம் ஏற்பட என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : புறம்போக்கு நிலங்கள் இல்லாததால் சிறிது தாமதம் ஏற்பட்டாலும்கூட இருக்கும் இடங்களில் எவ்வளவு தூரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் கலெக்டர் அவர்களால் கொடுக்கப்பட்டு வருகிறது.

*Mathur-Vairankaval road*

*765 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when the metalling of the Mathur-Vaiarankaval road in Udayarpalayam taluk, Tiruchirappalli district was sanctioned;

(*b*) if so, why the work has not been taken up till now; and

(*c*) when it will be completed?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) In 1957–58, Sir.

(*b*) & (*c*) The work has been entrusted to the contractor for execution and it is expected to be completed by the end of November 1959.

*Viswakarma Associations*

*766 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Viswakarma Associations registered under the Department of Industries in the State;

(*b*) the number of such associations in Tiruchendur taluk;

(*c*) the number of applications for the formation of such associations received from Tiruchendur taluk, placewar; and

(*d*) the action taken on such applications?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No Viswakarma Associations have been registered under the Department of Industries, but 46 Industrial Co-operative Societies have been started for Viswakarmas.

(b) There are two industrial co-operative societies for Viswakarmas in Tiruchendur taluk, one at Sattankulam and the other at Kulasekarapatnam.

(c) & (d) No application for the formation of industrial co-operative Societies for Viswakarmas in Tiruchendur taluk was received.

*Palm-gur industries*

* 767 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த சமுதாய நலத் திட்ட, தேசிய விஸ்தரிப்பு பிளாக்கு களிலே Palm-gur-industries ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) மேற்கண்ட Palm-gur-industries மூலமாக எத்தனை பேர் களுக்குத் தொழில்கள் கிடைத்திருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement[a] showing the blocks in each district where Palm Gur Development Schemes are undertaken and the number of persons engaged in the industry in each block is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : ஸார், பனை வெல்லத்தை இயந் திரம் மூலமாக உற்புத்தி செய்வதற்கான சாதனங்கள் எந்தெந்த சொஸை டிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றித் தனி கேள்வி வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆற்காடு ஜில்லாவில் சுமார் 2 லட்சம் பனைமரங்களும், 20 ஆயிரம் மரமேறிகளும் இருந்தும்கூட அந்த ஜில்லாவில் ஒரு இன்டஸ்ட்ரிகூட இருப்பதாகத் தெரியவில்லை. அந்த மாதிரித் தொழிற்சாலை ஆரம்பிக்க யாருக்கும் பர்மிஷன் கொடுக்கவில்லையா ? அல்லது கொடுத்து தவருன முறையில் நடந்துகொண்டதால் ரத்து செய்யப்பட்டுவிட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பனை மரம் அதிகமாக இருந்தால் மட்டும் போதாது. இந்த மாதிரிப் பனை வெல்லம் செய்யும், தொழில் தெரிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாராவது முன் வந்தால் வட ஆற்காடு ஜில்லாவில் இந்தத் தொழிலைத் துவக்க ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : திருச்செந்தூர், திருநெல்வேலி, ஆகிய இடங்களில் பனை மரமும் அதிகமாக இருக்கிறது. பனை வெல் லம் செய்யும் தொழிலும் அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கு அந்தத் தொழிலை இன்னும் அதிகரிக்கச் செய்ய வசதி செய்து கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் முன்வந்தால் கவனிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : அரசாங்கம் அனுமதித்திருக்கிற பனை மரங்களுக்கும் அவர்கள் கணக்குப்படி அதற்கு வரவேண்டிய பனை வெல்லம் மிகக் குறைவாக வந்திருப்பதைப் பார்க்கும்போது அது தவருக— கள்ளாகப் பயன்படுத்தப்படுகிறது என்று தெரிகிறது. அவ்வாறு கள்ளாகப் பயன்படுத்தாமல் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது ?

[a] Printed as Appendix VI on pages 233-245 infra.



THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது உண்மைதான் பனை வெல்லம் அவ்வளவாகக் கொடுக்காமல் இருக்கலாம். நீராவாக விற்கப் படுகிறது. நீரா புளித்துவிட்டால் கள்ளாக மாறிவிடுகிறது. அவ்வாறு துஷ்பிரயோகப்படுத்துவதில்லை என்று சொல்லமுடியாது. இதைத் தவிர்க்க எல்லா முயற்சியும் செய்யப்படும்.

SRI T. VELUCHAMY : ஆலங்குளம் ப்ளாக்கில் கருப்பட்டி உற்பத்தி அதிகமாக இருப்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அந்த ப்ளாக்கில் நல்ல முறையில "பாம் கர் இன்டஸ்டரி" நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆலங்குளத்தில் எட்டு சொஸைடிகள் இருக்கின்றன என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கவனித்திருப்பார்கள். 1,109 பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது.

*Leprosy Sub-centre for Tiruchirappalli District*

* 768 *Q*.—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to open a leprosy sub-centre in the Tiruchirappalli district;

(b) if so, the cost thereof; and

(c) when it will begin to function?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes.

(b) Recurring—Rs. 48,000 per annum.

Non-recurring—Rs. 16,200 per annum.

(c) The Centre will start to function shortly, as soon as accommodation is secured.

SRI M. KALYANASUNDARAM : எந்த இடத்தில் இது நிறு வப்படும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை முதலில் அரிய லூரில் வைப்பதாக உத்தேசம் இருந்தது. அங்கு சரியான இடம் கிடைக்க வில்லை. இப்பொழுது பெரம்பலூரில் வைப்பதாக உத்தேசம்.

*Vaigai Project*

* 769 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of workers to be discharged on the completion of the Vaigai Project; and

(b) whether there is any proposal to provide alternate jobs or compensation for the workers to be discharged?

THE HON. SRI P. KAKKAN : (a) Four hundred and ninety-eight workers have been retrenched so far. About 312 more workers will be retrenched gradutlly as said when works are completed before March 1960.

(b) Instructions have been issued by the Chief Engineer for the payment of retrenchment compensation to the retrenched workers under the provisions of the Industrial Disputes Act, and

the action of the Chief Engineer (Irrigation) in this regard has been ratified by the Government. Action is also being taken with a view to absorb as many of the workmen as possible in other projects in this State.

SRI M. KALYANASUNDARAM : ஸார், ஒரு ப்ராஜக்டில் இருந்து இன்னொரு ப்ராஜக்டுக்கு மாற்றக்கூடிய சமயத்தில் முந்திய ப்ராஜக்டில் வேலை செய்த காலமும் சேர்த்துக் கணக்கிடப்படுகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : அப்படி ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : இவர்களை அடுத்தாற்போல் ஆரம்பிக்கப்படும் பரம்பிக்குளம் திட்டத்தில் எடுத்துக்கொள்ள முதலிடம் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : பரம்பிக்குளம் திட்டம் மட்டும் அல்ல. எங்கெங்கு திட்டங்கள் ஆரம்பித்து வேலைகள் நடக்கின்றதோ அங்கெல்லாம்கூட எடுத்துக்கொள்ளப்படுகிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : இது தவிரவும், எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ரிஜிஸ்டர் செய்துகொண்டிருப்பவர்களை ஆங்காங்கு இருக்கும்படியான வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறதா ? அவர்களுக் குப் பிரபரன்ஸ் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : இந்த வைகை ப்ராஜக்டில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களை குந்தா ப்ராஜக்டில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ஹைவேஸ் சீப் இன்ஜினீயரை கேட்டிருக்கிறோம். பரம்பிக்குளம் சீப் இன்ஜினீயரையும் கேட்டிருக்கிறோம். நெய்வேலியில் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டு மென்று அந்த மானேஜிங் டைரக்டரைக் கேட்டிருக்கிறோம். இப்பொழுது சொன்ன ஸ்கீம்களில் 16 பேர்களும் கட்டளை ஹைலெவல் கனலில் 25 பேர் களும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM : பத்துப் பன்னிரண்டு வருஷங் களுக்கும் அதிகமாகக்கூட அந்தப் ப்ராஜக்டில் வேலை செய்தவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஒரு ப்ராஜக்டில் இருந்து மற்றொரு ப்ராஜக்டுக்கு மாற்றும்போது தனி சீனியாரிடி லிஸ்ட் வைத்து சம்பளம் மற்றச் சலுகைகள் அனுமதிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : இது பற்றிப் பரிசீலனை செய்து தான் முடிவு செய்ய முடியும்.

*Panchayat Boards in South Arcot District*

* 770 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of Class I and Class II Panchayats in the South Arcot district; and

(*b*) the number of Panchayat Boards where seats have not been reserved for the Harijans?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) 19 Class I and 999 Class II panchayats.

(*b*) 388 (Class II panchayats).

*Temple jewels*

* 772 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the approximate value of jewels in temples in the State?



THE HON. SRI M. BHAKTAVATSALAM : Rs. 4,08,46,255 (rupees four crores, eight lakhs, forty-six thousand, two hundred and fifty-five only). The figure represents the value of jewels in temples where the total value of jewels is Rs. 3,000 and above.

SRI A. A. RASHEED : May I know whether cases of misuse of the jewels have been reported to the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Perhaps, Sir, there has been one or two cases.

SRI A. A. RASHEED : May I know in whose custody these jewels are kept?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : These are kept according to usage and custom and certain regulations. These are generally under the custody of the Executive Officers and Trustees and sometimes under the custody of the Archakas also.

SRI V. SUBBIAH : நமது ராஜ்யத்திலுள்ள தேவஸ்தானங் களில் அதிக மதிப்புள்ள நகைகள் உள்ள தேவஸ்தானம் எது என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி என் னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

SRI M. JAGANNATHAN : Is it a fact, Sir, that in some temples theft of jewels is taking place indiscriminately and what steps Government propose to take to prevent this?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot accept that thefts are taking place indiscriminately in several of the temples.

SRI M. K. SOMASUNDARAM : கோவில் நகைகளை எடுத்துத் துஷ்பிரயோகம் செய்கிறவர்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இடம் இருந்தால் க்ரிமி னல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இல்லாவிட்டால் டிபார்ட்மெண்டு நட வடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM . சில ஆலயங்களில் துஷ்பிரயோ கம் நடைபெற்றிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எந்த எந்த ஆலயங்களில் அப்படி நடைபெற்றது ? என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில ஆலயங்கள் என்று சொல்லவில்லை. ஒன்றிரண்டு என்றுதான் சொன்னேன். புரசவாக்கம் கங்காதரேஸ்வரர் கோயில் தர்மகர்த்தர் பேரில் அவ்வாறு புகார் வந்தது. கோர்ட்டிலேயே அதற்குத் தக்க நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, பக்தர்கள் விக்கிர கங்களுக்கு உயர்ந்த கல் பதிக்கப் பெற்ற நகைகளைக் கொடுக்கிறார்கள். ஆனால் தர்மகர்த்தர்கள் அந்த உயர்ந்த கல்லைப் பெயர்த்துவிட்டு குறைந்த மதிப்புள்ள கல்லைப் பதித்திருப்பதாக புகார்கள் வந்தன. அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடத்தில் அந்த மாதிரி புகார் வரவில்லை. அது பற்றிய தகவலும் என்னிடத்தில் இல்லை.

[13th March 1959

*Blood transfusion*

*773 Q.—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of cases in each of the Government hospitals where blood transfusion was given in 1956, 1957 and 1958 so far (year-war); and

(b) the quantity of blood given to patients in these years (year-war)?

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) & (b) A statement[a] is placed on the table of the House.

Sri K. SATTANATHA KARAYALAR: நம் ராஜ்யத்தில் ப்ளட் பாங்க் எத்தனை இருக்கின்றன ? அங்கெல்லாம் தேவைக்குத் தக்க அளவு ரத்தம் கிடைக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: இந்தக் கேள்விக்குப் பதில் கொடுக்கும்போதே ஒரு குறிப்பும் கொடுத்திருக்கிறேன். ஜில்லா தலை நகரங்களில் இருக்கிறது. மற்ற இடங்களிலும் இருக்கிறது. என்னுடைய குறிப்பில் பத்துப் பதினைந்து இடங்களில் இருப்பதாகச் சொல்லி இருப்பேன்.

Sri A. A. RASHEED: What was the amount spent by the Government in paying the doners of blood in the last three years?

The Hon. Sri M. A. MANICKAVELU: I cannot give the total amount spent but I can give the rate. The rate is Rs. 7 for the donor of blood and Re. 1 for refreshments.

*Child Welfare Centres in Coimbatore District*

*774 Q.—Sri P. G. MANICKAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-59-ம் வருஷத்தில், கோயம்புத்தூர் ஜில்லாவிலிருக்கும் சிசு சம்ரக்ஷணை சங்கங்களுக்கு உதவி அளிப்பதற்காகச் சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த சிசு சம்ரக்ஷணை சங்கங்களுக்கு எவ்வளவு ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) No amount has been allotted for the purpose.

(b) Does not arise, but maintenance grant is given.

Sri P. G. MANICKAM: ஏழை மக்களுக்கு இலவசமாக சப்ளை செய்யப்படுவதற்காக அமெரிக்காவில் இருந்து அனுப்பப்படும் பால் பவுடர்களையாவது இப்பேர்ப்பட்ட சிசு சம்ரக்ஷணை நிலையங்களுக்கு வழங்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: அப்படியும் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாதம் 72 ஆயிரம் ரூபாய் அளவுக்கு இலவச சப்ளைக்காக மானியமும் கொடுக்கப்படுகிறது.

a Printed as Appendix VII on page 286 infra.



13th March 1959]

Sri K. B. S. MANI: இம்மாதிரி வெளி நாட்டிலிருந்து ரெட் க்ராஸ் மூலமாகவும், லூதரன் மிஷின் மூலமாகவும், சப்ளை செய்வதற்குப் பால் பவுடர்கள் அனுப்புகிறார்கள். நல்ல முறையில் அவை விநியோகப்படுவதில்லை. அதை அரசாங்கம் கண்காணித்து, இப்படி துர்விநியோகம் செய்யப்படுவதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: அவை நல்ல முறையில் நல்ல சாதனங்களின் வழியாகத்தான் விநியோகிக்கப்படுகிறது. இரண்டொரு இடத்தில் துர்விநியோகம் ஆகிறது என்றால், இதர துறையில் நடப்பது போலத்தான் ஆகும் என்று நினைக்கிறேன்.

*Fishermen Co-operative Societies*

*775 Q.—Sri M. JAGANNATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have finalised their decision over the resolutions passed at the Fishermen Co-operative Societies Conference held at Kumbakonam on 28th February 1958 protesting against the amendment of G.O. No. 200, Development, dated 16th January 1950; and

(b) if not, the reasons for the delay?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: (a) The Government have finalised their decision and have issued necessary orders directing the Collectors to lease the inland fisheries from the year 1959 onwards to the Fishermen Co-operative Societies on the average of the last two years, accepted bid amounts after examining the suitability and financial position of the societies.

(b) In view of the answer to question (a) this question does not arise.

*Lands brought under cultivation*

*776 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state the extent of lands in holdings left uncultivated brought under cultivation in the Madurai district during the Second Five-Year Plan period under the Madras Land Utilization Order?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: 180 acres.

*Dyeing and Designing Centre for Tiruvannamalai*

*777 Q.—Sri V. K. KOTHANDARAMAN: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) துணிகளுக்கு சாயமூட்டுதல், அச்சடித்தல் தொழிலை வடாற்காடு ஜில்லா, திருவண்ணாமலையில் ஆரம்பித்தாகிவிட்டதா ?

(ஆ) இல்லையென்றால், ஏன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) There is no such proposal with Government.

(b) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள்—அதாவது 58-ம் ஆண்டிலே வடாற்காடு ஜில்லாவில் திருவண்ணுமலையில் சாயம் போடும் தொழிற்சாலை ஆரம்பிப்பதாக இருந்தது. அது போன்று இப்போது பிரபோசல் இல்லையென்று சொன்னுல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த வருஷத்தில் இருக்கிற பிரபோசலைப் பற்றி நான் பதிலளித்தது. செய்யாறு திருவத்திபுரத்தில் ரூ. 7 ஆயிரம் காப்பிடல், ரூ. 13 ஆயிரம் ரெக்கரிங் ஆகக்கூடிய திட்டம் எடுத்துக்கொள்வதாக இருந்தது, நிதி இல்லாத காரணத்திஞல் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : 58-வது ஆண்டிலேயே அது ஆரம்பிக்கப்படவேண்டுமென்று போடப்பட்ட திட்டம் அது. ஆகையால் அதை இந்த வருடத்திலாவது கண்டிப்பாக ஆரம்பிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த வருஷத்தில் ஆரம்பிப்பதற்கு நிதி இல்லையென்று சொன்னேன். நிதி நிலைமையை ஒட்டித்தான் இது எல்லாம் கவனிக்கப்படும்.

*Nanjilnad Project*

* 778 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether, under the National Water-supply and Sanitation Project, Nanjilnad Project was included under the Second Five-Year Plan;

(*b*) if so, whether this Project was transferred to the Madras State with the reorganization of the States;

(*c*) what work was undertaken in Nanjilnad after 1st November 1956;

(*d*) what the total amount originally allotted was; and

(*e*) what the amount spent so far is?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The scheme was wound up by the erstwhile Travancore-Cochin State when drainage works were completed.

(*c*) The question of resuming and continuing the unimplemented part of the scheme is under consideration.

(*d*) Rs. 3 lakhs.

(*e*) The amount spent by the erstwhile Travancore-Cochin State on the works under this scheme was Rs. 50,000.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த திட்டத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் மதிப்பிட்டு, அதில் அந்த அரசாங்கமே 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறது. அதன் பிறகு, அந்தப் பொறுப்பு நம்மிடத்தில் வந்த பிறகு ஏன் கடந்த மூன்று வருஷ காலமாக அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளாமல் காலதாமதம் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்று சொல்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தத் திட்டத்தில் டிரெய்னேஜ் மாத்திரம் 50 ஆயிரம் ரூபாய் செலவில் அவர்கள் பூர்த்தி செய்திருக்கிருர்கள். மற்றதை நாம் நடத்தவேண்டும். 56-ல்



எடுத்துக்கொள்ள முடியாமல் ஏன் விட்டு விட்டோம் என்று தெரியும். மீண்டும் இப்போது குடிதண்ணீர் விஷயமாகத்தான் அதை எடுத்துக் கொள்வது ஆலோசனையில் இருக்கிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether the scheme was wound up or transferred to the Kerala State in the Neyattinkara taluk? Will the Government make efforts to see that the scheme is continued, even if there is need by making representations to the Central Government also?

THE HON. SRI M. A. MANICKAVELU : They are examining the question of completing the interrupted portion of the scheme. On account of the impending change in the State set up the Travancore-Cochin State stopped the scheme at that level. Now we are considering as to how best to continue it.

SRI K. SATTANATHA KARAYALAR : அந்த ராஜ்யப் பகுதி நம் ராஜ்யத்தோடு இணைந்து, அந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டிய பொறுப்பு நம்முடையதாக மாறி கடந்த 3 ஆண்டுகள் ஆகியும் கூட அந்தத் திட்டம் ஏன் இதுவரையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தப் பொறுப்பை உணர்ந்துதான் இப்போது பரிசீலனை செய்து வருகிறோம்.

SRI T. T. DANIEL : Is it a fact, Sir, that many of the records connected with the project were not forwarded by the Kerala Government to this State Government and is that the reason why this Government are not able to proceed with the work?

THE HON. SRI M. A. MANICKAVELU : Not only for this scheme, Sir, for all other schemes and other things also; that is one of the main causes why we are not immediately implementing the scheme, namely, the want of records and other information.

SRI N. R. THIAGARAJAN : என்னுடைய பாண்டிய நாட்டிற்குள் 9
இப்பொழுது புதிதாக நாஞ்சில் நாடு என்று ஒரு புது நாடு a.m.
தோன்றியிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று சர்க்கார் சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லையே.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether any investigation was made with regard to the water-supply aspect of the scheme just previous to the reorganization of the State?

THE HON. SRI M. A. MANICKAVELU : That point is met by the question put by Mr. T. T. Daniel.

*Family Planning*

* 779 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware of cash award being granted by one of the Tamil Dailies in the State to families of more than ten children; and

(*b*) if so, the adverse effect this award has on the Family Planning Scheme of the Government?

[13th March 1959

MR. SPEAKER : Hon. Members must put questions which are within the purview of the Minister to answer. I admitted the main question because I did not know whether the Minister was concerned with it or not. But once he says it is not his concern, how can we ask further questions? If the hon. Member asks whether the Government will consider the question of recommending import of small cars to the Union Government, it is all right. But he cannot ask about prices and all that.

SRI K. VINAYAKAM : Is the Minister at least personally aware?

MR. SPEAKER : The Hon. Minister's personal awareness has nothing to do with the Assembly. It is the same question as that put by the hon. Member Mr. Rasheed.

SRI K. VINAYAKAM : Is he aware that prices of small cars are daily going up beyond the catalogued price and they are sold at blackmarket prices?

THE HON. SRI R. VENKATARAMAN : No representations have been received by this Government in this behalf.

MR. SPEAKER : Questions are over.

**[Note—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

II.—PRIVILEGE MOTION *RE* A REPORT IN THE 'DINAMANI'.

MR. SPEAKER : The hon. Member, Sri K. Anbazhagan has brought to my notice that a report about the proceedings of this House in the 'Dinamani', dated 11th March 1959 is not a true report. He has requested me to permit him to raise the issue as one of breach of privilege of the Members of this House. He says it has no relation to the actual proceedings of the House. I have not, however, had a chance of sending for the Editor to find out the true state of affairs. Therefore, I shall postpone my ruling to tomorrow. I shall take up this question tomorrow.

SRI N.R. THIAGARAJAN : இன்றைக்கு சரியான நியூஸ் போட்டிருக்கிறார்களே ?

MR. SPEAKER : How does the hon. Member know what has constituted breach of privilege ? நான் பிரிவிலெஜ் பிரச்னை என்று சொன்னேனே தவிர எந்த பிரிவிலெஜ் பிரச்னை என்று சொல்லவில்லையே. அதற்குள்ளாக எப்படி மாற்றிப் போட்டு விட்டார்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்ல முடியும்? நாளைக்கு அவரைக் கேட்கிறேன். என்ன என்று பரிசீலனை செய்து நாளைக்குச் சொல்கிறேன் என்று தான் நான் சொன்னேன்.

SRI K. VINAYAKAM : இந்த மாதிரி விஷயங்களை சபாநாயகர் அறையிலேயே எடுத்துக்கொள்வதாயிற்றே, இதை சபையில் கொண்டு வரவேண்டியதன் காரணமென்ன ?

SRI K. ANBAZHAGAN : **On a point of order, Sir,** ஒரு பிரிவிலெஜ் பிரச்னையை—உரிமைப் பிரச்னையை—எழுப்பும் போது சட்ட மன்றத்தில் எடுத்துக்கொள்ளாமல் ரூமிலே நடக்க வேண்டுமென்று சொல்வது சட்ட மன்ற ஒழுங்குக்கு விரோதமானது என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



13th March 1959]

MR. SPEAKER : நான் உங்களைத் தானே ஸப்போர்ட் செய்தேன். **I supported you. This is the place where you can raise it. I will give my ruling to-morrow.**

III.—GOVERNMENT MOTION *RE* ELECTION OF MEMBERS TO THE COMMITTEE OF PRIVILEGES FOR THE FINANCIAL YEAR 1959-60.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'That, with reference to rule 178 of the Madras Assembly Rules this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fifteen mebers to be members of the Committee of Privileges for the financial year 1959-60.

The motion was put and carried.

MR. SPEAKER : "In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. on Monday, the 16th March 1959, as the time within which nomination papers of candidates for election to the Committee of Privileges should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary. 9 a.m.

The nomination papers will be taken up for scrutiny at 3 p.m. on Monday, the 16th March 1959. I also fix 11 a.m. on Tuesday, the 17th March 1959 as the last hour and date for the withdrawal of candidature

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely 15, a poll will be taken on Wednesday the 18th March 1959 between the hours of 9 a.m. and 1 p.m."

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959-60—*cont.*

(1) DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

(2) DEMAND XI—ELECTIONS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,02,67,100 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff.'

MR. SPEAKER : I understand that the cut motion of the hon. Member Sri M. Kalyanasundaram, is being supported by the Opposition. I call upon Sri Kalyanasundaram to move his cut motion.

[13th March 1959

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

'That the allotment of Rs. 1,02,67,100 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff, be reduced by Rs. 100.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 16,96,700 under Demand XI—Elections.'

MR. SPEAKER : I understand that the Opposition Parties have agreed to support the cut motion of the hon. Member. Sri M. Jagannathan. Now, Sri Jagannathan will move his cut motion.

SRI M. JAGANNATHAN : Sir, I move—

'That the allotment of Rs. 16,96,700 under Demand XI—Elections—be reduced by Rs. 100.'

MR. SPEAKER : Now the Demands and the cut motions are before the House for consideration. The hon. Member. Sri Kalyanasundaram will initiate the discussion and the hon. Member, Sri Anbazhagan will speak before the Hon. Minister replies. I have allotted fifteen minutes each for Sri Kalyanasundaram and Sri Anbazhagan. I think 45 minutes would be enough for the Hon. Minister to reply.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, கடிதப் போக்குவரத்தில் ஏற்படும் தாமதம் சம்பந்தமாக ஒரு வெட்டுப் பிரேரபணை பிரேரேபிக்க வேண்டுமா என்று தோன்றக்கூடும். கடிதங்கள் எழுதுவதில் ஏற்படும் தாமதம், ஏதோ, சர்க்காரின் திறமைக் குறைவைக் காட்டவில்லை ; சில உள் விஷயங்கள் அதிகமாக இருப்பதால்தான் இவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத் தான் நான் இந்த வெட்டுப் பிரேரணையை இந்த ரூபத்தில் கொடுக்க நேர்ந்தது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காலதாமதம் ஏற்படுவதால் மக்களின் பல பிரச்னைகள் ஒத்திப்போடப்படுகின்றன. விரைவாக முடிவு எடுக்க முடியாமல் போகிறது. அப்படி ஏதாவது முடிவு எடுக்கப்பட்டாலும்கூட எந்த அங்கத்தினர்கள் கடிதங்கள் எழுதினர்களோ அவர்களுக்கு அது சம்பந்தமாக பதில் எழுதப்படுவதில்லை ; "இல்லை" என்ற பதில்கள் மட்டும் அநேகமாக வந்து விடுகின்றன. நடவடிக்கை எடுத்தால் பதில் எழுதுவதில்லை. அதற்குக் காரணம் என்ன? அங்கத்தினர்கள் குறிப்பிட்ட விஷயத்தில் ஏதாவது உண்மை இருந்து அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், அதைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட அங்கத்தினர்களுக்கு பதில் எழுதுவார்களானல் அதனல் அந்த அங்கத்தினரின் தொகுதிக்கோ அவர் சார்ந்திருக்கும் கட்சிக்கோ அனுகூலம் ஏற்பட்டு விடும் என்ற காரணத்தால் பதில் எழுதாமல் விட்டு விடுகிருர்களோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஆனல் சில பிரச்னைகளில் சர்க்கார் எவ்வளவு துரிதமாக முடிவெடுத்திருக்கிருர்கள் என்பதைப் பார்க்கும்போது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆகையால் தான் சர்க்கார் திறமைக் குறைவால் கஷ்டப்படவில்லை என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். உதாரணமாக நகரசபைத் தேர்தல்கள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. நகரசபைத் தேர்தல்களுக்கு முன்பு புதியமுறையில் வார்டு பிரிவினைகள் செய்ய வேண்டுமென்ற யோசனைகள் சர்க்காருக்கு வந்திருக்கின்றன. அவைகளின் பேரில் சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை.



13th March 1959] [Sri M. Kalyanasundaram]

சர்க்கார், பழைய முறையிலேயே இந்தத் தேர்தல்கள் நடக்கட்டும் என்று விட்டுவிட்டார்கள். ஆனல் திருச்சி போன்ற நகர சபைகள் சம்பந்தப்பட்ட வரையில் மட்டும் தேர்தல் நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு உத்திரவு போட்டிருக்கிருர்கள். அந்த உத்திரவின்படி அங்கே உள்ள 33 வார்டுகளும் பிரித்து புதிய முறையில் அமைக்கப்படுகின்றன. ஒரு வார்டு கூட பழைய முறையில் வைக்கப்படவில்லை. இவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய காரணம் என்ன? மற்ற விஷயங்களில் நிராகரிப்பைச் செய்துவிட்டு இந்த ஒரு நகரசபை விஷயத்தில் மாத்திரம் இவ்வளவு கவனம் செலுத்தவேண்டிய அவசியம் என்ன என்று கவனிக்கும்போது, சாதாரண நிர்வாகத் தேவைகளுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன என்ற முடிவிற்கு நான் வருகிறேன் என்பதை இந்த சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேர்தல்கள் விஷயத்தில் ஆட்சியாளர்கள் தங்கள் கட்சி நலனுக்காக சர்க்கார் வசதிகளை பயன்படுத்தக் கூடாது. கனம் அமைச்சர்கள் தங்கள் கட்சிப் பிரசாரத்திற்குப் போகட்டும், வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. கனம் அமைச்சர்கள், காங்கிரஸ் தலைவர்கள் என்ற முறையில் பிரசாரம் செய்யட்டும், கூட்டங்கள் போடட்டும், எதிர்க் கட்சிகள் செய்யும் தவறுகளை எடுத்துச் சொல்லட்டும், தாங்கள் செய்திருக்கும் சேவைகளைப் பற்றிப் பேசட்டும். அவைகளையெல்லாம் வரவேற்கலாம். ஆனல் இவர்கள் முனிசிபல் தேர்தல்கள் நடைபெறக் கூடிய சமயத்தில் முனிசிபாலிடிகளுக்குச் சென்று அங்கே முனிசிபல் நிர்வாக சம்பந்தமான காரியங்களில் கலந்துகொள்வது, முனிசிபல் நிர்வாக சம்பந்தமான ஸ்தாபனங்களுக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவது, குழாய்களைத் திறந்து வைப்பது, இவைகள் போன்ற காரியங்களைச் செய்வது, வோட்டர்களுடைய எண்ணங்களை காங்கிரஸ் சார்பாக—ஒரு கட்சியின் சார்பாக—திருப்பி விடுவதற்காகச் செய்யப்படும் ஒரு மறைமுகப் பிரசாரம். இதில் சர்க்காரின் நிர்வாக வசதிகளையும் அதிகாரங்களையும் உபயோகிப்பது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்பதை இவர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். திருச்சி முனிசிபல் தேர்தல் 30-ம் தேதி நடக்கவிருக்கிறது. நமது கனம் முதல் அமைச்சர் 25-ம் தேதி அங்கே சென்று அங்கே ஒரு ரிஸர்வாயர் கட்டுவதற்கு அஸ்திவாரக்கல் போடப் போகிருர். இதை இரண்டு மாதங்களுக்கு முன்பு செய்திருக்கலாம், அல்லது தேர்தலுக்குப் பிறகு செய்யலாம். இதையெல்லாம் பார்க்கும்போது, சர்க்கார் வேண்டுமென்று, முனிசிபல் தேர்தல்களில் தாங்கள் எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்று, தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிருர்கள் என்று தான் நான் நினைக்கிறேன். ஒரு சமயம் ஸ்ரீரங்கத்தில் பேசியபோது கனம் உள்நாட்டு அமைச்சர், எதிர்க் கட்சிகளுக்கு வோட்டுப் போட்டால் என்ன பிரயோஜனம் என்று கேட்டதாக நான் கேள்விப்படுகிறேன். தாம் அப்படிப் பேசவில்லை என்று அவர் சொன்னல் எனக்கு ரொம்ப சந்தோஷம். நடை முறை எப்படி இருக்கிறது? டாக்டர் மதுரம் அங்கே எதிர்க்கட்சி சேர்மனக இருந்து வந்திருக்கிருர். அவர் ஒரு அறிக்கை விட்டிருக்கிருர். கனம் மந்திரிக்கு அதில் ஏதாவது சம்பந்தம் உண்டா என்று அறிய விரும்புகிறேன். காங்கிரஸில் சேர்ந்திருந்தால் தான் சர்க்காரின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஏதாவது காரியங்கள் நடக்கும் என்பதால் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸில் சேர தாம் தீர்மானித்திருப்பதாக அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

MR. SPEAKER : How is the hon. Member in order in referring to such matters? He is discussing about a thing which the Hon. the Chief Minister is going to do on the 25th instant. That cannot be a matter for discussion here. He may not do it. Therefore, the hon. Member should not refer to a thing which may happen in future.

Secondly he cannot censure the Government for a thing which some individual Member did.

**Sri M. KALYANASUNDARAM :** இந்த இரண்டுக்கும் சம்பந்தம் இல்லாவிட்டால் நான் இதைப் பற்றி இங்கே பேச வேண்டிய அவசியமே இல்லை. சர்க்கார் போட்ட உத்தரவில் நிர்ப்பந்தம் கொடுத்ததன் காரணமாகத் தான் அவர் அவ்வாறு அறிக்கை விட நேர்ந்திருக்கும் என்பது என் அபிப்பிராயம். தாம் 25-ம் தேதி அங்கே போகவில்லை என்று கனம் முதல் அமைச்சர் சொல்லி விடட்டுமே !

**The Hon. Sri K. KAMARAJ :** நான் அங்கே 25-ம் தேதி போகப் போகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM :** தாம் 25-ம் தேதி அங்கே செல்லப்போவதாக இப்போதுகூட கனம் முதல் அமைச்சர் சொல்கிறார்.

**Mr. SPEAKER :** அவர் இப்போது அவ்வாறு சொன்னால்கூட அவர் அன்று அங்கே செல்லாவிட்டால் என்ன செய்ய முடியும்? The hon. Member should not refer to a thing which may happen in future.

**Sri M. KALYANASUNDARAM :** கனம் அமைச்சர்கள் தேர்தல் காலத்தில் ,இந்த மாதிரியான நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு தேர்தல் பிரசாரத்திற்கு சர்க்கார் வசதிகளையும் சர்க்கார் அதிகாரங்களையும் பயன்படுத்துகிறார்கள் என்பதை இவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நிர்ப்பந்தம் ஒருபுறம் இருக்கட்டும். எல்லா வசதிகளையும் தாங்கள் செய்துகொடுப்பதாக மக்கள் கருத வேண்டும், மக்கள் மனதில் அந்த எண்ணத்தை உண்டாக்கி தங்கள் கட்சிக்கு வோட்டுச் சேகரிக்க வேண்டும் என்பதற்காக இவர்கள் தேர்தல் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்கள் ; தேர்தல் காலத்தில் இத்தகைய வேலைகளை வைத்துக்கொள்ளுகிறார்கள். இன்னும் சில இடங்களில் நமது மதிப்பிற்குரிய மராமத்து அமைச்சர் தாம் செல்லும் இடங்களில் ஹரிஜனங்களுக்கு நிலம் வாங்கிக்கொடுக்கும் பிரச்னைகளில் ஒரு நிர்ப்பந்தத்தைக் கொடுக்கிறார். நான் ஒரு அதிகாரியைப் பார்த்து அவரிடம் சில பிரச்னைகளைப் பற்றி "ரெப்ரெஸென்டேஷன்" பண்ணினேன். நான் எப்போதுமே, வழக்கமாகவே, "ரெப்ரெஸன்டேஷன்ஸ்" செய்து வருகிறேன். அவர் "நான் தேர்தல் காலத்தில் எந்தப் பிரச்னையிலும் தலையிட மாட்டேன்" என்று சொன்னார். "நான் பிரச்னையை கவனித்து நடவடிக்கை எடுத்தால் அது உங்களுக்கு அனுகூலமாக இருக்கும் அல்லது இன்னொருவருக்கு அனுகூலமாக இருக்கும். நான் இவருக்காக இதைச் செய்தேன் என்றோ, அவருக்காக இதைச் செய்தேன் என்றோ பிறர் சொல்லக்கூடும். ஆகவே தேர்தல் காலத்தில் நான் எந்தப் பிரச்னையிலும் தலையிட மாட்டேன்" என்று அவர் சொன்னார். இதற்கு நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். ஆனால், எல்லா அதிகாரிகளும் இப்படி இருக்க வேண்டும் என்றும் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில், 11-வது வார்டில் அங்குள்ள ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. காங்கிரஸ் கொடியைப் போட்டு வைத்திருக்கும் "டிப்ரஸ்ட் கிளாஸ் லீக்"-ஐ சேர்ந்தவர்களுக்குத் தான் வீடுகள் கிடைக்கும், அதில் சேராதவர்களுக்கு வீடு கிடைக்காது என்று அமைச்சர் அந்தக் கூட்டத்தில் பேசியதாக அங்குள்ள ஹரிஜன் மக்கள் என்னிடம் வந்து சொன்னார்கள். அது சம்பந்தமாக அங்கே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. டிப்ரஸ்ட் க்ளாஸ் லீக்-ஐ சேர்ந்தவர்கள் என்றும், அதைச் சேராதவர்கள் என்றும் பிரித்து வைக்கப்பட்டு, அதில் சேராதவர்களுக்கு வீடுகள் கொடுப்பதில்லை என்ற புகார் இருக்கிறது.

**The Hon. Sri P. KAKKAN :** சமீபத்தில் நான் திருச்சிக்குப் போயிருந்தேன். அங்கே என்னிடம் சொன்னார்கள், கல்யாணசுந்தரம் அங்கே போய் தான் சொல்கிற ஆட்களுக்குத் தான் வீடுகள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி தகராறு கிளப்பியிருப்பதாகச் சொன்னார்கள்.



**Mr. SPEAKER :** The hon. Member must not refer to those matters.

**Sri M. KALYANASUNDARAM :** அந்தத் தெருவில் இருக்கிறவர்களுக்கு வீடுகள் கொடுக்காமல் ஊரில் இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இதைச் சொல்லும்போது நான் விசாரணைக்குத் தயாராயிருக்கிறேன். நான் சொல்பவர்கள் என்றோ அல்லது நீங்கள் சொல்கிற ஆட்களுக்கு என்றோ இல்லை. அங்கு இருப்பவர்களுக்கு வீடு கொடுக்காமல் எங்கெங்கேயோ வேலை பார்த்து வருகிறவர்களுக்கு வீடு கொடுக்கப்படுகிறது.

**Mr. SPEAKER :** The hon. Member should not put the House or the Speaker in a very difficult situation in deciding who is telling the truth. He must refer to a thing that has taken place and not to things which are likely to take place. How am I going to decide who is correct? The hon. Member is a seasoned legislator and he should not drag in here municipal politics. He can talk about the work of the Ministers, but cannot make allegations about something which happened in some municipality. How can this House decide and how can I decide about those things? Let him please be careful in what he says?

**Sri M. KALYANASUNDARAM :** அதைத்தான் நான் அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்தேன். நான் சொல்கிறவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. தகராறு இருக்கிற இடங்களில் இரு சாராரையும் சேர்த்து வைப்பதில் எனக்கு அக்கறை உண்டு. என் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு கொடுககவேண்டும், மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அது பற்றிய விசாரணைக்கு நான் தயாராயிருக்கிறேன். என்னுடைய கவனக் குறைவால் எந்தவித தவறும் செய்து விட்டதாகத் தெரியவில்லை. இன்ன இடத்தில் இன்னார் இன்னின்ன மாதிரி பேசியிருக்கிறார்கள் என்று தான் குறிப்பிட்டேனே தவிர, கண்மூடித்தனமாக ஒரு குற்றச் சாட்டையும் நான் சொல்லவில்லை. உண்மையைச் சொல்லும்போது அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. பொறுமையாக இருந்து இவைகளுக்கு பதில் சொல்லும்போது பதில் சொல்லுவதற்குள்ள பொறுமை அமைச்சர்களுக்கு இல்லையே என்று தான். . .

**The Hon. Sri C. SUBRAMANIAM :** Sir, when personal allegations are made, I think it should be refuted then and there. The hon. Member cannot expect me to say in my reply what Mr. Kakkan said there. Even here, it is not within his personal knowledge; he also says that somebody came and told him. Who is that somebody and what that somebody said, we do not know. This is not a court of law, but still, there should be some limit. Somebody might have made representations according to his own light and that should not be made the basis of attack by the hon. Member.

**Mr. SPEAKER :** I entirely agree with that. I request the hon. Member to proceed on those lines and refer to something which is on record.

**Sri M. KALYANASUNDARAM :** அப்படியானால் இந்தச் சபையில் எந்த விஷயத்தைப் பற்றியும் பேச முடியாது. மந்திரிகள் பேசும் கூட்டங்களுக்கெல்லாம் நாங்கள் நேரில் போய்க் கேட்கவேண்டும் என்று சொல்லுகிறீர்களா? கலெக்டருக்கு எழுதியனுப்பியிருக்கும் விஷ

[Sri M. Kalyanasundaram] [13th March 1959

யத்தைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அந்தத் தெருவில் இருப்பவர்கள், நான் மேற்குறிப்பிட்ட கழகத்தில் சேராதிருக்கிற காரணத்தினால் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதைத் தான் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Now the hon. Member says that it is on record, and it has been sent to the Collector. Is it stated that only persons belonging to this Depressed League should alone be preferred and nobody else should be given? Is it on record?

SRI M. KALYANASUNDARAM : கலெக்டருக்கு அப்படி 20 பேர்கள் கையெழுத்து போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் நாங்கள் குடியிருக்கிறோம், இருந்தும் அந்தக் கழகத்தில் சேராதவர்களுக்கு கொடுக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டதாக புகார் எழுப்பப்பட்டிருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : Now he goes back on that. The charge was that the Minister wanted that only Depressed Class League members should be preferred and that he made an announcement of it. Now he goes back and says that somebody else complained on such a way to the Collector. Really, it is not fair. I do not think the hon. Member is justified in making such allegations on the basis of some complaints made by some persons.

MR. SPEAKER : In the interest of fair debate, the hon. Member should not attack the Hon. Minister on that point.

SRI M. KALYANASUNDARAM : ஒழுங்கீனமான காரியத்தை நான் என்ன செய்து விட்டேன்? நான் கேள்விப் பட்டதைச் சொல்லக் கூடாதா? அமைச்சர்கள் சொன்னதை நான் இங்கு சொல்லக் கூடாதா? எதிர்க்கட்சியினர் பொதுக்கூட்டங்களில் சொல்வதைப்பற்றி அமைச்சர்கள் தாக்கிப் பேசவில்லையா? நிர்வாக அதிகாரத்தை, தங்களுக்குள்ள அதிகாரத்தை உபயோகப்படுத்திக்கொண்டு அமைச்சர்கள் தங்கள் இஷ்டம்போல் செய்வது சரியல்ல என்பதை நான் எந்த ரூபத்தில்தான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவது ?

MR. SPEAKER : I agree. A certain amount of latitude must be given, but there must be a limit. The hon. Member cannot make allegations against a Minister and there is no need for that. He should go on something which is on record.

SRI M. KALYANASUNDARAM : இதையெல்லாம் அலிகேஷன்ஸ் என்று சொன்னால், இந்த சபையில் நிர்வாகத்தைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ, அதாவது அமைச்சர்களின் நடவடிக்கைகள் பற்றியோ அல்லது எந்த இலாகாவைப் பற்றியுமோ பேசவே முடியாது. தேர்தல்கள் நல்ல முறையில், ஒழுங்காக நடைபெறவேண்டும், அமைச்சர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதினால் அவர்களது பொறுப்பு இதில் அதிகம் இருக்கிறது என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர, விரும்புகிறேன். பல பஞ்சாயத்து . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member seems to think that because Election is included here (in the Demand)—Election here is with reference to the General Elections to the Assembly and the Parliament, etc.—to speak of Panchayat elections



13th March 1959] [Sri C. Subramaniam]

and municipal elections is not correct; that should be done under Local Administration and this is not the occasion for that. Anyhow, if he wants to discuss our conduct with reference to municipal and panchayat elections, generally about the conduct of municipal elections, then I should tell the hon. Member that I will not be in a position to answer them.

MR. SPEAKER : I should like to know his (Mr. Kalyanasundaram's) view before I give a ruling.

SRI M. KALYANASUNDARAM : பஞ்சாயத்து, நகர சபைத் தேர்தல்களைப் பற்றியல்ல நான் பேசுவது, அந்தத் தேர்தல்கள் நடக்கக்கூடிய காலத்தில் அமைச்சர்கள் நடந்து கொள்ளக்கூடிய விதம் பற்றியும், அவர்களின் நடவடிக்கைகளைப் பற்றியும்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

MR. SPEAKER : That is all right. Let us see. Let the hon. Member proceed.

SRI M. KALYANASUNDARAM : மந்திரிகள் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டிருந்து, தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமலிருக்கவேண்டுமென்று நான் சொல்வது அவர்கள் மனதை உறுத்துகிறது. நான் சொல்வதை பொறுமையாகக் கேட்டால், நாட்டு மக்களுக்கு நன்மையாக இருக்கும்.

MR. SPEAKER : Not only Ministers, I also feel like that sometimes. I am not interested in municipal elections, though I am raising that point. I am not interested in that. When the hon. Member carries on a debate, it should be at some level. It must look fair even to one who is not interested in municipal elections.

SRI M. KALYANASUNDARAM : மந்திரிகளுக்கும் நகரசபைத் தேர்தல்களில் அக்கறையுண்டு, எதிர் கட்சியினராகிய எங்களுக்கும் அதில் அக்கறையுண்டு. சபாநாயகர் அவர்களுக்கு அதில் அக்கறையில்லாமல் இருக்கலாம். இதன் முக்கியத்துவம் உங்களுக்குப் புரியாமல் இருக்கலாம்.

MR. SPEAKER : That allegation would not be correct. I hope the hon. Member will withdraw that.

SRI M. KALYANASUNDARAM : என்ன ?

MR. SPEAKER : The hon. Member said that the Speaker did not understand the importance of this. I do not think it is correct.

SRI M. KALYANASUNDARAM : நான் அப்படி சொல்லவில்லை. நான் சொல்லும் குற்றச்சாட்டுகளின் முக்கியத்துவத்தை. . .

SRI R. CHIDAMBARA BHARATHI : On a point of order, Sir.

(Sri V. K. Kothandaraman rose.)

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாண சுந்தரம் அல்லவா பேசுகிறார் ? ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் உட்காரலாம்.

SRI R. CHIDAMBARA BHARATHI : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், கனம் அங்கத்தினர் அவர்கள் முனிஸிபல் எலெக்ஷனில் எங்களுக்கும் அக்கறையுண்டு, எதிர் கட்சியினருக்கும் அக்கறையுண்டு என்று சொன்னார்கள். அதோடு ஸ்பீக்கர் அவர்கள். . .

**Mr. SPEAKER** : அவர் இல்லை என்று சொன்னால் அப்புறம் என்ன இருக்கிறது.

**Sri R. CHIDAMBARA BHARATHI** : நான் சொல்லப்போவது வேறு............

**Mr. SPEAKER** : அது, நீங்கள் சொல்லக்கூடிய அர்த்தமாக யிருக்கலாம். அவர் இல்லையென்று சொன்னால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

9-30 a.m. **Sri M. KALYANASUNDARAM** : நான் நகரசபைத் தேர்தல் சம்பந்தமாக மந்திரிகளுடைய நடவடிக்கைகளைப்பற்றி பேச ஆரம்பித்த உடனேயே இவ்வளவு உஷ்ணம் கிளம்பியதால் நான் சொல்லக்கூடிய விஷயங்களில் உண்மை இருக்கிறது என்பது நிரூபிக்கப்படுகிறது. அது போகட்டும். மற்ற விஷயங்களில் அமைச்சர்களுடைய நடவடிக்கைகளை பார்ப்போம். இதிலேயே எனக்கு ஐந்து நிமிஷங்கள் ஆகி விட்டன. ஆகவே, தயவு செய்து எனக்கு இன்னும் ஐந்து நிமிஷம் கூட கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவுப் பிரச்னை பற்றி சில விஷயங்களை அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். திருச்சி, தஞ்சை, மதுரை, சேலம் ஆகிய ஜில்லாக்களிலிருந்து எனக்கு செய்திகள் வந்திருக்கின்றன. அங்கெல்லாம் நெல், அரிசி இப்பொழுது கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மதுரை தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு அரிசி கிடைக்கவில்லை. நமது அமைச்சர்களிடமிருந்து 10 நாட்களுக்குத் தேவையான அரிசிக்கு அனுமதி வாங்கிக்கொண்டுபோய், 2 நாட்களுக்குத் தேவையான அரிசி கூட வாங்கமுடியவில்லை. சேலம் மாக்னிஸைட் தொழிலாளர்களுக்கும் அரிசி கிடைக்காமல் முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே பல தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. தஞ்சையில் அரிசி, நெல் மில்களுக்கு வருவது இல்லை. வியாபாரிகளுக்கும் கிடைப்பதில்லை என்ற புகார் வந்திருக்கிறது. நிலப் பிரபுக்கள் தான் அதிகமாக தேக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இம்மாதிரி கூட்டுறவு சங்கங்களுக்கு அரிசி கிடைப்பதில்லை என்பது பற்றி தகவல் வந்திருக்கிறது. அவசியமானால் வியாபாரிகளிடமிருந்தாவது, "ப்ரொடியூஸர்களிடமிருந்தாவது" "ரெகுவிஸிஷன்" செய்து இந்த சங்கங்களுக்கு வாங்கிக்கொடுக்கவேண்டுமென்று கலெக்டர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

**Sri M. KALYANASUNDARAM** : அந்த உத்தரவு எப்பொழுது பிறப்பிக்கப்பட்டதோ தெரியாது. நான் 6-ம் தேதி சேலம் ஜில்லா கலெக்டர் அவர்களைப் பார்த்து மாக்னிஸைட் தொழிலாளர்களுக்கு தேவையான அரிசி வாங்கிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டேன்..

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மந்திரிகளைப்பற்றியும் இந்த விவாதத்தில் பேசலாம். ஆனால் ஒவ்வொரு இலாகாவைப் பற்றியும் உள்ள பிரச்னைகளை எழுப்பிப் பேசினால் நான் எல்லாவற்றிற்கும் எப்படி பதில் சொல்ல முடியும் ? நான் பதில் சொல்ல வேண்டுமென்றுமென்பதற்காகத் தான் அங்கத்தினர்கள் இதைப்பற்றி பேசுகிறார் என்று நினைக்கிறேன். உதாரணமாக உணவுப் பிரச்னையைப் பற்றி பேசுகிறார். உணவுக்காக ஏதாவது ஒரு விவாதம் இருக்குமானால் அதிலே இந்த சிறிய விஷயங்களை எடுத்துச்சொல்லலாம். அப்பொழுது அந்த இலாகா அமைச்சர் அதற்கு பதில் சொல்லுவார். இந்த விவாதத்தில் பொதுவாக மந்திரிகள் அனுசரிக்கக்கூடிய கொள்கைகளைப்பற்றி



பேசினால்தான் நான் அதற்கு பதில் அளிக்க முடியும். நான் பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்தால், அங்கத்தினர் எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசுவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை.

**Mr. SPEAKER** : அங்கத்தினர் பேசுவது தவறு என்று சொல்ல முடியாது. அவர் பேசியதற்கு மந்திரி அவர்கள் பதில் அளிக்கவில்லை என்றால் அவர் மீது தவறு ஒன்றும் சொல்ல முடியாது. (சிரிப்பு).

**Sri M. KALYANASUNDARAM** : சபாநாயகர் அவர்களின் தீர்ப்பு சரியான தீர்ப்பு. மந்திரிகள் கூட்டு முயற்சி எடுக்கக்கூடிய விஷயங்களைப்பற்றித்தான் நான் இங்கே பேசுகிறேன். அவரவர்கள் இலாகாவின் தனி நிர்வாகத்தைப் பற்றி பேசவில்லை. "ஸ்டேட் டிரேடிங்" கூட்டு முடிவு எடுக்கக்கூடிய ஒரு விஷயம் தான். ஆகையினாலே அது சம்பந்தமாக இருக்கக்கூடிய சிக்கல்களை நான் மந்திரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது மிகவும் அவசியமாக இருக்கிறது. 6-ம் தேதி சேலம் கலெக்டர் எங்களுக்குச் சொன்னது என்னவென்றால், "கலெக்டருக்கு வந்திருக்கக்கூடிய உத்தரவைப்படி சர்க்காருடைய ஸ்டாக்கிலிருந்து கொடுக்க முடியாது. தனிப்பட்ட வியாபாரிகள் வைத்திருந்தால் அவர்களிடமிருந்து வாங்கிக்கொடுக்க முடியும். தனிப்பட்ட வியாபாரிகளை எனக்குக் காட்டுங்கள்" என்பதுதான். பொது மக்களுக்கு விற்கக்கூடிய ஸ்டாக் இல்லை என்று எல்லாக் கடைகளிலும் போர்டு போட்டிருக்கிறார்கள். சர்க்கார் ஸ்டாக்கிலிருந்து கொடுப்பதற்கு தனக்கு அதிகாரம் இல்லை என்றும், அமைச்சர்களிடம் போய் சொல்லவேண்டுமென்றும் அவர் எங்களுக்கு தெரிவித்துவிட்டார். ஆகவே, இந்த உத்தரவினால் போதுமான அளவுக்கு பலன் ஏற்படவில்லை. அவசியமானால் சர்க்கார் ஸ்டாக்கிலிருந்து இம்மாதிரி சங்கங்களுக்கு அரிசி ஒதுக்கிக்கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கவேண்டும். ஸ்டாக் வைத்திருப்பவர்களைக் காட்டுங்கள் என்று சொன்னால், இப்பொழுது வியாபாரிகள் கையில் அதிகமாக ஸ்டாக் இல்லை. நிலப்பிரபுக்கள் கையில்தான் அதிகமாக ஸ்டாக் இருக்கிறது. சர்க்கார் எடுத்திருக்கக்கூடிய முடிவுகளின் விளைவுகளினாலே, உணவுப் பண்டங்களை விலைக்கு வாங்கி சாப்பிடக்கூடிய மக்களுக்கு உணவுப் பண்டங்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டு ஸ்தம்பித்துப் போயிருக்கிறது என்பதை எல்லா அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது மிகவும் முக்கியமான பிரச்னையாகவும், அவசரமாகவும் இருப்பதினாலே இதைப் பற்றி இப்பொழுது பேசினேன்.

தொழில் அமைதி வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும் என்று மந்திரிகள் விரும்புகிறார்கள். தொழில் அமைதியை பாதுகாக்க வேண்டும், அப்பொழுது தான் உற்பத்தி பெருகும் என்பதிலே சர்க்காருக்கு சந்தேகம் கிடையாது, எதிர்க்கட்சியினர்களுக்கும் சந்தேகம் கிடையாது. தொழில் அமைதியில் குறைவு ஏற்படுவதற்குக் காரணம் என்னவென்பதை பல முறை இந்தச் சபையில் எடுத்துக் கூறியிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் பட்ஜெட் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கக்கூடிய தவறுகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம். விலைவாசி அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது, தகராறுகள் அதிகமாக இருக்கின்றன. சர்க்கார் இலாகா உள்பட, தனியார் நடத்தும் தொழில்களில் தொழில் அமைதி ஏற்படக்கூடிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால், நடவடிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. தொழிற்சாலைகளை மூடுவதற்கு எதிராக, வேலை நிறுத்தங்கள் ஏற்படுவதை தடுப்பதற்கு மத்திய சர்க்கார் எடுத்திருக்கக்கூடிய முடிவுகளைக் கூட, நம்முடைய ராஜ்ய சர்க்கார் எடுக்கவில்லை. தொழிலாளர்கள், முதலாளிகள், சர்க்கார் ஆகியோர்கள் அனுசரிக்கக்கூடிய விதி முறைகளைப்பற்றி முக்கூட்டு மகாநாட்டில் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த முடிவுகள் பல இலாகா மந்திரிகளுக்கும், பல இலாகா அதிகாரிகளுக்கும் தெரியாது. எல்லா இலாகா அதிகாரிகளுக்கும் தெரிவிக்கும்படி உத்தரவிட்டு, இந்த விதி ஒழுங்குகளை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு சம்பந்தப்பட்ட மட்டில் ஹைவேஸ்

ராஜ்ய நிர்வாகம் செம்மையாகவும் நடந்து வருகின்றது என்பதை நாம் காண்கின்றோம். அதைக்குறித்து நாமும் மிக மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம். நம்முடைய அமைச்சரவையில் மிக குறுகிய எண்ணிக்கையிருந்தாலும் அவர்களுடைய காரியமானது மிக திறமையாகவும் செம்மையாகவும் நடந்து வருகின்றது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இப்போது முனிசிபல் தேர்தல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த தேர்தல் விஷயமாக ஒரு புதிய முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அந்த முறை முனிசிபல் தேர்தல்களில் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. அதாவது வாக்குச்சீட்டுகளை எடுத்து அதில் இருக்கும் அடையாளத்தின்நேரே குறியிட்டு அவற்றை கொண்டுவந்து தேர்தல் அதிகாரியின் முன்னிலையில் இருக்கும் பெட்டியில் போட வேண்டும் என்பது இப்போதுள்ள புதிய முறை. இதன் மூலம் வாக்குச்சீட்டுகளை வெளியே கொண்டு வர முடியாது என்பதை நாம் உணர்ந்துதான் இந்த முறை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். இப்போது அகில இந்திய ரீதியில் பொது தேர்தல் நடக்கும் போதும், இந்த முறையை அனுஷ்டிக்கலாம் என்பதை தேர்தல் கமிஷன் ஒத்துக்கொண்டிருக்கிறது. இந்த முறையில் நாம் அனுஷ்டித்த முறையை அகில இந்திய ரீதியில் அகில இந்திய பொது தேர்தல்களிலும் கையாளலாம் என்று கமிஷன் ஒத்துக்கொண்டிருக்கிறது என்றால் நம்முடைய ராஜ்ய நிர்வாகத்தின் திறமை எவ்வளவு தூரம் இருக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இது போன்ற பல விஷயங்களில் நம்முடைய ராஜ்யம் அனுஷ்டிக்கப்படுகின்ற முறை, கொள்கை, இவைகள் தான் இதர ராஜ்யங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதை நாம் பார்க்கின்றோம். மத்திய அரசாங்கமும்கூட சென்னை ராஜ்யத்தில் ஏற்படக்கூடிய பல புதிய முறைகளை பார்த்து அவைகள் எல்லாம் நல்ல முறையில் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். சமீபத்தில் சென்னைக்கு வந்த மத்திய சர்க்கார் மந்திரிகள் பலர் நாம் புதிதாக ஏற்படுத்தியிருக்கும் கிண்டி தொழில் எஸ்டேட் போன்ற ஸ்தாபனங்களை எல்லாம் பார்த்துவிட்டு சென்னை மாகாணம் இதர மாகாணங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழில் கல்வித்துறைகளை எடுத்துக்கொண்டாலும் நம் மாகாணம் மற்ற மாகாணங்களை எல்லாம் விட முன்னேறியிருக்கிறது என்பதற்கு சந்தேகமில்லை. இதே போன்று கல்வித்துறையை எடுத்துக்கொண்டால், அரசியலில் மாணவர்கள் கலந்து கொள்ளக்கூடாது என்பது சம்பந்தமாகவும், நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கல்வித்துறையில் இருக்கக்கூடிய மாணவர்களை அரசியலில் இழுக்கக்கூடாது என்ற முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது ஓரளவுக்கு வெற்றியும் பெற்றிருக்கிறது. இதில் ஒரு கட்சி மாத்திரம் தனது சம்மதத்தை தெரிவிக்கவில்லை என்று தெரிகிறது. அந்த கட்சியும் தனது சம்மதத்தை தெரிவித்துவிட்டால் கூடிய சீக்கிரம் இந்த ஏற்பாடு நல்ல முறையில் நடைபெறும், இதோடு இதைப் பார்த்து மற்ற மாகாணத்திலுள்ளவர்களும் இந்த முறையை கடைபிடிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு பல முறைகளிலும் நம்முடைய ராஜ்யம் இதர மாகாணங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருக்கிறது. ஆனால் இதில் இப்போது இருக்கின்ற அமைச்சர்கள் தங்களுடைய திறமைக்கு மேலாக தங்கள் மீது அதிகமான சுமையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக நிதி அமைச்சரை எடுத்துக்கொண்டாலும் சரி, விவசாய அமைச்சரை எடுத்துக்கொண்டாலும் சரி, தொழில் அமைச்சரை எடுத்துக்கொண்டாலும் சரி, அவர்களுக்கு எல்லாம் இப்போது அதிகமாக பொறுப்புகள் பெருகி கொண்டே வருகின்றன. நாளுக்கு நாள் இலாகாக்கள் எல்லாம் பெருகிக் கொண்டே வருகின்றன. மக்களுடைய தேவை பெருகப்பெருக அதன் காரணமாக பொறுப்புகளும் அரசாங்கத்தில் பெருகிக்கொண்டேயிருக்கிறது. இதன் காரணமாக அமைச்சர்கள் தங்களுடைய பொறுப்புகளை எல்லாம் சரியாக நிறைவேற்ற முடியாத அளவுக்கு பெருகிவிடுமோ என்று ஐயப்படுகின்றேன். ஆகவே இப்போது இருக்கின்ற அமைச்சரவையை விஸ்தரிப்பது நல்லது என்பது என் கருத்து. சில இலாகாக்கள், முக்கியமாக கூட்டுறவு, கல்வி, விவசாயம் போன்ற இலாகாக்கள் எல்லாம் இன்னும்





சரியான முறையில் இயங்கவேண்டும் என்றால், மற்ற மாகாணங்களுக்கு எல்லாம் நாம் இந்த விஷயத்தில் வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்றால் இவைகளை எல்லாம் பிரித்து, விஸ்தரித்து இதற்கு என்று தனித்தனி அமைச்சர்கள் ஏற்படுத்தினால் மிகவும் நல்ல முறையில் இயங்க முடியும். ஆகவே இதற்காக இன்னும் கூடுதலாக மூன்று அமைச்சர்களை நியமிப்பதினால் பெரிய தவறு ஒன்றும் ஏற்பட்டு விடாது. இதனால் அதிகமான செலவுகள் ஒன்றும் ஏற்பட்டு விடப்போவதில்லை என்பதையும் இந்த சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவு முறையில் எல்லா தொழில்களையும் விஸ்தரிக்கவேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருக்கின்ற இந்த சமயத்தில், விவசாயங்கள் எல்லாம் கூட்டுறவு முறையில் நடைபெறவேண்டும் என்று முயற்சி செய்யக்கூடிய காலத்தில் இந்த துறைகளில் எல்லாம் வேலைகள் அதிகமாகி கொண்டிருக்கின்றன என்பதை யாரும் ஒத்துக்கொள்வார்கள். அதோடு அமைச்சரவையின் பொறுப்பும் இந்த சமயத்தில் அதிகமாகிக்கொண்டுதான் இருக்கும். ஆகவே அமைச்சரவையை விஸ்தரிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். இன்னும் பல பிரச்னைகளைப்பற்றி கனம் திருச்சி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வாழ்க்கைத்தரம் உயருவதற்கு இடையூறாக இருக்கும் பல கஷ்டங்களைப்பற்றியும், விலைவாசி ஏறியிருப்பதைப்பற்றியும் குறிப்பிட்டு இதற்காக அமைச்சரவை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றும், அதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இப்போது எங்கு பார்த்தாலும் ஒரு சில குறிப்பிட்ட துறையில் இருப்பவர்களுக்கு மட்டும் போதிய அளவு சௌகரியங்கள் கிடைக்கின்றன. அவர்கள் பல விதத்திலும் கூட்டு சேர்ந்திருப்பதினால் அவர்கள் பல சௌகரியங்களையும் அனுபவித்து வருகிறார்கள். இதரர்களுக்கு அவ்விதமான சௌகரியங்கள் ஒன்றும் கிடைப்பதில்லை. இன்றையதினம் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களோ அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர்களோ அல்லது இதுபோன்ற மற்ற தொழிலாளர்களோ வேலை நிறுத்தம் செய்யப்போவதாக மிரட்டுவதினாலும் மற்ற விதத்திலும் பலவிதமான சலுகைகளை பெறுகிறார்கள். ஆனால் விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு இன்றைக்கு குறைந்தபட்சக் கூலி எந்த அளவில் கிடைத்துவருகின்றது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு போதுமான அளவில் இன்று கூலி கிடைப்பதில்லை. இன்றைக்கு சர்க்கார் துறைகளிலும் மற்ற துறைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. மற்ற துறைகளில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் குறிப்பிட்ட அளவுக்கு அதாவது 8 மணி நேரம் 10 மணி நேரம் என்று வேலை செய்து அதற்கு தகுந்த கூலி பெறுகின்றார்கள். ஆனால் விவசாயத் தொழிலாளியோ அதிக நேரம் வேலை செய்தும் குறைவான கூலி தான் பெறுகின்றான். இவ்விதம் எல்லாத் தொழிலாளிகளும் ஒரே நிலையில் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த தொழில்துறையில் ஈடுபட்டு இருக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் மாகாண சர்க்காரில் இருந்தாலும் சரி, மத்திய சர்க்காரில் இருந்தாலும் சரி, அவர்கள் செய்யக்கூடிய வேலைக்குத்தகுந்தபடி ஊதியம் கிடைக்கின்ற முறையில் ஒரு கொள்கையை அரசாங்கம் கொண்டு வரவேண்டும். அந்த அடிப்படையில் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுத்தால் தான் அவர்கள் எல்லோரும் நன்மை பெற முடியும். திடீரென்று உணவு விலையை நிர்ணயித்து வியாபாரிகள் எல்லாம் குறிப்பிட்ட விலைக்குத்தான் தான்யங்களை வாங்க வேண்டும் என்று உத்தரவை கொண்டு வந்தார்கள். ஆனால் வியாபாரிகளுக்கு யார் தான்யங்கள் கொடுப்பார்கள்: சமீபத்தில் தான் கேரளத்தில் விலையை கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இவ்விதம் தான்யங்களின் விலையை கட்டுப்படுத்துவதினால் மட்டும் இந்தப் பிரச்னை தீர்ந்து விடும் என்று எண்ண முடியாது. இதற்கு அடிப்படையாக ஒரு கொள்கையை வகுத்து அதற்கு தகுந்தபடி நடவடிக்கை எடுக்கவேண்டும். சில தொழில்களில் அதிகமான லாபம் கிடைக்கின்றது என்பதற்காக அந்த தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு, அதிகமான போனஸ் முதலியவை கொடுக்கப்

[Sri N. Mahalingam] [13th March 1959

படுகின்றது. இந்தமாதிரி அதிகமான லாபம் கிடைக்கின்றது என்கின்ற காரணத்திற்காக போனஸ் முதலியவைகளை கொடுத்துக்கொண்டிருந்தால் மற்ற தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் சரியான முறையில் தங்கள் தொழிலில் ஈடுபட மாட்டார்கள். வேண்டுமென்றால் அதிகமான லாபம் கிடைக்கும் தொழிலில் அதிகமான வரிகளை போடலாம். அதல்லாமல் சில குறிப்பிட்ட துறைகளில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு அதிகமான லாபம், போனஸ் முதலியவை கொடுத்துக்கொண்டிருந்தால், மற்றத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு ஊக்கம் குறைந்துவிடும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அமெரிக்காவிலே இது போன்று எந்தத் தொழிலாவது மிக அதிக அளவு லாபம் அடைகிறது என்றால் அந்தத் துறையிலே தயாரிக்கப்படக் கூடிய பொருள்களை உபயோகிப்பவர்களுக்கு, அதிலே பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறது என்று கருதினால் அதற்காகத் தனியாக சர்க்கார் சில ஸ்தாபனங்களை வைத்திருக்கிறார்கள்: மொனாபலிஸ்டிக் கண்ட்ரோல் ஸ்தாபனங்கள் வைத்து அந்த சாமான்களின் விலையைக் குறைக்க ஏற்பாடு செய்கிறார்கள். இப்போது புதிதாக இண்டஸ்ட்ரியல் என்ஜினீயரிங்கில் விலை, உற்பத்தி சம்பந்தமாக இப்போது ஆராய்ச்சி செய்து அதில் முற்போக்கு அடைந்திருக்கிறோம். காஸ்ட் அக்கவுண்ட்ண்ட்ஸ், காஸ்ட் கன்ஸல்டண்ட்ஸ் இவைகளில் தனியாக மிகச் சிறந்த நிபுணர்கள் இருக்கிறார்கள். சர்க்கார் அவர்களுடைய ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டில் அவர்களை நியமித்து, தொழில் துறையில், லாபம் வரக் கூடிய இடங்களில் விலையைக் குறைத்து மக்களுக்கு நன்மை செய்ய முடியுமா என்று பரிசீலிக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமை என்று இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆக, நம்முடைய அரசாங்கம் மிகத் திறமையாகவும் சிறப்பாகவும் நடந்து வந்தாலும் தொழில் துறையில் முன்னேற்றம் அடைய அடைய, எந்தெந்த அளவுக்கு உலக நாடுகளில் ஆராய்ச்சி நடக்கிறதோ அந்தந்த அளவுக்கு நம்முடைய நாட்டில் தொழில்களை ஊக்குவித்து பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நாளுக்கு நாள் புதிதாகத் தொழில் துறையில் செய்யக் கூடிய சாமான்களை உபயோகப்படுத்துபவர்கள் அதிக விலை காரணமாக கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்து வருகிறார்கள். இதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு இந்த மான்யத்தை ஆதரிக்கிறேன்.

* Sri M. JAGANNATHAN : Sir, in opposing the Demand for the Head of State, Ministers, and Headquarters Staff, and the Demand for Elections, let me say a few words. Sir, speaking first about the Head of State (the Governor) I like to say that there is a growing feeling in our State that the office of the Governor is proving itself to be a white elephant. The expenditure that is incurred on account of the Governor and his Household is enormous. The amount is simply staggering in the context of a poor, under-developed country like ours. The pomp and paraphernalia which always go with the office of the Governor are most unreasonable and unjustifiable, and we cannot allow anybody, much less the Head of State, to go about seignorial pursuits. Hon. Members here might feel that I am speaking against the high salary drawn by His Excellency the Governor of Madras. Far from it, I for one feel that the salary drawn by the Governor is not very much. It is not a big sum. If we look at the budget estimate for the year 1959-60, we will see that the amount put down there for the salary of the Governor is about Rs. 59,000. That is not a big sum. It is calculated, Sir, that when deductions are made for the



13th March 1959] [Sri M. Jagannathan]

purpose of income-tax, surcharge, and super-tax, the balance left over for the Governor towards his salary is almost negligible. About Rs. 3,000 he gets as his salary. This is a sum which is much less than what a judge of the High Court gets. He gets about Rs. 4,000 or more. The salary of the Governor is not much. Therefore, I am not speaking against the salary of the Governor as such, but when we look at the other items of expenditure incurred on account of the Governor and his household, we will see that the amount runs to about Rs. 6,00,000. That is a very big sum indeed, and it should not be tolerated. If I were to say that the Hon. the Finance Minister should stint, save and economize on the various items of expenditure incurred on behalf of the Governor, he will immediately jump up and say, " How dare you suggest that I should reduce the sumptuary allowance of the Governor, or I should reduce the expenditure incurred on account of his flower gardens, or on account of purchasing beautiful portraits and pictures to be hung on the walls of the palace of the Governor? " Therefore, I do not want to suggest the items on which the Hon. the Finance Minister must come forward to stint, save and economize. I leave it to his good sense. That will put an end to the argument between him and me. And we will save time also. Therefore, I feel that the Government must come forward to effect economy in the expenditure that they have allowed for the Governor and his household. Especially, when the Government are committed to a policy of introducing the socialistic pattern of society, there is all the more the necessity for the Government to come forward to implement their policy in action. It is more than 12 years since we attained Independence, and fancy, Sir, that there are hundreds of villages in our State without the ordinary elementary necessities of life, like drinking water wells, roads and pathways. The Hon. the Finance Minister might come forward and say "On considerations of finance, we have not been able to provide these amenities '. But at the same time, when we look at the other side of the picture, we see enormous sums of money are being wasted, as it were, on these items. Therefore, it is high time that the Government came forward to establish some sort of relevancy between the words they speak and the deeds they do. They talk about socialism on the one hand, and on the other they do things which do not justify what they talk. So, if, in real life, the Independence that we have attained should percolate down to the underdogs of society, it is high time that the Government came forward to somehow stint and save on these items of expenditure and divert these funds towards the provision of elementary necessities of life to the millions of masses who live in our villages.

Sir, I would like to say a word about the Ministers. I have no doubt in my mind that the Ministers, almost every one of them is the 'beau' ideal of a Minister. At least they think themselves to be so. But look at the work that they are doing. (The Hon. Sri R. Venkataraman : Are we Don Juans also?) They are doing substantial and good work no doubt. But, unfortunately, there is a lurking suspicion in my mind that they are not—I mean—equal to

[Sri M. Jagannathan] [13th March 1959

the task, not in the sense that they are incapable of doing their work but that they are overworked. Their work is so much that they are not able to do full justice to their work. We have been looking here, when the debate is going on, Minister after Minister comes to the Assembly with a heavy load of files. They go on working on their files without paying any heed whatsoever to the debates that are going on here. That is an insult to the members here and as such I think, Sir, it is high time that they did not practise this method of going through their files here. This only shows that either they are trying to put up a show that they are turning out more work or the other reason might be that they are really overworked. If they are really overworked, what is the reason for it? Why should there be such an amount of work thrust upon the Ministers, and why should they be asked to overwork in season and out of season?. Except for the Hon. the Chief Minister, we see all the other Ministers coming to the House with head-loads of files. They go on looking through these files without listening to the speeches made by hon. Members. In the year 1952, I was a Member in the previous Assembly, during the days of the Rajaji Ministry. He had about 15 Ministers in his Cabinet. Work was not so heavy in those days and every Minister came to the Assembly, listened to the speeches made by the hon. Members very keenly and with rapt attention. They did their best to acquit themselves creditably of their office. But, here, because the Hon. the Chief Minister has taken it into his head that he will restrict his Cabinet to a strength of 8 only, we have the present situation. I cannot simply understand the virtue about this number ' eight '.

10 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : I would recommend to the hon. Member that he might read 'Parkinson's Law'. That will gave him some idea about this matter.

* SRI M. JAGANNATHAN : I hope the Hon. Minister will purchase a copy of that book at his cost and give it to me.

MR. SPEAKER : I think that book is available in the Library. Evidently, the hon. Member has not read the book.

SRI M. JAGANNATHAN : I hope the Hon. Minister will undertake to purchase that book at his cost and present it to me.

THE HON. SRI C SUBRAMANIAM : It will be available in the library.

* SRI M. JAGANNATHAN : That may be available. I do not deny that. But, I would like the Hon. the Minister for Finance to purchase that book and make a gift of it to me.

Proceeding further, I would like to say that if the Hon. Ministers are to be overworked like this, it will result in a sort of inefficiency, and their control over the various departments working under them will be reduced to nothing. So, the efficiency of the administration will go to dogs. Therefore, from that point of view at least, I would earnestly appeal to the Hon. the Chief Minister to somehow see to it and increase the number of Ministers in the cabinet.



13th March 1959] [Sri M. Jagannathan]

Now, I would like to touch upon another matter which is not less important. The Madras Public Service Commission, as we all know, is doing very excellent work. It is autonomous body, an independent body. It is always said that it rises above considerations of politics or any other, in the matter of recruitment of candidates to the various departments and to the various posts. I do not know why under this being Government, more and more posts are being taken away from the purview of the Madras Public Service Commission and brought under the control of the Government themselves. When the Ministers are confronted with the question as to why they are doing this, they immediately come forward and say, " No, no, it is all done in the interests of efficiency. Moreover, it is the Government alone who are more suitable to judge whether a particular post requires a particular technical skill or knowledge on the apart of the applying candidates." Sir, the Madras Public Service Commission is a body which is supposed to know what is best and to assess the various merits and capacities of the candidates who appear before it for recruitment to various posts. For instance, take the post of District Publicity Officer. The other day, the Hon. Finance Minister, during the question-hour in this House, said that the District Publicity Officer's post is a post which requires a particular technical skill or some technical aptitude which the Government alone are capable of deciding and not the Madras Public Service Commission. That is an argument which does not hold water. That is an argument which is very undesirable Because if we allow the Government to grab more and more powers from the Service Commission and if they were to have power to recruit candidates according to their whims and fancies, I am afraid it will lead to what is called nepotism and favouritism. That will result in a sort of demoralization of our public life and official life as such. In their own interest, the Government should come forward to put an end to this evil practice of arrogating to themselves, the power of making recruitments which were under the purview of the Madras Public Service Commission.

The other point which I would like to touch upon is the question of corruption, as we all know, is flourishing rampant in our State. It is so at all levels, particularly in the official level and higher levels. It is really difficult for the Members on this side to come forward and substantiate with facts and figures as to the particular person who took bribery or the particular time when bribery was given and so on. It is very difficult indeed. At the same time, the Government cannot simply dismiss these allegations coming mostly from Members of the Opposition and also from the Members of the Congress Party about the flourishing of corruption. They cannot simply dismiss these allegations with a shrug of their shoulders, 'So long as there is a giver of the bribe, you cannot find fault with the taker of the bribe.' That has been the attitude of the Hon. the Minister for Finance whenever he was speaking about the question of corruption. Believe it or not, at all levels, this evil of corruption is flourishing and is rampant. So, it is the bounden duty.

[Sri M. Jagannathan] [13th March 1959

of the Government to see to it that this corruption is put an end to in all walks of life. For this purpose, they must create a machinery and empower that machinery to go about finding out instances of corruption and Government must themselves immediately bring to justice the offenders concerned without delay. Otherwise, there will be demoralization of our public life and the country will not be able to make any headway towards progress.

Sir, lastly, I must say a word about elections. The maintenance of the electoral rolls is not very satisfactory. There are factual errors, there are clerical errors and there are so many other errors. These defects must be rectified in the interests of the conduct of fair election. I hope the Government will take note of these suggestions of mine and try to rectify the defects as early as possible. Thank you, Sir.

* **Sri T. V. SANNASI** : சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை நான் மனப்பூர்வமாக வணக்கத்தோடு வரவேற்கிறேன். கவர்னர் பதவியானதும், அவர் சம்பந்தமாக ஒதுக்கப்படுகிற தொகையும் மிகவும் முக்கியமானதா, அல்லவா என்ற குரல் நாட்டிலே மக்களிடத்திலே இல்லாதுபோனாலும், ஒரு சிலரால் கிளப்பப்பட்டு வருகிற ஒலி இருந்துதான் வருகிறது. சாதாரணமாக, இந்தச் சபைக்கு ஓர் அதிபராகவும் சபைக்குத் தந்தையாகவும் ஓர் சபாநாயகர் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அதேபோன்று இந்த ராஜ்யத்திற்கு ஒரு கவர்னர் இருக்கவேண்டியது மிக மிக அத்தியாவசியம் என்பதை சிறிதேனும் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு ஒத்துக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது. கவர்னருக்கு ஒதுக்குகிற தொகையானது அதிகப்படியாக இருக்கிறதே, கொஞ்சம் குறைத்துக் கொண்டால் என்ன என்ற அபிப்பிராயமும் இருந்துதான் வருகிறது. ஆனால், தமிழகத்திலே சிறந்த பண்பு என்னவென்றால் விருந்தோம்பல் என்ற பண்பு தான். தமிழருக்குச் இது சிறந்த பண்பு ஆகும். இதனை எத்தனையோ தடவைகள் அமைச்சர் அவர்களும் மற்றும் அறிவாளிகளும் கூறியுள்ளார்கள். கவர்னருக்கு ஒதுக்குகிற தொகை பூராவும் அவர் வீட்டுக்கு அனுப்பிவிடப் போவதில்லை. அவர் பதவிக்காலம் தீர்ந்தவுடனே அவர் எடுத்துக்கொண்டு போகவும் இல்லை. ஆனால், இந்தத் தொகையை அவர் வீட்டிலிருந்து இங்கு கொண்டுவந்து செலவு பண்ணவும் இல்லை என்று கருத்தைப் பலர் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திற்கு எத்தனையோ நாடுகளிலிருந்து உயர்ந்த பண்புள்ள பிரதிநிதிகள், வெளிநாட்டு விருந்தினர்களாக வருகிறார்கள் என்றால் அவர்களை ஆதரித்த பெருமை கவர்னருக்கு அல்ல ; இந்த ராஜ்யத்திலுள்ள மக்களுக்கே உரியதாகும்.

இது யாரும் சுலபமாக புரிந்துக்கொள்ளக்கூடியது தான். இது புரியாமல் இருக்க முடியாது. இதைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியம் என்ன வென்றால் அரசியல் சட்ட மூலம் அவருக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்று இல்லை. எந்த கட்சியைச் சேர்ந்தவரும் அல்ல. ஜனநாயகம் என்ற ரீதியில் பார்த்தால் அவரும் மக்களுக்கு பணியாற்றுகிறவராகத்தான் இருக்கிறார். மன்னர் என்ற நிலையில் இல்லை. இதை யாரும் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். இந்த நிலையில் கவர்னருக்கு ஒதுக்கப்பட்டிருகிற தொகையானது ராஜ்யப் பெருமையை முன்னிட்டு இன்னும் போதாது என்று சொன்னால் கூட அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். மந்திரிகளுடைய சம்பளமும் அவ்வாறு தான். இந்நாட்டில் நமது ராஜ்யத்திலுள்ள நிர்வாகத் திறமையும், அந்த நிர்வாகத்தைச் செய்கின்ற மந்திரிகளுடைய அறிவின் திறமையும் மற்ற மாகாணங்கள் போற்றக்கூடிய அளவில் தான் இருந்து கொண்டிருக்கிறது. மூன்று கோடி மக்களுக்கு அதிகமாக உள்ள நமது ராஜ்யத்தில் எட்டு மந்திரிகள் தான் இருக்கிறார்கள் என்றாலும் எவ்வளவோ திறமையாக பணியாற்றி வருகிறார்கள். இந்த நிலைமையில் அவர்களுடைய



13th March 1959] [Sri T. V. Sannasi]

அறிவாற்றலையும் திறமையையும் பாராட்டக் கூடிய நிலைமையில்தான் நாம் இருக்கிறோம். மந்திரிகள் தங்களுடைய சம்பளத்தை இன்னும் அதிகப்படுத்திக்கொண்டாலும் பரவாயில்லை. குறைத்துக்கொண்டாலும் அதை மறுக்கப்போவதில்லை. அல்லது சம்பளமே வேண்டாம் என்று சொன்னாலும்கூட அது அவர்கள் வசதியைப்பொறுத்து வரவேற்கத் தகுந்ததுதான். இந்த நிலைமையில் இந்த மானியம் மிக மிக அவசியம்தான்.

பணியாளர்களுடைய குறைகளை சொல்லித்தான் ஆக வேண்டியதாக இருக்கிறது. நிர்வாக அலுவலகங்களில் இருக்கக்கூடிய பணியாளர்கள் வருவாய் போதாத நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் அது வாஸ்தவம் தான். இந்த நிலைமையில் அவர்களால் ஓரளவு வாழ்க்கைக்கான வசதிகளையும் செய்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். மற்ற வகைகளில் வருவாயைத் தேடிக்கொண்டு அவர்களுக்கு அதிகப்படியாகக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

மந்திரிகளுடைய சுற்றுப்பிரயாணத்தில் பிற்போக்கான இடங்கள் முக்கியத்துவம் பெற வேண்டும். நமது ராஜ்யத்தில் பஸ் போகாத இடங்களும், கார்கள் போகாத இடங்களும், நல்ல வாழ்க்கையை கண்டறியாத இடங்களும் பஞ்சத்தில் அடிப்பட்ட வரண்ட பிரதேசங்களும் இருக்கின்றன. அங்கேயெல்லாம் மந்திரிகள் செல்ல வேண்டும். உதாரணமாகச் சொல்லுகிறேன். சில இடங்களில் போலீஸ்காரர்களையே தெரியாதவர்கள் இருக்கிறார்கள். வெளியூர்களுக்கு ரயிலில் பிரயாணம் செய்யாத மக்களும் நமது ராஜ்யத்தில் பல இடங்களில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு எல்லா மந்திரிகளும் செல்ல வேண்டும். இப்பொழுது அங்குள்ளவர்கள் எல்லாம் என்ன சொல்லுகிறார்கள் என்றால் மந்திரிகள் பணக்காரர்களும், எம்.எல்.எ-க்களும் எம்.எல்.சி.-க்களும் எங்கு இருக்கிறார்களோ அங்குதான் செல்லுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதற்கு இடம் கொடுக்காமல் பிற்போக்கான இடங்களுக்கும் மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் நல்லபலனுண்டு.

**(Sri V. K. Kothandaraman in the Chair.)**

மந்திரி சபையில் இப்பொழுது எட்டுப்பேர்கள் இருப்பதை இன்னும் அதிமாக ஆக்கிக்கொண்டாலும் எங்களுக்குச் சந்தோஷம் தான். மந்திரிகளை அதிகப்படுத்தா விட்டாலும் அவர்களுக்கு இருக்கக்கூடிய இலாக்காக்களை குறைத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் இன்னும் திறமையாக நல்ல முறையில் திறம்படப் பணியாற்ற முடியும். இப்பொழுது மந்திரிகளின் பேரில் சில குறைபாடுகள் சொல்லப்படுகிறது. அதற்கு ஒரு காரணம் சொல்லலாம். சட்டசபை மெம்பர்கள் தங்கியுள்ள ஹாஸ்டலில் படும் வசதியற்ற அவதி அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய வசதிகள் கவனிக்கப்படாமலும் இருக்கிறது. இவ்வளவு வசதியற்ற நிலைமையிலும் அவர்கள் மக்களுக்கு பணியாற்றுவதில் மிக்க கவனம் செலுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்கலாம். சட்டசபை மெம்பர்கள் தான் மக்களுடைய பிரதிநிதிகள். இந்த ராஜ்யத்தில் அமைச்சும், அமைச்சுக்கு மேல் கவர்னரும் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் யாருடைய அடிப்படையில் இருக்கிறார்கள். பாமர தன்மையுடைய மக்களுடைய அடிப்படையில் இருக்கிறார்கள். மக்களுடைய அடிப்படையில் தான் ராஜ்யம், சட்டசபை, அமைச்சு, கவர்னர் எல்லாம் இருக்கின்றன. மக்களை திருத்தி மக்களுக்கு நல்வாழ்வை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டுள்ளது. நாட்டின் அடிப்படையான அந்த மக்களுக்கு நேரிடைத் தொடர்புள்ள பிரதிநிதிகள் சட்டசபை அங்கத்தினர்கள். இப்படிப்பட்ட பிரதிநிதிகளுடைய சௌகர்யத்தை கவனிக்க வேண்டும். இதைக் கவனிக்காமல் மந்திரிகளுக்கும் கவர்னர் அவர்களுக்கும் அதிகப்படியான வசதிகளைக் கொடுத்து வருவதால்தான் இப்படிப்பட்ட குறைகள் கூறப்பட்டு வருகிறதோ ! என்று தோன்றுகிறது. இதனால்தான் மெம்பர்கள் குற்றம் சொல்லுகிறார்களோ என்னவோ ? இதுதான் காரணமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

[Sri T. V. Sannasi] [13th March 1959

கவர்னருக்கும் மந்திரிகளுக்கும் அதிகப்படியான வசதிகள் இருக்க வேண்டும். அதன் மூலம் எல்லோருக்கும் பெருமை தரும், நம் நாட்டின் பெருமையாகும். இது எதிர் கட்சியிலுள்ள தமிழகத் தலைவர்களுக்குத் தெரியாமல் இல்லை. ஒரு கட்சித் தலைவர் முன்னே உட்கார்ந்திருக்கிறார். அவருக்குப் பின்னால் அந்த கட்சி அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். பின்னால் இருப்பவர்களில் எவ்வளவோ ஆற்றலும் அறிவும் படைத்தவர்கள் இருக்கலாம், அதாவது அவர்களுடைய தலைவரைக் காட்டிலும், பணம் படைத்தவர்களும் இருக்கலாம், அதிகப்படியான செல்வாக்குப் படைத்தவர்களும் இருக்கலாம். ஆனால், அசெம்பளியில் மற்ற மெம்பர்கள் பேசுவதற்கு ஐந்து நிமிஷங்கள் என்றால் எதிர் கட்சி தலைவருக்கு ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. அது எதைக் காட்டுகிறது. அது எதிர்க்கட்சிகளுக்கு அளிக்கும் பெருமையைக் காட்டுகிறது. பின்னால் இருக்கிறவர்கள் ஆறடி உயரம் ஆஜானுபாகுவாய்த் தோற்றமளிக்கும் ஆற்றல் படைத்தவர்களாக இருந்தாலும் கூட, குள்ளமானாலும் முன்னால் இருக்கக்கூடிய தலைவருக்குத்தான் அதிகப்படியான பெருமை கொடுக்கப்படுகிறது. இதுவும் அக்கட்சிக்கு அளிக்கும் பெருமையாகும். அந்தப் பெருமை தனித்த முறையில் தலைவருக்கல்ல. தான் சார்ந்த கட்சிக்குத் தான் உரியதாகும். அதைப் போலவே, கவர்னர்களுக்கும், மந்திரிகளுக்கும் நாம் கௌரவம் கொடுத்தால் அந்தப் பெருமையும் கௌரவமும் இந்த ராஜ்யத்திலுள்ள மக்களைச் சார்ந்ததுதான். அப்படிப்பட்ட மக்களுடைய அடிப்படை தொடர்புடையவர்கள்தான் அவர்களுடைய பிரதிநிதிகள், அதாவது சட்டசபை மெம்பர்கள். ஆகவே இப்படிப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களுக்கு அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படிப்பட்ட வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது பங்களா வாங்கிக் கொடுக்கச் சொல்லவில்லை. இருபதாயிரம் அல்லது 22 ஆயிரம் போட்டு கார் வாங்கிக் கொடுக்கச் சொல்லவில்லை. அங்கத்தினர்களில் பணம் படைத்தவர்களும் இருக்கிறார்கள் பணம் இல்லாதவர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சியிலும் நாட்டிற்கு பணியாற்றி வருகிறவர்கள் இருக்கிறார்கள். கட்சி பேதம் இல்லாமல் நான் எல்லா கட்சியினருடனும் பழகி வருவதால் தான் என்னிடம் மனம் விட்டு எல்லாவற்றையும் சொல்லுகிறார்கள். அதனால் தான் நான் சொல்லுகிறேன். கட்சிகளில் நல்ல ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தொகுதி மக்களிடம் அணுகி குறை களைய வேண்டுமென்றால் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் கிடையாது. அதனால் அவர்கள் போக முடியவில்லை. அவர்களுக்கு வேண்டிய வசதி இல்லையென்றால் நாட்டிற்கு நன்மை அல்ல. சர்க்கார் போடும் திட்டங்கள் எல்லாம் திட்ட அளவிலேயே இருக்குமே தவிர அது மக்களிடத்தில் போவதாகவே இருக்காது. அதனால் மக்கள் பயனடைய முடியாத நிலை ஏற்படும். அரசாங்கத்திற்கும் பெருமை இல்லை. இது எல்லோரும் அறிந்த விஷயம். புதியது அல்ல. மெம்பர்கள் தத்தம் தொகுதியில் பல ஊர்களுக்குப் போவதாக இருந்தால் ப்ளஷர் கார் இல்லாமல் போக முடியாது. சில ஊர்களுக்கு போகவே முடியவில்லை. அப்படி போவதாக இருந்தால் விஞ்ஞான முறையில் போனால் தான் உண்டு. மற்றும் தொகுதிகளில் பிரயாணம் செய்வதாக இருந்தால் எவ்வளவு செலவாகிறது. நாட்டின் நலத்தைக் கருதி, மக்களுக்கு பணி செய்யும் ஊழியர்கள்தான் நாம் என்ற மனப்பான்மையுள்ள சட்டசபை மெம்பர்களுக்கு தேவைக்கான வசதி அளிப்பது தேச மக்களுக்கும் குறிப்பாக தேசத்திற்கும் நல்லது என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

தொகுதி மக்களைத் தினசரி போய்ப் பார்க்கக்கூடிய வசதி தேவை. (குறுக்கீடு :—வசதி என்றால் என்ன வசதி ?) வெளிப்படையாகச் சொல்லப்போனால் பணத்தைத் தவிர வேறு எந்த வகையில் வசதி செய்துகொள்ள முடியும் ? இதைப் புரிந்து கொள்ளாதவர்கள்



13th March 1959] [Sri T. V. Sannasi]

யாரும் இல்லை. இதில் உள்ள பயங்கரமான சங்கடம் என்னவென்றால், பணத்திற்காக மக்கள் நலத்திற்கு உழைப்பதாகக் கூறுவார்களே என்று பயம்தான். மற்றும், ஓட்டு குறைந்து விடுமே என்ற பயத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்தப் பண வசதி வேண்டுமென்ற எண்ணம் அவ்வசதியற்ற எல்லோருக்கும் இருக்கிறது. இருந்துதான் ஆக வேண்டும். ஆகையால், இந்த வசதியை கட்சிபேதமின்றி எல்லா ஊழியர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டும். எம்.எல்.ஏ. என்றால் மக்களுக்கு எஜமான் என்று எண்ணக்கூடிய நிலை இருக்கக்கூடாது. எம்.எல்.ஏ. என்றால் மக்கள் நலத்திற்குப் பணிபுரியும் ஊழியர்கள் என்றுதான் பொருட்கொள்ளவேண்டும். இந்நிலை 'இல்லாமையால்தான் மானம், ரோஷம், இருக்கிறவன் எம்.எல்.ஏ. வாக வரவேண்டும் என்று நினைக்க மாட்டான் என்ற நினைவை உண்டாக்குகிறது. மக்களிடத்தில் ஓட்டுக்குப் போகும்போது கொஞ்ச நஞ்ச கஷ்டத்தையா அனுபவிக்க வேண்டி இருக்கிறது ? கொஞ்ச நஞ்ச பேச்சையா மக்கள் வாயிலிருந்து கேட்க வேண்டியிருக்கிறது ? அதைப் பார்க்கும்போது அவ்வளவு இழிவான முறையில் இந்தப் பதவியை அடைய வேண்டுமா ? என்ற சந்தேகம் உண்டாகிவிடும். மேலே பார்த்து எச்சிலை உமிழ்ந்தால் மார்பிலே விழுமே என்பதை அறிந்து கொள்ளமுடியாத அறிவாளிகள் இதற்குத் துணையாக இருக்கிறார்கள். பதவி என்று ஒன்று இருக்கிறவரை, அதை அடையவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறவரை இந்தக் கஷ்டம் இருந்துகொண்டு தான் இருக்கும் என்ற எண்ணத்தை உண்டாக்குவதாயிருக்கிறது. வாக்காளர்களை அணுகி அவர்கள் வாழ்வின் நலத்திற்கான பணிபுரியும் வகையில் போதிய வசதி செய்து கொடுக்கும் திறனும், பொறுப்பும்- அமைச்சர் அவை கையில்தான் இருக்கிறது.. இதனை அகம் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri S. M. ANNAMALAI :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை எனக்கு முன் பேசிய சட்டமன்ற உறுப்பினர் சன்னாசி அவர்கள் பேசியதுபோல் உண்மையிலேயே வருகின்ற விருந்தாளிகளை நல்ல முறையில் வரவேற்க முடியாது. நல்ல முறையில் நமக்கு வசதி இருந்தால்தானே விருந்தாளிகளை நல்ல முறையில் வரவேற்க முடியும். நாமே பட்டினியாக இருக்கும்போது விருந்தாளிகளை எப்படி வரவேற்க முடியும். நாம் பல லட்சக் கணக்கான ரூபாயைக் கவர்னருக்குக் கொட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த கவர்னர் பதவி நம்முடைய மாகாணத்திற்குத் தேவையற்றது என்று நாம் கண்டிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். வெள்ளைக்காரர்கள் ஆளுகின்றபோது இப்படிப்பட்ட கவர்னர் பதவி தேவையில்லை என்று இப்பொழுது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பவர்கள் அப்போது பெரும் கூச்சல் போட்டார்கள். அந்தக் கவர்னர் பதவி இப்பொழுதும் தேவையில்லை என்று எதிர்க்கட்சிகாரர்கள் எல்லாம் சொல்லும்போது அவர்கள் அந்தக் கவர்னர் பதவி இப்பொழுது இருக்கும் நிலைமையில் தேவை என்று சொல்லுகிறார்கள். எந்த அர்த்தத்தில் அவ்வாறு சொல்லுகிறார்கள் என்று புரியவில்லை. இந்தக் கவர்னர் சம்பளத்தை உண்மையில் நாம் பார்த்தோமானால்—ஒரு தனிப்பட்ட மனிதருக்கு, அதுவும் சாதாரண மனிதருக்கு, நம்மைப் போன்றுள்ள மனிதருக்கு, வெள்ளையன் எந்த அளவுக்குச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தானோ அந்த அளவுக்குச் சம்பளம் நாமும் இந்தக் கவர்னருக்காகக் கொடுக்கவேண்டி இருக்கிறது. மேலும் அந்தக் கவர்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியல்ல. மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டவர். அப்படி மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டவருக்கு நம்முடைய பணத்தில் இருந்து பல லட்சம் ரூபாய் கொட்டித் தரவேண்டுமா ? மாற்றுக் கட்சியைச் சார்ந்துள்ள நாங்கள் இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

[Sri S. M. Annamalai] [13th March 1959

மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது பல இடங்களில் பேசுகிறார்கள். அவ்வாறு பேசும்போது

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்ற வள்ளுவரின் குறளை நினைவிலிறுத்திக் கொள்ளாமல் பேசுகிறார்கள். ஒரு சட்டம் இயற்றுகிறோம் என்று சொன்னால் அந்தச் சட்டத்தைப் பற்றித் தாங்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது அறிவித்து விடுகிறார்கள். எந்தெந்தச் சட்டங்கள் வருகின்றன? இந்தச் சட்டங்களை யெல்லாம் கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லி பணக்காரர்களையும், மிராசுதார்களையும் உஷார்ப்படுத்தி விடுகிறார்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும் போது இந்த உச்ச வரம்பைப் பற்றிக்கூறும் போது 100 ஏக்கருக்கு மேல் தான் வரும் என்று ஜாடையாகப் பேசி இருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது கூட "இந்தச் சட்டத்தைக் கண்டு மிராசுதார்கள் பயப்படவேண்டாம். பயப்பட வேண்டிய அவசியமே இல்லை" என்று திட்டவட்டமாகச் சொல்லி யிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட "நாம் எதிர் பார்த்த அளவு விவசாய வருமான வரி கிடைக்கவில்லை" என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? "சட்டம் வரப் போகிறது, எல்லோரும் உஷாராக இருங்கள்" என்று மந்திரிகள் முன்கூட்டியே எச்சரிக்கை செய்துவிடுகிறார்கள். ஆகையால் சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றுவதற்குள் மிராசுதார்கள் தங்கள் நிலங்களைப் பிரித்து எழுதி வைத்துவிடுகிறார்கள். அதன் காரணமாக சர்க்கார் எதிர்பார்த்த அளவுக்கு விவசாய வருமான வரி கிடைக்கவில்லை. அதைப்போலவே "சோஷலிஸ்ட் பாட்டர்ன்" என்று சொல்லிக் கொண்டு உச்சவரம்பு கட்டப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு காலதாமதம் செய்து வருவதோடு மட்டுமல்லாமல் இவ்வளவு ஏக்கருக்கு உச்சவரம்பு கட்டப் போகிறோம் என்பதைப் பற்றியும் ஜாடைமாடையாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, இது போல் சட்டம் வருகிறது என்று முன்னாலேயே சொல்லி, பணக்காரர்களுக்கும், மிராசுதார்களுக்கும் ஆதரவாக இருக்காமல் மக்களைப் பாதிக்காத அளவுக்கு இந்தச் சட்டங்களை யெல்லாம் அவசரச் சட்டமாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டமன்றத்திலே பலவித கோரிக்கைகளை உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள். சென்ற ஆண்டு பட்ஜட் விவாதத்தின் போது என்னென்ன கோரிக்கைகளைச் சொன்னார்களோ அந்தக் கோரிக்கைகள் எல்லாம் இதுவரை கவனிக்கப்படவில்லை. அதற்கு முக்கிய காரணம் சட்ட மன்ற உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் விவாதங்களில் கலந்துகொண்டு பேசும்போது ஓரிரு அமைச்சர்கள் மட்டுமே உட்கார்ந்திருப்பதுதான். மந்திரிகள் அவர்களுடைய அறைகளிலே உட்கார்ந்துகொண்டே இங்கு பேசப்படுவதை யெல்லாம் கவனிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி அமைச்சர்கள் அனைவரும் உறுப்பினர்கள் சொல்லும் குறைபாடுகளைக் கவனிப்பார்களேயானால் சென்ற ஆண்டு விவாதத்தின் போது சுட்டிக்காட்டிய குறைகளை இந்த ஆண்டும் சொல்ல வேண்டிய அவசியம் இராது. அங்கத்தினர்கள் பலரும் சென்ற ஆண்டு பட்ஜெட் விவாதத்தின்போது குறிப்பிட்ட பல குறைகளை எடுத்து இந்த ஆண்டும் கூறினார்கள். அந்தக் குறைபாடுகள் கவனிக்கப்படாமையால் இந்த ஆண்டிலும் எடுத்துக்கூற வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, சட்ட மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் காட்டிய குறைகளைக் களைய இன்னின்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது சில இடங்களில் கல்நாட்டு விழாக்கள் செய்கிறார்கள். இப்படி இவர்கள் கல்நாட்டு விழா செய்துள்ள இடங்களில் அந்தக் கட்டிடம் பூர்த்தியானதா என்று பார்க்கும்போது பல இடங்களில் கட்டிடங்கள் கட்டப்படவில்லை என்ற விவரம்



13th March 1959] [Sri S. M. Annamalai]

தெரிகிறது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சந்தவாசல் பிர்க்காவி 10-30 a.m.
லுள்ள கேளூர் என்ற கிராமத்தில் மராமத்து அமைச்சர் அவர்கள் வந்து ஒரு பள்ளிக்கூடத்திற்காகக் கல்நாட்டு விழா செய்தார்கள். ஏறத்தாழ $1\frac{1}{2}$ ஆண்டுக் காலம் ஆகியும் கூட அந்தக் கட்டிடம் அங்கே கட்டப்படவில்லை. காரணம் என்னவென்று கேட்டதற்கு கலெக்டர் அவர்கள் கட்டக்கூடாது என்று உத்தரவு போட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். இது அமைச்சர் அவர்களே வந்து கல்நாட்டு செய்த இடம் என்று சொல்லியும்கூட கட்டக்கூடாது என்று கூறிவிட்டார்கள். ஏதோ மின்சார இலாகாவினர் ஆட்சேபனை செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக அந்தக் கட்டிடம் கட்டக்கூடாது என்று ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யலாம், ஆனால் அதன் காரணமாக அவர்களுடைய அலுவல்கள் தடைப்படாமல் நல்ல முறையில் நடக்கவேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள். முதல் அமைச்சர் வேண்டுமானால் சுற்றுப்பிரயாணம் செய்யலாம். அவர் இலாகாவின் பொறுப்புகள் அனைத்தையும் நிதி அமைச்சர் அவர்கள் கவனித்து வருகிறார்கள். ஆனால் மற்ற அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதைச் சற்றுக் குறைத்துக் கொள்ள வேண்டும். காரணம் தொகுதிகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி அவற்றை நீக்கவேண்டுமென்று பல மனுக்களை நாங்கள் அனுப்பி வைக்கிறோம். கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்ட மனுக்கள் நான் அனுப்பியதற்கு ரெக்கார்டு வைத்திருக்கிறேன். ஆனால், இரண்டாண்டு காலம், மூன்றாண்டு காலம் ஆனாலும் கூட அதில் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. இரண்டாண்டு கழித்து ஒரு தபால் வருகிறது என்றாலும் அந்தக் கடிதம் வந்து சேர்ந்தது என்கிற அக்னாலட்ஜ்மெண்டு தான் வருகிறது. இன்னும் சிலவற்றில் ஒரு அமைச்சருக்கு அனுப்புவது, இன்னொரு அமைச்சருடைய இலாகாவுக்குப் போய்விடுகிறது. இதற்குப் பல உதாரணம் சொல்வேன். ஆனால் இந்தச் சபையில் சொல்ல விரும்பவில்லை. ஆகவே இலாகா வேலைகளை அமைச்சர்கள் சரியான முறையில் கவனிக்கவேண்டுமே தவிர அடிக்கடி சுற்றுப் பிரயாணம் என்று போவது சரியில்லை என்பதை வற்புறுத்துகிறேன்.

அடுத்தபடியாக தேர்தல் நடக்கிறது என்றால் நடக்கின்றதுபோது பணம் எங்கு பார்த்தாலும் தாண்டவமாடுகிறது. பணம் இப்படித் தாண்டவமாடுவதை லஞ்சம் கொடுப்பதை ஒழிக்க வேண்டுமென்ற அக்கறை இந்தச் சர்க்காருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஓட்டுக்குப் 10 ரூபாய் லஞ்சம் கொடுக்கப்படுகிறதே என்று ஸ்தலத்தில் உள்ள போலீஸ் அதிகாரிகளிடத்தில் சொன்னாலும் நாங்கள் பிராசிக்யூஷன் செய்வதற்கு சட்டம் கிடையாது. வேண்டுமானால் நீங்கள் வழக்குத் தொடர்ந்து கொள்ளுங்கள் என்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களுக்கு பஸ் முதலாளிகளும், மில் முதலாளிகளும் ஆதரவாகக் கூட இருக்கிறார்கள். தேர்தல் காலங்களில் இப்படி லஞ்சம் தாண்டவமாடுவதை ஒழித்தாகவேண்டும். மேலும் எவ்வளவு பெரிய தொகுதியாக இருந்தாலும் பணம் படைத்தவர்கள் வோட்டு வாங்கி விட முடியும். எங்களைப் போன்றவர்கள் ஏழைகள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே தேர்தல் காலங்களில் அதிகமான இன்னல்களுக்கு ஆளாவதாக மதிப்பிற்குரிய என் நண்பர் சொன்னார் என்றால் நாங்கள் படும் இன்னல்கள் சொல்லவே முடியாது. அங்கங்கே பெரிய பெரிய தொகுதிகளாக இல்லாமல் சிறிய சிறிய தொகுதிகளாக இருந்தால் தான் நாங்களும் சட்டமன்றத் தேர்தலில் நல்ல முறையில் ஈடுபட வாய்ப்பு இருக்கும். ஜனநாயகம் நல்ல வளர்ச்சி அடையும். அதன் காரணமாக தொகுதிகளை நல்ல முறையில் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**SRI M. A. MUTHIA CHETTIAR:** தலைவர் அவர்களே, இந்த மானிய விவாதத்திலே நான் கலந்து கொள்வதன் அபிப்பிராயம்—இதர மானியங்களின் மீது பேசுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாதது தான். அதோடு இந்த மானியத்தின்மீது பேசும்போது அரசியலார் நடத்துகிற எந்த இலாகாவைப் பற்றி வேண்டுமானாலும் பேச உரிமை இருக்கிறது. பொதுவாக இப்போ

[Sri M. A. Muthia Chettiar] [13th March 1959

துள்ள அமைச்சரவை திறம்பட எல்லாக் காரியங்களையும் செய்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதைப்பற்றி பாராட்ட வேண்டும். இந்தச் சமயத்தில் நாங்கள் சொல்கிற சில விஷயங்களும் அவர்களுக்கு அதிக உற்சாகம் ஊட்டும் என்பதற்காகவே நான் பேச விரும்புகிறேன்.

இப்போது நம் ராஜ்யத்தில் 11 ஜில்லாக்கள் இருக்கின்றன. சில பல ஜில்லாக்கள் மிகவும் பெரிதாக இருக்கிறது. ஜில்லா அதிகாரிகளுக்கும் கம்யூனிடி வொர்க்ஸ், நாஷனல் டெவலெப்மெண்டு வொர்க்ஸ் என்று பல வேலைகள் அதிகமாகிவிட்டன. அவர்கள் வேலையைத் திறம்படச் செய்வதற்கு ஜில்லாக்களைப் பிரிப்பது அவசியமாகிறது. அதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். அந்தக் கமிட்டியின் சிபார்சுகளை இப்போது ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரப்போவதாகத் தெரிகிறது. அதுவும் கோயம்பத்தூர் ஜில்லாவை கோயம்பத்தூர், ஈரோடு என்று பிரிக்கப் போவதாகத் தெரிகிறது. அது நல்ல ஏற்பாடு. அதுபோல நாங்களும் பல் காலமாக புதுக்கோட்டையை ஒரு தனி ஜில்லாவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு வருகிறோம். ராமநாதபுரம் ஜில்லா மிகப் பெரிதாக இருக்கிறது. அதில் சில தாலுக்காக்கள், திருச்சியில் உள்ள சில தாலுக்காக்கள் இவைகளைச் சேர்த்து புதுக்கோட்டையை தனி ஜில்லாவாக ஏற்படுத்த வேண்டும். காரணம் புதுக்கோட்டையில் எல்லாவிதமான வசதியும் இருக்கிறது. அவை இன்றைக்கு வீணாகப் போகின்றது. உடனடியாக அதைத் தனி ஜில்லாவாகச் செய்தால் எல்லாவற்றையும் நன்கு உபயோகப்படுத்திக்கொள்ள முடியும். என்னைக் கேட்டால் கன்யாகுமரி, நீலகிரி, சென்னை இந்த மூன்றைத்தவிர பாக்கியுள்ள எட்டு ஜில்லாக்களையுமே இரண்டு இரண்டாக 16 ஜில்லாக்களாக்கிவிட்டால் கூட வேலை திறம்பட நடக்க முடியும். அது அவர்கள் சௌகரியம். புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில் காலதாமதம் செய்யாமல் உடனடியாகத் தனி ஜில்லாவாகச் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். இப்போது பல அங்கத்தினர்களும், மந்திரிகளும் விலைவாசிகளைப் பற்றியும், டி. ஏ. யைப்பற்றியும் புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். என்.ஜி.ஓ. க்களுக்கு இப்போது 5 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இது போதாது. விலைவாசி கூடுதலுக்கு ஏற்றபடி இப்போது நான்கில் மூன்று பங்கு டி.ஏ. எம்பிளாயர் கொடுக்கவேண்டும், ஒரு பங்கு எம்பளாயி போட்டுக்கொள்வது, என்பதைப்பற்றி தொழில் மந்திரி வெங்கட்ராமனும் கூடச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் டி.ஏ. கொடுப்பது என்கிற காலம் மாறிவிட்டது. இனி பத்து பதினைந்து வருஷங்களுக்குள் விலைவாசி குறையும் என்று சொல்ல முடியாது. அன்றைக்கு "பே" குறைந்து இருந்தது. டி. ஏ. கொடுத்தோம். இப்போது நாம் இன்றைக்கு இருக்கக் கூடிய புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டு உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளத்தையே "பேசிக் பே" யை உயர்த்திவிட்டு டி. ஏ. கொடுப்பது என்பதையே நிறுத்திவிட்டால் நன்றாக இருக்கும். நாம் மாத்திரம் அப்படி செய்வதில்லை. மத்திய அரசாங்கமும், இதர ராஜ்ய அரசாங்கமும், தனியார் ஸ்தாபனங்களிலுமே அப்படிச் செய்துவிடுவதற்கு நம் அரசாங்கம் முயற்சி செய்தால் நன்றாக இருக்கும். இது என் அபிப்பிராயம். அடிக்கடி இந்தப் பிரச்சனை இல்லாமல் இருப்பதற்கு இது உதவியாக இருக்கும். இன்னும் ஒரு வருஷத்திற்குள் இப்படி பேசிக் பே" யை எல்லாருக்கும் இப்போதுள்ள நிலைமைக்கு ஏற்றபடி உயர்த்தி டி.ஏ. இல்லாதபடி செய்துவிடுவதற்கு நமது அரசாங்கம் முயற்சி செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சார எலக்ட்ரிஸிடி பட்ஜெட் தணிக்கை செய்து வருகிறது என்று சொல்லுகிறார்கள். மின்சார சப்ளை நம் ராஜ்யத்தில் நல்லமுறையில் நடைபெறுவதைப்பற்றி சந்தோஷம் கொள்ளலாம். எவ்வளவோ முயற்சிகள் இந்த இலாகாவினர் செய்துவருகிறார்கள். மின்சாரம் பிறப்பட்ட பகுதிகளிலே கிராம மக்களுக்கு ஏற்பாடு செய்து நல்லமுறையில் நடந்து வருகிறது. இன்னும் அதிகமான வசதி கிராம மக்களுக்கு ஏற்பாடு செய்கிறார்கள் என்று நம்புகிறேன். கம்யூனிடி டெவலெப்மெண்ட் ப்ராஜக்ட்,



13th March 1959] [Sri M. A. Muthia Chettiar]

என்.ஈ.எஸ். ஸ்கீம்-ஐப்பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். பிற்போக்கான பகுதிகளுக்கு சீக்கிரமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் குறையாகவும் சொல்லவில்லை. பெருமைக்காகவும் சொல்லவில்லை. முக்கியமாக பிற்போக்கான பகுதிகளைத் தள்ளிவிடக்கூடாது. என்.ஈ.எஸ். பிளாக் போட்ட இடத்தில் கம்யூனிடி ப்ராஜக்ட் ஸ்கீம் போய்கொண்டிருக்கிறது. என்.இ.எஸ். ஸ்கீம் வராத இடங்கள் அனேகமாக இருக்கின்றன. 60, 67 இடங்களில் என்.இ.எஸ். பிளாக்குகள் போடுவதாக சொல்லுகிறார்கள். இப்போது வரப்போகும் செலக்ஷனிலே பிற்போக்கான பகுதிகளை செலக்ஷன் செய்வார்கள் என்று நம்புகிறேன். உணவு இலாக்கா மந்திரி அவர்கள் எவ்வளவு திறம்பட நடந்துவருகிறார்கள் என்று சொல்லத் தேவையில்லை. அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக உணவின் விலை குறைந்து வருகிறது. ஆந்திர அரசாங்கமும், சென்னை அரசாங்கமும் இந்த இரண்டு அரசாங்கமுமே ப்ரொக்யூர்மெண்ட் பண்ணி அனுப்புகிறோம் என்று மத்திய அரசாங்கத்திடம் சொல்லிவிட வேண்டும். மத்திய சர்க்கார் உணவு இலாக்கா ஒரு வார் பாலிஸி மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொண்டு கேரளாவிற்கு உணவு அனுப்புவதற்கு ஒத்துக்கொள்ளவேண்டும்.

எல்.எம்.எஸ். படிப்பை இப்போது எடுத்து விட்டார்கள். பொதுவாக மெடிகல் ஸ்கூல் ஆரம்பித்து, எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணியவர்களுக்கு 5 வருஷ வைத்திய படிப்பு கொடுத்து அவர்களுக்கு எல்.எம்.பி. கோர்ஸை தாராளமாக முடிக்கலாம். அப்பொழுது அவர்களுக்கு பிழைப்பு கிடைத்துவிடும். இல்லையென்றால் பி. ஏ. பாஸ் செய்தும் பிழைப்பு இல்லாமல் இருக்கும். மதுரை ஜில்லாவிலும், தஞ்சை ஜில்லாவிலும் ஒரு கல்லூரி ஆரம்பித்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இல்லாவிட்டாலும், அங்கே மெடிகல் ஸ்கூல் ஆரம்பிக்கலாம். எல்.ஸி.எம்., ஜி.ஸி.எம். போன்ற பட்டம் பெற்ற டாக்டர்கள்கூட போகமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். நாட்டு வைத்தியம் பற்றி பொதுவாக இந்த மந்திரி சபையார் நடத்துவது பற்றி நான் திருப்தி அடைகிறேன். அவர்களுடைய முயற்சி கூடியவரை பல துறைகளில் வெற்றி அடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். கோதாவரி கிருஷ்ணா திட்டத்தைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

நமது அரசாங்கம் ஸோனல் கவுன்சிலில் பேசி சீக்கிரமாக நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நமது என்ஜினீயர்களும் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்போதே செய்ய வேண்டும்.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** கனம் அங்கத்தினர் சொன்னார்கள் எல்.ஸி.எம். ஜி.சி.எம். என்று சொன்னார்கள். இது எல்.ஸி.எம்., ஜி.ஸி.எம். அல்ல. இது எல்.ஐ.எம்.

**SRI M. A. MUTHIA CHETTIAR :** அவர்கள் கூட கிராமத்திற்கு போவது கிடையாது என்று சொல்ல விரும்புகிறேன். எம்.பி.பி.எஸ். படித்தவர்களை நம்பிக் கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. முப்பது வருஷங்களுக்கு முன் இருந்த நிலைமை வேறு இப்பொழுது இருக்கும் நிலைமை வேறு. இப்பொழுது காலம் மாறிக்கொண்டிருக்கிறது. அதற்குத் தக்கபடி நாம் ஏற்பாடு செய்யவேண்டும். நாம் காண்ட்ராக்டர்களிடம் கண்டிஷன் போட்டிருந்தாலும்கூட வேலை முடிவு பெறாமல் விட்டுவிட்டு செல்கிறார்கள். அப்படி சென்றால் டாமேஜ் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். சில கிராமங்களில் கம்பவுண்டர்கூட வைத்திய வசதி செய்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கூட இல்லாத கிராமங்கள் இருப்பதனால்தான் ஜில்லாக்களில் மெடிகல் ஸ்கூல் ஆரம்பிக்க வேண்டுமென்று திரும்பவும் கூறுகிறேன்.

இன்றைய நீர்ப்பாசனத்திட்டங்களுக்கு ஏராளமான பணம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். காபிடலிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டுமென்று இருக்கிறார்கள். அது 2,010 லட்சம் என்று இருக்க வேண்டிய அச்சுப்பிழையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், என்று

[Sri M. A. Muthia Chettiar] [13th March 1959]

நினைக்கிறேன். நிதி அமைச்சர் 210 லட்சம் என்று சொன்னார்கள். **கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்** நீர்ப்பாசனத்திற்கு 6 கோடி ரூபாய ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். இரண்டொரு பெரிய திட்டங்கள் வளரும் என்று சொன்னார்கள். அதற்கு ஒரு கோடி இரண்டு கோடி ரூபாய் செலவாகும். டில்லிக்கு போய் சத்தம் போட்டால் சீக்கிரம் கிடைக்கும். அமைச்சர் அவர்கள் ஜில்லாவுக்குப் போகும்போது தொகுதி மெம்பர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். சட்டசபையில் அங்கத்தினர்கள் வற்புறுத்தி பேசியிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும். டில்லியில் உணவு டெவலெப்மெண்ட் கவுன்சிலில் அதைக்கட்டாயமாக சொல்லி முடிவு செய்ய வேண்டும். நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

*SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபையிலே கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சோஷியலிசத்தைத்தான் தங்களது கொள்கையாக ஏற்றுக்கொண்டு இருப்பதாக எடுத்துக்கூறினார். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த நாட்டிலே பொருளாதார ஏற்றத் தாழ்வை குறைக்கவில்லை என்றால் நம்முடைய லட்சியம் முன்னேறாது என்று கூறியிருக்கிறார். பொருளாதார ஏற்றத்தாழ்வை அகற்ற வேண்டியதுதான் நம்முடைய கடமை. இன்றைக்கு நம்முடைய பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைக்கவில்லை என்றால் வருங்காலத்தில் பெரும் பொருளாதாரப் பிரச்னைகள் ஏற்படும். பொருளாதார ஏற்றத் தாழ்வை குறைக்க நாம் பல திட்டங்களை ஏற்க வேண்டும். சர்க்காரின் திட்டங்களைப் பார்க்கும் போது பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கை மிகக் குறைவானது. அதிக வருவாயைக் குறைக்கக்கூடிய காலத்தில் குறைந்த சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் அதைத்தான் நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். அந்த மாதிரியான நிலைமை நாட்டில் ஏற்பட வேண்டுமானால், அதாவது ஸோஷலிஸம் நாட்டில் ஏற்பட வேண்டுமானால், அதிகப் பொருளாதார வசதி படைத்தவர்கள் பால் அதிக வரிபோட சர்க்கார் தயங்கக் கூடாது. சர்க்கார் அதற்குத் தயங்கினால் சமுதாயத்தில் கீழே உள்ளவர்களின் நிலையை உயர்த்த முடியாது. அத்தகைய வரிகளைப் போட வேண்டுமானால் அதற்கு மக்கள் நம்முடன் ஒத்துழைக்க வேண்டும். மக்கள் நம்முடன் ஒத்துழைக்க வேண்டுமானால் மக்களுடைய எண்ணங்கள் அதற்குத் தகுந்தபடி இருக்க வேண்டும். நாம் சோஷலிச சமுதாயத்தை ஜனநாயக பூர்வமாக உருவாக்க விரும்புகிறோம். இதை நாம் ஜனநாயக பூர்வமாகச் செய்வதற்கு நமக்கு மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. நமக்கு மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாவிட்டால் நாம் இந்த லட்சியத்தில் தோல்வி காண நேரும். சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வு நிச்சயம் குறைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட வேண்டுமானால், அதிகச் சம்பளம் வாங்கும் அதிகாரிகளின் சம்பளங்களையாவது குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று கனம் மந்திரிகள் 1,500 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். அதே சமயத்தில் 40, 50 ரூபாய் சம்பளம் வாங்கும் ஊழியர்களும் அரசாங்கத்தில் இருக்கிறார்கள். மக்கள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டால், அது, ஸோஷலிஸ லட்சியத்தை அடைவதற்கான ஒத்துழைப்பை மக்களிடமிருந்து நாம் பெறுவதற்கு நிச்சயம் உதவும். இந்த விஷயத்தில் மக்களுக்கு எடுத்துக் காட்டாக மந்திரிசபை செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன். கவர்னரை எடுத்துக்கொள்வோம். கவர்னருக்கு 5,500 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்த மாநிலத்திற்கு ஒரு கவர்னர் தானே இருக்கிறார் ? எனவே இந்த 5,500 ரூபாயைக் குறைப்பதில் மீதம் அதிகம் ஏற்படுமா என்று கேட்கக்கூடும். ஆனால், இவ்வாறு குறைப்பது மக்களின் சிந்தனையை நமக்குக் சாதகமாகத் திருப்புவதற்கும், மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் பெரிதும் அடிகோலும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஆகையால், அரசாங்கத்தில் இருக்கும் பெருந் தொகை



13th March 1959] [Sri A. R. Marimuthu]

சம்பளம் வாங்கும் மந்திரிகளை, அதிகாரிகளை, இவர்களுக்குஆயிரம்தத் ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்கக்கூடாது என்ற நியதியை ஏற்படு வேண்டும். அந்த முறையில் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் ஜனநாயக பூர்வமாக ஸோஷலிசத்தைக் கொண்டுவர வேண்டுமானால் மக்கள் சோஷலிஸத் தத்துவத்தை நன்கு புரிந்துகொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று நான் முன்பே குறிப்பிட்டேன். அதை மக்கள் சரியாகப் புரிந்துகொண்டிரா விட்டால் ஜனநாயகபூர்வமான மாற்றம் வெகுதூரம் தள்ளிப்போகும். இந்த சபையிலுள்ள மக்கள் பிரதிநிதிகள் அங்கத்தினர்கள் கூட, குறிப்பாக சர்க்கார் கட்சி அங்கத்தினர்கள் கூட, சோஷலிஸக் கொள்கையைப் பற்றிப் பேசும்போது வெவ்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்தால் விலைவாசிகள் அதிகரிக்குமாதலால் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்று கூடச் சொல்கிறார்கள். எந்தக் கோளாறினால் இத்தகைய கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன ? சோஷலிஸ லட்சியத்தை அணுக வேண்டிய முறை தெளிவாக்கப்படவில்லை. சோஷலிஸத்தை உருவாக்குவதற்குரிய ஆலோசனைகளைச் செய்ய யார் யார் கூடியிருக்கிறார்களோ, யார் யார் இந்த சபையில் கூடியிருக்கிறார்களோ, அவர்களிடம் கருத்துத் தெளிவு உண்டாகவில்லை என்பதை இதிலிருந்து அறிய முடிகிறது. ஆகவே முதலில் சோஷலிஸ தத்துவத்தை அங்கத்தினர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஸோஷலிசம் என்ன வென்பதை தெளிவாக மக்களிடம் பரப்ப அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ளாக் அபிவிருத்தித் திட்டங்கள் நடக்கும் இடங்களில் கிராமத், தலைவர்கள் பயிற்சி முகாம்கள் நடக்கின்றன. பல பயிற்சி முகாம்களில் நான் கலந்துகொண்டிருக்கிறேன். சோஷலிஸ லட்சியத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறதே, அதைப்பற்றி இந்த முகாம்களில் பயிற்சியாளர்களுக்கு விளக்குவதற்கு உங்களிடம் திட்டம் இருக்கிறதா என்று அந்த முகாம்களில் அதிகாரிகளைக் கேட்டேன். அவர்கள் அதற்கான, திட்டம் எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. எவ்வாறு சாகுபடி செய்வது எவ்வாறு குப்பை சேகரிப்பது என்றெல்லாம் பயிற்சியளிப்பதற்கான திட்டங்கள்தான் எங்களுக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர சோஷலிஸ தத்துவத்தைப்பற்றிப் போதிப்பதற்கான திட்டம் எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று அவர்கள் கூறினார்கள். சோஷலிஸ தத்துவத்தை நாட்டில் தெளிவாகப் பரப்ப அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அரசாங்கத்தின் தொழில் கொள்கையை எடுத்துக்கொள்வோம். இதைப்பற்றி, நேற்று முன்பு பேசியபோதுகூட நான் குறிப்பிட்டேன். நமது முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டும், அதுவும் தொழில் துறையில் முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று நான் சொன்னேன். 1955–56-ம் ஆண்டிலிருந்து 1959–60-ம் ஆண்டு வரையில் உள்ள ஐந்து ஆண்டுகளில் நமக்கு சுமார் 100 கோடி ரூபாய் அதிக ரெவின்யூ கிடைத்திருக்கிறது. மேலும் கடன்களாக 115 கோடி கிடைத்திருக்கிறது. இந்தப் பணத்தில் தொழில் அபிவிருத்திக்காக குறைவாகத்தான் முதலிட்டிருக்கிறார்கள். விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகும்போது "அன்ப்ரொடக்டிவ் காபிடல்"-ஆக-டெட் காபிடலாக—ஏராளமான பணம் போட்டிருக்கிறோம். எங்கே பார்த்தாலும் பல கட்டிடங்களைக் கட்டுவதற்கு பணம் செலவழிக்கிறோம். பணத்தை டெட் காபிடலாக முதலிடுவது விலைவாசி ஏற்றத்தில் கொண்டுபோய்விடாதா? டெட் காபிடலாக இவ்வளவு பணம் என் முதலீடு செய்ய வேண்டும் ? அதிகமான மூலதனத்தை உற்பத்தித் திட்டங்களில் போட வேண்டும்.

மேலும், இன்று நாட்டிலுள்ள பணக்காரர்கள் சர்க்காருடன் ஒத்துழைப்பதில்லை. எதர்வது வரி போட்டால் தங்களுடைய வரிச் சுமை அதிகரிக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். தாங்கள் மூலதனம் சேகரிப்பதற்கு சர்க்கார் சரியான வசதியை செய்துகொடுக்கவில்லை என்றும்

அவர்கள் சொல்கிறார்கள். இதைக் காரணமாகக் காட்டி அவர்களிடமுள்ள பணத்தை தேசத்திற்கு அவசியமான தொழில் துறையில் உபயோகிக்காமல் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றார்கள். யாரிடத்தில் பணம் இருந்தாலும், அதை சர்க்கார் எடுத்துக்கொள்ள விரும்பாவிட்டாலும், அது சமுதாயத்திற்குச் சொந்தமானது. இவ்வாறு மார்க்ஸ் சொல்லியிருப்பது ஒரு புறம் இருக்கட்டும். இதே கருத்தை வினோபாஜி சொல்லியிருக்கிறார். பணக்காரர்கள் தங்கள் பணத்தை உற்பத்தித் திட்டங்களில் முதலிட்டால், சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் அவர்கள் எதையும் உற்பத்தி செய்யமுடியாது. அவர்களுடைய பணம் நல்ல முதலீடுகளாக ஆகி சமுதாயம் முழுவதற்கும் நன்கு பயன்படும்படி சர்க்கார் செய்ய வேண்டும். அதற்குரிய உரிமை சர்க்காருக்கு இருக்கிறது. நாம் தொழில்களை விரிவுபடுத்த வேண்டும். தொழில்களை தகுந்த முறையில் விரிவுபடுத்த வேண்டும். இப்போது ஒரு ஊரில் ஒரு அரிசி மில் இருந்தால் அரிசி மில்லையே வைக்க வேண்டும் என்று அந்த ஊரிலுள்ள பணக்காரர்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். ஒரு ஊரில் ஒரு சினிமாக் கொட்டகை இருந்தால் சினிமாக் கொட்டகையே வைக்க வேண்டும் என்று அந்த ஊரிலுள்ள பணக்காரர்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். ஆகையால் தேவையில்லாதவரையில் முதலீடு செய்யப்படுவது தடுக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்க, வேண்டும். இதில் நாம் ஜனநாயகப் பூர்வமாக செயல்படும்போது பல தடங்கல்கள் இருக்கலாம். இன்னின்ன பிராந்தியங்களில் இன்னின்ன தொழில்களை வளர்க்க வேண்டும், இன்னின்ன தொழில்கள் போதுமான அளவில் இருக்கின்றன என்று முடிவு செய்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பணக்காரர்களிடம் "இன்னின்ன தொழில்களில் மூலதனத்தைப் போடுங்கள்" என்று சொல்லலாம். அதற்கு யாரும் தயாராயில்லாவிட்டால் கார்ப்பொரேஷனை அமையுங்கள். சோஷலிஸ் குணம், முதலாளித்துவ குணம் என்று பல குணங்கள் மனிதர்களிடையே இருக்கின்றன. முதலாளிகளின் குணம் பணத்தை சும்மா வைத்திருக்காமல் இருப்பது முதலாளிகளால், பணத்தை சும்மா வைத்துக்கொண்டிருக்கவே முடியாது. அவர்களால் பணத்தை வைத்துக்கொண்டு தூங்கவே முடியாது. தங்கள் பணத்தை தொழில்களில் போடாவிட்டால் பாங்கிலாவது போடுவார்கள். தங்கள் பணத்தை சும்மா வீட்டிலே வைத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். ஆகவே நாம் முதலாளிகளின் எதிர்ப்பை கொஞ்சம் கூடப் பொருட்படுத்தக்கூடாது. ஆகவே தேசத்தில் இருக்கும் பணத்தை, பொருளாதார வசதியை, நல்ல முறையில் பயன்படுத்த நல்ல திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

11 a.m. மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். அப்படி சுற்றுப்பிரயாணம் செய்வதை நான் குறை கூறவில்லை. மக்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள அது ஒரு வாய்ப்பு அளிக்கிறது. ஆனால், நான் சொல்வது, கட்டிடம் திறப்பதற்கென்றோ, கால் நாட்டு விழாவிற்கென்றோ போகக்கூடாது. பொதுமக்களை சந்திப்பதற்காக ஒரு கூட்டம் போட்டு, எல்லா அதிகாரிகளையும் அழைத்து இருக்கக்கூடிய எல்லாப் பிரச்னைகளையும் அலசிப் பார்த்து அவைகளைத் தீர்த்துக் கொடுக்கவேண்டும், அதற்கான மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்தால், அது மக்களுக்கு நன்மை பயப்பதாகயிருக்கும். அப்பொழுது உங்கள் சுற்றுப்பிரயாணம், மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். நான் எனது தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது மக்கள் என்னிடம் சொல்கிறார்கள், மந்திரிகள் வந்திருந்தார்கள், அவர்களிடம் மனுக்கள் கொடுத்தோம், ஆனால் அவைகள் என்னவாயிற்று என்று தெரியவில்லை என்று குறை கூறுகிறார்கள். உள்ளபடியே மந்திரிகள் போகும்போது, மக்கள் கத்தை கத்தையாக மனுக்களை கொட்டுகிறார்கள்.

மேலும் ஒரு வார்த்தை. தஞ்சை ஜில்லா போர்ட் ஸ்பெஷல் ஆபீஸருக்கு பி.எ. கிடையாது. அவருக்கு ஒரு பி.எ. கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருகிறோம். ஆகவே இதை கவனித்து அவருக்கு ஒரு பி.எ. கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பி.எ. இல்லாத



தால் ஜில்லா போர்ட் வேலைகள் ஸ்தம்பித்துப் போய்விட்டது. ஆகவே, இதுபற்றி உடனடியாக கவனித்து, தஞ்சை ஜில்லா போர்ட் ஸ்பெஷல் ஆபிஸருக்கு ஒரு பி.எ. போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துச் நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் என்று ஒருவர் வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி, வேண்டாமென்று ஒரு சிலர் சொல்லுவது சம்பிரதாயமாகிவிட்டதே தவிர, அதற்கு மாற்று யோசனைகள் வருகிறவரையில், அகில உலகத்தில் ஒரு ஸ்தானம் வகிக்கும் நமது நாட்டில் ஒரு தலைவர், அதுவும் கட்சிச் சார்பில்லாத தலைவராக இருந்து தனது கடமையைப் பணியாற்றும் ஒருவர் நமக்கு இருப்பது அவசியமே, இப்போதைய சூழ்நிலையில், என்று நான் நினைக்கிறேன். ஆக, கவர்னர் பெருமான் அவர்கள் கட்சிக்கு அப்பாற்பட்டவர் என்றிருந்தபோதிலும், கூட அது பற்றி பல சர்ச்சைகள் வருவது மனதிற்குக் கொஞ்சம் வருத்தமாகத் தான் இருக்கிறது. இந்த "இன்ஸ்டிட்யூஷன்" க்கு, வரவு செலவு திட்டத்தைப் பார்த்தால், அதற்கு வேண்டிய செலவு ஏறிக்கொண்டு போகாது குறைந்த அளவில்தான் இருக்கிறது. நமக்கு சில அமைப்புக்கள் வேண்டித்தான் இருக்கிறது. அது பற்றி நான் அதிகமாக சொல்ல நினைக்கவில்லை. ஆனால் விவாதம் கண்யமான முறையில் நடக்க வேண்டுமென்றுதான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்களைப் பற்றிச் சொல்லப்பட்டது. என்னைக் கேட்டால், அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து விட்டால், சம்பளமாக ஒரு "பாக்கெட் மணி" கொடுத்தாலே போதும். அநேக இடங்களில், அவர்களுக்கு "கன்வேயன்ஸ்" வசதி, வீட்டு வசதி போன்ற எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படுகிறது. அதோடு அவர்களை வருமான வரி பாதிப்பதில்லை. **Ministers are maintained by Government** அப்படி வரும்போது உண்மையிலேயே இப்பொழுது இருப்பதை விட, கூடுதல் வசதியோடும், எளிய முறையிலும் நன்கு வாழ முடியும். அதோடு கூட சர்க்கார் செலவு செய்வது கூடுதலானாலும், "மந்திரிகளுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது என்று சொல்லுகிறோம், ஆனால் அதைவிட அதிகம் ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கிறது" என்று சொல்லப்படும் குற்றச் சாட்டும் தீரும். ஆகவே, தமிழ் நாடு இப்படி ஒன்றை ஏன் செய்து காட்டக் கூடாது? ஆகவே, இது பற்றிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மந்திரிகளின் சுற்றுப்பிரயாணம்பற்றி மாரிமுத்து அவர்கள் சொன்னதை நானும் ஆதரிக்கிறேன். அழைப்புக்கள் வரும்போது எங்கும், எப்பொழுதும், போவதை விட இன்னின்ன ஜில்லாக்களுக்கு, இவர் இவர் போக வேண்டுமென்று இருந்தது. அதாவது போன இடங்களுக்கே திரும்பத் திரும்பப் போகாமல் எல்லா இடங்களுக்கும் போக சௌகரியமாகயிருக்கும் முறையில், வருடத்திற்கு ஒரு தடவையாவது எல்லா "பிர்க்கா ஹெட்க்வாட்டர்ஸ்" க்கும் அல்லது ப்ளாக் ஹெட்க்வாட்டர்ஸுக்கோ, அமைச்சர்கள் போகக்கூடிய விதத்தில் சுற்றுப் பிரயாணம் அமைய வேண்டும். அப்பொழுது நாட்டு மக்களோடு அமைச்சர்கள் ஒரு தொடர்பு வைத்துக்கொள்வதற்கு சௌகரியமாயிருக்கும் என்று ஒரு ஆலோசனையை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். நமது சர்க்கார் திட்டமிட்டு வேலைகள் செய்கிறது என்பது உண்மைதான். ஆனால் புதிய வருடத் திட்டங்கள் இறுதியாக ஜில்லா முறையில் வருவதற்குள் ஆறு ஏழு மாதங்களாகிவிடுகின்றன. கிணறு திட்டங்களை எடுத்துக்கொண்டால், சில சமயம் அக்டோபர், நவம்பரில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. மழை காலத்தில் அவைகளை வெட்ட முடியாது. ஆனால், மார்ச் 20-ம் தேதிக்குள் முடிக்க வேண்டுமென்ற முறையில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன, காலதாமதத்தினால். ஹெட்க்வாட்டர்ஸில் தாமதம் நிச்சயமாக இருக்கிறது. நம்மிடம் சர்வே இருக்கின்றன. புள்ளி விவரங்கள் இருக்கின்றன, ஆகவே, 1959-ம் ஆண்டு என்னென்ன திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று முன்கூட்டியே

[13th March 1959

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

திட்டமிட்டு எப்ரல் முதல் தேதியிலிருந்தே அதை அமுல் நடத்துவதற்கு
தக்க விதத்தில், அங்கீகாரம் போன்றவைகளைக் கொடுத்து, அத்திட்டங்களை
ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்படியில்லாமல்,
வருடக் கடைசியில், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் அவசரக்
கோலத்தில் வேலைகள் செய்யக்கூடாது. திட்டங்கள் தீட்டினால் மட்டும்
போதாது. அவைகள் காலாகாலத்தில் போடப்பட்டு காலாகாலத்தில்
செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, செக்ர
டேரியேட்டில் இவைகள் சரியான முறையில் செயல்படுத்தப்படவேண்டும்.
இங்கு சரியானபடி நடந்தால்கூட, ஜில்லாக்களில் சரியானபடி நடவடிக்கை
கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை, அப்படி அங்கு நடவடிக்கைகள் எடுத்துக்
கொள்ளப்பட்டாலும், தாலுக்கா ஹெட்க்வாட்டர்ஸில் தக்க நடவடிக்கைகள்
எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. சில டிபார்ட்மெண்டுகளில், அவைகளின்
பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை சில டிபார்ட்மெண்டுகள் இன்
னும் ஆமை வேகத்தில்தான் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே திட்
டங்கள் நன்றாகயிருந்தபோதிலும், அவைகளின் பலன் மக்களுக்கு நல்ல
முறையில் கிடைப்பதற்கு, அவர்கள் அந்தத் திட்டங்களினால் காலாகாலத்தில்
நன்மை அடைவதற்கு, மந்திரி சபையில் காணப்படும் சுறுசுறுப்பு செகிரட்
டேரியேட்டில் காணப்பட வேண்டும், அப்படி செகரட்ரியேட்டில் காணப்படும்
சுறுசுறுப்பு கிராமங்களில் இருக்கும் கிராம முனிசீப், கர்ணம் போன்றவர்
களிடம் பரவ வேண்டும். தலைமை பீடத்தில் சுறுசுறுப்பு மிக மிஞ்சியிருந்
தாலும், அது கீழே போகப் போக "டைல்யூட்டாகி" விடுகிறது. வேலை
களில், "ஸ்பிரிட் ஆப் அர்ஜன்ஸி" இருக்க வேண்டும். இல்லாவிடில் நமது
திட்டங்களை ஸெண்ட் பர்ஸெண்ட் பலன் அளிக்கக் கூடிய முறையில் நடத்த
முடியாது. கட்டிடங்கள் கட்டினால் அவைகள் பலஹீனமாயிருக்கலாம்.
கணறுகள் வெட்டினால் அவைகளில் போதுமான தண்ணீர் இல்லாம
லிருக்கலாம் என்ற முறையில் வந்து சேரும். கிராமதானக் கிராமங்களை
எடுத்துக்கொண்டால் அங்கு பஞ்சாயத்து அமைத்து, சர்வே செய்வதற்கு
சர்க்கார் திட்டங்கள் போடவில்லை. அவைகளைச் செய்து கொடுக்க வேண்டு
மென்று உத்திரவு போட்டாகிவிட்டது. ஆனால், சர்வே செய்வதிலும்,
ரெஜிஸ்டர் செய்வதிலும். அளவு கடந்து காலதாமதம் ஏற்படுகிறது. இதை
ஒரு உதாரணமாகச் சொல்கிறேன். "ப்ரொஸிஜரெல் டிலே" என்று
சொல்கிறார்களே, அதை அகற்றிவிட்டால், நமது திறமையுள்ள சர்க்கார்
இப்பொழுது செய்வதைவிட நாலு மடங்கு அதிகம் வேலைகளைத் திறம்ம
யாகச் செய்ய முடியும் என்பதை நான் இங்கு வற்புறுத்திக் கூற விரும்பு
கிறேன். அடுத்தபடியாக, நீர்ப்பாசனத்தைப்பற்றி, அன்று சுருக்கமாக
சொன்னதை இன்று சற்று விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். உணவு
உற்பத்தி கணிசமான முறையில் பெருக்கப்படவேண்டும். மூன்று சத விகி
தம், ஐந்து சத விகிதம் என்று உணவு உற்பத்தியைப் பெருக்கினால்
போதாது. முப்பது சத விகிதம், 40 சத விகிதம், 50 சத விகிதம் என்
100 சத விகிதம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். மக்களுக்கு
முதலில் சோறுதான் வேண்டும். மற்ற நாடுகளை எடுத்துக்கொண்டால்,
அங்குள்ளதை விட தமிழ் நாட்டில்தான் நாம் தண்ணீரை சிக்கனமாக
உபயோகித்து விவசாயம் செய்து வருகிறோம் என்பது எனக்குத் தெரியும்.
நமது விவசாயத்திற்கு ஜீவ நாடியாக இருப்பது கிணறுகள்தான்.

(Mr. Speaker in the Chair.)

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இப்பொழுதும் தரிசாகக் கிடக்கின்றன.
ஆனால் அங்கு விவசாயம் செய்ய முடியும். ஆகவே, கோடிக்கணக்கில் செலவு
செய்து பல அணைக்கட்டுகளைக் கட்டி மக்களுக்கு தண்ணீர் கொடுத்து அவர்
களிடமிருந்து "பெட்டர்மெண்ட் லெவி" வசூல் செய்வதுபோல், 200 ஏக்
கர்களுக்கு மேல் இருக்கும் தரிசு நிலங்களையெல்லாம் எடுத்து வருடமொன்
றுக்கு பத்தல்ல, இருபது கோடி வேண்டுமென்றாலும் தயங்காமல் செலவு
செய்து கிணறுகளைச் சர்க்காரே வெட்டி கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்கலாம்.



13th March 1959]

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

அவர்களுக்கு வேண்டிய கடன் வசதிகளை செய்து கொடுத்து கூடு
தல் கிஸ்தி போட்டு நாம் செலவு செய்யும் பணத்தின் வட்டியை ஈடுகட்டிக்
கொள்ளலாம். சிறு நீர்ப்பாசனங்களுக்காக இரண்டு கோடி, மூன்று
கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லாமல் ஆயிரக்கணக்கான
ஏக்கர்கள் தரிசு நிலங்கள் இருக்கிறயிடங்களில் புதுக் கிணறுகள் வெட்டு
வது, இது போன்ற இதற்கு வேண்டிய மற்ற வசதிகளையும் சர்க்கார் செல
விலேயே செய்து கொடுக்க வேண்டும். அது தேசீய சொத்தாகத்தான்
யிருக்கும். ஆகவே, அப்படிக் கூட்டுறவுப் பண்ணைகள் அமைத்தால்,
பரவலான முறையில் மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதோடு கூட,
நிலம் இல்லாத மக்களுக்கும் இது ஒரு பெரிய வரப் பிரசாதமாயிருக்கும்
என்பதை என்னால் எவ்வளவு தூரம் வற்புறுத்தி, அழுத்திச் சொல்ல
முடியுமோ அவ்வளவு தூரம் அழுத்திச் சொல்ல விரும்புகிறேன்.
இன்று காலையில் பேப்பரில் வந்த ஒரு விஷயம் எனக்கு மிகவும் அதிர்ச்சி 11-10
யைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. நம்முடைய உணவுக் கமிஷனர் a.m.
மில்காரர்கள் அரிசியை "புல் பாலிஷ்" செய்து கொடுக்க வேண்டும் என்று
உத்திரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது சட்டப் பிரகாரம்
ஒரு தடவை பாலிஷ் செய்தால் போதும். இரண்டாம் தடவை பாலிஷ்
செய்யக்கூடாது என்று ரைஸ் மில் கண்ட்ரோல் ரீதியில் இருக்கிறது என்று
நினைக்கிறேன். அப்படி இருக்கும்பொழுது புல் பாலிஷ் என்று போட்
டிருக்கக் கூடிய அர்த்தம் என்ன? அதனால் அரிசியினுடைய அளவு
5 சத விகிதம் 10 சத விகிதம் குறையும் என்பதையும் ஆலோசித்தார்களா?
இம்மாதிரி தவறுதலாக பேப்பரில் வந்திருக்கிறதா? இது பற்றி அரசாங்
கம் உடனடியாக ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். ஒரு வேளை அரிசியை சேமித்து வைப்பது என்றால் நல்ல சத்து
துள்ள அரிசியாக இருந்தால் பூச்சி வரும். மல்லிகைப் பூ மாதிரி வெள்
ளையாக பாலிஷ் செய்துவிட்டால் பூச்சி வராது. அப்படியிருந்தால், ஒரு
பாகத்தை நெல்லாகவாவது சேமித்து வைக்க வேண்டும். ஆகவே, "புல்
பாலிஷ்" என்பதை உடனடியாக எடுத்து, இலேசாகப் பாலிஷ் செய்தால்
போதும் என்று உத்திரவு போடவேண்டும். கைக்குத்தல் அரிசியை உப
யோகித்தால், பூமியினுடைய பரப்பு கூடாமலே, அரிசியினுடைய அளவு
100-க்கு 10 பங்கு கூடும். ஆகவேதான், சர்க்கார் இது பற்றிக் கவனிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எம்.எல்.ஏ-க்கள், மந்திரிகளைப் பற்றி சன்னாசி அவர்
கள் சொன்னதைக் கேட்பதற்கு சந்தோஷமாக இருந்தது. அதிலே ஒரு
சிறிது உண்மை இருக்கத்தான் இருக்கிறது. அதற்காக எம்.எல்.ஏ.க்க
ளுக்கு 150 ரூபாய் போதாது, 500, 1,000 கொடுக்க வேண்டுமென்று
சொல்லவில்லை. வருமான வரி ஓரளவுக்கு செலுத்துகின்ற எம்.எல்.ஏ.க்
களைத் தவிர, ஊழியர்களாக வந்திருக்கக் கூடிய எம்.எல்.ஏ.க்களுக்கு
ஏதாவது கன்வேயன்ஸ் அலவன்ஸ் கொடுக்கலாம். அவர்கள் அடிக்கடி
மதராஸ் வரவேண்டி இருக்கிறது. யாரையாவது நம்ப வேண்டித்தான்
இருக்கிறது. யாராவது ஊருக்கு வந்தால், டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்
ஸுக்கு மற்றவர்களை அழைத்துக்கொண்டு போக வேண்டி இருக்கிறது.
வோட்டுக் கொடுத்துவிட்டதால், எம்.எல்.ஏ.க்கள் ஐந்து வருஷம் அவர்கள்
சொன்னதை எல்லாம் கேட்க வேண்டும் என்று கிராம வோட்டர்கள் நினைக்
கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு கன்வேயன்ஸ் அலவன்ஸ் கொடுக்க
வேண்டும். ஓரளவுக்கு வருமான வரி செலுத்துபவர்களுக்குக் கொடுக்க
வேண்டியதில்லை. ஊழியர்களாக இருப்பவர்களுக்கு மட்டும் கொடுக்கலாம
அல்லது அவர்களுக்கு ஒரு "ப்ரீ பாஸ்" கொடுக்கலாம் என்பதையும் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்: அப்பொழுது ஊழியர்களாக இருக்கக்கூடிய
எம்.எல்.ஏ.க்கள் மற்றவர்களைச் சார்ந்திருக்கக் கூடிய அவசியம் வராது.
ஆகவே, நம் மாகாண சர்க்கார் இது பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பற்றி யாரும் சொல்ல மாட்டார்
கள். என் தொகுதியில் ஒரே ஒரு பஸ் ரூட்தான் இருக்கிறது. இந்தப் பக்கம்

[13th March 1959

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

ஒரு பஸ், அந்தப் பக்கம் ஒரு பஸ் போகிறது. மற்ற இடங்களுக்குப் போகவேண்டுமானால், நடந்துதான் போகவேண்டும். சில ஊர்களுக்குத் தான் ஜீப்பில் போகமுடியும். ஆகவே, எனக்கு இது கிடைத்தால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை.

அடுத்தபடியாக, திட்டத்தைப்பற்றிய சில விஷயங்களை, மற்ற மானிய விவாதத்தின்போது நான் பேசவில்லையாதலால், இப்பொழுது பேசுகிறேன். மெடர்னிடி அஸிஸ்டென்ட் ட்ரெயினிங் 1961-வது வருஷத்திற்குப் பிறகு கிடையாது என்று நமது திட்டத்தில் இருக்கிறது. இது அகில இந்திய ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது 3 மாதங்களுக்கு ஒரு தரம் மெடர்னிடி அஸிஸ்டென்ஸ் ட்ரெயினிங்குக்கு பெண்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். திடீரென்று 1961-ல் நிறுத்திவிட்டால், போதுமான உதவி நர்ஸ்கள் கிடைக்க மாட்டார்கள். இப்பொழுது உதவி நர்ஸ்களை இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை 30 பேர்களைத்தான் எடுக்கிறோம். ஆகவே, 2 வருஷத்திற்குப் பிறகு ஒரு நெருக்கடியான நிலைமை (பாடில் நெக்) ஏற்பட்டுவிடும். அநேகமாக ஆஸ்பத்திரி நிர்வாகஸ்தர்கள்கூட இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் ட்ரெயினீஸ் ஆஸ்பத்திரி வேலையில் பங்கு எடுத்துக்கொள்கிறார்கள். ஆதலால் 1961 வரையில் காத்திருக்காமல், வருமுன் காப்போன் என்ற முறையில், ஆக்ஸிலியரி நர்ஸ் ட்ரெயினிங்குக்கு பெண்களை 6 மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது 3 மாதங்களுக்கு ஒரு தடவை எடுத்து அவர்களுக்கு பயிற்சி அளித்து, 2 வருஷங்களுக்குப் பின்னால் ஒரு நெருக்கடி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விமென்ஸ் வெல்பேர் டிபார்ட்மென்டைப்பற்றி நான் இரண்டு வார்த்தைகள் சொல்லாமல் இருக்கமுடியாது. பல வருஷங்களுக்கு முன்னாலேயே ஸ்ரீமான்கள் கோபால் ரெட்டி, குமாரசாமிராஜா ஆகியோர்கள் மந்திரி சபையில் வேலை செய்தபொழுது, நாங்கள் மாதர் நல இலாகாவில் இருக்கிறவர்கள் வருஷா வருஷம் டெப்புடேஷன் போய் அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கிறோம். விஜிலன்ஸ் ஹோம் என்று ஒன்று ஏற்படுத்தி கஷ்டப்பட்டுப் போன, சங்கட்டப்பட்டுப்போன பெண்களை மீட்பதற்கு வழி செய்வதற்கு முன்னால், அந்த நிலையே இல்லாதமாதிரி பார்த்துக்கொள்ள ஜில்லா தோறும் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது அந்த வேலை அரைகுறையாக நடக்கிறதே தவிர, முழு மூச்சுடன் நடக்கவில்லை. குழந்தைகள், பெண்கள், நலத்திற்காக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அதுவும் சரியான முறையில் செலவு செய்யப்படவில்லை. ஆகவே, ஜில்லாவுக்கு ஒரு வேலைத் தேடித் தரும் ஸ்தாபனம் இருப்பது போல, கதி இல்லாத பெண் இருந்தால், அந்தப் பெண்ணை விசாரித்துச் சொல்வதற்கு ஒரு ஸ்தாபனம் ஜில்லா தோறும் பெண்கள், குழந்தைகள் நலனுக்காக வேண்டும். அதோடுகூட வயது வந்த பெண்களுக்கு கைத் தொழில், கல்வி வசதிகள் செய்து கொடுக்க சர்க்கார் அதிகமாக சர்வீஸ் ஹோம்கள் ஏற்படுத்த வேண்டும். இப்பொழுது ஒரு லிஸ்டு கொடுத்திருக்கிறார்கள். அது போதாது. அதை இன்னும் விஸ்தரிக்க வேண்டும். விஜிலன்ஸ் வொர்க்குக்கு அவசியம் இல்லாமல் செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறு கைத்தொழில்கள் பற்றி சில வார்த்தைகள் சொல்லிக்கொள்கிறேன். ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ், சிறு கைத் தொழிலுக்கு 10,000 8,000 கொடுத்தால் ஒரு ஆளுக்கு எவ்வளவு கிடைக்கும் என்று சொன்னார்கள். கோவிந்தசுவாமி அவர்கள் இப்பொழுது இல்லை. அவர்களுக்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். கைத்தறிதான் கதர்த் தறியும் என்பதை தயவு செய்து நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்



13th March 1959]

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

என்று அங்கத்தினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். மில் நூலை உபயோகப்படுத்தி கைத்தறி நெசவு செய்தால் ஒரு குடும்பம் மட்டும்தான் பிழைக்கிறது. கதர் நூலை உபயோகித்து கைத்தறி நெசவு செய்தால், அம்பர் ராட்டையில் நூற்றால் 7 குடும்பங்கள் பிழைக்கின்றன. ஒரு மாதத்திற்குக் குறைந்த பட்சம் 15 ரூபாய் கிடைக்கிறது. முப்பது ரூபாய் கூட சம்பாதிக்கலாம். ஒரு கைத்தறியைக் கதர் தறியாகச் செய்தால் அம்பர் ராட்டையில் நூற்றால் 7 குடும்பங்களுக்கு பிழைக்க வாய்ப்பும் வசதியும் ஏற்படுகிறது. கிஸான் ராட்டையாக இருந்தால் 15, 20 பேர்களுக்கு 4 ரூபாய் முதல் 10 ரூபாய் 15 ரூபாய் கிடைக்கும். ஆகவே, கைத்தறி என்று சொல்லும்போது, மில் நூலை உபயோகித்து நெசவு செய்யும் கைத்தறி என்று மட்டும் நினைத்து, அதற்காக வாதாடாமல், கதர் நூலை நெய்யும் கைத்தறிக்காரர்களையும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். மில் நூலை நெசவு செய்யக் கூடிய கைத்தறியாளர்களுக்கு கிடைக்கக் கூடிய வசதிகள் கதர் நூலை நெசவு செய்யக் கூடிய கைத்தறியாளர்களுக்குக் கிடைப்பதில்லை. கதர் கைத்தறியில் வேலை செய்பவன் அடுத்த நாள் மில் நூல் கைத்தறிக்குப் போய்விடுகிறான். அவனுக்கு அங்கே அதிகக் கூலி கிடைக்கிறது. வசதி கிடைக்கிறது. அதிக வாய்ப்பு இருக்கிறது. கதர்த் தறியில் நெசவாளர்களுக்கு இன்னும் ஸ்டெபிலிடி ஏற்படவில்லை. சர்க்கார் எவ்வளவு தீவிரமாக திட்டம் போட்டாலும், எங்களைப் போல் இருப்பவர்கள் அதனால் பொருளாதாரத் துறையில் ஒரு புரட்சியைக் கொண்டுவர வேண்டுமென்று நினைத்தாலும், மில் நூல் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுப்பதுபோல், கதர் கைத்தறி நெசவாளர்களுக்கும் பிரத்தியேக சலுகைகள் கொடுத்தால்தான் இந்தக் கதர் திட்டம் நல்ல முறையில் அமுலுக்கு வர முடியும். இப்பொழுது இந்தக் கதர்த் திட்டம் நல்ல முறையில் அமுலுக்கு வராமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. மக்களுக்கு கிராமக் கைத்தொழில்களில் அதிக பயிற்சி அளிப்பது மிகவும் அவசியம். கிராமப் புறங்களிலே அவர்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு மூலதனத்திற்கு அதிகமாக அவசியமில்லாமல் லட்சக் கணக்கான மக்களுக்கு வேலை செய்வதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றால், கதர்த் திட்டம் போன்ற கிராமக் கைத்தொழில்கள் தான் நமக்கு உறுதுணையாக இருக்கும். நாம் ஒரே இடத்தில் தேங்கி நிற்க வேண்டுமென்று சொல்லவில்லை. பின்னால் வேண்டுமானால் மாற்றி அமைத்துக்கொள்ளலாம். ஆனால், அந்த சாத்தியக் கூறு 10, 15 வருஷங்களுக்குக் கூட கிடையாது. ஆகவே, நாம் எல்லோரும் கைத்தறி போன்றுதான் கதர்த்தறி என்பதை மனதில் வைத்து அதற்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். கதர் தறிக்குத்தான் இன்னும் அதிகமாக பாதுகாப்பு வேண்டியிருக்கிறது. அது இன்னும் ஒரு நிரந்தரமான நிலைமைக்கு வரவில்லை. மில் நூல் கைத்தறியாளர்களுக்குச் செய்து கொடுத்திருக்கும் வசதிகளைப் போல் இன்னும் அதிகமான வசதிகள் கதர்த் தறிக்கு அளிக்க வேண்டும். கிராமப் புறங்களிலுள்ள மக்கள் நகரங்களில் வந்து சேரிகளை ஏற்படுத்தாமல், அவர்கள் தங்கள் கிராமங்களில் வீட்டிலேயே இருந்துகொண்டு கண்ணியமான முறையில் வேலை செய்யக் கூடிய வாய்ப்பு அவர்களுக்கு கிராமக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலம்தான் கிடைக்கும். ஆகவே, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும்போது, சந்தோஷமாக, மெண்டல் ரிஸர்வேஷன் இல்லாமல், மனத் தயக்கம் இல்லாமல் பரிபூரணமாக ஆதரவுடன் செய்து கொடுக்க வேண்டும். இம்மாதிரி நல்ல முறையில் நாம் திட்டங்களை நிறைவேற்றினால், நம்முடைய மாகாணங்களிலுள்ள திட்டங்களை அமுல் நடத்துவதில் மட்டுமல்ல, மற்ற மாகாணங்களில் திட்டங்களை அமுல் நடத்துவதில் இருக்கிற திறமையும் கூடும். நமக்கு இன்னும் பெருமை உண்டாகும். நாம் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை, நம்மிடத்தில் இன்னும் 4 பங்கு வேலை செய்யக் கூடிய திறமையும், வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, அவாய்டபிள் டிலேய்ஸ் தவிர்க்கக் கூடிய தாமதங்களைத் தவிர்த்து துரிதமாகக் காரியங்களைச் செய்வதற்கு ஒரு திட்டம் போட வேண்டும். ஒரு திட்டம் போட்டால் எத்தனை தினங்களுக்குள் அதுஜில்லாவில், தாலுகாவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஒரு முறையை நிர்ணயிக்க வேண்டும்.

[13th March 1959

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

கிராமப் புறங்களிலே டாக்டர்கள் இல்லை என்ற புகார் வந்துகொண்டிருக்கிறது. அந்தக் குறை நீக்கப்பட வேண்டும்.

*SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பு பேசியவர்கள் சொன்னது போல் அமைச்சர் அவர்களுடைய சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி யானும் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்களுடைய சுற்றுப் பிரயாணம் இப்பொழுது எப்படி நடக்கிறது என்றால், அமைச்சர்களை எங்கெங்கு கூப்பிடுகின்றார்களோ, எங்கெங்கு அலுவல்கள் இருக்கிறது என்று கருதுகின்றார்களோ, அந்த இடங்களுக்கு மட்டும்தான் செல்கின்றார்கள். பொதுவாக ஒவ்வொரு அமைச்சரும் பல இடங்களை இது வரையிலும் பார்வையிட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் அந்த இடங்களை எல்லாம் பார்வையிடாமல் இருப்பதால் அந்த இடங்களிலுள்ள மக்கள் தேவைகளை சரியானபடி உணர்ந்துகொள்ள முடிவதில்லை. உதாரணமாக பல பிற்பட்ட இடங்களையும் அமைச்சர்கள் வந்து பார்வையிடாததினால் அவர்களுடைய குறைகள் எல்லாம் கவனிக்கப்படாமல் அப்படியே விடப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முன்பு ஒரு தடவை இந்தச் சபையில் சொல்லப்பட்டது. அதாவது பிற்பட்ட இடங்களினுடைய பட்டியல் ஒன்று தயாராகிக்கொண்டிருக்கிறது. அது தயாரானவுடன், அந்த இடங்களுக்கு எல்லாம் சென்று அங்குள்ள குறைகளை அறிந்து அதற்குத் தக்கபடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அத்தகைய பட்டியலை உடனே தயார் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்விதம் தயாரிக்கப்படுகிற பட்டியலில் இருக்கின்ற பிற்பட்ட பிரதேசங்களை எல்லாம் அமைச்சர்கள் தவறாது பார்வையிட்டு அந்த இடங்களில் இருக்கின்ற குறைகளை எல்லாம் போக்குவதற்கு திட்டமிட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பிற்பட்ட பிரதேசங்களில் சில மிகவும் வரண்ட பிரதேசங்களாக இருக்கின்றன. அத்தகைய பிரதேசங்களில் எல்லாம் வேலை இல்லாமை மிகவும் அதிகமாக இருக்கின்றன என்பதை நான் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நீர்வளம் இல்லாவிட்டாலும் கூட அந்தப் பிரதேசங்களில் எல்லாம் ஏதாவது சிறிய கைத்தொழில்களை ஏற்படுத்திக் கொடுத்தால், அவை கதர் தொழில் போன்ற தொழில்களாக இருந்தாலும் சரி, சிறிய கைத்தொழில்களாக இருந்தாலும் சரி, ஏதாவது கைத்தொழில்கள் ஆரம்பித்து அவர்களுக்கு வேலை வசதி செய்து கொடுத்தால் மிகவும் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமுதாய நலத் திட்டங்கள், தேசீய அபிவிருத்தித் திட்டங்கள், போன்றவைகள் பல இடங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆனால் பிற்பட்ட பிரதேசங்களில்தான் இது அதிமாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று நாம் இங்கு பறைசாற்றிக்கொண்டிருந்தாலும்கூட நடைமுறையில் பிற்பட்ட பிரதேசங்களில் இது அதிகமாக ஆரம்பிக்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு ஸ்தல அபிவிருத்திக்காக 35 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நான் அதை மகிழ்ச்சியோடு வரவேற்றாலும்கூட இந்த 35 லட்ச ரூபாயும் குடி தண்ணீர் திட்டத்திற்காக உபயோகப்படுத்தப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்பது, சாலை போடுவது, கட்டிடம் கட்டுவது போன்ற வேலைகளுக்கு எல்லாம் செலவு செய்ததுபோக பாக்கித் தொகை இருக்குமானால் அடுத்த ஆண்டில் மிச்சமாகப் போய்விடுகிறது. அவ்விதமில்லமல் எல்லாத் தொகையுமே ஸ்தல அபிவிருத்திக்காக அடுத்த ஆண்டில் மிச்சமுள்ள வேலைகளுக்கு பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்ட மன்றத்தில் பற்றுக்குறை ஏற்பட்டிருந்ததின் காரணமாக அந்த மாவட்ட மன்றத்தில் இட வளர்ச்சி திட்டத்திற்கு செலவு செய்வதற்காக மான்யம் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தது. அதாவது திட்டத்திற்கு செலவு செய்யும் தொகையில் நாலில் ஒரு பங்கை மாவட்ட மன்றமும், மீதியை அரசாங்கமும் கொடுக்கும் என்ற ஏற்பாட்டின்படி, ஒத்துக்கொள்வதற்கு வசதி இல்லாத காரணத்தால் அங்கு இந்தத் திட்டம் எவ்வளவு தேவை என்பதை சான்றுகளோடு எடுத்துக் காட்டி மான்யம் தரப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டது. சர்க்காரிலிருந்து இதற்கு ஐந்து லட்ச ரூபாய் சென்ற ஆண்டில் ஒதுக்கி இருந்தார்கள். அவ்விதம் இருந்தும் அங்கு 56 ஆயிரம் ரூபாய்க்கு வாக்களிக்கப்பட்ட வேலைகளுக்குப் பணம் கொடுக்கப்படாமல் இருந்தது. இந்த ரூபாயை உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று சர்க்காருக்கு எழுதி ஓராண்டு காலமாகியும் சர்க்காரிலிருந்து எந்த விதமான பதிலும் வரவில்லை. இதன் காரணமாக ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலைகளைத் தங்கள் செலவில் வேலை செய்து கொடுத்த ஒப்பந்தக்காரர்கள் இன்றைக்கு ஏமாற்றமடைந்திருக்கக் கூடிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இடவளர்ச்சித் திட்டம் அந்தப் பகுதியில் எவ்வளவு அவசியம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை. ஆகவே இந்த வேலைகளுக்காக மாவட்ட மன்றத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய தொகையை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



13th March 1959] [Sri K. R. Viswanathan]

அடுத்தபடியாக, நமது அரசாங்கம் இன்று நாட்டிலிருக்கின்ற மக்களிடையே ஒரு நல்ல எண்ணத்தை உண்டுபண்ணி இருக்கிறது. நல்ல முறையில் அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது. அதே போன்று அரசாங்க தலைமை அதிகாரிகளும் ஒழுங்காக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் பொதுவாக மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது என்றால், இந்த அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சர்களும், தலைமை அதிகாரிகளும்தான் காரணம் என்று சொல்ல வேண்டும். முன் காலங்களில் எல்லாம் இருந்தது போல் இல்லாமல் கட்சி பாகுபாடின்றி எல்லா கட்சிக்காரர்களுக்கும் ஒரே முறையில் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமையில் தான் இந்த எண்ணம் மக்களிடேயே தோன்றியிருக்கிறது. இம்மாதிரி எண்ணம் நாட்டில் தோன்றியிருப்பது மகிழ்ச்சிக் குரிய விஷயம். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலைமையை விட இப்போது மிகவும் மாறுபட்டிருக்கிறது என்பதை யாரும் மறைக்க முடியாது. அதே முறையில்தான் மேல் நிலையில் இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் தாங்கள் ஒழுக்கமாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தோடு காரியங்களை எல்லாம் நிறைவேற்றி வருகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் கீழ்த் தட்டிலிருக்கிற அதிகாரிகளுடைய போக்கு சரியாக இல்லை. அவர்கள் உண்மையாகவும், ஒழுக்கமாகவும், நேர்மையாகவும், நடந்துகொள்வதில்லை என்று ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். இவ்விதம் கீழ்த் தட்டில் இருக்கின்ற அதிகாரிகள் சரியாக நடந்துகொள்ளவில்லை என்றால், அதற்குப் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டியவர்கள் அவர்களுக்கு மேல் இருக்கின்ற அதிகாரிகள் தான் என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆங்காங்கு கீழ்த் தட்டில் இருக்கின்ற அதிகாரிகள் பாராமுகமாக இருந்துவருகிறார்கள் என்றால் அவர்களுக்குச் சரியான உத்திரவுகளைக் கொடுத்து இன்னென்ன மாதிரியாக நடக்க வேண்டும் என்று மேல் அதிகாரிகள் வற்புறுத்த வேண்டும். அவ்விதம் ஒரு விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்க அதிகாரிகள் என்றால் ஒருவரும் பாராமுகமாக இருத்தல் கூடாது. மற்றொரு சந்தர்ப்பத்தில் இங்கு கனம் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள் ஒவ்வொரு பேப்பரும் சரியானபடி கவனிக்கப்படுவதில்லை என்று. இந்த நிலைமையை அமைச்சர்கள் புறக்கணித்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நாட்டிலுள்ள நெருக்கடியான நிலைமை என்னவென்றால், சிபார்சு இல்லாமல் எந்தக் காரியமும் நடக்காது என்கிற ஒரு நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக பள்ளிக்கூடங்களில் இடம் கிடைக்காமல் இருந்தாலும் சரி, மற்றும் இது போலுள்ள எந்தக் காரியமாக இருந்தாலும் சரி, சிபாரிசு இல்லாமல்

ஒன்றுமே நடைபெறுது என்கின்ற ஒரு செய்தி பரவலாக எங்கும் பரவிக்
கொண்டிருக்கிறது. இத்தகைய நிலை நாட்டில் இருக்குமானால், இம்
மாதிரியான ஒரு கெட்ட எண்ணம், ஒரு கெட்ட அபிப்பிராயம் பரவிக்
கொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டு அதைப்பற்றி ஒன்றும் தெரி
யாது என்று சொல்லிக்கொண்டிருக்க முடியாது. ஆகவே இதில் சரியான
கவனம் செலுத்தி தலைமை அதிகாரிகளும், அதே போல் அமைச்சர்களும்
இதில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக தேர்தலைப்பற்றி சொல்லுவதாக இருந்தால்,
இன்றைக்கு இருக்கின்ற சட்டசபை தொகுதிகள் எல்லாம் ஓரளவுக்கு
பெரிதாகவே காணப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய அவ
சியமில்லை. சாதாரணமாக தேர்தல் காலத்தில் ஒற்றைத் தொகுதியாக
இருந்தால் ஒரு அபேட்சகர் அந்தத் தொகுதியிலுள்ள ஒவ்வொரு கிராமத்
திற்கும் சென்று மக்களை பார்க்கவேண்டுமென்றால் குறைந்தது 40 நாட்க
ளாவது ஆகும். அதே போன்று இரட்டை தொகுதியாக இருந்தால்
சுற்றிப் பார்ப்பதற்கு குறைந்தது ஆறு மாதகாலமாகும். இவ்விதம் இருந்
தால் இம்மாதிரிப்பட்ட தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்
தினர்கள் அந்தந்த தொகுதிகளில் சென்று எல்லா கிராமங்களுக்கும்
11-30 p.m. நல்ல முறையில் கடமை ஆற்ற முடியாது. இதனால் மக்களுக்கு திருப்தி
ஏற்பட முடியாது. ஆகவே சட்டசபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும்
சரியான முறையில் மக்களுக்கு சேவை செய்வதற்கு ஏதுவான முறையில்
சட்டசபை தொகுதிகளை மாற்றி சிறிதாக அமைத்தால் அவர்களுக்கு அந்த
தொகுதியிலுள்ள மக்களுக்கு சேவை செய்வதற்கு நல்ல வாய்ப்பாக
இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரட்டைத் தொகு
தியை ஒரே தொகுதியாக, தாழ்த்தப்பட்ட மக்களையும் மற்ற பொதுத்
தொகுதிக்கு நிற்கிறவர்களையும் சேர்த்து வைத்து இரட்டைத் தொகுதி
என்று அமைத்திருக்கிறார்கள். இன்னும் சில காலத்திற்காவது, தாழ்த்
தப்பட்டோருக்கு இடம் கொடுக்கும் வரையிலும் இந்தத் தொகுதிகளை
இரண்டாகப் பிரித்து ஒரு தொகுதியில் பொதுத் தொகுதியில் நிற்கிறவர்
களும், இன்னொரு தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் போட்டி
யிடும்படிச் செய்து விட்டால் இந்த இரட்டைத் தொகுதி தொல்லை திருப்தி
கரமாக இல்லாத நிலை சமாளிக்கப்பட்டு விடும் என்று இங்கே எடுத்துக்
காட்டிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிற முறைபற்றியது.
இன்றைக்கு இது ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகிறது என்று
சொல்லப்படுகிறது. சில தொகுதிகளில் தீவிர நடவடிக்கை எடுக்கப்படு
கிறது. ஐந்தாண்டிலே ஒரு ஆண்டுக்கு மட்டும் தீவிரமான நடவடிக்கை
எடுக்கப்பட்டு, மற்ற ஆண்டுகளில் ஆண்டு தோறும் சாதாரண நடவடிக்கை
எடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. ஐந்தாவது ஆண்டிலே இருக்
கிற அந்த வாக்காளர் பட்டியலைப் பார்த்தால் அதிலே பல தவறுகளைக்
காண்கிறோம். இந்தத் தவறுகளுக்குக் காரணம் ஊதியமில்லாமல் இந்த
முக்கியமான அலுவலைச் சிறு அதிகாரிகளைச் செய்யக்கேட்டுக் கொள்வதால்,
அவர்கள் நல்ல முறையில் சரிவரச் செய்ய முன் வருவதில்லை. இந்த
வேலை நாட்டுக்கு மிக அவசியமான வேலை. ஆகவே, ஓரளவுக்கு அதிகாரி
களுக்கு ஊதியம் கொடுத்து நல்ல முறையில் இந்த வாக்காளர் பட்டியலைத்
தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த தேர்தல் காலத்திலே ஓட்டுச் சாவடிகள் அமைக்
கப்படுகின்றன. ஓட்டுச் சாவடிகளுக்கு முன்னால் மர நிழலோ மற்றப்படி
தங்கக் கூடிய வசதிகளோ இல்லாவிட்டால் வெய்யிலிலோ அல்லது மழை
யிலோ காத்துக் கொண்டிருந்து வாக்குகளைக் போட வேண்டிய அவசியம்
இருக்கிறது. ஓட்டுச் சாவடிகள் கட்டப் பணம் செலவழிக்கும் போது





வாக்காளர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்து வசதியோடு வாக்கு
களைப் போட ஏற்பாடு செய்து கொடுப்பதில் அதிகம் செலவாகி விடாது.
ஆகையால் அத்தகைய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, இறுதியாக, மாகாணத்தில் உத்தியோகஸ்தர்களை அமர்த்துகிற
மதராஸ் பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் நல்ல முறையில், தனிப்பட்ட முறை
யில், சுதந்திரமான முறையில் நடந்து வருவது பற்றி மிகவும் பாராட்டு
கிறேன். இப்போது இதிலே மூன்று இடங்களில் இரண்டு உறுப்பினர்கள்
மட்டும்தான இருக்கிறார்கள். காலியாக இருக்கக் கூடிய இடத்தை இன்
னும் பூர்த்தியாக்காமல் இருப்பது மிகவும் நன்றாக இல்லை. அந்தக் காலி
இடத்தை மிக விரைவில் பூர்த்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைப்
கேட்டுக் கொண்டு நான் அமருகிறேன்.

*Sri T. VELUCHAMY : கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பு
வாய்ந்த எதிர்க் கட்சி நண்பர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணைகளை
நான் ஆதரிக்கிறேன். விரும்புகிறேன். அவைகளில் முக்கியமாக நான்
பெரிதும் முக்கியமாகக் கருதுகிற, அன்பழகன் அவர்கள் கொண்டு வந்த
வெட்டுப் பிரேரணையில் அவர்கள் சொன்ன காரணமான "To point
out the failure of the Government to create democratic atmosphere
in the State" என்ற காரணத்தின் அடிப்படையில் பேச ஆரம்பிக்கிறேன்.
நிர்ணயப்படி ஜனநாயக ரீதியில் பல்வேறு தொகுதிகளிலும் பாரபட்சமற்ற
முறையில் ஆட்சி நடத்த வேண்டியதில் சர்க்கார் சரியானபடி, ஜனநாயக
வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய வகையிலும், ஜனநாயக மணம்
கமழக் கூடிய முறையிலும் ஆட்சி நடத்தவில்லை என்ற குறிப்பிட
விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே எந்தெந்தத் தொகுதிகளில் ஆளும் கட்சிக்காரர்கள்
ஜெயித்தார்களோ அந்தத் தொகுதிகளிலுள்ள காரியங்கள் சரியாக நடை
பெற்று கவனிக்கப்படுகின்றன. ஆனால் எதிர்க் கட்சி மெம்பர்கள் ஜெயித்து
வந்த தொகுதிகளில் சர்க்கார் தாங்களாகவே அங்கேயுள்ள குறைகளை
கவனிக்க வேண்டியது ஒரு புறம் இருக்க, மெம்பர்கள் எடுத்துச் சொன்ன
பிறகும் கூட முழுக்க முழுக்க புறக்கணிக்கிறார்கள் என்பதைத் தாழ்மை
யோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுவும் என்னைப் போன்று தேர்தல் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்
களுடைய தொகுதிகளில் நடைபெறவேண்டிய காரியங்களில் இந்த எதிர்க்
கட்சி மெம்பர்கள் காலத்தில் இந்த நன்மைகளைச் செய்து விட்டால் மீண்டும்
வரக் கூடிய தேர்தல்களில் இந்த எதிர்க்கட்சி மெம்பர்கள்தான் நன்மை
செய்தார்கள் என்று நினைத்து அவர்களுக்கு ஓட்டுப் போட்டு விடுவார்கள்,
என்ற அச்சத்தின் காரணத்தினால் இந்தத் தொகுதிகள் அறவே புறக்
கணிக்கப்படுகின்றன.

என்னுடைய தொகுதி நெல்லை ஜில்லாவில் தென்காசி தாலூகாவின்
கீழ் பகுதியும், சங்கரன்கோவில் தாலூகாவின் கீழ் பகுதியும் கொண்
டது. அந்தப் பகுதியில் ஓரிரு பகுதிகளில் சிற்றூறு பாசன வசதி பெற்ற
இடங்களைத் தவிர பெரும்பாலான பகுதிகளில் தெய்வாதீனமாக, சோதனை
யாக சென்ற 15 வருஷ காலமாக மழை மிகவும் அற்ப சொற்பமாக
இருந்து வருகிற காரணத்தினால் மீண்டும் மீண்டும் பஞ்ச நிலைமை ஏற்
பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டில் கூட மழை மிகவும் சொற்
பம் தான் பெய்திருக்கிறது. ஆகவே, அங்கேயுள்ள விவசாயிகள் தங்க
ளுடைய உடைமைகள், மாடுகள், இவைகள் எல்லாவற்றையும் விற்று விட்டு
அவர்கள் சாரி-சாரியாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை
மையை சர்க்கார் கவனிக்க வேண்டிய கடமை இருந்தும் கூட, அவர்கள்
தக்க நிவாரண நடவடிக்கைகள் எடுக்க வில்லை. இதற்குள் அங்கே பஞ்ச
நிவாரண வேலைகளை ஆரம்பித்து மக்களுக்கு வேலைகள் கொடுத்து அவர்கள்
வெளியே போகாமல் இருப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்,

[Sri T. Veluchamy] [13th March 1959

அது போக வரி வஜா செய்வதோடு அந்தப் பகுதிகளிலே கடன் வசூல்களையும் ஒத்தி வைத்து அவசியமான தகுதியான விவசாயிகளுக்கு—அதாவது ஏழ்மை நிலைமையில் கடன்களைத் திரும்பத் கொடுக்கக்கூடாத நிலைமையில் இருக்கிற விவசாயிகளுக்கு, மீண்டும் மீண்டும் அங்கே பஞ்சம் காரணமாக அவர்களுடைய பொருளாதார நிலை ரொம்பக் கீழ்ப்பட்டு கடன்களைத் திரும்பக் கொடுக்கக் கூடிய நிலைமையில் இல்லாமல் அவர்கள் நிலங்களை கடனுக்காக சர்க்காருக்கு விட்டு விடக் கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தால் இந்த மாதிரியான ஏழை விவசாயிகளுக்கு அந்தக் கடன்களை வசூல் செய்யாமல் "ரைட் ஆப்" செய்ய வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது.

கிட்டத் தட்ட, என்னுடைய தொகுதியில் பெரும்பாலும், நீலித்த நல்லூர், பழங்கோட்டை பிர்க்காவில், கிட்டத் தட்ட பாதி விவசாயிகளின் நிலங்கள் சர்க்காருடைய கடன் பொறுப்பில் இருக்கின்றன. ஏனென்றால் அங்கே பிளாக் டெவலெப்மெண்ட் ஸ்கீமின் அடிப்படையில் அவர்கள் வெகுவாக கடன்களை வாங்கி வாங்கி அவர்களுடைய நிலங்களைச் சர்க்கார் பொறுப்பில் விட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் அவர்கள் அந்தக் கடன்களை எதற்காக வாங்கினார்களோ அதற்குரிய, அதாவது விவசாய காரியங்களுக்கான உரங்கள், மற்ற சாமான்கள் வாங்கி விவசாயத்தில் போடுகிறார்கள். வானம் பார்த்த பூமியாக இருக்கிற காரணத்தினால், பின் மழை இல்லாத நிலைமையில் பயிர்கள் பெரும்பாலும் வழக்கமாக கறுகி விடுகின்றன. போட்ட பணம் அவர்களுக்கே திரும்பக் கிடைக்க முடியாத நிலை மேற்கண்ட காரணத்தால் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே அந்தப் பகுதிகளில் எந்தெந்த விவசாயிகள் மிகவும் ஏழ்மை நிலைமையில், அதாவது சர்க்கார் கடன்களை திரும்பக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்களோ அவர்களுடைய கடன்களை "ரைட் ஆப்" செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இரண்டு பிர்க்காக்களும் சென்ற ஆறு வருஷ காலமாக பிளாக் டெவலெப்மெண்ட் ஸ்கீமில் இருக்கின்றன. இந்த ஆறு வருஷ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிகள் இருந்தும் அங்கே இப்போது சென்று பார்ப்பீர்களேயானால் கூறையோ, கதவோ இல்லாத பாடசாலைகள், மண் சுவர் உள்ள பாடசாலைகளைப் பார்க்கலாம். ரோடுகள் இல்லாத பல கிராமங்களை அங்கே காணலாம். சில கிராமங்களில் குடி தண்ணீர் கிணறுகள் கூட இல்லாத நிலை இருக்கின்றன. இந்த மாதிரி அத்தியாவசியத் தேவைகளைக் கூட அங்கே உள்ள மக்கள் பெறவில்லை. அவர்களிடம் திட்டத்தில் ஒத்தாசை மனப்பான்மை இல்லை என்பதில்லை. அவர்களிடம் பணம் இல்லாத காரணத்தினால், அவர்கள் போதிய உதவித் தொகை அதாவது கூடிய விகித உதவித் தொகை கொடுக்க முடியாத நிலைமையில் அவர்கள் இருக்கும் காரணத்தினால் இந்த அத்தியாவசியமான தேவைகளைக்கூட அவர்கள் பூர்த்தி செய்யமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்த நாட்டில் பல்வேறு அபிவிருத்திப் பகுதிகள் எல்லாவற்றுக்கும் ஒரே "ப்ளாட் ரேட்" ஆக, "காண்ட்ரிப்யூஷன் ரேட்" உதவித் தொகை விகிதம் இருப்பதை மாற்றி பிற்பட்ட பகுதிகளுக்கு "கன்ஸெஷன் இன் காண்டிரிப்யூஷன்" உதவித் தொகை விகிதத்தில் குறைப்பு செய்து கொடுக்க வேண்டும். அதாவது, உதவித் தொகையில் "டோகன் காண்ட்ரிப்யூஷன்" மாதிரி, குறைந்த அளவு வாங்கிக்கொண்டு; அவர்களுடைய அத்தியாவசிய வேலைகளுக்கு அவர்களுக்குச் சலுகை அளித்து அந்த தேவைகளை நிறைவேற்ற வேண்டியது அவசியமாக இருக்கிறது. இவற்றிற்கு முன்பாகவே, அரசாங்கம் கவனித்திருக்க வேண்டும். அவற்றைச் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் மக்களும் நானும் மனு மூலமாகவும் நேரிலும் சொல்லியும் இதுவரையில் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதுபோக, என்னுடைய பகுதிகள் வேறு பல காரியங்களிலும் புறக்கணிக்கப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் அரசியல் காரணங்கள் தான் காரணம். ஹரிஜன இலாகா மூலமாக வீடு கட்டும் திட்டம் நடைபெறுகிறது.



13th March 1959] [Sri T. Veluchamy]

இந்தத் திட்டத்தின் முழு பயனையும் ஹரிஜன மக்களும், வேறு பிற்பட்ட மக்களும் அதிகமாக வசிக்கும் எங்கள் பிராந்திய மக்கள் அடையவில்லை. சரியாகப் பார்த்தால் நெல்லை ஜில்லாவில் என்னுடைய பகுதியில்தான் ஹரிஜனங்களும் மறவர்களும் அதிகமாக வசிக்கிறார்கள். குறிப்பாக, பழங்கோட்டை, நீலிதநல்லூர், ஆலங்குளம் பகுதிகளில் பல கிராமங்களில் வீடுகள் கட்டவேண்டிய ப்ரோபோசல் முதலில் இருந்தும் பின்னால் யாது காரணத்தினாலோ என்னமோ அந்த ப்ரொபோசல் கைவிடப்பட்டது.

அதற்கடுத்தாற்போல், தொழிற்சாலைகள் கட்டி இந்த மக்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய திட்டங்கள் அதாவது தீப்பெட்டித் தொழிற்சாலை, செங்கல் சூளை, சிமிட்டித் தொழிற்சாலை, இப்படியாக மத்திய அரசாங்க மான்ய உதவி பெற்று நடைபெறககூடிய அநதத் தொழிற்சாலைத் திட்டங்களில் பல்லாயிரக்கணக்கில் ரூபாய்கள் இருந்தும், எங்கள் பகுதியில் யாதொரு திட்டமும் எடுக்கப்படவில்லை. அநதப் பகுதியில் எடுக்கப்பட வேண்டும் என்று பல முறை வற்புறுத்தப்பட்டும் இருககிறது. ஹரிஜன, மறவர் மக்கள் நெருங்கி வாழும் இத்தகைய பகுதிகளில் பயன்படக்கூடிய அந்தத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லையென்றால், அந்தத் திட்டத்தின் நோக்கமே வெற்றிபெறாத ஒரு நிலைமையில் போய் விடுகிறது என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இதுபோக எனது தொகுதியில் கிட்டத்தட்ட 15 மைல் நீளம் 15 மைல் அகலத்திலுள்ள ஒரு பிரதேசத்தில் ஒரு ஹைஸ்கூல் கூட கிடையாது. சாதாரணமாக ஒரு குடும்பத்தை நாம் முன்னேற்ற வேண்டுமானால், அந்தக் குடும்பத்திலுள்ள குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் நன்றாகப் படித்து நாட்டிலுள்ள பல்வேறு தொழில்களிலே அறிவு பெற்று, நல்ல முறையிலே ஜீவனம் செய்யக்கூடிய முறையில், வாழ்க்கையிலே முன்னேறக்கூடிய பண்புகள் வளரக்கூடிய முறையில் இருக்கவேண்டுமானால் கல்வி புகட்ட வேண்டியது அவசியம். கல்வி தான் சரியான அபிவிருத்தி அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது. நமது நாட்டை முன்னேற்றவேண்டும் என்று நாம் தீட்டியிருக்கும் தேசீய வளர்ச்சித் திட்டத்தில் கல்வியைக் கூடிய அளவில் நிறைவேற்றக் கூடிய லட்சியம் இருந்த போதிலும், மிகவும் பிற்பட்ட மக்கள் இருக்கும் எங்கள் பகுதியில், ஒரு ஹைஸ்கூல் கூட இல்லாத இந்த பிரதேசத்தில், ஹைஸ்கூல் அமைக்கவேண்டியது அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சம் என்பதை சர்க்கார் உணர்ந்து இதற்கு முன்பாகவே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை மந்திரி அவர்களிடம் நான் சொல்லியும் அவாகள் கவனித்தாகத் தெரியவில்லை. இம்மாதிரியான நிலைமையில் மிகுந்த பாரபட்சம் நிலவுகிறது. எதிர்க்கட்சி மெம்பர்களைப் பிடிக்கவில்லையானால், எங்களுக்கு கஷ்டங்கள் கொடுங்கள். அதுபற்றி காரியம் இல்லை. ஏற்கனவே கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம். இன்னும் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும், எத்தனை தேர்தல் மனுக்கள் வந்தாலும் நாங்கள் அதற்குச் சளைக்கப் போவதில்லை. ஆனால், மக்களைப் பாரபட்சமாக நடத்துவது மிக பாபகரமான காரியம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது போக, நீங்கள் இப்போது மக்களுக்கு நன்மை செய்யாத நிலைமையில் இருந்தால், அவர்கள் ஆளும் கட்சியை ஆதரிப்பார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் தன் மானத்தைக் காப்பாற்றக்கூடிய நிலைமையில் தான் இருப்பார்கள். நன்மை செய்ய வேண்டியவர்கள் நன்மை செய்யவில்லையானால் அவ்விதம் நன்மை செய்யாதவர்களுக்கு மீண்டும் மீண்டும் பாடம் கற்பித்துக்கொண்டுதான் இருப்பார்கள் என்று சொல்லிக் கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

*DR. SRIMATHI SATHIYAVANIMUTHU: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் செபல்ல நான் விரும்புகிறேன்.

[Dr. Srimathi Sathiyavanimuthu] [13th March 1959

கவர்னர்—அவருக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் அதிகமாக இருக்
கிறது என்று நாங்கள் காட்டுகின்ற காரணம், நாடு வறுமையிலே தாண்ட
வம் ஆடுகிறது, பசி, பட்டினி, பஞ்சம் இன்னும் போக்கப்படவில்லை,
வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் நீக்கப்படவில்லை, அவைகளுக்கெல்
லாம் ஒரு மாறுதல் காணவேண்டுமென்றால், "பணம் இல்லை, எனவே
தொழிற்சாலை வைக்க முடியவில்லை" என்று சொல்லுகிற இந்தச் சர்க்கார்
கவர்னருக்காக இவ்வளவு லட்சக்கணக்கான சம்பளத்தைக் கொடுக்க
வேண்டுமா, பணம் பாழாகிறதே என்று எடுத்துச் சொல்கிறோம்.

கவர்னர் என்கிறபோது, அவர் மீது இருக்கும் விருப்பு வெறுப்பு
அல்ல எங்களுக்கு இருப்பது. கவர்னராக இப்பொழுது இருப்பவர் ஒரு
வட நாட்டுக்காரர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல, அந்தப் பதவி
இருக்கத்தான் வேண்டுமா, அதன் மூலம் இத்தனை லட்சம் ரூபாய்
பாழாக்கப்படவேண்டுமா என்று கடந்த முறை சட்ட மன்றத்தில் கேட்ட
போது நிதி அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கம், சட்ட மன்றத்திலே
சட்ட ரீதியாக ஆளுகிற கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் ஏதாவது தகராறு,
குழப்பங்கள் ஏற்பட்டால், அதனை நடுநிலைமையாக இருந்து தீர்த்து வைப்ப
தற்காக ஒருவர் தேவை என்றும், அதற்காகத்தான் கவர்னர் இருப்ப
தாகவும் கூறினார்.

எனவே, இங்கு குழப்பங்கள் ஏற்படும் என்று யூகிக்கிறார்கள். அந்தக்
குழப்பங்களைத் தீர்த்து வைப்பதற்கு தென்னகத்திலே, தமிழ் மாநிலத்
திலே, சென்னை ராஜ்யத்திலே யாரும் அந்தக் குழப்பத்தைத் தீர்த்து
வைக்கக் கூடாது, டில்லி சர்க்காரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்புகிற
ஒருவர்தான் அந்தக் குழப்பத்தைத் தீர்க்க வேண்டும் என்று டில்லி
சர்க்காரால் இந்த கவர்னர் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்.
எனவே, கவர்னராக இருப்பவர், குழப்பத்திற்குப் பரிகாரம் காணக்கூடிய
வர், டில்லி சர்க்காரால் அனுப்பப்படுகிறவர், என்று எண்ணும்போது
எங்களைப் போன்றவர்கள், இந்த நாட்டிலே குழப்பம் கூடாது என்று
மாத்திரம் நாங்கள் விரும்பவில்லை, அப்படிக் குழப்பம் ஏற்பட்டால் இங்கே
அதனை தீர்த்து வைக்க நல்ல நடுநிலையாளர்கள் நல்ல உள்ளம் படைத்த
வர்கள், நல்ல தேச முன்னேற்றத்திலும் தேசத்தின் பாதுகாப்பிலும்
அக்கறையுள்ள நல்ல தேச பிதாக்களும் சட்டம் படித்த நீதிபதிகளும்
இந்த நாட்டில் இல்லையா? அதிலும் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக
இருந்து, பல பதவிகளிலே அங்கம் வகித்து, காங்கிரஸ் கட்சிக்காக அன்றிலி
ருந்து இன்று வரை பாடுபடுகிறவர்கள் தான் அந்தப் பதவியை ராஜினாமா
செய்துவிட்டு, "கவர்னர்" என்ற பொறுப்பை ஏற்று வருகிறார்கள்.
பதவிக்கு வந்தாலும் மனது கட்சிச் சார்பிலே செல்லுமே தவிர பதவியை,
யாரும் எண்ணிப் பார்க்கமாட்டார்கள். காங்கிரஸ்காரராக இருந்த ஒருவர்,
அந்தக் கட்சியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு கவர்னராக வந்தபின்பும்
காங்கிரஸ் கட்சியின் சார்பாகத்தான் தீர்ப்பு தருவார்களே தவிர, நல்ல முறை
யிலே தீர்ப்பு இருக்கும் என்று எங்களைப் போன்றவர்கள் நினைத்துப்
பார்க்க முடியவில்லை. இன்னும் அவர்கள் மூலமாகச் செய்கின்ற செல
வினங்கள், அவர்கள் சுற்றுப்பிரயாணங்கள், இந்த நாட்டு மக்களுக்குத்
தேவையானதாக நாங்கள் கருதவில்லை. சட்ட மன்றத்தில் வர இருக்கிற
மசோதாக்கள் குறித்து, இந்த மசோதா கொண்டுவரப்படும், இந்த
பட்ஜெட் இந்த முறையிலே அமைய இருக்கிறது என்றெல்லாம் கவர்னர்
முன்கூட்டியே சொல்கிறார். இந்த வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி
முன் கூட்டியே சொல்கிறவர்கள், இன்ன மசோதா இந்தச் சட்ட மன்றத்
திலே வரவேண்டும் என்று சொல்கிற கவர்னருக்கு பொறுப்பு மிக
அதிகம் உண்டு என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால், அப்பேர்ப்பட்ட
மேன்மை தங்கிய கவர்னர் என்றைக்காவது ஒருநாள் இந்த மன்றத்திலே
வந்து, மன்றத்திலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளை அக்கறையோடு கவனிக்
கிறாரா என்று பார்த்தால், நான் பார்க்கவில்லை ஒருநாள் கூட அவராக வந்த
தை காணோம். ஆனால், வருஷத்துக்கு ஒரு முறை, ஆலயத்தில் அடைபட்டுக்



13th March 1959] [Dr. Srimathi Sathiyavanimuthu]

கிடக்கின்ற ஆண்டவனை வீதியிலே அழைத்து வந்து ஊர்வலம்
நடத்துவதைப் போல், வருஷத்திற்கு ஒரு முறை கவர்னர் அவர்கள்
ஊர்வலமாக இங்கே வரவழைக்கப்பட்டு, இங்கே பூஜை செய்யாவிட்டாலும்,
அவருக்கு மதிப்பிற்குரிய இடத்தைத் தந்து, அவர் சில உத்தரவுகள்
பிறப்பித்துவிட்டு சென்றுவிட அனுமதிக்கப்படுகிறார். இந்த நாட்டு மக்களைக்
குறித்து இந்த மன்றத்தில் ஆற்றப்படுகிற செய்திகளைப்பற்றி, இன்ன
மசோதா இங்கே வரவேண்டும் என்று கட்டளையிடுகிறவர் மற்ற நேரங்களில்
ஏன் வரக்கூடாது என்று சொன்னால் தவறாக நீங்கள் எடுத்துக் கொள்ளு
கிறீர்கள். அது போன்று அமைச்சர்கள் எல்லோரும் அமைச்சர் பதவிக்கு
வந்த பிறகு அவர்கள் எல்லோரும் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற
கருத்தோடு அவர்கள் இருக்க வேண்டும். அமைச்சர்கள் பொது மக்க
ளுடைய வரிப்பணத்திலிருந்து தான் சம்பளம் வாங்குகிறார்கள்.
பொதுப்பணத்திலிருந்து சம்பளம் வாங்குகிற அமைச்சர்கள் சில
இடங்களில் வெளியே போய் தேர்தல் பிரசாரம் செய்கிறார்கள்.
என்ன பிரசாரம் செய்கிறார்கள் என்றால் எங்களுக்கு வோட்டுப்
போடாவிட்டால் காவேரி ஆற்றுத் தண்ணீரை விட மாட்டோம், குடிசைகளைப்
பிய்த்து எரிந்து விடுவோம் என்றும் தேர்தல் பிரசாரங்களில் பேசும்போது
சொல்லுகிறார்கள். இதைக் கேட்டு மக்கள் பயந்துகொண்டு அமைச்சர்
களே இப்படிச் சொல்லி விட்டார்களே, எங்கே குடிசைகளை பிய்த்து
எரிந்து விடுவார்களோ என்று பயந்துகொண்டு ஆளும் கட்சியைச் சேர்ந்த
வர்களுக்கே வோட்டுப்போடுகிறார்கள். இது ஜனநாயக முறைக்கு அழகு
அல்ல. ஆளுகிற கட்சி இப்படி பிரசாரம் செய்வது சரியல்ல.

எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் தங்களுடன் ஒத்துழைக்கவில்லை என்று
சொல்லுகிறார்கள். எப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அது
நல்ல சட்டம் என்றும் எப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்தாலும்
அது நல்ல திட்டம் என்றும் மக்களிடத்தில் எடுத்துச்சொல்லி அதற்கு
ஆதரவு தேடித்தர வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் செய்
தால் தான் ஒத்துழைப்பு என்று அவர்கள் கருதுகிறார்கள். நிதி அமைச்சர்
அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் மக்கள் மத்தியில் சென்று
காங்கிரஸ் சர்க்கார் கொண்டு வரக்கூடிய திட்டத்திற்கு ஆதரவு சேகரித்துத்
தர வேண்டும் என்று சொல்லுகிறார். அப்படிச் சொல்லுகிறவர்கள்,
திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னதாகவே அந்த திட்டத்தைப்பற்றி
எங்களிடத்தில் சொல்லி, அதற்கு என்ன மாறுதல் செய்ய வேண்டுமென்ற
யோசனைகளைக் கேட்டு அதன் பிறகு அந்த திட்டத்தை சட்டசபையில்
வைத்து நிறைவேற்ற முன் வந்தால் அதற்கு எங்களால் ஒத்துழைக்க
முடியும். எங்களிடத்தில் ஒன்றுமே சொல்லாமல் திட்டத்தை சட்ட
மன்றத்தில் கொண்டு வந்து பெரும்பான்மையாகயிருப்பதால் எந்த
ஒரு திருத்தத்தையும் ஏற்காமல் நிறைவேற்றி விட்டு அதன் பிறகு அமுல்
செய்யும்போது எங்களுடைய ஒத்துழைப்பு வேண்டுமென்று சொன்னால்
அப்பொழுது எப்படி கொடுக்கமுடியும் என்று கேட்கிறேன். சட்டமாக்குவதற்கு
முன்னதாக எங்களிடத்தில் வந்தால் எங்களுடைய விளக்கத்தைக் கொடுப்ப
தற்கு வசதியாக இருக்கும், அப்பொழுது நல்ல முறையில் போடப்பட்ட
திட்டங்களை நிறைவேற்றலாம். அப்படி இல்லாமல் இருப்பதால் தான்
சட்ட மன்றத்தில் அதற்கு எதிராக பேசுகிறோம், அதன் மூலமாக எங்
களுடைய எதிர்ப்பைக் காட்டுகிறோம். பொது மக்களுக்கு எதிராக சட்ட
மன்றத்தில் சட்டங்கள் உருவாக்கப்படுகிறது என்று சொல்லுகிறோம். எந்த
சட்டம் வந்தாலும் அது நிறைவேற்றப்பட்டு விடுகிறது. காரணம் அவர்
களுக்கு 151 பேர்கள் இருக்கிறார்கள். மற்றும் எதிர் கட்சிக்காரர்களைப்
பற்றி குறிப்படும்போது அவர்கள் தவறாகப் பேசுகிறார்கள் என்றும் சொல்லு
கிறார்கள். இந்த இரண்டு ஆண்டுகளாகச் சட்ட மன்றத்தில் நடந்த
நிகழ்ச்சிகளை எடுத்துப் பார்த்தால் தெரியவரும். ஆளும் கட்சியைச் சேர்
ந்தவர்கள் எதிர்க் கட்சியிலுள்ளவர்களைப் பற்றி எவ்வளவு கேவலமாகப்
பொறுப்பற்ற முறையில் பேசியிருக்கிறார்கள் என்பதும் தெரிய வரும்.
எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் வெளியே தாறுமாறாகப் பேசுகிறார்கள்
என்றும் சொல்லுகிறார்கள். அதைக் கண்டு நான் வேதனைப்படுகிறேன்

எதிர்க் கட்சிக்காரர்களைப்பற்றி அமைச்சர்கள் வெளியே தாறுமாறாகப் பேசுகிறார்கள். நாங்கள் பேசுவதெல்லாம் அவர்களுக்கு சி. ஐ. டி. மூலமாக வருகிறது பார்த்துக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் பேசுவதெல்லாம் சி.ஐ.டி மூலமாக வருவதாக இல்லை. அவர்கள் பேசுவதை யாரும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் பேசுவதை மட்டும் தவறாகப் பேசுகிறார்கள் என்று எடுத்துக்கொள்ளுகிறார்கள். எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால் பொது மக்கள் தமிழ் அறிஞர் கள் தமிழ் பற்றுள்ளவர்கள் அவ்வளவு பேர்களும்.

ஆகாசவாணி என்ற பெயரை எடுத்து விட்டு வானொலி என்ற பெயரை வைக்க வேண்டும் என்று போராட்டத்தை நடத்திக்காட்டுகிறார்கள். பலர் உண்ணாவிரதம் இருந்து காட்டி வருகிறார்கள். என்னைப் போன்றவர்கள் சென்னை வானொலியில் பேசுவதற்கு மறுத்து விடுகிறார்கள். இப்படி பெயரை மாற்ற வேண்டும் என்று ஏகோபித்த எண்ணம் இருக்கிறது. பொது மக்கள் இதை ஆதரிக்கிறார்கள். கூக்குரல் இடுகிறார்கள். ஆகாஷ் வாணி என்ற பெயரை எடுத்து விட்டு என் வானொலி என்ற பெயரை வைக் கக்கூடாது. அமைச்சர்கள் பேசும்போது அதற்கு விளக்கத்தைக் கொடுத் ருக்கலாம். அதைப்பற்றி குற்றம் குறை சொல்லவில்லை. ஆனால் அவர் கள் ஆகாஷ்வாணி என்று பெயர் இருக்கக்கூடாது என்று எதிர்கட்சிக் காரர்கள் சொல்லுகிறார்களே, அவர்கள் தங்களுடைய பெயரை சத்யவாணி என்று வைத்துக்கொண்டிருக்கிறார்களே, அதை மாற்றிக்கொள்ள வேண் டாமா, அது வட மொழி அல்லவா என்ற முறையில் பேசுகிறார்கள். எனவே தனிப்பட்ட முறையில் பெயரை வைத்துக்கொள்வதில் ஒன்றும் இல்லை. இதைக் குறித்து அமைச்சர்கள் வெளியே சென்று பேசுவது முறையாகாது. அப்படி பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் என்னிடம் வந்து கேட்டால் அந்தக் கோரிக்கை சற்று கவனிக்கப்படும் என்று நான் கூற முடியும் (சிரிப்பு) இதைப்பற்றி வெளியே கேள்விகள் கேட்கப்படுகிறது. அதற்கு பதில் சொல்ல வேண் டிய நிலையில் இருக்கிறோம்.

அமைச்சர்கள் சில தொகுதிகளுக்கு வந்து பார்வையிடுகிறார்கள். அப் பொழுது அந்தத் தொகுதி அங்கத்தினர்கள் எதிர்க் கட்சிக்காரர்களாக இருந்தால் அவர்களைக் கூட்டிக்கொண்டு பார்வையிடுவது கிடையாது. ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களாக இருந்தால் அவர் களைக் கூட்டிக்கொண்டு பார்வையிடுகிறார்கள். அதைப்பற்றி பல முறை அமைச்சர்களிடத்தில் எடுத்துச் சொல்லியும் இருக்கிறது. எனது தொகுதி பிற்போக்கான தொகுதி, அதிலும் மிகவும் பிற்போக்கான தொகுதி, குடிசைகள் நிறைந்த தொகுதி. அங்கேயுள்ள குடிசைகளை சர்க்கார் பிய்த்து எரிந்து கொண்டிருக்கிறார்கள், குடிசைகளை பிய்த்து எரிவதோடு மட்டுமல்லாமல் அங்குள்ள மக்களுக்கு வேறு இடங்களும் கொடுக்கப் படவில்லை. அப்படி பாதிக்கப்பட்ட மக்கள் ஆதி திராவிட மக்கள். இதைப் பற்றி முதல் அமைச்சரிடம் பேட்டி கண்டு குறைகளை எடுத்துச் சொன்னேன். அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் என்றால் தான் டில்லிக்கு செல்வ தாக இருப்பதாகவும், திரும்பி வந்தவுடன் பார்வையிடுகிறேன் என்றும் சொன்னார். அப்பொழுது எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பார்வை யிட்டு ஆலோசனைகளைக் கேட்டு அதற்கு ஒரு பரிகாரம் காணுவோம் என் றும் சொன்னார். அன்று மாலை முதலமைச்சர் கூட்டத்திற்கு செல்ல வேண்டி இருந்தது. கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் அந்த நிலைமை களை எடுத்து விளக்கி டெல்லி சென்று திரும்பியதும் அந்த வட்ட நகரக் சபை காங்கிரஸ் கட்சி உறுப்பினருடன் நேரில் வந்து பார்வையிடுவதாகக் கூறியதாக எனக்குக் கூறப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு தவறான கருத்து ரவர்கள் மனதில் இருக்கிறது. ஒன்று என்னைக் கூட்டிக்கொண்டு போய் ர்வையிட வேண்டும் அல்லது அந்தப் பகுதியைச் சேர்ந்த மற்றொரு அங் தினராகிய மதிப்பிற்குரிய பக்கிரிசாமி அவர்களையாவது கூட்டிக்கொண்டு பாய் பார்வையிட வேண்டும் இப்படியெல்லாம் செய்தால் எப்படி ஒத்



துழைக்க முடியும். ஒரு தொகுதியைப் பார்வையிடும்போது அந்த தொகு தியில் எந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தாலும் அவரைக் கூட்டிக்கொண்டு போய் தான் பார்வையிட வேண்டுமே தவிர மற்றவர் களைக் கூட்டிக்கொண்டு பார்வையிடுவது என்பது சரியல்ல. தொகுதி என்று வரும்போது அந்தத் தொகுதிக்கு சேவை செய்ய அமைச்சர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாங்களும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இரண்டாவதாக இப்பொழுது அதிகப்படியாக செலவு செய்யப்படுகிறது. சிக்கனம் வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படி சொல்லிக்கொண்டு உதகைக்குச் சென்று சட்டசபையை நடத்த இருக்கிறார்கள். இப்பொழுது அங்கத்தினர்களுக்கு படி $12\frac{1}{2}$ ரூபாய் கொடுக்கப்படுகிறது. அங்கே சென் றால் படி $18\frac{3}{4}$ ரூபாய் கொடுக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. இதை நான் பத்திரிகையில் பார்த்தேன். எப்படி இருந்தாலும் அது தவறான காரியம். பொது மக்களுடைய வரி பணத்தில் $12\frac{1}{2}$ ரூபாய் கூட வாங்கக் கூடாது என்று சொல்லக்கூடியவர்கள் நாங்கள் அதை விட்டு விட்டு தாங்களே $18\frac{3}{4}$ எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன் னால் அது சரியாகாது. இதைப் பார்த்து விட்டு சர்க்கார் சிப்பந்திகள் அதிகமாக கேட்க மாட்டார்களா, ஆசிரியர்கள் அதிகமாக சம்பளம் கேட்க மாட்டார்களா என்று கேட்கிறேன். இப்படி ஒவ்வொருவரும் அதிகமாக சம்பளம் கேட்க முற்பட மாட்டார்களா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி அவர்களுக்கு எல்லாம் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்காமல் தாங்கள் அதிகப்படியாக எடுத்துக்கொள்வது முறையாகாது அது மிகமிக தவறாகும் என்று எடுத்துச் சொல்லி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri D. S. AUTHIMOOLAM : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த வெட்டு பிரே ரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். பொதுவாக இப்பொழுது சூழ் நிலை நல்லதாக இல்லை என்பது என்னு டைய அபிப்பிராயம். இந்த மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபைதான் ஆரம் பத்திலிருந்து இருக்கிறது. ஜஸ்டிஸ் பார்ட்டி வெளியே போனதிலிருந்து அதற்குப் பிறகு வந்த மந்திரி சபையெல்லாம் காங்கிரஸ் மந்திரி சபைதான் அப்பொழுது காங்கிரஸ் பார்ட்டி ஆள்கள் ஜாஸ்தி தலையீடு இல்லாமல் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கொடுத் கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது நாலைந்து வருஷமாகப் பார்த் தால் அது மறைந்து விட்டது என்பதை நான் மரியாதையோடு சொல்ல வேண்டியதாக இருக்கிறது. முக்கியமாக ராஜாஜி, ஓ. பி. ராமசாமி ரெட்டி யார் அவர்கள் காலத்தில் கட்சி ஆதிக்கம் ஜாஸ்தி இல்லாமல் இருந்தது எல்லோருக்கும் ஒரு பெருமையாக இருந்தது. அந்த பெருமையெல்லாம் இப்பொழுது இல்லை. எனக்கு நன்றாகத் தெரியும் கட்சி பெருமையோடு எல்லோரும் இருந்தார்கள். அவர்கள் தலையிடுவது இல்லை. அதே கட்சி இப்பொழுது இருந்தாலும் அப்படிப்பட்ட சூழ் நிலை இப்பொழுது இல்லை. இப்பொழுது இருக்கிற சூழ்நிலையைப் பார்த்தால் ரொம்பவும் பயங்கரமாக இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையை மாற்றியாக வேண்டும். அன்று, ராஜாஜி அவர்கள் காலத்திலும், ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் காலத்திலும் எப்படி எல்லாக் கட்சிக்காரர்களையும் அன்போடு நடத்திக்கொண்டு போனார் களோ எல்லோரையும் நல்ல ஒரு மனப்பான்மையோடு நடத்திக்கொண்டு போனார்களோ அந்த விதமாக நீங்கள் நடத்த வேண்டும். சென்ற 4 வருஷ காலமாக அந்த "ரெஸ்பெக்ட்" ரொம்ப "லாக்கிங்" (Lacking) ஆக இருக்கிறது என்பதை மரியாதையோடு சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். "கான்ஸ்டிட்யூஷன்" படி நாம் ஒரு ஜனநாயக நாடு என்ற முறை யில் இருக்கிறோம். எதிர்க்கட்சியில் ஒருவன்கூட இருக்காத நிலைமை ஏற்பட்டால் அப்பொழுது "கான்ஸ்டிட்யூஷனை" மாற்றியாக வேண்டும். அந்த நிலைமை ஏற்படாமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த "மினிஸ்டர்கள்" "டூருக்கு" (Tour) போகும்போது தங்கள் ஆட்களை நிறைய அழைத்துச் செல்லுகிறார்கள். "மினிஸ்டர்கள்" அங்கிருந்து சென்ற பிறகு ஏதாவது காரியம் ஆகவேண்டுமென்றால் அந்த ஆட்களை அணுகினால்தான் காரியம் நடக்கும் என்று பொது ஜனங்கள் நினைத்துக் கொள்ளுகிறார்கள். (Tour programme) டூர் பிரோகிராம் போடும் போது கட்சி ஆட்களைப் பூராவும் வைத்துக்கொண்டு போடுவது சரியல்ல. ஆபீசர்களைக் கலந்துகொண்டு இந்த (Tour) டூர் ப்ரோகிராமைப் போட்டு அதன்படி போய்க்கொண்டிருந்தால் அந்தக் குறிப்பிட்ட ஆட்களுக்கு முக்கியத்துவம் ஏற்படாமல் இருப்பதோடு ஜில்லாக்களிலும் சிபார்சு செய்ய வேண்டுமென்ற சூழ்நிலை குறைந்து விடும். இப்பொழுது பார்த்தால் சாதாரண ப்யூன் வேலை முதற்கொண்டு, மாதம் 15,000, 20,000 ரூபாய் சம்பாதிக்கக்கூடிய ஸ்டாக்கிஸ்ட், கண்ட்ரோலர் ஆகியவைகள் உட்பட கிடைப்பதற்கு சிபார்சு செய்யவேண்டியிருக்கிறது என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். இந்த மாதிரி சூழ்நிலையை மாற்றவேண்டும். இந்த மாதிரி ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை மந்திரி சபை கட்டாயம் ஒப்புக் கொள்ளும் என்று நான் நினைக்கிறேன். இதற்காகத்தான் ராஜாஜி அவர்கள் காலத்தில் ஒரு சர்க்குலர் அனுப்பினார்கள். அந்த மாதிரி ஒரு சர்க்குலர் இண்டர்பரன்ஸ் (Interference) கூடாது என்று அனுப்ப யோசனை செய்து அந்த முறையில் அனுப்பி திருப்பு முனையில் திரும்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொது எலக்ஷன் விஷயங்கள் பற்றிச் சொன்னார்கள். தொகுதிகள் இன்னும் சிறிதாக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதை யெல்லாம் நான் ஒத்துக்கொள்ள முடியாது. இப்பொழுது இருக்கும் எண்ணிக்கையே அதிகம், 150 உறுப்பினர்களாகக் குறைந்தால் நல்லது என்று நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். இப்பொழுதே 5 நிமிஷம், 10 நிமிஷம்தான் பேச முடிகிறது. எலக்ஷன் முறையை மாற்றியமைக்கச் சர்க்கார் யோசனை செய்யவேண்டும். மத்திய சர்க்காரிடம் சொல்லி, பார்ட்டி படி எவ்வளவு ஓட்டு கிடைத்திருக்கிறதோ, அந்த பர்சென்டேஜுக்கு (Percentage) தகுந்தபடி அந்தந்தக் கட்சியிலுள்ள உறுப் பினர்கள் எண்ணிக்கை அமைய வேண்டும். அந்த மாதிரி அனுப்பினால் சுயேச்சை மெம்பர்கள் அடிபட்டுப் போவார்கள். சுயேச்சை என்று பேப்பர் களில் போடும்போது எனக்கு மானக்கேடாக இருக்கிறது. ஆனால் வேறு வழி இல்லை. "சுதந்திரா" என்று போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். இந்த நாட்டிலுள்ள கட்சிகள் சரியானபடி வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால், எலெக்ஷன் முறையை மாற்றியமைத்தால் தான், பர்சன்டேஜ்படி ஒவ்வொரு கட்சிக்கும் ஸ்தானம் ஒதுக்கினால்தான் தகுந்த மாதிரி "ரெப்ரசன்டேஷன்" கொடுக்க முடியும். அப்படிச் செய்தால்தான் ஜனநாயகம் நம்முடைய நாட்டில் இருக்கும். இல்லை யென்றால் "சிங்கில் பார்ட்டி ரூல்" (Single party rule) ஆக வந்து விடும். மற்றபடி "கான்ஸ்டிட்யூயன்சி" (Constituency) இப்பொழுது இருக்கிறபடி இருந்தால் போதும். இதை விடச் சிறிதாக வேண்டாம். பெரிதாக்க வேண்டுமானால் யோசிக்கலாம். எலக்ஷன் முறை இப்பொழுது ஏதோ ஓரளவு திருப்தியாக நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது எலக்ஷனுக் காக செலக்ஷன் ஆப் கான்டிடேட்ஸ் செய்வதில் இப்பொழுது இருப்பதை விட கொஞ்சம் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று கூற விரும்பு கிறேன்.

MR. SPEAKER : How is it relevant to the discussion ? How is the Minister resposible and how is the Assembly responsible ?

SRI D. S. AUTHIMOOLAM : Though it is not relevant, still I am





MR. SPEAKER : If it is not relevant, the hon. Member himself is ruling it out of order; I do not come into the picture. (Laughter.)

SRI D. S. AUTHIMOOLAM : முக்கியமான "ஐடங்களைப்" பற்றிச் சொல்லி விட்டேன். மற்றப்படி இந்த மினிஸ்டர்கள் "பே" (Pay) பற்றி இந்த நாட்டில் ஏதோ ஒரு அபிப்பிராயம் உண்டு. அதில் "ஜெனரலாக" ஒரு மாறுதல் உண் டாகவேண்டுமென்று சொன்னால், கராச்சித் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில காரியங்களைச் செய்ய வேண்டும். ரொம்பப் பெரியவர்களுக்கு நான் யோசனை சொல்லிக்கொண்டிருப்பதாக நினைக்கக்கூடாது. நாளாவட்டத்தில் பொதுவாக "எக்ஸ்பெண்டிசர்" கூடி விட்டால், மந்திரிகள் சபை இதற்கு ஒரு முன் மாதிரியாகக் காண்பிக்க வேண்டும். அப்படியானால்தான் இந்த நாட்டில் சரியான நிர்வாகம் நடக்கிறது என்று ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இதைக் கவனித்துச் செய்யவேண்டும்.

மந்திரி சபையார் சில விஷயங்களில் கொஞ்சம் தைரியமாகச் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏற்கெனவே நான் இங்கு பேசும் போது கருணையாற்றைப் பற்றி உங்களுக்குக் கொஞ்சம் கருணை பிறக்க வேண்டுமென்று சொன்னேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு கனம் மராமத்து மந்திரியவர்கள் திருநெல்வேலிக்கு வந்திருந்தார்கள். அங்கு ஒரு "கான்பரன்ஸ்" கூட்டியிருந்தார்கள். மராமத்து சம்பந்தமாகப் பேசு வதற்காக அதைக் கூட்டி இருந்தார்கள். நான் அப்பொழுது கருணை யாற்றைப் பற்றிச் சொன்னேன். ஏற்கனவே "சாங்ஷன்" ஆகிவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனே நான் பேசவேண்டிய அவசியமில்லை என்று சொல்லிவிட்டு உட்கார்ந்துவிட்டேன். இப்பொழுது 2, 3 நாட்களுக்கு முன்னால் அதைப்பற்றி விளக்கத்தை அறிந்து கொள் வதற்காக ஒரு கேள்வியைக் கேட்டேன். ஏனென்றால் தொகுதியில் போய் இதைப்பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது. ரெவின்யூ போர்டில் சில நிலை மைகளைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பதில் சொன் னார்கள். நான் இதற்குள்ளாகவே "அச்சீவ்மெண்ட் (Achievement) ஆகிவிட்டது" என்று ஒரு நோட்டீஸ் அச்சடித்து விநியோகித்து விட்டேன். எனக்கு அவர்கள் ஓட்டு போடவேண்டுமாதலால் 5,000 நோட்டீஸ் அச்சடித்து வெளியிட்டுவிட்டேன். இப்பொழுது தொகுதிக்குப் போனவுடன் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விகேட்டால் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஆகவே இந்த கருணையாற்று விஷயத்தைக் கொஞ்சம் கருணையோடு பார்க்கவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஜில்லாக்களைப் "பைபர்கேட்" (Bifurcate) பண்ணவேண்டுமென்று கனம் முத்தையயாச் செட்டியார் அவர்கள் மிக நன்றாக எடுத்துச் சொன்னார்கள். இது திருநெல்வேலி ஜில்லாவுக்கு ரொம்பப் பொருத்த மாக இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் இப்பொழுது 25, 26 லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. ஆனால் பக்கத்தில் உள்ள கன்யாகுமரி மாவட் டத்தின் ஜனத்தொகை 8½ லட்சந்தான். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சில பகுதிகளை கன்யாகுமரிக்கு மாற்றி—அம்பாசமுத்திரத்தை மாற்றி விடாதீர்கள்—நாங்குனேரி தாலுக்கா போன்றவைகளை மாற்றி—பழக்கவழக் கங்கள், பொருளாதாரம் ஆகிய விஷயங்களையெல்லாம் பற்றி யோசித்து அதை இணைக்கவேண்டும். அந்த மாதிரிச் செய்தால் நல்ல நிர்வாகம் நடக்கமுடியும். பெரிய ஜில்லாக்களாக இருந்தால் பல காரியங்களை ஜில்லா கலெக்டர்களால் திறமையாகச் செய்யமுடிவதில்லை.

"மினிஸ்டர்" டூர் (Tour) விஷயமாக புது முறையைக் கையாண்டு எங்கள் எல்லோருக்கும் நல்ல சேவை செய்வதற்குள்ள வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்காங்கே உள்ள ஜனப் பிரதிநிதிகளை கலந்து ஒர் புரோகிராம் போட்டிருக்கிறார்கள். இதை ஏன் சொல்லுகின்றேன் என்றால் நான் பல வருஷங்களாக அந்த மந்திரி சபைகளைப் பார்த்திருக்கிறேன். அதாவது, ஏழு மந்திரி சபைகளைப் பார்த்திருக்கிறேன். ஒவ்வொன்றும் ஒன்றரை வருஷ காலத்திற்குள் மாறி விடக் கூடியதாக இருந்தன. ஆனால் இங்கே ஒர் புரோகிராம் கலெக்டர் மூலமாகத்தான் போடப்பட்டு வருகிறது. அதாவது ஜில்லாக்களிலே கலெக்டர்கள்தான் பெரிய அதிகாரிகள். அவர்கள்தான் மன்னர்க் போன்று அதிகாரம் செலுத்தி வருகிறார்கள். அவர்களை ஆலோசனை கேட்டு விட்டு ஒர் புரோகிராம் போட்டு விடுகிறார்கள். ஜனநாயகத்திற்கு அடிப்படையாக உள்ள ஜனப் பிரதிநிதிகளை ஆலோசனைக் கேட்பதே இல்லை. அவர்களைக் கலந்து ஆலோசித்து பிரயாணம் செய்வதுதான் முறை. கலெக்டர்களில் சிலர் நல்லவர்களாகவும் சிலர் கெட்டவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் தங்கள் கீழுள்ள சிப்பந்திகளைக்கொண்டு கலெக்டரும் அமைச்சர் அவர்களும் ஒர் புரோகிராம் பற்றி முடிவு செய்வது சரியல்ல. என்னுடைய தொகுதிக்கு மந்திரி அவர்கள் வந்தார்கள்; அப்போது கலெக்டர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதாகவும் மந்திரி அவர்கள் பேசுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. ஒரு கிராமத்தின் தலைவர்களுக்கு கூட்டத்தில் கலந்து குறைகளைக் கூற அவகாசம் கொடுக்கவில்லை என்று கூட்டத்திற்கு போகமாட்டோம் என்றார். பின்னால் அவர்களிடம் நல்ல வார்த்தை கூறி கூட்டத்தில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்தோம். என்னுடைய ஜில்லாவில் கட்சி வேறுபாடின்றி ஆறு அங்கத்தினர்கள் மந்திரி அவர்களுக்கு சில குறைபாடுகளை எடுத்துரைத்திருந்தும் அது கவனிக்கப்படவில்லை. வருந்தி வருந்தி அமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைத்திருந்தும்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதாவது ஒரு ஹைவேஸ் என்ஜினியரை மாற்றக்கூடாது என்று சொன்னோம். ஒரு சிறிய கண்ட்ராக்டர் முயற்சியால் அவர்கள் மாற்றப்பட்டு விட்டார்கள். ஜனநாயகத்தினுடைய பிரதிநிதிகள் எத்தனையோ மனுக்கள் போட்டிருந்தாலும் அவர்கள் அந்த என்ஜினியரை மாற்றி விட்டார்கள். குறிப்பாக 6 எம்.எல்.ஏக்கள் அமைச்சர் அவர்களிடம் கூறி இருந்தும்கூட மாற்றிவிட்டார்கள். ஜனப்பிரதிநிதிகள் கூறியிருந்தும்கூட ஒரு விதமான பலனும் ஏற்படவில்லை. ஸ்ரீ விஸ்வநாதம் அவர்களும்கூட இது சம்பந்தமாக கேள்வி நேரத்தில் கேள்வி கேட்டிருந்தார்கள். இவ்வாறு என்ஜினியரை மாற்றுவது என்ற கொள்கை யார் நிர்ணயிப்பது என்று தெரியவில்லை. அங்குள்ள பிரதிநிதிகள் என்ன சொல்லுகிறார்களோ அவ்விதம் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு சமயம் முதல் முதலாக நமது நிதி அமைச்சர் அவர்கள் எங்கள் ஜில்லாவிற்கு வந்தபோது ஒரு கூட்டத்தில் "கலெக்டர் அவர்களே, பொதுமக்களே" என்று ஆரம்பித்தார்கள். இன்னும் மற்றொரு அமைச்சரும் கலெக்டரை கலெக்டர் துரை என்று அழுத்தி சொல்லியிருக்கிறார். அவ்வாறு அழைப்பதால் அங்குள்ள மக்கள் என்ன நினைத்துக்கொள்ளுகிறார்கள் என்றால் கலெக்டர்தான் எல்லாவற்றிற்கும் தலைவர் என்று தவறாக புரிந்துகொள்ளுகிறார்கள். அப்பொழுது ஜனநாயக பிரதிநிதிகளை கவனித்து அவர்களுக்கு அதிக மதிப்பு கொடுப்பதாக தெரியவில்லை.

கல்லூரிகளில் அட்மிஷன், உத்தியோக நியமனம், உத்யோக உயர்வு இவைகளில் உள்ள ஊழல்களைப் பற்றி ஏற்கெனவே நான் முன்னால் கூறியிருக்கிறேன். இது மாதிரி பல விஷயங்களிலே **favouritism** ஓரளவு இருக்கிறது. ஆபீசர்கள் நேர்மையாக நடப்பது சர்க்காருடைய நேர்மையினால்தான். ரூ. 8,600 கூட்டுறவு சங்கத்தில் டிபால்கேஷன் ஏற்பட்டதாக, அதைக் கண்டு பிடித்துக் கொடுத்த ஒரு கோவாபரேட்டிவ் டிபார்ட்மெண்ட் சீனியர் இன்ஸ்பெக்டர், சம்பந்தப்பட்ட Inspector அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் பிஷரிஸ் அவர்களின் உத்தரவின் பேரில் மாற்றப்பட்டார். கையாடல் செய்ததாக கூறப்பட்டவர் மீது 8 ரிமைண்டர்கள் அனுப்பப்பட்டன. வேறு நடவடிக்கைகள் எடுக்கவில்லை. ஆனால் நேர்மையாக நடந்த, கடமையைச் செய்த இன்ஸ்பெக்டர் மாற்றப்பட்டார். சாதாரணமாக இது மாதிரி செய்யவேண்டுமென்றால் ரிஜிஸ்ட்ரார் ஆப்





கோவாப்பரேட்டிவ் சொசைட்டியைத்தான் கலந்து ஆலோசித்துச் செய்ய வேண்டும். அந்தக் காலத்திலே இப்பொழுது அமைச்சராக இருக்கும் ஸ்ரீமதி லூர்தம்மாள் அவர்களின் புருஷன்தான் அந்த நிர்வாகத்திற்குப் பிரசிடெண்டு. அவர்கள் சொன்னதின் பேரில்தான் இந்த சீனியர் கோவாப்பரேட்டிவ் இன்ஸ்பெக்டரை மாற்றியிருக்கவேண்டும். அவர்களை கடலூருக்கு மாற்றி விட்டார்கள்.

Mr. SPEAKER: Is the hon. Member sure that the Hon. Minister interfered, because her husband was the President? Otherwise this sort of allegation would not be correct. He is joining 1 and 1 and making it 2. Is he sure that his allegation is correct?

Sri T. S. RAMASWAMY PILLAI: **I am speaking with all responsibility, Sir.** ஏன் அவரை மாற்றவேண்டும், அவர் என்ன குற்றம் செய்தார் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

Mr. SPEAKER: I am sorry to intervene. If any other Minister, within whose jurisdiction he is, had transferred that gentleman, the hon. Member cannot blame the Minister for Local Administration. But if she had transferred, then the hon. Member is entitled to . . .

Sri T. S. RAMASWAMY PILLAI: I do not say that she did it.

Mr. SPEAKER: Why does the hon. Member drag in somebody's name?

The Hon. Sri C. SUBRAMANIAM: It is an insinuation that the Local Administration Minister transferred a particular officer. I do not know the facts, and I do not also know how far the hon. Member is correct even with regard to the fact. Even taking for granted that all this is a fact or what he says is true, how does he infer that the Local Administration Minister transferred him, because her husband was involved? All this is an insinuation unless supported by facts. Simply because he has got the privilege of speech, he should not abuse that privilege.

Sri T. S. RAMASWAMY PILLAI: I am fully responsible for what I say. I am not abusing the privilege.

Mr. SPEAKER: The hon. Member may take the responsibility. But I think it is not correct to say that the transfer was made by the Minister for Local Administration.

Sri T. S. RAMASWAMY PILLAI: I did not say that.

Mr. SPEAKER: It is a veiled method of saying that she is responsible.

Sri T. S. RAMASWAMY PILLAI: அவர் ஒருமனு கொடுத்திருந்தார். இதைப்பற்றி ஒரு ஷார்ட் நோட்டீஸ் கேள்வி கொடுத்திருந்தேன். அதை ரிஜக்ட் செய்து விட்டார்கள். அதன்பின் என் நண்பர் கோவிந்தசாமி அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன் கேள்வி அனுப்பினார்கள். இது வரையில் பதிலில்லை.

MR. SPEAKER : How can the hon. Member say that?

SRI T. S. RAMASWAMY PILLAI : என் மாற்றவேண்டும்? அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member cannot make an allegation and get off with it. If it is a short notice question, it is the duty of the Speaker to admit it or reject it. If a question is not answered, it may be that the answer is not ready in the department. The hon. Member is not correct in joining 2 and 2 and saying that it is the Minister for Local Administration who has done it, or as a result of her intervention some other Minister has done it. This is very wrong. I hope the hon. Member would not proceed on this line.

12-30 p.m.

SRI T. S. RAMASWAMY PILLAI : இது எப்படி முடிந்தது என்று அரசாங்கம் நிச்சயம் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இதற்கு கனம் அமைச்சரும் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அதிகாரி தம் கடமையை நிர்ப்பயமாகவும் நிர்தாட்சன்யமாகவும் செய்தார் என்பதைத் தவிர அவரைப் பற்றி வேறு என்ன சொல்ல முடியும்? எதற்காக அவரை அர்ஜெண்டாக, ஒரே நாளில், மாற்ற வேண்டும் என்பது பற்றி விளக்க வேண்டும் என்று கனம் அமைச்சரைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அவரை மாற்றுவதில் என் அவ்வளவு அர்ஜென்ஸி? அவர் என்ன தப்புச் செய்துவிட்டார்? சாதாரணமாக இந்த இலாகாவிலுள்ள அதிகாரிகளை கோவாப்ரேடிவ் ரெஜிஸ்டிராரின் அனுமதியின்றி "பேரெண்ட்" டிபார்ட்மெண்டிற்கு மாற்ற முடியாது. அப்படி இருக்க, கனம் முதல் அமைச்சரிடம் நேரிடையாகச் சென்று சொன்னதன் பிறகு அவர் மாற்றப்பட்டார். அதற்குப் பிறகு வேறு விஷயங்களும் நடந்தன.

SRI K. ANBAZHAGAN : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையையொட்டி அரசாங்கத்தலைவர்கள் பெறுகின்ற ஊதியத்தையும் தேர்தல் இவைகளையொட்டிச் செலவாகிற தொகையையும் குறித்த மானிய கோரிக்கையை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற பிரேரபணைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப்பேசும் முறையில் சில கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். சட்ட மன்றத்தில் பேசும்போது பொதுவாக ஏற்படும் ஒரு முறையைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். குற்றச்சாட்டுகளைச் சொல்வது என்பது ஒரு வகை. குறைகளை எடுத்து மொழிவது என்பது மற்றொரு வகை. குறைகளை எடுத்துச் சொல்லும்போது கூட அவைகளையெல்லாம் குற்றச்சாட்டுகள் என்று கருதி அவைகளைச் சொல்லவொட்டாது தடுக்க மதிப்பிற்குரிய அமைச்சர்கள் முயன்றால், அரசாங்கத்திலுள்ள குறைகள் அப்படியே அரசாங்கத்திற்குள்ளேயே இருந்து அரசாங்கத்திற்குள் புறையோடிப் போகுமே தவிர, அத்தகைய செய்கை நாடு சீர்திருந்துவதற்கோ அரசாங்கம் சீர்திருந்துவதற்கோ பயன்படாது என்பதை முதலில் தெரிவிக்க விரும்புகிறேன். அரசாங்கத்தார் செய்யும் நன்மைகளை ஆளும் கட்சியினர் பாராட்டினாலும், மக்களிடம் குறைகள் மலிந்திருப்பதால் மக்களின் சார்பில் பேசும்போது ஆளும் கட்சி அங்கத்தினர்கள் கூட குறைகளை தெரிவித்திருக்கிறார்கள். மாற்றுக் கட்சியினர் குறைகளை மட்டுமே சொல்கிறார்கள் என்று ஆளும் கட்சியினர் வருந்துவது நாட்டுக்கு நல்லதல்ல.

மதிப்பிற்குரிய அமைச்சர்கள் உத்தியோகஸ்தர்களைப் போல் பல கடமைகளைச் செய்கிறார்கள் என்பதில் எனக்கு, எந்த விதமான கருத்து மாறுபாடும் இல்லை. மதிப்பிற்குரிய அமைச்சர்கள் வெறும் உத்தியோகஸ்தர்கள் மட்டும் அல்லர். அவர்கள் வெறும் உத்தியோகஸ்தர்களாய் மட்டும் இருந்தால் அவர்கள் அலுவலகத்தில் செய்யும் காரியங்களை மட்டும் செய்வது போதுமானதாக இருக்கும். அமைச்சர்கள் எந்தக் கட்சியை



சார்ந்திருந்தாலும் அவர்கள் காரியங்களை ஜனநாயக பூர்வமாக நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்கச் செய்வதற்கும், காரியங்கள் ஜனநாயக முறையில் நடைபெறுவதற்கும் அவர்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். மதிப்பிற்குரிய அமைச்சர்கள், சட்ட மன்றத்தில் மாற்றுக் கட்சிகளுக்கு சில அறிவுரைகளைக் கூறுவதால் மட்டும் ஜனநாயகத்தை வளரச் செய்ய முடியாது; கட்சிகளுக்கு நல்லுபதேசங்கள் செய்வதால் மட்டும் ஜனநாயகத்தை வளரச் செய்ய முடியாது. அமைச்சர்கள் நாட்டு மக்களை சந்தித்துப் பேசும்போது ஜனநாயகத் தத்துவத்தை உணர்ந்து பேசினால்தான் ஜனநாயகம் வளரும். மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. பக்தவத்சலம் திருச்சியில் பேசியதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அங்கே அவர் பேசியபோது "ஊராட்சி மன்றத்திற்கு நல்ல தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுங்கள்" என்று சொல்லியிருந்தால் நான் வருத்தப்படமாட்டேன். அப்படி இல்லாவிட்டால், "ஊராட்சி மன்றத்திற்கு காங்கிரஸ்காரர்களையே தேர்ந்தெடுங்கள், ஏனென்றால் அவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள்", என்று சொல்லியிருந்தாலும், கட்சி ஆசை அவரை விட்டுப் போகவில்லை என்றுதான் கருதியிருப்பேன். ஆனால் அவர் "ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்காமல் மாற்றுக் கட்சிகளைத் தேர்ந்தெடுத்து அதன் விளைவாக நகரசபை மாற்றுக் கட்சிகளிடம் செல்கிறபோது பல நல்ல காரியங்களைச் செய்ய முடியாது" என்று சொல்லியிருக்கிறார். இதன் உட்பொருளை மதிப்பிற்குரிய அமைச்சர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். நீங்கள் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்தால், சுயேச்சையாளர்களையும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களையும் நகர சபைக்குள் விட்டு விட்டால், உங்கள் விருப்பங்களும் உங்களுடைய எந்தத் திட்டங்களும், கக்கூஸ் திட்டம், சாக்கடைத் திட்டம் ஆகிய எந்தத் திட்டங்களும், நிறைவேறாது, நகர சபைக்கு சர்க்காரின் மானியத் தொகை கிடைக்காது என்ற கருத்துப்பட ஒரு மதிப்பிற்குரிய அமைச்சர் பேசினால் நீங்கள் ஜனநாயகத்தை எப்படிக் காப்பாற்ற முடியும் என்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் காங்கிரசுக்கு தாராளமாக வோட்டுக் கேளுங்கள். "நாங்கள் அமைச்சர்கள், சாமானியமானவர்கள் அல்லர், பிச்சைக்காரர்கள் அல்லர், பெரும் பீடத்தில் உள்ளவர்கள்; உங்களுக்கு நல்லது செய்திருக்கிறோம்; எங்களை ஆதரியுங்கள்; எங்கள் கட்சிக்காரர்களுக்கு வோட்டுப் போடுங்கள்" என்று வோட்டுக் கேளுங்கள். அதைவிடுத்து "மாற்றுக் கட்சியினரை நீங்கள் ஆதரித்தால் உங்கள் நகரசபை நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்பைப் பெறாது" என்று சொல்வது மக்களை அச்சுறுத்துவதாகும். மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சர் அங்கே அவ்வாறு பேசவில்லை என்று மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் சொல்கிறார். ஆனால் மக்களிடத்தில் அந்தக் கருத்துப் பரவியிருக்கிறது. அதை மாற்ற மதிப்பிற்குரிய அமைச்சர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சர் "ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்காமல் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அதன் விளைவாக நகரசபை மாற்றுக் கட்சிகளிடம் செல்கிறபோது பல நல்ல காரியங்களைச் செய்ய முடியாது என்று நான் சொல்லவில்லை. அந்தச் சொற்கள் என் சொற்பொழிவில் இல்லை. அப்படிப்பட்ட அச்சுறுத்தல் என் சொற்பொழிவில் இல்லை. எங்கள் கட்சிக்கு வோட்டளியுங்கள் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன்" என்று ஒரு அறிக்கை விட்டிருக்க வேண்டும். பத்திரிகைகளில் தவறான செய்திகள் வந்தால் அதைத் திருத்துவதற்கு இத்தகைய வாய்ப்புகள் ஜனநாயகத்தில் இருக்கின்றன. அந்தச் செய்தி எந்தப் பத்திரிகையில் வந்தது என்பதுபற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. எப்படி இருந்தாலும் அப்படிப்பட்ட செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. பத்திரிகையில் வந்த செய்தியை இங்கே குறிப்பிட வேண்டாம் என்று மதிப்பிற்குரிய அமைச்சர்கள் சொன்னால், எந்தப் பத்திரிகையைக் குறிப்பிட்டு அவர்கள் இங்கே பேசுகிறார்களோ அந்தப் பத்திரிகையைக் குறிப்பிட்டே இச் செய்தியை நான் இங்கே குறிப்பிட்டேன் என்று சொல்லிக்கொள்கிறேன். நாம் பேச்சுக்களில் வெளியிடும் கருத்துக்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கக் கூடியவையாக இருக்க

[Sri K. Anbazhagan] [13th March 195

வேண்டும். அப்படிப்பட்ட கருத்துக்களையே நாம் தெரிவிக்க வேண்டும். அமைச்சர்கள் அதிகார பீடத்திலிருந்து மக்களை அச்சுறுத்தக் கூடாது, அச்சுறுத்த இடம் தரக் கூடாது. ஜனநாயகத்தை அந்த முறையில் பாதுகாக்க வேண்டும் என்று ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒன்று தெரிவிப்பேன். மக்களுடைய விருப்பம் என்ன என்பது தெரியுமானால் மதிப்பிற்குரிய அமைச்சர்களுக்கு அதை நிறைவேற்ற என்ன தடை இருக்கிறது? இந்த மாநிலத்தில் கன்னியாகுமரி முதல் வேங்கடம் வரை உள்ள மக்களில் யாரும், இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர்வைக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. வேண்டுமானால், மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் சுற்றுப் பிராயணம் செய்யும் போது என்னை உடன் அழைத்துச் செல்லட்டும். அவர் பேசும் அதே கூட்டத்தில், "இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று மதிப்பிற்குரிய நிதி அமைச்சரிடம் சொல்ல நீங்கள் தயாராயிருக்கிறீர்களா" என்று அங்கே கூடியுள்ள மக்களை நான் கேட்கிறேன். "சொல்லத் தயார்" என்று அவர்கள் சொன்னால், இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயரை மறு நாளே வைத்திவிட வேண்டும். "சிறு கட்சிகள் சொல்வதைக் கேட்டு இம்மாநிலத்திற்கு அப்பெயரை வைப்போமா" என்று மதிப்பிற்குரிய அமைச்சர்கள் கேட்கிறார்கள். இந்தக் கோரிக்கையை விடுப்பவை, சிறு கட்சிகளாக இருக்கலாம். சிறு கட்சியாக இருப்பதில் அவமானம் ஒன்றுமில்லை. ஒரு கட்சி பெரிய கட்சியாக இருந்தபோதிலும் அக்கட்சி தன் கடமையை நிறைவேற்றாததுதான் அவமானம். இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க முடியாத நீங்கள் வேறு எந்தக் காரியத்தைத்தான் செய்யப் போகிறீர்கள்? மாற்றுக் கட்சிகள் கோருவது ஒருபுறம் இருக்கட்டும். இது மாற்றுக் கட்சிகளின் தனிப்பட்ட விஷயம் அல்ல. இந்த மாநில மக்கள், இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிடப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். நீங்கள் ஒரு பெரிய பேராசிரியரைப் பாராட்டினாலும், ஒரு நாடகத் தந்தையைப் பாராட்டினாலும், "என் வாழ்நாள் முடிவதற்கு முன்னால் 'தமிழ்நாடு வாழ்க' என்று நான் மனமார வாழ்த்த வேண்டும்; அப்போது தமிழ்நாடு என்று அரசாங்கத்தால் இந்த மாநிலத்திற்குப் பெயரிடப்பட்டிருக்க வேண்டும். இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிடப்படுவதை நான் பார்க்க வேண்டும்" என்று ஒரு பெரியவர் சொல்லியிருந்த போதிலுங்கூட, இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயரிட இந்த ஆட்சியாளர்கள் மறுக்கிறார்கள். இது ஜனநாயகமா?

அதற்கடுத்தபடியாக, கவர்னருக்காக இவ்வளவு பணம் செலவழிக்க வேண்டியது அவசியமா? ஜனநாயக வளர்ச்சியில் கவர்னருக்கு இடம் தரக்கூடாது என்று மதிப்பிற்குரிய அம்மையார் பேசினார். "கவர்னர் பதவி என்பது ஒரு இன்ஸ்டிட்யூஷன் — அமைப்பு. திரும்பத் திரும்ப அதை எதிர்த்துப் பேசுவதில் என்ன பயன்" என்று மதிப்பிற்குரிய அமைச்சர் சொல்லலாம். சில இன்ஸ்டிட்யூஷன்கள், காலத்தையொட்டி தேவையில்லை. இந்தக் காலத்தில் ஜனநாயக வளர்ச்சியில் கவர்னர் இருக்க வேண்டியதில்லை. மேலே பாராளுமன்றம் இருக்கிறது. அதற்கு மேல் சூழ்நிலை காரணமாக ராஷ்டிரபதியாக இருக்கிறார் திரு. ராஜேந்திர பிரசாத். இந்த இரு அமைப்புகளுக்கும் இடையில் கவர்னர் இருக்கத்தான் வேண்டும் என்ற அவசியம் இன்றைய தினம் இல்லை. இதை பலர் பல்வேறு கோணங்களிலிருந்து எடுத்துச் சொல்லுகிறார்கள். கவர்னரை வைத்து அவருக்காக 67 லட்ச ரூபாய் செலவு செய்வது ஏழை மக்களுக்கு அதிருப்தியை உண்டாக்குகிறது. காந்திய தத்துவப்படி, இத்தகைய ஆடம்பரமான அமைப்புகள் தேவையில்லை, ஆடம்பரமான செலவுகள் தேவையில்லை. ஆடம்பரமான அமைப்புகளும் ஆடம்பரமான செலவுகளும் வேண்டாம் என்று காந்தி அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்ன தத்துவத்தை இன்று காங்கிரஸ் ஆட்சியாளர்கள் காப்பாற்றவில்லை ஆனால் அவர்கள் மற்றவர்களைப் பார்த்து "உங்களுக்கு காந்ீயத் தத்வம் தெரியாது" என்று சொல்லுகிறார்கள். கவர்னர் தகுதியுடையவர், பண்பு



13th March 1959] [Sri K. Anbazhagan]

உடையவர் என்று ஆட்சியாளர்கள் சொல்வார்களானால், ஆடம்பரமான செலவுகள் செய்யாதவரை, வினோபா பாவே அவர்களைப் போன்றவரை, அந்தப் பதவியில் வைக்க வேண்டும். அந்தப் பதவியில், சம்பளம் வாங்க விரும்பாதவர்களை, வினோபா பாவையைப் போன்றவர்களை நியமிக்க வேண்டும். அந்தப் பதவியை கௌரவப் பதவியாக வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் கவர்னர் சம்பந்தப்பட்ட வேறு செலவுகளைக் குறைத்து கவர்னர் மிகவும் சிக்கனமாக இருக்கிறார் என்று எடுத்துக் காட்ட வேண்டும். இந்தப் பதவியை நீக்குவதற்கு இந்த அரசாங்கத்திற்குத் தரம் இல்லை என்றால், இந்தப் பதவியை நீக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் இது வற்புறுத்தியிருக்க வேண்டும்; அப்படி இல்லாவிட்டால் மத்திய அரசாங்கமே முன்வந்து இந்தப் பதவியை நீக்கியிருக்க வேண்டும்.

கவர்னர் அமைப்பு தேவையில்லை. அது தேவையென்று கருதினால் மக்கள் அதை வெறுக்காத விதத்தில் நடத்திச் செல்வதற்கு முன்வர வேண்டும். அதேபோல் இன்றையதினம் இந்நாட்டிலிருக்கிற அதிகாரிகளின் சம்பள விகிதத்தில் எவ்வளவு ஏற்றத்தாழ்வு இருக்கிறதென்பதை, பட்டியலைப் புரட்டிப் பார்த்தால் தெரியவரும். அங்ஙனம் பட்டியலைப் புரட்டிப் பார்க்கும்போது, 25 ரூபாய் சம்பளத்திலிருந்து ஆண்டுதோறும் அரை ரூபாய் சம்பள உயர்வு செய்து 30 ரூபாய் வரை போகும் ஊழியர்கள் நம் அரசாங்கத்தில் பணியாற்றி வருகிறார்கள். 2,500 ரூபாய் வரை சம்பளம் வாங்கும் அதிகாரிகளும் இந்த அரசாங்கத்தில் இருக்கிறார்கள். ஆக, 25 ரூபாய்க்கும் 2,500 ரூபாய்க்கும் இடையே இருக்கிற வேறுபாட்டை, அமைச்சர்கள் ஒரு கணம் எண்ணிப்பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நூறு மடங்கு வித்தியாசம் இருப்பதைக் காண முடியும். இந்த வித்தியாசத்தைப் போக்க வேண்டுமென்று ஆசை எங்களுக்கு இருந்தும்கூட எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதையாவது அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஏன் இவ்வளவு தாரதம்மியம் இருக்கிறது? 25 ரூபாய் என்பதை நூறு ரூபாய் என்றாவது ஆக்க வேண்டும். 25 ரூபாயில் எப்படி ஒரு குடும்பம் வாழ முடியும்? பல சட்டசபை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கிறார்கள், உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படும் பன்னிரண்டரை ரூபாய் படி போதாது என்று. அந்தளவில் பார்ப்போமேயானால் இரண்டு நாள் படிதான் இந்த 25 ரூபாய் மாதச் சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கிறது. அப்பொழுது அவர்களுக்கு மட்டும் மாதம் 25 ரூபாய் சம்பளம் போதுமா? என்று கேட்கிறேன். ஆகவே, அவர்கள் ஏதாவது தவறுதல் செய்வார்களேயானால் அதை நான் கண்டிக்க மாட்டேன். அவர்கள் தவறுகள் செய்தால் நான், அவர்களை பழிக்க மாட்டேன், அந்தப் பழியை நான்மற்றவர்கள் மேல் தான் போடுவேன். இப்பொழுது, நாட்டில் பாருங்கள், எவ்வளவு தற்கொலைகள் நடக்கின்றன என்று? ஏன் இப்படிப்பட்ட படுபாதகமான சூழ்நிலையை அரசாங்கம் வைத்திருக்க வேண்டும்? யார் மீது வரி போட வேண்டுமோ அவர்கள் மீது தாராளமாக வரி போடுங்கள். அதை நான் ஆட்சேபிக்க மாட்டேன். எங்கிருந்து பொருளைத் திரட்ட வேண்டுமோ அங்கிருந்து பொருளை திரட்டுங்கள். 2,500 ரூபாய் சம்பளம் வாங்கும் அதிகாரிகளின் சம்பளங்களை குறைக்கப் பாருங்கள். அமைச்சர்கள் வாங்கும் 1,500 ரூபாயை குறைத்துக்.........

**The Hon. Sri C. SUBRAMANIAM**: 25 ரூபாய்க்கு மேல் 35 ரூபாய் பஞ்சப்படியும் சேர்ந்து 60 ரூபாய் வாங்குகிறார்கள். ஆகவே 60 ரூபாய் என்று சொல்லி பேசுங்கள்.

**Sri K. ANBAZHAGAN**: அமைச்சர் அவர்கள், டி. ஏ. வையும் சம்பளத்தோடு சேர்த்து 60 ரூபாய் பெறுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி 60 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும் சரி, இந்த 60 ரூபாயில் ஒருவன் தனது வாழ்க்கையை நடத்த முடியுமா? எண்ணிக்கையிலுள்ள வேற்றுமையை வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் தப்பித்துக்கொள்ள முடிந்தால் தப்பித்துக்கொள்ளட்டும். ஆனால் நான் சொல்வதின் கருத்து அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே,

இந்த சம்பள விகிதத்திலுள்ள தராதரத்தைக் குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் பெறும் 150 ரூபாய் அலவன்ஸை குறைப்பதாகயிருந்தாலும் சரி நான் அதற்காக வருத்தப்படமாட்டேன். அதைக் குறைத்து 30, 40 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்களுக்கு சிறிது உயர்த்திக்கொடுத்தால் அதை அரசாங்கத்தின் பெருந்தன்மைக்கு. ஒரு அடையாளமாக எடுத்துக்கொள்வேன். இன்று கிராம அதிகாரிகள் 30 ரூபாய்தான் சம்பளம் வாங்குகிறார்கள். எல்லாம் சேர்த்துத்தான் 30 ரூபாய். இன்று என்.ஜி.ஓ.க்களுக்கு தரப்பட்டிருக்கும் 5 ரூபாய் கூட அவர்களுக்குத் தரப்படவில்லை. இதைச் சொன்னால், கிராம உத்தியோகஸ்தர்கள், கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்று சொல்லப்படலாம். 30 ரூபாயை வாங்கிக்கொண்டு அவர்கள் எட்டு மணி நேரம் உழைக்கவேண்டியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும் நாம், கௌரவ உறுப்பினர்களாக இருக்கும் நாம் மாதம் 150 ரூபாய் அலவன்ஸ் பெறுகிறோம், அதே நேரத்தில் கிராமங்களில் இருக்கிற கௌரவ உத்தியோகஸ்தர்களுக்கு 30 ரூபாய் போதும் என்று சொன்னால் இந்த நியதியை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, ஆளும் கட்சியில் இருப்பவர்கள் இந்த நிலையை மாற்றுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இன்று அரசாட்சியில் இருக்கும் அரசாங்கத்தினிடம் விண்ணபங்கள் அளிக்கப்பட்டால் அவைகள் உடனடியாக கவனிக்கப்படுவதில்லை. என்ற குறை இருந்து கொண்டேயிருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு கனம் காமராஜ் அவர்கள் பாகல்மேட்டில் ஒரு மகாநாடு நடத்தினார்கள். இதற்கு எதிர்கட்சிகளில் இருப்பவர்கள் ஒத்துழைக்கவேண்டுமென்று கருதி அறிஞர் அண்ணா அவர்கள் தண்டலத்தில் ஒரு மகாநாடு கூட்டினார்கள். கட்சி சார்பற்ற முறையில் மகாநாடு ஒன்று கூட்டி பொதுமக்களை திரட்டி அவர்களின் விண்ண்ப்பங்களை முதலமைச்சர் அவர்களிடம் அவரே நேரில் தந்தார்கள். அந்நேரத்தில் தண்டலத்திற்கு செல்வதற்கு ஒரு பாதை அமைக்கப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் திரும்ப வந்தவுடன் மழை காரணமாக அந்த பாதையும் அழிந்துவிட்டது. இப்பொழுது அந்தக் கிராமத்திற்குச் செல்ல பாதையே யில்லை. அங்கு கொடுக்கப்பட்ட மனுக்களின் மேல் யாதொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதைப்பற்றி சட்டமன்றத்தில் முதலமைச்சர் அவர்களிடம் சொன்னால், "நீங்கள் என்னை ஏமாற்றப் பார்த்தீர்கள், ஆனால் நான் ஏமாறவில்லை" என்று சொன்னார்கள். அப்படி ஏமாற்றுவதற்கு சட்டமன்றம் தேவையில்லை. அதற்கு வேறு இடங்கள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் தொகுதியைக் கவனிக்கவில்லை என்று நான் குற்றம் சாட்டவில்லை. ஆனால் அன்று கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்று தான் குற்றஞ்சாட்டுகிறேன். இதேபோன்று ஏராளமான மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றனவேயன்றி அவைகளின் மீது, தக்க காலத்தில், விரைவில் நடவடிக்கைகள் எடுப்பதில்லை, "ரெட்டேப்பிஸம்" அதிகமாகிறது. பாவாடை நாடா என்று சொல்வதினால் சிலர் வருத்தப் படுகிறார்கள். அந்த நாடாவின் அளவு குறைக்கப்படவேண்டும் என்று எடுத்துச் சொன்னால் அதைக் குறைப்பதற்கு இந்த அரசாங்கம் இதுவரை என்ன முயற்சி எடுத்திருக்கிறது ? என்றுதான் நான் கேட்கிறேன். சாதாரண உத்தியோகஸ்தர்கள் மிகப் பாடுபட்டு உழைக்கிறார்கள். மேல் இடத்திலுள்ள பல அதிகாரிகள் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருப்பதை நான் பலவிடங்களில் பார்த்திருக்கிறேன். ஆகவே, அவர்கள் வீணாக அந்த இடத்தில் இருப்பதைக் குறைப்பதற்காகவாவது வழிவகைகள் செய்ய வேண்டும். அல்லது தாழ்ந்த நிலையில் உள்ள அதிகாரிகளுக்கு அதிகப் பொறுப்பைக் கொடுத்து அவர்கள் மூலம் காரியங்களை நிறைவேற்றுங்கள். தாமதத்தைத் தடுப்பதற்கு வழிவகைகள் காணுங்கள். செய்யவேண்டிய காரியங்களை வேண்டிய காலத்தில் செய்தாலன்றி ஜனநாயகம் வெற்றி பெறாது. அதை நிறைவேற்ற அமைச்சர்கள் என்ன முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள் ? ஒரு உதாரணம் சொல்வேன், சென்னை நகரத்தை நூறு வட்டங்களாக பிரித்தபோது அவைகளை தவறானமுறையில் பிரித்திருந்தார்கள்.





அதுபற்றி நான் லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன் செக்ரட்டரி அவர்களிடம் விளக்கி எடுத்துச் சொல்லி அதைத் திருத்துவதற்கு வழி உண்டானால் அதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டேன். படம் போட்டுக்கூட காண்பித்தேன். அத்தவறுகளை இப்போழுது வேண்டுமானாலும் விளக்க முடியும். ஆனால் அதுபற்றி கவனிக்கப்படவில்லை. அதற்கு ஒரு பதிலும் வரவில்லை. பதில் தராததை நான் குற்றமாக சொல்லவில்லை. இந்தத் தவறுகளை நீக்கவேண்டுமென்று சொன்னால், அவைகள் தவறுகளாக இல்லாவிடில் அவைப்பற்றி விளக்கிச் சொல்ல வேண்டும். இல்லையெனில் அத்தவறுகளை திருத்தவேண்டும். செகரட்டிரியாக இருக்கிற ஒருவர் இப்படி நடந்துகொள்கிறார் என்றால் பின் சாதாரண உத்தியோகஸ்தர்களைப்பற்றி கேட்கவேண்டுமா ? ஆகவே இவைகளையெல்லாம் மாற்றியமைக்கவேண்டுமே அல்லாது அமைச்சர்கள் ஊர் ஊராக சென்று பேசினால்மட்டும் போதாது. ஜனநாயக பண்பாடுகளை அமைச்சர்கள் பேணி பாதுகாக்கவேண்டும். ஒவ்வொரு அலுவலகத்திற்குள்ளும் நுழைந்து வெளியே வரவேண்டும். அமைச்சர்களின் அறைகளில் பைல்கள் வருவது போதாது. பல அதிகாரிகளின் அறைகளிலும் சென்று பார்வையிட வேண்டும். பொறுப்பான, நல்ல அதிகாரிகளும் இருக்கிறார்கள். சென்னை அரசாங்க அதிகாரிகள் மிகச் சிறந்தவாகள் என்ற பாராட்டை நானும் சொல்கிறேன். ஆனால் குற்றங்குறைகள் இருப்பின் அவைகள் தவிர்க்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகள் காணப்படவேண்டும். அப்படி அமைச்சர்கள் செய்யாவிட்டால், பாகல் மேட்டிலும், தண்டலத்திலும் பொதுமக்களை கூட்டுவித்து அவர்களின் பாராட்டுதல்களை முதல்மைச்சர் பெறமுடியுமேயல்லாது, மக்களுக்கு உண்மையிலேயே அது நன்மை பயப்பதாக இருக்காது. ஆகவே, நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் விதத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடைசியாக நான் சொல்லவிரும்புவது, முனிசிபல் தேர்தல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. முனிசிபல் வாக்காளர்களின் பட்டியலில் ஏராளமான குறைகள் இருக்கின்றன, இப்பொழுதுகூட பல்வேறு இடங்களில் லஞ்சம் தாண்டவமாடுகிறது இவைகளையெல்லாம் தவிர்க்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தேர்தல் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு என்று சொன்னால் அவர்களிடம் சொல்லி அதிலுள்ள குறைபாடுகளைத் தீர்க்கவேண்டும். தேர்தலுக்கு நாமினேஷன் கொடுத்ததற்குப் பிற்பாடும் வாக்காளர்கள் பட்டியலில் புதிதாக ஆட்கள் சேர்க்கப்படுகிறார்கள். நாமினேஷன் தேதிக்குப் பின்னால் வாக்காளர்களைச் சேர்க்கும்போது தங்களுக்கு வாக்களிகக் கூடும் ஆட்களை, வெளியிடங்களில் உள்ளவர்களைச் சேர்க்கும் அநீதி நடக்கிறது. இந்த அநீதியைத் துடைப்பதற்கு ஜனநாயக அரசாங்கம் என்றால், அது தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்குத கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: தலைவர் அவர்களே, பட்ஜெட் விவாதத்தில், பொதுவிவாதத்திற்கு அடுத்தாற்போல் இந்த தலைப்பின் கீழ் நடக்கக் கூடிய விவாதம்தான் மிகவும் முக்கியமானது என்பதுதான் என் கருத்து. ஏனெனில் மந்திரிசபை ஏற்று நடத்தக் கூடிய கொள்கைகளைப்பற்றி, அந்தக் கொள்கைகள் எவ்வாறு நிறைவேற்றப் படுகிறது என்பதைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கு இந்தத் தலைப்பு உதவுகிறது. ஆகவே தான், இதில் பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த கருத்துக்களை எடுத்துக் கொள்ள முடியுமோ அவைகளை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராயிருக்கிறோம், என்ற முறையில் தான் பொது விவாதத்திற்கு பதில் சொல்லும்போது நான் சொன்னேன். மிக முக்கியமாக, மறுபடியும் இந்த விவாதத்திலும் கவர்னர் பதவி அவசியமா என்பதுபற்றிய விவாதம் இப்போழுது கிளப்பப்பட்டிருக்கிறது. முன்னாலேயே நான் சொல்லியிருக்கிறேன். இதில் ஒன்றுபட்ட கருத்து இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. கவர்னர் பதவி அவசியம் இல்லை என்று நினைக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள், அவசியம் என்று

நினைக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இதுதான் சரியான கருத்து, இன்னொரு கருத்து தவறானது என்று சொல்வது மிகப் பெரிய தவறாகும் என்று முதலில் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். இதுமாதிரி கவர்னர் ஒருவர் அவசியமா என்பது பற்றி இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இங்கே விவாதத்தில் எழுப்பியதுமட்டுமல்ல, இது பல சமயங்களில் இந்த சட்டசபையில் விவாதிக்கப்பட்டது மட்டுமல்ல, நமது அரசியல் சட்டம் உருவான காலத்திலேயே இரண்டு வித கருத்துகள் உலாவின. அதற்குப் பிற்பாடு இந்த விஷயம் தீர ஆலோசிக்கப்பட்டு, மெஜாரிடியாக இருக்கக்கூடியவர்கள் இப்பொழுது இருக்கக் கூடிய நிலைமையிலே கவர்னர் பதவி அவசியம் என்கின்ற ஒரு முடிவு எடுத்தார்கள். இன்றைக்கு நாம் சில அமைப்புகளை ஏற்படுத்தும்பொழுது; பழங்காலத்தில் ஏற்பட்டிருந்த மரபுகளை அடிப்படையாகக் கொண்டு தான் சில முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கிறது. திடீரென்று புது அமைப்பு வரும்பொழுது அதனால் பல கஷ்டங்கள் ஏற்படக்கூடும். ஆகையினால் அரசியல் நிர்ணய சபை இதுபற்றி ஆராயும்பொழுது 50, 60 வருஷ காலமாக கவர்னர் என்ற ஒரு பதவியை வைத்து நடத்திய மரபு ஏற்பட்டிருக்கிறது, அதை அழித்துவிடவேண்டுமா, அல்லது வைத்துக்கொள்ளுவது நல்லதா என்பது பற்றி ஆலோசனை செய்து, மாறுபட்ட கருத்துக்களையெல்லாம் பரிசீலனை செய்த பிற்பாடு, கவர்னர் பதவி இருப்பது நல்லது என்ற முடிவுக்கு வந்தது. மாறுபட்ட கருத்துக்கு இடம் இருக்கும்பொழுது, அதில் அநேகமாக எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையிலே ஒரு முடிவு செய்யப்பட்ட பிற்பாடு, திரும்பத் திரும்ப அதே கருத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பது ஜனநாயகப் பண்புக்கு விரோதம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அன்பழகன் அவர்கள் ஜனநாயகத் தத்துவத்தை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று ரொம்ப அழகாக வற்புறுத்திப் பேசினார். ஜனநாயகத்தில் அவ்வளவு அக்கறை உடையவர்கள், ஜனநாயகப் பண்பு உடையவர்கள், இரண்டுபட்ட கருத்துக்கள் இருக்கும்பொழுது அதிகமாக இருக்கக் கூடியவர்கள் கருத்தை அனுசரித்து ஒரு முடிவு எடுத்தபிற்பாடு மறுபடியும் திரும்பத் திரும்ப ஒரு பக்கத்தில் இருக்கிற கருத்தையே எடுத்துச் சொல்லி கவர்னர் பதவி கூடாது என்று பேசுவது ஜனநாயகப் பண்புக்கு உகந்ததா என்பதுபற்றி யோசித்துப்பார்க்கவேண்டும். அப்படிமுடிவு ஏற்பட்ட பிறகு கவர்னர் பதவி அனாவசியம் என்று பேசுவது தவறு. அதற்கு அவசியம் இருக்கிறது என்பதை உணர்ந்துதான், அதற்காக ஓரளவுக்கு செலவு ஏற்பட்டாலும்கூட, அந்தச் செலவையும் ஏற்று அந்தப் பதவி இருப்பது அவசியம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரி என்னை போல் ஒன்றும் தெரியாதவர்கள் எடுத்த முடிவு அல்ல. நாட்டிலுள்ள மாபெரும் தலைவர்களும், அறிஞர்களும் ஒன்று கூடி இம்மாதிரி முடிவு செய்தார்கள். ஆகவே, இம்மாதிரி ஒரு அமைப்பு அவசியம் என்று முடிவு ஏற்பட்ட பிறகு அதைப்பற்றி திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதனால் நம்முடைய பண்புதான் குறையுமே தவிர, உடனடியாக சட்டத்தை மாற்றி கவர்னர் பதவியை எடுத்துவிடப்போவதில்லை. அதனால் வீண் மனக்கசப்புக்கும் வெறுப்புக்கும்தான் இடம்ஏற்படுமே தவிர வேறு ஒன்றும் இல்லை. அம்மாதிரி ஒரு அமைப்பை ஏற்படுத்திய பிற்பாடு, அந்த அமைப்பு நல்ல முறையில் நடக்கிறதா என்பது பற்றிப் பேசுவதுதான் காரியத்தைச் சாதித்துக்கொள்ள சாதகமாக இருக்குமே ஒழிய, திரும்பத் திரும்ப என்னுடைய கருத்தைத்தான் மற்றவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். அதுதான் ஜயநாயகப் பண்பு என்கின்ற முறையில் பேசிக்கொண்டிருந்தால், அது ஜனநாயகப் பண்புக்கு மிகவும் புறம்பானது என்பதை மறுபடியும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

மற்றொரு அங்கத்தினர் "கவர்னருக்கு இவ்வளவு சம்பளமா என்று கேட்டார்கள். சம்பளத்தில் தாரதம்மியம் இருப்பதைப் பற்றி அன்பழகன் அவர்களும் சொன்னார்கள். மலைக்கும் மடுவுக்கும் உள்ள இந்த ஏற்றத்தாழ்வை நீக்குவதற்கு நாம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு மூன்றாவது திட்டத்தில் நாம் என்னென்ன



திட்டங்களை ஏற்கவேண்டுமென்பதுபற்றி ஆலோசனை செய்யலாம் என்று சொன்னேன். இன்றைக்கு கவர்னர் அவர்களுக்கு அவ்வளவு சம்பளம் நிர்ணயிக்கபட்டிருக்கிறது என்றால், இன்றைக்கு இருக்கிற எல்லோருக்கும் அவர் தலைவராக இருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு சம்பளம் ஒரு படி மேல் இருக்கவேண்டும் என்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஜகன்னாதன் அவர்கள் கணக்குப் போட்டு அவர்களுக்கு வருமான வரியெல்லாம் போக எவ்வளவு மிச்சப்படும் என்பதைச் சொன்னார்கள். அவர்களுக்கு மற்ற சலுகைகள் இருக்கின்றன. அவைகளினால் அதிகச் செலவு ஏற்படுகிறதே, அவர் மூலம் மற்ற நிர்வாக அமைப்பினால் அதிகச் செலவு ஆகிறதே என்றெல்லாம் சொன்னார்கள். கவர்னர் பதவியில் இருப்பவர் அவர் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வேண்டிய எல்லாவிதமான வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டியிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு கவர்னருக்கு 9 லட்சம் செலவழிகிறதே, 10 லட்சம் செலவழிகிறதே என்று சொல்வதில் பயன் இல்லை. எனக்கு உதவியாக இருக்கக்கூடிய எல்லா நிர்வாக இலாகாக்களுக்கும் ஆகக்கூடிய செலவையும் சேர்த்துக்கொண்டு, நிதி இலாகாவுக்கு இவ்வளவு செலவு ஆகிறதே, நிதி அமைச்சருக்கு சம்பளம் 10 லட்சம் என்று சொல்லக்கூடாது. எனக்கு உதவியாக இருக்கக்கூடிய காரியதரிசி, துணைக் காரியதரிசி எல்லோருடைய சம்பளத்தையும் சேர்த்துக்கொண்டு எனக்கு 10 லட்சம் ரூபாய் சம்பளம் என்று சொல்லுவது எவ்வளவு உண்மையாக இருக்குமோ அதுபோல்தான் கவர்னருக்கு 9 லட்சம் சம்பளம் என்று சொல்லுவதும் இருக்கும். கவர்னர் அவர்களுக்கு இருக்கக்கூடிய பல்வேறு பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காகத்தான் பல அமைப்புக்கள் ஏற்படுத்தவேண்டியதாயிற்று. அந்த அமைப்புகளின் காரணமாகத்தான் செலவு ஏற்படுகிறதே தவிர, இவைகளெல்லாம் கவர்னர் அவர்களுடைய சொந்த செலவு அல்ல என்பதை பரிசீலனை செய்துபார்த்தால் நன்றாகத் தெரியவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே, திரும்பத் திரும்ப கவர்னர் பதவி வேண்டியதில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருந்தால் பயன் இல்லை. அரசியல் சட்டம் மாற்றி அமைக்கப்படும் வரையில் கவர்னர் பதவி இருந்துதான் ஆகும், வேண்டுமானால், பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளுவதற்காக திருப்பித்திருப்பி சொல்லிக்கொண்டே இருக்கலாமே தவிர, அதன் மூலம் வேறு ஒன்றும் நன்மை ஏற்படப்போவதில்லை. ஒருவரை தலைவர் என்று கொண்டுவந்து வைத்த பிற்பாடு அவர் வேண்டியதில்லை, அவசியமில்லை, என்று சொல்லிக்கொண்டிருந்தால் நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்குக்கு கூட தடங்கலாக இருக்கும் என்ற கருத்தைத்தான் உங்கள் முன்னிலையில் வைக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மந்திரிசபையில் நடக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி, மந்திரி சபைக்கு உதவியாக இருக்கக்கூடிய ஆட்சி நிர்வாகத்தைப்பற்றி, அதாவது அட்மினிஸ்டிரேடிவ் "டிபார்ட்மெண்டு செக்ரடேரியட் பற்றி பேசினார்கள். இன்றைக்கு ஆட்சி நடக்கிற முறையிலே, அது பல பகுதிகளாகப் பிரிந்திருப்பதை அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். சட்டசபை இருக்கிறது. அதிலே பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. திட்டங்களை ஏற்படுத்துவதற்கும், அதே சமயத்தில் திட்டங்கள் எந்த அளவிலே இருக்கவேண்டும் என்பதற்கும், எந்தெந்த விஷயங்களுக்காக எவ்வெளவு செலவழிக்கவேண்டுமென்பதற்காகவும் சட்டசபை அனுமதி கொடுக்கக் கூடிய முறையிலே இயங்குகிறது. அங்கே எல்லா முக்கியமான விஷயங்களைப்பற்றியும் முடிவு எடுக்கப்படுகிறது. அவ்வாறு முடிவு எடுக்கப்பட்ட பிற்பாடு அந்த முடிவுகளை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு இன்னொரு பக்கத்தில் நிர்வாகத்தினிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்த நிர்வாகத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒரு பகுதி செக்ரடரியேட், அதாவது ஆட்சித் துரை என்று சொல்லாலாம். அங்கு இருக்கக்கூடியவர்களுக்கு நேரடியாக எந்தக் காரியத்தையும் செய்வதற்கு பொறுப்பு கிடையாது, அதிகாரமும் கிடையாது, சர்க்கார் ஆணைகள் இடவேண்டியதற்காகவே இந்தப் பகுதி அமைந்

[Sri C. Subramaniam] [13th March 1959

திருக்கிறது. இந்த ஆணைகளை நிறைவேற்றி வைக்கக்கூடிய பகுதி நிர்வாகப் பகுதி என்று வைத்துக்கொள்ளலாம். அதற்காகத்தான் வெவ்வேறு இலாகாவில் தலைவர்கள், தலைவர்களுக்குக் கீழ் ஜில்லா அளவிலே வேலை செய்யக்கூடிய அதிகாரிகள், அவருக்குக்கீழ் சிறு சிறு பகுதிகளிலே இருக்ககூடிய அதிகாரிகள், பல ஜில்லாக்கள் அதன் சொந்த ஒரு மண்டலத்திற்காக இயங்கக்கூடிய அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே நிர்வாகப் பகுதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி இந்த மூன்று பகுதிகளும் ஒத்து வேலை செய்தால்தான் உண்மையிலேயே பல காரியங்கள் நன்றாக நிறைவேற முடியும் என்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

சிவப்பு நாடாவைப் பற்றி பலர் பேசினார்கள். சிவப்பு நாடா முறையினால் அதிகமாக தாமதம் ஏற்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். வெகு சுலபமாக இம்மாதிரி சொல்லிவிடலாம். நான்கூடசில சமயத்தில் பொறுமை இழந்து இவ்வளவு தாமதமாகிறதே, இதற்கு குறுக்கு வழி கண்டுபிடிக்க முடியாதா, இந்த பைலை கிழித்தெரியுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். நிர்வாக அனுபவத்தைக் வைத்துக்கொண்டு இம்மாதிரி பல விஷயங்களையும் ஆராய்ந்து நன்றாக பரிசீலித்த பிற்பாடு உத்தரவு போடுவது நல்லதா, அல்லது மனதிற்கு உடனடியாக என்ன தோன்றுகிறதோ, மற்ற விஷயங்கள் எப்படியிருந்தாலும் சரி, உடனடியாக மனதிற்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அம்மாதிரி உத்தரவு பிறப்பிப்பது நல்லதா என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி உடனடியாக மனதிற்குத் தோன்றுகிறபடி உத்தரவு போடுவது சில விஷயங்களில் நன்மையாக இருக்கக்கூடியதாக இருந்தாலும், பெரும்பாலான விஷயங்களில், ஒரு விஷயம் சர்க்காருடைய கவனத்திற்கு வரும்போது, இதற்கு முன்பு இந்த விஷயம் சர்க்காருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா, அப்பொழுது எத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, அந்த உத்தரவினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்து, எல்லா புள்ளி விவரங்களையும் தெரிந்துகொண்ட பிற்பாடு உத்தரவு பிறப்பித்தால், அதில் அநேகமாக தவறுதல் ஏற்படுவது இல்லை. அப்படி உத்தரவு போடும்பொழுது ஏதோ ஒன்று, இரண்டு தவறுதலாகப் போகாமல் இருப்பதில்லை. எத்தனைதான் கவனமாகச் செய்தாலும், நம்மையும் மீறி சில குறைபாடுகள் ஏற்படத்தான் செய்யும். அந்தத் தவறுகளையெல்லாம் குறைப்பதற்கு அடிப்படையாக இருக்கக்கூடியது இந்த பரிசீலனை அமைப்பு. இந்த அடிப்படையில் தான் நிர்வாக அனுபவம் உள்ளவர்கள் படிப்படியாக இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய முறைகளில் பல முறைகள் சீக்கிரம் வேலை நடப்பதற்கு தடங்கலாக இருக்கின்றன என்பதை அறிந்து, இந்தத் தடங்கலை ஓரளவுக்கு நீக்கியிருக்கிறோம். பழைய முறைகள் எல்லாவற்றையும் அப்படியே அனுசரித்துக் கொண்டு வருகிறோம் என்பதில்லை. ஒரு பக்கத்தில் இருக்கக்கூடிய அதிகாரியிடமிருந்து மற்றொரு பக்கத்தில் இருக்கும் அதிகாரிக்கு "பைல்" போகவேண்டுமென்றால் முன்பெல்லாம் எங்கேயோ சுற்றிக்கொண்டு வரும். அம்மாதிரி ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு போகவேண்டிய பைல்களெல்லாம் உடனே போகவேண்டும். இவ்வளவு மணி நேரத்திற்குள் போகவேண்டும், இவ்வளவு நாட்களுக்குள் போகவேண்டும் என்றெல்லாம் கால அளவு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது, சில பைல்கள் "ப்ளு பாடில்" போகும், சில "எல்லோ பாடில்" போகும், சில "வைட் பாடில்" போகும், சில "பாடில்" சிவப்பு நாடா கட்டியிருக்கும். சிலவற்றில் வெள்ளை நாடா கட்டியிருக்கும். இம்மாதிரி எது அவசரம், எது முக்கியம் என்பதையெல்லாம் குறிப்பதற்கு பலவேறு தரப்பட்ட "பாடுகளில்" பைல்கள் வருகின்றன. ஏதாவது தாமதம் ஏற்பட்டிருந்தால், அம்மாதிரி தாமதம் ஏற்பட்டதற்கான காரணத்தையும் "பைலில்" எழுதவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். மந்திரிகளுக்கு "பைல்கள்" வரும்பொழுது வெறுமனே கையெழுத்து மட்டும் போடுவதில்லை. தாமதம் ஏற்பட்டிருந்தால் தாமதத்திற்கான காரணத்தைக்



13th March 1959] [Sri C. Subramaniam]

கேட்கிறோம். மற்றவர்கள் கவனிக்காவிட்டாலும், எங்களுக்கு "பைல்கள்" வரும்பொழுது தாமதம் ஆகியிருந்தால் அதைப்பற்றி கேட்கத்தான் செய்கிறோம்.

இந்த முறையில் இப்போது தாமதம் ஏற்படுவதை எவ்வளவோ குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் இன்னும் திறமையாக வேலை செய்து காலதாமதத்தை குறைத்துக்கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன். அதற்கான முறையிக் வேலை செய்து வருகின்றோம். இப்போது இருக்கின்ற அனுபவத்தைக் கொண்டு எந்தெந்த முறைகளிலெல்லாம் காலதாமதத்தை குறைக்க முடியுமோ அந்த அளவில் குறைப்பதற்கு முயற்சி செய்து வருகின்றோம். வேறு யாராவது ஆட்சியில் வந்தால் சிலவேளை இதைவிட சீக்கிரமாக நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யலாம். நான் முடியாது என்று சொல்ல முன் வரவில்லை. ஏதோ தமிழ் நாட்டிலுள்ள மக்கள் ஒரு சிலரைதான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவே இப்போது அவர்கள் இந்த காரியங்களை செய்து கொண்டிருக்க முடியும். அதல்லாமல் மற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து இந்த காரியங்களை எல்லாம் செய்ய முடியாது என்று சொல்ல நான் தயாராக இல்லை. அதற்கும் சந்தர்ப்பம் உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: The question is:

ஏதோ எல்லா காரியங்களிலும் நடவடிக்கை எடுப்பதற்கு காலதாமதம் ஆகிறது என்று கனம் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அப்படியிருந்த நிலைமை இப்போது மாறிவிட்டது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பிப்ரவரி–மார்ச் மாதங்களில்தான் ஜாஸ்தியாகவேலை நடந்து கொண்டிருக்கிறது, ஆரம்பத்தில் எல்லாம் சரியாக வேலை நடப்பதில்லை என்று சொன்னார்கள். இதைப் பற்றி, நாலைந்து வருடங்களாக பரிசீலனை செய்து பார்த்து இப்போது அந்த நிலைமை கழிந்த இரண்டு மூன்று வருடங்களாக மாறியிருக்கிறது என்பதை இப்போதுள்ள அனுபவத்திலிருந்து அறிந்துகொள்ள முடியும். முன்பெல்லாம் பட்ஜெட் மார்ச் 31-ம் தேதி நிறைவேற்றிப் பின்னால்தான் ஸெக்ரட்டேரியட்டிலுள்ள எல்லா தலைமை அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்படும். அதன் பின்னால் இதில் எவ்வாறெல்லாம் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து அதற்கப்புறம் நடவடிக்கை எடுப்பதற்கு ஜூலை—ஆகஸ்டு மாதமாகிவிடும். அதன் பின்னால் அந்தந்த இடங்களுக்கு அறிவித்து வேலை நடத்தும்போது அவசர அவசரமாக வேலைகளைச்செய்ய வேண்டிய நிலைமையிருந்தது. இந்த நிலைமை இருந்து கொண்டிருந்ததினால் அந்தந்த இலாகாக்காகளிலுள்ளவர்கள் அந்த ஆண்டுக்குள் வேலையை முடிப்பதற்காக பிப்ரவரி–மார்ச் மாதங்களில் பரீட்சைக்கு படிப்பது போல அவசரமாக டெண்டர்களை எல்லாம் வரவழைத்து அவசரமாக வேலை செய்வார்கள். இப்போது அந்த நிலைமை இல்லை. பட்ஜெட்டை தயார் செய்து சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு முன்னால்—சட்டசபையில் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையிருப்பதினால்—இல்லையென்றால், நிறைவேற்ற முடியவில்லையென்றால் மந்திரிசபை உடனே ராஜிநாமா செய்ய வேண்டும், அது வேறு விஷயம்—சட்டசபை மறுக்காது என்ற நம்பிக்கையில்—காபினெட் பட்ஜெட்டை பாஸ் செய்தவுடன் எல்லா இலாகா தலைமையினருக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது. அதன்படி எல்லா இலாகாவினரும் முடிவு எடுப்பதற்கு வசதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அவ்விதம் முடிவு எடுப்பது மட்டுமல்ல, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பல்வேறு இலாகா தலைவர்களையும் அழைத்து அவர்கள் அந்தந்த காலத்திற்குள் எவ்வளவு தூரத்திற்கு தங்கள் வேலைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைக்கேட்டு, அவ்விதம் வேலைகள் சரியான முறையில் நடத்தப்படவில்லையானால் ஏன் போடப்பட்டிருக்கிற திட்டத்தின்படி நிறைவேற்ற முடியவில்லை, அதற்கு காரணம் என்ன என்பதையும் கேட்டு பரிசீலனை செய்யப்படுகின்றது. ஒவ்வொரு வருஷத்திற்கும் எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று பார்க்க

[Sri C. Subramaniam] [13th March 1959

வேண்டும் என்று அங்கத்தினர்கள் சொன்னார்கள், அவ்விதம் கூட இல்லாமல் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் எவ்வளவு வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை பார்த்து, வேலைகள் எல்லாம் சரியாக நடைபெறுகின்றனவா என்பதை பரிசீலிப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக காரியங்கள் எல்லாம் சரிவர நடத்தப்பட்டு வருகின்றன என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு ஓரளவு மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் டி. எஸ். ராமசாமி பிள்ளை போன்றவர்கள் வேண்டுமென்றால், அவ்விதம் ஒன்றுமில்லை, வேறு நாட்டில் தான் அப்படியெல்லாம் நடக்க முடியும் என்று சொல்லலாம். அதைப்பற்றி கவலையில்லை....(திரு. டி. எஸ். ராமசாமி பிள்ளை : நான் அவ்விதம் சொல்லவில்லையே)........எவ்விதமிருந்தாலும் எங்களால் முடிந்தவரை சில காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது செய்து கொண்டிருப்பதும் போதாது, இன்னும் கூடுதலாகச் செய்யவேண்டும் என்று சொன்னால் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இப்போதிருக்கின்றவர்களுக்கு போதிய திறமையில்லை என்று சொன்னால், தமிழ் நாட்டு மக்களுக்கே இவ்வளவுதான் திறமையிருக்கின்றது என்று சொல்வது போல்தான் ஆகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே முன்னால் இருந்து கொண்டிருந்தது மாதிரியே இப்போதும் எல்லா காரியங்களிலும் நடவடிக்கை எடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லுகின்ற கருத்து தவறான கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த மந்திரிகளுக்கெல்லாம், திறமையில்லை, இந்த மந்திரி சபைக்கு திறமையில்லை என்று சொல்வதற்கு இந்த சபையிலுள்ள அங்கத்தினர்களுக்கு பூரண உரிமை இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை, மற்றவர்களுக்கு எல்லாம் இதைவிட திறமை இருக்காது என்று சொல்லுவதற்கும் நான் தயாராகயில்லை. பொதுவாக எங்களால் இயன்றவரை வேண்டியதைச் செய்துதான் வருகிறோம் என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இந்த அதிகார வர்க்கத்தில் கொடுக்கப்படுகின்ற சம்பளங்களில் மிகவும் ஏற்றத்தாழ்வு இருப்பதாகச் சொன்னார்கள். சிலருக்கு 25 ரூபாய் சம்பளம் கொடுக்கின்ற அதே சமயத்தில் ஒரு சிலருக்கு 2,500 ரூபாய் 3,000 ரூபாய் என்று சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது முறையல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது. இது உண்மைதான். ஐ.ஸி.எஸ். அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் அதிகமாகத்தான் வாங்குகிறார்கள். நம் நாடு சுதந்தரம் பெற்ற காலத்திலேயே இவர்களுக்கு கொடுக்கப்படும் உரிமைகள் ஒன்றும் பாதிக்கப்படக்கூடாது என்று சொல்லப்பட்டது. அதற்கு நாம் உறுதி கொடுத்திருக்கிறோம். இவ்விதம் ஒரு சில அதிகாரிகளுக்கு மட்டும் அதிக சம்பளம் கொடுத்துக்கொண்டிருப்பதில் பெரிய நஷ்டம் ஒன்றும் வந்துவிடப்போவதில்லை. கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டியது நம்முடைய பொறுப்பு. அதோடு இப்பொழுது இருந்து கொண்டிருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு கொடுக்கப்படும் சம்பளம் 2,250 ரூபாய் அதிக பட்சமாய் இருக்க வேண்டும் என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். இவ்விதம் வேண்டுமென்றால் கொடுக்கக்கூடாது என்று சொல்லலாம், பலருக்கு 60 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கும் போது ஒரு சிலருக்கு மட்டும் 2,250 என்று கொடுத்துக்கொண்டிருப்பது அதிகம்தான். இதில் ஏற்றத்தாழ்வு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இவ்விதம் திறமையாக இருக்கின்றவர்களை எல்லாம் நீக்கிவிட்டு குறைந்த சம்பளம் பெறுவதற்கு தயாராக இருக்கக்கூடியவர்களை மட்டும் நியமித்து சர்க்காரை நடத்திக்கொண்டிருந்தால் சர்க்கார் திறமையான முறையில் நடந்து கொண்டிருக்குமா என்பதையும் நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தனியார் துறையை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கு எவ்வளவு ஏற்றத்தாழ்வு இருக்கின்றது என்பதையும் எடுத்து நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட தனிப்பட்ட துறைகளில் வேலை செய்யக் கூடியவர்கள் கூடுதல் அளவில் சம்பாதிக்க முடியும். முதலாளிகளை விட்டுவிட்டாலும்கூட அவர்களுக்கு கீழே வேலை பார்த்து வருகின்றவர்களுக்கு எவ்வளவு ஊதியம் கொடுக்கப்படு



13th March 1959] [Sri C. Subramaniam]

கின்றது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். நமது நாட்டிலேயே பல வெளிநாட்டு வர்த்தக ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அதே போன்று பல தொழில் ஸ்தாபனங்கள் இங்கே இருக்கின்றன. இந்த ஸ்தாபனங்களிலெல்லாம் இந்தியர்களை வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஸ்தாபனங்களில் எல்லாம்கூட ஓரளவு நல்ல திறமையுள்ளவர்களும் ஆற்றல் உள்ளவர்களும் அறிவு படைத்தவர்களும்தான் மேல் தட்டில் இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் அதிகமாக ஊதியம் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதே போன்றுதான் அரசாங்கத்திலும் பல திறமையுள்ளவர்கள் இருக்கிறார்கள், அதே போன்றுதான் நல்ல ஆற்றல் படைத்தவர்களும் அறிவுபடைத்தவர்களும் நமது அரசாங்கத்தில் வேலை செய்து வருகிறார்கள். அவர்களையெல்லாம் வேண்டாம், 50 ரூபாய்க்கு வேலை செய்யக்கூடியவர்கள் வந்தால் வரட்டும், அவர்களை வைத்துக்கொண்டு, அவர்களையெல்லாம் காரியதரிசிகளாக நியமித்து வேலை நடத்துவதில் கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் அதே சமயத்தில் அரசாங்க நிர்வாகம் ஒழுங்காகவும், திறமையாகவும், நடைபெறுமா என்பதையும் நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இந்த முறையில் நடத்துவதாக இருந்தால் நிச்சயமாக பல கஷ்டங்கள் ஏற்படலாம், அதன் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படலாம். அதன் காரணமாகத்தான் திறமையானவர்களை, நல்ல ஆற்றல் படைத்தவர்களை, நல்ல அறிவு படைத்தவர்களை அவர்களுக்கு கூடுதலான ஊதியம் கொடுத்தாலும் பரவாயில்லை. அவர்களை நிர்வாகத்தில் வைத்திருக்கவேண்டும் என்ற முறையில்தான் நாம் அவர்களை வைத்திருக்கிறோம். அவர்களை நாம் வைத்துக் கொள்ளவில்லை என்றால் அவர்கள் தங்களுக்கு ஊதியம் அதிகமாக கிடைக்கும் இடத்திற்குத்தான் செல்வார்கள். அதல்லாமல் அரசாங்கத்திற்குத்தான் வேலை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் இங்கு வந்து வேலை செய்யமாட்டார்கள். அந்த முறையில் பார்த்தால் அவர்களுடைய ஊதியத்தைக் குறைக்க முடியாத நிலைதான் இப்போது இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கான பல திட்டங்களை வகுக்க வேண்டியிருக்கிறது. அதற்குத் தகுந்தபடி வேலைத் திட்டங்களை வகுக்க வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் தகுதியான ஆட்களை நியமித்தால்தான் நமது வேலைகளைச் சரியாக நிறைவேற்றிவைக்க முடியும். அதல்லாமல் இந்த அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைப்பதினால் மட்டும்......

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, நான் பேசிய போது இப்படிப்பட்ட அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்று சொன்னதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு பேசுகிறார்கள். நான் எடுத்துக்காட்டியது, தாழ்ந்த நிலையிலுள்ளவர்களின் ஊதியத்தை உயர்த்தவேண்டும் என்பதைதான் வலியுறுத்தினேனே தவிர உயர்ந்த அதிகாரிகள் 2,500 ரூபாய் சம்பளம் பெறக்கூடாது என்று நான் குறிப்பிடவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதைப்பற்றி யார் குறிப்பிட்டாலும் சரி இவ்விதம் உயர்ந்த சம்பளம் கொடுக்கக்கூடாது என்கிற கருத்துக்கு நான் பதில் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். அந்த முறையில் தான் நம்முடைய அரசாங்க நிர்வாகம் சரியான முறையில் இயங்குவதற்கு இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்திருக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு இப்போது இருக்கின்ற நிலையில் உயர்ந் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக குறைந்த ஊதியம் பெறுபவர்கள் எல்லோருக்கும் ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்வதையும் எடுத்துக்கொள்ளலாம், இவ்விதம் குறைந்த ஊதியம் பெறுகின்ற எல்லோருக்கும் குறைந்தது 100 ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இப்போது, அதாவது சமீபத்தில் கொடுத்த சம்பள உயர்வின் காரணமாக வருடம் ஒன்றுக்கு 181 லட்சம் ரூபாய் செலவு ஏற்படுகின்றது. அதே சமயத்தில் குறைந்தது 100 ரூபாய் என்ற அளவுக்கு எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்றால் குறைந்தது

[Sri C. Subramaniam] [13th March 1959

ஏழரைக் கோடி ரூபாய் ஆகும் என்று தெரிகிறது. இதைப் பற்றி நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். இவ்விதம் ஏழரைக்கோடி ரூபாயும் செலவு செய்து இவர்களுடைய சம்பளத்தை எல்லாம் உயர்த்துவது நல்லதா அல்லது பல திட்டங்களை போட்டு அவைகளை எல்லாம் நிறைவேற்றி இந்த நாட்டிலுள்ள மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது நல்லதா என்பதைப் பற்றி நாம் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் 100 ரூபாய் குறைந்த சம்பளம் இருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற அதே சமயத்தில் கிராமப்புறத்தில் வேலை செய்துகொண்டிருக்கிறவர்களுக்கு எந்த முறையில் ஊதியம் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். சென்னையிலிருந்து கொண்டு சொல்வதை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது. இன்றைக்கு கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு கிடைக்கின்ற ஊதியத்தையெல்லாம் கணக்கெடுத்துப் பார்க்கும்போது இப்போது இருக்கின்ற 60 ரூபாய் சம்பளத்தை கூட குறைக்கவேண்டிய நிலை ஏற்படுமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இன்றுள்ள நிலைமையில் இப்போது இருக்கின்ற ஊதியத்தை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றால் வரிகளை இன்னும் அதிகமாக வசூல் செய்யவேண்டும். இந்த முறையில் இப்போது வசூலிக்க வேண்டிய வரிகளை எல்லாம் இரண்டு மடங்காக்கி வசூலித்து ஊதியத்தை அதிகப்படுத்திக் கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்கும்போது கொடுக்க முடியாது என்கின்ற நிலைமைதான் வந்து சேருகிறது. இந்த இக்கட்டான நிலைமையை இப்போது இருக்க கூடிய நிலைமையில் எவ்வாறு சமாளிப்பது என்றால் அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். நிவாரணமெல்லாம் ஒரு புறம் இருக்க, நான் முன்னமேயே சொன்னது போல பொருளாதார வாழ்வு உயர்ந்தாலொழிய, மத்தியில் இருப்பதை ஒருவருக்கொருவர் பங்கு போட்டுக்கொள்வதால், இருக்கக் கூடிய பற்றாக்குறையை பங்கு போட்டுக் கொள்வதால் கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடாது. மேலும் மேலும் நாட்டின் செல்வத்தை எப்படி உயர்த்துவது, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை எப்படி உயர்த்துவது, அதற்காக எந்த முறையில் பாடுபடுவது என்று முதலில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. உற்பத்தி பெருக்க அடிப்படையில் திட்டம் போட்டு அதற்கு முதலிடம் கொடுக்கிறோம், என்றால் மற்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம் என்பதற்காகவல்ல. இதன் மூலமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை நல்ல முறையில் உயர்த்த முடியும் என்று, விவசாயத் துறையாக இருந்தாலும், தொழில் துறையாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும், உற்பத்தியை எப்படிப் பெருக்குவது என்று நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதிலே பல திட்டங்களைச் சொன்னார்கள் கனம் அண்ணாதுரைஅவர்கள். பேசும்போது சொன்னார்கள் சர்க்காருக்கு வரும்படி வருவதற்கு பஸ் துறையை ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். சர்க்காருக்கு வரும்படி வருவதற்கு சினிமா துறையை ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டார்கள். பஸ் துறையும், சினிமா துறையும் பொருள் உற்பத்தி செய்யக்கூடியதுறைகள் அல்ல. இருக்கக் கூடிய வசதிகளைக் கொடுக்கக் கூடிய துறைகள் மக்களிடத்திலே எந்த வகையிலே வரி வாங்குவது, மக்களிடத்திலே எவ்வளவு இருக்க வேண்டும், சர்க்காரிடத்திலே எவ்வளவு இருக்கவேண்டும் என்பதெல்லாம் வேறு விஷயம் ; இந்த வருவாயை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும், இது பொது மக்களிடம் போகக்கூடாது என்று சொல்வது அது வேறு விஷயம். இதை ஒரு திட்டமாக வைத்து, அதன் மூலமாக பொருளாதாரம் உயர்ந்து விடும் என்றால் அது தவறான காரியம். உற்பத்தி பெருகக் கூடிய காரியமல்ல. தொழில் துறை வளரக் கூடிய காரிய மல்ல. இவைகளெல்லாம் வசதி செய்து கொடுக்கக் கூடிய துறைகள். இப்போது தாற்காலிகமாக இவைகளை மக்களிடத்திலே விட்டு வைப்பதில் தவறில்லை. சினிமா துறையை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால், அதை எடுத்துக் கொள்வதில் தவறில்லை. அவர்களுக்கெல்லாம் நஷ்ட ஈடு கொடுத்து கோடிக் கணக்கான ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தும் கூட அதனால்



13th March 1959] [Sri C. Subramaniam]

உற்பத்தி பெருகப்போவதில்லை. அப்படி கோடிக்கணக்கான ரூபாயை நஷ்ட ஈடாகக் கொடுப்பதற்கு பதில் வசதி ஏற்படுமானால் வேறு துறைகளில் பயன்படுத்தி தொழில் துறையில் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியில் ஈடுபடுத்த வேண்டுமே தவிர மற்றவர்கள் கொடுக்கக் கூடிய வசதியை நாம் எடுத்துக் கொண்டு கொடுக்கவேண்டும், வரும்படி அதிகமாக இருக்கிறது என்று பார்ப்பது சரியான கணக்கல்ல என்று நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சர்க்கார் வேறு, சமுதாயம் வேறு என்பதல்ல. எல்லோரும் சேர்ந்து உழைப்பதன் மூலம், செல்வம் பெருகுகின்ற முறையில் அபிவிருத்தி அடைகிற முறையில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்ற முறையில் உற்பத்தி பெருகுகின்ற முறையில என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பார்க்க வேண்டுமே தவிர, பஸ்காரர்கள், இருக்கிறார்கள், சினிமாக்காரர்கள் இருக்கிறார்கள், அவைகளை எடுத்துக் கொண்டால் போகிறது என்று சொன்னால், அதனால் புதிய உற்பத்தி ஒன்றும் ஏற்படுவதில்லை புதிய வசதி ஒன்றும் சமுதாயத்திற்குக் கிடைப்பதில்லை. இருப்பதே சர்க்கார் பக்கம் வேண்டுமானால் வந்து விடலாம். திட்டம் என்று சொல்லும்போது, “ நாங்கள் திட்டங்களைச் சொல்லி விட்டோம் ” என்று பார்க்காமல், உற்பத்தி பெருகுகிற திட்டங்கள் செல்வம் பெருகுகிற திட்டங்கள் என்ன என்று சொன்னால், அதற்கு முதலிடம் கொடுத்து மற்றவர்கள் ஆரம்பிக்க வில்லையானால் அந்தத் திட்டங்களை சர்க்கார் ஆரம்பித்து, முன்னேறக் கூடிய திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி இன்றைக்கு தனியார் துறை பற்றி பலர் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தனியார் துறை கூடாது என்று சிலர் சொல்லுகிறார்கள். தனியார் துறை இருக்கவேண்டுமா அல்லது இருக்கக் கூடாதா என்பதில் முதலிலிருந்தே என்னுடைய கருத்து ஒரே மாதிரியாக இருக்கிறது. எல்லோரும் யோசனை செய்து பார்த்து, தனியார் துறை இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, தனியார் துறை “ கூடாது, கூடாது ” என்ற கருத்தையே வலியுறுத்தி வருவதால் மட்டும் தனியார் துறை போகாது. தனியார் துறை கூடாது என்ற முடிவு எடுத்து, அதை நிறைவேற்றினால் தான் தனியார் துறை போகும். கம்யூனிஸ்ட் கட்சி கூட தனியார் துறை உடனடியாகப் போகவேண்டுமென்று விரும்பவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் துறைக்கு இன்னென்ன கட்டுப்பாடுகள் இருக்க வேண்டுமென்று அவர்களிடம் சில கருத்துக்கள் இருக்கின்றன. மற்றவர்களிடம் அதற்கு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஒன்று தனியார் துறை வேண்டுமென்று வைக்கவேண்டும், அல்லது தனியார் துறையே வேண்டாம், எல்லாமே சர்க்காருக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்று வைக்கவேண்டும். அழகாக தனித்துறை என்று சொல்லி விட்டு அதிலே பல சங்கடங்களை வைத்திருப்பதை விட தனியார் துறையே வேண்டாமென்று சொல்லி விடலாம். இதனால் சமுதாயத்திற்கு நஷ்டமே தவிர லாபம் இல்லை. ஒரு ஸ்தாபனம் வேண்டு மென்று சொல்லும்போது அதற்கு எல்லாவித வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்து கொடுக்கும்போது முதலாளிகளுக்கு ஏதோ சாதகமாக இருக்கிறார்கள் என்று சொல்லும்போது . . . .

Sri P. S. CHINNADURAI : இது நியூ மாடல் சோஷலிஸமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சின்னதுரை சோஷலிஸம் எப்போதுமே வரப்போவதில்லை. அவர் மனதில் நினைத்துக் கொண்டிருப்பது வேறு வித சோஷலிஸம். அவர் தலைமையில் இருந்தால் தான் அந்த சோஷலிஸம் நிறைவேறுமோ என்னவோ தெரியவில்லை. அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியதில்லை.

பொருள்களை உற்பத்தி செய்வதில் தனியார் துறை இயங்க வேண்டுமென்று சொன்னால் அந்தத் துறை திறமையாக இயங்க அதற்குத் தீங்குகள் வராமல் பாதுகாப்புகள் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஒன்றும் செய்ய முடியாத முறையில் உற்பத்தி பெருக முடியாத முறையில் பல்வேறு தடங்கல்கள் போடுவதால் சிறிய முதலாளிகள் கஷ்டப்

படுவதால், உற்பத்தி குறைகிற காலத்தில் சமுதாயம் பாதிக்கப்படுகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படியில்லையானால் தனியார் துறைக்கு எந்த வித பாகுபாடும் இருக்கக் கூடாது, எல்லாத் துறைகளுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்குத் தான் வரவேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி தனியார் துறை இருக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளும்போது, அது சரியாக நடக்காத முறையில் பலவித நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சொல்லும்போது தான் எனக்குப் புரியவில்லை. தனியார் துறை வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும். இன்றைக்குத் தனிப்பட்டவர்கள் மட்டும் நன்றாக நடத்தவில்லையா ? பல்வேறு முறைகளில் உற்பத்தி பெருக வேண்டும் என்று சொன்னால், அதிலே தனியார் துறையும் இருக்க வேண்டுமென்று சொல்வது ஜனநாயக ரீதியிலே அமைந்திருக்கிறது என்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால் தான் இன்றைக்கு இப்போது இருக்கக்கூடிய தொழில்கள் மட்டும் இருந்தால் போதாது. இன்னும் பல பெரும் தொழில்கள் வேண்டும் அதற்கு இருக்க வேண்டிய சலுகைகள் என்ன, என்ன வசதிகள் வேண்டும் என்று பார்த்து இன்றைக்கு சர்க்கார் அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு சமுதாயத்திலே இயங்கிக் கொண்டிருக்கக் கூடிய ஸ்தாபனங்களை விட்டு, புதிய ஸ்தாபனங்கள் பல நம் மாகாணத்தில் வரவேண்டும் என்று சொல்லும்போது, இப்போது இருக்கக் கூடியதை சர்க்கார் எடுத்துக் கொள்வதில் கவனம் செலுத்தக் கூடாது, அதில் மட்டும் கவனம் செலுத்தினால் நாம் முன்னேற்றம் காண முடியாது, என்று பார்க்கும் போது தான் தனியார் துறைக்கு இன்றைக்கு ஒரு இடம் இருக்கிறது. சர்க்கார் செய்வதற்குப் பல காரியங்கள் காத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இப்போது இருப்பதில் கை வைக்க வேண்டிய அவசியமில்லை. நான் இப்படிச் சொல்லும் போது முதலாளிகள் பேரில் ஏதோ அக்கரை கொண்டு சொல்கிறேன் என்பதல்ல. இன்று இருக்கக் கூடிய சூழ்நிலையில் அவர்களுடைய முயற்சி உற்பத்திப் பெருக்கத்திற்குப் பயன்படக் கூடிய முறையில் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. சமுதாயத்தில் எல்லா சக்திகளையும் பயன்படுத்தி, நல்ல முறையில் உற்பத்தி பெருகினால், நாட்டிலே இருக்கக் கூடிய ஏற்றத் தாழ்வுகள் நீங்கக் கூடியது மட்டுமல்ல, பல குறைகள் அப்போது தான் நீங்கப் போகிறதே தவிர எங்கள் பக்கத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள், இங்கே என்ன சொல்வார்களோ என்னமோ எனக்குத் தெரியாது—ஆடிக் குளிருக்கு பற்றாத போர்வையை இழுத்துப் போர்த்தினால், காலுக்கும் போதாது, தலைக்கும் போதாது என்று சொல்வார்கள்—அந்த முறையில் தான் ஆகும்.

ஒரு பக்கம் நாம் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லும் போது, சலுகைகள் என்று நமக்குத் தோன்றுகிறது. அதே அளவுக்கு இன்னொரு பக்கத்தில் இருக்கக் கூடிய சலுகைகளை எடுத்துக் கொள்கிறோம் என்பதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். என்.ஜீ.ஓ.-க்களுக்கு குறைந்தது 100 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று கூறுவதை யாரும் மறுக்க முடியாது. அப்படிக் கொடுக்கும் போது அது யாரை பாதிக்கிறது என்று யோசிக்க வேண்டும். ஒரு பகுதியை மட்டும் பார்த்துப் பிரயோசனம் இல்லை. நாம் பூரா சமுதாயத்தையும் இயக்கி வருகிறோம், ஆகையால் சமுதாயத்திலே இருக்கிற சூழ்நிலையை அனுசரித்து நடக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தில் உள்ளவர்களால் சமுதாயத்தின் சூழ்நிலையை மறந்து வாழ முடியாது என்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களால் இயன்ற அளவுக்கு இந்தத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வர முயற்சி செய்து வருகிறோம். மந்திரிகள் நடந்து கொள்ளும் விதம் பற்றி குறைகூறினார்கள். யார் வேண்டுமானாலும், யார் மீது வேண்டுமானாலும் குற்றம் கண்டு பிடித்து விடலாம். எங்களைப் போன்ற மந்திரிகளிடம் குற்றம் இருக்காது என்று சொல்லிக் கொள்ள வில்லை.





எதிர் கட்சி அங்கத்தினர் ராமசுவாமி பிள்ளை போன்ற மகான்களைக் கேட்டுக் கொள்வது, அவர்களை நினைத்துக் கொள்வதைப் போல் எங்களை நினைத்துக் கொள்ளாமல், மனிதர்கள் என்று நினைத்து, மன்னித்து விட்டு, பெரிய மனது பண்ணி, எங்களுடைய குற்றங்களைத் திருத்தி நல்ல முறையில் முயற்சி செய்து காந்திஜி அவர்கள் சொல்வதுண்டு, இன்னொருவரைத் திருத்த நாம் முன்னர் வலிமையைப் பெற்று, மனத்தூய்மை இருக்கவேண்டும் என்று அப்படி நல்ல மனப் பண்பாடு, நல்ல மனத் தூய்மை இருக்குமானால், அதன் காரணமாக நாங்கள் திருந்தி பணியாற்றுவதற்கு செய்யுங்கள் என்று நான் அவர்களை அடி பணிந்து கேட்டுக் கொள்கிறேன். அந்தத் துறையிலே அவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது ஒரு புறமிருக்க, மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்வதைப் பற்றி பலர் குறைகூறிப் பேசினார்கள். ஒரு பக்கத்திலே ஒரு அங்கத்தினர் சொன்னார். " எல்லாம் காங்கிரஸ் கட்சியாலே நடக்கிறது; மந்திரிகள் சுற்றுப்பிரயாணத்திற்கு காங்கிரஸ்காரர்கள் ஏற்பாடு பண்ணுகிறார்கள் ; வேறு ஒருவரையும் கவனிப்பதே இல்லை" என்று. இப்படி ஒருவிதம். நண்பர் ராமசாமிப் பிள்ளை அவர்களைப் போன்றவர், "மக்களுடைய பிரதிநிதிகளைக் கவனிப்பதில்லை ; கலெக்டரைக் கேட்டுத் தான் செய்கிறார்கள்; கலெக்டரைக் காரில் பக்கத்தில் வைத்துக்கொண்டு மந்திரிகள் போகிறார்கள்" என்று சொல்கிறார்கள். அப்படிச் செய்வது அத்தியாவசியம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவேண்டுமானால், அங்கங்கே நியமிக்கப் பட்டிருக்கிற அதிகாரிகள் தவறு செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். அதே சமயத்தில் அவர்கள் பொறுப்பை உணரக்கூடிய முறையிலே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பை உணர்ந்து, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பை மக்களும் உணர்ந்து, நல்லமுறையில் பணியாற்றுவதற்கு நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்தியாகவேண்டும். இன்றைக்கு இருக்கும் அமைப்பிலே ஜில்லாக் கலெக்டர் தான் எல்லாவற்றுக்கும் பொறுப்பாக இருந்து நடத்தவேண்டிய பொறுப்பு இருக்கிறது. அது சிலருக்குப் பிடிக்கலாம். அல்லது பிடிக்காமல் இருக்கலாம். அந்த அமைப்பிலே அந்த அதிகாரிக்குப் போதுமான முக்கியத்துவம் கொடுத்து, பொறுப்பை உணரக்கூடிய முறையிலே மக்கள் ஒத்துழைக்கக் கூடிய முறையிலே, அவர்களுக்குத் தகுதியை ஏற்படுத்திக் கொடுக்க வில்லையென்றால், நாம் இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கும் பல காரியங்கள் பாழாகி விடும். கலெக்டரைப் பற்றி மட்டும் அல்ல நான் சொல்வது. ஒரு சிறு அதிகாரியாக இருந்தாலுங்கூட, அவருக்குக் கொடுத் திருக்கும் பொறுப்பைப் பற்றியவரையில் அவருடைய பகுதியில் அவர் தான் மேலான அதிகாரி என்னும்போது, அவருக்கும் அத்தகைய தகுதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. "கலெக்டர் அவர்களே" என்று கூப்பிட்டால் நான் கலெக்டருக்கு மட்டமாகி விட வேண்டும் என்பது அவசியம் இல்லை. யாரையும் பொதுவாக "அவர்களே" என்று அழைப்பதுண்டு. அது போல கலெக்டரையும் "அவர்களே" என்று சேர்த்துச் சொல்வதிலே ஒருவருடைய மதிப்பு குறைந்துவிடப் போவதில்லை. பரந்த மனப்பான்மையோடு இருக்கக்கூடிய திரு. ராமசாமிப் பிள்ளை அவர்கள் இதிலே ஒரு சிறு மனப்பான்மையைக் காண்பிக்கிறாரே என்று நான் வருத்தப்படுகிறேன். அதிகாரிகள் என்றால், அவர்கள் வேறு எங்கேயோ இருந்து வந்தவர்கள் அல்ல ; நம்மிடத்தில் பழகிக்கொண்டிருக்கிறவர்கள் தான் அவர்களும். அவர்களுக்கும் ஒரு மதிப்பு கொடுக்கும் போது தான் அவர்களும் நன்றாகப் பணியாற்றுவார்கள். அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்துவதில் தவறு ஒன்றும் இல்லை. காரில் அமைச்சர்கள் தங்கள் பக்கத்தில் கலெக்டரையோ காங்கிரஸ்காரர்களையோ உட்கார வைத்துக்கொண்டு செல்கிறார்கள் என்றால், இப்படிச் சொல்கிற அங்கத்தினர்கள் வந்து உட்காரமாட்டேன் என்கிறார்களே (சிரிப்பு) அதற்கு என்ன செய்வது ?

**SRI T. S. RAMASWAMY PILLAI**: நான் சொல்வது—அதிகாரிகள் கூட்டத்திலே கலெக்டர் தலைமை தாங்கி நடத்தினால் அவர்களைப் பார்த்து "கலெக்டர் அவர்களே" என்று பேசுவதை நிச்சயமாக நான் ஆட்சேபிக்க வில்லை. ஆனால், பொது மக்களுடைய கூட்டத்திலே கலெக்டர் தலைவர் அல்ல. பொது மக்களுடைய தலைவர்கள் எம்.எல்.ஏ.க்கள் என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: பொது மக்களுடைய தலைவர் கள் எம்.எல்.ஏ.-க்கள் என்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், அதிகாரிகளுக்குள்ளே முன்னால் இருக்கக்கூடியவர் கலெக்டர் தான். அதிகாரிகளைப்பற்றியே குறிப்பிடுவது தவறு என்றால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அங்கே இருப்பவர்களை அறிமுகப்படுத் தும்போது "கலெக்டர் அவர்களே" என்று சொல்கிறார்கள் என்றால், அதிலே தவறு இருப்பதாகத் தெரியவில்லை. எந்த மனப்பான்மையோடு பார்க்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக, "எம்.எல்.ஏ.-க்கள் சொல்லும் விஷயத்தை மந்திரிகள் கவனிக்கவில்லை; பல மனுக்கள் கொடுக்கப்பட்டிருந்தும் அதிலுள்ள காரியங்கள் நிறைவேற்றப்படவில்லை" என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். நான் ஒப்புக்கொள்கிறேன். என்ன காரணம்? இன்றைக்கு இன்னும் தீராமல் இருக்கும் குறைகள் எவ்வளவு என்பதைத் தெரிந்திருப்பாரானால், திரு. அன்பழகன் அவர்கள் அந்தக் குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கமாட்டார்கள். மற்ற அங்கத்தினர்கள் சிலரும் சொல்லியிருக்கமாட்டார்கள். இன்றைக்கு எங்கள் பக்கத்தில் இருக்கும் அங்கத்தினர்களும் குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள் என்றால் அவ்வளவு குறைகள் இருக்கின்றன. அவைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். சுதந்திரம் பெற்று பத்து ஆண்டுகளில் பல காரி யங்களை நிறைவேற்றி வருகிறோம் என்று பெருமைப்படலாம். ஆனால், அத்தனை காரியங்களும் ஒரு பெரிய மலையிலே ஏதோ ஒரு சிறு பகுதி செதுக்கப்பட்டதாகத்தான் கொள்ள வேண்டும். இன்னும் மலைபோல் இருக்கிறது. போகப் போக மலை வளர்ந்துகொண்டே தான் இருக்கும். எந்தக் காலத்திலும் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட்டோம் என்ற நிலைமை எப்போதும் ஏற்படப் போவதில்லை.

அது ஒருபுறமிருக்க, இன்றைக்கு குறைகள் இருக்கும் காரணத்தால், மக்கள் பிரதிநிதியாக வரக்கூடியவர்கள் அங்கே இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டியதாகத்தான் இருக்கும். அதை மறைக்க முடியாது. அதில் எத்தனை காரியங்களை நிறைவேற்ற முடியுமோ, அவை களை—இருக்கும் வசதியை வைத்துக்கொண்டு—தீர்க்க முயற்சி செய்கிறோம். எதற்கு முதல் இடம் கொடுப்பது என்பதைப்பற்றி பட்ஜெட்டிலே தீர்மானம் செய்திருக்கிறோம். ஐந்தாண்டுத் திட்டத்திலே தீர்மானம் செய்திருக்கி றோம். மேலும் புதிய வசதிகளைக் கண்டுபிடித்து புதிய காரியங்களை எடுத்துச் செய்துகொண்டிருக்கிறோம். அவ்வப்போது செய்கின்ற காரிய களில், எது ரொம்ப அவசியம் என்று தோன்றுகிறதோ அதை உடனடி யாகச் செய்கிறோம், சிலவற்றைப் பொருத்துத்தான் செய்யவேண்டி ஏற்படுகிறது. அப்படிச் செய்வது குற்றமானால், அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இப்படிக் கொடுத் தும் பிரயோஜனம் இல்லையென்றால், இப்பொழுது இருக்கும் சூழ்நிலை காரணமாக இப்பொழுது தவிர்க்க முடியாத நிலைமை என்பதைத்தான் இந்தச் சபையிலே சொல்லிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

இன்னொரு விஷயத்தைப் பற்றியும் குறையாகச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். பல அங்கத்தினர்கள் பேசும்போது, "எல்லாம் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் இருக்கும் தொகுதியிலே நடக்கிறது, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் தொகுதியிலே நடக்கவில்லை; அதிலும் முக்கியமாக தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத் திட்டம் எல்லாம் காங்கிரஸ்





அங்கத்தினர்கள் இருக்கும் இடத்திற்குப் போய்விடுகிறது" என்கிறார்கள். இதிலே பார்க்கவேண்டியது இதுதான். நீங்கள் அதைப்பற்றி எப்படி நினைத்தாலும் சரி, 150 பேர் காங்கிரஸ்காரர் ஒரு பக்கத்திலும், 50 பேர் இன்னொரு பக்கத்திலும் இங்கே இருக்கிறார்கள். மற்றவர்கள் பகுதியில் ஒரு பங்கு காரியங்கள் நடந்தால், காங்கிரஸ்காரர்கள் இருக்கும் பகுதியில் மூன்று பங்கு நடந்தால்தான் எல்லோருக்கும் நியாயமாகப் பிரித்துக்கொடுத்த மாதிரி ஆகும். அதை மறந்துவிட்டு, "நான் எதிர்க் கட்சிக்காரன், எதிர்க்கட்சியினர் இருக்கும் தொகுதிக்கே பூராவும் வசதி செய்து கொடுக்க வேண்டும்; காங்கிரஸ்காரர் இருக்கும் தொகுதிக்கு செய்து கொடுக்கக்கூடாது" என்றால் காங்கிரஸ்காரர்களே வரவேண்டாம் என்று சொல்லிவிடலாம். அதை மனதில் வைத்துப்பார்த்தால், எந்த, விதத்திலும் "ஏதோ காங்கிரஸ்காரர் தொகுதியிலே செய்யப்படுகிறது எதிர்க்கட்சிக்காரர்கள் இருக்கும் தொகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது" என்ற குற்றத்தை யாரும் சொல்ல முடியாது. ஆனால், அவர்கள் நினைக் கிறது என்னவென்றால், "நாம் எதிர்க்கட்சிக்காரர்கள்; ஆகவே நடக்க வேண்டிய காரியங்களெல்லாம் எங்கள் தொகுதியிலேயே நடக்கவேண்டும்" என்று எதிர்பார்த்தால், அது நியாயமல்ல, மனிதப் பண்பும் அல்ல. எங்கள் பக்கத்தில் இருப்பவர்களுடைய பகுதிகளைக் கவனிக்காமல் இருந்து விடமுடியாது. எதிர்க் கட்சிக்காரர்கள் திட்டுகிறார்கள் என்பதற்காக அவர்கள் பகுதிக்கே செய்யவேண்டும் மற்ற பகுதிக்குச் செய்யக்கூடாது என்று அவர்கள் எதிர்பார்க்க முடியாது. ஒருவர் திட்டாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அப்படிச் செய்வது நியாயமா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். திட்டுவதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக, கடுமையான வார்த்தைகள் சொல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, காங்கிரஸ்காரர்களின் தொகுதிகளை ஒதுக்கிவிட்டு, அங்கிருக்கும் மக்களெல் லாம் மக்கள் அல்ல, காங்கிரசை எதிர்த்து வோட்டு போட்டவர்களுடைய பகுதிகளுக்குத்தான் முதல் சலுகை செய்ய வேண்டும் என்ற முறையிலே பணியாற்றினால் சர்க்காரே இருக்கமுடியாது. ஆகையால்தான், இப்பேர்ப் பட்ட சூழ்நிலைக்கு மத்தியிலே எங்களால் இயன்ற அளவு எங்கள் சேவையைச் செய்து வருவதற்கு முயற்சி செய்து வருகிறோம். "அந்தச் சேவையை இன்னும் கொஞ்சம் நன்றாக நடத்துவதற்கு உங்கள் உதவி இருக்குமா?" என்று எதிர்க்கட்சியிலே உள்ளவர்களையும் கேட்கிறேன். அவர்கள் இல்லையென்று சொல்லிவிட்டால், இப்பொழுது இருக்கிற மாதிரி நாங்கள் நடத்திக்கொண்டு போகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் சேர்ந்து, அடிக்கடி இல்லாத குறைகளையும், வெறுமனே தீர்க்க முடியாத குறைகளையும் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு இருப் பதைவிட, ஆகக்கூடிய காரியத்திலே நல்ல முறையிலே யோசனை சொன்னால் இப்பொழுது செய்வதைவிட இன்னும் கொஞ்சம் திறமையாக செய்ய முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அந்த ஒத்துழைப்பு இருக்குமா? என்று உங்களைப் பார்த்துக் கேட்கிறோம். அப்படிக் கேட்கும் போது, "ஒத்துழைப்புக் கேட்கிறார்கள், ஆனால், அது செய்வதில்லை இது செய்வதில்லை" என்று குற்றம் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன செய்வது? எல்லாக் குறைகளையும் நாங்கள் தீர்த்த பிற்பாடு தான் ஒத்துழைப்பு தருவோம் என்று அவர்கள் சொன்னால் அந்த ஒத்துழைப்பு எப்பொழுது கிடைக்க முடியும்? குறைகள் என்பது ஒன்றன் பின் ஒன்றாக, சங்கிலித் தொடர்போல் இருந்துகொண்டே இருக்கும். அவைகளையெல்லாம் ஒவ் வொன்றாகத் தீர்த்துக்கொண்டு வருகிறோம்.

மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்பது நாமெல் லாம் ஏற்றுக்கொண்டிருக்கிற பணியாகும். அதற்காக என்ன என்ன செய்யவேண்டும் என்பதிலே நாம் கவனம் செலுத்திக்கொண்டு, திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வரும்போது, இந்தக் கட்சியைச் சேர்ந்த வர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்த்து காரியங்களைச் செய்வதில்லை. நாட்டிலே பொருளாதாரம் மொத்தமாக பரவலாக எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதை வைத்துக்கொண்டுதான் பல்வேறு

[Sri C. Subramaniam] [13th March 1959

துறைகளிலும் இருக்கக்கூடிய மக்கள் முன்னேறி வரச் செய்ய முடியுமே தவிர, ஒரு பகுதி மட்டும் முன்னேறி, மற்ற பகுதிகள் பின்னே இருக்கும் நிலையில், இன்னும் அதிகமாக பங்கு கிடைக்கவேண்டுமென்று நினைத்துப் பார்ப்பது தவறு என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்த விவாதத்தில் பல விஷயங்கள் சொல்லப்பட்டன. அவைகளைப் பற்றியெல்லாம் நான் இங்கே விவரிக்க முடியவில்லையென்றால், அவையெல்லாம் முக்கியக் குறைவு என்ற காரணத்தால் அல்ல, காலக் குறைவு தான் காரணமே தவிர வேறு அல்ல. இங்கே கனம் அங்கத்தினர்கள் சொல்வதையெல்லாம் ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று யாரும் நினைக்கக்கூடாது. அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டே இருக்கும் போது, நல்ல கருத்துக்கள் வரும்போது எங்களையும் அறியாமல் பல காரியங்களைச் செய்யத் தூண்டுவதாக அவை அமைகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN :** தமிழ்நாடு . . . . . . . . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM :** பெயரிலே ஒரு சில பேருக்கு நம்பிக்கை. பெயர் மாற்றினவுடனே பெரியதாகிவிடுகிறதாக. பெயர் மாற்றிவிடுவதினால் உண்மையிலேயே ஏதாவது காரியம் ஆகும் என்றால் நான் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். பெயர் மாற்றுவதால் ஒன்றும் இல்லை என்பதை வலியுறுத்துவதற்காகவே "மெட்ராஸ்" என்ற பெயரே இருப்பது நல்லது. மெட்ராஸை "தமிழ்நாடு" என்று சொல்வதை யார் தடுக்கப்போகிறார்கள்? யாரும் தடுக்கப்போவதில்லை. தமிழ்நாடு என்று நான் பேசுகிறேன். அம்மாதிரி இரண்டு பெயர்கள் இருப்பதாலே தவறு இல்லை. என் வீட்டிலே என்னை "சுப்ரமண்யம்" என்று அழைப்பதில்லை. பழைய செல்லப் பெயரை வைத்துத்தான் அழைக்கிறார்கள் (சிரிப்பு) ஆகையால், "தமிழ்நாடு" என்று சொல்வதைப்பற்றி யாரும் மறுக்கமாட்டார்கள். எல்லோரும் தமிழ்நாடு என்று சொல்வோம். ஆனால், ரிகார்டிலே "மெட்ராஸ்" என்ற வார்த்தை கையாளப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. ரிகார்டில் "மெட்ராஸ்" என்று இருந்துகொண்டிருப்பதை "தமிழ்நாடு" என்று மாற்றவேண்டுமானால், கெஜட்டில் பதிவு பண்ணி பெயரை மாற்றவேண்டிய அவசியம் எல்லாம் ஏற்படும். அதெல்லாம் செய்யவேண்டாம். நான் இப்படிச் சொல்வதினால், எனக்குத் தமிழ்ப்பற்றுக் குறைவு என்று யாரும் எண்ணமாட்டார்கள் என்று நினைக்கிறேன். தமிழ்நாடு என்று சொன்னால், என் காதில் தேன் வந்து பாய்வதற்குப் பதிலாக ஈயம் வந்து பாய்கிறது என்று யாரும் நினைக்க வேண்டாம். தமிழ்ப்பற்றுக்குறைவினால் அல்ல நான் இப்படிச் சொல்வது. "மெட்ராஸ் ஸ்டேட்" என்று அபிஷியல் ரிகார்டுகளில் எழுதுவதே தவிர, தமிழ்நாடு என்று சொல்கிறோம், தமிழ்நாடு என்று பேசுகிறோம். எல்லோரும் தமிழ்நாடு என்று சொல்லலாம். தமிழ்நாடு என்ற பெயர் தான் நம்முடைய நாட்டுக்கு இப்பொழுதே ஏற்றுக்கொண்டிருக்கிற பெயர். ஆனால் ரிகார்டிலே இருக்கிறபடி இருக்கட்டும். பெயரை மாற்றுவதினால் நமக்கு நன்மை வரப்போவதில்லை. இதற்காக பெரியதொரு இயக்கம் நடத்தி, குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொண்டு, இதற்குப் பிறகும் வெட்டுப் பிரேரணைக்கு அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன். அத்துடன் விட்டுவிடுகிறேன்.

DEPUTY SPEAKER : I shall now put the cut motion to vote. The question is :

"That the allotment of Rs. 1,02,67,100 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.



13th March 1959]

DEPUTY SPEAKER : The question is :

"That the Government be granted a sum not exceeding Rs. 1,02,67,100 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 16,96,700 under Demand XI—Elections be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 16,96,700 under Demand XI—Elections."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again to-morrow morning at 8-30. 1-30 p.m.

The House then adjourned.

## APPENDIX I.

[Vide answer to starred question No. 757 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 13th March 1959, page 194 supra.]

*Statement showing the demands of the Public Works Department Workers' Union, Madras, and the action taken thereon.*

| *Demands of the Union.* (1) | *Action taken.* (2) |
|---|---|
| *Demands pressed at the conference on 20th September 1957 held by Minister (Works).* | |
| 1 All the workers in the Department who have put in a continuous service of at least six months and/or a total service of one year should be confirmed. | Orders have been issued provincialising, as a temporary measure, the services of 192 temporary workers in the Public Works Workshops with over five years' service. Those 192 workers have now become eligible for incremental scales of pay, Contributory Provident Fund and leave benefits. |
| 2 Conditions of workers not to be changed to the detriment of workers at the time of confirmation. | Orders have been issued in G.O. Ms. No. 3009, P.W., dated 12th November 1958, conceding the request and prescribing the method of fixation of initial pay of temporary workers who are absorbed into provincialised establishment. |
| 3 Revision of the grade system should be done progressively. | In G.O. Ms. No. 247, P.W., dated 8th September 1958, the Government have agreed with the Chief Engineer that there is no case for revision of the scales of pay of any category except mazdoors. In regard to the question of revision of pay of mazdoors the matter is separately under consideration in consultation with the Chief Engineer. As regards grant of annual certificate of efficiency to individual workers which was suggested at the conference on 20th September 1957, the Government have agreed with the Chief Engineer that it is not the normal practice to grant such certificates to Government servants while they are in service. The Government have also agreed with the Chief Engineer that the system of incentive or efficiency bonus is not suitable for the Public Works Department Workshops which is run on a "no loss-no profit" basis and that this question need not be pursued. |
| 4 State Government should launch upon a well-laid out and progressive scheme under the Government of India's scheme for the low paid employees for the benefit of the workers of the Public Works Department. | The question of construction of hundred quarters for workers of the Public Works Workshops at a cost of Rs. 6,10,000 is separately under consideration. |



| *Demands of the Union.* (1) | *Action taken.* (2) |
|---|---|
| *Demands pressed at the conference on 20th September 1957 held by Minister (Works)*—cont. | |
| 5 All workers working in all the various industrial and allied sections should be given at least four sets of uniforms per year, free of cost. | Orders have been issued in G.O. Ms. No. 247, P.W., dated 23rd January 1959, sanctioning the supply of two sets of uniforms annually to 285 permanent workers, borne on the provincialised work-charged establishment of the Public Works Workshops. |
| 6 *Promotions.*—Wherever any promotion is made either for temporary vacancies or for permanent vacancies it should be on the basis of service, seniority and ability. It is also demanded that all such promotions that have been done on the basis of nepotism, corruption and with no regard to skill, etc., should be rectified. | The Chief Engineer proposed that work clerks (on the scale of Rs. 35—2—65) in the Public Works Workshops, Madras who do not possess the minimum general educational qualification prescribed for appointment as superior works clerks (on the scale of Rs. 45—3—60—2—90) but have rendered not less than five years' service may be considered by Government for exemption from the prescribed qualification, whenever any vacancies occur in the provincialised work-charged establishment. The Government have approved the proposal of the Chief Engineer. The Chief Engineer was informed that there was no need to fix any minimum qualification for such exemption and that each case will be considered on merits.<br><br>The Government did not, however, approve the proposal to allow the members of the work-charged establishment engaged on clerical duties in the Public Works Workshops to sit for the general education test of the S.S.L.C. standard conducted by the Madras Public Service Commission. |
| 7 The existing gratuity is very inadequate. It is therefore demanded that the same should be improved and brought to at least one month's salary for every one year of service. It is also demanded that this gratuity must be available for even to such workers who have put in a minimum of two years of service and irrespective of the fact whether they are casual, temporary or permanent workers and that the same should be paid off to workers before the evening of the last day of their service. | Orders have been issued allowing the gratuity at the following rates, which are the same as those applicable to other Government servants with reference to the rules in the Madras Retiring and Invalid Gratuities (Non-pensionable Establishment) Rules:— |

*Superior service.*

| | |
|---|---|
| After a service of five years or less. | Nil. |
| After a service of over five years. | One month's pay for every completed year of service subject to a maximum of 25 months' pay. |

*Last Grade Service.*

| | |
|---|---|
| After a service of five years or less. | Nil. |
| After a service of over five years. | Half a month's pay for every completed year of service subject to a maximum of 15 months' pay. |

| Demands of the Union. (1) | Action taken. (2) |
|---|---|
| *Demands pressed at the conference on 20th September 1957 held by Minister (Works)—cont.* | |
| 8 *Medical Aid*— Temporary workers should also be given the same medical aid and sick leave benefits as permanent workers. | The Chief Engineer reported that the temporary workers in the P.W. Workshops were getting medical facilities in the Government Stanley Hospital, Madras, under the Assistant to the Surgeon, First district, specially posted for the P.W. Workshops and the Government Press. The question of grant of sick leave benefits to the temporary workers and the implementation of the provisions of the Employees' State Insurance Scheme in respect of the P.W. Workshops is separately under consideration. |
| 9 The existing Provident Fund Scheme should be improved and brought in line with the Government of India's Provident Fund Act. The contract system in the P. W. Workshops should be dropped. | The question of implementing the provisions of the Employees' Provident Fund Act, 1952, in respect of the P. W. Workshops is separately under consideration. The Government have directed that the question of abolition of the contract system in the P.W. Workshops be dropped. |
| *Demands made subsequently on 4th September 1958 and 25th October 1958.* | |
| (i) Every worker who has been employed for 240 days in a year may be confirmed in accordance with the recommendations of the Tripartite Enquiry Committee on Minor Engineering Industry, Madras.<br>(ii) The scales of pay of the semi-skilled category of workers whose services were provincialised in G.O. Ms. No. 2471, P.W., dated 8th September 1958 should be revised to Rs. 40-1-50 or Rs. 30-1-40 and they should be classed as Grade II.<br>(iii) The scales of pay of all the categories of workers should be revised.<br>(iv) Early orders should be passed on the question of promotion of Sri V. S. Ramaswamy, Works Clerk.<br>(v) The existing contract system should be abolished.<br>(vi) The service conditions now applicable to workers in Government Press, Madras may be made applicable to the workers of the Public Works Workshops also, thus making one set of rules applicable to both.<br>(vii) A dispensary should be opened in the premises of the Public Works Workshops.<br>(viii) Immediate steps should be taken to draw up uniform terminology for the various occupations and effect a proper classification of employment in the P.W.D. Workshops. | The matter is under consideration. |
| (ix) The rule regarding daily batta to workers on outstation duty should be revised. | Orders have been issued in G.O. Ms. No. 3011, P. W., dated 13th November 1958, in which the Government have directed that the workers be made eligible for daily allowance at the following rates for halts at any one place outside their headquarters as in the case of work-charged personnel of the Highways Department—<br>First ten days—Full daily allowance.<br>Next sixty days.—3/4 daily allowance.<br>For over seventy days—1/2 daily allowance. |





## APPENDIX II.

[Vide answer to starred question No. 758 asked by Sri V. K. Kotuhandaraman at the meeting of the Legislative Assembly held on 13th March 1959, page 194 supra.]

*Statement showing the list of schemes for which the Gudiyattam Municipal Council asked for loans and/or grants in 1957-58 and action taken by Government thereon.*

| Serial number. | Name of the scheme. | Amount of loan applied for. | Amount of grant applied for. | Amount sanctioned. |
|---|---|---|---|---|
| 1 | Dustless surfacing of roads— | | | |
| | (a) Hospital road .. | 3,000 | | Not sanctioned. |
| | (b) Brahmin street up to Bodipet. | 10,000 | | |
| | (c) Sannadhi Street .. | 2,650 | | |
| | (d) Allar Street .. | 5,350 | 5,350 | A grant of Rs. 7,500 and a loan of Rs. 7,500 have been sanctioned. |
| | Mosa Annamalai Street .. | 2,250 | 2,250 | |
| 2 | Bhuvaneswaripet Area Town-Planning Scheme and Robinson Tank Bund Area Town-Planning Scheme. | 7,200 | | A loan of Rs. 7,165 was sanctioned. |
| 3 | Construction of an Ayurvedic Dispensary. | 10,000 | 10,000 | Not sanctioned. |
| 4 | Construction of a rest-house .. | 20,000 | 20,000 | Not sanctioned. |
| 5 | Metalling of roads and construction of revetments to roads. | 25,000 | 25,000 | Not sanctioned |
| 6 | Construction of rice stalls in the Dharnempet Daily Market. | 19,000 | | A loan of Rs. 13,000 was sanctioned. |

## APPENDIX III.

[Vide answer to starred question No. 761 asked by Sri K. R. Viswanathan at the meeting of the Legislative Assembly held on 13th March 1959, page 195 supra.]

| | |
|---|---|
| (a)— | 64 |
| Madras .. .. .. .. .. | 5 |
| North Arcot .. .. .. .. | 12 |
| South Arcot .. .. .. .. | 7 |
| Chingleput .. .. .. .. | 12 |
| Coimbatore .. .. .. .. | 19 |
| Madurai .. .. .. .. | 4 |
| Ramanathapuram .. .. .. .. | 6 |
| Tirunelveli .. .. .. .. | 13 |
| Tanjore .. .. .. .. | 15 |
| Tiruchirappalli .. .. .. .. | 31 |
| Salem .. .. .. .. | Nil. |
| The Nilgiris .. .. .. .. | Nil. |
| Kanyakumari .. .. .. .. | |

(b).—

Venereal Diseases such as Syphilis, etc.
Mental Diseases such as Schizophraenia 'Psychosis, etc.
Nervous diseases such as Paralysis, Neuritis, Parkinson disease, Neurasthenia, etc.
Cardiac diseases.
Asthma.
Diabetic.
Leprosy.
Failing vision and profound degree of deafness.
Rheumatism.
Stammering (Teaching profession).
Dermatitis.
Arthritis.
Ophthalmological diseases such as Optic Atrophy, Cataract, Absolute Glaucoma, Colour blindness, etc.
Surgical such as fracture of shoulder bones, humerus, etc.
Hernia-Bilateral Inguinal.
Disseminated Sclerosis.
Tuberculosis.
Old age and general debility.

## APPENDIX IV.

[Vide answer to starred question No. 762 asked by Sri K. R. Viswanathan at the meeting of the Legislative Assembly held on 13th March 1959, page 196 spra.]

(a) Sixteen in 1957–58 and seven in 1958–59.

(b) Thirteen in 1957–58 and four in 1958–59.

(c)—

Neural leprosy.
Leucorna left eye.
Rheumatic aortic regurgitation.
Hydrocele.
Squint.
Partial arrest of development and weakness of the right upper limb.
High blood pressure and endocrine type of obesity.
Well capsulated cyst like appearance in the left lower lobe.
Epileptic Psychosis.
Varicose veins and Pyorrhoa.
Defective vision.
Neurasthenia.
Underweight.





## APPENDIX V.

[Vide answer to starred question No. 763 asked by Sri P. G. Manickam at the metting of the Legislative Assembly held on 13th March 1953, page 196 supra.]

*Step taken to accelerate acquisition of house-sites for Harijans in Coimbatore district.*

A special staff of three tahsildars is attending to land acquisition work in the seepage affected areas of the Lower Bhavani Project. The land acquisition work under the Harijan Welfare Scheme is attended to by the District Welfare Officer himself. To quicken the tempo of work, the Collector has applied for additional staff. His proposals are under consideration.

2. There are more than 300 land acquisition cases under the Harijan Welfare Schemes in the Coimbatore district. In 1958–59, seventeen cases have been approved by the Collector. Of them, fifteen relate to the provision of house-sites and two relate to the provision of pathways. In six cases, proposals for the approval of section 4 (1) notification and section 6 declaration are under consideration. The remaining cases are expected to be finalised by the Collector shortly. An extent of 5 acres and 38 cents has been acquired in the Coimbatore district in 1958–59 under the scheme.

## APPENDIX VI.

[Vide answer to starred question No. 767, asked by Sri Manickam at the meeting of the Legislative Assembly held on 13th March 1959, page 198 supra.]

*Statement showing the Blocks in the districts where Palm Gur Development Schemes are undertaken and the number of persons engaged in the industry in each Block.*

| *Name of the district.* | *Name of the Block.* | *Number of Palm-Gur Societies.* | *Number of members engaged in the industry.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| Madurai | 1 T. Kallupatti | 1 | 138 |
| | 2 Tirumangalam | 2 | 57 |
| Tiruchirappalli | 1 K. Paramathy (Karur) | 17 | 1,201 |
| | 2 Musiri | 1 | 31 |
| | 3 Thottiam | 1 | 51 |
| | 4 Lalgudi | 1 | 112 |
| | 5 Vellianai Block | 1 | 67 |
| | 6 Aruvankurichi | 5 | 392 |
| Chingleput | 1 Thirukalikundram | 3 | 298 |
| | 2 Uttiramerur | 2 | 112 |
| | 3 Poonamallee | 3 | 201 |
| | 4 Sriperumbudur | 1 | 156 |
| | 5 Tiruvellore | 3 | 211 |
| | 6 Uttukottai | 1 | 46 |
| | 7 Meenjur | 4 | 212 |
| | 8 Madurantagam | 3 | 280 |
| | 9 Singaperumalkoil | 1 | 77 |
| | 10 Saidapet | 1 | 122 |

## APPENDIX VII.

[Vide answer to starred question No. 773 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 13th March 1959, page 202 supra.]

| Serial number. | Name of the institution and district. | (Clause (a) of the question). Number of cases in each of the Government Hospitals where blood transfusion was given in 1956 | 1957 | 1958 | (Clause (b) of the question) The quantity of blood given to patients in 1956 | 1957 | 1958 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Government General Hospital, Madras .. .. .. .. | 3,970 | 3,452 | 3,549 | 11,10,300 cc. | 10,43,000 cc. | 12,42,100 cc. |
| 2 | Government Stanley Hospital, Madras .. .. .. .. | 1,476 | 1,800 | 2,000 | 5,51,600 cc. | 6,73,050 cc. | 7,28,700 cc. |
| 3 | Hospital and College of Integrated Medicine, Madras .. | 10 | 15 | 26 | 5 pints | 8 pints | 14 pints. |
| 4 | Government Hospital for Women and Children, Madras .. | 1,062 | 1,167 | 1,279 | 3,97,250 cc. | 4,37,500 cc. | 4,91,400 cc. |
| 5 | Government Kasturba Gandhi Hospital for women and children, Madras .. .. .. .. | 847 | 1,180 | 1,026 | 2,42,700 cc. | 3,45,300 cc. | 2,93,400 cc. |
| 6 | Government Royapettah Hospital, Madras .. .. .. | 565 | 443 | 326 | 1,85,000 cc. | 1,43,000 cc. | 1,18,000 cc. |
| 7 | Government Raja Sir Ramaswamy Mudaliar Lying-in-Hospital, | 570 | 780 | 885 | 1,99,500 cc. | 2,73,000 cc. | 3,09,750 cc. |
| | Madras .. .. .. .. .. .. .. .. | | | | 1,85,400 cc. | 2,04,600 cc. | 1,61,350 cc. |
| 8 | Coimbatore district .. .. .. .. .. .. | 620 | 693 | 555 | 1,37,500 cc. | 1,56,000 cc. | 1,49,500 cc. |
| 9 | Tiruchirappalli district .. .. .. .. .. .. | 467 | 640 | 596 | 2,62,150 cc. | 1,86,750 cc. | 87,850 cc. |
| 10 | Government Tuberculosis Sanatorium, Tambaram .. .. | 359 | 262 | 135 | 740 cc. | 20,940 cc. | 28,380 cc. |
| 11 | Chingleput district .. .. .. .. .. .. .. | 3 | 72 | 105 | (up to November) | 4,02,600 cc. | 4,72,800 cc. |
| 12 | Government Erskine Hospital, Madurai .. .. .. .. | 1,420 | 1,342 | 1,576 | 4,26,000 cc. | | |
| | | 338 | 382 | 354 | 1,18,300 cc. | 1,06,400 cc. | 1,07,100 cc. |
| 13 | South Arcot .. .. .. .. .. .. .. .. | | | | | | |
| 14 | Ramanathapuram district .. .. .. .. .. .. | 57 | 60 | 108 | 13,200 cc. | 16,650 cc. | 28,700 cc. |
| 15 | Tirunelveli district .. .. .. .. .. .. | 183 | 142 | 113 | 45,750 cc. | 35,880 cc. | 29,580 cc. |
| 16 | Nilgiris district .. .. .. .. .. .. .. | 89 | 126 | 184 | 20,700 cc. | 46,300 cc. | 1,06,250 cc. |
| 17 | Tanjore district .. .. .. .. .. .. .. | | | 5 | | | 1,150 cc. |
| 18 | North Arcot district .. .. .. .. .. .. | 566 | 466 | 449 | 1,88,050 cc. | 1,18,900 cc. | 1,46,475 cc. |
| 19 | Salem district .. .. .. .. .. .. .. | 187 | 225 | 242 | 44,075 cc. | 55,600 cc. | 69,100 cc. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, the 14th March 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*River water pumping irrigation schemes*

*781 *Q.*—SRI T. T. DANIEL: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் ஆற்றுநீர் பம்பிங் நீர்ப்பாசன திட்டங்களுக்காக இதுவரை அரசாங்கத்தார் எவ்வளவு தொகை செலவிட்டுள்ளார்கள்?

(ஆ) இந்தத் திட்டங்கள் மூலம் எத்தனை ஏகரா நிலங்கள் பயனடைந்துள்ளன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Rs. 9·63 lakhs from the beginning of the First Five-Year Plan up to January 1959.

(*b*) 8,707 acres.

*River pumping schemes*

*804 A *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் பம்பிங் திட்டம் எந்தெந்த ஊர்களில் நடைபெறுகிறது, ஜில்லாவாரியாக ?

(ஆ) ஒவ்வொரு திட்டத்திலும் எத்தனை ஏகர் நிலத்திற்குத் தண்ணீர் பாய்கிறது ?

(இ) இனியும் புதிய திட்டம் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(ஈ) ஆம் என்றால் எங்கெங்கே ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) *to* (*d*) A statement* is placed on the table of the House.

SRI T. T. DANIEL: May I know whether the Government are imposing any special betterment levy on these acres of lands which are brought under cultivation under these irrigation schemes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir. The scheme has to be worked out on the basis of 'no-profit-no-loss.' Therefore, the cost is calculated and then the levy will be made accordingly, and the ryots are consulted about it before the scheme is taken up.

* Printed as Appendix I on page 366 infra.

[14th March 1959

Sri V. K. KOTHANDARAMAN : வறண்ட பிரதேசமான வட ஆற்காடு ஜில்லாவில் இந்த ஸ்கீமை என் ஆரம்பிக்கவில்லை? அதற்குக் காரணம் என்ன? இனிமேலாவது ஆரம்பிப்பதற்கு உத்தேசம் உண்டா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வறண்ட பிரதேசங்களில் இந்த ஸ்கீமை ஆரம்பிப்பது என்பது அல்ல. தண்ணீர் இருக்க வேண்டும். தண்ணீர் கீழே இருந்து அதை பம்ப் செய்யக்கூடிய வசதி இருந்தால் அதை ஆரம்பிக்கலாம்.

Sri T. T. DANIEL : May I know whether the Government have made a survey of the whole State to find out the possibilities of introducing these river-pumping schemes throughout the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I cannot say that a survey of the whole State has been made, but the possibilities are explored in various districts and schemes have been taken up in various districts, as hon. Members would have noticed.

Sri V. K. KOTHANDARAMAN : இந்த பம்பிங் ஸ்கீம் போடுவதன் மூலமாக பூமிக்கு அடியில் இருக்கக் கூடிய தண்ணீரை எடுக்க முடியும். இருந்த போதிலும் பாலார் பேசின் ரூல்ஸ் என்கிற சட்டம் இருக்கிறது. அதன் காரணமாக பம்பிங் ஸ்கீமைக் கொண்டு வரமுடியாத நிலைமை இருப்பதால் சர்க்காருக்கு அந்த விதிகளை கான்செல் செய்வதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பாலாறு ஆற்றைப் பொறுத்த வரையில் சில கட்டுப்பாடு விதிகள் இருக்கின்றன. சென்ற ஆண்டில் சில விதிகள் தளர்க்கப்பட்டன. அதை அடியோடு நீக்குவது என்பது முடியாது. ஏற்கனவே இருக்கக் கூடிய நீர்ப்பாசன வசதிகள் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் அதை அடியோடு நீக்குவதற்கு இல்லை.

Sri M. JAGANNATHAN : May I know the circumstances under which some of these schemes are under the Public Works Department and yet other schemes under the Agriculture Department? Will it not be convenient, from the point of view of administrative control, these schemes are brought under one department?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There will be no difficulty about administrative control. If it is a major scheme costing beyond a certain limit, it is looked after by the Public Works Department. Otherwise, it is under Food (Production) Department.

Sri A. VEDARATHNAM : தஞ்சை ஜில்லா திருத்துறைப் பூண்டி தாலூகாவில் ஏராளமான ஆற்றுநீர் கடலில் போய்க்கொண்டிருக்கிறது. அங்கே பாசனத்திற்கு லாயக்கான மானாவாரி நஞ்சை நிலம் 60 ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. கடலில் போகும் ஜலத்தை பம்பிங் ஸ்கீம் மூலமாக இந்த மானாவாரி நஞ்சை நிலங்களுக்குக் கொடுக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அறுபது ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொடுக்க முடியும் என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் கனம் அங்கத்தினர் தெரிந்துகொண்டிருப்பார்கள். தஞ்சை ஜில்லாவில் தான் அதிகமாக ரிவர் பம்பிங் ஸ்கீம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் வசதிகள் இருந்தால் எங்கே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறதோ அங்கேயெல்லாம் கவனம் செலுத்தப்படும்.



14th March 1959]

Sri S. M. ANNAMALAI : வட ஆற்காடு ஜில்லா கலசப்பாக்கம் கிராமத்தில் ரிவர் பம்பிங் ஸ்கீம் ஆரம்பிக்க வேண்டும் என்று சர்க்காருக்கு தாக்கீது வந்திருக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்கு தனியாக கேள்வி போடவேண்டும்.

*Irrigation Schemes for Lalgudi taluk*

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ எஸ். லாசர் இடத்தில் இல்லாததால் 782 எண்ணுள்ள கேள்வியும் பதிலும் சட்டசபை நடவடிக்கையில் அச்சிடப்படும்.

* 782 Q.—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the irrigation schemes with their estimates and extent of ayacut that have been investigated in 1958 so far and found feasible in Lalgudi taluk, Tiruchirappalli District; and

(b) the time within which these works (i) will be taken up and (ii) will be completed?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

*Construction of a canal from the Cauvery river*

* 783 Q.—Sri M. KALYANASUNDARAM and Sri P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any memorandum was received by the Government on 28th October 1958, from the Vivasayigal Sangam, Namakkal taluk, Salem district, requesting the construction of a canal from the Cauvery river at Kothamangalam for irrigation; and

(b) if so, the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The Board of Revenue is examining the representation in consultation with the Chief Engineer (Irrigation) and the Government are awaiting its report.

*Damage to boats due to cyclone in the Vedaranyam-Nagapattinam Canal*

* 784 Q.—Sri A. VEDARATHNAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கடந்த 1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ம் தேதி வீசிய கடும்புயலில் வேதாரண்யம்-நாகபட்டிணம் கால்வாயில் சேதமான படகுகள் எத்தனை?

(ஆ) இவைகளில் எத்தனை மீண்டும் கட்டப்பட்டன? இதற்கு, அரசாங்கம் செய்த உதவி என்ன?

[a] Printed as Appendix II on page 367 infra.

[14th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) No, Sir.

*Agriculture College, Coimbatore*

*789 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலிருக்கும் விவசாயக் கல்லூரியோடு இணைக்கப்பட்டிருக்கும் எம்.எஸ்.ஸி,. பி.எச்.டி. போன்ற உயர்தர படிப்புக்கான கல்லூரியிலே மொத்தம் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் ?

(ஆ) இவர்களுள், தென்மண்டலப் பிரதேசங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ?

(இ) இத்திட்டத்திற்காகும் ஆரம்ப மொத்தச் செலவினங்கள் எவ்வளவு ?

(ஈ) மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்ட மான்யத் தொகை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Forty.

(b) No quotas of seats have been fixed for individual States, but 50 per cent of the seats will be reserved for the students of States other than Madras including States outside the Southern Region.

(c) The total cost of the scheme is estimated at Rs. 8.95 lakhs recurring and Rs. 123.25 lakhs non-recurring over a period of 4 years against an anticipated receipt of Rs. 65,600 by way of collection of fees from the trainees.

(d) No grant has yet been given.

SRI P. G. MANICKAM : சார், மேற்கண்ட உயர்தர படிப்புக்கான டிப்ளோமா பெற ஒரு மாணவன் எத்தனை வருஷங்கள் அங்கு பயிற்சி எடுக்க வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது "போஸ்ட் க்ராஜீவேட் கோர்ஸ்". இதிலே இரண்டு "டிகிரி கோர்சுகள்" இருக்கின்றன. டிப்ளோமா அல்ல: எம்.எஸ்.ஸி. டிகிரி ஒன்று. பி. எச். டி. டிகிரி ஒன்று. இது இரண்டு வருஷ கோர்ஸ்.

SRI T. S. RAMASWAMY PILLAI : இங்கு எம்.எஸ்.சி., பி.எச்.டி. என்று இரண்டு கோர்சுகள் இருப்பதாகச் சொன்னார்கள். பி.எச்.டி. கோர்ஸ் ஆரம்பிக்கப்பட்டு விட்டதா ? ஆரம்பிக்கவில்லை என்றால் ஏன் ? எம்.எஸ்.சி.-ல் என்னென்ன "சப்ஜக்டுகள்" ? அதிலே Agronomy, Plant Physiology and Entomology சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (i) Agricultural Chemistry, Soil Science and Animal Science, (ii) Plant Pathology, (iii) Agricultural Botany, Genetics including Plant Breeding and Plant Physiology and (iv) Horticulture. Agronomy-ம், Entomolog-ம் இரண்டாவது வருஷத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.

SRI V. SUBBIAH : விவசாய எஞ்சினீயரிங் பிரிவில் படிக்கக்கூடியவர்கள் வெளி நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களா ? எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாய எஞ்சினீயரிங் இதிலே சேர்க்கப்படவில்லை.



14th March 1959]

*Agriculture study*

*790 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகாரஅமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) விவசாய உத்தியோகஸ்தரிடையே மத்திய சர்க்கார் அகில-இந்திய சர்வீஸ் ஏற்படுத்துவதுபற்றி நம் மாநில சர்க்காரை அபிப்பிராயம் கேட்டதா?

(ஆ) இதுபற்றி நம் மாநில சர்க்காரின் அபிப்பிராயம் என்ன ?

(இ) அகில இந்திய சர்வீசுக்குப் போவதன் மூலம் நம் மாநிலத்தில் விவசாய அபிவிருத்தி வேலைக்குப் பங்கம் வரக்கூடுமா ?

(ஈ) அகில இந்திய சர்வீசுக்குப் போகக்கூடிய மேல் படிப்புக்கு இம் மாநிலத்தில் என்ன வசதி விவசாயப் பட்டதாரிகளுக்கு செய்யப்பட்டு இருக்கிறது ?

(உ) விவசாய மேல் படிப்புக்கு இம் மாநிலத்திலிருந்து வெளி நாடுகளுக்கு பட்டதாரிகள் அனுப்பப்படுகிறார்களா ?

(ஊ) எந்தப் பட்டப் படிப்புக்கு ?

(எ) அப்படிப்பட்ட படிப்புகளை இங்கே ஏற்படுத்த ஏதேனும் முயற்சியுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) to (d) Do not arise.

(e) & (f) No, Sir. But some officers of the Agriculture Department have been sent for advanced training in Agriculture.

(g) A post-Graduate Research Institute on a regional basis has been established at Coimbatore and it has been functioning from September 1958.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I may know the number of officers who were sent abroad for higher training and their agricultural qualification?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : "அக்ரிகல்சுரல் காலேஜில் இருந்தும், ரிசர்ச் இன்ஸ்டிடூட்டில்" இருந்தும் அமெரிக்காவுக்கும், யுனைடெட் கிங்டத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். எத்தனை பேர் என்பதற்கு என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

SRI A. VEDARATHNAM : வெளி நாட்டுக்கு அனுப்பப்பட்டிருப்பவர்கள் அந்த நாட்டு ஸ்காலர்ஷிப்பில் அனுப்பப்பட்டிருக்கிறார்களா ? அல்லது நம்முடைய சர்க்கார் ஸ்காலர்ஷிப்பில் அனுப்பப்பட்டிருக்கிறார்களா ? எந்தெந்த பட்டப் படிப்புகளுக்காக அங்கே அனுப்பப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களை, 'Technical Co-operation Programme, Colombo Plan,' இவைகளைப் பயன்படுத்தி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு கல்லூரிகளில் ஆசிரியர்களாக இருக்கிறவர்கள். ஆராய்ச்சி சாலையில் வேலை செய்கிறவர்கள் ஆகிய நிபுணர்கள்தான் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். என்னென்ன படிப்புக்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

SRI T. T. DANIEL : May I know whether our Government are availing of all the amount under the Colombo Plan for sending our officers to foreign countries for higher education?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is not a question of utilising certain funds that are available. Wherever we find the need for higher training, with aids that are available, we depute our officers particularly experts for further studies.

Sri A. VEDARATHNAM: நம்முடைய மாணவர்களில் விவசாயப் பட்டதாரிகள் பற்றுக்குறையாக இருக்கிற காரணத்தால் மத்திய அரசாங்கத்துக்கு நம்முடைய மாகாணத்தில் இருந்து அந்தப் பட்டதாரிகளை அனுப்பவேண்டியது அவசியந்தானா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: மத்திய அரசாங்கம் செய்கின்ற வேலை எல்லா ராஜ்யங்களுக்கும் சேர்த்துத்தான். மத்திய அரசாங்கப் பிராந்தியம் என்று ஒன்று தனியாக இல்லை. இந்த அரசாங்க சௌர்வீசில் இருக்கக்கூடிய சில பேரை அனுப்புவதில் தவறு ஒன்றும் இல்லை.

Sri T. S. RAMASWAMY PILLAI: Sir, my own information is that for the last three or four years nobody was sent, but recently some five persons were sent for higher education abroad; amongst these five officers, only one had the basic agricultural qualifications and the rest had no agricultural basic qualification. May I know whether that is a fact, and if so whether our Government would see that officers with basic agricultural qualifications alone are sent and not others?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I am sorry I do not have all that information with me just now. As I have pointed out, those who are engaged in teaching in the Agricultural College and the Research Institute are sent, and whether they have basic agricultural qualifications are not, they are found suitable for this specialized work and therefore, it was considered worthwhile that they are sent for further training in their subjects.

*Famine relief measures for Sathiamangalam village*

* 791 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. PALANISAMI): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any relief measures have been undertaken in Sathiamangalam, Tindivanam taluk, in view of the severe famine prevailing there; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) & (*b*) There is no village called Sathiamangalam in Tindivanam taluk. The hon. Member is presumably referring to Sathiamangalam village in Gingee taluk. It is reported that this area has received good rains recently, that the standing crops are in good condition and that no famine conditions are prevalent in the village. No relief measures are therefore considered necessary.

*Drinking water wells for Kannadikulam village, Tirunelveli District*

* 792 *Q.*—Sri T. VELUCHAMI: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லா, தென்காசி தாலூகா, கண்ணடிக்குளம் கிராமத்தில் ஒரு குடி தண்ணீர் கிணறு வெட்டுவதற்காக மாதிரி தண்ணீர் பரிசீலனைக்காக Water Analyst-க்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) பரிசோதனையின் முடிவு என்ன ?

(இ) எப்போது அந்தக் கிராமத்திற்கு குடி தண்ணீர் கிணறு வெட்டிக் கொடுக்கப்படும் ?



The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) The water in the well was declared as satisfactory.

(*c*) The well work was completed in January 1959.

*Surandai-Sundarapandiyapuram road*

* 793 *Q.*—Sri T. VELUCHAMI: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா, தென்காசி தாலுகாவைச் சேர்ந்த சுரண்டை-சுந்தரபாண்டியபுரம் ரோடுக்காக மேற்படி சுரண்டை-சுந்தர பாண்டியபுரம் கிராம மக்கள் நேரிலோ அல்லது தங்கள் கிராம பஞ்சாயத்து போர்டு மூலமாகவோ ஜில்லா போர்டுக்குக் கொடுத்த தொகை எவ்வளவு ? எப்போது கொடுத்தார்கள் ?

(ஆ) மேற்படி ரோடு போடுவதற்காக ஜில்லா போர்டார் சாங்ஷன் செய்தத் தொகை எவ்வளவு ?

(இ) மேற்படி ரோடு எந்தத் திட்டத்தில், எப்போது போடப்படும் ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: (*a*) Rupees 4,000 was given in the year 1954.

(*b*) Nil.

(*c*) The work has been included in the Village Road Programme of the Tirunelveli District Board. The question of executing the work is under consideration.

*Matchwood Plantation*

* 794 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலே எந்தெந்த இடங்களிலே Matchwood Plantations இருக்கின்றன ?

(ஆ) 1958–59-ஆம் வருஷத்திலே எத்தனை ஏகரா நிலங்களிலே Matchwood Plantations நடைபெறத் திட்டமிடப்பட்டன ?

(இ) 1958-ஆம் வருஷம் கடைசிவரைக்கும் எத்தனை ஏகரா நிலங்களில் Matchwood Plantations நடைபெற்றன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) In Coimbatore District Matchwood plantations were raised in Pollachi, Bolompatty Udumalpet, Andhiyur and Satyamangalam Ranges.

(*b*) During 1958–59 an area of 450 acres has been targetted for Matchwood plantation in Coimbatore District.

(*c*) An area of 456 acres has been planted with Matchwood up to the 2nd of December 1958.

Sri P. G. MANICKAM: இன்னும் எத்தனை ஏக்கர் நிலங்களில் மேற்கண்ட தீக்குச்சி பயிரை நடுவார்கள் என்ற திட்டம் சர்க்காரிடம் இருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இன்னும் 1,175 ஏக்கரில் இந்தத் தீக்குச்சி செடிகளை நடுவதாக உத்தேசம்.

SRI A. VEDARATHNAM: இந்த "மாச் உட் ப்ளாண்ட்" பயிர் செய்ய லாயக்குள்ள இதர இடங்கள் இல்லையா? அப்படியானால் அந்த இடங்களில் உண்டாக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதைச் சிற்சில இடங்களில்தான் பயிர் செய்யலாம். மழை கொஞ்சம் அதிகமாக வேண்டும். அவ்வாறு இந்த மாவட்டத்திற்கு அப்பாலும் எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் இந்தச் செடிகளை உண்டாக்க அரசாங்கம் கவனம் செலுத்தும்.

SRI K. APPAVOO PILLAI: ஹோசூர் தாலுகாவில் இருக்கக் கூடிய "பாரஸ்டில்" "மேச் உட் ப்ளாண்டுக்கு" அனுகூலம் இருப்ப தாகத் தெரிகிறது. அந்தப் ப்ளாண்டை ஹோசூ தாலுகாவில் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஹோசூர் தாலுகாவில் சிற்சில பிராந்தியங்களில் ஏற்கெனவே இருக்கின்றன. புதிதாகப் ப்ளாண்டுகள் செய்ய வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. JAGANNATHAN: May I know, Sir, whether these matchwood plants are raised on Government lands or private lands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: They are planted in the reserved forest area.

SRI K. R. NALLASIVAM: தீக்குச்சி செய்வதற்கான இந்த செடிகள் இப்பொழுது சர்க்காருடைய நிலங்களில் பயிர் செய்யப்படுகிறது. அதே நேரத்தில் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள்கூட அதைப் பயிர் செய்கிறார்கள். அந்த மாதிரி தீக்குச்சி மரங்களைப் பயிர். செய்து விவசாயி களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் சர்க்கார் உதவி அளிக்க முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கு ஒன்றும் அதிக செலவு ஆகாது, விவசாயிகள் அவர்கள் சொந்த நிலத்திலே இதைப் பயிர் செய்யலாம்.

SRI V. SUBBIAH: தமிழ் நாட்டில் சிவகாசி, சாத்தூர், கோயில்பட் டிக்கு சமீபத்திலுள்ள குற்றாலம், இவை போன்ற இடங்கள் மரங்கள் பயிரிடுவதற்கு ஏற்ற இடமாகையால் அந்த இடத்தில் தீப்பெட்டி மரங்களை உற்பத்தி செய்ய உத்தேசம் உண்டா? அங்கே குற்றாலத்திலும், பாபநாசம் பக்கத்திலிருக்கிற காடுகளிலும் முக்கியமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய காடுகளிலும் அதிகமான "சாப்ட் வுட்" மரங்கள் இருக்கின்றன. ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் இதை ஆராய்ச்சி செய்து இங்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அங்கே குற்றாலம் பக்கத்தில் இருக்கிற காடுகளிலும், முக்கியமாக கன்யாகுமரி மாவட்டத்தில் இருக்கும் காடுகளிலும் அதிகமான சாப்ட் உட்மரங்கள் இருக்கின்றன. அதை அரசாங்கம் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

SRI P. G. MANICKAM: இப்பொழுது கோயம்புத்தூரில் தீப்பெட்டி செய்யக்கூடிய மரத் தோட்டங்கள் அதிகமாக இருப்பதால் ஒரு தீப்பெட்டி தொழிற்சாலையை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து ஆராய்ச்சி செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தொழிற்சாலை ஏற்படுத்துகிற அளவிற்கு நம் நாட்டில் காடுகள் இல்லை. இப்பொழுது எவ்வளவு உற்பத்தி ஆகிறது எவ்வளவு விற்கப்படுகிறது என்று ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.





SRI P. G. MANICKAM: கோயம்புத்தூரில் தீப்பெட்டி மரங்கள் அதிகமாக இருப்பதால் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் இதைக் கொண்டுவந்து இங்கு ஒரு தீப்பெட்டி தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு ஆராய்ச்சி செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஏற்கனவே தொழில் நடத்துகிற அளவிற்கு காடுகளில் இருந்து மரங்கள் கொடுக்கவில்லை. எல்லாம் எவ்வளவு வேண்டும், எவ்வளவு உற்பத்தி ஆனது என்பதை யெல்லாம் பொறுத்திருக்கிறது.

SRI S. RAMAKRISHNA THEVAR: கன்யாகுமரியில் இருப் பதுபோல் திருவாடானை தாலுக்காவில் ஏராளமான தோட்டங்கள் இருக் கின்றன. ஆகவே சர்க்கார் இங்கேயும் ஒரு தீக்குச்சி உற்பத்தி செய்யும் மரங்கள் உள்ள தோட்டங்கள் ஆரம்பிப்பதற்கு ஆலோசனை செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கன்யாகுமரியில் அதிக மான மழை இருக்கிறது. திருவாடானையில் அதிக மழையில்லை.

*Oil Producers' Co-operative Societies*

* 795 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI): Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of oil producers' co-operative societies in the North Arcot district;

(b) whether there was any instance of misappropriation of money in them in 1958, and if so, how much;

(c) whether it is a fact that the person who was working as the Secretary of the Chettupattu Oil Producers' Society is absconding with money; and

(d) the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) There are 10 oil producers co-operative societies.

(b) Yes, Sir.

(1) *The Vengalapuram Oil Producers' Co-operative Society.*—Misappropriation of the stock to the value of Rs. 3,430 and non-production of cash balance of Rs. 4,963·08. Both the stocks of oil-seeds and the cash have been recovered in full. The President and non-official Secretary of the society have been removed from office.

(2) *The Wandiwash Oil Produces' Co-operative Society.*—Misappropriation of Rs. 496·03 under cash balance, Rs. 306 in the sale proceeds and also the misuse of a sum of Rs. 666. The matter is under investigation by the department.

(3) *The Palampet Oil Producers' Co-operative Society, Chetpet.*—Misappropriation of a sum of Rs. 7,218·66. The matter is under investigation by the Police.

(c) Yes, Sir.

(d) The Senior Inspector Sri K. Sriramulu together with Sri D. Dakshinamoorthy, a member of the society, left the village for Madras on 26th October 1958 to effect sales of oils. The Senior

[14th March 1959

Inspector had sold oil to one Sri A. R. M. Chakrapani Reddiar & Sons and given a receipt for cash on 28th October 1958 amounting to Rs. 7,218·66. The Inspector had then stayed at Madras under the pretext of attending to some office work, while the member had returned to village. The whereabouts of the Inspector are still unknown and the case is under investigation by the Police.

SRI A. VEDARATHNAM : இவ்வளவு பெருந்தொகையை கையாண்டால் இந்த நபரை இந்த பதவியிலிருந்து விலக்கினால் மட்டும் போதாது. இந்த மாதிரி குற்றங்களுக்கு கடுமையான தண்டனை விதிப்பது போல் கூட்டுறவு சங்கங்களில் கையாள்வது அதிகமாக இருப்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கத்தின் நன்மையை யொட்டி கையாளப்படும் பணத்தை வசூல் செய்ய சர்க்கார் முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை அளிக்கப்படுகிறது. சீனியர் இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கத்தின் நன்மையை யொட்டி கையாளப்பட்ட பணத்தை வசூல் செய்யப் பார்க்கவேண்டும். இதில்தான் கவனம் செலுத்த வேண்டும். பணம் கையாளப்பட்டதற்கு சர்க்கார் மற்ற நடவடிக்கை எடுக்கிறார்கள்.

*Separate Panchayat for Ramanayinikuppam*

* 796 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI S. R. MUNUSAMI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதலளிப்பாரா

(அ) வடாற்காடு ஜில்லா, வேலூர் தாலுகா ராமனாயினி, குப்பத்தில் மெஜாரிட்டியாய் உள்ள ஹரிஜனங்கள் அங்கு ஒரு தனிப் பஞ்சாயத்து அமைக்க வேண்டுமென்று சர்க்காருக்கு மகஜர் அனுப்பியிருக்கிர்களா—

(ஆ) அப்படியானால், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) The question whether a separate panchayat can be constitued for Ramanayinikuppam village alone is being examined by the Inspector of Municipal Councils and Local Boards, Madras.

*Damage caused by rains in the City*

* 797 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. Minister for Revenue be pleased to state—

(*a*) the number of huts damaged in the City of Madras due to rain in the month of October 1958; and

(*b*) the nature of help given to the affected hut-dwellers by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 40.

(*b*) A sum of Rs. 275 was distributed to the victms as cash relief for reconstructing their damaged huts.

SRI S. PAKKIRISAMI PILLAI : இப்பொழுது பாதிக்கப்பட்ட குடும்ப மக்கள் இன்னும் வீட்டு வசதி கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வீட்டு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?



14th March 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்கு மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன நிவாரணம் செய்யப்பட்டது என்பதைப் பற்றி இதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட கேள்வியில் பதில் சொல்லப்பட்டது. இந்த விஷயம் வேறு. அதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

SRI A. A. RASHEED : Sir, may I know what are the permanent measures taken by the Government to see that these hut-dwellers are not made homeless during every monsoon?

THE HON. SRI M. A. MANICKAVELU : Such monsoons are not so frequent. But there is more damage caused by fire. The slum clearance may largely remove this difficulty.

SRI K. ANBAZHAGAN : இந்த மழையினால் 40 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கொடுத்த ரூபாயோ 275. 6, 7 நாளைக்குச் சாப்பாட்டிற்குக் கொடுத்தார்களா ? கொடுக்கப்பட்ட பணம் அவர்கள் குடிசையைப் புதுப்பித்துக்கொள்வதற்குப் போதுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கொடுத்தவரை இது நல்லது என்று தோன்றுகிறது. கொஞ்சம் பாதுகாக்க முடியும்.

*Sir Ramaswamy Mudaliar Choultry, Madras*

* 798 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state the present stage of the enquiry regarding the lease of the site belonging to Sir Ramaswamy Mudaliar Choultry in Madras, in contravention of the Union Government's alienation deed?

THE HON. SRI M. A. MANICKAVELU : The land occupied by Sir Savalai Ramaswamy Mudaliar Choultry was granted to it by the State Government and not by the Union Government. The Government have decided not to resume the land granted to the choultry.

SRI A. A. RASHEED : Sir, is the Minister aware that pucca buildings have been constructed on the site, and some new buildings are also being constructed? If so, will the Government order the stay of the construction of the new buildings?

THE HON. SRI M. A. MANICKAVELU : The permission to construct those buildings was given under the circumstances that it would bring in income to the trust and improvements could be made to the trust properties.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that some blackmarket money was paid to the person who was running this choultry by the owners of these buildings?

THE HON. SRI M. A. MANICKAVELU : About blackmarketing business between the parties, how can the Government answer?

[14th March 1959

*Sri Ramalinga Chowdambiga Devasthanam, Thevaram*

* 799 *Q.*—Sri A. VEDARATHNAM (on behalf of Sri N. R. THIAGARAJAN) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாவில் தேவாரம் ஸ்ரீ ராமலிங்க சௌடாம்பிகை தேவஸ்தானத்தில் டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டார்களா ?

(ஆ) அந்த டிரஸ்டிகள் வசம் கோயில் நிர்வாகத்தை H. R. E. போர்டு இன்னும ஒப்புவிக்காத காரணம என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The area Committee of the Madurai Division has appointed three non-hereditary trustees for the devasthanam.

(*b*) The hereditary trustees have filed a writ petition in the High Court against the appointment of non-hereditary trustees and the High Court has granted stay of the appointment of the non-hereditary trustees pending orders on the writ petiton.

*Fruit Research Station in Periyakulam taluk*

* 800 *Q.*—Sri M. K. SOMASUNDARAM (on behalf of Sri V. SANKARAN) : Will the Hon. the Minister for Home be pleased to state how far the proposal to start a Fruit Research Station in the Periyakulam taluk has been implemented?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The land required for the establishment of the Fruit Station has been acquired and taken possession of by the Agriculture Department on 25th July 1958. The work of initiating and conducting normal field experiments has been put under way.

Sri A. R. SUBBIAH MUDALIAR : இந்தப் பழத் தோட்டத்தில் என்னென்ன பழங்கள் விளைவிக்கப்படுகிறது.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A total of 139 grafts in 21 varieties of mango, plants for 15 grape varieties, and 67 plants of miscellaneous fruits, etc., were assembled till the end of December 1958.

Sri M. JAGANNATHAN : What is the extent of the land acquired for this Fruit Station, Sir?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—The land acquired was 47 acres 47 cents.

*Legal aid to destitute women*

* 801 *Q.*—Srimathi A. S. PONNAMMAL (on behalf of
9 a.m. Srimathi RAJATHI KUNCHITHAPATHAM) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கணவனால் கைவிடப்பட்ட அபலைப் பெண்களுக்கு தங்களுடைய கணவன் சொத்தில் தங்களுக்குள்ள பங்கை கோர்ட் மூலம் தான் பெற முடியும் என்ற நிலை வரும்போது, இம் மாதிரியான ஆதரவற்ற பெண்களுக்கென்று ஊதியம் பெறுமல் கோர்ட்டில் அவர்களுக்காக வாதாடுவதற்கு வக்கீல்களை சர்க்காரே ஏற்படுத்த உத்தேசமுண்டா ?



14th March 1959]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no such proposal before the Government.

Srimathi A. S. PONNAMMAL : அனேகப் பெண்கள் இவ்வாறு கணவரால் கைவிடப்பட்டு, கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இப்பிரச்னையை மறுபரிசீலனை செய்து, அவர்கள் கோர்டில் வாதாடும்போது அரசாங்கமே அவர்களுடைய எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ள வகை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM. வக்கீல் வைத்துக் கொள்ளப் பண வசதி அற்ற அபலைகள் வழக்குத் தொடரும்போது அவர்கள் சார்பில் சர்க்கார் வாதாட இப்போதே சட்ட ரீதியாக வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதற்காக புதிய சட்டம் இயற்ற வேண்டியதில்லை.

Sri S. M. ANNAMALAI : இப்போது சாதாரணமாக "பாப்பர் ஸூட்" போடுவதற்குத்தான் சட்டம் இடம் கொடுக்கிறது. ஆனால் பெண்கள் பணமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கு உதவி செய்ய சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மூலக் கேள்வி கணவனால் கைவிடப்பட்ட அபலைப் பெண்கள் கோர்ட்டில் வழக்குத் தொடரும்போது அவர்களுக்கு "பிரீ லீகல் அஸிஸ்டென்ஸ்" அளிப்பது பற்றியது. நிதி வசதியற்ற பெண்களையும் திக்கற்ற பெண்களையும் பராமரிக்க பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அதற்கு சர்க்காரும் சில ஸ்தாபனங்களை நடத்தி வருகிறது. வழக்குத் தொ[illegible]பொறுத்த வரையில், வக்கீல் வைத்துக்கொள்ளப் பணவசதி [illegible] சார்பில் சர்க்கார் வாதாட இப்போது சட்டம் இடம் கொடுக்கிறது.

Sri T. T. DANIEL : Now that defence is arranged even for criminals in certain cases, will the Government think of evolving a procedure by which legal assistance can be given to these poor women who cannot otherwise get legal assistance by asking the Government Pleaders in the District Courts to conduct the cases for them?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir, the Government do not consider it necessary.

Sri A. VEDARATHNAM : இவர்களுக்கு வேறு வக்கீல்கள் இல்லாதபோதிலும் இந்தக் கேஸ்களை சர்க்கார் வக்கீல்களே நடத்துவதற்கு வசதி செய்து கொடுக்கமுடியாதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதற்கு அவசியமில்லை என்று தான் அரசாங்கம் கருதுகிறது.

Srimathi RAJATHI KUNCHITHAPATHAM : பெரிய பெயர் வாங்கிய டாக்டர்கள் கூட இதுபோன்ற தர்மசேவைகள் செய்யும் போது வழக்கறிஞர்கள் இதுபோன்ற சேவைகள் செய்ய முன்வராத காரணத்தால் இதுபோன்ற கேஸ்களில் வாதாடினால் வழக்கறிஞர்களுக்கு உத்தியோக உயர்வில் சலுகை உண்டு என்ற நியதியை சர்க்கார் கொண்டு வந்தால், இதுபோன்ற வழக்குகளில் வாதாட வழக்கறிஞர்கள் அதிகமாக முன்வருவதற்கு ஏதுக்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து அதற்கு ஆவன செய்ய சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த மாதிரியான வழக்குகளில் வழக்கறிஞர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்று நான் நம்பவில்லை; அக்கறை கொள்வார்கள் என்றே நம்புகிறேன். முக்கியமாக இளைஞர்களாக இருக்கும் வக்கீல்கள் இந்த மாதிரியான

[14th March 1959

வழக்குகளில் அக்கறை எடுத்துக்கொண்டு தங்கள் திறமையைக் காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

*Formation of a road from Palani to Kodaikanal*

* 802. *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL (on behalf of SRI P. S. K. LAKSHMIPATHI RAJ): கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பழனியிலிருந்து கொடைக்கானலுக்கு ரோடு போடுவது சம்பந்தமாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், எந்தப் பகுதி வழியாக ரோடு போடும் உத்தேசம் இருக்கிறது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*) & (*b*) The matter is under consideration.

SRIMATHI A. S. PONNAMMAL: இந்த மாதிரி கொடைக்கானலுக்கும் பழனிக்குமிடையே ரோடு போடுவதாயிருந்தால் அது எத்தனை மைல் தூரம் இருக்கும், அதற்கு சர்க்கார் எவ்வளவு பணம் செலவழிக்கும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இந்தக் குறுக்குப் பாதை 28 மைல் தூரம் இருக்கும். இதைப் போட 38 லட்ச ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

SRIMATHI A. S. PONNAMMAL: இந்த ரோடைப் போடும் வேலையை வெகு விரைவில் எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: நான் முதலில் கூறியபடி இத்திட்டம் ஆலோசனையில் இருக்கிறது.

*Headquarters Hospital, Vellore*

* 803 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI): கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வேலூர் தலைமை மருத்துவ நிலையத்தில் 1958-ல் சராசரி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள் (In-patients) எவ்வளவு பேர் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: 420 per day, Sir.

*Procurement of foodgrains*

* 804 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ராஜாங்க உணவு தான்ய வர்த்தக திட்டத்தின் கீழ் தான்யக் கொள்முதல் செய்வதற்காக எந்தெந்த இடங்களிலிருக்கும் கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு சென்னை ராஜ்யத்தில் லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have decided to procure two lakhs tons of rice during the current harvest and the following co-operatives in the State have been appointed as procuring agents:—

(1) The District Co-operative Supply and Marketing Societies or the Co-operative Wholesale Stores in all the districts except Tanjore;



14th March 1959]

(2) The Tanjore District Co-operative Marketing Federation in Tanjore District; and

(3) The Triplicane Urban Co-operative Society in the City of Madras.

SRI P. G. MANICKAM: இப்போது குறிப்பிடப்பட்ட ஸொஸைடிகள் மூலம் எத்தனை டன் நெல் கொள்முதல செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நேற்று எனக்குக் கிடைதத தகவல்படி இதுவரை 17,000 டன்னுக்கு மேலே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

SRI P. G. MANICKAM: நெல் கொள்முதல் செய்யப்படும் தாலூகாக்களிலும் அநேக கூட்டுறவு ஸொஸைடிகள் இருக்கின்றன. ஆகையால் அந்த ஸொஸைடிகளுக்கும் இந்த லைஸென்ஸ் கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் முன்பு குறிப்பிட்டது நெல் மாத்திரம் அல்ல, நெல்லும் அரிசியும். கோவாப்பரேடிவ் ரெஜிஸ்ட்ராருடனும் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்வது எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குமே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் தங்களுக்கு ஏஜெண்டுகளாக மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

MR. SPEAKER: இனிமேல் 9-ம் தேதியன்று ஒத்திபோடப்பட்ட கேள்விகளை எடுத்துக்கொள்வோம்.

*Glass factories*

* 636 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) நமது ராஜ்யத்தில் கிளாஸ் பாக்டரிகள் எங்கெங்கே நடைபெறுகின்றன ?

(ஆ) மேலும் நமது ராஜ்யத்தில் கிளாஸ் பாக்டரிகள் நடத்த ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) There are glass factories in Salem and Attur in the Salem district, in Mettupalayam in the Coimbatore district and in Madras.

(*b*) Yes, Sir. There is a proposal for the establishment of a factory in the Industrial Estate, Guindy, for the manufacture of scientific and laboratory glassware, in the public sector. There are also proposals for the establishment of factories in the private sector, one in Madras for the manufacture of vacuum flasks, heat resisting glassware and scientific glassware and another near Madras for the manufacture of sheet-glass.

SRI V. K. KOTHANDARAMAN: கண்ணாடி செய்வதற்கான கனிப் பொருள்கள் வட ஆற்காடு ஜில்லாவில் வாலாஜா தாலூகாவில் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆகவே அவைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு அங்கே ஒரு கண்ணாடி தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: வட ஆற்காட்டில் அவை அகப்படுகின்றனவா என்று எனக்குத் தெரியாது. அதனால் அதைத் தெரிந்துகொண்டு அதற்குப் பிறகு இதைப்பற்றி யோசிக்கலாம்.

SRI A. A. RASHEED : Is there any proposal to start a factory to manufacture electric bulbs in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : Not that I am aware of.

SRI M. JAGANNATHAN : May I know when the proposed glass factory in the Industrial Estate, Guindy, is likely to be started?

THE HON. SRI R. VENKATARAMAN : Machinery have been ordered. It will, however, take some time for foreign machinery to arrive here. It will be started in the course of the next few months.

*Labour Gazette*

* 643 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தொழில் கெஜெட் எந்தத் தேதியில் வெளியிடப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN: "சென்னை தொழில் கெஜட்". அநேகமாக வருகிற மார்ச்சு மாத இறுதியிலோ அல்லது எப்ரல் மாத ஆரம்பத்திலோ வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SRI P. G. MANICKAM : இந்தத் தொழில் கெஜெட்டில் முக்கியமாக என்னென்ன சங்கதிகள் வெளியிடப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலாளர்களைக் குறித்த சட்டங்களின்படி வகுக்கப்படும் விதிகள், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரப் புள்ளி விவரங்கள், தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்னைகள் முதலியவைகளெல்லாம் இதில் பிரசுரிக்கப்படும்.

SRI P. G. MANICKAM : முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், எத்தனையோ தொழில்களும் தொழிற்சாலைகளும் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளைப் பற்றிய விவரங்களும் இந்த தொழில் கெஜெட்டில் பிரசுரிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது லேபர் கெஜெட், இண்டஸ்ட்ரீஸ் கெஜெட் அல்ல. கனம் அங்கத்தினர் குறிப்பிடும் விஷயங்களைப் பிரசுரிப்பதற்கு தனியாக இண்டஸ்ட்ரீஸ் ஜெர்னல் ஒன்று வெளியிட்டு வருகிறோம்.

*Lungis*

* 648 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware that a very large number of handlooms producing lungis for export market in the Chingleput District, are facing a crisis; and

(*b*) the cause of this sudden crisis and the steps taken by the Government to find market for the lungis?



THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There is no crisis at present.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : May I know whether lungi cloth is exported to the United States of America and if so, how much?

THE HON. SRI R. VENKATARAMAN : This is a matter which is within the knowledge of the Central Government, Sir.

*Manufacture of X-ray equipments*

* 651 *Q.* - SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. SELVARAJ) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் " எக்ஸ்ரே " கருவிகள் செய்யும் தொழிற் சாலையை நிறுவ உத்தேசம் உண்டா ?

(ஆ) இல்லையென்றால், இந்த ராஜ்யத்தில் ஏற்படுத்தும்படி மத்திய சர்க்காரை வற்புறுத்த ஏதேனும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No. Sir.

(*b*) As the industry has been left to be developed in the private sector, the question of pressing the Government of India to set up a factory for the manufacture of X-Ray equipments in the State does not arise.

SRI S. M. ANNAMALAI : வடநாட்டில் இப்படிப்பட்ட தொழிற் சாலைகள் இரண்டு இருக்கின்றன. நமது தென்னாட்டில் இப்படிப்பட்ட தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று ஏன் ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தவில்லை ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது தனியார் துறையில் ஆரம்பிக்கப்படவேண்டிய தொழில். ஆகவே இந்தத் தொழிலை ஆரம்பிக்க தனியார் துறையில் யார் முன்வந்தாலும் சர்க்கார் அதற்கு உதவி செய்யும்.

SRI A. A. RASHEED : May I know whether the Government have X-rayed this proposal to set up the factory?

THE HON. SRI R. VENKATARAMAN : It does not require X-ray examination. Visual examination is enough.

*Paper Industry*

* 652 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

மேட்டூர் காகித உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று நிறுவுவது பற்றி அரசாங்கத்தால் நடத்தப்பட்டுவரும் பரிசீலனையின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : No particular investigation has been carried out by Government beyond making a general assessment of the availability of bamboo which could be used for pulp industries including the manufacture of paper. According to the Industrial Policy Resolution, the paper industry lies wholly within the private sector and Government do not propose to enter into this particular field. A private industrialist is considering the possibility of a scheme to set up a paper mill in this area with an installed capacity of about 50 tons per day.

[14th March 1959

SRI P. G. MANICKAM : அவ்வாறு தனியார் துறையில் நடத்தப் படும் பேப்பர் தொழிற்சாலையில் என்ன என்ன ரகப் பேப்பர்கள் உற்பத்தி செய்யப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இன்னும் தொழிற்சாலையே ஆரம்பிக்கவில்லை. தொழிற்சாலையை வைப்பதற்கே ரொம்பக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே தொழிற்சாலை ஆரம்பிக்கப் படுவதற்குள், " என்ன ரகப் பேப்பர்கள் உற்பத்தி செய்யப்படும் " என்ற கேள்விக்கு எப்படி பதில் சொல்வது ?

SRI M. JAGANNATHAN : What are the reasons for which the Government do not propose to enter this field of manufacture of paper, particularly in the public sector?

THE HON. SRI R. VENKATARAMAN : I would invite the attention of the hon. Member to the Industrial Policy Resolution which has been accepted throughout the country. Certain things are reserved for the public sector and certain things for the private sector. It is not possible for the public sector to undertake all the industries in the country. Therefore, certain things have been reserved for the private sector and this comes within that.

SRI K. APPAVOO PILLAI : பேப்பர் இன்டஸ்ட்ரி ஒன்றை மேட்டூரில் ஆரம்பிப்பதானால் மேட்டூருக்கு " பாம்பூ " ஹோசூர் தாலூகாவிலிருந்து ஏதாவது அனுப்ப வேண்டுமா ? அப்படி அனுப்ப வேண்டியிருந்தால் ஹோசூர் தாலூகாவிலுள்ள பாரஸ்டில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பாம்பூ இருப்பதால் ஏன் அங்கு ஒரு பாம்பூ பாக்டரி ஆரம்பிக்கக்கூடாதென்று கேட்கிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : யாராவது முன் வந்து ஹோசூரில் ஆரம்பிக்கிறோம் என்று சொன்னால் அதை வரவேற்கிறோம்.

SRI K. ANBAZHAGAN : அகில இந்திய அடிப்படையில் தனியார் துறை, பொதுத்துறை என்ற பாகுபாட்டில், பிற மாநிலங்களில் எந்தள விற்கு தனியார் துறையில் உள்ளவர்கள் பல தொழில்களை மேற்கொள் வதற்கு முன் வருகிறார்களோ அந்தளவிற்கு நமது சென்னை மாநிலத்தில் முன் வருவதில்லை என்று அடிக்கடி அரசாங்கத்தார் இங்கு அறிவுறுத் தப்பட்டு வருவது உண்மையாகயிருப்பதால் சென்னை மாநிலத்திற்கு விதிவிலக்கு அளிக்க, தனியார் துறைக்குப் பதில் பொதுத் துறையில் ஈடுபட வழிவகைகள் வகுக்கும்படியாக கேட்பதற்கு அமைச்சர் முன் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த அடிப்படையில் தான் அந்த மாதிரி ஒன்றிரண்டு தொழில்களுக்கு எல்லா முதலையும் போட்டு விடாமல் நமது பணத்தை இந்த மாதிரி தனியார் துறையில் முன்வந்து தொழில் செய்கின்றவர்களுக்கு கடன் உதவி போன்ற உதவி கள் செய்து ஒரு தொழில் செய்யக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு பத்து தொழில்கள் செய்ய முயற்சி செய்து வருகிறோம்.

*Manufacture of hurricane lanterns*

* 653 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பழனியில் நடைபெறும் ஹரிகன் விளக்குத் தொழிற் பயிற்சி சாலையில் (Production-*cum*-Service Centre for the manufacture of hurricane lanterns) 1958-ம் வருஷத்தில் எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டன ?



14th March 1959]

(ஆ) இவர்களுள், ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Production-*cum*-Service Centre for the manufacture of hurricane lanterns at Palni has not yet commenced production.

(*b*) The question does not arise.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

### II.—PRIVILEGE MOTION *RE* INCORRECT PUBLICATION OF PROCEEDINGS IN THE " DINAMANI ".

MR. SPEAKER : Subsequent to Sri K. Anbazhagan raising the issue of privilege over the ' Dinamani ' publishing an incor- rect report of the proceedings of the House, the Paper has issued a correction in its issue, dated 13th March 1959. They have also published the news just after the Editorial thereby giving promi- nence to the correction. They have published a correct version of the proceedings that took place that day. Besides, they have also stated that the headline using the word " நயவஞ்சகம் " is wrong. They have expressed their regret for the same. Further, they have also expressed regret for the incorrect news. In my opinion this may be accepted as unconditional apology and the regret expressed by the Paper may be accepted. The matter may, therefore, be dropped.

### III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959-60—*cont.*

#### DEMAND XXIV—LABOUR INCLUDING FACTORIES

MR. SPEAKER : We shall now take up Demand XXIV, Labour including Factories. The Hon. Minister may move the Demand.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 30,29,700 under Demand XXIV—Labour including Factories."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையில், சென்ற ஆண்டு தொழிலாளர்கள் சம்பந்தமாக என்னென்ன காரியங்கள் செய்யப்பட் டிருக்கின்றன என்பதை ஒரு புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறேன். ஏனென்றால் இதைப் பற்றி ஆரம்பத்திலேயே விவரித்து சொல்லவேண்டு மென்று சொன்னால் அதற்கு குறைந்தது முக்கால் மணி நேரமாவது பிடிக் கும். அதற்குப் பிறகு கனம் அங்கத்தினர்கள் சொல்கிற வாதங்களுக்குப் பதில் சொல்லவேண்டுமென்று சொன்னால் அதற்கும் ஒரு முக்கால் மணி நேர மாவது பிடிக்கும். ஆகவே, இருக்கிற அவகாசத்தில் ஒன்றரை மணி நேரத்தை நானே எடுத்துக்கொள்ளக் கூடாதென்று இதையே எனது பேச்சாக அச்சடித்து கனம் அங்கத்தினர்களுக்கு வழங்கியிருக்கிறேன். இது சம்பந்தமாக கனம் அங்கத்தினர்கள் கூறுகிற யோசனைகள் எல்லா வற்றிற்கும் இறுதியில் பதில் சொல்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இந்த மான்யக் கோரிக்கையை பிரேரேபிக்கிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் பக்கிரிசாமி கொண்டு வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை எதிர்க்கட்சியினர் எல்லோரும் ஆதரிக் கிறார்கள் என்று கேட்டேன். ஆகவே, பக்கிரிசுவாமி அவர்களை அதை பிரேரேபிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[14th March 1959

SRI S. PAKKIRISAMI PILLAI: Sir, I move—

"That the allotment of Rs. 30,29,700 under Demand XXIV—Labour including Factories—be reduced by Rs. 100."

MR. SPEAKER: How long will the Minister take for his reply?

THE HON. SRI R. VENKATARAMAN: Forty-five minutes.

MR. SPEAKER: I understand that the Opposition has selected Mr. P. S. Chinnadurai to speak at the end before the Minister's reply. I will give him and Mr. Pakkirisami Pillai twenty minutes each. Others will have ten minutes each.

SRI S. PAKKIRISAMI PILLAI: சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைமீது ரூபாய் நூறு அளவிற்கு ஒரு வெட்டு வேண்டுமென்று பிரேரேபிக்கும்போது அதன் நோக்கம், அரசாங்கத்தால் இன்று அனுஷ்டிக்கப்பட்டு வரும் கொள்கைகளைப் பற்றி எடுத்துக் காட்டுவதற்காகத்தான். இந்த ராஜ்யத்தில் முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொண்டிருக்கும் நிலை, அன்னிய ஆதிக்கத்தின்கீழ் எப்படியிருந்ததோ அப்படியேதான் இன்றும் இருக்கின்றது. தொழிலாளர்களை முதலாளிகள் சுரண்டுவதில் இருந்து, தொழிலாளர்களை அந்த சுரண்டலில் இருந்து முழுவதும் மீட்கும்படியானதொரு நிலையை வகுப்பதற்குவேண்டிய தீவிர நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கவில்லை என்பதை சுட்டிக் காட்டும் வகையில் நான் பல உதாரணங்களை எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அன்னிய ஆட்சி இருந்தபோது இந்தச்சட்டங்கள் இயற்றப் பட்டன. அந்தச் சட்டங்களிலுள்ள ஷரத்துக்களில் மாறுதல்கள் இன்னும் அதிகமாக செய்யப்படவில்லை. காலத்திற்கு ஏற்ற மாதிரியாக அண்டை அயல் நாடுகளில் தொழிலாளர்களுக்குப் பலவித சலுகைகள் கொடுக்கப்பட்டு பெரிய பெரிய மாறுதல்கள் அங்கெல்லாம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைப் பார்த்திருந்தும்கூட மிதவாதக் கொள்கையில், முதலாளித்துவ மனப்பான்மையில் இந்த அரசாங்கம் தன் காரியங்களை இன்னும் நடத்திக்கொண்டு போகிறதைப்பார்த்து நாம் வெட்கித் தலை குனியவேண்டிய நிலையில் இருக்கிறோம். சாதாரணமாக தொழிலாளர்களின் நியாயமான குறைகளைப் போக்க வேண்டும், அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும், முதலாளிகள் செய்யும் அக்கிரமங்களிலிருந்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று லேபர் ஆபீஸரைக் கண்டு அவர்கள் ஒத்துழைப்பைப் பெற்று கன்ஸிலியேஷன் செய்யப்படவேண்டுமென்றால், லேபர் ஆபீஸர் சிபார்சு செய்து அரசாங்கத்திற்கு அனுப்பும் ரிப்போர்ட் அதிகாரிகள் கையில் போகும்போது முதலாளிகள் அவர்களுக்கு வேண்டியவர்களாக இருப்பதால் கோர்ட்டிற்குப்போனால் எந்த நிலையில் அது போய் நிற்கும் என்று பரிசீலனை செய்து கடைசியில் மந்திரிகளுக்கு அனுப்பும்போது தொழிலாளர்கள் கேட்பது நியாயம் என்று தெரிந்தாலும் சில கேஸ்களில் அதை மறுத்து விடுகிறார்கள், கோர்ட்டிற்கு விடுவதற்கு. அப்படிக் கோர்டிற்கு போனாலும் கூட கோர்ட்டில் இருக்கும் நீதிபதிகள் பல கேஸ்களில் முதலாளித்துவ மனப்பான்மையில் தீர்ப்பு கொடுக்கும் ஒரு நிலைதான் இருக்கிறது. அப்படி தொழிலாளர்களுக்கு சாதகமாக ஏதாவது நன்மை கிடைத்துவிட்டால் முதலாளிகள் ரிட் போட்டு தடைசெய்துவிடுகிறார்கள். இப்படி ஒவ்வொருயிடத்திலும், தொழிலாளர்கள் நன்மையடைவதற்குப் பெரிய தடைகள் இருக்கின்றன. இம்மாதிரியான ஒரு நிலைமை இன்னும் நீடிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக நல்ல வழியிலே, நேர்மையான வழியிலே தொழிலாளர்கள் நடத்தப்படவேண்டுமென்றாலும் கூட, அவர்களுக்கு நியாயம் கிடைப்பது கஷ்டமாகத்தான் இருந்துகொண்டு வருகிறது. முதலாளிகள் பல அக்கிரமங்கள் செய்கிறார்கள்.



14th March 1959] [Sri S. Pakkirisami Pillai]

ஏதோ கொஞ்சம் எதிர்த்துப் பேசினால் "டிஸ்மிஸ்" செய்து விடுகிறார்கள். ஒருவர் "டிஸ்மிஸ்" செய்யப்பட்டதை எதிர்த்து மற்ற தொழிலாளர்கள் எதிர்ப்பு காட்டுவார்களேயானால், ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வார்களேயானால், அத்தனை பேர்களும் முதலாளியினால் "டிஸ்மிஸ்" செய்யப்படும்படியான நிலையிலே இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகு, அந்த விஷயத்தை கோர்ட்டுக்கு எடுத்துக்கொண்டு போனால், அங்கே சட்டப்படி அது சரி என்று தீர்ப்பு கிடைக்கிறது. உதாரணமாக ராஜஸ்தானில் ஒரு நீதிபதி, "ஸ்டாண்டிங் ஆர்டருக்கு" விரோதமாக திடீரென்று வேலை நிறுத்தம் செய்யப்பட்டதால், அதன் விளைவாக தொழிலாளர்கள் "டிஸ்மிஸ்" செய்யப்பட்டது சரி என்று தீர்ப்பு கூறியிருக்கிறார். இதற்கு மேல் "சுப்ரீம்" கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில், திடீரென்று வேலை நிறுத்தம் செய்ததால் இம்மாதிரி டிஸ்மிஸ் செய்தது நியாயம்தான் என்று சொல்லிவிட்டார்கள். எந்த விதமான சூழ்நிலையில் தொழிலாளிகள் இம்மாதிரி நிலைமைக்கு வந்தார்கள், எந்தவிதமான சூழ்நிலையில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது, அதாவது 'எக்ஸ்டர்னல் ஸர்கம்ஸ்டான்ஸஸ்' என்ன என்பதைப்பற்றி நீதிபதிகள் ஆலோசிப்பது இல்லை. அங்கு இருக்கும்படியான சூழ்நிலையைப்பற்றி ஆலோசிக்காமல், ஏதோ புஸ்தக ரீதியிலே, சட்ட ரீதியிலே, நிலைமையைக்கண்காணித்துத்தான் இம்மாதிரி தீர்ப்புக்கொடுக்கிறார்கள். இதைப் பார்த்துத்தான் எல்லா முதலாளிகளும் யாராவது ஒரு தொழிலாளி கொஞ்சம் எதிர்த்தால் உடனே அவனை டிஸ்மிஸ் செய்துவிடுகிறார்கள். அம்மாதிரி ஒரு தொழிலாளி, "டிஸ்மிஸ்" செய்யப்பட்டதை எதிர்த்து மற்ற தொழிலாளிகள் போராட்டம் நடத்தினால், அவர்கள் எல்லோரையுமே டிஸ்மிஸ் செய்துவிடும் பழக்கத்தை இப்பொழுது எல்லா இடங்களிலும் கொண்டுவந்திருக்கிறார்கள். இப்பொழுது மேட்டூர் தொழிலாளிகளைப் பொறுத்த வரையில் ஸ்டாண்டிங் ஆர்டருக்கு விரோதமாக நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று நீதிபதி தீர்ப்பு கிடைத்திருக்கிறது. வண்டலூர் மோட்டார் தொழிலாளர்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளானது இதன் விளைவாகத்தான். அதேமாதிரியான ரீதியில்தான் அடையார் என்ஜினியரிங் தொழிலாளிகள் முதலாளிகளுடைய அக்கிரமம் தாங்காமல் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ததற்கு போலீஸ்காரர்கள் அந்த இடத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டு, தொழிலாளர்கள் அத்தனை பேர்களையும் பலாத்காரமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டுபோய் "லாக்-அப்பில்" வைத்திருந்தார்கள். அதன் பேரில் அவர்களுக்கு நான் ஜாமீன் கொடுத்து அழைத்துக்கொண்டு வரவேண்டிய நிலையில் இருந்தது. ஒருவர் ஏதாவது அக்கிரமமாக, கண்டிப்பாக உத்தரவு போட்டால், அக்கிரமமாக ஏதாவது நடவடிக்கை எடுத்தால், அதை எதிர்ப்பதோ, அல்லது கொஞ்சம் தங்கள் எதிர்ப்பு எண்ணத்தைக் காணபிப்பதோ ஒவ்வொரு மனிதனுக்கும் சகஜம். அம்மாதிரியான நிலையிலே, ஒரு "போலீஸ் அல்லது ராணுவ டிஸிப்பிளின்" தொழிலாளர்களிடையே இருக்கவேண்டுமென்ற நிலையிலே தொழிற்சாலைகள் இயங்குமேயானால், அம்மாதிரியான நிலைமை நம் நாட்டை எந்த வழிக்குக் கொண்டுபோகும் என்று நாம் சொல்லுவதற்கு முடியவில்லை. எந்த வழியிலாவது தொழிலாளிகள் இப்படி அடக்கி ஒடுக்கப்படுவார்களேயானால், அது பெரிய ஒரு ஆபத்தான நிலைமைக்குத்தான் கொண்டுபோய்விடும். பிலாய், ரூர்கேலா என்ஜினியரிங் தொழிலாளர்கள் அடக்கப்பட்டுவிட்டார்கள். அவர்கள் தொழிற்சங்கம் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏதோ உற்பத்திப் பெருக்குக்கு எதிராக, நாட்டின் நலனுக்கு எதிராக அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தைக் கொண்டு வந்து அவர்கள் ஒடுக்கப்பட்டுவிட்டார்கள். அதே மாதிரி இப்பொழுது திருச்சி. . .

MR. SPEAKER: இந்த சபையில் நம் ராஜ்யத்திலுள்ள ஸ்தாபனங்களைப்பற்றி மட்டும் பேச வேண்டும். பிலாய், ரூர்கேலா தொழிற்சாலைகளைப்பற்றி பாராளுமன்றத்தில் பேசலாம். அவைகளைப்பற்றி இந்த சபையில் பேசுவது நல்லது அல்ல.

SRI S. PAKKIRISAMI PILLAI: நான் உதாரணமாகத்தான் சொன்னேன்.

[14th March 1959

MR. SPEAKER : உதாரணமாகக்கூட சொல்லுவது நல்லது அல்ல.
மற்ற ராஜ்யங்களிலுள்ள தொழிற்சாலைகளைப்பற்றி இங்கு என் பேசவேண்டும்?

SRI S. PAKKIRISAMI PILLAI : உங்கள் கட்டளைக்கு அடிபணி
கிறேன். இருந்தாலும், . (சிரிப்பு.)

MR. SPEAKER : கட்டளைக்கு அடி பணிகிறேன் என்று சொல்லிவிட்டு,
"இருந்தாலும்" என்று சொல்லுவது நல்லது அல்ல. அது சபாநாயக
ருடைய தீர்ப்பைப்பற்றி ஏதோ சொல்ல ஆரம்பிப்பது போல் இருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : மந்திரிகள் இந்த மாதிரியான . . .

MR. SPEAKER : மந்திரிகளைப்பற்றி பேசப்போகிறீர்களா ? "இருந்
தாலும்" என்று சொன்னது என்னுடைய தீர்ப்பைப்பற்றி ஏதோ சொல்ல
வருவதுபோல் இருந்தது. வேண்டுமென்றால் மந்திரியைப்பற்றி
சொல்லுங்கள்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இம்மாதிரியான நிலைமை நம்
முடைய ராஜ்யத்திலே கூட இருக்கிறது. அம்பத்தூர் ஸைகிள் பாக்டரி
தொழிலாளர்களின் கோரிக்கைகள் லேபர் ஆபீஸர் விசாரணைக்கு வந்து,
பிறகு அது அரசாங்கத்தார் பரிசீலனைக்கு வந்தது. அநேக மாதங்கள்
ஆகியும்கூட இன்னும் அது பற்றி தீர்ப்போ, பதிலோ கொடுக்கப்படவில்லை.
கோரிக்கைகளை ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லக்கூடிய நிலை
வருமோ என்றுகூட சந்தேகமாக இருக்கிறது. அந்த மாதிரியான
நிலையிலே இந்த விஷயத்தில் முடிவு சொல்லாமல் இத்தனை நாட்களாக
வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நிலையிலே, இம்மாதிரி
மனப்பான்மையினால் அங்கே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்
தார்கள். அதனால் அநேகம் பேர்கள் "டிஸ்மிஸ்" செய்யப்பட்டார்கள்.
தொழிலாளர்கள் தங்களுக்கு நியாயம் நேர்மையான ஒரு நிலையிலே
கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்தாலுங்கூட, தொழிலாளர்களுக்கு
பல தடைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதனால் தொழிலாளர்கள்
மனது கசிந்து, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்படியான ஒரு நிலை
இருந்துகொண்டிருக்கிறது.

"பேர் வேஜஸ் ஆக்ட்" என்பதை 1949-ம் ஆண்டில் திட்டவட்டமாக
வெளியிட்டிருக்கிறார்கள். டாக்டர் அக்ராய்டு ஆராய்ச்சி செய்த பிரகாரம்
சத்து உள்ள உணவை தொழிலாளர்கள் குடும்பம் வாங்குவதற்குப் போது
மான சம்பளத் தொகையை அவர்களுக்குக் கொடுத்து, அதோடு கூட
"ஸப்ஸிடைஸ்டு ஹௌசிங் ஸ்கீம்"படி இப்பொழுது 12 ரூபாய், 10
ரூபாய் வீட்டு வாடகை கொடுப்பதையும் சேர்த்து 3 பேர்கள் இருக்கும்
படியான குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய நிலைமையில் அவர்களுக்கு
"பேர் வேஜஸ்" நிர்ணயிக்க வேண்டும். அம்மாதிரி இன்னும் அரசாங்
கம் நிர்ணயிக்க முன்வரவில்லை. அப்படி நிர்ணயிக்கப்படும்பொழுது, இப்
பொழுது கொடுக்கும்படியான சம்பளத் தொகையில் 5 சதவிகிதமோ,
10 சதவிகிதமோ அதிகமாகக் கொடுக்கவேண்டி வரலாம். அதுபற்றி
யோசிப்பதற்கு நம்முடைய ராஜ்ய அரசாங்கம் இன்னும் முன்வரவில்லை.
அம்மாதிரி அதிகச் சம்பளம் கொடுப்பதற்கு தொழிற்சாலைகளின் முதலாளி
களுக்கு சக்தி இருக்கிறது. அவர்களுக்கு நிறைய லாபம் கிடைக்கிறது.
ஏஜன்ஸி கமிஷன் மூலம் லட்சக்கணக்கான பணத்தை அவர்கள் சம்பா
திக்கிறார்கள். மற்றும் பல முதலாளிகள் பணத்தைக் கொள்ளை அடிக்
கும்படியான நிலையில் கொழுத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி
நிலைமையை அவர்கள் வைத்துக்கொண்டிருப்பதற்கு அனுமதிக்கப்படு
கிறதே தவிர, தொழிலாளர்களுக்கு லாபத்திலிருந்து பங்கு கிடைப்பதற்கு
எந்த விதமான வழிவகையும் செய்யப்படவில்லை. தொழிலாளிகளை நல்ல
மாதிரியான நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் இன்னும்
எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை, எந்தவிதமான
முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.



14th March 1959] [Sri S. Pakkirisami Pillai]

நைனிடாலில் சமீபத்திலே ஒரு முக்கூட்டு மகாநாடு நடந்தது.
அதன் பிரகாரம் "இம்ப்ளிமென்டேஷன்" கமிட்டி ஒன்று
அமைக்க ஏற்பாடு செய்தார்கள். அதாவது அந்த மகாநாட்டில்
என்னென்ன தீர்ப்பு கொடுத்தார்களோ, அங்கே என்னென்ன
அக்ரிமெண்டு செய்துகொண்டார்களோ, அதையெல்லாம் முதலாளிகள்
செய்தார்களா என்று பரிசீலனை செய்வதற்கு, அந்தத் தீர்ப்புகளை
அமுல் நடத்தி தொழிலாளர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற
நோக்கத்தோடு இம்மாதிரி கமிட்டி அமைக்கப்படவேண்டுமென்று தீர்
மானம் செய்தார்கள். இந்த முக்கூட்டு மகாநாட்டின் தீர்ப்புகளை அமுல்
நடத்துவதற்கு நம்முடைய ராஜ்யத்தில் இம்மாதிரி ஒரு கமிட்டி அமைக்கப்
பட்டிருக்கிறதா, அப்படி அமைக்கப்பட்டிருந்தால் அவர்கள் என்ன வேலை
செய்தார்கள் என்பது தெரியவில்லை. அதற்கு இப்பொழுது ஒரு உதார
ணம் சொல்லுகிறேன். சென்னை மைலாப்பூரிலுள்ள காமதேனு டாக்கீஸ்
முதலாளி தொழிலாளர் சங்கத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்.
ஆனால் வருடங்கள் ஐந்து ஆகியும் இதுவரை ஒப்பந்தத்தின்படி
நடந்திருப்பதாக தெரியவில்லை. அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்
கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அவர்களின் மீது அரசாங்கம்
எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. இன்
னொரு விஷயம் என்னவென்றால் இன்னும் பல தொழிலாளர்களுக்கு
குறைந்தபட்சக்கூலி (மினிமம் வேஜஸ்) நிர்ணயிக்கப்படவில்லை. இன்றைக்
கும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் குறைந்த சம்பளம் பெற்றுக்
கொண்டு பட்டினியில் வாடுகின்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. 9·30 a.m.
வேலை எதுவாக இருந்தாலும் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டு வேலை
செய்து இன்னும் அதிகமாக கொடுப்பார்களா என்று ஏங்கிக்கொண்
டிருக்கின்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த மாதிரியான
நிலையில்தான் பல்வேறு இடங்களிலுமுள்ள தொழிலாளர்கள் கஷ்டப்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குச் செய்யவேண்டிய பல
நன்மைகளையும் தொழிலாளர்களுக்கு வேண்டியிருக்கிற அரசாங்கம் செய்து
கொடுக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தான் சொல்ல வேண்டி
யிருக்கிறது. இப்போது பிராவிடன்டு பண்டு $6\frac{1}{4}$ சத விகிதம் என்றிருப்
பதை 8 1/3 சத விகிதமாக மாற்றவேண்டுமென்று தொழிலாளர்கள் கூக்
குரலிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் மாற்றுவதின் மூலமாக அவர்
கள் ரிட்டயராகின்ற சமயத்திலோ அல்லது, வயதாகின்ற சமயத்திலோ
அல்லது நோய்வாய்ப்பட்டு இருக்கின்ற சமயத்திலோ அவர்களுக்குக் கணிச
மான தொகை கிடைக்கும் என்ற நோக்கத்துடன் தான் இந்தமாதிரியாக
மாற்றவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைச்
செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரவில்லை. இதற்கு மத்திய
அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்றால் தொழிலாளி வேண்டுமானால்
போட்டுக்கொள்ளட்டும், முதலாளிகளை நாம் வற்புறுத்த முடியாது என்று
சொல்லிவிட்டார்கள். இம்மாதிரியான மனப்பான்மையில் மத்திய அரசாங்
கமும் ராஜ்ய அரசாங்கமும் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்து நாம்
உண்மையிலேயே வருத்தப்படுகிறோம். அதோடு கூட (எம்ப்ளாயீஸ் இன்
ஷூரன்ஸ்) ராஜ்ய சுகாதார சட்டத்தின் கீழ் $4\frac{3}{4}$ சத விகிதம் முதலாளிகளிட
மிருந்து பெற்று குடும்பத்திலுள்ளவர்களுக்கும் இந்தச் சலுகையை விஸ்
தரிக்கவேண்டும் என்கிற எண்ணத்தில் தொழிலாளர்கள் ராஜ்யத்தில்
பெரும் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் எந்த
சமயத்தில் கொண்டு வரப்போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்
டிருக்கிறோம். அதோடு இப்போது பீடித் தொழிலாளர்களுக்காக சட்டம்
கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆங்காங்கு மந்திரி
கள் மகாநாட்டுக்கும் போய் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்
மையில் அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற
எண்ணம் அவர்கள் மனதில் இருக்கிறதா இல்லையா என்று நமக்குத்
தெரியவில்லை. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் காலதாமதம்
செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை. கடைசியாக இப்போது ஸப்ஸி
டைஸ்டு ஹௌசிங் ஸ்கீம் கொண்டு வந்திருக்கிறார்கள் தொழிலாளர்களுக்கு.
அது வரவேற்கிற அம்சம்தான். இதன் மூலம் தொழிலாளி 10 சதமானம்
செலவு செய்தால், 25 சதமானம் மான்யமாக மத்திய அரசாங்கத்தால்
கொடுக்கப்படும் என்ற ஒரு ஏற்பாட்டை வைத்திருக்கிறார்கள். ஆனால்
அரசாங்கமே முன்நின்று முழுச்செலவையும் ஏற்றுக்கொள்வதற்குமுன்

[Sri S. Pakkirisami Pillai] [14th March 1959

வந்தால்தான் இந்த வீடுகட்டிக்கொடுக்கும் திட்டம் தொழிலாளர்கள் மத்தியில் வெற்றிபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லையென்றால் இந்த திட்டம் அவர்கள் மத்தியில் கிளம்புவது கஷ்டம்தான். ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் முதலாளிகள் வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். இருந்தாலும், பொதுவாக பல முதலாளிகளும், குறிப்பாக பி. அண்டு சி. முதலாளிகள் எல்லாம் இதற்கு இசைந்து கொடுக்க மாட்டார்கள். இவர்கள் எல்லாம் கடூரமான சிந்தனை உள்ளவர்கள். இவர்கள் எல்லாம் ஒரு ரகத்தைச் சேர்ந்தவர்கள். தமிழில் ஒரு பழமொழி உண்டு,

“ இரணம் கொடுத்தால் இடுவர்—இடாரே
சரணம் கொடுத்தாலும் தான் ”.

என்ற ஒரு நிலையில் இரணம் கொடுத்தால் தான் இடுவர் என்கிற ஒரு போக்கில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராக ஒரு பெரிய எதிர்ப்பைக்காட்டி அதன் மூலமாகத்தான் அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதன் மூலமாகத்தான் சல்லிக்காக கொடுக்கும்படியான நிலையில் வரவேண்டியிருக்கிறது. எந்தக் காரியத்திற்கும் ஒரு போராட்டமும் எதிர்ப்பும் தெரிவிக்க வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒரு நிலைமையில் தான் சமீபத்தில் பி. அண்டு சி. மில்லில் ஏற்பட்ட தகராறுக்கு மந்திரி அவர்கள் தலையிட்ட பின்னால்தான் போனஸ் தொகை கொடுத்தார்கள். இந்த நிலைமையில் தான் முதலாளிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் பேரில் அரசாங்கம் எந்த முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத்தான் காண முடிகின்றது. அரசாங்கமும் முதலாளித்துவ மனப்பான்மையிலேதான் போய்க்கொண்டிருக்கிறார்கள், முதலாளிகளுக்குப் பயந்துகொண்டுதான் இருக்கிறார்கள். உண்மையில் முதலாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தைரியமில்லாத நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஒரு பத்திரிகை ஆபீஸிலிருந்து பத்திரிகை நிருபர்களை பத்திரிகை முதலாளி நிறுத்திவிட்டார். அவ்விதம் நிறுத்தப்பட்டதின் காரணமாக, அந்த பத்திரிகைத் தொழிலாளர்களைச் சேர்ந்த சங்கமும் தொழிலாளர்களும் சேர்ந்து அந்த பத்திரிகை ஆபீஸ் முன்னால் போய் மறியல் செய்தார்கள். அவ்விதம் மறியல் செய்ததற்கு எதிர்ப்பாக முதலாளியின் சார்பில் ஒரு ஒலி பெருக்கியை அமைத்து, குண்டர்களைக்கொண்டுவந்து கத்திச்சண்டை, பாணச்சண்டை முதலியவைகளை எல்லாம் காட்டி கூச்சல்போட்டு, மறியல் செய்கின்றவர்களுக்கு எதிராக. . .

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த சண்டை, தகராறு எல்லாம் தீர்ந்து போன விஷயம், இதை இப்போதும் கிளப்பினால் அதனால் ஏதாவது வம்பு வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. . .

SRI S. PAKKIRISAMI PILLAI: இந்த மாதிரியான பயம் ஏன் இருக்க வேண்டுமென்று கேட்கிறேன். அரசாங்கத்தினுடைய மனப்பான்மையைத்தான் இது காட்டுகிறது. தொழிலாளர்களுக்கு நியாயம் செய்து கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் முதலாளிகளுடைய மனதில் கிடையாது. எந்தவிதமான சட்டத்தை நிறைவேற்றினாலும்கூட அவைகளை எல்லாம் ஏமாற்றுவதற்குத்தான் முதலாளிகள் முயற்சிக்கிறார்கள். ஆனால் நியாயத்திற்காக முதலாளிகளை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டம் நடத்தும்போது முதலாளிகளுக்கு அவர்கள் பக்கம் போலீஸ் பந்தோபஸ்து எல்லாம் கொடுக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களைச் சிறையில் அடைத்து பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாக்குகிறார்கள். இந்த மாதிரியான நிலை இருந்து கொண்டிருந்தால் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் இந்த அரசாங்கத்தால் கிடைக்காது. ஆகவே தொழிலாளர்களுக்கு எதிராக நடக்கும் முயற்சிகளை எல்லாம் இந்த சர்க்கார் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மான்யத்தின் மீது நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

SRI J. MATHA GOWDER: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தொழிலாளர் மான்யத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது பிளான்டேஷன் ஏரியாவில் தோட்



14th March 1959] [Sri J. Matha Gowder]

டங்களில் வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்கு வேலையைப்
பற்றிய உறுதி அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. எப்படியென்றால்
ஒரு தோட்டத்தில் வேலை செய்யக்கூடிய தோட்ட உத்தியோகஸ்தர்கள்
20 வருடங்கள் வரை அதே தோட்டத்தில் வேலை செய்த பிறகும், அந்தத்
தோட்டம் புதிதாக ஒருவரால் விலைக்கு வாங்கப்பட்டால் அதில் ஏற்கனவே
வேலை செய்து கொண்டிருந்த உத்தியோகஸ்தர்களை எல்லாம்
நிரந்தரமாக வைத்திருக்கவேண்டும் என்ற நியதி இப்போது இல்லை.
20 வருடம் வேலை செய்தாலும் கூட வேலைக்கு உத்திரவாதம் இல்லாத
நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக எத்தனை
வருடங்களாக வேலை செய்தாலும் தங்களுக்கு வேலை நிரந்தரமாக கிடைக்
காதோ என்ற எண்ணத்தில் அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் எல்லாம்
இருந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால்
வெள்ளைக்காரர்கள் தோட்டங்களை வைத்துக் கொண்டிருந்த காலத்தில்
அவர்களின்கீழ் வேலை செய்து கொண்டிருந்த உத்தியோகஸ்தர்களுக்கு
அதிகமான சம்பளம் கொடுத்திருப்பார்கள். அதே தோட்டத்தை இப்
போது இந்தியர்கள் வாங்கும் போது, அதே உத்தியோகஸ்தர்களை வைத்துக்
கொண்டிருந்தால் வெள்ளைக்காரர்கள் கொடுத்த சம்பளத்தைத் தாங்களும்
கொடுக்க வேண்டியிருக்குமே என்று நினைத்து, அவர்களை வேலையி
லிருந்து நிறுத்திவிட்டு, பதிலாக தங்கள் சொந்தக்காரர்களை வேலைக்கு
வைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் ஏற்கனவே வேலை செய்து
கொண்டிருந்த உத்தியோகஸ்தர்களை வேலையிலிருந்து நிறுத்திவிடுகிறார்
கள். சாதாரணமாக ஒரு உத்தியோகஸ்தருக்கு 400 ரூபாய் சம்பளம்
இருந்தால், அந்த முதலாளிக்குச் சொந்தக்காரரைக் கொண்டு விட்டு,
100 ரூபாயில் அமர்த்தி விடலாம் என்று எண்ணி அவர்களை நிறுத்தி
விடுகிறார்கள். ஒரு உத்தியோகஸ்தர் 20 வருஷங்களாக ஒரு தோட்டத்தில்
வேலை செய்த பிறகு, அவருக்கு 4 அல்லது 5 குழந்தைகள் ஆன பிறகு,
புதிதாக ஒருவர் அந்தத் தோட்டத்தை வாங்கி அந்த உத்தியோகஸ்தரை
நிறுத்தி விட்டால் அவர்களுடைய நிலைமை என்ன? ஒரே துறையில்,
தோட்டத்தில் வேலை செய்த பிறகு வேறு வேலைக்குப் போக அவர்கள்
லாயக்கில்லை. வேறு எந்தத் தோட்டத்திற்காவது போனால் அங்கே உத்தி
யோகஸ்தர்கள் இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு வேலை இல்லாமல்
நிர்க்கதியாக, நடுத் தெருவில் நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.
அமைச்சர் அவர்கள் கூட ஸ்டாப் அஸோஸியேஷன் தலைவராக பணி
யாற்றியிருக்கிறார். அவர்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்
கள். இதற்கு ஏதாவது வகை செய்து வேலை உத்திரவாதம் அளிக்கக்
கூடிய நிலையில் ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக சமீபத்திலே ஹைக்கோர்ட்டிலே ஸ்டாண்டிங் ஆர்டர்
பற்றி வந்திருக்கிற தீர்ப்பு தொழிலாளிகள் தலையில் பெரிய கல்லைப்
போடுவதாக இருக்கிறது. ஹைக்கோர்ட் தீர்ப்பிலே முதலாளிகள் நினைத்
தால் ஒரு தொழிலாளியினுடைய வேலையை டெர்மினேட் செய்யலாம்—
ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து டெர்மினேட் செய்யலாம்—என்று இருக்
கிறது. ஒரு மானேஜ்மெண்ட் ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து ஒரு
தொழிலாளியை நிறுத்தி விட்டால், லேபர் கோர்ட் ஏற்படுத்துவதிலே,
லேபர் கோர்ட்டுக்கு எந்த வித பவருமில்லாமல் போகிறது. ஹைக்கோர்ட்
டெஸிஷனை வைத்துக்கொண்டு பார்த்தால் லேபர் கோர்ட்டுக்கு எந்த
வித ஜூரிஸ்டிக்ஷனும் கிடையாது. அதனால் அவர்கள் எந்த வித தீர்ப்பும்
செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். லேபர் கோர்ட் ஒரு தீர்ப்புக்
கொடுத்தாலும் கூட, ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து ஒருவரை நிறுத்தி
விடலாம். அவருடைய வேலை அவசியமில்லை என்று ஒருவரை நிறுத்தி
விடலாம். குறிப்பாக இது யாரை பாதிக்கிறது என்று சொன்னால்,
தொழிற் சங்கத்தில் இருக்கக்கூடிய தலைவர்களை, தொழிலாளிகள் ஒரு
தொழிற் சங்கத்தில் வேலை செய்யக் கூடியவர்களைப் பழி வாங்கும்
நோக்கத்தோடு, ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து அவர்களை நிறுத்தி
விட ஏதுவாக இருக்கிறது. இதற்கு உடனடியாக ஏதாவது அமெண்ட்
மெண்ட் கொண்டு வந்து அவர்களுக்கு வேலை உத்திரவாதம் அளித்து
தொழிலாளிகளை நிறுத்த முடியாது ஏதாவது வழி கண்டாக வேண்டு

மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் மத்திய சர்க்காருக்கு வற்புறுத்தி எழுதியிருப்பதாக நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி எழுதியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதிக நாள் எடுத்துக்கொண்டால், அதற்குள்ளாக முதலாளிகள் தங்களுக்கு வேண்டாத ஆட்களை நிறுத்தி அவர்களை ஒழித்து விடுவார்கள். பிறகு சட்டம் வந்தும் பிரயோசனமில்லாமல் இருக்குமாதலால் இதைப் பற்றி உடனடியாக வற்புறுத்திச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்திலே தமிழ்நாடு வொர்க்கிங் ஜர்னலிஸ்ட்ஸ் கொடுத்த ரிட் பெடிஷன் 184 ஆப் 58-லே இந்த மாதிரி தீர்ப்பு வந்திருக்கிறது. முதலாளிகள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமை வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதற்கு விரைவாக தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தோட்டங்களில் இருக்கக்கூடிய தொழிலாளிகள் மதுவிலக்கு சம்பந்தப்பட்ட குற்றங்களில் தண்டிக்கப்பட்டால் அவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று ஒரு உத்திரவு இருக்கிறது. மதுவிலக்குக் குற்றத்தில், அதாவது ஒருவர் மதுவைக் குடித்தோ அல்லது விற்பனை செய்தோ தண்டிக்கப்பட்டால் அவர்களுக்குக் கிரிமினல் புரொஸீஜர் கோட் பிரகாரம் தண்டனை கொடுக்கப்படுகிறது. அதிகமான தண்டனை கொடுக்க வேண்டுமா ? கொடுத்துக் கொள்ளட்டும். தண்டனை முடிந்து திரும்பி வந்தால் வேலை கொடுப்பதில்லை என்று நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லோரும் அப்படி நிராகரிக்கப்பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. சிலர் அந்தத் தொழிலாளிகளை வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். சிலர் எடுத்துக் கொள்வதில்லை. இந்த விஷயத்தில் உத்திரவு சரியாக இல்லை. ஒன்று அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இருக்க வேண்டும், அல்லது அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று இருக்க வேண்டும். மானேஜ்மெண்டுக்கு இஷ்டமிருந்தால் எத்தனை மது விலக்குக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டிருந்தாலும், எத்தனை தடவை தண்டிக்கப்பட்டிருந்தாலும், வந்த பிறகு வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். மானேஜ்மெண்டுக்கு வேண்டாதவர்களாக இருந்தால் வேண்டாம் என்று சொல்லி விடுகிறார்கள். இதனால் தொழிற்சங்கங்களில் வேலை செய்யக் கூடியவர்களுக்குச் சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. ஒருவரை வேலைக்கு அமர்த்திக் கொண்டு விட்டு, இன்னொரு தோட்டத்தில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளவில்லை என்றால் அந்தத் தோட்டத்தில் வேலை செய்யக் கூடியவர்கள் எங்களிடத்தில் வந்து கேட்கிறார்கள். அதற்கு நாங்கள் போய் அந்த மானேஜ்மெண்டைக் கேட்டால், அதற்கு அவர்கள் " முடியாது, நாங்கள் என்ன செய்வது, சர்க்கார் உத்திரவு இருக்கிறது " என்று சர்க்கார் உத்திரவைக் காண்பிக்கிறார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் இதிலே எந்த வித உத்திரவையும் போடவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கார் உத்திரவு, எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இல்லை, எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI J. MATHA GOWDER : மிகவும் சந்தோஷம். அதைத் தான் நீலகிரி ஜில்லா மதுவிலக்கு அட்வைஸரிக் கமிட்டியிலே கூடச் சிபாரிசு செய்து சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். ஒரு குற்றத்திற்கு இரண்டு தண்டனை கொடுப்பது உசிதமல்ல என்று தான் நாங்கள் சிபாரிசு செய்திருக்கிறோம். அந்தச் சிபாரிசு அங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் சர்க்கார் பரிசீலனை செய்து திட்ட வட்டமான உத்திரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தோட்டங்களில் இருக்கக்கூடிய டாக்டர்கள். முதலாளிகள் தோட்டங்களில் சொந்த டாக்டரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிரசவ அலவன்ஸ் வேண்டும் என்று தோட்டத்தில் வேலை செய்யக் கூடிய ஒரு தாய்மார் பிரசவ நாள் ஆகிவிட்டது என்று கணக்குப் பார்த்து, தோட்டத்தில் இருக்கக் கூடிய டாக்டரிடம் போனால், இன்னும் பிரசவநாள்





ஆகவில்லை, ஆகையால் வேலைக்குப் போகலாம் என்று சொல்லுகிறார். அப்படிப் போகும் போது ஒரு தோட்டத்திலே, நீலகிரியில் கோவேலி தோட்டத்தில் ஒரு தாய்மாருக்கு மூன்றாவது நாள் பிரசவம் ஆகி விட்டது. டாக்டரிடத்தில் போய் நாங்கள் கேட்ட போது என்ன சொல்லுகிறார் என்றால், " என்னிடத்தில் அவர்கள் சரியாகக் காண்பிக்க வில்லை, அதனால் சரியானபடி சோதனை செய்யவில்லை ; மூன்று நாட்களுக்குள் பிரசவம் ஆகிவிட்டால் அதற்கு நான் என்ன செய்வது? " என்று சொல்லுகிறார். அதன் பிறகு என்ன செய்வது என்று புரியவில்லை. இதைக் கட்டுப்படுத்த சட்டம் இல்லை. மானேஜ்மெண்ட் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் இல்லாத காரணத்தினால் ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. நான் ஒரு யோசனையை அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு தோட்டத்தில் டாக்டரிடம் ஒரு தாய்மார் பரிசோதனை செய்யவேண்டுமென்று போனால், பரிசோதனைக்குப் போன தேதியைக் குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டுமென்று ஏற்படுத்தவேண்டும். இவ்வளவு மாதம் ஆகிறது என்று டாக்டர் சொல்வதைக் குறித்துக்கொடுத்தால், பிறகு மானேஜ்மெண்டைப் பிடித்து அவர்களிடத்திலிருந்து ஏதாவது ஒரு முறையிலே கோர்ட்டுக்குப் போய் தொகையை வசூலிக்க முடியும், நஷ்டத்தைப் பெற முடியும் என்ற நிலை இருக்கிறது. அதற்கு நாம் ஒரு சர்க்குலர் அனுப்பி, மானேஜ்மெண்ட்களிடத்தில், தோட்ட டாக்டர்கள் ஏதாவது தவறாகச் சொன்னால் அதற்கு மானேஜ்மெண்ட் பொறுப்பாளி என்று சொல்ல வேண்டும்.

தோட்டங்களில் இன்றைக்கு இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளில் சரியான மருந்துகள் வைத்திருப்பது கிடையாது. ஆஸ்பத்திரிக்குப்போனால், தலைவலிக்கும் கால் வலிக்கும் மருந்து கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். பெரிய கேஸ்களுக்கு நல்ல மருந்துகளை உபயோகிக்காத காரணத்தினால், கடைசி கட்டத்தில் உயிருக்கு ஆபத்து வரும்போது வெளியே அனுப்பி விடுகிறார்கள். எங்களிடத்தில் எக்ஸ்-ரே இல்லை, அது இல்லை, இது இல்லை, என்று சொல்லி சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி, அங்கே வந்த பிறகு அவர்கள் இறந்து விடுகிறார்கள். இந்த நிலை எப்போது மாறுவது என்று புரியவில்லை. எந்தத் தோட்டங்களிலும் சரியான மருந்துகள் வைக்க வேண்டும். அவர்களுக்கு மருந்து வைப்பதற்குச் சக்தி இருக்கிறது. சக்தி இருந்தும் வைக்காத. காரணம் தெரியவில்லை. தோட்டத் தொழிலாளி தானே என்று உதாசீனமான முறையில் நடந்து கொள்கிறார்களே தவிர, நிதி வசதி இல்லாத காரணத்தினால் இல்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, ஆள் பூர்த்தி செய்வதைப் பொறுத்த வரையில் ஒரு தொழிலாளி ரிடையரானால், அந்த ஆளுக்கு பதில் ஆள் போடுவதில்லை. பிளான்டேஷன் பொறுத்த வரையில் ஒரு ஏக்கருக்கு $1\frac{1}{4}$ ஆட்கள் வைக்க வேண்டும் என்று இருக்கிறது. 400 ஏக்கர் இருந்தால் 500 தொழிலாளிகள் இருக்கவேண்டும் என்று சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறது. இப்படி 500 தொழிலாளிகள் இருப்பதிலே சில தொழிலாளிகள் ரிடையராகிப் போய் விட்டால், அப்படி எத்தனை பேர்கள் போயிருக்கிறார்களோ அத்தனை ஆட்களைப் போட வேண்டுமென்று தொழிற் சங்கத் தலைவர்கள் கேட்டால் அதற்கு எந்த விதமான பதிலும் கொடுப்பதில்லை. ''எங்களுக்கு வேண்டிய நாளில் எடுத்துக் கொள்கிறோம். இன்றைக்கு அவசியமில்லை'' என்று சொல்லுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு குறைந்தது $1\frac{1}{4}$ ஆட்கள் வேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறோம். வேண்டும்போது வைத்துக் கொள்கிறோம் என்று கூறுவதைப் பார்க்கும்போது, அவர்கள் வேண்டுமென்றே செய்கிறார்கள் என்று தோன்றுகிறது. இதைப் பரிசீலனை செய்து ஏக்கருக்கு $1\frac{1}{4}$ ஆள் வீதம் நிச்சயமாக வைத்துக் கொள்ளவேண்டும், ஒரு தொழிலாளி ரிடையரானதும் அந்த இடத்தில் ஆள் பூர்த்தி செய்யவேண்டுமென்று உத்திரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சர்விஸ் நிலைமையைப் பற்றிச் சொல்லவேண்டும். ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நிற்பதாயிருந்தால் அந்தத் தொழிலாளி எந்தத் தேதியிலிருந்து ஒரு தோட்டத்தில் வேலை செய்தாரோ அந்தத் தேதியிலிருந்து தான் சர்விஸ் கணக்கிடப்படவேண்டும். ஆனால், முதலாளிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், " சென்ற ஆண்டு தான்

[Sri J. Matha Gowder] [14th March 1959

தோட்டம் வாங்கியிருந்தேன், நான் வாங்கியிருந்த தேதியிலிருந்து
தான் சர்விஸ் கணக்குப் பண்ண முடியுமே தவிர, நீ எப்போதோ
வேலை செய்தால் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை" என்று சொல்லி
விடுகிறார்கள். இது சம்பந்தமாக கேஸை லேபர் கோர்ட்டுக்கு எடுத்துப்
போயிருந்தோம். தட்டப்பாரை தோட்டத் தொழிலாளிகள் சார்பாக கேஸ்
போட்டிருந்தோம். அதில் எங்களுக்குச் சாதகமாக உத்திரவு வந்திருக்
கிறது. ஒரு தோட்டம் எத்தனை கை மாறியிருந்தாலும் தொழிலாளி
எந்தத் தேதியில் அதில் வேலைக்கு அமர்ந்தானோ அந்தத் தேதியிலிருந்து
அவனுடைய சர்விஸ் கணக்குப் பண்ணவேண்டும், பணம் கொடுக்க
வேண்டும் என்று திட்டவட்டமாக லேபர் கோர்ட் உத்தரவு அளித்திருக்
கிறது. இந்தத் தீர்ப்பை மற்ற தோட்டச் சொந்தக்காரர்களும் அமுல்
படுத்தவேண்டும் என்று தொழிற்சங்கத்தார் கேட்டபோது, பக்கத்துத்
தோட்டத்தின் முதலாளி, "அந்தத் தீர்ப்பு எங்களைக் கட்டுப்படுத்தாது;
இந்தத் தோட்டம் சம்பந்தமாக கோர்ட் தீர்ப்புக் கொடுக்கவில்லை; கோர்ட்
தீர்ப்பு வந்தால் தருகிறோம்" என்று சொல்கிறார். இது என்ன நியாயம்
என்று தெரியவில்லை. ஒவ்வொரு தோட்டம் சம்பந்தமாகவும், தொழில்
கோர்ட்டுக்குப் போய்த் தீர்ப்பு வாங்கிவரவேண்டுமென்றால், எந்தத் தொழிற்
சங்கத்தால் முடியும் என்பதைச் சற்று யோசிக்கவேண்டும். ஒரு கேசுக்கு
தீர்ப்பு சொல்லியிருக்கும்போது, அதையேதானே இதுபோன்ற மற்ற கேஸ்
களுக்கும் பொருந்தும்படியாகச் செய்யவேண்டும்? ஆகவே தொழில்
கோர்ட்டில் ஒரு தோட்டத்தைப் பற்றிய தீர்ப்பு அடுத்த தோட்டத்திற்கும்
அமுல் படுத்தும்படியாக உத்திரவை தயவு செய்து பிறப்பிக்கவேண்டு
மென்று அமைச்சர் அவர்களை மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.
ஒவ்வொரு தோட்டம் சம்பந்தமாகவும் கோர்ட்டுக்கு தொழிற்சங்கம் போவ
தென்பது முடியாத காரியமாக இருக்கிறது.

தோட்டத்தில் இருக்கும் தொழிலாளிகளுடைய வீடுகளுக்கு மின்சாரம்
இல்லை. எல்லா "ஸ்டாப்"களுக்கும் மின்சாரம் இருக்கிறது. ஆனால்,
தோட்டத் தொழிலாளிகளுடைய வீட்டுக்கு மின்சாரம் இல்லை. தொழி
லாளர் என்ற காரணத்திற்காக மின்சாரம் கொடுப்பதில்லை, உத்தியோகஸ்
தர் என்ற காரணத்திற்காக மின்சாரம் கொடுப்பதென்றால்,
எப்படி நியாயம் ஆகும்? தொழிற்சாலையில் மின்சாரம் அது
கிறது, பங்களாக்களுக்கு மின்சாரம் உபயோகப்படுகிறது. ஆனால், தோட்டத்
தொழிலாளிகளுடைய வீட்டுக்கு என் மின்சாரம் கொடுக்கக்கூடாது?
கொடுக்கலாம். அதிலே கொஞ்சம் பணம் போய்விடுமே என்ற காரணத்
தால் முதலாளிகள் மறுக்கிறார்கள். கட்டாயமாக மின்சார வசதி தோட்டத்
தொழிலாளிகளுடைய வீடுகளுக்கு செய்து கொடுக்கும்படியாக முதலாளி
களை வற்புறுத்தி அரசாங்கம் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்
கின்றேன்.

அடுத்தபடியாக, தேயிலைத் தொழிலாளர்களுடைய பிரச்சனை. ஒரு
தொழிலாளியை பாக்டரியில் ஆறு மாதம் வரையில் வேலை செய்யவிடாமல்
ஐந்து மாதம் வரை பாக்டரியில் வேலைசெய்ய வைத்துவிட்டு, உடனே
காட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். "பாக்டரியில் வேலை செய்த தொழி
லாளியை என் காட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள்?" என்று கேட்டால்,
"ஒரு தொழிலாளியை எந்த இடத்திற்கும் மாற்றுவதற்கு எங்களுக்கு
அதிகாரம் இருக்கிறது" என்று முதலாளிகள் சொல்கிறார்கள். பாக்டரியில்
முதல் நம்பரில் வேலை செய்தவரை இரண்டாம் நம்பருக்கு மாற்றட்
டும், ஐந்தாம் நம்பருக்கு வேண்டுமானால் மாற்றட்டும். ஆனால், பாக்டரி
யில் வேலை செய்த தொழிலாளரை என் காட்டுக்கு மாற்றுகிறார்கள்
என்றால், பாக்டரி ஆக்டிலிருந்து தப்பிப்பதற்கு அப்படிச் செய்கிறார்கள்.
பாக்டரி ஆக்டின்கீழ் கண்டிருக்கும் சலுகைகளைத் தொழி
லாளிகளுக்குக் கொடுக்கக் கூடாது என்ற கெட்ட எண்ணத்தோடு மாற்று
கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஒரு பாக்டரிக்கு எத்தனை ஆள்
வேண்டும் என்று லேபர் இன்ஸ்பெக்டர், பாக்டரி இன்ஸ்பெக்டர் நிர்ண
யித்து, எத்தனை வேலைக்காரர்கள் இருக்கிறார்கள் என்று பார்க்கிறார்கள்.
அதனால்தான், முதலாளிகள் பாக்டரியில் தொழிலாளிகளை நிரந்தரமாக
வைப்பதில்லை. ஐந்து மாதங்களுக்குமேல் வைப்பதில்லை. ஆறாவது
மாதம் காட்டுக்கு அனுப்பிவிட்டு, மறுபடியும் அந்த ஆளையே திரும்பவும்



14th March 1959] [Sri J. Matha Gowder]

பாக்டரியில் சேர்த்துக்கொள்கிறார்கள், பாக்டரியிலே வேலை செய்யக்கூடிய வர்களை காட்டுக்கும் காட்டிலே வேலை செய்யக்கூடியவர்ர் பாக்டரிக்குமாக மாற்றி சட்டத்தில் கண்டுள்ள சலுகைகளைத் தொழிலாளர்களுக்குத் தராமல் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தேயிலை பாக்டரியில் இன்றைக்கு 30, 40 பேர்கள் வேலை செய்தால், அவர்களில் மூன்று நான்கு பேர் களுக்கு மேல் நிரந்தரமானவர்கள் இருக்காது. ஆகவே, இதைத் தயவு செய்து கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

லேபர் கெஜட் போடுவதாக இந்தக் குறிப்பில் காணப்படுகிறது. அது பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். அது நல்ல விதமாக தொழிலாளர் களுக்குக் கிடைக்க வேண்டும். தொழிற்சங்கங்களுக்கும் கிடைப்பதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் ப்ளாண்டேஷனுக்கு தயவு செய்து விஸ்தரிக்கப்படவேண்டும். ஏதோ டாக்டர்கள் குறைவு இருப் பதன் காரணமாக இன்னும் விஸ்தரிக்க முடியாத நிலையில் இருப்ப தாகத் தெரியவருகிறது. இருந்தாலுங்கூட சர்க்கார் ஆஸ்பத்திரியில் இருக்கும் டாக்டர்களை வேலை செய்யச்சொல்லியாவது எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீமை தயவு செய்து ப்ளாண்டேஷன் ஏரியாவுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொண்டு இந்த மான்யத்தை வரவேற்று என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

*Sri V. K. KOTHANDARAMAN: சார், தொழிலாளிகளுக்குப் போதுமான பாதுகாப்புச் சட்டம் இல்லை என்று நான் வருத்தத்துடன் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் பார்க்கின்றோம்—முதலாளிகள் நினைத்தால் தொழிற்சாலையை மூடலாம், நினைத்தால் தொழிலாளிகளை வீட்டுக்கு அனுப்பலாம், எப்படி வேண்டு மானாலும் பழி வாங்கக் கூடிய அளவு நிலைமை இருக்கிறது. இநத நேரத்தில் தொழில் கோர்ட்டுகள் இருந்த போதிலும் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களைப்பற்றி தொழில் கோர்ட்டிலே விசாரணை செய்யப்பட்டு குறிப்பிட்ட தொழிலாளிகளை வேலையிலிருந்து நீக்கியது தவறு, ஆகவே, உடனே வேலைக்கு எடுக்கவேண்டும் என்று தொழில் கோர்ட் தீர்ப்பு கொடுத்தபோதிலும் முதலாளிகள் எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக ஹைக்கோர்ட்டுக்கு ரிட் போடுவதோ, மேல் கோர்ட்டுக்குப் போவதோ ஏற்படக் கூடிய நிலைமை இருப்பதன் காரணமாக வருஷக்கணக்காக வேலையில்லா மல் தொழிலாளிகள் பாதிக்கக் கூடிய நிலைமை இருந்து வருகிறது என்பது நான் சொல்லாமலே அமைச்சருக்குத் தெரிந்த விஷயம். ஆகவே, குறைந்த பட்சம் 6 மாதத்திற்குள்ளாக எந்தக் கேசாக இருந்த போதிலும் முடிய வேண்டும், 6 மாதத்திற்குள்ளாக அந்தக் குறிப்பிட்ட தொழிலாளிக்குக் குறைந்தபட்சம் மாதம் 15 தினங்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலமாகத்தான் வேண்டுமென்றே பழிவாங்கும் ஒரு நிலைமை இருக்கிறதே அந்த நிலைமையை நாம் மாற்றி யமைக்க முடியும். உதாரணமாக, குடியாத்தம் ஈஸ்வரன் மாட்ச் பாக்டரி யிலுள்ள சில தொழிலாளிகள் பழிவாங்கப்பட்டார்கள். அந்தத் தொழி லாளிகளைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்ப்பு வந்துகூட, இன்றையதினம் ஹைக்கோர்டில் முதலாளிகள் ரிட் போட்டிருக்கும் காரணத்தால் அந்தத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படக் கூடிய நிலைமை இருந்துகொண்டு வருகிறது.

அதே போன்றுதான், இன்று டானரியை எடுத்துக் கொண்டால், திடீரென்று மூடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நூற்றுக்கு நூறு ஹரிஜன தொழிலாளிகள்—அவர்களுக்கு வீடே கிடையாது. நிரந்தரமாக கூலி வசதியோ பாதுகாப்புச் சட்டமோ கிடையாது. கனம் அமைச்சர் அவர்கள் கூட ராணிப்பேட்டைக்கு வந்திருந்த நேரத்தில் "இது விசேஷத் தன்மை வாய்ந்தது, இதற்கு பாதுகாப்புச் சட்டங்கள் கொண்டு வர வேண்டும்" என்று மனமுருகிப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, டானரி தொழிலாளர்கள் விஷயமாக அத்தியாவசியமாக உடனடியாக பாதுகாப்புச்

[Sri V. K. Kothandaraman] [14th March 1959

ட்டங்களும் குறைந்தபட்ச கூலிச் சட்டமும் கொண்டுவரவேண்டும். அது மாத்திரமல்ல. டானரி அசோஸியேஷன் மூலமாக திட்டமிட்டு பழிவாங்குவதற்குப் பல சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள். இதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் அந்தத் தொழிலாளிகளுக்குப் போதுமான பாதுகாப்புச் சட்டங்கள் நாம் அவசியம் கொண்டுவந்தாக வேண்டும். அதுபோன்று இன்றைய தினம் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. அது இன்றைய தினம் விலைவாசி உயர்வுக்கு வேண்டிதான் கொடுக்கவேண்டும் என்பது ஒரு விதி. சுப்ரீம் கோர்ட்டிலே கூட அவர்களுக்கு முழு பஞ்சப்படி கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே திருமகள் மில் தொழிலாளிகளுக்கு முழு பஞ்சப்படி கொடுக்கவேண்டும் என்று லேபர் கோர்ட்டு தீர்ப்பு இருந்துகூட ஹைகோர்ட்டிலே ரிட் போட்டு வருஷக் கணக்கில் நீடிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு முழுப் பஞ்சப்படி கொடுக்கவேண்டும். எந்தத் தொழிலில் முழுப் பஞ்சப்படி கொடுக்கவில்லையோ அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கான சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நைனிடாலில் கூடிய 16-வது அகில இந்திய தொழிலாளர் மகாநாட்டிலே எடுக்கப்பட்ட, தொழிற்சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்படவேண்டும் என்பது போன்ற பலதரப்பட்ட தீர்மானங்களை, முதலாளிகள் பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து ஏகோபித்து எடுத்திருக்கக் கூடிய மெஜாரிடி முடிவுகளை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவதற்கு சட்டத்தை உருவாக்கவேண்டும்.

அதுபோன்று ஏ. ஐ. டி. யு. சி. பிரதிநிதித்துவம் வாய்ந்தது, 15 லட்சம் அங்கத்தினர்களைக் கொண்டது. அப்பேர்ப்பட்ட ஒரு ஸ்தாபனத்திற்கு சென்னை ராஜ்ய லேபர் ஆலோசனைக் கமிட்டியிலோ வீடு கட்டும் திட்டக் கமிட்டியிலோ லேபர் போர்டிலோ ஐ. எல். ஓ. போன்ற ஸ்தாபனங்களிலோ நியாயமான போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்காதது வருந்தக் கூடிய விஷயம். ஆகவே, நியாயமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீமின் கீழே ஆஸ்பத்திரி வசதி தொழிலாளர்களுக்கு மட்டும் தான் இருக்கிறது. ஆனால், பஞ்சாப் ராஜ்யம், ஆந்திர ராஜ்யம்,
10 a.m. மைசூர் ராஜ்யம் போன்ற ராஜ்யங்களிலே இன்றைய தினம் தொழிலாளிகளுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய குடும்பங்களுக்கும் இலவசமாக வைத்திய வசதி கொடுக்கப்படுகிறது. அதுபோன்று நம்முடைய ராஜ்யத்திலே கொடுக்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ராஜ்யத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. தொழில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சொல்லக் கூடிய நேரத்தில் அநேகம் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. ஒரு பக்கத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள்; மறு பக்கத்தில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் தொழிற்சாலைகளின் மூடு விழாக்கள் நடந்து அநேகம் பேர்களுக்கு வேலை போய் விட்டன. இதனால் அநேகம் பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு வேண்டிய முயற்சிகளைக் கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதே போன்று பலதரப்பட்ட தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைகளில் குறைந்த பட்ச கூலி கொடுக்கப்படாமல் இருப்பதாலும், ஜின்னிங் பாக்டரி போன்ற இடங்களில் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்படாமல் இருப்பதாலும் இன்னும் மற்ற தொழிற்சாலைகளில் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்படாமல் இருப்பதாலும் அதிகப்படியான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். தொழிலாளர்களும் என். ஜி. ஓ.க்களும் சம்பள உயர்வு கேட்டால் நமது அமைச்சர்கள் எடுத்துக்காட்ட முன்வருவது என்னவென்றால் நாட்டில் இருக்கக் கூடிய 100 க்கு 80 பேர்கள் விவசாயிகள். அவர்களுக்கு மாதம் 15 ரூபாய் கூட வருமானம் இல்லாமல்



14th March 1959] [Sri V. K. Kothandaraman]

இருக்கிறார்கள். கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். விவசாயிகளுக்கு கூலி நிர்ணயம் செய்வதோடு அவர்கள் ஒரு நாளைக்கு இவ்வளவு மணி நேரம் தான் வேலை செய்ய வேண்டும் என்றும் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தையும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவுப் பொருள்களின் விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. அதே மாதிரி உணவுப் பொருள்களின் விலைவாசியையும் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதலாளிகள், ஸ்டான்டிங் ஆர்டர்களைப் போட்டு விட்டு தொழிலாளர்களைப் பழி வாங்கக் கூடிய அளவில் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஸ்டான்டிங் ஆர்டர்கள் தொழிலாளர்களை பாதிக்காமல் இருக்கக்கூடிய தன்மையில் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்றுகேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு பல தொழிற்சாலைகளில் லேபர் ஆபீசர்களைப் போட்டாலும் அவர்கள் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக இல்லை. ஆனால் அவர்கள் முதலாளிகளுக்கு பாதுகாப்பாகத்தான் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அந்த ஆபீசர்களுக்கு முதலாளிகள் சம்பளம் கொடுப்பதன் காரணமாக அவர்கள் முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறார்களே தவிர தொழிலாளர்களுக்கு சாதகமாகவே இல்லை. முதலாளிகளுடைய சொல்லைக் கேட்கவில்லையானால் அவருடைய சீட்டுக்கிழிந்து விடும் என்ற தன்மையில் இருப்பதால் அவர்கள் முதலாளிகள் சொன்ன சொல்லுக்கு அப்பால் போவது இல்லை. அதன் காரணமாக தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். குடியாத்தம் திருமகள் மில்லில் இருக்கக்கூடிய லேபர் வெல்பேர் ஆபீசர் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருந்த காரணத்தால் அவருக்கு மூன்று மாத நோட்டீஸ் கொடுத்து வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டு முதலாளிகளுக்கு தலைப்பட்டியாக இருக்கும் ஒருவரை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு முதலாளிகள் சம்பளம் கொடுப்பதாக இருப்பதால்தான். ஆகவே சர்க்கார் இதில் கவனம் செலுத்த வேண்டும். ஒன்று அவர்களுக்கு சர்க்கார் சம்பளம் கொடுக்கவேண்டும். இல்லா விட்டால் அவர்களுக்கு முதலாளிகள் சம்பளம் கொடுத்தாலும் அவர்கள் இன்றைக்கு சர்க்கார் சொல்வது போல் நடக்க வேண்டும். அந்த அடிப்படையில் லேபர் அபீசர்கள் இருக்க வேண்டும்.

அனுபவம் இல்லாதவர்கள் லேபர் டிபார்ட்மெண்டில் நியமிக்கப்படுவதால் இன்றைக்கு பலதரப்பட்ட தகராறுகள் ஏற்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே கண்டிப்பாக அனுபவம் உள்ளவர்களைத் தான் அங்கே நியமிக்க வேண்டும். குறிப்பாக என் இதைச் சொல்லுகிறேன் என்றால், இப்பொழுது லேபர் கமிஷனர் மாற்றப்பட்டிருக்கிறார். அவர் இடத்தில் யாரோ ஒரு ஐ. ஏ. எஸ்.ஐயோ அல்லது ஒரு கலெக்டரையோ போடப் போவதாக வதந்தி இருக்கிறது. அது எந்த அளவில் உண்மை என்பது எனக்குத் தெரியாது. ஆகவே அந்த ஸ்தானத்திற்கு ஒரு அனுபவம் உள்ளவரைத் தான் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்வித ஏற்பாடு செய்தால்தான் தொழிலாளர்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் ஷாப் ஆக்ட். ஒரு தொழிலாளர் இருந்தாலும் அதற்கு மேல் இருந்தாலும் அந்த தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இருந்தது. அதைத் திருத்தி அமைத்து மூன்று பேர்களும் அதற்கு மேற்பட்டும் இருந்தால்தான் அதற்கு ஷாப் ஆக்ட் அன்வகிக்கும் என்று சொன்னதின் பேரில் ஐந்தாறு பேர்கள் இருந்தால் தான் அந்தச் சட்டம் அவர்களைப் பாதிக்கும். என்று கொண்டு வந்திருப்பதால் மூன்று பேர்களை மட்டும் தொழிலாளர்கள் என்று காண்பித்துவிட்டு பாக்கிப் பேர்கள் எல்லோரும் தன்னுடைய மச்சான் என்றும் மாமன் என்றும், தன்னுடைய சொந்தக்காரர்கள் என்றும் சொல்லி இந்த மூன்று பேர்களும் பழி வாங்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இப்

[Sri V. K. Kothandaraman] [14th March 1959

பொழுது ஏற்பட்டிருக்கிறது. இதற்காக 1953-ம் ஆண்டு நமது கனம் அமைச்சர் கூட ஒரு மாபெரும் மாநாடு கூட்டி நடத்தி இருக்கிறார். ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தாலும் அவர்களுக்கும் இந்தச் சட்டம் இருந்தாகவேண்டும் என்று சொல்லி இருக்கிறார். ஆகவே அந்த அளவில் இந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

லேபர் ஆபீசரை நியமிக்கும்போது குறைந்த பட்சம் ஜில்லாவுக்கு ஒரு ஆபீசரை நியமிக்க வேண்டும். இப்பொழுது இரண்டு மூன்று ஜில்லாக் களுக்கு ஒரு ஆபீசர் இருக்கிறார். இப்படி இருப்பதால் தொழிலாளர்கள் கூப்பிட்டவுடனேயே அவர்களால் வர முடியவில்லை. ஏனென்றால் அவர் களுக்கு கார் வசதி கிடையாது. முதலாளிகள் கார் வசதி செய்து கொடுப்ப தால் முதலாளிகள் கூப்பிட்டவுடனேயே அவர்கள் வந்து விடுகிறார்கள். உடனடியாக வருவதற்கு எந்த விதமான வசதியும் அவர்களுக்குக் கிடை யாது. ஆகவே ஜில்லாவுக்கு ஒரு ஆபீசர் இருந்தால் அவர்களால் உடனடி யாக வர முடியும். அத்துடன் அவர்களுக்குப் போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு என்று அவர்களுக்கு கார் வசதி செய்து கொடுக்க வேண்டும். லேபர் ஆபீசர்களுக்கு இப்பொழுது போதிய அதிகாரம் இல்லை. லேபர் ஆபீசர் முதலாளிகளிடம் ஏதாவது சொன்னால் முதலாளிகள் அதைக் கேட்பது இல்லை. எங்களுக்கு கமிஷனர் இருக்கிறார், மந்திரிகள் இருக்கிறார் அவர்களிடம் போய்க் கொள்ளுகிறோம் என்று சொல்லி விடுகிறார்கள். அதனால் லேபர் ஆபீசர்களுக்கு வேண்டிய அதி காரத்தைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். முத லாளிகள் அவர்களை லட்சியம் செய்யக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தொழிற்கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்றால் அவர்களுக்கு இலவசமாக வக்கீல்களை வைத்துக்கொடுக்க வேண்டும். தொழி லாளர்கள் திடீர் திடீர் என்று கோர்ட்டுகளுக்கு போக வேண்டியதாக இருக்கிறது. ஏதாவது தகராறுகள் வந்தால் தொழிலாளர்களைக் கோர்ட்டுக்கு போ என்று சொல்லும்போது அவர்களுக்கு இலவசமாக வக்கீல்களை அமர்த்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென் றால் அடிக்கடி தொழிலாளர்களுக்கு கோர்ட்டுக்குப் போக பண வசதி கிடையாது. அந்த முறையில் அவர்களுக்கு இலவசமாக வக்கீல்களை அமர்த் திக்கொடுக்க ஏற்பாடு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அத்து டன் இப்படி கோர்ட்டுகளுக்குப் போகக் கூடிய கேஸ்கள் எல்லாம் ஆறு மாதங்களுக்குள் முடிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் கேஸ்கள் நடக்கும் காலத்தில் குறைந்த பட்சம் மாதத்தில் 15 நாட்களுக்காவது தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாட்டையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த முறையில் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது போன்று வட ஆற்காடு ஜில்லாவுக்கு தனியாக ஒரு லேபர் ஆபீசரை நியமிக்க வேண்டும். இது நீண்ட காலமாக கேட்டு வரப்படுகிறது. அந்த அடிப்படையில் லேபர் ஆபீசர் அமைக்கப்படவேண்டும்.

இன்றைக்கு லேபர் கோர்ட்டுகள், இண்டஸ்ட்ரியல் ட்ரிபுனல் கோர்ட்டு களுக்கு சில ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமித்திருக்கிறார்கள். அனுபவம் இல்லாதவர்களை நியமித்திருப்பதால் பல கம்ப்ளெயிண்ட்கள் வந்திருக்கின் றன. அவைகள் கனம் அமைச்சர் இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்டவர்களை நியமிப்பதால் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படு கிறது, அதுவும் பெரிய அளவில் ஏற்படுகிறது. ரிடயரான நீதிபதிகளைப் போடுவதன் காரணமாக பெரிய அளவுக்கு தகராறுகள் இருக்கின்றன. அவர்கள் முதலாளிகளுக்குச் சாதகமாகப் போகக்கூடிய நிலைமை ஏற்படு கிறது. நீதிபதிகள் தவறுகள் செய்கிறார்கள் என்றால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் இதில் உட னடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



14th March 1959] [Sri V. K. Kothandaraman]

சில சமயங்களில் தொழிலாளர்களுக்கு சாதகமாக இருந்த போதிலும் கூட தொழிலாளர்கள் நியாயமான முறையில், அமைதியான முறையில் போராடக் கூடிய நேரத்தில் போலீஸ் குறுக்கிட்டு முதலாளிகளுக்கு சாதக மாக அமைதியை நிலை நாட்டுகிறோம் என்ற பெயரால் அங்கே வருகிறார்கள். அப்படி வந்து போராடக்கூடாது என்றும், எழுந்து வீட்டுக்குப்போங்கள் என்றும் சொல்லுகிறார்கள். போலீஸ்காரர்கள் தொழிலாளர்களுடைய சலுகைகளை பறிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். போலீஸ்காரர்களுக்கு உதவியாக சில அடக்குமுறைச் சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்கள் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் இருக்கக்கூடிய அளவில் திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படித் திருத்து வதன் மூலம் தொழிலாளர்களுக்கு ஏதாவது சலுகைகள் காட்ட முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது பீடி சட்டம், ஹோட்டல் சட்டம், மெடர்னிடி பெனிபிட் சட்டம் இது போன்ற பல சட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். அவைகளை நிறைவேற்றியிருந்த போதிலும் அவைகள் அமுலுக்குக் கொண்டுவர முடியாத நிலைமையில் இருக்கிற காரணத்தால் தொழிலா ளர்கள் மீது பழி வாங்கக் கூடிய நிலைமையில் பல போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக வட ஆற்காட்டு கலெக்டர் இரண்டணா உயர்வான கூலி கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆயிரம் பீடி சுற்றுகிறவர்களுக்கு அதிகமாக இரண்டணா கொடுக்க வேண்டும் என்று சொல்லியும் கரீம் பீடி முதலாளி இன்னும் கொடுக்கவில்லை. ஒரு இடைக்கால ஒப்பந்தம் செய்துகொண்டும் கொடுக்கவில்லை. அதற்கு ஒப்பாக சென்னையிலுள்ள கரீம் பீடி முதலாளி அப்படிக் கொடுப்பதற்குப் பதிலாக பழி வாங்கி வருகிறார். வேலூர் ப்ராஞ்சு முதலாளி இந்த இரண்டணா கொடுக்க மறுத்ததால் பாக்டரிக்குள்ளேயே உட்கார்ந்துகொண்டு போராடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதனால் தயவு செய்து உடனடியாக இந்தச் சட்டங்களையெல்லாம் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய அளவில் எல்லா சட்டங்களையும் மாற்றி அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதே போன்று தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை துரிதமாக இன்றைய தினம் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். சில முதலாளிகள் இடம் வாங்கிக்கொடுங்கள் வீடுகள் கட்டிக்கொடுக்கிறோம் என்று சொல்லி காலம் கடத்துகிறார்கள். அதனால் கண்டிப்பாக இத்தனை பர்செண்ட் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று சட்டம் செய்ய வேண்டும். அப்படிச் சட்டம் போடுவதன் மூலமாகத் தான் அவர்கள் வீடுகள் கட்ட முன் வருவார்கள். இப்பொழுதுள்ள நிலையில் அவர்கள் வீடுகள் கட்டிக்கொடுக்கக் கூடிய நிலையில் இல்லை. ஆகவே தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவில் போது மான சட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கி றேன். வணக்கம்.

* Sri T. T. Daniel: Mr. Speaker, Sir, I support this Demand. We are really glad to hear from the Hon. Minister for Labour that the target under the Second Five-Year Plan is to provide employment for 2·6 lakhs persons and that the Government are quite confident to realize this target. Keeping this in view under the Second Five-Year Plan, a sum of Rs. 8·2 crores of rupees have been allotted for industrial schemes excluding the money allotted for the khadi schemes. For the Village Industries, a sum of nearly Rs. 2·1 crores have been allotted and in the current Budget nearly Rs. 47 lakhs have been set apart for this purpose.

The Government are also paying attention for the construction of Housing schemes for weavers and also for labourers in the small-scale industries. A sum of nearly one crore of rupees has been

allotted. I would submit that so far as our State is concerned, we can say with pride that this State stands for labour and Madras is a pioneer State in enunciating a number of progressive labour laws. I would like to remind hon. Members of this House that the National Festival Holidays Act and the Beedi Workers' Act which have been passed recently, and these sets are standing monuments in our Statute Book.

Recently, the Government have fixed minimum wages for the rice mill workers, flour mill workers and saw mill workers. I request the Government that they should soon fix minimum wages for salt workers, palmyrah fibre and also coir workers in our State. So far as salt workers in this State are concerned, they are not getting even 12 annas per day, although they work in the pans for eight hours in the hot sun. It is said that a salt worker if he works for a longer number of years inevitably his eye-sight is even affected. Therefore, the Government should take a sympathetic attitude towards these workers and should soon not only fix minimum wages for them but should also evolve a scheme which would provide them with some funds when they attain a particular age and cannot work in the salt pans. So far as the palmyrah fibre workers are concerned, the Hon. Minister has seen how these workers are working in some of the companies. This palmyrah-fibre industry is partly worked on a factory basis and partly worked as a cottage industry. So, I would request the Hon. Minister to consider the pitiable condition of these workers and bring forward a piece of legislation on the lines of the Beedi Workers Act so that all the palmyrah fibre work may be done within the factory itself. There is now competition between the workers engaged in the industry run as the cottage industry and the workers engaged in the factory and the management exploits this situation and is not giving even the minimum wages to the workers working under them. In particular, I would like to draw the attention of the Hon. Minister to two companies that are working in the Kanyakumari district, viz., Aspirinval Company and the Ramalingham Company, where the workers are not given minimum wages although they work for 8 hours a day.

Coming to the road workers, no minimum wage is fixed for them also. There are about 600 road workers in that district and no minimum wage is fixed for them. So, I would request the Government to go into the matter and prescribe minimum wages for these road workers also.

Sir, I must also say that the bulk of the labour population in our State are the agricultural labourers. The time has now come when we should seriously think about ameliorating the conditions of these agricultural labourers. We should also consider how the minimum wages should be fixed and also whether it is not possible to bring forward a piece of legislation very soon so that there may be security of service for these agricultural labourers and there may be also minimum wage for them.





The Government should also evolve a scheme for compulsory saving scheme for all classes of labourers, in whatever sphere they may be working and there should be free education for their children and also free medical aid.

Recently, the Trade Unionists have been very much perturbed by the decisions of the High Court and the Supreme Court. In the Buckingham and Carnatic Mill case, the Madras High Court has decided that the Tribunal has got the power to interfere with the order of the management only if there is victimisation of labour. This position has been reiterated in the decision given in respect of the Tamil Nad Working Journalists' case. The Madras High Court has also decided that the Tribunal has no power to interfere with the order of the management terminating the service of a labourer. They have further stated that the management has also got the power to terminate the service of a labourer by giving one month's notice and also appoint in his place a more competent person. In the Indian Iron case, the Supreme Court has decided that the Tribunal has got the power to interfere with the order of the management only if certain conditions exist, viz., if the order is in violation of a natural justice, if the order is an order made by the management out of bad motive and if the order is an order made for victimising labour or if the order is baseless.

(Srimathi Rajathi Kunchithapatham in the Chair.)

Only if these conditions exist, the Tribunal has got the power to interfere with the order of the management. These decisions have been taken advantage of recently by the management and we hear that the management is attempting to terminate the services of the labourers whenever they find it necessary and convenient for them. In this connection, I must also draw the attention of the Hon. Minister that as matters now stand, an individual labourer cannot take his case before the Labour Tribunal. Only if there is a substantial support from the other labourers of the Union, the individual labourer can take up his case before the Tribunal. What actually happens is that the management, after the case is taken cognisance of by the Tribunal, begins to victimise the members of the trade union and ask them to withdraw their support for the individual labourer and then they raise a preliminary objection before the Tribunal saying that it is not an industrial dispute and on that ground alone, the case has to be thrown out. Recently, the case against the Secretary of the Dunlop Co., met with such a fate. I, therefore, suggest to the Hon. Minister that we should try to make certain amendments to the Industrial Disputes Act itself wherein certain circumstances should be stated under which alone the managements should be given power to terminate the services of the labourer. Also, Sir, we have made provisions in the Shop Assistants Act and also in the Beedi Workers' Act wherein section 41, if I remember correct, lays down clearly that an individual labourer also can take his case before the Tribunal. There should be such a provision in the Industrial Disputes Act also and these changes also should

[Sri T. T. Daniel] [14th March 1959

be made in the standing orders under the Industrial Disputes Act. If that is done, there will be security of service for the labourers in the State. Sir, this is a matter which should be seriously considered by our Government and I think, Sir, that if our State Government has got the power to make such amendments to the Industrial Disputes Act, if it is in the concurrent list, we should quickly bring these amendments for the purpose in the next session itself. If, however, the Government thinks that these amendments could not be made by our State and they have no right to bring them, they should urge upon the Central Government to bring forward these amendments to the Industrial Disputes Act and also make corresponding amendments in the standing orders to the Industrial Disputes Act. I believe that our Government will take note of this situation and will quickly move in the matter.

* SRI V. SUBBIAH : தற்காலிகத் தலைவி அவர்களே, இந்த 24-வது டிமாண்ட், தொழில் பாக்டரிக்கு 30,29,700 ரூபாய் ஒதுக்கி இருக்கக்கூடிய இந்தத் தொழில் மான்யத்தின் மீது மதிப்புக்குரிய கனம் பக்கிரிசாமி அவர்களுடைய வெட்டுப்பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். கூலிகள், விவசாயக் கூலிகள் ஆகியவர்களைப் பற்றி ஒருசில குறிப்புகளைக் கூற விரும்புகிறேன்.

இன்றைய தொழில் இலாகாவை நிர்வகிக்கக்கூடிய கனம் அமைச்சர் அவர்கள் பல ஆண்டுகளாகத் தொழிற்சங்கங்களில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக நம்முடைய ராஜ்யத்தில் தொழிலாளர் பிரச்னையை அறிந்து செயல்பட்டு வருபவர்கள். இன்றையதினம் அவர் ஆட்சிபீடத்தில் இருப்பினும்கூட தொழிலாளர்களின் கஷ்டங்களை அவர்கள் தெரிந்திருக்க முடியும். எங்கள் பகுதியில்—நம்முடைய ராஜ்ய சரித்திரத்திலேயே தமிழர்களுடைய மூலதனத்தால் ஒரு தமிழனால் 82 வருஷங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட "வாயில் டெக்ஸ்டைல் மில்" கோயில்பட்டியில் இருக்கிறது. அது பெரும் அளவில் மூலதனம் போட்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு தொழிற்சாலையாகும். ஆனால், நாளதுவரை அங்கு வேலை செய்யக்கூடிய கூலிகளுக்கு ஏதாவது வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் அவ்வாறு எந்த வித வசதியும் செய்துகொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த மில்லில் மூன்று, நான்கு வருஷங்களுக்கு மேல் வேலை பார்த்து வந்த கூலிகளைக்கூட பர்மனெண்ட் செய்யவில்லை. தினசரிக் கூலிகளாக வேலை செய்யக்கூடிய அளவில்தான் இருக்கிறார்கள். இன்னும் பழைய "மெஷினரியாகத்" தான் ஓடிக்கொண்டிருக்கிறது. சுகாதார வசதியோ மற்ற இன்ஷூரன்ஸ் வசதிகளோ அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த முறையில் இன்று மில்கள் இருந்துகொண்டிருக்கின்றன.

இன்று நாட்டிலே பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அதன் காரணமாக சிலபல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. முதலாளிகள் தங்களுக்குச் சாதகமாக இருக்கக்கூடிய தொழிற்சங்கத்திற்குச் சலுகைகள் கொடுத்து மற்றத் தொழிற்சங்கங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஒரு பகைமை ஏற்படும்படியான சூழ்நிலையை ஏற்படுத்திவிடுகிறார்கள். பகைமை உண்டாக்கப்படுவதால் மேலும் போட்டிச் சங்கங்கள் ஏற்படும் நிலைமை உருவாகிறது. நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய எல்லாச் சங்கங்களும் ஒன்றாக இணைந்து கூலிகளுக்காகப் பாடுபடக்கூடிய நிலைமை ஏற்படுமானால் எதிர்காலத்தில் தொழிலாளர்களுக்கு நல்ல பலன் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். அதற்கான வேலையை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றையதினம் இந்த நாட்டிலுள்ள விவசாயக்கூலிகளுக்கு வேலை நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய மில் தொழிலாளர்களுக்கு 8 மணி நேரம் என்று வேலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் குறைந்தது 4 ரூபாய்வரை கிடைக்கிறது. அவர்களுக்கு,



14th March 1959] [Sri V. Subbiah]

சுகாதார வசதி, வைத்திய வசதி, இன்ஷூரன்ஸ் வசதி, இன்னும் மற்ற எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. அவர்கள் இயந்திரங்களின் உதவியால் வேலை செய்கிறார்கள். ஆனால், விவசாயிகள் அப்படியல்ல. அவர்களுக்கு நேரம் காலம் கிடையாது. அவர்கள் கடுமையாக வெயிலில் திரேக உழைப்பால் (Man power) வேலை செய்கிறார்கள். அவர்களுடைய கூலி இன்றையதினம் என்னவென்று பார்த்தால், ஒரு நாள் முழுதும் கடுமையாக வேலை செய்தால்கூட 10 அணா அல்லது 12 அணாவரைதான் கிடைக்கிறது. பல பெண்கள் கூலிகளாக வேலை செய்கிறார்கள். வயல்களில் களை எடுக்கிறார்கள். அவர்களுக்குக் கூலியாக பட்டணம் படிக்கு ஒருபடி நெல்தான் கிடைக்கிறது. விவசாயிகளுடைய பொருளாதார அமைப்பு இன்றைய தினம் மிகவும் மோசமாக இருக்கிறது. அரசாங்கம் இதைப் பற்றிப் பரிசீலித்து ஓரளவு நல்ல முறையில் வாழ்க்கைக்கு வேண்டிய அளவு கூலி நிர்ணயம் செய்து தர வேண்டியது மிகமிக அவசியம்.

இந்த நாட்டிலே விவசாயிகளுக்காக ஒரு அமைப்பு இருக்கிறதா? கிராம வாரியாக, ஜில்லா வாரியாக விவசாயிகளுக்கு கிசான் சபைகள் இருக்கிறதா? என்று கேட்டால் அவ்வாறு இருக்கமுடியாது என்றுதான் சொல்ல முடியும், எந்த நாட்டிலும் இந்த மாதிரி விவசாயிகளுக்குச் சங்கம் ஏற்பட முடியாது. அவ்வாறு விவசாயிகளுக்கு ஒரு சங்கம் ஏற்படும் என்று அரசாங்கம் எதிர்பார்த்தால் அது முடியாது என்றுதான் கூறவேண்டி இருக்கிறது. பல லக்ஷக் கணக்கான கிராமங்களில் வாழக்கூடிய மக்கள், படிப்பு இல்லாத மக்கள் அவர்களுடைய பொருளாதார நிலைமை இந்த நாட்டிலே எல்லோரையும் விட மிகக் குறைந்த அளவு இருப்பதை மாற்றியமைக்கவேண்டியது நம்முடைய கடமை. அது மட்டுமல்ல. எதிர் காலத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய தொழிற்சங்கங்களின் அடிப்படையில் தொழில் கோர்ட்டுகள், லேபர் கமிஷனர்கள், லேபர் ஆபீசர்கள் அமைக்க இருக்கிறார்கள். சங்கங்கள் அமைப்பதற்கு மட்டுந்தான் யோசனை இருந்துகொண்டிருக்கிறது.

மதிப்பிறகுரிய நண்பர் டேனியல் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி ரோடுகளில் கல் (மெடல்) உடைக்கக்கூடிய வேலையில் பெண்கள் வேலை செய்கிறார்கள். பெண்கள் ரோடுகளில், வெயிலில் கல் உடைக்கிற காட்சி பரிதாபத்திற்குரியது. உலகத்தில் வேறு எங்கும் பார்க்கமுடியாத காட்சி. பெண்கள் தங்கள் குழந்தைகளை மரத்தடியில் போட்டுவிட்டு ரோடுகளில், வெயிலில் உட்கார்ந்து கொண்டு கல்லுடைக்கும் பரிதாபக் காட்சியை நாம் பார்க்கிறோம். அவர்களுக்கு வசதியளிக்கும்பொருட்டு என். இந்தச் சட்டத்தில் இடம் கொடுக்கக்கூடாது? என் அவர்களுக்கு ஹைவேஸ் காண்ட்ராக்டர்கள் நிழல் தரக்கூடிய ஷெட்டுகள் கட்டித்தரக்கூடாது? "அவர்கள் நாடோடிகள், சென்று கொண்டே இருப்பார்கள்" என்று நீங்கள் சொல்லலாம். அவர்களுக்குக் கட்டாயம் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யவேண்டும். எதிர்காலத்திலாவது இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்ஷூரன்ஸ் திட்டம் சிறிய தொழில்களில் உள்ளவர்களுக்குக்கூட அவசியமென்று நினைக்கிறேன். அப்பொழுதுதான் அவர்கள் சேமிக்கமுடியும்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் ரோடு வேலை செய்யக்கூடியவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யவில்லை என்று சொன்னார்கள். செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

* SRI V. SUBBIAH : மிகவும் சந்தோஷம். பல பாக்டரியில் முதலாளிகள் என்னென்ன செய்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். "வேஜஸ் ரிஜிஸ்டரில்" தினசரிக் கூலி 2 ரூபாய் என்று எழுதிக் கையெழுத்து வாங்கிக்கொண்டு 10 அணா அல்லது 12 அணாதான் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருப்பதைத்தடுக்க உத்தரவிடவேண்டும். மாச் பாக்டரி எங்கள் பகுதியில் ஜாஸ்தியாக இருக்கிறது. காட்டன் பாக்டரி, ஜின்னிங் பாக்டரிகள் இப்படி அதிகம். அங்கே தினமும் காலை 6 மணி முதல் மாலை ஆறு, ஏழு மணி வரையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட

பெண்குழந்தைகள்—பத்து வயதுக்கு உள்ளானவர்கள் எல்லாம் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வேலை நிர்ணயம், கால நிர்ணயம் எல்லாம் உண்டா இல்லையா என்பது தெரியவில்லை. அவர்களுக்கு எல்லாம் பாக்டரி சட்டத்தின்கீழ் ஏதாவது பாதுகாப்பு இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 10-30 a.m. இந்தமாதிரி பத்து வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகளுக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். அல்லது அவர்களுடைய வீடுகளுக்கே குச்சிகள், பெட்டிகள் எல்லாவற்றையும் அனுப்பிவைத்துவிட்டால் அவர்களால் அதைச் சுற்றி அனுப்பிவிட முடியும். கோவில்பட்டி, சிவகாசி முதலிய இடங்களில் இப்படி வண்டிகளில் கொண்டு போய்க் கொடுக்கிறவர்களும் இருக்கிறார்கள். இப்படி எல்லாவற்றுக்கும் வசதி செய்து தரப்படவேண்டும்.

வருஷம் பூரா ஓடுகிற பாக்டரியைப்போலவே சில சீசனல் பாக்டரிகள் வருஷத்திற்கு 6 மாதம் ஓடக்கூடிய பாக்டரிகள் இருக்கின்றன. இங்கெல்லாம் சின்ன பாக்டரிதானே என்பது போல லேபர் இன்ஸ்பெக்டர்கள் முதலாளி பக்கமாகப் போய்விடுகிறார்கள். சுகாதார வசதி, வைத்திய வசதி வேலை நேரம் நிர்ணயிக்கிற நோட்டீஸ் போர்டு, வேஜ் நோட்டீஸ் போர்டு இவை எல்லாம் இருப்பது இல்லை. ஓவர் டைம்மாக வேலை செய்கிறவர்களுக்குக்கூட அதிக அலவன்சு கொடுப்பதில்லை. ஆகவே இதையெல்லாம் சரியான முறையில் கவனித்து ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு சரியான கூலி நிர்ணயம் செய்யப்படவேண்டும். குறிப்பாக நமது ராஜ்யத்திலுள்ள பல தொழிற் சங்கங்களும் சேர்ந்து ஒரே சங்கமாக இருக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri A. VEDARATHNAM**: கனம் சபைத் தலைவி அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கிற இந்தத் தொழில் மானியத்தை ஆதரிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த இலாகா நம்முடைய நாட்டில் மிக்க பின் தங்கிய நிலையில் உள்ளவர்களை முன்னேற்றுவதற்காக அவர்களைக் கைதூக்கிவிடுவதற்காக ஏற்பட்ட இலாகா. எப்படி ரெவின்யூ இலாகா, போலீஸ் இலாகா எல்லாம் தொன்றுதொட்டு இருந்து வருகிறதோ அதேபோன்று மாதர் நல இலாகா, ஹரிஜன நல இலாகா போன்ற இந்தப் புது இலாகாக்கள் எல்லாம் நம் நாட்டில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளவர்களை எல்லாம் முன்னுக்குக் கொண்டுவர உதவி செய்யத் தோன்றிய இலாகாக்கள். அதன் மூலமாக இப்போது நம் நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறதென்று விஷயத்தைக் கூறத் தேவையில்லை. அவர்களுக்கு எந்த அளவு உதவி புரிந்தபோதிலும் அது போதாது என்று சொல்கிற நிலைமை இருக்கிறதே அல்லாமல் அது அதிகம் என்று சொல்வதற்கில்லை. அந்தத் துறையில் மிகவும் நல்ல முறையில் இந்த இலாகா பணியாற்றி வருகிறது. அதிலும் சிறப்பாக இந்த இலாகாவின் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிற அமைச்சர் அவர்கள் தம் வாழ்நாளையே இந்தப் பணிக்கு அர்ப்பணம் செய்து கொண்டார்கள். ஆகையால் இதில் இவர்களுடைய திறமையைப் பற்றி எதிர்கட்சிக்காரார்கள்கூட போற்றுகிற வண்ணம் நடந்து வருகிறார்கள். இந்தத் தொழில் இலாகா செய்ய வேண்டிய முக்கியமான பணிகளில் எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், ஏனையோரும் தொழிலாளர்களுக்குச் செய்ய வேண்டிய பல விஷயங்களைப்பற்றி எல்லாம் இங்கே கூறினார்கள். அவை ஒன்றும் புறக்கணிக்கத்தக்கது அல்ல. அனைத்தும் அவசியம் என்ற விஷயத்தில் இரண்டுவித அபிப்பிராயம் இருப்பதற்கு இடமில்லை. இந்த மாதிரி ஒரு இலாகா தோன்ற வேண்டிய அவசியம் எதனால் வந்தது இந்த நாட்டில் என்று சொன்னால் முதலாளிகளுடைய மனப்பான்மை தான் இதைப்போன்ற இலாகா தோன்றி இதைப்போன்ற பல ஸ்தாபனங்கள் தோன்றி அந்தத் தொழிலாளர்களுடைய வர்க்கத்தைத் தனியாகப் பிரித்து அந்த வர்க்க அடிப்படையில் போராட்டம் என்ற நிலை தோன்றியதற்குக் காரணமாயிற்று. மகாத்மா காந்தியடிகளே இந்த நிலையைக் குறித்துத்தான் அவர் வகுத்த 22 நிர்மாண திட்டங்களுக்குள் தொழிலாளர் முன்னேற்றத்திற்கும் ஓர் இடம் அளித்திருக்கிறார். குறிப்பாக முதலாளிகள் எப்படி இருக்கவேண்டுமென்றால் தனம் படைத்தவர்கள் அதற்குத்



தாங்கள் ஒரு தர்மகர்த்தர் என்ற நிலைமையில் இருந்து அந்தத் தனத்தைத் தக்கவர்களுடைய முன்னேற்றப் பணிக்கு உதவ வேண்டுமேயல்லாமல் தங்கள் ஆடம்பர வாழ்க்கையை வளர்த்துக்கொள்வதற்காக அல்ல என்ற அளவுக்கு இலக்கணத்தை வரையறுத்திருக்கிறார்கள். அதையேதான் வள்ளுவப் பெருந்தகையாரும்.

தாள்ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

என்று கூறினார். எனவே அவர்கள் சரியான நிலையில் இந்த நாட்டில் இருக்கிற தொழிலாளர் மக்களும், தங்களுடன் பிறந்தவர்களைப்போல தங்களுக்குள்ள அதே உரிமையைப் பெற தகுதி உள்ளவர்கள் என்று நினைத்து முதலாளிகள் செயல்படுவார்களேயானால் வர்க்க அடிப்படையில் போராட்டம் நடக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலையில் இந்தமாதிரி வர்க்க அடிப்படையில் இப்படி ஒரு போராட்டம் தேவையா என்றால் அது நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் அதிலும் நம்முடைய பிராந்தியத்தைப் பொறுத்த வரையில் அதற்கு அவசியம் இல்லையென்று நான் கூற விரும்புகிறேன். ஏனென்றால் எத்தனை அபிப்பிராயபேதமானாலும், எவ்வளவு கருத்து வேற்றுமை உள்ள விஷயங்களானாலும் நாம் அனுஷ்டித்து வருகிற கொள்கைக்கு, கல்வி விஷயத்தில் இந்தமாதிரி பேதங்களை எல்லாம் ஒழிப்பதற்கு என்ன முறையைக் கையாள்கிறோமோ அதே முறையை இந்த தொழில் விஷயத்திலும் அனுஷ்டித்தால் இன்னும் நல்ல பலன் அளிக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். நம்முடைய நாட்டில் தொழில் வளம் மிகவும் குறைந்ததாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்திடம் கேட்டாலோ அரசாங்கம் பொதுத் துறையில் தொழில்களை நடத்த விரும்பவில்லையென்றும், தனியார் துறையிலிருந்து யாராவது ஏற்று நடத்த வந்தால் அவர்களை ஆதரிப்பதாகவும் கூறுகிறார்கள். ஆனால் தனியார் துறையில் இருந்து தொழிலை நடத்த வேண்டுமென்றால் முதலாளிகள் அதற்கு அஞ்சுகிறார்கள். தொழில் துறையில் இப்போது நடக்கிற போராட்டம், கிளர்ச்சி, கூச்சல் இவைகளைக் கண்டு கேட்டு அவர்கள் எந்தத் தொழிலையும் துவக்கவேண்டுமென்றால் அஞ்சுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே தென்னாட்டில் தொழில் வளம் பெருக வேண்டுமென்றால் தொழிற் சங்கங்கள் அனாவசியமான போராட்டங்களை, கிளர்ச்சிகளை உண்டாக்கக் கூடாது. தொழிலாளர்களுடைய தொழில் திறனை வளர்ப்பதற்கு இந்தச் சங்கங்கள் ஆதரவாக இருப்பது என்றால் எத்தனை சங்கங்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அன்றைக்கு அந்தச் சங்கங்களே ஒன்றை ஒன்று தாக்கி அடித்துக் கொள்கிற நிலைமையில் பலவித வீண் தொந்தரவுக்கு உள்ளாக்குகிற நிலைமை இருப்பதனால் பல சங்கங்கள் இங்கே வேண்டியதாக இல்லை. அப்படி இன்றி தொழில் திறனை வளர்க்கக்கூடிய ஒரு சங்கம் இருந்தாலே போதும் என்பது என் அபிப்பிராயம்.

எனவே இப்பொழுது கையாளும் அதே முறையையே தொழிலாளர்கள் விஷயத்திலும் கையாளவேண்டுமானால் இதில் இருக்கக்கூடிய பேதங்கள் முதலாளிகள் தொழிலாளிகள் பாகுபாடுகள் இல்லாமல் ஒரு நியாயமான பாவனை உண்டு பண்ணக்கூடிய நிலைமை வளர்ந்து தொழிலாளிகள் தங்கள் குறைகளை முதலாளிக்குச் சொல்வது, முதலாளிகள் தங்கள் குறைகளை தொழிலாளிகளுக்குச் சொல்வது என்பது போன்ற ஒரு மனப்பான்மை வளர்ப்போமானால் தமிழகத்தில் ஓரளவிற்கு தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு தொழிலாளர்களிடையே வேலையில்லாத்திண்டாட்டத்தைப் போக்குவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்லவிரும்புகிறேன். வேலையில்லா திண்டாட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லாத ஒரு சூழ்நிலை ஏற்படும். இந்த விஷயத்திலே நமது தொழில் அமைச்சர் அவர்கள் மிகவும் திறமைப்பட்டவர்கள். இந்த மாதிரி அன்னியோன்ய பாவத்தை வளர்ப்பதற்கு அவர்கள் முன்வருவார்கள் என்று நம்புகிறேன். இந்த ஒரு முறையும் முதலாளிகள் தொழிலாளிகள் என்ற துறையிலே நீடிக்க வேண்டுமானால் தொழிலாளிகளின் குறைகளும் நீங்கி தொழில் வளர்ச்சி அதிகரிப்பதற்கும், வேலையில்லா திண்டாட்டத்தை நீக்குவதற்கும் இது ஒரு பெரிய சாதகமாக இருக்குமே தவிர முதலாளிகளிடத்தில் தொழி

லாளர்களுக்கு அச்சம் மாறவேண்டும். பல இடங்களில் தொழிற்சாலைகள் மூடப்பட்டதாக சொல்லப்பட்டது. இதற்குக் காரணம் என்னவென்று ஆராயவேண்டும். இப்பொழுது நம் நாட்டிலே இன்னும் அதிகமானத் தொழில்கள் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் இதற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள், மூடவேண்டிய மூலகாரணம் என்னவென்றால், தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் உள்ள போராட்டம்தான் இதற்குக் காரணம். ஆகவே இந்தக் கிளர்ச்சிகளும், போராட்டங்களும் காரணம் அவர்களின் சம்பள உயர்விற்கும், போனஸ் வாங்குவதற்கும் போராட்டம் நடக்கிறது. முதலாளிகள் அந்த போராட்டங்களுக்கும், கிளர்ச்சிகளுக்கும் செவி சாய்க்காமல் இருந்தால் இந்த நாட்டிலே தொழில் வளம் அதிகரிக்காமல் இருக்கின்ற தொழில்களும் மூடப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும். ஆகையால் அம்மாதிரி சூழ்நிலை ஏற்படாதவாறு தடுப்பது சர்க்காருடைய கடமை என்று மற்றவர்கள் நினைத்துக் கொண்டு சும்மா கையைக் கட்டிக்கொண்டு இருந்துவிடமுடியாது. ஆகவே தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம், அன்யோன்ய ஒரு பாவம் ஏற்படுகின்ற அந்தப் பணியில் ஈடுபடவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இப்பொழுது அரசாங்கம் எந்தத் தொழிலை ஆரம்பித்தாலும் அவர்களுக்கு கிட்டத்தட்ட பாதி மூலதனமே கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே இந்த தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள உறவு ஒரு நல்ல சூழ்நிலையில் இருந்தால், முதலாளிகள் தனிப்பட்ட தொழிலை ஏற்று நடத்துவதற்கு முன்வருவார்கள். மேலும் அவர்களுக்குள்ளே இருக்கும் அச்சம் நீங்குவதற்கான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும். இதற்கு கனம் அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் முதல் முதலாக அந்த காரியத்திலே தொழிலாளர் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கு சிம்ப்சன் கம்பெனியே அதை ஏற்படுத்தியிருக்கிறது. இதுபோன்ற தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெற வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. பல பெரிய பிரச்னைகளை நாம் இதன் மூலம் நீக்க முடியும். ஆகவே தொழிலாளர்கள் முதலாளிகள் வேற்றுமை மனப்பான்மை இல்லாமல் அன்னியோன்ய பாவத்துடன் நடந்துக்கொள்ளவேண்டிய ஒரு நிலைமை ஏற்படும். அப்போதுதான் தொழில் வளர்ச்சியை பெருக்க முடியும். இந்த மனப்பான்மையோடு நாம் ஒரு பிரச்னையை, எவ்வளவு பெரிய பிரச்னையாக இருந்தாலும் நாம் அணுகுகிற முறையில் அதைத் தீர்க்க முடியும். இந்த மனப்பான்மையோடு நாம் ஒரு பிரச்னையை அணுகுகிறோம். எவ்வளவு பெரிய பிரச்னையாக இருந்தாலும் நாம் அதை தீர்க்க முடியும். அந்த விதத்தில் தொழிலாளிகளும் முதலாளிகளும் ஈடுபடவேண்டும் அப்படியிருந்தால் தொழிலாளிகள் தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்துவதான பேச்சே இருக்காது. போராட்டங்கள் நடத்தவேண்டிய அவசியமே ஏற்படாது. இதுமாதிரியாக ஒரு அன்னியோன்ய பாவத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்ற லட்சியத்தில் ஈடுபட்டால், நாம் எந்தப் பிரச்னையையும் தீர்த்துக் கொள்ளமுடியும். இதே மாதிரியாக விவசாயிகளின் பிரச்னைகளிலும் நடந்துக்கொண்டால் எல்லாம் சுமுகமாக முடியும் உற்பத்தியும் அதிகரிக்கும். என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri S. M. ANNAMALAI** : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த சட்டசபையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் தொழிற்சாலைகள் நல்ல முறையிலே இயங்குவதற்கு நிலவமுடியுமா என்ற அச்சம் இப்போது பரவி வருகிறது. அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் உயர்நீதி மன்றங்களிலும் சுப்ரீம் கோர்ட்டுகளிலும் கொடுத்த தீர்ப்புகளைப் பார்ப்போமானால் இதுவரை செய்யக்கூடிய பல சட்டங்களைத் தகர்த்தெறியக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மேட்டூர் தொழிலாளர் விஷயத்திலும் தமிழ் நாடு பத்திரிகை தொழிலாளர்கள் விஷயத்திலும் கோர்ட்டுகளின் தீர்ப்புகளைப் பார்ப்போமானால் அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பாதகம் உண்டாக்கக்கூடிய அளவிற்கு அந்தத் தீர்ப்பு இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதேமாதிரியாக ஒரு தொழிலாளத் தலைவர் வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்துவிட்டு, அந்த வேலை நிறுத்தத்திற்கு மெஜாரிடி இல்லை என்றால் உண்மையிலே பழி வாங்கப்படுகிறது. இம்மாதிரியாக டன்லப் தொழிற்சாலையில் தொழிலாளிகள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். இதே மாதிரியாக சில இடங்களிலே வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் இந்த மனப்பான்மை தொழிலாளர்களிடையே அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. (During the year 1958, there were 261 strikes including the 6 strikes pending at the beginning of the year.) 1958-ம் ஆண்டிலே 261 வேலை நிறுத்தங்கள் நடைப்பெற்றிருக்கிறதென்று சர்க்கார் கொடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1957-ம் ஆண்டிலே 248 வேலை நிறுத்தங்கள் நடைப்பெற்றிருக்கின்றன. அதை நாம் பார்க்கும்போது வேலை நிறுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. முன்னால் குறிப்பிட்ட தீர்ப்புகளையொட்டி குறைபாடுகளை போக்குவதற்கு தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வேலை நிறுத்தம் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு அடிப்படையில் இப்பொழுது வேலை நிறுத்தம் செய்யவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதே போல நமது மாநிலத்தில் பீடி, ஹோட்டல் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தாலும்கூட இதுநாள் வரையில் அது நல்ல முறையில் அமல்நடத்தப்படவில்லை. "கூடிய சீக்கிரம் பீடித் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருகிறோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பீடித் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தில் சுருட்டுத் தொழிலாளர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னோம். அவ்வாறு சொன்னதற்கு, அவர்களுக்கென தனியாக ஒரு சட்டமியற்றிவிடலாம் என்று மதிப்பிற்குரிய அமைச்சர் சொன்னார். ஆனால் சுருட்டுத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் இதுநாள் வரையில் கொண்டுவரப்படவில்லை. இதுகுறித்து நான் உண்மையிலேயே வருந்துகிறேன். இம்மாநிலத்தில் சுருட்டுத் தொழிலாளர்கள் ஏறத்தாழ 16,000 பேர் இருக்கின்றனர். அவ்வளவு எண்ணிக்கையில் இருக்கும் தொழிலாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டத்தை மாநில சர்க்கார் உடனடியாகக் கொண்டு வரவேண்டும்.

நம் மாநிலத்தில் விவசாயத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சென்ற ஆண்டு 'இம்மன்றத்தில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது, 1958-ம் ஆண்டு நவம்பர் மாத முடிவிற்குள் விவசாயத் தொழிலாளர்கள் கூலி நிர்ணயச் சட்டத்தைக் கொண்டுவந்துவிடப் போவதாக மதிப்பிற்குரிய அமைச்சர் சொன்னார். ஏறத்தாழ ஓராண்டு காலம் ஆகிவிட்டது. இந்நாள் வரையில் அந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. அதற்கான மசோதா எதுவும் இம்மன்றத்தில் இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த பட்ஜெட் விவாதத்தின் போதாகிலும் அந்த மசோதா கொண்டுவரப்படும் என்று நான் மிக மிக ஆவலோடிருந்தேன், அவ்வாறு எதிர்பார்த்தேன். நாட்டில் மற்றெல்லாத் தொழிலாளர்களையும் விடத் தாழ்ந்த நிலையிலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலியை நிர்ணயிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அதற்கான மசோதாவை இப்போது கொண்டுவந்தாலும்கூட அது சட்டமாவதற்கு ஏறத்தாழ பத்து மாதங்கள் அல்லது ஓராண்டு காலம் ஆகும். இப்போது மசோதாவை இச்சபைக்குக் கொண்டுவந்தாலும், அதை அதற்குப் பிறகு பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, பொறுக்குக் கமிட்டியின் ஆலோசனைக்குப் பிறகு அதை மறுபடியும் சபைக்குக் கொணடுவந்து சட்டமாக்க ஏறத்தாழ ஓராண்டு ஆகும். ஆகவே விவசாயத் தொழிலாளத் தோழர்களுக்கான கூலி நிர்ணயச் சட்டத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Sri T. P. ELUMALAI** : கனம் ச்பைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் கொண்டுவந்திருக்கும் இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். நமது தேசீய சர்க்கார் இந்தப் பத்து ஆண்டுகளில் தொழிலாளர்களுக்காக பல சட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறது. அவை அத்தனையும் உண்மையிலேயே நல்ல

[Sri T. P. Elumalai] [14th March 1959

முறையில் பயன்படவில்லை. அவைகள் சர்க்கார் எதிர்பார்த்த அளவிற்குப் பயன்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். சட்டங்களால் ஏற்படக்கூடிய பயனை நூறு சதவிகிதமும் அடைய வேண்டுமானால் தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் தங்கள் சிறந்த பணியை நல்ல முறையில் ஆற்றினால் தான் சர்க்காரின் எண்ணம் அத்தனையும் நிறைவேறுவது சாத்தியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் தொழிலாளர் பகுதியில் தொண்டாற்றிய ஊழியன் என்ற முறையில் இக்கருத்தைத் தெரிவிக்கிறேன். உண்மையிலேயே, நம் சர்க்கார் பல நல்ல சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக, ஓட்டல் தொழிலாளர் சட்டம், பீடித்-தொழிலாளர் சட்டம், பெண் தொழிலாளர்களுக்கு பிரசவ கால வசதிகள் அளிக்கும் சட்டம், இவை போன்ற சட்டங்களையெல்லாம் சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அந்தச் சட்டங்கள் நடைமுறையில் ஒரு சரியான பலனையும் கொடுக்காத நிலையில் இருக்கின்றன. இந்தச் சட்டங்களின் முழுப் பலன்களையும் பெறுவதற்குத் தேவைப்படும் கட்டுப்பாடு தொழிலளார்களிடம் ஏற்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். எனக்குமுன் பேசிய ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை டி. ஏ. சைக்கில் கம்பெனித் தொழிலாளர்களைப் பற்றிய விஷயங்களை இங்கே குறிப்பிட்டார். அந்தக் கம்பெனித் தொழிலாளர்கள் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் நானும் அங்கே சென்றிருந்தேன். அந்தப் போராட்ட காலத்தில் நான் அத் தொழிலாளர்களிடம் ஒன்று வேண்டிக்கொண்டேன். "நீங்கள் எல்லோரும் மறுபடியும் வேலைக்குப்போங்கள். ஒரு சரியான முடிவு ஏற்படும் வரையில் நீங்கள் எல்லோரும் ஒழுங்காக வேலை செய்யுங்கள். எந்தப் பத்து ஆட்களுக்கு வேலை கொடுக்க முதலாளிகள் மறுக்கிறார்களோ அந்தப் பத்து ஆட்கள் மட்டும் வெளியில் இருக்கட்டும். மற்றவர்கள் எல்லோரும் வேலைக்குப் போங்கள்" என்று அவர்களிடம் நான் பணிவோடு வேண்டிக் கொண்டேன். "ஒரு ஆளைக் கூட வெளியில் விட்டுவிட்டு உள்ளே போக முடியாது." என்று அவர்கள் எல்லோரும் மறுத்துவிட்டார்கள். பிறகு போராட்டம் வலுத்து முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் மனஸ்தாபம் அதிகமாக வளர்ந்து. கடைசியில் முதலாளிகள் பாதி ஆட்களைத் தான் எடுத்துக்கொண்டார்கள், பாதித்தொழிலாளர்களுக்கு வேலை போயிற்று. பிறகு தொழிலாளர்கள் கோர்ட்டுக்குச் சென்று தீர்ப்புப் பெற்றனர். ஆனால் கோர்ட்டுத் தீர்ப்பு அமுல் நடத்தப்படவில்லை. இந்த நிலையில், வேலையிழந்த ஏழைத் தொழிலாளர்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். வேலையிழந்த தொழிலாளர்கள் எல்லோரும் என் தொகுதியில் இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கும் வேலை கிடைக்காமல் அவதிப்படுவதைப் பார்க்கிறேன். இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நான் சொன்ன யோசனையை அந்தத் தொழிலாளர்கள் கேட்டிருந்தால் அந்த யோசனைப்படி நடந்திருந்தால், இத்தனை தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்க மாட்டார்கள் ; பிரஸ்தாப 10 ஆட்களில், அநேகமாக, 2 ஆட்களைத் தவிர மற்றவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள் ; போராட்டம் நடத்தத் தூண்டியதையும் முதலாளிகளை பயமுறுத்தியவர்களையும் விட்டுவிட்டு மற்றவர்களை முதலாளிகள் வேலைக்கு எடுத்துக் கொண்டிருப்பார்கள் ; ஆக, அனேகமாக 2 பேர் தான் வேலையிழக்க நேர்ந்திருக்கும். என் இதைச் சொல்கிறேன் என்றால், தொழிலாளர்களுக்குத் தலைமைதாங்கி நடக்கும் தலைவர்கள் காலத்தையும் சூழ்நிலையையும் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டுமென்று தொழிலாளர்களுக்கு புத்திமதி கூற வேண்டும், காலத்தையும் சூழ்நிலையையும் அனுசரித்து யோசனைகள் கூறவேண்டும். அவர்கள் அந்த முறையில் செயலாற்ற வேண்டுமென்பதற்காகத் தான் இதைச் சொன்னேன். டி.ஏ. சைக்கில் கம்பெனித் தொழிலாளர் தகராறு சம்பந்தமாக கோர்ட் கொடுத்திருக்கும் தீர்ப்பை அமுலுக்கு வரச் செய்ய கனம் அமைச்சர் முயல வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம் அது நல்ல திட்டம். தொழிலாளர்களுக்கு வியாதி வந்தால் அவர்களுக்காகவே இருக்கும் வைத்தியசாலைக்கு அவர்கள் சென்று வைத்தியம் பெறுவதற்கான வாய்ப்பை அரசாங்கம் இத்திட்டத்தால் ஏற்படுத்தியிருக்கிறது.



14th March 1959] [Sri T. P. Elumalai]

(Mr. Speaker in the Chair.)

ஆனால் தொழிலாளர்கள் செய்யும் தப்பினாலும் சிப்பந்திகள் செய்யும் தப்பினாலும், இத்திட்டத்தின் முழுப் பலனையும் தொழிலாளர்கள் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஒரு தொழிலாளர் ஊருக்குப் போகவோ ஓய்வு எடுத்துக்கொள்ளவோ விரும்பினால், அப்போது அவர் தனக்கு வியாதி இருப்பதாகச் சொல்லி, ஏதாவது ஜுரம் இருப்பதாகச் சொல்லி, லீவ் கேட்கிறார். இவர் இவ்வாறு செய்வது டாக்டருக்கும் நன்றாகத் தெரியும். இதனால் டாக்டர் அவரை பரிசோதனைக் குழாயைக் கொண்டு பரிசோதிப்பது கிடையாது. அவர் சொல்லும் வியாதியைக் கேட்டுவிட்டு அவரைப் பரிசோதிக்காமலேயே டாக்டர் மருந்து எழுதிக்கொடுத்து விடுகிறார். அந்த மருந்தை, தொழிலாளர் வாங்கி உடனேயே வெளியே ஊற்றிவிடுகிறார். அதைச் செய்துவிட்டு அவர் லீவ் வாங்கிக்கொண்டு போய்விடுகிறார். இம்மாதிரி தொழிலாளர்கள் செய்வதால்; உண்மையாகவே வியாதியுள்ள தொழிலாளர் டாக்டரிடம் செல்லும்போதும் டாக்டர் அவரைப், பரிசோதனைக் குழாயைக் கொண்டு பரிசோதிப்பதில்லை. அவர் திருப்திப்படும் வகையில் அவரைப் பரிசோதிப்பதில்லை. டாக்டர் இவ்வாறு பணியாற்றுவதால், உண்மையிலேயே வியாதியுடன் வரும் தொழிலாளர்களுக்கு அந்த வைத்தியசாலையில் நம்பிக்கை ஏற்படாது போகிறது. ஆகவே இதையெல்லாம் கண்காணிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சரைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏழைத் தொழிலாளர்களுக்கு நிதி வசதிக்கு வகை செய்வதுடன் அவர்களுக்கு வியாதியைத் தீர்த்துக் கொள்வதற்கும் வசதிசெய்யும் இந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டம் மேலும் நல்ல முறையில் தொழிலாளர்களுக்குப் பயன்படவேண்டும்.

ஒரு தொழிற்சாலையில் நூறு பேர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் 11 a.m.
அதில் ஏறக்குறைய 25 பேர்கள்தான் வியாதியஸ்தர்களாக மருந்து சாப்பிட்டுக்கொண்டு வருவார்கள், மீதியுள்ளவர்கள் பணத்தை மட்டும் கட்டிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அதே தொழிற்சாலையில் யாருக்காவது டி.பி. என்ற கொடிய வியாதி வந்து விட்டால் அவர்களுக்கு சரியான ட்ரீட்மேண்ட் கொடுப்பது கிடையாது. ஆகவே அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு சர்க்கார் ஆஸ்பத்திரியில் படுக்கை வாங்கிக் கொடுத்து, டி.பி.-க்கு வேண்டிய சிகிச்சை செய்யாமல் வேறு மருந்துகள் கொடுத்து வருகிறார்கள். ஆகவே, இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தினால் தொழிலாளர்கள் நன்மை அடைய வேண்டுமென்றால், அதன் மூலம் இந்த டி.பி. போன்ற கொடிய வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த முறையில் நல்ல வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த கட்டிடத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று, ஏற்கெனவே இதற்கு முன்னால் நடந்த சட்டசபை பட்ஜெட் கூட்டத்தில் கேட்டுக் கொண்டேன். எல்லாத் தொழிலாளர்களுக்கும் கூட்டு மொத்தமாக தொழிற்சாலைகளில் வேலை செய்யும் எல்லாத்தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கங்கள் வைத்து அவர்களது குறைகளைப் போக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் இந்த கட்டிடத் தொழிலாளர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. பெரிய காண்ட்ராக்டர்கள், பணம் படைத்தவர்கள் தொழிலாளர்களுக்கு குறைந்த கூலியைக் கொடுத்து விட்டு அவர்கள் நிறைய லாபம் சம்பாதித்துக்கொண்டு போகிறார்கள். ஆக, அந்த முதலாளிகள் தொழிலாளர்களின் ரத்தத்தை உறிஞ்சி, அவர்களுக்கு கொடுமை இழைத்து சரியான கூலி கொடுப்பதில்லை. ஆகவே, இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும், மற்ற தொழிலாளர்களுக்கு இருப்பதுபோல் ஒரு கூலி நிர்ணயம் செய்து கொடுத்து, நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : "பில்டிங் காண்ட்ராக்ட் வொர்க்கேர்ஸ்"-க்கும் இந்த மினிமம் வேஜஸ் ஆக்ட் இருக்கிறது.

SRI T. P. ELUMALAI : அடுத்தபடியாக, உப்பளம் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால், சென்ற சட்டசபை கூட்டத்தில் கூட் அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிலாளர்களின் விஷயம் பரிசீலனையில்

[Sri T. P. Elumalai] [14th March 1959

இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த உப்பளம் தொழிலாளர்களுக்
கும் கூலி நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. நமது தமிழ் நாட்டில் மிகவும்
எழ்மை நிலையில் இருக்கிற ஹரிஜனங்கள் அதிகமாகயிருக்கிற தோல்
பதனிடும் தொழிற்சாலைகள் இப்பொழுது மறைந்து கொண்டே வருவதற்
குள்ள அறிகுறி தென்பட்டுக் கொண்டு வருகிறது. திருவொற்றியூரில்
தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சுமார் ஏழெட்டு இருந்தன. ஒவ்வொன்றி
லும் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்
தார்கள். அங்கெல்லாம் தொழில் தகராறு காரணமாகவோ அல்லது
வேறு காரணமாகவோ தெரியவில்லை, அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம்
இன்று மூடப்பட்டிருக்கின்றன. முதலாளிகளிடம் சென்று கேட்டால், எங்
களுக்கு அவைகளை விற்பனை செய்வதற்கு சரியான வசதியில்லை என்றும்
அந்தத் தொழிலில் சரியான லாபம் கிடைக்கவில்லை என்றும் சொல்
கிறார்கள். அதற்குக் காரணம், பச்சைத் தோலை எங்கெங்கு விற்பனை
செய்து கொண்டிருந்தோமோ அந்த இடங்களில் அவர்களே வாங்கிக்
கொண்டு போகிறார்கள், இந்தியாவிலிருந்து அதை ஏற்றுமதி செய்வதற்கு
மிக வசதியாகயிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். ஆக, இந்தத் தொழில்
நல்ல முறையில் நடக்க வசதியற்று இருக்கிறது, என்று அந்த முதலாளி
கள் சொல்கிறார்கள். ஆக, பொதுவாக இந்த தோல் பதனிடும் தொழில்
விஷயமாக, மத்திய அரசாங்கத்தை அணுகி இந்த தோல் பதனிடும்
தொழிற்சாலைகள் நசிந்து போய் விடாதபடி அதற்கு வேண்டிய ஊக்கம்
அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று பணிவன்
போடு கேட்டுக் கொள்கிறேன். மேலும், தொழிலாளர்களின் நலன்களைப்
பாதுகாக்கக் கூடிய சட்டங்கள் பல மேலும் மேலும் வந்து கொண்டிருந்
தாலும் அதற்கு உதவியாக தொழிற்சங்க தலைவர்களும், தொழிலாளர்
களும் இருக்க வேண்டுமென்று அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்
கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிச் செய்வார்கள் என்ற நம்பிக்கை
எனக்கு ஓரளவு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் எல்லாம் தொழி
லாளர் இலாகா மான்யம் வந்தால் குறிப்பிட்ட நேரத்தை விட அதிகமாக
எங்களுக்கு பேச வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்வார்கள் எதிர்
கட்சியில் உள்ளவர்கள். அதிகமாக நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று
சொல்வார்கள். ஆனால் இன்று அந்நிலை மாறி, பேசுவதற்கே ஆள் இல்லாத
ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி பேசுவதற்கு, மாற்றுக் கட்சியில்
எங்கள் கட்சியில் இருப்பதை விட ஆள்கள் குறைவாகத்தான் இருக்கிறார்
கள். அப்படிப்பட்டதொரு நிலை இன்று இருக்கிறதைப் பார்க்கும்போது,
பெரிய தொழிலாளர் தலைவராகயிருந்த ஒருவர் நமது தொழில் அமைச்ச
ராகயிருப்பதினாலும், தொழில் விஷயம் குறித்து நன்கு தெரிந்துக்
கொண்டு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காத விதத்தில் தொழிலாளர்
களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொடுக்கக்கூடிய வாய்ப்
பைப் பெற்றிருக்கிறார், ஆகவே நாம் என் அதிகம் பேச வேண்டுமென்று
எதிர்கட்சியினர் நினைக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். இந்த
எண்ணம் மேலும் வளர வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு மேலும்
மேலும் நல்ல வசதிகள் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அடுத்தபடியாக, இன்ஷூரன்ஸ் திட்டத்தினால் தொழிலாளர்
களுக்கு அநேகவித கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. காயம் பட்ட தொழிலாளர்
கள் கட்டை தாங்களாகவே அவிழ்த்துக் கொண்டு டாக்டரிடம் செல்லவேண்
டியிருக்கிறது. டாக்டர்கள் கட்டை அவிழ்ப்பது கிடையாது. இடது கையில்
அடிபட்டு விட்டால் வலது கையின் உதவியைக் கொண்டும், வாயின்
உதவியைக் கொண்டும்தான் அந்தக் கட்டை அவிழ்க்க வேண்டியிருக்கிறது.
அப்படி கட்டை அவிழ்த்துக்கொண்டால்தான் டாக்டர் சிகிச்சை செய்கிறார்
கள். இது விஷயமாக விம்கோ தொழிற்சாலையில் வேலை செய்யும்
சோலை என்ற ஒரு ஹரிஜன நண்பர் என்னிடம் சொன்னார்.

(Sri R. Subramaniam in the Chair.)

ஆக, டாக்டர்கள் தொழிலாளர்களிடம் அன்பாக பழகாமல் இருப்பதற்
குக் காரணங்கள், இரண்டு உண்டு. ஒன்று லீவ் கேட்கப் போகிறவர்கள்,
ஏதோ உண்மையிலேயே வியாதி ஒன்றும் இல்லாமலேயே லீவ்-க்காக



14th March 1959] [Sri T. P. Elumalai]

தன்னிடம் வருகிறார்கள் என்று டாக்டர் நினைக்கிறார். உண்மையான
வியாதியஸ்தர்கள் போனாலும் கூட டாக்டர் அப்படியே நினைக்கிறார்.
அதே சமயத்தில் ஒருவர் போய் இரண்டு நாள் லீவ் வேண்டுமென்று
கேட்டால் அவருக்கு ஒரு வாரம் லீவ் கொடுக்கப்படுகிறது. அதே சமயத்
தில் ஒரு நாள் லீவ் வேண்டுமென்று கேட்டாலும் அது மறுக்கப்படுகிறது.
ஆக, டாக்டர்கள் தங்கள் இஷ்டம் போல் நடக்கிறார்கள். ஆக, டாக்டர்கள்
இந்தத் தொழிலாளர்களோடு அன்பான முறையில் பழகினால்தான் இந்த
இன்ஷூரன்ஸ் திட்டம் சர்க்கார் நினைக்கும் அளவிற்குக் கைகூடும்.
அடுத்தபடியாக, இந்தத் திட்டத்தின்படி லீவ் எடுப்பவர்களுக்கு இரண்டு
நாட்கள் லீவ் எடுத்தால், அந்த இரண்டு நாளைக்கும் அவர்களுக்கு
நஷ்டஈடு கிடையாது. மூன்று நாள் லீவ் எடுத்தால் இரண்டு நாட்களைத்
தள்ளி ஒரு நாளைக்குத்தான் நஷ்ட ஈடு கொடுப்பதைப் பார்க்கிறோம்.
ஆகவே, இரண்டு நாள் என்றாலும், அல்லது ஒரு நாள் என்றாலும் சரி
அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும் என்று நான் அரசாங்கத்
தைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த நஷ்ட ஈடு விஷயத்தில் சங்கடங்கள்
ரொம்ப இருக்கிறது. ஒரு தொழிலாளி லீவ் எடுத்துவிட்டு, நஷ்டஈடு
வாங்க வேண்டுமென்று சொன்னால், காலை ஆறு மணிக்கு இன்ஷூ
ரன்ஸ் கார்டைக் கொண்டுவந்து பெட்டியில் போடவேண்டும். அப்படி ஆறு
மணிக்கே போட்டுவிட்டு அங்கேயே இருக்க வேண்டும். பதினோரு மணிக்கு
அந்த சிப்பந்திகள் அங்கே வருவார்கள். பதினோரு மணிக்கு வந்து கார்டு
களை எல்லாம் எடுத்து அவைகளைப் பரிசீலனை செய்து தொழிலாளர்களைக்
கூப்பிட்டு மூன்று மணிக்கு வாருங்கள் என்று சொல்லிவிட்டு சாப்பிடப்
போய்விடுகிறார்கள். பின் மூன்று மணிக்கு வந்தால், பத்துப் பேர்கள் அப்
படிக் கார்டுகள் போட்டிருந்தால், அவர்களில் நாலு பேர்களுக்குக் கொடுத்து
விட்டு மீதியுள்ளவர்களிடம், கம்பெனியிலிருந்து உத்திரவு வரவில்லை
என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, அரை நாளுக்கு நஷ்ட ஈடு வாங்கு
வதற்கு இரண்டு நாட்கள் சுற்ற வேண்டி இருக்கிறது. ஆகவே, தொழி
லாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயத்தில் அரசாங்கம் இன்னும்
அதிகம் அக்கரை செலுத்தி அதைத் தொழிற்சாலைகளிலேயே கொடுப்
பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது
தொழிற்சாலைகளாக இருந்தால், தொழிலாளர்களுக்கு அது மிகவும் வசதி
யாக இருக்கும். கடைசியாக, தொழில் கேந்திரமாயிருக்கிற திருவொற்றி
யூரில் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று அரசாங்
கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி தொழில் கேந்திரங்களில்தொழில்
பயிற்சி முகாமை ஆரம்பித்தால் அங்குள்ள தொழிலாளர்களின் குழந்தை
களுக்கு அங்கு கைத் தொழில்கள் கற்கவும் மேலும் அந்தத் தொழிற்
சாலையில் வேலை செய்யவும் வசதியாக இருக்கும். அதோடு கூட எந்தெந்
தப் பகுதிகளில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகிறதோ அந்தந்தப் பகுதி
களில் உள்ளவர்களுக்கு அங்கு வேலை கிடைக்கும்படிச் செய்வதற்கு
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.
மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வட நாடு, தென்னாடு என்று
பேசுவதைப் போல் இந்த ஜில்லா, அந்த ஜில்லா, இந்த ஊர், அந்த ஊர்
என்ற வித்தியாசம் நாட்டில் பரவிவிடுமோ என்ற எண்ணம் எனக்குத்
தோன்றுகிறது. திருவொற்றியூரில் 22 தொழிற்சாலைகள் உள்ளன.
அங்குள்ள ஏழை மக்களுக்கு அங்கு வேலை கிடைப்பதில்லை. தஞ்சாவூரி
லிருந்தும், மதுரையிலிருந்தும், இது போன்று வேறு பல பகுதிகளிலும்
இருந்துதான் ஆட்கள் வந்து அங்கு வேலை செய்கிறார்கள். கம்பெனி
முதலாளி எந்த ஊரைச் சார்ந்தவராயிருக்கிறாரோ அந்த ஊரில் உள்ளவர்
களுக்குத்தான் அங்கு வேலை கிடைக்கிறது. இதனால் பக்கத்தில் இருக்கிற
வேலை இல்லாதவர்களுக்கு ஒரு ஆத்திரமும், தொழில் வளர்ச்சியின் மீது
பொறாமையும் ஏற்பட்டு, அதனால் பலவிதகமான இடுக்கல்களும், விரோத
சக்திகளும் அங்கே பரவிக்கொண்டு வருகிறது. ஆகவே, அந்த நிலை இல்
லாமல் எங்கே பிற்போக்கான பகுதிகள் இருக்கின்றனவோ அந்த இடத்
தில் தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அங்கே இருக்கிற தொழிலாளர்
களுக்கு வேலை கிடைப்பதற்கு சர்க்கார் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்
கொடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஆங்
காங்கு பஞ்சாயத்து போர்டு, முனிஸிபாலிடிகள் அந்தத் தொழிற்சாலை
களுக்கு லைசன்ஸ் கொடுக்கிறார்கள். மெட்ராஸ் எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்

[Sri T. P. Elumalai] [14th March 1959

சேஞ்ஜ் இருப்பது போல், பஞ்சாயத்து போர்டு, முனிஸிபாலிடி இவைகளில் ஒரு ஒரு கிளார்க் போட்டு வேலை இல்லாதவர்களைக் கணக்கெடுத்து, அவர்களை பாக்டரிகளுக்கு அனுப்பினால் சரியான முறையில் ஏழை மக்களுக்கு வேலை கிடைப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை சர்காருக்குக் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக சட்டத்தில் கூட ஏதேனும் மாற்றம் செய்தால் மிகவும் நல்லது என்று பணிவோடு அமைச்சர் அவர்களுக்கு முக்கியமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. ஏறக்குறைய திருவொற்றியூரில் 22 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே 100 முதல் 2,000 தொழிலாளர்கள் வரையில் ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் வேலை செய்கிறார்கள். அந்தப் பகுதியிலே இது வரையிலும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. சென்ற சட்டசபைக் கூட்டத்தில் கூட இது பற்றிச் சொன்னேன். ஆகவே, தொழில் கேந்திரமாக உள்ள திருவொற்றியூரிலும், எருக்கஞ்சேரியில் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பது போல, வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல இந்தக் காலனிகளுக்கு நமது சர்க்கார் தொழிலாளர்ககள் நலனுக்காக உழைத்து தலைவர்களின் பெயரை வைத்து கௌரவப்படுத்தி இருக்கிறார்கள். நான் சர்க்காரை இதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், பெயரை வைத்திருக்கிறார்களே தவிர மற்றவர்கள் தெரிந்துகொள்வதற்கு அங்கு ஒரு அடையாளமும் கிடையாது. சர்மா காலனி என்று பெயர் வைத்திருக்கிறார்கள், ஆனால் அம்மாதிரி பெயர் எழுதப்பட்ட போர்டு அங்கே கிடையாது. வெளியிலே இருந்து வருபவர்களுக்கு அந்தக் காலனியின் பெயர் தெரிந்துகொள்ள முடியாது. ஆகவே, அங்கே சர்மா காலனி என்று ஒரு போர்டு எழுதி வைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருவொற்றியூரில் உள்ள தொழிலாளிகளுக்கு வீட்டு வசதித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை மீண்டும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே எல்லா மான்யங்களும் தொழிலாளர்களைத்தான் நம்பி இருக்க வேண்டும். குறிப்பாக, தொழிலாளர்கள் மான்யம் என்று சொன்னால், மற்ற மான்யங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு தொழிலாளர்கள்தான் வேலை செய்து கொடுக்க வேண்டும். ஆகவே, தொழிலாளர்களுடைய நிலை உயர்ந்தால், மற்ற மான்யங்களின் வேலைகள் நன்றாக நடப்பதற்கு வசதியாக இருக்கும்.

கடைசியாக போக்கு வரத்து இலாகாவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லுகிறேன். (குறுக்கீடு) போக்கு வரத்து இலாகாவுக்கு தனி மான்யம் இருப்பதினால் அதைப் பற்றி இப்பொழுது பேச வேண்டாமென்று சொல்லுகிறார்கள். ஆகவே, நான் இப்பொழுது அது பற்றிப் பேசவில்லை. சர்க்கார் நடத்தும் தொழிற்சாலைகள் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும். தனிப்பட்டவர்கள் தொழிற்சாலைகள் நடத்துவதற்கும், கூட்டுறவு முறையில் தொழிற்சாலை நடத்துவதற்கும், சர்க்கார் எவ்வளவோ உதவி செய்துகொண்டு வருகிறார்கள். சர்க்கார் தலைமையிலே நடக்கின்ற தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுத்து, கூட்டுறவு முறையில் நடக்கும் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு நல்ல வசதி கிடைப்பதற்கு, ஊதியம் கிடைப்பதற்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும். சர்க்கார் போக்கு வரத்து, பி.டபிள்யூ.டி. தொழிற்சாலை இப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால் நிறைய லாபம் இருக்கிறது. மேற்பார்வைக்காக இருக்கிற அதிகாரிகளின், கண்காணிப்புக்காக இருக்கும் அதிகாரிகளின் சம்பளம் தொழிலாளர்களைவிட அதிகமாக இருக்கிறது. அவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. பெரிய அதிகாரிகளுக்கு அதிகமான சம்பளம் இருக்கிறது. கடைசியில் லாபத்தைக் கணக்குப் போடும்போது தொழிலாளர்கள் சம்பளம், இந்த அதிகாரிகள் சம்பளம், மற்றச் செலவுகள் இவைகளைக் கழித்துவிட்டு லாபம் அதிகமாகக் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதனால் தொழிலாளிக்கு சேர வேண்டிய உரிமை, லாபத்தில் கிடைக்க வேண்டிய பங்கு கிடைப்பதில்லை ஆகவே, ஒரு தொழிற்சாலையில், மேற்பார்வைக்காக வைக்கும்



14th March 1959] [Sri T. P. Elumalai]

அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். குறிப்பாக சர்க்கார் தொழிற்சாலைகளில் கண்காணிப்புக்காக இருக்கும் அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்து மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருக்கவேண்டுமென்று, அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**SRI A. SAMUEL NADAR:** கனம் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன். பழிவாங்கப்பட்ட தொழிலாளர்கள் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். தொழிற்சங்கத்தில் சேர்ந்தவர்கள் பழி வாங்கப்பட்டார்கள் என்று சொன்னார்கள். நான் தூத்துக்குடி தொழிற்சங்கத்தில் 23 வருஷங்களாக உழைத்ததிலே என்னுடைய அனுபவத்தை இந்தச் சபையிலே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஒரே சங்கத்தை அமைத்து நடத்தினால் தொழிலாளர்கள் மேன்மையடைவர், முதலாளிகளும் கஷ்டம் இல்லாமல் தொழிற்சாலைகளை நடத்துவார்கள் என்பதை என்னுடைய அனுபவத்தில் கண்டிருக்கிறேன். ஏனென்றால் எங்கள் தொழிற்சங்கத்தை அங்கீகரித்து 22 வருஷங்கள் ஆகின்றன. அங்கீகாரம் பெற்ற சங்கம் இருப்பதினாலே பல காரியங்கள் சமரச முறையைக் கொண்டே தீர்த்துக்கொண்டிருக்கிறோம், பல கோரிக்கைகளை அடைந்திருக்கிறோம். கோர்ட்டுக்குப் போவதற்கு தொழிலாளர்களுக்கு சந்தர்ப்பம் இருக்கலாம். ஆனால், அதைக் கடைசி ஆயுதமாக வைத்துக்கொண்டால் நல்லது என்று சொல்லப் பிரியப்படுகிறேன். தொழிலாளர்களுக்கு போராட்டம் எப்படி கடைசி ஆயுதமோ, அது போல் தொழில் கோர்ட்டை கடைசி ஆயுதமாகத்தான் உபயோகப்படுத்த வேண்டும். தொழில் கோர்ட்டுக்குப் போய்விட்டால், கோர்ட்டுத் தீர்ப்பில் சர்க்காரோ, மந்திரியோ தலையிடுவது கஷ்டமாகிவிடும். சமரசத்திலேயே பல காரியங்களைச் சாதிக்கலாம். போராட்டம் என்றால், இந்த மாகாணத்தில் எந்தத் தொழிற்சங்கமும் நடத்தாத போராட்டத்தை நாங்கள் தூத்துக்குடியில் நடத்தியிருக்கிறோம். வாரத்திற்கு ஒரு ஹர்த்தால் செய்திருக்கிறோம். மாதத்திற்கு ஒரு ஸ்ட்ரைக் செய்திருக்கிறோம். 3 மாதத்திற்கு ஒரு கதவடைப்பில் கொண்டுபோய் விட்டிருக்கிறோம். இத்தனை செய்தாலும் ஒரு தொழிலாளர் ஒரு "லத்தி" அடிபட்டது கிடையாது. ஒரு தொழிலாளியும் ஒரு சொட்டு ரத்தம் சிந்தியது கிடையாது. இது நமது காங்கிரஸ் சர்க்கார் காலத்திலேயே நடந்திருக்கிறது என்பதை பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். சில இடங்களிலே போராட்டம் நடக்கிறது. போராட்டம் ரத்தக்களறியிலும், "லத்தி சார்ஜிலும்" கொண்டு போய் விடுகிறது. தூத்துக்குடியில் பல போராட்டங்கள் 22 வருஷங்களாக நடத்தியிருக்கிறோம், போராட்டம் என்போம், லேபர் ஆபீசர் வருவார், லேபர் கமிஷனர் வருவார். சமரசம் பேசுவோம், கிடைத்ததை வாங்கிக்கொண்டு, மறுபடி அடுத்த போராட்டத்திற்கு தயாராவோம். அதற்காக நான் தொழிலாளர்கள் மத்தியிலே கட்சிக் கண்ணோட்டத்தோடு வேலை செய்யவில்லை. தொழிலாளி கண்ணோட்டத்தோடு வேலை செய்து பல கோரிக்கைகளை பெற்றிருக்கிறோம். சுருங்கச் சொல்லுவது என்னவென்றால் வேலைக்கு ஆள் எடுப்பது சங்கத்தைக் கேட்டுத்தான். ஆளைத் தள்ளுவது என்றால் சங்கத்தைக் கேட்டுத் தான். வார்னிங் கொடுப்பார்கள், 2, 3 தடவை கொடுப்பார்கள். கடைசி வார்னிங் கொடுக்கும்போது சங்கத்தைக் கேட்டுத் தான் செய்வார்கள். அப்படிப்பட்ட உரிமைகளைப் பெற்றிருக்கிறோம். சங்கம் மூலம் ஒரு கூட்டுறவு சங்கம் நடக்கிறது. ஒரு வெல்பேர் கமிட்டி இருக்கிறது. நாங்கள் எத்தனையோ கோரிக்கைகளை பெற்றிருக்கிறோம். அத்தனையும் சமரசமான முறையிலே அடைந்திருக்கிறோம். பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் சமரச முறையிலே வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். எப்படி என்றால், போனஸ் போராட்டம் வருஷம் தோறும் வரும். அந்தப் போனஸ் பிரச்னையை வைத்து முதலாளிகளுக்கும் தொழிற்சங்கத்திற்கும் சமரசப் பேச்சு தொடங்கும். அப்படிப்பட்ட கட்டத்தில் சில பழி வாங்கப்பட்ட தொழிலாளிகளை நிர்ப்பந்தம் செய்து வேலைக்கு மீண்டும் எடுத்து விடுவோம்.

[Sri A. Samuel Nadar] [14th March 1959

இப்படி பல காரியங்களைச் செய்திருக்கிறோம். இந்த நிலைமையில் போட்டி சங்கங்கள் வைத்திருப்பதினால் பல தொழிலாளர்கள் பழி வாங்கப் படுகிறார்கள் என்றால் அது மிகவும் வருந்தத்தக்கது விஷயம். ஆகவே இவ்விதம் போட்டி சங்கங்கள் ஒன்றும் இல்லாமல் ஒரே சங்கமாக வைத்தி ருந்தால் தொழிலாளர்கள் அநேக நன்மைகள் அடைய முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நமது சர்க்கார் தொழிலாளர்களுக்கு பல காரியங்களை செய்யவேண்டியிருக்கிறது. அதில் சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். தூத்துக்குடியில், அதாவது நமது ராஜ்யத்தில் அதிகமாக உப்பு கிடைக்கக் கூடிய தூத்துக்குடியில் உப்பளத்தில் உத்தேசம் ஒன்றரை லட்சம் பேர்கள் வேலை செய்து வருகிறார்கள். இந்த உப்பளத்தில் தினமும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். ஆரம்பத்தில் வெள்ளைக்காரன் நமது நாட்டுக்கு வந்தபோது அவர்கள் வரக்கூடியக் கப்பலில் மணல் மூட்டைகளுக்குப் பதிலாக உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வந்து அவற்றை இங்கு வியாபாரம் செய்து விட்டு இங்கிருந்து சரக்கை ஏற்றிக்கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். இவ்விதம் உப்பு அந்நிய நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்த காலம் போய் இப்போது சுயதேவைப் பூர்த்தியில் நாம் நமது நாட்டில் உப்பை வேண்டிய அளவுக்கு உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். அந்த அளவில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். அதோடு மட்டும் அல்ல, வெளி நாட்டுக்கும் அனுப்பக் கூடிய அளவு நாம் உப்பு உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு உப்பு அதிகமாக தேங்கிக்கிடக்கின்றன. அதன் காரணமாக உப்பு வியாபாரிகள் எல்லாம் இன்று கண்கலங்கிகொண்டிருக்கிறார்கள். ஆனால் உழைக்கின்ற தொழிலாளிகள் எல்லாம் எந்தவிதமான பயனும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். சுருங்கச் சொல்வது என்றால் அந்த தொழிலாளிகளுக்கு எல்லாம் குறைந்தபட்சக் கூலி கிடைக்கின்ற நிலைமை இன்னும் ஏற்படவில்லை. அதை உடனடியாக சர்க்கார் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு உடனடியாகச் சட்டம் செய்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொழிலாளர்கள் வேலை செய்யும் இடத்தில் குடி தண்ணீர் வசதி கிடையாது. உப்பளத்தில் தங்குவதற்கு நல்ல இட வசதி கிடையாது. அது மட்டுமல்ல, உப்பளத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளி உப்பில் நின்று வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல. பகல் பூராவும் நின்று கொண்டிருப்பதால் அவர்கள் சிறு வயதிலேயே கண் பார்வை இழந்து விடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. அதே போன்று காலில் பாதரட்சை இல்லாமல் அவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இதை எல்லாம் அவர்கள் அனுபவித்துக் கொண்டிரு கிறார்கள். இவற்றை போக்குவதற்காக அவர்களுக்கு நல்ல முறையில் கண்ணாடியும் பாதரட்சையும் கொடுக்கவேண்டும் என்று ஸால்ட் ஆலோசனை குழு கூறி, அதற்காக முயற்சியும் எடுத்து வருகிறார்கள் என்று தெரிகிறது. இதை அரசாங்கம் உடனடியாக கவனித்து அதற்கு ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சங்கு குளிப்புத் தொழிலில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலாளிகள் சென்று மூச்சை பிடித்துக்கொண்டு 70, 80 பாகம் கடலின் அடியில் சென்று சங்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர் கள் இவ்விதம் வேலை செய்து கொண்டிருக்கும் போது கொஞ்சம் மூச்சுத் தவறிவிட்டால் அவர்கள் இறந்து போய் விடுகிறார்கள். இவ்வாறு இறந்து போகின்ற தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடாக எத்தனை ரூபாய் கொடுத் தாலும் தகும். ஆனால் மூன்று நான்கு வருடங்களுக்கு முன்னால் ஒரு தொழிலாளி இறந்து போய்விட்டான் என்றால் நஷ்ட ஈடு கொடுப்பதற்காக அங்குள்ள தொழிற்சங்கங்கள் முயற்சி எடுத்து வேலை செய்யும்போது மந்திரி அவர்களும் சம்மதித்து சுமார் 2,000 ரூபாய் வரை கொடுத்து வந்திருக்கிறார்கள். இந்தத் தொகை போதாது இன்னும் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஆவலாக கேட்டுக்கொண்டிருந்தோம்.



14th March 1959] [Sri A. Samuel Nadar]

ஆனால் இப்போது அந்தத் தொகை குறைந்து ஒரு தொழிலாளி இறந்து விட்டால் 300, அல்லது 400 ரூபாய் தான் நஷ்ட ஈடாக கொடுக்கப்படுகின்ற துர்ப்பாக்கியமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஒரு தொழிலாளி இதில் அகாலமாக இறந்து போய்விட்டால் அவருடைய பெண்டு பிள்ளைகள் வாழ்வதற்கு வசதியாக பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை கொடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. ஏன் இதை சொல்லுகிறேன் என்றால் சங்கு எடுப்பு மூலமாக சர்க்காருக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்று பார்த்தால், இன்றைக்கு நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் சங்குகள் எடுக்கப்படுகின்றன. இதில் செலவு எல்லாம் போக சர்க்காருக்கு நாள் ஒன்றுக்கு 25 ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று நம்புகிறேன். இவ்விதம் வருமானத்தை தேடித்தருகிற தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை சர்க்கார் கவனித்து அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இன்றைக்கு அவர்கள் குடியிருப்பதற்கு நல்ல வீடு இல்லாமல் கஷ்டப்படு கிறார்கள். இவர்களுக்கு வீடு கட்டுவதற்காக ஒரு இடத்தில் ஏழு ஏக்கர் வாங்கப்பட்டது. அந்த இடத்தில் கூட்டுறவு முறையில் வீடு கட்டலாம் என்று நினைத்திருந்தார்கள். ஆனால் துர்ப்பாக்கியவசமாக அவ்விதம் நடை பெறாமல், அந்த நிலத்தை உனக்கு ஒரு ஏக்கர், எனக்கு இரண்டு ஏக்கர் என்று பங்கு போட்டுக்கொள்ள முன் வந்து விட்டதால் கூட்டுறவு முறையில் வீடு கட்டுவது என்பது நடைபெறவில்லை. இவ்விதம் நான் முந்தி, நீ முந்தி என்று சண்டை போட்டுக்கொண்டதினால் முந்தினவர்கள் பலர் அந்த நிலத்தை எடுத்துக்கொண்டார்கள். மீதிப் பேர்கள் எல்லாம் இப்போது வீடு இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆர்வி மில்லில் வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்காக மானேஜ்மெண்டிடமிருந்து கேட்டு வாங்கி வீடுகள் எல்லாம் கட்டி பல வருஷங்கள் ஆகிவிட்டது. சந்திர மௌலி அவர்கள் மந்திரியாக இருந்த சமயம் சுமார் 100 ஏக்கர் புறம் போக்கு நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்து அதில் வீடு கட்டுவதற்கு அவர்களே கல்நாட்டு விழாவையும் நடத்தினார்கள். சர்க்கார் அந்த இடத்தில் வீடு கட்டித் தரவில்லை. அதற்காக அங்குள்ள தொழிலாளர் களும் தொழிலாளர் சங்கமும் சும்மா இருந்து விட வில்லை. அந்த இடத்திலேயே வீடுகளை கட்டினார்கள், இந்த ராஜ்யத்தில் வேறு எந்த இடத்திலும் இந்த மாதிரி வீடு கட்டியிருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். அவ்விதம் கட்டியிருந்தால் அது பெருமைப்படக்கூடிய விஷயம் தான். அதே போன்று தூத்துக்குடியில் தொழிற்சங்க காரியதரிசி வெங்கட கிருஷ்ணன் அவர்களுடைய முயற்சியின் பேரில் வீடுகளை தொழிலாளிகளே கட்டினார்கள். அதற்காக சர்க்காரிடமிருந்து கடன் கேட்கவில்லை. மானேஜ் மெண்டிடமிருந்து கடனை வாங்கி 64 வீடுகளை கட்டினார்கள். இவ்விதம் கட்டியிருக்கின்ற வீடுகளின் வசதியைப் பார்த்தால் குறைந்தது 3,000 ரூபாய் பெறும் ஒவ்வொரு வீடும். கக்கூஸ் ஸெப்டிக் டாங்க் வசதி எல்லாம் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டுக்கும் ஏழு எலெக்டிரிக் லைட்டுகள் இருக் கின்றன. இதற்கு மாதம் ஒன்றுக்கு $12\frac{1}{2}$ ரூபாய் தொழிலாளர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளுகிறார்கள். இந்த வீட்டினுடைய வாடகை மதிப்பைப் பார்த்தால் குறைந்தது 15, அல்லது 17 ரூபாய் போடலாம். ஆனால் எங்களிடம் வாங்குவது $12\frac{1}{2}$ ரூபாய். இவ்விதம் எங்களிடம் வாங்கப்படும் தொகை ஒரு சீட்டுக்கு கட்டுவது மாதிரி சேர்த்துக் கொண்டு இருக்கிறது. இதை யெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் கூட்டு முறையில் கட்டினால் இவ்வளவு வசதியெல்லாம் கிடைக்கிறது என்பதை பெருமையாக சொல்லுவதற்காகத்தான். ஆகையினால் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு முறையில் வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்போது தான் எல்லா தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி கிடைக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மோட்டார் தொழிலாளிகள் சங்கத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மோட்டார் தொழிலாளிகள் எல்லாம் சங்கம் வைத்திருக்கிறார்கள். சில இடங்களில் தொழிலாளர் களுடைய சங்கம் இல்லாத, காரணத்தால் தொழிலாளர்களும் கஷ்டப்பட

[Sri A. Samuel Nadar] [14th March 1959

வேண்டியிருக்கிறது. முதலாளிக்கும் அதனால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எப்போதுமே தொழிலாளர்கள் தொழிற்சங்கம் மூலமாகத் தான் முதலாளிகளை அணுகவேண்டும். அப்போதுதான் காரியங்கள் வெகு சுலபமாக நடைபெற முடியும். ஆகவே எல்லா இடங்களிலும் மோட்டார் தொழிலாளர்களுக்கு சங்கங்கள் அமைப்பதற்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியிருக்குமானால் தொழிலாளி பிரச்னையாக இருந்தாலும் சரி, முதலாளி பிரச்னையாக இருந்தாலும் சரி, அவைகள் வெளி வராத முறையில் தீர்ந்து போகும். இன்றைக்கு மோட்டார் கம்பெனியில் சில வற்றில் மாத்திரம் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். இதல்லாத பல கம்பெனிகளிலும் தொழிலாளர் கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, பல இடங்களில் தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இந்த மாதிரியான கொடூரங்கள் இருக்கின்றன. சங்கத்தில் சேர்ந்ததற்காக சில இடங்களில் இவ்விதம் பழி வாங்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. வெள்ளைக் காரன் காலத்தில் இவ்விதம் நடந்து கொண்டிருந்தது. ஆனால் இப்போது அதே முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்றால் அது மிகவும் துர்ப்பாக் கியமான நிலைமை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே சர்க்கார் இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை நான் ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள் கிறேன்.

* Sri K. PONNIAN : கனம் தலைவர் அவர்களே, நமது தொழில மைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தொழில் மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது தேசிய சர்க்கார் வந்து பத்து பன்னிரண்டு வருடங்கள் ஆகின்றன. உண்மையிலேயே இந்தக்காலத்தில் முக்கியமாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், மில் தொழிலாளிகள், பாக்டரி தொழிலாளிகள் இவர்களுடைய வாழ்க்கைத்தரம் கடந்த 10 வருடங்களாக இருந்து வந்ததை விட பன்மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. குறிப்பாக தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் இன்றைக்கு நல்ல வளர்ச்சியுற்று வருகிறார்கள். அவர்

11-30 a.m. களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. அவர்களுக்கு நல்ல உயர் வான கூலியும், மலைப் பிரதேசத்தில் வேலை வசதிக்கு வேண்டிய இரண்டு கம்பளிகள், போனஸ், ஊர் போய்ச் சென்று வர வழிச் செலவு எல்லாம் நமது தேசிய சர்க்கார் கொடுத்து வந்திருக்கிறது. இருந்தாலும் அவர் களுடைய குறைகளில் 4-ல் ஒரு பங்கைதான் தீர்த்திருக்கிறோமே தவிர, 4-ல் 3 பங்கு பாகம் குறைகள் நிறைவேறாமல் இருக்கின்றன. இங்கே ஒரு சில உதாரணங்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமது தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தேயிலைத் தோட்டம் புதிதல்ல. அவர்கள் பல முறைகள் விஜயம் செய்திருக்கிறார்கள். நான் இதைச் சொல்லும்போது அவர்களுக்கு நன்றாக விளங்குமென்று நான் நினைக் கிறேன்.

இன்றைக்கு வீடு வசதியை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு வீட்டி லும் இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் வாழ்கின்றன. லைன் பக்கம் போய்ப் பார்த்தால், ஏற்கனவேயே மலைப் பிரதேசத்தில் வாழக் கூடிய மக்கள் அத்தனை பேர்களும் ஹரிஜனங்கள்—மலைப் பிரதேசத்தில் லேபர்களுக்குக் கட்டிக் கொடுக்கிற வீடுகளே அதற்குள்ள முறையில்தான் கட்டப்படுகின்றன. அவ்வளவு சிறு வீட்டில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் வாழ வேண்டுமென்றால், அது கண்கொள்ளாக் காட்சியாக—பரிதாபகரமான காட்சியாக—இருக்கிறது. ஹரிஜனங்கள் என்றால் மோசமாகத் தான் மனதில் உருவாகின்றது. அப்படி இருக்கும்போது ஒரு வீட்டில் இரண்டு அல்லது மூன்று குடித்தனங்கள் நடத்த வேண்டுமென்றால், மந்திரி அவர்கள் அந்த நிலையை வைத்துக்கொண்டிருப்பது வருத்தத் தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. நமது சர்க்காரில் வீடு கட்டுவதற் காகப் பணம் கொடுக்கிறார்கள். அந்தப் பணத்தை முதலாளிகள் வாங்க மறுக்கிறார்கள் என்றால் என்ன சொல்லுவது என்று எனக்குப் புரிய வில்லை.



14th March 1959] [Sri K. Ponnian]

அடுத்தபடியாக, எஸ்டேட் முதலாளியினுடைய பங்களாவுக்குப் போக நல்ல ரோடு வசதி இருக்கிறது. எஸ்டேட்டில் வேலை செய்யும் ஸ்டாப்களுக்கு — ரைட்டர்களுக்கு — அவர்களுடைய வீடுகளுக்குப்போக நல்ல ரோடு வசதி இருக்கிறது. ஆனால், தொழிலாளிகளுடைய வீடுகளுக்குப் போக ரோடு வசதியே கிடையாது. தேயிலைச் செடிகளைப் பார்த்திருப்பவர்களுக்குத் தெரியும். தேயிலைச் செடிகள் இடுப்பிற்குமேல் வளர்ந்திருக்கும். இப்படி இடுப்புக்கு மேல் இருக்கக் கூடிய இடங்களில் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பாடி வழியாகத்தான் தொழி லாளிகள் லைனுக்குச் செல்வது வழக்கம். மத்தியில் நுழைந்துகொண்டு தான் பள்ளிப் பிள்ளைகளும், தொழிலாளிகளும் செல்ல வேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

இடுப்பிற்குக் கீழே பூச்சி புழுக்கள் வந்தாலும் தெரியாது. ஆகையால், லைன்களுக்கும் ரோடு போட்டுக் கொடுக்க வேண்டுமென்று மந்திரி அவர் களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. ஒவ்வொரு லைனிலும் 10 வீடுகள் இருக்கும். இந்தப் பத்து வீடுகளிலும் மொத்தம் 30 குடும்பங்கள் இருக்கின்றன. சாயந்திர வேளைகளில் வெளியில் வந்து முற்றங்களில் உட்காரக் கூட முடியாது. அப்படி உட்கார வேண்டுமானால் வெளிச்சம் வேண்டும். ஒவ்வொரு வீட் டுக்கும் வெளிச்சம் போட்டுக் கொடுக்காவிட்டாலும்கூட, ஒவ்வொரு லைனுக்கும் முன்னாலாவது லைட் போட்டுக் கொடுத்தால் இரவு நேரங்களில் வெளி யில் உட்கார்ந்து தங்கள் நேரத்தைக் கொஞ்சம் காற்றோட்டத்தில் கழிப்பார் கள் என்று தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம் சர்க்காரிலே பிரசவ வசதி செய்திருக்கிறார்கள். முதலில் 60 ரூபாய் என்று இருந்தது, இப்போது 75 ரூபாய் வரையில் வந்திருக்கிறது. அதைத் தவிர ஏழு தேசிய விடுமுறை நாட்கள் என்று சம்பளத்தோடு விடுமுறைகள் கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் போற்றத்தக்கது. அதை நான் வரவேற்கிறேன். தொழிலாளப் பெண் களுக்கு எந்த சமயத்தில் பிரசவம் ஆகும் என்ற இந்த சமாசாரமெல்லாம் தெரியாது. ஆஸ்பத்திரியில் போய்ப் பிரசவம் ஆனால்தான் இந்த மெடர் னிடி பெனிபிட் எல்லாம் கொடுக்கிறார்கள். அவர்கள் இருக்கும் இடத்தி லேயே பிரசவம் ஏற்பட்டால், இந்த மெடர்னிடி பெனிபிட்டெல்லாம் கொடுப்பதில்லை. அப்படி வாங்குவதென்றால் அதற்குப் பல சாட்சிகளை வைத்து அதை வாங்க வேண்டியிருக்கிறதிது. அதிலே பெரும் கஷ்டம் இருக்கிறது. லைன்களில் பிரசவம் ஆகிவிட்டாலும் கூட இந்த மெடர்னிடி பெனிபிட்டைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளிகள் வாழும் பிரதேசத்தில் இரண்டு அல்லது மூன்று தொழிற் சங்கங்கள்—போட்டிச் சங்கங்கள் இருக்கின்றன. என்னுடைய பிரதேச மாகிய வால்பாரைப் பிரதேசம் கேரளாவிற்குப் பக்கமாக இருக்கிறது. அதனால் சமீபத்திலே மதுபானம் அதிகமாக இருக்கிறது. ஒருவரை அடக்க வேண்டுமென்று நினைத்தால் 7 அல்லது 8 மைலில் உள்ள கேரளாவிற்குப் போய் மதுவை வாங்கிக் கொண்டு வந்து, அவன் விரோதியே அவன் வீட் டுக்குப் பக்கத்தில் புதைத்து வைத்துவிட்டு, போலீஸைக் கூட்டி வந்து அந்த ஆளைப் பிடித்து விடுகிறார்கள். அதன்மேல் கேஸ் எல்லாம் போட்டு, பைன் ஆகி, பைன் கொடுத்துவிட்டு வந்தால், அந்த மானேஜ்மெண்ட் அவனை ரீ-ரிஜிஸ்டர் செய்ய மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் இதையும் தீர்த்து வைக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கே தொழிலாள மக்களுடைய குழந்தைகள் படிப்ப தற்காக பஞ்சாயத்து போர்டு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. முன் பெல்லாம் தோட்டங்களில் மேஸ்திரிகள் இருந்தார்கள். இந்த மேஸ்திரிகளை சர்க்கார் ஒழித்துவிட்டார்கள். இவர்களை ஒழித்த பிறகு, சூபர்வைஸர்கள் நியமிப்பதற்கு சர்க்கார் மானேஜ்மெண்டுக்கு அதிகாரம் கொடுத்திருக் கிறார்கள். சூபர்வைஸர்களை நியமிக்கும்போது அந்தப் பிராந்தியத்தில்

[Sri K. Ponniah] [14th March 1959

படித்து, முன்னுக்கு வந்த தொழிலாளிகளுக்குச் சலுகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளிப்புறத்திலிருந்து என்ன படித்தவர்களை எடுக்கிறார்களோ, என்ன யோக்கியதாம்சம் இருப்பவர்களை எடுக்கிறார்களோ, அதே யோக்கியதை, அதே படிப்பு, இருக்கும் தொழிலாளர்களை ஏன் எடுக்கக்கூடாது என்று தாழ்மையோடு கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மலைப் பிரதேசங்களில் பிளான்டேஷன் லேபர் ஆக்ட் அமுலுக்கு வந்தும் அதனால் நன்மை வராமல் இருப்பதுபோல் தோன்றுகிறது. பிளான்டேஷன் ஆக்ட் பிரகாரம், ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு ஸ்கூல் வேண்டும், ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு காண்டீன் வேண்டும், ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு கோவாபரேடிவ் ஸ்டோர் வேண்டும், லைன் பக்கத்தில் லெட்ரீன் பெஸிலிடிஸ் வேண்டும், இன்னும் மற்ற பெஸிலிடிஸ் எல்லாம் வேண்டும் என்று இருக்கிறது. அவைகளெல்லாம் இப்போது அறவே மறுக்கப்படுகிறது. ஒரு சில எஸ்டேட்டுகளில் அரைகுறையாக இருக்கிறது. இருந்தாலும் கூட, அநேக இடங்களில் இவைகள் கண்டிப்பாக மறுக்கப்படுகின்றன. அநேக இடங்களில் கோவாபரேடிவ் ஸ்டோர்கள் கிடையாது, காண்டீன்கள் கிடையாது, ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஸ்கூல் கிடையாது என்ற நிலை இருக்கிறது. ஒரு இடத்திலிருந்து ஒரு மைலுக்குள் ஒரு ஸ்கூல் இருந்தால், இன்னொரு ஸ்கூல் அங்கே கட்டக் கூடாது என்று எஜுகேஷன் டிபார்ட்மென்டில் சொல்லிவிடுகிறார்கள். ஒரு டிவிஷனிலிருந்து இன்னொரு டிவிஷனுக்கு $\frac{1}{2}$ மைல் இருந்தாலும் கூட, அந்த டிவிஷனில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் 40 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தேயிலைத் தோட்டத்தை எடுத்துக்கொண்டால், ஒரு எக்கருக்கு $1\frac{1}{4}$ ஆட்கள் இருக்க வேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறோம். 1,000 எக்கர்கள் உள்ள எஸ்டேட்டுகள் இருக்கின்றன. 1,000 எக்கர்கள் இருந்தால் குறைந்தது 1,250 தொழிலாளிகள் இருக்க வேண்டும். 1,000 பேர்களையோ, அல்லது 900 பேர்களையோ ரெஜிஸ்டரில் வைத்துக்கொண்டு விட்டு, தேயிலை ஸீஸனில் டெம்பரரி லேபரர்ஸ் எத்தனை பேர்கள் வேண்டுமோ அத்தனை பேர்களை எடுத்துக்கொண்டு அவர்களிடம் வேலை வாங்கிக்கொண்டு, வேலை முடிந்த பிறகு விலக்கி விடுகிறார்கள். சட்டப் பிரகாரம் 1,250 பேர்களை ரெஜிஸ்டர் செய்ய வேண்டும். நடைமுறையில் 1,000 பேர்களை வைத்துக்கொண்டு, பாக்கி ஆட்களை டெம்பரரியாக வைத்துக்கொண்டு விட்டு வீட்டுக்குப் போகச் சொல்லுகிறார்கள். ஏன் என்று கேட்டால், அவர்களுக்குப் போனஸ் கிடையாது, இரண்டு கம்பளி கொடுக்க வேண்டியதில்லை, மெடிகல் பெஸிலிட்டிஸ் கொடுக்கத் தேவையில்லை, ஆகையால், இது முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறது. ஆகவே, டெம்பரரி ஆட்களை வேலைக்கு எடுக்கக் கூடாது என்று உத்தரவைப் போட்டுவிட்டால், தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மந்திரி அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராச்சுயுடி. இப்போது மேஸ்திரிகளை நிறுத்தி விட்டார்கள். இப்போது தொழிலாளிகளுக்கு கிராச்சுயுடி கொடுத்து ஊருக்கு அனுப்புகிறோம். அந்தத் தொழிலாளி 30 அல்லது 35 ஆண்டுகள் அந்தத் தோட்டத்தில் வேலை செய்து வந்திருக்கலாம். உனக்கு 10 வருஷ ரெகார்டு தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். எங்கே வேலை செய்தாயோ தெரியாது, ஆகையால் புரூப் கொண்டு வா என்று சொல்லுகிறார்கள். எங்கிருந்து அந்தத் தொழிலாளி புரூப் கொண்டு போவது? சூபர்வைஸரைக் கேட்கச் சொன்னால் கூட, அது போதாது, புரூப் வேண்டும், ரெகார்டு வேண்டும் என்று கேட்கிறார்கள். எந்த எஸ்டேட்டுக்குப் போனாலும் இது ஒரு பெரிய சிக்கலாக இருக்கிறது. எஸ்டேட்டில் 10 வருஷ ரெகார்டு தான் வைத்திருக்கிறார்கள். தொழிலாளி 30 வருஷம் வேலை செய்திருக்கலாம், ஆனால் அங்கே ரெகார்டு கிடையாது. மானேஜ்மெண்ட் வாங்கிய தேதியைக் கணக்கில் வைத்தோ அல்லது தொழிலாளியினுடைய ஸர்வீஸை வைத்தோ அவசியம் கிராச்சுயுடி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



14th March 1959] [Sri K. Ponnian]

இரண்டாவதாக ஒரு எஸ்டேட் அடிக்கடி விலையாகி வருகிறது. ஒரு முதலாளி புதிதாக வாங்குகிறார். புதிதாக வாங்குகிற முதலாளி கிராச்சுயுடி கொடுக்கும் போது எந்தத் தேதியிலிருந்து வாங்கினாரோ அந்தத் தேதியிலிருந்துதான் கொடுக்க முடியும், அதற்கு முன்னால் தொழிலாளி ஸர்வீஸில் இருந்த தேதியிலிருந்து கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். வாங்கிய தேதியிலிருந்து கிராச்சுயுடி கொடுப்பது என்றில்லாமல் தொழிலாளியினுடைய ஸர்வீஸை வைத்து கிராச்சுயுடி கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எட்டு மணி நேர வேலை. இது முடிந்த பிற்பாடுதான் அரிசி போடும் வழக்கம் இருக்கிறது. மானேஜ்மெண்டார் அரிசியை மொத்தமாகக் கொள்முதல் செய்து, வாரத்திற்கு ஒரு முறை தொழிலாளருக்கு அரிசி கொடுத்து விடுகிறார்கள். இந்த நிலையில் இவர்களுக்கு எட்டு மணி நேர வேலை தான். எட்டு மணி நேரத்திற்குள்ளாக அரிசியைப் போடுவதா எட்டு மணி நேரம் கழித்து அரிசி போடுவதா என்ற பிரச்னை தலைவலியாக இருக்கிறது. சில மானேஜ்மெண்டார் செய்து விடுகிறார்கள். சில மானேஜ்மெண்டார் அப்படிச் செய்வதில்லை. வேலை முடிந்த பிற்பாடுதான் இதையெல்லாம் செய்வோம் என்று சிலர் சொல்கிறார்கள். இது சில எஸ்டேட்களில் பெரிய பிரச்னையாக இருக்கிறது. இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

டீ, காபி, கார்ட்மம் இவைகள் மலைத் தோட்டப் பயிர்கள். தேயிலைத் தோட்டத்தில் எக்கருக்கு $1\frac{1}{4}$ ஆள் கணக்கிலும் காப்பித் தோட்டத்தில் எக்கருக்கு ஒரு ஆள் வீதத்திலும் வைக்கிறார்கள். காபி எஸ்டேட்டிலே தேயிலை எஸ்டேட்டைக் காட்டிலும் வேலை அதிகம் தான். தேயிலை எஸ்டேட்டில் வேலை பார்க்கும் ஆளுக்கு கூலி ரூ. 1-11-6 ஆணுக்கு. காப்பி எஸ்டேட்டிலே ஒரு ஆளுக்கு ரூ. 1-9-0 கூலி. கேட்டால் லாபம் கிடையாது என்று சொல்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே லட்சக்கணக்கில் லாபம் சம்பாதிக்கிறார்கள். கனம் அமைச்சர் வால்பாறை வந்தபோது, போனஸ் விஷயமாக பிரச்னை எழுப்பப்பட்டபோது, முதலாளிகளை லாபக் கணக்கைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். இன்னும்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முதலாளிகளைக் கேட்டால், ஸ்காட்லண்டு, இங்கிலாந்து மற்ற இடங்களில் கணக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். காபி எஸ்டேட் தொழிலாளிக்கும் கூலியை ரூ. 1-11-6 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ளாண்டேஷன் லேபர் இன்ஸ்பெக்டரும், மற்ற லேபர் ஆபீசர்களெல்லாம் பொள்ளாச்சியில் இருக்கிறார்கள். பொள்ளாச்சியிலிருந்து வால்பாறை 40 மைல் தூரம் இருக்கிறது, "காட்" ரோடு. ஆபீசர்கள் காலையிலே வந்து மாலையிலே திரும்புகிறார்கள். இந்த நேரத்தில் என்ன ஜோலியைக் கவனிப்பார்கள் என்று தெரியவில்லை. ப்ளாண்டேஷன் இன்ஸ்பெக்டரையும் லேபர் ஆபீசரையும் வால்பாறை பிராந்தியத்திலே குடியிருக்கும்படி கண்டிப்பாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் தொழிலாளர்கள் அடிக்கடி அவர்களிடம் போய் குறையைச் சொல்வார்கள். ஆபீசர்களும் மானேஜ்மெண்டை உடனுக்குடனே சந்தித்து வேண்டிய நிவாரணத்தைத் தேடுவார்கள். ஆகையால் லேபர் ஆபீசர்களும் ப்ளாண்டேஷன் ஆபீசர்களும் அவசியம் வால்பாறையிலே குடியிருக்கும்படிச் செய்வது நல்லது என்று தோன்றுகிறது. அதை கனம் மந்திரி அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, எங்களுக்கு இந்த போனஸ் பிரச்னை வேதனையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. 1957-வது வருஷத்துக்கு இடைக்கால நிவாரணமாக ஐந்து ஐந்து ரூபாய் கொடுத்தார்கள். 1957 முடிந்து 1958 நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் 1957-வது போனஸ் பிரச்னை தீர்ந்தபாடில்லை. நான் வால்பாறை திரும்பியவுடனே தொழிலாளர்கள் இதைத்தான் என்னைக் கேட்பார்கள். "அசெம்பிளியில் சொன்னீர்களா? மந்திரியைப் பார்த்தீர்களா? லேபர் கமிஷனரை பார்த்தீர்களா? எத்தனை ரூபாய் சாங்ஷன் பண்ணினார்கள்?" என்றெல்லாம் கேட்பார்கள். இது ஒரு பெரிய பிரச்னை. கனம் அமைச்சர் அவர்களுக்கு தொழில்

பிரச்னையைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. தொழிலாளர்கள் எந்த நிலைமையிலே அங்கே இருக்கும் பிரதிநிதிகளைத் தொந்தரவு பண்ணுவார்கள் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. 1957-வது வருஷ போனஸ், இடைக்கால போனஸ் தான் வாங்கியிருக்கிறோம். முழு போனஸ் கொடுக்கப்படவில்லை. அதற்கு வழிவகை செய்து 1958-வது போனஸையும் சேர்த்து தீர்த்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் சொல்லிய குறைகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் தீர்த்து வைப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த சபாநாயகருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI N. R. THIAGARAJAN : On a point of order, Sir, தொழிலாளர் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான மான்யத்தைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போது கம்யூனிஸ்டு மெம்பர்களோ சபையில் இல்லை. கம்யூனிஸ்ட்டுத் தலைவரோ மற்றும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் முக்கியமாக இங்கே இல்லை.

MR. SPEAKER : கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இப்பொழுது என்னிடம் பேசிக்கொண்டிருக்கிறார்.

SRI N. R. THIAGARAJAN : அவர்கள் வந்த பிறகு விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்.

MR. SPEAKER : கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினர்கள் மாத்திரம் தான் தொழிலாளர்களோடு சம்பந்தப்பட்டவர்களா? அப்படிப்பட்டவர்கள் காங்கிரசிலே இல்லையா? ஐ.என்.டி.யு.ஸி.-இல் இல்லையா? தி.மு.க.-வில் இல்லையா?

SRI N. R. THIAGARAJAN : திரு. பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் கூட இல்லை.

MR. SPEAKER : இப்பொழுதுதான் போனார். வந்துகொண்டிருக்கிறார். திரு. சின்னதுரை இருக்கிறாரே.

(ஸ்ரீ வி. கே. கோதண்டராமன் எழுந்தார்.)

MR. SPEAKER : நான் தான் சொல்லிவிட்டேனே. நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

SRI. V. K. KOTHANDARAMAN : காங்கிரஸ் தரப்பிலே 152 பேர்களில் பத்து பதின்மூன்று பேர் தான் இங்கே இப்பொழுது இருக்கிறார்கள். நண்பர் அவர்களுக்குக் கணக்குத் தெரியவில்லை போலும். எங்கள் கட்சியில் நான்கு பேர்களில் மூன்று பேர்கள் முனிசிபல் கவுன்சில் தேர்தல் சம்பந்தமாக போயிருக்கிறார்கள். மற்றவர்கள் ஊரில் இல்லை. நான் ஒருவன் தான் ஊரில் இருக்கிறேன். இங்கேயும் இருக்கிறேன்.

MR. SPEAKER : இதெல்லாம் எதற்காகச் சொல்லவேண்டும்? நான்தான் சொல்லிவிட்டேனே—நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்று.

*SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழில் மான்யக் கோரிக்கையைப் பொறுத்த அளவிலே சர்க்கார்க் கட்சித் தரப்பிலே ஒரு நண்பர் சொன்னார்—இங்கே தொழிலாளர்பற்றிய மான்யம் விவாதத்தில் இருக்கும்போது அதிகமான அங்கத்தினர்கள் இல்லையே என்று. உண்மையிலேயே அது வருந்தத் தக்க விஷயந்தான். ஆனால், நான் நினைக்கிறேன் தொழிலமைச்சராக இருக்கக்கூடியவர் அனுபவத்திலும் அனுதாபத்திலும் அறிவிலும் ஆற்றலிலும் மிகச் சிறந்து விளங்கக்கூடியவர்; ஆகையால் தொழிலாளர்களுடைய பிரச்னைகள் அவருக்கே நன்றாகத் தெரியும் என்ற காரணத்தினால் அதிகமான அங்கத்தினர்கள் இங்கு இல்லையோ என்று. அது ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது வேறு காரணங்களும் இருக்கலாம்.



அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையிலும் சரி, சென்ற இரண்டு ஆண்டுகளாக தொழில் மந்திரி நடந்துகொண்டுவரக்கூடிய முறையிலும் சரி, அவர் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். குறிப்பாக, பல நல்ல சட்டங்கள் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, பிரசவ கால லீவ், பிரசவ கால அலவன்ஸ், ஹோட்டல் தொழிலாளர்களுக்கென சட்டம் இதுபோன்ற முன்னேற்றமான சட்டங்களை எத்தனையோ நிறைவேற்றியிருக்கிறார்கள். இன்னும் அதுபோன்று பல முன்னேற்றமான சட்டங்களையும் அவர் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

குறைந்தபட்ச சம்பளத்தைப் பொறுத்தவரையில் சட்டத்தின் அட்டவணையில் பல தொழில்கள் சேர்க்கப்பட இருக்கின்றன. உதாரணமாக நம் ராஜ்யத்திலே ஆலோசனைக் கமிட்டி கூடி, 16 தொழிற் துறைகளிலுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று கூறியிருப்பதாக இங்குள்ள அறிக்கை கூறுகிறது. உப்பளத் தொழிலாளர்களைப் பொறுத்த அளவில் அவர்களுக்கு முக்கியமாக குறைந்தபட்சச் சம்பளம் உடனடியாக நிர்ணயிக்கப்படவேணடும்.

அதேபோல், விவசாயத் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், நம்முடைய ராஜ்யத்தில் அவர்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். குடிசைகளிலே வாழக்கூடிய கோடானுகோடி விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைய தினம் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கவேண்டுமென்று பல இடங்களிலிருந்து கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய சட்ட சபையிலும் எல்லாக் கட்சிகளும் கூறியாய்விட்டது. இப்பொழுது அதை நிறைவேற்றுவதற்காக முன்வருகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். பாராட்டுகிறேன். அதை எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். அதைப்பற்றி சில சந்தேகங்கள் இருந்தன. நோடிபிகேஷன் பண்ணிவிட்டாலும் நடைமுறையில் கொண்டுவருவது சிரமமான காரியம் என்பதையும் நான் ஒத்துக் கொள்கிறேன். சில ராஜ்யங்களில்கூட நடந்திருக்கிறது. நடைமுறையில் நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எவ்வளவு சிரமம் இருந்தபோதிலும் அதற்கான கமிட்டிகள் நியமித்து அதை அமுல் நடத்தவேண்டுமென்று வற்புறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். இங்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலே கூட சீக்கிரம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருப்பதாகவும் வெகு சீக்கிரத்தில் குறைந்தபட்சச் சம்பளம் நிர்ணயிக்கப்படும் என்று அறிந்து நாங்கள் சந்தோஷப்படுகிறோம்.

உப்பளத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இன்று அவதியிலே இருக்கிறார்கள். அந்தத் தொழில் மிக லாபகரமாக உள்ள தொழில். அது இன்று க்ஷீணித்துக் கொண்டு வருகிறது. அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமை நாளுக்கு நாள் மிகவும் கேவலமான நிலைமையில் போய்க்கொண்டிருப்பதும் அவர்களுடைய சம்பளம் மிகவும் குறைந்திருப்பதும் தெரிந்ததே. அதனால் அவர்களுக்கு கூட்டாக பேரம் நடத்தக்கூடிய நிலைமை (கலெக்டிவ் பார்க்கெயினிங் பவர்) இல்லாமல் இருக்கிறது. சாதாரண விவசாயத் தொழிலாளர்களைப் போலவே இவர்களும் இருக்கிறார்கள். நோடிபிகேஷன் செய்யப்பட்ட 16 தொழில் துறைகளில் உப்பளத் தொழிலாளர்களும் கூட வருகிறார்கள் என்று அறிகிறேன். அவர்களைப் பொறுத்தும் உடனடியாக கமிட்டி ஏற்படுத்தவேண்டும். இதற்குமுன்னால் கன்யாகுமரி ஜில்லாவில் ஒரு மினிமம் வேஜஸ் கமிட்டி இருந்து, அது 'ரிப்போர்ட் சமர்ப்பிப்பதற்கு முன்னால் ரீ-ஆர்க்கனைசேஸன் வந்துவிட்டது. ஆகையால், இன்றையதினம் கன்யாகுமரி ஜில்லாவில் உப்பளத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கவேண்டுமென்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் வெகு சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டுமென்று மிகவும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

[Sri T. S. Ramaswamy Pillai] [14th March 1959

அடுத்தது போனஸ் விஷயம். சில ராஜ்யங்களில் போனஸை "டெபர்ட் வேஜ்" என்று அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், தொழிலாளர்களுக்கு போனஸ் நிச்சயமாக கிடைக்கும் என்ற நிலைமை, ஒரு வருஷம் கழிந்துவிட்டாலும் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி இரண்டுவிதமான கருத்து இருக்கிறது. லாபத்தில் பங்கு என்பது ஒன்று. மற்றொன்று சம்பளமாகக் கருதப்பட்டு பின்னால் கிடைக்கக்கூடிய சம்பளம் என்ற நிலைமை இரண்டாவது.

அது எப்படி இருந்தபோதிலும் பின்னால் சம்பளம் கிடைக்கும் என்று இருக்கிறார்கள். முக்கூட்டு கமிட்டி போட்டு அதை நிர்ணயிப்பதற்கு முன்னால் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னால் என்ன கொடுத்திருக்கிறார்கள் என்பதை கண்டு பிடித்து அந்த முறையில் கொடுத்தால் நன்மையாக இருக்கும். ட்ரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் பொறுத்த அளவில் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கன்யாகுமரி ராஜ்யத்தில் இதற்கு முன்னால் தொழிலாளர்கள் போனஸ் வாங்கிக்கொண்டு வந்தார்கள். ஆனால் இங்கே கொடுக்கப்படவில்லை. இங்கே இருக்கிறவர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு மாதமாவது கொடுக்க முன் வரவேண்டும். அப்படி இல்லாமல் இருப்பதால் அவர்களுக்கு நிச்சயமாக மன வருத்தம் இருக்கும். ஆகவே அவர்களுக்கு மன வருத்தம் ஏற்படாத நிலைமையில் அவர்களுக்கும் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த முறையில் அந்த முறையைக் கையாள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று வேலை நிர்ணயத்தைப்பற்றி, ஆக்ஸிடெண்டை பொறுத்த மட்டில், என்போர்ஸ்மென்ட் அப் லாஸ் பொறுத்த மட்டில் பார்க்கும்போது சென்ற மூன்று வருஷங்களாக "லாஸ் அப் மான் டேஸ்" நிறைய வளர்ந்து கொண்டே வருவதைப் பார்க்கிறோம். ஆக்சிடெண்டையும் பார்க்கும்போது அது வளர்ந்துகொண்டே இருப்பதைப் பார்க்கிறோம். "மான் டேஸைப்" பார்த்தால், 1956-ல் நான்கு லட்சத்தி இருபத்தி ஓராயிரமும், 1957-ல் ஏழு லட்சத்தி இருபத்தி இரண்டு ஆயிரமும், 1958-ல் ஏழு லட்சத்தி தொண்ணூற்றி இரண்டு ஆயிரமும் இருக்கிறது. இதைப் பார்க்கும்போது எவ்வளவு நாட்கள் தொழிலாளர்கள் வேலை செய்யாத நாட்கள் இருப்பதைப் பார்க்கிறோம். இதை நீக்குவது அரசாங்கத்தினுடையவும், தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளுடையவும் கடமையாகும். ஆகவே இதில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றுமொரு விஷயத்தைப்பற்றி நாம் ஒன்று கவனிக்க வேண்டும். தொழிலாளர்களுடைய இயக்கம் பல வருஷங்களாக நடைபெற்று வருகிறது. அகில இந்திய தலைவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற அளவில் துப்பாக்கி முனையில், தடியடி மத்தியில் பல போராட்டங்களை நடத்தி ரத்தம் சிந்தி தொழிலாளர்கள் இயக்கம் நடத்தி சங்கங்களை அமைத்துக்கொள்வது என்று ஏற்பாடு செய்தார்கள். அப்படி வெற்றி கண்டதன் பயனாக சில உரிமைகளைப் பெற்றார்கள். அப்படி வெற்றி கண்டு சங்கங்களை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை கனம் அமைச்சர் அவர்களே ஒத்துக்கொள்ளுவார் என்றே நினைக்கிறேன். அப்படி இருந்தும் இன்றைய நிலைமையைப் பார்த்தால் தொழிலாளர்கள் முதலாளிகளுடைய தயவில் நிற்கவேண்டியதாக இருக்கிறது. அந்த நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது. தொழிலாளர்கள் முதலாளிகளுடைய அனுதாபத்தில் இருக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலைமையை நீக்குவதற்கு இன்றைக்கு ஒரு சட்டம் இல்லை என்றால் தொழிலாளர்களுடைய சங்கம் ஒன்றும் செய்ய முடியாது. தொழிலாளர்கள் ஒன்று சேருவதற்கு வேண்டிய உரிமை இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உரிமை இருந்தால்தான் அவர்களுடைய சங்கம் வளர்ந்து வரக்கூடும். தொழிலாளர்களை இஷ்டப்படி வேலையை விட்டு நீக்கக்கூடிய அளவில் இருக்கக்கூடாது. தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய நிலைமையில் சட்டம் இருக்கவேண்டும். ஆனால் இப்பொழுது அரசாங்கம் அப்படிப்பட்ட சட்டங்களை இயற்றும் நிலையில் இல்லாமல் இருக்கிறார்கள். சட்ட பூர்வமாக ஒன்றும் செய்ய முடியாத நிலையில் சர்க்கார்



14th March 1959] [Sri T. S. Ramaswamy Pillai]

இன்று இருக்கிறார்கள். இதற்கு ஒரு உதாரணம் கூட சொல்லலாம். சென்னை நகரில் இதைப்பற்றிய ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதாவது வொர்க்கிங் ஜெர்னலிஸ்ட் அசோசியேஷன், பத்திரிகை தொழிலாளர்கள் சம்பந்தமானது, ஹிந்து ஆபீஸ் பற்றியது என்று கருதுகிறேன். (கனம் சபாநாயகரைப் பார்த்து) மன்னிக்க வேண்டும். குறிப்பிட்டவரைப்பற்றி சொல்லுவதற்கு. ஹிந்து ஆபீசில் ஒரு சங்கத்தின் காரியதரிசியை வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள். டிஸ்மிஸ்கூட செய்து விட்டார்கள். அவர் ஒரு தொழிற்சங்க காரியதரிசியாக இருந்ததால் அவரை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். அதற்கு பரிகாரம் தேடிக்கொள்ள முடியாத நிலையில் இருந்தார். அந்த நிலைமை மாறவேண்டும். தொழிற்சங்கங்களுக்கு வேண்டிய உரிமை இருக்கவேண்டும். இப்பொழுதுள்ள நிலைமையில் அவர்களுக்கு வேண்டிய உரிமை இல்லாமல் இருக்கிறது. அந்த அடிப்படையில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டியதாக இருக்கிறது. சங்கம் வைத்துக்கொண்டாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படிப்பட்ட சங்கங்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. தொழில் சங்கங்கள் நல்ல முறையில் அமையவேண்டும். அதற்கு வேண்டிய சட்டங்களையும் திருத்தி அமைக்க வேண்டும். இதற்கு டாப் ப்ரையாரிட்டி கொடுக்கவேண்டும். இண்டஸ்ட்ரியல் டிஸ்பூட்ஸ் ஆக்ட் ஸ்டாண்டிங் ஆர்டர் ஆக்ட் இவைகள் நல்லமுறையில் நடைபெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த முறையில் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும். இந்த வருஷம் இந்தச் சட்டசபையில் அப்படிப்பட்ட திருத்தச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினாலும் சரி, இல்லாவிட்டால் அடுத்த கூட்டத்திலாவது சீக்கிரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றும்படியாக மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக "பார்ட்டிஸிபேஷன் இன் தி மானேஜ்மெண்ட்." அதாவது தொழிலாளர்கள் மானேஜ்மெண்ட்டில் பங்கு கொள்ள வேண்டும் என்பது. இந்த முறையையும் நாம் கொண்டு வர வேண்டும். இதை நடை முறையில் கொண்டு வருவதற்கு பரீட்சார்த்தமாக இரண்டு இடங்களில் நடைமுறைக்குக் கொண்டு வந்து பரீட்சை செய்து பார்க்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக சிம்சன் க்ரூப் கம்பெனியிலும், இரண்டாவதாக ட்ரான்ஸ்போர்ட்டிலும் கொண்டு வந்தார்கள். இவைகளில் தோல்வி அடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது. காரணம் தொழிலாளர்களுக்கும் மானேஜ்மெண்டுக்கும் கருத்து வேற்றுமை இருந்த காரணத்தால் அது தோல்வி அடைந்ததாகத் தெரிய வருகிறது. கனம் அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு சில யோசனைகளைக் கூறியிருக்கிறார். அந்த யோசனைப்படி அது நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்று நான் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன். இது நல்ல முறையில் நடைபெறவேண்டும். இதையே மற்ற ராஜ்யங்களிலும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. அந்த வசதிகளை பயன்படுத்திக்கொண்டு இதை நல்ல முறையில் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். தொழிற் சங்கங்கள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அதற்கு மதிப்பு கொடுக்க வேண்டும். இங்கே சகல வசதிகளும் இருக்கின்றன. இங்கே தொழில் துறையில் இருக்கிற அமைச்சருக்கு இது விஷயமாக நல்ல அனுபவம் இருக்கிறது. ஆற்றல் படைத்தவராக இருக்கிறார். அதனால்தான் இங்கே அதை நல்ல முறையில் நடைபெறுவதற்குக் கொண்டு வருவதற்கு வசதி இருக்கிறது. அவருடைய யோசனையைக் கேட்டு நடந்தால் தோல்வி அடைய முடியாது. திருப்திகரமாக நடக்கும் என்று எதிர் பார்க்கிறேன். இதை நடைமுறைக்குக் கொண்டு வந்து இந்த அரசாங்கம் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக ட்ரான்ஸ்போார்ட்டை எடுத்துக்கொண்டால் ஒரே வேலையை செய்யக்கூடியவர்களுக்கு ஒரேவிதமான சம்பளம் கொடுக்க வேண்டும். சென்னை நகரத்தில் நடைபெறுகிற ட்ரான்ஸ்போர்ட்டையும் கன்யாகுமரியில் நடைபெற்று வருகிற ட்ரான்ஸ்போர்ட்டைப் பார்த்தால் இது நன்றாகத் தெரிய வரும். கன்யாகுமரியில் இரண்டு மூன்று வருஷங்களாக ஒரே அடிப்படையில் கொடுத்து வருகிறார்கள். இங்கே சென்னை நகரில் விலைவாசி அதிகமாக இருந்தாலும் இங்கே ட்ரைவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம்

[Sri T. S. Ramaswamy Pillai] [14th March 1959

40 முதல் 60 வரையிலும் கண்டக்டர்களுக்கு கொடுக்கக் கூடிய சம்பளம் 30 முதற்கொண்டு 45 வரையில் கொடுக்கிறார்கள். ஆனால் கன்யாகுமரியில் அதே வேலை பார்க்கக்கூடியவர்களுக்கு இரண்டு மடங்கு கொடுக்கிறார்கள். அதாவது ட்ரைவர்களுக்கு 50 முதற்கொண்டு 120 வரைக்கும், கண்டக்டருக்கு 40 முதற்கொண்டு 100 வரையிலும் கொடுக்கிறார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN: அங்கே புதியதாக வருகிறவர்களுக்கு இங்குள்ள இதே ஸ்கேல்படிதான் அவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI: சென்னை நகரத்தில் கொடுக்கக்கூடிய முறைப்படி புதியதாக வரக்கூடியவர்களுக்கு கொடுக்கப்படுகிறது என்று சொல்வதால் அவர்களுக்கு குறைவாக இருக்கிறது. அதனால் அவர்களுக்குள் மனக் கசப்பு ஏற்படுகிறது. இந்த நிலைமை இருக்கக்கூடாது. ஒரே வேலையைச் செய்யக்கூடியவர்களுக்கு ஒரே மாதிரியாக சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். இல்லா விட்டால் தொழிலாளர்களுடைய மத்தியில் மனக்கசப்பு ஏற்படுகிறது. அப்படி ஏற்படுத்தாமல் இங்கே இருக்கிறவர்களுக்கும் அதிகப்படியான சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI K. ANBAZHAGAN: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கான இலாகாவைப் பொறுத்து வழங்கப்படுகிற மானியத்தை யொட்டி கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து நான் சில வார்த்தைகளை மொழிய விரும்புகிறேன். தொழிலாளர்களுடைய நலத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்தக் காலத்தில் அரசாங்கத்திற்குத்தான் என்பதையும் தனிப்பட்ட முதலாளிகள் எந்த அளவு இதை உணர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய நாணயத்தை நம்பி தொழிலாளர்கள் இருக்க மாட்டார்கள் என்பதை ஆளும் கட்சி உணர்ந்து இருப்பார்கள் என்றே கருதுகிறேன். தொழிலாளர்களுடைய நலனை பாதுகாக்க வேண்டுமென்ற கருத்தை ஆளும் கட்சியிலுள்ள தொழிலாளர்களுடைய இலாகா அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக்கொண்டு அந்தப் பணியில் ஈடுபட வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

12 noon. அமைச்சர் அவர்கள் இந்த அளவு தொழிலாளர்களுடைய நலத்தைப் பாதுகாக்க வேண்டியவராக இருக்கிற காரணத்தால்தான் எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்த அமைச்சரிடத்தில் நல்ல நம்பிக்கை வைத்து "நாம் சில நேரத்தில் இங்கு இல்லாவிட்டாலும் அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலத்தை நன்றாகக் கவனிப்பார்" என்ற காரணத்தினால்தான் இங்கு இல்லாதிருக்கக்கூடும். ஆனால் காங்கிரஸ் கட்சியில் இருக்கக்கூடிய கனம் தியாகராஜன் அவர்கள், அமைச்சரிடத்தில் போதுமான நம்பிக்கை இல்லாததன் காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் இல்லாத நிலைமையில் மானிய விவாதம் போய்க்கொண்டிருப்பதன் விளைவு வேறுவிதமாகப் போய்விடுமோ என்ற கவலையைத் தெரிவித்தார்கள். ஆனால் கனம் தியாகராஜன் இப்பொழுது சபையில் இல்லை. தொழிலாளர்களைக் கவனிக்க வேறு இடம் தேடிப் போயிருக்கிறார்கள் போலிருக்கிறது.

MR. SPEAKER: அவர் எல்லாத் தலைவர்களைப் பற்றியும் சொல்லவில்லை. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரைப் பற்றி மட்டுந்தான் சொன்னார்.

SRI K. ANBAZHAGAN: இன்றைய தினம் சென்னை மாநிலத்தில் உள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கையில் எந்த அளவு வளர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அதையொட்டி இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் எந்த அளவு குறைந்திருக்கிறது என்பதை ஒருவாறு ஊகிக்கமுடியும். அந்த முறையில் அவர்கள் கணக்குப் பார்க்கும் போது தொழிலாளர்கள் தொழில் துறையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது 1956–57ம் ஆண்டில் இருந்து ஒரே அளவில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் நாம் காண முடிகிறது. அதே நேரத்தில் தனிப்பட்ட சிறு வியாபாரத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய ஊழியர்கள் ஒரு 5,000 பேர் அதிகப்பட்டிருக்கிறார்கள். 1957—58-ம் ஆண்டில் அமைச்சர் அவர்கள் சற்றுப் பெருமிதம் கொள்ளக்கூடிய விதத்தில் ஏறத்தாழ



14th March 1959] [Sri K. Anbazhagan]

25,000 பேர் தொழில் துறையில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். புதிதாக 25,000 பேர் இந்த ஆண்டில் சேர்க்கப்பட்டிருந்தாலும் கூட அதே நேரத்தில் "ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட்" என்று சொல்லக்கூடிய அந்த வகையில் ஏறத்தாழ 1,500 தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் குறைகிறது. இன்னொரு பக்கத்தில் ஏறுகிறது. மொத்தத்தில் சராசரியாகப் பார்க்கும்போது 25,000 பேர்தான் ஒரு ஆண்டில் அதிகமாக வேலை பெற்றிருக்கிறார்கள். நம் நாட்டைப் பொறுத்தவரை—நான் தமிழ் நாட்டைக் குறிப்பிடுகிறேன் 300 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும் பகுதியினர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால் பலருக்குப் போதுமான வருவாய் வர வாய்ப்பில்லை. போதுமான வேலை கிடைப்பதற்கும் வாய்ப்பில்லை. **Insufficient work** என்று சொல்லக்கூடிய நிலையில் அவர்கள் கூலி போதாமல் திண்டாடுகிறார்கள். மொத்தத்தில் வேலை வாய்ப்பு இல்லாமல், கூலி இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நல்வாழ்வு அளிக்கவேண்டியதாக அரசாங்கம் இருக்கும் நிலையில் இந்தத் தொழில் துறையில் ஆண்டுதோறும் 25,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தால் போதுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழில் துறையில் 25,000 பேருக்கு 1957–58-ம் ஆண்டு புதிய வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று கூறுவது நம்முடைய நாடு வளம் பெற்று வருவதாக அர்த்தம் இல்லை; வளர்ச்சியுற்று வருவதாக அர்த்தம் இல்லை. குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு லட்சம் பேருக்காவது வேலை கிடைக்கும்படியான அடிப்படையான திட்டத்தை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டாகவேண்டும். குறைந்தது ஒரு லட்சம் பேருக்காவது ஆண்டு தோறும் வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டால்தான் 50 லட்சம் பேராவது இந்தத் தொழில் துறையில் ஈடுபட கிட்டத்தட்ட 25 ஆண்டு காலம் ஆகலாம். முதல் ஆண்டில் ஒரு லட்சம் பேர் என்றால் வர வர தொழில் வளருமானால் ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம் பேர், 4 லட்சம் பேர் என்று தொழிலாளர் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகும். நெய்வேலித் திட்டம் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டு நாம் நினைக்கிற அளவுக்குப் பயன்படுகிற காலகட்டத்தை ஐந்தாண்டு காலத்திற்குள் உண்டாக்குவதன் மூலம், லட்சம் பேருக்கு மட்டுமல்ல—2 லட்சம், 4 லட்சம் என்று புதிதாக மக்களை இந்தத் தொழில் துறையில் ஈடுபடுத்தக்கூடிய நிலைமையை நம்முடைய அரசாங்கம் உண்டாக்கியாக வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டம் எந்த அளவுக்கு நம்முடைய நாட்டில் இருக்கிறதென்பதை நாம் கவனிப்போமானால்—எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் 1957–ம் ஆண்டில் பதிவு செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 160,505 பேர். இவர்களால் வேலையில் வைத்திருக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை 24,168. கிட்டதட்ட 15 சதவிகிதம் பேருக்குத்தான் வேலை தேடித் தந்திருக்கிறார்கள். நான் குறிப்பாகச் சொல்வேன். இவ்வளவு பேருக்குக் கொடுத்திருக்கக்கூடிய வேலையில் நிரந்தரமாக வேலைகிடைத்தவர்கள் மிகக் குறைவு. பெரும்பாலோர் 15 நாட்கள், 1 மாதம் வேலை பார்த்துவிட்டு அடுத்த 3 மாதத்திற்குள்ளாக மீண்டும் பதிவு செய்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நல்ல வேளையாக 3 மாதத்திற்கு ஒரு முறை பதிவு செய்யவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று கூறுவதற்குக் காரணம் வேலை கிடைத்தவர்கள் இங்கு தெரிவிக்காமல் போனால் பதிவு செய்து கொண்டுள்ள மற்றவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்பதுதான். ஆகவே அவர்கள் 3 மாதத்திற்கு ஒரு முறை வேலை கிடைக்காதவர்கள் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்ற சொல்லுகிற காரணம் சற்றுத் திறமையாகச் சொல்லப்படுகிறது என்று கருதுகிறேன் இங்கு பதிவு செய்துகொண்டு அவர்கள் மூலமாக வேலை கிடைப்பவர்களுக்குப் பெரும்பாலும் நிரந்தரமான வேலை கிடைப்பதில்லை இடைக்கால வேலைகளாகத்தான் கிடைக்கிறது. 15 நாள், 1 மாதம் என்றுதான் அரசாங்க சார்புடைய அலுவலகங்களில் கூட வேலை கிடைக்கிறது

ஆகவே அவர்கள் ஒரு மாத காலம் வேலை செய்துவிட்டுத் திரும்பி விடுகிற காரணத்தால் 3 மாதத்திற்கு ஒரு தடவை பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள், என்று சொல்லலாம். அவர்கள் மூலமாக எவ்வளவு பேருக்கு நிரந்தரமாக வேலை கிடைத்திருக்கிறது என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1958-ம் ஆண்டில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு ஆபீசில் பதிவு செய்து கொண்டிருக்கிறவர்களின் எண்ணிக்கை 196,661. அவர்களில் 26,730 பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது. 1957–ம் ஆண்டை விட 1958–ம் ஆண்டில் வேலை வாய்ப்பு தேடித் தரும் வாய்ப்பு குறைந்திருக்கிறது. வேண்டுமானால் அலுவலகங்கள் விரிவடைந்திருக்கலாம். பல இடங்களில் புதிதாக எம்ப்ளாய்மெண்ட எக்ஸ்சேஞ் ஆபீஸ்கள் அதிகமாகத் திறக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் 13·6 சதவிகிதத்தினருக்குத்தான் அவர்கள் வேலை தேடித் தந்திருக்கிறார்கள். 1957-ம் ஆண்டில் 15 சதவிகிதம் பேருக்கு வேலை தேடித் தந்திருக்கிறார்கள். ஆனால் 1958–ம் ஆண்டில் 14 சதவிகிதம் கூட இல்லை. அதற்கும் குறைந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதைத் தயை கூர்ந்து நோக்கவேண்டும். ஆண்டுதோறும் வேலை பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தல் வேண்டும்.

எவ்வளவு பேர் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள் ? எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது? வேலை கிடைப்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டு வந்தால்தான்—நான் சொல்வேன்—நிச்சயமாக நம்முடைய நாட்டில் நன்மை ஏற்பட முடியுமே தவிர, இந்த முறையில் குறைந்து போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னால் நம்முடைய மாநிலத்தில் வேலை வாய்ப்பு தேடித் தருவதற்கான புதிய தொழிற்சாலைகள் போதுமான அளவுக்கு உருவாகவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நாட்டு மக்களுடைய சராசரி வருமானத்தை உயர்த்த நாம் தவறியிருக்கிறோம்.

இன்றையதினம் வேலை இல்லாதவர்கள் தொழிலாளர் வர்க்கத்தில்தான் மிகுதியாக இருக்கிறார்கள். தொழிலாளர் வர்க்கம், முதலாளி வர்க்கம் என்று பேசுவதை அரசாங்கம் விரும்பாவிட்டாலும், இந்த நாட்டில் அதிகமாக வேலை இல்லாமல் இருக்கக்கூடியவர்கள் தொழிலாளர்கள்தான். ஏழைகளிடையில் தொழிலாளர்களிடையில் 4 பேருக்கு வேலை இருந்தால் 4 பேருக்கு வேலை இல்லாத நிலைமைதான் இருக்கிறது. போதுமான ஊதியம் கிடைக்காமல் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறவர்களே அந்த ஏழை மக்கள்தான். அந்த ஏழை மக்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிற காரணத்தினால்தான் நம்முடைய தேச சராசரி வருமானம் தேய்ந்துகொண்டே போகிறது. ஒரு தொழிலாளி சம்பாதிக்கக்கூடிய சம்பளத்தில் 2 ஆண்கள், 3 பெண்கள் என்று வாழவேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

வேலை வாய்ப்பு அதிகப்படச் செய்வது போலவே, வேலைக்குத் தக்க ஊதியம் கிடைக்கவும் வழி வகைகள் செய்யவேண்டும். இன்றையதினம் பல தொழில் துறையில் இருப்பவர்களுக்கு குறைந்தபட்ச கூலி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் குறைந்த பட்சம் கூலி தீர்மானிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் சிலருக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய கூலி கிடைக்காமல் போய்விடுகிறது. குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்பது அரசாங்கத்தினுடைய கடமையாக இருந்தாலும் **(fair wage)** நியாயமான கூலி கிடைக்க அவ்வப்போது தக்க நடவடிக்கைகளை அரசாங்கமே மேற்கொள்ளவேண்டும். தொழிலாளர்களே அவர்களுடைய கூட்டுச் சக்தியால், முயற்சியினால் தாங்களே ஒரு சங்கம் அமைத்து வேண்டுகோள் அனுப்பினால் அவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க வழி செய்கிறோம் என்பதைவிட எந்தெந்த நேரத்தில் "மினிமம் வேஜஸ்" குறைந்தபட்சக்கூலி இன்றைய வாழ்க்கைத் தரத்திற்குத் தகுந்தது என்று தோன்றுகிறதோ அந்தந்தத் துறையில் நியாயமான வழிவகைகளை அரசாங்கம் கண்டாகவேண்டும் என்று கேட்டுக்





கொள்ளுகிறேன். அதற்குள்ள முக்கியமான காரணம்—இந்த நாட்டைப் பொறுத்த வரை தொழிலாளர்கள் தாங்கள் சங்கங்களாகச் சேர்ந்து இயங்குவது என்பது எல்லாத் துறையில் இருப்பவர்களுக்கும் வழக்கமாக இல்லை. சில துறைகளில்—மில்களில் வேலை செய்பவர்கள், குறிப்பிட்ட சில தொழில் துறையில் இருப்பவர்கள் சங்கமாகச் சேர்ந்து பணியாற்றுகிறார்கள். அவ்வாறு சங்க அடிப்படையில் ஈடுபடாத பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு, பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு அரசாங்கந்தான் பாதுகாப்பு அளிக்கவேண்டும். சங்கம் மூலமாக அவர்கள் தங்கள் கோரிக்கைகளைக் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்ப்பது சற்றுக் கடினம். அதே போல கடையில் ஊழியம் செய்பவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு போதுமான அளவுக்கு இல்லை. அங்கே இருக்கக் கூடிய ஊழியர்கள் சிறிய அதிகாரிகள் மீது குறைபடுகிறார்கள் வேறு சில துறைகளில் பெரிய அதிகாரிகள் மீது குற்றம் கூறுகிறார்கள். ஆனால் இந்தத் துறையைப் பொறுத்தவரை தங்களுடைய உரிமை பறிபோவதைப் பற்றிவேதனையுற்று "ஷாப் இன்ஸ்பெக்டர் போதுமான அளவு எங்களைக் கவனிப்பதில்லை ; எங்களைக் கண்காணிப்பதில்லை ; முதலாளிகளின் கண்காணிப்பு அவர்களுக்குக் கிடைத்துவிடுகிற காரணத்தினால் கடைகளில் வேலை செய்கிற எங்கள் நிலைமையைக் கண்காணிக்க அவர்களுக்கு நேரமே இல்லை" என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அந்த நிலைமையை மாற்றி யமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். ஷாப் சிப்பந்திகள் ஒரு சங்கமாகச் சேர்ந்து தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். சங்கமாக இருந்து பாதுகாப்புப் பெறுவது ஒரு வகையில் அவசியந்தான். ஆனால் சங்கம் என்ற ஒன்று இல்லாவிட்டாலும் கூட அந்த ஷாப் சிப்பந்திகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கவேண்டியது அவசியம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதுபோல தொழிற்சாலைகளில் ஏற்பட்டிருக்கும் விபத்துக்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் 1955-ஆம் ஆண்டிலே ஏற்பட்டிருக்கக் கூடிய விபத்துகளைவிட ஏறத்தாழ இரண்டு மடங்குக்கு மேலே 1958-ஆம் ஆண்டிலே ஏற்பட்டிருக்கிறது. இதில்தான் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களை—1955-ம் ஆண்டிலே ஏற்பட்ட விபத்து 7,395, 1956-ஆம் ஆண்டிலே 10,530, 1957-ஆம் ஆண்டிலே 13,721 என்று படிப்படியாக ஏறிக்கொண்டே வந்திருப்பது 1958-ஆம் ஆண்டிலே 16,577 ஆக உயர்ந்திருப்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ள முடிகிறது. இந்த அளவு வளர்ச்சி நான்கு ஆண்டுகளில், தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை வளரக் காணோம். புதுப் புது ஆலைகள் ஏற்படுவது இந்த அளவுக்கு வளரக் காணோம். விபத்துகளின் வளர்ச்சி அதிக அளவு பெருகியிருக்கிறது.

இதற்கு மூன்று காரணங்கள் இருக்கவேண்டும். ஒன்று, மில் முதலாளிகளின் அக்கறை தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் மிக அதிகமாகக் குறைந்திருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். இரண்டாவது இந்தத் துறையில் அதிகாரிகளின் கண்காணிப்பு குறைந்து விட்டது என்பது ஒரு காரணமாக இருக்கலாம். மூன்றாவது தொழிலாளர்களுக்கு தங்கள் வாழ்க்கையில் அக்கறை குன்றி வேதனை அதிகரித்திருக்கிறது என்பதையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் வேதனை குன்றி வாழ்வில் வெறுப்புத் தோன்றுவதைத் தடுப்பது ஜனநாயக சர்க்காரின் முதற் கடமை. அதிலும் மக்கள் நன்மையைக் கருதுகிற அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே அதிக அக்கறை காட்டுவதற்கு எடுத்துக்காட்டாக இன்னும் திறமையாக அதிகாரிகள் மேற்பார்வையிடுவதற்கு திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்தால் இந்த விபத்துக்களை குறைக்கலாம். இன்னொன்று, இப்படி உயிரை இழந்த தொழிலாளர்களுடைய குடும்பத்திற்கு அதிகமான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பதாக மில் முதலாளிகளை வற்புறுத்தினால் இப்படிப்பட்ட விபத்துக்கள் அதிகமாக ஏற்படாதவாறு அவர்களே தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். மூன்றுவதாக தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் நாளுக்கு

நாள் பெருகி வருகிற வேதனையைக் குறைப்பதற்குத் தக்க நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வேன். இந்த ஆலைகளைக் கண்காணிக்கிற அதிகாரிகள் யார் என்பது முக்கியமல்ல. இந்த அதிகாரிகள் தாங்கள் செய்ய வேண்டிய கடமையை நன்கு உணர்ந்து இவ்வாலைகளைச் சரியான முறையில் கண்காணிப்பு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தொழில் துறையில் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்குமிடையே இருக்கிற உறவு முறை சீர்பெற்று வருகிறதென்று நான் கருதுவேன். மாணவர்களிடையேயும், தொழிலாளர்களிடையேயும் மாற்றுக் கட்சியினர் அதிகமாகத் தூண்டுதல் பிரசாரம் செய்வதன் காரணமாக ஒழுங்கு தவறியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் அடிக்கடி பேசி வருவதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட கருத்து தவறு என்று சொல்லிக்கொள்வேன். தொழில் துறையில் இன்று இருக்கிற உறவு அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. அப்படி பாதிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம்—நாட்டு மக்களிடையே வளர்ந்திருக்கிற மனப்பான்மை—ஆளும் கட்சியனர் அதை ஒத்துக்கொள்ள விரும்பினாலும், விரும்பாவிட்டாலும்—எந்தப் போராட்டத்திலும் வேண்டுமென்றே ஈடுபடுவதில்லை. சில கட்சிகள் வேண்டுமென்றே தூண்டி விடுகிறார்கள் என்று சொன்னாலும் கூட போராட்டம் நடத்த வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே தொழிலாளர்கள் யாரும் ஈடுபடுவதில்லை. தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அந்த அளவு உறவைக் காப்பாற்றி வருகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட அவசியம் ஏற்படவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் உண்டாகிறபோது கூட அவர்கள்—தொழிற்சங்க முறையில் இயங்குவதற்கு முன் வருகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கருத்தை வற்புறுத்திச் சொல்லிக் கொள்வேன். ஜனநாயகத்தை நாம் ஏற்றுக்கொண்டு செயல்படுகிற வரையில் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்க வேண்டுமென்று வற்புறுத்த யாருக்கும் உரிமை கிடையாது. ஒரு தொழிலில் நூற்றுக்கு 51 பேர்களுக்கு மேல் தொழிலாளர்கள் இருக்கக் கூடிய ஒரு சங்கம் இருந்தால் போதும், அரசாங்கம் அவர்களை மட்டுந்தான் ஏற்றுக் கொள்வார்கள் என்கிற ஒரு கொள்க்கையை வகுத்திருக்கலாம். அந்தக் கொள்கை ஜனநாயக நாட்டில் தொழில் துறையில் எல்லோருக்கும் முழுவதும் ஒத்து வரும் என்று எனக்குப் புலனாகவில்லை. தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளால் நடத்தப்படுகிற நிலைமை இருக்கிற வரைக்கும்—தொழிற் சங்கங்களை அரசியல் கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொள்கிற நிலை இருக்கிற வரைக்கும்—நாட்டிலே ஜனநாயக அடிப்படையில் நிர்வாகம் திறம்பட நடப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் இயங்க வேண்டியது அவசியம் என்கிற கொள்கையை ஒப்புக்கொள்கிற வரைக்கும் ஒரு தொழிலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்சங்கம் இருக்கத்தான் செய்யும். நான்கு பேர்கள் ஒன்று சேர்கிற இடத்திலேயே நான்கு பேர்களுடைய அபிப்பிராயமும் வேறு வேறாக இருக்கும்போது—நூறு பேர்களுடைய தொழிற்சாலையில் 25 தொழிலாளர்களுக்காவது மற்றவர்களுக்கு இல்லாத தனிக்குறைகள் இருக்க முடியும். அவர்கள் தனியாகச் சேர்ந்து ஒரு சங்கத்தை அமைத்துக்கொள்வதற்கு அவசியம் இருக்க முடியும். இயற்கையாகவே அப்படிப்பட்ட வேறுபாடுகள் எதுவும் இன்றி ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம என்று அமையுமானால் அதை நான் வரவேற்கிறேன். அப்படி இல்லாத நிலைமையில் நூற்றுக்கு 25 தொழிலாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டாலும் கூட அந்தத் தொழிற் சங்கத்தையும் அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமே தவிர, அவர்களையும் கூப்பிட்டுக் கலந்து காரியங்களை செய்ய வேண்டுமே தவிர—சர்க்கார் ஒரு தொழிற் சங்கத்தைத்தான் அனுமதிப்பார்கள் என்றோ, நூற்றுக்கு 40 பேர்களுக்கு மேல் இருக்கக் கூடிய சங்கத்தைத்தான் அனுமதிப்பார்கள் என்றோ கொள்கையைக் காட்டி, கணக்கைக் காட்டி தொழிற் சங்கங்களைத் தடுக்கிறது என்று வருவது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல. அது தேவையும் அல்ல. வேண்டுமானால் சிறிது காலம் பொறுத்திருந்து அவர்களுடைய சர்வாதிகார ஆட்சி முழுதும் செயல்படுகிற நிலையை அடைந்தவுடன் செயல் படுத்திக்கொள்ள முடியும். அப்போது வேண்டுமானால்



அதை ஏற்றுக்கொள்ளுங்கள், அது வரையில் 25 பேர்களுக்குமேல் இருக்கக் கூடிய தொழிற் சங்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்டு இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து நான் தெரிவித்துக்கொள்வது இத்துறையில் முக்கியமாக நல்லதொரு கொள்கை வகுக்கப்படவேண்டும். அவர்களுடைய ஊதியம், அவர்களுக்குக் கொடுக்கிற படி இவற்றில் திட்ட வட்டமான கொள்கை வகுத்திருக்கவேண்டும். அவர்களுக்கு ஊதியம் உயர உயர வீணாகச் செலவழித்து விடுவார்கள் என்று ஆரம்பிக்கிற வாதம் எங்கே போய் முடிகிறதென்று பார்க்கையில்—தொழிலாளிக்கு ஒரு நியாயம் முதலாளிக்கு ஒரு நியாயம் என்ற அடிப்படையில் ஒரு கொள்கையில் ஏற்படுகிற முரண்பாட்டைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லையென்று சொல்வேன். நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சு அப்படிப்பட்டதொரு கருத்து தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது என்று கூறிக் கொள்கிறேன். சாதாரணமாக தொழிலாளர்களுக்கு, ஊழியர்களுக்கு ஊதியம் உயர உயர அவை வீணாகிப் போய் விடுகிறது அது சேமிப்பு ஆகவில்லை என்று கருதுகிறார்கள் என்றால் அதே நேரத்தில் பெரிய பெரிய பஸ் முதலாளிகளும், மில் முதலாளிகளும் எவ்வளவு பணம் சேர்த்தாலும், கோடி கோடியாகக் குவித்தாலும் அது சேமிப்பாகத்தான் ஆகிறது என்று கருதுகிறார்களா என்பதற்கு விளக்கம் தேவை. அவர்களிடத்திலே கோடிக் கணக்கில் சேர்கிற பணம் எந்த வகையில் இந்நாட்டில் பெருந்தொழில்களை வளர்ப்பதற்குத் துணை செய்கிறது, அரசாங்கத்தின் நல்ல லட்சியத்தை வளர்ப்பதற்கு எந்த வகையில் உதவி புரிகிறது என்று எனக்குப் புரியவில்லை. நியாயம் என்று சொன்னால் இத்துறையில் தலை நிலையில் இருக்கிறவர்களில் இருந்து, கடை நிலையில் இருக்கிறவர்கள் வரையில் ஒரு நிலையான கொள்கை பின்பற்றப்படவேண்டும். இடை இடையில் மாற்றம் இருக்கிறது என்றால் அதை மாற்றம் என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. அது தடுமாற்றம்தான். இந்தத் தடுமாற்றம் இருக்கிற வரையில்—ஏழைக்கு ஒரு நியாயம், பணக்காரனுக்கு ஒரு நியாயம், ஆலைத் தொழிலாளிக்கு ஒரு நியாயம், ஆலை முதலாளிக்கு ஒரு நியாயம், பஸ் கண்டெக்டருக்கு ஒரு நியாயம், முதலாளிக்கு ஒரு நியாயம்—என்று ஆளுக்கு ஒரு நியாயம், சந்தர்ப்பத்திற்கு ஒரு நியாயம் என்று பேசப்படுகிற வாதம் ஆளும் கட்சியினருக்குப் பொருத்தமாக இருக்கலாம். நாம் பேசுகின்ற இந்தத் தத்துவம் நாட்டு மக்களால் விரும்பப்படாதது, ஏற்றுக்கொள்ளப்படாதது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசி வேண்டுகோள், இப்போது தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரவேண்டும் என்கிற திட்டத்தை இந்த அரசாங்கம் பல கோணத்தில் இருந்து நிறைவேற்றி வருகிறது. ஆனால் அது போதுமானதாக இல்லை. சாதாரணமாக சென்னையில் இருக்கிற தொழிலாளர்களை எடுத்துக்கொண்டாலும்—சேரி ஒழிப்புத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும்—தனியார்களுக்குக் கொடுக்கப்படுகிற கடன் தொகையை எடுத்துக் கொண்டாலும், ஸிட்டி இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டை எடுத்துக் கொண்டாலும் இதற்காக ஒதுக்கப்படுகிற பணத்தில் போதுமான வேண்டிய காரியங்களை நிறைவேற்ற முடியாது. மத்திய சர்க்காரிடத்திலிருந்து இத்திட்டத்திற்கு அதிகமாகக் கடன் பெற்று உதவி செய்யவும் வேண்டும்.

அடுத்த ஆண்டிலே லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா கொடுக்கக் கூடிய பண உதவியைக்கொண்டு சில பல வீடுகள் கட்டும் உத்தேசம் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால் லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவினால் எந்த அளவு நிதி இதற்காக ஒதுக்கப்படவேண்டுமென்று கேட்டால் நிச்சயமாகச் சொல்வேன், சென்னை நகரத்தையும் சேர்த்து தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய 5 கோடி ரூபாயாவது ஒதுக்கப்படவேண்டும். அப்படி ஒதுக்கப்பட்டால் தான் சீக்கிரத்திலே இந்த வீடு கட்டும் திட்டமானது வெற்றி பெற முடியுமே தவிர இந்த ஆண்டிலே 20 லட்சம் ஒதுக்கினோம் என்றாலோ, 40 லட்சம் ஒதுக்கினோம் என்றாலோ, 700 வீடுகள் கட்டிக்கொடுத்தோம் என்பதாலோ, தொள்ளாயிரம் வீடுகள் கட்டிக் கட்டிக்கொடுத்தோம் என்பதாலோ நாட்டு மக்களுக்கு திருப்தி ஏற்படப் போவதில்லை. தேவையும் பூர்த்தியாகப்போவதில்லை. இன்றைக்கு இந்தத்துறையில் ஒதுக்கப்படுகிற

[Sri K. Anbazhagan] [14th March 1959

பணம் போதாது. இன்னும் அதிகத் தொகையை கடனாகவோ, மானியமாகவோ பெற்று இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நான் எண்ணிக்கொண்டிருக்கிற சோஷலிஸம் ஒரு நாளும் வரப் போவதில்லை என்று சர்க்கார் கட்சித் தலைவர் இந்த மன்றத்தில் குறிப்பிட்டிருப்பதை நான் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தக் கருத்திலே, இந்தச் சொற்களிலே முதலாளிகளின் சாயலை நான் நன்றாக உணர்கிறேன். சரிந்து கொண்டிருக்கிற முதலாளித்துவம் மீண்டும் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு எப்படிப்பட்ட முயற்சிகளையும் கையாள்வதற்குத் துணிந்திருக்கிற நிலையில்—இன்றைக்கிருக்கிற முதலாளித்துவம் விடுகின்ற எக்களிப்பை என்றால் அந்த வார்த்தைகளில் நன்றாக உணர முடிகிறதென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப் பட்ட நிலையில் சோஷலிஸ தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்கிற ஒரு சர்க்காரிடமிருந்து, எம்மாதிரியான நன்மைகளை—முன்னேற்றத்தை தொழிலாளர்கள் எதிர்பார்த்து பெற முடியும் என்பதைக் கேட்க ஆவலுறுகிறேன். ஏன் இவ்வாறு சர்க்கார் கட்சித் தலைவர் கூறினார் ?

ஏன் இவ்வாறு கூறுகிறார்கள். இது சாமானியமான விஷயம் அல்ல. தனியார் துறையில் தொழில்களுக்கு அதிகமான இடம் ஒதுக்கியிருக்கிறார்கள். எந்தத் தொழில் துறையை எடுத்துக்கொண்டாலும் தனியார் துறையை ஆரம்பிப்பதற்கு வசதி செய்து கொடுக்கிறோம், வாருங்கள் வாருங்கள் என்று வருந்தி வருந்தி அழைக்கிறார்கள். அவ்வாறு அழைக்கும்போது அவர்கள் இஷ்டம்போல் அந்தத் தொழில்களை ஆரம்பிக்கலாம். ஆனால் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தம் உரிமையைக் கோர முடியாது. இத்தகைய கொள்கை தொழிலாளர்களைச் சுரண்ட முதலாளிகளுக்கு பச்சைக்கொடி காட்டுவதுபோல் இருக்கிறது. முதலாளிகள் சம்பந்தமாக என்ன கொள்கையை அனுசரிக்க வேண்டுமென்று பாரதப் பிரதமர் கூறியுள்ளார். சமீபத்தில் நடந்த தொழில்துறை மாநாட்டிலே பேசிய பாரதப் பிரதமர் நேரு அவர்கள் குறிப்பிட்டதை உங்கள் நினைவிற்கு கொண்டுவர நினைக்கிறேன். சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் இங்கு இல்லை. இதை நமது அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு எடுத்துரைப்பார் என்று நினைக்கிறேன்.

**'Vested interests progressively will have no place in this world and any vested interest which comes in the way of fellowman will have still less place. No one wants to attack any one's interest. But in India differences in wealth are terrible, even examples of conspicuous spending. We see differences in the spending capacities of the people. Now can any country, much less politically democratic country, tolerate all that '.**

இந்த வார்த்தைகளைப் பேசினார்கள்.

இம்மாதிரி தொழில் துறைகளை பொதுத்துறையில் ஒதுக்கியிருக்க வேண்டும். கூடியவரை தனியார் துறையில் இருக்கக்கூடாது. இதை எல்லாம் பார்க்கும்போது எல்லாம் புலனாகும். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே எந்தெந்தத் துறைகள் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இன்னின்ன தொழில்கள் செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். பஸ், லாரி போக்கு வரத்தை ராஜ்ய அரசாங்கம் நடத்த வேண்டுமென்ற கொள்கை வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் சர்க்கார் கட்சித் தலைவர் இங்கே பேசும்போது எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், போக்கு வரத்து சாதனங்களை சர்க்கார் நடத்துவதற்கில்லை என்றே கூறுகிறார்கள். அதற்காக பாரதப் பிரதமர் அளித்துள்ள பதிலை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



14th March 1959] [Sri P. S. Chinnadurai]

**Mr. Nehru said : While there might be little fluctuation between production and consumption in some of the consumer goods, there could be no fluctuation in basic things like power, transport, etc. Private enterprise could not assure any such balance. Only planning in a scientific way could bring about the necessary balance. Basic industries would have to be developed in a planned and balanced way and not accidentally. All this could not come out of private fancy.**

பஸ் போக்கு வரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் வற்புறுத்துகிறார்கள். அதைத்தான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் சர்க்கார். இப்போது சர்க்கார் கட்சித் தலைவர் பாரதப் பிரதமர் குறிப்பிட்டதை என்னவாக எடுத்துக் கொள்ளப்போகிறார் என்று கேட்க விரும்புகிறேன். பாரதப் பிரதமர் குறிப்பிட்ட கொள்கையை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று கூறப்போகிறாரா ? தொழில் மந்திரி அவர்களுக்கு முதலாளிகளிடம் அனுதாபம் மிகுந்துகொண்டே போகிறது. நான் பன்முறை கூறியிருக்கிறேன், எப்படிப்பட்ட தொழில் அமைச்சர் எப்படி மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்று. தவறான இடத்திலே கட்டிக் கொடுக்கப்பட்ட நல்ல பெண் புக்ககத்துக் கொடுமையை உணர்ந்தாலும்கூட வெளிப்படையாகக் கூறுவதற்கு இயலாதவளாக இருப்பதைப்போல், அவர் இருக்கிறார். தொழில் மந்திரியிடத்தில் உண்மையாகவே அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில்துறையை தனியார் துறைக்கே ஒதுக்கி இருக்கவேண்டுமென்று மூச்சுவிடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முதலாளிகள் மறுக்கிறார்கள். அலுமினியம் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு தனியார் முன்வர மறுக்கிறார்கள். இருக்கும் தொழில்களையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மக்கள் பெரிதும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாளிலே சர்க்கார் என்ன செய்கிறார்கள் என்றால் பழைய தொழிற்சாலைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ளாமலிருப்பது மட்டும் அல்ல, புதிய தொழிற்சாலைகளையும் தனியார் துறைக்கே விட்டுவிடத் தயாராயிருக்கிறார்கள். என்ன உதவி வேண்டுமானாலும் செய்கிறோம் என்று கூப்பிடுகிறார்கள். ஆனால் அவர்கள் அதிக கிராக்கி பண்ணுகிறார்கள். பல தொழில்களை எப்படியாவது ஆரம்பிக்கவும் தொழிலாளர்களுக்கு இங்கு வேலை கொடுக்கவும் முயற்சி செய்துகொண்டுள்ளனர் முதலாளிகள். இந்த முயற்சிக்கு நாம் தடை போடாமல் முதலாளிகளுக்கே புதிய தொழில்களை ஒதுக்கிக் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் கட்சித் தலைவர் காரணம் சொல்ல ஆரம்பிக்கிறார்கள். அப்படி ஒரு கொள்கையை அனுசரிப்பதன் காரணமாக எந்த அளவுக்கு முதலாளிகள் நம் ராஜ்யத்தில் உரம் பெற்று வருகிறார்கள் என்பதை சற்று கவனிக்க வேண்டும்.

தொழில் மந்திரி கொடுத்திருக்கும் தகவலைப் பார்த்தால் தொழில் தகராறுகள் இதே ஆண்டில் அதிகரித்திருப்பதை நாம் பார்க்கிறோம். முந்தைய ஆண்டில் 8,586 தொழில் தகராறுகள் இருந்தன. 1958-ம் ஆண்டிலே 9,255 தொழில் தகராறுகள் ஏற்பட்டுள்ளன.

**The Hon. Sri R. VENKATARAMAN** : தொழிலாளர்கள் ரொம்ப விழிப்பாக இருக்கிறார்கள் என்று ஆகுமே தவிர தகராறு ஜாஸ்தியாக போய்விட்டது என்று அர்த்தம் அல்ல.

* **Sri P. S. CHINNADURAI** : தொழில் தகராறு என்னவென்றால் ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அந்தத் தொழிலாளியை எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை வருகிறது. தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை குறைத்து ஒரு சுபிட்ச ராஜ்யத்தை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லப்படுகிறது. கூறப்படும் வார்த்தைகளுக்கு ஏற்றவாறு நமது சிந்தனை செயல்படுகிறதா ? பண்டித நேரு அவர்கள் கூறுவதைக் கேளுங்கள் :

**'We get tied to dogmas and words and forget that in a changing world, ideas change, conditions change and we change with it and yet our minds are locked up in prison.'**

சமதர்மம் தன்னுடைய கொள்கை என்று கூறுகிறபோது வாய்தான் அவ்வாறு கூறுகிறதே ஒழிய, நிதி அமைச்சருடைய எண்ணம் சிறைப் படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் கூறுகிறேன். முதலாளிகளுக்கு அதிகப்படியான சலுகை கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவு முதலாளிகள் வளர்ந்துபோயிருக்கிறார்கள். இதற்கு பிளீச்சிங் பாக்டரி ஒரு சரியான எடுத்துக்காட்டாகும். தொழில் மந்திரி என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதை சுமுகமாக செய்ய முயற்சி எடுத்துக்கொண்டார். இதைச் சுமுகமாக தீர்த்து வைப்பதற்கு தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு ஏற்படுத் திக் கொடுப்பதற்காக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அந்த முயற்சி 12-30 p.m. களெல்லாம் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் முடிவு என்ன ? இதை தொழில் மந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் இவ்வாறு அறிக்கை கொடுக்கப்பட்ட பிற்பாடுகூட முதலாளிகள் அழைக்கப் பட்டு அவர்களுக்கு மீண்டும் சொல்லப்பட்டது : "நீங்கள் நியாயமாக நடந்து கொள்ளுங்கள், தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள், சுமுகமாக நடந்து கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு மீண்டும் சொல்லப்பட்டது. ஆனால் அவர்கள் அதையெல்லாம் ஏற்றுக் கொண்டார்களா ? ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கச்செய்ய, இந்த ராஜ்ய அமைச்சர்களில் செல்வாக்குள்ள அமைச்சர்கள் என்று சொல்லப்படும் அமைச்சர்கள். அத்தனை பேரும் முயன்று பார்த்தார்கள். இவர்கள் அத்தனை பேரும் முயல்வது என்பது மந்திரி சபை முழுவதுமே சேர்ந்து முயலுவது ஆகும் என்று நான் கருதுகிறேன். இவர்கள் அவ்வளவு யோசனைகளைச் சொல்லியும் முதலாளிகள் அவைகளை யெல்லாம் ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறார்கள் என்றால் அவர் களுடைய துணிச்சலை நாம் பார்க்க வேண்டும். எப்படிப்பட்ட காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம், எப்படிப்பட்ட நிலைமையில் முதலாளிகள் நமக்கு பதிலிறுத்து விட்டுப் போகிறார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். சர்க்காரின் தொழில் இலாகா சம்பந்தப்பட்ட வரையில் எனக்குக் குறை இல்லை. அந்த இலாகாவினர் என்ன செய்ய முடியும் தங்களால் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறார்கள்.

(Deputy Speaker in the Chair.)

சட்டங்களின் வரம்பிற்குட்பட்டு மாத்திரமன்றி வரம்பிற்கு அப்பாற்பட்டும் அவர்கள் தொழிலாளர்கள் நலனுக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். சில காரியங்களை, சமூக ரீதிக்கொப்ப செய்ய வேண்டும் என்று மக்கள் கருதுகிறார்கள். அவைகள் சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டவை. அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவும் அவர்கள் முயன்றிருக்கிறார்கள். தொழில் அமைச்சர் முதல் தொழில் இலாகாவில் கீழேயுள்ள கடைசி அதிகாரி வரையில் இவ்வாறு நன்றாகப் பணியாற்றியிருக்கிறார்கள் என்று நான் கூறுவேன். அவர்கள் திறமையாகக் காரியங்களைச் செய்ய முற் பட்டிருக்கிறார்கள். நாம் அனுஷ்டிக்கும் தொழில் கொள்கையைத்தான் நான் குறை கூறுவேன். அது குறையுள்ளதாக இருக்கிறது. தொழில் கொள்கையின் விளைவுதான் இந்தப் பிரச்னைகள். இந்த சர்க்கார் அனுஷ் டிக்கும் தொழில் கொள்கையின் காரணமாகத்தான், இவர்களுடைய முயற்சிகளெல்லாம் வீணாகப் போகின்றன. முதலாளிகள் பிடிவாதமாக இருந்துவிட்டால் யாரும் அவர்களை அசைக்க முடியாது. அதற்கு இடம் கொடுக்கிறது நாம் அனுஷ்டிக்கும் தொழிற் கொள்கை. மேட்டுப்பாளையம் யுனைடெட் ப்ளீசர்ஸ் கம்பெனியின் போக்கு இந்த அரசாங்கத்திற்கு ஒரு அறைகூவல். அது இந்த அரசாங்கத்திற்கு மட்டுமன்றி இந்த ராஜ்ய மக்களுக்கும் ஒரு அறைகூவல். ஏனென்றால் இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் மக்களின் பிரதிநிதிகள். "நாங்கள் பெரும்பாலான மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே நாங்கள் எல்லோரும் மக்கள் பிரதிநிதிகள்" என்று கனம் அமைச்சர்கள் அடிக்கடி பெருமைப்பட்டு கொள்கிறார்கள். அவர்கள் அவ்வாறு மக்கள் பிரதிநிதிகள் என்று கூறு வது உண்மையானால், அது இந்த ராஜ்ய மக்களுக்கே ஒரு அறைகூவல்.





இந்த அரசாங்கம் தொழில்களைப் பெருக்க விரும்புகிறது. தொழில்களை பெருக்கும் விஷயத்தில் இந்த அரசாங்கம் 3 லட்சம் பேர்களாக இருக்கும் தொழிலாளர்களை நம்பவில்லை. மிகவும் குறைந்த எண்ணிக்கையிலுள்ள முதலாளிகளையே அரசாங்கம் இதற்கு நம்புகிறது. இந்த ராஜ்யத்தில் தொழிற்சாலை முதலாளிகள் ஆயிரம் பேர்கூட இல்லை. இன்னும் பார்த்தால், நமது ராஜ்யத்தில் பெரு முதலாளிகள் இன்னும் மிகக் குறைவாக இருப்பார்கள். அவ்வளவு குறைந்த எண்ணிக்கையிலுள்ள ஒரு சில முதலாளிகளுக்குச் சலுகை காட்ட வேண்டிய நிலைமையில், அவர் களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் போனால் தொழில்கள் வளராவோ என்ற அச்சத்தில் அவர்கள் சொல்வதற்கெல்லாம் அடிபணியும் நிலையில் இன்று இந்த ராஜ்ய சர்க்கார் இருக்கிறது. இந்த சர்க்கார் சமதர்மத்தில் நம்பிக்கை கொண்டிருந்தாலும், உண்மையிலேயே, முதலாளித்துவமே ஆளக்கூடிய நிலையை உண்டுபண்ணியிருக்கிறார்கள். நாளுக்கு நாள் அது வளர்ச்சியடைந்து வருகிறது. இவ்வாறு நான் கூறுவது மதிப்பிற்குறிய அமைச்சர்களுக்கு வருத்தமாக இருக்கலாம். உண்மையிலேயே இங்கே ஆட்சி நடத்துவது நீங்களா, உங்கள் கட்சியா, அமைச்சரவையா, அல்லது முதலாளிகளா என்று கேட்கிறேன். இங்கே ஆட்சி நடத்துவது உங்கள் அமைச்சரவை என்றால், மேட்டுப்பாளையம் யுனைடெட் ப்ளீசர்ஸ் கம்பெனியார் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள மறுத்த போது உங்களால் என்ன செய்ய முடிந்தது? முதலாளிகள் கண்ணீர் விட்டால் அரசாங்கத்திற்கு இரக்கம் ஏற்படுகிறது. ஒருவர் கண்ணீர் விட்டால், கண்ணீரைப் பார்த்தவுடன், இரக்கப்படுவது மனித இயல்புதான்.

DEPUTY SPEAKER : The hon. Member has got only one minute.

*SRI P. S. CHINNADURAI : முதலாளிகள் விடும் கண்ணீரைப் பார்க்கும்போது நம் அமைச்சர்களின் உள்ளத்தில் இரக்கம் பிறக்கிறது. கண்ணீரைப் பார்க்கும்போது இரக்கப்படுவது மனித இயல்பு தான். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், முதலாளிகள் எதற்காகக் கண்ணீர் விடுகிறார்கள் ? தொழிலாளர்களை வாட்டுவதற்காக; தொழிலாளர்களை மீண்டும் கசக்கிப் பிழிவதற்காக ; தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி தெருவில் நாய்களைப் போல் சுற்றச் செய்வதற்காக கண்ணீர் விடுகிறார்கள் ; இதற்கெல்லாம் அனுமதி வேண்டும், இதற் கெல்லாம் எங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்று முதலாளிகள் கண்ணீர் விடுகிறார்கள். அதைக் கண்டு நீங்கள் இரக்கப்படுகிறீர்கள். ஆனால், தொழிலாளர்கள் விடும் கண்ணீரைப் பார்த்து, தொழிலாளர் களின் குடும்பங்கள் விடும் கண்ணீரைப் பார்த்து நீங்கள் இரக்கப்படு கிறீர்களா ? தொழிலாளர்களுடைய கண்கள், கண்ணீர் விடுவதற்கும் வகையற்றிருக்கும் நிலையில் இருக்கின்றன, அவைகள் அவ்வளவு வற்றிப் போயிருக்கின்றன ; அவர்கள் அவ்வளவு மெலிந்திருக்கிறார்கள். நான் இவ்வாறு கூறுவது உண்மையா இல்லையா என்று பார்க்கவேண்டுமானால் என்னுடன் வாருங்கள், அவர்களைக் காட்டுகிறேன். தொழிலாளர்களுக்கு எவ்வளவு காலம் கொடுமை இழைத்திருக்கிறது, மேட்டுப்பாளையம் யுனை டெட் ப்ளீசர்ஸ் கம்பெனி ; ஒரு இடத்தில் மட்டுமா தொழிலாளர்கள் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள் ! அக்கொடுமையை அழிக்க உங்க ளுக்குத் தரம் இருக்கிறதா, திறன் இருக்கிறதா ? இந்த ராஜ்யத்தை ஆளுவது நீங்களா, அல்லது மேட்டுப்பாளையம் யுனைடெட் ப்ளீசர்ஸ் கம்பெனி முதலாளியா ? இக்கொடுமைகளை அழிக்கவும் தடுக்கவும் உங்களுக்கு செயல் திறன் இல்லையானால் இந்த சர்க்காரை நடத்துவதைக் காட்டிலும் தயவு செய்து வெளியே வந்துவிடுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள் கிறேன். அவ்வாறு செய்துவிடுங்கள். இல்லாவிட்டால், தொழிற் சங்கங்கள் செய்வது, தொழிலாளர்கள் செய்வது, நியாயமானதல்ல என்று சொல்லிவிடுங்கள். அவ்வாறு சொல்லிவிட்டால் அதற்கப்புறம் அதைப் பற்றி நான் பேசவில்லை. தொழிலாளர்கள் செய்வது நியாயம் என நீங்கள் ஒத்துக்கொள்வது உண்மையானால், முதலாளிகள் செய்திருப்பது அநியாயம் என்று நீங்கள் ஒத்துக்கொள்வது உண்மையானால், தொழிலாளர்

[Sri R. Venkataraman] [14th March 1959

முந்நூற்று ஐம்பத்தாறு சில்லறை பாக்டரிகள் மூடப்பட்டன. எஞ்சி உள்ள, அதிகம் வந்திருக்கிற பாக்டரிகள் 194. ஓரளவு வேலை வசதிகள் அதிகரித்திருக்கிறது என்பதைத்தான் நான் இதனுல் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, நம் ராஜ்யத்தில், புள்ளி விவரம் சம்பந்தமாக இருப்பதைச் சொல்லிவிட்டு பின்னர் பொதுவான விஷயத்திற்கு வருகிறேன். நமது ராஜ்யத்தில், ஆக்ஸிடன்ட்ஸ் அதிகரித்துவிட்டது, அதில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று அன்பழகன் அவர்கள் சொன்னுர்கள். பாக்டரிகளில் ஆக்ஸிடென்ட்ஸ் அதிகமாவதற்குக் காரணம் புதிதாக "அன்ஸ்கில்ட் லேபர்" பாக்டரிகளுக்கு போவதினுல்தான் ஆக்ஸிடென்ட்ஸ் ஏற்படுகிறது. புதிய பாக்டரிகளில்தான் இது அதிகமாகயிருக்கிறது, பழைய பாக்டரிகளில் இல்லை. புதிதாக "அன்ஸ்கில்ட் லேபர்" வந்து சேருகிறபோது மில்களில் வேலை செய்து பழக்கம் இல்லாத காரணத்தினுல், இயந்திரங்களில் வேலை செய்து பழக்கம் இல்லாத காரணத்தினுல் "ஆக்ஸிடென்ட்ஸ்" ஏற்படுகிறது. இரண்டாவதாக, புதிய பாக்டரிகளில் யூனியன்கள் கிடையாது. தொழிற்சங்கம் இருந்தால் பாக்டரிகளில் ஆக்ஸிடென்ட்ஸ் வராமல் அவர்கள் பார்த்துக்கொள்ளவும், குறைபாடுகள் இருந்தால் அவைகளைப்பற்றி பாக்டரி இன்ஸ்பெக்டருக்கு எழுதியனுப்பியோ அல்லது முதலாளிகளிடம் எடுத்துச் சொல்லி வாதாடி, இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன, அவைகளைத் தீர்க்கவேண்டுமென்று சொல்லி அந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பார்கள். புதுத் தொழிற்சாலைகளில் யூனியன்கள் இல்லாமல் இருப்பதால் அங்கு நடப்பதை கண்காணிக்க முடியாமல் இருக்கிறது. இருந்தாலும் அங்கும் பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் நேரில் சென்று அதை நன்கு பார்வையிட வேண்டுமென்று சென்ற வருடத்தில் நான் எச்சரிக்கை செய்தேன். சென்ற வருடத்தில் உயிர் இழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை திடீரென்று அதிகமாகப் போய்விட்டது. பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் இதை நன்கு கண்காணிக்கவேண்டுமென்று உத்தரவு போட்டதின் காரணமாக இன்று அதில் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக, சின்னதுரை அவர்கள் சொன்னுர்கள், தொழில் தகராறுகள் எல்லாம் இப்பொழுது அதிகமாகிவிட்டதென்று. தொழில் தகராறுகள் அதிகமாகப் போகவில்லை. தொழிலாளர்களின் கோரிக்கைகள்தான் அதிகமாகப் போயிருக்கிறது. தொழிலாளர்களின் கோரிக்கைகள் சென்ற ஆண்டு 8,586 ஆக யிருந்தது, 1958-ல் 9,552 கோரிக்கைகள் போட்டிருக்கிறுர்கள். இது, தவறு என்று நான் சொல்லவில்லை. தொழிலாளர்சள் கோரிக்கைகள் போடுவது தவறு என்று சொன்னுல்தான் இதை இழிவாக எடுத்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் அப்படி கோரிக்கைகள் போட்டு அவர்கள் ஓரளவு அதில் வெற்றியும் அடைந்திருக்கிறுர்கள் என்பதற்கு அடுத்த புள்ளிவிவரங்களை பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு 569 தொழில் தகராறுகள் கன்ஸிலியேஷன் மூலம் தீர்க்கப்பட்டிருக்கிறது. ஆனுல் 58-ல் 718 தொழில் தகராறுகள் கன்ஸிலியேஷன் மூலம் தீர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தொழிலாளர்களின் கோரிக்கைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டிருப்பது அதிகரித்திருப்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அது சம்பந்தமாக பணியாற்றிய கன்ஸிலியேஷன் ஆபீஸர்களுக்கு இன்னும் ஊக்கம் அளிக்கவேண்டுமென்ற முறையில் அவர்கள் தொடர்ந்து இந்த பணியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலை நிறுத்தங்கள் ஓரளவு அதிகப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டினுர்கள். வேலை நிறுத்தங்கள் அதிகரிப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, சரியான தொழிற்சங்கம் இல்லாத காரணத்தினுல்கூட திடீர், திடீரென்று வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. என்னென்ன காரணங்களிற்காக வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் தனியாகக் கேள்வி போட்டால் அதை பரிசீலனை செய்து அவை எப்படி ஏற்பட்டன என்று சொல்லிவிடலாம். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யலாமா கூடாதா என்ற பிரச்னைதான் அடுத்த கேள்வியாக வரும். தொழில் தகராறுகளை தீர்ப்பதற்கு சர்க்கார் இரண்டு காரியங்கள் செய்யலாம். ஒன்று, நீங்களே சமரசமாக தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டுமென்று சொல்லலாம். அல்லது அதை கோர்ட்டுக்கு அனுப்பிவிடலாம். கோர்ட்டிற்கு அனுப்பி தீர்ப்பு வந்தால், அதை உடனடி அமுல் செய்யவில்லை என்று **strike**, சர்க்கார்



14th March 1959] [Sri R. Venkataraman]

கோர்ட்டிற்கு விடவில்லையென்ருல் அதற்கும் **strike** என்று இருக்கிறது, சர்க்காருக்கு நோட்டீஸ் கொடுக்காமல் செய்யப்படும் **strikes**-ம் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. என்னென்ன காரணங்களுக்காக இவையெல்லாம் ஏற்பட்டிருக்கிறது என்று பரிசீலனை செய்து பார்த்தால் அப்பொழுதுதான் அதற்குள்ள காரணங்கள் தெரியும். ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்; இன்று சர்க்கார் பலவித சட்டங்கள் வகுத்திருக்கிறுர்கள். தொழிலாளர்கள் நியாயமாக தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ள பல வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டு விஷயங்களில் ஒரு காரியம் செய்யமுடியாமல் இருக்கலாம். ஆனுல் பொதுவாக இன்று நம் ராஜ்யத்தில் இருக்கிற நிலைமையைப் பார்த்தால் வேலை நிறுத்தம் செய்வதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லாமல் தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ள வசதிகள் எல்லாம் இன்று இருக்கிறது. அதை தொழிலாளர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு பயன்படுத்திக் கொண்டால் வேலை நிறுத்தத்திற்குள்ள அவசியமே நமது ராஜ்யத்தில் இருக்காது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, இன்று மிக முக்கியமாக நம்மை எதிர்நோக்கியிருக்கும் ஒரு பெரிய பிரச்னை, சில கோர்ட் தீர்ப்பால் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி. ஹை கோர்ட்டில் சமீபத்தில் கொடுக்கப்பட்ட ஒரு தீர்ப்பின் காரணமாக ஸ்டான்டிங் ஆர்டர் பிரகாரம் ஒருவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டால் அது சரியா தவரு என்று கவனிப்பதற்கோ, கண்காணிப்பதற்கோ, தொழில் கோர்ட்டுக்கு உரிமையில்லை என்ற ஒரு தீர்ப்பு ஹைக்கோர்ட்டால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதேவிதமான ஒரு தீர்ப்பு 47-ம் வருடத்தில் ஒரு முறை கொடுக்கப்பட்டு அதற்குப்பிறகு அதன் பேரில் ஒரு அப்பீல் நடந்தது. அப்பீல் கோர்ட்டில் அவர்கள் தீர்மானித்தது என்னவென்று சொன்னுல் தொழில் கோர்ட்டுகள், சாதாரண சிவில் கோர்ட்கள் அல்ல, சிவில் கோர்ட்களுக்கு தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் என்ன ஒப்பந்தம், "**what is the contract ?**" என்பதைத்தான் நிர்ணயம் செய்யமுடியும். ஆனுல் தொழில் கோர்ட்டிற்கு, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் எந்தவிதமான ஒப்பந்தம் இருக்கவேண்டும், "**what should be the contract**" என்று நிர்ணயம் செய்யக் கூடிய உரிமையிருக்கிறது என்று தீர்ப்பு கொடுத்தார்கள். இந்தத் தீர்ப்பை ஒட்டித்தான் பல விஷயங்களிலே தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் ஒப்பந்தப்படி எந்தவிதமான நிலைமை இருந்தாலும் அதை மாற்றி அமைக்கவேண்டும் என்று தொழிலாளர்கள் கோரிக்கை விடுகின்றபொழுது, அதை கோர்ட்டுகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். இப்பொழுது வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் பிரகாரம் நீக்கப்பட்டால், அது ஒப்பந்தப்படி செல்லுபடியாகும் என்று சொல்லப்படுகிறது.

நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய எல்லா தொழில் தகராறுகளை எடுத்துக்கொண்டால், ராஜ்யத்தில் ஏற்படக்கூடிய வேலை நிறுத்தங்களை எடுத்துக்கொண்டாலும், "பர்ஸானல் காஸுக்காக", (**personnel causes**) தனிப்பட்ட நபர்களின் காரணமாகத்தான் அதிகமான தகராறுகளும், அதிகமான வேலை நிறுத்தங்களும் ஏற்படுகின்றன. இந்தக் கஷ்டத்தை நீக்கவேண்டும் என்பதற்காக, நாம் புதியதாகப் போடுகின்ற எல்லா சட்டங்களிலும் யாராவது ஒரு தொழிலாளி காரணம் இல்லாமல், "வித்தௌட் ரீஸனபிள் காஸ்" வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அவர் நேரடியாக சர்க்கார் நியமிக்கிற அதிகாரியிடம் அப்பீல் செய்து, அதுபற்றி தீர்மானம் செய்துகொள்ளலாம் என்ற ஷரத்தைப் போட்டிருக்கிறேம். சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட பீடித் தொழிலாளர்கள் சட்டம், ஹோட்டல் தொழிலாளர்கள் சட்டம் ஆகிய சட்டங்களில் இந்த ஷரத்து இருக்கிறது. இதேவிதமாக நாம் ஒரு சட்டதை இயற்றிவிட்டால், பெரிய அளவுக்கு நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய தொழில் தகராறுகள், "பர்ஸானல் காஸஸ்" (**personnel causes**) சம்பந்தமான தகராறுகள், தனி நபரைக் குறித்த தகராறுகள் ஏற்படாது என்று சர்க்கார் நினைக்கிறது. இது "கன்கரெண்டு லிஸ்டில்" இருப்பதன் காரணமாக இதைப்பற்றி இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறது. விரைவிலே இதற்கான சட்டமும் செய்யப்படலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் தகராறு பற்றிய தீர்ப்புகளை அமுல் நடத்துவது பற்றி
கனம் அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். இதற்கு ஒரு "இம்ப்ளிமெ
டேஷன்" கமிட்டி போடவேண்டும், எந்த அளவுக்கு போடப்பட்டிருக்கிறீ
என்றெல்லாம் பக்கிரிசுவாமிப் பிள்ளை அவர்கள் கேட்டார்கள். கமிட்டிகள்
போடுவது எந்த அளவுக்கு உபயோகமாக இருக்கும் என்பது பற்றி
எனக்கு சற்று சந்தேகம் இருக்கிறது. காரணம் என்னவென்று சொன்
ஞல், தொழில் தகராறுகள் பற்றிய தீர்ப்புகளை நிறைவேற்ருவிட்டால்,
அவர்கள் மீது நாம் சட்டப்படி நடவடிக்கை, பிராஸிகியூஷன் முதலியவை,
எடுக்கலாம். ஆனல் எந்த அளவுக்கு இந்தத் தீர்ப்புகள் அமுல் நடத்தட்
படவில்லை என்று பார்க்கிறபொழுது, கோர்ட்டுகளிலே "ஸ்டே ஆர்டர்"
வாங்கின இடங்களில்தான் அதிகமாக அமுல் நடத்தப்படவில்லை என்ற
நிலைமை ஏற்படுகிறது. ஹை கோர்ட்டிலோ, அல்லது சுப்ரீம் கோர்ட்டிலோ
ஸ்டே ஆர்டர் வாங்கியதின் காரணமாக அமுல் நடத்தப்படவில்லை. கோர்ட்
டின் தடை உத்தரவினல், அதை அமுல் நடத்தக்கூடிய அதிகாரம்
சர்க்காரிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டதன் காரணமாக, அந்தத் தீர்ப்புகள்
"இம்ப்ளிமெண்டேஷன்" செய்யப்படாமல் இருந்துகொண்டு வருகின்றன.
ஆகவேதான் இதில் நாம் எந்தவிதமான மாறுதலும் செய்ய முடியாது.
இன்றைக்கு நமது அரசியல் சட்டத்திலே இருக்கக்கூடிய உரிமையை நாம்
செய்கின்ற எந்தவிதமான சட்டத்தினலும் பரித்துவிட முடியாது. கோர்ட்
டுக்குச் செல்லுவதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமை
எப்படி மாற்றப்படவேண்டுமென்று சொன்னல், பெரிய அளவுக்கு தொழி
லாளர்களும், முதலாளிகளும் நேரடியான சமரசங்கள் செய்துகொள்ள
வேண்டும். அல்லாமல், சட்டத்தை அணுகுகின்ற காலத்தில் சட்டத்தில்
இருக்கக்கூடிய எல்லாவிதமான உரிமைகளையும் இரு சாராரும் தங்கள்
தங்களுக்கு உகந்தவாறு உபயோகப்படுத்துவார்கள் என்பதை தடுக்க முடி
யாது. எனவேதான், சர்க்காரைப் பொறுத்த அளவில், கூடுமானவரை
யில் இம்மாதிரி தகராறுகளை நேரடியான சமரசப் பேச்சுகளின் மூலம்
நீங்கள் முடித்துக்கொள்ள வேண்டும், கோர்ட்டுகளுக்குப் போவதை தவிர்க்க
வேண்டும், அவ்வாறு நேரடியாக சமரசப் பேச்சுக்களின் மூலம்
முடித்துக்கொள்ளுவதினல்தான் தொழிலில் அமைதி வளர்வது மாத்திர
மல்லாமல், ஓரளவுக்கு திறமை, முன்னேற்றமும் ஏற்படும் என்று வற்
புறுத்தி வருகிறது. ஆகவேதான், நான் மீண்டும் வற்புறுத்திச் சொல்ல
விரும்புகிறேன். தொழில் தகராறுகள் ஏற்படுகின்ற காலத்தில் முத
லாளிகளும் தொழிலாளிகளும் நேரடியாக சமரசம் பேசினல், தொழி
லாளர்கள் தங்கள் குறைகளைச் சொல்லுவார்கள், தங்களுக்கு அதிகமான
கூலி வேண்டும் என்று கேட்பார்கள். அதே போல முதலாளிகளும் "ஆப்
ஸண்டிஸம்" அதிகமாக இருக்கிறது. அல்லது வேலைத் திறமை குறை
வாக இருக்கிறது, அதை அதிகரிக்கவேண்டும் என்று தெரிவிப்பார்கள்.
ஆகவே, முதலாளிகள் சொல்லுவதை தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு
தொழிலாளர்கள் சொல்லுவதை முதலாளிகள் ஏற்றுக்கொண்டு பிற
நாடுகளில் கூட்டு ஒப்பந்தங்கள் ஏற்படுவதின் காரணமாகத்தான் அங்கு
கூலி உயர்வும் ஏற்படுகிறது, தொழில் திறமையும் அதிகரிக்கிறது. ஆனல்
நம்முடைய நாட்டில் கூட்டு ஒப்பந்தத்தில் நம்பிக்கை வைக்காமல், கோர்ட்
டில் அதிகமான நம்பிக்கை வைப்பதின் காரணமாக, கோர்ட்டிலே கொடுக்
கின்ற தீர்ப்பிலே அவர்கள் திறமை அதிகரிப்பது பற்றியோ, அல்லது அவர்
கள் "ஆப்ஸண்டிஸம்" குறைப்பது பற்றியோ, வேறு துறையிலே முன்
னேற்றத்திற்கான வழிவகையைப் பற்றியோ எந்தவிதமான தீர்ப்பும்
கொடுப்பதில்லை. கொடுப்பதற்கும் அவர்களால் முடியாது. ஆகவே என்ன
ஏற்படுகிறது என்று சொன்னல் அதிகமான கூலி கொடுத்தால்கூட, நேரடி
யான ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கக்கூடிய சலுகைகளை இந்த நாட்டில்
இருக்கக்கூடிய முதலாளிகள் இழந்துகொண்டிருக்கிருர்கள் என்பதை வற்
புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதை ஒட்டியாவது இன்னும் அதிக
மான நேரடியான ஒப்பந்தங்களில் ஈடுபடவேண்டும், இதில் சட்டப் பிரச்
னையை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது என்பதை வலி
யுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ராஜ்யத்தில் நாம் தொழிலாளர்கள் இன்ஷூரன்ஸ் திட்டத்தை வேக
மாக விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். கடந்த வருஷம் போதிய டாக்
டர்கள் கிடைத்திருப்பார்களேயானல் ராஜ்யம் பூராவும் இன்ஷூரன்ஸ் திட்



டத்தை விஸ்தரித்திருக்க முடியும். 1958-வது வருஷத்தில் போதிய
டாக்டர்கள் கிடைக்காத காரணத்தினலே இன்றைக்கு சென்னை ராஜ்யத்தில்
9 இடங்களிலேதான் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது.
அதை இந்த வருஷம் நிச்சயம் விஸ்தரித்துவிடமுடியும் என்று நம்பு
கிறேன். இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை 9 இடங்களுக்கும் விஸ்தரித்து
விடுவோமானல், இந்தியாவிலேயே முதல் முதலாக நம் ராஜ்யம் தான்
ராஜ்யம் பூராவும் தொழிலாளர்களுடைய இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுல்
நடத்தியவர்களாவோம். அதற்குப் பிறகுதான் அவர்கள் குடும்பத்திற்கு
ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்ருல், பல இடங்களில் அவர்கள் தங்க
ளுக்கு சட்டப்படி கிடைக்கவேண்டிய வசதிகளே கிடைக்கவில்லை என்று
வருந்திகொண்டிருக்கும்பொழுது, கிடைத்திருக்கிற இடத்திலேயேதான்
மேலும் வசதியைப் பெருக்குவது முடியும் என்ற காரணத்திற்காக,
வசதியை பெருக்குவது அவ்வளவு சரியாகாது. இந்த ராஜ்யத்தில் வெகு
சீக்கிரம் ராஜ்யம் பூராவும் இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு
முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அது முடிந்தவுடன் குடும்பத்தின
ருக்கு நாமே முதலாவதாக செய்ய முடியும் என்று நான் நினைக்கிறேன்.
குடும்பத்திற்கும் விஸ்தரிப்பதற்கு நாம் தயார் என்று மத்திய சர்க்காருக்
கும், அந்த போர்டுக்கும் தெரிவித்திருக்கிறோம். அந்த முறையிலே
வெகு சீக்கிரம் அதையும் நிறைவேற்ற முடியும் என்று எதிர்பார்க்
கிறேன்.

பீடித் தொழிலாளர்கள் சட்டம், ஹோட்டல் தொழிலாளர்கள் சட்டம்
இவைகள் இன்னும் அமுலுக்கு வரவில்லை என்பதற்கு சர்க்காரிலே குறை
ஒன்றும் இல்லை. நடைமுறையில் இருக்கக்கூடிய விதிகள் தான் இதற்குக்
காரணம். முதலில் அதை பிரசுரிக்கவேண்டும். அதற்குப் பிறகு "அப்
ஜெக்ஷனுக்கு" 6 வாரங்கள் டைம் கொடுக்க வேண்டும். பிறகு "பைன
லைஸ்" செய்யவேண்டும். டேபிள் மேல் வைக்கவேண்டும். இம்மாதிரி
யான பலவிதமான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்தக் கட்டுப்பாடு
களின் காரணமாகத்தான் ஓரளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஏப்ரல்
மாதத்திற்குள் இந்த விதிகளெல்லாம் பிரசுரமாகி சட்டம் அமுலுக்கு
வந்துவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் நாம் ஓரளவு முன்னேற்றம்
கண்டிருக்கிறோம். ஆனல் அது போதாது. மத்திய சர்க்கார் இதற்காக
கொடுத்த 75 லட்சம் ரூபாய்க்கு நாம் இந்த வருஷத்திலேயே அதற்கு
வேண்டிய சாங்ஷன் எல்லாம் செய்துவிட்டோம். இனிமேல் வருகின்ற
இரண்டு வருஷங்களுக்கு பணம் இல்லை என்று கூடச் சொன்னேன். இன் 1 p.m.
னும் ராஜ்ய சர்க்கார் சென்ற ஆகஸ்டு மாதத்தில் முதலாளிகளையும், தொழி
லாளிகளையும் அழைத்து ஒரு மகாநாடு நடத்தியது.

அதில் ஒவ்வொரு முதலாளியும், அதாவது ஆயிரம் தொழிலாளர்களை
வைத்து வேலை செய்து கொண்டிருக்கின்ற முதலாளிகள் ஒவ்வொருவரும்
குறைந்த பட்சம் வருடம் ஒன்றுக்கு 4 சதவிகிதம் வீடுகட்டி கொடுக்க
வேண்டுமென்றுள்ள ஒரு திட்டத்தை சொன்னேன். ஆனல் மிகவும்
வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கூட்டத்திற்கு தொழி
லாளர்கள் தலைவர்கள் யாரும் வரவில்லை என்பதை. இதே மாதிரி
ஒரு கூட்டத்தை வருகின்ற ஏப்ரல் மாதத்தில் கூட்டப்போகின்றேன். அதற்
காகவது நிச்சயமாக வருவார்கள் என்று நம்புகிறேன். கழிந்த ஆறு
மாத காலமாக இதற்கு என்ன திட்டம் வகுத்திருக்கிருர்கள், இதில்
எவ்வளவு தூரம் செயல்பட்டிருக்கிருர்கள் என்பதையெல்லாம் பரிசீலனை
செய்யப்போகிறோம். இந்த முறையில் அவர்கள் வருடம் ஒன்றுக்கு நான்கு
சதவிகிதம் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு முன் வர
வில்லை யென்ருல் நிச்சயமாக இதற்காக ஒரு சட்டம் பிறப்பிக்கப்படும்
என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பொறுப்பை
தட்டிக் கழித்துக்கொண்டு போக முடியாது. இவ்விதம் வருடம் ஒன்றுக்கு
4 சதவிகிதம் வீடு கட்டி கொடுப்பார்கள் என்ருல் 12 வருடங்களுக்குள்
இருக்கக்கூடிய தொழிலாளர்களில் 50 சதவிகிதம் தொழிலாளர்களுக்கு
வீடு கட்டிக் கொடுக்க முடியும். ஆகவே முதலாளிகள் இதில் ஈடுபட

இல்லாவிட்டால் உற்பத்தி பாதகம் ஆகி விடும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சட்டத்தை நம்பி சட்ட பூர்வமாக நடக்கிறோம் என்று எல்லோரும் சொல்ல ஆரம்பித்து விட்டால் சமூகத்தில் அமைதிக்கே ரொம்பக் கஷ்டமாகப் போய்விடும். ஆகவே தான் தொழிலாளர்களை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன், சட்டப் பிரச்னைகள் எப்படி இருந்தபோதிலும், நியாயமாக—நல்ல முறையில்—ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டும். தொழில் வளம் பெருகுவதன் மூலமாகத்தான் தொழிலாளர் நலன் பெருகும். அதற்கு அடிகோல வேண்டிய பொறுப்பு இன்றைக்கு தொழிற் சங்கத் தலைவர்களிடத்தில் இருக்கிறது. பெருமளவுக்கு இன்றைக்கு அந்தப் பணியில் ஈடுபட்டு நல்ல சேவை செய்திருக்கிறார்கள் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. இருந்தாலும், ஏதாவது குறைபாடுகள் இல்லாமல் இருக்க முடியாது. அவைகளையும் போக்க வேண்டிய பெரு முயற்சியில் தொழிற் சங்கத் தலைவர்கள் ஈடுபடவேண்டும்.

அதே முறையில் முதலாளிகளைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய சுய நன்மையையொட்டிக்கூட, சமூகத் தொழில் உறவு வைத்துக் கொள்வதுதான் நல்லது. சமூகத் தொழில் உறவு இருக்கும்போது தான் தொழில் வளர்ச்சியும், தொழில் நுட்பமும், தொழில் திறமையும் அதிகரிக்கும். அப்படியில்லாமல் இருந்தால் தொழில் வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லாமல், தொழிலாளர் பிரச்னைகளைப்பற்றியே எப்போதும் சிந்திக்கும் நிலையில் நிர்வாகஸ்தர்கள் இருப்பார்களானால், நாம் தொழில் வளத்தைப் பெருக்க முடியாது. அந்த நல்லெண்ணத்தைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு விஷயங்களை மட்டும் கனம் சின்னதுரை அவர்கள் வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். சர்க்காருக்குச் சக்தியில்லை என்று சொன்னார்கள். பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் சர்க்கார் பயப்படுகிறது என்று சொன்னார்கள். இன்னும் யார் யாரோ ஏதேதோ சொன்னார்கள். சர்க்கார் முதலாளிகளுக்குச் சொந்தமாய்ப் போய்விட்டது என்று சொல்லுகிறார்கள். இதெல்லாம் விவாதத்தில் சொல்லக்கூடிய வார்த்தைகள் என்றே பதில் சொல்லாமல் விட்டு விட்டேன். நீங்கள் இந்த மாதிரிச் சொல்வதைப்பற்றி இன்னொருவர் சந்தோஷப்பட்டால் அதைப்பற்றிப் பரவாயில்லை. பயந்து இருக்கிற சர்க்கார் தான் நல்ல சர்க்கார். திமிர் பிடித்த சர்க்கார் நல்ல சர்க்கார் அல்ல.

தொழில் கொள்கையைப் பொறுத்த மட்டில் இன்றைக்கு தொழில்களை தேசீய மயமாக்க வேண்டுமா என்பதைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. தொழில் மான்யம் வரும்போது இதைப்பற்றி விளக்கமாகக் கூறுகிறேன். இவ்வளவு நல்ல முறையில் நடக்கிற இலாகாவிற்குப் பாராட்டுதல் தெரிவிக்கும் முறையில் வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக் கொண்டு மான்யத்தை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

HON. MEMBERS : விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி. . . .

THE HON. SRI R. VENKATARAMAN : நான் முன்பே ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது சொன்னேன். இந்த வருஷ இறுதிக்குள்ளாக விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டு விடும்—நிச்சயமாகச் செய்யப்படும்—என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : அதிக பட்சம் 6 மாதங்களுக்கு மேல் தொழில் தகராறுகள் நீடிக்கக்கூடாது, தீர்க்கப்படவேண்டும், இந்த 6 மாதங்களில் 15 நாட்கள் சம்பளமாவது கொடுக்கப்படவேண்டும் என்பவைகளைப்பற்றியும், தொழிற்சாலைகளில் லேபர் வெல்பேர் ஆபீஸர்களுடைய போக்குபற்றியும், மூடி இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை சர்க்கார் திறந்து நடத்தவேண்டுமென்பதைப்பற்றியும், அமைச்சர் அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்று தெரிந்து கொள்ள முடியுமா ?



THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு பெரிய விவாதத்திலே ஒவ்வொருவரும் சொன்ன எல்லாப் பிரச்சினைகளுக்கும் பதில் சொல்ல முடியாது. ஒன்றுக்கு மாத்திரம் நான் பதில் சொல்லி விடுகிறேன். மூடி இருக்கிற தொழிற்சாலைகள் எல்லாவற்றையும் சர்க்கார் எடுத்து நடத்தவேண்டுமென்ற கொள்கையை ஏற்க முடியாது—இதை எந்த ராஜ்யத்திலும் செய்ய முடியாது. மூடுவதற்குக் காரணமே அன்-இக்கனமிக் யூனிட்ஸ் என்பதுதான். சரியாக வேலை செய்ய முடியாத காரணத்தினால்தான் மூடப்படுகிறது. ஏதோ பிடிவாதமாக மூடப்படுகிறது என்று சொன்னால், அதை எடுத்து நடத்த ஏற்பாடு செய்யலாம். அதற்கு வழிகள் சட்டத்தில் இருக்கின்றன. ஆனால் தனிப்பட்ட நபர்களால் நடத்த முடியவில்லை, பழைய மில்களாக இருக்கின்றன, ஓட்டை-உடைசலாக இருக்கின்றன, அல்லது கட்டுபடியாகாது இருக்கின்றன என்றால், அவைகளை சர்க்கார் எடுத்து நடத்தினால், அது யாருக்கு நஷ்டம் என்று கேட்கிறேன். அதனால் மக்களுக்குத்தான் நஷ்டம். பொது மக்களுக்கு நஷ்டமாக இருப்பதால்தான் அவைகளை எடுத்து நடத்த முடியவில்லை. சமீபத்திலே ஒரு மில்—காளீஸ்வரர் மில்—இதை யாரும் எடுத்து நடத்த முன் வர மாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். நான் கூட யார் யாருக்கோ சொல்லிப் பார்த்தேன்—ஒருவர் கூட முன்வர வில்லை—மாட்டேன் என்று சொல்லி விட்டார்கள்.' " ஹாட் பொட்டெட்டோ " மாதிரி—தொட்டால் கை வெந்து போகக் கூடியதாக—ஓட்டை-உடைசலாக இருந்தால் இவற்றை சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்த முடியாது. அதைத்தான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றபடி, இதர விஷயங்களை சர்க்கார் பரிசீலனை செய்துதான் சொல்ல முடியுமே தவிர, கேட்டதற்கெல்லாம் உடனே ஏதாவது வரம் கொடுப்பதா ? நான் யோசனை செய்து தான் சொல்ல வேண்டும்.

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 30,29,700 under Demand XXIV—Labour including Factories—be reduced by Rs. 100 ".

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 30,29,700 under Demand XXIV—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 16th March 1959. 1-16 p.m.

The House then adjourned.

## IV.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—*Statutory Rules, Orders and Notifications.*

107. *Notification issued with G.O. No. 275, Local Administration, dated 9th February 1959, extending the term of office of the members of the Ambasamudram Panchayat, Tirunelveli District, under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950. [Laid on the table of the House under section 113 (4) of* the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]

வேண்டும் என்பதை நான் சென்ற கூட்டத்தில் வலியுறுத்திச் சொன்னேன். அதைத்தான் இப்போதும் நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக (பிளான்டேஷன்) தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்கின்ற குறைகள் பற்றி சொல்லப்பட்டன. இப்போது ஒவ்வொரு தோட்டமும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றப்படுகின்ற பொழுது தொழிலாளர்களை நிறுத்துவதாக இருந்தால் அவர்களுக்கு சட்டப்படி "கிராட்டியிட்டி" கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. இவ்விதம் "கிராட்டியிட்டி" கொடுத்து நீக்கிவிட்டால் அவர்களுக்கும் முதலாளிகளுக்கும் இருக்கின்ற ஒப்பந்தம் எல்லாம் போய் விடுகின்றது. இதில் புதிதாக வாங்குகின்ற சில முதலாளிகள் தொழிலாளர்கள் எல்லோரையும் எடுத்துக் கொள்வதில்லை என்கின்ற நிலைமையும் இருக்கிறது. சில தோட்டங்களில் கிராட்டியுட்டி கொடுக்காமல் பழைய தொழிலாளர்களையே நீடித்து வைத்துக் கொண்டும் இருக்கிறார்கள். இதில் சட்டப்படி நாங்கள் நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். பொதுவாக இப்படிப்பட்ட முதலாளிகளுக்கு ஒரு கோரிக்கையை தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது இவ்விதம் புதிதாக தோட்டங்களை வாங்குகின்ற பொழுது அதில் இருக்கக்கூடிய சிப்பந்திகளையே நீடித்து வைத்துக்கொள்வதற்கு முயற்சி செய்யவேண்டும். இல்லையென்றால் நிறுத்தப்படுகின்ற தொழிலாளர்களுக்கு இவர்கள் "கிராட்டியுட்டி" பணம் ஏராளமாக கொடுக்கவேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, இவ்விதம் கொடுக்கப்படுகின்ற பணத்தை தொழிலாளர்கள் சீக்கிரமாகவே செலவழித்து விடுகின்றனர். ஆகவே தோட்டத்தை நடத்துகின்றவர்களுக்கு இது நல்லதல்ல. கூடுமானவரை பழைய ஆட்களையே வைத்துக்கொள்வதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக வேலை இழந்த "ப்ரொகிபிஷன்" குற்றம் முதலியவைகளில் ஈடுபட்டதின் காரணமாக வேலை இழந்த தொழிலாளர்களுக்கு வேலை திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று சொல்லுகின்ற விஷயத்தில் சர்க்கார் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிப்பதற்கில்லை என்பதை நான் முன்பே சொல்லிவிட்டேன். குற்றங்களை செய்வதற்காக தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதற்காக அந்தத் தொழிலாளி விடுதலையாகி திரும்பி வரும் வரை அவருடைய வேலையை காலியாகவே வைத்து இருக்கவேண்டும் என்று சர்க்கார் முதலாளியிடம் சொல்வது என்பது சரியல்ல. ஆனால் தொழிற் சங்க தகராறுகள் காரணமாக ஏதாவது கேஸ் ஏற்பட்டு அதில் தொழிலாளிகள் ஈடுபடவேண்டியிருந்தால்—அந்த தகராறு எல்லாம் முடிந்த பின்னால்—இந்த கேஸ் வாபஸ் பெறவேண்டும் என்று சர்க்கார் சொல்லலாம். அவ்விதம் சொல்லி வாபஸ் செய்யப்பட்டிருக்கிறது. பலாத்காரமில்லாத இடங்களில் எல்லாம் இந்த முயற்சி செய்திருக்கிறோம். ஆனால் பலத்கார செயல்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் அதற்காக போடப்பட்டிருக்கிற கேஸ்களை எல்லாம் வாபஸ் பெற வேண்டும் என்று சொல்வது சரியல்ல. தொழில் தகராறு ஏற்படுகிற இடங்களில் எல்லாம் தொழிலாளர்களின் வேலைக்கு பாதுகாப்பு கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே "பிரொகிபிஷன்" கேஸ் போன்ற வேறு பல காரியங்களில் ஈடுபட்டதின் காரணமாக தொழிலாளர்கள் நீக்கப்பட்டிருந்தால் அந்த வேலைகளை எல்லாம் காலியாக வைத்திருக்கவேண்டுமென்று முதலாளியிடம் சர்க்கார் சொல்ல முடியாது. முதலாளி வேண்டுமென்றால் காலியாக வைத்துக்கொள்ளலாம் என்றுதான் நான் சொல்லலாம்.

இன்னும் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு எல்லாம் வீட்டுவசதி செய்து கொடுக்கவேண்டுமென்று பிளாண்டேஷன் ரூல்ஸில் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஒரேயடியாக அமுல் நடத்தமுடியாது. கொஞ்சங்கொஞ்சமாகத்தான் அமுல் நடத்தமுடியும். அதோடு பிளாண்டேஷன் ரூல்ஸில் வைத்திய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்றெல்லாம் நல்ல விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த விதிகள் பிரகாரம் எல்லோரும் ஆசுபத்திரிகளை வைத்துக்கொள்வார்களானால் இந்த ராஜ்ய இன்ஷூரன்ஸ் திட்டத்தில் கிடைப்பதை விட அதிகமாக சலுகை கிடைக்கும் என்பதை பிளான்டேஷன் தொழிலாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி பொதுவாக நம்முடைய ராஜ்யத்தில் லேபர் இலாகாவானது சிறந்த முறையில் வேலை செய்து வந்திருக்கின்றது. இதில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு லேபர் ஆபீஸர் போட வேண்டுமென்று கனம் கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். இப்போது இரண்டு இடங்களை தவிர—அதாவது தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி, சேலம் வடார்க்காடு—இந்த இடங்களில் மட்டும் தான் இல்லை. இந்த இடங்களில் எல்லாம் வேலை அதிகமாக இருக்குமானால் இங்கேயும் தனியாக ஆபீஸர்களை போடுவதைப்பற்றி பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், குறைந்த பட்சக் கூலி இன்னும் பல இடங்களில் நிர்ணயம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இந்த அறிக்கையில் 4-வது பக்கத்தில் கொடுத்திருக்கின்றேன்.



**"Cotton ginning and pressing, salt pans, Match and Fire-works Manufactories and Hosiery Manufactories".**

இந்த மூன்று நான்கு தொழில்களில் உடனடியாக குறைந்த பட்சக்கூலி நிர்ணயம் செய்வதற்கு உத்தேசமிருக்கிறது. இன்னும் (பல்மேரா) பனைநார் தொழில் போன்ற தொழில்களுக்கும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று கனம் டி.டி. டானியல் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றியும் சர்க்கார் பரிசீலனை செய்யும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஷாப் சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன, இதில் ஆங்காங்கு இருக்கின்ற இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் சரியாக் கவனிப்பதில்லை என்று பலர் சொன்னார்கள். சரியாக கவனிக்காதது மட்டுமல்ல, அவர்கள் சட்டத்தை மீறுவதற்கும் ஒத்துழைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் சொல்லப்பட்டது. இன்றைக்கு சர்க்கார் ஒரு காரியத்தை செவ்வையாக நடத்த வேண்டுமென்று சொன்னால், அதற்கான ஒத்துழைப்பானது அதன் மூலம் பலனடைகின்றவர்களிடமிருந்துதான் வரவேண்டும். இந்தியன் பீனல் கோட்கூட சரியாக நடத்தப்பட வேண்டுமென்று சொன்னால், இதனால் பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டில் கேஸ் போட்டால்தான் விசாரணை செய்யப்படும். அதன் மூலம் சரியாக நடத்த முடியும். சர்க்காருக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் தவறுகள் நடக்கின்றன என்று தெரியாது. அதனால்தான் நாட்டில் தொழிற் சங்கங்கள் அதிகமாக வேண்டுமென்று சொல்லுகிறோம். சர்க்கார் போடக்கூடிய சட்டங்களை எல்லாம் அமுல் நடத்துவதற்கு தொழிற் சங்கங்கள் அவசியம். தவறுகள் எங்கே நடக்கின்றன என்பதை அவர்கள்தான் சொல்ல முடியும். போடப்படுகின்ற சட்டங்கள் எந்தெந்த இடங்களில் எல்லாம் சரியாக அமுல் நடத்தப்படுகின்றன, எந்தெந்த இடங்களில் எல்லாம் நடத்தப்படவில்லை என்பதை தொழிற் சங்கங்கள் தான் சொல்ல முடியும். அவ்வாறு சொல்வதின் மூலமாகத்தான் சர்க்கார் போடுகின்ற சட்டத்தை அமுல் நடத்த முடியும், இல்லாவிட்டால் தவறுகள் எங்கே நடக்கின்றன என்பதை கண்டுபிடிக்க முடியாது. ஷாப் சட்டம் அமுல் நடத்தப்படுவதில ஓரளவு குறைகள் இருக்கின்றன என்பது சர்க்காருக்குத் தெரியும். இருந்தாலும் கூட புகார்கள் தெரிவிக்கின்ற இடங்களில் எல்லாம் உடனடியாக பரிசீலனை செய்து வேண்டிய ஏற்பாடுகளை செய்கிறோம். பொதுவாக இவ்வாறு புகார்கள் வருவது ரொம்பவும் குறைவு என்பதை என்னால் சொல்ல முடியும். இதற்குக் காரணம் சட்டத்தில் இருக்கின்ற வசதிகளை எல்லாம் தொழிலாளர்கள் சரியானபடி கவனித்துக்கொள்ளாமல் இருப்பதினால்தான். கடைசியாக ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்கள் நல்ல முறையில் இன்றைக்கு முன்னேற்றம் காணவேண்டும் என்று சொன்னால் வெறும் சட்டங்கள் மாத்திரம் செய்தால் போதாது. அந்தச் சட்டங்களை எல்லாம் நியாயமான முறையில் முதலாளிகள் நல்ல மனதுடன் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நல்லெண்ணத்துடன் அதை கடைப்பிடித்துவந்தால்தான் ஒழுங்காக காரியங்களை செய்ய முடியும். இதில் தொழிலாளர்கள் ஒருபுறம், தொழிலதிபர்கள் ஒருபுறம் என்று ஏதோ இரண்டு பேர்களும் முரண்பாடு உள்ளவர்களாக கருதிக்கொண்டிருந்தால், அதனால் தொழில் வளர்ச்சிக்கும் நன்மை கிடைக்காது, தொழிலாளர்கள் முன்னேற்ற மடைவதற்கும் வழி வகுக்காது. தொழில் அமைதி

## Appendix I

[Vide answer to starred question No. 804-A asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 14th March 1959, page 287 supra.]

(a) & (b) River Pumping Schemes in force and their acreage—

| *Name of the district.* (1) | *Name of the scheme.* (2) | *Acreage benefited.* (3) |
|---|---|---|
| SCHEMES UNDER THE CONTROL OF THE AGRICULTURE DEPARTMENT. | | |
| 1 Ramanathapuram .. | Vadamalapuram Pumping Scheme .. | 35 |
| 2 South Arcot .. | C. Mutlur Pumping Scheme .. .. | 100 |
| SCHEMES UNDER THE CONTROL OF THE PUBLIC WORKS DEPARTMENT. | | |
| 1 Tanjore .. .. | Mulliar Pumping Scheme (Thagattur Village). | 1,539 |
| 2 Do. .. .. | Ayakkarambalam Pumping Scheme (Ayakkarambalam I Sethi, etc., villages). | 700 |
| 3 Do. .. .. | Devambalpattinam Pumping Scheme (Segal Village). | 350 |
| 4 Do. .. .. | Aymur Pumping Scheme (Aymur Village). | 717 |
| 5 Do. .. .. | Pamani Mullur Pumping Scheme (Pamani Mullur, etc., villages). | 740 |

(c) & (d) River Pumping Schemes proposed—

| *Name of district.* (1) | *Place of the scheme.* (2) |
|---|---|
| SCHEMES UNDER THE CONTROL OF THE AGRICULTURE DEPARTMENT. | |
| 1 Ramanathapuram .. .. | Nemmeni. |
| 2 South Arcot .. .. | Alishikudi, Allur and Ramapuram. |
| 3 Tirunelveli .. .. | Kalingapatti. |
| 4 Tanjore .. .. .. | Ooradiambalam. |
| SCHEMES UNDER THE CONTROL OF THE PUBLIC WORKS DEPARTMENT. | |
| 1 Tanjore .. .. .. | Valavanar. |
| 2 Do. .. .. .. | Thennadar. |
| 3 Do. .. .. | Vadakkupoyyur and Therkupoyyur. |
| 4 Do. .. .. | Vilundamavdi. |



## Appendix II

[Vide answer to starred question No. 782 asked by Sri S. Lazar at the meeting of the Legislative Assembly held on 14th March 1959, page 289 supra.]

| *Name of the Scheme.* (1) | *Amount of estimate.* (2) RUPEES IN LAKHS. | *Extent of ayacut.* (3) | *To be taken up under.* (4) |
|---|---|---|---|
| (a)— | | | |
| 1 Formation of a tank across Nandiyar river in Peruvalappur village. | 8·69 | 2,000 acres .. | Special Minor Irrigation Programme. |
| 2 Construction of an anicut across Uppar river in Venganur village. | 0·80 | 95·24 (new) acres<br>85·38 (existing) acres | Special Minor Irrigation Programme. |
| 3 Kallagam Odai Scheme .. .. .. | 5·82 | 560 (new) acres<br>248 (existing) acres | Either as a Major Irrigation Scheme or under the Special Minor Irrigation Programme which will be decided after detailed investigation. |
| 4 Shanmuganadhi Reservoir Scheme .. .. | 7·24 | 640 acres .. | Special Minor Irrigation Programme. |

(b)—

(i) The sanction of the schemes is under consideration and they will be taken up when sanctioned.

(ii) Does not arise now.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 16th March 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Second Five-Year Plan*

* 805 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Centre have promised the State Government to increase the capital outlay for the next two years of the Second Five-Year Plan period at the National Development Council meeting held in November 1958;

(*b*) if so, the details thereof;

(*c*) whether this State had been asked to raise the internal resources for the Plan; and

(*d*) if so, the amount to be raised?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir. In this connection, I may point out that in meetings of the National Development Council, representatives of the State Governments participate in considering issues of broad national policy, and, while the problems of particular States may be mentioned, main attention is given to points for decision or consideration at the National level.

(*b*) Does not arise.

(*c*) & (*d*) According to the estimate of resources prepared by the Planning Commission, there is a gap of Rs. 82 crores in the outlay of State Plans during the remaining two years of the Plan period. The State Governments have been requested to raise necessary additional resources to cover this gap.

So far as the Madras State is concerned, we have already exceeded the target of additional taxation and hence, this State has not been specifically asked to raise any additional resources.

SRI N. K. PALANISAMI : துண்டு விழக்கூடிய 25 கோடி 30 கோடி ரூபாயை சரிக்கட்டுவதற்கு மூலதனம் என்ன? அதை சரிக்கட்டுவதற்கு இந்த மாகாணம் எவ்வளவு வரி விதித்து ஏதாவது ரிசோர்ஸை அதிகப்படுத்த வேண்டும் என்று ஏதாவது விவாதிக்கப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதை வசூல் செய்வதைப் பற்றி பொதுவாக விவாதிக்கப்பட்டது. சில ஸ்டேட்டுகள்தான் இதைப் பண்ண வேண்டுமென்பதைப்பற்றி ஒன்றும் விவாதிக்கவில்லை.

குட்பட்ட சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி திட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று செய்துள்ள சிபாரிசையொட்டி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

(ஆ) இத் திட்டம் எப்போது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) The recommendation of the All-India Council for Elementary Education regarding introduction of compulsory education has been received by Government. This recommendation is in line with the one made by the Legislature Committee on the White Paper on Education, to the effect that Education should be made free and compulsory for all children between the ages of six and 11 in all towns and villages of the State by the end of the year 1965-66. A scheme for implementing this recommendation, starting from 1959-60 is being drawn up.

Sir, I think I can answer the next question also.

MR. SPEAKER : Yes.

*809 Q.—SRI A. VEDARATHNAM (on behalf of SRI P. G. MANICKAM): கனம் நிதி அமைச்சர் அவர்கள் தய்வுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருஷத்திலே எந்தெந்த அபிவிருத்தி பிளாக்குகளிலே கட்டாய இலவசக் கல்வியானது எலிமென்டரி பாடசாலைகளிலே அமுலுக்குக் கொண்டுவரப்படும் ?

(ஆ) கட்டாயக் கல்வி சம்பந்தமாக எடுக்கப்படப்போகும் விதி முறைகள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) A detailed scheme for the introduction of free and compulsory education in the first five years of schooling is being worked out in consultation with the Director of Public Instruction. It will be finalised shortly.

SRI A. VEDARATHNAM : நம்முடைய அரசியல் நிர்ணய சட்டத்தின் பிரகாரம் 1960-க்குள்ளாக இந்நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எல்லோருக்கும் கல்வி அறிவு புகுத்தப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறதே அதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி சாத்தியம் என்று இந்த அரசாங்கம் நினைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்டம் செய்வதன் மூலம் அதை அமுல் நடத்துவது எப்படி என்பது தெரிய வந்திருக்கிறது. அப்படி நிறைவேற்ற முடியாது என்ற காரணத்தால் இந்த ஸ்டேட்டை பொறுத்த வரையில் 6 வயது முதற்கொண்டு 11 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு 1965-66க்குள் பள்ளிக்கூடத்தில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது, அதன் மூலம் அவர்களுக்கு கல்வி அறிவு புகுத்தப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையையே அகில இந்தியாவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

SRI K. RAMACHANDRAN : ஏற்கனவே விவாதித்தபோது பஞ்சாயத்து யூனியன் ஏற்பாடு செய்கிற அந்தந்த பகுதிகளில் கட்டாயக் கல்வியை முதன் முதலாக ஆரம்பத்திலிருந்தே புகுத்த முன் வரலாம் என்ற கருத்தை தெரிவிக்கப்பட்டது. அப்படியென்றால் அப்படி புகுத்த



ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா அப்படி ஆரம்பிக்கப்பட்டால் டெவலப்மெண்ட் ப்ளாக்குகளில் முதலில் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : திட்டம் முடிவாகும் போது இதைப்பற்றி கடைசியாக கவனித்துச் சொல்ல முடியும்.

SRI A. VEDARATHNAM : கட்டாயக் கல்வி திட்டத்தை எவ்வளவு உடனடியாக எடுத்துக்கொள்ள திட்டமிட்டிருக்கிறது. அது எப்பொழுதிலிருந்து ஆரம்பமாகிறது. எப்பொழுது பிரதேசங்களில் இப்பொழுது அந்த திட்டம் அமுலுக்கு வரப்போகிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : திட்டத்தைப்பற்றி இப்பொழுது ஆலோசனை நடந்துகொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அந்த திட்டம் உருவாகும். உருவாகிய அடுத்த வருஷத்திலிருந்து அது எடுத்துக் கொள்ளப்படும்.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that in some of the compulsory areas, children do not attend school regularly? If so, will the Government take any punitive action against the defaulting parents?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not by taking punitive action that we would be able to bring all the children to the school. That is why we are trying to give them inducement by way of supplying midday meals also.

SRI S. PAKKIRISAMI PILLAI : கட்டாயக் கல்வியை நமது ராஜ்யத்தில் அமுலுக்குக் கொண்டு வரும்போது அதே சமயத்தில் பத்து அல்லது பதினோராவது வகுப்பு வரை படிக்கும் உயர்நிலைப்பள்ளி பிள்ளைகளுக்கு அதாவது ஏழை பிள்ளைகளுக்கு இலவசமாக பயிற்சி கொடுக்க திட்டம் சீக்கிரம் வரப்போகிறது என்று நமது முதல் அமைச்சர் அவர்கள் அவ்வப்பொழுது சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார். அது இந்த வருஷத்திலிருந்து அமுலுக்கு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கும் முதல் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

MR. SPEAKER : கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் ஊரில் இல்லாததால் அவருடைய கேள்விகள் எல்லாம் 19-ம் தேதி எடுத்துகொள்ளப்படும்.

*Block Advisory Committee*

*812 Q.—SRI T. VELUCHAMI : Will the Hon. the Chief Minister be pleased to State—

(a) whether the Government have instructed the Collector of Tirunelveli to convene a meeting of all the Non-official members of the Block Advisory Committees of all the blocks in the district once in every half year, and

(b) whether any such meetings have been held ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir. The Collectors of all the Districts except the Collector of Madras have been requested to convene meetings of all the non-official members of the Block Development Committees in their districts, once in every half-year.

(b) A meeting was held on 23rd December 1958 at the office of the Collector of Tirunelveli.

SRI T. VELUCHAMI : இந்த மீட்டிங்கில் செய்யப்பட்ட ஆலோசனைகளைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

*Social Welfare Board, Tirunelveli District*

* 813 Q.—SRI T. VELUCHAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the activities of the Social Welfare Board in Tirunelveli district during 1957 and 1958; and

(b) the expenditure incurred during these years?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The following activities are carried on in the Centres opened in the Welfare Extension Project launched in Tirunelveli district :—

(1) Training in Spinning, Tailoring and Embroidery is imparted to the women who attend the Centres.

(2) Maternity Aid is provided.

(3) Balwadi Classes are conducted for the benefit of children.

(b)—

| | | Total expenditure. | Share of State Government. |
|---|---|---|---|
| | | RS. | RS. |
| 1956–57 | .. | 33,038 | 8,259 |
| 1957–58 | .. | 52,239 | 17,402 |

*Coconut breeding-cum-research station*

* 814 Q.—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Home be pleased to state how far the proposal of the Government to start a coconut breeding-*cum*-research station either at Sholavandan or Nilakottai has been implemented?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to start a coconut breeding-*cum*-research station either at Sholavandan or at Nilakottai.

SRI R. SRINIVASA IYER : Considering the importance of coconut cultivation and production, are the Government appointing any Research Officer for carrying on research on the availability and suitability of soil at least in the coastal areas of this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal. But, Government have already sanctioned two research stations—parasite breeding stations—, one at Nagercoil and the other at Gudiyatham. There is also a proposal to re-open the parasite-breeding station at Udangudi in Tirunelveli district which was closed sometime back. The approval of the Government of India has been sought.





SRI M. D. THIAGARAJA PALLAI : தலைவர் அவர்களே, மலபார பிரதேசம் நம்முடைய நாட்டில் இருந்து பிரிந்த பிறகு இந்தத் தென்னை அபிவிருத்திக்கு ஆராய்ச்சி சாலைகளை ஏற்படுத்த வேறு திட்டம் இருக்கிறதா?

THE HON SRI M. BHAKTAVATSALAM : புதிய ஆராய்ச்சி சாலைகளை அமைக்க யோசனை இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : எந்த இடத்தில் இந்த ஆராய்ச்சி சாலை அமைக்க யோசனை இருந்து கொண்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுதுதான் சொன்னேன். நாகர்கோவில், குடியாத்தம், திருநெல்வேலியில் உள்ள உடன்குடி ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்க யோசனை இருக்கிறது.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : மது விலக்கு அமுலுக்கு வந்த பிற்பாடு இந்தத் தென்னை மரத்தில் இருந்து கிடைக்கிற பொருள் அதிகரித்திருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி ஒன்றும் கணக்கு எடுக்கவில்லை. அதிகரித்துத் தான் இருக்கவேண்டும். கள் இறக்க தென்னையை அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை.

SRI A. A. RASHEED : May I know whether coconut seedlings are distributed to the farmers at concessional rates?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. Coconut nurseries are conducted and these seedlings are distributed at concessional rates.

SRI R. SRINIVASA IYER : This question is a little dubious. I asked about coconut breeding-*cum*-research station. The Hon. Minister's reply was about parasite-breeding stations. My question was about the growing of coconut trees as such. May I know whether any research station has been set up to find out the suitability of the soil in the State and whether any research has been carried on in this respect?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir, that is also done.

*Training in Museology in West Germany*

* 815 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any scholarships have been offered by the Government of West Germany to Indian Nationals for getting Training in Museology in that country; and

(b) whether any person has been selected this year from this State?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) No, Sir.

SRI T. S. RAMASWAMY PILLAI: May I know the reasons as to why nobody was selected?

THE HON. SRI C. SUBRAMANIAM: One person was recommended for this scholarship, but the German Government rejected his case on the ground that he did not possess sufficient knowledge of German.

SRI M. JAGANNATHAN: What was the value of the scholarship offered by the German Government?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have the exact figure with me just now.

*Legislation for regulating service conditions.*

* 818 *Q.*—MR. SPEAKER: As the hon. Member Sri M. P. Sarathi is absent, the question and answer will be printed in the Official Proceedings.

SRI M. P. SARATHI: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) குடியரசின் அரசியல் சட்டம் 309-வது பிரிவின் கீழ் இந்த ராஜ்ய ஊழியர்கள் பற்றி சட்டம் ஏதேனும் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அது எப்பொழுது சாத்தியமாகும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

*Open air jails.*

* 819 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to establish open air jails?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

There is however one Special Sub-Jail at Singanallur in Coimbatore district which is in the nature of an "Open Prison."

SRI A. A. RASHEED: Has the attention of the Government been drawn to the suggestion of an eminent retired Judge of the High Court regarding the necessity for opening such jails?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the Jail Reforms Committee has made certain recommendations and this is one such recommendation. Therefore, Government have been trying to implement this recommendation. Thus, this question is linked up with the other one.

SRI K. R. NALLASIVAM: கோயம்புத்தூர் மத்திய சிறையில் உள்ள நீண்ட கால கைதிகளை, சமீபத்தில் போடக்கூடிய பரம்பிக்குளத் திட்டத்தில் ஒரு சோதனையாக வேலையில் ஈடுபடுத்திப் பார்க்கக் கூடாதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நீண்டகாலக் கைதிகளை எடுத்துக்கொள்ளுவது, குறுகிய காலக் கைதிகளை எடுத்துக்கொள்வது என்பது வேறு விஷயம். வைகைத் திட்டத்தில் இந்த மாதிரிக் கைதிகள் பயன்படுத்தப்பட்டார்கள். அவ்வாறு, எங்கெங்கு தகுதி இருக்கிறதோ அங்கெல்லாம் கவனிக்கப்படும்.



SRI V. K. KOTHANDARAMAN: திறந்த வெளி சிறைச் சாலைகளைச் சர்வாதிகார ஆட்சியில் ஏற்படுத்தி வருவதாகத்தான் நாம் அறிகிறோம். ஆகவே இந்தக் கேள்வி கேட்ட அங்கத்தினர் அவர்கள்.

MR. SPEAKER: இது பதிலில் சொல்லவில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை. அது அவர்களுடைய சொந்த அபிப்பிராயமாக இருக்கலாம். சர்வாதிகார நாட்டினுடைய ஏகபோக உரிமை என்றோ ஜனநாயக ஆட்சியில் ரொம்பப் பொருத்தம் என்றோ நான் சொல்லவில்லை.

SRI A. A. RASHEED: May I know how this open-air jail is running in Coimbatore?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There, only a small number of prisoners have been asked to cultivate some land which is available and they have been carrying on.

*Admissions to Colleges.*

* 820 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken by the Government to provide more seats in Professional and Arts Colleges in the State for the year 1959?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Government do not propose to take any steps to increase the number of seats in Professional and Arts Colleges in the State for the year 1959.

SRI N. K. PALANISAMI: வருஷா வருஷம் இந்த "ப்ரொபஷனல்" காலேஜ், எஞ்சினியரிங் காலேஜ், மெடிகல் காலேஜ் ஆகியவைகளில் அநேக மாணவர்கள் இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுவதன் காரணமாக, அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்க வேறு ஏதாவது திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது எஞ்சினீயரிங் காலேஜைப் பொறுத்தவரை போதுமான அளவு வசதிகளைப் பெருக்கி இருக்கிறோம். உதாரணமாக காலேஜ் ஆப் எஞ்சினீயரிங், கிண்டியில் 155 பேரை அதிகமாக எடுக்க போதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கவர்ண்மெண்ட் காலேஜில் 45 அதிகம். ஏ. சி. காலேஜ், காரைக்குடியில் 20 அதிகம். பி. எஸ். ஜி. காலேஜில் 20 அதிகம். கோயம்புத்தூர் காலேஜில் 120 அதிகம். புதிய காலேஜ்கள் உருவாக இருக்கின்றன. தியாகராஜா காலேஜ், மதுரையில் 120 அதிகம்.

SRI S. LAZAR: ப்ரொபஷனல் காலேஜ்களைப் பொறுத்தவரை இப்பொழுது தேவைப்படுகின்ற அளவுக்கு அங்கிருந்த பயிற்சி பெற்ற மாணவர்கள் வெளி வருகின்றனரா? இல்லையென்றால் எவ்வளவு குறைவு அல்லது அதிகம்?

THE HON. SRI C. SUBRAMANIAM: காலேஜைப் பொறுத்தவரை இப்போதைய தேவைக்குப் போதும் என்பது என் கருத்து. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகும்போது எத்தனை எஞ்சினீயர்கள் வேண்டுமென்பது பற்றி இப்பொழுதிலிருந்தே திட்டமிட்டு, இன்னும் எத்தனை பேர் அதிகமாக வேண்டுமென்பதைப் பற்றி முடிவு செய்து, அதற்கான நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் இருந்து எடுக்கப்படும்.

SRI N. K. PALANISAMI : இந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டிகள் ஒவ்வொரு காலேஜிலும் ஏற்படுத்துவதாகத் திட்டம் இருக்கிறதா ?

MR. SPEAKER : இந்தக் கேள்வியில் இருந்து இது எழவில்லையே.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரே ஒரு கமிட்டி தான் வேலை செய்து வருகிறது.

SRI V. SUBBIAH : சார், இந்த நாட்டிலே விவசாய உற்பத்தி பெருக வேண்டுமென்று சொல்லக்கூடிய நேரத்திலே விவசாயப்பட்டதாரிகள் குறைவாக இருக்கிறார்கள். விவசாயக் கல்லூரிகளில் அந்தப் பட்டதாரிகள் எத்தனை பேர் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. அதிலும் அதிகப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள்.

*Appointment of women as Block Development Officers*

*821 Q.—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இதுவரை பெண்களை B.D.O.-வாக எடுத்திருக்கிறார்களா ? இல்லாவிடில் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No Sir. If and when suitable women candidates are available their cases will no doubt be considered.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : சமுதாய நலத் திட்டம் 3 லட்சம் முதல் 5 லட்சம் வரை பெண்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. திட்டவேலைகள் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. சமுதாய நல பி.டி.ஓ.க்கள் பதவி பெண்களுக்கும் கொடுக்கப்படுமானால் அவர்கள் அந்தப் பதவியை ஏற்று திட்டமாக நல்ல முறையில் சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றுவார்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கும் அந்தப் பதவியைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களை அமர்த்தினால் திறமையாகச் செய்வார்கள். அதற்குத் தக்க பெண்கள் முன்வர வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : "Women Welfare Officer"கள் ஆக தகுதியுள்ள பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கிற நேரத்தில் வேலூரில் சமீபத்தில் நடந்த 3 ஜில்லாக்களைக் கொண்ட சமுதாய நலக்கூட்டத்திலே பெண்கள் பி.டி.ஓ.க்களாக நியமிக்கப்படவேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி உடனடியாகப் பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தீர்மானம் போடுவது வேறு. அதற்குத் தகுதியுள்ள பெண்கள் வரும்போது அவர்களை எடுத்துக்கொள்ள முடியும். தகுதியுள்ள பெண்கள் வரும்போது இதைப் பற்றிக் கவனிக்கப்படும்.

SRI A. A. RASHEED : What are the qualifications prescribed for the post of Block Development Officers?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put.



SRI M. JAGANNATHAN : May I know whether so far any women applied for these posts of Block Development Officers?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no question of application. As a matter of fact, Block Development Officers are selected from the existing cadres in the Revenue, Co-operation, Agriculture, etc., departments. Unless women officers are available in those departments, we cannot select them as Block Development Officers. But hon. Members may be aware that an hon. Member of this House was some time in charge of the Athur Block and that she did her duties fairly well to the satisfaction of everybody.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : தலைவர் அவர்களே, தகுந்த காண்டிடேட்டுகள் வருவார்களானால் யோசிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கக் கூடிய பிளாக் டெவலெப்மெண்ட் ஆபீஸர்களில் சில பேர்களை எஸ்.ஈ.ஓ.-க்களிலிருந்து புரோமோஷன் செய்து அமர்த்தியிருக்கிறார்கள். பெண் எஸ்.ஈ.ஓ.க்களாக பிளாக்குகளில் வேலை செய்பவர்களை பிளாக் ஆபீஸர்களாகப் போட சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதே பதிலைத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. தகுதியுள்ளவர்கள் இருந்தால் அதைப் பற்றி கவனிக்கப்படும்.

*Educational concessions*

*825 Q.—SRI T. VELUCHAMI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) என்.ஜி.ஓக்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிப்பதாகான வருமான வரம்பை அதிகப்படுத்துவதற்கு ஏதேனும் உத்தேசமுண்டா ?

(ஆ) இல்லை என்றால், ஒரு குறிப்பிட்ட எண்ணிற்கு அதிகமாகக் குழந்தைகளைப் படிக்க வைக்கவேண்டிய என்.ஜி.ஓக்களுக்கான வருமான வரம்பை அதிகப்படுத்துவது பற்றி சர்க்கார் யோசிக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) There is at present no income limit fixed for the grant of educational concessions to the children of N.G.Os. The children of all N.G.Os. are eligible for fee concessions without any limit as to their number.

*826 Q.—SRI T. VELUCHAMI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

கல்விச் சலுகைகள் அளிக்கும் விஷயத்தில் எந்தெந்த சமூகத்தாருக்கு எந்தெந்த விதமாக கல்விக்கு வருமான வரம்பு கவனிக்கப்படுவதில்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The grant of fee concessions under the Madras Educational Rules is subject to the condition that the annual income from all sources of the parents or guardians of the pupils does not exceed Rs. 1,200 in the case of schools and Rs. 1,500 in the case of college courses in respect of all eligible communities. No discrimination on communal grounds is made in the matter of income limit of parents.

SRI K. VINAYAKAM : In view of the fact that there is a big rise in the cost of living of the people, will the Government think of the possibility of raising the income limit as far as these concessions to Backward Classes are concerned?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no such proposal at present.

SRI K. VINAYAKAM : Even supposing there is no such proposal, will the Government think of exploring the possibility of raising the income limit?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, when the occasion arises.

*Merger of dearness allowance with the pay of N.G.Os.*

* 827 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதில்ளிப்பாரா—

(அ) இந்த ராஜ்ய கெஜட் பதிவில்லா ஊழியருக்கு கொடுக்கப்படும் பஞ்சப்படியை முழுவதுமோ அல்லது ஒரு பகுதியையோ சம்பளமாகவே கணக்கிடும்படி செய்ய அரசாங்கம் ஆலோசித்துள்ளதா ?

(ஆ) அது பற்றிய முடிவு எப்பொழுது வெளியிடப்பட்டு எது முதல் அமுல் செய்யப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The matter will be considered by the Pay Commission recently constituted.

(b) Does not arise now.

*Elementary School for Kannadikulam village*

*830 Q.—SRI T. VELUCHAMI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நெல்லை ஜில்லா ஆலங்குளம் பிளாக்கைச் சேர்ந்த கண்ணடிக்குளத்தில் ஒரு ஆரம்பப் பாடசாலையைத் திறக்க சர்க்கார் உத்தேசிக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

*Fruit Preservation Units*

* 831-A Q.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there are any fruit preservation units in the State;

(b) whether they are receiving any State aid; and

(c) if so, the nature of such aids?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) No, Sir.

(c) Does not arise.



*Engineering College for Tanjore*

* 831-B Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் இன்ஜினீரிங் காலேஜ் ஏற்படுத்த பொது ஜனங்களிடமிருந்து ஏதேனும் உதவி கிடைத்திருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

(இ) அரசாங்கம் இதன் பேரில் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No aid from the public has been received towards the opening of an Engineering College in Tanjore district.

(b) & (c) Do not arise.

SRI M. D. THIAGARAJA PILLAI : தனிப்பட்டவர்கள் என்ஜினியரிங் காலேஜ் ஏற்படுத்த நன்கொடையாக வருஷாந்திரச் செலவுக்காக நிலமோ அல்லது தொகையோ கொடுக்க முன்வருவார்களானால், அதை ஏற்றுக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is a hypothetical question. When the offer comes, it will be considered on its merits.

SRI K. VINAYAKAM : In the absence of any offer from the public, at least in view of the shortage of engineers felt in our State, will the Government take it as their own concern to start an engineering college at Tanjore?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already indicated the figures with reference to the increased number of admissions in the various colleges in the State and said that there is no proposal to open any new college during this year. About next year, the question will have to be considered when the occasion arises.

SRI A. VEDARATHNAM : சென்னை ராஜ்யத்தில் என்ஜினீயரிங் காலேஜ்களை அதிகப்படுத்துவதில் மத்திய சர்க்காரில் தடை ஏதேனும் இருக்கிறதா இந்த அனுமதி பெருவதில் ? இப்போது இருக்கிற என்ஜினீயர்கள் பற்றாக்குறையை அனுசரித்து இங்கே இன்னும் ஓரிரு காலேஜுகளை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ? மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி அனுமதி பெருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது அவசியமானால், 1960-ம் ஆண்டில் அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமானால், அதைப் பற்றி முயற்சிகள் எடுக்கப்படும்.

*Dairy Farms for Pallapatti and Kodaikanal*

MR. SPEAKER : The hon. Member Sri V. Sankaran is not in his place. The question and answer will be printed in the official proceedings.

* 831-C. Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state how far the proposals to start Dairy Farms at Pallapatti village in Melur taluk and at Kodaikanal have been implemented?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There was a proposal to start a Dairy Farm at Pallapatti village but it had to be

dropped due to the promoters' inability to subscribe the minimum share capital required. The Dairy Farm opened at Kodaikanal in 1943 was also closed down in 1945 as it was working at a loss.

MR. SPEAKER : Question No. 831-D and the questions that follow are to be answered by the Hon. Minister for Industries who is not here. I am afraid, we may have to take them up later. The question-hour to-day is over within 25 minutes. But it is not my fault because ten questions belonging to the Hon. Minister for Works had to be postponed, after inclusion in the list of questions, since he had to leave Madras urgently on business. To substitute, we had to put in questions to be answered by the Hon. Minister for Industries, but he has not yet come—I see he is coming.

THE HON. SRI R. VENKATARAMAN : I am sorry, Sir.

*Madura Mills*

* 831-D. *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to settle the dispute between the workers and the management of Madura Mills in October 1958, regarding wages, workload, etc.?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government discussed the matter with the parties. It was agreed that a Government Officer should be appointed to enquire into the dispute and that he should submit his recommendations to the Government. The Government accordingly deputed Sri P. Sabanayagam, I.A.S., as the Special Enquiry Officer. The Officer has finished his enquiry and submitted his report. The report is under the consideration of the Government.

SRI N. K. PALANISAMI : சமர்ப்பிக்கப்பட்டிருக்கக் கூடிய ரிப்போர்ட்டில் விவரங்கள் என்ன என்று கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The report is confidential.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஸார், ரிப்போர்ட்டைப் பரிசீலனை செய்த பிறகு, அரசாங்கம் அந்த ரிப்போர்ட்டின் நகலை அசெம்ப்ளி முன்னால் வைப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not possible to place it on the table of the House.

SRI N. K. PALANISAMI : ஸார், ஏற்கெனவே வாங்கி வந்த சம்பளம், பஞ்சப்படி முதலியவைகளைக் குறைக்காமல் இருக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த தொழிலாளர் சங்கமும், முதலாளிகளும் நேரடியாகப் பேசி என்ன முடிவுக்கு வருகிறார்களோ அந்த முடிவைத்தான் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.





SRI T. VELUCHAMI : மதுரை மில் நிர்வாகஸ்தர்கள் வருமானத்தைக் குறைத்துக் காண்பிக்க பல முறைகளைக் கையாளுகிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறார்களே, அது வாஸ்தவமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : "என்க்வொயரி" ரிப்போர்ட்டில் பல விஷயங்கள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர்கள் எதாவது ஆதாரம் இருந்து கேள்வி போட்டால் நன்றாக இருக்கும். ஒரு தொழிலைப்பற்றி, தவறான குறிப்புகளைக் கேள்விகள் மூலமாகக் கேட்டால், அதனால் தொழில் பாதிக்கப்படும். பதில் சொல்ல இயலாத காரணத்தினால் பதில் சொல்ல முடியவில்லை.

SRI S. M. ANNAMALAI : 1958-ம் ஆண்டு ஜூலையில் ஆரம்பித்த இந்தத் தகராறுக்கு அப்போதே ஸ்பெஷல் ஆபீஸர் போட்டிருக்கிறீர்கள்; இருந்தும் இவ்வளவு கால தாமதம் ஏன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : பிரச்னை கடுமையானது.

SRI A. A. RASHEED : May I know why the report is confidential since the Government have appointed their own officer to investigate the affairs of the Mill?

MR. SPEAKER : How can he answer it? When the Government say it is confidential, it is confidential. The hon. Member cannot ask why it is confidential.

SRI S. LAZAR : அது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தி முடிவு பண்ண வேண்டியது தொழிலாளர்களும், மானேஜ்மெண்டும் சேர்ந்து என்று குறிப்பிட்டார்கள். சம்பளம் குறைந்திருந்தால் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்? அரசாங்கம் என்ன சலுகை கொடுக்கும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அரசாங்கம் எதுவும் செய்வதற்கில்லை. தொழிலாளர்களும், முதலாளிகளும் இருக்கக் கூடிய சங்கடத்தை நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். அவர்களே பார்த்து முடிவு செய்து கொள்வார்கள்.

SRI K. VINAYAKAM : Since a subject like dispute between the workers and the management of a mill is a matter of public importance, how can this Government say that the report is confidential?

MR. SPEAKER : No, no. It is confidential and there the matter ends.

SRI K. VINAYAKAM : I am putting it in a different way.

MR. SPEAKER : The result is the same. (Laughter.)

SRI K. VINAYAKAM : What are the incriminating circumstances stated in the report which goad this Government to treat it as a confidential report?

MR. SPEAKER : The question is out of order.

[16th March 1959

*Starting of paper mills at Ootacamund*

9 a.m. * 831-E *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any private party has approached the Government for aid to start paper mills at Ootacamund?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI A. A. RASHEED : Has any foreign Government come forward to start a factory at Ootacamund?

THE HON. SRI R. VENKATARAMAN : I cannot understand how a foreign Government can open a mill in my country. (Laughter.)

SRI N. K. PALANISAMI : பேப்பர் மில்ஸ் ஆரம்பிப்பதற்கு செய்யப் பட்ட பரிசீலனை என்ன ஆயிற்று ? ஏன் அதை ஏற்பாடு செய்யாமல் விட்டுவிட்டார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : யார் பரிசீலனை செய்தார் கள் ? எந்த இடத்தில் பரிசீலனை செய்தார்கள் ? எப்போது பரிசீலனை செய்தார்கள் என்கிற கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் கொடுக்கிறேன்.

SRI K. RAMACHANDRAN : பேப்பர் செய்வது சிறு தொழிலாக நம் பகுதியில் கிடைக்கக்கூடிய ரா மெட்டீரியல்லை வைத்துக்கொண்டு அதாவது பனை ஓலை, மட்டை இவைகளை வைத்துக்கொண்டு செய்யலாம் என்று சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி பரிசீலனை செய்யபபட்டதா ? அத்துடன் ஐந்தாறு கோடி ரூபாய் செலவில் நம் ராஜ்யத்தில் ஒரு பேப்பர் மில்லை அமைக்க ஏற்பாடுசெய்வதாக இருந்ததே, அது எவ்வாறு இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : சிறு தொழில் மூலமாக பேப்பர் உற்பத்தி செய்யும் பிரச்சனை இப்போது ஆராயப்பட்டு வருகிறது. சமீபத்தில் ஜப்பானிலிருந்து கூட மூன்று டன் பேப்பர் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ப்ளூ ப்ரிண்ட் அனுப்பியிருக் கிறார்கள். இதைப்பற்றி இரண்டுவித அபிப்பிராயங்கள் தொழில்-பொரு ளாதார-நிபுணர்களிடத்திலிருந்து வருகின்றன. பேப்பர் தொழிற்சாலை ஆரம் பிப்பது என்றால் 50 டன் உற்பத்தி செய்யக்கூடிய, குறைந்தது 30 டனா வது உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக இருந்தால் தான் விலைவாசி கட்டுப்படியாக இருக்கும் என்பது ஒரு அபிப்பிராயம். இரண்டாவது, சிறு தொழில்களாக வைக்க முடியும் என்கிற அபிப்பிராயம். சர்க்கார் இதைப் பரிசீலனை செய்து வருகிறது. மேட்டூரில் 5 கோடி ரூபாயில் ஆரம்பிக்கலாம் என்ற யோசனை இப்போது இருந்து வருகிறது. பண நெருக்கடிதான் இப்போது முக்கியமான முட்டுக்கட்டை.

SRI A. VEDARATHNAM : பேப்பர் மில் ஆரம்பிக்கவேண்டும் என்று எந்த இடத்தில், எப்போது, யாரால் பரிசீலனை செய்யப்பட்டது என்கிற கேள்வியைப் போட்டால் அந்த விவரங்களைச் சொல்வதாக அமைச் சர் அவர்கள் சொன்னதன்பேரில், அந்தக் கேள்வியைப் போடுவதோடு வேறு எந்த வெளிநாட்டிலிருந்து உதவி கோரப்பட்டது ? அதற்கு ஏதே னும் உதவி கொடுப்பதாக திருப்திகரமான பதில் வந்ததா என்றும் விளக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R VENKATARAMAN : இட்டாலி தேசத்தில் 5 டன் பேப்பர் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை வைத்திருக்கி றார்கள். ஆனால் அவர்களுக்கு வேண்டிய "பல்ப்" ஒரு பெரிய மில்லில் இருந்து கொடுக்கப்படுகிறது. அதனால் அவர்களுக்கு 5 டன் உற்பத்தி செய்வது சுலபமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.



16th March 1959]

அமெரிக்காவில் ஸ்டான்போர்ட் இன்ஸ்டிட்யூட்டில் இருக்கிறவர்கள் 30 டன்னாவது உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையாக இருந்தால்தான் விலைவாசி கட்டுபடியாக இருக்கும் என்று அபிப்பிராயம் கூறுகிறார்கள். ஜப்பானில் சிறு தொழில் மூலமாகவே பல்பும், பேப்பரும் உற்பத்தி செய்யக்கூடிய வசதி பல இடங்களில் இருக்கிறது. நமது சர்க்காரின் யோசனையில் இப்போது, ஜப்பானில் உள்ளது போல இங்கே பரீட்சார்த்த மாக ஒரு ஆலை வைக்கலாம் என்பதுதான். வெளிநாடுகளில் இருந்து பேப்பர் ப்ளான்ட் வைப்பதற்கு மெஷின், கடன் உதவி முதலியன கொடுத்து உதவுவதற்கு ஒரு கம்பெனி தயாராய் இருப்பதாக பேச்சுவார்த்தை கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னும் ஒன்றும் முடிவு அடையவில்லையாதலால் இதைப்பற்றி நிரந்தரமாகச் சொல்வதற்கில்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இதுவரையில் நம் ராஜ்யத்தில் இயங்கி வரும் பேப்பர் ஆலைகள் எவ்வளவு ? அவற்றில் உற் பத்தியாகும் டன் எவ்வளவு ? அதை அதிகப்படுத்துகிற உத்தேசம் சர்க் காருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம் ராஜ்யத்தில் பேப்பர் மில் கிடையாது. ஹாண்டு மேட் பேப்பர் உற்பத்தி செய்கிற தொழில் சில இடத்தில் இருக்கிறது.

*Co-operative Agricultural Banks*

* 831 F *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to reorganise rural banks into co-operative agricultural banks in the State; and

(*b*) whether the rural banks already formed in the State, help the ryots in procuring good seeds, insecticides and agricultural implements?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Narayanaswamy Pillai Committee did recommend that rural banks should function as large-sized societies (agricultural banks) instead of as separate agencies for the issue of medium term loans. In the meanwhile the whole Co-operative Policy has come under review as a result of the resolution of the National Development Council on Co-operation and the matter is under re-examination by the Government.

(*b*) Yes, Sir. In addition to supply of credit, the rural banks undertake the distribution of seeds, fertilisers, insecticides and agricultural implements to their members.

SRI N. K. PALANISAMI : அந்தச் சிபார்சுகள் பரிசீலனையில் இருப்பதாக கனம் மந்திரி சொன்னார்கள். அந்தப் பரிசீலனை எப்போது முடியும் ? ஏற்கனவே நாஷனல் கவுன்சில் முடிவு செய்த பிரகாரம் இதை மாற்றி அமைக்கும் திட்டம் எப்போது வரும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : மறுபடியும் நாஷனல் டெவெலப்மெண்டு கவுன்சில் கூட்டம் நடைபெறும். அப்போது இது கவனிக்கப்படும். இன்னும் முடிவாகவில்லை.

SRI M. KANDASAMI PADAYACHI : இப்போது விவசாய பாங்குகள் நல்ல முறையில் நடந்து வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஏன் இன்னும் அதிகப்படியான பாங்குகளைத் திறக்க முன்வரக்கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் அக்ரிகல்சரல் பாங்க் மிக வெற்றிகரமாக நடந்து பயன் அளித்து வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்காக

[16th March 1959

ஒதுக்கப்பட்ட 300 பாங்குகளையும் நாம் ஏற்படுத்திவிட்டோம். இனிமேல் வைப்பது என்றால் வேறு ஏதாவது பாங்குகளை எல்லாம் எப்படி இணைத்துச் சேர்ப்பது என்றுதான் முயற்சிக்கவேண்டும்.

SRI R. SRINIVASA IYER: May I know how many agricultural banks are functioning in the State and the amount of private deposit with these banks?

THE HON. SRI R. VENKATARAMAN: Agricultural banks now functioning in the State will be about 280 or 285. The rest of them will be inaugurated in the course of the next two or three weeks. By the end of the financial year 1958–59 we will have 300 banks. On an average there is a deposit of over Rs. 10,000 in small banks. But there are some agricultural banks which have deposits of even a lakh of rupees.

SRI M. JAGANATHAN: May I know whether the agricultural banks have been opened in towns and cities or in villages?

THE HON. SRI R. VENKATARAMAN: I am sorry that my esteemed Friend has not cared to go and see one of these banks in which we take so much pride. They are all in villages. They are situated in the midst of three or four villages and the whole area of operation is only about five miles.

SRI M. D. THIAGARAJA PILLAI: தலைவர் அவர்களே, இந்த பாங்குகள் எல்லாம் கிராமாந்திரங்களில் நல்ல விதமாக நடக்கிறது. ஆனால் இதில் உள்ள கஷ்டம் சூப்ரவைசர்களுக்கு ஒரேவித சம்பளம் கொடுக்கிறார்கள். டி.ஏ. வைக் குறைத்துவிடுவதால் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. செக்ரடரிகளுக்கு கொஞ்சம் அதிகச் சம்பளத்தைக் கொடுத்து இந்த பாங்குகள் நல்லவிதமாக உதவி செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்தவிதமான குறைபாடு இருப்பதாக என் கவனத்திற்கு இதுவரையில் வரவில்லை. இப்போது பாங்குகளில் இருப்பவர்கள் இதைப்பற்றி கடிதம் எழுதினால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

SRI S. M. ANNAMALAI: கிராமாந்திரங்களில் இருக்கக்கூடிய பல நோக்கு சங்கங்களை எல்லாம் கிராமாபிவிருத்தி பாங்குகளாக ஏற்படுத்திக்கொடுக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: நமக்குக் கொடுத்த 300 பாங்குகளையும் ஏற்படுத்திவிட்டோம். மற்றபடி வேறு எவ்வாறு இந்த பாங்குகளையும் இணைப்பது என்று பார்த்தால்தான் இதை அதிகப்படுத்த முடியும்.

SRI S. LAZAR: May I know whether the starting of the agricultural banks is a matter which is purely left to the local co-operative institutions like the Co-operative Central Bank or whether the Government have any hand in it?

THE HON. SRI R. VENKATARAMAN: On the recommendation of the District Central Bank the Government generally distribute the banks to deserving places.



16th March 1959]

*Coir industry*

* 831-G Q.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Industries be pleased to state the number of persons engaged in Coir Industry?

THE HON. SRI R. VENKATARAMAN: About 11,000 persons.

SRI R. SRINIVASA IYER: Is there any scheme of this Government to develop the coir industry which is in a very backward way at present?

THE HON. SRI R. VENKATARAMAN: We propose to have four or five co-operative coir factories in Kanyakumari district. The training centre in Tanjore district at Pushpavanam will be converted into an industrial co-operative. Similarly, the training centre in Coimbatore district will also be converted into an industrial co-operative society.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: இந்தக் கயிறு தொழில் எந்தெந்த ஜில்லாக்களில் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN: நம் ராஜ்யத்தில் கயிறுத் தொழில் கிடையாது. இதுவரை அதிகமாக நடந்துவந்த பகுதிகளெல்லாம் கேரளாவிற்குச் சென்றுவிட்டது. ஆகவே கன்யாகுமரி ஜில்லாவில் கூட்டுறவு முறையில் இத்தொழிலை ஆரம்பிக்கப்போகிறோம்.

SRI A. VEDARATHNAM: கேரளம் பிரிந்தபிறகு அங்கிருந்த பெரிய பாக்டரி கேரளத்திற்கு சென்று விட்டது. அதேமாதிரி பெரிய பாக்டரியை நம் ராஜ்யத்தில் அமைப்பதற்கு உத்தேசம் உண்டா?

இங்குள்ள கூட்டுறவு சங்கம் மத்திய கயிறு போர்டு சம்புந்தப்பட்டவரை இங்கு உற்பத்தி செய்கின்ற பொருளை அவர்கள் மூலம் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் சர்க்கார் இதைப் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இப்பொழுது நம் ராஜ்யத்தில் கூட்டுறவு முறையில் கயிறு உற்பத்தி ஆரம்பிக்க இருக்கிறது. பின்னால் அந்தப் பிரச்னை எழுகின்றபோது அது கவனிக்கப்படும்.

SRI M. P. PERIASAMI: இந்தக் கயிறு விவசாயத்திற்கு முக்கியமான பொருள் என்பதை குறித்து அரசாங்கம் ஒவ்வொரு ஜில்லாவிலும் கயிறு உற்பத்தி செய்யும் தொழிலை ஏற்பாடு செய்வார்களா?

THE HON SRI R. VENKATARAMAN: ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆரம்பிப்பதற்கு அங்கு உப்புத் தண்ணீர் மட்டும் அல்லாமல் நல்ல தண்ணீரும் வேண்டும். மேற்கூறிய வசதியை செய்தவற்கு எல்லா உதவியையும் செய்யும்.

SRI R. SRINIVASA IYER: Sir, want of trained hands is felt very much in this State for the development of industries. There has been a proposal that the Government should start production-*cum*-training centres. Will the Government consider the feasibility of opening such centres, wherever it is possible to do so?

THE HON. SRI R. VENKATARAMAN: We propose to have a Coir School at Ethamozhi in the Kanyakumari district. Then, the Government have started these training-*cum*-production centres

at Pushpavanam in the Tanjore district and at Chinnapalayam in the Coimbatore district. I think, these are the places where the training as well as production are going on.

*Ryots affected by the Neyveli Project*

* 831 *Q.*—SRI M. P. SUBRAMANIAM (on behalf of SRI A. GOVINDASAMY): கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நெய்வேலி திட்டத்தினால் பாதிக்கப்பட்ட புதுக்கரைப்பேட்டை விவசாயிகளுக்கு குடியிருப்புக்கு ஒரு குடும்பத்திற்கு எத்தனை சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) விவசாயித்திற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) அதற்காக நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The people displaced from Kooraipettai village, have been rehabilitated by the Neyveli Lignite Corporation in "New Kooraipettai" village and allotted—as will be done in the other rehabilitation colonies also—house sites, free of cost, at the rate of 10 cents to each of those whose pukka houses have been acquired and 5 cents to each of those whose cutcha houses have been acquired.

(*b*) Yes, Sir. Land equal in extent to the lands acquired from a ryot subject to a maximum of 2 acres have been allotted for agricultural purposes.

(*c*) No, Sir. The lands allotted for agricultural purpose are rain-fed dry forest lands and irrigation facilities cannot be extended to these lands.

SRI M. P. SUBRAMANIAM : இந்த நெய்வேலி திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகட்டுவதற்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் நிலத்தை சீர்த்திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களுக்கு சட்டபடி காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தவிர கார்பொரேஷனில் ஏக்கருக்கு 50 ரூபாய் உதவி கிடைக்கிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : சமீபத்தில் உயர்நீதி மன்றம் அவர்கள் கொடுக்கக் கூடிய நஷ்டயீடு சட்டப்படி செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படியானால் அரசாங்கம் இப்பொழுது என்ன கொடுக்கப்போகிறது. இதைப் பற்றி அரசாங்கம் ஆலோசித்ததா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி ஹைக்கோர்ட்டு 1947 வருஷத்து மதிப்பு செய்த பிரகாரம்தான் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்கள். அது சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது இன்னும் ஜட்ஜ்மெண்ட் காபி வரவில்லை. வந்த பிறகு என்ன உதவி செய்ய வேண்டும் என்பதை ஆராயவேண்டும். கனம் அங்கத்தினர் சுப்பிரமணியம் கேள்வி சம்பந்தப்பட்டவரையில் :

The Corporation is willing to pay Rs. 50 per acre of property acquired over and above the cost of compensation payable to the property.



SRI S. M. ANNAMALAI : ஒவ்வொரு விவசாயிக்கும் இரண்டு ஏக்கர் நிலமும் 50 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. இந்த 50 ரூபாயை அதிகரிக்க பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது அவர்களுக்கு கொடுக்கப்படும் காம்பன்சேஷனுக்கு மேலே கொடுக்கப்படுகிறது.

SRI M. JAGANNATHAN : Arising out of the reply given by the Hon. Minister that the lands given to these affected ryots are rainfed lands, may I know whether the Government will consider the desirability of giving some subsidy to those affected ryots so that they may sink wells for irrigation purposes?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the normal facilities which are open to an agriculturist will be open to those persons also. But hon. Members would realise that all these other amenities are given over and above the compensation which has been given to them for acquisition of lands. The law presumes and we also always presume that once compensation is paid, the concerned persons should be reasonably satisfied with the money they got for the lands which they have parted with?

*Factories employing more than 20 workers*

* 831-I *Q.*—SRI S. LAZAR (on behalf of SRI P. G. MANICKAM) : கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பிரதி தினமும் 20 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகளையும் தொழிற்சட்டத்திற்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்றும், தொழிலாளர்கள் என்ற பதம் இவ்வேலையாட்களுக்கும் பொருந்தச் செய்ய வேண்டும் என்றும், சென்னை ஹைக்கோர்ட்டு நீதிபதிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளவை கவர்ன்மெண்டாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டனவா ?

(ஆ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The question of taking suitable legislative action in the light of the judgment referred to is under consideration.

SRI S. M. ANNAMALAI : இந்தத் தீர்ப்புகளால் சுருட்டுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பீடித் தொழிலாளர்களுக்குப் புதிதாக சட்டம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : இருபது கைத்தறியாளர்களுக்கு மேல் வேலை செய்யும் நெசவுத் தொழிலுக்கு இந்தச் சட்டப்படி சலுகைகள் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இந்தச் சட்டத்தின்கீழ் கொடுக்க வேண்டிய சலுகைகள் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பாக்டரி சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறது. பாக்டரி ஆக்டின் டெபெனிஷனை மாற்றிக்கொண்டால் எந்த விதமான தொழியும் பாக்டரி சட்டத்தின் கீழ்கொண்டுவர முடியும்.

[16th March 1959

*Agricultural Co-operative Supply and Marketing Society*

83-J *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்ய விவசாயக் கூட்டுறவு மார்க்கடிங் சொசைட்டி ஒன்றை நிறுவுவது பற்றி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Madras State Co-operative Supply and Marketing Society was registered on 2nd January 1959 and the Society was inaugurated on 20th February 1959. The Directors have also been nominated.

SRI V. SUBBIAH : விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை மார்க்கடிங் சொசைட்டி ஏற்றுமதி செய்வதற்கு, பிரியாரிட்டி கொடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதுதான் இந்த மார்க்கடிங் சொசைட்டியின் முக்கிய நோக்கம். இந்த ராஜ்யத்திலிருந்து வெளி நாடுகளுக்கு வத்தல், வங்காயம் போன்ற பொருள்கள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

SRI K. R. NALLASIVAM : நிர்வாகஸ்தர் போர்டில் உள்ள அங்கத்தினர்கள் பெயரை கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஜில்லா மார்க்கடிங் சொசைட்டி பிரசிடெண்டு இதில் இடம் பெறுகிறார். இதில் 21 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். வேண்டுமானால் அவர்களின் பெயர்களை படிக்கிறேன்.

*Storing of petrol by the State Transport Department*

* 831-K *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether petrol is being kept in barrels inside the Transport Office in general and in particular in the Nagercoil Office;

(*b*) if so, the reason therefor; and

(*c*) whether any stock register is maintained for the petrol as kept?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) Does not arise. Stock registers are maintained in respect of petrol stored in underground tanks.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know whether the Government are aware of the fact that the Estimates Committee went to the Nagercoil Garage and found that nearly 200 gallons of petrol were stored in tins, and, if so, whether this fact was brought to the notice of the concerned Minister?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I want notice of this particular question. But I can give a few details which would go to show the amount of petrol which is kept in each depot and how it is stored. For instance, in the Transport House Depot, we have 8,634 gallons stored in underground tanks and not in loose tins. Similarly in Patulla Road, 35,880 gallons are stored in underground tanks and not in loose tins. In the Kanyakumari branch, 44,500 gallons of petrol are stored in underground tanks.





*Travel concessions to N.G.Os. in the State Transport*

* 831-L *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ஓடும் அரசாங்க பஸ்களில் பிரயாணம் செய்ய (concessional season tickets) சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றனவா ?

(ஆ) என்.ஜி.ஓ. ஊழியருக்கு பிரத்தியேக தனிச் சலுகைக் கட்டண முறை புகுத்த யோசனை உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Season tickets are being issued in some of the routes in Madras City.

(*b*) Non-Gazetted employees of the Madras State Transport Department are provided with free duty passes to travel from their residence to their place of duty and back. There is no proposal to extend any concession to other non-gazetted Government servants for their journeys in State Transport buses.

SRI S. M. ANNAMALAI : சில ரூட்டுகளில்தான் இப்படிப்பட்ட கன்செஷன்கள் தரப்படுகின்றன என்று மதிப்பிற்குரிய அமைச்சர் சொன்னார். அவை எந்தெந்த ரூட்டுகளில் தரப்படுகின்றன ? அவைகளை ஏன் மற்ற ரூட்டுகளுக்கு விஸ்தரிக்கவில்லை ?

THE HON. SRI R. VENKATARAMAN : வருஷா வருஷம் சில ரூட்டுகள் வீதம் விஸ்தரித்துக்கொண்டே போகிறோம். இதுவரையில், பின்வரும் ரூட்டுகளுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

ரூட் 1—திருவல்லிக்கேணி—பாரிஸ்.

ரூட் 6—எம்.யு.வி.–தண்டையார்ப்பேட்டை.

ரூட் 34—கெல்லிஸ்–பாரிஸ்.

ரூட் 11—தியாகராயநகர்–பாரிஸ்.

இதற்குமேல் இப்போது பின்வரும் ரூட்டுகளிலும் கன்செஷன் கொடுக்கப் படுகிறது.

ரூட் 15—பாரிஸ்–அமிஞ்சிக்கரை.

ரூட் 22—திருவல்லிக்கேணி–கெல்லீஸ்.

ரூட் 30—ஐஸ்ஹவுஸ்–மிண்ட்.

ரூட் 31—பாரிஸ்–ஹாமில்டன் பிரிட்ஜ்.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்தச் சலுகை மாணவர்களுக்கும் அளிக்கப்படுகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் எந்த ஊரிலிருந்து வருகிறாரோ அந்த ஊரில் மாணவர்களுக்கு இந்தச் சலுகையை அளித்துக்கொண்டிருக்கிறோம். இந்தச் சலுகையை சென்னையில் மாணவர்களுக்குக் கொடுக்கவில்லை. அந்த ஊரில் இந்தச் சலுகை மாணவர்களுக்குக் கொடுக்கப்படுவது வழக்கமாகிருந்ததால் அங்கே அதை மாற்றவில்லை.

*Industrial potentialities of Tiruchirappalli District.*

* 831-M Q.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal before the Government to find out the industrial potentialities in Tiruchirappalli district?

THE HON. SRI R. VENKATARAMAN: At the request of this Government, the National Council of Applied Economic Research is conducting a Techno-Economic Survey of this State, with a view to assessing the industrial potential of the State. The potentialities of the various districts including Tiruchirappalli also will be considered. The question of utilising the gypsum available in Tiruchirappalli district for the manufacture of sulphuric acid with cement as bye-product has also been referred to the National Council for investigation.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959-60—*cont.*

### DEMAND XVI—EDUCATION.

MR. SPEAKER: இப்போது 16-வது மானிய கோரிக்கை, கல்வி, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். கனம் மந்திரி அந்த மானிய கோரிக்கையை இப்போது சபை முன் பிரேரிப்பார்.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 13,61,63,000 under Demand XVI—Education.

MR. SPEAKER: எதிர்க் கட்சிகள் எல்லோரும் சேர்ந்து கனம் அங்கத்தினர் ஸ்ரீ அன்பழகன் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரிப்பதாகக் கூறுகிறார்கள். அவர் அந்தப் பிரேரணையை இப்போது பிரேரிக்கலாம்.

SRI K. ANBAZHAGAN: Sir, I move—

That the allotment of Rs. 13,61,63,000 under Demand XVI—Education—be reduced by Rs. 100.

MR. SPEAKER: The Demand and the cut motion are before the House for discussion.

இப்போது கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. அன்பழகன் பேசலாம். அவருக்கு 15 நிமிஷங்கள் ஒதுக்கி வைக்கிறேன். கனம் மந்திரி அவர்களுக்கு முக்கால் மணி நேரம் போதுமல்லவா? மேலும் பேச விரும்பும் மற்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் 15 நிமிஷம் அளிக்கப்படும்.

SRI K. ANBAZHAGAN: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கல்வி மான்யத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையை வெட்டுவதற்கான இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதன் மூலம், இந்த மாநிலத்தில் நடத்தப்படும் கல்வித் திட்டங்களில் ஓரளவு செம்மையை உண்டுபண்ண முடியும் என்ற நம்பிக்கையோடு இந்த விவாதத்தில் ஈடுபடுகிறேன். பொதுவாகவே, கோரப்படும் மானியத் தொகையை வெட்டுவதற்காகத் தீர்மானத்தைத் தரும் நேரத்தில் மானியத் தொகையை உயர்த்த வேண்டு



மென்ற கருத்தோடுதான் அவ்வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவருவது வழக்கம். ஆனால், இப்போது நான் கொண்டு வந்திருக்கும் வெட்டுத் தீர்மானம் ஓரளவு பெயருக்குப் பொறுத்தமானது. ஏனென்றால், ஹிந்தியை மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதற்காக பல ஹிந்தி ஆசிரியர்களை நியமிப்பதால் ஏற்படும் அதிகச் செலவைக் குறைக்க வழி ஏற்படுமானால், என்னுடைய வெட்டுத் தீர்மானத்தின்படி இந்த மானியத் தொகையை 100 ரூபாய் குறைப்பதுகூட ஏற்றுக்கொள்ளக் கூடியது ஆகும்.

நமது மாநிலத்தில், கல்வியைப் பொறுத்த வரையில், நீண்ட காலமாகவே ஒரு நிரந்தரமான, முறையான, வளர்ச்சி ஏற்பட்டு வந்திருக்கிறது என்பதை மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் மறுப்பதற்கில்லை. கல்வியில் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக பெரியதொரு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்ற கருத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த, மதிப்பிற்குரிய அமைச்சர்கள் அடிக்கடி நினைவூட்டி வருகிறார்கள், கல்விச் செல்வம் ஐந்தாண்டுத் திட்டத்தாலேயே பெருகியிருக்கிறது என்ற கருத்தை மதிப்பிற்குரிய அமைச்சர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் நான் மதிப்பிற்குரிய அமைச்சர்களுக்கு ஒன்றை நினைவூட்டுவேன், நமது சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் கல்வியில் ஒரு முறையான வளர்ச்சிதான் ஏற்பட்டிருக்கிறது. இது ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏற்பட்டது என்று நான் சொல்ல மாட்டேன்; வேண்டுமானால், ஆதாரக் கல்வியை பொறுத்த வரையில் அதுவும் அதில் எண்ணிக்கையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதே தவிர பிற வகையான கல்வித் திட்டங்களில் பெரும் வளர்ச்சி ஏற்படவில்லை என்பதை மதிப்பிற்குரிய அமைச்சர்களுக்கு நினைவூட்டுவேன். கல்வியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்பட்டது அல்ல என்பதற்குக் காரணம் கூறுகிறேன். குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பது குறித்து, இந்திய அரசாங்கத்தின் அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படியேகூட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்கள் என்று எந்தக் காரியங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ அவைகளை நாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் நிறைவேற்ற முடியவில்லை. அவைகளை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாவது நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பும் நிலையில் இருக்கிறோம். எனவே கல்வியில் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிட்ட கடமைகளை அரசாங்கம் நிறைவேற்ற முடியவில்லை. இந்தக் காரணத்தாலேயே ஐந்தாண்டுத் திட்டத்தால்தான் கல்வித் திட்டில் இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று மதிப்பிற்குரிய அமைச்சர்கள் சொல்வது அவ்வளவு பொறுத்தமாக இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதே மன்றத்தில், கல்வித் திட்டத்தைக் குறித்து இதற்கு முன்பு பேசியபோதும், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மூன்று மொழிகளைப் படிக்க வேண்டிய கொடுமையை எடுத்துக் கூறியிருக்கிறேன். அவர்களை மூன்று மொழிகளைப் படிக்கச் சொல்லுவது கொடுமை என்பதற்கு, நான் முன்பு கூறிய காரணங்கள் வேறு; இன்றைய தினம் பிறிதொரு காரணத்தை மதிப்பிற்குரிய அமைச்சருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். கல்வித் திட்டமானது ஒரு மொழியில் பாடம் நடத்துவதிலிருந்து பிறிதொரு மொழியில் பாடம் நடத்துவதாக மாறும்போது, பாடங்களும் வேறு மொழியில் மாறும் நிலையில்; மாணவர்கள் இரண்டு மொழிகளிலும் ஆக்க அறிவும் ஆற்றலும் பெற்று பொது அறிவிலும் நாட்டுக்குத் தேவையான நல்லறிவிலும் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இன்றைய தினம் இந்த மாநிலத்தில் ஆங்கிலத்தில் படித்த மாணவர்கள் தமிழில் படிக்க வேண்டுமென்ற நிலைமைக்கு உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்கனவே ஆளாகியிருக்கிறார்கள். இனி, கல்லூரிகளிலும் மாணவர்கள் தமிழில் படிக்க வேண்டிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டியிருக்கிறது. கல்லூரிகளிலும் கற்பித்தல் தமிழில் வர வேண்டும் என்று நாம் எண்ணும்போது மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் இருக்கும் அறிவின் தரம் குறைந்துவிடவோ தேய்ந்துவிடவோ கூடாது என்று விரும்புகிறோம்; இந்த மன்றத்திலுள்ள நாம் அனைவரும் இக்கருத்தைக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மாணவர்களில் தேர்ச்சி ஆங்கிலத்திலும் குறையக் கூடாது, அவர்கள் தமிழிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்று விரும்புகிறோம். மேலும் அவர்கள் பொது அறிவையும் விஞ்ஞானத்தையும் தமிழ் மூலம் கற்றாலும், ஆங்கிலத்தில்

இதுவரை அவர்கள் பெற்றுள்ள அறிவையும் தேர்ச்சியையும் குறையாமல் பார்த்துக்கொள்வதுடன் மட்டுமின்றி அதிகப்படுத்திக்கொள்ளவும்வேண்டுமென்று எண்ணுகிறோம். இந்த நிலையில் உள்ள அவர்கள் பொது அறிவிலோ மொழிகளிலோ நல்ல தேர்ச்சி பெறுவதற்கு இடையூருக இருக்கிறது ஹிந்தி. தமிழ் நாட்டுக்கு நாட்டு மொழியாக அல்லாத ஹிந்தியை எல்லா மாணவர்களும் பயிலவேண்டுமென்ற கட்டாயச் சூழ்நிலையை மதிப்பிற்குரிய அமைச்சர் இம்மாநிலத்தில் உண்டாக்கியிருப்பது நியாயமா என்று அவர் எண்ணிப் பார்க்கவேண்டும். இது குறித்துப் பேசியபோது, கல்விக்கான குழு இவ்வாறு தீர்மானித்திருக்கிறுர்கள் என்று மதிப்பிற்குரிய அமைச்சர் கூறினுர். இதைக் கல்விக்கான குழு அன்றி கடவுளே செய்திருந்தாலும், தவறு தவறுதான் என்பதை மதிப்பிற்குரிய அமைச்சருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். தமிழிலும் நல்ல வளர்ச்சி பெற வேண்டும், ஆங்கிலத்திலும் போதிய தேர்ச்சி பெற வேண்டும், மொழிகளில் ஹிந்தியும் படிக்க வேண்டும்—அதிலும் மூன்ருவது மொழியாக ஹிந்தியும் படிக்க வேண்டும்—என்ற நிலையில் மாணவர்கள் இருக்கிறுர்கள். தமிழைப் படிப்பது பிற மொழிகளைப் படிப்பதைவிடக் கடினம். காரணம், தமிழ் பிற மொழிகளைவிட உயர்ந்ததாகவும், வளர்ந்ததாகவும் இருக்கிறது. ஆங்கிலத்தைப் படிப்பதும் கடினம். காரணம் ஆங்கிலம் நாளும் வளர்ந்துவரும் மொழி. இந்த இரு மொழிகளையும் கற்பதுடன் நில்லாது 'ஹிந்தி ஆர் எனி அதர் இன்டியன் லாங்க்வேஜ்' என்ற தலைப்பின்படி தாய் மொழியாகவோ, வட்டார மொழியாகவோ ஆங்கிலமோ அல்லாத மொழியாகிய ஹிந்தியை மாணவர்கள் படிக்க வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்துவது அவசியமே அல்ல. இந்த நிலையை நிச்சயமாக மாற்ற வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஹிந்தியை நாடு முழுவதும் எல்லோரும் பயிலச் செய்வதற்கு எல்லா அரசாங்கங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திலுள்ளவர்கள் கேட்டாலும், ஹிந்தியை எல்லோரும் படிக்கச் செய்வதை அவர்கள் கடமையாகக் கொண்டிருந்தாலும், மாநில அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் மாநிலத்திலுள்ளவர்களில் ஹிந்தியைப் பயில விரும்புவோர்க்கு அதற்கான வாய்ப்பை அளிக்கலாமே தவிர, ஹிந்தியைப் படிக்க விரும்பாத மாணவர்களும் அதைப் படித்துத்தான் தீர வேண்டும் என்ற நிலைமையை உண்டாக்கக் கூடாது ; தமிழிலும் ஆங்கிலத்திலும் மாத்திரமே தேர்ச்சி பெற வேண்டுமென்று விரும்பும் மாணவர்களும் ஹிந்தியைப் படித்துத்தான் தீர வேண்டும் என்ற நிலைமையை உண்டாக்கக் கூடாது.

வேண்டுமாளுல் இதற்கு கட்டாய ஹிந்தி என்ற பெயரில்லையென்று
9.30 a.m. சொல்லலாம். ஆனுல் இருக்கும் நிலை, கட்டாய இந்திதான். ஆகவே நான் அமைச்சரவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வேன், தமது கருத்தை அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று. இந்தி படிக்க விரும்புகிறவர்களுக்கு நான் தடை எழுப்ப விரும்பவில்லை. தமிழை சிறப்பு மொழியாக பயில்வதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியைக் கற்கவே ண்டுமென்று வற்புறுத்தக்கூடாது. அடுத்து, இன்றையதினம் பள்ளி ஆசிரியர்களுக்கு குறைந்தது 35 பிள்ளைகளாவது சராசரி இருந்தால்தான் ஒவ்வொரு ஆசிரியரும் ஆசிரியராக பணியாற்றுவதற்குரிய ஊதியம் பெற முடியும் என்ற கருத்து நமது அரசாங்கத்தால் வற்புறுத்தப்படுகிறது. இது குறித்து பல தடவைகள் மாறுபாடுகள் எழுப்பப்பட்டன. முன்னுல் 40 ஆக இருந்ததை இப்பொழுது 35 ஆக குறைத்துவிட்டேன் என்று அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். ஆனுல் மாணவர்கள் அட்டவணையில் 35 பேராவது சராசரி வந்திருந்தால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள், "according to educational teaching qualifications" என்று தெரிவித்தார்கள். நான் அவர்களிடம் வற்புறுத்திக்கேட்டுக் கொள்வேன், 35 என்ற சராசரி எண்ணிக்கை அதிகமானது. சட்டசபை எண்ணிக்கையை ஒப்பிட்டு நோக்கினுல் பத்து பேர்கள் கூட தேராது. நாம் எவ்வளவு குறைவாக வருகிறோம் என்பதோடு ஒப்பிட்டு பள்ளிக்கூடங்களைக் காட்டத் தயாராயில்லை. அதே நேரத்தில் பள்ளிக்கூட மாணவர்களும் கூட 35 பேர்கள் இருக்கும் வகுப்பில் சராசரி 25 தான் தேறும். 40 பிள்ளைகள் இருக்கக் கூடிய இடத்தில் 30 தான் தேறும்.



அதிலும் கிராமங்களில், பிற்போக்கு வட்டாரங்களில் வாழ்கிற மக்களின் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் செல்வதற்கு முடியாத சூழ்நிலைக்கு ஆளாகிறுர்கள், சில நாட்களில். ஆகவே சராசரி 35 என்றிருப்பதை 30 என்ருவது மாற்றியமைக்க அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நியாயம் என் வாதத்தில் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றெரு கருத்து, மாணவர்கள் 35 பேர்கள் இருக்கவேண்டுமென்று இருந்தாலும்கூட வகுப்புகளின் தரத்தைப் பார்த்துத்தான் தீர்மானிக்கவேண்டும். முதல் வகுப்பில் பிள்ளைகள் வரும்போது அங்கு 35 குழந்தைகளுக்கு பாடம் நடத்துவது என்பது மிகக் கடினமானதொரு காரியமாகும். முதல் இரண்டு வகுப்புகளில் 35 குழந்தைகளுக்கு பாடம் நடத்துவது என்பது மிகவும் சிரமமான காரியமாகும். ஆனுல் மூன்ருவது, நான்காவது வகுப்புகளில் அப்படி நடத்த முடியும். ஆறு, ஏழாவது வகுப்புகளை எடுத்துக்கொண்டால் அங்கு 40 குழந்தைகளுக்குக் கூட பாடம் நடத்தலாம். இப்பொழுதிருக்கிற நிலையை ஒட்டிப் பார்த்தால் முதல் இரண்டு வகுப்புகளில் 25 குழந்தைகள் இருந்தால் கூட அதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் முன்வரவேண்டும். முதல் இரண்டு வகுப்புகளில் குழந்தைகள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகயிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அடிப்படையில் கல்வியைப் பற்றிய தெளிவு குழந்தைகளுக்கு நன்கு ஏற்பட முடியும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். முதல் வகுப்பில் 35 குழந்தைகளை வைத்து பாடம் நடத்துவது எவ்வளவு கடினமானது என்பதை, இந்த சட்டமன்றத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் யாராவது இருந்தால் அவர், புரிந்து கொள்வார். பத்து குழந்தைகளுக்கு சேர்ந்து படிப்பு சொல்லிக் கொடுப்பது என்பது பெரிய, கடினமான காரியமாகும். ஆகவே, ஆரம்பப் பள்ளியில் முதல் இரண்டு வகுப்புகளில் 25 குழந்தைகள் இருந்தால் போதும் என்ற ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்றையதினம் கான்வென்ட் பள்ளிக்கூடங்கள் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது என்று நமது கல்வித் துறை இலாகா தலைவர் அவர்களே அடிக்கடி பாராட்டி குறிப்பிடுகிறுர்கள். அப்படி அவர்கள் உள்பட பாராட்டுகிற அளவிற்கு அப்பள்ளிகள் நடப்பதற்கு ஒரு காரணம் என்னவென்று கேட்டால் அங்கு 25 குழந்தைகளுக்கு மேல் முதல் இரண்டு வகுப்புகளில் அனுமதிப்பதில்லை. அப்படி, 25 குழந்தைகளுக்கு மேல் அனுமதிக்கப்படாததால் அக்குழந்தைகளை நன்கு கவனிக்க முடிகிறது. வேறு சில வசதிகள் அங்கு இருக்கலாம். ஆனுல் எண்ணிக்கையும் ஒரு முக்கிய காரணமாகும். சாதாரணமாக, குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி, குடும்பக் கட்டுப்பாடு நாட்டின் நன்மைக்காகத்தான் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லும் அரசாங்கம், ஒரு குடும்பத்தில் மூன்று குழந்தைகளுக்கு மேல் இருக்கக்கூடாது, அப்படியிருந்தால் அக் குழந்தைகளை நன்கு கவனிக்க முடியாது போய்விடுமென்று சொல்கிற அரசாங்கம், 35 குழந்தைகளை ஆரம்பப்பள்ளி ஆசிரியரிடம் கவனிக்க சொல்லி ஒப்படைத்தால் அவர் இந்தக் குழந்தைகளை எப்படி கவனிக்க முடியும் என்பதை என் அரசாங்கம் எண்ணிப்பார்க்கத் தவறி விட்டது ? ஆக, முதல் இரண்டு வகுப்புகளில் 25 குழந்தைகளுக்கு மேல் இருந்தால் ஆசிரியர்களால் அக்குழந்தைகளை கவனிக்க முடிவதில்லை. விளையாட்டுப் பருவத்திலிருக்கிற குழந்தைகளுக்கு விளையாட்டோடு விளையாட்டாகத்தான் கல்வி போதிக்க வேண்டும். அப்பொழுது ஆசிரியர்களின் கவனம் குழந்தைகளின் மேல் அதிகம் இருக்கவேண்டும். அப்படி ஆசிரியரின் கவனம் அதிகமாக இருக்கவேண்டுமென்ருல் அந்த வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை 25-க்கு மேல் இருக்கவே கூடாது. ஆகவே, இக்கருத்தை அமைச்சர் அவர்கள் மறுபடியும் ஆலோசிக்கவேண்டும். அதேபோல் இன்றையதினம் ஆசிரியர்களாக இருப்பவர்களின் ஊதியம் மிகக் குறைவாயிருக்கிறது. அப்படி அவர்கள் ஊதியம் குறைந்திருப்பது குறித்து இப்பொழுது புனர் பரிசீலனை செய்வதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதையும் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிற கமிஷன் அது குறித்து விசாரணை செய்து நல்ல முடிவினை தரக்கூடுமென்று நான் நம்புகிறேன். இருந்தபோதிலும் ஒரு கருத்தை நான் இங்கு குறிப்பிடுவது அவசியமென்று கருதுகிறேன். லோயர் எலிமெண்டரி கிரேட் டீச்சர்ஸ் இன்றையதினம் பெற்று வருகிற சம்பளம் 25–35

[Sri K. Anbazhagan] [16th March 1959

ஆகும். இப்பொழுது ஐந்து ரூபாய் அதிகரித்துக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் அவர்கள் ஆரம்ப சம்பளம் 23 ரூபாய் தான். இப்படியிருந்தால் அந்த ஆசிரியர்களுக்கு சமுதாயத்தில் எந்த அளவு மதிப்பு இருக்கமுடியும் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். ஹையர் எலிமென்டரி டீச்சர்ஸ்க்கு 30 ரூபாய் சம்பளம் இருக்கிறது. செகண்டரி கிரேட் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அண்மையில் அவர்களது ஊதியம் உயர்த்தப்பட்டது. அவர்களுக்கு 45 ரூபாயில் தொடங்குகிறது. அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலும் லோக்கல் போர்டிலும் ஏறத்தாழ ஒரேவிதமாகத்தான் இருக்கிறது என்று சொன்னாலும் எய்டெட் பள்ளிகளில் வேறு விதமாகத்தான் இருக்கிறது. ஆக, பள்ளிக்கூடங்களை யொட்டி ஆசிரியர்களின் சம்பளங்கள் இருப்பதும், கடைநிலை ஆசிரியர்களுக்குள்ள சம்பளம் 23 ரூபாயாக இருப்பதும் மிக மிக வருந்தத்தக்கதாகும். அடுத்து, கல்லூரிகளில் உள்ள பண்டிட், முன்ஷிகள் ஆகியவர்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். Detailed Statement of Expenditure, என்ற தலைப்பில் தரப்பட்டிருக்கிற விஷயத்தில், பண்டிட், முன்ஷிகள் இவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று கேட்டால் அவரவர்கள் கல்வித் தரத்திற்குத் தகுந்தாற்போல் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களது தரத்தை யார் தராசில் வைத்து நிறுக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களின் சம்பளம் என்னென்ன என்று அந்தக் குறிப்பில் இருக்குமானால் அதிலுள்ள வேற்றுமைகள் தெரியும். பண்டிட், முன்ஷிகள் விஷயத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. உயர்தர பள்ளிகளை எடுத்துக்கொண்டால் அதில் முதல்தரமாக இருப்பவர்களுக்கு 80 ரூபாய் சம்பளம் என்றும், இரண்டாம் தரத்தினருக்கு 45லும், 60லும் தொடங்கப்படுகிறது, சம்பளம். முதல் தர தகுதியைப் பெற்றிருந்தாலும், அப்படி பெற்றிருப்பவர்களுக்கு அந்தச் சம்பளம் அளிக்கப்படுவதில்லை. சில தினங்களுக்கு முன்னர் கல்வியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்; உயர்நிலைப் பள்ளியில் 12 மணிநேரம் பாடம் எடுத்தால் அவர்களுக்கு ஒரு பத்து ரூபாய் சம்பளம் அதிகம் தருகிறோம் என்று சொன்னார்கள். இது எப்படி நியாயம் செய்வதாகும்? இரண்டாவது தர ஆசிரியர்கள், வித்துவான் பரீட்சை படித்து விட்டு, பண்டிட் பயிற்சி பெற்று விட்டு, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வும் பெற்று முதல்தர ஆசிரியருக்குள்ள தகுதி பெற்றிருந்தாலும்கூட, 12 மணி நேரம் உயர்நிலைப் பள்ளியில் பாடம் எடுத்தால்தான் இந்த பத்து ரூபாய் உயர்வு கொடுக்கப்படுகிறது. கல்வியின் தரத்தை யொட்டித்தான் சம்பளம் இருக்கவேண்டும் அல்லது எடுக்கிற வகுப்பைப் பொறுத்துத்தான் சம்பளம் கொடுக்கப்படுமென்று சொன்னால், தான் விரும்புகிற ஆசிரியர்களை மேல் வகுப்புகளுக்கும், தான் விரும்பாத ஆசிரியர்களை கீழ் வகுப்பிற்கும் போடுகிற மனப்பான்மை நிர்வாக அதிகாரிகளுக்கு ஏற்படத்தான் செய்யும். தங்களுக்கு வேண்டியவர்களுக்கு பத்து ரூபாய் அதிகமாக கொடுப்பதற்காக அவர்களை மேல் வகுப்புகளுக்கும், தங்களுக்கு வேண்டாதவர்களுக்கு அந்த பத்து ரூபாய் கொடுக்காமல் இருப்பதற்கு அவர்களை கீழ் வகுப்பிலும் போடுவதற்குள்ள சந்தர்ப்பம் இன்று நிர்வாக அதிகாரிகளுக்கு இருக்கின்றன. ஆகவே, வகுப்பு என்று பாராது, ஒரே யோக்கியதையும், தரமும் இருப்பவர்களுக்கு ஒரேவிதமான சம்பளம் அளிக்கப்படவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறும் ஆசிரியர்களின் விஷயத்தில் இந்தக் கொள்கையை நீங்கள் கடைப்பிடிக்கவேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை. பேராசிரியர்களுக்கு 500 ரூபாயும், துணை ஆசிரியர்களுக்கு 250 ரூபாய் என்றும் இருப்பதை மாற்றவேண்டும் என்று நான் கூறவில்லை, அப்பொழுது தகுதியின் அடிப்படையில் இல்லாது வகுப்புகளின் அடிப்படையில் கொடுப்பதுபற்றி நான் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால் நூறு ரூபாய்க்கு கீழேயிருக்கும் ஆசிரியர்களின் விஷயத்தில் தகுதியை மாத்திரம் கவனித்து இன்ன வகுப்பில் பாடம் எடுக்கிறார், ஆகவே அவருக்கு அதிகச் சம்பளம் என்றும் கீழ் வகுப்பில் பாடம் எடுக்கிறார்கள், ஆகவே அவருக்கு குறைந்த சம்பளம் என்றும் வைக்காதீர்கள். பொதுவாக தமிழ் ஆசிரியர்கள், வித்வான்களுக்குப் படித்தவர்கள் குறைவாகப் படித்திருக்கிறார்கள் என்ற ஒரு தவறான கருத்து நிலவி வருகிறது. வித்வான் பாட திட்டத்தை



16th March 1959] [Sri K. Anbazhagan]

அமைச்சர் அவர்கள் ஒரு முறை புரட்டிப்பார்த்தால் எம். ஏ. படித்தவர்கள் எந்த அளவு தமிழ் அறிவு பெறுகின்றார்களோ, அதைவிட அதிக தமிழ் அறிவு பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. காலத்தை ஒட்டியும், சூழ் நிலையை ஒட்டியும் நாட்டிலே பொது அறிவு வளர்ந்து வருகிறது. அந்தப் பொது அறிவு வித்வான்களுக்கும் கிடைக்காமல் போய் விடுமா? வித்வானுக்கு மட்டும் படித்தவர்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்குக் குறைந்த ஊதியம் இருக்கவேண்டுமென்று விரும்புவது, நாம் இந்த நாட்டை தமிழ் மொழியில் ஆளப்போகிறோம், தமிழுக்கு முதல் இடம் தருகிறோம் என்று சொல்லுகிற கருத்திற்கு மாறுபட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்றொரு கருத்தையும் கூறிக்கொள்ளுவேன். கல்லூரிகளில் பிற துறைகளில் "அஸிஸ்டெண்டு ப்ரொபஸர்ஸ், அஸிஸ்டெண்டு லெக்சரர்ஸ்" என்ற பெயருடையவர்கள் 150 லிருந்து 250 ரூபாய் வரை ஊதியம் பெறுகின்றார்கள். அதே கல்லூரியில் "அஸ்ஸிடெண்டு லெக்சரர்ஸ் இன் ஓரியண்டல் லாங்குவேஜ்" என்ற பெயரால் தமிழாசிரியர்கள் இருக்கிறார்கள். "ஓரியண்டல் லாங்குவேஜ்" என்று தமிழைக் குறிப்பிடுவது நான் அது அவசியம் இல்லாத தொடர் என்று கருதுகின்றேன். "அஸிஸ்டெண்டு லெக்சரர்ஸ் இன் டமில்" என்று சிறப்பாக கூற வேண்டும். பிரித்துக் கூறவேண்டுமென்றால், சமஸ்கிருதத்தை "ஓரியண்டல் லாங்குவேஜ்" என்று குறிப்பிடுங்கள். பிற மொழிகளை வேண்டுமானால் இந்தப் பட்டியலில் சேருங்கள். "ஓரியண்டல் லாங்குவேஜ்" என்ற பதத்தால் தமிழைக் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை. அம்மாதிரி தமிழைக் குறிப்பிடுவது பாரபட்சம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எம். ஏ. படித்திருந்தாலும், எல்லாத் தகுதிகள் இருந்தாலும், மொழித் துறை ஆசிரியர்களுக்கு ரூ. 85-லிருந்து, கல்லூரி ஆசிரியர்களுக்கு, சம்பளம் அளிக்கப்படுவது ஒரு பெரிய தவறு. மொழித் துறை ஆசிரியர்களுக்கு மட்டும் ஏன் இந்த வேறுபாடு? எதற்காக இந்த வேறுபாடு? மொழித்துறை ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு அறிவுக் குறைவா? அல்லது திறமை குறைவு என்று தீர்மானமாகச் சொல்ல முடியுமா? எந்தவிதத்தில் அவர்களை வேறுபடுத்த முடியும்? வெள்ளையர் ஆட்சியிலே இருந்த மற்ற பல காரியங்களை மாற்றி அற்புதம் செய்த நம்முடைய அரசாங்கத்தினால் இன்றையதினம் தமிழுக்கு இழைக்கப்பட்டிருக்கிற அநீதி, தமிழ்த்துறை ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிற அநீதி துடைக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், தமிழ் நாடு என்று பெயர் வைத்தால் நாட்டிற்கு லாபம் இல்லை என்றாலும், தமிழ் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதில் அவர்களுக்கு லாபம் இருக்கிறது. அதோடு தமிழுக்கு ஒரு ஆர்வம் உண்டாக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் எண்ணிக்கொண்டு இந்த வேற்றுமையைப் போக்க வேண்டும். எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பளம் குறைவு என்று பொதுவாக இருந்தபோதிலும், தமிழ் ஆசிரியர்களும், மொழி ஆசிரியர்களும், ஓரியண்டல் டீசர்ஸ், என்ற பெயரால் ஊதியத்தை குறைத்துப் பெறுவதற்கு கல்லூரியில் இடம் இருக்குமானால், அது தமிழையே அவமதிப்பதாகும். இதை உடனடியாக மாற்ற வழிகாணவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து நான் கூறுவேன்: இன்றைக்கு கல்வி இலாகாவில், கல்வி இலாகாவினுடைய ஆண்டு அறிக்கையானது 1955-56-வது ஆண்டுக்குத் தான் கிடைத்திருக்கிறது. அதற்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்காவது நம்மிடையே அறிக்கை தந்திருக்க முடியும். ஒரு வேளை கல்வித் துறை இலாகா தலைவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் சென்று அங்கே பல நல்ல பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக இந்த அறிக்கையை அளிப்பதற்கு அவர்களுக்கு ஓய்வு இல்லையோ, என்னவோ? ஆனால், அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு ஆண்டுக்கு முன்னதாக இந்த அறிக்கை கையிலிருந்தால்தான் இந்த மானியத்தின் மீது விவாதம் நடக்கும்பொழுது பல கருத்துக்களை எடுத்துகூற வாய்ப்பு கிடைக்கும். 1955-56-க்குப் பின்னர் இதுவரையில் அறிக்கை கிடைக்கவில்லை.

[Sri K. Anbazhagan] [16th March 1959

அதேபோல் கல்வி சீரமைப்புத் திட்டத்தில் அமைச்சர் அவர்களும், கல்வி இலாகா தலைவர் அவர்களும் மிக்க அக்கறைகொண்டு, மாவட்டம்தோறும் மகாநாடுகள் கூட்டி, பொது மக்களிடமிருந்து நன்கொடைகளைப் பெற்று பல நல்ல திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். அப்படி நிறைவேற்றுகின்ற நல்ல திட்டங்கள் நல்ல நோக்கத்தோடு நிறைவேற்றப்பட்டாலும், அதிலுள்ள குறைபாடுகளை இதுவரையில் அமைச்சர் அவர்கள் உணர்ந்ததாக தெரியவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். நோக்கம் மிகச் சிறந்தது என்ற காரணத்தினால், காரியம் எப்படி நிறைவேற்றப்படுகிறது என்பதை கவனிக்காமல் இருந்தால், அதனால் ஏற்படும் சீரழிவு அத்தனையும் ஆசிரியர்கள் தலையில்தான் வந்து விழுகிறது. அங்கே உள்ள கல்வித் துறை தலைவர்கள், மாவட்டத் தலைவருக்குத் தெரிவிக்க, அவர்கள் அதை மாவட்ட ஆணையாளர்களுக்கு அனுப்ப, அவர்கள் தங்களுக்குக் கீழே இருக்கிற தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்க, தலைமை ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைக் கூப்பிட்டு, பொது மக்களிடத்தில் வசூல் செய்கின்ற காரியத்தில் ஈடுபடச்செய்கின்றார்கள். பொதுமக்கள் முன்னால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், சாதாரண ஆசிரியர்கள், எந்த அளவு மதிக்கப்படுகிறார்கள் என்பது தெரியும். ஏற்கெனவே பல இடுக்கண் நிலைமையில் இருக்கும் ஆசிரியர்களுக்கு பொதுமக்களிடமிருந்து கட்டாயப்படுத்தி இவ்வளவு தொகை தரவேண்டுமென்ற முறையில் வசூல் செய்யும் காரியத்தில் ஈடுபடுவது மிகத் தொல்லையாக இருக்கிறது. ஆசிரியர்கள் பாடம் கற்பிக்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்ற முடியுமே தவிர, அவர்கள் அதிகாரம் பெற்றவர்கள் அல்ல. கல்வித்துறையிலே இருக்கிற அதிகாரிகளுக்கே போதுமான அதிகாரம் இல்லை. அப்படியிருக்கும்பொழுது கல்வித் துறையில் இருக்கிற சாமான்ய ஆசிரியர்களிடம், ஏழை ஆசிரியர்களிடம் இந்தப் பெரிய பொறுப்பை ஒப்படைத்து, இந்த மாவட்டத்தில் 3 லட்சம் 5 லட்சம் ரூபாய் வசூல் ஆகவேண்டும், இந்த சாமான்கள் தயாராகவேண்டும் என்று சொன்னால், ஏற்கெனவே சீராக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பள்ளிகளுக்கும் நன்கொடை, சாமான்கள், பொதுமக்களிடமிருந்து கேட்டு வாங்கவேண்டும் என்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. இதில் எப்படி சீரமைப்பு நிறைவேற்றமுடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஏன் இதற்கு ஆசிரியர்களை அனுப்புகிறார்கள் என்பது புரியவில்லை. ஆசிரியர்கள் ஏற்கனவே ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்கள் பெறுகின்ற ஊதியமோ மிகக் குறைவு. அவர்கள் போய் பொதுமக்களிடம் கையேந்தி நிற்பது என்று சொன்னால் கடன்காரர்கள் என்று கருதப்படுகிறார்கள். "ஸ்மால் ஸேவிங்ஸ் ஸ்கீம்" என்பதிலே எப்படி அதிகாரிகள் தவறுகள் செய்கின்றார்களோ, அதே தவறுகளும் இன்று கல்வித் துறையிலும் புகுந்துவிட்டது. இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அமைச்சராக இருப்பவர்கள் பொதுமக்களிடம் போய் நன்கொடைகள் பெறலாமே, சட்டமன்ற உறுப்பினர்கள், கவுன்ஸிலர்கள் இந்த வேலையில் ஈடுபடலாமே, ஊரிலுள்ள தலைவர்கள் இந்த தொகையை வசூலிக்கலாமே. ஆரம்ப ஆசிரியர்களை இவ்வாறு பிச்சையெடுக்க அனுப்பாதீர்கள். அவர்கள் பிச்சையெடுப்பதைப் பார்த்து ஊரார் அவர்களை மிக அலட்சியமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படி தொகையை பெற்றுக் கொண்டுவந்துவிட்ட பின்னர், அமைச்சர்கள், அதிகாரிகள் வருவார்களேயானால், அந்த நன்கொடை அளித்தவர்களுக்கு மாலை கட்டிக்கொண்டு வருவதும் ஆசிரியர்கள் வேலையாக இருக்கிறது. அப்படி 25, 30 ரூபாய் சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்கு இம்மாதிரி மாலை கட்ட முடியாது.

Mr. SPEAKER : If the hon. Member wants to take up more time, I have no objection. But, I would like him to note that one Member from his party, will lose his chance to that extent.

Sri K. ANBAZHAGAN : Yes, Sir.

Sri K. VINAYAKAM : He does not mind it, Sir.

Mr. SPEAKER : It is for the hon. Member to say.



16th March 1959]

Sri K. ANBAZHAGAN : Yes, Sir. I have requested them.

Mr. SPEAKER : All right. The hon. Member can speak for another 10 minutes.

Sri K. ANBAZHAGAN : எனவே இந்த சீரமைப்புத் திட்டத்தில் ஆசிரியர்களுக்கு இந்தப் பொறுப்பை ஏற்படுத்துவது அவ்வளவு நல்லது அல்ல. அதே நேரத்தில் பிள்ளைகளுக்கு மதிய உணவு கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். ஊரில் இருக்கிற தலைவர் யாராவது ஒருவரை நியமித்து அவர் பெயருக்குத்தான் அரசாங்கம் பணம் அனுப்புகிறார்களே தவிர, அவருக்குத்தான் செக் அனுப்பப்படுகிறதே தவிர, தலைமை ஆசிரியர் மூலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்பதில் கவனம் செலுத்தப்படவில்லை. பொதுமக்களுக்கு நன்மை செய்யக் கூடிய நேரத்தில், அவர்களிடமிருந்து நன்கொடையைப் பெறுவதற்கு, ஒருவரிடம் நன்கொடையை நேரடியாகப் போய்க் கேட்டு வாங்கிவருவதற்கு மட்டும் தான் ஆசிரியர்கள் கண்ணுக்குத் தெரிகிறார்களே தவிர, அந்தத் திட்டத்தை இந்த இடத்தில் குறைபாடு இல்லாமல் நிறைவேற்றுவதற்கு, தலைமை ஆசிரியரிடமும் அவருடன் இருக்கும் மற்ற ஆசிரியர்களிடமும் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லை. ஒருவரிடம் போய் நன்கொடை வாங்க, பிச்சையெடுத்து வர ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். மந்திரிகளையும் மற்றவர்களையும் வரவேற்பதற்கு, அவர்களுக்கு முன்பு நன்கொடையை திரட்டிக் கொட்டுவதற்கு, கண்காட்சி சாலை அமைப்பதற்கு ஆசிரியர்கள்தான் பயன் பட வேண்டும். உண்மையிலேயே ஆசிரியர்கள் இதை விரும்பிச் செய்தால் நான் அதை வரவேற்பேன். அவர்களுடைய பரிதாபகரமான நிலைமையில் அவர்கள் எப்படி விரும்பிச் செய்ய முடியும் ?

மற்றொன்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏதாவது பொதுக் காரியங்களைப்பற்றி சொல்லுகிறபொழுது, ஊதிய உயர்வைப்பற்றி சொல்லுகின்றபொழுது, 100 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிற பொழுது, கிராமத்தில் இருக்கிற மக்கள் எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள், எவ்வளவு வறுமையில் இருக்கிறார்கள், அவர்களுடைய சராசரி வருமானம் உங்களுக்குத் தெரியுமா என்று எங்களைப் பார்த்து அமைச்சர் அவர்கள் கேட்கலாம். அவர்களுடைய சராசரி வருமானம் தெரியும். அப்படி பிற்பட்ட நிலைமையில் உள்ள மக்களிடமிருந்து நன்கொடையை கட்டாயப்படுத்தி வசூல் செய்யக் கூடிய அளவுக்கு இன்று பல ஆசிரியர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். எனக்கு இதுபற்றி பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. பல குறிப்புகள் வந்திருக்கின்றன, அவைகளை வைத்துக்கொண்டு தான் நான் சொல்லுகிறேன். இதைச் செய்வதாக இருந்தாலும், இதைச் செய்வதற்கு வேறு முறைகளை அமைச்சர் அவர்களும், அரசாங்கமும், கல்வித்துறை தலைவர்களும் கையாள வேண்டும். ஆசிரியர்கள் தலையில் இந்த பாரத்தைப் போடாதீர்கள். அவர்கள் இன்று பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். "ஸ்மால் ஸேவிங்ஸ் ஸ்கீமில்" சிறிய அதிகாரிகள் எப்படி மாட்டிக்கொண்டு பல தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்களோ, அதே நிலையில் தான் ஆரம்ப ஆசிரியர்களும் பல தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலைமையிலே ஆசிரியர்களைக் கொண்டு இம்மாதிரி நன்கொடைகளை வசூலிக்காதீர்கள். பொதுநலத் துறையிலே ஆர்வம் பெற்றவர்களைக் கொண்டு இந்தக் காரியத்தை இயன்றவரை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதிய உணவு குறித்தும் சில இடங்களில் புகார்கள் இருக்கின்றன. போதுமான அளவு அது செம்மையாக நிறைவேற்றப்படவில்லை. வேண்டுமானால் இதில் கூட லாபம் சம்பாதிக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். வேண்டுமென்றே குற்றம் சாட்டப்படவேண்டுமென்ற முறையில் அல்ல இதைச் சொல்லுவது. எனவே அம்மாதிரி குறைபாடுகள் இல்லாமல் இருக்கவேண்டுமானால், அந்த பள்ளித் தலைமை ஆசிரியரிடத்தில் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

[Sri K. Anbazhagan] [16th March 1959

இன்னும் கொஞ்சம் அதிக நிதி தர வேண்டுமானால், அரசாங்கத்தினிடமிருந்து தந்து, பொது மக்களுடைய ஒத்துழைப்பை, நேரிடையாக ஒருவரிடம் சென்று கேட்டு பெறுவதைவிட, அரசாங்கமே தன்னுடைய வருமானத்திலிருந்து இதற்காக ஓரளவு நிதி ஒதுக்கி இந்த மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றொரு வேண்டுகோள் விடுகிறேன். கல்வித்துறை இலாகாவில் தான் மிகச் செம்மையாக உத்தியோக உயர்வு அளிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கல்வித் துறையில் கூட உண்மையான முழுத் தகுதி பெறாத ஒருவருக்கு ஒன்று, இரண்டு ஆண்டுக்கு முன்னால் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் பேஸிக் டிரெயினிங் ஸ்கூல் தலைமை ஆசிரியராக இருந்தார். அவருடைய பெயரை நான் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. அவருடைய தகுதியைப்பற்றி, சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர், அவர் பேஸிக் டிரெயினிங் பள்ளிக்கு தலைமை ஆசிரியராக ஒரு ஆண்டுக்கு மேல் நீடிக்கக்கூடாது என்று தெரிவித்தார்கள்; பேஸிக் டிரெயினிங் உயர் நிலைப்பள்ளி, போஸ்ட் கிராஜுவேட் பேஸிக் டிரெயினிங் பள்ளி தலைமை ஆசிரியராக ஒரு ஆண்டுக்கு மேல் நீடிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அந்தப் பதவியிலிருந்து அவரை மறுபடியும் அவர் முன்பு இருந்த பதவிக்கு அனுப்பாமல், அதைவிட உயர் பதவிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர் இப்பொழுது டிவிஷனல் இன்ஸ்பெக்டராக கல்வித் துறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறார். அவருடைய தகுதி உயர்ந்தது என்று சொன்னால் போதுமான காரணம் காட்டவேண்டும். நான் விரும்புவது யாருக்கும் பதவி உயர்வு அளிக்கக்கூடாது என்பது அல்ல. மற்றவர்களைவிட இவருக்கு தனிச் சிறப்பு இருக்குமானால், அந்தச் சிறப்பு என்னவென்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிடவேண்டும். அவருக்கு என்னென்ன விதத்தில் தகுதி மற்றவர்களைக் காட்டிலும் உயர்வாக இருக்கிறது. அவர்களுக்கு மேல் நிலையில் உள்ளவர்களுக்கு என்னென்ன விதத்தில் தகுதி குறைவு, தகுதியுள்ளவர்களுக்கு மேல் நிலைக்குப் போவதற்கு வாய்ப்பு அளித்தோம் என்றாவது தெரிவிக்க வேண்டும்; அல்லது ஐயுறுவதற்கு இடமிருக்குமானால் பதவி உயர்வு அளித்து பின்னர் அதாவது ரிட்டயர்மெண்ட் காலத்திற்கு பின்னால் அதே
9-50 a.m. பதவியில் அவர் நீடிக்காமல் இருக்க கவனித்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் இரண்டு விதத்தில் நீதி வழங்கியிருக்கலாம். கல்வித்துறையில் இருக்கின்ற அனுபவத்தை கணக்கிலெடுக்கும்பொழுது அவருக்கு சிறப்பாக கல்வி தகுதி இருக்குமானால் ரிட்டயர்மெண்ட் ஆகும் போது உயர்வுக்கான வழி வகுத்து கொடுக்கலாம். அல்லது இவ்விதம் பதவி உயர்வு கொடுப்பதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன. அல்லது தகுதியும் நேர்மையும் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டுவார்களானால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும் விஷயத்தில் சாதாரணமாக ஜூலை மாதத்தில் கொடுக்கவேண்டிய உபகாரச் சம்பளம் மார்ச்சு மாதத்தில் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் தாமதமாவதற்கு மத்திய சர்க்காரும் காரணம் என்பதை நான் அறிவேன். இவ்விதம் கொடுக்கப்படுகின்ற உதவி சரியான காலத்தில் கொடுக்க வேண்டும். உதவிகள் எப்போதுமே காலா காலத்தில் செய்யவேண்டும். அப்போது தான் உதவியாக இருக்கும். ஆகவே இதை காலா காலத்தில் கொடுத்தால் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதைப் போலவே ஓராசிரியர்கள் பயிற்சி பெற்று திரும்பி வந்தவர்கள் வேலை கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்களில் ஸெக்கண்டரி கிரேட் ஆசிரியர் பதவிக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு சரியான படி பதவி உயர்வு கொடுப்பதில்லை. இவ்விதம் தகுதி பெற்றவர்கள் ஹையர் கிரேட் ஆசிரியர்களாகவே இருந்து வருகிறார்கள். ஸெக்கண்டரி கிரேட் தகுதியிருந்தும் அவர்களை அதற்கு இணை உள்ள பதவியில் அனுப்புவது என்றால், ஏற்கனவே மூன்று ஆண்டு



16th March 1959] [Sri K. Anbazhagan]

காலம் பயிற்சி பெற்று, அதன் பின்னால் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று திரும்புகிறவர்களுக்கு சரியான படி பதவி கொடுக்கவில்லை என்றால் உண்மையிலேயே கல்வித்துறை மிகவும் சீர்கேடு அடையும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்., ஆகவே அவர்களுக்கு—தகுதி பெற்றிருக்கிறவர்களுக்கு—தகுந்த முறையில் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்—இன்றையதினம் தனியார் (மானேஜ்மெண்ட்) களுடைய பள்ளிக்கூடங்களை ஏற்றுக்கொள்ளும் படியான நிலை ஏற்படுகிறது என்றால் எனக்கு அதில் மறுப்பு இல்லை. அவ்விதம் தனிப்பட்டவர்களின் பள்ளிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள முன் வராத நிலையில், திடீரென்று அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த தொகையை மாற்றுவது என்கின்ற நிலை வருமானால் உண்மையிலேயே கல்வித்துறையில் சீர்குலைவு தான் ஏற்படும். இன்றைய தினம் தனிப் பட்டவர்கள் அவர்களுடைய சூழ்நிலைக்கேற்ப அவர்களுக்குத் தகுந்தவாறு திட்டங்களை வகுத்து சில வசதிகளோடு பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறார்கள். ஆனால் இவற்றையெல்லாம் அரசாங்கம் தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளுமானால் உண்மையிலேயே பாதுகாப்பு இருக்கும் என்று நாம் உணரலாம். ஏற்கனவே அரசாங்கம் தனிப்பட்டவர்களை இந்த விஷயத்தில் ஆதரித்து வந்திருக்கிறார்கள். இவ்விதம் ஆதரித்து வந்திருப்பதன் மூலமாகவும் மாணவர்களுடைய சம்பளத்தைக்கொண்டும் பலவிதத்தில் அவர்கள் பணம் பெற்றும் அவரவர்கள் பள்ளிக்கூடங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் திடீரென்று அவர்களுக்கு மாற்றம் ஏற்படுமானால் அது கல்வித் துறையில் தீங்கிழைப்பதாகவே இருக்கும். வேண்டுமானால் ஒன்றிரண்டு ஆண்டு காலம் கழித்து இந்த மாற்றத்தைக் கொண்டு வந்தால் அதில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை படிப்படியாக உணர்ந்து அதற்கு தகுந்தவாறு மாற்றங்களை செய்யலாம். அல்லது அரசாங்கமே அதை ஏற்றெடுத்துக்கொள்ள முன் வரவேண்டும். இவ்விதமில்லாமல் உடனடியாகவே இந்த காரியத்தில் ஒரு தீவிரமான மாறுதலுக்கு விட்டுவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதையடுத்து இன்றைய தினம் சில மாவட்டங்களில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு மூன்று மாதகாலமாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று குறைகள் வந்து கொண்டிருக்கின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஒரு ஆசிரியர் எனக்கு அனுப்பியிருக்கின்ற கடிதத்தில்........

> " நாங்கள் எல்லாம் பட்டினி கிடந்தபடியே பணியாற்ற வேண்டுமா? மூன்று மாதகாலமாக சம்பளம் தராது செயல்புரியும் இந்தச் செப்படி வித்தை செய்யும் அரசாங்கத்தை என்னவென்று அழைப்பது "

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்விதம் செப்படிவித்தை என்று நினைக்கிற அளவுக்கு அவர்களுடைய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக சம்பளம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒரு வேண்டுகோள்—அதாவது இன்றையதினம் கல்வி துறையில் இருக்கும் ஆசிரியர்களை தேர்வாளராக பொறுக்கியெடுக்கிற காரியத்தில் இப்போது அங்கங்கே இருக்கின்ற தலைமை ஆசிரியர்களின் சிபார்சின்படி தான் பொறுக்கியெடுக்கப்பட்டு வருகிறார்கள். இதில் சில வேறுபாடுகளும் வகுப்பு உணர்ச்சிகளும் காண்பிக்கப்பட்டு வருவதாக தெரிகின்றது. ஆகவே இந்த முறையை மாற்றி அமைப்பதற்காக கல்வித்துறை தலைவரே இந்த தேர்வாளர்களை பொறுக்கியெடுப்பதாக இருக்கவேண்டும். கல்வித்துறை தலைவர்களுக்குத் தான் இவ்வளவு பேர்கள் இன்னின்ன மாவட்டங்களில் இருக்கிறார்கள், அவர்களுடைய தகுதி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையெல்லாம் அறிந்து கொள்ள முடியும். ஆகவே கல்வித்துறை தலைவரே தேர்வாளர்களை பொறுக்கி எடுக்கின்ற முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் இந்த முறை இல்லாததின் காரணமாக 10 வருடங்களாக அனுபவம் பெற்றிருக்கிறவர்களில் ஒரு சிலருக்குத் தான் இந்த பதவி கிடைத்திருக்கிறது. அது மட்டுமல்ல, சில இடங்களில் பதிது புதிதாக ஒவ்வொரு ஆண்டுக்கும் பல

[Sri K. Anbazhagan] [16th March 1959

பேர்கள் வந்து கொண்டிருக்கிருர்கள். இது விரும்பத் தக்க காரியமல்ல,
இந்த முறை கல்வித் துறையில் புகக்கூடாது. இன்றைய தினம் சில
இடங்களில் கல்வித்துறையில் புகுந்திருக்கிறது, அவற்றையெல்லாம்
தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்
என்று கேட்டுக்கொண்டு, நான் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை
முன்மொழிகின்றேன்.

**Mr. SPEAKER :** இந்த மான்யத்தின் மீது அமைச்சர் அவர்கள்
பேசுவதற்கு முன்ஞல் கனம் சின்னதுரை அவர்கள் பேசுவார்கள்.
அதற்கு முன்ஞல் இதன் பேரில் பேசுவதற்கு 15, 16 அங்கத்தினர்கள்
விரும்புகிருர்கள். ஆதலால் ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிட
நேரம் பேசலாம். அதற்கு மேல் பேசிக்கொண்டிருந்தால் கடைசியில்
சில அங்கத்தினர்களுக்கு பேசுவதற்கு நேரம் கிடைக்காமல் போகும்.
மணியடித்தவுடன் நிறுத்திவிடவேண்டும். மணியடித்த பின்ஞலும் பேசிக்
கொண்டே போஞல் மற்ற அங்கத்தினர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு
இல்லாமல் போய்விடும். ஆகவே தயவு செய்து எல்லா அங்கத்தினர்
களும் குறிப்பிட்ட 10 நிமிட நேரத்திற்குள் பேசி முடித்துவிட வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது கனம் அங்கத்தினர் லாஸர்
அவர்கள் பேசுவார்கள்.

**Sri S. LAZAR :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம்
கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற கோரிக்கையை
ஆதரித்தும், கனம் எதிர்கட்சி அங்கத்தினர் அவர்கள் கொண்டு வந்திருக்
கும் வெட்டுத் தீர்மானத்தை எதிர்த்தும் சில விஷயங்களை சொல்ல
ஆசைப்படுகிறேன். வெட்டுத் தீர்மானத்தை கொண்டு வந்து பேசின
அங்கத்தினர் அவர்கள், ஏதோ வழக்கமாக அவர்கள் பாடும் பல்லவி
பாடுகின்ற முறையில், அல்லது குறிப்பிட்ட ஒரு மொழியின் மீது அவர்
களுக்கு இருக்கக்கூடிய வெறுப்பின் காரணமாக பேசியிருந்தாலோ நான்
குறிப்பிட்டிருக்கமாட்டேன். அல்லது அவர்களைப் பற்றி அல்லது அவர்களை
சார்ந்தவர்களைப் பற்றி பேசியிருந்தாலும்கூட நான் குறிப்பிட்டிருக்கமாட்
டேன். அதற்குப் பதிலாக தமிழகத்திலுள்ள குழந்தைகளுக்கு, மாணவ
மாணவிகளுக்கு இரண்டு மொழிகளுக்கு மேல் மூன்ருவது மொழியை
பயிலுவதற்கு தகுதியில்லை என்ற முறையில் குறிப்பிட்டதை நான்
கண்டிக்கிறேன். காரணம் பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் அறிஞர்
கள் உட்பட புரிந்து கொண்டிருக்கிருர்கள். அதாவது நம் தமிழகத்தி
லுள்ள மாணவ மாணவிகள் வேறு எந்த பகுதியிலும் இல்லாத அளவுக்கு
மொழிகளை பயிலுவதில் அதிகப்படியான திறமை பெற்றவர்கள் என்பதை
பலர் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். அந்த முறையில் பார்க்கின்றபொழுது
இன்றைக்கு மேற்கத்திய நாடுகளில் எல்லாம் மூன்ருவது மொழியை
கட்டாய பாடமாக சொல்லிக்கொடுக்கின்ருர்கள். பல மொழிகளிலும்
பயிற்சி பெற்றிருக்கிருர்கள். கிழக்கத்திய நாடுகளிலும் மூன்று மொழி
சொல்லிக்கொடுக்கக்கூடிய முறையில்தான் பாட திட்டங்களை வகுத்திருக்
கிருர்கள். ரஷ்யா நாட்டிலும் சீன நாட்டிலும் இதைத்தான் ஏற்றுக்
கொண்டிருக்கிருர்கள். ஆகவே தமிழ் நாட்டிலும் மூன்று மொழி
பயிலுவதற்குரிய வசதி இருக்க வேண்டும். ஆகவே அதற்கான முயற்சி
யில் அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(Sri V. K. Kothandaraman in the Chair).

அடுத்தபடியாக இந்த மான்யக் கோரிக்கையைப்பற்றி எடுத்துக்கொண்
டால், சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில் அந்த கல்லூரியிலிருந்து
வருவாய் அதிகமாக கிடைத்தும் கூட அந்த கல்லூரிக்கு, மற்ற கல்லூரி
களுக்கு கிடைக்கும் சலுகைகளை விட குறைவாகவே இருக்கிறது
என்பதை பார்த்து நான் வருந்துகிறேன். சட்டக் கல்லூரியிலிருந்து ஆண்டு
ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபாய் வருவாய் வருகிறது என்று தெரிகிறது.
அவர்களுக்கு அதிகப்படியாக செலவு செய்வது ஒரு லட்சத்து அறுபத்து நாலு
ஆயிரம் ரூபாய் என்று தெரிகிறது. ஆஞல் மற்ற கல்லூரிகளை எடுத்துக்கொண்
டால் இன்றைக்கு இன்ஜினிரிங் கல்லூரியை எடுத்துக்கொண்டால் சுமார்
3 லட்சம் ரூபாய் வருவாய் வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு



16th March 1959] [Sri S. Lazar]

செலவு செய்யப்பட்டு வருவது சுமார் 33 லட்சமாக இருக்கிறது. இதைப்
பற்றி நான் குறிப்பிட்டதின் நோக்கம், சட்டகல்லூரியில் ஏழை எளிய
மாணவர்கள் அதிகமாகப் படித்து வருகிருர்கள். குறைவான அளவில்
சம்பள விகிதம் இல்லை. இதஞல் பல மாணவர்களுக்கும் கஷ்டங்கள்
இருக்கின்றன. அதோடு ஏனைய கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு
ஹாஸ்டல் வசதியிருக்கிறது. ஆஞல் சட்டகல்லூரியில் படிக்கும் மாண
வர்களுக்கு இதுவரை ஹாஸ்டல் வசதி கிடைக்கவில்லை. சமீபத்தில்
அமைச்சர் அவர்கள் கூறிஞர்கள். மெடிக்கல் காலேஜ்-மாணவர்களுக்கு
கட்டப்படும் ஹாஸ்டலில் அவர்கள் மாறினதும் சீக்கிரமாக சட்டகல்லூரி
மாணவர்களுக்கு புதிய ஹாஸ்டலை கொடுக்காமல் மெடிக்கல் காலேஜ்
மாணவர்கள் காலி செய்யக்கூடிய ஹாஸ்டலை கொடுக்கலாம் என்று
குறிப்பிட்டிருப்பது வருந்ததக்க அம்சமாகும். இந்தத் துறையை நன்ருக 10
பரிசீலனை செய்து, அதிக காலமாக ஹாஸ்டல் வசதி யில்லாமல் கஷ்டப் a.m.
பட்டு வந்திருக்கும் மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், அவர்களுக்கு
இருக்கும் சம்பள விகிதத்தையும் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கத்தின் நோக்கம், கூடிய வரைக்கும்
கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் செய்ய வேண்டுமென்பது.
ஆரம்ப கட்டமாக, ப்ரைமரி ஸ்கூல்களில் வருகிற ஆண்டில் ஆரம்பிக்கப்
படும் என்று கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.
இந்த சந்தர்ப்பத்தில், இலவசக் கல்வி கட்டாய முறையிலே சொல்லிக்
கொடுக்கக்கூடியதை நான் முழுமனதோடு ஏற்றுக்கொள்கிறேன். அதே
நேரத்தில், ஏழை மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதி எப்பொழுது
கிட்டுமோ என்ற நிலைமையில் இருக்கிருர்கள். அவர்களுக்கு அரசாங்கத்
தின் சலுகைகள் கிடைத்து வருகின்றன. அது சரியான நேரத்தில்
கிடைக்காத காரணத்திஞல் அவர்கள் கஷ்டப்படும் நிலையில் இருக்
கிருர்கள். இப்பொழுது எட்டாவது படிவம் வரையில் ஏழை மாணவர்
களுக்கு கல்வி கிடைக்கக்கூடிய முறையிலே அரசாங்கம் உதவி வருகிறது.
அதை 10-வது படிவம் வரை உயர்த்த ஏற்பாடு செய்ய வேண்டும்.
அதன் பிறகு, நிதி நிலை சரியாக ஆகும் போது, அவர்களுக்கு கல்லூரிக்
கும் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இந்த எல்லாத் துறைகளிலும் இலவசக் கல்வி கிடைக்கக்கூடிய நட
வடிக்கையை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு
கிறேன்.

இப்பொழுது, டிபெக்டிவ் சில்ட்ரன், அதாவது, அங்கக் குறைப்பட்ட
குழந்தைகளுக்கு சர்க்கார் சலுகைகள் அளித்து வருகிருர்கள். அதற்கான
ஒரு சில பள்ளிகள் வசதிகளையும் உதவியையும் பெற்றுவருகின்றன.
அப்படியுள்ள ஒரு சில கல்வி மன்றங்களிலே, திருச்சியில் உள்ள
குருடர்களுக்கு என்ற விடுதி ஒன்று. அவர்கள் கடந்த இரண்டு ஆண்டு
களாக அரசாங்கத்தினிடம் உதவி கோரி வருகிருர்கள். ஏதோ சட்டத்
தடை காரணமாக அவர்களுக்கு இன்று வரை உதவி கிடைக்காத நிலை
இருக்கிறது. ஆஞல், இதன் காரணமாக பல குருடர்கள் தொழில்
கல்வி முதலான வசதிகள் பெற்றுவருகிருர்கள். ஆகவே இதற்கு
வேண்டிய உதவியைக் கொடுக்க சர்க்காரும், கல்வித்துறை அதிகாரி
யும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
உதவி வரும், உதவி வரும் என்று அவர்கள் எதிர்ப்பார்த்து நிற்கிருர்கள்.
ஆகவே, சட்டத்தில் இருக்கும் தடையை அகற்றி, இது போன்ற பள்ளி
களுக்கும் உதவி செய்ய சர்க்கார் முன் வர வேண்டும், அவர்கள் கூட
இந்த உதவியைப் பெரும் வாய்ப்பை பெற வேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

இப்பொழுது வெளியிடங்களிலே, மொபசல் ஸ்கூல்களில், பார்த்தால்
கிராமத்தில் இருந்து வரும் மாணவர்கள் வெளி நகரங்களில் தங்கு
வதற்கு தக்க இடவசதி யில்லாமல் கஷ்டப் படுகிருர்கள். ஏழை, பிற்பட்ட
மாணவர்களுக்கு பொருள் உதவி செயய சர்க்கார் முற்பட்ட போதிலும்,
அவர்களுக்கு தங்க இடமில்லாமல் ரூம்கள் இல்லாமல், தவிக்கிருர்கள்.

உயர் நிலைப் பள்ளிகளுக்கு இந்த வசதி மிகமிகத் தேவைப்படுகிறது.
கல்லூரிகள் இருக்கும் இடங்களில் இது இன்னும் அதிகமாகத் தேவைப்
படுகிறது. ஏறக்குறைய 40, 45 சதவிகித மாணவர்கள், அவரவர்கள்
வீடுகளில் இடவசதியிருந்தாலும், பல இடங்களிலே மற்றவர்களுக்கும்,
இவர்களுக்கும், தங்க வசதியில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே,
இந்த ஏனைய மாணவர்கள், தனிப்பட்ட வீடுகளிலுல், ரூம்களிலும் தங்க
வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய இடம்
கிடைக்காமல் மிகமிக அவதிப்படுகிறார்கள். ஆகவே, பல இடங்களிலும்,
நல்ல வீடுகளைக் கட்டிக்கொடுத்து, குறைந்த கட்டணத்தில் அவர்கள்
அங்கே வசிக்கக்கூடிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டியது
அவசியம்.

ஒரு சில ப்ரொபெஷனல் காலேஜ்களில் கூட, ஆர்ட்ஸ் காலேஜ்களிலும்
கூட, மாணவர்களும், மாணவிகளும் சேர்ந்து படிக்கும் நிலைமை இருக்
கிறது. பலவிடங்களிலும் கூடியவரை அவர்கள் தனித்தனியாகப் படிப்பதே
மேல். மெடிகல் காலேஜில் கூட, இப்பொழுது இருக்கும் முறையை
மாற்றி, தனியாக மெடிகல் காலேஜ்கள் அதிகமாக இருக்கிற காரணத்
தால், பெண்களும், ஆண்களும் தனியாகப் படிக்கும் முறையைக் கையாள
வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்டிகிறேன்.

பே கமிஷன் ரிபோர்ட் சீக்கிரம் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்
படுகிறது. ஆசிரியர்களுக்கு சம்பள விகிதத்தில் உயர்வு கொடுக்கப்பட்டி
ருந்த போதிலும், பல பிரைவேட் மேனேஜ்மெண்டு பள்ளிகளில், அந்தச்
சலுகை கொடுக்கப்படவில்லை. கூடிய வரைக்கும், அதைச் சீக்கிரம்
அமல் நடத்தச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை
முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri V. K. KRISHNAMURTHY : அவைத் தலைவர் அவர்களே,
கல்வி வளம் பெருக செல்வவளம் கோரும் கல்வி மான்யக் கோரிக்கை
யைப் பாராட்டி வரவேற்கிறேன். தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக்குழு அமைத்
திருப்பது. மகிழ்ச்சிக் குரியது. தாய் மொழி—தாய்மொழிக்கல்வி—தாய்
மொழி இலக்கியம் என்பதை நாகரீகத்திற்கும் பண்புக்கும்—வாழ்வியலுக்
கும் அடிப்படை என்பதை உணர்ந்து பிறமொழியினர் நம் தமிழகத்தை
விட்டுப் பிரிந்த பின்னர் தாய்மொழியை அரசியல் மொழியாக்கி அலுவலக
மொழியாக்கி—மாமன்ற மொழியாக்கி—கட்டாய மொழியாக்கி தமிழுக்கு
உயர்வு தந்ததோடு அல்லாமல் உயர்நிலைப்பள்ளி பாடமொழியாக்கி இருப்ப
துடன் பல்கலைக்கழக பாடமொழியாக்க முனைந்திருக்கும் முயற்சிக்கு
எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் திரட்டித் தருமாறு வேண்டுகி
றேன். பிறமொழியைப் பயின்று—அந்தப் பிறமொழியால் பொருளையறிய
வேண்டுமென்ற அநாகரிகமான நிலை தமிழகத்தில்தான் இருக்கிறது.
இந்நிலை மாறும் நாள் எந்நாளோ அந்நாளே தமிழ் மொழி தகவு
எய்தும் பொன்நாளாகும்.

தமிழ்ப் பெரும் புலவர்கள் செய்யும் தமிழ் ஆராய்ச்சியைத் தமிழில்
வரைந்து பட்டம் பெறக்கூடாதென்றும் ஆனல் ஆங்கிலத்தில்தான்
வரைந்து பட்டம் பெறவேண்டுமென்றும் இருக்கும் அநாகரிக கேவல
நிலை மாறி தமிழில் வரைய சென்னைப் பல்கலைக்கழகம் உத்திரவிடவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஐயாயிரமாண்டுகளுக்கு முன்பிருந்திலங்கும் ஒல்காப்புகழுடைத்
தொல்காப்பியத்தை உரைநடையில் வரைந்தவர்கள் மூவர். (1) திரு.
ராகவ அய்யங்கார், (2) திரு. கா. சுப்பிரமண்யப் பிள்ளை, எம்.எ., எம்.எல்.,
(3) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்
திரு. வெள்ளைவாரணன். திரு. வெள்ளைவாரணனின் தொல்காப்பிய
ஆராய்ச்சி நூல் மிகச் சிறந்ததுமட்டுமின்றி உவமையற்றும் உலவுகிறது.
இதற்கு பல்கலைக்கழகம் பட்டம் கொடுக்கலாம். ஆனல் ஆங்கிலத்தில்
இல்லை. இது மாறி ஒழிய வேண்டும். தமிழ் இலக்கியம் உலக இலக்கியங்
களுள் தொன்மையுடையதும் தலையாயதும் எனில் பிழையில்லை. உலகை
உலகாகக் கண்டவர்கள் தமிழர்கள்—வாழ்க்கையை வாழ்க்கையாக்கக் கண்ட
வர்கள் தமிழர்கள். இவை தான் தமிழன் கண்ட சங்க இலக்கியங்



பாத்திரங்களைப் படைத்து—நிகழ்ச்சிக்கிரையான பாத்திரங்கள் பெறும்
உணர்ச்சியைப் படிப்போரும் உணர்ச்சி பெறும் இயல்பில்லாமல் வாழ்வை
வாழ்வாக விளக்கி இல்லற வாழ்வே நல்வாழ்வென்ற குறிக்கோளுடன்
விளங்கும் இலக்கியமே தமிழ் இலக்கியம்.

தமிழ் நாகரிகம் தலைசிறந்த நாகரிகம். இன்று நாம் விரும்பும்
வர்க்கமற்ற—சாதியற்ற சமுதாயம் தமிழ் இலக்கியத்தில் இலங்குகின்றன.
உடையவர்களுக்கும்—இல்லாதவர்ர்களுக்கும் பகைமையை மூட்டி ஏற்படு
கின்ற அவலத்தைத் துணையாக்கி பொருளைப் பங்கிடுவது போலல்லாமல்
வள்ளுவன் கூறிய பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் என்ற முறையும்
ஊருணி நீர் நிறைந்தற்றே—பேரறிவாளன் திரு என்ற நெறியும் கம்பர்
கூறிய "எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வம் எய்தலாலே உடையாரு
மில்லை இல்லாருமில்லை" என்றதால் தமிழ் இலக்கியமே வர்க்கமற்ற
சமுதாயத்திற்கு அன்றே ஆவன அறைந்தமை மகிழ்தற்குரியது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற அறிவுரையும், "யாவரும்
கேளீர்" என்ற உயர் உரையும் பெற்ற தமிழ் சமுதாயத்தில் "ஜாதி" என்ற
தமிழ் அல்லாத சொல் எப்படியோ நுழைந்தது. ஆரிய நாகரிகம் அலை
போல் தலைதூக்கித் தமிழகத்தில் நுழைந்தமையால் வருணபேதம்
ஏற்பட்டு உயர்வு தாழ்வு தலை விரித்தாடிக்கொண்டிருக்கின்றன. தொல்
காப்பியர் முதல் மறைமலை அடிகள் ஈறுக வரைந்த ஏனைய தமிழ் நூல்
களில் "ஜாதி" என்ற சொல் இல்லை. ஆனல் விலங்கினத்தில் நீர் வாழ்
உயிர் இனங்களாகிய மீன்களின் பிரிவை உணர்த்த சாதி என்ற சொல்
தொல்காப்பியத்தில் காண்கிறோம். நீர் வாழ் விலங்கினத்திலிருந்து மண்
ணுலகு நுழைந்து தமிழ் மக்களிடை நுழைந்து சமுதாயம் சரிந்ததற்கு
ஆரிய வருண ஜாதி முறையாதலால் இதையகற்ற இராமலிங்க அடிகள்
வள்ளலார் இராமலிங்க அடிகள் "நால்வருண ஆசிரம ஆசார நவின்ற
கலை சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டே" என்று மிகவும் வன்மைபாகக்
கண்டித்தார்.

உயரிய ஒழுக்கம்—கட்டமைந்த ஒழுக்கம் கற்பு தமிழன் கண்ட—தலை
யாய நாகரிகம். "உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே" என்றார் தொல்
காப்பியர் ; உயரிய ஒழுக்கமே மனிதப் பண்பு என்றார்.

ஒரு மனிதனின் நகையணிந்த குழந்தை உறங்கும்பொழுது மற்றொரு
மனிதன் அந்நகையை களவாடுகிறான். ஆனல், அந்த வீட்டு நாய்
திருடுகிறவனைக் குலைத்துத் தடுக்கிறது. மனிதனைவிட பல மடங்கு மேலாகி
மனிதப் பண்பை நாய் பெற்றிருத்தலாலே மக்கட்சுட்டு என்றார். வள்ளு
வரும் "உறுப்பொத்தல் ஒப்பன்று" பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"
என்றார். "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார் வள்ளுவர். கற்பு
உயிரினும் நாணம் சிறந்ததென்றார் தொல்காப்பியர். ஆதலால் "செறி
வும் நிறைபும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பாலன"
என்று பெண்களுக்கிலக்கணம் கூறினார் தொல்காப்பியர். மாணவர்கள்
அறிவறிந்து, பண்ணெய்தி, ஒழுக்கப்பியர்புகளாகவும் விளங்கும் முறை
யில் பாடத் திட்டத்தை அமைக்க வேண்டும். மாணவர்கள் படித்தால்
என்ன, பட்டம் பெற்றாலென்ன, ஒழுக்கம் இல்லை எனில் ? மாணவிகள்
படித்தாலென்ன, பட்டம் பெற்றாலென்ன, கற்பில்லை எனில் ? மனிதன்
மனிதனாக வேண்டும் முறையில் கல்வி மன்றம் இயங்கவேண்டும்.
காந்தியடிகள்கூட கல்வி பயின்று மாணவர்கள் ஒழுக்கம் பெறவில்லை
யானல், மாணவிகள் கற்புபெற வில்லையானல், படிப்பின் விளைவு பாழ்
என்று கதறினார். ஆதலால் தமிழ் இலக்கியம் நன்கு பயின்று நல்
வாழ்வில் நம்பிக்கை பெற ஆவன புரிய அமைச்சர் அவையை வேண்டு
கின்றேன். முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் ஆகிய இவை
தான் தமிழ் நாகரிகத்தின் கருவூலம்.

தெய்வமுணவே மா மரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
யல்வகை பிறவுங் கருவென மொழிப. (தொல்.)
அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழி இசையொடு சிவணிய
நரம்பின் மறையவென்மனார் புலவர். (தொல்.)

[Sri V. K. Krishnamurthy] [16th March 1959

எழுத்தோசைக்கும், இசைக்கும் யாழி யின்றியமையாத காரணமாதலால் தமிழ் நாகரிகத்தின் உட்பொருள் எனில் பிழையில்லை.

சங்ககாலத்தில் பேரியாழும், செங்கோட்டியாழும், சிலப்பதிகார மணி மேகலை காலத்தில் மகரயாழும், சகோடயாழும், கல்லாடர் காலத்தில் நாரதப் பேரியாழும், கீசக யாழும் இருந்தன. கடந்த ஆயிரமாண்டுகளாக இசை வளர்த்த யாழ் மறைந்தொழிந்தது. இசையைத் தெய்வமாகத் தமிழர் கள் போற்றியது மன்றி யாழையும் தெய்வமாகப் போற்றினார்கள். யாழ் தொழுது வாங்கப்பெற்றதை இளங்கோ அடிகள் கூறுவதாலும் மரு தக்கவியிலே யாழ் தெய்வமாகப் போற்றி இருப்பதை அறிகிறோம். ஆயிரமாண்டுகள் கழிந்த பின்னர் அருட்திரு விபுலாநந்தர் ஏனைய யாழையும் கண்டுபிடித்து அவைகளைச் செய்யும் முறையை விரித்து யாழ் நூலையருளியுள்ளார். அமைச்சர் அவர்கள் அன்பு கூர்ந்து யாழைப் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். உடனிருந்து உதவிபாயிரமளித்து திரு. வெள்ளைவாரணனும் இருக்கிறார்.

வழக்கொழிந்த கிரேக்கமொழியும்
வழக்கொழிந்த ஆரியமொழியும்
காலன் வாய்ப்பட்ட கிரேக்க ஆரிய இலக்கிய வாழ்வும்

உலகப் புகழ்எய்தினும், வழக்கொழியா தமிழும் தமிழ் இலக்கிய வாழ்வும் உலகப்புகழ் எய்த வில்லை. கிரேக்கர் புகழும் ஆரியர் புகழும் நாகரிகங்களைப் பிழைப்பிக்க உதவா என்றாலும், தமிழர் மனம் வைத்தால் தன்னாகரி கத்தைப் பிழைப்பிக்க இயலும், என்றதற்கு யாழ் நூலே சான்றாதலால் தமிழை ஆதரிக்க வேண்டுகிறேன்.

**Sri K. APPAVOO PILLAI :** கனம் தலைவர் அவர்களே, சென்னை மாகாணத்திலேயே மிகவும் பெரிய ஜில்லாவானது சேலம் ஜில்லா. அந்த ஜில்லா கல்வித் துறையில் மிகவும் பிற்போக்காக இருக்கிறது. சேலம் ஜில்லாவிலேயே பெரிய தாலூகா ஒசூர் தாலூகா. அதுவும் ரொம்பவும் பிற்போக்காக இருக்கிறது. ஆகவே கம்பல்சரி எடுகேஷன் அந்த தாலூகா பூராவும் பரவ வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். கன்னியா குமரியில் இருப்பது போன்று, கம்பல்சரி எடுகேஷன் இருக்கும் இடங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்களுக்கு இருக்கக்கூடிய கட்டிடங்கள் எல் லாம் ரெண்ட் ப்ரீ கட்டிடமாக இருக்க வேண்டும். அங்கே இருப்பவர்கள் குடியிருக்க வசதி இல்லாமல் இருக்கிறார்கள். கட்டிடம் கட்டிக்கொள்ள அவர்களால் இயலவில்லை. அதனால் சர்க்காரிலேயே அவர்களுக்கு எல்லாம் கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி கட்டிடம் கட்டிக்கொடுத்து விட்டு பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கே தெலுங்கர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே அங்கு இருக்கக் கூடியவர்களை மைனாரிடிகள் என்று எடுத்துக்கொண்டு அவர் களுக்கு வேண்டிய சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கே மூன்று மொழிகள் பேசப்படுகின்றன. அவை யாவன தமிழ், தெலுங்கு, கன்னடம். அங்கே நடைமுறையில் நடப்பதைப் பார்த்தால் தெலுங்கர் பள்ளிக்கூடத்தில் தமிழ் உபாத்தியாயர்களை நியமிக் கிறார்கள். தமிழ் பள்ளிக்கூடங்களில் தெலுங்கு உபாத்தியாயர்களை நிய மிக்கிறார்கள். அதனால் அங்கே பள்ளிக்கூடங்கள் சரிவர நடைபெறாமல் இருக்கின்றன.

அது மாத்திரம் அல்ல, சில இடங்களில் பள்ளிக் கூடங்களை திறந்து வைத்திருப்பதாகவே தெரியவில்லை. அதைத் தவிர டிபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல் கொடுத்திருக்கக் கூடிய கிராமப் பெயர்களைப் பார்த்தால் ஒன்றுமே தெரியவில்லை. சில ஊர்களில் பட்டியலில்தான் பள்ளிக்கூடங் கள் இருக்கும். பள்ளிகள் இருப்பது போல் டிஸ்டிரிக்ட் போர்டில் மாண வர்களைப் போடுவார்கள். ஆனால் அங்கே போய் பார்த்தால் அந்த அட்ரெஸ் உள்ள கிராமமே இருக்காது. அங்கே போய் கேட்டால் அட்ரெசும் தெரிவதில்லை, போஸ்டாபீசும் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கு ஒன்று மில்லையே என்று வந்து கேட்டால், " இன்ஸ்பெக்டர் கிராமங்களின் பெயரை



16th March 1959] [Sri K. Appavoo Pillai]

எழுதிக்கொடுத்தார், நாங்கள் போட்டோம், அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும் " என்று சொல்லிவிடுகிறார்கள். அதே மாதிரி உத்தியோகங்கள் கொடுப்பதிலும் இருக்கிறது. உபாத்தியாயர்களைப் போட்டு விடுகிறார்கள். ஆனால் அவர்கள் போய் உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றால் அப்படிப்பட்ட ஊர்கள் இருப்பதாகவே தெரியவில்லை. அதனால் அவர்களும் திரும்பி வந்து விடுவதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை ஒசூர் தாலூகாவில் இருக்கிறது. அப்படி திரும்பி வந்து டிஸ்ட்ரிக்ட்போர்ட் ஆபீசில் பார்த்தால் அங்கே இருக்கிறவர்களுக்கும் அப்படிப்பட்ட கிராமங்கள் இருப்பதாகவே தெரியவில்லை. இன்ஸ்பெக்டர் எழுதிக்கொடுத்தார், அதன் படி உத்தரவுகள் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லி விடுகிறார்கள். அவைகளை சர்க்கார் சரிவர கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

இதைத் தவிர சில பள்ளிக்கூடங்களில் இரண்டு உபாத்தியாயர்கள் தேவையாக இருந்தால் மூன்று நான்கு உபாத்தியார்களை நியமிக்கிறார் கள். அதேபோன்று சில பள்ளிக்கூடங்களில் மூன்று நான்கு உபாத்தி யாயர்கள் தேவையாக இருந்தால் இரண்டு உபாத்தியாயர்களை மட்டும் தான் நியமிக்கிறார்கள். இம்மாதிரியாக பல சிக்கல்கள் இருக்கின்றன. இவை களையும் கவனிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறன்.

ஒசூர் தாலூகாவில் இருக்கக்கூடிய உபாத்தியாயர்கள் இன்ஷூரன்ஸ் ஏஜெண்டாகவும் வேலை பார்த்து வருகிறார்கள். அவர்கள் பல சிவில் விவகாரங்களிலும் ஈடுபட்டு வேலை செய்து வருகிறார்கள். அதனால் அவர் களால் சரிவர வேலை செய்ய முடிவதில்லை. அதிகாரிகள் அங்கே இருக்கக் கூடிய பள்ளிக்கூடங்களுக்கு ரெகக்னிஷனை வித்ட்ரா செய்து விட்டால் அங்குள்ள 200 அல்லது 300 மாணவர்கள் இருக்கக்கூடிய மிஷன் ஸ்கூல்களில் சேர வேண்டியதாக இருக்கிறது. அப்படி அங்கே போயும் அவர்களால் சேர முடியவில்லை. அதற்குக் காரணம் அப்படி அங்கே போய் சேர்ந்தால் அவர்களை கிருஸ்தவ மதத்தில் சேர்த்து விடுவார்களோ என்ற பயம் அவர்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அங்கேயும் போய்ச் சேருவதற்கு பயப்படுகிறார்கள். இதைப்பற்றி இரண்டு மூன்று வருஷங்களாக அதிகாரிகளுக்கு எழுதியும் தெரிவித்தும் இது வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே உடனடியாக இதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களில் ஐந்தாவது வகுப்பு வரையில் படித்து விட்டு பாஸ் செய்து விட்டு முதல் பாரத்தில் சேரவேண்டும் என்று வந்தால் அந்த மாணவர்களுக்கு மறுபடியும் பரீட்சை வைத்து பாஸ் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி பாஸ் செய்யவில்லை யானால் மறுபடியும் ஐந்தாவது வகுப்பிலேயே தான் படிக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அப்படிச் சொன்னாலும் சில சமயங்களில் படிக்க இடம் இல்லை என்றும் சொல்லி விடுகிறார்கள். இதனால் பல மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இந்தக் கஷ்டத்தைப்போக்க ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஹோசூர் தாலூகாவில் இருந்த தெலுங்குப் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான ட்ரெயினிங் டீச்சர்ஸ் இல்லாத காரணத்தால் ஒரு தெலுங்கு ட்ரெயினிங் ஸ்கூல் எக்மூரில் திறக்கப்பட்டது. முதலில் மோகனூர் தெலுங்கு மாணவர்களை யெல்லாம் மோகனூரில் போய் ட்ரெயினிங் ஸ்கூலில் சேரவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார்கள். 8, 10 நாட்களுக்குள்ளாக எக்மூரில் போய்ச் சேரவேண்டும் என்று உத்தரவு இடப்பட்டது. இங்கு வந்து சேர்ந்தும் அவர்களுக்கு வாத்தியார் இல்லாத காரணத்தால் அவர்கள் பல மாதங்களாகப் பள்ளிக்கூடத்திற்கு வருவதும் போவதுமாக இருந்துக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த தமிழ் வாத்தி யார்கள் அவர்களைப் பார்த்து "நீங்கள் எல்லாம் அட்டெண்டன்சில் கையெ ழுத்துப் போட்டு விட்டு ஆடிப்பாடிக் கொண்டிருங்கள்" என்று சொல்லி விட்டார்கள். இதைப் பற்றி நான் கல்வி அமைச்சர் அவர்களிடம் கூடத்

தெரிவித்தேன். இப்பொழுது தெலுங்கு உபாத்தியாயர் போடப்பட்டிருப்ப
தாகத் தெரிய வருகிறது. ஆயினும் இங்கு 30, 34 பேருக்குத் தான்
ட்ரெயினிங் கொடுக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களுக்கு
ட்ரெயினிங் டீச்சர்ஸ் தேவையாக் இருப்பதால் ஒரு ட்ரெயினிங் ஸ்கூலை
ஹோசூர் தாலூகாவில். உடனடியாகத் திறக்கவேண்டும் என்று தாழ்மை
யாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நல்ல திறமையான உபாத்தியாயர்கள் நமக்குக் கிடைக்கவேண்டுமானால்
அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமாகச் சம்பளம் கொடுக்கவேண்டும்.
அப்படிக் கொடுத்தால் தான் திறமையான உபாத்தியாயர்கள் வருவார்
கள். நாம், "பாக்வர்ட் பார்வர்டு, என்று வெள்ளைக்காரன் காலத்தில்
பிரித்திருந்ததைப் போல் இப்பொழுது நம்முடைய காங்கிரஸ் அரசாங்கத்தில்
வைத்திருப்பது நல்லதல்ல. இதனால் மிகவும் பணக்காரர்கள் தான்
சலுகைகள் பெருகிறார்களே தவிர, நியாயமாகச் சலுகைகள் பெறவேண்டி
யவர்களுக்குச் சலுகைகள் கிடைப்பதில்லை. ஜாதி இல்லை என்ற நிலையில்
இதை உடனடியாக மாற்றி எல்லோருக்கும் ஒரே விதமான சலுகைகளைத்
தரவேண்டுமென்று நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

செகண்டரி ஸ்கூல் எஜுகேஷன் ரூல்ஸ் 30–43ல் ஒரு கேள்வித் தாளைத்
திருத்தினால் அதனால் நல்லது கெட்டது எது இருந்தாலும் திரும்பவும்
திருத்தவேண்டுமென்பதில்லை. பார்வையிடவேண்டுமென்று மேலதிகாரி
களிடம் சொன்னால் "நாங்கள் தலையிட முடியாது, ரூல்ஸ் அந்த மாதிரி
இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். சேலத்தில் சின்னசாமி என்பவரு
டைய குமாரன் ஷண்முகசுந்தரம் என்பவருக்கு 5-ம் பாரத்தில் எல்லாப்
பாடங்களிலும் நல்ல மார்க்குகள் கிடைத்திருந்தாலும் ஏதோ தமிழில்
குறைவாக எடுத்திருந்ததைப் பற்றி ஹெட்மாஸ்டர் மேலதிகாரிகளுக்குத்
தெரிவித்தபோது ரூல்ஸ்படி அவர்கள் தலையிடமுடியாதென்றும் அவர்கள்
அரசாங்கத்திற்குத் தெரிவித்திருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இதைப்
பற்றி ரீஜனல் இன்ஸ்பெக்டர் அல்லது டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்
ஷன் இதில் தலையிட்டு இந்த ரூல் 30-ஐத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI M. KANDASAMI PADAYACHI : அவைத் தலைவர்
அவர்களே, நமது கல்வியமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியத்தை
ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் கல்வித்துறையானது ரொம்பவும் பிற்போக்குத்
துறையில் இறங்கியிருக்கிறது என்பது நம் எல்லோரும் தெரிந்த விஷயம்.
கிராமங்கள்தோறும் கல்வி கற்பிக்கப்படவேண்டுவது அவசியம். கல்வி
விஷயத்தில் கிராமங்கள் முன்னேறவில்லை என்பது எல்லோரும் அறிந்
ததே. 60 லட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கி இருப்பது காணாது என்பது
என் கருத்து. மேலும் கல்விக்காக அதிகமாக மானியத்தை ஒதுக்கி
ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பப் பள்ளிகளைத் துவக்கும்படி கேட்டுக்
கொள்ளுகிறேன். ஆரம்பக் கல்வியை மக்களுக்கு ஊட்டவேண்டுமானால்
கட்டாயக் கல்வியாக மாற்றவேண்டும். நம் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு
கிராமத்திலும் ஆரம்பப் பள்ளிகள் இருக்கவேண்டும். 300 ஜன சங்கியை
உள்ள ஒரு ஊரில் ஒரு ஆரம்ப பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்படும் என்று
கல்வியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன்படி எல்லாக் கிரா
மங்களிலும் பள்ளிகள் அமையவில்லை என்பது என் கருத்து. என்னுடைய
மாவட்டத்தில் 300 ஜனசங்கியை கொண்ட எல்லா இடங்களிலும் பள்ளி
இல்லை. ஒவ்வொரு கிராமத்திலும் இதை ஏற்படுத்தவேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன்.

பள்ளி ஆசிரியர்களுக்குச் சரியான ஊதியம் கிடைக்காத காரணத்தால்
பிள்ளைகளுக்குப் போதுமான அளவில் சரியானபடி கற்றுக்கொடுப்பதில்லை.
ஆசிரியர்களில் சிலருக்கு சரியான பயிற்சி இல்லாத காரணத்தாலும்
அவர்களால் சரியானபடி சொல்லிக்கொள்ள முடிவதில்லை. குறைந்தது
ஒவ்வொரு பள்ளியையும் கண்காணிப்பாளர்கள்—டிபுடி இன்ஸ்பெக்டர்கள்
—ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை அவசியம் பார்வையிடவேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்குத் திட்டம் இருக்கவேண்டும்.



பஞ்சாயத்து யூனியனிடம் இந்தப் பள்ளிகளை கொடுக்கவேண்டுமென்று
நாம் திட்டமிட்டிருக்கிறோம். அதன்படி அவர்கள் சரியான முறையில்
நடக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க இப்பொழுது இருக்கும் ஒவ்வொரு
ப்ளாக்கிலும் எக்ஸ்டன்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சரியான
முறையில் கண்காணிக்க வேண்டும். நேஷனல் எக்ஸ்டன்ஷன் ஆபீசர்கள்
இதை நல்ல முறையில் திட்டவட்டமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

வெள்ளை அறிக்கையின்படி கல்வி கற்க ஆரம்பிக்கும் பிள்ளையின்
வயது 6 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் கற்க
வேண்டுமானால் பிள்ளைகள் மூன்று வயதிலேயே பள்ளிக்குச் செல்லும்
பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு 3 வயதில்
இருந்தே நல்ல பழக்கத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும். ஒரு ஆயாவை,
நியமித்து அவர்களை அழைத்துச் செல்ல, மறுபடியும் கூட்டிக்கொண்டுவரச்
செய்யவேண்டும். இப்பொழுது நகரங்களில் இந்த மாதிரிப் பள்ளிக்கூடங்கள்,
நிறுவி 3 வயதில் இருந்தே பிள்ளைகள் பள்ளிக்குச்செல்லும் பழக்கத்தை
மேற்கொள்ளச் செய்யவேண்டும்.

ஆதாரப் பயிற்சி கொடுக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் திட்டமாக 10-30 a.m.
இப்போது பகல் உணவு அளிக்க வசதி செய்து இருக்கிறார்கள். அது நல்ல
திட்டம். அதனால் தான் அதிகமான ஏழை மாணவர்கள் படிப்பதற்கு
வசதி ஏற்படுகிறது. அதோடு ஏழை மாணவர்களுக்கு சரியான புஸ்தகம்
கிடையாது. இந்த வசதிகளை எல்லாம் திட்டவட்டமாகப் பணம் ஒதுக்கி
அதிக அளவில் செய்து தரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக உயர்நிலைப் பள்ளிக்கூடம் இருக்கிற இடங்களிலாவது
எட்டாவது வரையில் இருக்கக் கூடிய பள்ளிக்கூடங்களுக்கு அவசியம்
இல்லை. ஐந்தாவது வரையில் ஆரம்பப்பள்ளியில் படித்துவிட்டு 6-வது
வகுப்பே உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து விடுவதற்கு வசதி செய்து
கொடுத்துவிட்டால் போதுமானது. காரணம் ஆரம்பப் பள்ளியில் 8-வது
வரையில் படித்தாலும் உயர்நிலைப் பள்ளியில் மேல்வகுப்பில் சேரப்போகும்
போது பரீட்சை நடத்தி அதே வகுப்பில் சேர்ந்துகொள்ளக் கூடிய நிலை
மையும் இருக்கிறது. ஆகவே 11-வது படிவம் வரையில் உள்ள உயர்
நிலைப் பள்ளிகள் உள்ள ஊர்களில்—ஐந்தாவது வகுப்பு வரையில் உள்ள
ஆரம்பப் பள்ளிகளை மட்டும் வைத்தால்—இருக்கும்படி செய்தால் மிகவும்
சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு
உயர்நிலைப் பள்ளிகள் உள்ள பல இடங்களில் அந்தப் பள்ளிகளைச் சேர்ந்த
ஹாஸ்டல் கிடையாது. வெளி ஊர்களில் இருந்து அநேகம் பிள்ளைகள்
வந்து படித்துவிட்டு அன்றாடம் திரும்பித் திரும்பிச் சென்று வரவேண்டி
யிருக்கிறது. ஆகையால் பாடங்களைப் படிப்பதற்கு வசதி இல்லை. ஆகவே
உயர்நிலைப் பள்ளி உள்ள இடங்களில் எல்லாம் ஒவ்வொரு ஹாஸ்டலையும்
ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று சொல்ல ஆசைப்படுகிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் மாண
வர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அதிகமான இட வசதி செய்து கொடுப்பது
இல்லை. இந்தப் பள்ளிக்கூடங்களில் இடத்தை விஸ்தரிப்பதற்கு
கீற்றுக் கொட்டகையாவது போட்டுக்கொடுக்க வசதி செய்து தரப்படவேண்டும்
என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதாரப் பள்ளிகளை—இந்த ஆண்டில் 16 அதிகப்படுத்துவதாகச் சொல்லி
யிருக்கிறார்கள். முக்கியமாக கிராமாந்திரங்களுக்கு இது மிகவும் உதவிகர
மாக இருப்பதன் காரணமாக அதிகமான ஆதாரப்பள்ளிகளை ஏற்படுத்து
வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இப்படி கல்வித்துறையில் பலவிதமான நல்ல காரியங்களைச் செய்வதற்காகக்
கோரப்பட்டிருக்கும் மானியத்தை ஆதரித்து, பேசுவதற்கு அனுமதி
கொடுத்த தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை
முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[16th March 1959

SRI S. NAGARAJA MONIGAR : கனம் தலைவர் அவர்களே, "கல்வி கரையில, கற்பவர் நாள்சில". எல்லா சாதனங்களும் இருந்தாலேயே மனிதனுக்கு நாள் சில என்பது தெரிந்த பொருள். அப்படி இருக்க நமக்குச் சாதனங்களும் குறைவாக இருக்குமானால் கல்வியை அடைவதில் நாம் எவ்வளவு பின் தங்கிவிடுவோம் என்று சொல்லத் தேவையில்லை. நம் அரசாங்கம் அத்தகைய குறைபாடு ஒன்றையும் வைக்கவில்லை. வெகுநாட்களாகப் பின் தங்கி இருந்துவிட்டோம். ஆகவே எவ்வளவு காலம் பின் தங்கியவர்களாக இருந்துவிட்டோமோ அதற்கு ஏற்றவகையில் இப்போது எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக, எவ்வளவுக்கு எவ்வளவு அவசரமாக நாம் பல காரியங்களைச் செய்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவுதான் அதிகமாகவும், அவசரமாகவும் நம் மக்கள் எல்லோரும் கல்வி அறிவைப் பெறுவார்கள். ஆகவே இந்த ஆண்டில் சுமார் பதிமூன்று கோடியே அறுபது லட்சம் சொச்சம் பணத்தை இந்தத் துறைக்காக ஒதுக்கியிருப்பதானது—இதற்கு முன்னால் இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் செலவிட்டிருப்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகமிக அதிகமான அளவு காரியங்களை செய்து வருகிறோம் என்பதைக் காட்டுகிறது. இந்தத் துறையில் நம் அமைச்சர் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றிவருகிறார் என்று சொன்னால் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. எனக்கு முன்பு பேசியவர்கள் அதைப்பற்றிச் சொன்னபோது உண்மையிலேயே பெருமைப்பட்டுச் சொன்னார்களா, மனப்பொறாமையினால் சொன்னார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. வருஷத்திற்கு மூன்று தடவை அதிகாரச் சக்கரம் மாற வேண்டுமென்பது அவர்கள் கருத்தோ என்னவோ தெரியாது. அடிக்கடி மாறக்கூடிய நிலைமை கல்வித் துறையில் இருப்பதானது என்ன ஆகும் என்பது நமக்குத் தெரியும். ஆகவே தொடர்ந்து எட்டாண்டுகளாக நமது அமைச்சர் அவர்கள் அத்துறையில் இருப்பது கல்வித்துறையில் சீரான வளர்ச்சியை நாம் பெற்றிருப்பதற்குக் காரணம் என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

இத்துறையில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான பணம் செலவிட்டபோதிலும் கூட விலைவாசிகளின் உயர்வு காரணமாக அதிகமான தொகை வீண் விரயம் ஆவதாகக் குறிப்பிடலாம். நாம் போடுகிற திட்டங்களுக்குப் பணம் செலவாகிறதே தவிர நன்மை பொதுமக்கள் அளவு எட்டவே இல்லை என்று வாதிக்கலாம். இப்படி நல்ல மனது இல்லாமல் இந்தச் சபையில் ஜனங்களுடைய பிரதிநிதியாக வந்தவர்கள் பேசினார்கள். இதை என்னவென்று சொல்வது ? முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போலத்தான் என்றாலும்கூட இப்படி பண்பாட்டை, கலாசாரத்தை, ஒழுக்கத்தை விட்டுப் பேசுவது முறையாகுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். எங்கள் மாவட்டத்தில் முன்பு 700 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருந்தன, இப்போது இரண்டாயிரம் ஆரம்பப்பாடசாலைகள் வைத்திருக்கிறார்களே என்று சொன்னால் இப்படி எண்ணிக்கை பெருகிப்பயனில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இன்றையதினம் எத்தனை பள்ளிகள் ஏற்பட்டிருக்கின்றன. எத்தனை அதிகமான மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதையெல்லாம் கொஞ்சங் கூட கவனித்துப் பார்க்காமல் உண்மைக்கு மாறாக, வள்ளுவரைச் சொல்லி, நேர்மை, பண்பு, நியாயம் என்பதாக தாராளமாகப் பேசுவது மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது.

இன்றைக்குப் பல பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பைலட் ப்ராஜெக்ட் போட்டு கல்வி அபிவிருத்தி மகாநாடுகள் கூட்டி நல்லமுறையில் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டி—உங்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக இல்லாவிட்டாலும்—இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு, எல்லோரும் இத்துறையில் எவ்வளவு ஒற்றுமையாக வேலைசெய்கிறோமோ அந்த அளவுக்கு அதிகமான முன்னேற்றம் உண்டாகும் என்பதை விளக்கியும் வருகிறார்கள். அந்த அந்த மாவட்டங்களில் லட்சக்கணக்கான பணம் அந்த நேரத்திலேயே வசூலாகிக்கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்களும், கல்வி இலாகா டைரெக்டரும் காட்டி வருகிற ஊக்கம் பலருக்கு ஊக்கத்தை உண்டாக்கக் கூடியதாக இருந்து வருகிறது. நான் கூட அரிசிப்பிச்சை எடுத்திருக்கிறேன். இப்படி இருக்கிற நிலையில் ஆசிரியர்களிடத்திலே அந்தப்



16th March 1959] [Sri S. Nagaraja Monigar]

பொறுப்பை ஒப்படைக்கவில்லையே, அவர்களிடத்தில் அவநம்பிக்கையா
என்கிற இல்லாத புதுப்பிரச்சினையை உண்டாக்குவது இத்திட்டம் வெற்றி
கரமாக நடக்கிறதே என்கிற மனப் புழுக்கம் தான் காரணமாக இருக்க
முடியும். திட்டம் புதிது. இரண்டொரு ஆண்டுகள் போகட்டுமே. வேண்டு
மானால் பின்னால் இந்தப் பொறுப்பை ஆசிரியர்களிடத்திலே ஒப்படைக்க
நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். இன்றைக்கு ஆசிரியர்களுடைய சம்
பளத்தையும் உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு பென்ஷன் முறை
இருக்கிறது. இன்னொன்று, ஆசிரியர்கள் கோபித்துக்கொண்டாலும் சரி,
கல்வி அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் நான் இப்படிச் சொல்வதை
விரும்பாவிட்டாலும் கூட இன்றைக்கு அதிகமான ஓய்வு ஆசிரியர்களுக்கு
இருக்கிறது. கல்லூரி ஆசிரியர்கள் என்றால் மூன்று மாதம், உயர்நிலைப்
பள்ளிகளில் 2 மாதம் ஓய்வு கிடைக்கிறது. வேறு சர்க்கார் சிப்பந்திகள்
யாருக்கும்—காலை எட்டு மணி முதல் இரவு எட்டு மணி வரையில்வேலை
செய்யக்கூடிய நிலைமை இருக்கிறதே தவிர ஓய்வு இல்லை. இப்படி
இருக்கும் போது இவர்களுடைய பெருந்தன்மையையும் நாம் குறைத்து
விடாது ஆசிரியர்களுக்கு வேண்டிய பலவசதிகளைச் செய்து கொடுத்து
வருகிறோம். பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைக்கொண்டு
வந்திருக்கிறோம். இப்படிப் பல காரியங்களைச் செய்து வரும்போது ஆசிரி
யர்களை நாம் அலட்சியப்படுத்துவது போன்று இங்கே பேசுவது சரி
யாகாது. மகாத்மா காந்தியின் தலைமையில் உலகம் எல்லாம் கண்டு
வியக்கும்படி அகிம்சா முறையில் போராடி, இன்றைக்கும் பஞ்ச சீலக்
கொள்கையை வகுத்துக்கொண்டு உலகத்திற்கு, வழிகாட்டியாக நாம்
இருந்துகொண்டிருக்கும்போது—நமது பழம்பெருமை கலாசாரம், பண்பு
எல்லாவற்றையும் உதறிவிடுகிற நிலைமையில்—கல்வித்துறையில் பின்தங்கி
இருக்கும் நிலையைப்போக்க அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கை
களையும் மேற்கொண்டு இயங்கிவரும்போதே நாம் உண்மைக்கு மாறாகப்
பேசுவது சரியாகாது.

அப்படி இருக்கின்றபோது பள்ளிக்கூட சம்பளங்கள் குறைத்துக்
கொடுக்கப்படுகின்றன. ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை பெற்றோர்களிட
மிருந்து ஒரு அணா இரண்டு அணா வாங்கப்படுகிறது. தவிர இப்பொழுது
பள்ளிக்கூடங்களில் புஸ்தகங்களை மிகவும் அதிகமாக்கியிருக்கிறார்கள்.
இந்தப் பள்ளிக்கூட கட்டடங்களை எடுத்துக் கொண்டால் மிகவும் மோசமான
நிலையில் இருக்கின்றன. இதைப்பற்றிச்சொன்னால் எல்லாம் ஆல மரத்
தடியில் இருந்து பள்ளி நடத்தலாம் என்று சொல்லுகிறார்கள். தர்ம
புரியில்கூட பள்ளிக்கூடம் மூடப்பட்டது. அந்தப்பள்ளிக்கூடக் கட்டடத்தை
சீர்ப்படுத்த மறுபடியும் திறக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.
இந்த விஷயத்தில் பொதுமக்கள் பணஉதவி செய்ய முன்வருவார்கள்
என்று நான் சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைத் தவிர
கல்வித் தரத்தை சொல்லக்கூடிய காலத்தில் "நான் அந்தகாலத்திலே
படிக்கும்போது அந்தக் கல்வி உயர்ந்தது இப்பொழுது தரம் குறைந்து
விட்டது" என்று சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இப்பொழுது கொடுக்கப்
படுகின்ற கேள்வி போன்ற விஷயத்தை எல்லாம் சரிப்படுத்தி அதைத்
தக்க முறையில் அமைக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளு
கிறேன்.

அடுத்தபடியாக ஆங்கிலத்தை திடீரென்று ஒழித்துவிட முடியாது. அது
சரியல்ல சற்று தாமதித்துதான் செய்யவேண்டும். அதேமாதிரியாக
இந்தியையும் திடீரென்று புகுத்திவிடமுடியாது. இந்தியா முழுதும் ஒரு
பொதுபாஷை என்ற முறையில் குழந்தைகள் மூன்று பாஷை படிக்க
வேண்டுமென்று சொல்வது சரியல்ல. பள்ளிக்கூடங்களில் ஆங்கிலமும்
தமிழும் இருக்கவேண்டும். எப்பொழுதும் நமது ராஜ்யம் நமது நாட்டின்
ஒரு பகுதி என்ற கருத்தையும் ஒழுக்கத்தையும் பிள்ளைகளுக்கு போதிக்க
வேண்டுமென்று சொல்லவிரும்புகிறேன். அரசியல் சட்டத்தின் கீழ் பிர
மாணம் எடுத்துக்கொண்டு அதே சட்டசபையில் உடனடியாக ஒழிக்க
வேண்டுமென்று சொல்வது அவ்வளவு சரியல்ல என்று சொல்லவிரும்பு
கிறேன். அதற்கு அனுமதி கொடுக்கவில்லை.

மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்களைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது 250 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சமீபத்தில் அவர்களுக்கு அசிஸ்டெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அப்படி கொடுத்தும் அவர்களுக்கு இன்னும் வேலை அதிகமாக இருக்கிறது. ஆகவே இன்னும் ஆசிரியர்களை அதிகமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் அங்கே ஒரு டெபுடி இன்ஸ்பெக்டரைப் போட்டால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக கிருஷ்ணகிரி தாலுக்காவில் பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருக்கின்றன. ஒரு தெலுங்கு பள்ளிக்கூடம் கூட மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தை திரும்பவும் திறப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri K. RAMACHANDRAN** : தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மான்யத்தில் $13\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதைக் குறித்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இதிலே இந்த ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரையில் $6\frac{1}{2}$ கோடி ரூபாய் சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தினால்தான் அவர்களின் தரம் உயர்ந்திருக்கும். மத்தியான உணவைப்பற்றி பள்ளிக்கூடங்களில் செய்திருக்கும் ஏற்பாடு மிகவும் பாராட்டத்தக்கது. கட்டாயக்கல்வி 1960-வது வருஷத்திலே வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அரசாங்கம் கொடுத்த வெள்ளையறிக்கையிலும் கட்டாயக்கல்வியை 7வது வகுப்பு வரையிலும் புகுத்த முடியும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதைப் பூராவும் இந்த ஆரம்பக் கல்விக்காக செலவழிக்கும்போது இந்தக் கட்டாயக் கல்வியை ஏழாவது வகுப்புவரை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்தின் கீழ் இந்தக் கல்வி நிர்வாகத்தை ஒப்படைத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் சமுதாய நலதிட்டத்தின் கீழ் இந்த ஆரம்பக்கல்வியைப் புகுத்திவிட்டால் எந்தவிதமான நஷ்டமும் இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சர்க்கார் இந்த விஷயத்தில் ஆலோசனை செய்து அதை மாற்றி அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக நம் ஆதாரக்கல்வியை எடுத்துக்கொண்டால் ஆதாரக்கல்வி பள்ளிக்கூடங்களிலே நூல் நூற்புத்தொழில் பல இடங்களிலே புகுத்தமுடியவில்லை. காரணம் அதற்குச் போதிய பஞ்சு கிடைப்பதில்லை. பல தொழில்களை புகுத்த முடியவில்லை.

அடுத்தபடியாக, ஸ்கூல் இம்ப்ரூவ்மெண்ட் கான்பெரென்ஸ் சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் 6,55,00,000 ரூபாய் ஆதாரக் கல்விக்காக எலிமெண்டரி எஜுகேஷனுக்காகச் செலவழித்தாலும் இந்தத் திட்டத்தின் மூலம் இன்று நடந்திருக்கும் திட்டங்களையெல்லாம் பார்த்தால் கிட்டத்தட்ட 1 கோடியே 65 லட்ச ரூபாய்க்கு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்ற குறிப்பு நம் கையில் இருக்கிறது. இது உண்மையிலேயே பாராட்டத்தக்க விஷயம்தான். இதைப் பொறுத்தவரையில், எனக்கு முன்பு பேசிய ஸ்ரீ. அன்பழகன், ஆசிரியர்கள் பிச்சை எடுக்க வேண்டிய நிலைமை இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார். நான் அவர் கூறியதை ஒத்துக்கொள்ளவில்லை. உண்மையிலேயே ஆசிரியர்கள் பொது மக்களுடன் சேர்ந்துபழகக்கூடிய பண்பை நிலைநாட்டுவதற்கான வழிவகைகளை வகுப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் இதனால் ஏற்பட்டிருக்கிறது என்பது குறித்து சந்தோஷப்படுகிறேன். ஒரு கூட்டத்தைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இது அவசியமான திட்டம். ஆனால் இதில் கொஞ்சம் அதிகார வர்க்கத்தின் நெளி தென்படுகிறது. நான் ஒரு வட்டாரக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அந்தக் கூட்டத்தைப் பொறுத்தவரையிலும் அந்தப் பகுதி சட்டசபை மெம்பர்களை அவர்கள் கலந்தாலோசிக்கவில்லை. ஒருவேளை என் தொகுதியில்தான் அந்த மாதிரி நடந்ததோ என்னமோ, தெரியவில்லை. எனக்கு எந்த விதமான தகவலும் முன்கூட்டி வரவில்லை. கடைசி நேரத்தில், கூட்டத்திற்குவரும்படி என்னைக் கூப்பிட்டார்கள். நானும் கூட்டத்திற்குப் போனேன். எதிர்க்கட்சிகளைச் சார்ந்த அங்கத்தினர்களைப் பொறுத்தவரையில்தான் இவ்வாறு செய்யப்படுகிறதா அல்லது எல்லோருக்குமே இம்மாதிரியான நிலைமைதானா



என்று அறிய விரும்புகிறேன். இம்மாதிரியான சீர்திருத்தங்கள் நடக்கும் இடங்களிலெல்லாம் மற்றவர்களையும் கலந்துகொண்டால் நல்லது என்று நினைக்கிறேன். பள்ளிக்கூடங்கள் அபிவிருத்தி அடையவேண்டும், பிள்ளைகள் நன்றாக வாசிக்கவேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. எனவே எல்லோரையும் கலந்தாலோசிக்கவேண்டும். இத்திட்டம் நல்ல திட்டம். ஆனால் மக்களின் ஒத்துழைப்பு அதிகமாகக் கிடைக்கக்கூடிய விதத்தில் திட்டம் வகுக்கப்படவில்லை. மக்களின் ஒத்துழைப்பு இன்னும் அதிகமாகக் கிடைக்கக்கூடிய விதத்தில் இதை வகுத்திருக்கலாம். உபாத்தியாயர்கள் பிரம்மாண்டமான சாமான்களை வாங்கிக் கொண்டு வந்தார்கள். மற்றவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் அவர்களாகவே இவ்வளவு செய்திருந்ததைப் பாராட்டத்தான் வேண்டும். பரமக்குடி வட்டாரத்தைப் பொறுத்த வரையில் உபாத்தியாயர்களின் கான்பெரென்ஸ் அங்கே நடந்தது, அதாவது அது பரமக்குடியில் நடக்கவில்லை. காரணம், இந்த வட்டாரத்திலேயே அதற்கு இடம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இது ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையிலேயே, மற்றப் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்திருந்தால் அந்த வட்டாரத்திலேயே இடம் கிடைத்திருக்கும், உபாத்தியாயர்கள் வண்டிகளைக் கட்டிக்கொண்டும் சாமான்களை எடுத்துக்கொண்டும் 20–25 மைல் தூரம் வந்திருக்க வேண்டாம். ஸ்கூல் இம்ப்ரூவ்மெண்ட் காண்பெரென்ஸில் சட்டசபை அங்கத்தினர்களும் மற்றப் பிரநிதிகளும் கலந்துகொள்வதற்கு வகை செய்ய வேண்டும். இந்த கான்பெரென்ஸ் நடத்துவது நமது மாநிலத்திலேயே சிறந்த திட்டம்.

அடுத்தபடியாக கம்பல்ஸரி எஜூகேஷனைப் பற்றிப் பேச விரும்புகிறேன். ப்ளாக் டெவலப்மெண்ட் பிரதேசங்களில் ட்ரைவ்கள் நடத்தப்படுகின்றன். 1959–60-ல் ஜூன் மாதத்தில் ஒரு ட்ரைவ் நடத்தலாம். அதற்கு வேண்டிய சிப்பந்திகள் ப்ளாக் டெவலப்மெண்ட் பிரதேசத்தில் இருக்கிறார்கள்.

மத்தியான உணவுத் திட்டம் பல இடங்களில் சரியாக நடக்கவில்லை என்று சொன்னால் கனம் அமைச்சர் கோபப்படுவார். அருமையான திட்டம். இதற்கு மக்களும் " காண்ட்ரிப்யூஷன் " கொடுக்கிறார்கள். ஆனால் இது நடைமுறையில் சரியாக நடக்கவில்லை. அதிகாரிகளும் மந்திரிகளும் வரும்போது நன்றாக நடத்துகிறார்கள். பிறகு சரியாக நடத்துவதில்லை. ஒருசில பள்ளிக்கூடங்கள்தான் எப்போதும் நன்றாக நடத்துகின்றன. நான் பார்த்தவரையில் கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி இத்திட்டம் சரிவர நடப்பதில்லை. பசியால் வாடும் ஏழைக் குழந்தைகளுக்காக நடத்தப்படுவது இத் திட்டம். இதைத் சீர்திருத்த ஆவன செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR** : இத் திட்டம் நன்றாக நடக்க வேண்டுமென்று விரும்பிய கனம் அங்கத்தினர் இது நன்றாக நடப்பதற்கு சர்க்காரின் உதவியை எதிர்பார்க்கிறார். நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துவிட்டோமா என்று கனம் அங்கத்தினரைக் கேட்கிறேன்.

**Sri A. VEDARATHNAM** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை முழுமனதோடு ஆதரிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். " இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம் " என்று பாரதியார் சொன்னார். அதற்கிணங்க நமது அரசியல் நிர்ணய சபை, இந்த நாட்டில் 1960-ம் ஆண்டிற்குள் கல்வி அறிவு இல்லாதவர்களே இல்லாது செய்துவிட வேண்டுமென்று திட்டமிட்டிருந்தது. அவ்விஷயம் நீங்கலாக மற்ற எத்தனையோ விஷயங்களில் வகுத்த திட்டத்தை திட்ட காலத்திற்கு முன்பே நிறைவேற்றிய நாம் இந்தக் கல்வி விஷயத்தில் மாத்திரம் குறித்த காலத்திற்குள் திட்டத்தை நிறைவேற்றத் தவறிவிட்டோம். ஆனால் இன்று காலையில் இவ்விஷயமாக நமது கனம் கல்வி அமைச்சர் கூறிய பதில் நமக்கு ஓரளவு திருப்தி அளிப்பதாக இருக்கிறது. இத் திட்டத்தை 1960-ம் வருஷத்திற்குள் நிறைவேற்ற முடியாது போய்விட்டாலும் கூட, 1965-ம் வருஷத்திற்குள் நிறைவேற்றுவதற்காக கட்டாய ஆரம்பக் கல்வித்

[Sri A. Vedarathnam] [16th March 1959

திட்டம் அமலுக்குக் கொண்டுவரப்படும் என்று அவர் கூறினார். இது பெரு மகிழ்ச்சியை அளிக்கிறது. இதை தவறாமல் நிறைவேற்ற வேண்டுமானால் திட்டவட்டமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது எல்லாப்பயிற்சிப் பள்ளிகளையும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் ஆதாரப்பயிற்சிப் பள்ளிகளாக மாற்றுவதற்கு திட்டவட்மாகத் திட்டமிட்டு அதன்படி எவ்வாறு தவறாமல் நடத்தி வந்திருக்கிறோமோ அவ்வாறே இந்த விஷயத்திலும் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். 1965-ம் ஆண்டுக்குள் முடிக்க வேண்டுமானால் வேலைகளை ஆறு பங்காகப் பிரிக்க வேண்டும், ஆறு வருடங்களுக்குப் பிரிக்க வேண்டும். ஏனென்றால் இப்போதிருந்து ஆறு வருடங்களில் 1965-ம் வருடம் வந்துவிடும். எனவே ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஒவ்வொரு ஜில்லாவைப் பொறுத்த வரையிலும் ஆறு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு வருடத்திலும் ஒரு பகுதியை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செய்தால்தான் 1965-ம் வருடத்திற்குள் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியும். இல்லாவிட்டால் 1965-க்குப் பிறகு இன்னும் 5 வருட காலத்திற்கு திட்டத்தைத் தள்ளிப் போட வேண்டியிருக்கும். இலங்கை போன்ற நாடுகளில்கூட எழுத்தறிவற்றவர்களே இல்லாமல் செய்திருக்கிறார்கள். நம் நாடு பெரிய நாடு, ஜனத்தொகையிலும் பெரிய நாடு, வறுமையில் முதல் பரிசு பெறத்தக்க நாடு. சுதந்திரமடைந்துள்ள இந்த நாடு இந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாவது நாட்டில் எல்லோரும் கல்வியறிவு உடையவர்களாக இருக்கும்படி செய்ய வேண்டும். அது இந்த நாட்டு அரசாங்கத்தின் தலையாய கடமை. கட்டாயக் கல்விமுறையைக் கொண்டுவரும்போது, இப்போதைய கல்விமுறைப்படி கட்டாயக் கல்வியைப் புகுத்தி அதற்குப் பிறகு அதே கல்வியை பிற்காலத்தில் ஆதாரக் கல்வியாக மாற்றுவதைக் காட்டிலும் ஆரம்பிக்கும்போதே ஆதாரக் கல்வியாகத் துவக்கிவிடலாம். அவ்வாறு செய்தால் பிற்காலத்தில் அதை ஆதாரக் கல்வியாக மாற்ற வேண்டிய, ஆதாரக் கல்வி முறைக்குக் கொண்டுவர வேண்டிய, சிரமம் இருக்காது என்றும் சொல்ல விரும்புகிறேன்.

ஏனெனில் நம் நாட்டில் மாத்திரமல்ல, அகில இந்தியா முழுவதும் நமது எதிர்காலத் கல்வித்திட்டம் ஆதாரக் கல்வி என்று வந்த பிறகு நாம் இன்னும் பழைய முறையை, புதிதாகத் துவங்கும் பள்ளிக்கூடங்களில்
11 a.m. புகுத்தினால் அது நமது லட்சியத்தை அடைவதற்கு உபயோகமாக இருக்காது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆதாரக் கல்வியைப் பற்றி நான் ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஆதாரக் கல்வியைப் பற்றி குறை கூறும்போது, ஆரம்பப் பள்ளியில் அது திருப்திகரமாக, எதிர்பார்த்தளவு நல்லமுறையில் நடைபெறவில்லை என்ற குறை இருக்கத்தான் இருக்கிறது. அதில் ஓரளவு உண்மையிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆகவே, ஆரம்ப பள்ளிகளில் ஆதாரக் கல்வி முறையில் நல்ல பயிற்சி கொடுப்பதற்கு வேண்டிய வகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, கல்வி இலாகா இதில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் தொழில் மூலம் கல்வியைப் பெறும் காலத்தில் அவர்கள் செய்யும் தொழில், சுயதேவை அடிப்படையில் அந்த லட்சியத்தை அடையவேண்டுமென்பதற்காக குறைந்த பட்ச அளவு வருமானம் எவ்வளவு இருக்க வேண்டுமென்று ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். முதல் வகுப்பில் ஒரு மாணவன் மாதம் ஒரு அணாவாவது பெற வேண்டும், எட்டாவது வகுப்பை அடையும்போது மூன்று ரூபாயாக இருக்கவேண்டுமென்று திட்டத்தில் கூறப் பட்டிருக்கிறது. சராசரி ஒரு மாணவனுக்கு மாதம் ஒரு ரூபாய் வருகிறது என்றிருந்தால் அந்த வகுப்பில் 30 மாணவர்கள் படிக்கிறார்கள் என்றால் மாதம் 30 ரூபாய் வருமானம் வருகிறது, மாணவர்களிடமிருந்து. அப்படி மாணவர்கள் கல்வி பெறும்போதே தொழில் மூலம் இந்த வருமானத்தை அடைய முடிகிறது. இதுதான் ஆதாரக் கல்வியிலுள்ள ஒரு சிறந்த அம்சம். மற்றவர்களின் தயவை எதிர்பார்க்காமல் தானே தன் காலில் நிற்க முடிகிறது. இதுதான் இதிலுள்ள ஒரு சிறந்த அம்சம். உலகத்தில் எந்த நாட்டுக் கல்வித் திட்டத்திலும் இல்லாத ஒரு சிறந்த அம்சம் இந்த ஆதாரக் கல்வித்



16th March 1959] [Sri A. Vedarathnam]

திட்டத்தில் இருக்கிறது. இதைக் குறை கூறுகிறவர்களுக்கு நான் ஒரு சான்று கூற முடியும். மேலை நாட்டார் இதைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்று சொல்வதில், மேல் நாட்டார் சொல்லிவிட்டால் அது சிறப்பாகத்தான் இருக்கும் என்ற பெருமையை நான் அவர்களுக்கு கொடுக்க தயாராயில்லை. மஹாத்மா காந்தியடிகள் எவ்வளவு அடக்கம் உள்ளவர் என்பதைப் பற்றி நான் இங்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் அவர் கூறியிருக்கும் ஒரு வாசகத்தினால் இந்த ஆதாரக் கல்வியின் சிறப்பை புரிந்து கொள்ள முடியும். காந்தியடிகள் எவ்வளவோ மகத்தான காரியங்களை செய்திருந்தபோதிலும் கூட, தனக்கு திருப்தியளிக்கும் ஒரு காரியத்தை இந்த நாட்டில் செய்திருக்கிறார்கள் என்றால், அது எது என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று கேட்டால், இந்த நாட்டில் ஆதாரக் கல்வி முறையைப் புகுத்தியதைத்தான் இந்த நாட்டிற்கு சுதந்திரம் தேடித்தந்ததைவிட ஒரு சிறந்த தொண்டாக நான் கருதுகிறேன் என்று மஹாத்மா அவர்களே கூறியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆதாரக் கல்வித் திட்டத்தைப் பற்றி குறை கூறுகிறவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த கல்வித் திட்டம் பிற மாகாணங்களை விட நமது மாகாணத்தில் நன்கு, சிறந்த முறையில் நடக்கிறது என்று இருந்தபோதிலும்கூட அதைக்கண்டு நாம் திருப்தி அடைந்துவிடுவதற்கில்லை. அது எந்தளவு நன்கு நடக்க வேண்டுமோ அந்தளவு நடப்பதற்கு நாம் போதிய ஊக்கம் செலுத்த வேண்டும். எந்தளவு பயிற்சிப் பள்ளிகளில் நாம் இந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு முன்னேற்றக் கட்டத்தை எட்டிப் பிடித்திருக்கிறோமோ அந்தளவு ஆரம்பப் பள்ளிகளில் ஆதாரக் கல்விமுறை பரப்பப்படவில்லை. ஆகவே, இதில் கல்வி இலாகா மேலும் அதிக கவனம் செலுத்த கடமைப்பட்டிருக்கிறது. அதுவும் கூட விரைவில் செய்தாக வேண்டும். இந்த நாட்டிலிருக்கும் நூற்றுக்கு நூறு பேரும் எழுத்தறிவு பெற்றவர்களாக விளங்கவேண்டுமென்ற லட்சியத்தை நாம் வைத்துக்கொண்டிருக்கும்போது பழையமுறையில் கல்வியைப் புகட்டுவது என்பதை நாம் பெருக்கிக் கொண்டு போனால் இன்றுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பூதம் நம்மையே விழுங்கிவிடக்கூடும் என்பதில் யாருக்கும் ஒருவித ஐயமும் இருக்க முடியாது. எம்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் போய் பார்த்தால், இரண்டு மூன்று வருடங்களாக அப்ளிக்கேஷன்ஸ்-ஐ புதுப்பித்துக் கொண்டிருக்கும் பேர்கள் மூன்று, நான்கு டிஜிட்களுக்கு மேல் இருப்பதைப் பார்க்க முடியும். அப்படி வேலையில்லாத் திண்டாட்டம் நம் நாட்டில் பெருகியிருக்கும்போது, நாம் பழைய முறைக் கல்வியை மேலும் கையாண்டுகொண்டிருந்தால் அதை விட வேறு ஒரு தீமை நமக்கு வேண்டியதில்லை. ஆகவே, அந்நிலை ஏற்படாமல் இருக்க ஆதாரக் கல்வியைத் தவிர வேறு ஒன்றுமே கிடையாது; என்பதை நான் இங்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இப்பொழுது கிராமத்திலுள்ள, ஒரு கிராமவாசி தான் சம்பாதிக்கிற நாலு அணாவை விட அதே குடும்பத்தில் உள்ள கல்வி பயின்ற ஒருவன் நாலேகால் அணா இன்று சம்பாதிப்பதற்கு பழைய கல்வி முறை அவனுக்கு உபகாரப்படுவதில்லை. நரலு அணாகூட சம்பாதிக்கமுடியாது சக்தியற்ற நிலையில்தான் கொண்டு விடுகிறது, விவசாயக் குடும்பத்தில் கல்வி பயின்றிருக்கும் ஒருவனது நிலை. ஆகவே பழைய கல்வி முறையை இன்னும் விருத்தி செய்து கொண்டு, அதை கட்டாயமாக்கினால் அது இந்த மாகாணத்திற்கு கெடுதலைத்தான் உண்டுபண்ணும்.

ஒன்றிரண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றி மட்டும் சொல்லிக் கொண்டு முடித்து விடுகிறேன். ஆரம்பக் கல்வியை ஆதாரக் கல்வியாக மாற்ற வேண்டும். ஹைஸ்கூலில் எட்டாவது வகுப்பு வரை சீனியர் பேஸிக்காக மாற்றவேண்டுமென்று திட்டமிருக்கிறது, ஆனால் அது இன்னும் அமுலுக்குவரவில்லை. அதை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். பி. டி. ஆசிரியர்களின் பற்றுக்குறை இருப்பதால் ஒவ்வொரு பி.டி. கல்லூரியிலும் ஆதாரக் கல்வியை ஆப்ஷனல் சப்ஜெக்டாக பயில்வதற்கு இடம் கொடுக்கப்படவேண்டும். ஒரத்தநாட்டில், பீ.டி. கல்லூரியில் அங்குள்ள மாணவர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுக்க வேண்டும், விவசாயம் கற்றுக்கொள்ள நிலம் இல்லை, ஆகவே அதற்கு உடனடியாக நிலம் கொடுக்கவேண்டும், அங்கு கட்டிடங்கள் இல்லை, அதற்கு கட்டிடங்கள்

[Sri A. Vedarathnam] [16th March 1959

கட்டிக் கொடுக்கவேண்டும். அடுத்தபடியாக, கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் பல கூட்டங்களில் பேசி வந்திருக்கிறார்கள்; ஹைஸ்கூல்களில் இப்பொழுது இருக்கும் செலக்ஷன் எக்ஸாமினேஷனை ஒழித்துவிடப் போவதாக. அதை இந்த வருடத்திலிருந்தே, ஏன் இப்பொழுதிருந்தே ஒழித்துவிட்டால் நன்றாயிருக்கும். செலக்ஷனில் செலக்ட் செய்வர்களில் 50 சதவீதம் கூட தேறுவதில்லை. செலக்ஷன் கிடைக்காமல் இருப்பவர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தால் அதில் 10 சதவீதம் ஆவது தேறுபவர்கள் இல்லையென்று சொல்ல முடியாது. ஆகவே, செலக்ஷன் எக்ஸாமினேஷனை உடனடியாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பேசுவதற்கு எவ்வளவோ விஷயங்கள் இருந்தபோதிலும்கூட அவகாசம் இல்லாத காரணத்தினால் இந்தியைப் பற்றி மட்டும் ஒரு வார்த்தை கூறிக்கொண்டு முடித்துவிடுகிறேன். பேரறிஞர் அன்பழகன் அவர்கள் தன் கட்சிக் கொள்கைக்காக பேசியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்; எப்படியிருந்தபோதிலும் கட்சிக் கொள்கையை வைத்துக்கொண்டு பார்த்தாலும்கூட, அவர்களின் திராவிட நாட்டின் எல்லைக்குள் இருக்கிற கேரளம், ஆந்திரா, மைசூர் இந்தப் பகுதிகளில் இந்தியை கட்டாய பாடமாக்கியிருப்பதோடு மட்டுமில்லாமல், மைசூரை எடுத்துக்கொண்டால் அங்குள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் " மத்தியமா " வாவது தேறினால் ஒழிய சர்க்கார் உத்தியோகம் கிடையாது என்று சொல்லும் அளவிற்கு இந்தியை துரிதமாக நடத்திப்போகிறபோது நமது தமிழ் நாட்டில் மட்டும் இந்தி விஷயத்தில் பின்தங்கியிருந்தால் இன்று தாங்கள் கூறுகிற திராவிட நாட்டின் எல்லைக்குள்ளேயே இந்த வித்தியாசம் இருக்கலாமா என்று அவர்கள் உன்னிப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தி வேண்டாமென்று கட்சிக்கொள்கை காரணமாக சொன்னபோதிலும், ஒரு காலத்தில் நாம் படிக்கவேண்டிய காலத்தில் இந்தி படிக்காமல் விட்டு விட்டோமே என்று அழுது கண்ணீர் வடிக்கிற நிலை வந்தே தீரும். அந்தப் பாவத்திற்கு இவர்கள் ஆளாகாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது அவகாசம் முடிந்து விட்ட காரணத்தினால் இந்த கல்வி மான்யக் கோரிக்கையை முழு மனதோடு நான் ஆதரித்துக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*Srimathi KOLANTHAI AMMAL : தலைவர் அவர்களே, இன்று இந்த அவையில் நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கல்வி மான்யத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்று நம் நாட்டில், நாம் சுதந்திரம் அடைந்து குறைந்த ஆண்டுகளானாலும் உண்மையிலேயே எல்லாத் துறைகளிலும் நாம் நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். கல்வித் துறையிலும் நாம் நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். அதற்குக் காரணம், நாம் திட்டம் போட்டு செய்கிற வேலைகள் என்ன என்பதைக் குறிப்பிட்டுக் கொண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓரளவு நல்ல முன்னேற்றம் பெற்றிருக்கிறோம். இப்பொழுது குறிப்பிட்ட முன்னேற்றத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெற முடியாவிட்டாலும் 1965-ம் ஆண்டிற்குள் நாடு முழுவதும் கட்டாயமாக எல்லோரும் எழுத்தறிவு படைத்தவர்களாக விளங்க வேண்டுமென்று திட்டம் வெற்றி பெறுவதற்கு நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்ற முறையில் குறிப்பிடப் பட்டிருப்பதை பாராட்டுவதோடு கூட, எனக்கு முன் பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டதொரு கருத்து பற்றி நான் எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்பு எதிர்க்கட்சியிலே பேசிய ஒருவர் ஏதோ ஒரு திட்டத்தைப் போட்டு முன்னேறிவிட்டதாக பாராட்டிக்கொள்ளுகிறார்கள், ஆங்கிலேயர் காலத்தில் நம் நாட்டில் கல்வி அபிவிருத்தி அடைந்தது என்று குறிப்பிட்டார்கள். ஆங்கிலேயர்கள் நம்முடைய நாட்டை ஆண்டுவந்த காலத்திலே மிகக் குறைந்த அளவுதான் மக்கள் கல்வி அறிவு பெற்றிருந்தார்கள். நம்முடைய நாட்டில் இப்பொழுது கட்டாய இலவசக் கல்வித் திட்டம் பரவிவருவதற்குக் காரணம், இப்பொழுது இருக்கும் மத்தியான உணவுத் திட்டம். அதோடுகூட, மாணவர்களுக்கு புத்தகம் முதலியவை வாங்கிக்



16th March 1959] [Srimathi Kolanthai Ammal]

கொடுப்பதன் காரணமாகவும் ஓரளவுக்கு அதிகம் பேர்கள் படிப்பதற்கு முன்வருகிறார்கள் என்பதைத் தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, நாம் போட்டிருக்கிற திட்டம் நல்ல திட்டம் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கு மேல் நான் ஒன்று வற்புறுத்திக்கூற விரும்புகிறேன். எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பு வரையிலும் நம்முடைய நாட்டிலே " பாக்வேர்டு, பார்வேர்டு " என்று பிரித்து " பாக்வேர்டு " வகுப்பினருக்கு இலவசக் கல்வி அளிப்பது என்பது கூடாது. குறைந்த வருவாய் பெறுகின்றவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படவேண்டும், அது ஜாதிமத அடிப்படையில் இருக்கக்கூடாது என்பதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். " பாக்வேர்டு " கம்யூனிடியைச் சேர்ந்தவர்கள் ஓரளவுக்கு வருமானம் படைத்தவர்களாக இருந்தாலும், அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்கிறது என்ற நிலைமை இருக்கக்கூடாது.. அவர்களை விடக் குறைந்த வருமானம் படைத்த, வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள், அவர்கள் " பார்வேர்டு " கம்யூனிடி என்ற காரணத்தினால் தங்களுடைய கல்வியைப் பெறமுடியாத அளவுக்கு வருந்துகிறார்கள். இந்த நிலைமை உயர் நிலைப்பள்ளி, கல்லூரிகளிலும் வருகின்ற ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தினால், வருமான அடிப்படையில் இந்தக் கட்டாயக் கல்வியை உயர்நிலைப்பள்ளி வகுப்பு வரைக்கும் அமைக்க வேண்டும். அதற்குரிய திட்டம் வகுக்க வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நாம் ஜாதி அடிப்படையிலே இன்று நாட்டிலே எந்த விதத்திலும் காரியத்தைச் செய்யாவிட்டாலும், இந்தக் கல்வியைப் பரப்புகின்ற முறையிலே அதில் ஜாதியும் இல்லை என்பதை நாம் பல இலக்கியங்கள் மூலம் படித்திருக்கிறோம். ஜாதி முறையில் இலவசக் கல்வியை பரப்பாமல், எஸ்.எஸ்.எல்.ஸி. வரை ஆண், பெண் இருபாலாருக்கும் பொருளாதார அடிப்படையில், குறைந்த வருவாய் படைத்த குடும்பத்தில் இருக்கிற எல்லா மாணவர்களுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்ற திட்டத்தை நாம் கொண்டுவரவேண்டும் என்பதை நான் மிகவும் வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ளுகிறேன். சிறப்பாக பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அமைத்திருக்கிறார்கள். பெண் ஆசிரியர்களுக்கு இவ்வளவு சலுகை கொடுத்ததற்கு, பெண் அங்கத்தினர் என்ற முறையில் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுவதோடு, ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லாமல் ஆரம்ப ஆசிரியர்கள் நிலையிலே ஓரளவு நல்ல சம்பளம் இல்லை என்பதை நாம் உறுதியாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆகவே, ஆரம்ப ஆசிரியர்கள் என்றப் முறையில் எல்லோருக்கும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பணத்தைப் நல்ல முறையில் செலவழித்து அவர்களுக்கு சலுகை காட்ட வேண்டுமென்று நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் ஆரம்ப ஆசிரியர்கள் கல்விச் சீரமைப்புத் திட்டத்தின் கீழே பொருள் சேகரிப்பதற்காக பிச்சை எடுக்கிறார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அது மிகவும் தவறுடையது என்பதை நான் இந்தச் சபையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்று கேட்டால், என்னுடைய வட்டாரத்தைப் பொறுத்த வரைக்கும் ஆசிரியர்களோடு நாங்களும் சென்று பல பொருள்களைக் கேட்டிருக்கிறோம். அவர்களும் இயன்ற அளவுக்கு உதவி செய்து கொண்டு வருகிறார்கள். ஏதோ ஆசிரியர்கள் வற்புறுத்தி நன்கொடை கேட்பதாக இவர்கள் கனவு காண்பது போல் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே பொருள் வளம் படைத்தவர்கள், கொடுக்கவேண்டுமென்ற மனப்பான்மை கொண்டவர்கள், கல்வித்துறையில் மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்தவர்கள் இவர்களிடம் சென்று தான் குறிப்பாக கேட்கிறோம்.

(Mr. Speaker in the Chair.)

அதிலே ஆரம்ப ஆசிரியர்களோடு மற்ற அங்கத்தினர்களும் பங்கு கொள்கிறார்கள். அதை நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கருதி, ஆங்காங்கு வட்டாரத்தில் இருக்கிற எம்.எல்.ஏக்களும், மற்ற உறுப்பினர்

களும் பங்கு கொண்டு நல்ல முறையில் தான் இந்தத் திட்டம் நடந்து கொண்டு வருகிறது என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவில்லை, மதிக்கப்படவில்லை என்று இவர்கள் மிகைப்படுத்திச் சொல்லுகிறார்கள் என்பதை இந்த இடத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்கள் கிராமப்புறங்களிலே கேவலமாகக் கருதப்படுகிறார்கள் என்று நினைப்பது தவறு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கு மேல், இன்று நம்முடைய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பஞ்சாயத்து என்று சொல்லக்கூடிய இடத்திலே, 10,000 ரூபாய் செலவழிக்கப்படுகின்ற இடங்களிலே இந்தத் திட்டத்திற்கு மேலும் பணம் கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதிலும் இன்னொரு 300 பேர்களுக்கு பாடசாலைகள் வேண்டுமென்ற முறையில், ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்கிறோம் என்று சொன்னால், கல்வியைப் பொறுத்த வரைக்கும் இந்த சட்டம் தளர்த்தப்பட வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏழை மக்கள் வாழ்கின்ற இடத்திலே 1½ மைல், 2 மைல் தூரம் சென்று படிக்கவேண்டுமென்று விரும்பினால், அது முடியாமல் இருக்கிறது. ஆகவே, ஆரம்பக் கல்வியைப் பரப்ப வேண்டுமென்று சொன்னால், எல்.டி. வொர்க்ஸ் வேலை நடக்கும் இடத்தில் கட்டாய இலவசக் கல்வியைப் பரப்புவதற்காக ஆரம்ப பாடசாலைகளைக் கட்டுவதற்காகவாவது வேண்டிய தொகையை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுமாத்திரமல்ல, எதிர்க்கட்சியில் ஒருவர் சம்பளச் சலுகையைப் பற்றி குறிப்பிடும்பொழுது, அதிகமாக பணக்காரர்கள்தான் இந்தச் சலுகையைப் பெறுகிறார்கள் என்று உண்மைக்கு மாறாக ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மாணவர்கள் சம்பளச் சலுகை பெறுவதானால், பணக்காரர்கள்தான் பெறுகிறார்கள் என்ற எண்ணம் மிகத் தவறுடையது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஏழை மாணவர்கள்தான் அதிகமாக இந்தச் சலுகையைப் பெறுகிறார்கள். ஏதோ ஒரு சில மாண வர்கள் செல்வம் படைத்தவர்கள் இம்மாதிரி சலுகைகளை பெற்றிருக்க லாம் என்பது தான்.

அதற்கு மேல், தமிழ் ஆசிரியர்களைப்பற்றி பல முறை நான் இந்தச் சபையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அதை மீண்டும் இப்பொழுது வற்புறுத்த விரும்புகிறேன். உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்க்கும் தமிழ் ஆசிரியர்களுக்கு சம்பள விகிதம் குறைவு. செகண்டரி கிரேடு டிரெயினிங் ஆசிரியர்களுக்கு ஆரம்ப சம்பளம் ரூ. 45 அதே சம்பளம்தான் தமிழ் ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பண்டிட் டிரெயினிங் படித்தவர்களானால் 85 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஒரு உயர்நிலைப் பள்ளியிலே 3 தமிழ் ஆசிரியர்கள் வைக்கக்கூடிய அளவுக்கு தமிழ் வகுப்புக்கள் இருந்தாலும்கூட, ஒரு உயர் நிலைப்பள்ளியில் ஒரு பண்டிட் டிரெயினிங் படித்த தமிழ் ஆசிரியரை வைத்துக்கொண்டு 2 தமிழ் ஆசிரியர்களுக்குப் பதிலாக ஒரு அன்டிரையினிங் வித்வானையும், ஒரு செகண்டரி கிரேடு வாத்தியாரையும் வைத்துக்கொண்டு எப்படியாவது தமிழைச் சொல்லிக்கொடுத்து விடலாம் என்ற அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகளிலே பல இடங்களிலே செய்து வருகிறார்கள். நல்ல தமிழைப் படித்த தமிழ் ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுத்தாலேயே சில மாணவர்களுக்கு அவ்வளவு தூரம் தமிழ் அபிவிருத்தி அடைவது கிடை யாது. ஆகையினாலே முதல் பாரத்திலிருந்து எஸ்.எஸ்.எல்.ஸி. வரைக் கும் தமிழ் பாடத்தை எடுக்கக்கூடியவர்கள் டிரெயினிங் பெற்ற தமிழ் ஆசிரியர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு 85 ரூபாய் கொடுக்க வேண்டும். நான்கு ஆண்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிற்சி பெற்று உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக இருக்கக்கூடிய தமிழ் ஆசிரியர்களுக்கு, அம்மாதிரி பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் 45 ரூபாய் சம்பளம் அளிக்கப்படுமானால் நாம் தமிழ் ஆசிரியர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவர்களாக இருக்கிறோம் என்பதையும் இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.





இதற்கு மேல், கல்லூரிகளை எடுத்துக்கொண்டாலும், கல்லூரி தமிழ் ஆசிரியர்களிடையேயும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. அதாவது முதல் கிரேடு லெக்சரர், இரண்டாவது கிரேடு லெக்சரர் என்றெல்லாம் பிரிக்கப்பட்டு பாகுபாடு இருக்கிறது. அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும்பொழுது தமிழ் வித்வானாக இருக்கக்கூடியவர் எம்.ஏ. வகுப்பு வரைக்கும் தொல்காப்பியம் சொல்லிக்கொடுக்கக்கூடிய தகுதி இருக்கிறது. அதே மாதிரி தான் பி.ஏ., பி.ஓ.எல். படித்தவர்களுக்கும் தொல்காப்பியம் சொல்லிக்கொடுக்கும் தகுதி இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் சம்பளம் ரூ. 75 அல்லது 85-ஆக இருக்கிறது. ஏன் இந்த நிலைமை இருக்கிறது என்றால்; பி.ஏ., பி.ஓ.எல். படித்த தமிழ் வித்வான்களுக்கு எம்.ஏ. படிக்கிறவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க தகுதி இருக்கிறது என்று பல்கலைக் கழகம் சொல்லும்பொழுது, அரசாங்கம் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு மட்டும் அவர்களுக்கு தகுதி குறைவு என்பதை எடுத்துக்காட்டுவது பாரபட்சமாக நடந்துகொள்ளக்கூடியதுதான் என்பதை நான் இந்த இடத்திலே ஞாபகப்படுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன். பி.ஏ. வகுப்பு, பி.எஸ்.ஸி. வகுப்பு, பிரி-யுனிவர்ஸிடி வகுப்புக்கு தமிழ் எடுக்கின்ற வித்வான் தமிழ் ஆசிரியர்களுக்கும், தமிழ் எம்.ஏ. படித்த தமிழ் ஆசிரியர்களுக்கும் உள்ள பாட திட்டத்தை அமைச்சர் அவர்கள் வாங்கிப்பார்ப்பார்களேயானால், அவர்களும் தான் 32 புஸ்தகங்களை உருப்போடுகிறார்கள், இவர்களும் தான் அதே புஸ்தகங்களை உருப்போட்டுத்தான் ஆக வேண்டியிருக்கிறது. இப்படி பாடதிட்டத்தில் வேறுபாடு இல்லாமல் இருக்கும் பொழுது, அவர்களிடையே சம்பளத்தில் வேறுபாடு இருக்கக்கூடாது. வேலையை மட்டும் வாங்குவது சரியல்ல. சம்பளமும் கொடுத்து, வேலையையும் வாங்கவேண்டுமென்பதையும் நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ளுகிறேன்.

மேலும், தமிழ்மொழியில் எம்.ஏ. தேறின பிறகு ரிஸர்ச் செய்து "தீஸிஸை" ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்றிருக்கிறது. தமிழில் ஆராய்ச்சி செய்து, அவற்றையெல்லாம் எவ்வாறு எழுத வேண்டுமென்று கருதுகிறார்களோ அந்த அளவுக்கு—தமிழில் எழுதுவது போன்று—ஆங்கிலத்தில் எழுத முடியாது. இப்பொழுது இருக்கின்ற 9 பேப்பர்களில் ஆறு பேப்பர்கள் ஆங்கிலத்தில் தான் எழுத வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதன் மூலமாக தமிழை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதை ஆங்கிலத்தில் எழுதவேண்டும் என்று சொல்வது தவறு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு மேல், மற்ற பாடங்கள்—ஸயன்ஸ், ஆர்ட்ஸ் போன்ற விஷயங்களை—போதிக்கின்ற ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம், மொழி ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்களும் ஐந்து வருடங்கள் படித்து கொண்டு தான் வருகிறார்கள், மொழி ஆசிரியர்களும் ஐந்து வருடம் கஷ்டப்பட்டு படித்துக்கொண்டுதான் வருகிறார்கள். பாடங்களை சொல்லிக்கொடுப்பதில் இரண்டு பேர்களும் ஒரே மாதிரியாகத்தான் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஆகவே இரண்டு பேர்களுடைய சம்பள விகிதமும் சமமாக இருக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதற்கு மேல், கிராமப் புறங்களில் இருக்கின்றவர்கள், இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிற கல்வி புனரமைப்பு திட்டத்தின்கீழ், நல்ல பயனை அடைந்து வருகிறார்கள். நம்முடைய அரசாங்கம் பொது மக்களுடைய ஆதரவை திரட்டி இந்த திட்டத்தை கொண்டுவர முயற்சி எடுத்துவருவதற்கு நான் அரசாங்கத்தை பாராட்டிக்கொள்கிறேன். அதிலும் அரசாங்கத்தினுடைய வற்புறுத்தல் இல்லாமல் பொதுமக்களின் ஆதரவு பல பகுதிகளிலும் இருந்து வருகின்றன. அதன் காரணமாக இப்போதுள்ள திட்டம் வெற்றியும் அடைந்து வருகிறது என்பதை சொல்லிக் கொண்டு மேலும் இந்தத் திட்டத்தை அபிவிருத்தி அடைய செய்வதற்கு நல்ல வாய்ப்பையும், சந்தர்ப்பங்களையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு மேல், நம்முடைய அரசாங்கமானது, மத்தியான உணவு கொடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின் மூலமாக அநேக ஏழைக் குழந்தைகள் பயனடைகிறார்கள். அதில் ஒரு சில குறைகள் இருக்கலாம். அவ்விதம் ஒரு சில குறைகள் இருந்தாலும் அதை

[Sri N. K. Palanisami] [16th March 1959

லுள்ள மக்களிடம் விட்டுவிடக்கூடாது. சர்க்காரே ஏற்றெடுத்து எல்
லோருக்கும் மத்தியான உணவு கொடுக்கக்கூடிய ஒரு முறையில் ஒரு
தொகையை இதற்காக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்னும், சமீபத்தில், எடுகேஷனல் இம்ப்ரூவ்மெண்ட் என்ற திட்டத்தின்
கீழ், ஆசிரியர்களை தொல்லை கொடுக்கிறார்கள். சமீபத்தில், கோயமுத்
11-30 தூரில், முனிசிபல் கமிஷனர், அங்கு இருக்கக்கூடிய பள்ளி ஆசிரியர்கள்
a.m. பெப்ரவரி 3-ம் தேதிக்குள் ஆளுக்கு 5,000 ரூபாய் கலெக்ஷன் செய்யா
விட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முறையிலே அவர்களுக்கு
ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். எடுகேஷன் ரூல்களிலேயே இருக்
கிறது, இம்மாதிரி உபாத்தியாயர்கள் வசூலிக்கக் கூடாது என்று. முனிசி
பல் கமிஷனர் எப்படி உத்திரவு இடலாம் என்பது தெரியவில்லை. இம்
மாதிரியான ஊழல்கள் பல இருக்கின்றன.

இதில் இன்னொன்று என்னவென்றால், ஒரு உத்திரவில் இந்த திட்டம், டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர்களது திட்டம், அதற்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. பொதுக் காரியமாக இருக்கிறபோது இதில் ஏன் ஒரு தனிப்பட்ட இலாகாத் தலைவரின் பெயரைப் போடவேண்டுமென்று தெரியவில்லை. இம்மாதிரி பல குறைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri T. M. NALLASWAMI:** கனம் சபாநாயகர் அவர்களே கனம் நிதியமைச்சர் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை, ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையானது, எந்த லட்சியத்தை நிறைவேற்ற கொண்டு வரப்பட்டுள்ளதோ, அந்த லட்சியமானது நல்ல முறையிலே நிறைவேற்றப் படவேண்டுமானால் நம் நிர்வாகத்திலுள்ள பல குறைகளைத் திருத்திக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆரம்பப் பள்ளிக் கூடங்களுக்கு என்று சுமார் ரூபாய் 6 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் பாராட்ட தக்கது. 300 பேர் ஜனத்தொகைகொண்ட ஊர்களிலெல்லாம், ஒரு பள்ளிக்கூடம் இருக்கவேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். இது நாட்டிலுள்ள அறியாமையைப் போக்க எடுத்துக் கொள்ளப்படும் அறிய முயற்சி. அப்படிப் பள்ளிக்கூடங்கள் கொடுக்கும் போது, ஒன்றுக்கொன்று முரண்பாடு ஏற்பட்டுத் தொல்லை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, நிறையப் பள்ளிக்கூடங்கள் ஏற்படும் என்ற காரணத்தால், நிறைய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க, பயிற்சிப் பள்ளிகளை நாம் ஆரம்பித்தோம். இப்பொழுது நாட்டில், இருக்கும் நிலைமை என்னவென்றால், பள்ளிக்கூடங்களின் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் இருப்பதால், ஆசிரியர்களிடையே, வேலையில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது சர்க்கார் கவனிக்கதக்க விஷயம். இந்த நிலையிலே, இன்னும் அதிகமாக பள்ளிக்கூடங்களை அதிகரிக்க இருக்கும்போது, எந்த அளவுக்கு ஆசிரியர்களை அதிகப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். ரொம்ப அதிகமாக உற்பத்தி செய்வதில் உபயோகம் இல்லை. என்னைப் போன்ற பிரதிநிதிகள் அதிகப்படியான வேலையில்லாத ஆசிரியர்களைப் பார்க்கிறோம். ஆசிரியர்களிடையே வேலையில்லை என்ற குறையைச் சொல்லுகிறோம். இந்த பயிற்சிப் பள்ளிக்கூடங்களையே மூடவேண்டியிருக்கும். வேலை கொடுக்கும் அளவுக்கே பள்ளிகளை அதிகப்படுத்த வேண்டும். அம்மாதிரிப் பொறுப்பான முறையிலே இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தப் பயிற்சிப் பள்ளிகளில், தேர்தல்கள் ஆண்டுதோறும், நடைபெறுகிறது. பல கனம் அங்கத்தினர்கள் இந்தத் தேர்தல் நல்ல முறையிலே நடைபெறவில்லை என்று குறை கூறினார்கள். என்னைப் பொறுத்த வரையில்—நான் ஒரு தேர்தல் கமிட்டி அங்கத்தினன்—நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த தேர்தல்கள் கூடுமானவரையில் நியாயமான முறையிலேயே நடைபெறுகிறது என்றுதான். ஒரு பள்ளிக்கு 50 பேர் வேண்டுமென்றால், வரக்கூடிய மனுக்கள் 500, ஆகவே,



16th March 1959] [Sri T. M. Nallaswami]

தேவைக்கு மேல் மனுக்கள் வரும்போது, பல மனுக்கள் தள்ளப்படுகின்றன. இந்த நிலையில் புகார்களுக்கும் இடம் கொடுக்காமல் செய்தாலும், குறைபாடுகள் ஏற்படுவது இயல்பு. அதையேதான் புகார்களாகக் கூறுகிறார்கள் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, பள்ளி அபிவிருத்திக்காக கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டம், ஒரு நல்ல திட்டம். சமீப காலத்தில், மூன்று நான்கு ஆண்டுகளில், ஏராளமான பள்ளிகளை நாம் திறந்திருக்கிறோம். இவைகள், சர்க்காரே, கட்டிடம் அமைத்துக் கொடுப்பதானால், அதிகப்படியான பள்ளிகள் வந்திருக்க முடியாது. மக்களே முன்வந்து உதவி செய்ததனால்தான் அதிகப்படியான பள்ளிகள் வரமுடிந்தது. பொது மக்கள் அபிவிருத்தி திட்டத்தை ஆர்வத்துடன் செயல் படுத்துகிறார்கள் என்று எண்ணுகிறேன். அது வெற்றிகரமாக நடைபெறுகிறது; நடைபெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

எங்கள் இராமத் தலைமை ஆசிரியர் ஒரு நாள் என்னிடம் வந்து சொன்னார்கள். "வேனிற் காலம் வந்துவிட்டது; கிணற்றில் தண்ணீர் அதிகப்படியானதாக இல்லை. மாணவர்களுக்கு தண்ணீர் கொடுக்கக் காணாது" என்று. தண்ணீர் கொடுக்க வழி செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். அது ஜில்லா போர்டு பள்ளி. அவர்களுக்கு எழுதினால் தண்ணீர் கிடைக்காது. கிடைத்தாலும், அதற்குள் வேனிற்காலம் போய் விடலாம் என்று அவர்களுக்குத் தெரியும். ஆகவே, உள்ளூரிலேயே முயற்சி செய்தார்கள். அந்த முயற்சியின் பலனாக, வேறு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டு வேலை செம்மையாக நடந்தது. அதேமாதிரி, ஒரு ஆரம்ப பள்ளி தலைமை ஆசிரியர், என்னிடத்தில் வந்து, "எங்கள் பள்ளிக்கூடக் கட்டிடத்தை பாருங்கள். தலையில் விழுந்துவிடுமோ என்ற நிலையில் இருக்கிறது." என்று சொன்னார். எங்கள் எல்லோரையும் அழைத்துக் காட்டினார்கள். உண்மையாகவே, கட்டிடம் மோசமாக இருந்தது. அவர் செய்த முயற்சியின் பலனாக, இன்று, அந்தக் கட்டிடம் புதிப்பிக்கப்பட இருக்கிறது. பல பொது மக்கள் முன்வந்து உதவினார்கள். ஆசிரியர்கள் பொதுவாக எந்த அரசியல் கட்சி சார்பிலும் இல்லாமல், நேர்மையாகச் செயலாற்றி வரக்கூடியவர்களாக இருந்தால், நல்ல மதிப்புக்குப் பாத்திரமானவர்கள். ஆகவே, இந்த பள்ளி அபிவிருத்தித் திட்டம் நன்றாக செயல்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ அன்பழகன் சொன்னது போல் அவர்கள் பிச்சை எடுக்கும் நிலையில் இல்லை. ஆசிரியர்கள், மதிப்புடன்தான் வாழ்கிறார்கள், செயல் படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இராமங்களிலே, ஆரம்பிக்கப்பட்டுள்ள பள்ளிகளில், நடைமுறையில் உள்ள குறைகளை, கல்வித்துறை தலைவர் அவர்களும், அமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இராமங்களிலே, இரண்டு ஆசிரியர்கள் உள்ள பள்ளிக்கூடமாக இருந்தால் அதில் ஒருவர் பெண்ணாக இருந்தால், மருத்துவ காலத்தில், சில மாதங்களுக்கு அது ஓராசிரியர் பள்ளியாகவே இருந்துவிடுகிறது, சுமார் 80 பிள்ளைகளை ஒரே ஆசிரியர் கவனிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இவை இதுகாறும் ஜில்லா போர்டு, பெரிய நிர்வாகமாக இருந்த காரணத்தால் இவை ஏற்பட்டிருக்களாம். ஆனால், பஞ்சாயத்து யூனியன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, கவனிக்க ஆரம்பித்தால், இந்தக் குறைகள் நிவர்த்திக்கப்படலாம் என்று எண்ணுகிறேன்.

பள்ளிகளை அதிகப்படுத்துகிறோமே தவிர, அவைகளைக் கண்காணிக்கப் போதிய அளவு அதிகாரிகளை அதிகப்படுத்தவில்லை. என் தாலுகாவான கரூர் தாலுகாவில், இரண்டு டெபுடி இன்ஸ்பெக்டர்கள். ஒரு ஸீனியர், அவருக்கு கீழ் ஒரு உதவி இன்ஸ்பெக்டர் என்று இருந்தார்கள். இது மூன்று வருஷங்களுக்கு முன்பு. தாலுகாவில் 87 பள்ளிகள் இருந்த போது இருந்த நிலை. இப்பொழுது, 300 பள்ளிக்கூடங்களுக்கு மேல் இருக்கின்றன. ஆனாலும், இப்போதும் அதே இரண்டு டெபுடி இன்ஸ்பெக்டர்கள்

இருக்கிறார்கள். ஆகையால் அவர்களால், இந்த 300-க்கு மேற்பட்ட பள்ளிகளையும் செவ்வனே கண்காணிக்க முடியவில்லை. ஆகவே, இந்த உத்தியோகஸ்தர்களை, தேவைக்கு ஏற்றவாறு அதிகப்படுத்தவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பாட புத்தகங்கள் விஷயமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப் புத்தகங்களைப் பல்வேறு தனியார்கள், கம்பெனியார்கள் வெளியிட்டு, டெக்ஸ்ட் புக் கமிட்டியில் அப்ரூவல் வாங்கி, பள்ளிகளில் வைக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது. இலாபம் கிடைக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி சந்தேகமே இல்லை. ஆகவே, இந்த இலாபம், சர்க்காருக்கு வரக்கூடாது என்று சொல்ல முடியாது. அந்த மாதிரி எண்ணம் தவறானது அல்ல. ஆனால் சிலர் தவறான எண்ணத்தில் இருக்கிறார்கள். 10-வது வகுப்பிற்கு, உயர்நிலை பள்ளிப் பரீட்சைக்கு, எஸ்.எஸ்.எல்.சி.-க்கு சர்க்கார் வெளியிட்ட புத்தகத்தில் தவறுகள் அதிகமாக இருந்ததால், சர்க்கார் எடுத்துக்கொண்டால் எல்லாமே இப்படித்தான் ஆகும் என்று பயப்படுகிறார்கள்.

ஆகவே இம்மாதிரி திட்டங்களை சர்க்கார் எடுத்து நடத்தும்போது அவைகள் நல்ல திட்டங்களாக இருந்தால் அவைகளில் நல்ல முறையில் கவனம் செலுத்தி அமுல் நடத்தவேண்டும். நல்ல திட்டங்களில் தவறுகள் இருந்தாலும் அந்த திட்டமே தோல்வி அடைந்து விட்டதாகக் கருதப்பட்டுவிடும். ஆகவே நல்ல திட்டங்களில் அதிகப்படியான கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது உயர் நிலைப்பள்ளிகளில் பல நோக்குப் பள்ளிகளாக மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. அது ரொம்பவும் வரவேற்கத்தக்கது. சாதாரண பள்ளிகளில் மாணவர்கள் படித்து விட்டு வெளியே வந்தால் அவர்கள் சாதாரணமான க்ளார்க்குகள் வேலைக்குத்தான், அதாவது, வெறும் எழுத்தாளர்களாகத்தான் வேலைப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. வேறு எந்த உத்தியோகத்திற்கும் அவர்கள் லாயக்கு இல்லாதவர்களாகி விடுகிறார்கள். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்த பிறகு வெளியே வந்தால் அவர்களுக்கு உத்தியோகம் பார்க்கத்தான் முடியுமே தவிர வேறு எந்த விதமான தொழிலும் பார்க்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்காகத்தான் இப்பொழுது பல நோக்குப் பள்ளிக்ள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் படிப்பு முடிந்த பிறகு ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடுவதற்கு லாயக்குள்ளவர்களாக மாணவர்கள் ஆகிவிடுகிறார்கள். அந்த அடிப்படையில் தான் இப்படிப்பட்ட பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருஷத்தில் கூட தமிழ் நாட்டில் பூராவுக்கும் 50 பள்ளிக்கூடங்களில் அத்திட்டம் விஸ்தரிக்கப்பட இருக்கின்றது. இப்படிப்பட்ட பல நோக்குப் பள்ளிகள் வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. அப்படி ஆரம்பிக்குபோது அதில் இஞ்சினீயரிங் பகுதி, செக்ரடேரியல் பகுதி, விவசாயப் பகுதி இப்படியெல்லாம் பல பகுதிகளை ஆரம்பிக்கப்போகிறார்கள். ஆனால் இஞ்சினீயர் பகுதிக்கு வேண்டிய ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. சில பள்ளிக்கூடங்களில் இந்தப் பகுதி இருந்தும் அந்த வகுப்பில் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். இப்பொழுது எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை வரப்போகிறது. அப்படி ஆசிரியர்கள் இல்லாமல் இருந்து மாணவர்கள் அந்தப் பகுதிக்கு சேர்ந்திருந்தவர்கள் எப்படி பரீட்சை எழுதப்போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

பைபர்கேடட் கோர்ஸ் அதாவது பல்நோக்குப் பள்ளிகளை அமைக்க வேண்டும் என்று நாம் ஜில்லா போர்டுகளுக்கு கிராண்டு கொடுத்தால் அந்தப் பணத்தை அவர்கள் சரியான முறையில் செலவு செய்யாததால் அது வீணாக்கப்பட்டிருக்கிறது. கட்டிடங்களைக் கட்டாமலேயே பணத்தை பயன்படுத்திக்கொள்ளாமல் விட்டுவிடுகின்றார்கள். கட்டிடங்கள் கட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் கட்டிடங்களைக் கட்டுவதற்கு கண்ட்ராக்டர்களுக்கு விடப்போனால் கண்ட்ராக்டர்கள் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏற்றுக்கொள்வது இல்லை. காரணம் அவர்களுக்கு சரிவர ஜில்லா போர்டிலிருந்து பணம் வராமல் இருப்பதால் அவர்கள் காண்ட்ராக்ட் எடுத்துக்





கொள்ள முன் வரமாட்டேன் என்று சொல்லுகிற காரணத்தால் பல கட்டிடங்கள் கட்டப்படாமலேயே இருக்கின்றன. அதன் காரணமாக அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்ட கிராண்ட்கள் எல்லாம் விரயமாக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கு அந்த கிராண்ட் பணம் உபயோகப்பட முடியாத நிலைமையில் போய் விடுகிறது.

(Mr. Speaker rang the bell.)

**Sri T. M. Nallaswami:** One minute more, Sir.

இன்னும் அதிகப்படியான கருத்துக்களை இந்த மானிய கோரிக்கையின்கீழ் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. தலைவர் அவர்கள் முடித்துவிடவேண்டும் என்று சொல்வதால் இதை முடித்துக்கொள்ளுகிறேன். ஆகவே இம்மாதிரியான குறைகளை நிவர்த்திக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதுபோன்று பல யோசனைகளை என்னைக் கேட்டால் அவைகளைச் சொல்வதற்கு தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER:** ஒரு விண்ணப்பம். கனம் அங்கத்தினர்கள் பேசுவதை சபாநாயகர் நிறுத்த வேண்டும் என்று சொல்லவில்லை. இந்த மானியத்திற்கு என்று கொடுக்கப்பட்ட நேரம் நான்கு மணிகள்தான். பதில் சொல்வதற்கு கனம் அமைச்சருக்கு ஒரு மணி நேரம் வேண்டியதாக இருக்கிறது. எதிர் கட்சி தலைவர்களுக்கு அரை மணி நேரம் வேண்டியதாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியில் பதினைந்து பேர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இருக்கக்கூடிய நேரத்தை எப்படி பிரிப்பது என்பது தெரியவில்லை. ஆகவே தவறு என் பேரில் இல்லை. அரசாங்கம் கொடுத்திருக்கக்கூடிய நேரம் நான்கு மணிகள்தான். காலத்தை அதிகமாகக் கொடுத்து பேசச் சொன்னால் எனக்கு ஆட்சேபனை இல்லை. அதிகமாக அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்று பெயரைக் கொடுத்துவிட்டு நேரத்தை குறைவாகக் கொடுத்தால் சபாநாயகரால் ஒன்றும் செய்யமுடியாது. ஒன்று நேரத்தை அதிகமாக்க வேண்டும், இல்லாவிட்டால் அங்கத்தினர்கள் குறைவாக பேச முன் வரவேண்டும். அதனால் சபாநாயகர் பேரில் குற்றம் சொல்லி பிரயோசனம் இல்லை.

**Sri T. M. NALLASWAMI:** கனம் சபாநாயகர் மன்னிக்கவேண்டும். நான் குற்றம் சொல்லவில்லை. எப்பொழுதாவது அபூர்வமாக பேசுகிறவர்களுக்கு அதிகப்படியாக பேசுவதற்கு நேரம் கொடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதனால் தான் கொஞ்சம் அதிகப்படியான நேரம் கேட்கிறேன்.

**Mr. SPEAKER:** அதற்கு $1\frac{1}{2}$ மணிக்கு முடிக்காமல் 2 மணி வரையில் உட்காருவதற்கு அனுமதித்தால் அதிகப்படியான நேரம் கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. நேரம் குறைவாக இருப்பதால்தான் பேசும் நேரத்தை குறைக்க வேண்டியதாக இருக்கிறது.

**Sri T. M. NALLASWAMI:** நிறுத்தவேண்டும் என்று சொல்வதானது பேசுவதை தடை செய்கிற மாதிரி இருக்கிறது என்று தான் நினைக்கிறேன்.

**Mr. SPEAKER:** அது சபாநாயகருடைய குற்றம் அல்ல. கொறடா குறைவான பெயர்களைக் கொடுத்தால் அதற்குத்தக்கபடி பேசுவதற்கு அனுமதிக்கலாம். அதிகப்படியான பெயர்களைக் கொடுத்தால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. இப்பொழுது இருக்கிற நிலையில் கடைசியில் பேசக்கூடியவருக்கு ஐந்து நிமிஷங்கள்தான் வருமோ என்று கூடத் தோன்றுகிறது.

**SRI S. RAMASAMI NAIDU :** கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் என்ற பழம் தமிழ் இலக்கியம், தொல்காப்பியம் போன்றவைகள் இவைகள் தமிழ் பற்றுக்கொண்டுள்ளவை என்பது பாராட்டத்தக்கது. தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, சிலப்பதிகாரம் போன்றவைகள் இருந்த காலம் வேறு, இன்றைக்கு நாம் இருக்கக்கூடிய காலம் வேறு என்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். பழைய நூல்கள் ஆராய்ச்சிக் குறியவைகள் என்றும் பழங்காலத்தில் தமிழர் எந்த வகையில் பயனடைந்தார்கள் என்பதும் அந்த நூல்கள் அந்தக் காலத்திற்கு ஆதாரமானது. அதை இந்தக் காலத்து கல்விக்கு எடுத்துக் காட்டவேண்டும் என்று சொல்வது ஒரு வகையிலும் பொருந்தாது என்பதை முதலில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வியானது தமிழில் இருக்கவேண்டுமா; அல்லது இருக்க வேண்டாமா தமிழ் கல்வியாக இருக்க வேண்டுமா என்பதை நாம் ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வரவேண்டும். இந்தக் கல்வி தமிழிலேயே போதிக்கப்பட வேண்டும் என்றுதான் சத்தம் போடப்படுவதாக இருக்கிறதே தவிர தமிழிலேயே கல்வி இருக்கவேண்டும் என்று எண்ணுவதாகத் தெரியவில்லை. இன்றைக்கு சர்வ கலாசாலைகளில் உயர்ந்த படிப்புப் படிக்கிறவர்கள் பி.எ., எம்.எ., என்று சொல்லிக்கொண்டு பட்டம் பெற்று வருகிறார்கள். சாதாரணமாக அந்தப் பட்டங்களைக் குறிப்பிடும்போது அவைகள் ஆங்கில பி.எ., ஆங்கில எம்.எ. என்றுதான் கருதக்கூடியதாக இருக்கிறது. அதைப்போலவே தமிழ் பி.எ. தமிழ் எம்.எ., என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கவேண்டும். மேல்நாடுகளில் சாதாரணமாக ஆங்கிலத்தில் தான் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதனால் சாதாரணமாக பி.எ. என்று சொல்லி விட்டால் அது ஆங்கில பி.எ.வைத்தான் குறிப்பிடும். அப்படி இல்லாமல், பி.எ., எம்.எ. என்று சொன்னவுடனேயே அது தமிழ் பி.எ., தமிழ் எம்.எ.யைக் குறிப்பிடுவது போன்ற முறையில் கல்வி அமையவேண்டும். அதை அனுசரித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆகவே இன்றைக்கு ஆங்கிலக் கல்விக்கு ஆதரவு கொடுப்பதுபோன்று தமிழ் கல்விக்கும் ஆதரவு கொடுக்கவேண்டும். அது ஒரு வகையில் பொருந்தாது என்றும் அதனால் ஆங்கிலத்திலேயே போதிக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்; அது வேறு விஷயம். தமிழிலேயே எல்லா விஷயங்களும் போதிக்கப்பட வேண்டும், அது தமிழ் கல்வியாக இருக்கவேண்டும், இதற்கு எல்லோரும் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஆரம்பக் கல்விக்கும் மற்றும் அதற்கு மேற்பட்டு உள்ள கல்விக்குத் தொடர்பு எப்படி இன்றைக்கு இருக்கிறது என்பதை நாம் ஆராயவேண்டும். சர்க்காருடைய அறிக்கையை படித்துப் பார்த்தால் இவைகளுக்குள் ஒரு தொடர்பு இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தொடர்பை முழு மூச்சுடன் புகுத்துவதற்குச் சந்தர்ப்பம் இல்லாத காரணத்தால் ஏழாவது வகுப்பு ஆரம்பக் கல்வியிலிருந்து 8 முதல் 11 வரையிலுள்ள உயர்நிலைக் கல்விக்கு ஒரே மூச்சாக எல்லா பள்ளிக்கூடங்களிலும் ஏழாவது வகுப்புக்குமேல் 8 முதல் 11-வது வகுப்பு வரையில் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் ஒரு முன்னேற்றம் அடையலாம் என்று வைத்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் எட்டாவது வகுப்பு முதற்கொண்டு பள்ளிகளில் குழந்தைகள் இல்லாமல் திண்டாடுகிற நிலைமையில் இருக்கிறது. ஆகவே ஒன்று முதல் பாரம் முதற்கொண்டு தொடர்பாக இருக்கவேண்டும் அல்லது ஏழாவது வகுப்பு வரையில் படித்து விட்டு எட்டாவது வகுப்பிலிருந்து படிக்க உயர் நிலைப் பள்ளிகளில் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த முறையை இந்தக் கல்வி வருஷ ஆரம்பித்திலிருந்தே ஆரம்பித்து விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஆசிரியர்களைப்பற்றி ஒரு வார்த்தை. சில ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற பிறகு கூட அவர்களுக்குத் தொழில் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு இடமே இல்லை. சென்ற வருஷத்தை விட, அதற்கு முந்திய வருஷத்தை விட இந்த வருஷம்





பள்ளிகளில் பிள்ளைகள் இரண்டு பங்கு அதிகமாகச் சேர்ந்து படித்து வருகிறார்கள். இப்பொழுது குழந்தைகளுக்குப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களிலுள்ள பெற்றோர்களுக்கும் பிள்ளைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருப்பதால் அதிகப்படியான பிள்ளைகள் இப்பொழுது படிக்க முன் வந்திருக்கிறார்கள். இப்பொழுதுள்ள நிலைமையில் இருபது பிள்ளைகளுக்குக் குறையாமலும் 35 பிள்ளைகளுக்கு அதிகமாக இல்லாமலும் இருந்தால் அந்த வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த 35-க்கு மேல் இரண்டு பிள்ளைகள் இருந்தாலும் அதிகப்படியான ஒரு ஆசிரியரை நியமிக்கலாம் என்ற வாய்ப்பு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே முன்னைவிட இப்பொழுது அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஒரு ஆசிரியர் இருந்த இடத்தில் இப்பொழுது இரண்டு ஆசிரியர்கள் வேலை செய்யக்கூடிய வாய்ப்பை சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற குறையில்லை. ஏனென்றால் கிராமங்களில் குழந்தைகளும் அதிகப்படியாகப் பள்ளிகளில் சேர்ந்து படிக்க முற்பட்டிருக்கிறார்கள்.

மற்றும் ஆசிரியர்களுடைய கவனக் குறைவாலும், பெற்றோர்களுடைய கவனக் குறைவாலும் முதல் வகுப்பில் 35 பிள்ளைகள் இருந்தால் ஏழாவது வகுப்பில் ஐந்தாறு பிள்ளைகள் தான் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஒரு ஊரிலுள்ள ஆசிரியரும் பெற்றோர்களும் ஒத்துழைத்தால் இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் ஏழாவது வகுப்பில்கூட 35 பிள்ளைகளுக்கு 30 பிள்ளைகளாவது இருக்கக்கூடிய நிலையை உண்டு பண்ணலாம். அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. முன்பு இருபது பிள்ளைகள் இருந்தால் ஐந்தாவது வகுப்பில் இப்பொழுது முப்பது பிள்ளைகள் இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதேபோல் அந்தப் பள்ளியில் 80 பிள்ளைகள் இருந்தால் இப்பொழுது 140 பிள்ளைகள் இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இரண்டு மூன்று ஆசிரியர்கள் அதிகமாக வேலை செய்யக்கூடிய வாய்ப்பு இப்பொழுது இருக்கிறது. இதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள ஆசிரியர்களும் பெற்றோர்களும் அறிவாளிகளாகி ஒத்துழைக்க முற்படவேண்டும். இப்படி அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டால் அவர்களுக்குப் போதுமான வேலையும் ஊதியமும் கிடைத்துக்கொண்டே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சர்க்காருடைய நோக்கமும் அதுதான். இன்றைக்கு ஆசிரியர்கள் முயற்சி செய்து பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கவேண்டும். அவர்களுடைய தொழில் என்ற எண்ணத்தில்தான் இன்றைக்கு இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை ஆசிரியர்கள் உணர்ந்து பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு இன்னொரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இன்றைக்கு உயர்நிலைப் பள்ளியை எடுத்துக்கொண்டால் 150 நாட்கள் தான் வேலை நாட்கள். வருஷத்தில் மூன்று முறை பரீட்சை நடக்கிறது. அதற்குப் பிறகு விடுமுறை நாட்கள். பள்ளி ஆரம்பத்தில் புத்தகம் வாங்குவதற்குள் 10 நாட்கள் கழிந்துவிடும். இப்படிப் பல நாட்கள் கழிந்த பிறகு 120 நாட்கள் தான் படிப்புக்குத் தேறும். ஒரு ஆசிரியர் ஒரு நாளைக்கு 3 மணி நேரம் வீதம் ஆண்டொன்றுக்கு 360 மணி நேரந் தான் வேலை செய்யவேண்டி இருக்கும். ஆரம்பப் பள்ளிகளாக இருந்தால் 420 மணி நேரம் வேலை செய்யவேண்டியிருக்கும். இவ்வளவு குறைந்த அளவில் வேலை செய்யும் இவர்கள் ஓய்வு நேரங்களில் மக்களிடம் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும். தாங்கள் கற்றுக்கொடுக்கவேண்டிய விஷயங்களைப் பற்றித் தீர ஆலோசித்து நல்ல முறையில் பாடங்களைக் கற்றுத் தர பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சி பூரணமாகப் பலன் பெறும். அப்பொழுதுதான் அதனால் பிரயோஜனம் ஏற்படும். ஆசிரியர்கள் தாங்கள் பள்ளியில் வேலை செய்யக்கூடிய நேரத்தைத் தவிர மீதி நேரங்களில் தாங்கள் ஊருக்குச் சேவகர்கள் என்பதை மறந்து, ஊருக்காக உழைக்கவேண்டியவர்கள் என்பதை மறந்து தங்களுடைய சம்பளம் வழிய மக்களிடம் இருந்து பெறுவது என்பதை மறந்து மணிக்கணக்கைப் பார்த்துக் கொண்டிருப்ப தானது, இன்னும் அவர்கள் தங்கள் தொழிலைச் சரியானபடி ஊக்கத்

[Sri S. Ramasami Naidu] [16th March 1959

துடன் செய்யவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. ஆசிரியர்கள் அவ்வாறு
இருப்பது அவர்கள் தாங்களாகவே தங்கள் நிலையைத் தாழ்த்திக்கொள்ளு
கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது என்பதை வற்புறுத்திக் கூற
விரும்புகிறேன்.

மத்தியான உணவைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லவிரும்பு
கிறேன். சில ஊர்களில் சில தனவந்தர்கள் சாதாரணமாகச் செய்து
கொண்டிருந்த திட்டம் இன்று பரவலாக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும்
நடத்தப்பட்டு வருகிறது. ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி செயலாற்றிக்
கொண்டு வருவதென்றால் அது விசேஷமான காரியந்தான். எல்லோரும்
பல நல்ல திட்டங்களைப் பற்றி எண்ணுவர். ஆனால் அதைச் செய்ய
முடியுமோ முடியாதோ என்று சந்தேகப்பட்டுக்கொண்டே இருப்பர்,
கல்வித் துறை டைரக்டர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் சேர்ந்து
கொண்டு வந்த இந்தத் திட்டம் மிகவும் போற்றத்தக்கது. இன்று பல
பள்ளிக்கூடங்களில் மத்தியான உணவு ஏழைப் பிள்ளைகளுக்காக கொடுக்
கப்பட்டு வருகிறது. இந்த வகையில் கிராமங்களுக்கும் சிறிது வசதி செய்து
கொடுக்கச் சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். எப்படி முடியும் என்று கேட்கலாம். உச்ச வரம்பு வரும்
காலத்தில் அதன் மூலமாகக் கிடைக்கும் உபரி நிலங்களில் இருந்து கிடைக்
கும் உணவுப் பண்டங்களை முதலில் ஏழை மாணவர்களுக்குக் கொடுக்க
வேண்டுமென்ற ஒரு பிரிவைச் சட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக இன்று எல்லா ஊர்களிலும் பஞ்சாயத்துக்கள் ஏற்
பட்டு விட்டன. அந்தப் பஞ்சாயத்துக்கள் மத்தியான உணவுக்காக ஏதா
வது வரி விதிக்க வேண்டுமென்றால் இப்பொழுது இருக்கக்கூடிய சட்டப்படி
அவ்வாறு செய்வதற்கு வழி இல்லை. அந்தப் பஞ்சாயத்துகள் மத்தியான
உணவுக்காக வரி விதிக்க அனுமதி கொடுக்கும் வகையில் சட்டத்திலே
திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது பள்ளிச் சீரமைப்புத் திட்டம் நடக்கிறது. அந்தச் சீர
மைப்புத் திட்டம் சட்டசபை அங்கத்தினர்கள் கலந்து கொள்ளாமல் நடக்
கிறது என்று சொன்னார்கள். அது ஒன்றும் பெரிய காரியமல்ல.
உண்மை ஊழியர்கள் அவர்களாகவே சேர்ந்துகொள்ளுவார்கள். நம்
மக்கள் எவ்வளவு தாராளமாகப் பள்ளிகளின் குறைகளைத் தீர்க்க முன்
வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது ஒருவர் இருவர் கொடுத்ததை
வைத்துக்கொண்டு இந்தத் திட்டத்தைப் பரவலாக ஆக்கி மக்களுடைய
ஆர்வத்தைத் தூண்டினால் மேலும் பள்ளிகளுக்கு வேண்டிய வசதிகளை
நாம் பெற முடியும். இந்தத் திட்டத்தை நடத்தி வருகிற இலாகாவுக்கும்,
அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்கள். லட்சக்கணக்கான
பொருள்கள் பள்ளிக் கட்டிடங்களுக்காக தாராளமாக கிராம மக்கள்
கொடுத்து வருகிறார்கள். வருஷம் ஒரு தடவை இந்த இயக்கத்தை மேற்
கொண்டு கிராமத்தில் குறைகள் இருக்கும் பள்ளிகளைச் சீரமைப்பு செய்ய
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



16th March 1959]

SRI M. P. SUBRAMANIAM : அவைத் தலைவர் அவர்களே,
இந்தக் கல்வி மானியத்தின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரரேபணையை
ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

"இந்தக் கல்வித் திட்டம் அமைப்பதன் நோக்கம் ஜாதியற்ற, வர்க்க
மற்ற சமுதாயத்தை அமைப்பது" என்று சென்ற ஆண்டும் இந்த
ஆண்டும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது வரவேற்கத் தக்கது. அதற்குத்
தகுந்த வகையில் அப்படிப்பட்ட திட்டங்கள் அமைந்திருக்கின்றதா என்பது
சிந்தனைக்குரிய விஷயம். இரண்டாவதாக, இந்தக் கல்விக்காக ஒதுக்கப்
பட்ட தொகை ஆண்டுதோறும் கூடுதலாகிக் கொண்டிருக்கிறதா என்று
பார்த்தால் சென்ற ஆண்டு 20 சத விகிதமாக இருந்தது, 9 சத விகிதமாகக்
குறைந்திருக்கிறது. ஆரம்பக் கல்விக்குக் கடந்த ஆண்டை விட 4 லட்சம்
ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே பார்த்
தேன். அதற்கு என்ன காரணம் என்று என்னால் புரிந்துகொள்ள
முடியவில்லை.

குறிப்பாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது
என்று சொல்லுவதில் தவறில்லை. அவ்வாறு இருப்பதற்கு முக்கியமாக
இருக்கும்படியான காரணம் மாணவர்கள் எண்ணிக்கையையும் ஆசிரியர்
கள் எண்ணிக்கையையும் விகிதாசாரப்படி பார்த்தால் ஆசிரியர்கள் எண்
ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஒரு ஆரம்பக்
கல்வி ஆசிரியர் 35 மாணவர்களைக் கண்காணிக்க வேண்டி இருக்கிறது.
வீட்டில் 5 பிள்ளைகளை வைத்துக்கொண்டு சமாளிப்பதே பெரிய காரியமாக
இருக்கும்போது ஒரு ஆசிரியர் 35 மாணவர்களைக் கண்காணிக்க வேண்டு
மென்றால் உண்மையிலேயே அது மிகவும் கஷ்டமான காரியம். அவர்
களைக் கண்காணிப்பதுதான் பெரிய பிரச்சனையாக இருக்குமே தவிர பாடம்
ஒன்றும் சரியான முறையில் சொல்லிக் கொடுக்க முடியாது. ஆகவே
நல்ல முறையில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நடைபெற பள்ளி ஆசிரியர்
களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கூற
விரும்புகிறேன்.

மற்றும் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற
ஆசிரியர்களும், ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் வேலை
பார்த்து வருகிறார்கள். நாட்டாண்மைக் கழகப் பள்ளிக்கூடங்களில் பல
ஹையர் கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 2, 3 வருஷ காலமாக வேலை
பார்த்து வந்தார்கள். ஆனால் புதிதாக செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்
வந்து விட்டால் அவர்களை மாற்றி விடுகிறார்கள். பள்ளிக்கூட ஆசிரியர்களை
மாற்றுவதை ஒரு சந்தர்ப்பத்தில் செய்தால் நல்லது. ஒரு ஆண்டு முடிந்த
வுடன் அவர்களை மாற்றுவது நல்லது. இடையில் மாற்றவேண்டுமானால்
அவர்கள் கல்வி இலாகாவைக் கலந்துகொண்டு செய்ய வேண்டும் என்ற
புகார் எங்கள் மாவட்டத்தில் கூறப்பட்டது. அது பற்றி ஆலோசனை செய்து
இறுதியில் கல்வி இலாகாவைக் கலந்து கொள்ளாமலேயே கூட இடையில்
அவர்களை மாற்றலாம் என்று சொல்லி விட்டார்கள். அதனால் பள்ளிகள்
நல்ல முறையில் நடக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக உயர்நிலைப் பள்ளிகளில், எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட் 12 noon.
சைக்குப் போவதற்கு தேர்வுப் பரிட்சை நடத்தி மாணவர்களை நிறுத்தி
விடுவதாகக் கேள்விப்படுகிறேன். பல பள்ளிகளில் இம்முறை இல்லை.
சில பள்ளிகளில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது சரியல்ல என்று கல்வி
இலாகா டைரெக்டர் கூட அடிக்கடி வெளியில் பேசி வருகிறார்கள்.
வெளியில் பேசுவதைவிட அமைச்சர் அவர்களும், கல்வி இலாகா அதிகாரி
அவர்களும் இதைப்பற்றிக் கலந்து கொண்டு இது அவசியமா, என்று
பார்த்து அவசியம் இல்லையென்றால் இம்முறையை அடியோடு ஒழித்து
விடுவதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆசிரியர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தின்கீழ்
மத்திய அரசாங்கம் மொத்தச் செலவில் 75 பர் சென்ட் ஒத்துக்கொள்ளக்
கூடிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, அதன் கீழ் கட்டப்படுகிற வீடுகள்
கிராமாந்திரங்களிலே இருக்கக் கூடிய ஜில்லா போர்டு பெண் ஆசிரியர்
களுக்கு ஒதுக்கப்படும் என்பதாகத் தெரிகிறது. குறிப்பாக 1958–59-ம்

வருஷத்திற்கு மத்திய சர்க்கார் 4.95 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் இந்த இனத்திற்கு நமது மாநில சர்க்கார் 1.65 லட்சம் ஒதுக்கியிருப்ப தாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த இனத்தில் இதுவரை எவ் வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்கிற புள்ளி விவரம் எதுவும் கொடுக்கப்படவில்லை. சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த மாதிரியான திட்டத்தின்கீழ் எந்த இடத்திலும் வீடுகள் கட்டப்பட்டிருப்ப தாகத் தெரியவில்லை. ஆகவே இனத்தில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக் கின்றன, எந்த எந்த மாவட்டத்திலே கட்டப்பட்டிருக்கிறது என்கிற விஷ யத்தையும் கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மலைப்பிராந்தியங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்குச் சென்று வேலை செய்ய ஆசிரியர்கள் விரும்புவதில்லை. அங்கே பல கஷ்டங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. ஆகவே ஹில் அலவன்சு என்றாவது அந்த ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்குப் பக்கா கட்டிடம் இருந்தால்தான் அனுமதி அளிக்கப்படுகிறது, அதற்காக இருபதாயிரம், நாற்பதாயிரம் என்று ஏராளமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக அதிகமான பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு முடியவில்லை. ஆகவே உயர்நிலைப் பள்ளி கூரைக் கொட்டகையில் ஆரம்பிப்பதாக இருந்தாலும் மாணவர்கள் தங்கிப் படிப்ப தற்குப் போதுமான இடம் இருக்கிறது என்றால் போதுமானது என்று செய்தால் நல்லது என்று இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன.

அடுத்தபடியாக கல்லூரிகளில் தமிழ் மொழியின் மூலம் போதிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். சட்டங்கள் கல்லூரிக்கு ஒரு விடுதி கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரிக்கு இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட வருமானம் கிடைக் கிறது. செலவினம் ஒன்றரை லட்சம்தான் ஆகிறது. அந்தக் கல்லூரிக்கு ஒரு விடுதி கட்ட வேண்டுமென்ற கோரிக்கை அமைச்சர் அவர்களிடத்தி லும் வந்திருக்கிறது. ஆகவே அடுத்த ஆண்டிலாவது இந்த விடுதியைக் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முப்பத்தெட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட ஜனத் தொகை கொண்ட சேலம் மாவட்டத்தில் இரண்டாவது கல்லூரி இல்லை. இருக்கக் கூடிய ஒரு கல்லூரியும் முனிசிபல் கல்லூரியாக இயங்கி வருகிறது. இதைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளக்கூடிய யோசனை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. உடனடியாக இந்த முனிசிபல் கல்லூரியை அரசாங்கக் கல்லூரியாக எடுத்துக் கொள்வதோடுகூட இன்னொரு கல்லூரி—குறிப்பாக பெண்கள் கல்லூரி யாக ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRI K. P. PALANISWAMI : தலைவர் அவர்களே, இன்று நமது கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித் துறைக்காகக் கோரியிருக்கும் மானி யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். நமது ராஜ்யத்தில் கடந்த பத்தாண்டு காலத்தில் கல்வித் துறையில் அதிக முன் னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டாலும் விவாதத்திற்காக சிலர் குறை கூறுகிறார்கள். இன்றையதினம் பார்த்தால் ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடம் ஏற்பட்டிருக்கிறது. பத்து ஆண்டு காலங்களுக்கு முன்னால் ஒரு ஊரில் உள்ள பையன் உயர்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டுமென்றால், ஐந்து மைல், பத்து மைல் சைக்கிளில் போய் வரும்படி இருக்கும். அல்லது நடந்து போய்ப் படித்து வரும்படியாக இருக்கும். ஆனால் இன்றையதினம் மூன்று மைல் விஸ்தீர்ணத்திற்குள்ளேயே படிப்பதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம் இந்தக் கல்வித் துறையின் வளர்ச்சிக்காக நமது ராஜ்ய பட்ஜெட்டில் 5-ல் ஒரு பங்கு இதற் காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதை நாம் எல்லோரும் மிக்க



பெருமையுடன் வரவேற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். உண்மையிலேயே நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால்—இஞ்ஜினீயரிங் கல்லூரி யில் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகம், எம்.பி.பி.எஸ். படித்தவர் களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் மட்டும்—நாடு முன்னேற்றம் அடைந்துவிட்டதாக எண்ண முடியாது. இந்த நாட்டிலுள்ள மக்கள் எல்லோருக்கும் எழுதப் படிக்கவாவது தெரிய வேண்டும். இந்த லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே நமது அரசாங்கம் பல திட்டங்களை வகுத்திருக் கிறார்கள். எல்லாவற்றையும் அரசாங்கமே எடுத்துச் செய்வது என்பது சாத்தியமல்ல. அதற்காகவே அரசாங்கம் பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். இதற்காக மாவட்டங்களில் மகாநாடுகள் கூட்டிய போது பொதுமக்களிடத்திலிருந்து இதற்கு ஏராளமான ஆதரவு கிடைத் திருக்கிறது. கனம் அன்பழகன கூடச் சொன்னார்கள்—இப்படி ஆசியர்களைப் போய்க் கேட்கச் சொல்வது சரியல்ல என்பதாக. இதில் என்ன தவறு இருக்கிறதென்றுதான் தெரியவில்லை. பிச்சை புகினும் கற்கை நன்றே என்றுதான் சொன்னார்கள். எப்படியாவது மக்களுக்குப் பலபல வசதி களைச் செய்து கொடுத்து எல்லோரையும் படித்தவர்களாகச் செய்ய வேண்டு மென்ற லட்சியத்தை அடைவதற்கு—என் இப்படி அந்த அந்த ஊர்களில் உள்ளவர்கள் கேட்கக் கூடாது, அப்படிக் கேட்பதற்கும் மக்களிடத்திலிருந்து அதிகமான ஆதரவு வரும்போது, இதில் ஒன்றும் தவறில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே மக்களிடத்தில் போய் இப்படிக் கெஞ்சுகிறோம் என்று சொல்வது மிகவும் நன்றாக இல்லையென்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு வகுப்பில் 35 மாணவர்களுக்குப் பதிலாக 25 மாணவர் கள் இருந்தால்தான் நல்லது என்கிற கருத்தைத் தெரிவித்தார்கள். முப்பத்து ஐந்து என்று இருப்பதே நல்லது. ஆசிரியர்கள் நல்ல முறையில் தான் பாடம் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். இப்படி இருப்பதால் அதிக மாணவர்கள் படிக்கவும் வசதி ஏற்படுகிறது. 5-ல், ஒரு பாகம் செலவும் குறைகிறது. ஆகவே இப்போது 35 என்று வைத்திருப்பதே அதிகம் இல்லை, இப்படியே இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

அது மாத்திரமல்ல. இப்போது ஆரம்ப ஆசிரியர்களுக்கு 66 ரூபாய் சம்பளம் கொடுக்கிறோம், செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 84 ரூபாய் கொடுக்கிறோம். இது அவர்களுக்குப் போதவில்லை என்று சொல்லலாம். ஆனால் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கூட வருமானம் இல்லாதவர்கள் இருக்கக்கூடிய கிராமத்திலே அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப் தற்காக, அவர்கள் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்காக உருவாக்கி இருக்கக்கூடிய திட்டம் இது. ஆகவே பணம் போதவில்லை என்ற வெறுங் கூக்குரலை எழுப்பாது இருப்பது நலம். அவர்களுடைய நிலைமையை அரசாங்கம் நிதி நிலைமைக் கேற்ப கவனித்துக்கொள்ளும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு கிராமங்களில் உள்ள ஹரிஜன மக்கள் முன்னேற வேண்டும் என்று பல ஸ்காலர்ஷிப் கொடுக் கிறோம். ஐம்பது சத விகித மார்க்கு வாங்கியிருக்கிற பிள்ளைகளுக்குத்தான் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஸ்காலர்ஷிப் வழங் குவது என்கிற கொள்கையை வகுத்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருப்பது தவறு. தாழ்த்தப்பட்ட மாணவர்களிடத்தில்—மிகவும் பிற்போக் காக பொருளாதாரத் துறையில், அறிவுத் துறையில் இருக்கக்கூடிய வர்களுக்கு 50 சத விகிதம் மார்க் வேண்டுமென்று நிர்ணயிப்பது கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை நீக்க வேண்டும். அதோடு மத்தியான உணவு கொடுக்கிறார்கள். இது நல்ல முறையில் நடக்கிறது. இது வரவேற்க வேண்டிய விஷயமாகும். அதோடு 100 ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய குழந்தைக்குச் சம்பளம் உண்டு. குறைந்தவர்களுக்கு இல்லை என்று இருக்கிறது. நூறு ரூபாய் உடையவனுக்கு 5 குழந்தைகள் படிக்கும்படியாக இருக்கும். தொண்ணூற்று ஒன்பது ரூபாய் உடையவனுக்கு ஒரு குழந்தைதான் இருக்கும். இவனுக்குச் சம்பளம் இல்லை, அவனுடைய 5 குழந்தைகளுக் கும் சம்பளம் உண்டு என்பது சரியல்ல. இதையும் கவனித்துத் தக்க முறையில் இதைச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

[Sri K. P. Palaniswami] [16th March 1959

12.10 a.m. கிராமப் பகுதியிலே பெண் ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக அவர்களுக்கு நல்ல முறையில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குப் பொது மக்களாலும் பணம் கொடுக்கப்படுகிறது. கிராமங்களிலிருந்து பல ரிபோர்ட்டுகள் வருகின்றன. பள்ளிக்கூடத்தின் பக்கத்தில் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால், அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கும் வருவதற்கும் சௌகரியமாக இருக்கும். பள்ளிக்கூடங்களில் ஸ்பெஷல் பீஸ் இன்னும் கேட்கப்பட்டு வருகிறது. இந்த ஸ்பெஷல் பீஸ் கொடுப்பதற்கு மாணவர்களின் பெற்றோர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் மத்தியான உணவிற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri T. S. RAMASWAMY PILLAI** : கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் சட்டதிலும் சரி, அதன் பின்னர் வந்த அரசாங்கச் சட்டத்திலும் சரி நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் பத்து வருஷங்களுக்குள்ளாக 14 வயது வரையில் இலவசக் கல்வி அளித்தாக வேண்டுமென்பதை நமது நோக்கமாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் 10 வருஷம் ஆகும்போது இன்னும் இந்த லட்சியம் கைகூடவில்லையே என்று கேட்டுக்கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். இதைபற்றிப் பல கேள்விகள் கேட்டபோதுகூட அமைச்சர் அவர்கள் கூறினார்கள், குந்தா ராஜ்யத்தில் சமீபத்தில் எல்லா இடங்களிலும் கட்டாயக் கல்வியை அமுல் நடத்த முடியாது, இப்பொழுதுள்ள நிதி நிலைமையால், அன்று பிளானிங் கமிஷனுக்கு அளித்த பெருமை எங்களுக்கு உண்டு என்றும், இதற்கு பெருமைபட என்ன இருக்கிறது என்று நான் கூறியதாக ஞாபகம் இருக்கிறது. இதைப் பற்றி வருத்தம் கொண்டிருந்த நான் இந்த அறிக்கையைப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மூன்றில் ஒரு பங்கு கட்டாயக் கல்வி பெறக்கூடிய பகுதியாக இருக்கும் என்பதும், 5-வதுவரை கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் வயது வந்த குழந்தைகள் எல்லோரும் படித்தாக வேண்டுமென்ற சட்டம் வருவதாக அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக அமைச்சர் அவர்களை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன. ஜனநாயகம் வளர பல பிரச்னைகளை நன்றாக ஆராய்ந்து செயல்பட எழுத்தறிவு நிச்சயம் வேண்டும். அதுவும் சென்னை ராஜ்யம் கல்வித் துறையில் மிகவும் பின் தங்கி இருக்கிறது. நிச்சயம் கட்டாயக் கல்வி அவசியம் என்று உணர்ந்து எத்தனையோ முயற்சிகள் செய்திருக்கிறோம். அவைகளை எல்லாம் சமாளித்து, இன்றையதினம் இருக்கக் கூடிய நிலைமையில் படிப்படியாகச் செய்ய நம் ராஜ்யத்தில் 3-ல் ஒரு பகுதியில் உடனடியாக ஆரம்பிக்கப் போகிறோம் என்ற செய்தி மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. நாம் எடுத்துக்கொள்ளும் முதல் நடவடிக்கை ஜனநாயகத்திற்கு முன்னோடியான பாதை என்று ஒத்துக்கொள்கிறேன். அதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அடுத்து இன்னொரு விஷயத்தையும் சொல்ல நினைக்கிறேன். இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்த்தால் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. முக்கியமாகக் கன்யாகுமரி ஜில்லா மக்களுக்கு இன்று பாலி டெக்னிக் இல்லை. மற்ற எல்லா ஜில்லாக்களிலும் இருக்கிறது. கன்யாகுமரியில் இல்லை. ஹிந்து கல்லூரியை ஜனங்களாகவே ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கலாம் என்ற முயற்சி ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்கிறது. இந்த வருஷம் வருமோ வராதோ என்ற ஐயப்பாடு இருக்கும் நேரத்தில் அரசாங்கமே மத்திய சர்க்காருடைய உதவியோடு ஒரு பாலி டெக்னிக்கை அங்கே ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று அறிந்து கன்யாகுமரி ஜனங்களின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில் பீஸ் சலுகை, ஸ்காலர்ஷிப் கொடுக்கிற அளவிலே எங்களுடைய அநுபவம் கன்யாகுமரி பகுதியிலே, ரீஆர்கனைசேஷனுக்கு முன்னால் பள்ளிக்கூடம் திறந்த ஒரு மாதத்திற்கு Special Fees கிடைத்து வந்திருக்கிறது. ஆர்கனைசேஷனுக்குப் பின்னால் இங்கு எதன் காரணமாக அதற்குப் பின்னால் கிடைக்கவில்லை என்று தெரியவில்லை. கலெக்டரிடம் நிர்வாகம் இருப்பதினாலே அந்தப் பள்ளிக்கூடப் பிள்ளைகள்



16th March 1959] [Sri T. S. Ramaswami Pillai]

ஸ்பெஷல் பீஸ் கட்டாததினால் எத்தனையோ பேர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம் அதன் பிறகு வந்திருக்கிறது. இதனால் ஏழை மாணவர்களுக்குப் பிரயோசனப்படுவது கிடையாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர நினைக்கிறேன். அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணத்தை ஹரிஜன இலாகா மூலமாகக் கொடுக்காமல் கல்வி இலாகாவிலிருந்து நேரடியாகக் கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும், இல்லை என்றால் இதனால் அதிக நாளாகிவிடுகிறது.

அதோடு இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள் என்ஜினீயரிங்—அதாவது தொழிலியல் கல்லூரிகளில்

"In order to select the best material for admission to all the colleges, both private and Governm nt, in the State to eliminate the inconvenience caused to the students in having to seek admission to all the colleges in the State in order to ensure a seat in any one, a Common Selection Committee was constituted last year for the selection of candida es for admission to the colleges affiliated to the Madras University."

அதைப் புதிதாக ஏற்படுத்துவதைப் பற்றி சந்தோஷம், பிரைவேட் கல்லூரிகளுக்குக்கூட ஏதாவது செய்ய வேண்டும். தனியார், "பெஸ்ட் மெடீரியல்" செலக்ட் செய்வதற்கான வழி வகைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : கடைசியாக கனம் அங்கத்தினர் ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை அவர்களுக்கு 15 நிமிஷம் கொடுக்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டிலே கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 13 கோடி சொச்சம் ரூபாய் போதாது என்று வற்புறுத்துகிற முறையில் இப்பொழுது கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கல்விக்காக சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு சற்று அதிகமாக ஒதுக்கிவைத்திருப்பது உண்மையேயானாலும் எந்த அளவிற்கு நம் ராஜ்யத்திலுள்ள குழந்தைகளுக்குக் கல்வியைக் கொடுக்கவேண்டுமோ அந்த அளவிற்குக் கல்வி வளர்ச்சி அடைவதற்கு போதாது என்பதுதான் இங்கே பல அங்கத்தினர்கள் வெளியிட்ட கருத்துக்களிலிருந்து புலனாகிறது. எத்தனையோ கோடி ரூபாய் செலவழித்த போதிலும் இன்னும் அதிகமாகச் செலவழிக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்த போதிலும் எல்லோருக்கும் கல்வி வழங்குவதில் ஒன்றும் அதிகமாகக் கவனம் செலுத்தப்படவில்லை.

எத்தகைய கல்வியை நம் குழந்தைகளுக்கு வழங்குகிறோம் ? எத்தகைய கல்வியை நாம் வழங்கவேண்டும். நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற சமதர்மக் கருத்திற்கேற்ப நல்ல திறமையான மாணவர்களை நாட்டுக்கு நல்குகிற கல்வி முறை அமைந்திருக்கிறதா ? திறமையான மாணவர்களை தோற்றுவித்தால் மட்டும் போதாது. நல்ல குடிமக்களாகத் திகழும் முறையில் நம் அடிப்படைக் கல்வி அமைந்திருக்கவேண்டும். நாட்டுக்கு நல்ல குடி மக்களைத் தோற்றுவிக்கும் முறையில் அமையாத கல்வித் திட்டங்கள், கல்வி முறைகள், எத்தனை கோடி ரூபாய் செலவழித்தாலும் ஒரு பலனையும் அளிக்காது என்று நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இதைத்தான் பல தேசங்களிலும் பல அறிஞர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். ஆச்சாரியா நரேந்திர தேவ் அவர்கள் கல்வித் துறையில் தலை சிறந்த பணி புரிந்தவர்கள். இதனைத்தான் ஒரு இடத்திலே "It is not enough to turn out efficient men, but it is also n cessary that we should produce good citizens, who have a strong civic sense,

and high social aims, who believe in international peace and under-
standing and who are passionately attached to the democratic ideal
of life" என்று ஆச்சாரியா நரேந்திர தேவ் அவர்கள்கூட ஒரு கட்டுரையிலே
குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டார்கள். இது போன்று என்
பலரும் வற்புறுத்தி வருகிறார்கள் என்றால் நாம் எடுத்துக் கொண்டிருக்கக்
கூடிய லட்சியத்திற்குத் தகுந்த மாணவர்கள் கல்விச்சாலைகளிலிருந்து
வெளிவரவில்லையானால், நாம் கல்விக்காகச் செலவிடும் பணத்துக்குப் பலன்
கிடையாது. புதிய கருத்துக்களைக் கொண்டு பாடங்களைத் தயாரிக்கும் பட்சத்
தில் வருங்காலத்தில் மாணவர்கள் சிறந்த முறையில் முன்னேறுவார்கள்
என்பதை நிச்சயமாகச் சொல்லலாம்.

12·20 p.m நான் இங்கே இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். முதலாளித்து
வத்தை நாட்டிலிருந்து அகற்றிவிட்டு சமுதாயத்தில் முதலாளித்துவ
அமைப்பை மாற்றிவிட்டு, அந்த இடத்தில் சமதர்ம சமுதா
யத்தை உண்டாக்க வேண்டுமென்ற விஷயத்தில் அக்கறை
கொண்டவர்கள் என்று நாம் நம்மைப்பற்றிக் கூறிக்கொள்கிறோம். அது
உண்மையானால். முதலாளித்துவத்தின் குறைகளும், முதலாளித்துவ
முறைகள் எவ்வளவு பாபகரமானவை என்பதையும் சுட்டிக்காட்டும் பாடங்
கள் நம் பாடப் புத்தகங்களில் இருக்கச் செய்ய வேண்டாமா என்றும்,
சுரண்டல் என்பது, பல பேர்களிடமிருந்து பணத்தையும் பொருளாதார
ரீதியில் உழைப்பையும் சுரண்டுவது என்பது—மிகவும் பாபகரமான குற்றம்,
சமூகத்தில் செய்யக்கூடிய மிகப் பெரிய குற்றம், என்று போதிக்கும்
பாடப் புத்தகங்கள் கல்வித் திட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டாமா
என்றும் கேட்க விரும்புகிறேன். அதே போல ஜாதி சமய வேறுபாடுகள்
நீங்குவதற்கும் மக்கள் மனதில் ஜாதி சமய வேறுபாடுகள் தோன்றுதிருக்கச்
செய்வதற்கும் அடிகோலக்கூடிய பாடங்கள் நமது பாடப் புத்தகங்களில்
இடம் பெற வேண்டாமா? அதே போல நாட்டில் பிரிவினை சக்திகளுக்கு
இடமளிக்காத முறையில் உள்ள பாடங்கள், நாட்டில் பிரிவினை சக்திகள்
தோன்றுமலிருக்க அடிகோலும் பாடங்கள், நமது பாடப் புத்தகங்களில்
இடம் பெற வேண்டாமா? நம் நாடு என்றால் என்ன என்று ஒரு குழந்
தையை—சாதாரண சிறிய மாணவனைக்—கேட்டால் "பாரதம்" என்று
அவன் பதில் சொல்லக்கூடிய அளவிற்கு நமது பாடப் புத்தகங்கள் அமைய
வேண்டும். "நம் தாய் மொழி—தமிழ்," நம் நாட்டுப் பொது மொழி—
இந்தி என்று இவ்வாறாக நம் மொழிகளைப் பற்றியும் நம் மக்களைப்
பற்றியும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் லட்சியங்களைக் குறித்தும் நாம்
அமைக்கவிருக்கும் சமுதாயம் சம்பந்தமான தத்துவங்களைக் குறித்தும்
விஷயங்களையும் உண்மைகளையும் குழந்தைகளிடம் சிறு வயதிலிருந்தே
போதிப்பதற்குரிய முறையில் நமது பாடப் புத்தகங்கள் அமைந்தாலொழிய
நாம் நல்ல மனிதர்களை உருவாக்க முடியாது. நல்ல மனிதர்களை உருவாக்க
முடியாதபோது நல்ல குடி மக்களை, நாம் அமைக்கவிருக்கும் சமுதாயத்
தில் இருக்க வேண்டிய நல்ல குடி மக்களை, உருவாக்க முடியாது.
பாடப் புத்தகங்களைத் தயாரிக்கும் விஷயத்தில் அரசாங்கம் அதிக கவனம்
செலுத்த வேண்டும் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பாடப்
புத்தகங்களை அரசாங்கமே தயாரித்து வெளியிட வேண்டுமா வேண்டாமா
என்பதுபற்றி பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அரசாங்கமே
அவைகளை வெளியிட வேண்டும் என்பதில் எனக்கு அதிக அக்கறை உண்டு.
அவைகளை அரசாங்கம் தவறுகள் இல்லாமல் வெளியிட வேண்டும். இந்த
ஆண்டு கூட ஒரு ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் பல குறைகள் இருந்தாகச்
சுட்டிக்காட்டப்பட்டு, அது உண்மைதான் என்று இந்த மன்றத்திலேயே ஒப்புக்
கொள்ளப்பட்டிருக்கிறது. பாடப் புத்தகங்களில் இப்படிப்பட்ட குற்றங்கள்
இருப்பதால் பாடப் புத்தகங்களை அரசாங்கம் வெளியிடலாகாது என்ற
அபிப்பிராயம் வெளியிடப்படும் அளவிற்கு ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.
இந்த பயம் எல்லாத் துறைகளிலும் இருக்கிறது. எந்தத் தொழிலை அர
சாங்கம் எடுத்து நடத்தினாலும் இந்த பயம் சிருஷ்டிக்கப்படுகிறது. எதை
தேசிய மயமாக்கினாலும் குற்றம் குறைகள் அதிகமாகும் என்ற எண்ணம்
மறைமுகமாக சிருஷ்டிக்கப் படுகிறதோ என்று கூட சந்தேகப்படுகிறேன்.
அதே போல் பாடப் புத்தகங்களை அரசாங்கம் வெளியிட்டால் சாதாரண
மாகத் தவிர்க்கப்படக்கூடிய குற்றங்கள் கூட, குறைபாடுகள் கூட, வந்து





விடும், எனவே அரசாங்கம் இத் தொழிலை எடுத்து நடத்தக்கூடாது என்ற
எண்ணம் மறைமுகமாகச் சிருஷ்டிக்கப்படுகிறதோ என்று சந்தேகிக்கிறேன்.
பாடப் புத்தகங்களை தாங்களே வெளியிட வேண்டும் என்ற எண்ணம் அர
சாங்கத்திற்கு இருக்குமானால் அரசாங்கம் இதில் அதிக அக்கறை எடுத்துக்
கொள்ள வேண்டும். நமது கல்வி இலாகாவைப் பொருத்தவரையில்
அதற்கு நல்ல சரியான இயக்குனர் இருக்கிறார் என்பதில் ஐயமில்லை.
நல்ல திறமை வாய்ந்த, ஆர்வமிக்க அதிகாரிகளை வைத்துக்கொண்டிருக்
கும் அரசாங்கம் சாதாரணப் புத்தகங்களில் கூட ஏன் தவறுகள் இருக்கச்
செய்ய வேண்டும்? அப்படிப்பட்ட தவறுகளால் பொது மக்களிடம்
தவறான அபிப்பிராயங்கள் தோன்றுகின்றன. நான் இந்த விஷயத்தில்
கடுமையாகக் கூட அபிப்பிராயம் தெரிவிப்பேன். நான் கடுமையான அபிப்
பிராயம் தெரிவித்தால் கனம் அமைச்சர் கோபித்துக் கொள்வார். இருந்
தாலும் சொல்கிறேன். இந்த ஒரு குற்றம் நேர்ந்ததற்காகவே, கனம்
கல்வி அமைச்சர் தம் மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்திருக்க வேண்டும்.
அல்லது கல்வி இலாகாவை வேறொரு அமைச்சருக்கு மாற்றியிருக்க
லாம்; அல்லது, கல்வி இலாகாவில் குறைகள் ஏற்படாமல்
பார்த்துக் கொள்வதற்காக கல்வி இலாகா ஒன்றை மட்டுமே தம்மிடம்
வைத்துக் கொள்ள அவர் முன் வந்திருக்க வேண்டும். இதுதான் என்
அபிப்பிராயம்.

இந்த ஆண்டில் கலைக் கல்லூரிகளுக்கு வழக்கம்போலவே அதிகமான
பணத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. கலைக் கல்லூரிகளை அதிகரிப்பதை
விடுத்து தொழில் கல்விக்கு அதிகமாக வகை செய்ய வேண்டும் என்பது
தான் என் விருப்பம். தொழில் கல்விக்கு அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்
டும். தொழில் கல்வியைப் பொறுத்தவரையில், அதிகமாக என்ஜினீயர்
களையும் அதிகமாகத் தொழில் நிலையங்களையும் ஆசிரியர்களையும் உற்பத்தி
செய்ய வேண்டுமென்று நான் சொல்ல வேண்டியதில்லை. தொழில்
கல்லூரியில் படித்துத்தேறி அக் கல்லூரியை விட்டு வெளியே வரும்
மாணவன், வேறு ஒருவரிடம் சென்று தான் பணி செய்ய வேண்டுமென்ற
நிலை இருக்கக்கூடாது; அவனாகவே தொழில் செய்து தன் ஜீவியத்தை நடத்
திக் கொள்ளக் கூடியவனாக இருக்க வேண்டும்; அதற்கு ஏற்ற முறையில்
கைத்தொழில் கல்வியை அவர்களுக்கு அளிக்க வேண்டும். அதற்குரிய
கல்வித் திட்டங்கள் அமையவேண்டும். இல்லாவிட்டால் அடிமை வேலை
செய்வதற்கான ஆட்களைத் தயாரிப்போமே தவிர நாட்டில் பல துறைகளிலும்
தொழில்கள் பெருகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியாது.

ஆதாரக் கல்வியைப் பொறுத்தவரையில்; அது சரியானதா இல்லையா
என்பதுபற்றி பலரும் பேசுகிறார்கள். நான் ஆதாரக் கல்வியை ஆதரிப்ப
வன். அதில் சில குறைபாடுகள் இருப்பதாக அடிக்கடி கனம் அங்கத்
தினர்கள் கூறிவருகிறார்கள். அந்தக் குறைபாடுகளைக் களைந்தெறிய
ஆவன செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.
இப்போது ஆதாரக் பயிற்சிப் பள்ளிகளில் தமிழ்ப் பண்டிதர்கள் இல்லை.
அங்கே தமிழ் பண்டிதர்கள் இருப்பதற்குரிய நிலையை உண்டாக்க வேண்
டும்.

சரித்திரப் பாடப் புத்தகங்களைத் தயாரிக்கும் போது அரசாங்கம் அதிக
அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். சரித்திரப் பாடங்களில் திருப்பூர்
குமரன், முத்துரங்க முதலியார், சுப்ரமண்ய சிவா, வ. உ. சிதம்பரனார்
சத்தியமூர்த்தி, என். ஜி. ராமசாமி, முதலியவர்களைப் பற்றிய விவரங்கள்
இடம்பெற வேண்டும். 1857-ல் நடந்த சிப்பாய் புரட்சியை சரித்திரப்
பாடப் புத்தகங்கள் சிப்பாய் கலகம் என்றே இன்னும் சொல்லி வருகின்றன
இக் குறைகளை மாற்ற வேண்டும். சரித்திரம், பொருளாதார சாஸ்திரம்,
சமூக இயல் நூல்கள் இவைகள் சம்பந்தமான பாடங்கள் நாம் ஏற்றுக்
கொண்டிருக்கும் திட்டங்களுக்கும் லட்சியங்களுக்கும், கொள்கைகளுக்கும்
தக்கவாறு அமையவேண்டுமே தவிர வேறு விதமாக இருக்கக் கூடாது.
பாடப் புத்தகங்களை நாமே வெளியிட்டாலும் பிறர் வெளியிட்டாலும் நாம
இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதில் அதிக கவனம்
செலுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை மன்றாடிக் கேட்டுக் கொள்கி
றேன்.

[Sri C. Subramaniam] [16th March 1959

படுமோ அவ்வளவு ஆசிரியர்களுக்கும் எவ்வளவு தூரம் அதிகமாகப் பணத்
தைக் கொடுக்க முடியும் என்பதைப் பற்றி ஒரு முடிவு எடுக்கவேண்டியவர்
களாக இருக்கிறோம்.

(Deputy Speaker in the Chair.)

இதற்கு மத்தியில் ஒரு முக்கியமான முடிவு எடுக்கவேண்டியதாக
இருந்தது. அந்த முடிவு என்னவென்றால் ஐந்தாவது வகுப்பு வரையில்
இலவசமாக எல்லோருக்கும் படிப்பு கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதுதான்.
இந்த முடிவு அமுலுக்குக்கொண்டு வந்து 1965–66-க்குள்ளாக பூர்த்தி
பண்ண வேண்டுமென்ற முறையிலே ஆலோசனை செய்து பார்த்து, முதல்
வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்பு வரையில் உடனடியாகச் சம்பளம்
இல்லாமல் இலவசப் படிப்பு அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும்
என்பதை உடனடியாக நடைமுறையில் கொண்டுவரவேண்டுமென்ற உத்
தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் காரணமாக, சில நிர்வாகஸ்தர்கள்
இதிலே பல சிக்கல்கள், சங்கடங்கள் ஏற்படும், இது நடக்காது, அப்படி
நடத்தினால் பல பள்ளிகள் மூடப்பட்டுவிடும், அதன் மூலம் கல்வித்
துறையிலே ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்றெல்லாம் சொன்னார்
கள். அதை ஆதரித்து பலரும் மேடையில் பேசினார்கள். பத்திரிகை
யிலே பலர் எழுதினார்கள். இங்கும்கூட ஒரு சிலர் அந்தக் கருத்தை பல
சமயங்களில் தெரிவித்திருக்கிறார்கள். அதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க
வேண்டியது அவசியம்தான். முதலிலே இந்த முடிவு அவசியமா,
இல்லையா என்பது பற்றி யோசித்துப் பார்க்கவேண்டியிருந்தது. அதன்
காரணமாகத்தான் மறுபடியும் இந்த விஷயத்தை ஆலோசனைக் குழு
வுக்கு விட்டு, அந்த ஆலோசனைக் குழுவின் முடிவை ஏற்பதாக முடிவு
செய்தோம். அந்தக் குழுவின் முடிவுக்கு இந்த விஷயம் விடப்பட்டு,
அவர்களும் இப்பொழுது ஒரு முடிவு எடுத்துவிட்டார்கள். அந்த முடிவை
நான் இப்பொழுது சபையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையி
னால் அதுபற்றி பல புள்ளி விவரங்களையும் சொல்லி, அதற்குமேலே
அதிலே இருக்கக்கூடிய சில கருத்துக்களையும் இந்தச் சபை முன்பு
வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய ஆரம்பப்பள்ளிகளின் எண்
ணிக்கை 21,803. அதிலே உதவி பெற்று தனிப்பட்டவர்களால் நடத்தப்
படும் பள்ளிகளின் எண்ணிக்கை 7,676. அதிலே எத்தனை
பள்ளிகள் சம்பளம் வாங்கி பள்ளிக்கூடத்தை நடத்திவருகிறார்கள் என்று
கணக்கு எடுக்கும்பொழுது 1,033 பள்ளிகள். இந்த 21,803
பள்ளிகளில் 1,033 பள்ளிகள் சம்பளம் பெற்று நடத்தப்பட்டு
வருகின்றன. இந்தப் பள்ளிகள் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தால்
சர்க்கார் உதவி பெற முடியாது. சர்க்கார் உதவி வேண்டுமென்று சொன்
னால் சம்பளம் வாங்கக்கூடாது. உங்களுடைய முடிவைத தெரிவிக்க
வேண்டும் என்று மேற்படி உத்தரவு போட்ட பிற்பாடு கேட்டதற்கு, 1,033
பள்ளிகளில் 740 பள்ளிகள் நாங்கள் சம்பளம் வாங்காமல் சர்க்கார்
உதவி பெற்று நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்
திருக்கிறார்கள். பாக்கி இருக்கக்கூடிய 293 பள்ளிகளில், சில பேர்கள்
முடியாது என்று எழுதியிருக்கிறார்கள். சில பேர்கள் கொஞ்சம் உதவி
அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள், பதிலே எழு
தாதவர்களும் இருக்கிறார்கள். இதிலே முக்கியமான பிரச்னை நம்முடைய
சென்னை நகரத்திலேதான். அதிலே சில புள்ளி விவரங்கள் தருகிறேன்.
சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய மொத்த ஆரம்ப பள்ளிகள் 228.
அதிலே சம்பளம் வாங்கக்கூடிய பள்ளிகள் 188. அதிலே 38 பேர்கள்
நாங்கள் சம்பளம் வாங்காமல் நடத்துவதற்குத் தயார் என்று சொல்லு
கிறார்கள். 6 பேர்கள் எங்களுக்கு உதவி வேண்டாம், நாங்களே சம்பளம்
வாங்கி நடத்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். 58 பேர்கள் இன்னும்
கொஞ்சம் அதிகம் உதவி வேண்டும், அப்பொழுதுதான் நடத்தமுடியும்
என்று தெரிவித்திருக்கிறார்கள். 86 பேர்களிடமிருந்து பதிலே வரவில்லை.
இந்த முறையில் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. இது ஏதோ ஒரு
பெரிய பிரச்னை, பெரிய நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்று நினைப்பதுபோல்
நிலைமை இல்லை. இந்த 21,803 பள்ளிகளில் 293 பள்ளிகளைப் பொறுத்த



16th March 1959] [Sri C. Subramaniam]

நெருக்கடிதான் இது. இதுபற்றி சட்டமன்றக் குழு ஆராய்ச்சிசெய்து
பார்த்து, நல்ல முறையில் பல்வேறு சங்கடங்களையும் ஆராய்ந்து பார்த்த
பிற்பாடு, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அந்த முடிவை
இப்பொழுது உங்கள் முன்னிலையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
இலவசப் படிப்பு எல்லோருக்கும் கொடுத்தாகவேண்டும்; ஆகையினாலே
இரண்டு வித பள்ளிகள்தான இருக்கவேண்டும். ஒன்று சர்க்காருடைய
உதவி பெற்று சம்பளம் வாங்காமல நடத்தக்கூடிய பள்ளிகள், இரண்டா
வது சர்க்காருடைய உதவி பெறுமல் சம்பளம் வாங்கிக்கொண்டு
அவர்களுடைய காரியத்தை அவர்களே பார்த்துக்கொள்ளக்கூடிய பள்ளிகள்,
என்ற உத்தரவை, 1958-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ந் தேதியிட்ட
2124 எண்ணுடைய உத்தரவை நடைமுறையில் கொண்டுவரவேண்டும்.
அதை வாபஸ் வாங்கவேண்டியது அவசியம் இல்லை என்ற ஒரு முடிவுக்கு
வந்திருக்கிறோம். மேலும் இப்பொழுது சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கும்
பள்ளிகளிலே ஒரு வருஷத்திற்கு சில மாறுதல்கள் ஏற்படுத்தப்படவேண்டும்,
அவர்கள் உதவிக்காகச் சில மாறுதல்களைச் செய்யவேண்டுமென்றும்
இந்தக் குழு சிபார்சு செய்திருக்கிறது. அதாவது இப்பொழுது பள்ளி
உபாத்தியாயர்கள் சம்பளத்திற்கு மேலாக 100-க்கு 15 சத விகிதம்
கிராண்டு கொடுக்கிறோம். அவர்கள் நிர்வாகச் செலவுக்காகக் கொடுக்கப்
படுகிறது இது. சில இடங்களில் இந்த நிர்வாகச் செலவு கொஞ்சம்
அதிகமாக ஏற்படலாம். ஆகவே, இதை 15 சத விகிதத்திலிருந்து 20-ஆக
உயர்த்தவேண்டும். இந்த 1,000 பள்ளிகளுக்கும், 293 பள்ளிகளுக்கு
மட்டுமல்ல என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்வாகச் செலவு
15 சத விகிதத்திற்குக் கீழே இருக்கும்பொழுது ஜில்லா அதிகாரிகளே
அதற்குக் கணக்குப் போட்டு கிராண்டு கொடுத்துவிடலாம். 15 சத விகிதத்
திலிருந்து 20 சத விகிதம் கொடுக்கவேண்டும் என்ற கட்டம் வருகிறபொழுது
டி.பி.ஐ.-க்கு அதை அனுப்பி, அவருடைய உத்தரவைப்பெற்று 20 சத
விகிதம் வரை இதை அதிகப்படுத்திக்கொள்ளலாம் என்ற ஒரு முடிவுக்கு
வந்திருக்கிறார்கள்.

இதில் இப்போது அவர்கள் என்ன சம்பளம் பெற்று வருகிறார்களோ 12-0
அந்தச் சம்பளம் பாதிக்கப்படக்கூடாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. p.m.
அதாவது சில ஆசிரியர்கள் உயர்வாகச் சம்பளம் பெற்று வருகிறார்கள்.
அவர்களைப் பொறுத்தவரையில் இவ்வளவு சம்பளம் வாங்கினதாக
நிரூபிக்கப்பட்டால், அவ்வாறு நிரூபிக்கப்பட்ட சம்பளம் சர்க்கார் பள்ளிக்
கூடங்களில் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் சம்பளம் இரண்டையும்
பார்த்து, அதில் எது குறைவாக இருக்கிறதோ அந்தச் சம்பளம் கொடுக்க
வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முக்கியமாக இன்னொரு
முடிவையும் இந்தக் குழு ஆலோசனை செய்து முடிவு எடுத்திருக்கிறார்கள்.
அதாவது 1,033 பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு சர்க்காரே
நேரடியாகச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்பது. இதை வைத்துக்
கொண்டு பின்னால் உதவி பெறுகின்ற எல்லா ஆசிரியர்களுக்கும் நேரடி
யாக சர்க்காரே சம்பளம் கொடுப்பதற்கு ஆலோசனை செய்து பார்ப்பதற்கு
உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இப்போதுள்ள முடிவுப்படி
இந்த 1,033 பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களுக்கும் சர்க்காரே நேரடி
யாகச் சம்பளம் கொடுக்கவேண்டும். அதோடு நிர்வாகச் செலவில் 100-க்கு
15 பங்கு அல்லது 20 பங்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. அதில் 15 பங்கிலிருந்து அதிகமாக உயர்த்துவதற்கு அங்கிருக்கக்
கூடிய நிலைமைகளை, கணக்குகளை டி.பி.ஐ. அவர்கள் பரிசீலித்துப்
பார்த்து அதற்கு வேண்டிய விதத்தில் முடிவு எடுப்பார்கள். இந்த அடிப்
படையில் முடிவு எடுக்கப்பட்டு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதைச் சபை
ஏற்கவேண்டும் என்பதைதான் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே
இன்றைக்கு இருக்கக்கூடிய நெருக்கடியான நிலைமையை நாம் தீர்க்க
வேண்டும். அதாவது சில இடங்களில் பள்ளிக்கூடங்களை நடத்திக்கொண்
டிருப்பவர்கள் மேலால் நடத்துவதற்குத் தயாரில்லை என்றால் அதற்குப் பதி
லாக அதே பள்ளிக்கூடத்தை எடுத்து நடத்துவதற்கு யாராவது முன்
வருவார்களானால் அவர்களுடைய விண்ணப்பங்களைப் பெற்று அவர்கள் சரி
யான முறையில் நடத்துவார்களா என்பதைப் பரிசீலித்துப்பார்த்து
அவர்களுக்கு பள்ளிக்கூடத்தை நடத்துவதற்கு உத்தரவு கொடுக்க

வேண்டும் என்பது இன்னொரு முடிவு. இவ்விதம் ஒருவருமே முன்வரவில்லையென்றால் சர்க்காரே ஏற்றெடுத்து, சென்னை நகரைப்பொறுத்தவரையில் கார்ப்பரேஷனும் மற்ற இடங்களில் டிஸ்ட்ரிக்ட் போர்டின் கீழோ, அல்லது லோக்கல் போர்டின் கீழோ அல்லது பஞ்சாயத்து போர்டின் கீழோ இந்தப் பள்ளிக்கூடங்களை எடுத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு இந்த ஏற்பாட்டின் காரணமாக வேலையிலிருந்து எந்த ஆசிரியர்களாவது நீக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். மேலும் அவர்களுக்குத் தனிப்பட்ட பள்ளிக்கூடங்களில் என்ன சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார்களோ அதைக் கவனித்து, அதற்கு தகுந்த பதவிக்கு, சர்க்கார் என்ன கொடுத்துவருகிறதோ அதையாவது குறைந்த அளவுக்குக் கொடுக்கவேண்டும் என்ற முடிவையும் செய்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் எடுத்த முடிவுகள் எல்லாம் சர்க்காரால் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. ஆகவே இந்த முடிவுகளை எல்லாம் சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முடிவு சட்டசபையிலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து செய்த ஒரு முடிவு. எல்லாவிதமான பரிசீலனையும் செய்து செய்யப்பட்ட முடிவாகும். ஆகவே இந்த முடிவுகளை நிறைவேற்றுவதற்கு எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் தங்களுடைய ஒத்துழைப்பை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் ஏதேனும் கஷ்டங்கள் ஏற்படுவதாக இருந்தால், இதன் மூலமாக இப்போது படித்துக்கொண்டிருக்கும் குழந்தைகள் படிப்பதற்கு வசதியில்லாமல் போய் விட்டதே என்று கருதாமல், அவசியமென்று கருதினால் புதுப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி நடத்துவதற்கும் ஏற்பாடு செய்ய முடியும். ஆகவே இந்த முறையில் முடிவு எடுத்திருக்கிறோம். இதை நல்ல முறையில் கொண்டு வருவதற்கு எல்லோரும் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் வைத்திருக்க வேண்டும் என்று வெள்ளையறிக்கை (வொயிட் பேப்பர்)-யில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் போட்டிருப்பது நம் நாட்டில் மட்டுமல்ல. கனம் அன்பழகன் அவர்கள், மற்ற நாடுகளில் எவ்விதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல நாடுகளிலும், அதாவது புதிதாக கட்டாயக் கல்வி ஏற்படுத்துகிற பொழுது 80 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் ஏற்படுத்தித்தான் ஆரம்பித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இப்போதும் கூட பல இடங்களில் 60 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரை ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பலர் நினைக்கிறார்கள், பத்து வருடமாகிவிட்டதே, இன்னும் சரியான முறையில் கட்டாயக் கல்வியை கொண்டு வர முடியவில்லையே என்று. நானும் கூட இதைப்பற்றி அடிக்கடி நினைப்பதுண்டு. இவற்றைப்பற்றி யோசித்துப் பார்த்தால் மற்ற நாடுகளைவிட நம் நாடு குறைவாக இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அகில இந்திய கல்வி மகாநாட்டில் நான் வரவேற்பு கமிட்டித் தலைவராக இருந்தேன். அப்போது அங்கு சொன்னதை நான் இங்கு படிப்பதற்கு அனுமதி கேட்டுக்கொண்டு அதைப் படிக்கிறேன்.

"A few days ago, I saw in one of our newspapers an article which was reproduced from the 'London Economist'. This article contained a discreption of the process by which the educational system has been expanded and improved in Soviet Russia." I am sure Mr. Palaniswami will be greatly interested in this. "The Soviet Revolution, as you know, took place in 1917, exactly thirty years before we attained Independence. The article says that the first task was for the Soviet Government to teach the people to read and write and to set about this task with vigour. Further, four-year education was not made compulsory till 1930.





It was not until shortly before the Second World War that compulsory education was extended to seven years in the towns. The country side was not covered by a network of schools providing seven year education until 1950. At the present moment, the article says, town children are now obliged to go to school for ten years and it is planned to spread the system to the whole country within the next few years."

ஆகவே நம்மைப் போலவே ஜனநாயக அடிப்படையில் நடந்து கொண்டிருக்கின்ற நாடுகளிலும் இம்மாதிரி ஒரு கல்வி முறையை கொண்டு வருவதற்கு எத்தனையோ ஆண்டுகளாயிற்று. நான்கு வருடப் படிப்பு, ஏழு வருடப் படிப்பு, பத்து வருடப் படிப்பு என்று படிப்படியாகத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முறையில் பார்த்தால் நாம் அவ்வளவாக ஒன்றும் குறைந்து போய்விடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டியதுதான். அப்போது தான் நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்கு முடியும். இவ்விதம் குறைகளை சொன்னால் தான் அதிலுள்ள பிரச்னைகளைத் தீர்த்து சரியான முறையில் தொடர்ந்து அதில் பணியாற்ற முடியும். ஆகவே இந்த விஷயத்தில் இந்த சபையின் முழு ஒத்துழைப்பும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் அடிப்படையாக இந்தத் திட்டத்தை அமுலாக்குவதற்கு மத்தியான உணவுத் திட்டம் அவசியம் என்பதையும் நாம் முடிவாக எடுத்திருக்கிறோம். இந்த சட்டசபைக் குழு இதைப்பற்றி நன்றாக ஆலோசனை செய்தது. இந்த மத்தியான உணவுத்திட்டம் வெற்றி பெற்றால்தான் கட்டாயக் கல்வி திட்டம் வெற்றி பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்று முடிவு செய்திருக்கிறது. இந்தத் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் பரப்புவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இப்போது சுமார் 11 ஆயிரம் பள்ளிக்கூடங்களில் இவ்விதம் மத்தியான உணவுத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவ்விதம் 11 ஆயிரம் பள்ளிக்கூடங்களில் நடைபெறுகிறது என்று சொன்னால் சுமார் 11 ஆயிரம் கிராமங்களில் இந்தத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம். இந்த முறையில் பரவலாகத்தான் நடந்து கொண்டு வருகிறது. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் இந்தத் தவறுகள் நடைபெறுகிறது என்று சொன்னால், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. பல இடங்களிலும் பெருவாரியான அளவில் உற்சாகத்தோடு நல்ல முறையில் இந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது என்பதுதான் எனக்கு கிடைத்த தகவல். சில இடங்களில் தவறுகள் நடக்கின்றன என்று புகார்கள் வந்திருக்கின்றன. அதற்காக இந்தத் திட்டமே மோசம் என்று சொல்லுவது சரியல்ல என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டத்தின் காரணமாக பல இடங்களிலும் புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை மக்கள் உணருகின்றார்கள். ஆகவே இந்த அடிப்படையில் நடந்து கொண்டிருக்கின்ற ஒரு திட்டத்தில் சில தவறுகள் ஏற்படுகின்றன. அவற்றை தவிர்ப்பதற்கான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதையெல்லாம் பார்க்காமல் இந்தத் திட்டத்தினால் என்ன பிரயோஜனம் என்று எண்ணக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதில் ஏற்படுகின்ற தவறுகளைச் சொல்லுவதை நான் வரவேற்கிறேன். கல்வி மந்திரி என்ற முறையில் அவைகளைத் தீர்த்து வைப்பதற்கும் முயற்சி செய்கிறேன். இவ்விதம் சில இடங்களில் தவறுகள் நடக்கலாம், அவைகளையெல்லாம் தெரிந்து, அவைகளை நீக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பொதுவாக இந்த திட்டம் வெற்றி பெறுவதற்கு சட்டசபை அங்கத்தினர்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவறுகளை எடுத்துச் சொன்னால் நான் கோபப்படுவேன் என்ற காரணத்திற்காகச் சொல்வதில்லை என்று சொல்லப்பட்டது. அவ்விதம் நான் கோபப்படுவதில்லை. உண்மையில் தவறுகள் நடந்திருக்குமென்றால், அவைகளை எடுத்துச் சொல்வதாக இருந்தால் அவைகளை நான் வரவேற்கிறேன் என்பதை கனம் சின்னத்துரை அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த திட்டத்தை மேலும் மேலும் விரிவாக்குவதற்கு நாம் எல்லோரும் முயற்சி

சொன்னாலும், இயக்கத்திற்கு உதவ முடியும். இயக்கத்திற்கு ஆதரவு தந்தால் ஒரு சமயம் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு ஆகிவிடுமோ என்று யாரும் நினைக்க வேண்டாம். உண்மையிலேயே, இது குழந்தைகளின் திட்டம். குழந்தைகளுக்கு உதவும், அதனால் மக்களுக்கு உதவும் திட்டம். இது காங்கிரஸ் கட்சிக் காரியம் அல்ல. ஆகவே எல்லோரும் இதில் பங்கு கொள்ள இடம் இருக்கிறது.

பள்ளிக்கூடம் என்று சொல்லும் போது, ஒவ்வொரு கிராமத்திற்கும் பள்ளி வேண்டும். இப்பொழுது நாம் 300 ஜனத்தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பள்ளி என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டியும் இருக்கிறது. 500-லிருந்து, 300 ஜனத்தொகை என்று செய்கிறோம். இந்த ஆண்டிற்குள்ளாக 300 ஜனத்தொகையுள்ள எல்லா கிராமத்திற்கும் பள்ளி என்று சொல்லுகிறோம். அந்த நிலைமை என்ன? 300 ஜனத்தொகையுள்ள ஒரு கிராமத்தில் அதிகமாக எவ்வளவு மாணவர்கள் வரமுடியும்.

30 அல்லது 35 ஆசிரியர்களைச் சேர்க்கலாம். ஒரு ஆசிரியர் இருந்து கொண்டு பள்ளியை நடத்த வேண்டியதாக இருக்கிறது. ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் தேவையாக இருக்கிறது. ஒரு ஆசிரியர் இருந்து கொண்டு ஐந்து வகுப்புகளை நடத்துவது என்பது முடியாது. இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திற்கும் பள்ளிக்கூடம் வேண்டும் என்று கேட்கிறார்கள். இதை நாம் கொஞ்சம் யோசனை செய்து பார்க்கவேண்டும். ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை இந்தச் சபைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சிறு சிறு கிராமங்களில் ஒன்று முதல் மூன்றும் வகுப்பு வரையில் படிக்கக்கூடிய பிள்ளைகள் இருக்கலாம். அவர்களுக்கு ஒரு மைல் சென்று பள்ளிக்கூடங்களில் படிக்க முடியாது. அதனால் இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு அந்தந்த கிராமங்களிலேயே பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டியது அவசியம். மூன்றாவது வகுப்பு படித்து விட்டு அதற்கு மேல் படிக்க வேண்டுமென்றால் அப்படிப்பட்ட குழந்தைகள் ஒரு மைல் சென்று படித்து வரக்கூடிய நிலையில் இருப்பார்கள். ஆகவே பக்கத்தில் ஒரு பெரிய கிராமத்தில் பெரிய வகுப்பு வைத்து அங்கே அவர்களைப் படிக்கச் சொல்லலாம். இப்படி ஒரு மைல் நடக்கக்கூடிய பிள்ளைகள் அந்த பெரிய கிராமங்களிலுள்ள பள்ளிகளுக்குச் சென்று மேல்வகுப்புப் படிக்க முன்வரலாம். அப்படிப்பட்ட பெரிய பள்ளிகளுக்கு ஐந்து ஆசிரியர்களை நியமித்து வகுப்புகளை நடத்தச் சொல்லலாம். சிறு சிறு வகுப்புகளைக் கொண்ட பள்ளிகளுக்கு ஒரு ஆசிரியரைக்கொண்டு பள்ளிகளை நடத்தச் சொல்லலாம். இதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி ஐந்து வகுப்புகளை வைத்து நடத்தக்கூடிய பள்ளிகளில் வேண்டிய மாணவர்கள் இருக்க வேண்டும். இந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக ஆரம்பக் கல்வி பலன் தரக்கூடிய கல்வியாக இருக்க வேண்டும். அப்படிப் படித்து விட்டு வெளியே வரக்கூடிய மக்களுக்கு ஐந்து வருஷப் படிப்பும் ஒரு பலன் தரக்கூடியதாக இருக்க வேண்டும். அந்தப் பலன் பெற்றோர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவில் ஆரம்பக் கல்வியை திட்டமிட்டுத் தயாரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

அதற்குப் பிறகு ஆறிலிருந்து பதினொன்று வரையில் இருந்தது, அதாவது எட்டு வருஷமாக இருந்தது. அதை இப்பொழுது ஏழாக குறைத்திருக்கிறோம். அதன் பிறகு நான்கு வருஷங்கள் உயர் நிலைப்பள்ளியில் படிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த எட்டு வருஷங்களுக்கு மேல் ஒரு வருஷம் படிக்க வேண்டியதாக இருக்கிறது. இன்னொரு வருஷமும் கொடுக்க வேண்டுமா என்ற முடிவு இன்னும் ஏற்படவில்லை. அதற்கு மேல் போகிறவர்களுக்குப் ப்ரி யூனிவர்சிட்டி எடுகேஷன். அந்த முறையில் ஆரம்பக் கல்வி ஏழு வருஷமும், உயர்நிலைப்பள்ளி நான்கு வருஷங்களும் என்று சட்டசபையில் முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த முடிவை மற்ற ராஜ்யங்கள் ஏற்றுக்கொள்ள முதலில் மறுத்து விட்டார்கள். இன்றைக்குப் பார்த்தால் கேரளாவில் இதை முதலில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மைசூரில் 8 ப்ளஸ் 4 என்று இருந்ததை 7 ப்ளஸ் 4 என்ற திட்டத்தை ஒப்புகொண்டிருக்கிறார்கள்.





ஆந்திராவிலும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தென் மண்டலத்தில் இந்தத் திட்டத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் நம்முடைய கல்வி அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவில் உயர் நிலைப்பள்ளியிலிருந்து கல்லூரிப் படிப்புக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. அதனால் ஆரம்பக் கல்வியை எல்லோருக்கும் விரிவாகக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அது பலன் தரக்கூடிய அளவில் இருக்க வேண்டும். உயர் நிலை பள்ளிப்படிப்பு முடிந்த பிறகு தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய தகுதியைப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் இந்த நான்கு வருஷப் படிப்பு அமைய வேண்டியதாக இருக்கிறது. இது சம்பந்தமாக பல முடிவுகள் எடுக்கப்பட்டு அதற்கு என்று பல திட்டங்கள் வகுக்கப்பட்டு தொழில் கல்வி எந்த அளவு இருக்க வேண்டும் என்றும், ஒரு முடிவுக்கு வந்து அதையும் நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். இந்த வருஷத்திலிருந்து அந்த திருத்தப்பட்ட திட்டம் அமுலுக்குக்கொண்டு வர வேண்டும் என்று இருக்கிறோம். இப்படி அடுத்த வருஷம் அமுலுக்குக் கொண்டு வந்து இன்னும் நாலைந்து வருஷங்களுக்குள் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தை ராஜ்யம் பூராவுக்கும் அமுலுக்குக் கொண்டுவர முயற்சி எடுத்துக் கொள்ளபட வேண்டும். இந்த முறையில் புது கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து விட்டோம் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையில் என்ன என்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம்.

இந்த அடிப்படையில் மொழிப் பிரச்னையையும் நீக்க வேண்டியதாக இருக்கிறது. இது சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. கனம் சின்னதுரை போன்றவர்கள் ஹிந்தி வரவேண்டும் என்று சொல்கிறார்கள். அதே சமயத்தில் கனம் அன்பழகன் போன்றவர்கள் ஹிந்தி வேண்டாம் என்றும் அது மறைமுகமாகக் கொண்டு வரப்படுகிறது என்றும் கருத்துப்பட தெரிவிக்கிறார்கள். இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சட்ட சபை குழு ஒன்று உட்கார்ந்து ஆராய்ந்து யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் ஹிந்தியானது மறை முகமாகக் கொண்டு வரப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. எல்லாக் கட்சிகளுக்கும் ஒப்புக்கொண்ட பிறகு கல்வித் திட்டத்தில் குழப்பம் இருக்க வேண்டியதில்லை. குழப்பமும், கிளர்ச்சியும் இல்லாமல் இருந்தால் எவ்வளவோ முன்னேற்றமடையலாம். கல்வி விஷயத்தில் குழப்பம் இருக்க வேண்டியதில்லை. கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றால் எப்பொழுதும் கிளர்ச்சி செய்து கொண்டே இருக்கலாம். மற்றவர்களை நிர்பந்திக்க கிளர்ச்சி செய்து கொண்டே இருக்கலாம். ஒரு முடிவு எடுத்துக்கொண்ட பிறகும் கிளர்ச்சி செய்வது என்றால் அதற்கு முடிவே இருக்காது. அப்படிச் செய்வதும் சரியல்ல. சிலர் ஒரு கோடியில் இருக்கிறார்கள். பலர் மற்றொரு கோடியில் இருக்கிறார்கள். இந்த இரண்டு கோடிக்கும் மத்தியில் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அடிப்படையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முடிவின்பேரில் தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமேயொழிய திரும்பத் திரும்ப கிளர்ச்சி செய்து கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. கிளர்ச்சி செய்வதாக இருந்தால் எந்த வகையிலும் கிளர்ச்சி செய்து கொண்டே இருக்கலாம். ஆகவே ஒரு முடிவுக்கு வந்த பிறகு கிளர்ச்சி செய்வதில் பிரயோசனம் இல்லை என்பதை தி. மு. க. தலைவர்களுக்கும் மற்றுமுள்ள அங்கத்தினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலத்தை ஐந்தாவது வகுப்பிலிருந்து கொண்டு வரப்பட வேண்டும் என்றும், ஹிந்தி எட்டாவது வகுப்பிலிருந்து கொண்டு வரப்பட வேண்டும் என்றும் இப்பொழுது திட்டமிடப்பட்டிருக்கிறது. ஹிந்தியை ஏன் ஆரம்பத்திலிருந்தே கொண்டு வரக்கூடாது என்று சிலர் கேட்கிறார்கள். மற்றும் சிலர் ஹிந்தியே கூடாது என்றும் சொல்லுகிறார்கள். இப்படி மாறுபட்ட கருத்துக்கள் இருந்தால் எப்படி முன்னேற்றமடைவது? இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இதில் ஒரு ஒற்றுமை இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே கிளர்ச்சி நடத்தாமல் முடிவு செய்யப்பட்ட திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று, பணிந்து வலியுறுத்திக்கொள்ளுகிறேன்.

[Sri C. Subramaniam] [16th March 1959

மொழிப் பிரச்னை சம்பந்தமாக சர்வகலாசாலை, கல்லூரிகளில் தமிழை எப்படிக் கொண்டு வரலாம் என்று முடிவு செய்வதற்காக இன்றைக்கு தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலுள்ள எல்லோருடைய அபிப்பிராயமும் என்ன என்பதைப் பார்த்து கடைசியில் தமிழ் மொழி நாட்டில் போதனை மொழியாக அமையும் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது. கடைசியில் தமிழ் தான் போதனை மொழியாக வந்து சேரும். அப்படித் தமிழ் நாட்டில் தமிழும், மைசூரில் கன்னடமும், ஆந்திராவில் தெலுங்கும், கேரளாவில் மலையாளமும் போதனை மொழியாக வரும் என்பதில் சந்தேகமே இல்லை. அப்படியேதான் வந்தும் சேரப்போகிறது. அதற்குப் போதிய வசதிகள் இல்லை, தமிழில் அதற்கு வேண்டிய சொற்கள் இல்லை, அவைகளை இன்னும் தயார் செய்யவில்லை என்றும் குறை கூறுகிறார்கள். இதை தாராளமாகச் செய்ய முடியும். இதைப்பற்றி தீவிரமாக ஆலோசனை செய்து நன்றாக பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வைஸ்சான்சலருடைய ஆலோசனையையும் கேட்டு அதன் பிறகு முடிவு செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய ஆலோசனையைக் கேட்டு எந்த அடிப்படையில் மாறுதல்கள் செய்ய வேண்டுமோ அதையும் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எதிர் கால திட்டத்தையும் சங்கத்தின் முன்வைத்து பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். கல்லூரிகளில் போதனை மொழி எப்படி இருக்க வேண்டுமென்பதிலும் குழப்பம் இருக்க வேண்டியதில்லை. ஆங்கிலம் கூடாது. உடனடியாக தமிழ் வேண்டும் என்பதைக் கட்டாயமாக ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் கல்வித் துறையில் குழப்பத்தை உண்டுபண்ணி அதன் மூலம் தரம் குறைந்து விடக்கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதனால் கருத்து வேற்றுமை உள்ளவர்கள் தங்களுடைய கருத்து வேற்றுமைகளை மாற்றிக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை படிப்படிப்படியாகச் செய்வார்கள். அதற்கு வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்குப் பல உத்தரவுகளைப் போட்டு விடலாம். கல்வித் துறையில் அப்படி உத்தரவுகளைப் போட்டு நடவடிக்கைகளுக்குக் கொண்டு வரக்கூடாது என்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. நமக்குள்ள லட்சியத்தை குழப்பம் இல்லாத வகையில் அடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முறையில் சர்வகலாசாலைகளில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

சர்வகலாசாலை சம்பந்தப்பட்ட மட்டில் யூனிவர்சிட்டி கமிஷன் தலைவர் சி. டி. தேஷ்முக் அவர்கள் இந்தச் சர்க்காரைப்பற்றி குறை கூறியிருக்கிறார். 100-க்கு 50 அளவு ஆசிரியர்களுக்கு அதிமாகச் சம்பளம் கொடுக்க தயாராக இருக்கிறார்களா, பாக்கி இருக்கக்கூடிய 50-ல் பாதியாகிய 25-ஐ ராஜ்ய சர்க்காரும், பாக்கியை நிர்வாகத்தை நடத்தக்கூடிய மானேஜ்மெண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும், இதற்கு ஒரு முடிவையும் இந்தச் சர்க்கார் சொல்லவில்லை. ஆரம்பத்திலிருந்தே மௌனமாக இருக்கிறார்கள் என்கிற முறையில் பக்கத்தில் பேசியிருக்கிறார். இந்த விஷயமும் சபைக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆசிரியர்களுக்கு, எல்லாக் கட்டத்திலும் ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து கடைசியில் பேராசிரியர்கள் வரை போதுமான சம்பள விகிதம் இல்லையென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அந்தச் சம்பள விகிதத்தை அதிகப்படுத்தும்போது நான் விரும்புவது அதிலே எந்த விதக் குறையும் இல்லாமல் ஒவ்வொரு பேராசிரியர்களும், ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் எந்தவிதக் குறையும் இல்லாமல் நல்ல முறையில் அந்தச் சம்பளம் முழுவதும் பயன்படக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். ஆனால் அதற்கு மாறான சூழ்நிலை இன்றைக்குக் கல்லூரிகளில் இருக்கிறது. இன்றைக்கு நாம் 3 வருஷ பட்டப் படிப்பை ஏற்பாடு செய்திருக்கிறோம். அதன் காரணமாக இன்றைக்குப் பல கல்லூரிகளில் எண்ணிக்கை மிகவும் குறைந்திருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இப்



16th March 1959] [Sri C. Subramaniam]

திட்ட காலத்திற்குள் குறைந்தது இப்பொழுது இருப்பதைப் போல் இரண்டு பங்காவது வசதிகள் பெருகும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகையால் அடுத்த ஐந்தாண்டுத்திட்டத்திற்கு எஞ்சினீயர்கள் வேண்டுமென்று சொன்னால் உடனே எஞ்சினீயர்கள் வந்துவிட முடியாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எத்தனை எஞ்சினீயர்கள் வேண்டியதாக இருக்கும் என்பதற்கான கணக்கைப் பார்த்து புதிய கல்லூரிகள் அவசியம்மென்றால் அதற்கான வேலைகளை நாம் இப்பொழுதே தொடங்க வேண்டும்.

இன்னொன்று முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன். பாலிடெக்னிக்குகளை இப்பொழுது அதிகமான அளவில் ஆரம்பித்து வருகிறோம். பதினேழு பாலிடெக்னிக்குகள் இப்பொழுது நடந்து வருகின்றன. புதிதாக 3 பாலிடெக்னிக்குகள் கன்னியாகுமரி, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய ராஜ்யங்களில் ராஜ்யத்துக்கு ஒன்று வீதம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.. அதற்கு அடுத்தாற்போல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷத்தில் சில பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க முடியும் என்று நினைக்கிறேன். மற்ற இடங்களிலும் அவசியம் இருக்கிறது. எங்கெங்கு அவசியம் என்பது பற்றி அப்பொழுது ஆராய்ந்து முடிவு செய்துகொள்ளலாம். என்ஜினீயரிங் பட்டப் படிப்பு பெற்றவர் ஒருவர் வந்தால் குறைந்தபட்சம் 4 பேர் பாலிடெக்னிக்குகளில் படித்தவர்கள் வெளி வருகிறார்கள். என்ற நிலைமை இருந்தால்தான் படிப்பு வீணாகாத நிலைமை இருக்கும், இல்லையென்றால் படிப்பு வீணாகிவிடும் என்பதற்கான கணக்கு இருக்கிறது. இல்லையென்றால் சாதாரணமான டிப்ளோமா பெற்றவர்கள் செய்யக் கூடிய வேலையைக் கூட எஞ்சினீயரிங் பட்டப் படிப்பு படித்தவர்கள் செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஒரு இஞ்சினீயர் வேலை செய்தால் 4 டிப்ளோமா பெற்றவர்கள் தேவை என்ற கணக்கில் பாலிடெக்னிக்குகளை அதிகப்படுத்த வேண்டும். அதற்கு மேல் கல்லூரியில் படித்துவிட்டு வேலை 1-30 p.m.
இல்லை என்று சொல்வதற்குப் பதிலாக பல்வேறு தொழிற் கல்வியை ஏற்படுத்த வேண்டும் என்பதும் நோக்கம். அதற்காக அநேகம் தொழிற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் எல்லாம் ஏற்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படிப் பல்வேறு காரியங்களைச் செய்துகொண்டிருக்கும் போது பல்வேறு குறைகள் நமக்கு உண்டாகின்றன. ஆங்காங்கு குறைகளையும் நீக்குவதற்கு நாம் முயற்சி செய்து வருகிறோம்.

குறிப்பாக இரண்டு மூன்று நாட்களாக இங்கு ஒரு விஷயமும் சொல்லப்பட்டது, பாட புத்தகம் சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு குறையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தக் குற்றம் ஏற்படாமல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய கடமை நம்முடையது. ஐம்பதாயிரம் மாணவர்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்கிறேன். அந்த மாதிரிக் குற்றங்கள் இனி ஏற்படாமல் இருப்பதற்கும்—இந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு—தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதன் மூலமாகச் சர்க்கார் எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் இப்படித்தான் ஆகும் என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. சில பேர் நினைக்கிறார்கள். பத்திரிகையிலும் எழுதுகிறார்கள். பாட புத்தகம் வெளியிடுகிறவர்கள் சர்க்கார் இந்தக் காரியத்தைக் கைவிட்டுவிட வேண்டும் என்பதற்கு எவ்வளவு முயற்சி செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் ஒரு விஷயத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன், ஒரு அதிகாரி கலெக்டராக நியமிக்கப்பட்டவுடனேயே அவருக்கு ஏராளமான தந்திகள்—சேலத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடனே—டெக்ஸ்ட் புக் பப்ளிஷர்களிடமிருந்து வந்தது என்று குறிப்பிட்டார். அவருக்கே ஒன்றும் புரியவில்லையாம். ஆனால் பாட புத்தகங்களை அந்த அந்த ஜில்லா கலெக்டர்கள்தான் அங்கீகரிக்க வேண்டும் என்று இப்பொது புதிதாக வருகிற ஏற்பாடு அப்புறம்தான் அவருக்கே தெரிந்ததாம். அதற்கு முன்னாலேயே—அவர் தயவைப் பெற வேண்டும் என்று—எவ்வளவு ஊக்கமாக, ஆர்வம் செலுத்தி, பிரசுரகர்த்தர்கள் நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம். ஆனால், இந்த மன்றத்தில் ஒரு விஷயத்தை உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாட புத்தகங்களை அரசாங்கமே பிரசுரிக்க வேண்டும் என்கிற கொள்கையில் எவ்வித மாறுதலும் கிடையாது. முதல்

[Sri C. Subramaniam] [16th March 1959

படியாக ஆரம்ப வகுப்புப் பாட புத்தகங்களை அரசாங்கமேதான் வெளியிடப் போகிறது. அந்தக் கொள்கையை மாற்றுவதாக இல்லை. அதற்காகவே தனியாக ஒரு அச்சகம் ஏற்பட வேண்டும் என்ற முறையில் வெளி நாட்டிலிருந்து அதைத் தருவிக்க அந்நியச் செலவாணியும் பெற்றாகி விட்டது. அச்சு இயந்திரத்தையும் சீக்கிரமாகத் தருவித்து நாமே அச்சிடு வதற்கு வேண்டிய முயற்சிகளும் செய்யப்பட்டு வருகிறது. அடுத்த ஆண் டுக்குள் செயல்படத் தொடங்கிவிடலாம். பாட புத்தகங்களை சர்க்காரே அச்சிடுவது என்றால் சர்க்கார் தங்கள் கொள்கையைப் பரப்புவதற்காக இந்தத் திட்டத்தைப் போடவில்லை. சர்க்காரில் உள்ள அரசியல் வாதிகள் யாரும் புத்தகம் எழுதப் போவதில்லை. மந்திரிகள் யாரும் புத்தகங்களை எழுதப்போவதில்லை. இந்தக் கல்வித் துறையில் உள்ள அறிஞர்கள், புல வர்கள்—மேதைகள்—இவர்களைக்கொண்டு சர்க்கார் வரையறுத்திருக்கிற பாட திட்டங்களை ஒட்டி இந்தப் புத்தகங்களில் எவ்வித குறைபாடுகளும் இன்றி சர்க்காரே அச்சிடுவதற்கு முடிவு செய்தாகிவிட்டது. பிழைகள் ஏற்படாமல் இருப்பதற்கும், வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அங்கத்தினர்கள் எல்லோருடைய பூரண ஒத்துழைப்பும் இருக்கும் வரையில் இத் திட்டத்தை மிக வெற்றிகரமாக நிறைவேற்ற முடி யும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு.

மேலும் இன்னொன்று. சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்கிற கொள்கையை வகுத்துக்கொண்டு நாம் செயல்படுகிறோம். நம்முடைய கொள்கையின் பிரகாரம் பெரியவர்களுடைய மனதை மாற்றி விடுவது கஷ்டம். குழந்தைகளுடைய மனோபாவத்தைத்தான்—அதுவும் குழந்தைப் பருவத்தில் இருந்தே இந்தக் கொள்கை அடிப்படையில் நன் றாக வளர்க்க வேண்டும். சாதி பேதமற்ற, ஏற்றத் தாழ்வற்ற சமுதாய உணர்ச்சியை சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே அவர்களிடத்தில் உருவாக்கி விட வேண்டும் என்கிற கொள்கை அடிப்படையில் தான் நமது கல்வித் திட்டத்தை உருவாக்கிக்கொண்டு நாம் செயல்பட்டாக வேண்டும். கல்வி இலாகா அதற்கான முயற்சிகளை எல்லாம் எடுத்துக்கொண்டாக வேண்டும். கல்வி இலாகாவின் மூலமாகத்தான் உண்மையிலேயே இப்படிப்பட்ட கொள்கையை—மனோபாவ மாற்றத்தை உண்டாக்க முடியும் என்பதை சபையில் உள்ள அங்கத்தினர்கள் யாவரும் உணர்வார்கள். அப்படிப்பட்ட பெரும் பணியாற்றி வருகிற இந்த இலாகாவுக்கு 13 கோடி ரூபாய் சொச்சம் செலவு செய்வதை அதிகம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆகவே 100 ரூபாய் குறைக்க வேண்டுமென்ற வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொண்டு இந்த மானியத்தை ஏகமனதாக எல்லோரும் ஏற்று அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.

1-36 p.m. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 13,61,63,000 under Demand XVI —Education—be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 13,61,63,000 under Demand XVI—Education.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The House will now rise for lunch and meet again at 3 p.m. to-day.

The House then rose.



## (After Lunch—3 p.m.)

(Mr. Speaker in the Chair.)

### III.—GOVERNMENT BILL.

THE MADRAS DISTRICT MUNICIPALITIES (EXTENSION TO THE TRANSFERRED TERRITORY) BILL, 1959 (L.A. BILL NO. 1 OF 1959).

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Mr. Speaker, I beg to move—

'That the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 (L.A. Bill No. 1 of 1959) be taken into consideration.'

Sir, at present, the Travancore District Municipalities Act, 1116 (Travancore Act XXIII of 1116) is in force in the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district. All the five municipalities in the transferred areas are governed by this Act.

There is no provision in the State Reorganization Act empowering a State Government to extend their laws to territories transferred to that State on reorganization. What is contemplated in that Act is only an adaptation or modification of the law in force in the territories so transferred. Hence it will not be possible to extend the laws in force in the State of Madras to the transferred territories and repeal the law in force in those territories under that Act.

In view of this legal position, the Travancore District Municipalities Act was examined to find out what adaptations it required under the States Reorganization Act. It was found that there were many differences between the provisions of the Travancore District Municipalities Act and the Madras District Municipalities Act.

It has therefore been considered necessary that the Madras District Municipalities Act may be extended to the transferred areas by undertaking legislation duly making modifications in the Madras District Municipalities Act to suit local conditions in the transferred area and that the Travancore District Municipalities Act should be repealed. It is therefore necessary that we should proceed with the proposed legislation. I therefore move that the Bill be taken into consideration.

MR. SPEAKER: Motion moved—

'That the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 (L.A. Bill No. 1 of 1959) be taken into consideration.'

SRI T. S. RAMASWAMY PILLAI: Sir, I move—

'That the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 (L.A. Bill No. 1 of 1959) be referred to a Select Committee consisting of . . . Members of the Assembly.'

SRI M. JAGANNATHAN: Sir, I second it.

MR. SPEAKER : Amendment moved—

'That the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 (L.A. Bill No. 1 of 1959) be referred to a Select Committee consisting of . . . Members of the Assembly.'

* SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று என் திருத்தம் கூறுகிறது. இந்தச்சபையில் அநேகமாக இப்போதுதான் கோரம் சேர்ந்திருக்கிறது. கோரம் சேருவதற்கு சிறிது நேரம் ஆனது என்பதை கனம் சபாநாயகர் அறிந்திருப்பார். இப்போது கன்னியாகுமரி அங்கத்தினர்கள் பலர் இங்கே இல்லை. கனம் மந்திரி கன்னியாகுமரியிலிருந்துதான் வருகிறார். இந்த மசோதாவில் உள்ள அம்சங்கள் கன்னியாகுமரிப் பிரதேசத்திற்கு விஸ்தரிக்கப்படும்போது அப் பகுதி எவ்வாறெல்லாம் பாதிக்கப்படும் என்பதைப் பற்றி எல்லாம் சாங்கோ பாங்கமாக விவாதிக்க வேண்டும். மேலும் எவ்வளவு ஜனத்தொகை உள்ள இடங்களில் முனிசிபாலிடிகள் இருக்கின்றன, இந்த விதிகள் கன்னியாகுமரி பிரதேசத்திற்கு எவ்வாறு பொருந்தும்—சில முனிசிபாலிடி களில் பாபுலேஷன் குறைவாக இருக்கிறது, சில முனிசிபாலிடிகளில் வருமானம் குறைவாக இருக்கிறது—எந்த முனிசிபாலிடிகளை எவ்வாறு எங்கே சேர்த்திருக்கிறோம் என்பனவற்றை எல்லாம் சாங்கோபாங்கமாக விவாதிக்க வேண்டும். இன்னும் பல விஷயங்களையும் சாங்கோபாங்க மாக ஆராயவேண்டும். எனவே இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டும். வேண்டுமானால், பொறுக்குக் கமிட்டியின் ரிப்போர்ட்டை இங்கே 31-ம் தேதிக்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டுமென்றால், அதற்குரிய நிபந்தனையுடன் இம் மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பலாம். எனவே இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் சபாநாயகர் அவர்களே, முனிசிபாலிடிகளைப் பொறுத்த வரையில், 1920-ம் வருஷத்திய சென்னைச் சட்டம் இங்கே அமுலில் இருக்கிறது. சென்னையி லுள்ள மற்றப் பகுதிகளுக்கு அமுலாகும் இந்தச் சட்டத்தையே கன்னியா குமரி, செங்கோட்டை பகுதிகளுக்கும் விஸ்தரித்தால் காரியாதிகளைக் கவனிப்பது இலகுவாக இருக்கும். இப்போது கன்னியாகுமரி பகுதியில் வேறு சட்டங்கள் அமுலில் இருப்பதால் அங்குள்ள காரியங்களைக் கவனிப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே எல்லாப் பகுதிகளிலும் ஒரே சட்டம் அமுலில் இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியில் எப்போதுமே ஒரு தனிப் பட்ட சட்டம் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்பவில்லை. அங்கே பல விவகாரங்களில், திருவிதாங்கூர், சட்டப்படி நடக்க வேண்டுமா அல்லது சென்னைச் சட்டப்படி நடக்க வேண்டுமா என்ற சந்தேகம் ஏற்பட்டு வருகிறது. இச் சிக்கல்களை நீக்குவதற்காகவே இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கின்றது.

கழிந்த சட்ட சபையில் இதைக் கொண்டுவந்தபோது இதைப் பின்னால் எடுக்க வேண்டுமென்று இப்பொழுது பேசிய அங்கத்தினரே பேசினார். காலதாமதம் ஏற்படுவதால் இந்தச் சட்டங்களை அங்கு அமுலுக்குக் கொண்டு வர முடியாமல் பல கஷ்டங்கள் நேரிடுகிறது. ஆகவே, இந்த இணைப்புச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டியிருப்பதால், இதற்கு எதிராகக் கொடுத்திருக்கும் பிரேரணையை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

MR. SPEAKER : Is the hon. Member Ramaswamy Pillai withdrawing his amendment?

SRI T. S. RAMASWAMY PILLAI : I am not pressing my amendment, Sir.

The amendment was, by leave, withdrawn.



MR. SPEAKER : The question is—

That the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 (L.A. Bill No. 1 of 1959) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

*Clause 3.*

MR. SPEAKER : The motion is—

That clause 3 do stand part of the Bill.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த
மூன்றாவது பிரிவில் இருக்கக்கூடிய ஒரு சில விவரங்களை மட்டும் இச் சபை
யின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இரண்டாவது உப
பிரிவில்,

'Any reference in the principal Act to a law which is not in force
in the transferred territory on the said date shall, in relation to the
transferred territory, be construed as a reference to the corresponding
law if any, in force in the transferred territory on the said date'.

என்று அமைந்திருக்கிறது. இப்பொழுது இருக்கக் கூடிய பிரின்ஸிபல்
ஆக்ட்டில், அதாவது மெட்ராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிஸிபாலிடீஸ் ஆக்ட்டைப்
பூராவையும் பரிசீலனை செய்து பார்த்தால், இந்தச் சட்டத்தில் வேறு எந்
தெந்தச் சட்டங்களைப் பற்றி "ரெபர்" செய்யப்பட்டிருக்கிறது என்று பூரா
வையும் படித்துப் பார்த்தால் தெரிந்துகொள்ள முடியும். அதில் இருக்கக்
கூடிய அத்தனை சட்டங்களுக்கும் "கரஸ்பாண்டிங்" சட்டம் என்னவென்
றும், அதன் லிஸ்ட் இப்பொழுது இல்லை. இந்தத் திருத்த மசோதாவி
லேயே ஏற்கனவே முன் இருக்கிற ஆக்ட்களுக்கு கரெஸ்பாண்டிங் சட்டங்கள்
என்னவென்று ஒரு ஷெடியூலை இதில் சேர்த்திருந்தால் சந்தேகத்திற்கு
இடமில்லாமல் அமைந்திருக்கும் என்பதே எனது தாழ்மையான கருத்து.
அடுத்தபடியாக, மூன்றாவது உப பிரிவிலே

'Any reference to the Travancore District Municipalities Act, 1116
(Travancore Act XXIII of 1116), in any existing law which continues
to be in force in the transferred territory after the said date shall, in
relation to that territory, be construed as a reference to the principal
Act'.

என்று இருக்கிறது. இந்த உப பிரிவைப் பற்றி எனக்கு ஒரு சந்தேகம்
ஏற்படுகிறது. "எக்ஸிஸ்டிங் லா" என்னவென்று வரையறுக்கப்படும்
போது இரண்டாவது பிரிவின் "பி" உப பிரிவில் எந்தச் சட்டமன்றமோ,
வேறு ஒரு அதிகாரியோ, ஒரு சட்டம், ஆர்டினன்ஸ், அல்லது ப்ராக்ள
மேஷன் விடுத்திருந்த போதிலும் இந்த டெபனிஷனில் இப்பொழுது எக்
ஸிஸ்டிங் லா என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது
வேறு எந்தெந்தச் சட்டங்கள் அந்தப் பகுதியில் இன்று அமுலில் இருக்
கிறதோ அந்தச் சட்டங்களில் எல்லாம் திருவாங்கூர் ஆக்டைப் பற்றிக்
குறிப்பு இருந்தால் அந்த இடங்களில் எல்லாம் மதராஸ் டிஸ்ட்ரிக்ட் முனி
ஸிபாலிடீஸ் ஆக்ட் என்ற சட்டத்தைக் குறிப்பதாக இருக்கும் என்ற முறை
யில் மூன்றாவது உப பிரிவு அமைந்திருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது
வேறு சட்டங்களில் என்று சொல்கிறபோது ஒரு வேளை மத்திய அரசாங்கம்

இயற்றக் கூடிய சட்டங்களைக் கூட அது குறிக்குமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது இன்றையதினம் அமுலில் உள்ள ஏனைய சட்டங்களில் எந்தெந்த இடத்தில் திருவாங்கூர் டிஸ்ட்ரிக்ட் முனிஸிபாலிடீஸ் ஆக்ட் என்றிருக்கிறதோ அந்த இடத்தில் மதறாஸ் டிஸ்ட்ரிக்ட் முனிஸிபாலிட்டீஸ் ஆக்ட் என்று வாசிக்க வேண்டுமென்று அமைக்கும்போது அந்தச் சட்டங்கள் ஒவ்வொன்றையும் திருத்துவதற்குப் பதில் இந்தச் சட்டத்திலேயே திருத்துவது என்பது நல்ல முறையில் இருக்குமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அவசியம் ஏற்படுகிறபோது ஒவ்வொரு சட்டத்தையும் தனித் தனியாக மாற்றி அமைப்பது சரியாக இருக்குமே தவிர, எல்லாச் சட்டங்களுக்கும் சேர்த்து ஒரே திருத்தமாக இந்தச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவருவது எந்த அளவு சரியாக இருக்கும் என்பதைப் பற்றி எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. அடுத்தபடியாக நாலாவது பிரிவில்,

'Any reference by whatever form of words on any existing law to any authority compctent at the date of the passing of that law . . .

என்று இருப்பதை அர்த்தம் செய்து பார்க்கிறபோது இப்பொழுது இருக்கக் கூடிய எந்தச் சட்டத்தைப் பற்றியும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் நாம் திருத்தம் கொண்டுவருவதற்கு முக்கிய நோக்கம் ஏற்கனவே இருக்கிற மதறாஸ் டிஸ்ட்ரிக்ட் முனிஸிபாலிடீஸ் ஆக்ட் என்ற சட்டத்தின் கீழ் எந்தெந்த அதிகாரி என்று குறிப்பிட்டிருக்கிறோமோ அந்த அதிகாரியைப் பற்றிய விளக்கம் இந்த உப பிரிவில் அமைகிறது. எந்த சட்டத்தைத் திருத்த இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்த சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிற அதாரிட்டி என்றிருந்தால் அது பொருத்தமாக இருக்குமே தவிர, 'Any authority competnnt at the date of the passing of that law' என்று எல்லாச் சட்டத்தையும்குறிப்பிடத் தக்க முறையில் இது அமைந்திருக்கிறது. ஆகவே 'Any reference by whatever form of words in any existing law to any authority wlth respect to the Travancore Act . . . என்றிருந்தால் அது மிகவும் பொருத்தமாயிருக்கும். 'any authority competent at the date of the passing of that law' என்று இருப்பதற்குப் பதிலாக, 'any authority appointed under the Travanccre District Municpalities Act' என்றால் சரியாக இருக்கும். 'any authority competent at the date of the passing of that law' என்று சொல்கிறபோது "தட் லா" என்றால் "எக்ஸிஸ்டிங் லா" ஆகிறது. ஆக எல்லாச் சட்டங்களின் கீழும் அமைக்கும் அதிகாரத்தைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டத்தில் இருக்கக் கூடிய ஒரு அதிகாரம் என்ன என்று பார்க்கும்போது அது சரியாக இல்லை என்றுதான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, ஏழாவது உப பிரிவில்,

'For the purpose of facilitating the application of the principal Act in the transferred territory, any court or other authority may construe the principal Act with such alterations . . .

என்று அந்த அதிகாரத்தை மாற்றி அர்த்தம் செய்யக் கூடிய அதிகாரத்தை கோர்ட்டிற்கு விட்டிருக்கிறார்கள். அது அவ்வளவு பொருத்தமாக இராது. புதிதாக ஒரு சட்டம் கொண்டுவரும்போது, இந்தச் சட்டத்திலுள்ள சட்ட திட்டங்களுக்கு எல்லாம் ஒரு லீகல் கன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்க வேண்டும். அதன்படி அர்த்தம் செய்து காரியங்களை நடத்துவதுதான் சரியாக இருக்குமே தவிர, அவசியமானால் கோர்ட்டே மாறுதல் செய்து அந்தக் காரியங்களைப் பரிசீலனை செய்யலாம் என்ற முறையில் அந்த அதிகாரத்தை கோர்ட்டிற்கு வழங்குவது அவ்வளவு பொருத்தமாக இராது. ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டத்தை எடுத்துவிட்டுப் புதிய சட்டத்தை இங்கு கொண்டு வருகிறோம் என்று சொல்லும் நேரத்தில் புதிய சட்டத்தில் இருக்கக் கூடிய நுணுக்கங்கள்தான் அங்கு அமுல் செய்யப்பட வேண்டுமே



தவிர, அதற்குப் பதிலாக இடத்திற்குத் தக்கவாறு அவசியத்திற்குத் தக்கவாறு மாற்றி முடிவு செய்யக் கூடிய உரிமையை கோர்ட்டிற்குக் கொடுக்கிறபோது, கோர்ட்டுகள் சாதாரணமாக "இண்டர்ப்ரெட்டேஷன்" செய்வது, இருக்கிற சட்டத்தை அர்த்தப்படுத்துவதற்குப் பதிலாக "லெஜிஸ்லேட்டிவ் authority" சட்டம் இயற்றும் அதிகாரத்தை கோர்ட்டிற்குக் கொடுப்பது போல் ஆகும். ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்துத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, ஒரு சட்டத்தை மாற்றி இன்னொரு சட்டத்தை அதனிடத்தில் வைக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அப்படி மாற்றும்போது இடைக்காலத்தில் சில கஷ்டங்கள் ஏற்பட இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட கஷ்டங்களுக்குப் போதுமான சட்டங்கள் வகுக்க வேண்டுமென்பதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, 2, 3, 4, 7 இவைகள் எல்லாம் எந்த முறையில் அமைக்கப்பட்டால் இடைக்காலத்தில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்க முடியும் என்று கருதி இப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது சில திருவாங்கூர் சட்டங்கள் இன்னும் கன்னியாகுமரியில் அமுலில் இருக்கின்றன. மற்றச் சட்டங்களில் திருவாங்கூர் முனிசிபல் சட்டத்தைப் பற்றிக் கண்டிருக்கலாம். அப்படி இருக்கும்பொழுது திருவாங்கூர் சட்டத்தை இப்பொழுது மாற்றுகின்ற காரணத்தினால், அந்தச் சட்டத்தை அங்கு குறிப்பிட்டிருப்பதற்கு எப்படி அர்த்தம் செய்வது என்று இந்தச் சட்டத்தில் இடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கும்பொழுது, திருவாங்கூர் முனிசிபல் சட்டம் என்று குறிப்பிட்டிருக்கிற இடங்களில் எல்லாம் 'பிரின்ஸிபல் ஆக்ட்' என்று கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கமிஷனர், ஹெல்த் ஆபீஸர், வேறு அதாரிடி பற்றி வேறு சட்டங்களில் வேறு மாதிரி குறிப்பிட்டிருக்கலாம். இப்பொழுது இருக்கக் கூடிய இன்னொரு சட்டத்தில் அப்படி குறிப்பிட்டிருக்கும்பொழுது, எந்த அதாரிடியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், பிரின்ஸிபல் ஆக்ட் பிரகாரம் அதற்கு நிகரான புதிய அதாரிடி ஏற்படுத்தப்பட்டிருந்தால் அந்த அதாரிடி என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஏழாவது உப பிரிவும், அதே மாதிரிதான். இப்பொழுது இந்தச் சட்டத்தை மாற்றிவிட்டோம். இப்பொழுது இங்கே இருக்கக் கூடிய சட்டத்தை அங்கே கொண்டுபோகிறோம். இடைக்காலத்தில் ஏதாவது கோர்ட்டு விவகாரங்கள் வரும்பொழுது, இந்தச் சட்டத்தை எடுத்துக்கொள்ள அதற்கேற்ற சிறிய மாறுதல்களைச் செய்துகொள்ளலாம், but not affecting the substance என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இடைக்காலத்தில் ஏற்பட்டிருக்கிற சில தகராறுகளைத் தீர்த்து வைப்பது அவசியம் என்பதற்காகத்தான் 7-வது உப பிரிவிலே இம்மாதிரி சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஒரு சட்டத்தை மாற்றும்பொழுது என்னென்ன செய்ய வேண்டியிருக்கிறதோ அதை அனுசரித்துத்தான் இங்கேயும் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, புதியதாக ஒன்றும் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI S. LAZAR : Just an elucidation from the Hon. Minister, Sir.

MR. SPEAKER : I do not think the hon. Member is entitled to speak again.

SRI M. JAGANNATHAN : The hon. Member wants only an elucidation.

MR. SPEAKER : The hon. Member thinks that I should allow Sri S. Lazar to speak again. But under the rules in force, he cannot be allowed.

The clause was put and carried.

[16th March 1959

*Clause* 4.

MR. SPEAKER : The motion is—

That clause 4 do stand part of the Bill.

SRI T. S. RAMASWAMY PILLAI : நான் இந்தப் பிரிவை வன்மையாக எதிர்க்கிறேன். இங்குள்ள சட்டத்தை அங்கு அமுல் செய்வதுதான் இந்த மசோதாவின் நோக்கம். சென்னை ஜில்லா முனிசிபல் சட்டத்தை கன்னியாகுமரி ஜில்லாவுக்கு விஸ்தரிப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அம்மாதிரி மாறுதல் செய்யும்பொழுது பல சிக்கல்கள் ஏற்படலாம். அந்தச் சிக்கல்களை நீக்குவதற்கு நீங்கள் வழி வகை செய்யுங்கள். அதையும் நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இங்கு இருக்கும் சட்டத்தை அங்கு மாற்றினாலும்கூட, அதே நேரத்தில் அங்குள்ள வரி விதிப்புக்கு இடம் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். அப்படி இல்லாமல் அங்கு ஏற்கனவே உள்ள வரிகளை ரத்து செய்ய வேண்டும். இங்குள்ள சட்டத்தை அங்கு கொண்டு போவதற்கு எதிர்ப்பு இருக்காது. ஒரு வேளை அந்தக் காரியத்தை செய்வதில் ஏதாவது சிக்கல் இருந்தாலும்கூட, அது நாளடைவில் சரியாகிவிடும். இப்பொழுது அங்கே ஏற்கனவே இருக்கும் விளம்பர வரி அப்படியே இருக்கும் என்று சொல்வது சரியல்ல. நான்காவது பிரிவில்,

"(1) Notwithstanding the repeal of the Travancore District Municipalities Act 1116 (Travancore Act XXIII of 1116), by section X 3, the advertisement tax which immediately before the commencement of this Act was being lawfully levied, assessed and collected by any municipality in the transferred territory for the purposes of the municipality may continue to be levied, assessed and collected by the municipality concerned in the transferred territory, . . . .

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் இந்த வரியை அங்கு மட்டும் வைக்க வேண்டும். இந்த ஷரத்தை நீங்கள் நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ராஜ்யத்தில் ஒரே மாதிரியான சட்டம் இருக்க வேண்டும், ஒரே மாதிரியான வரி விதிப்புக் கொள்கை 'இருக்கவேண்டும் என்று காரியங்களைச் செய்கிறோம். அப்படி இருக்கும்பொழுது இந்த பாரபட்சம் எதற்காக என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று நிச்சயமாக அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். இங்கு அம்மாதிரி வரி போடுகின்ற நேரத்தில் வேண்டுமானால் அங்கும் போட்டுக்கொள்ளலாம். "காணத்துக்கு என்றால் வாய் திறக்கும், கடிவாளத்துக்கு என்றால் வாய் திறக்காது" என்று சொல்லுவது போல வரி விதிப்பு இருந்தால் அதை அப்படியே வைத்துக்கொள்வது, இங்கேயுள்ள சௌகரியத்தை அங்கே செய்து கொடுப்பதில்லை என்ற முறையில் இதைச் செய்யக் கூடாது. இங்கே இருக்கும் சௌகரியத்தை அங்கேயும் ஏன் அமுல் செய்யக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் 4-வது ஷரத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : அவைத் தலைவர் அவர்களே, இந்த நான்காவது பிரிவை நண்பர் டி. எஸ். ராமசாமி பிள்ளை எதிர்த்தது போல் நானும் எதிர்க்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தை நான் சேர்ந்தவனல்ல, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சட்ட நிலைமையைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்வதற்கு எனக்கு வாய்ப்பு இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும், நான்காவது பிரிவுப்படி, இந்தச் சட்டத்திலுள்ள நன்மைகளை அங்குள்ள மக்களுக்கும் தருவதற்கு வழி வகையில்லை. இதை விடக் கூடுதலான வரியை அந்த மாவட்டத்திலுள்ள மக்கள் சுமக்க வேண்டும் என்ற நியதி நான்காவது பிரிவுப்படி ஏற்படுகிறது. மற்றொரு ஷரத்துப்படி திருவாங்கூர் சட்டத்தை



16th March 1959] [Sri M. P. Subramaniam]

முழுவதும் ரத்து செய்தாலும், அந்தச் சட்டத்திலுள்ள விளம்பர வரியை வசூல் செய்வதற்கு மட்டும் இந்த நான்காவது ஷரத்துப் பிரகாரம் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி நம்முடைய ராஜ்யத்தில் மற்ற முனிஸிபாலிடிகள், பஞ்சாயத்துக்கள் எப்படி விளம்பர வரி விதிக்கவேண்டுமென்ற சட்டத்தை அமுல் நடத்தும்பொழுது, அங்கும் அந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரலாம். இங்கு அம்மாதிரி வரி இல்லாத நேரத்தில் அங்குள்ள மக்களுக்கு மட்டும் இம்மாதிரி வரி விதிக்க வேண்டுமென்ற நியதி இருப்பது தவறு என்பதைச் சுட்டிக் காட்டி, இந்த நான்காவது பிரிவை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : திரு ராமசாமிப் பிள்ளை அவர்கள் கன்னியாகுமரியிலிருந்து வந்தாலும், சில சமயத்தில் அவர் தன்னையும் மறந்து பேசும் ஒரு பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியிலுள்ள முனிஸிபாலிடிகளுக்கு வருமானம் குறைவாக இருக்கிறது. சென்னை ராஜ்யத்திலுள்ள மற்ற இடங்களில் இருக்கும் நிலைமை அங்கு இல்லை. அதனால் இந்த விளம்பர வரியை அங்கு தொடர்ந்து வசூலிக்க வேண்டும் என்று கருதி இம்மாதிரி ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி இந்த விளம்பர வரியை இந்த ராஜ்யத்தில் மற்ற இடங்களிலும் வசூலிக்க வேண்டுமென்ற ஒரு நோக்கம் இருக்கிறது. அது பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். அநேக இடங்களில் இம்மாதிரி விளம்பர வரி வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது அதிகமாக ஏழைகளை பாதிக்கும் வரி அல்ல. ஏனென்றால், இது விளம்பரம் செய்பவர்கள் கொடுக்கும் வரிதான். இந்த வரி அந்தப் பகுதியில் விதிக்கப்பட்டால்தான் இப்பொழுது இருக்கும் செலவினங்களை ஒருவிதத்தில் சௌகர்யமாகச் சமாளிக்கலாம் என்ற ஒரு நல்ல கருத்தோடு தான் இந்த வரியை வசூலிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரியை வசூலித்தால் அங்குள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற ஒரு நல்லெண்ணத்தோடு இது செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற ஒரு நல்ல கருத்தோடுதான் இந்த நான்காவது ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை ரத்து செய்வது ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

The clause was put and carried.

Clauses 5 to 7 were put and carried.

*Clause* 8.

MR. SPEAKER : The motion is—

That clause 8 do stand part of the Bill.

SRI S. LAZAR : இந்த பிரிவை பொருத்த வரைக்கும் 'Unless the context otherwise requires, the Madras General Clauses Act, 1891 (Madras Act I of 1891), shall apply for the interpretation of the principal Act as extended to, and in force in, the transferred territory.'

என்று கூறப்பட்டிருக்கிறது. 'மதராஸ் ஜெனரல் கிளாஸஸ் ஆக்டை' பார்க்கும்பொழுது, அதிலே மூன்று சாப்டர்கள் இருக்கின்றன. மூன்று சாப்டர்களில் முதல் சாப்டரில் மூன்றாவது பிரிவில்

'In this Act and in every Madras Act made after the commencement of this Act unless there be something repuugnant in the subject or context . . . .'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல இரண்டாவது சாப்டரில் நான்காவது பிரிவில்

'This Chapter shall apply to all Madras Acts made after the commencement of this Act, unless a contrary intention appears in such Acts'.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே போல் மூன்ருவது சாப்டரில் 12-வது பிரிவில்

'This Chapter shall apply to all Madras Acts unless a contrary intention appears in any such Act, but it shall not affect anything done or commenced prior to the commencement of this Act under any enactment now in force'.

என்று கூறப்பட்டிருக்கிறது.

3-30 p.m. அப்படியிருக்சின்றபொழுது, சாதாரணமாக மற்றச் சட்டங்களில் எல்லாம் இருக்கின்ற நிலையைப் பார்த்தால் இந்த எட்டாவது கிளாஸை ஏற்றுக் கொள்வதற்கில்லை. இப்போது நிறைவேற்றப்படப்போகும் இந்தக் கிளாஸினுடைய நோக்கம் "ஜெனரல் கிளாஸ் ஆக்ட்"ல் இருக்கிறது. அந்த முறையில் பார்க்கும்போது இந்தப் பிரிவு அவசியம் இல்லை என்றே தோன்றுகிறது. ஆகவே, இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சற்று விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்தப் பகுதியில் பேசும்போது, சில முனிஸிபாலிடிகளில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதத்தைப் பார்த்தால்........

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, This is only about the General Clauses Act, Sir.

MR. SPEAKER : The hon. Member should have raised the point earlier. He can speak at third reading stage of the Bill.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, to be on the safe side, this clause is put in. No doubt the General Clauses Act aslo provides for this. But to be on the safe side, this clause is there. I do not think there can be any real objection.

The clause was put and carried.

The schedule was put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I move—

That the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 (L.A. Bill No. 1 of 1959) be passed.

MR. SPEAKER : Motion moved—

That the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 (L.A. Bill No. 1 of 1959) be passed.

SRI S. PAKKIRISAMI PILLAI : தலைவர் அவர்களே, கடைசியாக இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால் சில சந்தேகங்கள் எழுகின்றன. அதாவது இதில் கண்டிருக்கும் சில முனிஸிபாலிட்டிகளின் கீழ் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு மாறுபட்ட விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்பட்டு



களின் கீழ் இருக்கும் சிப்பந்திகள் சம்பளங்களும் ஒரே மாதிரியாக இல்லை. இந்தக் குறிப்பிட்ட முனிஸிபாலிட்டிகளில அதிகமாக இருக்கலாம். சில இடங்களில் குறைவாக இருக்கலாம். இம்மாதிரி இருந்துவருவதில் எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியாகச் சம்பள விகிதத்தை கொண்டு வரப்போகிருர்களா அல்லது, குறைந்த சம்பளம் கொடுக்கப்படும் இடங்களுக்கு எல்லாம் கூடுதலாக இருக்கும் சம்பள விகிதத்தை கொண்டு வரப்போகிருர்களா அல்லது குறைவாகச் சம்பளம் இருக்கும் பிரதேசங்களில் அலவன்ஸ் முறையில் எதாவது கொடுக்கப் போகிருர்களா, அல்லது எந்த முறையில் செய்யப் போகிருர்கள் என்பதற்கு விளக்கம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இவ்விதம் இப்போது இருக்கின்ற சம்பளங்களை திடீரென்று மாற்றுவதற்கு முடியாது. பின்னால் புதிதாக ஆட்களை நியமிக்கும்போது இந்த விஷயத்தைப் பற்றி கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

That the Madras District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 (L.A. Bill No. 1 of 1959) be passed.

The motion was put and carried and the Bill was passed.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Tuesday, the 17th March 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Procurement of rice*

* 10 *S.N.Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of rice procured in the State in 1959 so far, from the rice-dealers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A quantity of 19,392 tons in terms of rice units has been procured in this State according to reports received up to 16th March 1959. Separate figures showing the quantity procured from rice dealers alone in this State are not readily available.

SRI N. K. PALANISAMI : ஸார், அறுவடை முடிந்த பிறகும், சர்க்கார் இந்த மாதிரி பர்மிட் ஸிஸ்டம்ஏற்படுத்தியபிறகும்2லட்சம் டன் பூராவையும் கொள்முதல் செய்ய முடியவல்லை என்பதை சர்க்கார் ஒத்துக்கொள்வார்களா ? பூரா அளவையும் ப்ரோக்யூர் செய்ய வேறு ஏதாவது சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே இதைப்பற்றி விளக்கி யிருக்கிறேன். 2 லட்சம் டன்களை வாங்க முடியவ்ல்லை என்று சர்க்கார் கருதவில்லை. வாங்க முடியவில்லை என்று சொலலுவதற்கில்லை. மொத்தத்திலே 2 லட்சம் டன்கள் வாங்க வேண்டுமென்பது சர்க்காருடைய திட்டம். அவசரப்பட்டு எப்படியாவது வாங்கவேண்டுமென்பதில்லை. இனி யும் வாங்கிக்கொள்ளலாம். வேண்டியதை எப்படியும் வாங்கிக் கொள்ள லாமென்றுதான் எண்ணுகிறது.

SRI M. JAGANNATHAN : Instead of procuring the rice from the rice-dealers, as such, may I know why the Government cannot procure the same from the ryots or the mirasdars directly?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have already pointed out that the idea behind this programme is not to secure a certain quantity of rice for the requirements of the State, but effectively to enforce the price control order that has been promulgated.

SRI A. VEDARATHNAM : இந்த கொள் முதலில் தடை ஏற்படுத்திய பிறகும், நெல்லாக வெளி மாகாணங்களுக்குச் சென்று கொண்டிருந்த தற்குப் பதிலாக அரிசி இப்போது ஏராளமாக வெளியே சென்று கொண் டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? அப்படியானல், அதைத் தடுக்க ஏதேனும் முயற்சியுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரிசி ஓரளவுக்கு மற்ற மாகாணங்களுக்குப் போகிறது என்பது உண்மை. ஆனல் ஏராளமாகப் போகிறது—இது வரையில் போனதை விட அதிகமாகப் போகிறது—என்று கருதவில்லை. நெல் போகிறது என்றால் கணக்குத் தெரியாமல் போகிறது. அரிசி யாகப் போனல் எத்தனை போகிறது என்று உணர்ந்து கொள்ளலாம்.

நம் மில்களிலிருந்து தான் போவதால் எத்தனைபோகிறது என்று உணர்ந்து கொள்ளலாம். நம் மில்களிலிருந்து அரிசியை நாமும் ஓரளவு வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது.

SRI K. RAMACHANDRAN : ஸார், உபரி ஜில்லாக்களில் கொள்முதல் செய்வதுடன் கூட பற்றுக்குறை ஜில்லாக்களிலும் கொள் முதல் செய்வதால் அந்தப் பிரதேசங்களில் விலை ஏறிக்கொண்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால், பற்றுக்குறை பிரதேசங்களில் கொள்முதல் செய்வதை நிறுத்துவதற்கு உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே கூறியது போல, நாம் இப்போது கொள்முதல் செய்வது, நாம் நிர்ணயித்திருக்கிற விலைப்படி மற்ற இடங்களில் விற்கவேண்டும் என்பதற்காக, உபரி ஜில்லாககளிலும், பற்றுக்குறை ஜில்லாக்களிலும் கொள்முதல் செய்தால் தான் அதைப பிரயோகிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

SRI S. LAZAR : ஸார், ப்ரொக்யூர்மெண்ட் ஆர்டர் அமுலுக்கு வந்த பிறகு சென்ற ஒரு வார காலமாக திருச்சி போன்ற இடங்களில் மார்க்கெட்டில் அரிசி கிடைக்கவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? ஒரு ஜில்லாவிலிருந்து மற்ற ஜில்லாக்களுககுப் போகக்கூடாது என்ற உத்தரவை எடுதததுவிட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஏற்பாடுகளை எதிர்த்து வருகிறது வியாபாரிகளுடைய கிளர்ச்சி. இதெல்லாம் வியாபாரிகள் சொல்லுகிற அபிப்பிராயங்கள்.

SRI A. A. RASHEED : May I know whether rice is procured only in surplus districts or in other districts also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Rice is procured in all the districts, Sir.

*Visits to Block offices by the Minister for Electricity*

* 832 Q.—SRI T. VELUCHAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the defects noticed by the Hon. the Minister for Electricity when he visited the Alangulam Block office during August last year; and

(b) the steps taken to rectify the same?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) A blockwise list of defects noticed by the Minister for Electricity has not been recorded. The Minister has gathered certain general impressions of the working of the Community Development Programme and the measures necessary for toning up the tempo of work. They are under examination by the Government.

* 833 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்ற 1958-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் மின்சார அமைச்சரவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் சமுதாய நலத் திட்டங்கள், தேசிய அபிவிருத்தி திட்டங்களின் அலுவலகங்களின் தஸ்தவேஜிகளைப் பார்வையிட்டாரா ?

(ஆ) எந்தெந்த அலுவலகங்கள் அவரால் பார்வையிடப்பட்டன ?



(இ) அவர் பார்வையிட்ட அறிக்கை முதலமைச்சர் அவர்களிடம் தரப்பட்டதா ?

(ஈ) தவறான தஸ்தவேஜிகள் ஏதாகிலும் கைப்பற்றப்பட்டதா ?

(உ) அறிக்கையின் நகல் இச்சபையின் மேஜைமீது வைக்கப்படுமா ?

(ஊ) மற்ற அமைச்சர்களும் இதைப்போல் எல்லா இலாக்காக்களையும் பார்வையிடத் திட்டம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The following blocks in the North Arcot district were visited on the dates mentioned against each :—

| | Name of Block. | Date of visit. |
|---|---|---|
| 1 | Tiruvannamalai .. .. .. | 27th August 1958. |
| 2 | Kalasapakkam .. .. .. | 27th August 1958. |
| 3 | Polur .. .. .. | 28th August 1958. |
| 4 | Settupattu .. .. .. | 28th August 1958. |
| 5 | Pernamallur .. .. .. | 28th August 1958. |
| 6 | Arni .. .. .. | 29th August 1958. |

(c) No. As no inspection report was drawn up.

(d) No.

(e) Does not arise.

(f) No. It is left to the discretion of each Minister.

SRI T. VELUCHAMI : ஸார், அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்தபோது பி.எ.சி. மெம்பர்கள் சில ஆலோசனைகளைச் சொன்னார்கள். அந்த ஆலங்குளம் பிளாக் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருக்கிற காரணத்தினால், கட்டாயக் கல்வியை பிளாக்குகளில் அமுல் செய்யும்போது இந்த பிளாக்குக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனித் தனி நடவடிக்கைகள் பற்றி இதிலே தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRI S. M. ANNAMALAI : ஸார், அமைச்சர் அவர்கள் வந்து பார்த்த இடத்தில் கிராம சென்ஸஸ் சரிவர எடுக்கப்படவில்லை என்று அறிந்தார்கள். அதைச் சரிவர எடுக்க என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றியெல்லாம் இப்போது ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது என்று பதில் சொன்னேன்.

*Bee-hive farm and bee nursery*

* 834 Q.—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to establish Central Training-*cum*-Research Bee-hive Farm at Kodaikanal and a Bee Nursery at Surilimalai, Madurai district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A scheme for the establishment of a Central Training-*cum*-Research Bee Farm at Kodaikanal was formulated and sent to the erstwhile All-India

Khadi and Village Industries Board in 1956 for approval and sanction of funds. The Board did not approve the scheme as it was not according to its pattern and also because of the severe cut in their allotments. The scheme was, therefore, dropped.

As regards the starting of a Bee Nursery at Sirulimalai, a survey was undertaken; but no suitable site for locating the nursery was available. Further, in view of periodical spraying and dusting operations conducted with insecticides against crop pests in that area, which might kill or harm the growth of Bee colonies, the matter was dropped.

*Bee-keeping*

* 851 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தேனீ வளர்ப்பு எங்கெங்கே நடைபெறுகிறது?

(ஆ) இவற்றில் ஒவ்வொன்றிலும் எத்தனை தேன் காலனிகள் வேலை செய்கின்றன?

(இ) புதிய முறையில் தேனீ வளர்ப்பதற்கும் தேன் எடுப்பதற்கும் ஏதேனும் பயிற்சி நடைபெறுகிறதா? எங்கே?

(ஈ) தேன் பெட்டிகள் எங்கே செய்யப்படுகின்றன. அதன் கிரயம் என்ன?

(உ) இத் தேனீ வளர்ப்புத் தொழிலை விஸ்தரிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா? அதன் விபரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Bee-keeping is carried on in almost all the districts in the State.

(*b*) A statement[a] containing the particulars is placed on the table of the House.

(*c*) Short courses are conducted at the Agricultural College, Coimbatore, Gandhiniketan Ashram, Kallupatti and Y.M.C.A., Marthandam, Kanyakumari district. The subject is also taught in Rural Extension Training Centres at the Khadi Gramodyog Mahavidyalaya, Kallupatti.

(*d*) & (*e*) A statement[a] containing the particulars is also placed on the table of the House.

SRI A. VEDARATHNAM: இந்த காலனிகள் மூலமாக இதுவரையில் கிடைத்திருக்கிற தேன் எவ்வளவு? அதன் மூலமாக அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு என்று தயவுசெய்து கூற முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதெல்லாம் அரசாங்கமே நடத்துவது இல்லை. அதனால் கிடைக்கிற வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. தேன் எவ்வளவு கிடைத்தது என்பதற்கு இப்போது என்னிடம் தகவல் இல்லை. சுமாராக 36,900 காலனிகளும், 8,500 பீ-கீப்பர்களும் இப்போது இருக்கிறார்கள். இது வரையில் அவர்களெல்லாம் சேகரித்த தேனின் மதிப்பு ரூ. 2,58,300.

SRI M. JAGANNATHAN: From the statement placed on the table of the House, I find that there is one item, that is item 6 which states 'Distribution of bee-hives and equipments to hill tribes and other Backward Classes free of cost to encourage Bee-keeping among them'. May I know whether this programme has since been implemented?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir, that is also being taken up.

SRI A. VEDARATHNAM: புதிதாக மூன்று நர்ஸரிகள் ஏற்படுத்துவது உத்தேசம் என்பதாக மேஜையின் மேல் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகள் எந்த இடத்தில் வைக்கப்படும்? கோடியக்காட்டில் அங்குள்ள ஆதிவாசிகள் தேன் எடுப்பதையே தொழிலாக வைத்துக்கொண்டு இருக்கிறார்களே, அவர்களுக்கு இந்தப் புதிய முறையில் தேன் எடுப்பதில் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு சில காலனிகளையும் கொடுத்து அங்கே தேன் அபிவிருத்தி செய்ய அவர்களிடமிருந்து வேண்டுகோள் வந்ததா? அதைப்பற்றி அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: புதிதாக மூன்று நர்ஸரிகள் ஏற்படுத்தும் உத்தேசம் பற்றி பட்ஜெட்டில் விவரங்கள் இருக்கின்றன.

The programme for the development of the bee-keeping industry in this State includes the formation of Bee-keepers' Co-operative Societies in Block areas and giving them financial assistance by way of loan facilities and also technical assistance and distribution of bee-hives and equipments to hill tribes and Backward Classes free of cost to encourage bee-keeping among them.

SRI S. M. ANNAMALAI: சென்ற ஆண்டில் மூன்று இடங்களில் ஆரம்பிக்கப்பட்டதாக இந்த ஸ்டேட்மென்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த மூன்று இடங்களுக்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது? ஜவ்வாது மலையிலுள்ள பட்டரைக்காட்டுக்கு அதிகப் பணம் ஒதுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மூன்று இடங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்பதற்கு என்னிடம் விவரம் இல்லை. ஆனால், இந்த ஸ்தலங்களிலே எவ்வளவு வேண்டுமோ அந்த அளவுக்கு செலவு செய்யப்படும்.

*New Elementary Schools*

* 835 *Q.*—SRI R. SRINIVASA IYER: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ல் நமது மாகாணத்தில் எத்தனை ஆரம்பப்பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க கல்வி இலாகா திட்டம் வகுத்தது?

(ஆ) இதுவரை எத்தனை ஆரம்பிக்கப்பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Nine hundred schools were permitted to be opened under the Unemployment Relief Scheme and 1,735 new schools or additional classes under the Second Five-Year Plan.

(*b*) Three hundred and thirteen schools under the Unemployment Relief Scheme and 1,091 new schools or additional classes have been opened under the Second-Five Year Plan.

SRI K. VINAYAKAM: Was there not a ban on the opening of schools by private managements pending a decision by the Department whether they should be run as fee-levying or nonfee-levying

[a] Printed as Appendix 1 on pages 546-547 infra.

schools? Has it been lifted this year and if so will private managements be given permission to open schools which will follow the rules and regulations as adumbrated by the Department?

THE HON. SRI C. SUBRAMANIAM: Not yet. There is no question of ban as such. They can open schools only with the permission of the Government. The whole position will be reviewed and the revised programme will come into effect from the next academic year.

SRI M. JAGANNATHAN: May I know how many of these new schools opened are basic schools? Have the Government got any scheme for converting the schools into basic schools in future?

THE HON. SRI C. SUBRAMANIAM: These are all ordinary schools. We do have a programme for conversion of ordinary schools into basic schools. I would refer the hon. Member to my Budget speech and to the Budget proposals.

*Filter-point wells*

* 836 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI V. SANKARAN): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) how many filter points have been put down along the banks of river Vaigai; and

(*b*) how many acres of land have been benefited thereby?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 182 units.

(*b*) 1,820 acres.

*Elementary school for Keeranur*

MR. SPEAKER: The hon. Member Sri V. Arunachala Thevar is not in his place. Question No. 837, and the answer will be printed in the official proceedings.

* 837 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the local priest residing at Nanjore in Kulathure taluk, Tiruchirappalli district applied for permission two years ago to start an elementary school at Keeranur;

(*b*) whether the Tiruchirappalli District Board recommended it; and

(*c*) the reason for not granting him permission by the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

(*c*) The area in question was already provided with a school.



*Inclusion of Valavanur in the Villupuram block*

* 838 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI A. GOVINDASAMY): கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

விழுப்புரம் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தில் வளவனூர் மேஜர் பஞ்சாயத்துக் கிராமத்தை என் சேர்க்கவில்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Valavanur Panchayat has since been included in the Villupuram Block.

*Planting trees in Narasingapuram village*

MR. SPEAKER: The hon. Member Sri N. R. Thiagarajan is not in his place. Question No. 839 and the answer will be printed in the official proceedings.

* 839 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வைகை நதி உற்பத்தி ஸ்தலமான நரசிங்கபுரம் கிராமத்தில் காடு வளர்க்க சர்க்கார் போட்டுள்ள திட்டங்களென்ன ?

(ஆ) அங்கு போடப்பட்டுள்ள ரோடு மெட்டல் செய்து பஸ் போக்கு வரத்து நடத்த சர்க்காரிடம் திட்டமுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The entire Gandamanaickanur ex-zamin forests lie in Narasingapuram village According to a scheme for the rehabilitation of the forest areas, the available undisputed areas have been stock-mapped and it has been found that about 6,000 acres are suitable for teak planting and another 6,200 acres for planting soft-wood species (suitable for match industry). It has also been proposed to raise annually 50 acres of teak, 100 acres of soft-wood and 50 acres of cashew plantations from 1959–60. After watching the results, the planting programme will be stepped up during the Third Plan period.

(*b*) No, Sir.

MR. SPEAKER: Question No. 840 and other questions, that follow are to be answered by the Hon. Minister for Industries. We shall take them up later, after he arrives.

*District Educational Officers*

* 852 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1952-ம் வருஷம் முதல் 1958-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந்தேதி வரை ஆண்டு வாரியாக எவ்வளவு பேர்கள் ஜில்லா கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

(ஆ) (1) அவர்களில் நேரடியாக நியமிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(2) சர்க்கார் பாடசாலைகளில் வேலைசெய்த B.A., B.T., B.A., L.T. உபாத்தியாயர்களிலிருந்து எவ்வளவு பேர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) A statement[a] showing the particulars is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: மேஜை பேரிலே வைத்திருக்கக்கூடிய ஸ்டேட்மெண்டிலே நேரடியாக அப்பாயிண்ட் செய்யப்பட்டவர்கள் 1953-லே 13 பேர்கள் என்றும், 1957ல் உபாத்தியாயர்களாக இருந்த 11 பேர்களை

---

[a] Printed as Appendix II on page 547 infra.

எடுத்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. இப்படி குறிப்பிட்ட ஒரு வருஷத்திலே, 1953-லே, ஒரேயடியாக 13 பேர்களை நேரடியாகவும், 1957-லே ஒரேயடியாக உபாத்தியாயர்களிலிருந்து 11 பேர்களையும் எடுத்திருப்பதற்குக் காரணம் என்ன ? அன்றைக்கு இருந்த ராஜாஜி சர்க்காருடைய கொள்கை ஒரு மாதிரியும் இன்றைக்கு இருக்கும் இந்தச் சர்க்காரின் கொள்கை இன்னொரு மாதிரியும் இருப்பதா அதற்குக் காரணம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்தக் கொள்கை வேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்கிறார் ?

SRI V. K. KOTHANDARAMAN : எந்தக் கொள்கையாக இருந்தாலும் அனுபவம் பெற்றவர்களைப் போடவேண்டும் என்பதுதான். அன்றைக்கு அம்மாதிரி ஒரேயடியாக டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் நடந்திருக்க, இன்றைக்கு வேறுவிதமாக இருப்பதால் அப்படித் தோன்றுகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: 1952-53லே ஆந்திரப்பிரிவினைக்கு முன்பு 17 அதிகாரிகள் நேரடியாக நியமிக்கப்பட்டார்கள்.—ஆந்திரத்திற்கும் நமக்கும் சேர்ந்து. பிரிவினையாகும்போது ஆந்திராவுக்கு இரண்டு மூன்று பேர் போய், பாக்கிப்பேர் நம்மிடத்தில் நின்றுவிட்டார்கள். அதன் காரணமாக, நேரடியாக எடுத்த தொகை அதிகமாய்விட்டது. வருகின்ற ஆண்டிலே உபாத்தியாயர்களாக வேலை செய்து கொண்டிருக்கிறவர்களிடமிருந்து அதிகமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

*Schools without playgrounds in North Arcot District*

* 853 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா —

வடாற்காடு ஜில்லாவிலுள்ள மேனேஜ்மெண்டு பாடசாலைகளில் எந்தெந்த பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானம் இல்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : All the Secondary Schools under private managements in the North Arcot district are possessing playing areas.

*Police uniform*

* 856 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to change the uniforms of the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal under the consideration of the Government for a complete change of the uniform of the Madras Police, but there is a proposal for a change in some of the articles of uniform at present issued to certain Police subordinates.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the present uniform is neither attractive nor comfortable to the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I must admit that I am not aware of that.

SRI S. PAKKIRISAMI PILLAI: இப்பொழுது கொடுத்திருக்கும்படியான தொப்பி மிகவும் பளுவாக இருப்பதால் அதைவிட லேசாக இருக்கும்படியாக தொப்பியைச் செய்து அணியும்படியாகச் செய்வார்களா ? மேலும், இரும்புத் தொப்பி அணிவதற்கே அவசியம் இல்லாத காரணத்தால் அதைப் போடாது இருக்கும்படியாக உத்தரவுபோடுவார்களா ?





THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரொம்ப இலேசாக இருந்தால் தொப்பி காற்றில் அடித்துக்கொண்டு போய்விடும். கைகாட்டும்போதுகூட தொப்பி தலையில் நிற்காமல் பறந்துவிடக்கூடும். இரும்புத் தொப்பி, அவசியமானபோது, அவர்களுடைய பாதுகாப்புக்காக அணிகிறார்கள், எப்போதுமே அணிவது இல்லை.

SRI A. A. RASHEED : Will the Government at least replace the pattis with socks?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இன்ஸ்பெக்டர்-ஜெனரல் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார். நான் பதிலிலே சொன்னது என்னவென்றால் "Issue of half-sleeved shirts and special Police pattern shorts to head-constables and constables" பற்றி யோசனை செய்யப்படும் என்று.

SRI M. JAGANNATHAN : In view of the fact that Police constables feel it very inconvenient to wear heavy boots while on ordinary duty, will the Government consider the desirability of replacing them by some other light footwear?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : For the kind of duties that the Police have to perform, light shoes will not do.

*Teachers' Provident Fund Compulsory Insurance Pension Rules, 1955*

* 856-A *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI M. S. SELVARAJAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the benefits of the Teachers' Provident Fund Compulsory Insurance Pension Rules, 1955, extended to all categories of teachers as per the Revised Rules of 1958 have been further extended to the members of the non-teaching staff, employed in High schools;

(*b*) if so, when; and

(*c*) if not, why?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) The Government introduced this scheme for improvement of the conditions of service of teachers as a class and did not consider it necessary, mainly on financial grounds, to extend it to the non-teaching staff.

SRI M. K. SOMASUNDARAM : ஹைஸ்கூலிலே வேலை பார்க்கும் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகை க்ளார்க்குகளுக்கும் ப்யூன்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதை அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அந்த யோசனை இல்லை.

*'C' class prisoners*

* 856-C *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the average cost of maintenance of 'C' class prisoners in the Madras Penitentiary and in the District Jails?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The net cost of maintenance of a 'C' class prisoner was Rs. 346·63 during 1957.

SRI K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that in the Madras Penitentiary, there is no flush-out system with the result that the stuff collected from the dry latrines has got to be poured into the Cooum river adjacent to it which creates a nauseating smell in the City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Not only myself but the Government also are well aware of it. There is a proposal to shift the Penitentiary—or Central Jail—in the City to some other place outside the City. That is under examination and consideration.

SRI S. PAKKIRISAMI PILLAI: ரூ. 360 சில்லரை அவர்களுக்கு "மெயின்டெயின் பண்ணுவதற்கான செலவு" என்று சொல்லும்போது, சாப்பாட்டுக்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது பெரும்பாலும் சாப்பாட்டுச் செலவு.

*Board High School building, Jayankondam*

* 856-D Q.—SRI S. LAZAR (on behalf of SRI K. R. VISWANATHAN): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the District Board, Tiruchirappalli, have applied to the Director of Public Instruction, for sanction of half-grant for the construction of the Jayankondam Board High School building; and

(b) if so, the reasons for the delay in sanctioning the grant?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) The proposal for the construction of buildings for the Board High School, Jayankondam was received by the Director of Public Instruction from the District Board in November 1952. As the application was defective in certain respects it was returned for rectification. The application was again sent by the Board in November 1958 with a request that a subsidy might be sanctioned before the end of March 1959 or that the Board might be permitted to get the building constructed under the Local Development Works Scheme. As it usually takes some time for the plans to be scrutinized by the Chief Engineer and as funds for the scheme have not been provided for payment during 1958–59, the Board has been requested by the Director to get the building constructed under Local Development Works. The work has since been taken up under that scheme.

SRI S. LAZAR: ஸார், எவ்வளவு ரூபாய்க்கு அனுமதி கோரப்பட்டது, எவ்வளவு ரூபாய்க்கு அனுமதி கொடுக்கப்பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have the figures, but the building work is estimated to cost Rs. 28,000.



*High schools in the Madurai District*

* 856-E Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI V. SANKARAN): Will the Hon. the Minister for Finance be pleased to state the number of High Schools and the places where they have been opened till now from the beginning of the Scond Five-Year Plan period and the number of High Schools proposed to be opened in the rest of the period in the Madurai District and the places where they are proposed to be opened?

THE HON. SRI C. SUBRAMANIAM: 20 Schools have been opened in Madurai District till now, from the beginning of the Second Five-Year Plan Period, in the following places:—

| | |
|---|---|
| Dindigul. | Nagamalai. |
| Madurai (two Schools). | Sammattipuram. |
| Gopinaickenpatti. | Gudalur. |
| Kannivadi. | Erisdu. |
| Vembarapatti. | Vellaloor. |
| Oddanchattram. | Kadupatti. |
| Vadipatti. | Gandamanaikanur. |
| Kanayakarandampatti. | Kambai. |
| Theni. | Guzziliamparai. |
| Bodinaikanur. | |

It is not possible at present to say the number of schools that will be opened in the rest of the plan period and the places where they will be opened, in that district.

*Neyveli Project*

* 840 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the industries to be started in the public and private sectors under the Second and Third Five-Year Plans at the Neyveli Project?

THE HON. SRI R. VENKATARAMAN: Honourable Members are no doubt aware that there is the Integrated Neyveli Project executed by the Government Company, the Neyveli Lignite Corporation (Private), Limited. This integrated project provides for the following:—

(1) Mining of 3·5 million tons of lignite which will be used in the following schemes:—

(a) The Thermal Power Scheme for generating 250,000 K.W.

(b) The Fertiliser Scheme for the production of 152,000 tons of urea per annum.

(c) The Briquetting and Carbonization Scheme for the production of 380,000 tons of carbonised briquettes per annum, suitable for use as domestic fuel.

[17th March 1959

(2) Clay Washing Scheme to provide raw material for the porcelain insulator and other allied industries based on ball clay.

The schemes to be taken up in the Third Five-Year Plan by the Corporation have not yet been finalised.

In the private sector, Seshasayee Industries, Limited, Tiruchirappalli, has been granted a licence under the Industries (Development and Regulation) Act, 1951, to set up a factory for the manufacture of porcelain high tension and low tension insulation near Neyveli.

SRI N. K. PALANISAMI : நெய்வேலி லிக்னைட்டிலிருந்து, டார், பட்ரோலியம் போன்ற வஸ்துக்கள் எடுக்கவும், கோவிலிருந்து சென்னைக்கு கோல் ஸப்ளை செய்யவும், பரிசீலனை செய்யப்பட்டதா ? செய்யாவிட்டால், பரிசீலனை செய்ய எற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The schemes we have on hand are already very large. There are of course further possibilities. They will be examined in due time. But at present these are the schemes which are under way.

SRI K. ANBAZHAGAN : இதிலே தொடங்குவதாக இருக்கும், தெர்மல் ஸ்டேஷன், பெர்டிலைஸர் பாக்டரி, இவைகளுக்கு மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் ? நடைமுறை ஆண்டில் இவை செயல்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஹோல் ஸ்கீமே சென்ட்ரல் சர்க்கார் ஸ்கீம்தான். முழுப் பணமும் அவர்கள் தான் எற்றுக் கொள்ளுகிறார்கள். இதில் பல முறை திட்டங்கள் ரிவைஸ் பண்ணி, கடைசியாக ரூ. 70 கோடி ஆகும் என்று மொத்த திட்டம் போட்டிருக்கிறார்கள். பெர்ட்டிலைசர் பாக்டரி, 1962-ம் வருஷத்தில்தான் முடிவு பெறும். தெர்மல் ஸ்டேஷன், 1961-ம் வருஷத்தில் முடிவுபெறும்.

SRI M. JAGANNATHAN : In view of the fact that the technical experts are of the opinion that there are enormous raw materials available for the manufacture of ammonium sulphate, will the Government formulate a scheme for starting an industry for the manufacture of ammonium sulphate at Neyveli?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have examined the whole question and have come to the conclusion that the manufacture of double salt urea is much better and that is why it has been taken up.

SRI A. A. RASHEED : May I know whether there is a time schedule for starting all these industries?

THE HON. SRI R. VENKATARAMAN : Certainly; yes, Sir.

SRI S. LAZAR : சேஷசாயி கார்ப்பரேஷன் ஆரம்பிக்க இருக்கும் தொழிலின் மான்யபாக்சரிங் கபாஸிடி என்ன ? என்ன முதலீடு செய்கிறார்கள் ? அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது ப்ரைவேட் என்டர்பிரைஸ். கேள்விகளை சேஷசாயி கார்ப்பொரேஷனுக்குத்தான் போட வேண்டும்.



17th March 1959]

*Natural gas*

* 841 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Geological Survey of India has investigated the utilisation of the natural gas occurring at Neyappathur in Sirkali taluk, Tanjore district; and

(b) if so, the results thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The investigation is done by the State Geological Section of this Government and not by the Geological Survey of India.

(b) Equipments for collection of the gas and finding its utilization are being fabricated and the work will be taken up as soon as they are ready.

SRI N. K. PALANISAMI : எற்கெனவே, இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டும், இதுவரை காலதாமதம் என் ? பரிசீலனையினால் எற்பட்ட விசேஷ அம்சங்கள் என்னென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இங்கே எரியக்கூடிய காஸ் இருப்பதாக கண்டுபிடித்திருக்கிறார்கள். எரிபொருளை, கன்டெயினரில் கலெக்ட் பண்ணவேண்டும். இல்லாவிட்டால், the whole thing will be burnt out. அதைக் கன்டெயினரில் கலெக்ட்டு பண்ண பரிசீலனை செய்யவேண்டிய உபகரணங்கள் தயாராக இருக்கின்றன. இதன் பிறகு, மேற்கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

SRI M. JAGANNATHAN : May I know whether this is liquid gas or non-liquid gas?

MR. SPEAKER : It is gas. (Laughter.)

THE HON. SRI R. VENKATARAMAN : Probably the hon. Member is thinking of liquified gas. But it is only gas. (Laughter.)

SRI S. LAZAR : May I know the chemical components of the gas and the purposes for which they are made use of?

THE HON. SRI R. VENKATARAMAN : All that will have to await further investigation.

*Awards of Industrial Tribunals*

* 842 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of cases in the last two years where employers did not implement the awards of Industrial Tribunals; and

(b) the steps taken in general in such cases?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Complaints were received by the Government regarding non-implementation of 17 awards in the year 1957 and 28 awards in 1928.

(b) Generally when cases of non-implementation of awards are received, the managements concerned are asked to implement the award on pain of prosecution and if they still fail to implement them, prosecutions are launched against them under the provisions of the Industrial Disputes Act, 1947.

[17th March 1959

SRI J. MATHA GOWDER : தொழில் கோர்ட்டு தீர்ப்புகள் - அமுல் நடத்த கால தாமதம் ஆவதனுல், சர்க்கார் உடனடியாக அவை அமுல் நடத்த, சட்டத்தை திருத்த முன் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அமல் நடத்தாமல் இருப்ப தற்குக் காரணம் ஹைகோர்ட்டில் ஸ்டே வாங்கியதால்தான். உதாரணமாக, 1958-ல் 28 கேஸ்கள் அமல் நடத்த வேண்டியதற்கு, 25 கேஸ்களில், ஸ்டே இருக்கிறது.

*Japanese Industrial Delegation*

* 843 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether a Japanese Industrial Delegation toured the State in November 1958 to study the small-scale and cottage industries; and

(b) if so, what the recommendations of this team are?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) It is understood that a Japanese Industrial Delegation visited Madras at the invitation of a private firm and not at the invitation of the Government.

(b) Does not arise.

SRI R. KANDASAMI : ஜப்பானிய கைத்தொழில் குழுவினர் நம் ராஜ்யத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து, 16 கதிர்களைக் கொண்ட நூற்பு இயந்திரத்தை அமைக்கலாம், அது குடிசைத் தொழிலாகி, வேலை யில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சிபாரிசு செய்திருக்கிறார் களா?

THE HON. SRI R. VENKATARAMAN : எங்கே சொன்னார்கள் என்று கனம் அங்கத்தினர் சொன்னால் தேவலை. ப்ரைவேட் இண்டஸ்ட்ரியலிஸ்ட்கள் விசாரணைசெய்யச் சொன்னார்கள். சர்க்காரிடம் எந்தத் தகவலும் இல்லை.

*Half-Decker 'Vijaya'*

* 844 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI A. GOVINDASAMI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) when the half-decker "Vijaya" was purchased;

(b) the cost of this bus;

(c) whether it is under repair; and

(d) if so, from what date?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The chassis of the half-decker "Vijaya" was purchased on the 19th November 1952.

(b) The cost of this bus, including cost of construction of body is rupees seventy-three thousand six hundred and nineteen (Rs. 73,619).

(c) & (d) The vehicle was under repair from the 8th October 1958 to 13th December 1958.



17th March 1959]

SRI K. ANBAZHAGAN : இந்த "விஜயா" என்ற மாடியுள்ள பஸ்ஸை நம் சென்னை நகரத்தில் பயன்படுத்துவதனுல் போக்குவரத்துக்குச் சாதக மாக, பொது மக்களுக்கு சாதகமாக இருக்கிறது என்பதும், அதிக வரு மானத்தைத் தருகிறது என்பதும் உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு மாறாக, டபிள் டெக்கர், சென்னைக்கு உபயோகமில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்: "மெனுவபிலிட்டி" (அதற்கு தமிழ் வார்த்தை சொல்லுங்கள்), ஓடுகிறது, கஷ்டமாக இருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : 1952-ல் வாங்கப்பட்டது இவ்வளவு சீக்கிரம் பழுதானதற்கு என்ன காரணம் ?

THE HON SRI R. VENKATARAMAN : இதிலே, ஒரு ஸ்பேர் பார்ட்டு அகப்படவில்லை. அதனுல்தான், ரிபேர் செய்ய முடியவில்லை.

SRI A. A. RASHEED : May I know the capacity of the ordinary buses and the capacity of the half-decker?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not have the figures with me now. But my recollection is that if it is Mercedes Benz, it is about 40 and if it is Leyland, it is about 55. So far as the half-decker is concerned, I have no figures.

SRI K. VINAYAKAM : Sir, have the Government any statistics regarding this bus, like how much is collected by way of income from the beginning, when it was put on the road, and is it commensurate with the capital that has been invested on this bus? 9 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : The Government cannot afford to collect statistics of collections for each individual bus.

SRI M. JAGANNATHAN : Sir, arising out of the reply given by the Hon. Minister that the manoeuvrability of this bus, half-decker 'Vijaya', is difficult, if not impossible, why should the Government buy such a bus?

THE HON. SRI R. VENKATARAMAN : Only one bus was built for the purpose of experiment.

*Prizes of handloom weavers*

* 845 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-ல் புதிதாக அழகுள்ள கைத்தறி துணிகளை நெய்பவர் களுக்கு பரிசு கொடுக்க எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு செலவிடப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) An expenditure of rupees twelve thousand two hundred and eighty-four (Rs. 12,284) was sanctioned in January 1957 for implementing a scheme for the award of prizes for the best designs in handloom fabrics. Competitions were held in May 1957 at four centres in the State by grouping contiguous districts into a centre. The expenditure incurred at the four centres is as follows :—

(1) Madras Centre (comprising the districts of Madras, Chingleput and North Arcot)—Rupees two thousand five hundred and ninety-six and naye Paise sixty-two. (Rs. 2,596 nP. 62.)

[17th March 1959

(2) Madurai Centre (comprising the districts of Madurai, Ramanathapuram and Tirunelveli)—Rupees two thousand two hundred and seventy-eight (Rs. 2,278).

(3) Tiruchirappalli Centre (comprising the districts of South Arcot, Tanjore and Tiruchirappalli)—Rupees two thousand two hundred and fifty-two and naye paise seventy-three (Rs. 2,252 nP. 73).

(4) Salem Centre (comprising the districts of Salem and Coimbatore)—Rupees four thousand one hundred and eighty-four (Rs. 4,184).

* 846 Q.—SRI M. JAGANNATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the All-India Handloom Board has approved the Prize Award Scheme for the benefit of the weavers within and outside the co-operative field;

(b) whether any competitions were held so far;

(c) if so, when and where; and

(d) the value of prizes distributed?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes, Sir.

(b) & (c) Competitions are being held from the year 1953–54 onwards. In 1953–54 and 1954–55 the competitions were held in Madras only. In 1955–56, the competitions were held in four centres, viz., Madras, Salem, Cannanore and Madurai centres.

In 1957–58, the centres chosen were Madras, Salem, Tiruchirappalli and Madurai.

In 1958–59, the centres chosen were Madras, Madurai, Cuddalore and Coimbatore.

(d) The total value of prizes distributed was rupees four thousand eight hundred and fifty (Rs. 4,850) in 1953–54; rupees six thousand and three hundred (Rs. 6,300) in 1954–55; rupees twelve thousand three hundred and twenty-five (Rs. 12,325) in 1955–56 and rupees nine thousand nine hundred and seventy-five (Rs. 9,975) in 1957–58.

SRI S. M. ANNAMALAI: இந்த திட்டத்தினுடைய முக்கிய நோக்கம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: கைத்தறி நெசவில் சிறந்த ஆடைகளை யார் நெய்கிறார்களோ அவர்களுக்கு பரிசு கொடுப்பதன்மூலம் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதுதான்.

SRI M. JAGANNATHAN: May I know whether the amount allotted for the purpose of distribution of prizes was fully utilized for that purpose or whether any amount was surrendered back to the Government?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒரு ஆயிரம் ரூபாய் குறைவாக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.



17th March 1959]

SRI S. M. ANNAMALAI: 1957-வது ஆண்டில் 12,284 ரூபாய் சாங்க்ஷன் செய்யப்பட்டது என்றும் 11,308 ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த வித்யாசம் ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: இதைத்தான் ஸ்ரீ ஜெகந்நாதன் கேட்ட கேள்விக்கு பதிலில் சொன்னேன், ஒரு ஆயிரம் ரூபாய் குறைவாக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று. பரிசு கொடுப்பதில் கொஞ்சம் முன் பின் இருக்கத்தான் செய்யும். ஆயிரம் ரூபாய் குறைவாக செலவழித்தது ஒரு பெரிய காரியம் அல்ல.

SRI A. A. RASHEED: Sir, may I know whether these designs are patented to protect them from being copied by mill owners?

THE HON. SRI R. VENKATARAMAN: I do not think so but it is a good suggestion. Probably the handloom weavers may think of going in for patents.

*Multi-purpose co-operative society*

* 847Q.—SRI T. VELUCHAMI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நெல்லை ஜில்லா, ஆலங்குளம் பிளாக்கில் (1) காடுபட்டி கிராமத்தில் ஒரு பலநோக்குக் கூட்டுறவு சங்கமும் (2) மருக்காலங்குளம் கிராமத்தில் ஒரு பலநோக்குக் கூட்டுறவு சங்கமும் அமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI R. VENKATARAMAN: The proposal to start a multi-purpose co-operative society in Kadupatti village in Alangulam Block of Tirunelveli district has been approved and the society registered on 23rd January 1959.

A proposal to organize a similar society in Marukkalangulam village has been received by the Deputy Registrar, Tirunelveli, and he has forwarded it to the District Co-operative Central Bank, which is the financing agency for the proposed society, for its recommendation. Further action to register the society will be taken on receipt of the report of the Central Bank.

SRI T. VELUCHAMI: சில மெம்பர்கள் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு ரிஜிஸ்தர் செய்வதற்கு கூட்டுறவு சென்ட்ரல் பாங்கு பைனான்சிங் ஏஜென்சி ரெக்கமண்ட் செய்ய கொஞ்சம் காலதாமதம் செய்கிறார்கள். ஒருக்கால் அவர்கள் சில கிராமங்களில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு ஒத்தாசை செய்வதற்கு சம்மதிக்கவில்லை என்றால் அந்த கிராமத்தில் கடன் வசதி செய்வதற்கு சர்க்கார் வேறு என்ன மாற்று திட்டம் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: கடன் கொடுக்கிறது என்றால் யாருடைய பொறுப்பிலாவதுதான் கொடுக்கவேண்டும். சென்ட்ரல் பாங்கு அதையெல்லாம் யோசனை செய்துதான இந்த பாங்குகளை வைக்கலாம் என்று சிபாரிசு செய்கிறார்கள். அவர்கள் சிபாரிசு இல்லாமல் பாங்குகள் ஆரம்பித்து யார் வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற நிலைமை ஏற்பட்டால் கொடுக்கிற பணத்திற்கு பொறுப்பு யாரும் ஏற்றுக்கொள்ளாத நிலைமை ஏற்படுகிறது. எந்த விதமான யோசனையும் செய்து சென்ட்ரல் பாங்கு ஒன்றும் செய்யவில்லை என்றால் அதை ரிஜிஸ்த்ரார் அவர்களுக்கு எழுதினால் அவர்கள் அதைப்பற்றி பரிசீலனை செய்வார்கள்.

*Co-operative Farming Society for Devadhanam village*

* 849 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any application was received recently for registering a Co-operative Farming Society in Devadhanam village, Srivilliputhur taluk, Ramanathapuram district; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

*Copper*

* 850 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. SELVARAJ): கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) செப்பு (Copper) உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நம் மாநிலத்தில் நிறுவ உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானால், எந்த இடத்தில் ? எப்பொழுது ?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) So far as the Government are aware there is no proposal to start a factory for the manufacture of copper in this State.

(b) Does not arise.

SRI S. M. ANNAMALAI: சார், செப்பு உற்பத்தி செய்தால் அதிலிருந்து செப்புக் கம்பிகள் அதிகமாக உற்பத்தி செய்யலாம். அது மின்சாரத்துக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆகவே நம்முடைய மாநிலத்தில் செப்பு உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: செப்பு எங்கு இருக்கிறது என்பது தெரியவில்லை. This is one of the world scarce commodities.

*State Transport*

* 854 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) how many new buses have been purchased for the City Transport in 1958;

(b) at what cost; and

(c) the average number of buses put on the road per day?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Sixty (60).

(b) The cost of chassis is rupees thirty-six thousand one hundred and fourteen and naye paise thirty-six (Rs. 36,114-36 nP.), inclusive of sales tax. The estimated cost of construction of a bus body is rupees fourteen thousand (Rs. 14,000).

(c) The average number of buses put on the road for the last seven months is three hundred and thirty-two (332) per day exclusive of specials and spares.



* 855 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI): கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருடம் சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து ஸ்தாபனத்துக்கு புதிய பஸ்கள் வாங்கப்பட்டனவா ?

(ஆ) சென்னை நகருக்கு எத்தனை ?

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எத்தனை ?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes, Sir.

(b) Sixty (60).

(c) Twelve (12).

SRI N. K. PALANISAMI: சார், 350-க்கு மேற்பட்ட பஸ்கள் அடிக்கடி ரோடிலே நிற்பதைத் தவிர்க்க அங்கு இருக்கக்கூடிய "ஒர்க் ஷாப்" முறைகளை மாற்றியமைத்து இந்த பஸ்களை உடனடியாக ரிப்பேர் செய்ய திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN: பஸ்கள் எல்லாம் ரோடில்தான் ஓடவேண்டும். ஆகையால் ரோடில் நிற்பது 350-க்கு மேல் இருக்கிறது என்று சொன்னால் நான் என்ன செய்வது ? "ப்ரேக் டௌன்" பற்றி ஒரு பெரிய தவறான அபிப்பிராயம் இருக்கிறது. நாம் இன்றைக்கு 460 பஸ்கள் வைத்துக்கொண்டிருந்தால் "ப்ரேக் சர்டிபிகேட்" வாங்கி வருஷந்தோறும் ஓவர்ஹால் பண்ணுவதற்காக ஷெட்யூல் போட்டால் நாள் ஒன்றுக்கு 90, 100 பஸ்கள் ஓடாமல் சட்டப்படி வைத்துக் கொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது. "ப்ரேக்டௌன்" இருப்பதைக் குறைக்கவேண்டுமென்பதுதான் சர்க்காருடைய நோக்கம். அதற்காக இப்பொழுது ஒரு "இண்டஸ்ட்ரியல் யூனிட்டை" ஏற்படுத்துவதற்காகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

SRI K. ANBAZHAGAN: சென்னை நகரத்தில் சராசரியாக ஓடுகிற பஸ்கள் எண்ணிக்கைக்கும் பிரயாணம் செய்கிறவர்கள் எண்ணிக்கைக்கும் உள்ள தொடர்பு எப்படி இருக்கிறது ? நெருக்கடி அதிகமாக இருந்தால் பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: நகரம் வளர்ந்து கொண்டிருப்பதற்குத் தக்கபடி பஸ்களின் எண்ணிக்கையையும் நிச்சயமாக அதிகப்படுத்தவேண்டும். அதைப்பற்றிய மானியம் வரும்போது அதைப் பற்றி என்னிடம் இருக்கக்கூடிய புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறேன்.

SRI N. K. PALANISAMI: சர்க்கார் பஸ்களை வாங்குவதைவிட இப்பொழுது மத்திய சர்க்கார் கார்கள் உற்பத்தி செய்யப்போவதால், மத்திய சர்க்காரிடம் இருந்து பஸ்களை வாங்க இந்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: அது வரையில் பஸ்கள் வாங்காமல் இருப்பதா என்று எனக்குப் புரியவில்லை.

SRI M. JAGANNATHAN: Sir, is it a fact that many of the buses plying in the City of Madras are not roadworthy?

THE HON. SRI R. VENKATARAMAN: I do not think so, Sir. There are one or two, occasionally out of order. A stray case like this always creates the wrong impression. It is like the case of the "man biting the dog" that catches the news.

SRI A. A. RASHEED: Sir, has any *de luxe* bus been purchased in 1958 for the use of the tourists?

[17th March 1959

THE HON. SRI R. VENKATARAMAN : We have one *de luxe* bus, Sir.

*Cycle Manufacturing and Assembly Unit in Udayarpalayam taluk*

MR. SPEAKER : The hon. Member Sri K. R. Viswanathan is not in his seat. Question No. 856-B and the answer will be printed in the proceedings.

* 856-B *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Cycle Manufacturing and Assembly Unit in Udayarpalayam taluk, Tiruchirappalli district;

(*b*) if not, in which other places such units are proposed to be started;

(*c*) the reasons for choosing those places; and

(*d*) whether any initiative and efforts are necessary from private sector for starting such a factory?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Vellore and Tanjore;

(*c*) The Unit at Vellore is to be set up as an adjunct to the General Purposes Engineering Workshop utilizing the facilities available in that workshop for electroplating work. These places have been chosen as part of the programme for even distribution of industries in various parts of the State and in view of the industrial backwardness of the districts.

(*d*) Yes, Sir. The private sector should possess the requisite background and aptitude to start a Cycle Assembly Unit. The prior approval of the Government of India is also necessary. It is only with a view to encourage the establishment of ancillary units for the manufacture of cycle parts by the private sector these departmental units have been sanctioned.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959-60—*cont.*

DEMAND XXI—CO-OPERATION.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,86,49,100 under Demand XXI—Co-operation.'

கனம் சபாநாயகர் அவர்களே, ஓரிரண்டு வார்த்தைகள் இப்பொழுது சொல்லி இந்த மானியக்கோரிக்கையை நான் பிரேரேபிக்கிறேன்.

கடந்த ஆண்டு—1958-59-ம் வருஷத்தில் என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் அச்சிட்டு கனம் அங்கத்தினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக 7-வது பக்கத்தில் இருக்கின்ற சில புள்ளி



17th March 1959] [Sri R. Venkataraman]

விவரங்களை மாத்திரம் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1958-59-ல் 80 சத விகிதம் உள்ள கிராமங்களில் கூட்டுறவு இயக்கம் பரவவேண்டுமென்று திட்டம் வகுத்திருந்தோம். ஆனால் ஜனவரி மாதம் 31-ந் தேதிக்குள்ளாகவே 84.1 சதவிகிதம் கிராமங்களுக்கு கூட்டுறவு இயக்கம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஜனத்தொகை அளவில் 40 சதவிகிதம் ஜனங்களைக் கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்கவேண்டுமென்பது நம்முடைய திட்டம். ஆனால் ஜனவரி 31-ம் தேதி வரை 34 சத விகிதம் ஜனத்தொகை அளவுக்குத்தான் கூட்டுறவு இயக்கம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கடன் கொடுக்கிற தொகைகூட சென்ற வருஷத்திய பட்ஜட்டின் போது 13½ கோடி ரூபாய் இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகக் கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தோம். அந்த முறையில் ஜனவரி 31-ந் தேதிக்குள்ளாக 13 கோடி 30 லட்சம் ரூபாய் கடன் உதவி செய்தாகிவிட்டது. பெரிய "Agricultural Banks—Large-sized societies" என்று சொல்லுகிற சொசைடிகள் 60 நிறுவுவதாகத் திட்டம். ஜனவரி 31-ம் தேதி வரை 56 நிறுவப்பட்டாகிவிட்டது. மேலும் 4 சொசைடிகள் ஜூலை மாதம் 31-ம் தேதிக்குள் நிறுவப்பட்டாகிவிடும். அதற்கான ஏற்பாடு செய்தாகிவிட்டது.

சிறு சொஸைடிகளைப் பொறுத்தவரையில் நமக்கு இவ்வளவுதான் வைக்கவேண்டுமென்று ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்விதமான வரையறையும் கிடையாது. நாம் 200 சொஸைடிகளை வைக்கலாம் என்று கடந்த வருஷ பட்ஜெட்டின்போது சொன்னேன். அதற்குமேலாக 1959-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதிக்குள் 262 சிறு வில்லேஜ் சொஸைடிகளை ஆரம்பித்திருக்கிறோம்.

அதுபோல நில அடமான பாங்குகள் 5 வைப்பதாகத் திட்டமிட்டிருந்தோம். அதில் 4 வைத்தாகிவிட்டது. இன்னும் ஒன்று வைப்பதற்கும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். விளைபொருள்கள் எல்லாவற்றையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக மார்க்கெட்டிங் சொஸைடி—அபெக்ஸ்-சொஸைடி—ஒன்று வைக்க திட்டமிட்டிருந்தோம். அப்படியே ஒன்று வைத்தாகிவிட்டது. பிரைமரி மார்க்கெட்டிங் சொஸைடி 6 வைப்பதற்கு திட்டமிட்டிருந்தோம். அவற்றில் 4 வைத்தாகிவிட்டது. கோடவுன்ஸ்களை எடுத்துக்கொண்டால் சென்ற 1958-59-ம் ஆண்டிலே 60 கட்டுவதற்குத் திட்டமிட்டிருந்தோம். இதுவரையில் 26 கட்டி முடித்தாகிவிட்டது. மற்றதில் இப்போது தரை மட்டம், கூரை மட்டம் என்ற அளவில் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

இன்னும் நம்முடைய விவசாயத்தை கூட்டுறவு மூலம் அமைக்கவேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் 15 கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் வைப்பதாக ஏற்பாடு செய்தோம். அவற்றுள் 14 கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை 1959-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதிக்குள் ஏற்படுத்தி விட்டோம்.

இப்படிப் பல விவரங்களைப் பார்க்கிறபோது கடந்த ஆண்டிலே நம் அரசாங்கம் திட்டமிட்டதற்கு மேலாகப் பலதுறைகளிலும் இந்தக் கூட்டுறவு இயக்கம் முன்னேறி வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த ஆண்டில் கூட இன்னும் என்னென்ன அதிகமாகச் செய்யவேண்டுமென்று இப்போது வரவு செலவுக் கணக்கில் ஏற்பாடு செய்திருக்கிறோம். உதாரணமாக 1960-ம் வருஷத்தில்—இன்றைக்கு 84.1 சத விகிதம் கிராமங்களுக்குத்தான் கூட்டுறவு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன், இந்த ராஜ்யத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் கூட்டுறவு சொஸைட்டிகளை விஸ்தரித்துவிடவேண்டும் என்கிற திட்டத்தை வைத்திருக்கிறோம். அப்படியே இன்றைக்கு மொத்த ஜனத்தொகையில் 34 சத விகிதம் மக்களுக்குத்தான் இதன் பயன் கிடைக்கிறது. வரும் வருஷத்தில் 45 சத விகிதம் மக்கள் இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் வரவேண்டும் என்கிற திட்டத்தையும் வைத்திருக்கிறோம். இந்த சொஸைடிகளின் மூலமாகக் கடந்த ஆண்டில் 13.50 கோடி ரூபாய் உதவி செய்வதாகத் திட்டம் போட்டோம். இந்த

[Sri R. Venkataraman] [17th March 1959

ஆண்டில் 16 கோடி ரூபாய் கொடுக்கவேண்டுமென்ற திட்டத்தை வைத்திருக்கிறோம். இன்னும் 4 புது அடமான பாங்குகள் ஏற்படுத்த வேண்டுமென்பது இன்றைக்கு நம்முடைய நோக்கம்.

புல் பிஞன்ஸ் ஸ்கீம் இப்போது 8 ஜில்லாக்களில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. இதை ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு ப்ளாக்கிலும் ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தை வைத்திருக்கிறோம்.

அடுத்தபடியாக கூட்டுறவு விவசாயத்தை எடுத்துக்கொள்ளுவோமானல் வருகிற வருஷத்தில் 21 கூட்டுறவு விவசாயப் பண்ணை வைக்கவேண்டுமென்ற திட்டத்தை வகுத்திருக்கிறோம். பால் சப்ளை முதலியவற்றைப் பற்றி இன்னும் 1959–60-ம் வருஷத்தில் 35 சொஸைடிகள் ஏற்படுத்த வேண்டும் என்றும் இன்னும் பால் உற்பத்தி ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று நாற்பது மெட்ராஸ் மெஷர் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது.

வீடு கட்டும் திட்டத்தை எடுத்துக் கொண்டால் 1959-60-ம் வருஷத்தில் இண்டஸ்டிரியல் கோவாப்ரேடிவ் ஹவுஸ்ஸிங் ஸ்கீமின் கீழ் இரண்டு புது சொஸைடிகளும், 3 டெனமெண்டுகளும் கட்டுவதாக ஏற்பாடு செய்திருக்கிறோம். இதைத்தவிர லோ இன்கம் க்ரூப் திட்டப்படி 320 வீடுகள் அடுத்த வருஷத்தில் கட்ட வேண்டுமென்று யோசனை இருக்கிறது. சென்னை ராஜ்ய நிதியிலிருந்து கடந்த வருஷத்தில் 17 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தோம். அது போதவில்லையென்று நடைமுறை வருஷத்திலேயே இன்னும் 3 லட்சம் ரூபாய் அதிகம் ஒதுக்கினேம். ஆக சென்ற ஆண்டில் 20 லட்சம் ரூபாய் ஆயிற்று. இப்போது 1959–60-ம் வருஷத்திற்கு 30 லட்சம் என்று ஒதுக்கி வைத்திருக்கிறோம்.

இன்னும் கூட்டுறவு முறையில் சிறு தொழில்கள் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சர்க்கார் நடத்துகிற சிறு தொழில்கள் எல்லாவற்றையும் நாளடைவில் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அதில் தொழில்வேலை செய்கின்றவர்களுக்கு ஒதுக்கவேண்டுமென்ற நோக்கம் இருந்து வருகிறது. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த அளவில் கூட்டுறவு இயக்கம் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது என்று அகில இந்திய ரீதியிலேயே ஏற்றுக்கொள்கிருர்கள். ஆனல் புதிதாக அமைக்க இருக்கிற சமுதாயத்திற்கு ஒத்தபடி கூட்டுறவு இயக்கத்தைச் சிறந்த முறையில் நடத்தவேண்டுமென்று நமது ராஜ்யத்தில் எவ்வளவு அதிகமாக கூட்டுறவு பண்ணைகளை ஆரம்பிக்கிறேமோ, எவ்வளவு அதிகமாக கூட்டுறவு கைத்தொழில்களை ஆரம்பிக்கிறேமோ அவ்வளவு அவ்வளவுதான் நம்முடைய லட்சியம் வெற்றிகரமாகப் பூர்த்தியாகும்.

இறுதியில் இந்த இலாகா இவ்வளவு சிறந்த முறையில் நடைபெற்று வந்திருக்கிறது என்றுல் இதற்கு முக்கியமான பொறுப்பு உடையவராக இருந்தவர் இப்போது ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிற ஸ்ரீ பழனியப்ப முதலியார் அவர்கள். அவர்கள் இந்த ராஜ்யத்து ரிஜிஸ்டிராராக சேவை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பெரு முயற்சியினுல்தான் கூட்டுறவு இயக்கம் மிக வெற்றிகரமாக நடந்திருக்கிறது. இன்று அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறும்போது சர்க்கார் இந்தச் சபையின் மூலமாக அவரது வேலைக்கு பாராட்டுதல் தெரிவித்துக்கொள்கிருர்கள் என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் சேர்ந்து ஸ்ரீ ஏ. மாரிமுத்து கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப்பிரேரணையை பிரேரிப்பதற்கு ஒப்புக்கொண்டிருப்பதன் காரணமாக ஸ்ரீ மாரிமுத்து அவர்களை அவருடைய வெட்டுப்பிரேரணையை பிரேரிக்கும்படியாக அழைக்கிறேன். முதலில் பிரேரிக்க வேண்டும். அதற்குப் பிறகு பிரசங்கம் செய்யலாம்.

**Sri A. R. MARIMUTHU :** நான் என்னுடைய வெட்டுப்பிரேரணையைப் பிரேரிக்கிறேன்.



17th March 1959] [Sri A. R. Marimuthu]

Sir, I move—

"That the allotment of Rs. 1,83,49,100 under Demand XXI—Co-operation—be reduced by Rs. 100"

**Mr. SPEAKER :** கனம் மந்திரி அவர்களுக்குப் பதில் அளிக்க எவ்வளவு நேரம் வேண்டும்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** அரை மணி போதும்.

**Mr. SPEAKER :** வெட்டுப் பிரேரணையைப் பிரேரிப்பவர்களுக்கு 20 நிமிஷங்கள் கொடுக்கிறது வழக்கம். சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் இவர் பேசவேண்டி இருப்பதனுல் 10 நிமிஷம் கொடுக்கிறேன். அதற்குப் பிறகு ஸ்ரீ நல்லசிவத்திற்கும் கூட பத்து நிமிஷம் கொடுக்கிறேன்.

The Demand and the cut motion are before the House for discussion.

* **Sri A. R. MARIMUTHU :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய தேசத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருப்பது கூட்டுறவு இயக்கந்தான். கூட்டுறவு இயக்கம் நம் ராஜ்யத்தில் இன்னும் நல்லமுறையில் வளர்க்கப்படவேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. நம்முடைய ராஜ்யம் இத்துறையில் இதர இராஜ்யங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கிறது என்பதைக் கேட்கும்போது நாம் பெருமைப்பட வேண்டும்.

(Sri V. K. Kothandaraman in the Chair.)

நாம் கூட்டுறவு இயக்கத்தில் எந்த அளவு வெற்றிபெறவேண்டுமென்று விதி வகுத்துக் கொண்டோமோ அந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறேம் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். இருந்தாலும் இன்றையதினம் கூட்டுறவு அமைப்பில் இருக்கக்கூடிய பல கஷ்டங்கள், இவை உண்டாவதற்குக் காரணமாக இருக்கக் கூடிய பல சட்டங்கள் இதைப்பற்றி எல்லாம் இந்தச் சபையில் பல அங்கத்தினர்கள் நீண்டகாலமாக குறிப்பிட்டு வந்திருக்கிருர்கள். இதையெல்லாம் கவனித்து எல்லாச் சட்டங்களையும் ஒருமிக்க ஒரு சட்டமாக ஒரு (Comprehensive Act) காம்ரிஹென்சிவ் ஆக்டாக கொண்டு வருவார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கையில் அவ்வாறு கொண்டுவரப்படாமல் இருப்பதற்கு வருந்தாமல் இருக்க முடியாது. எல்லாத் துறையிலும் கூட்டுறவு நல்ல வளர்ச்சி அடைய வேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கும்போது இத்துறையில் சர்க்கார் இதுவரையிலும் கவனம் செலுத்தாதது கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. இதை மனதில் கொண்டு அடுத்த ஆண்டிற்குள்ளாவது ஒரு காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் இன்றைக்கு இருக்கிற சட்டங்களின்படி எவ்வளவோ கஷ்டங்கள் உண்டாகின்றன.

அதுமட்டுமல்ல, ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவர் நிர்வாகஸ்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் அவரைவிட்டு வேறு ஒருவருக்கு மாற்றவே முடியாத நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி கூட்டுறவு இயக்கத்தில் தலைமை தாங்கி நடத்துகிறவர்கள் என்ன வேண்டுமானுலும் செய்யலாம் என்ற முறையில் அவர்கள் செய்துகொண்டே போகிற செயல்களினுல் பொது மக்களுக்கு இதிலுள்ள நம்பிக்கை பெரும் அளவு பாதிக்கப்படுகிறது. இந்த மாதிரி மோசமான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

இன்றைக்கு இந்த இயக்கத்தை தங்களுக்குச் சாதகமாக எப்படி ஆக்கிக் கொள்ள முடியும் என்கிற நோக்கத்தோடு பல பெரியவர்கள் பிரயத்தனப் படுகிருர்கள். பல இடங்களில் அரசியல் நோக்கத்தோடு கூட்டுறவு இயக்கத்தைப்

[Sri A. R. Marimuthu] [17th March 1959

பார்க்கிறார்கள். இந்த மாதிரி கண்ணோட்டத்தோடு நாம் பார்க்கவே கூடாது. எப்படிக் கல்வி துறையில் அரசியலைப் புகுத்தக்கூடாதென்பதை முடிவு செய்துகொண்டோமோ அப்படி எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி, "கூட்டுறவு இயக்கத்தை அரசியல் கண்ணோட்டத்தோடு பார்ப்பதில்லை, இயக்கத்தை அதிகமாக பாதிக்கக்கூடிய அரசியலை இதில் புகுத்துவது கிடையாது" என்கிற பிரதிக்ஞையைச் செய்துகொண்டாகவேண்டும். இப்படிப்பட்ட நல்லதொரு முடிவுக்கு எல்லாக் கட்சியினரும் வருவதற்கு அமைச்சர் அவர்களும் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மிக்க அவசியமானது. காரணம் எங்கள் பகுதியில் நடக்கிற சில காரியங்களைப் பார்க்கும்போது நான் மிகவும் வேதனைப்படாமல் இருக்க முடியாது. தேர்தலில் அரசியல் போட்டி, இதன் காரணமாக தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதிலேயே காலதாமதம். இது எதைக் குறிக்கிறது ? கூட்டுறவு முறையில் மக்களுக்குள்ள நம்பிக்கை வளருவதற்கு இடையூறாக இருக்கின்றன. இந்த மாதிரியான மோசமான விவகாரங்கள் ஏற்படக்கூடாது. மனிதர்களுடைய பண்பு வளர வேண்டியது ஒரு புறமிருக்க, இத்தகைய மோசமான விவகாரங்கள் ஏற்படுவதற்கு சட்டமும் இடம் தரக்கூடாது. அதற்கேற்ற முறையில் சட்டம் திருத்தப்படவேண்டும். இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொளகிறேன்.

இப்போது, "புல் பைனான்ஸ் ஸ்கீம்." (Full Finance Scheme) என்ற ஸ்கீம் ஒன்று நடைமுறையில் இருக்கிறது. அது இன்னும் சில இடங்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டி
9-20 a.m. ருக்கிறது. இந்தத் திட்டம் மிக மிக அவசியம்தான். இப்போது ஒரு விவசாயி தனக்கு வேண்டிய கடன்களுக்கு பல பேர்களைக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. கூட்டுறவு ஸொஸைடி, தாசில்தார், நில அடமான பாங்கு முதலிய பலரையும் பல ஸ்தாபனங்களையும் கெஞ்ச வேண்டியிருக்கிறது. அவன் ஒரே ஸ்தாபனத்தின் மூலம் தனக்கு வேண்டிய கடன்களைப்பெற இந்த புல் பைனான்ஸ் ஸ்கீம் உதவுகிறது. ஆனால் இப்போதிருக்கும் முறையில் இந்த ஸ்கீம் எப்படி இருக்கிறது என்றால், விவசாயிக்குத் தேவையான சிறு கடன்களைக் கொடுப்பதற்கு மட்டும்தான் உபயோகப்படுகிறது. அவர்கள் தங்கள் பழைய கடன்களைத் தீர்ப்பதற்கு உதவக் கூடிய முறையில் இத்திட்டத்தின் நோக்கம் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கூற விரும்புகிறேன். அவர்களுக்கு அவர்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு வேண்டிய சிறு கடன்களைக் கொடுத்து உதவுவதுடன் மட்டுமன்றி அவர்களுடைய பழைய கடன்களைத் தீர்ப்பதற்கும் உதவுவதற்கு இத் திட்டத்தின் மூலம் முயற்சிக்க வேண்டும். சாதாரணமாக, நான் கூறும் இந்த யோசனையை ஏதாவதொரு குறிப்பிட்ட ப்ளாக்கில் நடைமுறையில் சோதனை செய்து பார்க்கலாம்; பிறகு இத் திட்டத்தை விஸ்தரிக்கலாம். இன்று விவசாயிகள் பலதரப்பட்ட கடன்களால் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கடன்களிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக, அவர்களுக்கு நில அடமான பாங்குகள் மூலம் கடன்கள் கொடுக்க முயற்சிக்க வேண்டும். ஓரிடத்தில் இதைப் பரீட்சார்த்தமாக நடத்தலாம். பிறகு வேண்டுமானால் மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கலாம். அவ்வாறில்லாமல் இப்போது கைத்தறி நெசவாளர்களுக்கு அளிக்கப்படும் ரிபேட். . .

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே; கைத்தறி கூட்டுறவிலும் வருகிறது, இண்டஸ்ட்ரீஸிலும் வருகிறது. கைத்தறி சம்பந்தமான பிரச்னைகளை இண்டஸ்ட்ரீஸுடன் சேர்த்துப் பேசுவது நல்லது என்று நினைக்கிறேன். ஆகவே கைத்தறி சம்பந்தமான விஷயங்களையெல்லாம் இண்டஸ்ட்ரீஸுடன் சேர்த்து விவாதிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI A. R. MARIMUTHU : கூட்டுறவு சம்பந்தப்பட்ட கைத்தறிப் பிரச்னைகள்கூட இண்டஸ்ட்ரீஸிலா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆமாம்.



17th March 1959]

*SRI A. R. MARIMUTHU : இப்போது நாட்டில் பரவலாக கூட்டுறவு சாகுபடி முறையைப்பற்றி வெகு விரிவாகப் பேசப்படுகிறது. கூட்டுறவு சாகுபடி முறையைக் கொண்டுவரத்தான் வேண்டுமென்று ஒரு புறத்திலும், அதைக்கொண்டு வந்தால் மோசமான நிலைமை ஏற்பட்டு உற்பத்தியே தலைகீழாகக் கவிழ்ந்து விடும் என்று மற்றொரு புறத்திலும் வாதிக்கப்படுகிறது. பொதுவாகப் பார்க்கும்போது, கூட்டுறவு சாகுபடி முறையால் சாகுபடி பாதிக்கப்பட்டுவிடும் என்ற வாதத்தை நாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவே முடியாது. இன்றைக்கு நிலங்கள் மிக சிதறுண்டு கிடக்கின்றன. நம் நாட்டில் சிறு சிறு நிலச்சொந்தக்காரர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகளை பெற முடியாததாலும், காலத்தோடு சாகுபடி செய்ய முடியாததாலும், வேண்டிய உபகரணங்களோடும் உரங்களோடும் சாகுபடி செய்ய முடியாததாலும், உற்பத்தி குறைந்திருக்கிறது. அவர்கள் கூட்டுறவுமுறையில் சாகுபடி செய்தால் உற்பத்தி நிச்சயமாகப் பெருகுமே தவிர குறையாது. உலகத்தில் பல நாடுகளில் கூட்டுறவு சாகுபடி முறை அமலில் இருப்பதைப்பின்பற்றி நம் நாட்டிலும் அதைப் புகுத்தினால் நிச்சயமாக பாதகம் ஏற்படாது. இப்போது ஜாயின்ட் பார்மிங் ஸொஸைடிகள், டெனன்ட் பார்மிங் ஸொஸைடிகள் என்ற இரு வகைகள் இருக்கின்றன. ஜாயின்ட் பார்மிங் ஸொஸைடியில் நிலச் சொந்தக்காரர்கள் ஒன்று சேர்ந்து சாகுபடி செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, பக்கத்திலுள்ள நிலங்கள் குத்தகைக்கு கிடைக்குமேயானால் அவைகளையும் சேர்த்து ஜாயின்ட் பார்மிங் ஸொஸைடியாக ரெஜிஸ்டர் செய்துகொள்வது இன்றுள்ள பைலாஸ்படி சாத்தியமல்ல. அதற்கு இன்றுள்ள பைலாஸ் இடம் கொடுப்பதில்லை. அந்த நிலங்களையும் ஜாயின்ட் பார்மிங் ஸொஸைடியில் ஏன் ரெஜிஸ்டர் செய்யக்கூடாது? அத்துடன் டெனன்ட் பார்மிங் ஸொஸைடியில் ஒரு நிலச்சொந்தக்காரர் சேர விரும்பினால் அவர் அதில் சேருவதற்கு வகை செய்யவேண்டும். மேலும். . .

MR. SPEAKER : உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் முடியப்போகிறது. நீங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பேசி முடிக்காவிட்டால், கனம் அங்கத்தினர் ஸ்ரீ நல்லசிவம் அவர்களுக்கு பேச சந்தர்ப்பம் கிடைக்காது. நீங்கள் உங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு பேச வேண்டும். I leave it to you. The choice is yours.

SRI A. R. MARIMUTHU : குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களையும் ஜாயின்ட் பார்மிங் ஸொஸைடிகளாக ரெஜிஸ்டர் செய்துகொள்வதற்குக் குந்தகம் இல்லாத முறையில் பைலாஸ் மாற்றி அமைக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI K. R. NALLASIVAM : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்று இந்நாட்டில் மத்தியில் இருக்கும் ஆட்சியாளர்களுக்கும் மாநிலங்களில் இருக்கும் ஆட்சியாளர்களுக்கும் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதுபற்றி நீண்ட விவாதம் செய்துவருகிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் நாட்டில் இரு சாரார் இருக்கிறார்கள்; இரு விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன. இன்று கூட்டுறவு விவசாயத்தின் மூலம்தான் இந்த நாட்டில் விவசாயத்தை சீர்திருத்தி உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். மற்றொரு சாரார், கூட்டுறவு விவசாயம் இந்த நாட்டில் வந்தால் உற்பத்தி நிச்சயம் குறைந்துவிடும் என்று கூறுகின்றனர். இதிலே ஒரு பெரும் கிளர்ச்சி நடந்துவருகிறது. எங்களைப் பொறுத்தவரையில், கூட்டுறவு விவசாயத்தின் மூலமாகவே இந்த நாட்டில் விவசாயத்தை சீர்திருத்த முடியும் என்ற கொள்கையில் நாங்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள் ஆனால் அதே நேரத்தில் இன்று நாட்டு மக்களுக்கு கூட்டுறவு இயக்கத்தில் உள்ள நம்பிக்கையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இப்பிரச்னையைப் பரிசீலித்தாகவேண்டும். 1950-ம் வருஷம் முசோரியில் நடந்த கூட்டுறவு மகாநாட்டில், இந்த தேசத்தில் 5 லட்சம் கூட்டுறவு விவசாயச் சங்கங்களை நிறுவவேண்டும் என்று திட்டமிடப்பட்டது. அந்தத் திட்டம் நிறைவேறியிருக்கிறதா ? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் நமது ராஜ்யத்தில் 30 கூட்டுறவு விவசாயச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று

திட்டமிடப்பட்டது. அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை 12 லட்சம் ரூபாய். அதில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரண்டு வருடங்களில் சுமார் 9,20,000 ரூபாய் தான் செலவிடப்பட்டது. 1958–59-ம் ஆண்டில் 15 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது. ஆனால் 14 கூட்டுறவுச் சங்கங்கள்தான் அமைக்கப்பட்டன. இத்திட்டத்திற்கு பிரஸ்தாப ஆண்டில் ஒதுக்கப்பட்ட பணத் தொகை 4 லட்ச ரூபாய், ஆனால் செலவிடப்பட்டது 1,46,000 ரூபாய்தான். இதைப் பார்க்கும்போது, சர்க்காரே இந்த முயற்சியை மேற்கொண்டாலும் நடைமுறையில், இச்சங்கங்களை அமைப்பதிலும் நடத்துவதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பது தெரிகிறது. நம் ராஜ்ய சர்க்காரைப் பொறுத்தவரையில், இந்த சர்க்கார் பொதுவாக யதார்த்த நிலைமைகளை நன்றாக உணர்ந்தே காரியங்களைச் செய்துவருகிறது என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். இத்திட்டத்தை வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தார் விரும்புவதாகவும் அது தான் மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்றும் கேள்விப்பட்டேன். நாட்டில் பல அணைக்கட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் ஏராளமான நிலங்கள் சாகுபடிக்கு வராமலிருப்பதால், கூட்டுறவு சாகுபடித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால், அவைகள் எல்லாவற்றையும் சாகுபடிக்குக் கொண்டுவரமுடியும் என்ற காரணத்தால் இத்திட்டத்தை வேகமாக நிறைவேற்றவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தார் விரும்புவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் நம் சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் அணைக்கட்டுகள் கட்டியவுடன் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே அணைக்கட்டு பிரதேசத்திலுள்ள எல்லா நிலங்களும சாகுபடிக்கு வந்துவிடுகின்றன. இதை அரசாங்கத்தார் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த நாட்டில் நிலச்சுவாந்தார்கள் தங்கள் நிலத்தில் பிடிப்பு வைத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள். நிலச்சொந்தக்காரர்களுக்கு இருக்கும் நிலப் பற்றை நீக்க எல்லாக் கட்சிகளுமே சேர்ந்து பாடுபடவேண்டும். இது ஒரு தனிப்பட்ட கட்சி செய்வதாக இருக்கக்கூடாது. இப்போது கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக மக்களிடம் பிரசாரம் செய்வதற்கான தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கை காங்கிரஸ் கட்சியின் சார்பில் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அத்தொண்டர்களுக்கு காங்கிரஸ் சார்பில் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன்; இத்தகைய காரியத்தை நாட்டிலுள்ள சகல கட்சிகளுமே சேர்ந்து செய்யவேண்டும்; இதை ஒரு கட்சிப் பிரச்னையாக ஆக்கக்கூடாது.

THE HON. SRI K. KAMARAJ: அவ்வாறு செய்யவேண்டுமென்று அரசாங்கம் ஒரு தீர்மானமும் போடவில்லை.

SRI K. R. NALLASIVAM: இருந்தாலும், ஆட்சியில் இருக்கும் கட்சி ஒரு நடவடிக்கையை எடுக்கும்போது அதை சர்க்காரின் கருத்தாகவே கருதவேண்டியிருக்கிறது.

பொதுவாக எல்லாக் கட்சிக்காரர்களும் இதில் தீவிர சிரத்தை எடுத்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிடில் கூட்டுறவு இயக்கம் பெயரளவில்தான் இருக்கமுடியுமே தவிர, அரசியலில் வேறு விதமான வெற்றிதான் பெற முடியுமே தவிர, நாட்டில் கூட்டுறவு இயக்கம் வளர முடியாது. இன்று ஒரு கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, 80 பர்சன்ட் கிராமங்கள் கூட்டுறவு இயக்கத்தில் இருக்கின்றன என்றும், 40 பர்சன்ட் மக்கள் அதில் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையில் பார்த்தால் சுமார் 20 பர்சன்ட் மக்கள்தான் பெருவாரியாக கூட்டுறவு இயக்கத்தில் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வரும். 80 பர்சன்ட் மக்கள் உண்மையிலேயே அதில் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று தெரியவரும். அதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு உண்டு பண்ணிக் கொடுக்கப்படவில்லை. சமீபத்தில் கூட்டுறவு இயக்கச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டது. தேவையான ஆட்களை அதில் சேர்த்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படுமென்று, முயற்சி எடுத்துக்கொண்டால், தொந்தரவு எடுத்துக்கொண்டால்தான் அதைச் செய்ய முடியுமே தவிர உடனடியாக எல்லா மக்களையும் அதில் சேர்த்துவிட முடியாது. நானே முயற்சி எடுத்துப்பார்த்தேன். ஜனங்களை கொண்டு போய் அதில் சேர்ப்பதற்கு கஷ்டமாயிருக்கிறது. சட்டதிட்டங்கள் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆகவே, இந்த கூட்டுறவு இயக்கத்திற்கு நாம் ஒரு புதிய வேகம், சக்தி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நாம் இந்த கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு நல்ல சக்தி அல்லது வேகம் கொடுக்காவிட்டால், நாட்டில் இன்று கூட்டுறவு இயக்கத்தை எதிர்ப்பவர்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை அளிப்பதோடு கூட, இந்த கூட்டுறவு இயக்கமும் தோல்வி அடைந்துவிடவும் கூடும். ஆகவே, இந்த இயக்கம் பற்றி நல்லதொரு, பிரமாண்டமான பிரசாரம் செய்தாகவேண்டும். ஆக, கூட்டுறவு இயக்கம் மூலம்தான் நாட்டில் ஒரு புதிய மாறுதலை, ஒரு புதிய சக்தியை, உற்பத்தி வேகத்தை அதிகப்படுத்த முடியும் என்பதை நம் நாட்டிலுள்ள எல்லோரும், எல்லா விவசாயிகளும் உணர்ந்துகொள்ளும்படி செய்யவேண்டும். எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. என் விவசாயிகளை மாத்திரம் இப்படி கூட்டுறவு இயக்கத்தில் தள்ளவேண்டும்? ஒருவர் சொன்னார். என் விவசாயிகள் விஷயத்தில் மட்டும் ஒரு கொள்கை, பாக்கியுள்ளவர்கள் விஷயத்தில் இன்னொரு கொள்கை என்று கேட்டார். கூட்டுறவு இயக்கத்திற்குள்ளே போவது சிறைச்சாலைக்குள்ளே போவது போலாகும் என்ற எண்ணத்தை சிலர் கொண்டிருக்கிறார்கள். அதை நான் நம்பவில்லை. கூட்டுறவு இயக்கம் வெற்றிபெற வேண்டுமானால், எல்லாம், எல்லோருக்கும் என்ற மனோபாவம் வளரவேண்டும். ஆனால் நிலத்திற்குமட்டும் ஒரு உச்ச வரம்பு நிர்ணயித்து விட்டு, மீதியுள்ளவைகளுக்கு ஒரு வரம்பு கட்டாமல் இருந்தால் அது கண்டிப்பாக கூட்டுறவு இயக்கத்தை பாதிக்கத்தான் செய்யும். விவசாயத்திற்கு வரம்பு கட்டுவது எப்படி கூட்டுறவு இயக்கத்தைப் பாதிக்கும் என்று கேட்கலாம். எல்லாம் எல்லோருக்கும் என்ற மக்கள் நினைக்கக்கூடிய நிலை ஏற்படுவதற்கு, எல்லாவற்றிற்கும் வரம்பு இருக்கவேண்டும். ஒரு சிலர் மட்டும் லட்சக்கணக்கில் சம்பாதித்துக் கொள்ளலாம் என்றும், ஒரு சிலர் 3,000 ரூபாய் வருமானத்தோடு வாழவேண்டுமென்றும் சொல்வது சரியல்ல. அப்படிப்பட்டதொரு நிலை இருந்தால் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுவதற்கு அதனால் பல சங்கடங்கள் நேரிடும். ஆகவே, நிலத்திற்கு வரம்பு கட்டியிருப்பதுபோல் மீதியுள்ள வருமானத்திற்கும் ஒரு வரம்பு கட்டப்படவேண்டும். உடனடியாக அப்படி கட்ட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அப்படி கட்டுவதற்கு பல கஷ்டங்கள் இருப்பதை நான் உணருகிறேன். ஆனால் இத்தனை வருஷங்களுக்கு பிறகாவது அப்படி ஒரு நிர்ணயம் எல்லாவித வருமானத்திற்கும் நிர்ணயிக்கப்படுமென்று சொல்லவேண்டும். அப்படி செய்தால், அது கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுவதற்கு உதவியாக யிருக்கும். சோஷியலிஸத்தைப்பற்றி பேசுகிற சர்க்கார் ஒரு பகுதியினருக்கு மட்டும் வரம்பு நிர்ணயித்து விட்டு மற்றொரு சாராருக்கு ஏன் நிர்ணயிக்காமல் இருக்கவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன். இதற்கு, புத்திசாலித்தனமாக பதில் சொல்லக்கூடும். நாட்டிலே இன்று உற்பத்தி பெருகவேண்டுமானால், ஒரு சாரார் மட்டும் நாலு, ஐந்து லட்சம் என்று லட்சகணக்காக சம்பாதிக்கலாம் என்றும், நிலத்தை நம்பிக் கொண்டிருப்பவர்கள் மட்டும் 3,000 ரூபாய் வருமானத்தோடு நிற்கவேண்டுமா யென்று சொன்னால், இப்படிச் சொல்பவர்கள் நிலச்சுவான்தார்கள்தான் என்றும் அல்லது நிலச்சுவாந்தார்களின் ஆதரவாளர்கள் தான் இப்படிச் சொல்கிறார்கள் என்றும் மற்றபடி ஜனங்கள் இப்படிச் சொல்லவில்லை என்றும் பதில் சொல்லக்கூடும். எங்களைப் பொறுத்த வரையில் ஒரே சமயத்தில் இரண்டும் வேண்டுமென்று கூறுகிறோம். கூட்டுறவு இயக்கம் வெற்றிபெற, நாட்டிலுள்ள எல்லோருடைய வருமானமும் கட்டுப்படுத்தப்படவேண்டும். ஒரு சாராரது வருமானம் 3,000-க்கு மேல் இருக்கக்கூடாது என்றும் இன்னொரு சாரார் கோடிக் கணக்கில் சம்பாதித்துக் கொள்ளலாம் என்றும் இருந்தால், அது கட்டாயம் கூட்டுறவு இயக்கம் வளருவதற்கு தடையாகத்தான் இருக்கும் என்பதை நான் இங்கு மீண்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் பத்திரிகையில் பார்த்தேன், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின், "எக்கனமிக் ரெவ்யூ"வில்

கூறப்படுகிறது, நிலச்சீர்திருத்தம் செய்யப்பட்ட உத்தரபிரதேசம், பஞ்சாப் போன்ற பிரதேசங்களில் வ.வசாய கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பித்திருப்ப தாகவும், சில கூட்டுறவு சங்கங்கள் உண்மையிலேயே நன்கு நடைபெறு கின்றன என்றும், ஒரு குறிப்பிடத்தக்களவு உள்ள கூட்டுறவு சங்கங்களை அங்குள்ள நிலச்சுவாந்தார்கள் தங்கள் உறவினர்களை மட்டும் வைத்துக் கொண்டு, மாமன், மைத்துனன் இவர்களை அங்கத்தினர்களாக வைத்துக் கொண்டு, பழைய நிலையையே இப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கிறார் கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அந்த பத்திரிகையில். எல்லோருக் கும் ஒரேமாதிரியான வருமானம், வசதிகள் என்று வரும்போது நிச்சய மாக இதுபோன்று எண்ணம் வராது. (பெல்) ஆகவே, மத்திய அரசாங்கம் துரிதமாக இதை அமுலில் கொண்டு வரவேண்டுமென்று சொன் னாலும் நமது அரசாங்கம் இந்த விஷயத்தில் நிதானமாக, எல்லாம் எல்லோருக்கும் என்ற எண்ணத்தை மக்களிடம் உண்டு பண்ணக் கூடிய அளவிற்கு, காரியங்களை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு இன்றிருக்கும் சட்டத்தை திருத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Mr. Speaker, in supporting this Demand and opposing the Cut Motion, I want to say a few words. I thought that so far as this Demand is concerned, there will be no cut motion at all. The Co-operation Department in this State has advanced in such a way that it has won encomiums from every one including the Press. There is no meaning in finding fault with this movement in which we have succeeded. As stated in the review circulated to us, 'the co-operative movement in our State has fulfilled with distinction its role as a supplier of agricultural credit'. From the time when Act IV of 1938, i.e., the Agriculturists' Debt Relief Act was passed, there was a contention and even vehement contention, that the Government cannot supply agricultural credit. But to-day, conditions are quite different. Agricultural Banks are functioning very well. I know of some Banks in Pattukkottai taluk, especially the ones at Thamarankottai and Keeramangalam through which loans are distributed, even to the tune of a sum of Rs. 1 lakh. Agricultural credit has advanced in such a way that the agriculturists need not go to Tahsildars or other people for getting their loan. They are able to get the amounts in a very short time during the cultivation season. I refer both to long-term and short-term loans for seeds, fertilizers, etc.

So far as the question of co-operative farming is concerned, the two hon. Members who have spoken before me referred to the criticisms against it. No doubt, there are criticisms and there are divergent views. But, it cannot be denied that co-operation will always be a success. There have been two different views. We also find hurried expressions of opinions. It is all because people did not understand what was really meant by this. Whether it was the Nagpur resolution or the other speeches of the sponsors of the co-operative farming, there was no clear expression of what was meant. The latest reference is, that the first attempt will be at Service Co-operatives. Sir, we have to reclaim our land. We have got to level up and improve our land. We have to purchase fertilizers, manufacture and buy new machinery and develop forestry, animal husbandry, fisheries and various other agricultural side-lines. We have to start a number of local industries to develop all these





things. It is not necessary that we should copy from China or Russia. It cannot be denied that joint enterprise in anything will yield good results. The only thing is there should be no compulsion. That is all. The hon. Member who spoke before me said that there was a feeling among the people that entry into the co-operative field was just like entering into a jail. That idea may be prevalent very rarely, perhaps in the constituency of the hon. Member. At any rate, so far as Tanjore district is concerned, I do not think there is any such fear and I do not think people consider the entering into co-operative field as entry into jail or some such thing. This has been a success in 12 out of the 14 societies that have already been started. If small landholders or small tenants join in a joint enterprise and get Government credit they can surely increase their output. In this connection, I desire to state that now the landholders need not be afraid of their rent. The service co-operatives will be tenant farming societies. The landholders whoever they are, will not lose their proprietary rights. They will get their 40 per cent. This is what is published in to-day's papers. Our beloved Prime Minister's statement and the All-India Congress Committee's resolution are both there. So, the landholders will get their forty per cent of the produce. As stated by the Hon. Minister, we cannot have socialism unless we understand the difference between the socialist principles of distribution "from each according to his ability to each according to his labour" and the Communist principles "from each according to his ability to each according to his needs". A man who works on the field has got to be paid and paid properly. At the same time, the capitalist will get his legal return according to the latest Fair Rent Act. On the other hand, the Communist principle is . . .

* THE HON. SRI R. VENKATARAMAN : இதிலே ஒரு குழப்பம் இருக் கிறது என்று நான் நினைக்கிறேன். கோவில் நிலங்கள், மட நிலங்கள் இவை களையெல்லாம் "டெனண்டு பார்மிங் சொஸைடி" எடுத்துக்கொண்டு அதில் இருக்கிற டெனண்ட்ஸ் அதாவது இப்பொழுது இருக்கிறவர்களையே கூட்டுறவு முறையில் அமைக்கவேண்டுமென்று நம்முடைய விவசாய இலாகா அமைச்சர் கனம் ஸ்ரீபக்தவத்சலம் அவர்களுடைய அபிப்பிராயம் என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. அது வேறு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தீர்மானம் வேறு. தனி நபர்களுடைய நிலத்தை எடுத்து அவர்களுக்கு 10 சதவிகிதம் கொடுத்து "டெனண்டு கோவபரேடிவ் சொஸைடி" ஏற்படுத் தலாம், செய்யக்கூடாதது ஒன்றுமில்லை. அதுமாதிரி ஒரு முறையை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்தில் சொல்லவில்லை.

* SRI R. SRINIVASA IYER : I do not say that this is the resolution of the All-India Congress Committee. From the latest report published in the papers this morning we find that ownership will not be disturbed and that proprietary rights will not be disturbed. I am on joint farming societies. If people have pannai lands or tenants' lands, they can join together, put in their efforts and jointly cultivate the land. They can put up roads; they can buy new machinery; they can work together as in a joint enterprise. We have to move with the world and share our profits with others. We have to remember the difference between the socialistic

[Sri R. Srinivasa Iyer] [17th March 1959

principle and the Communist principle—" from each according to his ability and to each according to his labour " and " from each according to his ability and to each according to his needs ". A man may be in need, but may not be able to work. Then he cannot expect any return. I would suggest that before we criticise either this or that and run to conclusions we study the nature of the by-laws that are proposed or the legislation that is to be brought in by the Government, so far as this co-operative farming is concerned. It is well known to the Government and the people that the Co-operative Societies Act and the rules framed thereunder are not working properly and have got to be modified. I hope they will be modified in such a way as will not introduce compulsion and in such a way as will help a smooth working of the societies, whether they are co-operative farming societies or any other enterprise either in agriculture or industry. With reference to the provision made for these, I find that a larger amount of subvention from the Central Government is expected—117·30 lakhs of rupees. We hope that the Central Government will give us the amount expected for the purpose.

Regarding development of the handloom industry in the State, I am not going to dwell much on the point because it will come under ' Industries '. So far as the expenditure is concerned, the grants-in-aid have been increased from 75 lakhs to 121 lakhs of rupees. About 100 lakhs of rupees is provided for weavers co-operative societies which will include the handloom industry. Provision has also been made for other things.

A good sum has been provided for land colonization. For co-operative farming societies, a sum of four lakhs of rupees has been provided. I hope this will also be enhanced and co-operative farming societies will be formed in larger numbers. This State has formed a Co-operative Farming Board. It has not yet started forming new farming societies. We must have co-operative farming societies at the rate of one in each district at least so that we may see them working in the next harvest season.

So far as procurement is concerned, I want to say a word. In Tanjore district, the Tanjore Co-operative Marketing Federation has been directed to procure or has been appointed as an Agent to procurers. This organization has not got enough godown or credit facilities with the result that whenever ryots go and approach them directly, the Secretary says he has not got funds. This is a complaint which I passed on to the Revenue Divisional Officer, Pattukottai. If paddy is delivered, money is not paid. The mirasdars have already burnt their fingers by selling paddy for credit. Therefore, sufficient funds should be provided for the Federation or any other co-operative society which is authorized to procure grains in Tanjore so that when the grains are delivered by the mirasdars, they may be paid for immediately.

The next point that I wish to urge is about the Wholesale Co-operative Stores in Tanjore district. There is a Wholesale Co-operative Stores in Tiruvarur. Smaller merchants make huge



17th March 1959] [Sri R. Srinivasa Iyer]

profits. Merchants in my constituency purchase their requirements from Vijayapuram. They do not purchase from the Co-operative Wholesale Stores. They make more than 25 per cent profits in respect of commodities they require. This state of affairs can be avoided if branches of the Wholesale Co-operative Stores are opened at least in taluk headquarters. I have been requesting the President of the Tanjore District Co-operative Marketing Society to open a branch at Pattukottai. There is an impediment which is stated. It cannot have a branch when one branch is functioning in the district. Therefore, the Wholesale Co-operative Stores at Tiruvarur should be asked to open a branch at Pattukottai.

With reference to housing, I have got to mention a word. I have already suggested when the occasion came that co-operative house building societies for private persons are working well. So far as the low income group housing scheme is concerned, there is difficulty for Government servants to join the societies because they are likely to be transferred once in three years or four years. The proper thing would be to see to the establishment of co-operative housing societies for Government servants or construction of ' type-design ' buildings for non-gazetted officers in each district centre so that the ownership of the house may vest in the societies and rent may be collected from the officers who occupy them. The rent will be cheap then. That way, the problem of housing can be solved so far as Government servants are concerned. They will get houses at cheap rent and at the same time the rural housing difficulty can be got over. Government servants who get a pay of 100 to 120 rupees have now to pay a rent even in rural areas of 25 rupees. Therefore, if Government sponsor a scheme for Government servants alone, it will help them. It should be only for them, for non-gazetted officers only.

The next point, I would urge is this. We have started a House Mortgage Bank at the Centre. It should be started in each taluk headquarters. We give credit through this Bank for redeeming houses which is repayable in twenty years. Every one must take interest in this. If every one takes interest in developing such an institution and tries to start a House Mortgage Bank having jurisdiction over a whole taluk, that will help us greatly.

That is all that I wish to say.

**Sri J. MATHA GOWDER :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். 10 a.m. நம்முடைய மாகாணத்தில் 80 சதவிகிதம் கிராமங்களிலே கூட்டுறவு இயக்கம் பரவியிருப்பதைப் பார்த்து நாம் பெருமைப்படவேண்டும். எதிர்கட்சி நண்பர் பேசும்போது இதில் அரசியலை புகுத்தக்கூடாது, இதில அரசியல் கட்சி வேறுபாடு காண்பிக்கிறார்கள் என்று குறை கூறினார்கள். கூட்டுறவு இயக்கத்தின் நோக்கமே எல்லோரும் ஒன்றுபட்டு இருக்கவேண்டுமென்பது தான். இதில் கட்சி பாகுபாடே இருக்கமுடியாது. எல்லாக் கட்சியினர் களும் இருக்கலாம். கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் தடையே இருக்க முடியாது. அவர் அவர்களுடைய செல்வாக்கை வைதது அவரவர்கள்

கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களிடையே நல்ல முறையில் நடந்துகொண்டால் அவர்களுக்கு அங்கு கூட்டுறவு சங்கம் நடத்துவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. மக்களிடையே அங்கு செல்வாக்கு பெறவில்லை என்றால் சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, கூட்டுறவு நில அடமான பாங்குகளைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு நில அடமான பாங்குகள் நம்முடைய ராஜ்யத்திலே சரியான முறையிலே நடந்துகொண்டிருக்கிறதா என்பதுபற்றி சந்தேகமாக இருக்கிறது. இந்த பாங்குகளைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு சரியான முறையில் கடன்கள் உடனடியாக கிடைப்பதில்லை. அதிகமாக காலதாமதம் ஏற்படுகிறது. அவர்கள் மனுக்களை பரிசீலனை செய்வதற்கே ஒரு ஆண்டு காலம் ஆகிவிடுகிறது. சாதாரணமாக ஒருவர் அப்ளிகேஷன் போட்டால் ஒரு ஆண்டு கழித்தும்கூட அவர்களுக்கு கடன் கிடைக்கிறதோ, இல்லையோ என்று சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால், அதிலே ஒரு குறை இருக்கிறது. கூட்டுப்பட்டாதாரர் யாராவது விண்ணப்பம் செய்துகொண்டால், அவர்களுக்கு லோன் கிடைப்பதில்லை. கூட்டுப்பட்டா வைத்திருப்பவர்கள் தனிப்பட்ட பட்டா கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடு இருப்பது சரியல்ல. கிராம மணியக்காரர் அல்லது கர்ணம் கூட்டுப்பட்டாதாரராக இருந்தாலும், அந்த பூமி அவர்கள் வசத்திலே இருக்கின்றது என்று சர்டிபிகேட் கொடுத்தால், அந்த சர்டிபிகேட்டின்பேரில் கூட்டுப்பட்டாதாரர்களுக்கு கடன் வழங்குவதற்கு வழிவகை செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக விவசாயப் பண்ணையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாகாணத்தில் டார்ஜெட் 15 பண்ணைகளுக்கு 14 பண்ணைகள் ஏற்கெனவே ஏற்பட்டிருப்பது பற்றி நான் பெருமைப்படுகிறேன். இன்னும் பாக்கியிருக்கும் ஒரு பண்ணையும் மத்திய சர்க்கார் உதவி பெற்று நீலகிரி ஜில்லாவில் கல்லம்பாளையம் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்போகிறார்கள். அதற்கான பரிசீலனை முடிந்து, சர்க்காரிடமும் வந்துவிட்டது. அதை உடனடியாகக் கவனிக்கவேண்டும். அதை இந்த மாதத்திலே செய்துவிட வேண்டுமென்று ரிஜிஸ்டிரார் அவர்களுக்கு உத்தரவு போட்டால் டார்ஜெட் பூர்த்தியாகிவிடும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமக் கூட்டுறவு சங்கங்களில் நீண்டகாலக் கடன் கொடுப்பதில்லை. 10 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் கிராமக் கூட்டுறவு சங்கங்களில் நீண்டகாலக்கடன் 5 வருஷத் தவணையில் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அம்மாதிரி நீண்டகாலக் கடன் கொடுக்கப்படுவதில்லை. இப்பொழுது விவசாய பாங்குகள் வைத்திருக்கிறோம் என்று சொல்லலாம். விவசாய பாங்குகளில் 3 வருஷக் கடன் வாங்கிக்கொள்ளலாம் என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாய பாங்குகளை நாம் அதிகப்படுத்தவேண்டுமா அல்லது கிராமக் கூட்டுறவு சங்கங்களைப் பலப்படுத்தவேண்டுமா என்பது சர்க்காரின் கொள்கையை திட்டவட்டமாக தீர்மானிக்கவேண்டும். கிராமக் கூட்டுறவு சங்கங்கள் வேண்டுமென்றால், அவைகள் நீண்டகாலக் கடன் கொடுப்பதற்கு வசதி செய்யவேண்டும். இப்பொழுது கிராமக் கூட்டுறவு சங்கங்களில் குறுகிய கால கடன்தான் கொடுக்கப்படுகிறது. நீண்டகால கடனோ, "மீடியம் டெர்ம் லோனோ" விவசாய பாங்குகளில்தான் கொடுக்கப்படுகிறது. விவசாய பாங்குகள் வேண்டுமானால், அவைகளை அதிகமாக்கி ஊக்குவிக்கவேண்டும். அல்லது கூட்டுறவு கிராம சங்கங்கள் பயனுள்ளதாக இயங்கவேண்டுமென்றால், அங்கே நீண்டகாலக் கடன் கொடுப்பதற்கு வசதி இருக்கவேண்டும். இரண்டில் ஒன்று செய்ய வேண்டும். நான் 18 ஆண்டு காலமாக கிராம கூட்டுறவு சங்கத்தின் தலைவராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். கிராமக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் என்ற ஹோதாவில் சொல்லுகிறேன். அங்கு இருக்கக்கூடிய நிலை எப்படி இருக்கிறது என்றால் கூட்டுறவு சங்கத்தின் மெம்பர்கள் அத்தனை பேர்களும் நீண்டகாலத் தவணைக் கடன் எங்கள் சங்கத்தில் இல்லை என்று சொல்லுகிறபொழுது, பாங்குகளுக்குச் செல்லவேண்டிய



நிலைமைதான் வருகிறது. அதுவும் கூட்டுறவு இயக்கம் தான். அங்கு போய் கடன் வாங்கிக்கொள்ளலாம். நான் சொல்லுவது என்னவென்றால், நீண்டகாலக் கடன் கொடுப்பதற்கு வசதி இல்லாத காரணத்தினால், கிராமக் கூட்டுறவு சங்கங்கள் நல்லவிதமாக செயல்படமுடியவில்லை என்பது தான். இந்த நிலையிலே ஒன்று கிராமக் கூட்டுறவு சங்கங்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுப்பதற்கு வசதி செய்துகொடுத்து அவைகளை ஊக்குவிக்கவேண்டும். இல்லையென்றால் விவசாய பாங்குகளை அதிகமாக்கிவிட்டு கிராமக் கூட்டுறவு சங்கங்களை ஒழித்துவிடவேண்டும். இரண்டையும் வைத்துக் கொண்டு ஒன்றுக்கொன்று முரணாக இயங்கி வந்தால், கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி அடைவதற்கு தடையாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் மார்கெடிங் சொஸைடிகள் உருளைக்கிழங்கு மட்டும் வாங்கி விற்கும் நிலையில் தான் இயங்கிக்கொண்டு வருகின்றன. சென்ற ஆண்டில் இருந்ததைவிட நீலகிரி ஜில்லாவில் இந்த ஆண்டில் மார்கெடிங் சொஸைடிகள் நல்ல முறையிலே நடந்துவருவது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். சர்க்காருடைய கவனத்திற்கு மற்றொரு விஷயத்தையும் கொண்டுவர விரும்புகிறேன். அங்கு டீ உற்பத்தி செய்யும் சிறு சிறு தேயிலை தோட்டக்காரர்களுக்கு மார்கட் கண்டுபிடிக்க முடியவில்லை. டீ வாங்கி விற்கக்கூடிய மார்கெடிங் சொஸைடிகள் அங்கு ஏன் ஏற்படுத்தக்கூடாது என்பது பற்றி சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு லிப்டன்ஸ், ப்ரூக்பாண்டு போன்ற தனிப்பட்ட கம்பெனிகள் அங்கு இருக்கக்கூடிய டீயை வாங்கி "பிளாண்டு" செய்து இந்த ராஜ்யத்திலுள்ள எல்லா இடங்களுக்கும், வேறு அன்னிய இடங்களுக்கும் கூட அவர்கள் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே எங்கள் ஜில்லாவில் தேயிலை வாங்கி விற்பதற்கு கூட்டுறவு மார்கெடிங் சொஸைடிகள் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அந்த சங்கங்களை நல்ல முறையில் நடத்தமுடியும். இந்த ஆண்டு கூட்டுறவு முறையிலே "இண்டஸ்டிரியல் கோவபரேடிவ் சொஸைடி" ஒன்று குந்தாவில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருந்தோம். உத்தரவு கிடைத்துவிட்டது. இப்பொழுது கோட்டகிரியில் இண்டஸ்டிரியல் கோவபரேடிவ் சொஸைடி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று விண்ணப்பம் ரிஜிஸ்டிராருக்கு அனுப்பியிருக்கிறோம். அந்த சொஸைடி ஆரம்பிப்பதற்கு உடனடியாக அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த சொஸைடியை நல்லவிதமாக நடத்த முடியும் என்று என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். ஏனென்றால் கூட்டுறவுத் துறையில் எனக்கு அனுபவம் இருக்கிறது, டீ உற்பத்தியிலும் அனுபவம் இருக்கிறது. அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு அங்கே இம்மாதிரி ஒரு சங்கம் ஏற்படுத்தினால் மக்களுக்கு நல்ல விதத்தில் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நீலகிரி ஜில்லாவில் வேறு எந்தத் துறையிலும் இண்டஸ்டிரி வளர்வதற்கு வழி கிடையாது. கூட்டுறவு இயக்கத்தை நம்பினால்தான் அந்த ஜில்லா முன்னுக்கு வரமுடியும். ஆகவே, இந்த விஷயத்தை பரிசீலனை செய்து டீ இண்டஸ்டிரியல் கோவாபரேடிவ் சொஸைடி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், டீ மார்கெடிங் சொஸைடிகள் அமைத்துக்கொடுக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். டீ மார்கெடிங் சொஸைடிகள் ஏற்படுவதின் மூலம் நல்ல மார்கெட்டுகள் கண்டுபிடித்து அயல் நாட்டிற்குக் கூட டீயை ஏற்றுமதி செய்ய வசதி ஏற்படும். ஆகவே, டீ மார்கெடிங் சொஸைடிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு இயக்கம் என்பது தொழிலாளர்களிடத்தில் பரவவில்லை. நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இருக்கக்கூடிய ரிஜிஸ்டிரார் அவர்கள் ஏற்கெனவே தொழிலாளர்கள் தலைவராக இருந்தவர். தொழில் கமிஷனராக இருந்தவருக்கு நன்றாக தொழிலாளர்களைப்பற்றி தெரியும். நீலகிரி ஜில்லாவில் தொழிலாளர்களிடையே இந்த கூட்டுறவு இயக்கம் இன்னும் பரவவில்லை. அதைப் பரி

சிலை செய்து அவர்கள் இந்த இயக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய வகையில் ஒரு திட்டம் வகுக்கவேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் அவர்கள் வேறு எந்தத் துறையையும் நம்பி வாழமுடியாது. முதலாளிகள் கொடுக்கக்கூடிய கூலியை ஓரளவாவது மிச்சம் பிடித்து, கூட்டுறவு இயக்கம் மூலம் அவர்களுக்கு பயன்படக்கூடிய முறையில் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் வேறு துறையிலே வளர்ச்சி அடைவதற்கு முடியாத நிலையிலே இருக்கிறார்கள். இந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு இயக்கம் பயன்படும்படிச் செய்யவேண்டும் என்று அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தத் துறையில் நல்ல முறையில் அமைச்சர் அவர்கள் செயல்பட்டுக்கொண்டு வருவதையும், இந்த இலாகாவை மிகவும் பொறுப்பாக நடத்திக்கொண்டுவருவதையும் பற்றி அமைச்சர் அவர்களை பாராட்டிக் கொண்டு, இந்த கூட்டுறவு மானியத்தை நான் ஆதரிக்கிறேன்.

*SRI V. SUBBIAH: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு 21-வது மானியமாகிய கூட்டுறவுக்கு 1 கோடியே 86 லட்சத்து 49 ஆயிரத்து 100 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக இன்றையதினம் கிராம கிரெடிட் சொஸைடிகளுக்கு—கிராம ஐக்கிய நாணய சங்கங்களுக்கு—ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை மிக மிகக் குறைவு என்று நான் நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் 80 சதவீதத்திற்கு மேல் கிராமங்களைக் கூட்டுறவில் சேர்த்திருக்கிறோம், 34 சதவீதத்திற்கு மேல் நம் ராஜ்யத்தில் உள்ள மக்கள் இந்தக் கூட்டுறவினால் பயனடைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது வரவேற்க வேண்டிய விஷயம். ஆனால் 13 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு அரசாங்கம் சரி பண்ண முடியுமா, இன்றைக்கு இருக்கக்கூடிய கிராமப் பொருளாதார அமைப்பிலே என்று பார்க்கவேண்டும். இப்போது இருக்கக்கூடிய பல சட்டங்களினாலே தனிப்பட்டவர்களிடம் எவ்வளவு கடன் உதவி வாங்கி வந்தார்களோ அதையெல்லாம் வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய லேவாதேவிச் சட்டங்களினால் கடன் வாங்க முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேறு விதங்களில் வகை செய்திருக்கிறார்களா, இதை வேறு வழிகளில் பூர்த்தி செய்து கொள்ள முடியுமா, அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அப்படிச் செய்யப்படவில்லை. சப்ளிமென்டரி எஸ்டிமேட் வரும்போதாவது அதற்கு அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கூட்டுறவு ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு தொகை ஒதுக்குவது மிக மிக முக்கியமானதால், இதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நில அடமான பாங்குகள் செயல்படுவதைக் குறித்து மதிப்பிற்குரிய நண்பர்கள் பலர் பேசும்போது குறிப்பிட்டார்கள். விவசாயிகளுடைய பழைய கடனைத் தீர்ப்பதற்காக ஏற்பட்ட பாங்குகள் பல பத்தாண்டுகளாக இருக்கின்றன என்று குறிப்பிட்டால் அதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் [illegible] ல் வருஷங்கள் கடன் வாங்கவேண்டிய ஏற்பாட்டில், 2 அல்லது கிடையாது. [illegible] பிறகு தான் பலன் கிடைக்கிறது. குறிப்பாக இன்றைக்கு 3 வருஷங்களுக்கு மேலில்லாத ஜமீந்தாரி பிரதேசமாகவோ அல்லது இனாம்தாரி பிரதேசமாகவோ [illegible] வே இல்லாத பிரதேசங்களில், கிராம விவசாயிகள் [illegible] களின் பலன்களை அடைய முடியாத நிலையில் இந்த நில அடமான பாங்கு [illegible] ட்டிருக்கின்றன. ரீ-செட்டில்மெண்ட் ஆகும் வரையில் எந்த வித விமோசு [illegible] பாங்குகள் அமைச்சர் [illegible] னமும் இல்லாமல் இருக்கிறது.

இன்றைக்கு இருக்கக் [illegible] றால், [illegible] கூடிய மார்க்கெட்டிங் சொஸைடிகள் எந்த முறையில் செயல்படுகிறது என்[illegible] விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் பணப் பொருட்களாக—பணப் பயிர்களாக—பர்மா, மலேயா, இலங்கை போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களாக இருந்தால் விவசாயிகள் [illegible] தொடர்புள்ள சங்கங்களாக இல்லாமல் மத்திய ஸ்டோர்ஸ் போன்ற சங்கங்களுக்கு லைசென்ஸ் கொடுத்து அவர்கள் கையில் விவசாயிகள் சிக்கி, அவர்களு[illegible] க்கு கமிஷன் கிடைக்காது விற்பனை சங்கங்





களுக்குக் கிடைக்கக்கூடிய நிலையில் பல விதமாக வீண் செலவு செய்து, பயிர் செய்யக்கூடியவர்களுக்கு நியாய விலை கிடைக்க முடியாத அளவில் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் இதை நல்ல முறையில் பார்த்து, உற்பத்தி செய்பவர்கள் செலவு செய்து அதனால் வரக்கூடிய பலன்களை அவர்கள் அடைய வேண்டுமே தவிர, மத்தியிலுள்ள தரகர்களும், வியாபாரிகளும் அடைய முடியாத நிலையில் கூட்டுறவு அமைப்பு இருக்க வேண்டுமென்று ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

(Sri V. K. Kothandaraman in the Chair.)

அடுத்தபடியாக விவசாய கூட்டுறவு சங்கங்கள் என்று இன்றைக்கு நாட்டிலே நம்முடைய சர்க்காரும், மத்திய சர்க்காரும் பறைசாற்றுகிறார்கள். உண்மையிலேயே மகாத்மா காந்தி அவர்களும், ஆச்சார்யா வினோபா அவர்களும் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு இதிலே ரொம்பவும் நம்பிக்கை இருக்கிறது. இன்றையதினம் நடைமுறையில் எப்படி இருக்கிறது என்றால், விவசாய கூட்டுறவுப் பண்ணைகள் அமைப்பதிலே பல வித அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. சட்ட அமைப்பைப் பார்த்தால் கூட்டுறவுச் சட்டமானது மிகவும் பழமையான சட்டமாக இருக்கிறது. பல்லாண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷார் காலத்தில் ஏற்பட்ட சட்டம் இந்தச் சட்டம். இதற்கு வேண்டிய திருத்தங்கள் செய்யப்படவில்லை. சமீபத்திலே, 1950-ம் வருஷத்திய பஞ்சாயத்து சட்டத்தை 1958-ல் புது சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு கூட்டுறவுச் சட்டத்தைப் பொறுத்த அளவில் புதிய சட்டம் இல்லாத நிலை இருக்கிறது. இதை அவசியம் மாற்றி அமைக்க வேண்டும். கூட்டுறவுப் பண்ணையில் தனி நபர்கள் நிலமும், தேவஸ்தான நிலமும் சேர்த்து செய்யலாமா, செய்யக்கூடாதா என்ற பல பிரச்னைகளையெல்லாம் இருக்கின்றன. இதிலே பலவித கஷ்டங்களெல்லாம் இருக்கின்றன. அதிகாரிகளுக்குச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்தபோதிலும், கூட்டுறவுப் பண்ணைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று அதிகாரிகள் நினைத்தாலும், அவர்கள் யோசிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. வருஷக் கணக்கான காலம் ரெஜிஸ்ட்ரேஷனுக்காக காத்திருக்க வேண்டியிருக்கிறது என்பதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து, அதற்காக முறை வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமாந்திர விவசாய பாங்குகள் அமைப்பதிலே, போர்ட் ஆப் டைரக்டர்களை நாமிநேஷன் செய்கிறார்கள். அது தப்பு என்று நான் நினைக்கிறேன். அதற்கு பதிலாக அது தேர்தல் முறையிலே இருக்க வேண்டும்—தேர்தல் முறைதான் நல்லது. ஜனநாயக அமைப்பிலே கிராமாந்திரங்களில் நல்ல முறையில் இப்போதுள்ள அடிப்படையில் நடக்காது. கிராமாந்திரங்களில் பல கட்சிப் பிரிவினைகள், பல சண்டைகள் இருக்கும் போது நாமிநேஷன் முறை வைத்திருப்பது நல்லதல்ல என்று நான் நினைக்கிறேன். அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இன்னும் இரண்டொரு விஷயங்களைப் பற்றிச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இந்த நாட்டிலே 3 லட்சம் பேர்கள் மாஜி ராணுவத்தினர்கள் இருக்கிறார்கள். இந்த 3 லட்சம் பேர்களுக்கு நமது ராஜ்யத்திலே சேலத்திலே ஒரு காலனி அமைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் ஒரு விவசாய காலனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு அரசாங்கம் ஏதாவது செய்திருக்கிறதா என்று டீடெயில்ட் பட்ஜெட்டிலே பார்த்தேன், மாஜி ராணுவத்தினருக்கு இதுவரையில் செய்யப்பட்டது ஒன்றும் தெரியவில்லை.

எக்ஸ்-சர்வீஸ்மென் டிரான்ஸ்போர்ட் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதே, அதற்கு ஏதாவது செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. அந்த முயற்சியிலே அவர்களுக்கு நல்ல உதவி செய்ய வேண்டும். முடியவில்லையென்றால் மத்திய சர்க்கார் வசம் ஒப்புவிக்கவேண்டும். இப்போது ஒன்றும் செய்யவில்லை என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி

நாட்டை பாதுகாத்த மாஜி ராணுவத்தினர்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற நிலையில் எல்லாவித உதவிகளையும் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் இந்த கூட்டுறவு முறையிலே பல ஊழல்கள் எங்கு பார்த்தாலும் நடக்கின்றன. 50,000 ரூபாய் ஒரு ஸ்டோரிலிருந்து எடுத்துப் போய் விட்டார்கள் என்பது போன்றெல்லாம் பத்திரிகைச் செய்திகள் வருகின்றன. இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இந்த முறையில் இருக்கக்கூடாது. ஆடிட்டர்கள் நல்ல முறையில் வேலை செய்யவேண்டும். நல்ல முறையில் மானேஜ்மெண்ட் இருக்கவேண்டும். மேற்பார்வை செய்வதில் டிபார்ட்மெண்ட் கண்டிப்பாக இருக்க வேண்டும். அதற்கான முறையில் விதிகளில் மாற்றங்களைச் செய்யவேண்டும்—விதி முறைகளை அமைக்கவேண்டும். கூட்டுறவு அமைப்பை மாற்றி அமைத்து, புதிய முறையில் நமது சட்ட மன்றத்திலே பல விதிகளைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri N. S. RAMALINGAM** : கனம் தாற்காலிகத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கூட்டுறவு மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கம் இந்த ராஜ்யத்திலே நல்ல முறையில் இயங்கி வருகின்றதைப் பார்த்து எல்லோரும் பெருமைப்படுகிறார்கள். அதைப்பற்றி வரவு-செலவுத் திட்ட உரையிலே நமது நிதி அமைச்சர் அவர்களும், இன்றையதினம் நமது கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் இந்த ராஜ்யத்திலே உள்ள உத்தியோகத்திலுள்ள கூட்டுறவாளர்களும், உத்தியோகப் பற்றற்ற கூட்டுறவாளர்களும் இந்த இயக்கத்தை நல்ல முறையில் நடத்தி வருவதுதான். அமைச்சர் அவர்கள் சொல்வது போல, இதுவரையில் நடத்தி வந்து ஓய்வு பெற்ற திரு. பழனியப்பா முதலியார் அவர்களுக்கு இதிலே ஒரு பெரிய பங்கு இருந்தது. அவர்கள் இந்த இயக்கத்தை நல்ல முறையில் நடத்தி வந்தார்கள். அவருடைய சேவைக்கு அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் அவர்கள் பாராட்டு தெரிவித்தது போல, உத்தியோகப் பற்றற்றவர்கள் சார்பாக நான் அவருக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை ராஜ்யமானது கூட்டுறவு இயக்கத்தில் நல்ல முன்னணியில் இருக்கிறது. இதை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மற்ற பல ராஜ்யங்களின் நிலையோடு சமமாக பார்க்கக் கூடாது. கூட்டுறவு இயக்கத்தில் முன்னணியில் இருக்கும் சென்னை, ஆந்திரா, போன்ற ராஜ்யங்கள் சம்பந்தப்பட்ட வரையில் தனிப்பட்ட முறையில் பார்க்கவேண்டும்.

விவசாயப் பாங்குகள் ஏற்படுவதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னை ராஜ்யத்தில் 300 விவசாய பாங்குகள் ஆரம்பிக்கப்பட்டு அவைகளெல்லாம் நல்ல முறையில் நடந்து வருகின்றன. வடக்கே அவைகளெல்லாம் சரியாக வேலை செய்யாவிட்டாலும், நமது ராஜ்யத்தில் நல்ல முறையில் வேலை செய்து வந்திருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு எவ்வளவு நலன் கிடைத்திருக்கிறது என்பது கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். இந்த பாங்குகளை மேலும் ஆரம்பிக்க முயற்சி செய்யவேண்டும். அதற்காக இந்த ராஜ்யத்தில் இந்த வரவு செலவுத் திட்டத்தில் கூட 100 பாங்குகள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருப்பதைப்பற்றி நான் பாராட்டுகிறேன். மேலும் புதிய பாங்குகள் ஆரம்பிக்க முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே திட்டத்தில் விவசாய பாங்குகளுக்கு அலுவலகம் கட்ட, இந்த பாங்குகள் நகை ஈட்டுக் கடன் கொடுப்பதால், அவைகளை பத்திரமாக வைக்க, கட்டிடங்கள் கட்டுவதற்காக மான்யமும், கடன் கொடுப்பதற்காகத் தொகையும் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். இவைகளுக்கு நல்ல அலுவலகங்கள் இருந்தால் தான் நகை ஈட்டுக் கடன் கொடுப்பதற்கான நல்ல சூழ்நிலை இருக்கும். ஆகவே, இதற்கு தொகை ஒதுக்கியிருப்பதற்காக எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ள விம்புகிறேன்.





அதேபோல விவசாய பாங்குகளில் வேலை செய்வதற்கு அனுபவமில்லை. சிப்பந்திகள் தேவையாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக அனுபவம் பெற்ற சூப்பர்வைஸர்களாக பார்த்து போட வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கவேண்டியிருக்கிறது. மத்திய பாங்குகளில் வேலை செய்தால் அவர்களுக்கு சம்பளத்தோடு டி. ஏ. போன்ற பல அலவன்ஸ்களும் கிடைக்கின்றன. இவ்விதம் பல படிகள் அவர்களுக்கு வருவாய் வந்துகொண்டிருப்பதால் அவர்கள் மத்திய பாங்குகளில் வேலை செய்வதற்குத்தான் விரும்புகிறார்கள். கிராம புறங்களுக்கு வருவதற்கு அவர்கள் தயங்குகிறார்கள். இதைப்பற்றி இதே மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது நன்னிலம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று பதில் சொன்னார்கள். இதைப்பற்றி கவனித்து விவசாய பாங்குகளில் வேலை பார்க்கும் காரியதரிசி போன்றவர்களுக்கு அதிகமான அளவில் சம்பளம் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த பட்ஜெட்டில் மேற்பார்வை க[illegible]களுக்கும் மான்[illegible]மாகவும் கடனாகவும் கொடுப்பதற்கு தொகை ஒதுக்[illegible]யிருக்கிறது. இந்த கழகங்கள் நல்ல முறையில் கூட்டுறவு திட்டத்தை [illegible]ல்லாம் பரப்புவதற்கு வேலை செய்து வருகிறார்கள். இதன் மூலம் ப[illegible]ம் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி பேசுவதற்கும், நூல் நிலையங்கள் [illegible]ம் பயன்பெறுவதற்கும் வசதியாக இருக்கிறது. அந்த முறையில் [illegible] பணம் ஒதுக்கப்பட்டிருப்பதற்காக நான் அரசாங்கத்தை. பாரா[illegible]றேன். அதேபோல் பஞ்சாயத்தார்களுக்கு பயிற்சி கொடுக்கின்ற காரிய[illegible] இப்போது இருக்கின்ற முறையில் எல்லோரும் பயிற்சி பெறுவதற்[illegible]றைந்தது 15 20 வருடங்களாகும் என்று தெரிகிறது. இதற்கு மத்[illegible]டைய உதவியும் தேவைப்படுவதாகத் தெரிகிறது. ஆ[illegible] சாயத்தார்களுக்கும் குறைந்தது ஐந்து வருடத்திற்குள் பயி[illegible]ப்ப தற்கு மத்திய அரசாங்கத்தில் கேட்டு கூடிய சீக்கிரமாகவே பயிற்சி கொடுப்ப தற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நில அடமான பாங்குகள் சம்பந்தமாக சில வார்த்தைகளை குறிப்பிட விரும்புகிறேன். இப்போது நில அடமான பாங்குகளில் வட்டி விகிதம் அதிகமாக இருக்கிறது. தனிப்பட்ட நபர்களிடமிருந்து $5\frac{1}{2}$ சதமானம் வட்டிக்கு பலர் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதேசமயத்தில் கூட்டுறவு இயக்கத்திலிருந்து $6\frac{3}{4}$ சத விகிதத்திற்கு கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இவ்விதம் தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்த வட்டி விகிதத்தை குறைக்கவேண்டுமென்று பல மாநாடுகளில் வற்புறுத்தியிருக்கிறோம். அந்த மகாநாட்டில் கனம் அமைச்சர் அவர்களும் இதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினிடம் இதைப் பற்றி எடுத்துக்கூறி இதற்கு நல்ல முறையில் ஒரு ஏற்பாட்டை கொண்டு வருவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நான் அறிந்த மட்டில் இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருந்ததாகவும் அவர்கள் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இதற்கு ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டதாக தெரிகிறது. ஆகவே மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது இதை சேர்த்துக்கொள்வதற்கு வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் விவசாயிகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் அதாவது $4\frac{1}{2}$ சத விகிதத்தில் கடன் கிடைக்கக்கூடிய அளவுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழி வகை செய்யவேண்டும், அதற்கான முயற்சியில் நமது அமைச்சர் அவர்களும் இந்த அமைச்சரவையும் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக பம்பாயில் இருக்கக்கூடிய முறையை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதாவது நில அடமான பாங்குகளில் இருந்து விவசாயிகளுக்கு $6\frac{1}{4}$ சத விகிதத்திற்கு கடன் கொடுத்தாலும் அதில் $4\frac{1}{2}$ சத விகிதத்தை விவசாயிகளும் $1\frac{1}{4}$ சத விகிதத்தை அரசாங்கமும் கொடுக்கவேண்டும் என்ற முறையில் கொடுத்து வருகிறார்கள். இவ்விதம்

அவர்கள் கடனுகப்பெற்று இப்போது சுமார் 35 ஆயிரம் கிணறுகள் வெட்டப்பட்டு வருவதாக தெரிகிறது. ஆகவே அந்த முறையில் இங்கும் ஏதாவது ஒரு முறையை கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நில அடமான பாங்கு சிப்பந்திகளுக்கு—அதிலும் குறிப்பாக டெப்யூடி ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு பூரா சம்பளத்தையும ஸப்-ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு பாதி சம்பளத்தையும் சென்னையில் இருக்கும் நில அடமான பாங்கு கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் பூரா சம்பளத்தையும் அரசாங்கமே கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டால் விவசாயிகளுக்கு குறைந்த விகிதத்தில் கடன் கொடுக்க முடியும். இதைப் பற்றி பலர் சொன்னார்கள். மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாம் அரசாங்கமே சம்பளம் கொடுத்து வருவதைப்போன்று இவர்களுக்கும் அரசாங்கமே பூரா சம்பளத்தையும் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டால் விவசாயிகளுக்கு பெரும் நன்மையாக இருக்கும், ஆகவே அரசாங்கம் இதைப்பற்றி ஆலோசித்து தக்க ஒரு ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி நாராயணசுவாமி பிள்ளை கமிட்டி ரிப்போர்ட்டிலும் குறிப்பிட்டிருக்கிறது. அதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நிலங்களுக்கு மதிப்பீடு செய்வதில் கனம் மாரிமுத்து அவர்கள் சொன்னது போல் மிகவும் குறைவாகவே இருக்கிறது. அதாவது யுத்த காலத்தில் இருந்த விலையைவிட 25 பர்சன்ட் அதிகமாக போட்டு இப்போது மதிப்பீடு செய்கிறோம். இருந்தாலும் உண்மையான விலையைவிட இது மிகவும் குறைவாகவே இருக்கிறது. இந்த முறையை மாற்றவேண்டும் என்று நாராயணசுவாமி பிள்ளை கமிட்டியும், பல நிபுணர்களும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். பணம் திருப்பி கொடுப்பதிலும் கூட, உண்மையான விலைக்கு புறம்பாக, அதாவது மூட்டை ஒன்றுக்கு $7\frac{1}{2}$ ரூபாய் விலை என்று மதிப்பிட்டு பணம் கொடுக்கப்படுகிறது. இது உண்மைக்கு புறம்பாக இருக்கிறது. இந்த முறைகளை மாற்றவேண்டும் என்று அமைச்சர் அவர்களுக்கு பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதைப்பற்றி அரசாங்கத்திற்கும் எழுதியிருக்கிறோம். இவ்விதம் எழுதி அனுப்பி சுமார் ஒரு வருடமாகியும் இதுவரையிலும் எந்தவிதமான உத்தரவும் போடவில்லை என்று தெரிகிறது. ஆகவே இதன் பேரில் ஏதாவது உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சமீப காலத்தில் மழையில்லாமல் பஞ்சமும், பல கஷ்டங்களும் ஏற்பட்டதின் காரணமாக பல விவசாயிகள் தவணைக்கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் விவசாயிகளுக்கு உதவுவதற்கு ஒரு ரிவால்விங் பண்ட் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருந்தோம். இந்த பண்டிலிருந்து கடன் கொடுக்கவேண்டியது அவசியம் என்று தோன்றினால் ரெஜிஸ்ட்ரார் அவர்களுடைய உத்தரவின் பேரில் கடன் கொடுக்கலாம் என்ற நிபந்தனை போட்டாவது இதன் மூலம் விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் சம்பந்தமாக ஒரு வார்த்தை. இந்த கம்பெனிகள் எல்லாம் தேசீய மயமாக்குவதற்கு முன்னால் நில அடமான ஸ்தாபனத்திலிருந்து 40 பர்சன்ட் டிபெஞ்சர்கள் வாங்கிக்கொண்டிருந்தார்கள், இப்போது 10, 12 சதமானம்தான் டிபெஞ்சர்கள் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு அதிகமான அளவில் பண உதவி செய்வதற்கு வழியில்லாத நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் எல்லாம் குறைந்தது 40 பர்சன்டாவது டிபெஞ்சர்கள் எடுக்க வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தவேண்டும். இன்றைக்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்க்கு அதிகமாக பிரிமியங்கள் கிடைத்துக்கொண்டிருப்பது கிராமப்புறங்களில் இருந்துதான். அவ்விதம் இருக்கும்போது இதிலிருந்து கிடைக்கும் பணம் கிராமத்திலிருக்கக்கூடியவர்களுக்கு அதிகமாக பயன்படுவதற்கு வழி செய்யவேண்டும். அந்த முறையில் குறைந்தது ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்கள் எல்லாம் 40 பர்சன்டாவது டிபெஞ்சர்கள் எடுக்கவேண்டும் என்று அரசாங்கம்



புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இப்போது ரூரல் டிபெஞ்சர்களை நில அடமான பாங்குகள் வாங்குவது என்ற முறை ஆந்திரா ராஜ்யத்தில் வந்திருப்பதாக தெரிகிறது. நமது மாகாணத்திலும் அந்தத் திட்டத்தைக்கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் சிபாரிசு செய்திருக்கிறோம். இதைச் சீக்கிரமாகக் கொண்டு வருவதற்கு அனுமதி கிடைத்தால் அதிகமான பணம் வசூலிக்க முடியும். அதிலும இப்போது எல்லா இடங்களிலும் அறுவடைகாலமாக இருப்பதால் விவசாயிகளிடம் பணம் புழங்கும் சமயமாக இருக்கும். இந்தக காலம் தவறிவிட்டால் அவர்களிடம் பணம் இருக்காது, ஆகவே இதைச சீக்கிரமாகவே கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மத்திய நில அடமான பாங்குக்கு என்று இதுவரை தனியாகக் கட்டிடம் இல்லை, இப்போது இருக்கிற கட்டிடம் மிகவும் வசதிக்குறைவாக இருக்கிறது, ஆகவே உடனடியாக இதற்கு ஒருபெரிய கட்டிடம் கட்டுவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்றும, அதற்கான உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன இப்போது தேசீய அபிவிருத்திக் குழு கிராம சீரமைப்பை எல்லாம் கூட்டுறவு முறையில் நடத்த முடிவு செயதிருக்கிறது. அதிலும் இப்போது சர்வீஸ் கோவாப்பரேடிவ் சொசைட்டி ஆரம்பிக்கப்படவேண்டும என்று சொல்லப்பட்டு வருகிறது. நாம் ஏற்கனவே பல நோக்கு கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறோம். அதற்கும் இதற்கும் வித்தியாசங்கள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. நமது ராஜ்யத்தில் இந்த முறை புதிதல்ல, மேலும் நமது ராஜ்யத்தில், கூட்டுறவு இலட்சியத்தோடு நாம் எல்லோரும் வேலை செய்தால் கூட்டுறவு இயக்கம் நம் ராஜ்யத்தில் முன்னிலையில் நிறகும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த மானியத்தை ஆதரித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. KANDASAMI PADAYACHI** : கனம் சபைத் தலைவர் அவர்களே, நமது கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு 10-30 a.m. வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நல்ல முறையிலே நடந்து வருவது பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். கூட்டுறவுச் சங்கத்தில் நான் சென்ற இருபது ஆண்டுகளாக மெம்பராக இருந்துவருகிறேன். கூட்டுறவு இயக்கத்திலே செய்யப்படவேண்டிய சில திருத்தங்களை மட்டும் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது ஒரு சொஸைட்டியிலே கடன் வாங்கவேண்டுமானால், சொத்தை எழுதிவைத்து, மற்றும் அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கடன் வாங்கவேண்டுமானால் இரண்டு மூன்று மாதங்கள் ஆகின்றன. சொத்துக்கான டைட்டில் டீட் இருந்தால்தான் கடன் கிடைக்கிறது. பாகப்பிரிவினையான சொத்தாக இருந்தாலும், கூட்டுறவு பாங்கின்மூலமாக கடன் உதவி கிடைப்பதில்லை. காரணம், டைட்டில் டீட் வேண்டுமென்று பாங்குக்காரர்கள் கேட்கிறார்கள். பாகப்பிரிவினை ஆகியிருந்தாலும், டைட்டில் டீட் வாங்கியிருக்கமுடியாது. ஆகவே, டைட்டில் டீட் வைத்திருக்கவேண்டும் என்று வற்புறுத்தும் விதியைத் திருத்தியமைக்கவேண்டும். முக்கியமாக பட்டா மாறியிருந்தால் அவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய பாங்குகள் நல்ல முறையில் பணியாற்றி வருகின்றன. சுமார் 20, 30 கிராமங்களுக்கு ஒரு விவசாய பாங்கு அமைப்பதாகத் திட்டம் வகுத்து, அந்தக் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு வேண்டிய கடன் உதவி செய்கிற முறையில் பணியாற்றி வருகிறது. அருகாமையிலேயும், கிராம மக்களிடையிலேயும் இருப்பதால், கிராமத்தவர்கள் சீக்கிரத்தில் வநது, விண்ணப்பம் செய்துகொண்டு, சொத்தை எழுதிவைத்தால், டைரெக்டர்களோ அதிகாரிகளோ சீக்கிரத்தில் பரிசீலனை செய்து, டிஸ்போஸல் செய்கிறார்கள். நான் நேற்று கேட்ட ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது 300 விவசாய பாங்குகளை வைப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும், மேற்கொண்டு வைப்பதற்கும் அரசாங்கம் யோசித்துக்கொண்டிருப்பதாகவும் கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதிலே

ரொம்ப விஸ்தரிப்புத் திட்டம் வேண்டும். விவசாய பாங்குதான் நேரடியாக விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் இருக்கிறதே தவிர, மற்ற கூட்டுறவு க்ரெடிட் சொஸைட்டிகள் உதவி செய்ய முடிவதில்லை. காரணம், அவைகள் 40, 50, 60 மைல் தூரத்தில் அமைந்திருக்கின்றன. ஆனால், விவசாய பாங்குகள் கிராமங்களின் மத்தியில் அமைக்கப்பட்டிருப்பதால், விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாய பாங்கு மூலமாகவே கிராமத்தவர்களுக்கு வேண்டிய கடன் வசதிகள் கொடுக்கப்படவேண்டுமேயொழிய, தனிப்பட்ட சொஸைட்டிகளின் மூலம் கொடுப்பதென்றால் சரியாக வராது என்பது என் கருத்து. தனிப்பட்ட சொஸைட்டி மூலமாக இருந்தால், விவசாயிகளுக்கு வேண்டிய கடன் வசதி பெறுவதற்கு சௌகரியமாக இருக்காது. ஆகையால், விவசாய பாங்குகளை நல்ல முறையில் விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உரங்கள் கொடுப்பது பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசாங்கம், அதை வியாபாரிகள் மூலமாகக் கொடுப்பதால், வியாபாரிகள் லாப நோக்கம் காரணமாக ப்ளாக் மார்க்கெட்டில் விற்று விடுகிறார்கள். அதனால் விவசாய மக்களுக்கு உரங்கள் சரியான முறையில் போவதில்லை. உரங்களை கூட்டுறவு விவசாய பாங்கு மூலமாகக் கொடுத்தால் விவசாயிகளுக்கு நேரடியாகப் போவதற்குச் சரியாக இருக்கும். ப்ளாக் மார்க்கெட்டு செய்வதற்கு வழியில்லாமல் போகும். கூட்டுறவு விவசாய பாங்கு டைரக்டர்கள் கண்காணிப்பாக இருந்து விவசாயிகளுக்குக் கஷ்டம் உண்டாகாதபடி பார்த்துக்கொள்வதற்குச் சௌகரியமாக இருக்கும்.

அதே போல், விற்பனைக்கு வேண்டிய தானியங்களையும் ஈடாக வைத்து, வேண்டிய காலத்தில் பணம் வாங்கிக்கொள்வதற்கு வசதி செய்வதும் நல்ல திட்டமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மார்க்கெட்டிங் சொஸைட்டி இருக்கும் இடங்களில் "கோடவுன்" கட்ட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறார்கள். மார்க்கெட்டிங் சொஸைட்டியிலிருந்து ஐயாயிரம் ரூபாய் சொந்தமாகப் போட்டுக்கொண்டு, அரசாங்கத்திடமிருந்து பத்தாயிரம் ரூபாய் மான்யமாகப் பெற்று, இருபது வருஷத் தவணைகளில் திருப்பிக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், மார்க்கெட்டிங் சொஸைட்டியில் வைக்கும் பொருள்கள் நல்ல முறையில் கையாளப்பட்டாலும் வியாபாரிகள் அதன்மூலம் லாபம் அடைகிறார்கள். அதைக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டியாக வைத்தால், வியாபாரிகளுக்குப் போய்ச் சேராமல் பங்குதாரர்களாகிய விவசாயிகளுக்கு நேரடியாகப் போய்ச் சேரும் என்பது என்னுடைய கருத்து.

இப்பொழுது விலை நிர்ணயம் ரூ. 17 என்று இருக்கிறது. சென்ற வருஷம் விவசாய மக்கள், 60 படி கொண்ட மூட்டையொன்று ரூ. 15 வீதம் கொடுத்தார்கள். அதைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டியது. கடன் கடன் தான். அந்தத் திட்டம் ரொம்ப அவசியம். ரூ. 15-க்கே கொடுக்கும்படியான திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். அப்படிக் கொடுக்கும்படியாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

நில அடமான பாங்கியிலே பணம் சீக்கிரம் பட்டுவாடா ஆகவில்லையென்று திரு. மாதா கவுடர் அவர்கள் சொன்னார்கள். உண்மை தான். ஏனென்றால், நில அடமான பாங்கிலே திட்டமாக கூட்டுப்பட்டாவாக இருந்தால், சூபர்வைசர் நேரில் போய், " பணம் திருப்பிக் கொடுப்பதற்கு நிலம் இருக்கிறதா, வளம் இருக்கிறதா ? " என்று பார்வையிட வேண்டும். அனேகமாக சூபர்வைசர்கள் சரியாகப் போய்ப் பார்வையிடுவது இல்லை. நல்ல திட்டமாக இருந்தும், சீக்கிரத்திலே டிஸ்போசல் கொடுப்பதில்லை. பொதுவாகவே காலதாமதம் ஆகிறது. அதிலே நானும் அங்கத்தினராக இருக்கிறேன். ஏதாவது ஒரு "டிபெக்ட்" சொல்கிறார்கள். அது அவசியமாக விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு நன்மை செய்ததாகும். நாம் பாங்குகளை நிறைய ஆரம்பித்





தாலுங்கூட எதிர்ப்பார்த்த பலன் ஏற்படுவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டும். டிபுடி ரிஜிஸ்திரார், ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் கண் காணித்து நிறையப் பார்வையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்களையும் பாங்குகளையும் மற்றவைகளையும் வருஷத்திற்கு ஒரு முறை ஆடிட் செய்யவேண்டும். வடாற்காடு ஜில்லாவில் கூட்டுறவு ஆயில் பண்ணையிலே ஏதோ மோசடி நடந்ததாகவும் தகராறு இருந்ததாகவும் சொல்கிறார்கள். அதை அடிக்கடி ஆடிட் செய்துவந்தால் உடனுக்குடனே யார் மீது தப்பு இருக்கிறது என்று நமக்குத் தெரியும். உடனடியாக தலைவருக்குத் தெரிவித்து உடனடியாக வசூல் செய்யலாம். யாரால் தவறு ஏற்பட்டது என்று கண்காணிப்பதற்கு அவசியம் அடிக்கடி ஆடிட் செய்ய டிபுடி ரிஜிஸ்த்திரார் ஏற்பாடு செய்யவேண்டும். நான் ஒரு பாங்கிலே தலைவராக இருந்துகொண்டு வருகிறேன். ஜில்லா பாங்கிலும் டைரக்டராக இருக்கிறேன். ஆடிட் செய்யாததால் குற்றங்குறை இருக்கிறது. இரண்டு, மூன்று வருஷங்களுக்கொரு முறை ஆடிட் நடப்பதால் தான் இந்தக் குறைகள் ஏற்படுகின்றன என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

டெபுடி ரிஜிஸ்திரார்களுக்கு முன்சீப்புக்குள்ள அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். டெபுடி ரிஜிஸ்திரார் இன்ஸ்பெக்ஷனுக்கு வரும்போது எக்சிக்யூஷன் ப்ரோசீடிங்ஸ் நிறைவேற்றுவதற்கு முன்சீப்புக்குள்ள அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத அளவுக்கு விவசாயிகளுக்கு முடைகள் இருக்கலாம். இருந்தாலும் அறுவடைக் காலங்களில் அவர்கள் கையில் பொருள் இருக்கும். அப்பொழுதாவது பாங்குகளுக்கு வரவேண்டியதை வசூலிக்க நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் டெபுடி ரிஜிஸ்திரார்களுக்கு இருக்கவேண்டும். இப்படி நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்தால்தான் ஓவர்டியூக்கள் குறையும். அறிக்கை மூலமாக அவர்ளுக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்க வசூல் செய்தால்தான் ஏராளமான பாங்குகள் நல்ல முறையில் நடந்துவரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயிப்பதைவிட கூட்டுறவு முறையில் பண்ணைகள் அமைப்பதன் மூலமாக விவசாயம் செய்வது மக்களுக்கு நல்லது. கூட்டுறவுப் பண்ணை மூலமாக நிலத்தில் விவசாயம் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய அபிலாஷை. அம்மாதிரி வைத்தால் ஒருவிதமான தொந்தரவும் இருக்காது. அப்பொழுதுதான் அதனுடைய பலன் விவசாய மக்களுக்குப் போய்ச்சேரும். உச்ச வரம்பு கட்டிவிட்டால் ஆளுக்கு அரை ஏக்கர் வரும். அதனால் பலன் காண முடியாது. நிலச்சுவாந்தார்களுக்கு எப்படியும் போதுமான வசதி இருக்கலாம் இருந்தாலும்கூட இந்தத் திட்டம் கூட்டுறவு முறையில் ஏற்பட்டால் பலவிதமான நோக்கங்களுக்கு நல்லதாக இருக்கும். ஏதோ கூட்டுறவு இயக்கத்தில் நான் பல ஆண்டுகளாகச் சேர்ந்தவன் என்ற முறையில் எனக்கு அதன் நன்மை தெரியும். அதனால் சொல்கிறேன். அதனால் மற்றவர்களுக்கு அதன் நன்மை தெரியாது என்பதற்காக அல்ல நான் சொல்வது. விவசாய மக்களுக்கு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இந்த அரசாங்கம் எவ்வளவோ செய்து வருவது பற்றி நான் ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். அதை இன்னும் நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்திலே எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**SRI S. M. ANNAMALAI :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு இலாகாவின்மீது கொண்டு வரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப் படுகிறேன். கூட்டுறவு இலாகாவின் மூலமாக விவசாயிகளுக்கு கடன்கள் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் வீதம் மூன்று ஆண்டுகளுக்கும் ஆறு கோடி ரூபாய் என்று இருந்தது 13·3 கோடி ரூபாயாக சென்ற ஆண்டில் உயர்ந்து

அடுத்த ஆண்டு 16 கோடி ரூபாயாகச் செலவிடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கடன்களால் யார் யார் பயன்படுகிறார்கள் என்று பார்த்தால் பெரிய பணக்காரர்களும் பெரிய நிலம் படைத்தவர்களும்தான் பயன்படுகிறார்கள். அவர்கள்தான் இந்தக் கடனை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுகிறார்களே தவிர பாமர மக்கள், விவசாய மக்கள் அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளமுடியவில்லை. அதைபோலவே புல் பைனான்சிங் ஸ்கீம் என்ற ஸ்கீம் ஒன்று இருக்கிறது. அந்த ஸ்கீமின்படி ராமனாதபுரம் மாவட்டத்திலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் இரண்டு பிர்க்காக்களை எடுத்து நல்ல முறையில் பரிசோதனை செய்து, இந்த ஆணடு கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடியதைப் பார்த்தால் சுமார் ஆறு ப்ளாக்குகள் விஸ்தரிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பார்த்தால் 1959-60-ல் பனிரெண்டு ப்ளாக்குகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏழு விவசாய ப்ளாக்குகள் விஸ்தரிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் பார்க்கப் போனால் இந்த கிராம கூட்டுறவு விவசாய சங்கங்கள் விவசாய மக்களுக்கு நல்ல முறையில் பயன்படுகிறதா என்று பார்த்தால் அவர்களுக்கு பயன்படாமல் பெரிய முதலாளிகளும், பெரிய பணக்காரர்களும், பெரிய நிலச்சுவாந்தார்களும்தான் அதன் மூலம் பயனடைகிறார்கள் என்பது தெரிய வரும். சாதாரணமாக சட்டசபை தேர்தல் காலங்களில் கூட அவ்வளவு பணம் செலவு செய்ய மாட்டார்கள். ஆனால் இந்த கூட்டுறவு விவசாய சங்கங்களில் டைரெக்டராகவும், ப்ரசிடெண்டாக வருவதற்கு அவர்கள் செலவழிப்பதைப்பார்த்தால் எவ்வளவோ அதிகமாக செலவு செய்வதைப் பார்க்கலாம். அந்தச் சங்கங்களில் தலைவராக வருவதற்கு ஒரு வோட்டுக்கு பத்து, அல்லது நூறு அல்லது நூற்று ஐம்பது ரூபாய் வரையில் கொடுத்து அவர்கள் ப்ரசிடெண்டாகவும் டைரெக்டராகவும் வந்து விடுகிறார்கள். கிராமங்களிலுள்ள பாமர மக்களுக்கு அந்த கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக வருவதற்கும் எந்த விதாமன வாய்ப்பும் இடையாது. இந்தக் கூட்டுறவு சங்கங்களைப்பற்றிப் பேசும்போது கனம் ஸ்ரீநிவாச அய்யர் சொல்லுகிறார். இதற்குக் கூடவா வெட்டுப் பிரேரேபணை என்று. சட்ட மன்றத்தின் முன் இதற்குக் கூட வெட்டுப் பிரேரேபணை கொடுக்க வேண்டுமா என்றுகூட கேட்கிறார். சுமார் சென்ற இரண்டு மூன்று நாட்களாக வருகிற பத்திரிகைகளைப் பார்த்தால் தென் ஆற்காடு மாவட்டத்தில் 400 ரசாயன உரம் மூட்டைகள் காணுமல் போய்விட்டன என்றும் நவ இந்தியா பத்திரிகையில் வந்திருக்கிறது. இந்த 400 மூட்டைகளும் 4 வாகன்களில் வந்தது என்றும், மூன்று வாகன்களும் நல்ல முறையில் பயன்படுத்தப்படவில்லை என்றும் ஒரு வாகன் இருக்கிற இடம் தெரியவே இல்லை என்றும் அதிலுள்ள 400 மூட்டைகள் சென்ற இடமே தெரியவில்லை என்றும், பத்திரிகையில் பார்த்தேன். அதைப் போலவே வட ஆற்காடு மாவட்டத்தில் ரசாயன உரம் வந்த மூட்டைகள் எங்கே போயிற்று என்று தெரியவில்லை என்ற புகார் வந்திருக்கிறது என்றும் இந்த முறையில் கூட்டுறவு சங்கங்கள் மிக மிக மோசமான முறையில் நடை பெற்று வருகிறது என்றும் சொல்லப்படுகிறது. அதைப் போலவே சென்ற மூன்று நான்கு நாட்களாக இந்த சட்ட மன்றத்தில் கேட்கப்படுகிற கேள்விகளைப் பார்த்தால் உர மூட்டைகளுக்கு பதிலாக சாதாரணமாக பத்து மூட்டை புளியங்கொட்டை இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அண்ணாமலைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் என்பது பொது மக்களுடைய இயக்கம். அதிலுள்ள டைரெக்டர்கள் தவறுகள் செய்தால் அது சர்க்கார் தவறு செய்ததாக கருதக்கூடாது. அந்த தவறுகளை நாம் திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை மட்டும்சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI S. M. ANNAMALAI : அந்தப் புகார்களை திருத்துவது சர்க்காருடைய பொறுப்பாக இருக்கிறது என்பதால் அதைச் சொல்லுகிறேன். காரணம் 1958-ம் ஆண்டு ஸ்டேட் ஆடிட்டர்களை நியமித்திருக்கிறார்கள்.



அதற்கு முன்னதாக தனியான இலாகா ஆரம்பித்து அதன் மூலமாக நல்ல முறையில் தணிக்கை செய்து வந்தார்கள். அப்பொழுது இப்படிப்பட்ட மோசடிகள் நிகழ்ந்திருக்கிறதா ?

இந்த ஸ்டேட்மெண்டில் மாஜி ராணுவத்தினருக்கு எவ்வளவோ தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது ஸ்டேட்மெண்டில் காணப்படவில்லை. மாஜி ராணுவத்தினர் நமது மாநிலத்தில் இருக்கிறவர்கள் மூன்று லட்சம் பேர்கள். அவர்களில் ஒரு சிலர் அதாவது 100 பேர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருக்கிறார்கள். அந்த சங்கங்களின் மூலமாக சர்க்கார் அவர்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறது என்பது இந்த வரவு செல்வு திட்டத்தில் காணோம். மாஜி ராணுவத்தினருக்கு மத்திய சர்க்கார் பணம்தர வேண்டும் மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் வற்புறுத்தி வாங்கிக்கொள்ள வேண்டும். உண்மையில் பார்க்கப் போனால் மாஜி ராணுவத்தினர்கள் ராணுவத்தில் நல்ல முறையில் சேவை செய்துவிட்டு இப்பொழுது கிராமங்களில் வந்து தங்கியிருக்கிறார்கள். அவர்கள் ரொம்பவும் ஏழ்மையான நிலைமையில் இருக்கிறார்கள். தங்களுடைய வாழ்க்கையைக்கூட நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் இவர்களுக்கு என்று தனியாக பணம் இருக்கிறது. அதிலிருந்து இந்த மாஜி ராணுவத்தினருக்கு அதிகப்படியான பணம் கொடுக்க வேண்டும் என்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்திக் கேட்டு வாங்கி இவர்களுக்கு கொடுக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமங்களிலுள்ள பஞ்சாயத்தார்களுக்கு பயிற்சி ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் பஞ்சாயத்தார்களாக இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு உண்மையிலேயே இந்த கூட்டுறவு இயக்கத்தின் விதிகள் தெரியவில்லை. அந்த விதிகள் தெரியாமல் இருக்கிற காரணத்தால் கூட்டுறவுகளை நடத்துவதற்குத் தெரியாமல் ரொம்பவும் தவிக்கிறார்கள். அப்படிப்பட்ட பஞ்சாயத்தார்களுக்கு ட்ரெயினிங் தரவேண்டும் என்று 23·51 லட்ச ரூபாய் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று வருஷங்களாக 2·51 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு மீதமுள்ள 21 லட்சம் ரூபாய் செலவிடப்படாமல் அப்படியே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த 21 லட்சம் ரூபாயை வருங்காலத்திலாவது நல்ல முறையில் செலவிடப்பட்டு அந்தந்த பஞ்சாயத்தார்களுக்கு நல்ல முறையில் ட்ரெயினிங் கொடுத்தல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ரூபாய் எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்காமல் எண்ணிக்கையைப் பார்த்தால் நிறைய பேர்களுக்கு ட்ரெயினிங் கொடுக்கப்பட்டிருப்பது தெரிய வரும். அப்படி 4,546 பஞ்சாயத்தார்களுக்கு ட்ரெயினிங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் சரிவர செலவு செய்யப்படவில்லை. வேண்டுமானால் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். இன்னும் இரண்டு வருஷங்கள் தானிருக்கிறது இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவடைவதற்கு. இந்த 21 லட்சம் ரூபாயையும் நல்ல முறையில் செலவிடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மாநில சர்க்கார் உணவு தானியங்களை வாங்குவதற்கு என்று மத்திய சர்க்காரைக் கேட்டு பத்து கோடி ரூபாய் வாங்கப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி பத்து கோடி ரூபாய் வாங்கி உணவு தானியங்களை வாங்கி வியாபாரம் செய்யப்போவதாகவும் அப்படிச் செய்யும்போது லாபம் நஷ்டம் இல்லாமல் வியாபாரம் செய்யப்போவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி பத்து கோடி ரூபாய் வாங்கும்போது அதற்கு வட்டி உண்டா இல்லையா என்பதைப்பற்றி அறிக்கையில் குறிப்பிடவில்லை. அப்படி மத்திய சர்க்கார் வட்டி தேவை என்று சொன்னால்,

இந்த மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் என்ன சொல்ல வேண்டுமென்றால் லாபம் அல்லது நஷ்டம் இல்லாமல் இந்த வியாபாரத்தைச் செய்யப் போகிறோம் அதனால் இந்த பத்து கோடி ரூபாய்க்கும் வட்டி தர முடியாது என்று சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே பார்மிங்க சொசைட்டிக்கு என்று இந்த மாநில சர்க்கார் 6·56 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் மத்திய சர்க்காருடைய விகிதம் என்ன என்பதைப் பற்றி சொல்லவில்லை. முன்பு சொன்னதைப்போலவே மத்திய சர்க்காரிடம் சொல்லி இதற்கு மேலும் பணம் தேவை என்று வற்புறுத்தி பணத்தைப் பெற வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக ஜவ்வாது மலைவாசிகளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டியதாக இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் கூட அவர்களை வந்து சமீபத்தில் பார்த்து விட்டுப் போனார்கள். ஜவ்வாது மலைவாசிகள் மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கிறார்கள். ஜவ்வாது மலை மீது விளையக் கூடிய கடுக்காய் போன்ற வியாபாரப் பொருள்களை தனிப்பட்ட முதலாளிகள், 2,000, 3,000 என்றும் ரூபாய்க்கு நாலு மரக்கால் அல்லது மூன்று மரக்கால் என்றும் வாங்கிக்கொண்டு வந்து கீழே அதே கடுக்காய்களை ஒன்று காலணா அரையணா என்று விற்று அதிகப்படியான கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். அதனால் மலைமேலேயே ஜவ்வாது மலை வாசிகளுக்கு மார்க்கெட்டிங் சொசைட்டிகளை ஆரம்பித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI N. MAHALINGAM : துணை சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்தை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்தக் கூட்டுறவு மானியத்தில் வீடுகள் கட்டும் திட்டத்திற்காக மத்திய சர்க்கார் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காக வீடு கட்டும் திட்டமும், ராஜ்ய சர்க்கார் வீடு கட்டும் திட்டமும் அமுலில் இருந்து வருகிறது. மாநிலத்தில் இருக்கக்கூடிய பல முக்கிய நகரசபைகளாலும் இந்த வீடுகள் கட்டவேண்டிய அவசியம் மிக அதிகமாக இருந்து வருகிறது. இதற்கெல்லாம் அதிகமான பணம் தேவையாக இருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய வீடு கட்டும் கூட்டுறவு சொசைடிகளிடம் போதுமான பணம் இல்லை. சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்த வகையில் சுமார் 33½ லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை நம்முடைய மாநிலத்தின் தேவைக்குப் போதுமானதாக இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் தொகையை அவசியம் அதிகப்படுத்துவதற்கு ராஜ்ய சர்க்கார் வேண்டிய முயற்சியை, எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய சர்க்காரால் பணம் கொடுக்க முடியாத நிலைமை இருந்தாலும் அல்லது மாகாண சர்க்காரால் மேற்கொண்டு பணம் ஒதுக்க முடியாத நிலைமை இருந்தாலும், " லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் " என்று சொல்லக்கூடிய அவர்களிடமிருந்து வேண்டிய கடன் பெற்று அவற்றை இந்தக் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டித்தரப் பயன்படுத்தவேண்டும். அதற்கான முயற்சிகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் அவர்களுடைய சிப்பந்திகளுக்கும், சர்க்கார் சிப்பந்திகளுக்கும் வீடு கட்டப் பணம் கொடுப்பதற்காக யோசனை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் சர்க்கார் சிப்பந்திகளுக்கும், தங்கள் சிப்பந்திகளுக்கும் மட்டும் வீடு கட்டுவதற்காகப் பணம் கொடுப்பது என்பது போதாது. பொதுவாகப் பொதுமக்கள் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். குறைந்த பட்சம் இன்ஷூரன்ஸ் செய்திருக்கக்கூடிய பாலிசி ஹோல்டர்ஸ் எல்லோருக்குமாவது கொர்டுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று வீடு கட்டிக்கொடுக்கும் சொசைடிகளுக்குக் கொடுத்தால், அந்த சொசைட்டிகளால் இன்னும் அதிகமான அளவில் வீடுகள் கட்டிக்கொடுக்க முடியும்.





பொள்ளாச்சியைப் பொறுத்தவரை அங்கு இருக்கக்கூடிய கூட்டுறவு வீடு கட்டும் சொசைடிக்கு 200 வீடுகள் கட்ட சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். நாம் இப்பொழுது புதிதாகப் பரம்பிக்குளத் திட்டத்தைத் துவக்க இருப்பதால் அந்தப் பகுதிகளில் வீடுகளுக்குக் கிராக்கி இருந்து கொண்டிருக்கிறது. மேற்கொண்டு 200 அங்கத்தினர்கள் வீடுகளுக்காக மனுச் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறார்கள். மறுபடியும் 200 அங்கத்தினர்கள் சேர்ந்து வீடுகள் கட்ட அனுமதி கொடுத்து, வரும் ஆண்டில் அதற்கான பணத்தை ஒதுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, சர்க்காருடைய அறிக்கையில் " மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்துவதற்கான வேலைகள் நடந்து வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. 1959-60-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பொழுது கூட்டுறவு இலாகா நடைமுறைகளினால் வேலைகள் நல்ல முறையில் நடக்க தடை ஏற்படுகிறது. இப்பொழுது கூட்டுறவு சொசைடிகளில்—சர்க்கரை ஆலைகளில் டைரக்டர் தவிர எக்சிக்யூடிவ் கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. அந்த எக்சிக்யூடிவ் கமிட்டி தான் முக்கிய நிர்வாக விஷயங்களைக் கவனிக்கவேண்டி இருக்கிறது. அதற்கு சென்னையில் இருந்து கூட்டுறவு இலாகா அதிகாரிகளும், தொழில் இலாகா டைரக்டர்களும் வந்து கலந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். உடுமலைப் பேட்டையில் உள்ள ஆலையைப் பொறுத்த வரை டைரக்டர் கூட்டத்தில் "கோரம்" இருந்தால் கூட, சில சமயங்களில் எக்சிக்யூடிவ் கமிட்டியில் "கோரம்" இல்லாத நிலைமை ஏற்படுகிறது. இந்த எக்சிக்யூடிவ் கமிட்டி அவசியமா என்பது பற்றி சர்க்கார் சிந்திக்க வேண்டும். நேரடியாக டைரக்டர் கூட்டமே போட்டுக்கொண்டுவந்தால் போதுமானது.

சென்ற வருஷத்திற்கு முன்னால் இருந்து ஒரு எஞ்சினியரைப் போட்டு சம்பளம் 600 ரூபாய் அனுமதிக்க வேண்டுமென்று கூட்டுறவு இலாகா சர்க்காரைக் கேட்டிருந்தும் அனுமதி கொடுக்கப்படவில்லை. அதன் காரணமாக வேலை ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த 2, 3 மாதங்களாகத் தான் வேலை நடந்துகொண்டு வருகிறது. சென்ற ஆண்டு கேட்ட போதே எஞ்சினியரை வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்திருந்தால் வேலைகளைத் துரிதமாக நடத்தச் சௌகரியமாக இருந்திருக்கும். கூட்டுறவு இலாகா இன்னும் அதிகமான அளவில் இயங்குவதற்கு அதன் நடைமுறை விதிகளைத் திருத்தியமைப்பது மிகவும் அவசியம். இப்பொழுது இருக்கும்படியான சட்டத்தை வைத்துக்கொண்டு கூட்டுறவு இலாகா தொழில்களை நல்ல முறையில் நடத்தவேண்டுமென்பது கொஞ்சம் சிரமமான காரியம். குறிப்பாக சர்க்கரை ஆலைகள் சம்பந்தமாக, 3 ஆலைகளும் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்யவேண்டுமானால் சர்க்கார் நடைமுறை விதிகளைத் திருத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

சூலூரில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையை நிறுவவேண்டுமென்று அங்கிருக்கக் கூடிய சேனையிலிருந்து விலகியவர்கள்—"எக்ஸ் சர்விஸ்மென்" நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதிகள் சென்னையில் அமைச்சர்களையும், இலாகா காரியதரிசிகளையும் சந்தித்து அந்த ஆலையை சூலூரில் ஏற்படுத்தவேண்டுமென்பதைப் பற்றிப் பல முறை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்குச் சாதகமாக எந்த வித பதிலும் கிடைக்கவில்லை. திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையை ஆரம்பித்திருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கது. அதே போல் சூலூரிலும் ஒரு ஆலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம் என்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

மற்றபடி கூட்டுறவு இலாகாவில் சில தவறுகள் நடந்து கொண்டு வருகின்றன. அரசாங்கம் அதைக் கண்டுபிடித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் கூட்டுறவு இலாகா வெற்றி

[Sri N. Mahalingam] [17th March 1959

கரமாக நடைபெறமுடியும். மக்களுக்கு அது நன்மை பயப்பதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிலோனுக்கு மிளகாய் எக்ஸ்போர்ட் செய்வதில் பல தவறுகள் நடக்கின்றன. முன்பெல்லாம் தாலூகா சொஸைடிகள் எக்ஸ்போர்டடுக்கு மிளகாய் கொடுத்து வந்தார்கள். அது சரியானபடி நடக்கவில்லை என்று கருதி ஜில்லாவில் இருக்கக் கூடிய சொஸைடி மிளகாய் எக்ஸ்போர்ட்டுக்குக் கொடுக்க ஆரம்பித்தது. முன்பாவது அந்த வகையில் கிடைத்த வருவாய் ஏதோ பாதி விவசாயிகளுக்குக் கிடைத்தால் பாதி வியாபாரிகளுக்குக் கிடைத்தது. இப்பொழுதோ பூராவும் வியாபாரிகளுக்கே கிடைத்துவருகிறது. தாலூகா விவசாயிகள் தங்களுடைய மிளகாயை சிலோனுக்கு அனுப்பமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்த எக்ஸ்போர்டில் நல்ல லாபம் இருக்கின்ற காரணத்தால் இது விவசாயிகளுக்கு நேரடியாகப் பயன்படும் முறையில் இந்தத் திட்டத்தைத் திருத்த வேண்டியது அவசியம். தவறு நடந்த இடத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இலாகாவின் மூலம் பல முக்கியமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நாம் திட்டமிட்டிருக்கும்போது அதன் நடைமுறை சரியானபடி நடக்க சட்டங்களைத் திருத்தவேண்டும். தவறுகளைக் கண்டிக்கச் சட்டத்தில் இடம் இருக்கவேண்டும். அதற்கேற்றவாறு அதைத் திருத்தியமைக்க வேண்டும். அவ்வாறு திருத்தியமைக்காத அளவில் கூட்டுறவு இலாகாவின் மூலம் நாம் எதிர்பார்க்கும் பலன் நிச்சயமாகக் கிடைக்காது என்று கூற விரும்புகிறேன்.

விவசாயம் கூட்டுறவு முறையில் நடக்கவேண்டுமென்று இப்பொழுது திட்டமிடப்பட்டிருக்கிறது. அதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பதை விவசாயத்தைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள் உணர்ந்திருப்பார்கள். நெல் அறுவடை காலத்தில் இரவில் எவ்வளவு திருட்டுப் போகிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இரவில் வந்து மூட்டை மூட்டையாக நெல்லைத் திருடிக்கொண்டு போய்விடுகிறார்கள். தனிப்பட்டவர்கள் இரவில் அங்கு வந்து பாதுகாத்துக்கொண்டிருக்கும்போது கூட அவர்கள் கூட்டமாக வந்து திருடிக்கொண்டு போய்விடுகிறார்கள். தனிப்பட்டவர்கள் பாதுகாப்பு இருக்கும் போதே இந்த மாதிரி நடக்கிறது என்று சொன்னால் கூட்டுறவு முறையில் நடந்தால் என்ன முறையில் நடக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். யார் போய் இதை மேற்பார்ப்பார்கள்? நடைமுறையில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை நீக்குவதற்கான வழிவகைகளைச் செய்துகொண்டு கூட்டுறவு இலாகா தங்களுடைய நடவடிக்கைகளை விவசாயத்துறையில் விஸ்தரிக்கவேண்டும். இப்பொழுது கடன் கொடுப்பது போன்ற வேலைகளே இன்னும் பூர்த்தியாகவில்லை. அதெல்லாம் பூர்த்தியாகாமல் இருக்கும் நிலையில் விவசாயத்துறையில் கூட்டுறவு இலாகா இறங்கவேண்டுமென்று சர்க்கார் நினைப்பது நிச்சயமாகத் தவறாகும் அது மிகவும் கஷ்டமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம் என்று குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவு இலாகாவின் மூலம் விவசாயிகளுக்கு வேண்டிய கடன்களை விவசாய உற்பத்திக்கு வேண்டிய பொருள்களைச் சரியானபடி கொடுப்பதற்குவேண்டிய வசதிகளைச் செய்யவேண்டுமென்று கூறி இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

11 a.m. * Sri M. JAGANNATHAN : Mr. Chairman, Sir, I rise to oppose the demand and support the cut motion. Sir, during the . . . (The Hon. Sri R. VENKATARAMAN : The hon. Member need not oppose it! Does he not want Co-operation?) I am opposing it simply; convention demands that I should oppose it. (Laughter.)

Sir, during the short span of time at my disposal, I wish to focus the attention of the Government to the question as to how far this co-operative movement has benefited the Harijans in our State. Sir, it is my considered opinion and that opinion is based upon



17th March 1959] [Sri M. Jagannathan]

concrete facts and long experience that this co-operative movement has completely left the Harijans out of the co-operative fold just in the same way as the Harijans were left out of the four-fold division of society in ages past. I should say that this co-operative movement in our State has done precious little so far in order to improve the lot of the Harijans. Sir, the Hon. Minister for Industries and Co-operation has circulated a review of the progress made in the Co-operative Development Schemes during the year 1958-59 and under the head 'Agricultural Credit', the Hon. Minister declares in grandiloquent terms, 'the Co-operative movement in our State has fulfilled with distinction its role as a supplier of agricultural credit. The Co-operatives which covered over 49 per cent of the villages in the State and served 21 per cent of the rural population at the commencement of the Second Plan now cover 84 per cent of the villages and serve 34 per cent of the rural population. The volume of credit provided by the co-operatives which was about Rs. 6 crores at the commencement of the Second Five-Year Plan has gone up two fold, the amount lent during the current year till the end of January 1959 being Rs. 13·30 crores against the target of Rs. 13·50 crores to be achieved by the end of March 1950'.

Well, Sir, this statement is a statement which paints a very rosy picture. If my opinion is asked I like to say that this percentage which has been claimed by the Hon. Minister to have covered the rural population is a per centage which does not include the Harijan masses as such. The percentage of Harijans who have been benefited by this co-operative movement will be almost next to nothing. Sir, this co-operative movement has completely failed to provide credit facilities to the poor Harijan ryots, because, the conditions and terms under which the loans are advanced by these credit societies are framed in such a way that the Harijans find it difficult to obtain any loans from these societies. These credit societies insist upon the fact that the person who comes before the Society asking for loans must produce heavy securities either in the shape of lands or in the shape of houses. The Harijans as we all know do not possess much of lands; nor do they possess houses which are valuable. At best, the houses in which Harijans live are places not worth mentioning, just poor huts, pib-stys. If the Harijans were to produce these houses by way of securities, the credit societies do not accept them. What is the net result? The result is the Harijans are completely denied any loan facilities from these credit co-operative societies. This fact has duly been emphasised by the Second Five-Year Plan. I may read from the 'Second Plan', published by the Government of India, Planning Commission, in the year 1956. At page 226, paragraph 14, they say: "In the development of rural credit, perhaps, the greatest difficulty in the past has been that a substantial proportion of agriculturists are non-credit-worthy according to the rules and conditions for advancing loans which were generally prescribed. To meet this situation, it is proposed that loans should be advanced by credit societies on the basis of production programmes and anticipated crops and maximum credit limit will be fixed for each member and

[Sri M. Jagannathan] [17th March 1959

within this limit, he will be permitted to obtain loans according to his requirements. To ensure proper use of funds, loans will be given in kind, in the form of seed, fertiliser, etc. Where cash loans are given, the payments may be in instalments. Members of credit societies will be persuaded to agree in advance to market their produce through the primary marketing societies."

Sir, from this, it will be clear that the vast majority of Harijans who go to the credit societies, asking for loans are denied loans simply because they are 'non-credit-worthy'. They are non-credit-worthy. They are unable to produce any securities to the societies. If only the recommendation of the Second Plan Schemes are taken into consideration, namely, that the loans should be advanced not on the basis of securities as such, but on the basis of production programme and anticipated crops, I think the difficulties will be obviated to some extent and the Harijans might be in a position to get loan assistance from these credit societies. Otherwise, as things stand to-day, the Harijans will not be able to obtain any loan assistance from these credit co-operative societies.

Sir, if only the Government meant what they say in the matter of Harijan uplift, they wil come forward to ask the co-operative department to devise ways and means and formulate schemes with a view to provide co-operative societies for the uplift of Harijans in our State. It is no use that the Government should talk in high terms about Harijan Welfare and Harijan uplift without any reference to the concrete schemes which they formulate with a view to implement them for the purpose of Harijan uplift. There is a sort of erroneous attitude on the part of the Government when they say that 'we have created the department of Harijan uplift which goes into the whole question of uplifting the Harijan community in the entire State'.

(Mr. Speaker in the Chair.)

We all know that the Harijan Welfare department is a department intended for disbursing just scholarships par excellance, nothing more, nothing less.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I think the hon. Member may speak about these in the Demand for Harijans and Backward Classes. For, I will not be able to reply now to the points he raises.

SRI M. JAGANNATHAN: Sir, I am speaking of Harijan Welfare Department not with a view to expatiate upon the schemes which that department is enforcing, I mean, implementing. But I should say that this co-operative department should not simply rely upon the Harijan Welfare Department for the purpose of Harijan uplift as such. On the other hand the co-operative department in its own way can concentrate upon the uplift of Harijans by way of implementing its own schemes by creating a number of co-operative societies in various walks of life mainly intended for the purpose of Harijan uplift. It is only in that connection that I wanted to point out this aspect of the matter.



17th March 1959] [Sri M. Jagannathan]

Sir, the Government now think that the Harijans as such can be uplifted in our State simply because there is another department for that purpose. Far from it all that tall talk about Harijan uplift must take a concrete shape in the form of providing them with the facilities under the co-operative movement in order to enable them to come up in life economically and otherwise. Otherwise, their talk of Harijan uplift will be a sort of rigmarole. Therefore I earnestly appeal to the Hon. the Minister for Industries to come forward with a definite programme to start more co-operative societies for the purpose of uplifting Harijans.

The Second Five-Year Plan also gives another scheme, the scheme of starting a number of labour and construction co-operatives for the purpose of providing full employment for the vast unutilised labour force that is available in our rural areas. If the scheme is implemented, I am sure it will go to benefit the Harijans as such, because we all know that the Harijans are, for the most part of the year, unemployed except for agricultural operations for a period of five or six months in the year. For the rest of the year, Harijans remain unemployed. If these labour and construction co-operatives are started in accordance with the scheme formulated by the Second Five-Year Plan, I am sure that will benefit the Harijans and enable them to eke out a livelihood for themselves. With these words, Sir, I finish my speech. Thank you, Sir.

SRI S. NAGARAJA MONIGAR: On a point of information, Sir. Is it the intention of the hon. Member Sri M. Jagannathan that co-operatives should be started solely for Harijans on a communal basis?

SRI M. JAGANNATHAN: No, no.

*SRI R. KRISHNASAMI NAIDU: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் கூட்டுறவு மானிய பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரேரணையின்மீது பல சகோதர அங்கத்தினர்கள் பல யோசனைகளைக் கூறியுள்ளார்கள். நாம் நம் நாட்டின் எதிர்கால வளர்ச்சிகள் அனைத்தையும் கூட்டுறவு தத்துவத்தின் கீழேதான் அடையவேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையில் நம்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு இயக்கத்தை எதிர்காலம் எவ்வாறு கவர்ந்திருக்கிறது என்பதை இதன்மூலம் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். ஆனால் இந்தக் கூட்டுறவு இயக்க உணர்ச்சி சிறு பிள்ளை முதலே நம் சிறுவர்களுடைய உள்ளத்தில் நன்றாக ஊன்றிவிட வேண்டும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சோஷலிஸ ஸமுதாய அமைப்பு நம் நாட்டில் ஏற்பட வேண்டுமென்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகிறோம். சோஷலிஸ சமுதாய அமைப்பு எப்படி நம் நாட்டில் ஏற்பட முடியும் என்றால் கூட்டுறவு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் இயக்கும்போதுதான் ஏற்பட முடியும். இந்த நிலைமையில் கல்வி கற்கும் சிறுவர்களுக்கும்—அவரவர்களுடைய வகுப்புக்கேற்றவாறு இந்தக் கொள்கையை அவரது பாட புத்தகங்களிலேயே நன்றாக விளக்கி எழுதி அவர்கள் உணருமாறு செய்ய வேண்டும். ஆசிரியர்களும் இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் தத்துவங்களைத் தெள்ளத் தெளிய உணர்ந்துகொள்ளக்கூடிய முறையில் அதற்கான

காரியங்களைச் செய்ய வேண்டும். அதோடு கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருக்கக்கூடிய நிர்வாகஸ்தர்களுக்கு பயிற்சி அளிப்பது என்பது ஒருபுறம் இருக்க அதற்கு முன்னாலேயே எதிர்காலத்தைப்பற்றி எப்படி சிந்திக்க வைக்கிறது, இப்போதுள்ள அனுபவங்கள் என்றால் இனிச் சின்னஞ்சிறு பிராயம் முதலே பொதுமக்கள் எல்லோருடைய மனதிலும் இந்தக் கருத்து புதைந்துவிடும்படியாகச் செய்ய வேண்டும் என்கிற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. இந்த இயக்கம் வெற்றிபெறுவதற்கு சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் உழைக்கவேண்டியது கடமை. அப்படி எல்லோரும் பங்குகொள்ளக்கூடிய முறையில் சிறந்த திட்டமாக இது அமைந்துவிட்டால் நாட்டின் வளர்ச்சி பல துறையிலும் நல்ல முறையில்ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த அடிப்படையில் அதிகமான பேர்களை ஐந்தாண்டுத் திட்டகாலத்திற்குள் இந்த இயக்கத்தின்கீழ் கொண்டுவரவேண்டும் என்பதற்காகப் பிரசார வேலை—இன்றைக்குச் செய்து வருவது கடலில் பெருங்காயத்தைக் கரைப்பது போன்ற அளவில்தான்—காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்று சொல்வேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவை எடுத்துக் கொண்டால் 87 கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு மேல்பார்வை யூனியன்தான் இருக்கிறது. அவற்றின் மூலம் 20 லட்சம் முதல் 30 லட்சம் வரையில் குறுகிய காலக் கடன் கொடுத்து வாங்கப்படுகிறது. அப்பேர்ப்பட்ட சங்கங்களின்கீழ் எல்லோரையும் கொண்டுவருவதற்காகப் பிரசாரம் செய்வதற்கு இன்றையதினம் 10 ரூபாய், 15 ரூபாய் என்ற அளவில் மட்டும் செலவு செய்து வருவது போதாது என்று குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக இன்றைய தினம் கூட்டுறவு தத்துவங்களை எடுத்து பொதுமக்களிடத்தில் சரியான முறையில் பிரசாரம் செய்தாகவேண்டியிருக்கிறது. இப்போது அமைந்திருக்கிற மேல்பார்வை யூனியனை சரியான முறையில் இயங்குவதற்குத் தக்கபடி அதை செலவு கொஞ்சம் அதிகமானாலும், தக்கபடி அமைக்கவேண்டும். கூட்டுறவு தத்துவ அடிப்படையில் இன்று அரசாங்கம் அமைத்திருக்கிற பல திட்டங்கள் பொதுமக்களை இன்னமும் கவராமல் பல பிரதேசங்களில் இருந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக எங்கள்பகுதியில் பூர்ண கடன் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தும், இந்த ஸ்தாபனங்களின்கீழ் இல்லாமல் பக்கத்தில் பலபேர்கள் வட்டிக்கடன் வாங்கிவருகிறார்கள். நானும் மற்றவர்களும் அவர்களிடத்தில் நேரில் சென்று கேட்டுக்கொண்டோம். இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களின்கீழ் சேர்ந்து கொள்வதனாலே என்ன என்ன பலனை அனுபவிக்க முடியும் என்பதையெல்லாம் கூறியும்கூட அவர்கள் இதில் சேர்வதற்கு முன்வரவில்லை. காரணம் இதைப்பற்றி தப்பான எண்ணம் அவர்கள் மனதில் ஊன்றிப்போய் இருப்பதுதான். இதை மாற்றுவது கடினமாக இருக்கிறது. ஏழை ஹரிஜனங்களும்கூட—ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொறுத்த வரையில்—நாங்கள் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் இன்னும் அநேகம் பேர் சேரவில்லை. இப்படி பல இடங்களில் அவர்களுடைய அறியாமையின் காரணமாக இந்தப் பயன்களைப் பெறுவதற்குப் பின்தங்கிவிடுகிறார்கள். இதற்காகப் பிறரைக் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. இதற்காக அரசாங்கத்தை குறைகூறுவதைவிட்டு இந்தச் சட்டமன்றத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்கள் தங்கள் அனுபவத்தை வைத்துக்கொண்டு தங்கள் தங்கள் தொகுதியில் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் ஏதாவதொரு திட்ட வேலையை எடுத்துக்கொண்டு முனைந்து செய்து காட்டினால் மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். அவ்வாறு இல்லாமல் பொதுப்படையாகக் குறை சொல்வது அவ்வளவு உபயோகமாக இருக்காது என்று நினைக்கிறேன். கிராமத்திற்கு ஒரு சங்கம் வைப்பதென்ற மத்திய சர்க்கார் யோசனைக்கு மாறாக நம் ராஜ்யத்தில் நமக்கு அனுபவத்ல் நலமாகத்தோன்றும் வகையில் அவர்கள் அமைக்க அனுமதி வாங்கிவிட்டது குறித்து நாம் சந்தோஷம் அடையவேண்டும்.

விவசாய கூட்டுறவு பாங்குகள் பல, கனம் அங்கத்தினர்கள் கூறியதுபோன்று கிராமப் புறங்களில் நல்ல பலனை அளித்துவருகின்றன என்பதை நாம் அனுபவபூர்வமாகக் காண்கிறோம். அவைகள் பல இடங்களில் ஏற்பட வேண்டும். கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள விவசாயக் கூட்டுறவு பாங்குகளுக்கு சில குறிப்பிட்ட வருஷ காலம் வரை ஊழியர்களை அந்த பாங்குகளிடமிருந்து அவர்களுக்கான சம்பளத்தைப் பெறாமல்



இலவசமாகக் கொடுப்பது என்ற வரையறையை இன்னும் சில ஆண்டுகளுக்கு நீடிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். பொதுமக்களுக்கு அந்த ஸ்தாபனங்களில் உள்ள நம்பிக்கை இன்னும் பலப்பட வேண்டும். எனவே இந்தச் செலவுகளை அரசாங்கம் பொருட்படுத்தக்கூடாது. அவைகள் கிராமங்களில் நன்றாக வேரூன்றும் வரையிலும், அவைகளுடைய லேவாதேவி அதிகரித்து அவைகளுடைய பொருளாதார நிலை நன்றாக உயரும் வரையிலும், அதிகாரிகளின் சேவையை அவைகளுக்கு இலவசமாகக் கொடுப்பது போன்ற உதவிகளை சர்க்கார் அவைகளுக்கு அளிக்க வேண்டும். இது சர்க்காரின் கொள்கையாகவும் கூட்டுறவு இலாகாவின் கொள்கையாகவும் இருக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்க்கெட்டிங் ஸொஸைடிகள் சம்பந்தமாக கனம் அங்கத்தினர்கள் பல யோசனைகள் சொன்னார்கள். நான் ஒன்று சொல்கிறேன். அவைகள் தாலூகாவிற்கு ஒன்று வீதம் இருக்கவேண்டுமா அல்லது தாலூகாவிற்கு இரண்டு வீதம் இருக்கவேண்டுமா அல்லது தாலூகாவிற்கு மூன்று வீதம் இருக்கவேண்டுமா என்பது வரையறுக்கப்பட வேண்டும். ஆங்காங்கேயுள்ள பொருளாதார நிலைமைக்குத் தகுந்தபடி சில இடங்களிலும், தேவைக்குத் தகுந்தபடி சில இடங்களிலும் இவைகளின் எண்ணிக்கை இருக்கலாம். இன்னும் சில இடங்களில் அவரவர்கள் விருப்பத்திற்குத் தகுந்தபடி பல சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. எனவே எல்லாச் சங்கங்களுக்கு போதிய வேலைகள் இருக்கின்றனவா என்று தெரிந்துகொள்ள வேண்டும். அந்த ஸொஸைடிகளின் அங்கத்தினர்கள் உற்பத்தி செய்து கொண்டுவரும் பொருள்கள் அவைகளின்மூலம் விற்றுக்கொடுப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்போது, முன்கூட்டியே, பயிரிடும்போதே, மிளகாய், பருத்தி போன்ற பொருள்களை விளைவிக்க ஏக்கருக்கு 200 ரூபாய், 300 ரூபாய் என்று விவசாயிகளுக்கு கண்ட்ரோல். கிரடிட் கடன் கொடுக்கப்படுகிறது. அவைகளை விளைவித்த பிறகு மார்கெட்டிங் ஸொஸைடிகளும் கொண்டுவரும்போது வியாபாரிகளால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்த இடையூறுகளை நீக்குவதற்காக, இப்போது வியாபாரிகளுக்குக் கொடுக்கும் லைஸென்ஸுகள் விஷயத்தில் ஏதேனுமொரு கட்டுதிட்டம் வகுப்பது நல்லது என்று கருதுகிறேன். இந்த விவசாயிகள் தாங்கள் உற்பத்திசெய்த பொருள்களை மார்க்கெட்டிங் ஸொஸைட்டிகளுக்குக் கொண்டு போவதை தடை செய்யும் வகையில் வியாபாரிகள் இடையில் சென்று வாங்கினால் அந்த வியாபாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள லைஸென்ஸ்கள் ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையை லைஸென்ஸ் விதிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் விற்கப்படும் சாமான்கள் கலப்படம் செய்யப்பட்டவையாக ஆக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் வியாபாரிகள் பல காரியங்கள் செய்கிறார்கள். கூட்டுறவு விற்பனை சங்கங்கள் விற்கும் சாமான்களுக்கு அதிக விலை கிடைக்கக்கூடாது என்ற நோக்கத்துடனும் இன்னும் பல சுயநல நோக்கங்களுடனும் வியாபாரிகள் பல காரியங்களைச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும் வியாபாரிகள் லைசென்ஸுகள் ரத்து செய்யப்படும் என்று லைஸென்ஸுகளை அவர்களுக்கு வழங்கும்போதே வரையறுத்தால் நல்லது என்று நினைக்கிறேன். அனுபவத்தில் இந்தக் கஷ்டங்களைத் தெரிந்து கொண்டதால்தான் இந்த யோசனைகளைச் சொல்லுகிறேன் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள மார்கெட்டிங் ஸொஸைடியிடம், நீண்ட இழை பருத்தி விதை உற்பத்தி செய்வதற்கான திட்டம்—அரசாங்கம் நடத்தும் ஒரு திட்டம்—ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 60-ம் நெம்பர் நூல் வரை நூற்கக்கூடிய பருத்தி அங்கே விளைகிறது. அங்கே உற்பத்தியாகும் நீண்ட இழைப் பருத்தி விதைகளை இந்த அரசாங்கத்தின் கட்டளைப்படி இந்த மாநிலம் பூராவும் அனுப்பி வருகிறோம். கிட்டத்தட்ட 6,000 ஏக்கர் அங்கே மார்க்கெட்டிங் ஸொஸைடியின் மேற்பார்வையில் பயிரிடப்படுகிறது. மார்க்கெட்டிங் ஸொஸைடி எந்த ஜின்னிங் பாக்டரிக்குக் கொண்டுபோய்—தங்களுக்குச் சொந்தமான ஜின்னிங் பாக்டரிக்குக் கொண்டு போய்—பருத்தியை ஜின் பண்ண விரும்புகிறார்களோ அங்கே கொண்டு

ாய் அதை அவர்கள் ஜின் பண்ண முடியாதபடி வியாபாரிகள் அவர் ளுக்கு இடைஞ்சல்கள் செய்கின்றனர். இக்காரணங்களால், கலப்படமில் ாத விதைகளைத் தயாரித்துக் கொடுப்பதில் கஷ்டம் இருக்கிறது. சுமார் ஆண்டுகள் பரீட்சைகள் நடத்திய பிறகே பொறுக்கு விதைகளைச் சிபார்சு சய்கிறார்கள். அப்படி இருக்க எந்த இடத்திலும் ஆரம்பித்த அடுத்த ருஷமே கலப்படம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. யாபாரிகள் குறுக்கிடுவதால் இந்த கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப் ரச்னையை அரசாங்கம் நன்றாக கவனிக்க வேண்டும். நமது நாட்டில் ண்ட இழைப் பருத்தியும் பஞ்சும் குறைவாக உற்பத்தி செய்யப்படுகின் ன. அவைகளை நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். னவே இத்தகைய கூட்டுறவு ஸொஸைடிகளுக்கு வியாபாரிகளாலும் ற்றவர்களாலும் இடைஞ்சல்கள் ஏற்படாதபடி பார்த்துக்கொண்டு இவை ளுக்கு ஆக்கம் அளிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள் றேன்.

**Mr. SPEAKER :** The hon. Member has got only one minute more.

**Sri R. KRISHNASAMI NAIDU :** அடுத்தபடியாக, சூபர் வசிங் யூனியன்களை ஒவ்வொரு தாலூகாவிலும் பலப்படுத்த வேண்டும் ன்று ஸ்ரீ ராமலிங்கம் சொன்னார். அதற்கான காரியாலயங்களும் லைப்ரரி ளும் இருக்க வேண்டும். கூட்டுறவின் தத்துவத்தை பரப்ப வேண்டு ானால் சிறந்த வகையில் திட்டமிட்டு இத்திட்டங்களை மக்கள் புரிந்து காள்ளச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். விவசாயக் ட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதில் நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது ன்று கனம் அங்கத்தினர்கள் புகார் சொன்னார்கள். அதை நான் ப்புக்கொள்ளுகிறேன். விவசாயக் கூட்டுறவு சங்கங்களை அமைக்க வேண்டு ானால் ரெஜிஸ்டிராருக்கு ப்ரோபோஸலை அனுப்ப வேண்டும், அவருக்கு ர்க்காரிடமிருந்து பெர்மிஷன் வந்த பிறகு தான் சங்கத்தை ரெஜிஸ்டர் சய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சில காரியங்களுக்காக ரஜிஸ்டிராருக்கு பணம் ஒதுக்கப்படுவதுடன், அதிகாரமும் வழங்கப்படு றது. அதே மாதிரி இந்த விஷயத்திலும் அவருக்கு நிறையப் பணமும் வண்டிய அதிகாரமும் வழங்கப்பட்டால், காலதாமதம் குறையும்.

**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே, ான் இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். ட்டுறவு இயக்கம் வளர வேண்டும், அதை வளர்ப்பதன் மூலம் மக்க நக்கு பல நன்மைகளையும் செய்ய வேண்டும் என்பதுதான் எல்லோரு டைய நோக்கமும் ஆகும் என்று சொன்னாலும் இன்று எல்லோரும் ந்த முறையில் செயல்படுகின்றனரா என்று பார்க்கும்போது அவ்வாறு சய்யப்படவில்லை என்றே சொல்லவேண்டியிருக்கிறது. இன்று பணவசதி டைத்தவர்களின் ஆதிக்கத்தில்தான் எல்லாச் சங்கங்களும் எல்லா ாங்குகளும் இருக்கின்றன என்பது நாம் எல்லோருக்குமே தெரிந்த விஷ ம். இப்போது, டெபுடி ரெஜிஸ்டிரார்கள், ப்ரைமரி ஸொஸைடிகளுக்கு வ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்று சொன்ன போதிலும்கூட ஸென்ட்ரல் பாங்குத் தலைவரோ போர்டு நிர்வாகத்தில் இருப்பவர்களோ வ்வளவு பணம் கொடுப்பதில்லை. அவர்களுக்கு வேண்டியவர்களாக ந்தத் தலைவர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் வேண்டிய ணம் கொடுப்பார்கள். வேண்டாதவர்கள் தலைவர்களாக வந்திருந்தால் ந்த ஸ்தாபனங்களுக்கு பணம் கொடுப்பதில்லை. அவைகள் புறக்கணிக் ப்படும். அவைகளுக்கு இலகுவில் பணம் கொடுப்பதில்லை. இந்த நிலைமை ராமப்புறங்களில் சர்வசாதாரணமாக இருந்து வருகிறது. இன்றையதினம் த்திய பாங்கிலும் ஸொஸைடிகளிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வண்டும் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் விரும்புகிறார்கள். ங்கே அரசியலை வளர்க்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். ந்த ஸ்தாபனங்களின் தலைவர்களை தேர்தல் மூலமாகவே தேர்ந்தெடுக்க வண்டும் என்று சொல்லப்பட்டாலும், வேறொருவரை நாமினேஷன்





செய்வதற்கான அதிகாரம் சர்க்காருக்கு சட்டத்தில் அளிக்கப்பட்டிருப்பதால் இந்த ஸ்தாபனங்களில் பல ஊழல்கள் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். உதாரணமாக, ராஜபாளையம் ஹௌஸிங் ஸ்கீம் ஆரம்பிக்கப்பட்டபோது அங்கே பெரும்பான்மையான அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்த தலைவரை சர்க்கார் நீக்கிவிட்டு வேறொரு தலைவரை நாமினேஷன் செய்தார்கள். அதேபோல, இந்த மாநிலத்தில் உள்ள அத்தனை சில்க் வீவர்ஸ் ஸொஸைடிகளிலும் தலைவர்கள் நாமினேஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்று எத்தனையோ சங்கங்களிலும் பாங்குகளிலும் தலைவர்களை சர்க்கார் நாமினேஷன் செய்திருக்கிறார்கள். எனவே, கூட்டுறவு இயக்கத்தை மக்களாகவே நடத்துகிறார்கள், தலைவர்களை மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள், எனவே தலைவர்கள் தவறு செய்தால் அது மக்களின் தவறுதான் என்று சர்க்கார் சொல்வது சரியல்ல. அவ்வாறு சொல்லப்படுமானால், இந்த ஸ்தாபனங்களில் தலைவர்கள் பணத்தைக் கையாடுகிறார்கள் என்றால், அது மக்களின் குணம், மக்கள்தான் பணத்தை எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லி நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுவதா அல்லது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது நமக்குத் தெரிந்தாகவேண்டும்.

இந்த நிலையில் சரியான ஆடிட் ரிப்போர்ட்டும் செய்வதில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக, 54–55 ஆடிட் ரிப்போர்ட், ஸ்டேட் ஹான்ட்லூம் வீவேர்ஸ் சொஸைடி ஆடிட் ரிபோர்ட் சென்ற ஆண்டில் தான், 58-ம் ஆண்டில்தான் வைக்கப்பட்டது. இப்படி பல வருடங்கள் கழித்து பின்னர் ரிப்போர்ட்டுகள் கொடுக்கப்பட்டால் அதிலுள்ள ஊழல்களை எப்படி கவனத்தில் வைத்துக்கொண்டிருக்க முடியும். இதுபோன்று ஆடிட் ரிபோர்ட்களை வெகு காலம் கழிந்து பிற்பாடு வைப்பதின் நோக்கம் என்ன? ஊழல்களை மறைப்பதற்காகத்தான் இப்படி காலம் தாழ்த்தப் படுகிறது என்று ஏன் சொல்லக்கூடாது? சர்வ சரதாரண மக்களுக்காக சொஸைடிகள் அமைக்கப்படுகின்றன என்று சொல்லிவிட்டால் போதாது. இன்று மக்கள் ஒன்றுபட்டு ஒரு சொஸைடி அமைப்பதென்றால், அது லேசான காரியமல்ல. மதிப்பிற்கு ரிய நேருஜி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு சொஸைடியை ரெஜிஸ்டர் செய்ய முயற்சி செய்தும்கூட ஒரு வருடத்திற்கு முடியவில்லை, அந்தளவிற்கு நிலை இருக்கிறது என்று சொன்னால் சாதாரண மக்களின் நிலை என்னவாகயிருக்கும் என்று அவர்களே திட்டவட்டமாக கூறியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், சட்டதிட்டங்களில் இருக்கக்கூடிய ஊழல்களை மாற்றி திருத்தியமைக்காத வரையில், நாங்கள் இத்தனை சங்கங்களை அதிகப்படுத்திவிட்டோம், இத்தனை பாங்குகளை அதிகப்படுத்தி விட்டோம், பணம் அதிகம் கொடுத்திருக்கிறோம், என்றெல்லாம் சொல்லி விட்டால் போதாது. அந்த சங்கங்களில் ஏற்படுகிற ஊழல்களைப் போக்கு வதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? அப்படி ஊழல்களைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். உதாரணமாக, காலஞ்சென்ற நம் மதிப்பிற்குரிய முத்துரங்க முதலியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீபெரும்புதூர் மார்க்கெட்டிங் சொஸைடியில் பல ஊழல்கள் ஏற்பட்டன. பத்தாயிரக் கணக்கான ரூபாய் கையாளப் பட்டதென்று பகிரங்கமாக நோட்டீஸ் மூலம் விளம்பரப்படுத்தி சர்க்காருக்கும் அது அனுப்பப்பட்டது. அதுமாத்திரமல்ல. போலீஸ் இலாகா அமைச்சர் அவர்களுக்கும்கூட தேர்தல் காலத்தில் பத்தாயிரக்கணக்கான ரூபாய் அந்தப் பணத்திலி ருந்து செலவு செய்யப்பட்டதென்றும் அந்த நோட்டீஸில் கண்டுள்ளது. அப்படியிருந்தும்கூட இதுவரையிலும் அதுபற்றி விசாரணை செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை என்று தான் தெரியவருகிறது. இதேபோன்று இன்று கைத்தறி நெசவாளர்களுக்காக அவர்களின் பாதுகாப்பிற்காக வேண்டி, அவர்களின் அபிவிருத்திக்காக வேண்டி செஸ் நிதியில் கோடிக்கணக்கில் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லலாம். உதாரணமாக, 1954–55-ம் ஆண்டில் மத்திய அரசாங்கம் இந்த ராஜ்யத்திற்கு கிட்டத்தட்ட 142 லட்சம் ரூபாய் கொடுத்ததை 1958–59-ல் 86 லட்சமாக குறைத்திருக்கிறார்கள். இந்தப் பணம்கூட ஒழுங்கான முறையில் வருகிறதா என்று பார்த்தால் அப்படி ஒழுங்காக வருவதில்லை.

11-30 a.m.

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினர் அவர்களிடம் நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், ஹாண்ட்லூம் சம்பந்தமான பிரச்னைகளை அவர்கள் இண்டஸ்ட்ரீஸ் டிமாண்டில் பேசினுல் அதற்கு பதில் சொல்வதற்கு சுலபமாக இருக்கும். "பாரத்தில்", இது வரலாம், ஆனுல் சப்ஜெக்ட் இண்டஸ்ட்ரீஸில் வரும்.

**MR. SPEAKER** : அதில் "சான்ஸ்" கிடைக்கிறதோ இல்லையோ என்று அவருக்கு பயம். ஆகவே, இதிலேயே சொல்கிருர்.

**THE HON. SRI R. VENKATARAMAN** : இதில், பதில் சொல்ல முடியாதே என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**SRI V. K. KOTHANDARAMAN** : அப்படி செஸ் நிதியில் இருந்து நமக்கு சரியாக கிடைக்காதிருப்பதற்குக், காரணம் நமது அரசாங்கம் திட்டமிட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிய பிறகு அவர்கள் அங்கீகாரம் செய்தாலொழிய அனுப்புவது கிடையாது. நான் சொல்கிறேன், அங்கீகாரம் நடந்தாலும் சரி, நடக்கவில்லை என்று சொன்னுலும் சரி ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை இந்த ராஜ்யத்திற்கு அனுப்பிவிட வேண்டும். அது கைத்தறி நெசவாளர்களுக்கு உபயோகப்படுத்தப்படவேண்டும். அப்படி அந்தப் பணம் சரியான முறையில் வராத காரணத்தினுல் இன்றையதினம் அபிவிருத்தி வேலைகள் எல்லாம் தடைபட்டுள்ளன. ரிபேட் கொடுப்பது தவிர மற்றபடி கைத்தறி நெசவாளர்களுக்கு செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள் ஒன்றும் செய்யப்படவில்லை என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். 1956–57-ம் ஆண்டில் இருந்ததைவிட 1957–58-ல் புதிய சொஸைடிகள் அமைப்பதோ, அங்கத்தினர்களை சேர்த்திருப்பதோ ரொம்பக் குறைவாகயிருக்கிறது. அதேபோன்று ஆரம்பித்திருந்த "மேக்கிங் யூனிட்ஸ்"ம் மூடப்பட்டிருக்கிறது. வீடு கட்டும் திட்டமும் நிறுத்தப்பட்டுள்ளது. 1958–59-ம் ஆண்டுக்கு ரிபேட் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த மாதம் 31-ம் தேதியோடு இந்த வருடமும் முடிவடையப் போகிறது. பெருவாரியான சொஸைடிகளுக்கு ரிபேட் இன்னும் கிடைக்கவில்லை. அப்படி கிடைக்கப்படாத காரணத்தினுல் இன்றைய தினம், உற்பத்தி செய்த ஜவளியில் மூன்றில் ஒரு பாகம் தேங்கிக் கிடைக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குகொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மார்கெட்டிங் ஸொஸைடிகளின் வழி உரம் வினியோகம் செய்யப்படுகிறது என்று பெயரே தவிர அவ்வளவும் கள்ள மார்கெட்டில் தான் விற்கப்படுகிறது. யார் விவசாயம் செய்கிருர்களோ அவர்களுக்கு விநியோகம் செய்வதின் மூலம்தான் அதைப் பயன்படுத்த முடியும். ஆனுல் இன்றைய தினம் செல்வாக்குள்ளவர்களுக்குத்தான் மார்கெட்டிங் சொஸைடிகள் பயன்படுகிறதே தவிர ஏழை மக்களுக்கு அவைகள் பயன்படுவதில்லை. உதாரணமாக, இன்றைக்கு நெல் மூட்டை என்று சொல்லி தவிடு மூட்டையையும், புளியங்கொட்டை மூட்டையையும் வைத்து பணம் வாங்குவதற்கு மார்கெட்டிங் சொஸைடிகள் உதவியாயிருக்கின்றன. அதுதான், தென் ஆற்காடு ஜில்லாவில் ஒரு மாதத்திற்கு முன்னுல் ஒரு லட்சம் ரூபாய் அளவில் ஊழல் ஏற்பட்டதென்று பத்திரிகையில் கூட பார்த்தேன். இந்தளவில், ஊழல்கள் மேலும் மேலும் அதிகப்பட்டுக்கொண்டே போகின்றன. கூட்டுறவு முறையில், இன்று விவசாய பாங்குகளை அதிகப்படுத்தி விட்டோம் என்று சொல்லக் கூடிய அதே நேரத்தில், நிலச்சீர்த்தம் வரப்போகிறது என்று கண்டு பெரிய நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலங்களை மற்றவர்கள் பெயருக்கு மாற்றி லட்சக்கணக்கான பணத்தை இன்று அதன் மூலம் பெற்று வருகிருர்கள். இந்த பாங்குகள் அவர்களுக்கு சாதகமாயிருக்கின்றன. ஆகவே, இது போன்ற நிலைகள் ஏற்பட்டு வருவதால் சர்க்கார் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பரிபூர்ண கவனம் இந்த கூட்டுறவு பாங்குகளில் செலுத்தப்படவேண்டும், அதில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதை நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





அடுத்தபடியாக, பலநோக்கு சங்கங்கள், நாணய சங்கங்கள், விவசாய பாங்குகள், விவசாயப்பண்ணைகள் இவைகளை அதிகப்படுத்தும் அதே நேரத்தில் இந்த மாதிரிப்பட்ட சங்கங்களினுல் கிராமங்களில் இன்று குழப்பம் ஏற்படுகிறது, கட்சிகள் ஏற்படுகிறது என்று சொன்னுல் அதற்கு காரணமாக இருப்பவர்கள் கிராம மணியக்காரர்களும், கணக்குப் பிள்ளைகளும்தான். அப்பேர்ப்பட்ட பேர்வழிகளை அந்த சங்கங்களில் போட்டு வைத்தால், கட்டுச் சோற்றில் பெருச்சாளி புகுந்த மாதிரி மேலும் மேலும் அங்கு ஊழல்கள் தான் பெருகிக்கொண்டிருக்கும். ஆகவே, மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள் அதில் இருக்கக் கூடாது என்று சட்டத்தை திருத்த வேண்டும். இதுபோன்று விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் ட்ராக்டர்கள், போரிங் செட், இவைகள் எல்லாம் வாங்கிக்கொள்வதற்கு முதல் பிரயாரிடியாக அவர்களுக்கு சலுகை காட்டப்படவேண்டும். விவசாயத்திற்கு தேவையான உப கருவிகள் இன்றைக்கு குறைந்த ரேட்டில் கிடைக்க குறைந்த பட்சம் ஒவ்வொரு பிர்காவிலும் ஒவ்வொரு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட வேண்டும். மோட்டார், பஸ் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு கூட்டுறவு முறையில் டிரான்ஸ்போர்ட் போக்குவரத்தை நடத்துவதற்கு அவர்களுக்கு ரூட்கள் கொடுப்பதில் அவர்களுக்கு முதல் பிரயாரிடி கொடுக்கப்படவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் எப்படி ப்ளாக் வாரியாக அமைக்கப்பட்டிருக்கிறதோ அதேபோன்று இந்த கூட்டுறவு சங்கங்களும் ப்ளாக் வாரியாக அமைக்கப்படவேண்டும். மடம், கோவில் இவைகளுக்கு சொந்தமாகயிருக்கும் நிலங்களை எடுத்து, உடனடியாக ஒரு விவசாய மாதிரிப் பண்ணை ஆரம்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, நான்கு தாலூகா மார்கெட்டிங் சொஸைடிகள் ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். குடியாத்தம் தாலூகாவில் ஒரு மார்க்கெட்டிங் சொஸைடி ஆரம்பிக்கவேண்டுமென்று பல வருடங்களாக முடிவு எடுத்திருந்தும் இன்னும் அது ஆரம்பிக்கப்படாதிருப்பதால் அதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்றும் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கூட்டுறவு பண்டகசாலைகளை நல்ல முறையில் ஊக்குவிக்க வேண்டுமென்ருல் கூட்டுறவு பண்டகசாலைகளில் விற்பனை செய்யக் கூடிய பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு கொடுக்கவேண்டும். கூட்டுறவு பண்டகசாலைகளில் உணவுப் பொருள்களை இப்பொழுது அதிக விலை கொடுத்து வாங்கி குறைந்த விலையில் விற்கக் கூடிய நிலையிருக்கிறது, ஸ்டேட் பர்ச்சஸ் முறை வந்ததால். ஆகவே, அவர்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கக்கூடிய நிலையை உண்டாக்க வேண்டும். அதேபோன்று கூட்டுறவு சங்கங்கள் மூலம் நியாயவிலைக் கடைகள் நடத்துவதற்கும் சர்க்கார் போதுமான வசதி செய்து கொடுக்க வேண்டும். கூட்டுறவு பண்டகசாலைக்கு இம்போர்ட் லைசென்ஸ் கொடுப்பது என்ருல் ரெஜிஸ்டர் செய்து மூன்று வருடங்களுக்கு பின்னர்தான் கொடுப்பது என்ற நிபந்தனை இருக்கிறது. அதையும் மாற்றியமைத்து ஒரு வருடத்திற்குப்பிறகு கண்டிப்பாக கொடுக்கவேண்டுமென்ற நிலையிருக்கும்படி செய்யவேண்டும்.

ஆகவே, நிர்வாகச் செலவைக் குறைக்கவேண்டும். கட்சி பாகுபாடு கூடாது, சட்டத்தைத் திருத்தி பங்குதாரர்களுக்கு அதிகப் பங்கு கொடுக்க வேண்டும், ப்ரைமரி சொஸைடிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும். உரம் நியாயமான வழியில் சொஸைடிகள் மூலம் விநியோகம் செய்யப்பட வேண்டும். உற்பத்திப் பொருள்களின் விநியோகம் சங்கங்கள் மூலம் தான் இருக்கவேண்டும். இந்த சிறந்த கொள்கைகள் மக்களுக்கு நல்ல முறையில் பயன்பெரும்பொருட்டு சட்டத்தை மாற்றி, திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**SRI K. S. SUBRAMANIA GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே கூட்டுறவு அமைச்சர் கொண்டுவந்திருக்கும் கூட்டுறவு மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு அமைச்சர் 11-40 a.m.
அவர்களும், இந்த இலாகாவில் முன்பு ரிஜிஸ்டிராராக இருந்த ஸ்ரீ பழனியப்ப முதலியார் அவர்களும் இதிலே மிகவும் அதிக சிரமும், அக்கரை

[Sri K. S. Subramania Gounder] [17th March 1959

யும் எடுத்துக்கொண்டு, இந்த இலாகாவிலே என்னென்ன காரியங்கள் செய்யவேண்டுமோ, அவைகளையெல்லாம் செவ்வனே செய்ததற்காக நான் அவர்களை முதலிலே பாராட்டுகிறேன்.

நம்முடைய ராஜ்யம் மற்ற ராஜ்யங்களைவிட கூட்டுறவு இயக்கத்திலே முன்னணியில் நிற்கிறது என்பதை நாம் மட்டுமல்ல, நம்முடைய நாட்டிலுள்ள அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே நாம் இன்னும் எந்த அளவிலே முன்னேற வேண்டுமென்பதற்கு நாம் திரும்பவும் வழிவகை செய்துதான் ஆகவேண்டும். பொதுவாக நம்முடைய நாட்டிலே கூட்டுறவு இயக்கம் எந்த அளவிலே முன்னேற வேண்டும் என்று இந்தியாவுக்கே அவர்கள் ஒரு திட்டம் வகுப்பதில் நம்மையும் சேர்த்தால் நாம் இன்னும் அதிகமாக முன்னேறுவதற்கு அது ஒரு வழியாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக விவசாய பாங்குகளை எடுத்துக்கொண்டால், யு.பி., அஸ்ஸாம் போன்ற இடங்களில் அவைகள் நல்ல முறையிலே இயங்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரி சொல்லுவதற்குக் காரணங்கள் இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால், அவைகள் மிகவும் நல்ல முறையிலே நடக்கின்றன என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். இந்த நிலையிலே நம்மையும் எல்லா ராஜ்யங்களோடு சேர்த்து, நாமும் அந்த ராஜ்யங்களில் ஒரு ராஜ்யம் என்ற ஒரு அடிப்படையில் திட்டம் வகுக்கவேண்டுமென்பது சரியாக இராது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த ஆண்டில் 100 விவசாய பாங்குகள் அதிகமாகச் செய்யவேண்டுமென்ற அளவிலே நாம் திட்டம் வகுத்திருக்கிறோம். ஆனால் பிளானிங் கமிஷன் இனி கூட்டுறவு விவசாய பாங்குகள், "லார்ஜ் சைஸ் சொஸைடிகள்" இருக்கக்கூடாது என்ற அளவிலே ஒரு "டைரக்டிவ்" கொடுத்திருப்பதாக பேப்பரிலே பார்க்கிறோம். கூட்டுறவு இயக்கமானது "ஸ்டேட் ஸப்ஜெக்ட்" என்ற காரணத்தினாலே இதிலே மத்திய சர்க்கார் தலையிடக்கூடாது என்ற அளவிலே நம்முடைய அமைச்சர் இம்மாதிரி இறுதியிலே டெல்லியில் நடக்கக்கூடிய கான்பெரன்ஸில் தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக நாம் விவசாய பாங்குகளை மாத்திரம் வைத்துக்கொண்டு கடன் லேவாதேவி அதிகமாச் செய்துவிட முடியாது. சிறிய நாணய சங்கங்களை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக உண்டாக்கி இன்னும் நல்ல முறையில் வேலை செய்யமுடியுமோ அதை நாம் செய்யவேண்டும். விவசாய பாங்குகள் நல்ல முறையில் வேலை செய்வதற்கான காரணத்தை சற்று ஆராய்ந்து பார்த்தோமானால், அங்கு ஒரு சம்பள காரியதரிசி போட்டிருக்கிறோம். அது தான் முக்கியமான காரணம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக ஒவ்வொரு பிரதம நாணய சங்கத்திலும் ஒரு சம்பளக் காரியதரிசியையோ, அல்லது குமாஸ்தாவையோ போடவேண்டும். அதற்கு நாம் ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும். அதற்காக இப்பொழுது அரசாங்கம் ஓரளவு மான்யம் கொடுத்தாலும்கூட, அந்த மான்யம் போதாது என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். குறைந்தது மாதம் 50 ரூபாய் சம்பளம் கொடுத்தால் தான் நிச்சயமாக ஒரு குமாஸ்தா போட்டு நடத்த முடியும். மாதம் 50 ரூபாய் என்று கணக்கு வைத்துப் பார்க்கும்போது வருஷத்திற்கு 600 ரூபாய் இதற்கு மான்யம் கொடுக்கவேண்டும். அதுவும் குறைந்தது 5 வருஷங்களுக்காவது இந்த மான்யம் கொடுக்கப்பட்டால்தான் நல்ல முறையில் லேவாதேவியை அதிகப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு நாம் 13½ கோடி ரூபாய் லேவாதேவி செய்திருக்கிறோம். வரும் ஆண்டில் 16 கோடி ரூபாய் அளவில் திட்டம் வகுத்திருக்கிறோம். இதைப்பற்றி உண்மையிலேயே நாம் பெறுமைப்பட்டாலும், இந்தப் பணம் போதாது. அதுவும் கொடுக்கக்கூடிய பணம் ஓராண்டுக் கடனைகத்தான் அதிகமாக வருகிறது. அது விவசாயிகளுக்கு போதுமானதாக இராது மாத்திரமல்ல, 3 ஆண்டு, 5 ஆண்டு கடன் அதிகமாக தேவையாகிக்கொண்டு வருகிறது. இம்மாதிரி தேவையான கடனை அதிகப்படியாக கொடுப்பதற்கு நம்முடைய ராஜ்ய சர்க்காரும், ரிஜிஸ்டிரார் அவர்களும் வேண்டுவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.



17th March 1959] [Sri K. S. Subramania Gounder]

சென்ற ஆண்டிலே 75 லட்சம் ரூபாய் தான் 3 ஆண்டு கடனைக நம்முடைய ராஜ்யத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே 100 லட்சம் ரூபாய் ரிசர்வ் பாங்கியிலிருந்து 3 ஆண்டு கடனைகவும், 5 ஆண்டு கடனைகவும் கொடுக்கபபோகிறார்கள். இதை நம்முடைய ராஜ்யத்திலுள்ள எல்லா ஜில்லாக்களுக்கும் நாம் வினியோகித்துக்கொள்ள வேண்டும். இது எந்த அளவிலே வரும் என்றால், சாதாரணமாக ஒவ்வோரு ஜில்லாவுக்கும் சராசரி 10 லட்ச ரூபாய் கூடவராது. பெரிய ஜில்லாவாக இருந்தால் 10 லட்ச ரூபாய் வரும். சிறிய ஜில்லாவாக இருந்தால் 7 லட்சம், 8 லட்சம் தான் வரும். அதை அவர்கள் தாலுகா வாரியாக பிரிக்கும்பொழுது ஒரு தாலுகாவுக்கு 1 லட்ச ரூபாய்கூட 3 ஆண்டு கடன், 5 ஆண்டு கடன் வராது. இந்த நிலை போகவேண்டும். வேண்டிய அளவு விவசாயிகளுக்குத் தேவையான 3 ஆண்டு 5 ஆண்டு கடன் கிடைக்கவேண்டும். அதுதான் எல்லாவற்றையும் விட முக்கியம். விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதிலே அவர்களுடைய தேவையை அனுசரித்து, நீண்ட காலத் தேவையாக இருந்தால், தேவையான நீண்ட கால கடன், மத்திய கால தேவையாக இருந்தால், தேவையான மத்திய கால கடன் கொடுப்பது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

ரிசர்வ் பாங்கு பணம் கொடுக்கும்பொழுது, ஒவ்வொரு மத்திய பாங்கும் அதனுடைய "ஷேர் காபிடல் பிளஸ் ரிஸர்வ் பண்டு" எவ்வளவு இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் 3 ஆண்டு கடன் கொடுக்கலாம் என்று சொல்லுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு மத்திய பாங்கு 50 சதவிகிதம் ஒரு ஆண்டு கடனும், பாக்கி 50 சதவிகிதம் 3 ஆண்டு, 5 ஆண்டு கடனைகவும் கொடுக்கலாம் என்ற அளவிலே "பைலா" இருக்கிறது. திட்டம் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, ஷேர் காபிடல், ரிசர்வ் பண்டு அளவுதான் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறபொழுது தேவையான நீண்ட கால, மத்திய கால கடன் கொடுக்க முடியாத அளவிலே போய்விடுகிறது. 16 கோடி ரூபாயில் குறைந்தது 5, 6 கோடி ரூபாயாவது 3 ஆண்டு, 5 ஆண்டு கடனைக் கிடைப்பதற்கு வேண்டுவன செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களை திரும்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆடிட்டைப் பொறுத்தவரையில், அது தனியாகப் பிரிக்கப்பட்டு, தனியாக ஒரு ஆடிட் ஆபீஸர் போட்டு இப்பொழுது நிர்வகிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், தனியாக ஒரு ஆடிட் ஆபீஸர் ஏ. ஜி.,ஸ் ஆபீஸிலிருந்து வாங்கிப் போட்டால் மாத்திரம் ஆடிட் நல்லமுறையிலே நடத்திவிடமுடியும் என்று யாரும் சொல்லவே முடியாது. இன்னும் ஆடிட் சிப்பந்திகளை அதிகமாக்கவேண்டும். அதுதான் மிகவும் முக்கியமான காரியம். சாதாரணமாக அமைச்சர் அவர்களை சற்று கணக்கிட்டுப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான்கு, ஐந்தாண்டுகளுக்கு முன்னதாக எவ்வளவு ஆடிட்டர்கள் இருந்தார்கள், அப்பொழுது எத்தனை சங்கங்கள் இருந்தன, எவ்வளவு லேவாதேவி இருந்தது, இப்பொழுது எவ்வளவு அதிகமாக லேவாதேவி நடக்கிறது, எவ்வளவு ஆடிட்டர்கள் இருக்கிறார்கள், இது போதுமா என்று பார்த்தால், நிச்சயமாக அதிகமாக வேண்டும் என்று எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். இதிலே ஒன்றும் சந்தேகமில்லை. அதிகமாக லேவாதேவி ஆகக்கூடிய சமயத்திலே இன்னும் அதிகமான ஆடிட்டர்களைப் போட்டு அப்போதைக்கப்போது "கன்கரெண்டாக" கணக்குகளை ஆடிட் செய்தால்தான் நல்ல முறையில் இருக்குமே தவிர, பிறகு ஏதாவது ஒரு தவறு ஏற்பட்டுவிட்டால் எப்பொழுது அந்தத் தவறு ஏற்பட்டது, யார் அதைச் செய்தார்கள் என்று கண்டு பிடிப்பதுகூட கஷ்டமாகிவிடும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே தான் ஒவ்வோரு சங்கத்திற்கும் எவ்வளவு ஆடிட்டர்கள் தேவை என்பதை உடனடியாக கவனித்து, வேண்டிய ஆடிட்டர்களை அதிகப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri K. S. Subramania Gounder] [17th March 1959

அதுவும் குறிப்பாக நாம் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கொடுக்கக்கூடிய பணம் எல்லாம் அதிகமாக ரிசர்வ் பாங்கிலிருந்து சர்க்கார் காரண்டியின் பேரில் கொடுக்கக்கூடிய பணமாக இருக்கிறது. ஆகையினாலே அந்தக் கணக்குகளை தக்க முறையில், நல்லபடி ஆடிட் செய்வது அரசாங்கத்தினுடைய பூரண பொறுப்பாக இருக்க வேண்டும். ஆடிட் செய்வதிலே லாப நஷ்டம் பார்ப்பது சரியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதிகமாக ஆடிட்டர்கள் போட்டால் இன்னும் செலவு அதிகமாகி விடும் என்று பார்க்கக்கூடாது. ஆடிட் மூலம் வரக்கூடிய வருமானம் குறைவாக இருக்கிறது என்ற அளவிலே கணக்குப் போட்டால், அது சரியான கணக்காக இருக்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிலம் இல்லாத குத்தகைக்கு விவசாயம் **செய்யக்கூடிய** விவசாயிகளுக்கும், இன்னும் விவசாயத்திலே ஈடுபட்டிருப்பவர்களுக்கும் பணம் கடனாகக் கொடுக்க வேண்டும் என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். கூட்டுறவு இயக்கம் அதாவது செண்டிரல் பாங்கு, கூட்டுறவு சங்கங்கள், இவைகளையெல்லாம செய்வதற்கு தடையாக இருக்கிறது என்ற பாணியிலே அநேகர் பேசினார்கள். இதிலே என்ன தடை இருக்கிறது என்பதை சற்று யோசனை செய்து பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

11-50 a.m. அரசாங்கமே இதில் இதற்காக பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னபோது "கான்ஸ்டிடியூஷன் ஆப் எ கியாரண்டி அண்ட் ரிலீப் ப்ண்ட்" ஒன்று ஆரம்பிக்க வேண்டும், அதை ஆரம்பித்தால்தான் சௌகரியமாக இருக்கும் என்ற முறையில் அதை சீக்கிரமாக ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் என்ன காரணம் என்று தெரியவில்லை, இதுவரையிலும் ஆரம்பிக்கப்படவில்லை. இதில் சற்று கால தாமதம் செய்து வருகிறார்கள். இது சீக்கிரமாக ஆரம்பிக்கப்பட்டால்தான் இந்த நிலமில்லாத குத்தகைதாரர்களுக்கும் மற்றும் நிலமில்லாதிருப்பவர்களுக்கும் பணம் கொடுப்பதற்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே இதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கடன் கொடுக்கிற காரியத்தில் ஏதாவது நஷ்டங்கள் ஏற்படுகின்றன என்றால் அதில் அரசாங்கம் ஓரளவுக்கு கியாரண்டி கொடுப்பதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது தவிர (புல் பைனான்ஸ் ஸ்கீம்) **Full finance schemes** இரண்டு பிர்க்காக்களில் இருந்து வந்தது. அந்த இடங்களில் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருவதாகத்தெரிகிறது. இந்தத் திட்டம் இதர ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதில் இரண்டு விஷயம், அதாவது, ஒன்று கிடைக்கக்கூடிய கடன்களை கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கொடுப்பது, அதாவது ஏஜென்ஸி இல்லாத இடங்களில் கொடுப்பது என்பது, மற்றொன்று இந்த ஏரியாவில் ஏற்கெனவே கடன் கொடுக்கப்படாமல் இருந்தால் அந்த ஏரியாவுக்கு வேண்டிய கடனை கொடுப்பது என்பது. சாதாரணமாக ஒவ்வொரு ப்ளாக்கிலும் சுமார் ஐந்து லட்சம் வரையிலும் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு இருந்து வருகிறது. திரும்பி இதை ப்ளாக்-கிலேயே வசூலித்து வருகிறார்கள். இந்த இடங்களில் எல்லாம் கூட்டுறவு மூலமாக காரியங்கள் நடைபெறுவதில்லை. இவ்விதம் வரும்போது சில இடங்களில் சரியான விதத்தில் கடன் கொடுக்கவில்லை என்றும் தெரிகிறது. இதன் காரணமாக ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த ஏரியாவில் அல்லது சரகத்தில் ஐந்து லட்சத்திற்கும் குறைவாகவே போகிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். காரணம் கூட்டுறவு இயக்கத்தில் இன்றைக்கு போதிய அளவு பணம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. மொத்தம் 16 கோடி ரூபாயில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் இவ்வளவு என்று ஒதுக்கிவிடுகிறார்கள். இவ்விதம் ஒதுக்கி விடும்போது ஒவ்வொரு ஜில்லாவுக்கு சுமார் 10 லட்சம் ரூபாய்தான் கிடைக்கிறது. இதை வைத்துக்கொண்டு (புல் பைனான்ஸ் ஸ்கீம் **Full finance Scheme**-யை வெற்றிகரமாக நடத்த முடியாது. ஆகவே இந்த விதத்தில் பார்க்கும்போது ஒவ்வொரு ஏரியாவுக்கும்



17th March 1959] [Sri K. S. Subramania Gounder]

குறைவாகத்தான் போகிறது. ஏற்கெனவே எவ்வளவு பணம் பிளாக் பண்டில் சர்க்கார் மூலம் கொடுக்கப்பட்டதோ, அந்த அளவுக்கு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கொடுத்து விநியோகிப்பதற்கு தகுந்த அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால்தான் நல்ல முறையில் செய்ததாக இருக்கும். அவ்விதம் பணம் ஒன்றும் கொடுக்காமல் நீங்களே செய்யுங்கள் என்று சொல்லுவது சரியாகாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருப்பது இந்த கூட்டுறவு பார்மிங் ஸொஸைட்டிகள், இதில் எந்த மாதிரியான சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் பிரச்னை. பெட்டர் பார்மிங் ஸொஸைட்டியாக இருக்கவேண்டுமா அல்லது ஜாயிண்ட் பார்மிங் ஸொஸைட்டியாக இருக்க வேண்டுமா அல்லது, டெனன்ட் பார்மிங் ஸொஸைட்டியாக இருக்கவேண்டுமா என்கின்ற பல கருத்துக்கள் இருந்து வருகின்றன. பொதுவாக மக்களுக்கு கூட்டுறவு இயக்கத்தில் காரியங்கள் சரியான நேரத்தில் நடைபெறுவதில்லை, இம்மாதிரியான சங்கங்களின் மூலமாக காலதாமதம் ஏற்படுகிறது என்கின்ற எண்ணம் மக்களிடையில் இருந்து வருகிறது. பல காரியங்களுக்கும் அக்ரிகல்சரல் டிப்பார்ட்மெண்டோடு கலந்து செய்வதில், அதிலும், அரசாங்கத்தின் கியாரண்டி பெறுவதிலும் கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதில் என் அபிப்பிராயம் என்னவென்றால், இதை அவ்வளவு சீக்கிரமாக முடிவுசெய்ய முடியாது. ஏனென்றால் நமது ராஜ்யத்தில் எந்த மாதிரியான கூட்டுறவு பார்மிங் ஸொஸைட்டி ஏற்படுத்தினால் நல்ல முறையில் இயங்கும் என்பதைப்பற்றி நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக, எந்த மாதிரியில் இந்த கூட்டுறவு பார்மிங் ஸொஸைட்டி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஓரளவு அறிந்துகொள்வதற்கு இதற்கென்று ஒரு தனி கமிட்டி போட்டு, அதன் மூலம் நாட்டில் இதில் இருக்கின்ற எல்லா கஷ்டங்களையும் ஆராய்ந்து முடிவு செய்து அதன் அடிப்படையில் ஆரம்பிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அந்த முறையில் ஒரு கமிட்டி அமைத்து அதனுடைய சிபாரிசுகள் என்ன என்பதை அறிந்து அதன் பிரகாரம் செயல்படுவது நல்லது, என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக சேலம் ஜில்லாவை பொறுத்த வரையில் அங்கு கூட்டுறவு முறையில் ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்பட வேண்டும். அங்கு ஏக்கர் ஒன்றில் 70 டன் கரும்பு கிடைக்கிறது. இந்த முறையில் நல்ல அளவில் உற்பத்தியாகிற சேலம் ஜில்லாவில் ரெகவரியை எடுத்துக்கொண்டாலும் 13 சத விகிதம் இருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே கரும்பு உற்பத்தியிலும், சர்க்கரை உற்பத்தியிலும் முதன்மையாக இருப்பது இங்குதான். அந்த முறையில் பார்த்தாவது அங்கு உடனடியாக ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக "கோடவுன்" கட்டப்படும் விஷயத்தில் பெரிய காலதாமதம் ஏற்படுகிறது. இதற்கு வேண்டிய அயர்ன் அண்ட் ஸ்டீல் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதை (ஓப்பன்) வெளி மார்க்கட்டிலேயே வாங்கிக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து சொல்லப்படுகிறது. வெளியில் இப்போது இவைகளுக்கு என்ன விலை இருக்கிறது என்பதையும், இந்த விலை கொடுத்து கூட்டுறவு இயக்கத்தினர் வாங்க முடியுமா என்பதையும் அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். நமது கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களே இண்டஸ்ட்ரீஸ் இலாகாவின் அமைச்சராகவும் இருப்பதால் இதை கட்டுவதற்கு எல்லாம் சுலபமாக நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்று நம்புகிறேன். அந்த முறையில் கூட்டுறவு இலாகா மூலம் கோடவுன்களை கட்டுவதற்கு வேண்டிய ஸ்டீல்-சாமான்களை அரசாங்கம் ஒதுக்கித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்று, ப்ரக்யூர்மெண்ட் ஆப்ரேஷன் முறையை நடத்துவதற்கு கூட்டுறவு இயக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் பணம் போதிய அளவு இல்லாததினால் அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது என்பதாக இங்கு எடுத்துச் சொல்லப்பட்டது. இதற்காக பணம் கிடைப்பதற்கு ஸ்டேட் பாங்கிலிருந்து பணம்

[Sri M. P. Subramaniam] 17th March 1959]

மென்று கேட்டுக்கொண்டாலும்சரி, குறைந்தது ஓராண்டு காலத்திற்குள் கடன் பெறமுடியாது. அந்த நிலை மாறி, விவசாயிகளுக்கு ஓரிரண்டு மாத காலத்திற்குள் கடன் கிடைக்க வழி செய்ய வேண்டும். அந்த அளவு நில அடமான பாங்குகள் செயல்படுவதற்கு வழிவகை காண சட்டதிட்டங்களைத் திருத்தியமைக்க வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

மற்றும், நில அடமான பாங்கு விஷயத்தில் குறிப்பிட விரும்புவது நில அடமான பாங்கு மூலம் கடன் பெறவேண்டுமானால் யுத்தத்திற்கு முன்பாக ஒரு நிலத்தின் பெறுமானம் என்ன இருந்ததோ அதில் பாதிதான் கடனைக் கொடுக்க வழிவகை இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரி கருதினால், 15 முதல் 20 சத விகிதம் கூட்டிக்கொடுக்கலாம். 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நிலம் நூறு ரூபாய் பெறுமானமுள்ளதாக இருந்தது இன்று பத்தாயிரம் ரூபாய் பெருமானம் உள்ளதாக இருக்கலாம். பத்தாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நிலமாக இருந்தால் ஐயாயிரம், நாலாயிரம் ரூபாய் வரையில் கடனைப் பெறக்கூடிய நிலை இருக்கவேண்டும். ஆனால், நில அடமான பாங்கு மூலமாக கடன் பெறக்கூடிய தொகை, இன்றைய விதிகளின்படி, ஐம்பது ரூபாய்தான். 1939–ம் ஆண்டுக்கு முன்பு குறிப்பிட்ட நிலத்திற்குப் பக்கத்தில் உள்ள நிலம் என்ன விலைக்கு விற்றதோ அந்த விலையைக் கண்டுபிடித்து, அதன் அடிப்படையில்தான் கடன் கொடுக்கப்படுகிறது. ஏதோ நில அடமான பாங்கு இருக்கிறது என்று சொல்கிறோமே தவிர, உண்மையிலேயே விவசாயிகளுக்குப் பயன்படவில்லை. இனி விலைவாசி இறங்கப்போவது சுலபமாகத் தெரியவில்லை. யுத்தம் முடிந்த பிறகு ஏறுமுகத்தில் இருக்கிறதே தவிர இறங்கு முகமாகும் என்றே தெரியவில்லை. 1945–46க்குப் பின்னாலே இப்பொழுது என்ன விலைக்கு விற்கிறதோ, அதில் 15 சத விகிதம் குறைத்துவிட்டு, அந்த அடிப்படையிலே கடன் கொடுப்பதற்குத் திட்டம் வகுத்தால் நில அடமான பாங்கு மூலமாக அவர்களுக்குப் பலன் கிடைக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கங்கள் அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று ஒரு சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நானும் இதையே குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஏனென்றால், கூட்டுறவு, அரசியலுக்கு அப்பால் எல்லாதுறைகளிலும் நல்ல முறையிலே ' கூட்டுறவு ' என்ற பெயருக்கிணங்க எல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டுமென்றால் இதிலே கொஞ்சம் அரசியல் கலப்பு இல்லாமல் இருக்கவேண்டும். நான் பரவலாகப் பார்ப்பது கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக்கூடியவர்கள் தங்களுக்குச் சாதகமாக அரசியல், கட்சிக் காரணங்களுக்காக அதைப் பயன் படுத்துவது என்றால், பின்னால் கூட்டுறவு இயக்கம் வளர்வதற்கே வழிவகை இல்லாமல் போய்விடும் என்று குறிப்பிட விரும்புகிறேன். விவசாய பாங்குகளுக்கு டைரக்டர் நியமனம் செய்கின்ற விஷயத்தில், கூடுமான வரையில் அந்தப் பகுதியிலே அது எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்த விருப்பு வெறுப்பு இருந்தாலும் சரி, அந்தப் பகுதி மக்கள், பொது மக்கள் பிரதிநிதியாக இருக்கக்கூடியவர்கள் விவசாய பாங்கு டைரக்டர்களாகப் போடப்படவேண்டுமே தவிர, விருப்பு வெறுப்பு காரணமாக இஷ்டப்படி போட்டால், விவசாய பாங்கு உண்மையிலேயே அந்த மக்களுக்குப் பயன்படாது.

மற்றும், இங்கு ஒன்று குறிப்பிட விரும்புகிறேன், அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில், கூட்டுறவு இன்ஸ்டிட்யூட் என்று சென்னையில் இருப்பதைக் கல்லூரியாக உயர்த்துவதற்கு 14 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக அதிலே கொஞ்சமும் செலவழிக்கப்படவில்லை. 1959–60-இலே இப்படி ஆக்குவதற்கு திட்டம் இருப்பதாகவும் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அது என்ன ஆகும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளரவேண்டும் என்பதற்கு போதிய அளவு கூட்டுறவுக் கல்வியிலே உயர்ந்த கல்வி கொடுப்பது அவசியம் கூட்டுறவு கல்லூரியாக மாற்றுவது பலன் பெறும் என்ற



17th March 1959] [Sri M. P. Subramaniam]

எண்ணம் இருக்குமானால், இதை என் உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும், சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கல்ராயன்மலை, சேர்வராயன்மலைப் பகுதிகள் மலைஜாதியினர் வசிக்கும் பகுதிகள் ஆகும். அங்கு உற்பத்தி செய்கின்ற பொருள்களையெல்லாம் குறிப்பாக, கடுக்காய், மிளகு போன்றவை, கீழேயுள்ள மக்கள் மேலே சென்று பாமர மக்களை மிகவும் ஏமாற்றி வாங்கிக்கொண்டு வருகிறார்கள் என்று பல முறை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் பெறுமானமுள்ளவற்றை இரண்டணா, நான்கணா விலைக்கு வாங்குகிறார்கள். ஆறு மாத காலத்திற்கு முன்னாலேயே பணத்தைக் கொடுத்து, பெரிதும் அக்கிரமமான முறையிலே வாங்குகிறார்கள். அங்குள்ளவர்களுக்கே லாபம் கிடைக்கும்படியாக அங்கே பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களாக இருந்தாலும் சரி, கூட்டுறவு விற்பனைச் சங்கங்களாக இருந்தாலும் சரி, ஏற்படுத்தவேண்டுமென்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே மாகாண ரிஜிஸ்திராருக்கு எழுதியிருக்கிறேன். சேலத்திலேயுள்ள அதிகாரிகளுக்கும் எழுதினேன். முயற்சி செய்வதாகச் சொன்னார்கள். இரண்டு முறை அவர்களிடம் போய் வந்தேன். பின்னால், எந்த விதமான பலனும் ஏற்படவில்லை. மலை ஜாதியினர் பகுதியாக இருக்கும் காரணத்தால் விசேஷமாக அரசாங்கம் அதிலே அக்கறை எடுத்து, அவர்களுக்கு அரசாங்கம் செலவிலேயே அதிகாரிகள் சில பேர்களை நியமித்து, பத்து ஆண்டு பணியாற்றுவதற்கு வழி செய்தால்தான் அந்த மக்கள் சுறண்டப்படுவதை ஓரளவுக்குத் தடுத்து நிறுத்த முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியில் ஒன்று குறிப்பிடுவேன். கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பல ஊழல்கள் நடைபெற்றுவருவதைப் பல சந்தர்ப்பங்களில் கேள்விகள் மூலம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இவைகள் நல்ல முறையில் கவனிக்கப்படவில்லையென்றால், கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு மிகத் தடையாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி, உதாரணத்திற்கு நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே பல முறை இங்கே குறிப்பிட்டும் இருக்கிறேன். சேலத்திலே கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக இலங்கைக்கு மிளகாய் ஏற்றுமதிக்காக ஒரு அனுமதி கொடுக்கப்பட்டு, அது நல்ல முறையிலே பயன்படுத்தப்படாமல் விற்பனைச் சங்கத்திலே இருக்கிறவர்கள் எண்பதாயிரம் ரூபாய் லாபம் சம்பாதித்ததாகவும் பின்னால் விஷயம் வெளிவந்த பிறகு, பத்தாயிரம் ரூபாய் இதில் கூட்டுறவு சங்கத்திற்கு லாபமாகக் காட்டி, 'மீதிப் பணத்தை அவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் கையாண்டுவிட்டதாகப் புகார் வந்து, ஓராண்டு காலத்திற்குமுன் விசாரணையில் இருப்பதாகக் கூறி, பின்னால் மத்திய அரசாங்க இன்டெலிஜன்ஸ் டிபார்ட்மென்ட் எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லி, பின்னால் என்ன ஆனது என்று தெரியவில்லை. அங்கேயுள்ள மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இதிலே சம்பந்தப்பட்டவர்கள் பெரிய மனிதர்கள், கூட்டுறவு இயக்கத்தில் பெரியவராக இருந்தால் அது யாரையும் பாதிக்காது என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காவது இதுபோன்ற காரியங்களில் சிறந்த அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன்பு இருக்கிற இந்த கூட்டுறவு மானிய கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய பல அங்கத்தினர் பல விஷயங்களைப்பற்றி பேசியிருக்கிறார்கள். கூட்டுறவு முறையானது நமது மாகாணத்தில், ஏன் இந்தியாவிலேயே நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதிலும் நமது மாகாணத்தில் அது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை கேட்டு மிகவும் சந்தோஷமடைகிறேன். இந்த கூட்டுறவு முறையானது முதலாளித்துவத்திற்கும் கம்யூனிஸத்திற்கும் இடையேயுள்ள ஒரு முக்கியமான திட்டம். இந்த திட்டத்தைப்பற்றி குறை கூறுவதற்கு முன்னதாக இந்த திட்டத்தை

[Sri P. S. K. Lakshmipathi Raj] [17th March 1959

செயல்படுத்துவதற்கு இதை நல்ல முறையில் நடத்திக்காட்டுவதற்கு நல்ல ஊழியர்களும் நல்ல எண்ணம் படைத்தவர்களும் இருந்தால் இதைப்பற்றி குறை கூறாமலும் அரசாங்கத்தைப் பற்றி குறை கூறாமலும் இருக்க முடியும். அதன் மேல் அது நல்ல முறையிலும் நடக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது ராஜ்யத்தில் கூட்டுறவு முறையானது நல்ல முறையில் செயல்படுவதற்குக் காரணம் உண்மையிலேயே தமிழர்கள் நல்ல நோக்குள்ளவர்களாக இருப்பதாலும், அறிவாளிகளாக இருப்பதாலும்தான். நல்ல அறிவாளிகள் இந்த ஸ்தாபனத்தை ஆரம்பத்தில் எடுத்து நடத்திக் காட்டியதன் காரணமாக இது நல்ல முறையில் இப்பொழுது செயல்பட்டுவருகிறது என்றும் சொல்லலாம். இந்தக் கூட்டுறவு முறையானது கிராமங்களில் நீண்ட காலத்திற்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு, கடந்த காலத்தில் பல பெரியவர்கள் நல்ல முறையில் பாடுபட்டு வந்ததன் காரணமாகவும் இன்றைக்கு ஓரளவு நல்ல முறையில் இந்த மாகாணத்தில் நடத்தப்பட்டு வருகிறது. முக்கியமாக கிராமங்களில் விவசாயிகள் நல்ல முறையில் முதன் முதலாக பயனடைந்துகொண்டு வருகிறார்கள். பெரும் முதலாளிகள் அதிகப்படியாக வட்டி வாங்குவதன் காரணமாகவும் கிராமங்களிலுள்ள விவசாயிகள் இந்த கூட்டுறவு முறையை நல்ல அளவில் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். முதலாளிகளுடைய இம்சை தாங்காமல் அவர்கள் கூட்டுறவு பாங்குகள் மூலமாக கடன் பெற்று வருகிறார்கள். அரசாங்கத்தினுடைய திட்டம் எப்படி இருந்தாலும் கூட அதை விஷம் என்று கருதக்கூடிய அளவில் சிலர் வேலை செய்து வருகிறார்கள். பல முதலாளிகளும், சில தனிப்பட்டவர்களும் தப்பான எண்ணம் கொண்ட சிலரும் இந்த ஸ்தாபனத்தில் புகுந்து கொண்டு தப்பாக கையாளுகிறார்கள். இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். கடந்த காலத்தில் இது தனிப்பட்ட முறையில் நடந்து வந்தது. இந்தக் காலத்தில் கட்சியின் பெயராலும், ஜாதியின் பெயராலும் நடந்து வருகிறது என்பதைக் காண்கிறோம்.

சில கிராமங்களில் விவசாயிகளுக்கு என்று கூட்டுறவு முறையில் நில அடமான பாங்குகள் இருக்கின்றன. இதைப்பற்றி நானும் கூட குற்றம் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அந்த பாங்கில் மாமனார், மச்சான், சகலை முதலியவர்கள் இருந்து கொண்டு அவர்களே மெஜாரிட்டியாக இருந்து கொண்டு அந்த பாங்குகளை நடத்தி வருகிறார்கள். அங்கு கடன் வேண்டும் என்று கேட்டால் அதைக் கொடுப்பதற்கு என்ன இடைஞ்சல்கள் கொடுக்க வேண்டுமோ அவ்வளவையும் கொடுத்து வருகிறார்கள். கடன் வேண்டும் என்று விவசாயிகள் மனுக் கொடுத்தால் அதை கவனிப்பதே கிடையாது. தன்னுடைய நிலத்தை ஜப்தி செய்யப்போகிறார்கள் என்று அவசரமாகப் பணம் கடனாக வேண்டும் என்று பரிதபித்துக்கேட்டால் கூட கடன் கொடுப்பது கிடையாது. இப்படி ஒரு வருஷம் அல்ல பல வருஷங்களானாலும் கூட கடன் பெறுவது என்பது கிடையாது. இதனால் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் கடன் கொடுத்த முதலாளிகளுக்கு நிலத்தைக் கொடுப்பதோடு இரையாகியும் விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை நாம் சில கிராமங்களில் பார்க்கிறோம்.

சில இடங்களில் என்ன நடக்கிறது என்றால் கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டால் அதற்கு அடமானமாக வைக்கக்கூடிய நிலத்தின் மதிப்பு குறைந்து விட்டது. என்றும் கடன் கொடுக்க மறுத்து விடுகிறார்கள். பக்கத்திலுள்ள நிலம் நல்ல மதிப்புள்ள நிலமாக இருந்தாலும் கடன் கொடுக்க மனமில்லையானால் மத்தியில் இருக்கக்கூடிய இவருடைய நிலத்தின் மதிப்பு குறைவாக இருக்கிறது என்று சொல்லி கடன் கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். கடன் கொடுக்க இஷ்டப்பட்டு விட்டால், மதிப்பு எவ்வளவு குறைவாக இருந்தாலும் அடமானம் வைக்கக்கூடிய நிலத்தின் மண் நல்ல செழிப்புள்ள மண் என்று சொல்லி கடன் கொடுத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை சில கிராமங்களில் இருந்துவருகிறது. வேண்டாதவர்களுடைய நிலத்தின் மண் திடீரென்று மதிப்பு குறைந்துவிடுகிறது. இந்தக் குறை நீங்க வேண்டும் என்றும் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளு



17th March 1959] [Sri P. S. K. Lakshmipathi Raj]

கிறேன். இதனால் பல ஏழை விவசாயிகள் கண்ணீர் விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதை கனம் மந்திரி அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நில பாங்குகள் இருப்பது போன்று நகரப்புரங்களிலும் வீட்டு அடமான பாங்குகளை அமைத்துக்கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். முக்கியமாக வீட்டுப் பிரச்னை முக்கிய பிரச்னையாக இருக்கிறது. சிலர் வீட்டை வைத்துக்கொண்டு கடன் வாங்க முடியாமல் பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய அளவில் வீட்டு அடமான பாங்குகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சில கூட்டுறவு சங்கங்களில் பெரும் தொல்லைகள் நடைபெற்று வருகின்றன. அங்கே நடைபெறுகிற கட்சி முறையாலும், ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு நடத்தும் காரணமாகவும் பல சொசைட்டிகளில் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். சில இடங்களில் அது போராட்ட களமாகவே மாறியிருப்பதைக் காணலாம். இதைப்போலவே பழனியில் இருக்கக்கூடிய கூட்டுறவு சங்கத்தில் பல ஆயிரக்கணக்கான ரூபாய் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. பல மோசடிகளும் நடந்திருக்கின்றன. ஆனால் விசாரணை என்று சொல்லியும் எந்த விதமான தீர்ப்பும் இதுவரையிலும் கிடைக்கவில்லை. அது சம்பந்தமான பேபரும் இதுவரையிலும் வெளியே வரவில்லை. இதன் முடிவை பொது ஜனங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கூடிய சீக்கிரத்தில் அதை ஒரு முடிவுக்குக்கொண்டு வரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

சில இடங்களில் இந்த கூட்டுறவு சொசைட்டிகள் ஒரு சிலருடைய பரம்பரை சொத்தாக இருக்கிறது. சில இடங்களில் அது ஜாதி சொத்தாக இருக்கிறது, சில இடங்களில் அது கட்சி சொத்தாகவும் இருக்கிறது. இவைகளை நல்ல முறையில் திருத்தி அமைப்பதற்கு அரசாங்கம் ஒரு வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருந்தாலும் சில இடங்களில் அதை பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம் சில இடங்களில் விஷமத்தன்மையுடையவர்கள் இருப்பதால் பொது மக்களுக்கு அது பயன்படாமல் இருக்கிறது. சில இடங்களில் அது கட்சி முறையில் நடைபெற்று வருவதால் பொது மக்களுக்கு பயன் பட முடியாமல் இருக்கிறது. எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய சொசைட்டி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சொசைட்டியாக இருக்கிறது. அதை தன்னுடைய கட்சியின் நன்மைக்காக கையாண்டு வருகிறார்கள். அந்த சொசைட்டிக்கு மாஸ்கோவிலிருந்து நிதி வந்திருப்பதாக அவர்கள் கருதிக்கொண்டு அதை நடத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட உரிமையும் அங்கே பேசப்பட்டு வருகிறது. அந்த சொசைட்டிகள் இந்த அரசாங்கத்தினுடைய பணத்திலிருந்து நடத்தப்படுவதாகவே சொல்லிகொள்ளவில்லை.

SRI M. JAGANNATHAN: Sir, On a point of order. கனம் அங்கத்தினர் பேசும்போது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த சொசைட்டியை நடத்துகிறார்கள் என்றும், அந்த முறையில் அதன் பணத்தை கையாளுகிறார்கள் என்றும் சொல்லுகிறாரே அதை அவரால் நிரூபிக்க முடியுமா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER: அப்படி அவர் சொல்கிறார். It is not unparliamentary. It is perfectly in order. It is for the hon. Member to prove he is wrong. But does he not say in his speech that the Congress Members take a prominent part in all these things? I allow it. The hon. Member may go on. But let him not mention names of individuals. பெயரைச் சொல்லாதீர்கள்.

[17th March 1959

**SRI P. S. K. LAKSHMIPATHI RAJ :** சொசைட்டிகள் யாருடைய சொத்தும் அல்ல, பொது மக்களுடைய சொத்து என்ற அடிப்படையில் அதை எடுத்துச் சொன்னேன். தங்களுடைய கட்சி பெயரை அங்கே உபயோகப்படுத்துகிறார்கள் என்றுதான் சொன்னேன். சில இடங்களில் கட்சி சொத்தாக இருக்கிறது, சில இடங்களில் ஜாதி சொத்தாக இருக்கிறது. அந்த முறையில்தான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை, வேறு கருத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். சில நில அடமான பாங்குகளை நாலைந்து பணக்காரர்கள் சேர்ந்துகொண்டு நடத்திவருகிறார்கள். கடன் வேண்டுமென்று கேட்டால் அவர்களுடைய வீட்டில் பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு ஊழியம் செய்தால்தான் கடன் கொடுக்கிறார்கள், இல்லாவிட்டால் கடன் கொடுப்பது இல்லை. அவர்களுடைய மனுக்களைக்கூட கவனிப்பது இல்லை. இதனால் ஏழை விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைப் போக்கவேண்டும்.

சில சொசைட்டிகள் சீக்கிரமாக ரிஜிஸ்தர் செய்யப்படுவது இல்லை. அவைகளையெல்லாம் சீக்கிரமாக ரிஜிஸ்தர் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில் ஒரு சொஸைட்டியை ரிஜிஸ்தர் செய்ய வேண்டும் என்று பலரிடம் கையெழுத்து வாங்கி அனுப்பினேன். இன்னும் அது ரிஜிஸ்தர் செய்யப்படாமலேயே இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவே இல்லை. சில இடங்களில் எந்த நோக்கத்திற்காக சொசைட்டிகள் ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அந்த நோக்கம் தீர்ந்த பிறகுதான் ரிஜிஸ்தர் செய்யப்படுகிறது. அதனால் பயனடைய முடியாமல் போய்விடுகிறது. உதாரணமாக பழனியில் சுமார் பத்து லட்சம் ரூபாய்க்கு வேலை நடந்தது. அதற்கு ஒரு சொசைட்டியை ரிஜிஸ்தர் செய்து கொடுத்திருந்தால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு தொழில் கிடைத்திருக்கும். ரிஜிஸ்தர் செய்யாமல் இருந்ததால் அவர்களுக்கு வசதி இல்லாமல் போய் விட்டது.

சில இடங்களில் சொசைட்டிகளில் பல தொந்தரவுகள் இருக்கின்றன. நல்லவர்கள் சொஸைட்டிகளில் அங்கத்தினராக இருக்க முடியவில்லை. சிலர் இருந்து- கொண்டு தப்பு தவறுகள் செய்து வருகிறார்கள். அவைகளுக்கு நல்லவர்கள் இடம் கொடுக்காமல் இருப்பதால் நல்லவர்களை வெளியேற்றுவதற்கு மற்றவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முற்படுகிறார்கள். செய்யக்கூடிய காரியங்கள் கெட்டவை என்று சொல்வதால் நல்லவர்கள் அதில் அங்கம் வகிக்க முடியாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட பல தொல்லைகள் இருக்கின்றன.

இந்தக் கூட்டுறவு இயக்கம் வளரவேண்டுமென்று சொன்னால் எல்லாத் தரப்பினருக்கும் நல்ல எண்ணம் இருந்தால்தான் வளருமே தவிர அரசாங்கம் மட்டும் நல்ல நோக்கம் கொண்டிருந்தால் மட்டும் போதாது. எல்லாக் கட்சிகளும் நல்ல நோக்கத்துடன் அந்தக் கூட்டுறவு இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அரசாங்கம் நல்ல நிலைமையில் இருந்தால் புகழுவார்கள். நல்லது செய்தால் சந்தோஷப்படுவார்கள். ஆனால் சிறிய தவறு ஏற்பட்டு விட்டாலும் அதைப் பெரிதாக எடுத்துக் காட்டுகிறார்கள். இந்தக் காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டு எந்த அரசாங்கமும் செய்து காட்ட முடியாத அளவுக்கு ஒரு பெரும் மாறுதலைச் செய்து காட்டி இருக்கிறது. இந்த மாறுதலுக்காக விவசாயிகள் மத்தியில், தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகரமான இந்தக் கூட்டுறவு முறையை அமுலுக்குக் கொண்டு வந்து நல்ல விதமாக செயலாற்றிக்கொண்டு வரும் இந்தச் சர்க்காரைப் பாராட்டுவதோடு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI K. RAMACHANDRAN :** கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக இன்றைய சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு இந்தக் கூட்டுறவு இயக்கந்தான் மிகவும் முக்கியமான இயக்கம். பலதுறைகளிலும் இது



17th March 1959] [Sri K. Ramachandran]

மக்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் சீர்படுத்த முடியும். இதில் எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. இந்தக் கூட்டுறவு இயக்கம் சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறபோது, இதுவரையில் இந்த இயக்கம் எப்படி நடந்து வந்திருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இனிமேல் சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படையாக இந்த இயக்கம் அமையவேண்டுமானால் அது எவ்வாறு செயல்படவேண்டுமென்பதைப்பற்றி நாம் அதிகமாக சிந்திக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

உதாரணமாகப் பார்க்கப்போனால் நம்முடைய சமுதாயத்தில் 100-க்கு 80 பேர் கிராம மக்கள்தான். இந்தக் கிராம மக்களுக்கு இந்த கூட்டுறவு இயக்கத்தின் பலன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கிடைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சமுதாயம் முன்னேறமுடியும். விவசாயிகளுக்கும், கிராம மக்களுக்கும் பலன் தரத்தக்க வகையில் இந்தக் கூட்டுறவு இயக்கமானது நல்ல விதமாக நடந்துவந்தால் நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முதல் முதலில் கடன் வ்சதிகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக கிடைக்கிறதோ, எவ்வளவுக்கெவ்வளவு அவர்கள் கையில் போய்க் கிடைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்ல திட்டமாக இந்தக் கூட்டுறவு இயக்கம் அமையமுடியும். இன்றைக்குக் கிராம வாசிகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்குக் கடன் சுமை இருந்துகொண்டே இருக்கிறது. அவர்களுக்குக் கடன் சுமை அதிகரித்துக்கொண்டே வருகிற காரணத்தால் கடன் வசதிகளை மேலும் மேலும் பெருக்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் விவசாய உற்பத்தி பெருக சந்தர்ப்பம் இல்லாத நிலைமை ஏற்படுவதோடு கூட அவர்களுடைய வாழ்க்கை ஏழ்மை நிலையை அடைந்து கொண்டே போகிறது. அப்படிப் பார்க்கும்போது அவர்களுக்கு இந்தக் கடன் சுமையைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் சுலபமாகக் கடன் வசதிகள் கிடைப்பதற்கும் நல்ல வசதியும் வாய்ப்பும் இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகச் செய்துதரவேண்டும். இப்பொழுது சர்க்கார் திட்டப்படி 84 சத விகிதம் கிராமங்களுக்கு இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய கடன் வசதி நிலைமையைப் பார்த்தால் அடிப்படையில் இருக்கக்கூடிய தவறுகள் தெரியும். இன்றையதினம் விவசாயிகளுக்குச் சாதகமான வகையில் அந்தக் கடன் வசதி கொடுக்கப்படுகிறதா என்று பார்த்தால்—ஒன்று விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் அந்தக் கடன் கிடைப்பதில்லை, விவசாயம் ஆரம்பிக்கிற ஆடி, ஆவணி மாதத்தில் கடன் கேட்டால், மாசி பங்குனி மாதத்தில்தான் கடன் கிடைக்கிறது. அதனால் பலன் இல்லையென்பது ஒன்று. இரண்டாவது, ஓரளவு கடன் கிடைக்கிற வசதி ஏற்பட்டாலும்கூட சொசைடிகளை நடத்துகிற நடைமுறையில் தவறு இருப்பதால் விவசாயிகளுக்குப் பலன் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனக்கு முன் பேசிய அன்பர் "ஏதோ கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சிலர் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அவர்களுடைய கட்சிக்காக அந்தப் பணத்தை பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்" என்று சொன்னார்கள். அப்படி இருந்தாலும் கூட அவர்கள் "லேட் இன் தி பீல்டு" என்று தான் சொல்ல வேண்டும். முக்கியமாகக் காங்கிரஸ்காரர்கள் கையில்தான் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்ப முதல் இருந்து வந்திருக்கின்றன. அவர்கள்தான் இந்த முறையில் அதைப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** ஜஸ்டிஸ் பார்ட்டி இதை முதலில் நடத்தி வந்தது.

**SRI K. RAMACHANDRAN :** இதற்குப் பல சான்றுகள் கூறமுடியும். காங்கிரஸ்காரர்கள் கையில்தான் இந்த இயக்கம் இருந்துவந்திருக்கிறது. அந்தக் காலத்தில் ஒரு சொசைடி பாக்கி இல்லாமல் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை எல்லாக் கூட்டுறவு இயக்கங்களும் காங்கிரஸ்காரர்கள் கையில்தான் இருந்துவந்தன. இந்த வகையில் காங்கிரஸ் கட்சிக்கு இருந்த மதிப்பைச் சொல்ல முடியாது. அவர்கள் செய்து வந்த ஊழல்கள் கொஞ்சநஞ்சமல்ல. கிராமாந்திரங்களில் இருந்த சொசைடிகளிலும்

[Sri K. Ramachandran] [17th March :

சரி நகரங்களில் இருந்த கூட்டுறவு இயக்கங்களிலும் சரி—காங்
காரர்கள் எவ்வளவு மோசமான முறையில் நடந்து வந்திருக்கிறா
என்பது எல்லோரும் அறிந்ததே. இவர்கள் அங்கு பணத்தைப் பெ
அளவில் கையாண்டு வந்திருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தின் ப
நல்ல முறையில் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்தக் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் பலன் அளிக்க வே
மென்றால் எந்தக் கட்சியாக இருந்தாலும் நியாயமான முறையில் கி
மக்கள், ஏழைத் தொழிலாளர்கள் வாழ்க்கையைச் சீர்படுத்தும் வகை
பாடுபட முன் வரவேண்டும். அப்படிப் பாடுபடுகிறவர்கள் இந்தக் கூட்(
சொசைடிகளில் பெரும் பங்கு கொண்டு உழைத்தால்தான் இ
சொசைடிகள் நல்ல முறையில் இயங்க வழி ஏற்படும். இப்பொ
ஜனங்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள். யார் யார் உண்மை
மக்களுக்காகச் சேவை செய்கிறார்கள் என்பதை அவர்கள் தெரி
கொண்டு விட்டார்கள். இனிமேல் கட்சி பெயர் சொல்லிக்கொண்டு இ
இயக்கத்தில் இருக்கக்கூடாது. மக்கள் எல்லோரும் அந்த இயக்கத்
பங்கு கொள்ளவேண்டும்.

க்ரெடிட் சொசைடிகளை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு சொ
களிலும் ஊழல் இருக்கிறது. அந்த சொசைடியின் பிரசிடெண்ட் எ
செய்வார் என்றால் 10, 12 அப்ளிகேஷன்கள் கடன் வேண்டுமெ
வந்திருந்தால் அவர் 500, 1,000 என்று பாங்கில் இருந்து எடு
தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளுவார். அ
பணத்தை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தது மாதிரி காண்பித்து விடு
பின்னால் அந்தப் பணத்திற்காக பணமே பெற்றுக் கொள்ளாத ஏ
விவசாயிகளுடைய சாமான்கள் ஜப்தி செய்யப்படும். இந்த நிலை
இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. " அர்பன் சொசைடிகளி
சாதாரண ஏழைகள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்
பணத்தைத் தங்கள் சொந்தத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டு அ
கணக்கில் காண்பிக்காமல் இருக்கிறார்கள். இந்த மாதிரி நிலை
ஏற்படாமல் இருக்க அடிக்கடி அவர்களைக் கண்காணிக்க வேண்டும். ஆ
செய்து அந்தக் கணக்குகளைச் சரிபார்க்கச் செய்யவேண்டும். அப்பொ(
தான் நல்ல நிலைமை ஏற்படமுடியும்.

இந்த " மார்க்கட்டிங் சொசைட்டிகளிலும்—" இந்த மாதிரி ஊழல்
நிறைந்திருக்கின்றன. லட்சக்கணக்கில் நடக்கக்கூடிய வியாபாரத்
நடத்தக்கூடிய திறன் அந்த சொசைட்டிகளுக்கு ஏற்பட்டிருக்கிற
அதெல்லாம் சரியான படி நடக்கிறதா ? பொதுப் பணத்தை
தங்களுடைய பணம் என்று நினைக்காத நிர்வாகஸ்தர்கள் ஏற்பட்டால்தா
அது திறம்பட நடக்க முடியும். இன்றைக்கு அந்த ரீதியில் இரு
கொண்டிருக்கிற இந்த சொசைட்டிகளின் விதிகளை இறுக்கிப் பிடிப்ப
மூலமாக இதைச் சரிப்படுத்திவிடலாம் என்றுதான் நான் சொல்
கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குக் காலைப் பத்திரிகையில் கூட
அம்மோனியம் சல்பேட் மூட்டை கடத்தப்பட்டுவிட்டதாகச் செய்தி வந்தி
கிறது. 16,000 ரூபாய் நஷ்டம் என்றால் நிர்வாகம் எந்த முறை
நடந்து வருகிறது என்பதை நாம் உணரமுடிகிறது.

" பார்மிங் " சொசைடிகளைப் பொறுத்தவரை இரண்டு மூ
" பார்மிங் " சொசைடிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதையெல்
பரிசீலனை செய்வதோடு ஒவ்வொரு ப்ளாக்குக்கும் ஒரு " பா
சொசைட்டியை " ஏற்படுத்தவேண்டும். அதைப் பரீட்சார்த்தமுறை
நல்ல முறையில் அறிந்து பெரிய சட்டம் வருவதற்கு முன்னால் ஆரா
செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" எக்ஸ் சர்விஸ் மென் " ஐப் பொறுத்தவரை 3 லட்சம் பேர்
இருக்கிறார்கள். அவர்களுக்காக " லாண்ட் காலனிசேஷன் சொசைடிக
ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் சரியானபடி நடக்கவி
என்று சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்காக மோட்டார் ட்ரா
போர்ட் சொசைடிகளும் இருக்கின்றன. நல்ல விதத்தில் அந்த சொ
கள் வேலை செய்தால் இந்த எக்ஸ்சர்விஸ்மென்களுக்கு நல்ல ப
ஏற்படும். இந்த எக்ஸ்சர்விஸ்மென்களைப் பொறுத்தவரை ந



17th March 1959] [Sri K. Ramachandran]

டெக்னிகல் ஸ்கில் உள்ளவர்கள், பலதுறைகளிலும் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு சிறிய தொழில்களை நடத்த வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையில் சிறு தொழில்களை ஆரம்பித்து அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கம் வெற்றிபெற வேண்டுமானால் நல்ல நிர்வாகஸ்தர்கள் ஏற்படவேண்டும். நல்ல நிர்வாகஸ்தர்களைப் போட்டு அந்த இயக்கத்தை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI A. GOVINDASAMY :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்தின்மீது நண்பர் திரு. ஏ. மாரிமுத்து அவர்கள் பிரேரித்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்தும், கூட்டுறவு இலாக்காவில் சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லியும், கிராம மக்களுக்குத் தேவையான சில திட்டங்களை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தும்—அவற்றுக்கு உடனடியாக சர்க்கார் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் சிலவார்த்தைகள் பேச விரும்புகிறேன். 12-30 p.m.

(Deputy Speaker in the Chair.)

இந்தத் துறைக்காக இவ்வருஷத்தில் 53 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். இந்தத் தொகையானது கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரப்படுகிற நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்காக என்று தெரிகிறது. இன்றைக்கு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் அதிகமான நெசவாளர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். இன்னும் பல பேர்கள் பயனடையாமல் இருக்கிற காரணத்தினால் அதிகமான தொகை ஒதுக்கியிருந்தால் இது இன்னும் பாராட்டுவதற்குரிய முறையில் அமைந்திருக்க முடியும். கூட்டுறவு இயக்கத்தில் வராமல் தங்கியிருக்கக்கூடிய ஒரு சில நெசவாளர்கள்—தங்களுக்கும் ரிபேட் அளிக்கும் வசதி செய்து தரப்படவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால் எப்போதும் போல கூட்டுறவு இயக்கத்தின் கீழ் வருகிறவர்களுக்கு மட்டுந்தான் இந்த ரிபேட் வசதி அளிக்கப்படும் என்று இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால் தான் இன்னும் அதிகப்படியான நெசவாளர்கள் தனித்து இருக்காமல் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வந்து சேர்ந்துகொள்வார்கள். அப்படியின்றி தனிப்பட்டு இருக்கக்கூடியவர்களுக்கும் இந்த ரிபேட் வசதி கொடுப்பது என்று வந்துவிட்டால் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளராமல் போய்விடுவதற்குரிய நிலைமைதான் ஏற்படும் என்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவு இலாகாவின் மூலம் வீடுகள் கட்டுகிறோம். வீடு இல்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்கிற நோக்கத்தோடு அரசாங்கம் இத்திட்டத்தை வகுத்திருந்தாலும் இன்றையதினம் யாருக்கு வீடு கட்டித் தரப்படுகிறது என்று பார்க்கிறபோது வீடு இருக்கிறவர்களுக்கேதான் வீடுகள் கட்டித் தரப்படுகிறது. வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படுவதில்லை என்கிற குற்றச்சாட்டை நான் அமைச்சர் அவர்கள் மீது சுமத்த விரும்புகிறேன். இதை அமைச்சர் அவர்களும் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொருவருடைய பெயரையும்—தலைவர் பெயர் நிலை நிறுத்தப்படுவது போல இப்படி பல காலனிகளை ஏற்படுத்தும்போது இன்றையதினம் பல பேர்களுடைய பெயரை வைப்பதற்குத்தான் உதவுகிறது. ஒரு சொஸைடி என்றால் அதன் தலைவருடைய உறவினர்களுக்கே ஒரு தெரு, இரண்டு தெரு வீடுகள் இன்றையதினம் அமைந்துவிடுகிறதே தவிர உண்மையில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கிடைப்பது என்பது கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆகவே பரவலாக—வீடு உள்ளவர்களுக்கு, வசதி உள்ளவர்களுக்கு இல்லாதபடி—வீடு இல்லாதவர்களுக்குப் பயன்படுமாறு இதைக் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri A. Govindasamy] [17th March 1959

எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீ பழனியப்ப முதலியாரைப் பற்றி பெருமைபடுத்தபட்ட முறையில் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை நானும் பெருமையோடு ஏற்றுக்கொள்கிறேன்.

கடலூரில் அவர் சொந்த வீட்டுக்கு எதிரிலேயே இருக்கிற வீடு கட்டும் சொஸைடி ஒன்றில் 20 ஆயிரம் ரூபாய் மோசடி செய்யப்பட்டிருப்பதையும் நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சர்க்காருக்கு யார் தப்பு செய்கிறார்கள் என்று எப்படி தெரியும், சர்க்கார் இதற்கு எப்படிப் பொறுப்பாளியாவார்கள் என்று கேட்கலாம். சர்க்கார் தான் பொறுப்பாளி, சர்க்கார் உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அதனதன் கணக்குகளை அடிக்கடி ஆடிட் செய்வதற்கு ஆடிட் இலாகாகாரர்களை உபயோகப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுவும் இநத நேரத்தில் கூட்டுறவு இயக்கத்தில் நீண்டகாலத் தொடர்பும், அனுபவமும் நிறைந்த திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் ஆடிட் இலாகாவின் மூலமாக தணிக்கையாளர்களைப் போடவேண்டாம் என்று சொன்னபோது எனக்கு மிக ஆச்சர்யமாக இருந்தது.

Sri K. S. SUBRAMANIA GOUNDER : நான் சொன்னது அதிகமான அதிகாரிகளைப் போடவேண்டாம், ஆடிட்டர்களை போடவேண்டும் என்பதுதான்.

* Sri A. GOVINDASAMY : ஆடிட்டிங் டிபார்ட்மெண்டாரை போடுவதை கவுண்டர் ஆட்சேபித்ததை நான் குறிப்பிட்டேன். அங்கே இருக்கிற ஆடிட்டவர்களைவிட நாம் போடுகிறவர்களுக்குக் குறைந்த சம்பளம் இருந்தால்—அங்கே பொறுப்பாக உள்ள பணக்காரர், வசதி உள்ளவர்கள்—இவர்களை அமுக்கிக் கொண்டு தப்பித்துக்கொண்டுவிட முடியும். அதற்கு இடமில்லாமல் அதிகச் சம்பளமும் அதிகாரமும் உள்ள தணிக்கையாளர்களை சர்க்கார் தணிக்கை இலாகா மூலமாகப் போட்டு இந்தக் கணக்குகளை அடிக்கடி தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தால்தான் மோசடிகளைத் தவிர்க்க முடியும். இந்தப் பண மோசடி செய்வதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கம்யூனிஸ்டுகாரர்கள் செய்வதாகச் சொன்னார்கள். இங்குள்ளவர்கள் காங்கிரஸ்காரர்கள் செய்வதாகச் சொன்னார்கள். அப்போது மந்திரி அவர்கள் குறுக்கிட்டு ஆரம்பத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களிடத்தில்தான் இருந்தது என்றார்கள். அன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர்களில் பெரும்பகுதியினர் இன்று காங்கிரஸில் வந்து சேர்ந்திருக்கிற காரணத்தினால் கொஞ்சம் எச்சரிக்கையாக அவர் இருக்கவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். அப்படி மோசடி செய்வது எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் தவறு. கூட்டுறவு இயக்கம் நம் ராஜ்யத்தில் நல்ல முறையில் வளர்க்கப்படவேண்டுமானால் பணத்தை யாரும் மோசடி செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக வளவனூரிலும் பெண்ணாடத்திலும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்குச் சர்க்கார் முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வளவனூரில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த பாரி கம்பெனி முன்வந்தபோதும் மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்கவில்லை. தனியார் முன்வந்தபோதும் கொடுக்கவில்லை. கூட்டுறவு இயக்கத்தின் மூலமாவது ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் கூட்டுப் பண்ணைகள் இன்னும் அதிகப்படவேண்டும். அதுபோலவே விவசாய பாங்குகள் அதிகரிக்கவேண்டும். நீண்ட காலக் கடன்களையும் கூட குறைந்த வட்டிக்கு விவசாயிகளுக்குக் கொடுத்தால்தான் மிக்க பலன் ஏற்படும் என்பது என் வேண்டுகோள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உற்பத்தி செய்வதற்கும் பால் பண்ணைகள் ஏற்பட்டாகவேண்டும். இரண்டு ஆண்டுக்கு முன்னாலேயே பம்பாயில் உள்ளதுபோன்ற உறாரே பால் பண்ணை போல் இங்கும் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள்.



17th March 1959] [Sri A. Govindasamy]

அப்படி ஏற்படுத்தி, இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் நல்ல பால் கிடைக்கும்படி செய்து, கால்நடைகளையும் அபிவிருத்தி செய்யவேண்டும். மேய்ச்சல் தரையாக உள்ள பூமிகளை அதற்காக ஒதுக்கிவிட வேண்டும்.

பணமோசடியைப் பற்றி எல்லோரும் சொன்னார்கள். நானும் ஒரு மோசடியைச் சொல்கிறேன். கள்ளக்குறிச்சியைப் பொறுத்த வரையில் நில அடமான பாங்கில் 20 ஆயிரம் ரூபாய் போயிருக்கிறது. அது எங்கே போயிற்று ? அரசாங்கத்தின் கடலூர் பண்டக சாலையில் மோசடியாகியிருக்கிறது. இதைச் செய்தவர்கள யார் என்றால் இரண்டு இடத்திலும் காங்கிரஸ்காரர்கள்தான். நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இவை அரசாங்கத்தின் கவனத்திற்கும் வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, கள்ளக்குறிச்சியில் செண்டிரல் பாங்க் டைரக்டர் எலெக்ஷன் வைத்தார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் ஒன்றாகச் சேர்ந்து தலைவர் தேர்ந்தெடுக்க முடியாதபடி சச்சரவோடு முடிந்துவிட்டது. ஆனால் அப்புறம் ஒரு சிலர் மட்டும் சேர்ந்துகொண்டு—அந்த இடத்தையே சேராதவர்கள்—தலைவர் தேர்தல் நடந்ததுபோன்று எல்லாவித மினிட்சுகளையும் எழுதி மேலே அனுப்பிவிட்டார்கள். இப்படிப்பட்ட அசம்பாவிதங்களை எல்லாம் தடுக்க கூட்டுறவு இலாகா தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் நில அடமான பாங்கு மூலம் பணம் கொடுப்பது காலதாமதமாகிறது. இந்த அவையில் அதிகாரிகளும் இருப்பதால் சொல்கிறேன். குறையாகச் சொல்லவில்லை. வேண்டுகோளாகச் சொல்கிறேன். இந்தக் கடன்களை எவ்வளவு சீக்கிரமாக காலதாமதமில்லாமல் கொடுக்கிறார்களோ அவ்வளவுக்கு நல்ல பயன் ஏற்படுகிறதென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். பட்டாளத்திற்குச் சென்று வந்த சிப்பாய்கள் எங்கள் கடலூரில் கூட்டுறவு முறையில் ஒரு மோட்டார் யூனியனை அமைத்திருக்கிறார்கள். அதன் நிர்வாகிகள் பட்டாளத்தைச் சேர்ந்தவர்களாக இல்லை. எங்கேயோ இருந்தவர்களைக் கொண்டுவந்து அதன் நிர்வாகிகளாகப் போட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அந்த சிப்பாய்களுக்கு போதுமான வசதியும் சௌகரியமும் அந்த யூனியனால் கிடைக்காமல் அவர்கள் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை. எந்தக் காரணத்திற்காக, எந்த நோக்கத்துடன், அந்த யூனியன் அமைக்கப்பட்டதோ அது ஏற்படும் வகையில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கத்தில் கட்சி வேறுபாடு இல்லை என்று பல கட்சிக்காரர்களும் குறிப்பிட்டார்கள். அதில் கட்சி வேறுபாடு இல்லை என்பதை எடுத்துக்காட்டும் முறையில் அந்த இயக்கத்தின் கொடியில் பலதரப்பட்ட வர்ணங்கள் இருக்கின்றன. ஆனால் ஆளும் கட்சிக்கு மட்டுமே இந்த இயக்கத்தில் செல்வாக்கு ஏற்படும் முறையில் காரியங்கள் நடப்பதை கனம் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவராமல் இருந்தேன் என்றால் நான், கடமையில் தவறியவனாவேன் என்பதால் அதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சில வாரங்களுக்கு முன் இந்த ராஜ்யத்தில் கைத்தறி வாரவிழா கொண்டாடப்பட்டது. அந்த விழாவிலும் கைத்தறித் தொழிலின் அபிவிருத்தியிலும் எல்லாக் கட்சிகளுக்கும் அக்கறை உண்டு. ஆனால் அந்த விழா நடந்தபோது அக்கொண்டாட்டத்திற்கு சம்பந்தப்பட்ட கூட்டுறவு இயக்கத்தினர் ஆளும் கட்சித் தலைவர்களை மட்டும் அழைத்தார்களே தவிர எதிர்க்கட்சியினரை அழைக்கவில்லை. அது கூட்டுறவு இயக்கத்தினரின் பொறுப்பு என்று கனம் மந்திரி சொல்லக்கூடும். மத்திய அரசாங்கம்தான் இந்த விழாவைக் கொண்டாடச் சொல்கிறது. அதை அவ்வாறே சிறப்பாக கொண்டாட இந்த ராஜ்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. எனவே அது வேறு விஷயம் என்று சொல்லிக் கனம் மந்திரி அவர்கள் தப்பித்துக்கொள்ளக்கூடாது. இனி வரும் ஆண்டுகளிலாவது இம்மாதிரி யெல்லாம் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member's time is up. The Hon. Minister is not responsible for it and the Government also are not responsible for not inviting leaders of other parties. It is not relevant to the Demand. The hon. Member may resume his seat.

*SRI A. GOVINDASAMY: கைத்தறி வார விழாவைக் கொண்டாடுவதில் நமது அமைச்சர்களும் கலந்துகொள்கிறார்கள். அதை ஒரு கட்சியின் ஏகபோக உரிமையாகவோ ஒரு கட்சிப் பிரச்னையாகவோ ஆக்கக்கூடாது என்று சொன்னேன்.

*THE HON. SRI R. VENKATARAMAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையின் பேரில் விவாதம் நடந்தபோது ஒரு ஒத்துழைப்பானமுறையில் எல்லா கனம் அங்கத்தினர்களும் விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு நல்ல யோசனைகள் கூறியதற்காக அவர்கள் எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கமானது மக்களுடைய இயக்கம். பல தரப்பட்ட மக்கள் ஒன்றாகச் சேர்ந்து தங்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்துகொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பு இது. மக்களிடம் என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ அந்தக் குறைகள் எல்லாம் இந்த அமைப்பிலும் பிரதிபலிக்கும் என்பதில் சந்தேகமில்லை. நிர்வாகத் துறையில் சட்டங்கள் இயற்றும் முறையில் விதி முதலியவைகளை சற்று நன்றாக, சுறுசுறுப்பாக, கவனித்தால் இந்தக் குறைபாடுகள் நீங்கும் என்ற முறையில்தான் சர்க்கார் இந்த இயக்கத்தில் குறுக்கிடுகிறது; மற்றபடி இந்த இயக்கத்தினர் நடத்தும் இயக்கத்தில் சர்க்கார் தினந்தோறும் தலையிட்டு ஒவ்வொன்றையும் கண்காணிப்பு செய்வது என்ற முறை ஏற்படவில்லை; அதாவது ஒரு சர்க்கார் இலாகாவை நடத்துவது போல இதிலே நாம் நடக்கவேண்டுமென்ற நிலை ஏற்படவில்லை; இந்த நிலை ஏற்பட்டால் இந்த இயக்கம் வலுவடையாது, வலுவடையவேண்டியதற்கு மாறாக இயக்கமே நசித்துவிடும். இந்த ஸ்தாபனங்களுக்கு டைரக்டர்களை நாமினேஷன் செய்யும்போது சர்க்கார் இந்த இயக்கத்தில் தலையிடுகிறது. அவ்வாறு தலையிட்டு அவர்களை நாமினேஷன் செய்வதைக் கூட, எந்த ஸொஸைடிகளில் சண்டை சச்சரவுகள் இருக்கின்றனவோ, எந்த ஸொஸைடிகளில் தவறுகள் ஏற்பட்டுவிட்டன என்று புகார்கள் வந்திருக்கின்றனவோ, அந்த ஸொஸைடிகளில்தான் செய்கிறது; மற்ற இடங்களில் நாமினேஷன் செய்வதில்லை. புதிதாக ஏற்படும் ஸொஸைடிகளில் சர்க்கார் நாமினேஷன் செய்யும் நிலைமை நிச்சயமாக இருக்கிறது. காரணம், அவைகளை ஆரம்பிக்கும்போது யார் யார் என்னென்ன தகுதியுள்ளவர்கள் என்பது புதிதாக அவைகளை ஆரம்பிக்கும் அங்கத்தினர்களுக்கு சரிவரத் தெரியாது. ஆகவே இவைகளை புதிதாக ஆரம்பிக்கப்படும் இடங்களிலும் சர்க்கார் நாமினேஷன் செய்யவேண்டியிருக்கிறது. இந்த மாநிலத்தில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட ஸொஸைடிகள் நீங்கலாக எல்லா ஸொஸைடிகளையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், மிக்க குறைவான ஸொஸைடிகளிலேயே சர்க்கார் தலையிட்டு நாமினேஷன் செய்திருக்கிறது என்பது தெரியவரும். இது எதைக் காண்பிக்கிறது? மாநிலத்தில் அதிகமான கூட்டுறவு ஸொஸைடிகளில் ஊழல்களும், குறைகளும் இல்லை என்பதைக் காட்டுகிறது. கூட்டுறவு இயக்கத்தில் எத்தனையோ குறைகளும் ஊழல்களும் இருப்பதாக கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். அப்படி அல்ல, குறைகளும், ஊழல்களும் குறைவு என்பதை இந்தப் புள்ளிவிவரம் காட்டுகிறது. குறைகளும் குற்றங்களும் இருக்கும் இடங்களில்தான் நாங்கள் தலையிட்டு நாமினேஷன் செய்கிறோம். நாங்கள் நாமினேஷன் செய்திருப்பது குறைவு என்பதை இந்தப் புள்ளிவிவரம் காட்டுவதால், ராஜ்யத்தில் கூட்டுறவு இயக்கம் சரியான முறையில் நடந்துவருகிறது என்று தெரியவருகிறது.





கூட்டுறவு இயக்கத்தில் பங்குகொள்பவர்கள், நான் அபிஷியல்ஸும் சரி, உத்தியோகத் துறையினரும் சரி, ஒரு சிறந்த சேவை செய்கிறார்கள். அவர்கள் செய்யும் இந்தச் சேவை நாட்டுக்குச் செய்யப்படும் சேவை என்பதால் அதை நாம் இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டாமல் இருக்கமுடியாது.

கூட்டுறவு இயக்கம் இன்னும் நன்றாக வலுவடைய வேண்டும். நமது ராஜ்யத்தின் நோக்கமும் நமது நாட்டின் நோக்கமும் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பது ஆகும். அதற்கேற்ற அளவில் பொறுப்புகளும் பங்கும் பொதுமக்கள் எடுத்துக்கொண்டால்தான் உண்மையான ஸோஷலிஸம் ஏற்படும். சர்க்காரே எல்லாக் காரியங்களையும் செய்வதன் மூலம் உண்மையான சோஷலிஸத்தை உருவாக்க முடியாது. ஸ்டேட் காபிடலிஸம் போல எல்லாத் தொழில்களையும் சர்க்காரே நடத்துவது, ஸோஷலிஸம் என்பதற்குரிய டெபனிஷனுக்கு ஒத்ததாகாது. எந்த சமுதாயத்தில் மக்களுடைய தொடர்பும் மக்களுக்குள்ள நிர்வாகப் பொறுப்பும் அதிகமாக இருக்குமோ அந்த சமுதாயம் தான் உண்மையான ஸோஷலிஸ சமுதாயமாக இருக்க முடியும். ஆகவேதான் சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லும்போது, நமக்குத் தேவையான காரியங்களை பெருமளவிற்கு கூட்டுறவு முறையில் செய்ய வேண்டுமென்றும், கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நாட்டிலுள்ள இன்றைய சமுதாய அமைப்பை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டுமென்றும் நினைக்கிறோம். இன்று நம் நாட்டில் விவசாயம்தான் முக்கியமான தொழில். இந்த ராஜ்யத்தில் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள்தான் 70 சதவிகிதத்தினர். எனவே இந்த நாட்டில் உண்மையான சோஷலிஸம் ஏற்பட வேண்டுமானால், பெரும்பான்மையான மக்கள் ஈடுபட்டிருக்கும் இந்தத் தொழில் கூட்டுறவு முறையில் நடக்கவேண்டும்; இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எல்லோரும் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தால் தான் அந்த லட்சியம் நிறைவேறும். ஆகவே தான் இந்த நாட்டின் நிர்வாகப் பொறுப்பை வகிக்கும் கட்சியானது இந்நாட்டில் விவசாயத்தில் கூட்டுறவு முறையை அனுஷ்டிக்க வேண்டுமென்ற கொள்கையை வகுத்திருக்கிறது. நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டி அதற்கு மேற்பட்டு இருக்கும் நிலங்களில் நாம் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய வேண்டும்; அதுமட்டுமன்றி, உச்ச வரம்பிற்குக் குறைவான நிலங்களை உடையவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய வேண்டும். இதையெல்லாம் நமது நோக்கமாக வகுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த விஷயத்தில் ஒரு குழப்பம் பெரிய அளவிற்கு இருக்கிறது. இதில் பலவிதமான வார்த்தைகள் போடப்பட்டு பலவிதமான அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன. ஆகவே இதைப்பற்றி சில நிமிஷங்கள் விரிவாகப் பேச வேண்டுமென்று நினைக்கிறேன்.

விவசாயத்தை கூட்டுறவு முறையில் நடத்த வேண்டுமென்று சொல்லும்போது, ஸெர்விஸ் ஸொஸைடி, ஜாயிண்ட் பார்மிங் ஸொஸைடி, டெனன்ட்ஸ் பார்மிங் ஸொஸைடி, கலெக்டிவ் பார்மிங் என்ற பெயர்கள் அடிபடுகின்றன. ஸெர்விஸ் ஸொஸைடி எனப்படுவது, இப்போது நமது ராஜ்யத்தில் வந்திருக்கும் மல்டி பர்பஸ் ஸொஸைடிதான். ஆகவே நாம் ஏதோ புதிதாக ஸெர்விஸ் ஸொஸைடிகள் என்ற ஸொஸைடிகளை அமைத்து நிலைமையை ஒரேயடியாக மாற்றிவிடப்போகிறோம் என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை. அந்த பயத்திற்கு கொஞ்சம்கூட இடமில்லை. விவசாயிகளுக்கு விதைகள் கொடுப்பது, உரம் கொடுப்பது, விவசாயக் கருவிகளை வாங்கி அவைகளை கடனுக்கோ உபயோகத்திற்கோ கொடுப்பது ஆகிய காரியங்கள் எல்லாவற்றையும் செய்யக்கூடிய ஒரு பல்நோக்கு ஸொஸைடிதான் ஸெர்விஸ் ஸொஸைடி எனப்படுவது.

இந்த சொஸைட்டியில் அங்கத்தினராக சேருகிறவர்கள் சொந்தமாக தங்கள் நிலத்தை வைத்துக் கொள்வார்கள். தாங்களே சொந்தமாக பயிர் செய்வார்கள். இதில், எந்தவிதமான கூட்டுறவு முறைப் பிணைப்பும் இல்லை. அவர்கள் செய்கிற விவசாயத்தை கூட்டுறவு இயக்கத்தால் கிடைக்கிற சலுகையை வைத்துக்கொண்டு சிறந்த முறையில் நல்ல முன்னேற்றகரமான முறையில் செய்யமுடியும், இந்த சங்கத்தின் அடிப்படையில் துண்டு துண்டாக பல பாகங்களில் நிலம் இருக்குமானால்,

தான் இந்தக் காலதாமதம் ஆகிறதே தவிர, இந்த சட்டத்தை திருத்தவே வேண்டாம் என்ற காரணத்திற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நில அடமான பாங்குகளைப்பற்றி சில குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டன. நில அடமான பாங்குகள் கொடுக்கிற கடன் அதிகமான வட்டிக்குத்தான் கொடுக்கவேண்டியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய சர்க்கார் இதற்கு ஓரளவு மான்யம் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதை அவர்கள் கொடுக்க இயலாமல் போய்விட்டதனால், இன்றைக்கு குறைவான வட்டிக்கு கடன் கொடுக்க முடியாமல் இருக்கிறது என்பதை ஸ்ரீ சுப்பிரமணிய கவுண்டர் அவர்களும், மற்றும் பலரும் எடுத்துச் சொன்னார்கள். இது உண்மை தான். நம் சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து இதற்காக தனி மான்யம் பெற்று கடனுக்கு ஸப்ஸிடி கொடுக்கலாம் என்று நினைத்தோம். ஆனால் அந்தத் திட்டம் மாறிப்போய் விட்டதினால் அதைக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. இதற்காக போதுமான பணத்தை நாம் ஒதுக்கிக் கொடுப்போமானால், மற்ற துறையிலே நாம் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பது குறைந்து விடும் என்ற காரணத்திற்காக, எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று ஆலோசனை செய்து இதற்குப் பணம் ஒதுக்காமல் விட்டு விட்டோம். அதே சமயத்தில் உத்தியோகஸ்தர்களுடைய செலவுகளை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த யோசனை சர்க்கார் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதை ஓரளவு செய்வதற்கு முயற்சி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நில அடமான பாங்குகள் கடன் கொடுக்கிற காலத்தில், ஜாயிண்டு பட்டாதார்களாக இருந்தால், கடன் கொடுப்பது கஷ்டமாக இருக்கிறது. கடனைக் கொடுத்து திரும்பி வராவிட்டால், மறுபடியும் சட்டசபையில் எத்தனை கடன் கொடுத்தார்கள், எவ்வளவு வசூலிக்கப்பட்டது, எவ்வளவு வசூலிக்கப்படவில்லை என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும். ஆகவே, இதில் நிர்வாகம் செய்கின்றவர்கள் மிகப் பொறுப்பாக இருக்க வேண்டும். கடன் கொடுக்கவேண்டியது அவசியம்தான். கடன் கொடுக்காமல் பணத்தை பேய் மாதிரி காத்துக்கொண்டிருந்தால் அந்த சொஸைடியே ஏற்படுத்தாமல் இருந்து விடலாம். அதே சமயத்தில் பணத்தை ஏராளமாகக் கடன் கொடுத்துவிட்டு, வசூல் செய்ய முடியாமல் அது திரும்பி வராத நிலைமை ஏற்பட்டு சொஸைடியை மூடிவிடக்கூடிய நிலைமையும் வந்து விடக்கூடாது. அது தவிர்க்கப்படவேண்டும். பொறுப்பாக இருந்து பார்த்துச் செய்யவேண்டிய விஷயம் இது. அப்படிப் பார்த்து செய்யும் பொழுது யாருக்கு சட்டபூர்வமாக கடன் வாங்கக்கூடிய ஒரு ஜாமீன் இருக்கிறதோ, அதைப் பார்த்துத்தான் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதனால்தான் ஜாயிண்டு பட்டாதார்களாக இருக்கும்பொழுது இரண்டு பேர்களும் சேர்ந்து அப்ளிகேஷன் போட்டால் கடன் கொடுப்பது சுலபமாக இருக்கும். ஜாயிண்டு பட்டாதார்களாக இருக்கக் கூடியவர்கள் தனித் தனியாக அப்ளை செய்தால், அதில் சிக்கல்தான் ஏற்படுகிறது. இப்பொழுது இருக்கிற சட்டத்தின்படி அதைத் தவிர்க்கமுடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த நில அடமான பாங்குகள் சில இடங்களில் கடன் கொடுக்க முடியாத நிலைமையும் இருந்து வருகிறது. பழைய ஜமீன் பிரதேசங்களில் இன்னும் சர்வே ஆகாத இடங்களில் எந்த சொத்தின் மீது, எந்த ஜாமீனை வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கடன் கொடுப்பது என்ற நிலைமை ஏற்படுகிறது. அம்மாதிரி கஷ்டங்கள் இன்னும் தீரவில்லை. இப்பொழுது வெகு சீக்கிரம் சர்வே முடிந்து கொண்டிருக்கிறது. சர்வே முடிந்து விட்டால் இந்தப் பிரச்னைகூட வெகு சீக்கிரம் தீர்ந்து விடும். உதாரணமாக ராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு நில அடமான பாங்கு ஏற்படுத்தவேண்டுமென்று நினைத்தால்கூட, அங்கு இருப்பவர்களுக்கு இன்னும் சர்வேயெல்லாம் முடிவதற்கு முன்னால் கடன் கொடுக்க முடியாது. ஏனென்றால் பழைய ஜமீன் பிரதேசங்களில் சர்வே முடிந்து ரீசெட்டில்மெண்டு செய்யும் வரையில் யாருக்கும் கடன் கொடுக்கமுடியாது.



யாருக்கு நிலம் சொந்தம் என்பதே தெரியவில்லை. ஆகவே, இந்த விதமான குறுக்கீடுகளெல்லாம் இன்றைக்கு நடைமுறையில் இருக்கின்றன. அவைகள் சீக்கிரம் அகற்றப்படும் என்று நான் நினைக்கிறேன்.

நில அடமான பாங்குக்கு கட்டிடம் வேண்டுமென்று ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். அதற்காக 5 லட்ச ரூபாய் போட்டு பெரிய கட்டிடம் வாங்கினால், அது அவ்வளவு நல்லது அல்ல. பணத்தை கடன் கொடுப்பதற்கு உபயோகப்படுத்தவேண்டும். கட்டிடம் கட்டுவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தக்கூடாது என்ற காரணத்தினால் அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. சாதாரணமாக ஒரு நல்ல கட்டிடம் கட்டுவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்தால், சர்க்கார் எப்பொழுதும் துணை புரிவதற்கு தயாராக இருக்கிறது. அந்தத் துறையிலே அவர்கள் ஈடுபடுவார்கள் என்று நினைக்கிறேன். கடன் கொடுக்கும் விஷயத்தைப்பற்றி பேசும்போது, சொத்து இருப்பவர்களுக்குத்தான் கடன் கொடுக்க முடிகிறது. ஹரிஜனங்கள், லாண்டுலெஸ் லேபரர்ஸ், அதாவது நிலம் இல்லாத விவசாயிகள் ஆகியோர்களுக்கு கடன் கொடுக்க முடியவில்லை என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல இதில் கொஞ்சம் கஷ்டம்தான் இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் ஒரு திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது சொஸைடிகள் நிலம் இல்லாதவர்களுக்கு கடன் கொடுத்தால், அதில் ஏற்படுகின்ற நஷ்டத்தில் 10 சத விகிதம் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறது என்று சர்க்கார் காரண்டி கொடுப்பதுபற்றி இப்பொழுது யோசனை செய்யப்பட்டு வருகிறது. ஆகவே அம்மாதிரி சர்க்கார் காரண்டி கொடுத்தால், அந்த அளவுக்கு கூட்டுறவு சங்கங்கள் நிலம் இல்லாதவர்களுக்கு உதவி செய்வதற்கு சாதகமாக இருக்கும்.

* SRI M. JAGANNATHAN : On a point of information, Sir. The Second Five-Year Plan has enunciated a scheme to advance loans on the basis of the production programme and anticipated crops. If that is implemented, this difficulty may be obviated. I want to know the attitude of the Government in respect of this scheme.

* THE HON. SRI R. VENKATARAMAN : ப்ரொடக்ஷன் என்ன செய்கிறார்களோ அதையொட்டி கடன் கொடுத்தால், அதிலே ஏற்படுகின்ற நஷ்டத்தை யார் கொடுப்பது என்று பாங்குகள் கேட்கிறார்கள். கொடுங்கள் என்று நாங்களும் சொல்லுகிறோம். அவர்களுக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தெரியும். ஆனால் ஜாமீன் இல்லாதவர்களுக்கு சொத்து இல்லாதவர்களுக்கு, ப்ரொடக்ஷனை நம்பி மாத்திரம் கடன் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறபொழுது, அப்படிக் கொடுப்பதிலே ஏற்படுகின்ற நஷ்டத்தை யார் தாங்குவது. தங்களால் முழுப் பொறுப்பையும் தாங்க முடியாது என்று பாங்குகள் எடுத்துச் சொல்லுகிறார்கள். அம்மாதிரி ஏற்படக்கூடிய நஷ்டத்தில் 10 சத விகிதம் சர்க்கார் ஈடு செய்தால் பாங்குகள் கொஞ்சம் லிபரலாக சொத்து இல்லாதவர்களுக்கு கடன் கொடுப்பதற்கு முன் வரலாம். அம்மாதிரி ஒரு திட்டத்தை இப்பொழுது யோசித்துக்கொண்டிருக்கிறோம். வருகிற ஆண்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். அவ்வாறு நிறைவேற்றப்பட்டால் இதிலே இருக்கிற சங்கடங்கள் ஓரளவுக்குக் குறையும். எல்லாச் சங்கடங்களும் முழுவதும் தீர்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஓரளவுக்குக் குறையும் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக "எக்ஸ்-ஸெர்வீஸ் மென்னைப்பற்றி" பல குறைகள் சொன்னார்கள். இன்றைக்கு சென்னை ராஜ்யத்தில் இருக்கிற மாஜி ராணுவத்தினர்களுக்கு தனியாக எக்ஸ்-ஸெர்விஸ் மென் பண்டு ஒன்று இருக்கிறது. அந்த பண்டிலிருந்து அவர்களுக்கு உதவியெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏழு டிரான்ஸ்போர்டு சங்கங்கள் அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் 2 லாபத்தில் வேலை செய்யவில்லை. பாக்கி 5 சங்கங்கள் நன்றாக லாபத்தில் வேலை செய்கின்றன. அவர்களுக்காக " லாண்டு காலனிஸேஷன் சொஸைடிகளும் " ஏற்படுத்தியிருக்கிறோம்.

லாண்டு காலனேஸேஷன் சொஸைடி மூலம் அவர்களுக்கு இதுவரையில் 6,000 ஏகர் நிலம் "அஸைன்" செய்யப்பட்டிருக்கிறது. "போஸ்ட் வார்" கமிட்டியின் மெம்பர் என்ற முறையிலே நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதில் இருந்த நிதி பூராவும் செலவாகிவிட்டது. மத்திய சர்க்காருக்கு "ப்ளாக் டே" கலெக்ஷனிலிருந்து வருகிற பணத்தில் நாம் பெரும் பகுதியை 'எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். அதை அவர்கள் ஒத்துக்கொண்டுவிட்டால், "ப்ளாக் டே" யில் கொஞ்சம் பணம் அதிகமாக வசூலித்து அவர்களுக்குச் செய்யவேண்டிய உதவியைச் செய்ய முன்வரமுடியும். மாஜி ராணுவத்தினர்களுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை கஷ்டமாகத்தான் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால், அவர்களுக்காக இருந்த தொகை பூராவும் செலவழிந்துவிட்டது. அவர்களுக்கு கல்வி வசதி செய்து கொடுப்பதற்கும், வைத்திய வசதி செய்வதற்கும், இன்னும் அவர்கள் ஆஸ்பத்திரியில் தங்குவதற்கும் நாம் எல்லா பணத்தையும் இதுவரையில் செலவழித்துக் கொண்டுவந்து விட்டோம். இனி பணம் இல்லை. நான் இன்னொரு விஷயத்தைக்கூட தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1946-ம் வருஷத்தில் யுத்தம் முடிந்துவிட்டது. பதினைந்து, 20 வருஷங்களுக்கும் மேல் அவர்களுக்கு சலுகைகளை நீடித்துக்கொண்டே போவது என்பது கஷ்டம் தான். அதற்கு வேண்டிய பணம் கிடைப்பதும் கஷ்டம். அவர்களுக்கு "ரிஹாபிலிடேஷன்" வேறு முறையிலும் செய்துதான் ஆகவேண்டும். இதையே அவர்கள் நம்பி இருப்பார்களேயானால், அது அவ்வளவு பொறுத்தமாக இருக்காது என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வீடு கட்டும் திட்டத்தைப்பற்றி சில குறைகள் சொல்லப்பட்டன. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த அளவில், வீடு கட்டும் திட்டத்திற்காக மத்திய சர்க்கார் நமக்குக் கொடுத்த உதவிக்கு மேலாகவே ராஜ்ய சர்க்கார் செலவழித்திருக்கிறது என்பதை புள்ளி விவரங்களுடன் காட்டுகிறேன். ஸ்டேட் அர்பன் ஹௌஸிங் ஸ்கீம்-க்காக நம்முடைய ராஜ்ய சர்க்கார் 17 லட்சம் ரூபாய் சென்ற வருஷத்தில் பட்ஜெட்டில் ஒதுக்கினோம். அந்தப் பணம் போதாமல் மேற்கொண்டு 3 லட்சம் ரூபாய் ஒதுக்கி, மொத்தம் 20 லட்சம் ரூபாயாகச் செய்தோம். அடுத்த வருஷத்திற்கு இந்தத் திட்டத்திற்காக 30 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதுபோல நம்முடைய ராஜ்யத்தில் தனியாக கிராமாந்திரங்களில் வீடுகள் கட்டுவதற்காக சென்ற வருஷத்தில் 1958–59–ல் 3 லட்ச ரூபாய் ஒதுக்கினோம். அடுத்த வருஷத்திற்கு $3\frac{1}{2}$ லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

அதே போன்று குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டுவதற்காக நாம் 19 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இப்போது அதை 20 லட்சமாக மாற்றியிருக்கிறோம். இந்தத் திட்டங்களின் மூலமாக ஓரளவு தான் பிரச்னையை தீர்க்க முடியும். எல்லோருடைய வீட்டுப் பிரச்னையும் தீர்ந்துவிடும் எனறு சொல்வதற்கில்லை. இதைத் தவிர லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷனிலிருந்து மத்திய தர வகுப்பினர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக இந்த வருஷம் 27 லட்சம் ரூபாய் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது 1958–59-வது வருடத்திலேயே ஏற்பாடும் செய்துவிட்டோம். இதன் மூலம் மத்திய தர வகுப்பினர்களுக்கு ரூபாய் 15 ஆயிரம் வரை கடன் கொடுக்க முடியும். அதற்குத் தகுந்த முறையில் இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் கார்ப்பொரேஷனிலிருந்து கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களுக்கு வீடு கட்டுவதற்கு, அதாவது வாடகைக்கு கொடுப்பதற்கு தகுந்த முறையில் அவர்களிடம் கடன் கோரியிருக்கிறோம். இது தவிர ராஜ்ய சர்க்காரே கோட்டம்பாக்கத்தில் சில இடங்களில் நிலங்களை வாங்கி நமது ராஜ்ய சிப்பந்திகளுக்கு ஹையர் பர்ச்சஸ் முறையில் வீடு கட்டிக் கொடுப்பதற்காக ஒரு திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு வீடு கட்டும் திட்டத்திற்காக ஓரளவு பணம் ஒதுக்கியிருக்கிறோம். அதோடு ஒதுக்கியிருக்கும் பணத்தைக்கொண்டு வீடு கட்டுவதற்கு போதிய அளவு இரும்பு சாமான்கள் கிடைக்காமல் கஷ்டப்படுகிறோம். 1958–59-ம் வருடத்தில் இரும்பு, எஃகு இவைகளை வாங்குவதில் மிக மோசமான நிலைமை ஏற்பட்டது. அந்த நிலைமை இந்த வருடம் அதாவது 1959–60-ல் வராது என்று எதிர்பார்க்கிறோம். அதன் மூலம் வீடுகள் அதிகமாக கட்டுவதற்கும் ஊக்கம் ஏற்படும் என்று நினைக்கிறேன்.



மார்க்கட்டிங் ஸொஸைட்டிகளில் சில தவறுகள் ஏற்பட்டதாக எனக்குத் தெரியும். அதாவது சில பிரைமரி ஸொஸைட்டிகளில் மிளகாய் வற்றல், வெங்காயம் போன்றவைகளை வாங்காமல் பெரிய வியாபாரிகளிடமிருந்து ஏற்றுமதி செய்ததாக புகார்கள் வந்திருக்கின்றன. சர்க்கார் அதை விசாரணைக்கு அனுப்பியிருக்கிறது. விசாரணையும் நடந்துகொண்டே இருக்கிறது. எந்த இடத்தில் தவறுகள் நடக்கின்றன என்று சர்க்காருக்கு தகவல் கிடைக்கிறதோ, அவைகளையெல்லாம் விசாரணைக்குப் போட்டிருக்கிறோம். சில இடங்களில் பிராஸிக்யூஷன் செய்யப்பட்டிருக்கின்றது. சில இடங்களில் பிராஸிக்யூஷன் செய்யப்படாமல் "டிபார்ட்மெண்டல்" ஆக்ஷன் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரியத்தில் ஆங்காங்கு இருக்கக்கூடிய பப்ளிக் பிராஸிக்யூட்டர் எவ்விதம் அபிப்பிராயப்படுகிறாரோ அதே போன்று காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதல்லாமல் தவறுகள் நடந்திருக்கின்றன என்று அறிந்த உடன் சர்க்கார் ஏன் அவர்களை தூக்கில் போடவில்லை. என்று கேட்டால், சட்டப்படி நடந்து கொண்டிருக்கிற, (ரூல் ஆப் லா) அரசாங்கத்தில் இம்மாதிரியான நடவடிக்கைகள் தான் எடுக்க முடியும். சட்டப்படி குற்றம் நிரூபிக்கப்பட்டால்தான் தண்டனை கொடுக்க முடியும். அவ்விதம் நிரூபிக்கப்படாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. சில தவறுகள் நமக்கு உண்மையாகவே நடந்தவை என்று தெரிந்திருந்தாலும் கூட அதற்குப் போதுமான சாட்சியங்கள் இருந்தால்தான் சட்டபூர்வமாக கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியும். சில கேஸ்களில் போதுமான அளவு சாட்சியங்கள் இல்லாததால் கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விடுகிறது. சர்க்கார் வேண்டுமென்றே நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவ்விதம் ஒன்றும் கிடையாது. உண்மையில் எந்தவிதமான தவறும் கூட்டுறவு இயக்கத்தில் நடக்கக் கூடாது. அது மிகவும் சிறந்த முறையில் நடக்க வேண்டும் என்ற முறையில் தான் சர்க்கார் கண்காணிப்பாக இருந்து வருகிறது. இதில் எந்தவிதமான புகார்கள் வந்தாலும் கூட அதையெல்லாம் விசாரணை செய்யுமாறு அனுப்பபடுகிறது. மொட்டை பெட்டிஷனாக இருந்தாலும் கூட அவைகளையும் கூட விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. விசாரணையிலிருந்து அறியக்கூடிய விவரங்களைக் கொண்டு அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**Sri M. P. SUBRAMANIAM :** ரிஸல்ட் தான் ஒன்றும் இல்லை).

இதில் முடிவு எடுப்பதற்கு குற்றம் அல்லது தவறு நிரூபிக்கப்பட வேண்டும். அந்தந்த இடங்களில் இருக்கும் பப்ளிக் பிராஸிக்யூட்டர் இதில் சாட்சியங்கள் ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டால் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை ஒன்றும் எடுக்க முடியாது. அதையொட்டி சில இடங்களில் பிராஸிக்யூஷன் போட முடியாமல் போய்விடுகிறது. போதிய சாட்சியங்கள் இருக்கின்ற இடத்தில் எல்லாம் பிராஸிக்யூஷன் போடப்படுகிறது. உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து ஒரு பெரிய புகார் வந்தது. அதைப் பற்றி ஒரு முறை விசாரணை செய்தோம். பப்ளிக் பிராஸிக்யூட்டர் அதைப் பற்றி கேஸ் கொடுப்பதற்கு சாட்சியங்கள் இல்லை என்று சொல்லிவிட்டார். பின்னும் நிர்வாகத்திலிருக்கின்றவர்கள் மேலும் ஆத்திரமாக இருந்ததின் காரணமாக கேஸ் போடப்பட்டது. கோர்ட்டில் அவர்களை விட்டுவிட்டார்கள். இவ்விதமாக நிர்வாகத்தில் ஏற்படுகின்ற தவறுகளை சர்க்காருக்கு தெரிவிக்கப்படும் பொழுது சர்க்கார் அதில் கண்டிப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தெந்த இடங்களில் தவறுகள் நடக்கின்றன என்று சர்க்கார் அறிந்த உடன் எந்த்விதமான பாரபட்சமும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ப்ரொக்யூர்மெண்ட் சம்பந்தமாக சில கருத்துகள் சொல்லப்பட்டன. இப்போது போதுமான பணவசதி இல்லை என்று கனம் சீனிவாச அய்யர் அவர்கள் சொன்னார்கள். இந்த நிலைமை மாறிவிட்டது. இப்போது இதற்காக 50 லட்சம் ரூபாய் அட்வான்ஸாகக் கொடுத்திருக்கிறோம். உடனடியாக இதன் மூலம் நெல், அரிசி வாங்குவதற்கு முடியும். இதைத் தவிர ஸ்டேட் பாங்கிலிருந்தும் 10 கோடி ரூபாய் ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள். அந்த உதவியைப் பெற்றும் வேண்டிய அளவுக்கு நெல், அரிசி இவைகளை வாங்கிக் கொள்ள முடியும். மேலும் தான்யங்கள் கொடுத்தால் பணம் கிடைக்காதோ என்று எண்ணுவதற்கு இடமில்லை என்பதை நான் இதன் மூலம் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

[Sri M. P. Subramaniam] [17th March 1959

இறுதியாக இந்த மான்யக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்கள் அத்தனை பேருக்கும் நன்றி செலுத்திக் கொள்கிறேன். இந்த இயக்கம் மேலும் வெற்றி பெறுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். எந்தக் கட்சி பாகுபாடும் இல்லாமல் தான் இந்த இயக்கம் நடத்தப்படுகிறது. இதில் இருக்கின்ற முறையை எடுத்துப்பார்த்தால், கம்பெனிகளில் சில பேர்கள் அதிகமான பங்குகள் வைத்திருக்கிறார்கள். அதன் மூலமாக அவர்களுக்கு அதிகமான வோட்டுரிமை உண்டு. இதில் எவ்வளவு பங்கு எடுத்தாலும் ஒரே ஒரு வோட்டுக்குத்தான் உரிமை உண்டு. அதுவும் அந்த அங்கத்தினரே நேரில் வந்தால் தான் வோட்டுரிமையுண்டு. ஆகவே தவறுகள் எங்கேயாவது ஏற்படுகின்றன என்று சொன்னால் நிச்சயமாக ஜெனரல் பாடி கூட்டத்தை போட்டு அதில் தவறுகளை கண்டிக்கவேண்டும். அவ்விதம் அதில் இருக்கின்ற அங்கத்தினர்கள் எல்லாம் விறுவிறுப்பாக இருந்தால்தான் இந்த இயக்கம் வெற்றி பெற முடியும். ஆகவே அங்கத்தினர்கள் அனைவரும் இந்த இயக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். அங்கத்தினர்களை நம்பித்தான் இந்த இயக்கம் வெற்றி பெற முடியும். இதில் தவறுகள் ஏற்படுகின்ற நேரத்தில் தங்களுக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் சரி, வேண்டாதவர்களாக இருந்தாலும் சரி, தவறுகள் செய்வதாக இருந்தால் யாரையும் விடமுடியாது என்கிற நிலைமை இருக்க வேண்டும். சில தவறுகள் சர்க்காருக்குத் தெரியாமற் போகலாம். அங்கத்தினர்கள்தான் இதில் முக்கிய பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு அங்கத்தினர்களைக் கூட்டுறவு இயக்கத்தில் அதிகமாக சேர்ப்பதற்கு நாம் வேலை செய்ய வேண்டும். "அங்கத்தினர்கள் வாரம்" என்று வருடாவருடம் கொண்டாடுகிறோம். அங்கத்தினர்களைச் சேர்க்கவில்லை என்றால் அதற்கு அப்பீல் போடலாம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் ஒவ்வொருவரும் அங்கத்தினராக சேருவதற்கு உரிமையிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இன்னும் அதிகப்படியான அளவில் நல்ல முறையில் செயல்படுவதற்கு ஏதாவது சட்டங்கள் தேவை என்றால் அதையும் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆகவே இதில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் இந்த இயக்கத்தில் தவறுகள் ஏற்படாத வண்ணம் சற்று விறுவிறுப்போடு இருப்பார்களானால் இந்த இயக்கம் வெற்றியடையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மான்யத்தை எல்லோரும் ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இதில் (கட் மோஷன்) வெட்டுப்பிரேரணை ஒன்றும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் வெட்டுப்பிரேரணையை வாபஸ் பெறும்படி கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 1,86,49,100 under Demand XXI—Co-operation—be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,86,49,100 under Demand XXI—Co-operation.'

The Demand was put and carried and the Grant was made.

1-20 p.m. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.



## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—Statutory Orders, Rules and Notifications.

108. *Notification issued with G.O. No. 370, Local Administration, dated 20th February 1959 extending the term of office of the members of the Punjaithalaiyur Panchayat, Coimbatore District, under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950.* (Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950.). 1-20 p.m.

109. *Notification issued with G.O. No. 369, Local Administration, dated 20th February 1959 extending the term of office of the members of the Kayalpattinam Panchayat, Tirunelveli district under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950.* (Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950.)

## APPENDIX I.

[Vide answer to starred question No. 851 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 17th March 1959, page 466 supra.]

### I

*Statement showing the number of Bee Colonies existing in the State districtwar.*

| Serial number and name of district. | Number of bee colonies. |
|---|---|
| 1 Kanyakumari .. .. .. | 8,000 |
| 2 Tirunelveli .. .. .. | 3,500 |
| 3 Ramanathapuram .. .. | 3,500 |
| 4 Madurai .. .. .. | 9,000 |
| 5 Tiruchirappalli .. .. .. | 1,000 |
| 6 Tanjore .. .. .. | 3,000 |
| 7 South Arcot .. .. .. | 300 |
| 8 North Arcot .. .. .. | 600 |
| 9 Chingleput .. .. .. | 250 |
| 10 Madras City and suburbs .. | 250 |
| 11 Salem .. .. .. .. | 3,000 |
| 12 Coimbatore .. .. .. | 3,000 |
| 13 Nilgiris .. .. .. .. | 1,500 |
| Total .. | 36,900 |

### II

*Statement showing the places where bee-hives are manufactured in the State.*

Serial number and name of the unit.

1 Wood-Working Unit, Guindy.

2 Reid Timber Works, Tiruvottiyur.

3 Karungulam Co-operative Cottage Industries Society, Karungulam, Tiruchirappalli district.

4 Marthandam Carpenters Society, Marthandam, Kanyakumari district.

5 Chinnamanur Viswakarma Workers Co-operative Society, Chinnamanur.



Serial number and name of the unit.

6 Katpadi Timber Works, Katpadi.

7 St. Joseph's Industrial School at Coimbatore and Ootacamund.

8 Other carpentry units attached to the different blocks.

The price of standard bee-hives of 8 frames with 2 supers, ranges from Rs. 16 to Rs 21 per hive according to the quality of timber used—Teakwood, Red sedar wood, Venteak and Pillai Marudu.

### III

*Programme for the development of Bee-keeping Industry in the State.*

1 The distribution of bee-hives in block areas under subsidised rates.

2 The establishment of three bee nurseries at (*a*) Pattaraikaudu, (*b*) Hogenaikal and (*c*) Masinagudi during the current year and three more nurseries in the subsequent years.

3 The establishment of one bee nursery for the Madras City to be located in the Raj Bhavan, Guindy.

4 Formation of Bee-Keepers' Co-operative Societies in block areas and giving them financial assistance by way of technical assistance and loan facilities.

5 Investigations on the possibilities of establishing forest apiaries for large scale production.

6 Distribution of bee-hives and equipments to hill tribes and other Backward Classes free of cost to encourage Bee-keeping among them.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 852 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held no 17th March 1959, page 469 supra.]

| Year. | Number of appointments made each year to posts of District Educational Officers. | Of those in column (2) number of District Educational Officers recruited direct. | Of those in column (2) number of District Educational Officers recruited from among B.T. Assistants in the Madras Educational Subordinate Service. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1952 | 1 | .. | 1 |
| 1953 | 16 | 13 | 3 |
| 1954 | 5 | 3 | 2 |
| 1955 | 3 | .. | 3 |
| 1956 | 2 | .. | 2 |
| 1957 | 11 | .. | 11 |
| 1958 | 1 | .. | 1 |

APPENDIX III.

[Vide answer to starred question No. 848 asked by Sri M. K. Somasundaram (on behalf of Sri P. G. Manickam) at the meeting of the Legislative Assembly held on 17th March 1959, page 480 supra.]

*List of Industries which have been allotted space in the Industrial estates and colonies.*

*Industrial estate, Guindy.*—Industries manufacturing gang operated voltage air break switches, welding battery boxes and angles, electrical switch gear for voltages up to 220 k.v. electric motors, household pumps, alkathene films and pipes, pen spares, hand tools accessories, bolts and nuts and attaches, water proof and special papers, small and medium industrial forgings, welded wire mesh, gear wheel, brass casting, forging and water meter components, machine screws, engineering metal parts, corrugated boards boxes, cinema projector equipments and allied machinery, radio amplifiers and components, wire nails, industrial leathers, belting washers, builders hardware, spectacle frames, tin containers and aluminium utensils, aluminium and copper wares and water tight fittings (lamps), weighing scales, empty tins, a precision machine shop, die casting, tools and hot dip galvanizing conduit pipes, pins and gem clips, mathematical instruments, automobile spare parts, metal spraying main switch for lighting and motors and remote control, spares for tractors and agricultural implements, non-ferrous casting, cable manufacture, street light fittings, railway tract materials, auto-components, turned parts required for general engineering purposes, thin walled engine bearings, machine screws coil springs, electric switches, sockets and other accessories, clocks, wirenail, tinsmen and rivet making.

*Industrial estate, Salakkarai near Virudhunagar.*—Industries manufacturing tin containers, various sizes of canes, electro-plating, paper pints, gem clips and snap buttons, panel pins, nibs and clips for fountain pens and steel pens.

*Industrial Colony, Erode.*—Industrial manufacturing plastic sheet, agricultural implements for scientific method of cultivation, builders, hardware, electroplating articles for the railways involving casting, moulding and lathe work, conduit pipes and electric motors.

*Industrial Colony, Madurai.*—Industries manufacturing wire nails and panel pins, automobile leaf springs, starters, for electrical motors, demestic deep well pumpsets, flat belts, bolts and nuts, oil seals, hinges and tower bolts, commercial metric weights, electrical accessories such as switch, holder, socket, plug pins, steel furniture, steel almirah and racks.

*Industrial Colony, Ariyamangalam (near Tiruchirappalli).*—Industries manufacturing bullock shoe nails, high-tension switches and fuse, radios and allied products.

The Industrial Colonies at Pettai (near Tirunelveli), Kunnathur (near Marthandam) and Tanjore have not yet been started.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 18th March 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Wheat products*

* 751 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to increase the supply of 'atta' and wheat products to this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Atta produced in the State is surplus to internal requirements. As regards maida and rawa, supply as well as distribution is being regulated by permit system, from the middle of December 1958. The Government of India have been moved to allow the import of a quota of rawa from the Northern Zone.

* 752 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to supply good quality rawa to this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: As this State is deficit in the production of rawa, the Government of India have already been addressed to allow an import of 2,000 tons of rawa per month into this State. Rawa produced in the local mills is now distributed to wholesalers and retailers and actual users (i.e., bakeries, etc.) on permits issued by the Collectors.

* 753 Q.—SRI N. K. PALANISAMI: }
SRI A. A. RASHEED: } Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have represented to the Centre to remove the restrictions imposed on the import of maida and rawa; and

(b) the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Maida produced in the State is sufficient to meet the local needs. The Government of India have been addressed to allow an import of 2,000 tons of rawa per month into this State and their reply is awaited.

SRI A. A. RASHEED: Sir, may I know whether the shortage was due to increased consumption or decreased supply?

[18th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There has always been shortage with reference to rawa.

SRI A. A. RASHEED : Why there was sudden fall in supply of maida and rawa to the consumers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is a fall in the production of wheat in this country, Sir.

SRI N. K. PALANISAMI : ஸார், இப்போது இங்கு இருக்கக்கூடிய மில்கள் அதிகப்படியான கோட்டா ஒதுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டும், ஏன் அதிகப்படியான கோட்டா ஒதுக்கப்படவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு தூரம் இருப்பதை வைத்துக்கொண்டு ஒதுக்க முடியுமோ, அவ்வளவு தூரம் ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்பட்டாலும் கூட சரியாக விநியோகிக்கப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. அதனால் தான் அரசாங்கம் ரெகுலேட் செய்கிறது.

SRI N. K. PALANISAMI : இப்போது மார்க்கெட்டில், 28½ ரூபாய் என்று நிர்ணயம் செய்த போதிலும், பிளாக் மார்க்கெட்டில் 56 ரூபாய்க்கு விற்கிறது. பர்மிட் கொடுப்பதன் மூலமாக இதை நீக்க முடியும் என்று சர்க்கார் நினைக்கிறதா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுதான் நான் சொன்னது. தவறு நடக்கிறது. அதை ரெகுலேட் செய்து சரியாக விநியோகிக்க கவனம் செலுத்தவேண்டுமென்று தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : கோதுமை சாப்பிடுவதால் மக்கள் உயரமாகவும், பருமனாகவும் வளருகிறார்கள். அதனால் மக்கள் கோதுமை சாப்பிடுவதற்கு நம் அரசாங்கம் என்ன பிரசார நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பருமனாக வளர்வது பற்றி அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. இப்போதே பலர் பருமனாக இருக்கிறார்கள். அதிகப்படியாக கோதுமை சாப்பிடுவதால் மட்டும் உயரமாக வளர முடியும் என்பது தங்களைப் போன்றவர்கள் சொல்ல வேண்டிய விஷயம். கோதுமையைச் சேர்த்துக் கொள்வது நலம் தான். இதிலே வேண்டிய அளவுக்கு அரசாங்கமும் கவனம் செலுத்தி வருகிறது.

SRI V. K. KRISHNAMURTHY : ஆட்டா மாவு சப்ளையானது கலெக்டர் சிபாரிசுபடி விநியோகிக்கப்படுகிறதா ? அல்லது மில் ஓனர்கள் விருப்பப்படி விநியோகிக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு சொன்னபடி இதையெல்லாம் சரியாக விநியோகிக்க ரெகுலேட் செய்ய வேண்டுமென்று தான் அரசாங்கம் கவனித்து வருகிறது.

SRI M. JAGANNATHAN : Are the Government aware of the fact that bakery owners find it difficult to obtain the necessary permits from the Collectors concerned?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Recently bakery owners made representations that they could not get their necessary requirements. Therefore it is that the Government have undertaken to regulate these through the Collectors.



18th March 1959]

SRI N. K. PALANISAMI : ஜனங்களுக்கு அதிகப்படியான சம்பா கோதுமை தேவை இருப்பதன் காரணமாக, குறிப்பிட்ட அளவுக்காவது இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோதுமையைப் பொறுத்த மட்டில் நியாய விலைக் கடைகளில் அது விநியோகிக்கப்பட்டுவருகிறது.

SRI S. LAZAR : ரீடெயில் டிஸ்ட்ரிபூட்டர்களுக்கு இப்போது கோட்டா வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நகரங்களில் கொடுக்கிறபோது ஒரு சிலருக்குக் கொடுப்பதற்கு பதிலாக அதிகப்படியான ரீடெயில் டீலர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு கிடைக்கிறதோ அதை வைத்துக்கொண்டு தான் விநியோகிக்க வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்குச் சாத்தியப்படுமோ அந்த அளவுக்குச் செய்யப்பட்டு வருகிறது.

*Forest survey*

* 759 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Central Board of Forestry has recommended to this Government to conduct a survey of all forests in this State for obtaining full data of forest resources; and

(*b*) if so, the steps taken by the Government in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Forest Utilization Officer collected details of timber and allied industries under the direction of the Chief Conservator of Forests.

SRI N. K. PALANISAMI : ஸார், கோயம்புத்தூரில் டிம்பர் அதிகம் கிடைப்பதால் அங்கே ஒரு பேப்பர் மில் ஏற்படுத்தலாம் என்று ஒரு ஜெர்மன் ஸ்பெஷலிஸ்ட் சிபார்சு செய்தார்களா ? அப்படியானால், இதை வைத்து அங்கே ஒரு பேப்பர் மில்லை ஏற்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீலகிரியில் வாட்டில் மரம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு பேப்பர் மில் நடத்தலாம். அது கவனிக்கப்பட்டு வருகிறது. மற்ற டிம்பர்களெல்லாம் பேப்பருக்குத் தகுந்த டிம்பர் அல்ல. நீலகிரியில் உள்ள வாட்டில்தான் அதற்கு நல்லதாக இருக்கும். ஆகையால் அந்த வாட்டில் மரத்தை வைத்து காகித உற்பத்தி சாலை ஏற்படுத்துவது பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM : ஸார், கோயம்புத்தூரிலே வெள்ளியங்கிரி மலைப் பகுதியில் மூங்கில் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏதேனும் பேப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூங்கில் எங்கெங்கே கிடைக்கிறதோ அதை வைத்து காகிதத் தொழிற்சாலை நடத்துவதுபற்றியும் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

*Women welfare centres in Tirunelveli District*

* 857 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லாவில் தற்சமயம் எங்கெங்கே பெண்கள் நல சென்டர்கள் உள்ளன ?

[18th March 1959

(ஆ) இந்த சென்டர்களில் நூல் நூற்பு சொல்லிக் கொடுக்கப்படுகிறதா ?

(இ) நூல் நூற்றுப் பழகிய பெண்களுக்கு அரை விலையில் அல்லது கடன் திட்டத்தில் சர்க்காக்கள் சப்ளை செய்யப்படுகிறதா ?

(ஈ) இல்லையென்ருல், இனிமேலாவது சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) There are three Women's Welfare Branches in the Tirunelveli district at Eral, Surandai and Chokkankudi Iruppu. In each branch, there is one slum centre and one centre for poor and middle class women. There are thus six centres in the district.

(b) Yes, Sir.

(c) This is being done in Chokkankudi Iruppu, which is in a Block area, where this concession exists.

(d) General instructions have been issued to all the Assistant Women's Welfare Officers to encourage spinning and to avail the concession in the matter of exchanging of hanks and for the supply of charkas by contacting the Block Development Officers and other District Officers.

MR. SPEAKER : அடுத்தபடியாக 771-ம் கேள்வி விட்டுப்போய் விட்டது. அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கலாம்.

*Cost of production of crops*

* 771 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon the Minister for Home be pleased to state—

(a) whether the Economics and Statistical Department, Madras, undertook sample survey of the cost of production of various crops in the State in 1951–52; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No sample survey of the cost of production of various crops in this State was undertaken in 1951–52.

(b) Does not arise.

SRI R. SRINIVASA IYER : If a sample survey had not been taken, have the Government got particulars of the cost of cultivation in the Research Stations and Agricultural Farms which they are running?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவுக்கு இந்த மாதிரி பரிசீலனை செய்ய வேண்டுமென்று 1955-ல் கவனம் செலுத்தப் பட்டது. ஆனுல் ஒன்றுக்கொன்று எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. ஒரு பண்ணைக்கும் இன்னொரு பண்ணைக்கும், ஒரு நிலத்திற்கும் இன்னொரு நிலத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. சரியான வகையில் சர்வே செய்ய முடியவில்லை என்று கை விடப்பட்டது. ரிசர்ச் ஸ்டேஷனில் செய்வது வேறு விஷயம். ரிசர்ச் ஸ்டேஷனில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஆராய்ச்சியின் விலைவாசியைச் சேர்த்து அதை ஒப்பிட முடியாது. எப்படியும் விஞ்ஞான ரீதியில் விவசாயச் செலவுபற்றி ஒரு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். மத்திய அரசாங்கத்தோடு கூட இதைப்பற்றி நான் பேசியிருக்கிறேன்.



18th March 1959]

SRI S. LAZAR : ஸார், உணவுப் பொருள்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க முற்படுவதன் காரணத்திஞல், உற்பத்தி விலையை ஜில்லா வாரியாக எடுக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுதான் நான் இப்போது பதில் சொன்னது. விஞ்ஞான முறையில் பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம் இது. மத்திய அரசாங்கத்தோடு இதைப்பற்றி யோசித்து என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

SRI T. S. RAMASWAMY PILLAI : நம் விதைப் பண்ணைகளிலும் சரி, அல்லது ஆராய்ச்சிப் பண்ணைகளிலும் சரி, ஒரு ஏக்கருக்கு நல்ல முறையில் நெல் சாகுபடி செய்ய என்ன ஆகிறது என்று உத்தேசமான கணக்காவது இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு இடத்தையும் ஒவ்வொரு பண்ணையையும், ஒவ்வொரு நிலத்தையும் பொறுத்திருக்கிறது. ஒவ்வொன்றில் லாபமும் வந்திருக்கிறது. விதைப் பண்ணையெல்லாம் ஆராய்ச்சி செய்யக்கூடிய இடம், அரசாங்கம் நடத்துவதால் சிப்பந்திகள் இருப்பதால் அந்தச் செலவெல்லாம் இருக்கிறது. இப்போது கூட கணக்கு இருக்கிறது. புதிதாகப் பரிசீலனை செய்யும் போது இதை ஆதாரமாக வைத்துக்கொள்ளலாம்.

SRI R. SRINIVASA IYER : Sir, apart from Research Stations and Seed Farms, with the particulars of wages, prices and other necessaries of cultivation expenses available with the Government, will Government consider the necessity of calculating the cost of cultivation per acre of important crops like paddy, sugarcane, etc?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, as I have already pointed out, the cost varies not only from district to district, from taluk to taluk, but from village to village. Therefore I cannot give an assurance to the hon. Member, that I can undertake a survey like that.

SRI N. K. PALANISAMI : விலைவாசி கணக்கிடும்போது சர்க்கார் போடக்கூடிய வரி, இன்னும் அவர்களுடைய கடன், போக்குவரத்து இவைகளெல்லாம் இருக்கின்றன. இவைகளைக் குறைத்தால்தான் அவர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் அடிப்படையில் அதைக் கழித்து விலை நிர்ணயம் செய்வது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவைகளை யெல்லாம் வைத்துக் கொண்டுதான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய அளவுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

*Cottage Industries*

* 858 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் குடிசைத் தொழில் மூலம் என்னென்ன பொருள் உற்பத்தியாகிறது ?

(ஆ) அவை ஒவ்வொன்றில் கடந்த ஆண்டு உற்பத்தியான ஜில்லா வாரி அளவும் பெருமானமும் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix I on pages 640-643 infra.

[18th March 1959

SRI A. VEDARATHNAM : இப்பொழுது இந்த மாநிலத்தில் நடந்து வருகிற குடிசைக் கைத்தொழில்கள் தவிர ஜப்பானில் இந்த மாதிரியான குடிசைக் கைத்தொழில்கள் ஏராளமாக நடந்து வருகின்றன. அங்குள்ளவர்கள் மிகவும் திறமையாக இந்தத் தொழிலைச் செய்து வருகிறார்கள். அத்தகைய தொழில்களை நம்முடைய மாநிலத்தில் அமுலுக்குக்கொண்டு வர அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம்முடைய மாநிலத்தில் அமுல்படுத்தப் பட்டிருக்கிற ஜப்பானியக் குடிசைக் கைத்தொழில்கள் சரியாக இன்னும் பல இடங்களில் விஸ்தரிக்கப்படவில்லை. அது ஒரு உற்பத்திச் சாதனமாக இருந்தாலும் அந்தக் குடிசைக் கைத்தொழில்களைப் பற்றி ஜப்பானுக்குப் போய்ப் பார்த்து வந்தவர்களிடம் இருந்து கேட்டுத் தெரிந்து இன்னும் பரவலாக அந்தத் தொழிலை விஸ்தரிக்க கவனம் செலுத்தப்படும்.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது இந்த மாநிலத்தில் நடைபெறுகின்ற குடிசைக் கைத்தொழில்கள் எல்லாம் லாபகரமான முறையில் நடந்து வருகிறதா ? இல்லையென்றால் அது லாபகரமாக நடைபெற என்னென்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில தொழில்கள் லாபகரமாக நடந்து வருகின்றன. ஆனால் லாபகரமாக நடத்தப் பல வசதிகள் வேண்டும். மற்றும் நிபுணர்களுடைய ஆலோசனையும் வேண்டும். அப்படி இருந்தால் இந்தத் தொழிலை இன்னும் விரிவு படுத்த முடியும். இதையெல்லாம் கைத்தொழில் இலாகா பரிசீலனை செய்து அந்தத் தொழிலுக்கான பயிற்சி அளிக்கப்படும். அவ்வாறு பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. " இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் " அமைத்து பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI R. KRISHNASAMI NAIDU : குடிசைக் கைத்தொழில்களை கிராமங்களில் எவ்வாறு நடத்தவேண்டுமென்பதற்கு ஆலோசனை தரப்படும் முறையில் " மூலப்பொருள்கள் எங்கு கிடைக்கும் ? எவ்வளவு முதலீடு தேவை ? எந்தெந்தப் பிரதேசங்களில் என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் " என்பதற்கான பிரசுரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கான பிரசுரங்கள் தயாரித்து எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பார்த்துச் சொல்லுகிறேன். சிறிய கைத்தொழில்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக் கூடிய " அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் " இது மாதிரி யோசனைகள் கொடுக்கிறார்கள்.

SRI J. MATHA GOWDER : இந்த மேஜை மேல்வைத்திருக்கப்பட்ட பட்டியலைப் பார்த்தால் நீலகிரி ஜில்லாவில் குடிசைக் கைத்தொழில்கள் இருக்கிறதா என்பதுபற்றி ஒரு விவரமும் இல்லை. அங்கு குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பிக்க வசதி இல்லையா ? அதனுடைய விபரம் என்ன ? அங்கு இந்தத் தொழில்களை ஆரம்பிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் அங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள் நலனில் அக்கறையுள்ளவர்கள். அவர்களுக்கென்று சில குடிசைத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அங்கு இந்த மாதிரி தொழில்களை ஆரம்பிக்கத் தொழிலாளர்கள் தலைவர்களும் அக்கறை எடுத்துக்கொள்ளுவதில்லை தொழில் அதிபர்களும் அக்கறை எடுத்துக்கொள்ளுவதில்லை.



18th March 1959]

*Engineering College, Madras*

* 859 Q.—SRI A. A. RASHEED (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the United States Government have agreed to provide under its programme any aid to the Engineering College, Madras; and

(b) if so, the amount of financial aid?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) Yes, Sir. Books worth $200 and scientific equipment costing $12,500 have been allotted to the College under the " India Wheat Loan Educational Exchange Programme ".

SRI A. A. RASHEED : May I know, Sir, whether the aid is given for the development of any particular section or department of the Engineering College?

THE HON. SRI C. SUBRAMANIAM : Not to any particular thing. We are allowed to choose our own equipment.

*Motor Vehicles Taxation Act*

* 860 Q.—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of SRIMATHI T. N. ANANDANAYAKI) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the amount of tax collected under the Madras Motor Vehicles Taxation Act, 1931 by the Government district-war including Madras City in 1958; and

(b) the amount paid out of the above sum to each local body for the maintenance of roads?

THE HON. SRI V. RAMAIAH : (a) The amount of tax collected during the year 1958 is furnished in item I of the statement[a] placed on the table of the House.

(b) The amount paid from 1st January up to 30th November 1958 to each local body is furnished in items II and III of the statement[a] placed on the table of the House.

SRI K. VINAYAKAM : Sir, from the statement it is evident that in the City of Madras about Rs. 71 lakhs odd is collected under this head, whereas the compensation given to the local body, namely, the Corporation of Madras, is only Rs. 3 lakhs odd, which works out only to $2\frac{1}{2}$ per cent of the total collection. Whereas it is the sole responsibility . . .

MR. SPEAKER : The hon. Member is giving an opinion.

SRI K. VINAYAKAM : No, Sir. I have not yet . . .

MR. SPEAKER : The hon. Member is going on the wrong line. He must put a question and not give an opinion.

---

[a] Printed as Appendix II on pages 644-649 infra.

[18th March 1959

SRI K. VINAYAKAM : Sir, I am only stating what is given in the statement. To augment and make the question clear, I am quoting from the statement. There is nothing wrong.

MR. SPEAKER : It is a waste of the time of the House. The hon. Member will proceed with the question.

SRI K. VINAYAKAM : I am bringing it to a pointed interest so that it may be clear.

MR. SPEAKER : That may be done during the discussion of Demands and not during question time.

SRI K. VINAYAKAM : Whereas it is the sole responsibility of the Corporation of Madras . . .

MR. SPEAKER : The hon. Member is giving an opinion by saying " Whereas it is the sole responsibility of . . ." It is only an opinion. He must ask a question. The hon. Member will put it in the form of a question.

SRI K. VINAYAKAM : Sir, the question may contain adjectival clauses and adverbial clauses. It may be a complex sentence.

MR. SPEAKER : Next question. Question No. 861.

SRI V. K. KOTHANDARAMAN : On a point of order, Sir. 860-வது கேள்விக்கு கனம் அங்கத்தினர் விநாயகம் அவர்கள் கேட்ட கேள்வி சரியல்ல என்பதற்காக கேள்விகள் கேட்கத் தயாராக இருந்த எங்களுக்கும்கூட அனுமதி கொடுக்கப்படவில்லையே! எங்களுக்கு அந்தக் கேள்வியில் உபகேள்விகள் கேட்க அனுமதி கொடுக்கப்படுமா ?

MR. SPEAKER : ஸ்பீக்கர் ரூலின் மேல் பாய்ண்ட் ஆப் ஆர்டரா ? தனிக் கேள்வி கேளுங்கள். அது அங்கத்தினர் தவறு. அங்கத்தினர்கள் சரியான முறையில் கேள்விகள் கேட்காமல் போனால் அடுத்த கேள்விக்குப் போவதைத் தவிர வேறு என்ன மருந்து இருக்கிறது ? அங்கத்தினர்கள் தயவு செய்து ஒத்துழைத்தால் நான் நியாயமான முறையில் அனுமதி கொடுக்கிறேன்.

SRI A. A. RASHEED : அதனால் மற்ற அங்கத்தினர்கள் கேள்விகளும் பாதிக்கப்பட்டு விடுகிறதே !

SRI K. VINAYAKAM : What is the form of the question, Sir?

MR. SPEAKER : I am afraid, the hon Member Sri K. Vinayakam has misunderstood me. How a question is to be asked, is given in the rules. It is not for me to point it out. The interpretation of the rules is left to me. I tell the hon. Member that he is wrong. He must listen and correct himself.

SRI K. VINAYAKAM : I confine myself only to the form of the question, Sir.

MR. SPEAKER : Anyway, the hon. Member is not raising a point of order. He cannot question the Speaker's ruling. (Interruption by Sri K. Vinayakam.) If the hon. Member should disturb and obstruct the proceedings like this, I will take appropriate action against him.



18th March 1959]

(The hon. Member Sri K. Vinayakam was heard to say, ' It is easy to snub a man '.)

MR. SPEAKER : Again I am warning that if the hon. Member persists, I will take appropriate action.

*Reorganization of Government departments*

* 861 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) when the report was submitted by the Special Officer deputed to examine the question of reorganization of Government departments;

(b) whether action has been taken on the proposals made in the report; and

(c) whether a copy of the report will be placed on the Table of the House, together with the decisions of the Government on the proposals?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) July 1958.

(b) The recommendations relate to various Departments of Government and they are being examined and orders issued as and when decisions are reached in each case.

(c) Copies of the Report have already been placed in the Legislature Library for the information of the Hon. Members. As it will take sometime for orders to be passed on all the recommendations, it will not be possible at this stage to place on the table of the House the decisions of the Government on the proposals.

*Students of the Annamalai University*

* 862 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether a Committee has been constituted by the Government to examine the disturbed conditions among the students of the Annamalai University;

(b) if so, whether that Committee has made any report in the matter; and

(c) whether any of its recommendations have been implemented so far?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI M. JAGANNATHAN : Sir, I understand that the Education Committee appointed by the Congress Parliamentary Party in New Delhi has recommended the appointment of a military officer in every University to maintain discipline among the students. Will the Government consider the desirability of taking

[18th March 1959

up that recommendation of the committee and appointing a military officer in every University, particularly in Madras University?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know what opinion the hon. Member has about the situation particularly in our Madras University colleges and hostels. I do not think any military officer will be able to solve the problem, and it is not the military approach which would give a solution to this problem but a completely different approach altogether.

SRI K. ANBAZHAGAN : இந்தக்கேள்வியில் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் நிலைமை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் குறைகளை நிவர்த்திக்கவேண்டுமென்று அரசாங்கத்துக்கும் துணைவேந்தர் அவர்களுக்கும் தெரிவித்திருக்கிறார்களா? அவ்வாறு தெரிவித்த பிறகு அவர்களுடைய குறைகள் நிவர்த்திக்கப்பட்டனவா ? அவர்களுடைய குறைகளை நிவர்த்தித்த பிறகும் அங்கு அமைதி இல்லையென்று அரசாங்கமோ மற்றவர்களோ கருத இடம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அவர்களுடைய குறைகள் நிவர்த்திக்கப்படவேண்டுமென்பதற்காகப் பல யோசனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவும் "சான்சலருடன்" விவாதிக்கப்பட்டிருக்கிறது. குறைகள் இருக்கிறது என்பதற்காக கிளர்ச்சிகள் செய்யவேண்டுமென்று அவசியம் இல்லை, என்பதை அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் இப்பொழுது இருக்கக்கூடிய குறைகளை நீக்கி விட்டாலும் கூட வேறு சில குறைகள் வாழ்க்கையில் இருக்கத் தான் செய்யும். குறைகளை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்பதை நம் மாணவர்கள் உணரவேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

SRI A. A. RASHEED : Sir, is it not a fact that perfect peace and amity prevail among the students of the Annamalai University now?

THE HON. SRI C. SUBRAMANIAM : There are no complaints now.

SRI C. NATARAJAN : தலைவர் அவர்களே விசாரணை இவ்வளவு காலத்திற்குள் முடியவேண்டும் என்று நிர்ணயம் ஏதாவது இருக்கிறதா ? விசாரணை எவ்வளவு காலத்திற்குள்ளே முடிவு செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது யூனிவர்சிடி செய்யவேண்டிய காரியம். யூனிவர்சிடிக்கு என்ன என்ன உதவிகளைச் செய்ய முடியும் என்பதைப்பற்றித்தான் விவாதிக்கப் போகிறோம்.

SRI T. S. RAMASWAMY PILLAI : மாணவர்களிடையே அரசியல் கட்சிகள் எந்தவிதமான சிக்கலையோ பிரச்னையையோ விவாதத்தையோ ஏற்படுத்தக்கூடாது என்பது பற்றிய சமரசமான முடிவு ஏற்பட்டது உண்மையா ? அப்படியானால் அதுபற்றி அரசாங்கத்தின் முடிவு என்ன ?

THE HON SRI C. SUBRAMANIAM : வேறு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன்னேன் என்று நினைக்கிறேன். கம்யூனிஸ்டு கட்சியினிடமிருந்து பதில் வராமல் இருந்தது. அவர்களிடமிருந்து பதில் இப்பொழுதுதான் வந்திருக்கிறது. அந்தப் பதிலையும் அடுத்த கமிட்டி கூட்டத்திலே வைத்து, விவாதித்து கடைசியான முடிவு எடுக்கப்படும்.



18th March 1959]

*Retrenchment of workers in the Electricity Board*

*863 *Q.*—SRI M. P. SARATHI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மின்சார போர்டில் பணியாற்றிய தற்காலிக ஊழியர்கள் எவ்வளவு பேர் நிறுத்தப்பட்டனர் ?

(ஆ) அவர்களைப்பற்றி மின்சார ஊழியர் சம்மேளத்தினிடமிருந்து கோரிக்கைகள் வந்தனவா ?

(இ) அந்தக் கோரிக்கைகள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) It is presumed that the question is in respect of cases of retrenchment of workers represented by the Tamilnad Electricity Workers' Federation before the Negotiating Committee. The number of such cases of retrenched workmen in various places and on various dates was 168.

Subsequently information has been received regarding further retrenchment of 177 workmen.

(*c*) The Electricity Board has made efforts to re-absorb the retrenched workmen to the extent possible in new works or by diversion to projects. Diversion to projects or re-absorption elsewhere than in the places of retrenchment have not been a success, owing to the disinclination of the workmen to move to places other than those where they have already settled.

SRI N. K. PALANISAMI : அவர்கள் இம்மாதிரி வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்த காலத்தில் பல பேர்கள் அங்கிருந்து நீக்கப்பட்டார்கள் என்று சர்க்காருக்குத் தெரியுமா ? பல பேர்கள் ஏற்கனவே வேலை செய்துக்கொண்டிருந்த இடங்களிலிருந்து பல இடங்களுக்கு மாற்றப்பட்டார்கள் என்பதும் சர்க்காருக்குத் தெரியுமா ? மாற்றிய இடங்களிலிருந்து அவர்களைப் பழைய இடத்திற்கே, அதாவது முன்பு வேலை செய்த இடத்திற்கே மாற்ற சர்க்காருக்கு யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட வரையில், அப்போதைக்கப்போது எடுத்துக் கொள்ளப்படுகிற சாதாரண ஊழியர்களை ஆட்குறைப்பு செய்கிறார்களே அது சம்பந்தப்பட்டது. சாதாரணமாக, மின்சார இலாகாவைப் பொறுத்தவரையில் எங்கெங்கே வேலைப்பளு கொஞ்சம் குறைகிறதோ அதற்குத் தகுந்தாற்போல் காஷுவல் லேபரர்கள் முதலில் குறைக்கப்பட்டுவருகிறார்கள். ஆனால் அங்கத்தினர் சொல்லக்கூடிய தகவல்களுக்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லமுடியும்.

THE HON. SRI S. PAKKIRISAMI PILLAI : ரிட்ரென்ச் பண்ணும்போது அவர்களுக்கு காம்பென்சேஷன் சட்டப்படி கொடுக்கப்படுகிறதா ? கொடுத்த பிற்பாடும் திருப்பி வேலைக்கு ஆட்கள் வைக்கும்போது அவர்களையே வைக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : நான் இப்பொழுது கொடுத்திருக்கும் புள்ளி விவரம் எல்லாம்—காஷுவல் லேபரை ஒவ்வொரு பகுதியிலே எடுத்து அந்தப் புதிய திட்டங்கள் பூர்த்தியானவுடனே அவர்களை நீக்கிவிடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மற்றப்படி, நிரந்தரமான ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எந்தவிதமான குறைவு ஏற்பட்டாலும், இன்டஸ்ட்ரியல் லேபர் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[18th March 1959

SRI V. K. KOTHANDARAMAN : மின்சார ஊழியர்கள் தங்களுடைய உரிமைக்காக வேண்டி கிளர்ச்சி செய்த நேரத்திலே, பல வருஷங்களாக வேலை செய்த ஊழியர்கள் என்ன காரணத்திற்காக நீக்கப்பட்டார்களோ தெரியவில்லை. ஆனால் அதே நேரத்தில் புதிய ஆட்கள் எடுக்கப்பட்டது உண்மையா ? மின்சார போர்டு அந்த நேரத்தில் ட்ரான்ஸ்பர் யார் யாருக்குச் செய்திருந்ததோ அதெல்லாம் எப்படிக் கான்சல் செய்யப்பட்டதோ அதுபோன்று இந்தத் தற்கால ஊழியர்களைப் பொறுத்தும் நீக்கப்பட்டவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கிளர்ச்சி காலத்தில் ஏதோ மின்சார போர்டு நடவடிக்கை எடுத்ததாகவும் அவர்களுக்குத் திரும்ப பரிகாரம் காணப்பட்டு விட்டதா என்ற கேள்விக்கு, நிச்சயமாக எல்லாப் பிரச்னைகளும் சமூகமாகத் தீர்க்கப்பட்டு இப்பொழுது எந்தவிதமான கிளர்ச்சி, கஷ்டம் எதுவும் இல்லாமல் மின்சார போர்டு தன்னுடைய கடமையைச் செய்துக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI M. JAGANNATHAN : Sir, may I know for what length of time these retrenched workers were in service?

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put, Sir.

*Goshalas*

* 864 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of " Goshalas " in the State and the places where they are;

(*b*) the number of private Goshalas;

(*c*) the number of animals on their rolls;

(*d*) whether private Goshalas are receiving grants; and

(*e*) the contribution from the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*e*) A statement[a] is placed on the table of the House.

* 865 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the Gosamvardhana Council of the Central Government had sent a scheme to the Madras Government to open Gosadans;

(*b*) if so, how many have been opened by this Government till now; and

(*c*) if not the reasons for the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) No gosadan has been opened till now by the Government.

[a] Printed as Appendix III on pages 649 to 650 infra.



18th March 1959]

(*c*) It was considered that it was not economically or scientifically sound to maintain concentration camps for old and useless animals. However the Government would prefer to start and aid salvage farms for useful but dry cattle.

SRI K. APPAVOO PILLAI : ஹோசூர் கால்நடைப் பண்ணையானது மிகவும் பெரியது. சீதோஷ்ண ஸ்திதியும் அனுகூலமாக இருக்கிறது. அதன் காரணமாக, இப்பொழுது அங்கிருக்கும் கால்நடைப் பண்ணையில் இன்னும் அதிகமான பசுக்களை வைத்து, பண்ணையைப் பெரியதாக 'expand' செய்ய சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அதிகப் பரப்புள்ள நிலம் அங்கே இருக்கிறது என்றாலும், அங்கு இப்பொழுது இருக்கும் மாடுகளுக்கே அது போதவில்லை. அதிகமான மாடுகளை வைத்தால் சீராகக் கவனிக்க முடியவில்லை, என்பதற்காக காங்கயம் மாடுகளெல்லாம் இராமநாதபுரத்தில் தொடங்கப்பட்டிருக்கும் மாட்டுப் பண்ணைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஆகையால், எண்ணிக்கையை அதிகப்படுத்திக்கொண்டு போவதில் பயன் இல்லை.

*Text-books*

* 866 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the proposals for publishing the text-books by the Government from 1961–62 have been finalized?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

*Afforestation*

* 867 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any scheme for the regeneration and afforestation in the forests; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Regeneration and afforestation works are undertaken both under the prescriptions of working plans and on a large scale under the Second Five-Year Plan.

(*b*) A statement[a] is placed on the table of the House showing the details of the regeneration and afforestation schemes undertaken by the Forest Department in the State.

SRI N. K. PALANISAMI : "அபோரெஸ்டேஷன் ஸ்கீம்" இலே எக்ஸ்-பஞ்சாயத்து அல்லது எக்ஸ்-ஜமீன்களுக்குச் சேர்ந்த காடுகளில் விறகு உண்டாக்கக்கூடிய மரங்கள்தான் வைக்கப்படும் என்று தெரிகிறது. ஏன் தேக்கு போன்றவைகளை வைக்கத் திட்டம் இல்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நேற்று ஒரு கேள்விக்கு நான் பதில் சொன்னதை கனம் அங்கத்தினர் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். கண்டமநாய்க்கன் ஜமீன் மதுரை ஜில்லாவில் இருக்கிறது. அது காடு வளர்ப்புத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் ஏராளமான தேக்கு வைக்க வசதி இருக்கிறது. அங்கு ஆயிரக்கணக்கான ஏக்கராக்களில் தேக்கு வைப்பதற்கு இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

[a] Printed as Appendix IV on pages 650 to 651 infra.

[18th March 1959

*Steel*

*868 *Q.*— SRI A.VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த மாநிலத்திற்கு 1958-ல் மாதந்தோறும் அளிக்கப்பட்டு வரும் எஃகு கோட்டா எவ்வளவு ?

(ஆ) இது சரியாக வந்துகொண்டிருக்கிறதா ?

(இ) இல்லையானால், இப்போதுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஏற்பாடு என்ன செய்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Allotment of iron and steel by the Government of India to this State is made once in a quarter and not every month.

The following quantities of iron and steel were allotted to this State during the first three quarters of 1958 beginning from 1st April 1958 :—

| | | | |
|---|---|---|---|
| I | Quarter of 1958-59 (April–June 1958). | .. | Four thousand seven hundred and five (4,705) tons. |
| II | Quarter of 1958–59 (July–September 1958). | .. | Four thousand seven hundred and twenty-two (4,722) tons. |
| III | Quarter of 1958–59 (October–December 1958). | .. | Five thousand five hundred and thirty-six (5,536) tons. |

(*b*) No, Sir.

(*c*) Representations have been made by the Director of Industries and Commerce, Madras, to the Iron and Steel Controller, Calcutta, for the regular despatch of the allotted quotas of Iron and Steel to this State.

SRI A. VEDARATHNAM : கோட்டாக்கள் குறைவாக் வருவதாகத்தெரிகிறது. அடுத்து வரும் க்வார்ட்டரிலாவது அது பூர்த்தி செய்யப்படுகிறதா ? அப்படி யில்லையானால், அதைப் பாக்கியாக வைத்து மறுபடியும் பெறுவதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ? இப்பொழுது பிலாய், துர்க்காபூர் தொழிற்சாலைகளில் வேலை துவங்கியிருக்கிற காரணத்தால் நம்முடைய கோட்டா அதிகரிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்தக் கோட்டாக்கள் லாப்ஸ் ஆவது இல்லை. நமக்குப் போதிய அளவு இரும்பு, எஃகு வரவில்லை என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பிலாய், ரூர்க்கேலா போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி சரியாக வருவதற்கு இந்த வருஷம் பூராவும் பிடிக்கும். ஆகவே, 1959–60-வது வருஷத்தில் நிலைமை சீர்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Inasmuch as we are receiving very little quota from the Government of India, will the Government consider the desirability of giving top priority to agriculturists so far as distribution of steel is concerned?

THE HON. SRI R. VENKATARAMAN : Actually, the agricultural quota for the first quarter—April to June 1958 was 704 tons and for the second quarter it was 601 tons. I do not think it is sufficient for our purposes. So, we are making every endeavour to see that agricultural quota is raised as far as possible.



18th March 1959]

MR. SPEAKER : I just want to inform the hon. Members that there are going to be three announcements to-day and they will take 5 to 7 minutes. The Hon. the Minister for Finance will be presenting the Statement of Demands for further Expenditure and the Detailed Supplementary Estimates thereof for the year 1958–59. That will take another 5 minutes or so. So, if the hon. Members co-operate with me, we can finish the rest of the questions in another 15 minutes. Otherwise, the time allotted for the Agriculture Demand will have to be reduced. Or, in the alternative, the hon. Members will have to be prepared to sit beyond 1-30 p.m. So, if I pass on quickly, I hope the hon. Members will please excuse me.

SRI A. A. RASHEED : In order to procure the required quantity of steel, will the Hon. Minister explore the possibility of starting a steel rolling mill in Salem? 9-00 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : It is too far-fetched a suggestion.

*Bonus for textile workers*

* 869 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to settle the dispute regarding payment of bonus for 1957 between the workers and the managements in the Textile Mills in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : The dispute relating to payment of bonus for 1957 in respect of textile mills in Coimbatore district was taken up for discussion with the parties by the Commissioner of Labour on 20th October 1958. The Minister for Home who was then in charge of labour also discussed the matter further with the parties on the same day. As no amicable settlement was possible, the dispute has been referred to the Industrial Tribunal, Madras, for adjudication.

SRI S. PAKKIRISAMI PILLAI : கோயம்பத்தூர் முதலாளிகள் ஒவ்வொரு வருஷமும் சரியானபடி திட்டம் வகுத்து அந்த போனஸ் விகிதத்தை கொடுக்காத காரணத்தால் ஒவ்வொரு வருஷமும் இது கோர்ட்டுக்குப் போகும்படியான நிலைமை இருக்கிறது என்பதை உத்தேசித்து இந்த அரசாங்கம் ஒரு நல்ல திட்டத்தை அமைத்து அதை அவர்கள் ஒத்துக்கொள்ளும்படி செய்வார்களா ?

MR. SPEAKER : The hon. Member is making a speech. How does this arise from the main question? He is insinuating that somebody is doing something.

SRI S. PAKKIRISAMI PILLAI : This relates to bonus scheme.

**MR. SPEAKER : The Hon. Member had an opportunity when the Labour Demand was discussed. Why did not he say this then? Any way if the Hon. Minister will answer, I have no objection.**

[18th March 1959

SRI V. K. KOTHANDARAMAN : வருடா வருடம் போனஸ் விஷயமாக தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர்கள் இலாகா அதிகாரிகள் தலையிட்டு ஒரு தீர்ப்பு சொன்ன போதிலும் அதை முதலாளிகள் ஒப்புக் கொள்வது இல்லை. ஆகவே அதற்கான திட்ட வட்டமான சட்டத்தை, லாபம் வந்தாலும் சரி நஷ்டம் வந்தாலும் சரி, இவ்வளவு சத விகிதம் போனஸ் கொடுக்கவேண்டுமென்ற ஒரு சட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : லாபம் வந்தால் தான் போனஸ் கொடுக்கமுடியும். லாபம் வந்தாலும் நஷ்டம் வந்தாலும் போனஸ் கொடுக்கவேண்டும் என்பது சரியல்ல. அந்த நிலைமையில் கொடுப்பதாக இருந்தால் அது வேஜஸாய் போய் விடும்.

*Cambodia Mills, Coimbatore*

*870 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the management of Cambodia Mills Coimbatore, imposed any condition of service on 1st July 1958 in violation of the general agreement regarding wages and work-load of textile workers signed on 25th September 1956; and

(b) the steps taken by the Government to compel the management to respect the agreement reached on 25th September 1956?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The management of Cambodia Mills, Limited, Coimbatore, gave notices on 31st May 1958 of their proposal to retrench 248 badlies on 1st July 1958, to transfer 328 workers to lower categories of occupation and to convert 279 permanent workers as badlies. The proposal of the management cannot however be said to be a violation of the agreement, dated 25th September 1956.

(b) Since the dispute could not be settled by conciliation by the Commissioner of Labour, Government discussed the matter with the parties. The Government also could not bring about a settlement. The dispute was therefore referred for adjudication to the Industrial Tribunal, Madras. The parties however came to an agreement subsequently and an award was given by the Industrial Tribunal on the lines of the agreement.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த ஒப்பந்தத்தின்படி தொழிலாளர்களை கீழே வேறு வேலைக்கு மாற்றப்பட்டாலும் அவர்களுடைய கூலி விகிதத்தை குறைக்காமல் இருக்கும்படியான நிலைமையில் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : This matter has been settled and an award in terms of the agreement between the parties has been given. Therefore, the Government have no information on these matters.

*Rubber*

*871 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Forest Department have decided to take up the cultivation of rubber in the Kanyakumari district; and



18th March 1959]

(b) if so, the steps taken so far to implement the decision?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The question of raising a rubber plantation is under examination.

*872 Q.—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் ரப்பர் தோட்டங்கள் எங்கெங்கே இருக்கின்றன ?

(ஆ) எங்கேனும் ரப்பர் தோட்டங்கள் உண்டாகக்கூடிய வசதி உண்டா ?

(இ) ரப்பர் அபிவிருத்திக்கான முயற்சி ஏதேனும் நம் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

(ஈ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

(உ) செயற்கை ரப்பர் உற்பத்தி விஷயமாய் அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ? அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Rubber is grown in Coimbatore, Kanyakumari, Madurai, Salem and the Nilgiris districts.

(b) Yes, Sir. There are facilities to cultivate rubber in the Kanyakumari district.

(c) & (d) The question of bringing additional area under cultivation is being examined by the Government. Details have not yet been worked out.

(e) No, Sir.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether it is a fact that the yield per acre in Kanyakumari district is the highest in the whole of India and if so, will the Government take immediate steps to start a rubber plantation there at once?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no information whether it is the highest there. But, nevertheless, we are taking steps to have a plantation of rubber in Kanyakumari.

SRI A. VEDARATHNAM : தேக்கு மரங்களை சாகுபடிக்கு எடுத்துக் கொள்வது போன்று ரப்பர் சாகுபடி விஷயத்திலும் அப்படிப்பட்ட முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ? அப்படியானால் ஏராளமான ரப்பர் மரங்களை பயிரிடுவதற்கும் அப்படி பயிரிட்டு அதை பயன்படுத்திக்கொள்ளவும் இந்த அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ரப்பர் பயிர் செய்வதற்கு என்று சில ப்ளான்டேஷன் எஸ்டேட்டுகளை அமைக்க வேண்டியதாக இருக்கிறது. தேக்கு மரங்களை எங்கு வேண்டுமானாலும் வழி நெடுக ஆற்றங்கரையில் நட்டுக் கொண்டு போய் விடலாம். அப்படி ரப்பர் மரங்களை நடமுடியாது. அப்படிப்பட்ட எஸ்டேட்டுகள், அதாவது ரப்பர் மரங்களை நடக்கூடிய எஸ்டேட்டுகள் கன்யாகுமரியில் இருக்கிறது. அங்கே, 3,500 சொச்சம் ஏக்கர் இருக்கிறது. அந்த இடத்தில் ரப்பர் ப்ளான்டேஷன் வைக்கலாம். அங்கே 3,000 ஏக்கரில் ரப்பர் ப்ளானடேஷனும செய்யப் பட்டிருக்கிறது.

[18th March 1959

SRI M. JAGANNATHAN. Arising out of the answer given by the Hon. Minister that there are some facilities available for rubber plantation in Kanyakumari district, may I know whether these facilities are available on the plains or on the mountain slopes?

THE HON. SRI R. VENKATARAMAN : It is on the higher levels.

*Sales tax*

* 873 *Q*—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1957–58-ல் விற்பனை வரி கட்டாதவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI R. VENKATARAMAN : 17,068.

SRI S. M. ANNAMALAI : இந்த விற்பனை வரி மூலமாக வரி வசூல் ஆக வேண்டிய தொகை எவ்வளவு ? குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் 1957–58-ல் 60 சத விகிதம் வசூல் ஆகவில்லை. அதற்கு முக்கியமான காரணம் என்ன ? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1957–58-ல் மொத்தம் பாக்கி இருப்பது ஒரு கோடியே முப்பத்தி மூன்று லட்சத்தி ஆயிரத்தி ஐந்நூற்று இருபத்தெட்டு ரூபாய். அவற்றில் வட ஆற்காடு ஜில்லாவில் பதினொரு லட்சத்தி அறுபது ஆயிரத்து ஐந்நூற்று அறுபத்து ஆறு ரூபாய். இவைகள் எல்லாம் கர்ரெண்ட் ட்யூஸ்.

*Raw film*

* 874 *Q.*—SRI S. LAZAR :
SRI N. K. PALANISAMI :
SRI V. K. KOTHANDARAMAN : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the position of supply of raw film in the State;

(*b*) the reply, if any, received from the Union Government on the representation made by the Government to increase the quota to Madras State; and

(*c*) the time within which normal supply (to the extent demanded) will be made available?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There is acute scarcity of raw films in the State consequent on the imposition of import restrictions.

(*b*) The Government of India in their import policy for the half-year April to September 1958 fixed the import quota of raw films at 40 per cent. In reply to the representation made by this Government, the Government of India have stated that they have restored the quota for the import of raw films to 60 per cent and that in addition, the State Trading Corporation has been asked to arrange for import to the extent of Rs. 20 lakhs. They have added that licences to import raw stock for films meant for export are also being issued to the 'established importers' under the Export Promotion Scheme. The ratio for allocation of raw films among the three producing centres of Bombay, Madras and Calcutta has also been changed from 13 :8 :3 to 50 per cent–39 per cent :



18th March 1959]

11 per cent. Under the revised allocation the Southern States are given larger quota of raw film than what they were getting previously.

(*c*) This will be largely determined by the import policy of the Government of India.

SRI S. LAZAR : இந்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தேவைக்குத் தகுந்தபடி உற்பத்தி செய்வதற்கு ஏதாவது திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ? அப்படி இருந்தால் அது எந்த நிலைமையில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஊட்டியில் ஒரு பிலிம் பாக்டரி வைக்க வேண்டுமென்ற ஒரு யோசனை இருப்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்றே நினைக்கிறேன். அது இன்னும் முடிவு அடையவில்லை.

SRI N. K. PALANISAMI : 1954-க்கு முன்னதாக ஒப்பந்தப்படி பிலிம் கோட்டா கொடுக்கப்பட்டு வருகிறது. 1954-க்கு முன்பு ஏற்பட்ட கம்பெனிகளுக்கு அதற்கு முன்னதாக ஒத்துக்கொள்ளப்பட்டபடி கோட்டா கொடுக்கப்பட்டு வருகிறது, அதற்கு பின்னுடி ஏற்படுத்தப்பட்ட கம்பெனிகளுக்குக் குறைவாக கோட்டா கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே 1954-ம் வருஷத்திற்கு பிற்பட்டு ஏற்படுத்தப்பட்ட கம்பெனிகளுக்கும் அதிகப்படியாக பிலிம் கொடுக்க அரசாங்கம் முன் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN: அப்படி குறைவாகக் கொடுப்பதற்குக் காரணம் பிலிம் இறக்குமதி குறைந்து போனதன் காரணம் தான். எந்த அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களிடமிருந்து எந்தவிதமான புகாரும் வரவில்லை. அதனால் இப்பொழுது கொடுக்கப்படுவது சரி என்று அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகத்தான் நினைக்கவேண்டியதாக இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : Are the Government aware of the fact that there is some discrimination shown in the distribution of raw films to film producers which has given rise to blackmarket operations?

THE HON. SRI R. VENKATARAMAN : No such complaints have been received by this Government.

SRI A. A. RASHEED : Are the Government aware that a lot of wastage occurs during shooting of films and if so, what steps have been taken by the Government to stop this wastage?

THE HON. SRI R. VENKATARAMAN : I wonder what the Government have got to do in this matter. If the people are wasting their films, they lose the quota in it.

*Apprenticeship Training Scheme*

MR. SPEAKER. : கனம் அங்கத்தினர் ஸ்ரீ பி. ஜி. மாணிக்கம் இடத்தில் இல்லாததால் 875 எண்ணுள்ள கேள்வியும் பதிலும் சட்ட சபை விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

* 875 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா —

(அ) இந்திய சர்க்கார் உதவியோடு கூடி சென்னை சர்க்காரால் 1958-ம் வருஷக் கடைசியிலே ஆரம்பிக்கப்பட்ட தச்சு வேலை, வார்ப்பு

வேலை, பிட்டிங், வெல்டிங், டர்னிங் போன்ற தொழில்களிலே மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கக்கூடிய திட்டமானது சென்னை நகரிலுள்ள எந்தெந்த தனிப்பட்டவர்களுடைய தொழிற்சாலைகளிலே நடைபெறும் ?

(ஆ) இப் பயிற்சிக்காக எத்தனை பெயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

(இ) இவர்களில், ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

(ஈ) இவர்களுக்கு எவ்வளவு காலத்துக்குப் பயிற்சியளிக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) to (d) A note[a] containing the information required is placed on the table of the House.

*Potassium chlorate*

* 876 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to open a factory for the manufacture of potassium chlorate in Tirunelveli district under the Second Five-Year Plan;

(b) if so, the estimated annual production; and

(c) when it is expected to commence?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There is no proposal to establish a factory for the manufacture of potassium chlorate in the public sector under the Second Five-Year Plan. But the Government of India, on the recommendation of this Government, have granted a licence under the Industries( Development and Regulation) Act to Santha Chemicals, Limited to establish a factory at Ambasamudram in the Tirunelveli district, for the manufacture of potassium chlorate.

(b) 1,800 tons.

(c) We have no information, Sir.

*Abolition of 'contract system'*

* 877 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to abolish contract system in the Public Works Department and in other Government departments?

THE HON. SRI P. KAKKAN : The question of abolition of contracts in Public Works Department is under consideration of the Government.

SRI N. K. PALANISAMI : இதை ஒழிப்பதற்கு என்ன என்ன விதத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : காண்டிராக்ட் முறையை ஒழிக்க வேண்டுமென்றால் என்ன என்ன விதத்தில் அது சாத்தியம் என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

[a] Printed as Appendix V on pages 652 to 653 infra.



SRI S. PAKKIRISAMI PILLAI : காண்டிராக்ட் முறையில் தொழிலாளர்களை அமர்த்திக்கொண்டு வதைத்து வேலை வாங்கக் கூடிய முறையை ஒழிப்பதற்கு மற்ற இடங்களிலும் இப்படி சுரண்டும் வகை திட்டத்துடன் வேலை வாங்கப்படுவதை தடுக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : அதற்காகத்தான் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

*Panamalai tank, Villupuram taluk*

* 878 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Hon. the Minister visited Panamalai tank in Villupuram taluk on 1st December 1958;

(b) whether any representations were made to him regarding the renovation of Nandan vaikal; and

(c) the action taken so far on the above representations?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) Yes, Sir.

(c) The Chief Engineer for Irrigation was consulted. He has reported that it is not possible to renovate the old Nandan channel at a reasonable cost and also to maintain this lengthy channel at a cheap cost.

*Madras-Cape Comerin Road*

* 879 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI N. R. THIAGARAJAN) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, திண்டுக்கல்லுக்குள் நுழையாமல் ஊருக்கு வெளியே புது ரோடு அமைத்து சென்னை-கன்னியாகுமரி ரோடுடன் இணைக்கத் திட்டமுள்ளதா ?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

* 879-A Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI N. R. THYAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை-கன்னியாகுமரி ரோடில் நெல்லை ஜில்லா கோவில் பட்டியில் ஊருக்குள் நுழையும்போது ஒரு ரெயில்வே கிராசிங்கும் ஊரை விட்டு வெளியேறும்போது ஒரு லெவல் கிராசிங்கும் உள்ளதை அரசாங்கம் அறியுமா ?

(ஆ) இதை கோவில்பட்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு வட மேற்காக ஒரு ரோடு அமைத்து இரண்டு லெவல் கிராசிங்குகளிலும் நுழையாமல் போக்கு வரத்து உண்டாக்க அரசாங்கம் திட்டமிட உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) There is a proposal for constructing a by-pass in order to avoid the two Railway crossings near Koilpatti.

*Scholarships to two students of Islamiah College*

* 879-B *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether representation, dated 2nd May 1958, from Sri A. A. Rasheed, M.L.A., to the Director of Harijan Welfare (copy sent to the Minister for Public Works) has been received by the Government regarding the cancellation of scholarships awarded to two students of Islamiah College, Vaniyambadi, by the Director of Harijan Welfare; and

(*b*) if so, the action taken by the Government?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The scholarships have since been sanctioned to the two students referred to in the representation.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that these scholarships have been cancelled without reason or rhyme?

THE HON. SRI P. KAKKAN : முதலில் இந்த இரு மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டது. ஆனால் திரும்ப 1,500 ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் அது நிறுத்தி வைக்கப்பட்டது. மறுபடியும் அதைப்பற்றி கலெக்டர் மூலமாக விசாரித்து அறிந்ததில் வருமானம் 1,500 ரூபாய்க்குக் குறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்று தெரிந்தவுடன் திரும்பவும் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Is the Hon. the Minister aware of the fact that though the scholarships for 1957 have been resanctioned, they have not yet been paid to the students?

THE HON. SRI P. KAKKAN : We have obtained the remarks of the Collector and now we are taking action to give these scholarships.

MR. SPEAKER : Questions are over.

*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ANNOUNCEMENT *RE*. NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE OF PRIVILEGES.

MR. SPEAKER : I have to announce to the House that the lowing fifteen Members were duly nominated for the election of fifteen Members of the Madras Legislative Assembly to the Committee of Privileges :—

1. Sri K. Anbazhagan.
2. ,, K. S. G. Haja Sheriff.
3. ,, M. Jagannathan.
4. ,, M. Jangal Reddiar.
5. ,, P. G. Karuthiruman.



6. Srimathi K. Kolanthai Ammal.
7. Sri V. K. Kothandaraman.
8. ,, A. R. Marimuthu.
9. ,, K. K. Muthiah.
10. ,, C. R. Ramaswami.
11. ,, S. Ramakrishna Thevar.
12. ,, T. Sivagnanam Pillai.
13. ,, V. Subbiah.
14. Srimathi A. Suares.
15. Sri A. Vedarathnam Pillai.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, namely, fifteen, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges for the year 1959–60. The Deputy Speaker is a Member ex-officio of the Committee.

I will announce the name of the Chairman of the Committee to-morrow.

I have received notice of a privilege motion from Sri R. Srinivasa Iyer regarding the publication of a news item, a report of his speech, in the " Madras Mail ", as incorrect. I shall have the matter examined and give my ruling tomorrow.

## III—CALLING ATTENTION TO LARGE SCALE UNEMPLOYMENT AMONG SALT MANUFACTURERS IN ARUMUGANERI.

MR. SPEAKER : The hon. Member Sri Selvarajan may move the motion given notice of by him under rule 40.

* SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, தாரங்கதாரா கெமிகல் வொர்க்ஸ் திருச்செந்தூர் தாலுக்கா ஆறுமுகநேரியை அடுத்து வேலே துவங்கி நடந்து வருகிறது. அந்தக் கம்பெனி உப்பு உற்பத்தி செய்வதற்கும், கட்டிடங்கள் கட்டிக் கொள்வதற்காகவும் வேண்டி ஏறத்தாழ 3 ஆயிரம் ஏக்கரா நிலம் பட்டாதார்களிடமிருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அல்லது சர்க்கார் நிலத்தை இதுகாறும் யார் அநுபவித்துக்கொண்டிருந்தார்களோ அவர்களிடமிருந்து திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சமீப காலத்திலேயே உற்பத்தியைத் தொடங்கக்கூடிய நிலேமையில் இன்றைக்கு அந்தக் கம்பெனி வேலே வளர்ந்து இருக்கிறது. அந்த இடத்தில் பல வருஷங்களாக உப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்தவர்கள் எல்லாம்—அவர்களுடைய பட்டா நிலங்களில் இருந்தும், சர்க்கார் நிலங்களில் இருந்தும்—நில ஆர்ஜிதம் செய்யும்போது வேலே இழந்துவிட்டார்கள். ஆனால் அது வரையில் அவர்கள் தங்கள் உடமைகளே எல்லாம் கூடச் செலவழித்து அந்த நிலங்களில் உப்பு உற்பத்தி செய்து ஜீவனம் செய்து வந்தார்கள். இப்படி இந்த நிலங்களேயே நம்பிக்கொண்டிருந்தது பல குடும்பங்கள். அந்த நிலேமையில் இந்த தாரங்கதாரா கெமிகல் வொர்க்ஸ்க்காக அந்த இடங்களே எல்லாம் எடுத்துக் கொண்டபோது பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வேலே இழக்கக்கூடிய நிலேமை ஏற்பட்டது. ஆனால் அப்போது அந்த இடங்களில் ஏற்கெனவே வேலேயில் இருந்து வந்தவர்களுக்கு, தகுதி உள்ளவர்களுக்கு இந்த தாரங்கதாரா கெமிகல் வொர்க்

[Sri M. S. Selvarajan] [18th March 1959

ஸில் வேலை கொடுப்பதாக உறுதிமொழி அந்தக் கம்பெனியாரால் கலெக்டருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இதைத் தொடங்குவதற்கு ஆரம்ப வேலைகள் பல செய்யப்பட்டபோதும்கூட மலபார் போன்ற பகுதிகளில் இருந்து அல்லது சென்னைப்பட்டணத்திலிருந்து பெரிய கம்பெனிகளுக்கு காண்டிராக்ட் கொடுக்கப்பட்டுவிட்டதன் காரணமாக அவர்கள் அவர்கள் ஆட்களைக் கொண்டு வேலையைச் செய்தார்கள். அதன் காரணமாக அந்தப் பிரதேசத்தில் முன்பு வேலை செய்து வந்தவர்களுக்கு, தகுதி வாய்ந்தவர்களுக்கு—அந்த ஜில்லாக்காரர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. அந்தப் பகுதியை அடுத்து இருந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு மிகச் சொற்பம். மேலும் அங்கே ஏற்கனவே உப்புத் தொழில் செய்து ஜீவ்னம் செய்தவர்களுக்கு அறவே வேலை இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகவும் வேலைவாய்ப்பு குறைந்திருக்கிறது.

இந்த நிலையில் கம்பெனியின் ஆரம்பக் கட்ட வேலைகள் எல்லாம் பூர்த்தியாகி உற்பத்தி வேலை—ஏப்ரல் மாத வாக்கில்—ப்ரொடக்ஷன் வேலை தொடங்க இருக்கிறது.

Mr. SPEAKER : The hon. Member **must be brief.**

Sri M. S. SELVARAJAN : **Yes Sir,** ப்ரொடக்ஷன் வேலை தொடங்கி நடக்கப்போகிற காலத்திலாவது—முன்பு அந்த நிலங்களையே நம்பி ஜீவனம் செய்து வந்த குடும்பத்தினர்களுக்குப் போதுமான வேலை—சர்க்காரும் அந்தக் கம்பெனியில் ஒரு பங்குதார் என்ற முறையில் டைரெக்டர் போர்டில் இடம் பெறும் ஆதலால்—கிடைப்பதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பட்டா நிலங்களை இந்தக் கம்பெனிக்காகக் கொடுத்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும்போது, சர்க்கார் நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு எக்ஸ்ரேஷியாவாக ஏக்கருக்கு 300 ரூபாய் முன்பு கொடுக்கப்போவதாகச் சொல்லப்பட்டது. இப்போது அந்தத் தொகையிலும்கூட 50 சத வீதம் கடனாகவும், பாக்கி 50 சதவீதம் இனாமாகவும் கொடுக்கப்போவதாக நினைக்கக்கூடிய நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல் அந்தத் தொகை முழுமையையும் இனாமாக அவர்களுக்குக் கொடுக்கப்படுவதோடுகூட, அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட காரணத்தினால் வேலை வாய்ப்பை இழந்து கண் கலங்கி இருக்கக் கூடியவர்களுக்கு—அந்தக் கம்பெனி ப்ரொடெக்ஷன் ஆரம்பிக்கும் போதாவது தகுந்த வேலை கொடுக்கக்கூடிய வழி வகைகளைச் செய்ய வேண்டும். அப்பகுதியில் உப்பு உற்பத்தி செய்ய லாயக்காக இன்னும் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலமிருக்கிறது. சர்க்காருக்குச் சொந்தமான அந்நிலத்தில் வேலையிழந்திருக்கும் தொழிலாளர்களுக்கு தனியாக உப்பு உற்பத்தி செய்து ஜீவிப்பதற்கு வசதியாக ஜாரி செய்து கொடுப்பது மிகவும் உதவியாக இருக்கும். அப்பகுதியில் உப்பு விலை மந்தம் காரணமாக ஏற்பட்டிருக்கும் உப்புத் தேக்கத்தால் உப்பளங்கள் பல வேலை துவங்காததால் ஏற்பட்டிருக்கும் கஷ்ட நிலைமையும் சேர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்களில் சர்க்காரின் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் தீர்மானம் என்னால் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

* The Hon. Sri R. VENKATARAMAN : Sir, the Government of India have granted a licence to Dhrangadhra Chemical Works, Limited, Bombay, under the Industries (Development and Regulation) Act, 1951, to establish a new industrial undertaking in the Tirunelveli district for the manufacture of caustic soda and soda ash. The Government have taken shares in the company to the extent of Rs. 10 lakhs. The company requested the Government to acquire an extent of 1,610·80 acres of private lands in Punnakayal, Athoor Casba, Sendamangalam and Kayalpatnam North villages of the Tiruchendur taluk required for the establishment of the Industrial undertakings for the construction of quarters for the staff, etc. An extent of 1,382·55 acres of land has already been acquired and handed over to the company. The company also requested the Government to lease out an extent of 978·38 acres of Government lands for the above purpose. The Board of Revenue has been instructed to permit the company to enter upon the lands pending finalisation of the proposal to lease out the lands so that the company could start construction of the factory. The landowners whose lands have been acquired were given compensation at the rate of Rs. 1,000 per acre for the lands acquired. The persons who encroached upon the Government lands and were manufacturing salt without the permission of the Government should necessarily have to be evicted before the lands could be granted to the company. The number of such persons who were evicted is only 138. Normally they are not entitled to any compensation as the encroachment was made without the permission of the Government. However, considering the special circumstances of the case, the Government have issued orders for the grant of an ex-gratia compensation at the rate of Rs. 300 per acre on the basis of half-grant and half-loan to enable the encroachers to rehabilitate themselves elsewhere.



18th March 1959] [Sri R. Venkataraman]

The company has begun construction of the factory and the installation of the machinery. It is learnt that the plant will be put into commission shortly and that the production will start by the end of April 1959. The company has already assured the Collector of Tirunelveli that such of the affected salt workers who satisfy their requirements would be preferred for employment in the factory to outsiders. When the factory starts production, most of the salt workers who have lost their livelihood by the acquisition of private lands and the leasing of Government lands, will, no doubt, be absorbed in the factory. The dislocation is only transitory and it cannot be helped especially when a very big soda ash and caustic soda factory is to be established in this part of the country.

## IV.—GOVERNMENT MOTION.

### ELECTION OF MEMBERS TO THE COMMITTEE ON ESTIMATES FOR THE FINANCIAL YEAR 1959–60.

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I beg to move—

"That, with reference to rule 163 of the Madras Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker to elect fourteen members to be members of the Committee on Estimates for the financial year 1959–60."

The motion was put and carried.

Mr. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable

[Mr. Speaker] [18th March 1959

vote, I fix 11 a.m. on Friday, the 20th March 1959, as the time within which nomination papers of candidates for election to the Committee on Estimates should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 3 p.m. on Friday, the 20th March 1959. I also fix 11 a.m. on Saturday, the 21st March 1959, as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely 14, a poll will be taken on Monday, the 23rd March 1959 between the hours of 9 a.m. to 1 p.m.

## V.—DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE IN THE YEAR 1958-59.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இவ் வருஷத்திய இரண்டாவது உபமான்யக் கோரிக்கையை இந்த சபைமுன் சமர்ப்பிக்கிறேன். முதல் உபமான்ய கோரிக்கை 1958-ம் வருஷத்தில் செப்டம்பர் மாதம் 196 லட்சம் ரூபாய் அளவுக்கு சமர்ப்பிக்கப் பட்டது. சபையும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த உபமான்ய கோரிக்கை ரூ. 22·2 கோடிக்கு. இதில் ரூ. 9·28 கோடி ரெவின்யூ கணக்கிலும் ரூ. 4·45 கோடி மூலதனக் கணக்கிலும், ரூ. 8·47 கோடி கடன்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 22 கோடி என்று சொல்லும்போது இந்த உபமான்யக் கோரிக்கையின் அளவு மிக அதிகமாக இருக்கிறது என்று அங்கத்தினர்கள் கருதலாம். ஆனால் இது அநேகமாக திட்ட அடிப்படையிலே அதிக செலவுகளின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காணும்போது அங்கத்தினர்கள் கவலையுறுவதற்கு இடம் இல்லை என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய திட்ட அளவு இந்த வருடத்திற்கு ரூ. 30·47 கோடி என்று நிர்ணயிக்கப் பட்டிருந்தது. நிதி வசதி கொஞ்சம் அதிகமாக ஏற்பட்ட காரணத்தால் இது விரிவாக்கப்பட்டு இப்போது திட்ட அளவு ரூ. 34·81 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை அங்கதினர்கள் கவனித்திருப்பார்கள். ஆகவே திட்ட அளவிலே ரூ. 4·34 கோடியாக உயர்ந்து இருப்பது வெவ் வேறு இனங்களிலே, அதிலே முக்கியமாக கல்விக்காக 82 லட்ச ரூபாய் முன்பு இருந்ததைவிட அதிகமாகவும், வைத்திய வசதிகளுக்காக 33 லட்ச ரூபாயும், பொது சுகாதாரத்திற்கு 13 லட்ச ரூபாயும் கூட்டுறவிற்கு 24 லட்ச ரூபாயும், சிவில் வொர்க்ஸின் கீழ் வெவ்வேறு வேலைகளுக்காக 162 லட்ச ரூபாயும் அதிகமாக கோரப்பட்டிருக்கிறது. சிவில் வொர்க்ஸின்கீழ் அதிகமாக இருப்பதற்கு பல்வேறு திட்டங்களை துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்பது காரணமாக இருப்பதோடு, முக்கியமாக ரோடுகளைச் சீரமைக்க முன்பு இருந்ததைவிட 25 லட்ச ரூபாய் அதிகமாக கோரப்பட்டிருப்பது இந்த உயர்வுக்கு முக்கிய காரணம். கம்யூனிடி டெவலப்மெண்ட், லோகல் டெவலப்மெண்ட் வொர்க்குக்காக இன்னும் 96 லட்ச ரூபாய் அதிகமாக கோரப்படுகிறது. மூலதனச் செலவைப் பார்க்கும்போது பெரிய நீர்ப்பாசன வசதிகளுக்காக 116 லட்ச ரூபாயும், சிறிய நீர்ப்பாசன வசதிகளுக்காக 14 லட்ச ரூபாயும் முன்பு கேட்டதைவிட அதிகமாக கோரப்படுகிறது. பாக்கி இருக்கக்கூடியது கணக்கு மாற்றங்களினால் ஏற்படக்கூடியது. கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஒரு தலைப்பில் செலவாகாமல் மீதம் இருந்தாலும், இன்னொரு தலைப்புக்கு அந்தப் பணத்தை உபயோகப் படுத்த முடியாது. அதற்கு தனியாக மான்யம் கோரித்தான் இன்னொரு தலைப்பின்கீழ் செலவழிக்க முடியும். கணக்கு மாற்றங்கள் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடியமற்ற உயர்வுகள்.



18th March 1959] [Sri C. Subramaniam]

கடன்களின் கீழ் 6 கோடி ரூபாய் எலெக்டிரிசிடி போர்டுக்கு அதிகமாக கொடுக்க இப்போது கோரப்படுகிறது. இந்த ஆண்டிலே கொடுப்பதையும் சேர்த்தால் 10 கோடியே 10 லட்சம் ரூபாய் எலெக்டிரிசிடி போர்டுக்கு கடனாக கொடுப்போம். பாக்கி, 42 லட்ச ரூபாய் சென்னை கார்ப்பொரேஷனுக்கு கடனாகவும், 50 லட்ச ரூபாய் ஸ்டேட் கோவாப்பரேடிவ் பாங்கிக்கு அரிசி கொள்முதல் செலவுக்காகவும், 32 லட்ச ரூபாய் நகர சபைகளுக்கு தண்ணீர் திட்டங்களுக்காகவும் கோரப்படுகிறது.

இப்போது கூடியவரை கணக்குகளை சரி செய்து எவ்வளவு இந்த ஆண்டில் செலவு செய்ய முடியுமோ அதை கவனித்து சபை முன்னால் வைக்கப்படுகிறது. சில கணக்குகளில் செலவாகாமல் திருப்பிக் கொடுக்கக் கூடிய தொகைகளையும் மற்ற தலைப்புகளில் அதிகமாக தேவையிருப்பதையும் பார்க்கும்போது 1958-59-ல் இப்போது திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி செலவாகும் என்று எதிர்பார்க்கலாம். ஆகவே இந்த உப மான்ய மதிப்பீடுகளை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று இந்த சபையை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959-60 –*cont.*

### DEMAND XIX—AGRICULTURE AND FISHERIES.

### DEMAND XX—ANIMAL HUSBANDRY.

### DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

MR. SPEAKER : We shall now proceed with the voting on Demands for grants. To-day, we will be taking up Demand XIX —Agriculture and Fisheries, Demand XX—Animal Husbandry and Demand XXXVIII—Capital Outlay on Agriculture. 9.30 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That Government be granted a sum not exceeding Rs. 3,38,20,600 under Demand XIX—Agriculture and Fisheries."

MR. SPEAKER : I understand that for this Demand, all Opposition Parties have agreed to support the Cut Motion of the hon. Member Sri N. K. Palanisami. Mr. Palanisami will now move the cut motion.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"That the allotment of Rs. 3,38,20,600 under Demand XIX —Agriculture and Fisheries—be reduced by Rs. 100."

(To urge upon the Government the necessity for fixing floor prices for grains procured from landholders and as well as for grains sold to consumers.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That Government be granted a sum not exceeding Rs. 98,39,200 under Demand XX—Animal Husbandry."

MR. SPEAKER : For this Demand, I understand that all Opposition Parties have agreed to support the Cut Motion of the hon. Member Sri A. R. Marimuthu.

[18th March 1959

SRI A. R. MARIMUTHU : Sir, I move—

"That the allotment of Rs. 98,39,200 under Demand XX—Animal Husbandry—be reduced by Rs. 100."

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That Government be granted a sum not exceeding Rs. 11,50,000 under Demand XXXVIII—Capital Outlay on Agriculture."

MR. SPEAKER : I understand that all Opposition Parties have agreed to support the Cut Motion of the hon. Member Sri V. K. Kothandaraman to this Demand. Mr. Kothandaraman will now move the cut motion.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

"That the allotment of Rs. 11,50,000 under Demand XXXVIII—Capital Outlay on Agriculture—be reduced by Rs. 100."

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது நான் மூன்று மானிய கோரிக்கைகளைப் பிரேரேபித்தேன். அவைகளில் ஒன்று விவசாயம், மீன் ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரு மானியம். மீனுக்கு என்று தனியாகவே ஒரு இலாகா சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். மீன் சம்பந்தமான விஷயங்கள் ஒரு தனி இலாகாவினால் கவனிக்கப்பட்டு வந்த போதிலும், கணக்கு சம்பந்தமான காரியங்களுக்கு அது விவசாயத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது ; ஆகவே கணக்கு விஷயங்களுக்கு விவசாயம், மீன் இரண்டும் சேர்ந்து ஒரு பிரிவாக இருக்கிறது. இது ஒரு விதத்தில் பொருத்தமாகவும் இருக்கிறது எனலாம். மீனை உணவுப் பொருளாகவும் கருதலாம், விவசாயப் பொருளாகவும் கருதலாம், மலையாளத்தில் மீன் பிடிக்கும் தொழிலை விவசாயம் என்றுதான் சொல்வார்கள். இருந்தாலும், மீன் இலாகா என்னுடைய கனம் சகாவாகிய வேருெரு அமைச்சரால் பரிபாலிக்கப்பட்டு வருவதால் மீன் துறையைப் பற்றி ஒரு விளக்கமான அறிக்கை (நோட்) சமர்பிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தின் முக்கியத்துவத்திற்கேற்றவாறு இந்த இலாகா மிகவும் விரிவாக, ஒரு பெரிய இலாகாவாக, அமைக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

இன்று, உணவு தானிய உற்பத்தி பெருக்கப்பட வேண்டும் என்றால், அதைச் செய்வது மட்டுமே போதாது ; மற்ற விவசாய உற்பத்தியும் பெருக்கப்பட்டாலன்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாது. ஆகவே மற்ற விவசாயப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதிலும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கியமாக வேறு என்னென்ன முறைகளைக் கையாளலாம், இப்போது கையாளப்படும் முறைகளில் என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்தறிந்து ஆலோசனைகள் சொல்லுவதற்கென ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தில் அனுபவமுள்ளவர்களும், விவசாயத்தில் அனுபவமுள்ளவரும் பிரதம எஞ்சினியராக இருந்தவருமான ஒருவரும், இக்கமிட்டியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டி நான் முன்பு குறிப்பிட்ட விஷயங்களைப் பரிசீலித்துக்



18th March 1959] [Sri M. Bhaktavatsalam]

கொண்டிருக்கிறது. இந்தக் கமிட்டியின் சிபாரிசுகள் வரும் எப்ரல் மாதத்தில் சர்க்காருக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவைகள் கிடைத்த பிறகு, கண்ட்ரோல் முதலிய திட்டங்களை சீராக் நடத்துவதில் கவனம் செலுத்தலாம்.

அதே மாதிரி, இந்த மன்றத்தின் மதிப்பீடுக் கமிட்டியார் இந்த ஆண்டில் விவசாய ஆராய்ச்சி நிலையங்கள், விவசாயப் பண்ணைகள், முக்கியமாக அரசாங்கமே ஏற்று நடத்தும் விதைப் பண்ணைகள் ஆகியவைகள் எவ்வாறு நடக்கின்றன என்று ஆராய்ந்து அதன் மூலம் அறிந்த குறைபாடுகளையும் மற்ற விஷயங்களையும், இவைகள் சீராக நடப்பதற்கான யோசனைகளையும் சமர்ப்பித்திருக்கிறார்கள். அரசாங்கம் இவைகளையும் பரிசீலித்து வருகிறது. அரசாங்கம் சிற்சில சிபாரிசுகளை ஏற்கெனவே ஏற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் எல்லாக் குறைபாடுகளையும் நீக்கி இவைகளை இன்னும் சீராக நடத்துவதற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி வருகிறது. இந்த விதைப் பண்ணைகளைப் பொறுத்த வரையில், நான் விடையளிக்கும்போது மேற்கொண்டு விளக்கம் கூறலாம் என்று நினைக்கிறேன்.

அதோடு உரம் மிகவும் முக்கியமானது. ரசாயன உரம் வேண்டியிருக்கிறது. அது எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவுதான் வினியோகிக்கப்பட்டு வருகிறது. ரசாயன உரம் மட்டுமே போதாது. இயற்கை உரமும் தயாரிக்கப்பட வேண்டும். இன்று இயற்கை உரத்தில் விசேஷ கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது. முக்கியமாக, பசுந்தாள் உரம், கம்போஸ்ட் உரம், 'நைட் ஸாயில்' உரம் ஆகிய உரங்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் விவசாய இலாகா விசேஷ கவனம் செலுத்தி வருகிறது.

அதே மாதிரி, சிறுபாசனத் திட்டங்களிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டங்கள் இன்னும் சீராக நடைபெறச் செய்வதிலும், புதிய புதிய திட்டங்களை எடுத்துக்கொள்வதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முக்கியமாக, சில ஆண்டுகளாகக் கைவிடப்பட்டிருந்த குடிதண்ணீர் மானியத் திட்டம் இப்போது மறுபடி எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள். அதோடு, ஃபில்டர் பாயிண்ட் வெல், ட்யூப் வெல், ஆர்டீஷியன் வெல் முதலிய கிணறுகளை வெட்டிக் கொடுக்கும் திட்டங்களிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது ; எந்தெந்தப் பிராந்தியங்களில் எந்தெந்த முறையில் பாசன வசதிகளை பெருக்க முடியுமோ, அந்தந்த முறையில் அந்தந்த பிராந்தியங்களில் பாசன வசதிகளைப் பெருக்குவதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மேலும், விவசாயிகள் இப்போது புதிய விவசாய முறைகளைக் கையாள்கிறார்கள். விவசாயிகள் புதிய விவசாய முறைகளை உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டு கையாண்டு உற்பத்தியைப் பெருக்கித்தான் வருகிறார்கள். விவசாய உற்பத்திப் பெருக்கம் சம்பந்தமாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு லட்சியத்தை வகுத்துக் கொண்டிருக்கிறோம். அதாவது, உணவு உற்பத்தியை 12,79,000 டன் அதிகமாகப் பெருக்க வேண்டும் என்ற லட்சியத்தை வகுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த லட்சியத்தை அடைவதில் கவனம் செலுத்தி வருகிறோம். 1957–58-ம் ஆண்டில் 3,20,000 டன் உணவுப் பொருள் அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் டிசம்பர் வரையில் அதற்குமேல் 3,20,000 டன் உணவு தானியம் அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. நமது லட்சியத்தில் அடைய வேண்டிய மீதி 6 லட்சத்திச் சொச்சம் டன் உணவு உற்பத்தி. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் இந்த லட்சியத்தை முழுதும் எய்திவிடுவதற்கு வேண்டிய முயற்சிகளையெல்லாம் செய்ய விரும்புகிறோம். ராஜ்யத்தில் ஒரு இடத்தில் உணவு உற்பத்தி சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக ஏற்பட்டிருக்கிறதென்றாலும், பல இடங்களில் மழையில்லாததால் பயிர்கள் வாடிப் போயிருக்கின்றன. ராமநாதபுரம் ஜில்லா,

[Sri M. Bhaktavatsalam] [18th March 1959

வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு பகுதி, திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு பகுதி, வேறு சில மாவட்டங்களில் சில பகுதிகள் ஆகியவைகளில் பயிர்கள் மழையின்மையால் வாடிப் போயின; இதன் காரணமாக கிஸ்தி வஜா செய்யப்பட வேண்டிய நிலைமையும்கூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு பக்கத்தில் உற்பத்தி பெருகியிருந்தாலும் மற்றொரு பக்கத்தில் பயிர்கள் சேதமடைந்திருக்கின்றன. திருச்சியில் பயிர்களுக்கு பூச்சிகளால் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் உணவு உற்பத்தி குறையாது, சென்ற ஆண்டில் கிடைத்த மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த ஆண்டில் உணவு உற்பத்தி எவ்வளவு என்பதை பின்னர்தான் நிச்சயமாக சொல்ல முடியும்.

விவசாய மானியத்தை கவனிக்கும்போது நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு அம்சம் விலைவாசி நிலை. அரசாங்கம் விலைகளை நிர்ணயித்திருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இதில், கண்ட்ரோலும்—அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட வேண்டியதும்—இருக்கிறது.

கனம் அங்கத்தினர்கள் பல பிரச்னைகளையும் யோசனைகளையும் குறிப்பிடுவார்கள். அவற்றை கவனிக்கிறேன். பின்னர் விடையளிக்கும்போது அவைகள் சம்பந்தமாகப் பேசுகிறேன்.

**MR. SPEAKER:** கனம் மந்திரிக்கு, பதிலளிக்க எவ்வளவு நேரம் வேண்டும்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** 45 நிமிடம் வேண்டும்.

**MR. SPEAKER:** Now the hon. Member Sri N. K. Palanisami will start the discussion. He will be given 15 minutes. The hon. Leader of the Opposition will speak before the Hon. Minister and he also will get 15 minutes. The rest of the hon. Members will get 10 minutes each.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR:** Sir, I may be given half-an-hour.

**MR. SPEAKER:** That means some other hon. Member will lose his chance. I have no objection.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR:** I will be as brief as possible. Even 25 minutes will be sufficient.

**MR. SPEAKER:** All right. The Hon. Minister will take 45 minutes for his reply and the hon. Leader of the Opposition, 30 minutes. The other hon. Members will get each 10 minutes.

* **SRI N. K. PALANISAMI:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இந்த ராஜ்யத்தில் முக்கியமானது. உணவுப்பிரச்னை, இந்த சர்க்கார் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே போதுமான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இன்று நமக்கு போதுமான விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. நம்மிடம் 10 லட்சம் டன் மார்க்கெட்டில் ஸர்ப்லஸ் இருக்கிறது.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** இப்போது மார்கெட்டில் ஸர்ப்லஸ் என்றால், அது இந்த ராஜ்யத்திற்குள்ளேயே புழங்கக்கூடியது. எனவே ஸர்ப்லஸ் நம்மிடம் நிறைய இல்லை, குறைவாகத் தான் இருக்கிறது.



18th March 1959]

* **SRI N. K. PALANISAMI:** இந்த ராஜ்யத்திலுள்ள உணவு தானியங்கள் வெளியே போகக்கூடாது என்ற கட்டுப்பாடு ஓரளவிற்கு இருக்கிறது. இவ்வளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தும், உணவு தானியம் போதுமானதாக இருந்தும், இந்த ராஜ்யத்தில் உணவு தானிய விலைவாசி இன்னும் குறையாமல் இருக்கிறதென்றால், நமது சர்க்கார் அனுஷ்டிக்கும் உணவுக் கொள்கை படுதோல்வி அடைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். தஞ்சாவூர் நெல் முன்பு கேரளத்திற்குப் போய்க்கொண்டிருந்தது. இப்போது அது அங்கேயும் போகமுடியாதபடி தடை செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் அரிசியை வேறு யாரும் சாப்பிடுவதில்லை. கேரளாதான் நமக்கு மார்க்கட் என்று சொன்னார்கள். அப்படி சொல்லி விட்டு நெல் போகாதபடி தடை செய்து விட்டார்கள். அதுமட்டுமல்ல. நமது நிதியமைச்சரவர்கள் அன்று சொல்லும்போது, ஆந்திரா அரிசி நமக்கு தேவையில்லையென்று சொன்னார்கள். திடீரென்று மத்திய அரசாங்கத்திற்கு இப்பொழுது ஆந்திரா அரிசி வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்கள். ஆந்திரா அரிசி அதிகமான விலையில் விற்கப்படுவதால் நமது ராஜ்யத்திற்கு அது வரவில்லையென்றும் ஆகவே நமக்குப் போதுமான அரிசி வேண்டுமென்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அறுவடையாகி ஒன்றரை மாதங்களாகி விட்டது. இது வரையில் 19,000 டன் தான் கொள்முதல் செய்ய முடிந்திருக்கிறது. உள்நாட்டில் 10 லட்சம் டன் விற்பனை செய்யக் கூடிய ஒரு நிலை இருந்தும் ஏன் 19,000 டன்தான் கொள் முதல் செய்ய முடிந்தது, தினம் ஏன் கொள்முதல் செய்ய முடியவில்லை. என்று கேட்கிறேன்? நமது அரசாங்கம் இரண்டு லட்சம் டன் கொள்முதல் செய்யப்போகிறதென்ற பிரச்னை இப்பொழுது இருக்கிறது. இன்றைய தினம் சர்க்கார் அனுஷ்டிக்கக்கூடிய ஒரு கொள்கை காரணமாகத்தான் இம்மாதிரி கொள்முதல் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றன. இந்த உத்திரவு போட்ட பிறகு, யாரிடமும் நெல்லோ, அரிசியோ இல்லையா? இருக்கக்கூடிய அரிசி நெல் இவைகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அக்ரிகல்சரல் அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டிலேயே சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் கொடுக்கக் கூடிய கடன் உதவிகள், உரம் போன்றவைகள் பெரிய பணக்காரர்களுக்கும் பெரிய நிலப் பிரபுக்களுக்கும் தான் கிடைக்கிறதே தவிர ஏழை விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை என்று அந்தக் கமிட்டியே சொல்லியிருக்கிறது. ஆகவே, பத்து பதினைந்து எக்கர்களுக்கு மேல் இருக்கக்கூடிய நிலப்பிரபுக்களிடமிருந்து எக்கர் ஒன்றுக்கு நாலு மூட்டை வீதமாவது லெவி என்று போட்டு வசூல் செய்தால் தஞ்சை ஜில்லாவிலிருந்து மட்டுமே இரண்டு, மூன்று லட்சம் டன் நமக்குக் கிடைக்கும். அங்கு, வலிவலம் தேசிகரிடம் மட்டுமே 2,000, 3,000 எக்கர் நிலம் இருக்கின்றது. அங்கு ஆயிரம் எக்கர்களுக்கு மேலுள்ள நிலப்பிரபுக்கள் 25 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, பத்து எக்கர்களுக்கு மேல் நிலம் உள்ளவர்களிடமிருந்து, எக்கர் ஒன்றுக்கு பத்து மூட்டையாவது லெவியாக வாங்க வேண்டும். அடுத்தபடியாக, செலவு போக, இன்ன விலைக்குத்தான் நெல் விற்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யவேண்டும். ஆக, மூன்று அல்லது நாலு லட்சம் டன் வேண்டுமானாலும் தஞ்சையிலிருந்தே நாம் ப்ரொக்யுவர் செய்ய முடியும். சர்க்கார் ஏன் இதைச் செய்ய மறுக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன்? அப்படிச் செய்யாது, தமது தோல்வியை ஏன் கேரளம், ஆந்திரப் பிரதேசம் இவைகள் மீது போடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்று நான் கேட்கிறேன்? இன்றைய தினம் ஓரளவு ஜில்லாவிற்கு ஜில்லா கட்டுப்பாடு இருக்கிறது. இதன் காரணமாக இன்னும் விலைவாசி அதிகப்படியாக போகக் கூடியது ஓரளவு இன்று தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இன்றைய தினம் இந்த உத்திரவு காரணமாக, எங்கு அதிகமாக நெல் விளைகிறதோ அங்கு குறைந்திருக்கிறது, பற்றாக்குறை ஜில்லாக்களில் விலை ஏறியிருக்கிறது. சர்க்கார் வியாபாரிகளிடம் 10 சதவிகிதம் கொள்முதல் செய்வது என்று வைத்துக் கொண்டு மீதி 90 சதவிகிதத்தை என்ன விலையில் வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம் என்று. சர்க்கார் உத்திரவு இருக்கிறது. சர்க்கார் மூட்டை

9-40 a.m.

ஒன்றுக்கு 38 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள், ஆனால் கொத்தவால் சாவடி போன்ற இடங்களில் ஒரு மூட்டை நெல் 40 ரூபாய்க்காவது கிடைக்கிறதா என்று பார்த்தால் கிடைப்பதில்லை, ஆனால் கூடுதலாக 16 ரூபாய் கொடுத்தால் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. ஒரு மூட்டை நெல்லின் கொள்முதல் 16 ரூபாய் என்று வைத்துக் கொண்டால் 20 ரூபாய்க்கு கூட கிடைப்பதில்லை. இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பெரிய நிலப்பிரபுக்கள் நெல்லை விற்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். இன்று பலர், லைஸென்ஸ் இல்லாமல் 400, 500 மூட்டைகளை வாங்கி சேமித்து வைத்திருக்கிறார்கள். இந்த ஒரு நிலையிருப்பதால்தான் விலைவாசி ஏறிக்கொண்டு போகிறது. ஆகவே, இதில் சர்க்கார் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆக, முக்கியமாக, குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும். அதோடு சர்க்கார் எந்தளவு ப்ரொக்யுவர்மெண்ட் அதிகமாக செய்ய முடியுமோ அப்படிச் செய்து கூட்டுறவு ஸ்டோர்கள் மூலம் மக்களுக்கு கொடுக்க வேண்டும். இன்று பத்து கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள், அப்படியிருக்க, எந்தளவில் கொள்முதல் செய்ய முடிகிறது என்று தெரியவில்லை. அந்த நெல் வியாபாரத்தை கூட்டுறவு முறையில் கொண்டு வந்து செய்தால்தான் இன்றைய பிரச்னையைத் தீர்க்க முடியும். ஆகவே, குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஏராளமாக உணவு தானியங்களை ப்ரொக்யுவர்செய்ய வேண்டும். மேலும், நிவாரணக் கடைகள் திறக்கப்படவேண்டும். எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கக் கூடாது. இன்ன விலைக்குத்தான் விற்க வேண்டுமென்று முறையிருக்க வேண்டும். அதற்கு ஏராளமான நிவாரணக்கடைகள் அவசியம். பழைய காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஊழல்கள் நமக்குத் தெரியும். ஆகவே தான், சர்க்கார் நிவாரணக் கடைகள் வைப்பதற்கு பயப்படுகிறார்கள். நிவாரணக் கடைகள் தொடங்காவிட்டால் விலைவாசியைக் குறைக்க முடியாது. தஞ்சை ஜில்லாவில் எலக்ஷனுக்கு முன்பு 2,000-க்கு மேல் நிவாரணக் கடைகள் இருந்தன. ஆனால் எலக்ஷன் முடிந்த பிற்பாடு அவைகள் 200 ஆக குறைந்து விட்டது. நிவாரணக்கடைகள் இல்லை என்பதால், விலை ஏறட்டும் என்று பதுக்கி வைக்கிறார்கள், பெரிய நிலச்சுவான்தார்கள் தங்களிடமுள்ள நெல்லை. ஆகவே நிவாரணக் கடைகள் அமைத்து ஏழை மக்களுக்கு நியாயமான முறையில் உணவு தானியம் கிடைக்கும் விதத்தில் ஸப்ஸிடைஸ் செய்யும் முறையில், வருமானம் குறைவாகக் கிடைக்கக்கூடிய கேரளா சர்க்கார்கூட ஒரு கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கமும் இதற்கு ஒரு கோடி ரூபாயாவது ஒதுக்கி வைத்து குறைந்த விலைக்கு ஏழை மக்களுக்கு உணவு தான்யம் கொடுக்கப்பட்டால்தான் இன்றிருக்கும் விலைவாசி குறையும். ஆகவே, சர்க்கார் இதில் உடனடியாக கவனம் செலுத்தி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது, இப்பொழுது ஒரு "பர்னிங் ப்ராப்ளமாக" இருக்கிறது. மக்களிடையே அதிருப்தி நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்பதை சர்க்கார் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. இதுவரையில் என்ன நடந்து வருகிறது என்று பார்ப்போம். மத்திய அரசாங்கம் ஒரு திட்டம் கொடுக்க வேண்டியது, அதை வைத்துக்கொண்டு சென்னை ராஜ்யம் எவ்வளவு உற்பத்தி செய்கிறது, எவ்வளவு உரம் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது, எவ்வளவு தக்காவி லோன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற பொதுவான திட்டத்தை வைத்துக்கொண்டுதான் விவசாய இலாகா வேலை செய்கிறதேயொழிய இந்த ராஜ்யத்திற்கு என்று இந்த சர்க்காரால் சொந்தமாக என்ன திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேட்கிறேன்? இந்த அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

Low morale in the agricultural services and frustration ensuing from the belief that agriculture hardly received attention that it



deserved, was treated in the past and is still being treated as a minor . . . The growing tendency of depending upon the Centre for taking action on subjects which are the responsibility of the States . . .

அந்தந்த மாகாணங்களுக்கு சொந்தமாக கிராமவாரியாக ஒரு திட்டம் இருக்க வேண்டும்.

திட்டமென்றால், பொதுவாக ஒரு ராஜ்யத்திற்கு போடக்கூடிய திட்டமாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு கிராமத்திற்கும், அபிவிருத்தி திட்டங்கள் போடப்படவேண்டும், ஒவ்வொரு பிர்க்காவிற்கு அபிவிருத்தி திட்டங்கள் போடப்படவேண்டும். ஒவ்வொரு தாலுக்காவிற்கும் இன்னின்ன அபிவிருத்தி திட்டங்கள் என்று போட வேண்டும், இப்படியாக நமது ராஜ்யத்தில் அபிவிருத்தி திட்டங்கள் போடப்பட்டிருக்கிறதா? என்று நான் கேட்கிறேன். இன்று விவசாயத்திற்கு மிகவும் இன்றியமையாதது தண்ணீர். 1928 and 1934 பாமின் கமிஷன் ரிப்போர்ட்டை பாருங்கள். விவசாயிகளுக்கு தண்ணீர் அவசியம், அந்தத்தண்ணீரை எப்படி கொடுப்பது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விவசாய இலாகா அதிகாரிகள் நேரடியாகப் போய் எந்தெந்த இடங்களில் கிணறுகள் வெட்ட முடியுமோ, அங்கு கிணறுகள் வெட்டி, அந்தந்த இடங்களிலுள்ள மக்களால் பணம் கொடுக்கமுடியாவிட்டாலும் கூட சர்க்காரே கிணறுகளை வெட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒன்றிரண்டு இடங்களில் பில்டர் பாயின்ட் கிணறுகள் தோண்டுவதால் பிரயோஜனமில்லை. கிணறுகள் வெட்டுவதற்காக சர்க்காரால் ஆயிரம் ரூபாய் மான்யம் கொடுக்கப்படுகிறது. ஆனால் கிட்டத்தட்ட நாலைந்து வருடங்களாக அந்த மான்யம் கிடைக்கப்படுவதில்லை. ஆகவே, இந்த மான்யம் தொடர்ந்து கொடுக்கப்படவேண்டும். பல பகுதிகளில், குறிப்பாக எங்கள் பகுதியில் 14, 15 வருடங்களாக மழையே கிடையாயது. குறைந்த மழையுள்ள பிரதேசமாகும் எங்கள் பிரதேசம். ஆஸ்ட்ரேலியா போன்ற பிரதேசங்களில் ஏரிகளில் "ஆல்கஹால்ஸ்" என்ற மருந்தைத் தடவி, ஜாஸ்தி "எவாப்பரேஷன்" ஆகாமல் தடுக்கிறார்கள். அப்படி இந்தியாவிலும் பரிசீலனை செய்து வருவதாக அறிகிறோம். அடுத்தபடியாக, செயற்கை மழை குறித்து இன்று அபிப்பிராய பேதம் இருக்கிறது. எந்தத் திட்டமானாலும், கொஞ்சம் பேர்கள் அது பலனளிக்கும் என்றும், சிலர் அது பிரயோஜனப்படாது என்றும் சொல்வார்கள். இந்த செயற்கை மழை உண்டு பண்ணுவதற்காக ஆராய்ச்சிக்கு குறைந்த தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு, ஏன் இரண்டு, மூன்று லட்சமாவது ஒதுக்கி அதை நல்ல முறையில், மக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் செய்யக்கூடாது என்று கேட்கிறேன்? இன்னும் மைனர் இர்ரிகேஷன் திட்டத்திற்கு 5 வருஷங்களுக்கு ரூபாய் 5,45,00,000 தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எந்த அளவுக்கு பிரயோஜனமாக இருக்கும்? இது போதுமா என்று கேட்கிறேன். நம் மாகாணத்தில் போதுமான பெரிய திட்டங்களும் கிடையாது. ஆகவே, சிறிய பாசன திட்டங்களுக்காவது சர்க்கார் ஏன் அதிகப்படியாகப் பணம் ஒதுக்கி ஏன் சரியான முறையில் வழிவகை செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக உரம் உற்பத்தியை எடுத்துக்கொள்ளலாம். போன வருஷம் ஒண்ணேமுக்கால் லட்சம் டன்தான் கொடுத்தார்கள். அடுத்த வருஷத்திற்கு 3 லட்சம் டன் தேவை என்று சொன்னார்கள். ஆனால் அந்த அளவுக்கு கொடுக்கப்படவில்லை. மத்திய சர்க்கார் 50 சதவிகிதம்தான் கொடுக்கிறார்கள் என்று சொல்லலாம். அது போதாது. அதுவும் சரியாக வந்து சேரவில்லை. ஆகவே, அக்ரிகல்சர் அட்மினிஸ்ட்ரேடிவ் கமிட்டி சொன்னது போல், மத்திய சர்க்காரிடத்திலிருந்து நமக்கு கிடைக்காவிட்டாலும் கூட, வேறு இடத்தில், கிடைக்கக்கூடிய இடத்திலாவது வாங்கி விவசாயிகளுக்கு போதுமான உரம் கொடுக்க வேண்டும்.

[Sri V. Arunachala Thevar] [18th March 1959

அடுத்த வருஷம் என்னென்ன வேலை செய்ய வேண்டும் என்று ஒரு எஸ்டிமேட் தயார் செய்ய வேண்டும். ஒரு சிறிய விதைப் பண்ணையிலே ஏராளமாக நஷ்டம் ஏற்படுகிறது என்பதைப் பார்க்கும்போது அதற்கு அர்த்தமே இல்லை. பெரிய பெரிய டீ எஸ்டேட்டுகளில், 1,000 ஏக்கருள்ள இடங்களில் எஸ்டிமேட் போட்டு, அதன்படிதான் வேலை செய்கிறார்கள். சாதாரணமாக அதில் களவு போனாலும் கூட, அந்த எஸ்டிமேட்டிற்குள்தான் இருக்க வேண்டும். எஸ்டிமேட்டிற்கு மேலே எந்தச் செலவும் செய்ய முடியாது. ஆனால் நம் அரசாங்கத்தில் அம்மாதிரி சர்க்கார் உத்தியோகஸ்தர்களை வைத்து எஸ்டிமேட் போடுவதில் அர்த்தம் இல்லை. பக்கத்தில் பாசன வசதி உள்ள இடங்களிலுள்ள விவசாயிகள், வானம் பார்த்த பிரதேசங்களிலுள்ள விவசாயிகள் 5, 6 மெம்பர்கள் கொண்ட ஒரு கமிட்டி போட்டு, அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு, அடுத்த வருஷத்தில் என்னென்ன செலவு எந்த வகையில் செய்யலாம் என்று திட்டம் வகுத்து, எஸ்டிமேட் தயார்செய்து இந்தப் பண்ணைகளில் வேலைகள் செய்ய ஆரம்பித்தால், அதில் நஷ்டம் ஏற்படுவதற்கு மார்க்கமே கிடையாது. அந்த எஸ்டிமேட்டிலுள்ளபடிதான் வேலைகளைச் செய்ய வேண்டும். ஆகவே நான் என்ன சொல்லுகிறேன் என்று கேட்டால், காடாரம்பப் பிரதேசங்களிலுள்ள சில விவசாயிகளையும், நீர்ப்பாசன ஏரியாவிலுள்ள ஆற்றுப் பாய்ச்சல் பிரதேசங்களிலுள்ள சில விவசாயிகளையும் கொண்ட கமிட்டி அமைத்து, அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு, பிறகு ஒரு திட்டம் வகுத்தால், மிகவும் நல்ல முறையில் இந்தப் பண்ணைகளில் வேலைகள் நடைபெறும்.

10 a.m. ஆனால் உண்மையாகவே ஒரு மிராசுதார் ஏராளமான நிலங்களை வைத்திருந்த போதிலும் நிலங்களில் உழுகின்றவனுக்குத் தெரியக்கூடிய அளவுக்கு உழவுத் தொழிலைப் பற்றியோ அல்லது விவசாயத்தைப் பற்றியோ பெரிய மிராசுதாருக்குத் தெரியாது. "பள்ளிக்கணக்கு புள்ளிக்கு ஆகாது" என்று சொல்வதுபோல் படித்தவர்கள் சில அபிப்பிராயங்களைச் சொல்லலாம். ஆனால் அதை செய்வதுதான் கடினம். குற்றம் சொல்லக் கூடியவர்கள் விவசாயத்தில் எந்த மாதிரியான கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை புரிந்துகொள்ள முடியாது. விவசாயத்தில் வேலை செய்கின்றவர்களுக்குத்தான் விவசாயத்தைப் பற்றி நன்கு தெரியும். ஆகவே விவசாயிகளுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு இந்த பண்ணைகளை நடத்த வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பகுதியாகிய புதுக்கோட்டைப் பகுதியை எடுத்துக்கொண்டால் இந்த வருஷம் பஞ்சம் மிகுதியாக இருக்கிறது. மழை என்பதே கிடையாது. இதைப் பற்றி நான் அடிக்கடி இந்த மன்றத்தில் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். அந்தப் பகுதியில் இந்த வருடம் விவசாயம் அதிகமான அளவில் நடைபெறாத காரணத்தால் அங்கு உரம் அதிகமாக செலவழிந்திருக்க முடியாது. இந்த வருஷத்திற்கு அரசாங்கம் கொடுத்த உரம் எந்த விதத்தில் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். புதுக்கோட்டையில் கீரனூர் தாலுகா கீரனூர் என்ற இடத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் இருக்கும் அம்பாசத்திரம் என்கிற இடத்தில் உரம் வியாபாரம் செய்யும் வியாபாரி ஒரு கிடங்கு வைத்திருக்கிறார். இந்த இடத்தில் மேற்படி கிடங்கு வைக்கவேண்டிய அவசியம் என்ன என்பதைப் பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும். இவ்வருஷம் குளத்தூர் பகுதியிலும், திருமயம் பகுதியிலும் ஆலங்குடிப் பகுதியிலும் இலுப்பூர் பகுதியிலும் உரம் அதிகமாக செலவழிந்திருக்க நியாயமே இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு பலபல ஜில்லாக்களிலிருந்து ஏஜெண்டுகள் வந்து உரத்தை எடுத்து வியாபாரம் நடத்திவருகிறார்கள். எந்தெந்த வியாபாரிகள் எந்தெந்த முறையில் வியாபாரம் நடத்தினார்கள் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாயம் செய்கின்ற காலத்தில் பல இடங்களிலும் பூச்சித் தொந்தரவுகள் ஏற்படுகிறது. இதைப் போக்கடிக்க வேண்டுமென்றால் பூச்சி மருந்துகளை வாங்கி தெளித்து



18th March 1959] [Sri V. Arunachala Thevar]

பயன் பெற வேண்டும். ஆனால் விவசாயிகளால் இந்த முறையை உடனடியாக மேற்கொள்ள முடிவதில்லை. இதன் காரணமாக பயிர் அழிந்து போகிறது. ஆகவே இப்பகுதிகளில் அரசாங்கம் முயற்சி எடுத்து அரசாங்க உத்தியோகஸ்தர்களை கொண்டே இந்த மருந்தை இனமாக தெளித்து விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மைனர் இறிகேஷன் சம்பந்தமாக ஏரிகள் மண் மேலிட்டு மேடுகளாக பல இடங்கள் இருக்கின்றன, அதோடு செடிகள் கொடிகள் எல்லாம் படர்ந்து வரத்துவாரிகள் மூடி தண்ணீர் வரமுடியாதபடி பூமி காய்ந்து கிடக்கின்றது. சில சமயங்களில் இந்த இடத்தில் தண்ணீர் வந்தாலும் உதாரணமாக ஒரு மணி நேரத்துக்கு வருகின்ற மழைத் தண்ணீரை எல்லாம் காய்ந்துபோய் கிடக்கின்ற பூமி குடித்து விடுகின்றது. ஏரிகளுக்குத் தண்ணீர் வருவதே இல்லை. ஆகையால் இந்த வரத்துவாரிகளை எல்லாம் அதாவது சப்ளை சானல்களை எல்லாம் உடனடியாக சரியானபடி மராமத்து செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காடுகள் சம்பந்தமாக, சரியான முறையில் காடுகள் பாதுகாக்கப்படுவதில்லை. புதுக்கோட்டை வாரரிப்பூர் பிர்க்காவில் அரசாங்கம் சவுக்குத் தோப்புகளை வளர்க்கிறார்கள். இவ்விதம் வளர்த்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அதே இடத்திலிருந்தே பிரைவேட் நபர்கள் ஏராளமான மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள். வெட்டிக்கொண்டு போவது மட்டுமல்ல, அவர்களுக்கு அங்கே ஏதோ பாத்தியம் இருப்பதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொது ஜனங்கள் அரசாங்கத்துக்கு தந்திகளும் மகஜர்களும் கொடுத்திருக்கிறார்கள். நான் இந்த இடத்தில் ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். அதாவது தனிப்பட்ட நபர் யாருக்குச் சொந்தமாக இருந்தாலும் 12 வருடங்கள் அனுபவம் இருந்தால் அவர்களின் அனுபோக பாத்யத்தைக்கொண்டு அவர்களுக்கே சொந்த பாத்தியமாகும் என்று சிவில் கோர்டுகளில் அனேக தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 12 வருடம் அனுபவம் இருந்தால் அட்வர்ஸ் பொஸஷன் பாத்தியதை கொண்டாடலாம் என்ற முறை இருந்து வருகிறது. அவ்விதம் பார்க்கும்போது மாஜி புதுக்கோட்டை சர்க்காரும் சென்னை சர்க்காரும் 40, 50 வருடங்களுக்கு முன்னாலிருந்தே இதில் சவுக்கு சாகுபடி செய்திருக்கிறார்கள். 1935-ம் வருடம் மூன்றாவது முறையாக அரசாங்கம்தான் சவுக்கு சாகுபடி செய்திருக்கிறது. ஆகவே பிரைவேட் நபர்கள் இதிலிருந்து மரங்களை வெட்டுவதற்கு நியாயமும், சட்டமும் இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இதை அரசாங்கம் கவனித்து இந்த மரங்களை வெட்டினவர்களின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்ட நபர்களுக்கு பாத்யதை இருப்பதாக உரிமை கொண்டாடினால் அவர்கள் சிவில் கோர்ட்டில் நடவடிக்கை எடுத்து நியாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

*SRI K. G. PALANISWAMY GOUNDER : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயத் துறையில் நம் நாட்டை நல்ல முறையில் முன்னுக்கு கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் பல வழிகளிலும் திட்டமிட்டு வேலை செய்துவருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். அதில் எங்கள் தாராபுரம் தாலுகாவினுடைய நிலைமையைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு நல்ல முறையில் தெரியும் என்று நினைக்கிறேன். எப்போதும் பஞ்சப் பிரதேசமாகவே இருந்து வந்திருக்கிறது. எப்போதும் பஞ்சப்பாட்டையே நாங்கள் பாடிக்கொண்டிருக்கிறோம். எங்கள் பிரதேசம் விவசாயத் துறையில் மிகவும் பின் தங்கியிருக்கிறது. எங்கள் தாலுக்கா

சுமார் ஐந்து லட்சம் ஏக்கர்கள் கொண்ட பிரதேசம். இவ்வளவு பெரிய பிரதேசமாக இருந்தும் அது பிற்பட்ட பிரதேசமாகவே இருக்கிறது. இன்னும் அந்த பிரதேசத்தை அதே நிலையில் வைத்திருக்காமல் விவசாயத் துறையில் நல்ல முறையில் அந்த பிரதேசம் இருப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பத்தை உண்டுபண்ண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அங்கு விவசாயத் துறையில் ஈடுபட்டு இருக்கக்கூடியவர்கள் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பரம்பிக்குளம் திட்டம் உருவாகிக்கொண்டிருககிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக எங்கள் தாலூகா முழுப்பயனையும் பெறுவதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் அதாவது இரண்டு மாதங்களுக்கு முன்னால் பொள்ளாச்சியில் நடைபெற்ற விவசாய மகாநாட்டில் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களும், மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டார்கள். அதில் விவசாய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், தாராபுரம் தாலூகாவுக்கு லோயர் பவானியிலிருந்து போதுமான அளவுக்கு வசதி செய்துகொடுக்க முடியவில்லை, இந்த இடத்திற்கு வசதி செய்து தரவேண்டும் என்று கடைசி நேரத்தில்தான் கேட்டார்கள், அதனால் சுமார் 25 ஆயிரம் ஏக்கர்களுக்குத் தான் அப்டே ▪தி நந்த சூழ்நிலையில் கொடுக்க முடிந்தது என்று சொன்னார்கள். அந்த முறையில் நான் விவசாய அமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றேன். மனிதப் பண்பு படைத்தவர்கள் யாரும் தாராபுரத்தை ஞாபகத்தில் வைத்து அதற்கு வசதி செய்து கொடுப்பார்கள் என்றும் குறிப்பிட்டார்கள், இந்த வார்த்தைகளைச்சொன்னதற்காக நான் அமைச்சர் அவர்களை மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன், அதேபோல் எங்கள் தாலூகாவை மறந்துவிடாமல் அங்கு இருக்கும் பஞ்ச நிலையைப் போக்குவதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிரதேசம் எந்த நிலையில் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாதது அல்ல. பொள்ளாச்சி தாலூகாவை எடுத்துக்கொண்டால் அது சுமார் $3\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் கொண்டதாகும். அதோடு பொள்ளாச்சி தாலூகாவில் ஓரளவு நல்ல மழை பெய்ததின் காரணமாக $3\frac{1}{2}$ லட்சம் ஏக்கர்களில் ஓரளவுக்கு நல்ல சாகுபடிக்கு கொண்டுவர முடிந்திருக்கிறது. மேலும் இந்தத் திட்டத்திலிருந்து பூரா பயனும் நாங்கள் பெறவேண்டும் என்று பொள்ளாச்சி தாலூகாவிலுள்ளவர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள் செவிசாய்க்காமல் தாராபுரம் தாலூகாவில் நிரந்தரமாக இருக்கும் பஞ்ச நிலைமையை போக்குவதற்காக அங்கு இருக்கக்கூடிய 5 லட்சம் ஏக்கர்களில் ஓரளவு சாகுபடி செய்யவேண்டும். அங்கு விவசாய உற்பத்தியே இல்லாமல் அந்த பிரதேசம் வரண்ட பிரதேசமாக இருக்கிறது என்பதை மனதில் கொண்டு குறைந்தது அந்த பிரதேசத்தில் ஒரு லட்சம் ஏக்கர்களுக்காவது நீர்ப்பாசன வசதி செய்து தரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு இங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் வாங்கின கடனையெல்லாம் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அங்குள்ள மக்களுக்கு போரிங் செட் வைத்து ஏதாவது ஓரளவுக்கு கிணறுகளில் தண்ணீர் வசதி செய்து கொடுத்துவிட்டு கடன்களை திருப்பிக் கேட்பதாக இருந்தால் மக்கள் சந்தோஷத்தோடு கொடுப்பார்கள். அதல்லாமல் ஒன்றும் செய்யாமல் கஷ்டப்படுகின்ற காலத்தில் கடனை திருப்பிக் கேட்டால் மக்கள் சந்தோஷத்தோடு கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக பிர்க்காவிலும் ஒவ்வொரு இடத்திலும் தனித்தனியாக போரிங் செட் வைத்து குடிதண்ணீர் கிடைக்கின்ற அளவுக்காவது வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, மண் அரிப்பு திட்டத்தின் மூலமாக எங்கள் பிரதேசத்தில் நல்ல பிரயோசனம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டதின் காரணமாக ஓரளவு சில இடங்களில் குடி தண்ணீர் வசதி ஏற்பட்டிருக்கின்றது.

அதைப்போல எங்கள் தாலுகா முழுவதற்கும் மண் அரிப்புத் திட்டத்தை விஸ்தரித்துக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய கூலிக்கும், இதரத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய கூலிக்கும், நிறைய ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. ஒரு விவசாயத் தொழிலாளிக்கு சாதாரணமாக தினம் ஒன்றுக்கு 1 ரூபாய் கூலி கிடைக்கிறது. இதரத் தொழிலாளிகளுக்கு அரசாங்கம் நல்ல பாதுகாப்பும், தகுந்த கூலி கிடைக்கக்கூடிய நிலையையும் செய்திருக்கிறது. விவசாயத் துறையில் வருமானம் குறைவாக இருப்பதின் காரணமாக கிடைக்கக் கூடிய கூலி குறைவாக இருக்கிறது. இதரத் தொழில்களில் நல்ல முறையில் வருவாய் கிடைப்பதால், அவைகளில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு நல்ல கூலி கிடைப்பதற்கு அரசாங்கம் பாதுகாப்பு கொடுத்திருக்கிறது. விவசாயத் தொழிலாளிக்கு குறைந்தது மாதம் ஒன்றுக்கு—மில் தொழிலாளிகளுக்குக் கிடைக்கக் கூடிய அளவு இல்லாவிட்டாலும் கூட—100 ரூபாய் அளவுக்காவது கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் விவசாயத் தொழிலில் ஈடுபட மக்கள் அதிகமாக முன்வருவார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை விவசாயத்தில் மக்கள் ஈடுபடுவதில் மிகவும் பிற்போக்காக இருக்கிறது. வாலிபர்களாக இருப்பவர்கள் விவசாயத்தில் ஈடுபட விரும்பவில்லை. விவசாயத் தொழிலை விட்டுவிட்டு மற்றப்படி பியூனாகப் போகலாமா, மில்லுக்குப் போகலாமா அல்லது இதரத் தொழில்களுக்கு போகலாமா என்று அலைகிறார்கள் ஆகையால் விவசாயத் தொழிலுக்கு பாதுகாப்பு அளித்து அவர்களுக்கு நூறு ரூபாய் அளவுக்கு வருமானம் கிடைக்க அரசாங்கம் வழி செய்ய வேண்டும். விவசாயத்திற்கான பொருள்களின் விலைவாசிகளை நிர்ணயம் செய்து, இதரப் பொருள்களின் விலைவாசிகளை அனுசரித்து விவசாயிகளுக்கு நல்ல முறையில் உற்பத்தி செய்ய அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டும். இந்த நிலையில் அரசாங்கம் இதைச் செய்து கொடுக்காவிட்டால், 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு—இன்றைக்கு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடைய காலம் ஆகிவிட்டால்—அடுத்த ஜெனரேஷனில் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு யாரும் இருக்க மாட்டார்கள் என்று அமைச்சர் அவர்களுக்கு உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையிலே போனால் எந்த விலையையும் கட்டுப்படுத்த முடியாது. உற்பத்திப் பெருக்கம் இருக்காது. ஆகவே இந்த விஷயத்தில் அமைச்சர் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் ஏரியாவிற்கு பயிர் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பரீட்சார்த்தமாகவாவது பயிர் இன்ஷ்யூரன்ஸை ஏற்படுத்த வழி வகை செய்து கொடுக்க வேண்டும்.

விவசாயத்திற்கு உறுதுணையாக, மக்களுக்கு உறுதுணையாக கால்நடை செல்வங்கள் நமது மாகாணத்தில் நிறைய இருக்கின்றன. காங்கேயத்தில்—நமது மாகாணத்தில் மட்டுமல்ல—இந்தியாவிலேயே பெயர்போன கால்நடைச் செல்வங்கள் இருக்கின்றன. அரசாங்கம், கால்நடை வளர்ப்பில் மிகுந்த அக்கறை காட்டி இந்த விஷயத்திலே வழி வகைகளைச் செய்து வருகிறார்கள். காளைக் கன்றுகளுக்கு ஸப்ஸிடி கொடுத்து அவைகளைப் பெருக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் போல கிடாரிக் கன்றுகளுக்கும் ஸப்ஸிடி கொடுத்து காங்கேயம் கன்றுகளைப் பெருக்க அரசாங்கம் ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடைகளுக்கும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்படுத்தலாம். கால்நடைகளை நல்ல முறையில் வளர்க்க இன்னும் அரசாங்கம் அதிகப்படியான ஒத்துழைப்பும் உற்சாகமும் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வெட்டரினரி டாக்டர்கள் இருக்கிறார்கள், காலேஜ் படிப்பு முடிந்தவுடனே, பாக்கி எம்.பி., பி.எஸ். டாக்டர்களைப் போல, பிரைவேட்டாக தொழில் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அவர்களுக்கு நல்ல

இருக்கிறார்கள். ஏதோ செய்து தருகிறோம், மகாநாடு கூட்டுகின்றோம், நாங்கள் வந்து பார்க்கிறோம் என்ற அளவிலே இருந்துகொண்டிருப்பது போதாது. நான் சொல்லக்கூடிய திட்டம், கொடுத்த திட்டங்கள் மிகக் குறைந்த செலவில் ஏற்படக்கூடியவைகளாக இருக்கின்றன. அதனை அரசாங்கம் உடனடியாகச் செய்து தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பெருக்குவதற்கு முதுகு எலும்பு போல் இருக்கும் விவசாயிகளை நாம் ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல வசதிகள் அளிக்கவேண்டுமென்று நான் முதலிலே எடுத்துச் சொன்னேன். கிராமங்களிலே விவசாயிகளுக்கு ஒன்றும் தெரிவது இல்லை; அவர்களுக்குத் தெரியப்படுத்துவதும் இல்லை. அவர்களை உழைக்கக்கூடிய மாடுகளாகத்தான் கருதிவருகிறார்களே தவிர, அவர்களை மனிதர்களாகக்கூட மதிப்பதில்லை. அவர்களும் நம்முடைய மக்கள்; அவர்கள்தான் உணவு ஊட்டுகிறார்கள்; நம்முடைய ராஜ்யத்திற்கே அவர்கள்தான் ஆணி வேர் என்ற எண்ணம் இன்னும் மற்றவர்களிடத்திலே உதயம் ஆகவில்லை. அவர்களுக்கு வசதி செய்வதோடு புதிய முறைகளை அனுஷ்டிக்கும்படி செய்ய வேண்டும். அவர்களுக்கு என்ன வசதிகள் அளிக்கப்படுகின்றனவோ அந்த வசதிகள் யாவற்றையும் அவர்கள் அறிந்துகொள்ள முடியாமல் இருப்பதால் அவர்களிடம் அடிக்கடி நாம் போய் கூறவேண்டும். அவர்களுககு கொடுக்கும் கடன், உரம் மற்றவையெல்லாம் பலதரம் அவதிப்பட்டு அலைந்து ஒரு தரத்திற்குப் பத்து தரம் போய்க் கேட்டு கஷ்டப்படாமல் அவர்களுக்கே போய்ச் சேரும்படியாகச் செய்ய வேண்டும். அவர்களிடத்தில் நாமே போய் அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதோடல்லாமல் அவர்களை அலையவிட்டு கஷ்டப்படுத்துவது ஆகாது, கூடாது, நாட்டுக்கு நல்லது ஆகாது என்று சொல்லிக்கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **Sri S. C. SADAYAPPA MUDALIAR** : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச நான் முன்வந்துள்ளேன். பருவ மழை தவறியும், விவசாயத்திற்கு பூச்சித் தொல்லை போன்ற இடைஞ்சல்கள் ஏற்பட்டும் உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது. விவசாயிகளுக்கு நாம் செய்து கொடுத்திருக்கும் பல நன்மைகள் காரணமாக விவசாய உற்பத்தி அதிகரித்திருக்கிறது. புள்ளிவிவரப்படி உற்பத்தி அதிகப்படுத்தியிருக்க முடியாது என்று நினைத்தபோதிலுங்கூட, இப்பொழுது பார்க்கின்றபோது, எங்கும் உணவுச் சங்கடங்கள் ஏற்பட்டதாக இல்லை. எங்கும் உணவு மக்களுக்கு கிடைக்கிறது. ஆனால், விலைதான் கூடுதலாக இருக்கிறதேயொழிய உணவு இல்லை என்ற நிலைமை எங்குமே ஏற்படவில்லை. இந்த நிலையைப் பார்க்கின்றபோது, உணவு உற்பத்தி சர்க்காருடைய உதவியினால் அதிகரித்திருக்கிறதென்பதை நன்றாக உணர முடிகிறது. உற்பத்தி அதிகரித்திருப்பது போதுமா, இன்னும் அதிகரிக்க விவசாயிகளுக்கு என்ன செய்யவேண்டும் என்று நமது அமைச்சர் அவர்கள் நன்றாகக் கவனித்து விவசாயிகளுக்கு அடிக்கடி ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களைப் போக்குவதற்கு முன்வரவேண்டும்.

விவசாயத்திற்கு முக்கியமாக வேண்டியது உரம். இயற்கை உரத்தை பயன்படுத்தும் முறைகளைப்பற்றியெல்லாம் பிரசாரத்தின்மூலம் கனம் அமைச்சர் அவர்களும் அவர்களுடைய இலாகாவும் விவசாயிகளுக்கு எடுத்து காட்டுகின்றார்கள். ஆனால், போதுமான அளவு உரம் கிடைத்தாலொழிய விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியாது. பிரசாரத்தை இன்னும் தீவிரப்படுத்தி இயற்கை உர உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு உரம் போய்ச் சேருவதற்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. குறிப்பாக, அமோனியம் ஸல்பேட் விவசாயிகளுக்குக் கிடைப்பது அரிதா இருக்கிறது. ஆனால், மார்க்கெட்டிலே சர்க்காரால் நிர்ணயி





செய்யப்பட்ட விலைக்கு விவசாயிக்குக் கிடைக்கவில்லை. "போதுமான அளவு கிடைக்கவில்லை, அதனால் சங்கடங்கள் அதிகரித்திருக்கின்றன" என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஆனால், மார்க்கெட்டிலே விவசாயிகளுக்கு அதிகமாக உரம் வாங்க முடிகிறது என்றால் மார்க்கெட்டிலே அது எப்படி வருகிறது, எங்கிருந்து வருகிறது என்பதை நாம் கவனித்து, தகுந்த கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டும். இப்படி, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகளுக்கு வேண்டிய உரம் போன்றவற்றை தரும் விஷயத்தில் அதிகச் சிரத்தை காட்டி, தனிப்பட்ட நபரிடத்திலோ மார்க்கெட்டிலோ உரம் விற்பதற்குக் காரணம் என்ன என்று கவனித்து நேர்மையான முறையிலே நடைபெறுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய ஜில்லாவில் பருவ மழை தவறியும், பூச்சித் தொந்தரவுகள் அதிகமாக இருந்தும், விவசாயிகள் ஓரளவு உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இதற்குக் காரணம், அதிகமாக எங்களுடைய ஜில்லாவில், குறிப்பாக என்னுடைய தாலூகாவில் மின்சாரம் அதிகரித்திருப்பதன் காரணமாக விவசாயிகளுக்கு ஓரளவு விவசாயம் செய்வதற்கு ஒரு உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது விலை நிர்ணயம் செய்ததனால் ஏதோ மனதிலே ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்த பொருளை அவர்கள் இஷ்டப்படியாக விற்பனை செய்துவந்த நேரத்திலே, இன்று கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு விற்பனை செய்யவேண்டிய நிலை இருக்கிறது. இருந்தபோதிலுங்கூட, விவசாய உற்பத்தி அதிகரிக்கவேண்டும் என்ற எண்ணங்கள் விவசாயிகளிடத்திலே இருந்தும், உற்பத்தி செய்த பொருளை அந்த இடத்திலேயே அவர்களுடைய நிலத்திலேயே வாங்குவதற்கு இன்று லைசன்ஸ் பெற்ற வியாபாரிகள் வருவதே இல்லை.

10·30 a.m. லைசென்சுதார்கள் அந்த நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்காமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட லைசென்சுதார்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதும் நெல்லை யாரிடத்தில் கொண்டு போய் விற்பது என்பதும் தெரியாமல் சில சிறு விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நெல்லை எங்கே விற்பது என்ன செய்வது என்பது தெரியாமல் இருக்கிறார்கள். சர்க்காருடைய விற்பனைக் கொள்கையினால் இப்படிப்பட்ட சங்கடங்கள் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன. உணவு விலை அதிகப்படியாக விற்கப்படுகிறது என்று இப்படிப்பட்ட திட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தாலும் அதனால் பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் ஏற்கெனவே இருந்தபடி முதலாளிகள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். சர்க்காருடைய இந்த திட்டத்தினால் விவசாயிகளுக்குத்தான் அதிகப்படியான கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த முறையில்லாமல் வியாபாரிகள் விவசாயிகளிடம் நேரடியாகச் சென்று நெல்லை வாங்கிக்கொள்ளும் அளவில் திட்டம் வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்காருடைய திட்டம் எப்படி இருக்கிறது என்றால் நெல்லைக் கொண்டுபோய் டிபுடி கலெக்டரிடம் காண்பித்து விட்டு அவர்கள் அது நல்ல நெல்லா அல்லது இல்லையா என்பதைப் பார்த்துச் சொன்ன பிறகுதான் அந்த நெல்லை விற்பனை முதலாளிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. இதனால் பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பொறுப்பை விவசாயிகளுடைய தலையில் போடுவது என்பது சரியல்ல. இந்த பொறுப்பை மற்றவர்கள் யாரும் எடுத்துக் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட கஷ்டங்கள் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருப்பதால் உற்பத்திக்கு பங்கம் ஏற்பட்டு விடுமோ என்ற ஒரு அச்சம் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தாலூகாவில் அநேகமாக அறுவடை காலம் ஜனவரி, பிப்ரவரி மாதங்கள்தான். இந்த மாதங்கள் இப்பொழுது முடிந்துபோயும்கூட சிறு சிறு விவசாயிகள் விவசாயம் செய்த சம்பா நெல்லை யாரும் விற்பனைக்கு எடுத்துக்கொள்வதாகவே இல்லை, விற்கவும்

முடியவில்லை. லைசென்சுதார்களும் மற்ற வியாபாரிகளும் அந்த நெல்லை எங்கள் தாலூகாவிலும் சுற்றுப்புர கிராமங்களிலும் எடுத்துக் கொள்வதாகவே இல்லை. அதனால் சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் விலைக்குக் குறைவாகவேதான் விற்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி விற்பதை வைத்துக்கொண்டு சர்க்கார் விலை இப்பொழுது குறைந்து விட்டது என்று கருதுகிறார்கள். இப்படி குறைந்த விலைக்கு விற்கப் படுவதால் அடுத்த வருஷம் எப்படி விவசாயம் செய்வது என்று விவசாயிகள் அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையைப் போக்குவதற்கு சர்க்கார் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே இனிமேல் உற்பத்தியானவுடனேயே அந்த அந்த இடத்திலேயே நெல்லை விற்பதற்கு வேண்டிய ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டிய உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த திட்டத்தின் பிரகாரம் விவசாயிகள் தாராளமாக தங்களுடைய விளைபொருள்களை விற்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய கஷ்டங்களை உடனடியாகப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே உடனடியாக இப்பொழுதுள்ள திட்டத்தையும் மாற்றி அமைக்கவேண்டும்.

இந்த நாட்டிலுள்ள எல்லா திட்டங்களும் வெற்றிகரமாக முடிவதற்கு விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது ஒரு காரணமாக இருக்கிறது. இப்படி உற்பத்திப் பெருக வேண்டுமென்ற சர்க்காருடைய திட்டத்தின் பலனை விவசாயிகள் உணர்ந்து உற்பத்தியையும் இப்பொழுது பெருக்கிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட விவசாய மக்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். விவசாயிகளுக்கு உரம் வழங்கும் விஷயத்தில் கனம் மந்திரி அவர்கள் நன்றாக கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு நல்ல விதத்தில் உரம் வழங்க நல்ல வழி காண திட்டம் வகுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri G. VAGHEESAM PILLAI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் விவசாய மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த விவசாய மானிய கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையில் கனம் அமைச்சர் அவர்கள் அதிகப்படியான பணத்தை ஒதுக்கி இருப்பதற்கும் அதை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று பல ஏற்பாடுகள் செய்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன். விதைப் பண்ணைகள் அமைக்கும் சம்பந்தமாக நான் இரண்டு வருஷங்களுக்கு முன்னதாகவே சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். விதைப் பண்ணைகளை ஒரேயடியாக அதிகமாக ஏற்படுத்தவேண்டாம் என்றும், ஒரு மாவட்டத்திற்கு பத்து வீதம் அமைத்தால் போதும் என்றும், அதன் பிறகு மற்ற இடங்களுக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்றும், நல்ல விதைகளைக் கொடுக்கக்கூடிய விவசாயிகளுக்கு ப்ரீமியம் கொடுக்கலாம் என்றும், அப்படி விவசாயிகள் விதை மூட்டைகளை சப்ளை செய்யும்போது அவர்களுடைய பெயரை அவரவர்களுடைய மூட்டைகளில் எழுதி வைத்து அப்படி எந்த மூட்டையில் நல்ல விதை இருக்கிறதோ அந்த மூட்டைகளைக் கொடுத்த விவசாயிக்கு அதிகப்படியான ப்ரீமியம் கொடுக்க முன் வந்தால் விவசாயிகள் நல்ல விதைகளை சப்ளை செய்ய முற்படுவார்கள் என்றும், சர்க்கார் அதிகப்படியான விதைப் பண்ணைகளை அமைக்கவேண்டாம் என்றும் சொல்லியிருந்தேன். சாதாரணமாக விதையை காய வைத்தால் 100-க்கு 7-லிருந்து 20 சத விகிதம் வரையில் காய்ந்து போய் விடும் என்றும் அந்த அளவுக்கு அவர்களுக்கு அதிகப்படியான ப்ரீமியம் கொடுக்கலாம் என்றும் சொல்லி-





யிருந்தேன். நல்ல விதையாக இல்லையானால் அவர்களுக்குக் கெட்ட பெயர் வந்து விடும் என்ற காரணத்தால் அவர்கள் நல்ல விதைகளை சப்ளை செய்ய முன் வருவார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தேன். அப்படி நல்ல விதைகளை சப்ளை செய்கிறவர்களுக்கு அதிகப்படியான ப்ரீமியம் கொடுக்கலாம் என்று சொல்லியிருந்தேன். அதையே இப்போதும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை அரசாங்கம் கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டு நல்ல விதைகள் சப்ளை செய்யக் கூடிய விவசாயிகளுக்கு அதிகப்படியான ப்ரீமியம் கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவு விலை உயர்வதைக் கட்டுப்படுத்த முற்படும்போது உற்பத்தி விலையையும் கட்டுப்படுத்த வேண்டும். விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதை உணர்ந்து இப்பொழுது உணவு விலையைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அதே சமயத்தில் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான அளவிற்கு உரங்கள் மற்றவைகள் கிடைக்கும்படியான ஒரு திட்டத்தையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பிண்ணாக்கு மூட்டை ஒன்றுக்கு இப்பொழுது 23 அல்லது 24 ரூபாயாக விற்கப்படுகிறது. இன்னும் அதிகமாகக்கூட விற்கப்படுகிறது என்றும் சொல்லலாம். அதனால் பிண்ணாக்கை எக்ஸ்போர்ட் செய்வதை நிறுத்திவிடலாம். ஏனென்றால் அது விவசாயத்திற்கு உரமாகவும் மாட்டிற்குத் தீவனமாகவும் உபயோகப்படுகிறது. அதை எக்ஸ்போர்ட் செய்வதை நிறுத்தினால் ஒருக்கால் அந்நிய செலாவணி குறைந்துவிடுமோ என்று நினைக்கலாம். அதை வேறு ஏதாவது ஒரு விதத்தில் சம்பாதித்துக்கொள்ளலாம். இந்த முக்கியமான விஷயத்தைக் கவனித்து அதை எக்ஸ்போர்ட் செய்வதை நிறுத்தி விடலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையில் உணவு விலை கொஞ்சம் குறையும். ஆகவே இதைக் கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அம்மோனியம் சல்பேட்டை அதிகப்படியாக உபயோகப்படுத்த இப்பொழுது விவசாயிகள் முன் வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னதாக அதில் நம்பிக்கை இல்லாதவர்கள்கூட இப்பொழுது இதை உபயோகப் படுத்த முன் வந்திருக்கிறார்கள். எலும்புத் தூள் போன்றவைகளை உபயோகிக்கவும் முன் வந்திருக்கிறார்கள். அதற்காக அவைகளைப் பாதி விலைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்க முன் வ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைபாதி விலைக்குக் கொடுக்கவோ அல்லது சப்சிடியாகக் கொடுக்கவோ முன் வந்தால் நலமாக இருக்கும். அதற்கு நம்முடைய சர்க்கார் ஓரளவு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சர்க்கார் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து அதிகமாகத் தருவதற்கும் அதை பாதி விலைக்குக் கொடுப்பதற்கும் முன் வந்தால் நலமாக இருக்கும். பத்து அல்லது இருபது வருஷங்களுக்கு முன் அம்மோனியம் சல்பேட் அவ்வளவு நல்லது இல்லை என்று கருதியவர்களுக்கு இப்பொழுது அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய பழக்கம் வந்திருக்கிறது. அதைப் போலவே பாதி விலைக்குக் கொடுத்து அவர்களை பழக்கப்படுத்தி விட்டால் இந்த உரத்தில் சத்து இருக்கிறது என்று கருதி அதிகமாக வாங்க முன் வருவார்கள், இதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன.

பசுந்தாள் உரத்திற்காக இந்த வருஷம் 1342 டன் விநியோகிக்க திட்டமிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது நல்ல காரியம்தான். பசுந்தாள் உரத்தை உபயோகிக்கும்போது விவசாயிகள் ஒரு கிராமத்தில் எல்லோரும் உபயோகிக்கக்கூடிய அளவில் அதை உபயோகப்படுத்தி அதன் பலனைக் கண்டு பிடிக்க வேண்டும். தொடர்ச்சியாக நாலைந்து கிராமங்களை எடுத்துக்கொண்டு 100-க்கு 20 சப்சிடி போக பாக்கி 80-ஐ அரசாங்கம் கொடுக்க வேண்டும். இப்படிக்கொடுத்து நாலைந்து அல்லது பத்து கிராமங்களை எடுத்துக்கொண்டு தொடர்ச்சியாக இந்த உரத்தை

உபயோகப்படுத்தச் சொல்லி அதன் பலனைக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சாதாரணமாகச் சொன்னால் 100-க்கு 50 விவசாயிகள் அதை உபயோகிக்காமல் விட்டு விடுவார்கள். அப்படி இல்லாமல் எல்லோரும் தொடர்ச்சியாக உபயோகப்படுத்தச் சொல்ல வேண்டும். அதே முறையில் இதை திட்டமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பூச்சி மருந்தை பாதி விலைக்கு ஜில்லா விவசாய ஆபீசரே கொடுக்கலாம் என்று வந்த உத்தரவால் சென்ற இரண்டு, மூன்று வருஷங்களாகவே சௌகர்யமாக இருக்கிறது. கலெக்டர் ஒரு பிரதேசத்தை பூச்சி அடித்த பிரதேசம் என்று டிக்ளேர் செய்தால்தான் பாதி விலைக்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. சில விவசாயிகளுக்கு பூச்சி விழுந்தாலும் டிக்ளேர் செய்யவில்லையென்றால் மருந்துகள் கிடைக்காமல் இருக்கின்றன. சாதாரணமாக பூச்சி மருந்தை விவசாயிகள் வேறு விதத்தில் உபயோகப்படுத்தமாட்டார்கள். வேறு எதற்கும் அது உபயோகம் இல்லை. அதனால் நிரந்தரமாகவே அந்த மருந்துகளை விவசாயிகளுக்குப் பாதி விலைக்குக் கொடுக்க முன் வந்தால் நல்லதாக இருக்கும். அதனால் அரசாங்கத்திற்கு ஒன்றும் அதிகப்படியான நஷ்டம் ஏற்பட்டுவிடாது. அதனால் எப்பொழுதும் பூச்சி மருந்தை பாதி விலைக்குக் கொடுக்கும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது ராஜ்யத்தில் பழத் தோட்டங்கள் மிகவும் குறைவு. அதற்கு என்று 2·73 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பழத்தோட்டங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு எக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் கடன் கொடுக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு பழச் செடிகளை பாதி விலைக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும். எல்லா விவசாயிகளுக்கும் ப்ளாக்குகள் மூலமாகக் கொடுத்தால் அந்த கடன் தொகையைக் கொண்டு இன்னும் அதிகமாக பழச்செடிகளை உற்பத்தி செய்ய முற்படுவார்கள். இதில் அரசாங்கம் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும். நம்முடைய ராஜ்யத்திலிருந்து ஆந்திரா போன பிறகு கோடூர் பழத் தோட்டம் நம்மை விட்டு அவர்களுக்குப் போய்விட்டது. இப்பொழுது நமது ராஜ்யத்தில் இரண்டொரு இடங்களில்தான் இருக்கின்றன. அதாவது கல்லார், பார்லியார், நல்லார் போன்ற இடங்களில்தான் இருக்கின்றன. அங்குப் பழச் செடிகளுக்கு வேண்டிய சீதோஷ்ண ஸ்திதி இருப்பதால் அங்கே அவைகளை வைத்திருக்கிறார்கள். அந்தச் செடிகளுக்கு நம் பகுதி உகந்தது இல்லை. அதனால் மற்ற இடங்களிலும், மாவட்டங்களில் இரண்டொரு இடங்களைத் தேர்ந்தெடுத்து ஆராய்ச்சி நிலயங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இப்பொழுது விவசாயப் பட்டப் படிப்பு ஏற்படுத்தி இருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அதை ஏற்படுத்துவதற்காக பாடுபட்டிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னும் ஒரு பணி இருக்கிறது. அங்கு சுமார் 100 எக்கர் நல்ல நிலங்கள் இருக்கின்றன. விவசாயிகள் பிரீமியம் அதிகமாகக் கொடுக்கவேண்டி இருக்கிறது. அந்த 100 எக்கர் நிலத்தில் உற்பத்தியாகக்கூடிய நெல் பூராவையும் அந்த மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு விதையாக கிடைக்கச் செய்யவேண்டுமென்று சொன்னால் பல்கலைக் கழகத்தார் ஒப்புக்கொள்ளுவார்கள். நிலத்தைப் பற்றிய பரிசோதனையை அநேக விவசாயிகள் செய்வதில்லை. அந்த மாதிரி விவசாயிகளுக்கு இனமாகச் செய்து கொடுக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு இடத்தில் காலேஜுகள் இருக்கின்றன. அங்கெல்லாம் மண் வளப் பரிசோதனை செய்தால் இவ்வளவு குறைந்த ரூபாயில் அந்த ஆராய்ச்சியைச் செய்யமுடியும். அந்த ஆராய்ச்சி நிலங்களில் அதிகமாகச் செய்துகொடுக்க முடியும். விவசாய இலாகாக்கள் செய்யக்கூடிய இடங்களில் அவர்கள் செய்து கொடுக்க வேண்டும். அது அல்லாத மற்ற இடங்களில்—காலேஜ் இருக்கக்கூடிய



இடங்களில் அவர்கள் இதைச் செய்யக்கூடிய நிலைமையைப்பற்றியும் யோசனை செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விளம்பரத்தைப்பற்றி நான் பல முறை சொல்லியிருக்கிறேன். இப்பொழுது தான் அதற்கான அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். இன்னும் அதிகமான அளவில் விவசாயிகள் அறிந்துகொள்ளும் வகையில் விளம்பரப் படுத்த வேண்டும். நல்ல படங்களைப் போட்டு விளம்பரம் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"T be well scheme" சில மாவட்டங்களில் நல்ல முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்களுடைய ஜில்லாவில் 50 ஆர்டீசன் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு ஆர்டீசன் கிணற்றிலிருந்து மூன்று மாதத்திற்குப் 10 எக்கர் நிலத்திற்குச் சாகுபடி செய்யமுடியும். அதற்கான வசதி இருக்கிறது. மற்றப்படி கிணறுகளுக்கு மானியம் கொடுப்பது போல் "சப் ஆர்டீசன் வெல்" லுக்கும் மானியம் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலம் 10 எக்கர் வரை சுலபமாகச் சாகுபடி செய்ய முடியும். எலக்ட்ரிக் மோட்டார் உட்பட ரூபாய் 3,000 முதல் ரூ. 5,000 வரைதான் செலவாகும். இரண்டு மாதத்தில் 10 எக்கர் சாகுபடி செய்ய முடியும். சப்சிடி மூலமாக அரசாங்கமே இதற்காகும் பணத்தைக் கொடுத்தால் நலமாக இருக்கும். "பவர் ட்ரில்சுககாக" ப்ரைவேட் பார்ட்டீஸ் 30 பேருக்கு மேல் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி செய்யக்கூடிய காலத்தில் பவர் ட்ரில்ஸ் கொடுக்க வேண்டும். தனிப்பட்ட விவசாயிகளுக்குச் சவுகரியமாக இருக்கும். நான் சில பகுதிகளுக்குச் சென்று பார்த்தேன். ஒரு பிர்க்காவில் 50 அடியிலிருந்து 100 அடிக்குள் நல்ல ஜலம் கிடைக்கிறது. இந்த பவர் ட்ரில்ஸ் அரசாங்கத்திலிருந்து சொற்ப வாடகைக்கு விடுகிறார்கள் என்று சொன்னேன். 50 அடியில் இருந்து 100 அடிக்குள் தண்ணீர் கிடைக்கும் இடங்கள் எங்கள் பகுதியல் நிறைய இருக்கின்றன. அங்கெல்லாம் "ஹாண்ட் போரிங்" செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். அது சுலபமாக வாங்கி வைக்கக்கூடிய காரியம். இப்பொழுது டிப்பார்ட்மெண்டிலிருந்து ஜில்லாவுக்குப் 10, 12 என்று ஒதுக்கி இருக்கிறார்கள். தேவைப்படுகிற அளவுக்கு அதிகமான அளவில் வாங்கி வைக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ட்ராக்டர் சம்பந்தமாக நஞ்சை நிலங்களில் உழலாம் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. அதற்குக் கடன் கொடுத்து ஏற்பாடு செய்யவேண்டும்.

விவசாய டிப்பார்ட்மெண்டில் சாதாரண ஏழைகளுக்காக வைடமின் சி. சிலோன், ஸ்பனேஷ், சுக்ருமாஸ்கீரை ஆகியவைகளைக் கொடுக்கிறார்கள். இந்தக் கீரைகள் சுலபமாகப் பயிராகக்கூடியவை. ஒரு முறை நட்டு விட்டால் நல்ல பலன் கிடைக்கும்.

கால்நடை பற்றி நல்ல பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. மூன்று லட்சத்து 40 ஆயிரம் கிடாரிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பொலிக் காளைகள் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்க வேண்டும். எல்லா ஊர்களுக்கும் வாங்கிக்கொடுப்பதில் சிரமம் இருந்தாலும்கூட குறிப்பிட்ட சில கிராமங்களிலாவது இருக்கவேண்டுமென்று திட்டம் இடப்பட வேண்டும். செயற்கை கரு தரிக்கச் செய்யும் முறையில் விவசாயிகளுக்கு இப்பொழுது நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதையும் அதிகப்படுத்த வேண்டும். மாடுகளுக்கு வியாதி வருவது எப்படி என்பதைப்பற்றி ஒன்றும் விவசாயிகளுக்குத் தெரியவில்லை. என்னென்ன வைத்தியம் செய்ய வேண்டும்? எப்படி அந்த வியாதிகள் வருகின்றன? அது வராமல் தடுப்பது எப்படி? என்பது பற்றியெல்லாம் சிறு குறிப்புகள் போட்டு நல்ல புஸ்தகமாக அடக்க விலைக்குக் கொடுத்தால் நல்லது. 1 அணா, 2 அணா விலையில் இந்த மாதிரிப் புஸ்தகங்களைப் போடுவதைப்பற்றியும் கவனிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மீன் வளர்ப்புபற்றி . . . .

[18th March 1959

DEPUTY SPEAKER: The hon. Member's time is up. Sri C. Natarajan will now speak.

* SRI C. NATARAJAN: தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியத்தின்பேரில் கனம் பழனிசாமி அவர்கள் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன்.

விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அங்கத்தினர்கள் யாவரும் ஒத்துக்கொள்கிறார்கள். அதே நேரத்தில் விலை உயரவில்லை என்று சொல்லுகிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். அங்கத்தினர்கள் எல்லாம் பல குறைகளைக் கூறிவிட்டு உடனே திட்டத்திற்கு விளம்பரம் செய்கிறார்கள். எங்களுடைய பகுதி இன்னின்ன முறையில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு கடைசியில் முடிக்கும் போது பாராட்டுகிறேன் என்று சொல்லுகிறார்கள். பாதகங்களை எடுத்துக் கூறவேண்டுமே தவிர பாராட்டிப் பேசுவதில் எந்தவிதப் பயனும் இல்லை. மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்பதை உணர்ந்து அவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளை எடுத்துக் கூறவேண்டும்.

என்னுடைய பகுதியில் விவசாயம் பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருப்பதால் அதைப் பற்றி அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லி விவசாயம் பாதிக்கப்படாமல் இருக்க வழி வகைகள் செய்யவேண்டுமென்று எடுத்துச் சொன்னேன். நாம் போடுகின்ற சட்டத்தை அதிகாரிகள் மதித்து அவைகளை நிறைவேற்றுவதில்லை. சட்ட மன்றத்தில் இருக்கிற அமைச்சர்கள் நாங்கள் சொல்லும் குறைகளைக் கேட்டு அதைப் போக்க நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு "லோன்" வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சட்டம் போடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு லோனைத்தான் வசூல் செய்ய மாட்டோமே தவிர அதற்கு முன் ஆண்டுகளில் வாங்கியகடனை வசூல் செய்யப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இரண்டு ஆண்டுக் கடன்கள் விவசாயிகளால் கொடுக்கப்படாமல் பாக்கி இருக்கிறது. இந்த பாக்கியை விவசாயி இப்பொழுது கொடுக்க முடியாமல் இருக்கிறான். இந்தச் சட்டம் நல்ல முறையில் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் பாதகம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை என்னால் எடுத்துக் கூறாமல் இருக்க முடியவில்லை.

என்னுடைய தொகுதிக்கு அமைச்சர் ராமையா அவர்கள் வந்தார்கள். மின்சார அமைச்சராதலால் மின்னல் வேகத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். இரண்டு மூன்று நாட்களில் 70 கிராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து மக்களை அப்படியே கவர்ந்து விட்டார்கள். வயல் வெளியில் கூட இறங்கி ஒவ்வொரு கதிராகப் பார்த்தார். அந்த முறையில் அவர் மக்கள் மனதைக் கவர்ந்தார். அது எப்படி இருக்கிறது என்றால்—உண்மைக் காதல் அல்ல, கள்ளக் காதல் போல் காணப்படுகிறது. அமைச்சர் அவர்களுக்கு ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. அதில் சில குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கூறப்பட்டது. அந்தச் சமயத்தில் பொறுப்புள்ள அதிகாரிகள் வந்திருந்தார்கள். குறைகளைப் பற்றிக் கேட்ட அமைச்சர் அவர்களுக்குக் கண்ணீர் பெருகியது. மனம் உருகினாகள். அமைச்சர் அவர்கள் கண்ணீர் வடித்த நிலையைப் பார்த்து நான் கூடக் கண்ணீர் வடித்தேன். அமைச்சர்கள் இந்தக் கஷ்டங்களைப் போக்கச் சட்டங்களை திருத்தி அமைக்க வேண்டும். சட்டம் உடனே பலனளிக்கும் முறையில் இல்லை. ஆகையால் நாம் போடுகின்ற சட்டங்களுக்கு எதிராக அதிகாரிகள் நடக்கிறார்கள் என்பது சரியில்லை.



18th March 1959] [Sri C. Natarajan]

அதுபோல் இந்த பூச்சி மருந்துகளையும், உரங்களையும் வழங்கும் முறையில் இன்றைக்கு இருக்கக்கூடிய குறைகளைச் சொல்லாத அங்கத்தினர்கள் கிடையாது. பயிர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய வியாதி என்ன என்பதைத் தெரிந்து இந்த மருந்துகளைக் கொடுப்பது கிடையாது. "இந்த மருந்தைத் தூவிப்பார், இந்த மருந்தைத் தெளித்துப் பார், இது பாதி விலை தான்" என்கிறார்கள். இந்த மருந்துகளினால் எவ்வித பயனும் ஏற்படவில்லையே, பயிர் பாழ்பட்டு விட்டதே என்றால், "நாங்கள் என்ன செய்வது? இது புது வியாதியாக இருக்கிறது, வேறு மருந்து உபயோகப் படுத்திப் பார்த்தால்தானே தெரியும்" என்கிறார்கள். "வேண்டுமானால் இன்னொரு மருந்து இருக்கிறது அதையும் தூவிப்பார், பலன் ஏற்பட்டால் ஏற்படட்டும்" என்கிறார்கள். இப்படி இல்லாது முதலிலேயே வியாதி இன்னது என்று தெரிந்து அதற்குப் பிறகு மருந்து கொடுப்பது நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

விவசாயத்திற்கு மிகவும் அவசியமானது உரம்தான். உரம் அதிகமாக நல்ல முறையில் விநியோகிக்கப்படவேண்டும் என்பதையும் அரசாங்கம் ஒப்புக்கொள்ளுகிறது. ஆனால் இந்த உர விநியோகத்தில் இருக்கக் கூடிய ஊழல் சொல்ல முடியாது. ஒருவர் நிறுத்துத் தான் கொடுப்போம் என்கிறார். இன்னொருவர் அளந்து தான் கொடுப்போம் என்கிறார். அளக்கும்போது சாதாரண சாப்பிடும் உப்பையும் கலந்து ஊழலும், குறைபாடுகளும் விவசாயிகளை அதிக அளவில் பாதிக்கிறது. விவசாயிகளுக்கு நேரிடையாகக் கொடுப்பதும் கிடையாது. இதையெல்லாம் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்போது நெல் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் விலை நிர்ணயித்திருக்கிறது. அதற்குள்ளேயே பல வியாபாரிகள் அரசாங்கம் எல்லா நெல்லையும் எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள் என்று விவசாயிகளைப் பயமுறுத்தி, குறைந்த விலையில் அவர்கள் நெல்லை வாங்கிக்கொண்டு வந்து வியாபாரிகள் லாபத்திற்கு அரசாங்கத்திடம் நிர்ணயித்துள்ள விலைக்கு விற்கிறார்கள். இப்படிப் பார்க்கும்போதும் விவசாயிகளுக்கு எவ்வித பயனும் கிடையாது. இப்படி அவர்கள் பல துறைகளிலும் பலன் அடைய முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இன்றைக்கு அழுகும் பொருள்கள் வியாபாரிகள் சங்கம், தோல் வியாபாரிகள் சங்கம் இப்படி பல துறைகளில் பல சங்கங்களில் இருந்து சர்க்காருக்கு மனுக்கள் வருவது போல—விவசாயிகள் சங்கம் என்று இந்த விலைகளினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களிடமிருந்து அதிகமான மனுக்கள் வந்திருக்கிறதா என்று அமைச்சர் கவனிக்க வேண்டும். இப்படி கிளர்ச்சிகள், மனுக்கள் போடவேண்டுமென்றாலும்கூட இவர்களுக்குக் கல்வித் திறன் கிடையாது. அரசியல் அனுபவம் கிடையாது. அவ்வளவு அப்பாவிகளாக இருக்கக்கூடிய இந்த விவசாயிகள் இன்று பெரும் அளவு பாதிக்கப்பட்டிருப்பதை நாம் கவனித்து தக்க வழிவகை செய்யவேண்டும்.

அதுபோல எத்தனையோ இடங்களில் எத்தனையோ பெரிய திட்டங்களை விவசாயிகளுக்காகப் போடுவதைவிட 3 ஏக்கர், 5 ஏக்கர் என்று உடைய விவசாயிகளுக்கு இலவசமாக கிணறுகள் வெட்டிக்கொடுப்பதினால் அதிகப் பயன் அடைய முடியும்.

அதுபோல சின்ன சேலத்தில் ஆட்டுப் பண்ணை ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் வந்து ஆரம்பித்து வைத்தார்கள். அதற்கு லட்சக்கணக்காகச் செலவு ஆகியிருக்கிறது. ஆனால் அவர்கள் வந்திருந்தபோதுகூட இருபது இருபத்தைந்து ஆடுகள் தான் அங்கே காணப்பட்டன.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சின்ன சேலத்தில் ஆட்டுப் பண்ணை வைத்த போது தான் நான் சென்று பார்த்தேன். அப்போதே ஏராளமான ஆடுகள் இருந்ததை நான் பார்த்தேன்.

* SRI C. NATARAJAN : அமைச்சர் அவர்கள் சொன்னது போல நூறு ஆடுகள் இருந்தன என்று வைத்துக் கொண்டாலுமே அதற்கான செலவு மிக அதிகமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இருந்தும் கால்நடை ஆஸ்பத்திரி தாலூகா ஹெட் குவார்ட்டர்ஸில் தான் வைக்கப்படுகிறது. ஒவ்வொரு பிர்க்காவிலுமே அதிகமாக கால்நடைகள் இருப்பதனால் அவற்றுக்கு வரும் நோய்களை அவ்வப்போது சரியான முறையில் கவனித்து வைத்தியம் செய்வதற்கு ஆங்காங்கே பல கால்நடை ஆஸ்பத்திரிகள் இருக்க வேண்டும். அதற்குத் தகுந்த அளவில் கால்நடை வைத்தியர்களை உண்டாக்க வேண்டும்.

விழுப்புரம் போன்ற தொகுதியில் மணிலா அதிகமாக இருக்கிறது. வனஸ்பதி ஆலையில் ஒரு நாளைக்கு 30 ஆயிரம் மூட்டைகள் உடைக்க முடியும். ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் வேலை செய்யும்படியான ஆலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கரும்பு விலையையோ, சர்க்கரை விலையையோ நிர்ணயிக்கக் கூடிய அதிகாரத்தை நமது சர்க்காரிடத்தில் கூட இல்லாமல் மத்திய சர்க்கார் தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் பரவாயில்லை. சர்க்கரை விலை எவ்வளவு அதிகமாகிக் கொண்டிருக்கிறதோ அதற்கு ஏற்றபடி கரும்பு விலையையும் உயர்த்துவதற்கு நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்காவது சிபார்சு செய்ய வேண்டும். காரணம் இன்றைக்கு விவசாயிகளுக்கு எவ்வித பயனும் கரும்பு சாகுபடி செய்வதனால் கிடையாது. இவர்களும் பயன் அடையும்படி செய்ய சர்க்கரை விலை உயரும்போதே கரும்பு விலையையும் உயர்த்த மத்திய அரசாங்கத்திற்கு நமது மாநில அரசாங்கம் சிபார்சு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI T. SAMPATH : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் மானியத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் சமீப காலமாக விவசாயத் துறையில் அபிவிருத்தி அடைந்திருக்கும் விஷயங்களையெல்லாம் சுருக்கமாகக் குறிப்பிட்டார்கள். பட்ஜெட் அறிக்கையில் விவசாயம், தொழில் இவை இரண்டும் எந்த அளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்கிற விஷயம் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையில் செய்துள்ள சாதனைகளைப் புள்ளி விவரம் மூலமாகவும் எடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1952–53 ஆரம்பிக்கப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கும், சமுதாய நல அபிவிருத்திக்கும் முதலிடம் அளிக்கப்படுகிறது. அதிலும் கடந்த ஆண்டுகளில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இது மறுக்க முடியாத விஷயம். இதற்காக அமைச்சர் அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

தற்போது இருக்கக்கூடிய நிலையில் பண வீக்கத்தை ஒழித்து, பொருளாதாரத்தை மேலும் ஸ்திரப்படுத்த வேண்டுமானால் உற்பத்தியை அதிகமாக பெருக்குவதைத் தவிர வேறு வழியே இல்லை. விவசாய அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி ஆகிய இவை இரண்டும் பரஸ்பரத் தொடர்பு உள்ளவை. இந்த இரண்டையும் சேர்த்து அபிவிருத்தி செய்வதற்காக நீண்ட கால கண்ணோட்டத்துடன் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுவும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வரும் ஜனத்தொகைக்கு நியாயமான அளவில் எல்லோருக்கும் உணவு தானியங்கள் கிடைப்பதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும்.



அதைப்போல விவசாயத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு ஒரு நியாயமான வருவாய் கிடைக்கக்கூடிய அளவில் அரசாங்கம் தக்க ஏற்பாட்டை வகுத்துத் தர வேண்டும். வளர்ச்சி அடைய இருக்கும் தொழில்களுக்குப் போதுமான கச்சாப் பொருள்களும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு அல்லாமல் நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பண்டங்களின் அளவையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். இந்த மூன்று நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு நம் நாட்டில் விவசாயமும், தொழிலும் அபிவிருத்தி அடைய வேண்டும் என்கிற நோக்கத்துடன் அரசாங்கம் ஒரு திட்டத்தை வகுத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தில் எவ்வளவு சாதனைகளை நாம் அடைந்தாலும் இயற்கையை கட்டுப்படுத்த முடியவில்லை. போதுமான பருவ மழை பெய்யாத காரணத்தினால் பல ஜில்லாக்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. தஞ்சை ஜில்லாவிலும் பெரும் அளவுக்குப் பயிர்கள் பூச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கனம் வாகீசம் பிள்ளை அவர்கள் பூச்சி மருந்து சம்பந்தமாகச் சொன்னார்கள். அவர் சொன்ன மாதிரியாக இன்றைக்குக் கொடுக்கப்படுகிற பூச்சி மருந்து போதவில்லை. எப்போதும் விவசாயிகளுக்கு நிரந்தரமாக பூச்சி மருந்து கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு மருந்து கிடைத்தாலும் எந்த எந்தப் பூச்சிகளுக்கு எந்த எந்த மருந்து போடவேண்டும் என்பது விவசாயிகளுக்குத் தெரியாது. அவற்றை எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்தாக வேண்டும். அது மட்டுமல்ல; மருந்து மட்டும் கிடைத்தால் போதாது. மருந்தைத் தெளிப்பதற்கு வேண்டிய ஸ்ப்ரேயர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் பெரிய அளவில் மருந்துகளைத் தெளிப்பதற்கு வேண்டியபடி அதிகமான ஸ்ப்ரேயர்களையும் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இப்போது இருக்கக்கூடிய நிலையில் விவசாயிகளுக்கு விவசாயச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. எல்லாச் சாமான்களும் மார்க்கெட்டில் குறைந்த விலையில் விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இன்றைக்கு நெல், அரிசி விலையை மட்டும் நிர்ணயித்து விட்டால் போதாது. இன்றைக்கு விவசாயிகளுக்குத் தேவையான இதர பொருள்களை, உரத்தை எடுத்துக்கொண்டாலும், இதர பொருள்களை எடுத்துக்கொண்டாலும் விலைகள் மிக அதிக அளவில் போய்விட்டது. குறிப்பாக மாட்டுக்கு வைக்கவேண்டிய பருத்திக்கொட்டை விலையை எடுத்துக்கொண்டால், ஒரு விவசாயி சர்க்கார் நிர்ணயித்துள்ள விலையில் இரண்டு மூட்டை நெல் விற்றால்தான் ஒரு மூட்டை பருத்திக் கொட்டை வாங்க முடிகிறது. நான் நெல்லுக்கு விலை நிர்ணயித்திருப்பதைக் குறை கூறுவதாக சொல்லவில்லை. அதற்கு விலை நிர்ணயித்திருப்பது போல விவசாயிகளுக்குத் தேவையான இதர பொருள்களுக்கும் விலை நிர்ணயிக்க வேண்டும். மற்ற புஞ்சை தானியங்களுக்கும் விலை நிர்ணயிக்க சர்க்கார் முன் வர வேண்டும். தற்போது நெல்லுக்கு கண்டிரோல் கொண்டு வந்திருக்கக் கூடிய முறையில் உள்ள சிக்கல்களை சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள்.

கொள்முதல் திட்டத்தில் இன்னும் பல சிக்கல்களும், குழப்பங்களும் 11-00 a.m.
தான் இருந்து வருகிறது. அரசாங்கம் இப்போது நெல்லின் உச்சபட்ச விலையைத்தான் நிர்ணயம் செய்திருக்கிறது. குறைந்த பட்ச விலையையும் அரசாங்கம் நிர்ணயம் செய்ய வேண்டும். பல வருடங்களுக்கு முன்பு ப்ரொக்யூர்மெண்ட் என்ற ஒரு கொள்கையை அரசாங்கம் கடைப்பிடித்த போது விலையெல்லாம் தெளிவான முறையில் நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. ப்ரொக்யூர்மெண்ட் விலையை நிர்ணயிக்கும்போது கிராம விலை கிரயத்திலிருந்து மில்லுக்கு கொண்டு வருவதனால் அதற்கு ஏற்படுகின்ற வண்டிச் சத்தமும் சேர்க்கப்பட்டு மில் விலை அடக்கமும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதைப் போல் நெல் வியாபாரிகளுக்கும் அவர்களுடைய அடக்க

விலையும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மில்களிலிருந்து இரயில்வே ஸ்டேஷனுக்கு கொண்டு போகக்கூடிய செலவையும் சேர்த்து இரயில்வே ஸ்டேஷன் எப்.ஓ.ஆர்.விலை நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. அது போலவே இப்பொழுதும் அரசாங்கம் விலைகளை நிர்ணயிக்கவேண்டும். இப்பொழுது நெல் முதலிய தானியங்களுக்கு பலவித ரகங்களுக்கு பலவித விலைகள் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுது நெல் முதலிய தான்யங்களுக்கு பலவித ரகங்களுக்கு பலவித விலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. நீண்ட கால தான்யம் ஆகிய—சம்பா நெல், குறுகியகால தானியமாகிய குறுவை நெல்லுக்கு ஒரு நியாயமான விலையை நிர்ணயம் செய்தால் போதும் என்று எண்ணுகிறேன், காரணம் ஏழை மக்கள் இந்த இரண்டு வகை நெல்களை தான் அதிகம் சாப்பிடுகிறார்கள். உயர்ந்த ரக நெல்லை வசதியுள்ளவர்கள் தான் வாங்குவார்கள். இப்பொழுது அரசாங்கம் இரண்டரை லட்சம் டன் அரிசியை கொள் முதல் செய்வதற்கு திட்டம் வகுத்திருக்கிறது. இதை குறுகிய காலத்தில் சுலபமாக அரசாங்கம் கொள் முதல் செய்ய ஒரு வழி இருக்கிறது. அதாவது இதை வெகு குறுகிய காலத்தில் சுலபமாக அரசாங்கம் கொள்முதல் செய்ய முடியும் அதாவது நிலத் தீர்வைக்குப் (Kist) பதிலாக நிலச்சுவான்தார்களிடமிருந்து அந்தத் தொகைக்கு நெல்லை வசூலித்துக்கொள்ளலாம். அப்படி செய்தால் 2½ லட்சத்துக்கு மேல் அரசாங்கத்திற்கு நெல் கிடைக்கும். சிரமப் பட்டு கொள்முதல் செய்ய வேண்டிய அவசியமே ஏற்படாது. அரசாங்கம் கொள்முதல் செய்யும் நெல்லை எல்லாம் சேமித்து வைப்பது எப்படி என்று கேட்கலாம். இப்பொழுது வகுத்திருக்கிற கொள் முதல் திட்டத்தின் பிரகாரம் மிராசுதார்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட தான்யத்தை மில்லர்களின் கோடவுன்களில்தான் சேமித்து வைக்கப் போகிறார்கள். ஆகவே நிலத் தீர்வைக்குப் பதிலாக கொடுக்கப்படுகின்ற நெல்லையும் மில்லர்களுடைய கோடவுன்களில் சேமித்து வைக்கலாம். அவ்வாறு செய்தால்தான் தானியத்தை காலாகாலத்தில் சேமிப்பதற்கு சௌகரியமாக இருக்கும். மேலும் அரசாங்கம் மொத்த நெல் வியாபாரத்தை நடத்த உத்தேசமிருப்பதால் இவ்வாறு நான் சொல்லக் கூடிய திட்டப் பிரகாரம் செய்தால் அரசாங்கத்தினுடைய கொள்முதல் திட்டமும் வெற்றிபெற முடியும், நெல் மொத்த வியாபாரமும் நல்ல முறையில் நடக்கும், என்னுடைய யோசனையை அரசாங்கம் ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member has one more minute.

* **Sri T. SAMPATH :** தற்பொழுது நெல் கொள் முதல் செய்யும் பொறுப்பை கூட்டுறவு சங்கங்களும் அதிகமாக ஏற்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் பேசும் போது கனம் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்கள் படும் கஷ்டத்தையும் சிரமத்தையும் எடுத்துச் சொன்னார்கள். கூட்டுறவு சங்கங்களுக்கு போதிய பணவசதி இல்லாத காரணங்களினால் குறிப்பிட்ட காலத்தில் கொள்முதல் செய்வதற்கு முடியவில்லை. இதன், காரணமாக கொள் முதல் தடைபடுகிறது. ஆகையால் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு போதுமான அளவு கொள்முதல் செய்வதற்கு நிதி வசதி அரசாங்கம் கொடுக்க வேண்டும். அடுத்து சிறிய நீர்ப்பாசன சம்பந்தமாக........

* **Sri A. R. SUBBIAH MUDALIAR :** கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய பகுதியில் **Semi-dry paddy** தான் அதிகம் விளைகிறது. அது சம்பந்தமாக **Draught resistance paddyseeds** உற்பத்தி செய்வதற்காக ரூ. 14,900 தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நல்ல முடிவு தான். என்னுடைய பகுதியில் 100க்கு 90 சத விகிதம் புறம்போக்கு நிலங்கள். தண்ணீர் குறைவாக உள்ள இடங்கள். அவைகளுக்கு தண்ணீர் தட்டுப்பாட்டில் விளையக் கூடிய நெல் தினுசுகள் தயார் செய்தால் உபயோகமாக இருக்கும்,



அடுத்தபடியாக சாயில் டெஸ்டிங் யூனிட் **(Soil test unit)** எடுத்துக்கொள்வோம். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் அது தேவை. இப்பொழுது நம் ராஜ்யத்தில் சில இடங்களில்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லா ஜில்லாக்களிலும் இது போன்ற சாயில் டெஸ்டிங் யூனிட்களை **(Soil test unit)** அமைத்தால் நிலத்தின் தரத்திற்குத் தகுந்தபடி உரத்தைப் போட முடியும். அம்மாதிரி வசதி இல்லாததினால் விவசாயிகள் உரம் போடும் விதம்தெரியாமல் தாறுமாறாக போடுகிறார்கள். இதனால் பயிர்களுக்கு நோய் ஏற்படுகிறது. ஆகையால் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் **(Soil test unit)** தேவைக்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்போஸ்டுக்காக ரூ. 22 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிளாக் **(Level**-ல் கம்போஸ்டு இன்ஸ்பெக்டர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கூடுதலான அதிகாரம் இல்லாத காரணத்தினால் அவர்கள் தங்களுடைய வேலைகளை சரிவர செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுத்து கம்போஸ்ட் உற்பத்தி செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Distribution of sprayers** எடுத்துக்கொண்டால் அதற்காக 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் ஒரு இடத்திலாவது சரியாக விநியோகம் செய்யப்படவில்லை. இவைகளை இரண்டு கம்பெனிகள் உற்பத்தி செய்கின்றன. மதுரையில் ஒரு கம்பெனி உற்பத்தி செய்துவருகிறது. அது நன்றாக வேலை செய்கிறது. பயிர்கள் அடிக்கடி நோயால் பாதிக்கப்படுவதால் ஸ்ப்ரேயர்கள் பாதிவிலைக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் அமுல் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மல்டிபிகேஷன் ஆப் சீட்ஸ் **(Multiplication of seedling)** க்கு ரூ. 18 லட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த திட்டம் முக்கியமாக இருப்பதால் அதிகமான தொகை ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ரிசெர்ச் ஸ்டேஷனுக்கும் பாரத்திற்கும் ரூ. 8,300 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு இன்னும் அதிகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பிளாக் ஏரியாக்களில் அனுபவம் வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மூலமாக கிராமங்களில் நல்ல பரிசீலனை செய்ய முடியும் என்று கருதுகிறேன்.

கிணறு வெட்டும் திட்டத்தை எடுத்துக்கொண்டால் கண்மாய் போன்ற புறம்போக்கு இடங்களில் நல்ல ஊற்று இருக்கிறது. அவ்வாறு ஊற்று இருக்கும் இடங்களில் கிணறுகளை வெட்டினால் அந்த தண்ணீரைக்கொண்டு, 15, 20 ஏக்கர் நிலம் பயிர் செய்யலாம். சார்காரில் கிணறுகளை வெட்டி தண்ணிர் சப்ளை செய்தால் அதிகமான அளவில் உணவை உற்பத்தி செய்ய வழி ஏற்படும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு உற்பத்தி சிலவு ஆகிறது என்று நிர்ணயித்து அதற்கு தகுந்தவாறு தானியங்களின் விலையை நிர்ணயித்தால் நியாயமாக இருக்கும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் சில பகுதிகளில் உற்பத்தி சிலவு அதிகமாக இருக்கிறது வேறு சில இடங்களில் உற்பத்தி சிலவு குறைவாக இருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு ஜில்லாவிலும் உற்பத்தி செலவு என்ன ஆகிறது என்று நிர்ணயம் செய்த பிறகு விலைவாசியை நிர்ணயிக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கால்நடை அபிவிருத்தி நன்றாக நடக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 Key Centres திறக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுவரையில் 12 (Key centres) திறக்கப்

உற்பத்தி செய்பவன் விவசாயி. அந்த விவசாயி உற்பத்தி செய்யும் உணவு தானியங்களுக்கு மட்டுமே விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது, விவசாயிக்குத் தேவையான பொருள்களாகிய மற்றப் பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. விவசாயிகளுக்குத் தேவையான பொருள்கள் அதிக விலைக்கு விற்கின்றன. ஆளும் கட்சியில் உள்ள அங்கத்தினர் "55 ரூபாய் கொடுத்துத் தான் அம்மோனியம் ஸல்பேட் வாங்கியிருக்கிறேன். ரசீது கூட வைத்திருக்கிறேன், வேண்டுமானால் ரசீதைக் காண்பிக்கிறேன்" என்று ஸ்ரீ கரிய கௌண்டர் சொன்னார். முதலில் விவசாயிகளுக்கு எல்லா உதவிகளும் செய்ய வேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

எங்கள் வட் ஆற்காடு ஜில்லாவிலிருந்து அங்கத்தினர்களும் அமைச்சர்களும் வந்திருக்கிறார்கள். வட ஆற்காடு ஜில்லாவில் நீர்ப்பாசன வசதியே இல்லை. அங்கே கிணறு வெட்டுவதற்கு ஸப்ஸிடி கொடுக்கலாம். அங்கே குறைந்தது 3 ஏக்கருக்கு ஒரு கிணறு வீதமாவது கிணறுகள் வெட்ட வேண்டும் என்று உத்தரவு போடலாம். மேலும் விவசாயிகளுக்கு வட்டியில்லாத நீண்ட காலக் கடன்களை, பத்து–இருபது வருஷங்களுக்கு கொடுத்தால் ஏழை விவசாயிகள் அங்கே கிணறுகளை வெட்டி பயிரிடுவார்கள். அதற்கான முறையில் சர்க்கார் உத்தரவு போட்டால் நன்றாக இருக்கும்.

விவசாயம் என்றால், அதை ஒரு கேவலமான தொழிலாக நினைக்கிறார்கள், இந்தக் காலத்தில். விவசாயம் விருத்தியாகியிருக்கிறது, உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்றெல்லாம் ஏட்டில்தான் இருக்கிறதே தவிர, உண்மை நிலை அதுவல்ல. வியாபாரிகளிடத்தில் விவசாயிகள் நெல்லைக் கொண்டு போனால், அரசாங்க விலை பிரகாரம் முதல் தரம் 18 ரூபாய் என்றும், 2-ம் தரம் நெல்லுக்கு 22 ரூபாய் என்றும், 3-ம் தரம் நெல்லுக்கு 24 ரூபாய் என்றும் கொள்முதல் செய்கிறார்கள். அப்படி குறைந்த விலைக்கு கொள்முதல் செய்தால் விவசாயிகள் நிலை என்ன ஆவது. விலையைக் கட்டுப்படுத்துவது அவசியந்தான். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அதற்கு ஒரு தாசீல்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஒரு கண்ட்ரோல் ஆபீஸர் இவர்கள் எல்லோரும் வேண்டியதில்லை. கணக்குப்பிள்ளையிடம், சாகுபடி நோட்டு இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு மூட்டை வீதம் அந்தந்த தாலூகா தாசீல்தாரிடம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டாலே போதும், நமக்கு கோடிக்கணக்கான மூட்டைகள் வந்து சேரும். அதைப்பற்றி சந்தேகமே வேண்டியதில்லை. நூறு ரூபாய் சம்பாதிக்கிறவர்கள் கூட அரிசி வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நான் முன்பே ஒரு தடவை சொல்லியிருக்கிறேன், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, அரிசி படி ஒரு ரூபாயாயிருக்கும் என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப் படும்போது அரிசி படி இரண்டு ரூபாய் என்று விற்கும் என்றும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படும் போது அரிசி படி மூன்று ரூபாய் விற்கும் என்றும் சொல்லியிருக்கிறேன். (பலத்த சிரிப்பு) இப்படி உயருவதற்கு காரணம், விவசாயம் செய்ய யாரும் முன் வருவதில்லை. ப்ளாக் டெவலப்மெண்ட்டில் கட்டிடங்கள் கட்டுகிறார்கள், அங்கே சென்று ஒரு மம்மட்டியை வைத்துக் கொண்டிருந்தாலே போதும், வேலை செய்ய வேண்டியதில்லை, அவனுக்கு இரண்டு ரூபாய் கூலி கிடைத்து விடுகிறது. ஆகவே, அதை விட்டு விட்டு யாராவது விவசாயம் செய்ய வருவார்களா? ஒரு நாள் பூராவும் விவசாய வேலையில் ஈடுபட்டால் ஆண்களுக்கு 0–8–0 ரூபாயும், பெண்களுக்கு 0–4–0 ரூபாயும் தான் கிடைக்கிறது. அதற்கு யார் போகிறார்கள்? இந்த ப்ளாக் டெவலெப்மெண்ட் வந்ததும் வந்தது, உணவுப் பஞ்சமும் ஏற்பட்டு விட்டது. ஆகவே, இந்த ப்ளாக் டெவலப்மெண்ட்டை மூட வேண்டும். (சிரிப்பு) அடுத்தபடியாக, கிராமங்களில், வாட்டர் ஸ்கீம் என்று ஒன்று இருக்கிறது. அங்குள்ள டாங்குகளைப் பார்த்தால், தெரியும், ஒரே அழுக்காக பூச்சிக்கள் தான் அடைந்திருக்கிறது. கிராமங்களில் உள்ள விவசாய மக்கள், ஆண்



களும் சரி, பெண்களும் சரி, தினம் குளத்திற்கோ வாய்க்காலிற்கோ சென்று குளித்து விட்டு வருகிறார்கள். அவர்களுக்கு அங்குள்ள டாங்குகள் பயன்படுவதில்லை. பெரிய பெரிய டவுன்களிலுள்ள டாங்குகளே க்ளீன் செய்யப்படாமல், கழுவப்படாமல் இருக்கின்றன. கிராமங்களில் இந்த டாங்குகளுக்கு என்ன தேவையிருக்கிறது என்று தெரியவில்லை. அடுத்தபடியாக, ரீடிங் ரூம்ஸ் என்று ஒன்று இருக்கிறது. இது எதற்கோ? தெரியவில்லை. காலையில் விவசாயி ஆறு மணிக்கு புறப்பட்டுவிட்டால் இரவு எட்டு மணிக்குத்தான் வீடு திரும்புகிறான். ஆண்களும் சரி, பெண்களும் சரி, இருவருக்கும் இந்த நிலைதான். அவர்கள் இருக்கின்றார்கள் இரவு நன்கு சாப்பிட்டுவிட்டு மகசூல் காவலுக்கு போய்விடுகிறார்கள். ஆகவே, இந்த ரீடிங் ரூம்ஸ் தயவு செய்து இனிமேல் வேண்டியதில்லை. (பலத்த சிரிப்பு) பெரிய பெரிய நகரங்களுக்கு வாட்டர் ஸ்கீம் இருந்தால் பரவாயில்லை, ஆனால் கிராமங்களில் இந்த வாட்டர் ஸ்கீம் அவசியமில்லை. (பெல்) உதவி சபாநாயகர் அவர்கள் பெல்லை அடித்துவிட்டார்கள். ஆகவே, எனக்கு இன்னும் அதிகம் பேச வேண்டுமென்றிருந்தபோதிலும் பேச முடியாது. நான் ஒன்றும் தப்பாக சொல்லவில்லை. ஒழுங்காகத் தான் சொல்கிறேன். ஆகவே, கடைசியாக சொல்லிக் கொள்கிறேன், விவசாயிகளுக்கும் சர்க்காருக்கும் நடுவில் இப்போது போடப்பட்டிருக்கும் ஆபீஸர்கள் தேவையேயில்லை. கணக்குப்பிள்ளை இருக்கிறாரே அவரே போதும். ஏதோ கணக்குப்பிள்ளைக்கு இன்னும் கூடுதல் ஐந்து ரூபாய் சம்பளம் கொடுத்து விட்டால், சர்க்காருக்கு எவ்வளவு நெல் தேவையிருக்கிறதோ அதைவிட கூடுதலே கொண்டு வந்து கொடுப்பார். (பெல்) மறுபடியும் உதவி சபாநாயகர் அவர்கள் பெல்லை அடித்துவிட்டதால் இதோடு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri A. E. CHANDRASEKHARAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சபை முன் கொண்டுவரப்பட்டிருக்கும் விவசாய மான்யத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த விவசாய இலாகா மிகவும் கஷ்டமான, தர்ம சங்கடமான இலாகாவாகும் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பழைய முறையிலேயே போய்க்கொண்டிருக்கும் விவசாய மக்களிடையே, அதுவும் கிராமமக்களிடையே இந்த இலாகா வேலை செய்ய வேண்டியிருப்பதால் இந்த இலாகா மிகவும் கஷ்டமான இலாகாவாகும் என்று சொல்கிறேன். இந்த இலாகாவினருக்கும், விவசாய மக்களுக்கும் இடையே எந்த விதமான தொடர்பு இருக்கவேண்டும், எப்படி விவசாயத்தை நல்ல முறையில் நம் நாட்டில் அபிவிருத்தி அடையச் செய்யவேண்டுமென்பது பற்றி நாம் ஒரு திட்டம் வகுக்கவேண்டும். குறிப்பாக விவசாய இலாகாவிற்கு நடைமுறை அனுபவம் (நாலட்ஜ்) அதிகமாக இருக்க வேண்டும். புத்தக அறிவுமட்டும் போதாது. ஆகவே, விவசாய மக்களிடம் சென்று அவர்கள் செய்யவேண்டியது என்னென்ன என்பதை விவசாய இலாகா அதிகாரிகள் சொல்ல வேண்டும். மேலும் இந்த மான்யத்தில், அக்ரிகல்ச்சரல் எக்ஸிபிஷேன் அண்ட் ப்ராபகாண்டா, அக்ரிகல்ச்சரல் எடியூகேஷன் என்று இரண்டு இனங்களாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை ஒன்றாகச் சேர்த்து அக்ரிகல்ட்யூரல் "மாஸ் எடியூக்கேஷன் ஸ்கீம்", ஒன்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாஸ் எடியூக்கேஷனினால் நல்லதொரு பயன் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. அடுத்தபடியாக, ரேடியோவில் விவசாயத்தைப் பற்றியும், விவசாய முறைகளைப் பற்றியும் தினசரி ½ மணி நேரமாவது ஒலிபரப்பினால், கிராமவாசிகள் அதனால் நல்ல விவசாய அறிவு பெறுவதற்கு வசதியாகயிருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், "லாண்ட் யூஸ்", நிலத்தை எப்படி உபயோகிக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. சாதாரணமாக, நிலத்தில் "ஸாயில் கன்ஸர்வேஷன்" செய்து விட்டால் நிலத்தை நாம் உபயோகப்படுத்தி

விட்டதாக நினைக்கிறோம். ஸாயில் கன்ஸர்வேஷன் செய்யவேண்டியது அவசியம் என்றிருந்தபோதிலும், வேண்டிய மனித சக்தி, நிலம், பயிர் செய்வதற்கு வேண்டிய நீர் சக்தி இவைகள் முக்கியமான தேவையாகயிருக்கிறது. சாயில் கன்ஸர்வேஷன் செய்த பிற்பாடு, நிலங்கள் எப்படியிருக்கிறது, அதனால் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று சரியான முறையில் கவனிக்காது விட்டுவிட்டால் நல்ல பலனை நாம் அடைய முடியாமல் போகும். ஆகவே, ஸாயில் கன்ஸர்வேஷன் செய்யப்பட்ட இடங்களில் நல்ல நீர் வசதியையும், மனித சக்தியையும் ஏற்படுத்துவதற்கு ஒரு புனரமைப்புத் திட்டத்தை, ஒரு "காம்ப்ரிகன்சிவ் ஹெபிலேஷனரீ செட்டில்மெண்ட் ஸ்கீம்" தயாரிக்கப்பட வேண்டும். நில வளமும், நீர் வளமும் இருக்கிற இடத்தில் மனித வளம் இல்லாமல் இருக்கிறது. மனித வளம் உள்ள இடத்தில் நிலவளமும், நீர்வளமும் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, மனித சக்தி, நில வளம், நீர்வளம் இவ்வளவும் ஒருங்கே சேருவதற்குள்ள ஒரு புனரமைப்புத் திட்டம் அவசியம் வகுக்கப்படவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆக, இப்படிச் செய்து நல்ல முறையில் விவசாய உற்பத்தியைப்பெருக்குவதற்கு நமது அரசாங்கம் ஒரு கிராமாந்திர திட்டத்தை தயார் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நமது ராஜ்யத்தில் 20,000 கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும், அங்கு உற்பத்தி செய்யப்படும் உணவுப் பண்டங்கள், மற்றும் உணவு தான்யங்கள் இவைகளை சரிவர பக்குவப்படுத்தி சேமித்து வைப்பதற்கு நல்லதொரு புது முறையை நாம் கையாள வேண்டும். பழைய கால முறைதான் இன்றும் கிராமங்களில் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் களத்து மேடும், புதிய முறையில் ஒரு களமும், உணவு தான்யங்களை சேமித்து வைப்பதற்கு ஒரு சேகரிப்பு கிடங்கும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒரு திட்டம் தயார் செய்தால் அதனால் கிராம மக்கள் நல்ல பயன்
11-30 a.m. அடைவார்கள் என்றும் இங்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மேலும் கிராமவாசிகள் தங்களுக்கு சரியான முறையில் சேமித்துவைக்க சந்தர்ப்பம் இல்லாததால், அவர்களுடைய பொருள்களை உடனடியாக மார்கெட்டுக்குக் கொண்டு வந்து அநியாய விலைக்கு விற்று நஷ்டம் அடைய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையினால், இதற்கு சர்க்கார் ஒரு திட்டம் தயார் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவு தானிய விலையைப் பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். உணவு தானியத்தில் விலை செலவினங்களை அனுசரித்துத்தான் நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதை எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். அதை சர்க்காரும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். உணவு தானியத்தின் விலை ஒரு நிலையில் நிற்காமல் அவ்வப்பொழுது மாறிக் கொண்டு வருகிறது. ஆகவே உணவு தானியத்தைப் பொறுத்த வரையில் "பார்வேர்டிங் காண்டிராக்ட் அல்லது பார்வேர்டிங் வியாபாரம்" மாதிரி ஒரு ஏற்பாடு செய்யலாம் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது 6 மாதங்களுக்கு ஒருமுறை சர்க்கார் பல லட்சக்கணக்கான டன் தானியங்களுக்கு டெண்டர் கோரி அதன்மூலம் கிடைக்கும் தானியங்களை சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், மற்றும் மில்காரர்களுக்கும் சப்ளை செய்தால் உணவு தானிய விலை அடிக்கடி ஏறுவதும், இறங்குவதுமான நிலை ஏற்படாது என்று நான் நினைக்கிறேன். சர்க்கார் இம்மாதிரி ஒரு முறையை கையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், வட ஆற்காடு ஜில்லா போன்ற வறண்ட ஜில்லாக்களில் போதுமான நீர்ப்பாசன வசதிகள் கிடையாது. அங்கே பழைய காலத்தில் ஆற்றுக்கால்வாய் போன்றவைகளின் உதவியால் பயிர் செய்து வந்தார்கள். அவைகளெல்லாம் இப்பொழுது மறைந்து கொண்டே வருகின்றன. பழைய காலத்தில் இருந்த நீர்ப்பாசன வசதிகளை நன்கு சீர்திருத்தி ஆங்காங்கு புதிய நீர்ப்பாசன வசதிகளையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஒரு நல்ல திட்டத்தை அமைக்கவேண்டும், நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக



ஒதுக்கப்படும் பணத்தை வைத்துக்கொண்டு ஒரு வாடர் சப்ளை கார்ப்பரேஷன் ஏற்படுத்தி, எல்லா நிலங்களுக்கும் தண்ணீர் சப்ளை செய்ய ஒரு திட்டம் தயார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் ஒரு இடத்தில் நீர் அதிகமாக இருக்கிறது, போதுமான நிலம் இல்லை; நிலம் அதிகமாக இருக்கிறது, போதுமான நீர் இல்லை. இம்மாதிரி உள்ள சங்கடங்களைப் போக்குவதற்கு சர்க்கார் ஒரு திட்டத்தை தயார் செய்யவேண்டும்.

மேலும், என்னுடைய தொகுதியில் வட ஆற்காடு ஜில்லாவில் வாலாஜா தாலூகாவில் பாரி அண்டு கம்பெனியினாலும், மற்றும் தோல் பதனிடும் சாலைகளினாலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாழடைந்து வருகின்றன என்பதை பல வருஷங்களாக சர்க்காருக்கு தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். கழிவு நீர் பாய்ந்து நிலங்கள் பயிரிடமுடியாமல் கெட்டு விடுகின்றன. இதுபற்றி கோர்ட்டில் கூட ஒரு கேஸ் நடந்தது. கோர்ட்டில் அது தவறு என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். சர்க்கார் இதை உடனடியாக கவனித்து இம்மாதிரி தோல்பதனிடும் சாலைகளிலிருந்தும், பாரி அண்டு கம்பெனியிலிருந்தும் வரும் கழிவு நீரினால் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாதகம் அடையாமல் இருக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் எங்கள் ஜில்லாவில் காவேரிப்பாக்கம் ஏரி என்று பெரிய ஏரி இருக்கிறது. 6,000 ஏக்கருக்கு மேல் உள்ள நிலங்கள் அதனால் பயனடையும், பாசன வசதி பெறும், பல ஆண்டு காலமாக அந்த ஏரி கவனிக்கப்படாமல் இருந்து வருகிறது. ஒரு பெரிய நீர்ப்பாசன திட்டத்தை எடுப்பது போல, இதற்காக ஒரு பெரிய திட்டத்தை தயார் செய்து இந்த ஏரியை பயனுள்ளதாகச் செய்ய வேண்டும். 6,000 ஏக்கருக்குமேல் ஆயக்கட்டை இன்னும் விஸ்தரிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகவே, இதற்காக ஒரு திட்டம் தயார் செய்து இந்த ஏரியை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டில் வாலாஜா தாலூகாவில் "ஸாயில் கன்ஸர்வேஷனுக்காக" பணம் ஒதுக்கப்படவில்லை. ஆங்காங்கு பக்கத்தில் அதைச் செய்தால்தான் அதனுடைய பலன் நல்ல முறையில் கிடைக்கும். மற்றும் ஆயிரம் ஏக்கர் உள்ள நெளலாத் தோட்டத்தை எடுத்துக்கொண்டு "ஸாயில் கன்ஸர்வேஷன்" செய்தால் விவசாயத்தில் உற்பத்தியை அதிகரிக்கலாம். அது ஆற்று ஓரத்தில் எடுப்பதால் நெளலாத் தோட்டத்தை எடுத்து ஸாயில் கன்ஸர்வேஷன் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து, என்னுடைய சொற்பொழிவை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI M. R. KANDASWAMI MUDALIYAR: இந்தச் சபையின் முன் கொண்டு வரப்பட்டிருக்கும் விவசாய மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நீர்ப்பாசனத் துறையிலே எவ்வளவோ அபிவிருத்தி ஏற்பட்டும்கூட, உணவில் விலை இன்றைக்கு ஏறுமுகமாக இருக்கிறது என்பது இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் விலைக்கட்டுப்பாட்டிலிருந்தே தெரியவருகிறது.

(Mr. Speaker in the Chair.)

பல நண்பர்கள் சொன்னதுபோல நீர்ப்பாசன வசதிகளால் உணவு உற்பத்தி பெருகவில்லை என்பது அதற்கு சரியான காரணம் அல்ல. 2, 3 ஆண்டு காலமாக பருவ மழையானது சரியான முறையிலே இல்லாத காரணமாக ஒரு பகுதியில் நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் தான் உணவு தானியங்களின் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. அதே சமயத்தில் மானம் பார்த்த பூமியாக இருக்கக்கூடிய இடங்களிலே விவசாயம் பொய்த்துப்போய், அந்த இடங்களின் தானியங்கள் விளைச்சல் இல்லாமல் விளைவு குன்றிப் போய் அங்கே பஞ்சப் பிரதேசங்களாக இருக்கின்றன. இம்மாதிரி ஒரு பக்கத்தில் உணவு உற்பத்தி அதிகமாகி, மற்றொரு பக்கத்தில் உணவு

உற்பத்தி குறைந்திருப்பதினால் விலை கூடுதலாக இருக்கிறது. விவசாயிகளுடைய நிலையை இன்றைக்கு எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், தொழில்துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களை விட விவசாயிகளின் நிலை மிகமிக கேவலமாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலைமையும் மிகவும் பிற்பட்ட நிலையிலே இருக்கிறது. அதன் காரணமாக ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய தொழிலை திறம்பட நடத்துவதற்கு சந்தர்ப்பம் இல்லாத முறையிலே, விவசாயத் தொழில் சீர்கெட்டுப்போய் இருக்கிறது. மற்ற தொழில் துறையிலே அதிக வருவாய் கிடைப்பதினால், தற்சமயம் 18, 19, 20 வயதுள்ள விவசாயிகளிடையே உள்ள வாலிபர்கள் அனைவரும் தொழில் துறையை நாடி நகர் பிரதேசங்களுக்குப் போகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கல்வி வசதி முதலிய வசதிகள் அல்லாமல் அவர்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதன் காரணமாக, அதிக முன்னேற்றம் அடைவதை நோக்கி அவர்கள் நகர் புறங்களுக்கு செல்லுகின்ற நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை இப்படியிருக்கும்பொழுது பல அங்கத்தினர்கள் இன்னும் விலையை குறைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மற்ற தொழில் துறையிலே உள்ள தொழிலாளர்களும் கூட உணவு விலைக் கட்டுப்பாடு அவசியம், விலை அதிமகாக ஏறிவிட்டது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் விவசாயி விவசாயத்தை விட்டுவிட்டு வேறு எங்கேயாகிலும் 15, 20 ரூபாய் சம்பளம் கிடைத்தால் போதும் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. கனம் அமைச்சருக்குக்கூட தெரியாத விஷயம் அல்ல. விவசாயி எந்த நிலைமையில் தன்னுடைய வாழ்க்கையை நடத்துகிறான் என்று சொன்னால், அவனுக்கு நிரந்தரமாக தினத்திற்கு 12 அணா கூலி கிடைப்பதுகூட கஷ்டமாக இருக்கிறது. மாதம் 30 நாட்களுக்கும் வேலை கிடைப்பதில்லை. $22\frac{1}{2}$ ரூபாய், 25 ரூபாய் குறைந்த வருமானம் கிடைக்கிறது. உற்பத்தியாகக்கூடிய பொருள்களின் விலையை கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னால், விவசாயிகள் வாங்கக்கூடிய பொருள்களின் விலை எதாவது குறைந்திருக்கிறதா என்றால், அதுவும் குறைந்தபாடு இல்லை. தவிர, அரசாங்கம் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக பல வசதிகளை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதாவது உரம் வாங்குவதற்கு கடன் கொடுக்கப்படுகிறது, மாடு வாங்குவதற்கு கடன் கொடுக்கப்படுகிறது, விதைகள் கொடுக்கப்படுகிறது. இவர்கள் கொடுக்கக்கூடிய வசதிகள் அத்தனையும், காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கிறதா, அந்தப் பொருள்களை விவசாயிகள் வாங்குவதாயிருந்தால் குறிப்பிட்ட நேரத்தில் அவைகளை வாங்கத்தான் முடிகிறதா என்று பார்த்தால், அது கிடையவே கிடையாது. பல நண்பர்கள் பேசுகிறார்கள். ஆனால் நான் அவர்கள் பேசியதை எதிர்ப்பதாக கருதவேண்டியதில்லை. இருக்கக்கூடிய நிலைமையைத் தான் எடுத்துச்சொல்லுகிறேன். என்.ஜி.ஓக்களுக்கு அதிகச் சம்பளம் வேண்டும், அவர்களுக்கு குறைந்த சம்பளம் இருந்தால் வேலையை உற்சாகத்துடன் செய்ய மாட்டார்கள் என்று சொல்லப்பட்டது. அவர்களைவிட நான்கு மடங்கு குறைவாக கூலி பெறும் விவசாயி இதே என்.ஜி.ஓ.விடம் சென்று உரத்திற்காக விண்ணப்பம் போட்டால், 40, 45 ரூபாய்க்கு உரம் வாங்க வேண்டியிருந்தால், அதற்காக 12 ரூபாய் செலவழிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரு கிணறு வெட்டுவதற்காகவோ, அல்லது மாடு வாங்குவதற்காகவோ கடன் பெறவேண்டுமென்றால், 400 ரூபாய் வேண்டுமென்றால் அதில் 100 ரூபாய் போய் விடுகிறது. அது எந்தத் துறையில், எப்படி யார் யாருக்கு பங்கு கொடுக்கவேண்டும் என்பது பற்றி அமைச்சர் அவர்களுக்கு பல விண்ணப்பங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கு இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும் தெரியும். 20 ரூபாய் வருமானம் வரக்கூடிய விவசாயி இந்த நிலைமையில் இருந்தால், விவசாய உற்பத்தியை எப்படி பெருக்க முடியும்? நாட்டின் முதுகெலும்பு போன்ற விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமென்றால், அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காக ஒதுக்கக்கூடிய பணம் நல்ல முறையிலே விவசாயிகளுக்கு



முழுவதும் போய்ச் சேருவதற்கான வழிவகைகள் செய்ய வேண்டும். இம்மாதிரி விஷயங்களில் அதிகார வர்க்கத்தின் நடத்தைப்பற்றி சர்க்கார் சிப்பந்திகள் அக்கரையே செலுத்துவது கிடையாது.

அவன் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, தாங்கள் நல்ல முறையில் வாழ வேண்டும், நல்ல முறையில் ஜீவிக்க வேண்டும் என்று தான் அவர்கள் நினைக்கிறார்கள். இந்த நிலையில் அதிகாரிகளிடமிருந்து நல்ல முறையில் ஒத்தாசை கிடைக்காததின் காரணமாக விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். 40 ரூபாய் பெறுமான உரம் வாங்க வேண்டுமென்றால் 10 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இவ்விதம் வாங்குவதை காட்டிலும் எட்டணா கூடுதலாக கொடுத்து வெளியில் வாங்கிக்கொள்ளலாம் என்று போய்விடுகின்றான். அதே போன்று தான் 1,000 ரூபாய் கடன் வேண்டும் என்று மனு செய்தால் அதில் 150 ரூபாய் செலவழிந்து விடுகிறது. ஆகவே வெளியில் பத்து அல்லது பன்னிரண்டு ரூபாய் வட்டிக்கு கடன் வாங்கி விவசாயத்தை செய்து கொள்ளலாம் என்று போய் விடுகின்றான். ஆறு அல்லது எழு வட்டியில் கடன் கிடைக்கும் என்று நினைத்து அதற்கு மனு செய்து அதில் 1,000 ரூபாய்க்கு 150 ரூபாய் செலவு செய்வதைவிட வெளியில் கூடுதல் வட்டிக்கு கடன் வாங்கிக்கொள்ளலாம் என்று போய்விடுவது நல்லதா என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அதோடு இந்த கடனை வாங்குவதற்கு இவ்வளவு ரூபாயும் கொடுத்து கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. வெளியில் வாங்குவது என்றால் சுலபமாக போய்விடுகிறது. ஆகவே இந்த நிலைமையில் விவசாயிகளுக்கு உண்மையிலேயே நன்மை செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் அரசாங்க சிப்பந்திகளுக்கு இருக்குமானால், தங்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்று கோரக்கூடிய அவர்கள், விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா சலுகைகளும் சீக்கிரமாகவும் சுலபமாகவும் கிடைப்பதற்கு வேண்டிய உத்தரவுகளை பிறப்பிக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமையில் விவசாயிகளிடமிருந்து அவர்களுடைய வருமானத்திற்கு வரி வசூல் செய்கின்றோம். ஆகவே அவர்களுக்கு கொடுக்கப்படும் எல்லா சலுகைகளும் அவர்களுக்கு காலாகாலத்தில் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். இப்போதிருக்கின்ற முறைகளின் பிரகாரம் இந்த விதத்தில் தான் கொடுக்க முடியும் என்றிருந்தால் இப்போதிருக்கின்ற முறைகளையாவது மாற்றி அமைக்கும்படி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மழையை நம்பி விவசாயம் செய்யப்படுகிறது, பல இடங்களில். அந்த இடங்களில் எல்லாம் காலாகாலத்தில் மழை பெய்யவில்லையென்றால் அவர்களுக்கு எந்த விதமான பயனும் ஏற்படாமல் போய்விடுகிறது. இதன் காரணமாக அவனுக்கு எந்த விதமான விமோசனமும் இல்லாமல் போய் விடுகிறது. மழையை நம்பி இரண்டு எக்கர், மூன்று எக்கர் பயிர் செய்கின்றான், இதற்காக 40, 50 ரூபாய் செலவு செய்கின்றான், இவ்விதம் செலவு செய்தாலும் ஒரே ஒரு கிராப்தான் பயிர் செய்ய முடியும். இந்த நிலையில் அவன் எதிர்பார்த்திருக்கின்ற பருவ மழையும் பெய்வதற்கு தவறிவிட்டால் எந்த விதமான பயனும் இல்லாமல் கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இம்மாதிரிப்பட்ட விவசாயிகளுக்கு, அதாவது மழையை நம்பி, கிணற்றுப்பாசனமோ அல்லது எந்த விதமான நீர்பாசன வசதியும் இல்லாமல், மழையை நம்பி மட்டும் விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு, அவர்களுக்கு மூன்று எக்கர் வரையிலும் வரி வஜா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, மூன்று எக்கர் வரையிலும் இம்மாதிரி வகையில் விவசாயம் செய்கிற விவசாயிகளிடமிருந்து கிஸ்தி வசூல் செய்யக்கூடாது என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதோடு விவசாயிகளுக்கு வீடு வசதி செய்து கொடுக்க வேண்டும், இன்றைக்கு மாதம் 250 ரூபாய் 300 ரூபாய் வாங்கக்கூடிய சிப்பந்திகளுக்கு எல்லாம் வீடு கட்டி கொடுப்பதற்காக பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். அதே சமயத்தில் வெறும்

[Sri M. R. Kandaswami Mudaliyar] [18th March 1959

12 அணு, ஒரு ரூபாய் என்று கூலி பெற்று வரும் விவசாய தொழிலாளர்களுக்கு வீடு கட்டி கொடுப்பதற்கு நம்மிடத்தில் எந்த விதமான திட்டமும் இல்லை. ஆகவே அவர்களுக்கு, குடியிருக்க குடிசை கூட இல்லாத விவசாயிகளுக்கு, வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக, அவர்களுக்கு என்று தனியாக காலனிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவசாயிகளுக்கு பூச்சி மருந்து, கால்நடை வைத்தியம், கிருமி நாசினி போன்றவைகளுக்கு பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகள் கிடைக்கும் ஸெண்டர் ஒவ்வொரு பிர்க்காவுக்கும் இருக்குமானால் விவசாயிகளுக்கு உடனே மருந்துகள் வாங்குவதற்கும், கால்நடைகளை கொண்டு போய் வைத்தியம் செய்து கொள்வதற்கும் வசதியாக இருக்கும். அதோடு பக்கத்தில் இருக்குமானால் கால்நடைகளுக்கு ஏதாவது வியாதி ஏற்பட்டால் கால்நடைகளை கொண்டுபோய் காண்பிப்பதற்கோ அல்லது டாக்டர்களை அழைத்து வந்து காண்பிப்பதற்கோ முடியும். ஆனால் இப்போது இந்த செண்டர்கள் எல்லாம் நகரங்களில் இருக்கின்றன. கிராமங்களில் கால்நடைகளுக்கு ஏதாவது வியாதி ஏற்பட்டால் கிராமங்களிலிருந்து கால்நடைகளை நகரங்களுக்கு கொண்டுபோகமுடியாது, அதற்காக டாக்டர்களை அழைத்து வரவேண்டுமானால் விவசாயிகள் நகரத்திற்குப் போகவேண்டும். அங்கு போய் டாக்டரை அழைத்து வருவதற்குள் மாட்டினுடைய உயிர் யமலோகத்திற்குப் போய்விடும். அப்படியிருக்கும்போது இந்த முறை எந்த அளவுக்கு விவசாயத்திற்கு உதவும் என்பதை நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். எங்களுடைய பிர்க்காவை எடுத்துக்கொண்டால் எங்கள் பிர்க்காவிலிருந்து நகரத்திற்கு 15 மைல் தூரமிருக்கிறது. இதனால் நகரத்தில் போய் வசதிகளை ஒன்றும் பெற முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே இந்த ஸெண்டர்களையும், மிருக ஆசுபத்திரிகளையும் ஒவ்வொரு பிர்க்காவிலும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பூச்சி மருந்துகள் கிருமி நாசினி முதலியவைகளையும் அங்கேயே கிடைப்பதற்கும் வழி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு சமீப காலத்தில் சர்க்கார் தரிசு புறம்போக்குகளில் 10 வருடங்களுக்கு மேலாக பயிரிட்டு வருகிறார்கள், விவசாயிகளே கிணறு வெட்டி அதில் சாகுபடி செய்து வருகிறார்கள். இதைப்பற்றி கிராம அதிகாரிகள் புகார் செய்யாமல் இருந்தால் அப்படியே விட்டு விடுகிறார்கள். சில சமயங்களில் கிராம அதிகாரிக்கும் இந்த விவசாயிக்கும் ஏதாவது அபிப்பிராய பேதம் வந்தால் அப்போது புகார் அனுப்பி விடுகிறார்கள். இதன் காரணமாக அங்கு விவசாயம் செய்து கொண்டிருந்தவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் பல ஆண்டு காலமாக உழுது தாங்களே செலவு செய்து கிணறு வெட்டி சாகுபடி செய்கின்றவர்கள் மீது எந்த விதமான நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதோடு அவர்களுக்கு அந்த இடத்தை அடமானம் செய்து கொடுப்பதற்கும் உடனடியாக வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI T. IRUSAPPAN:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கும் மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து விவசாயத்துறையில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் சில குறைகளை எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த தென் நாட்டிலுள்ள விவசாயிகளுடைய குறைகளை சரியான முறையில் கவனிக்கவில்லையென்றால் அவர்கள் கொந்தளிப்புக்கு ஆளாவார்கள். ஆகவே இந்த விவசாய மக்களுடைய குறைகள் என்ன என்பதை அறிந்து அவைகளை எல்லாம் போக்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள் இன்று மிகவும் அவல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சர்க்கார் எல்லா விதமான சலுகைகளை அளித்து அவர்களுடைய குறைகளை கவனிக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சேலம் மாவட்டத்தில் நாமக்கல், போத்தனூர்,



18th March 1959] [Sri T. Irusappan]

வேலூர், முதலிய இடங்களிலும் திருச்சி மாவட்டத்தில் கரூர், புகலூர் முதலிய இடங்களில் வெற்றிலை பயிரிடுகிறார்கள். வெற்றிலை பயிரிடுவது என்றால், அரை ஏக்கரில் வெற்றிலை விவசாயம் செய்ய வேண்டும் என்றால் ஆடி மாதத்திலேயே நிலத்தை பக்குவம் செய்து ஒரு கட்டிகூட இல்லாமல் பண்படுத்த வேண்டும். அதன் பின் அந்த நிலத்தையெல்லாம் வாய்க்கால் மாதிரி ஆக்க வேண்டும். அந்த சமயத்தில் அதாவது ஆடி மாதத்தில், ஒரு படி அவத்தி விதையின் விலை சுமார் 10 ரூபாய் இருக்கும். அதை வாங்கி நாற்று விடவேண்டும். இவ்விதம் அரை ஏக்கரில் வெற்றிலை பயிரிட வேண்டுமென்றால் ஒரு ஆண்டுக்குள்ளாக சுமார் 2,000 ரூபாய் செலவு செய்ய வேண்டும். அதன் பின்னால் தான் பலனடைய முடியும். இவ்விதம் ஒரு ஏக்கரில் வெற்றிலை பயிரிட்டு விவசாயம் செய்து வந்தால் சுமார் 10 குடும்பம் பிழைத்து வரலாம். இந்த நிலையில் தான் அங்குள்ள மக்கள் பிழைத்து வந்தார்கள். ஆனால் இப்போது அந்த நிலை மாறி இப்போது அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது அந்த வெற்றிலை பயிர் எல்லாம் பூச்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அங்குள்ள மக்கள் பிழைப்பதற்கு வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வரி வஜா செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுகொள்ளுகிறேன். சர்க்கார் சுமார் 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்து மாதிரி விவசாயம் செய்ததிலும் நஷ்டம் ஏற்பட்டது. அப்படியென்றால் தனிப்பட்ட விவசாயிகளுக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை சொல்ல வேண்டியதில்லை. ஆகவே சர்க்கார் இதை புறக்கணிக்காமல் அவர்களுக்கு வரி வஜா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ராமநாதபுரம் மாவட்டத்தில் பல கிராமங்களில் பருவ மழை தவறியதன் காரணமாக விவசாயிகள் அவல நிலையில் இருக்கிறார்கள் என்ற விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவர்களுடைய குறைகளை கவனித்து அவர்களுக்கு வரி வஜா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, விவசாயத்திற்காக் சர்க்காரிலே விதைப் பண்ணைகளுக்காக நிலங்களை வாங்குகிறார்கள். அதற்கான நிலங்களை 2 ஏக்கர், 3 ஏக்கர் அல்லது 5 ஏக்கர் வைத்திருப்பவர்களிடமிருந்து வாங்கமுடியாது. அவர்கள் அதைக் கொடுத்து விட்டு என்ன செய்வார்கள்? பெரிய நிலம் படைத்தவர்களிடம் சென்று சர்க்காரில் விதைப் பண்ணை நடத்த நிலம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் கொடுப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார்கள். அப்படி ஒப்பந்தம் செய்து கொண்டு பக்கத்திலுள்ள நிலங்களை அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அப்படி வாங்குவதில் அந்த நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சர்க்காரில் புள்ளி விவரம் கொடுத்து, பணக்காரர்கள் பணத்தை வாங்கிச் சேர்த்துக் கொண்டு விடுகிறார்கள். வாங்குவதற்கு முன்னால் அது கரம்பு நிலமா, களர் நிலமா, மண் வளம் இருக்கிறதா என்று பரிசோதிப்பது கிடையாது. அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்டிலிருந்து படித்த அதிகாரிகள் போகிறார்கள், பரிசோதனை பண்ணாமலேயே பயிர் வரும் என்று சொல்லுகிறார்கள், அப்படியே சர்க்கார் விவசாயப் பண்ணைகளுக்கு எடுத்துக் கொள் கொள்ளுகிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய விதைப் பண்ணைகளில் எத்தனை பண்ணைகள் லாபகரமாக ஓடுகிறது? லாபகரமாக ஓடினால் ஏன் இந்த விதைப் பண்ணைகளைக் குறைக்க வேண்டும்? இந்த மாதிரி சர்க்கார் பணம் வீண் விரயமாகிறது சர்க்கார் நடத்தும் விதைப் பண்ணைகள் மூலமாக. எனது தாலூகாவில் இரண்டு பண்ணைகள் இருக்கின்றன. அதைப் பார்த்து இந்த மாதிரித் தான் பயிர் செய்ய வேண்டுமா என்று விவசாயிகள் நினைக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. அந்த மாதிரி விதைப் பண்ணை எடுத்து நடத்துவதிலே எந்த கட்டத்திலே நாற்று விட வேண்டும், எவ்வளவு நாள் நாற்று விட்டு வைக்க வேண்டும், எப்போது நடவு நட வேண்டும், நஞ்சைக்கு எந்த நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும், புஞ்சைக்கு எந்த நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்

என்பதெல்லாம் விவசாயிக்குத்தான் தெரியுமே தவிர பட்டம் பெற்றவர்களுக்கு இதெல்லாம் தெரியாது. அவர்கள் ஏதோ படித்து விட்டு சம்பளம் வரவேண்டும் என்ற எண்ணத்தில் ஏதோ நடத்துகிறார்கள். ஆகையால் விதைப் பண்ணைகள் கீழ்த்தரமாகப் போகிறது. அவைகளெல்லாம் நல்ல முறையில் நடத்தப்படுவதில்லை. ஒரு விதைப் பண்ணைக்குப் போய் விவசாயி ஒருவன் சம்பா நெல் வேண்டுமென்று கேட்டால் ஏதாவது ஒரு நெல்லைக் கொடுத்து விடுகிறார்கள். கடைசியில் அறுவடையின் போது பார்த்தால் வெறும் தாளாக நிற்கிறது. நெல்லே இருப்பதில்லை. சாதாரணமாக ஒரு விவசாயி வெளியில் விதைக்கு நெல்லை வாங்கி இரண்டு ஏக்கர் அல்லது மூன்று ஏக்கரில் விதைத்து நாற்று விடுவார்கள். அவர்கள் நல்ல முறையில் ஜீவனம் செய்து வந்தார்கள். விவசாய இலாகாவில் இப்போது வாங்கி விதைத்தால் வெறும் தாளாக நிற்கக் கூடிய அவல நிலை இருக்கிறது. எதிர் கட்சிகள் குறை சொல்லுகிறார்கள், குறை சொல்லுகிறார்கள் என்று சொன்னால், இதையெல்லாம் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

எனது தொகுதியாகிய ஆத்தூர் வட்டத்தில் கூட்டு விவசாயம் நடத்த 1956-ம் ஆண்டிலிருந்து இது வரையில் மண் பரிசோதனை செய்து சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டு வந்திருக்கின்றது ராமநாயக்கன்பாளைத்தில். கூட்டு விவசாயத்தில் ஆதித் திராவிட மக்களும், நிலம் இல்லாத ஏழை மக்களும் எடுத்து நடத்தத் தயாராக இருக்கிறார்கள். இதை சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்கள் இந்தக் கூட்டு விவசாயம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் தொகுதியில் முல்லைவாடி கிராமத்தில் ஏற்கெனவே பயிரிட்டு வந்த விவசாயிகளை அப்புறப்படுத்தி, ஒரு மாதிரிப் பண்ணை அமைக்க இப்போது 7-ம் நம்பர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இதனால் ஏழை விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு கூட்டுறவு சொஸைடியாக வைத்து இவைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஏழை விவசாயிகளைப் பற்றி முன் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டார்கள். 'ஆடி மாதம் தேடி விதை' என்று சொல்லுவார்கள். இன்றைக்கு ஏழை விவசாயிகள் இரசாயன உரம், புண்ணாக்கு போன்றவைகளுக்கு விண்ணப்பம் போட்டால், இந்த ஆடி மாதத்தில் போட்டால், அடுத்த ஆடி மாதத்திலே கூட கிடைக்காத நிலை இருக்கிறது. இந்த மாதிரி நிலை இல்லாமல் பருவத்திலே பயிர் செய்ய வேண்டுமென்ற காரணத்தை அடிப்படையாக வைத்து அவ்வப்போது விவசாயிகள் கொடுக்கக்கூடிய விண்ணப்பங்களை கவனித்து, அவர்களுக்கு இரசாயன உரம், புண்ணாக்கு போன்றவைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைக்கு ஏழை விவசாயிகள் எந்த விண்ணப்பம் கொடுத்தாலும் அதிகாரிகள் அதை மதிப்பதில்லை. விவசாயிகள் என்றால் பெரும் நிலம் படைத்தவர்களை மதிக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு உரம் வேண்டுமானாலும் கிடைக்கும். ஏழை விவசாயிகளுக்கு கிடைக்காது. இந்த மாதிரி நிலைமை இருக்கக்கூடாது.

இன்றைக்கு கிணறு வெட்டப் பணம் கொடுக்கிறார்கள். இந்தப் பணம் 5 ஏக்கருக்கு மேல் இருப்பவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். நான்கு ஏக்கருக்குக் குறைந்த நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களெல்லாம் கிணறு வெட்டி விவசாயம் செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே 1,000 ரூபாய் கொடுக்கிறார்கள்—250 ரூபாய் இனாமாகவும், 750 ரூபாய் கடனாகவும் கொடுக்கிறார்கள். இந்த 750 ரூபாயை 10 வருஷங்களில் வசூல் செய்து கொள்கிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு இந்த மான்யம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



தென்னாட்டு விவசாயிகளுடைய அவல நிலையைப் போக்கி சர்க்கார் கவனித்து இரசாயன உரம், புண்ணாக்கு முதலியவைகள் காலாகாலத்தில் கிடைக்க வழி வகைகள் செய்து கொடுத்து, விவசாயிகளுக்குக் கூலி உயர்வு கொடுத்து, விவசாயிகள் நல்ல முறையில் வேலை செய்வதற்கு வழி வகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**Mr. SPEAKER** : அடுத்த அங்கத்தினர் பேசுவதற்கு முன்பு சபைக்கு நான் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. இன்று அலுவல் ஆலோசனைக் கமிட்டி கூடி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. வருகின்ற 23-ம் தேதி, திங்கட்கிழமையன்று காலையில் கூட்டம் 10 மணிக்கு ஆரம்பிக்கும். காலையில் கூட்டம் 10 மணியிலிருந்து 1 மணி வரையில் நடக்கும். அன்று மாலையில் 3 மணி முதல் 6 மணி வரையிலும் கூட்டம் நடக்கும். அன்று ஹரிஜன மான்யம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அதோடு கூட அரசாங்க அலுவல்களும் எடுத்துக் கொள்ளப்படும். ஹரிஜன மான்யத்தில் அநேக அங்கத்தினர்கள் பேச வேண்டும் என்று விரும்பியதால் இதற்கு மொத்தம் 6 மணி நேரம் ஒதுக்க வேண்டுமென்று இப்படி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**Sri A. R. MARIMUTHU** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது சபை முன் இருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

நம்முடைய நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. நம்முடைய ஜனத் தொகை அதிகரிப்புக்குத் தகுந்தவாறு நம்முடைய விவசாய அபிவிருத்தியைப் பெருக்கியாக வேண்டும். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல வகையான முயற்சிகளை நாம் செய்தாக வேண்டும். இருக்கக் கூடிய தண்ணீர் வசதியைப் பயன்படுத்தி அதிகப்படியான நிலங்களைச் சாகுபடிக்கும் கொண்டு வரவேண்டும். அதோடு கூட இப்போது இருக்கும் நிலங்களில் அதிகப்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நாம் அனுபவத்திலே உணருகிறோம், இன்றைக்கு ஒரு ஏக்கரில் விளையக் கூடியதை விட அதிகப்படியாக, நிச்சயமாக இரண்டு மடங்காவது அதிகப்படுத்த முடியும் என்று. இன்றைக்கு அம்மாதிரி நவீன முறைகளைக் கையாண்டு சாகுபடி செய்வதில் விவசாயிகளுக்குப் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. இந்த இடைஞ்சல்கள் நிவர்த்தி செய்யப்படுமானால் இன்னும் நல்ல முறையில் உற்பத்தியை அதிகப்படுத்தலாம். விவசாயிகளிடத்தில் உற்சாகம் இருக்கிறது. இன்றைக்கு விளைவதைவிட அதிக விளைவைப் பெற வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிறது என்று நிச்சயமாக உணர்ந்து கொள்ள முடிகிறது. இதெல்லாம் அவர்களிடம் பழகிப் பார்க்கும்போது தெரிகிறது. ஆனால் அதிலே எத்தனையோ இடைஞ்சல்கள் இருக்கின்றன. எத்தனையோ கடன் தொல்லைகளில் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கும் அவர்கள் ஊக்கத்தோடு சாகுபடி செய்ய முடியாது இருப்பது தான் இன்றைக்கு சாகுபடி குறைவாக இருப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

அதுவுமல்லாமல் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் அரசாங்கம் சில விஷயங்களில் கவனம் செலுத்தாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். விவசாயத்தை எடுத்துக் கொண்டால் பல இடங்களில் நிலம் துண்டு துண்டாக இருப்பதால் எல்லா இடங்களிலும் போதிய கவனம் செலுத்த முடியாததால் ஒரு பகுதியிலுள்ள நிலம் நன்றாக கவனிக்கப்படுகிறது, ஒரு பகுதியிலுள்ள நிலத்தில் கவனிப்புக் குறைவாக இருக்கிறது. இம்மாதிரியான துண்டு நிலங்களை ஒன்று சேர்க்கும் திட்டத்தை அரசாங்கம் ஏன் கவனிக்கவில்லை என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை.

12-00 noon அனேக நிபுணர்கள் விவசாயம் சம்பந்தமாக எழுதியிருக்கும் பல புத்தகங்களைப் புரட்டிப்பார்க்கும்போது, விவசாய அபிவிருத்தி கன்ஸாலிடேஷன் ஆப் ஹோல்டிங்ஸ் ( Consolidation of holdings) திட்டம் மிக மிக அவசியம். அந்த முறையைக் கையாளுவதினாலே—எந்த நாட்டிலே இருந்தாலும் சரி, குறைந்த பட்சம் இருபது சதவிகிதமாவது உணவு உற்பத்தியை நிச்சயமாகப் பெருக்கிக்காட்ட முடியும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். மேல் நாடுகளிலே எடுத்துக்கொண்டால், ஸ்வீடன், டென்மார்க், ப்ரான்ஸ் போன்ற நாடுகளிலெல்லாம் கன்ஸாலிடேஷன் ஆப் ஹோல்டிங்ஸ் திட்டத்தை நடைமுறையிலே கொண்டுவந்து அதனாலே அவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்று அநுபவபூர்வமாக பல அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். நமது நாட்டிலே கூட, பம்பாய், கிழக்குப் பஞ்சாப் ராஜ்யங்களிலே இந்தச்சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் நம் ராஜ்யத்திலும் அமுலாக்கப்படுமேயானால், நாம் எதிர்ப்பார்க்கும் உணவுப் பெருக்கத்தை நிச்சயமாக கூடுமான அளவு உயர்த்திவிடலாம் என்பதில் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. இன்றைக்கு இருக்கும் விதிகளின்படி விவசாயிகள் இஷ்டம்போல் நிலங்களை ஒன்று சேர்த்துக்கொள்வதற்குச் சில வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன. அது போதாது. கட்டாயமாக நாம் நிலங்களை ஒன்று சேர்க்கும் திட்டத்தை கொண்டு வரவில்லையானால் இந்த திட்டத்தில் வெற்றிகாண முடியாது. நாம் எதிர்நோக்கியிருக்கும், நாம் சொல்லிக் கொண்டிருக்கும் கூட்டுறவு விவசாய முறை, கூட்டுறவு ஜாயின்ட் பார்மிங் சொஸைட்டி எல்லா இடங்களிலும் விவசாயிகளாக முன்வந்து செய்யப்பட வேண்டுமானால் நிலம் ஒன்று சேர்ப்புத் திட்டம் என்றைக்கு வெற்றி பெறுகிறதோ, என்றைக்கு நடைமுறையில் கொண்டு வருகிறோமோ, அன்றையதினம் தான் கூட்டுறவு விவசாய முறை நிச்சயமாக இந்தத் தேசத்தில் வெற்றி பெற முடியும். நிலம் ஒன்று சேர்க்கும் திட்டம் எந்த அளவு நாம் கொண்டுவராமல் இருக்கிறோமோ அந்த அளவுக்கு கூட்டுறவு விவசாய முறை வெற்றி அடையவே முடியாது என்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு உடனடியாக, அரசாங்கம் கூட்டுறவு சாகுபடி முறையைக் கொண்டு வர வேண்டுமென்று கருதுகிறார்களோ அந்த அளவு முக்கியத்துவத்தை நிலம் ஒன்று சேர்க்கும் திட்டத்திற்குக்கொடுத்து உடனடியாகக் கொண்டு வரவேண்டும். அதுமட்டுமல்ல, நமது தேசத்திற்கே நம் ராஜ்யம் வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதில் போதிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், மண் வளம் மிகவும் குறைந்து இருக்கிறதென்பதை அனுபவபூர்வமாக நாங்கள் உணருகிறோம். வர வர விளைச்சல் கம்மியாகிக்கொண்டே போகிறது. ஆகவே, எந்த மண்ணிலே என்ன உரம் தேவை இருக்கிறது, மண் வளத்தில் எந்த எந்த சத்து குறைந்திருக்கிறதென்பதை விவசாயிகள் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதால், தேவை இல்லாத உரங்கள் எல்லாம் போட்டு போட்டு சாகுபடி செய்கிறார்கள். நல்ல விளைச்சல் காணப்படவில்லை. அனுபவ பூர்வமாக என்னால் கண்ட உண்மையைக் கூறுகிறேன். நாங்கள் எவ்வளவு பிரயாசைப் பட்டாலுங்கூட சில மண்ணிலே நல்ல சாகுபடி காண முடியவில்லை. ஆகையால், குறிப்பாக அதிகப்படியான நஞ்சை விஸ்தீரணம் உள்ள தஞ்சை ஜில்லாவில் மண் வளப் பரிசிலனை நிலையம் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும். அதனால் அனேக விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்திலிருந்து அவர்களைப் காப்பாற்றுவதற்கு மட்டுமல்லாமல், விவசாயத்தைப் பெருக்குவதற்கும் மிகப் பிரயோஜனமாக இருக்கும். அந்த வகையிலே சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வருஷத்திலே பசுந்தழை உரத்திற்காக அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அந்த விதை காலத்தோடு கிடைப்பதற்கு அரசாங்கம் தக்க முயற்சி செய்யவேண்டும். எந்த



விதைகள் அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்டாலும் விவசாயிகளுக்கு எந்தக் காலத்தில் கிடைக்க வேண்டுமோ அந்தக்காலத்தில் கிடைப்பதில்லை அனேக சமயங்களிலே. அம்மாதிரி இருக்கக்கூடாது. எந்த எந்த பகுதிகளுக்கு எந்த எந்த விதைகள் எவ்வப்போது தேவை என்பதைக் கணக்கிட்டு அந்த விதைகள் விநியோகிக்கப்படுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக, காவிரி-மேட்டூர் ப்ராஜெக்ட் ஏரியாவிலே பட்டுக்கோட்டைப் பகுதியில் களர் நிலங்கள் ரொம்ப அதிகம். அந்தப் பகுதிக்கு தக்கைப்பூண்டு விதை ரொம்பத் தேவை இருக்கிறது என்று அங்கேயிருக்கும் விவசாய டெமான்ஸ்ட்ரேட்டர் ஆபீசில் போய்க்கேட்டால், அந்த விதை வரவே கிடையாது என்று சொல்லுகிறார்கள். விவசாயிக்கு அந்த விதை எப்பொழுது தேவை என்று சொல்கிறார்களோ அப்பொழுது அந்தப் பகுதிகளுக்குத் தக்கைப் பூண்டு விதை சப்ளை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ரசாயன உரங்களை இந்த நேரத்தில் அதிகப்படியாக நாம் உபயோகப் படுத்திக்கொண்டு வரும்போது இயற்கை உரங்களையும் நாம் அதிகப்படியாகப் பயன்படுத்தினால் வருங்காலத்திலே பூமி கெடாமல் இருக்க முடியும். இன்றைக்கு ரசாயன உரங்களைமட்டும் பயன்படுத்துவதால் பூமியினுடைய வளம் ஓரளவு குறைகிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். அனுபவ பூர்வமாக நான் கண்ட உண்மையைச் சொல்கிறேன். ரசாயன உரம் உபயோகப்படுத்தினாலும் பூமியின் தரம் குறையாது என்று சொல்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு நல்ல உரங்களைப் பயன்படுத்த முடியுமோ அதோடு இந்த ரசாயன உரங்களையும் பயன்படுத்தினால் பூமியின் வளங் கெடாது. வெறும் ரசாயன உரத்தை மட்டும் உபயோகப்படுத்தினால் பூமியின் தரம் குறையத்தான் செய்யும். பூமியின் வளம் குறையாமல் இருப்பதற்கு ரசாயன உரத்தோடு இதர உரங்களையும் நாம் சேர்க்கவேண்டும். அதில் பிண்ணாக்கு மிக முதன்மையாக இருக்கிறது. நம் பக்கத்திலிருந்து கடலை அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடலை அரிசி வெளியிலே போகாமல் எண்ணெயை மட்டும் வெளிநாட்டுக்கு ஏற்பறுமதி செய்து, கடலைப் பிண்ணாக்கை நமக்கு உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இன்னும் தாலூகா தலைமையிடங்களிலே கால்நடை வைத்திய ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தவேண்டும். அனேக இடங்களில் கால்நடை வைத்திய ஆஸ்பத்திரிகள் கிடையாது. டிஸ்பென்சரி மட்டும்தான் இருக்கிறது. கால்நடை வைத்திய ஆஸ்பத்திரி ஒவ்வொரு தாலூகா தலைமையிடத்திலும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, செயற்கைக் கருத்தரிப்பு நிலையமும் ஒவ்வொரு தாலூகா தலைமையிடத்திலும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri S. RAMAKRISHNA THEVAR:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, அனுபவம் மிகுந்த விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல முன் வருகிறேன். பொதுவாக இப்பொழுது நமது ராஜ்யத்தில் நல்ல முறையில் பயன் அளிக்கக்கூடிய காரியங்களையெல்லாம் விவசாயத் துறையில் செய்து வருகிறார்கள் என்பது யாருவரும் அறிந்த விஷயம். இராமநாதபுரம் ஜில்லா கிழக்கு இராமநாதபுரம் பகுதி என்றைக்குமே ரொம்ப பிற்பட்ட நிலைமையில் இருக்கிறது என்பது நமது அமைச்சர்கள் அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரியும். இந்த நிலையில் "பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற முறைப்படி இராமநாதபுரம் ஜில்லாவில் கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் புயல் வந்து, வெள்ளம் வந்து, அழிமானங்கள் அதிகமாக ஏற்பட்டு அங்குள்ள மக்கள் ரொம்பக் கஷ்டமுற்றிருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்திருப்பார்கள். இராமநாதபுரம் ஜில்லா கிழக்கு இராமநாதபுரம் பகுதிகள் சிவகெங்கை இராமநாதபுரம் ஜமீன் ஏரியாக்களாக இருந்தவை. அந்த ஏரியாக்களிலே சர்க்கார்

எடுத்துக்கொண்ட பிற்பாடு நிரந்தரமாக ஏக்கருக்கு 18 ரூபாய் வரைக்கும் ஒரே ரேட்டாக நல்ல நிலமோ கெட்ட நிலமோ அத்தனைக்கும் சேர்த்து ஆவரேஜ்ஜாக வரி வசூலித்து வந்தார்கள். இப்பொழுது செட்டில்மெண்ட் ஆயிருக்கிறது. அந்தப் பகுதியில் உயர்ந்த ரேட் ஆறு ரூபாயும் குறைந்த ரேட் இரண்டு ரூபாயும் ஆக திட்டம் வகுத்திருக்கிறார்கள். சுமார் பத்து, பன்னிரண்டு வருஷங்களாக அவர்கள் கணிசமான முறையில் இந்தத் தண்ட வரிகள் செலுத்தி வந்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் இப்பொழுது அவர்களுக்கு தண்ணீர் வசதியோ, போக்குவரத்து வசதியோ, எந்த வசதியோ கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் இல்லை. அப்பகுதிக்கு வருவதற்குப் போக்குவரத்து வசதி இல்லாத நிலைமையில்தான் அப்பகுதியைப் பார்க்க முடியவில்லை என்பதும் அனைவருக்கும் தெரியும். இப்பொழுது நம்முடைய மின்சார மந்திரி அவர்களும் மராமத்து மந்திரி அவர்களும் அப்பகுதியைச் செப்பனிடுவதற்கு என்னென்னவோ பிரயேத்தனம் எடுத்துத்தான் வருகிறார்கள். இந்த இரண்டு வருஷங்களுக்குள்ளாகவே எவ்வளவு முன்னேற வேண்டுமோ அவ்வளவு முன்னேறி வருவதற்குச் சூழ்நிலையை அமைத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி நான் பெருமிதமாகச் சொல்கிறேன். அதாவது, அப்பகுதியில் சிறிய நீர்ப்பாசனத் திட்டற்காக நமது அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டி அந்த மாநாட்டில் அங்குள்ள சிறிய கண்மாய்கள், கால்வாய்கள் அத்தனையையும் செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். போதிய உத்தியோகஸ்தர்கள் இல்லாமையினால் அது இன்னும் தாமதமாகவே இருந்து வருகிறது. அவைகளுக்கெல்லாம் தகுந்த ஏற்பாடு செய்து கொடுக்க இத்திட்டத்தில் வழிவகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய திருவாடானை தாலூகாவில் தேவிபட்டணத்திலிருந்து சுந்தரபாண்டியப்பட்டணம் வரை கோஸ்டல் ஏரியாவாக இருக்கிறது. ஒரு மைல் அகலத்திற்கு 35 மைல் நீளத்திற்கு ஒரு விதமான பிரயோஜனமும் இல்லாமல் சர்க்கார் நிலமாக இருக்கிறது. அந்த நிலங்களில் என்ன செய்யலாம், என்ன பயிர் செய்யலாம், என்ன மரங்கள் நடலாம் என்று ஆராய்ச்சி செய்து அவைகளைப் பலன் அடைய செய்யவேண்டும். இதற்கிடையில் அங்கே ஒன்றுக்கும் உபயோகம் அற்ற காட்டிலாகா ஒன்று இருக்கிறது. அதில் உடை மரங்கள் இருக்கின்றன. கானட்டாங்குடி பாரஸ்ட் இருக்கிறது. அதற்கு சில அதிகாரிகள நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் காட்டுக்குள்ளே பாரம்பரியமாக மக்கள் வசித்து வருகிறார்கள். காரங்காடு, முள்ளிமுனை, புதுப்பட்டிணம், கண்கொள்ளாம்பட்டணம், வீரசங்கிலிமடம் என்று பல கிராமங்கள் இருக்கின்றன். அந்தக் கிராமங்கள் காட்டுக்குள்ளே இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலுள்ளவர்கள் காட்டைவிட்டு வெளியேவந்து விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. இப்பொழுது நம் காட்டிலாகா சட்டபடி அவர்கள் ஆடுமாடுகளை அங்கே வைத்துக்கொள்வதற்கு அருகதை அற்றவர்களாக இருக்கிறார்கள். வைத்துக்கொண்டால் தண்டனைக்குள்ளாக வேண்டியிருக்கிறது. அவர்கள் பேரில் க்ரிமினல் கேஸ்கள் போட்டு திருவாடனை கோர்ட்டில் நடந்துகொண்டிருக்கிறது. அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, அவர்கள் எப்போதும் பாரம்பரியமாக நடந்துவந்த பழக்கவழக்கபடி நடக்க அவர்களுக்கு வழிவகுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே சிறு சிறு நீர்ப்பாசன திட்டங்கள் ஏற்பட திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் எல்லாம் துரிதமாக நடக்க வேண்டும். ஏனென்றால் காட்டாறுகளில் வரும் தண்ணீர் எல்லாம் கடலில் போய் விழுந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தண்ணீர் எல்லாம் கடலில் போய் விழுந்த பிறகு வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருக்கிறது. அப்படி இல்லாமல் காட்டாறு தண்ணீர் கடலில் போய் விழுவதற்கு முன்னதாகவே அப்ப்டிப்பட்ட வேலைகளை எடுத்து நடத்தும்படியாக கேட்டுக்



கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டால் அது நாளடைவில் விவசாயிகளுக்கு சௌகர்யமாக இருக்கும். அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஒரு வருஷமாக எங்கள் தொகுதியில் மின்சார வேலை நடந்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமான வேலைகள் எல்லாம் கூடிய சீக்கிரம் நிறைவேற்றப்பட்டு விடும் என்று நினைக்கிறேன். அப்படி நிறைவேற்றப்படுவதற்காக வழிவகை பல இருக்கின்றன. இன்னும் சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கினும் வேலைகள் நடைபெறவில்லை. அங்கேயெல்லாம் நல்ல வேலைகளைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இவைகளிலும் கனம் மந்திரி அவர்கள் கவனம் செலுத்தி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கு விவரம் தெரிந்தது முதற்கொண்டு எங்னுடைய தொகுதியில் சேர்ந்தாற்போல் மழை பெய்ததே கிடையாது. இரண்டு வருஷங்கள் தொடர்ந்து மழை பெய்ததாகவே கிடையாது. அதிலும் எங்கள் தாலூகா எப்படி இருக்கிறது என்று கேட்டால் "நித்திய கண்டம் பூர்ண ஆயுசாக" இருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு ஒரு தடவை கண்டம் வந்து கொண்டேதானிருக்கிறது. இந்த நிலைமையில் அங்குள்ளவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர வேண்டுமானால் மூன்று இலாகாக்கள் தான் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். முதலாவதாக மராமத்து இலாகா, இரண்டாவதாக மீன் இலாகா, மூன்றாவதாக விவசாய இலாகா, இந்த மூன்று இலாகாக்களும் நடவடிக்கை எடுத்துக்கொண்டால்தான் அந்தத் தாலூகாவை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரலாம். ஆகவே இதற்கும் வழிவகை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எல்லோரும் அவரவர்களுடைய தொகுதியைப்பற்றி தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி வரவேற்க வேண்டியது தான். சாதாரணமாக என்பாருக்கும் என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். அதாவது "கூழுக்கு உப்பு இல்லை யென்பாருக்கும், பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பாருக்கும் விசனம் ஒன்றே" என்று சொல்வது போல் இருக்கிறது. அவர்களுடன் நானும் சொல்லிக் கொள்ள வேண்டியதாகஇருக்கிறது, சௌகர்யம் இருக்கிறவர்களும் கேட்கிறார்கள், சௌகர்யம் இல்லாதவர்களும் கேட்கிறார்கள். அதனால் யாருக்கு தேவை அதிகமாக இருக்கிறதோ அவர்களைத்தான் முதலில் கவனிக்கவேண்டும். நானும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். அந்த இடங்கள் எல்லாம் எங்கள் தாலூகாவாகிய திருவாடானையைப் போல் அவ்வளவு மோசமாக இல்லை. இன்றைக்கு எங்கள் பகுதயாகிய திருவாடானைக்கு ஏற்பட்டிருக்கிற பரிதாபகர்மான நிலையை கனம் மந்திரி அவர்கள் தெரிந்து கொண்டே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. S. SELVARAJAN:** கனம் சபாநாயகர் அவர்களே, பரிசீலனையில் இருக்கக்கூடிய இந்த மானியத்தை வரவேற்று சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாய அபிவிருத்தியைப் பொறுத்த மட்டில் இந்த நாட்டைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு இடங்களையும் பார்த்தால் கூட்டுறவு முறையில் அதை நல்ல முறையில் செய்யமுடியும் என்ற அபிப்பிராயம் இருக்கிறது. அந்த அடிப்படையில் அரசாங்கம் அதற்கு வேண்டிய காரியங்களையும் செய்துகொண்டு வருகிறது; வேண்டிய கவனமும் அரசாங்கம் செலுத்திக்கொண்டு வருகிறது. என்னைப் பொருத்த மட்டிலும் கூட்டுறவு விவசாயம் இந்த நாட்டில் இருக்கக்கூடிய இரண்டு மூன்று சர்ச்சைக்கு உள்ள விஷயத்தில் பரிகாரம் காண்கிறது. நம் நாட்டில் விவசாயத்தில் அதிகப்படியானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நாலைந்து பேர்கள் இருக்கக்கூடிய ஒரு குடும்பத்தில் குறைந்த பட்சம் ஒன்றிரண்டு பேர்களாவது மற்ற தொழில்களில் ஈடுபட வேண்டும். அப்படிப் பட்ட ஒரு நிர்பந்தத்தை இந்த கூட்டுறவு இயக்கத்தினால் ஏற்படுத்த முடியும் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக நிச்சயமாக ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள ஒன்றிரண்டு பேர்களை மற்ற தொழிலில் ஈடுபடுத்தி விடலாம். இப்பொழுதுள்ள நிலைமையில் அப்படி ஈடுபடுத்த முடியாமல் இருக்கிறது. எந்த அளவுக்கு அவர்களை மாற்று தொழிலுக்கு ஈடுபடுத்தப்போகிறோமோ அந்த அளவுக்கு அவர்களை ரத்தம் சிந்தாத அளவுக்கு ஜாக்கிரதையாக மாற்ற முயற்சிக்கவேண்டும். அந்த முறையில் மாற்றம் செய்தால் கூட்டுறவு முறையில் நாம் அபிவிருத்தி காண முடியும். அப்படி ஜாக்கிரதையாகச் செய்தால் இந்த நாட்டில் அப்படிப்பட்ட கூட்டுறவு முறை ஏற்பட்டுவிடும் என்று நான் நம்புகிறேன். கூட்டுறவு இயக்கமானது விவசாய அபிவிருத்திக்கு, விவசாயிகளுடைய நலனுக்காக ஏற்பட்டு விடும். இதற்கு முன்னதாக ஏற்பட்ட பல சட்டங்களின் பயனாக இது ஏற்பட்டுவிடும். நிலம் வைத்திருக்கக்கூடியவர்களுக்கும் தொழில் செய்யக்கூடியவர்களுக்கும், இந்த இரண்டு பேர்களுக்கும் மத்தியில் இருக்கக்கூடியவர்கள் பலன் பெறக்கூடிய நிலைமை இப்பொழுது இருக்கிறது. இந்நிலையை மாற்றுவதற்கு ஒன்று இரண்டு வருஷங்களுக்கு முன்னதாகவே இரண்டொரு சட்டங்களையும் நிறைவேற்றியிருக்கிறோம். விவசாயிகளுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயிப்பதன் மூலமாகத்தான் நன்மைகளை யார் யாருக்குச் செய்யவேண்டுமோ, யார் பயன்பெறும் கருத்துடன் சட்டம் செய்யப்படுகிறதா, செய்ய முயற்சிக்கிறோமோ அவர்களுக்குப் பலன் கிடைக்கும். அதற்கு மாறாக மத்தியில் இருக்கக்கூடிய குத்தகைக்காரர் வர்க்கம் என்று சொல்லக்கூடியவர்களுக்கு பலன் தரக்கூடிய அளவுக்கு இன்றிருக்கும் நிலை இந்த கூட்டுறவு இயக்கம் மூலமாக நிச்சயமாக களைந்து எரியப்படும் என்று நான் நினைக்கிறேன். விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கும் நிலம் படைத்தவர்களுக்கும் மத்தியில் இருக்கக்கூடிய வித்யாசங்களைப் போக்குவதற்கு ஒரு இயக்கம் இருக்கிறது என்று சொன்னால் அது இந்த இயக்கம் ஒன்றுதான். இந்த கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக அந்த வித்யாசத்தைக் களைந்து எரிந்து விடலாம். கூட்டுறவு இயக்கத்தில் தேசம் முழுவதையும் எடுத்துப்பார்த்தால் நம்முடைய ராஜ்யத்தில் அது சிறந்த முறையில் நடந்து வருவதைக் காணலாம் சிறந்த முறையில் அது வளர்ந்து வருகிறது. அதன் மூலமாக பல காரியங்கள் திருப்திகரமாக நடந்து வருகிறது. அப்படியிருந்தும் கூட்டுறவு இயக்கத்தில் நாம் இன்னும் குழந்தைப் பருவத்தில் தானிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு இயக்கத்தை விவசாயத்திற்குக் கொண்டு வரும்போது வெகு ஜாக்கிரதையாகக் கொண்டு வரவேண்டும். இதில் ரொம்பவும் கவனம் செலுத்த வேண்டும். அப்படி கவனம் செலுத்துவது ரொம்பவும் அவசியம் என்றே நான் கருதுகிறேன்.

விவசாயிகளுக்கு இப்பொழுது பெரிய கடன் சுமை இருக்கிறது. அந்தச் சுமையைப் போக்குவதற்கு காங்கிரஸ் அரசாங்கம் பொறுப்பு எடுத்துக் கொண்டவுடனேயே அதற்கு வேண்டிய சட்டங்களை இயற்றி அவர்களுடைய கடன் கஷ்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். அந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு அரசாங்க தரப்பிலிருந்து வேண்டிய அளவுக்கு சட்ட ரீதியான உதவியிருந்தும் கூட விவசாயிகளுடைய எல்லை மீறிய சுமையைக் குறைப்பதற்கு முடியாத அளவுக்கு அவர்களுக்கு கடன் சுமை அதிகமாக இருக்கிறது. அதற்கு என்று பல சட்டங்களைப் போட்டிருக்கிறோம். விவசாயிகளுடைய கடன் நிவாரணச் சட்டம் மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருககிறது. அதில் சில ஓட்டை உடசல்கள் இருக்கின்றன. ஆகவே அந்தச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டியதாக இருக்கிறது. போதிய அளவில் அந்தச் சட்டத்தை திருத்தி அமைத்து விவசாயிகளுக்கு கடன் சுமையை எந்த அளவுக்கு குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்க அரசாங்கம் திட்டமிடுவது நல்லது.



கடன் சுமை இருப்பதால் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய ஊக்கம் எல்லாம் ஒரு வகையில் பறிக்கப்படுகிறது. அவர்களுக்கு கடன் சுமை இல்லாமல் இருந்தால்தான் நீர் நிலைகளின் தண்ணீர் வசதியை கவனித்து காலா காலத்தில் பயிர் செய்ய முடியும். அப்படிப்பட்ட வசதி சில இடங்களில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சில பகுதிகள் இப்பொழுது அந்த அடிப்படையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. **Grow More Food** திட்டமென்பது நம்மை பொறுத்தமட்டில் நில அளவை அதிகமாக ஆக்கிவிடுவது மாத்திரமில்லை. சராசரி உற்பத்தி அளவைப் பெருக்குவதில் தான் வெற்றி அடங்கியிருக்கிறது. இந்த நிலைமையில் விவசாயிகள் அதிகப்படியாக உற்பத்தி செய்ய முற்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பைக் கொடுப்பதன் மூலம் அவர்கள் அதிகப்படியாக உற்பத்தி செய்ய முன் வந்திருக்கிறார்கள். அப்படி உற்பத்தி செய்ய முன் வந்திருக்கும்போது சில இடங்களில் தண்ணீர் தீர்வை, தண்டத் தீர்வை என்ற பல கஷ்டங்களை அவர்களுக்கு அரசாங்கம் கொடுத்துக்கொண்டு வருகிறது. பெரிய பாசன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் அவர்களுக்கு ஏதாவது விமோசனம் கிடைக்கும் என்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு அவசர அவசரமாக அவர்கள் பேரில் தண்டத் தீர்வையும், தண்ணீர் தீர்வையும் போடப்பட்டு வருகிறது. புஞ்சையாக இருக்கக்கூடிய நிலங்களை சட்டபூர்வமாக நஞ்சையாக மாற்றக்கூடிய நிலை வந்தவுடன் அந்த நிலங்களுக்கு நிரந்தரமான தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும் என்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு வந்துவிடுகிறது. ஆகவே பரிசீலனை செய்து முடிவுக்கு வர சிறிது அவகாசம் தேவைதான். அந்த நிலையில் விவசாயிகளுக்கு தண்ட தீர்வையும் தண்ணீர் தீர்வையும் போட்டு வருகிறார்கள். அந்த நிலைமையில் விவசாயிகளுக்கு மிகக் குறைந்தபட்சத் தீர்வைதான் போடவேண்டும். நஞ்சைக்கு எந்த அளவு போடப்படவேண்டுமோ அந்த அளவுக்கு மேல் போகாமல் போடவேண்டும். அதை ஜாக்கிரதையாக பரிசீலனை செய்து எந்த முறையில் அவர்களுக்கு போட வேண்டுமோ அந்த அளவுதான் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீன் வளம் நமது ராஜ்யத்திற்கு இருக்கக்கூடிய பெரிய சொத்து. மற்ற சில ராஜ்யங்களில் இல்லாத ஒரு பெரிய சொத்து நமக்கு இருக்கிறது. 400 அல்லது 500 மைல்கள் உள்ள கடற்கரை நமக்குச் சொந்தமாக இருக்கிறது. கடற்கரைப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு ரஸ்தாக்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது. சாதாரணமாக இதை பஞ்சாயத்து நிர்வாகமும் ஜில்லா போர்டு நிர்வாகமும் மாத்திரம் எடுத்து நடத்த முடியாது. பிரிட்டிஷார் காலத்தில் இவைகளை ஏற்று நடத்தாமல் வேண்டுமென்றே புறக்கணித்திருக்கிறார்கள். நமது கடற்கரையில் கன்யாகுமரியிலிருந்து கல்கத்தா வரைக்கும் பரவி இருக்கிற ரஸ்தா செல்லுகிறது. ஆனாலும் கடற்கரைப் பகுதிகளை பக்கங்களிலுள்ள பெரிய ரஸ்தாவுடன் இணைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்தப் பொறுப்பு முழுமையுமே இந்த அரசாங்கம் மீனவர் இலாகா நிதியிலிருந்து ஏற்று நடத்த வேண்டும். ஒவ்வொரு கடலோர கிராமங்களிலிருந்தும் வரக்கூடிய ரஸ்தாக்களை பக்கங்களிலுள்ள பெரிய ரஸ்தாவுடன் இணைத்துக் கொடுத்தால் மீனவர்களுக்கு வசதியாக இருக்கும். இப்படிப்பட்ட சிறு சிறு இணைப்பு வேலையை இந்த மீன் இலாகா ஏற்று நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப் போலவே சில பள்ளிக்கூடங்களையும் மீனவர் நல இலாகாவே எடுத்து நடத்துவதும் யோசிக்கக்கூடியது. இவர்கள் எடுத்து நடத்தினால் மீனவர்கள் அதில் சேர்ந்து தொழில் கல்வி படிக்க வசதியாக இருக்கும். இப்பொழுது தூத்துக்குடியில் ஒரு நிலையத்தை அமைத்திருப்பது தெரிய வருகிறது. மேல் கடற்கரை பகுதியில் சில பாடசாலைகளை மீனவர் இலாகா நடத்தி வருகிறது. அதைப் போலவே கீழ்க் கடற்கரைப்பகுதி மீனவர்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியும். இதைச் செய்ய வேண்டிய அவசியமும் அவசரமும் நல்லது என்று நான் கருதுகிறேன். கல்வித்

துறையில் கல்வி இலாகாவும் மீனவர் இலாகாவும் இரட்டை நிர்வாகம் செய்ய நேரிடக்கூடாது என்பதே அரசாங்கத்தின் தயக்கம் என நினைக்கிறேன். எனினும் இத்துறையில் பரிசீலனை தேவை.

ஹரிஜன நல இலாகாவில் இருக்கக்கூடிய வசதி போல், அந்த இலாகாவிலிருந்து மானியம், கொடுத்து ஹரிஜன காலனிகளுக்கு மின்சார வசதியை நிறைவேற்றுவதுபோல் கடலோரப் பகுதியில் இருக்கக்கூடிய பகுதிகளுக்கெல்லாம் வசதி செய்து கொடுக்கும் வகையில் "fisheries" இலாகாவிலிருந்து மானியம் அளித்து மீன் இணைப்பு கிடைக்கச் செய்வது நல்லது. சில இடங்களில் வானிலை பற்றி முன்கூட்டியே எச்சரிக்கை செய்வதற்காகச் சில நிலையங்களை ஏற்பாடு செய்ய முயற்சி எடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். கடலோரத்திலுள்ள பல கிராமங்களிலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றன. இந்த வானிலை அறிக்கை, கால நிலையை அறிந்து மீனவர்கள் கடலில் பயமின்றி, ஆபத்தில்லாமல் செல்ல உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீனவர்களுக்கு இருக்கும் பல சங்கடங்களுக்கும் கூட்டுறவு இயக்கந்தான் தகுந்த பரிகாரம் கொடுக்கும். கடலோர வாசிகளுக்குக் கடன் உதவி அளிக்கவும், கடன் சுமையைக் குறைக்கவும் அது உதவி செய்து வருகிறது. கடலோரத்தில் இருக்கக்கூடிய மீனவர்களின் உழைப்பில் பெரும்பகுதி தோணிக்காரர் (சம்மட்டியார்) முதலாளி ஆகியோர்க்குக் கொடுத்தது போக சிறிய பகுதிதான் தொழிலாளர்க்கு கிடைக்க வசதி இருக்கிறது. நூல், வலை வாங்க கடன் வசதி பெறவும் இந்தக் கூட்டுறவு சங்கம் வழி செய்து கொடுக்கிறது. ஆனால் தற்போது தங்கள் அத்தியாவசியத் தேவையான வலை போன்ற கருவி கரணங்கள் பெற வேறு கிராமங்களுக்கும் போக வேண்டியதாயிருக்கிறது. கடலோரப் பகுதியில் இந்தக் கூட்டுறவு இயக்கம் ஓரளவு வளர்ந்து வருகிறதே தவிர உள் நாட்டுலே வளர வழி இல்லாமல் இருக்கிறது. உள் நாட்டில் கூட்டுறவு சங்க வளர்ச்சிக்கு இருந்த தடையை நீக்கி ஏலத்தில் ஜாரி செய்வதைத் தவிர்த்து கூட்டுறவு சங்கத்திற்கு கொடுப்பது என்று நிர்ணயம் செய்திருப்பதைப் பாராட்டுகிறேன். வெளி இடங்களுக்குப் போய் நூல் வாங்குவது, வலை வாங்குவது போன்ற வேலைகளையெல்லாம் கூட கிராமத்திலே செய்து கொள்ள வசதிகள் செய்ய வேண்டும்.

கோதுமை பயிர் செய்வதில் கிடைக்கும் வருமானத்திற்கு அடுத்தாற் போல் இருப்பது " பௌல்ட்ரி " தான். கோழி வளர்ப்பு பெரிய வருவாய் தரக்கூடியது என்று உலக அறிஞர்கள் சொல்லுகிறார்கள். இரண்டு மூன்று ரூபாயில் இரண்டு மூன்று பெரிய குடும்பமே ஜீவனம் செய்யக் கூடிய ஒரு பெரிய தொழில். $3\frac{1}{2}$ ரூபாய் செலவில் ஒரு குடும்பத்தைக்காக்க உதவும் கைராட்டினத்தைப்போல் இதுவும் நாட்டிலுள்ள பெரும்பாலோக பசியைத் தீர்க்கக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில்..........

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக விவசாய இலாகாவைப் பொறுத்தமட்டில் அநேக துறைகளில் வேலைகள் நடந்து வந்த போதிலும் உணவு உற்பத்தியைப் பொறுத்த மட்டில் அதிக கவனம் செலுத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அவ்வாறு உணவு உற்பத்தியைப் பெருக்க நாம் விவசாயிகளுக்கு எந்த விதத்தில் உதவிகளைச் செய்யவேண்டுமென்பதைப் பற்றி முடிவுசெய்து அதைச் சீக்கிரத்தில் கொடுத்தால் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதில் அக்கறை கொள்ளுவார்கள் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். விவசாயம் செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. முக்கியமாக இயற்கை



நமக்கு உதவி செய்யவேண்டும். நம்முடைய தமிழ் நாட்டில் அநேக வித ப்ராஜெக்டுகள் ஏற்படுத்தியிருந்தபோதிலும்கூட இன்னும் வறண்ட பிரதேசங்கள் அதிகமாக இருக்கின்றன. அதன் காரணமாக இயற்கை நமக்கு உதவி செய்யாவிட்டால் அந்த வறண்ட பிரதேசங்கள் பஞ்சப் பிரதேசங்களாக மாறிவிடுகின்றன. இந்த வருஷம் அதிக மழை சில பிராந்தியங்களில் பெய்திருந்த போதிலும், அங்கே உணவு உற்பத்தி அதிகமாக இருந்த போதிலும் ராமநாதபுரம் திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களில் பஞ்சம் ஏற்பட்டு பலகஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இயற்கை உதவி செய்யவில்லையென்றால் இந்த நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

பயிர்களில் பூச்சிகள் அதிகமாக ஒவ்வொரு பிராந்தியங்களிலும் பரவி அதன் காரணமாக லட்சக்கணக்கான மூட்டை உணவு தானியங்கள் சேதாரம் ஆகி வருவது சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். சர்க்கார் பூச்சி மருந்துகளை "சப்சிடைஸ்ட் ரேட்டுக்கு"—குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தப் பூச்சி மருந்துகளை வாங்குவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. வேண்டும்போது சீக்கிரத்தில் அந்தப் பூச்சி மருந்துகள் வருவதில்லை. இதைப்பற்றி முன்பே இந்தச் சட்ட சபையில் அநேகம் தடவை சொல்லி இருக்கிறேன். இப்பொழுதும் அதைப்பற்றி வற்புறுத்திக்கூற விரும்புகிறேன். எவ்வளவு துரிதமாக இந்தப் பூச்சி மருந்தை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் விவசாயிகளுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும். மேலும் அவர்கள் கேட்கும் அளவுக்கு இந்தப் பூச்சி மருந்தைக் கொடுக்கவேண்டும். எல்லா மருந்துகளையும் இந்த சப்சிடைஸ்ட் ரேட்டுக்குக் கொடுக்கவேண்டும்.

ரசாயன உரத்தை எடுத்துக்கொண்டால் இன்று அதன் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போவதுடன் கிடைக்காமலும் போகிறது. இன்று காலையில் என்னுடைய ஊரிலிருந்து அநேகம் பேர்கள் வந்தார்கள். அவர்கள் இரண்டாவது போக சாகுபடிக்கு இராசயன உரம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுவதாக என்னிடம் வந்து சொன்னார்கள். சமீபத்தில் நான் டில்லியில் இது பற்றி விசாரித்தேன். அங்கும் இந்தக் கஷ்டம் இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தாராளமாகக் கொடுக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் அந்நியச் செலவாணி என்றும் அதன் காரணமாக இறக்குமதி மேலும் குறையப் போகிறது என்றும் சொன்னார்கள். நம்முடைய அரசாங்கம் இதைப்பற்றி நன்றாக கவனித்து மத்திய சர்க்காரிடம் வாதாடி அடுத்த வருஷத்திற்கு நமக்கு வேண்டிய ரசாயன உரத்தை எவ்வளவு சீக்கிரமாகவும், அதிகமாகவும் சேகரித்துக் கொடுக்கமுடியுமோ அவ்வாறு சேகரித்து நல்ல முறையில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

இப்பொழுது ரசாயன உரத்தை விநியோகம் செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அது நல்ல முறையில் விநியோகம் செய்யப்படவில்லை என்று சில இடங்களிலிருந்து புகார் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி புகார் வந்து கொண்டிருப்பதன் காரணமாக அதற்குத் தக்க முயற்சி எடுத்து அந்தந்த பிராந்தியங்களில் அதிக கவனம் செலுத்தி டிபார்ட்மெண்ட் மூலமாக விநியோகம் செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகட்கு இன்னும் பல சங்கடங்கள் இருக்கின்றன. இப்பொழுது விவசாய வருமான வரி போடப்பட்டிருக்கிறது. வரி கொடுக்க விவசாயிகள் கஷ்டப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் அவர்களுடைய தொல்லையெல்லாம் கணக்குக் கொடுப்பதில்தான் இருக்கிறது. அந்தக் கணக்கை எழுதுவதற்காக கொடுக்கப்பட்டிருக்கிற " பாரத்தில் " உள்ள " ஹெட்டிங்குகளை "ப் பார்த்தால் அதை எப்படி பூர்த்தி செய்வது என்பது பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஆங்கிலத்தில் சென்ட்ரல் இன்கம் டாக்ஸ் பாரத்தின் மாடலைக் காப்பியடித்திருக்கிறார்கள். இதை எப்படி " **Simplified**

**process**" செய்வது என்பது பற்றி யோசிக்கவேண்டும். நன்ருக குறுகிய முறையில் சுலபமாக விவசாயிகள் கணக்கு எழுதுவதற்கான வழிவகைகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்து கூடிய சீக்கிரம் சட்டம் கொண்டுவரப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதாகப் பத்திரிகையில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னுல் படித்தேன். இந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி இப்பொழுது பிராந்தியத்துக்குப் பிராந்தியம் வித்தியாசமாக இருக்கிறது. எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு இந்தத் தொழிலாளர்களுடைய கூலியை நிர்ணயம் செய்யப்போகிருர்கள் என்று தெரியவில்லை. உற்பத்தி செய்பவர்களைப் பாதிக்காத அளவில் இதைச் செய்யவேண்டும். நல்ல விதமாகச் செய்தால்தான் உற்பத்தி பெருகுமே தவிர, அநேக விதமான தொல்லைகளைக் கொடுக்கும் பட்சத்தில் விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்குவதில் எந்தவித உற்சாகமும் இருக்காது என்பதைப்பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அதைப்பற்றிச் சர்க்கார் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சர்க்கார் விவசாய உற்பத்திக்
12-30 p.m. கமிட்டி ஒன்று போட்டிருப்பதாகவும், அதன் அறிக்கை சமீப மாதங்களில் வரும் என்றும் அதைப் பிரசுரிக்கவும் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்ஞர்கள். இந்தமாதிரி கமிட்டி போடும்போது எவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் வேலையை முடித்து ரிப்போர்ட் கொடுக்கிருர்களோ, எவ்வளவு சீக்கிரம் அதைப் பிரசுரிக்கிருர்களோ அவ்வளவுக்குத்தான் அதன் பிரயோஜனம் கிடைக்கும். அந்தக் கமிட்டி தங்களுடைய யாதாஸ்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய வழிவகைகளை எல்லாம் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட் வரும் வரையில் அதைப்பற்றிப் பேசத் தயாராய் இல்லை.

உரம் சம்பந்தமாக—ரசாயன உரம் மட்டும் போதாது. கம்போஸ்டு உரத்திற்கும் சப்ஸிடி கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும். சில வருஷங்களுக்கு முன்பு கம்போஸ்டு உரத்திற்கு மத்திய சர்க்காரிடமிருந்து உதவி வாங்கிக்கொடுத்து வந்தார்கள். அந்தமாதிரியே தொடர்ந்து சப்ஸிடி கொடுப்பதற்கு வேண்டிய வழிகளைச் செய்திருக்கலாம். அப்படிச் செய்வதால் தான் கம்போஸ்டு உரத்தைப் பெருக்குவதற்கும், பசுந்தாள் உரத்தைப் பெருக்குவதற்கும் உற்சாகம் விவசாயிகட்கு ஏற்படும் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை.

அதைத்தவிர சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் பற்றி அநேகம் அங்கத்தினர்கள் பேசி இருக்கிருர்கள். நானும் பேசி இருக்கிறேன். வறண்ட பிரதேசங்களில் இந்த நீர்ப்பாசன திட்டங்களை எவ்வளவுதூரம் செய்து வந்திருந்தபோதிலும் இன்னும் அநேக கண்மாய்கள், ஏரிகள் எல்லாம் சுத்தம் செய்யப்படாமல் இருக்கின்றன. முக்கியமாக வட ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் உள்ள நூறு கிராமங்களை பாதிக்கக்கூடிய செய்யாறு திட்டத்தை உடனடியாக எடுத்துப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதாகப் பல மனுக்கள் கொடுத்திருந்தும் கடந்த 3 வருஷங்களாகப் பரிசீலனை செய்து கொண்டு வருகிருர்களே தவிர அதைப்பற்றி கூடிய சீக்கிரத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிருர்கள் என்பதைப்பற்றித் தகவல் இல்லை. இந்த மாதிரியான சிறிய திட்டங்களுக்கு உடனுக்குடன் கவனம் செலுத்தி, அதை நல்ல முறையில் ரிப்பேர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் அதன்காரணமாக உற்பத்தி குறையும் என்று சொல்ல வேண்டியதில்லை.

பில்டர் பாயின்ட், ட்யூப் வெல்ஸ் கட்டுகிருர்கள். செங்கல்பட்டு ஜில்லாவில் உள்ள சமுத்திரக்கரை ஓரம் முதலிய எல்லாப் பிராந்தியங்களிலும் பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. ஏதோ இரண்டொரு இடங்களில் போட்டுக்கொண்டு வருகிருர்கள். அப்படிப் போட்டுக்கொண்டு வந்தவுடன் ஆட்கள் இல்லாததன் காரணமாக அல்லது வேண்டிய கருவிகள் இல்லாததன் காரணமாக இவைகள் எல்லாம் மேற்கொண்டு எதுவும்





பரிசீலனை செய்ய முடியாமல் இருக்கிறது. ஆற்று ஓரங்களிலும், சமுத்திரக் கரை ஓரங்களிலும் இன்னும் அதிகமாக பில்டர் பாயின்ட் கிணறுகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் போது உற்பத்தி செய்பவர்களுடைய நலனும் சரி, உபயோகப்படுத்துகிறவர்களுடைய நலனும் சரி—இரண்டு பேருக்கும் பாதகம் இல்லாமல் ஒரு விலையை ஏற்படுத்தவேண்டும். சர்க்கார் இப்போது போட்டிருக்கும் கமிட்டியில் இதைப்பற்றி பரிசீலனை செய்வதாக இருக்கிருர்கள். அப்படிப் பரிசீலனை செய்யும்போது பல விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். அநேக இடங்களில் விவசாய இலாகா ஆராய்ச்சி செய்து வருகிறது. விவசாயப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அவைகளினுல் ஏற்படுகிற அனுபவத்தையும் மனதில் வைத்துக்கொண்டு இதை பரிசீலனை செய்து விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்கும். விவசாயிகளுக்கு உற்சாகமும் இருக்கும். ஏழைமக்களுக்கு கஷ்டம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணமில்லை. இன்றைக்கு விவசாயிகளுக்குத் தேவையான மாடுகள், இதர கருவிகள் முதலியவற்றின் விலை ஏறிக்கொண்டே போகின்றன. இந்தச் சமயத்தில் நெல்லுக்கு மட்டும் விலை நிர்ணயிப்பது என்ருல் நன்ருக யோசித்து நியாயமான விலையைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்தி மக்களுக்கு எவ்வளவுதூரம் நன்மை செய்யலாமோ அவ்வளவு தூரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் வசதி—இப்போது கடன் வசதி கொடுத்து வந்தபோதிலும் அவர்களுக்குப் போதுமான வசதி கிடைப்பதில்லை. பயத்திலும் கிடைப்பதில்லை. விவசாயிகள் பக்கத்தில் கடன் வாங்கி விவசாயம் செய்த பிற்பாடு கடன் வருகிறது. அதுவும் குறுகிய காலக் கடனுகை கிஸ்தியோடு சேர்த்து வசூலித்துவிடுவதால் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே நீண்ட காலக் கடனுகக் கொடுத்தால்தான் அதுவும் காலத்தில் கொடுத்தால்தான் பிரயோஜனப்படும் என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவு பண்ணையைப்பற்றி முன்னும் சொன்னேன். இப்போதும் நான் சொல்ல விரும்புவது என்னவென்ருல் இதைத் தீர ஆலோசனை செய்யவேண்டுமேயொழிய அவசரப்பட்டு எதையாவது செய்துவிட்டால் பின்னுல் கஷ்டங்களுக்கு சர்க்கார் உள்ளாக நேரிடும், உடனடியாகக் கொண்டு வருவதனுலும் பிரயோஜனமில்லை. வேண்டுமானுல் இரண்டொரு இடங்களில் மட்டும் பரிட்சார்த்தமாக வைத்துப் பார்க்கலாம். ஆகவே சர்க்கார் தீர ஆலோசனை செய்து பின்னுடி ஆரம்பிக்கவேண்டுமே தவிர எல்லா இடங்களிலும் கூட்டுறவுப் பண்ணையை ஆரம்பித்து வைத்து கடைசியில் கஷ்டப்படுவதில் பிரயோஜனம் இல்லை என்பதை அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்தபடியாக கால்நடை இலாகா—இந்தக் கால்நடை இலாகாவானது சமீப காலத்தில் அநேகவித நல்ல வேலைகளைச் செய்து கொண்டு வருகிறது. முக்கியமாக கால்நடை உற்பத்தியிலும், அவைகளுக்கு வரும் நோய்களைக் கண்டிரோல் செய்வதிலும், ஆராய்ச்சிகள் செய்வதிலும், பால் பண்ணைகளை ஏற்படுத்துவதிலும் நன்ருகக் கவனம் செலுத்தி நல்ல முறையில் பல வேலைகளைச் செய்து கொண்டு வருகிறது என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. இந்த இலாகாவை இன்னும் விஸ்தரித்து நல்ல முறையில்—மக்களுக்குப் பிரயோஜனப்படும்படியான வேலைகளைச் செய்ய வேண்டும் என்கிற கருத்தை இவ்விடத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கால்நடை அபிவிருத்திக்காக இப்போது முக்கியமாக நம்முடைய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி சுமார் 2 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தவிர சுமார் ஒரு கோடி ரூபாய் வரையில்

பால்பண்ணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்திருந்தபோதிலும் முக்கியமாக இந்த இலாகா இன்னும் கால்நடைகளை அதிகமாக விருத்தி செய்வதற்காக கீ வில்லேஜ் ஸ்கீம் போடப்பட்டிருக்கிறது. பலமுறைகளில் இந்த கீ வில்லேஜ் ஸ்கீம் உபயோகமாக இருப்பதன் காரணமாக இதை மாகாணம் பூராவும் பரப்பவேண்டுமென்பது என் கோரிக்கை. அதிலும் முக்கியமாக Block Development ஏரியாக்களில் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு கிராமங்களுக்கும் இதைக் கொண்டுவரவேண்டும் என்பது என் கருத்து.

செயற்கை முறையில் கரு தரிக்கச் செய்தல் அநேக பிராந்தியங்களில் நல்லமுறையில் கால்நடை அபிவிருத்தி செய்யப்படுகிறது. (Mobile Van) மொபைல் வான் வைத்து ஒவ்வொரு இடங்களுக்கும் இதை விஸ்தரிக்க வேண்டும். அதன் காரணமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு ஆராய்ச்சிப் பண்ணையை ஏற்படுத்தவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் இம்மாதிரி கால் நடை ஆராய்ச்சிப் பண்ணையானது இல்லாவிடில் இந்தக் கால்நடையானது விருத்தி ஆகாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். முக்கியமாக இப்போது ராமநாதபுரம் ஜில்லாவிலும், ஒரத்தநாட்டிலும் வைக்கப்பட்டிருக்கிற கால்நடைப்பண்ணை நல்ல முறையில் நடந்துவருகிறது. நமது ராஜ்யத்திலிருந்து ஆந்திரா பிரிந்தபோது சில முக்கியமான கால்நடைப் பண்ணைகள் இங்கிருந்து போய்விட்டன. அது எப்படி இருந்தாலும் இப்போது அமைக்கப்பட்டிருக்கும் பண்ணைகள் நன்றாக நடந்துவருகின்றன. அந்த மாதிரியான பண்ணைகளை ஜில்லாவிற்கு ஒன்று வீதம் எல்லா ஜில்லாக்களிலும் அமைக்கவேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு (Alamadi) அலமெடில் பல மாடுகள் மறத்துப்போன பிறகு பால்காரர்களால் கவனிக்கப்படாததால் போஷாக்கு இல்லாமல்போய் "புட்சரிடம்" (கசாப்புக்காரர்களிடம்) போகும் தருவாயில் இருந்தன. அந்த நிலைமை தடுக்கப்பட்டு அங்கே ஒரு பெரிய "காட்டில் பார்ம்" அமைக்கப்பட்டு அந்தப் பண்ணை நன்றாக நடந்து வருகிறது. கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களிலும் சால்வேஜ் டெப்போக்களை வைக்கவேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது நீலகிரியில் க்ராஸ் ப்ரீடிங் ஸ்கீம் ஆரம்பிக்கப்பட்டு, வெளிநாட்டு மாடுகளிலிருந்து இன்ஸெமினேஷன் செய்யும் இன்ஸெமினேஷன் சென்டர்கள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் செய்ததற்காகவும் இந்த இலாகாவினரை நான் ரொம்பவும் போற்றுகிறேன். இந்தத் திட்டத்தையும் சில பிராந்தியங்களில் விஸ்தரிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும், க்ராஸ் ப்ரீடிங் ஸ்கீமை இம்ப்ரூவ் பண்ண (அபிவிருத்தி செய்ய) நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

புல் "பாடர் க்ராஸை" ப்பற்றிப் பேச விரும்புகிறேன். காடுகளில் மேய்க்கால் வசதி இல்லாததால் கிராம மக்கள் பலர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். காட்டு இலாகாவினர் மேய்க்கால் வசதிகளை ஏற்படுத்தும்போது, கொழுக்கட்டைப் புல், வறண்ட பிரதேசங்களில் வளரும் இம்மாதிரியான புல்கள் ஆகியவைகளை வளர்த்து, ஏதாவதொரு கட்டணத்திற்கு மாடுகளை மேய அனுமதிக்கலாம். மாடுகளின் சொந்தக்காரர்களிடம் ஏதாவதொரு கட்டணத்தை வசூலித்துக்கொண்டு, அங்கே மேய அவைகளை அனுமதித்தால் நன்றாக இருக்கும். அவ்வாறு செய்தால் மாடுகளுக்கு நல்ல தீவனம் கிடைக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில் சமீப காலத்தில் ஒரு ஆட்டுப் பண்ணை நல்ல இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அது நன்றாக அபிவிருத்தி அடையும் என்பதில் சந்தேகமில்லை. அதே மாதிரி காட்டுப்பாக்கத்திலும் சுமார் 300 (முன்னூறு) எக்கர் வரையில் வளைத்து





ஒரு ஆட்டுப் பண்ணை அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் போதாது. ஆட்டுப் பண்ணைத் திட்டத்தை இன்னும் இரண்டு–மூன்று பிராந்தியங்களில் விஸ்தரிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோழிப் பண்ணைகளை எடுத்துக்கொண்டால், ஏழை எளிய குடியானவர்களுக்காக 27 ஸப்ஸிடைஸ்ட் ஸெண்டர்ஸ் தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் நிறைய ஸப்ஸிடைஸ்ட் ஸெண்டர்களை அமைத்துக் கொடுத்தால், கோழிகள் அதிகமாக வளரும் என்பதில் சந்தேகமில்லை. இதிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகள் சம்பந்தமான "டிஸீஸ் (நோய்) கண்ட்ரோல்" விஷயத்தில் இந்த இலாகா நன்றாக பணியாற்றி வருகிறது. வெட்கை நோய் நம் பிராந்தியத்தில் நிச்சயமாக மறைந்துவிட்டது என்று கூறலாம். மற்ற நோய்களையும் அறவே நீக்க வேண்டுமென்றும் அதற்காக மொபைல் யூனிட்டுகளை அதிகரிக்க வேண்டுமென்றும் ஒவ்வொரு ஜில்லாவிலும் மொபைல் யூனிட்டுகளை வைக்கவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆராய்ச்சிப் பண்ணைகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மருந்துகள் சம்பந்தமாக ஆராய்ச்சிகள் செய்வதற்கென ராணிப்பேட்டையில் ஒரு பயாலஜிகல் ஸெண்டர் இருக்கிறது. அது நன்றாக இயங்கி வருகிறது. அந்த ஸெண்டரின் மூலமாக நமக்கு வருஷா வருஷம் 5 லட்ச ரூபாய் வருமானம் வருகிறது. அந்த ஸெண்டரை சென்னைக்குக் கொண்டு வந்தால் நல்லது. அதை சென்னைக்கு கொண்டுவந்தால் கல்லூரி மாணவர்களும் அதனால் பயனடைவார்கள். எனவே அதை கூடிய சீக்கிரம் சென்னைக்குக் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

பால் பண்ணை சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பால் பண்ணைத் திட்டத்திற்கு நமக்கு நியூஜீலந்திலிருந்து உதவி கிடைக்கிறது. அப்பண்ணை கூடிய சீக்கிரம் அமைக்கப்படும் என்று நினைக்கிறேன். அதைக் கூடிய சீக்கிரம் அமைக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நமக்கு போதிய ஆபீசர்கள் இல்லாததால் இந்த கால்நடை இலாகா ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் ஆந்திராவில் கால்நடை இலாகா ஆபீசர்களின் ஊதியத்தை அதிகரித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். இங்கேயும் இந்த ஆபீசர்களின் ஊதியத்தை அதிகப்படுத்தவேண்டும். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். ஆந்திராவில் இப்போது இரண்டு கால்நடை வைத்தியக் கல்லூரிகள் அமைத்திருக்கிறார்கள். எனவே நமது ராஜ்யத்திலுள்ள கால்நடை வைத்தியக் கல்லூரிகளில் இனிமேல் ஆந்திராவிலிருந்து வரும் மாணவர்களை அனுமதிக்கக்கூடாது என்றும் நமது ராஜ்ய மாணவர்களுக்கே அங்கே இடமளிக்க வேண்டுமென்றும் சொல்ல விரும்புகிறேன். மேலும், இந்த இலாகாவிலுள்ள ஆபீசர்களுக்கு குறைந்தது 200–400 ரூபாய் க்ரேடாவது வைத்தால் தான் இந்த உத்தியோகத்திற்கு போதிய ஆட்கள் வருவார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பால் பண்ணைகளை அனிமல் ஹஸ்பண்ட்ரி டைரக்டரின் கீழே தான் வைக்க வேண்டுமே தவிர அவைகளை தனியாக அமைப்பது சரியல்ல. இதையும் கவனித்து அவைகளை இந்த இலாகாவின் கீழ் கொண்டு வர வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன எல்லா யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், ஒவ்வொரு

ஜில்லாவிலும் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும், நிதி இலாகா மூலம் விவசாயிகளுக்கு எவ்வளவு நன்மைகள் செய்ய முடியுமோ அவ்வளவு நன்மைகள் செய்யவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், இந்த விவாதத்தில் கலந்துகொண்ட மற்ற கனம் அங்கத்தினர்களும் பல உருப்படியான யோசனைகள் கூறினார்கள், குறைபாடுகளையும் தெரிவித்தார்கள். பொதுவாக விவசாயிகள் வசதிகளைப் பெருக்குவதற்கான வகைகளையும் குறிப்பிட்டார்கள். முதன் முதலில், அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கூறிய யோசனைகளையும் குறைபாடுகளையும் ஆராய்ந்து அவைகள் பேரில் எந்தெந்த வகையில் நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அந்தந்த வகையிலெல்லாம் நடவடிக்கைகள் எடுப்பதில் கவனம் செலுத்தப்படும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

ஒன்றிரண்டு முக்கியமான பிரச்னைகள் குறிப்பிடப்பட்டன. அவைகளில் விலைவாசி ஒன்று ஆகும். அது மிகவும் முக்கியமான பிரச்னை. விவசாய உற்பத்தி பெருகியிருக்கும்போது விலைவாசி நிலைமை திருப்திகரமாக இருக்க வேண்டும். விவசாயப் பொருள்களின் விலைவாசியானது அவைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடியதாக, அவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடியதாக, இருக்கவேண்டும் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. விவசாய உற்பத்தி பெருக வேண்டுமானால் விவசாயப் பொருள்களின் விலைவாசி அந்த நிலையில் இருக்க வேண்டும் என்பதை நானும் உணர்கிறேன். அரசாங்கமும் உணர்கிறது. விவசாயப் பொருள்களின் விலைவாசியைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அது தலையிடாவிட்டாலும் இந்தப் பொருள்களின் விலைவாசி நிலை தானாக சரிப்பட்டுப் போகுமானால், அதை அரசாங்கம் மிகவும் வரவேற்கும். ஆனால் நிலைமை அம்மாதிரி இல்லை. சில சமயங்களில் இந்த விஷயத்தில் அரசாங்கம் தலையிட வேண்டியிருக்கிறது. வேறு நாடுகளில்கூட இந்த விஷயத்தில் அரசாங்கத்தின் தலையீடு அத்தியாவசியமாகிறது. அமெரிக்காவில் கூட, விவசாயப்பொருள்களின் "விலைவாசி ஓரளவு குறைந்துபோனாலும், விலைவாசிகள் மார்க்கெட் நிலைமைப்படி இருந்துவிட்டு போகட்டும் என்று விட்டுவிட்டால் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும், அது அவர்களுக்கு உற்சாகமளிக்காது" என்ற காரணத்தால் அரசாங்கம் அவைகளுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கிறது என்றும், எல்லா தானியங்களையும் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலைப்படி தானே வாங்கிக்கொண்டு விற்கிறது என்றும் அவ்வாறு விவசாயிகளுக்கு ஆதரவு அளித்து வருகிறது என்றும் தெரிகிறது. அதே மாதிரியான கொள்கையை இந்த அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்று நான் முன்பே தெரிவித்திருக்கிறேன். விவசாயப் பொருள்களின் விலைவாசி விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத அளவிற்கு குறையுமானால், அப்போது அரசாங்கம் தலையிட்டு குறைந்தபட்ச விலையை அப்பொருள்களுக்கு நிர்ணயித்து, அரசாங்கத்திற்கு அதனால் நஷ்டம் ஏற்படுமானாலும் அதை வாங்கிக்கொண்டு விற்க வேண்டும், அவ்வாறு செய்து விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆனால் இன்றைய பிரச்னை அதுவல்ல. இன்று விலை அதிகமாக இருக்கிறது, அதனால் விவசாயிகளுக்கு அதிக லாபம் வருகிறது என்று அசூயை கொள்ளக் கூடாது. ஆனால் விலைவாசி உயர்ந்தால், அது சாதாரண மக்களை பாதிக்கிறது. எல்லோருடைய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத்தான் விவசாயம் இருக்கிறது. யார் விவசாயம் செய்தாலும் சரி, உற்பத்தியாகும் பொருள் எல்லாருக்கும் கிடைக்க



வேண்டும். அதனால்தான் நமக்கு இதில் இவ்வளவு அக்கறை. நிலம் உள்ளவர்களும், நிலமில்லாதவர்களும் சாப்பிட வேண்டும். உணவு என்பது மனிதனுக்கு மட்டு மல்ல, ஜீவராசிகளுக்கும் உணவு வேண்டியிருக்கிறது. நேற்று ஒரு அம்மையார் எனக்கு எழுதியிருந்தார், என்னிடம் 40 கோழிகள் இருக்கின்றன, அவைகளுக்கு தான்யம் வேண்டும், தான்யம் சுலபமாக கிடைப்பதில்லை, மத்திய அரசாங்கத்தினிடம் அழுகிப் போன உணவுப் பொருள்கள் இருப்பதாகத் தெரிகிறது, அதை நீங்கள் வாங்கி எனக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆக, உணவுப் பிரச்னை கோழிகளையும் பாதிக்கிறது. நமது உணவு தான்யம் அதற்கும் வேண்டியிருக்கிறது. இந்த நாட்டில் நாற்பது கோடி மக்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆடுகள், மாடுகள், கோழிகள் இவைகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் அதுவும் ஒரு 40 கோடி வருகிறது. இவைகளுக்கும் உணவு அளிக்க வேண்டியிருக்கிறது. அதுதான் நம் நாட்டிலுள்ள பிரச்னை. நமக்கோ நிலம் மிகக் குறைவாகயிருக்கிறது. மனிதர்களுக்கு மட்டுமில்லாமல் மற்ற ஜீவராசிகளுக்கும் உணவு கொடுக்க வேண்டியதாகயிருக்கிறது. முதலில் நம் காரியத்தில் கவனம் செலுத்துவோம். நாட்டிலுள்ள எல்லோருக்கும் உணவு கிடைக்க வேண்டும். நாட்டிலோ நிலம் குறைவாகயிருக்கிறது, அதேசமயத்தில் உணவுப்பொருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். ஆகவேதான் சிற்சில சமயங்களில் அரசாங்கம் தலையிட வேண்டியிருக்கிறது. விலை இவ்வளவுதான் இருக்க வேண்டும், இதற்கு மேல் போகக் கூடாது என்று நாம் குறுக்கிட வேண்டியிருக்கிறது. ஆனால் வெட்டுப்பிரேரணையை பிரேரேபித்திருக்கும் பழனிசுவாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், விலை குறையவேயில்லை, விலை அப்படியேயிருக்கிறது, உற்பத்தி பெருகிவிட்டது என்று சொல்கிறீர்களே என்று சொன்னார்கள். உற்பத்தி பெருகித்தானிருக்கிறது. அதோடு அரசாங்கம் திருப்தியடையவில்லை. கனம் அங்கத்தினர்களும் திருப்தி அடைய மாட்டார்கள். இன்னும் அதிகமாக நாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். சிற்சிலவிடங்களில் எதிர்பாராதவிதத்தில் பஞ்சநிலை ஏற்பட்டு, பயிர்கள் வாடி விட்டன, வரி வஜா செய்யவேண்டியிருக்கிறது, அப்படி செய்யப்பட்டும் வருகிறது. அப்படி ஒரு பக்கத்தில் மழையில்லாமல் பயிர்கள் வாடிவிட்டபோதிலும், இன்று பற்றாக்குறை என்ற நிலையில்லாமலிருக்கிறது. இது அரசாங்கத்திற்கு ஒரு எச்சரிக்கை. இப்பொழுது விளைவது போதாது என்று சிலவிடங்களில் விளைச்சல் அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. போன வருடத்தை விட விளைச்சல் அதிகப் பட்டிருப்பதால்தான், பற்றாக்குறை இல்லாத நிலை தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இது, அரசாங்கத்திற்கு ஒரு பாடம், எச்சரிக்கையாகும். ஆகவே, நாம் இன்னும் உற்பத்தியைப் பெருக்கினால் ஒழிய, பின்னால் இன்னும் அதிக மழைக்குறைவு ஏற்பட்டால், அல்லது பருவக்கோளாறுகள் ஏற்பட்டால் சமாளிக்க முடியாது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், அதை சமாளிக்கவேண்டும். ஆகவே, இன்னும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நாம் பிறரை எதிர்பாராமல் இருப்பதற்காக நமது உற்பதியை நாம் இன்னும் பெருக்க வேண்டும். அப்படி உற்பத்தி பெருகினால் விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதோடு கூட நமது உணவுப்பிரச்னையையும் தீர்த்துக் கொள்ள முடியும். ஆகவே, உணவு உற்பத்தியை பெருக்க வேண்டுமென்பதை அரசாங்கம் உணராமலில்லை. அதற்கு வேண்டிய ஒத்துழைப்பையும் விவசாயிகள் அளித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். உற்பத்தி பெருகிவிட்டதென்றால் விலை குறையவில்லையே என்று பழனிசுவாமி அவர்கள் கேட்டார்கள். யாரும் வேறு அபிப்பிராயம் கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இன்று ஆந்திராவில், அங்கு அவர்களுக்கு எவ்வளவு தேவையோ அதை விட அதிகம் உற்பத்தி செய்துதான் இருக்கிறார்கள், அவர்களது தேவை போக, 5 லட்சம் டன் அரிசியாவது விற்கக் கூடியதாகயிருக்கிறது. ஆனால் நமக்குத்தான் கிடைப்பதில்லை. காரணம், அவர்கள் அதிக விலை கேட்கிறார்கள். ஆகவே, நமக்கு கிடைப்பதில்லை. அங்கு உபரியாக 5 லட்சம் டன் இருக்கிறது. இந்திய நாட்டிலேயே வைத்து நம்முடைய ராஜ்யந்தான், விளைச்சலை அதிகப்படுத்துவதில், விளைச்சல்

[Sri M. Bhaktavatsalam] [18th March 1959

நேராக விவசாயிகளிடத்திலிருந்து வாங்கக்கூடாதா என்று கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். பெரிய விவசாயிகளைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் சொன்னது எல்லா விவசாயிகளிடமிருந்தும் ஏகருக்கு இவ்வளவு என்று வாங்கி விடுகிறது தானே என்பது தான். நாம் 2 லட்சம் டன் வாங்குவது பெரிதல்ல. இம்மாதிரி " ப்ரோகுயூர்மெண்டு " நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதே விலையை குறைக்கவேண்டும், விலையை கட்டுப்பாடு செய்யவேண்டும், நாம் நிர்ணயம் செய்ததற்கு மேல் அதிகப்படியான விலைக்கு விற்கக்கூடாது என்பதுதான். அதுதான் அடிப்படை லட்சியம். அதுதான் முக்கியமே தவிர, வாங்குவது பெரிதல்ல. அரிசி கிடைக்கவில்லை என்றால் எங்கேயாவது, எப்படியாவது வாங்கவேண்டுமென்பது அல்ல. முன்பு பற்றாக்குறை இருந்த காலத்தில் அம்மாதிரி செய்யப்பட்டது. எப்படியாவது வாங்கிவிடலாம். வாங்குவது பெரிதல்ல. வியாபாரிகளாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி எவ்வளவு அதிகபட்ச விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த விலைக்குத்தான் விற்கவேண்டும். அதிகபட்ச விலை நிர்ணயித்திருப்பது அரசாங்கத்தின் சௌகரியத்திற்காக இல்லை, அரசாங்கம் தாங்கள் சௌகரியமாக வாங்குவதற்கு வசதி வேண்டும், சலுகை வேண்டும் என்று கருதவில்லை. தாங்கள் வாங்குகின்ற தானியத்திற்கு மட்டும் விலை குறைவாக இருந்தால் போதும் என்று அரசாங்கம் நினைக்கவில்லை.

தென் மண்டலத்தில் அவர்களும் வாங்குவதில்லை. நானும் கவனித்திருக்கிறேன். இந்த விலை கட்டுப்பாடு 'நோடிபிகேஷன்' வந்தபிறபாடு, அதை அவர்கள் அமுலுக்குக் கொண்டு வருவதாகவும் தெரியவில்லை. மற்ற அரசாங்கத்தைப் பற்றி குறை கூறும் வகையில் நான் சொல்லவில்லை. இருக்கிற நிலைமையை, நான் அறிகிற நிலைமையை எடுத்துக்கூறவேண்டியிருக்கிறது இந்த மன்றத்தில். அதுதான் இப்பொழுது இருக்கிற ஒரு சங்கடம், தென் மண்டலம் அமைத்திருப்பதால் அதில் ஒரு நன்மை உண்டு. தென் மண்டலத்திற்கு அப்பால் உள்ள ராஜ்யங்களுக்கு அரிசி போவது தடுக்கப்படுகிறது. தென் மண்டலத்தில் இருக்கும் தானியங்கள் தென் மண்டலத்திற்கே ஏறக்குறைய சரியாகப் போய்விடுகிறது. அம்மாதிரி கட்டுப்பாடு இல்லாமல் போய் விட்டால் பெரிய கோளாறு ஏற்பட்டுவிடும். அம்மாதிரி மண்டலத்திற்கு வெளியே போவது தடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒரு நன்மையைத் தவிர, முற்றபடி இப்பொழுது நான் கவனித்ததில் தென் மண்டலம் ஏற்பட்டதில் ஒன்றும் சரியாக நடைபெறவில்லை. எந்த லட்சியத்தை வைத்துக்கொண்டு அவ்வாறு ஸோன் அமைக்கப்பட்டதோ அது சரியாக நடைபெறவில்லை. அதை மாற்றி அமைக்கவேண்டும். ஸ்டேட் டிரேடிங் பற்றி எல்லா யோசனைகளும், அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. கூடிய சீக்கிரம் அதற்காக ஒரு திட்டம் உருவாக்கப்படும். அம்மாதிரி திட்டம் வந்தால், நான் உணர்வது, அது ராஜ்யவாரியாகத் தான் வரும், 3, 4 ராஜ்யங்களுக்குச்சேர்ந்து இருக்கக்கூடிய திட்டமாக வராது. அது ஒன்று தான் பரிகாரம் என்று எனக்கு இப்பொழுது தோன்றுகிறது. (குறுக்கீடு) வருகிற 3, 4-ம் தேதிகளில் கூடுகிற நேஷனல் டெவலப்மெண்டு கவுன்ஸில் கூட்டத்தில் அவர்கள் இதை எடுத்துக்கொள்ளுவார்கள்.

இப்பொழுது வியாபாரிகள் இதிலே பல வகைகளிலே எதிர்ப்பு காட்டுகிறார்கள், இல்லாத சங்கடங்களையெல்லாம் எடுத்து விளக்குகிறார்கள். அவர்களுக்கும் அது நல்லது அல்ல. வியாபாரிகளை அடியோடு புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. நான் அவ்வாறு சொல்லவில்லை. 10 லட்சம் டன் "மார்கெட்பிள் ஸர்பிளஸ்" என்று சொன்னேன். 10 லட்சம் டன்னில் 2 லட்சம் டன் போக பாக்கி 8 லட்சம் டன் இப்பொழுது வியாபாரிகளிடம் இருக்கிறது. அதை அவர்கள் நாம் நிர்ணைத்திருக்கும் விலைக்கு விற்கவேண்டும். அதிகம் ஆசைப்படக்கூடாது, வியாபாரிகளாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி. அவர்களுக்கு





18th March 1959] [Sri M. Bhaktavatsalam]

கமிஷன் இருக்கிறது, லாபம் இருக்கிறது. லாபம் வைத்துத்தான் விலையை நிர்ணயம் செய்திருக்கிறோம். வண்டிச் சத்தத்தைச் சேர்த்துத்தான் விலை நிர்ணயம் செய்திருக்கிறோம். அந்த விலைக்குத் தான் வாங்கவேண்டும், விற்கவேண்டும். ஏதோ வழியில் இதைத் தவிர்த்துக்கொள்ளலாம் என்று நினைத்தால் அது சரியல்ல. தவிர்க்க முடியாவிட்டால், அரசாங்கத்தின் மீது பழி சுமத்துவது நல்லது அல்ல. அது அவர்களுக்கே நல்லது அல்ல. இதை அவர்கள் உணர்ந்து இந்த விலைக் கட்டுப்பாடு சீராக நடைபெறுவதற்கு வேண்டிய வகையிலே அவர்கள் ஒத்துழைக்கவேண்டும். அவர்கள் ஒத்துழைப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இதிலே சில சங்கடங்கள் ஏற்படுவதாக ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார்கள். உற்பத்தி செய்கிறவர்களிடம் வியாபாரிகள் ரொம்ப குறைந்த விலைக்குக் கேட்கிறார்கள் என்று சொன்னால், அம்மாதிரி அவர்கள் குறைத்துக் கேட்பார்களேயானால், அரசாங்கத்தினிடமே நேரடியாக அரசாங்க ஏஜெண்டுகளிடம் அவர்கள் விற்றுவிடலாம் என்று தெரிவித்திருக்கிறோம். இதேமாதிரி சில வியாபாரிகள் விவசாயிகளிடம் இருக்கிறது, அவர்கள் கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். வியாபாரிகளுக்கு வியாபாரம் தடையில்லாமல் பார்த்துக்கொள்ளும் வகையிலே விவசாயிகள் அப்படி கொடுக்காமல் வைத்துக்கொண்டிருந்தால், அவர்களிடமிருந்து வியாபாரிகளுக்கு வாங்கிக்கொடுக்கக்கூடிய அதிகாரம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. அரசாங்கம் நிரணயித்திருக்கும் விலைக்கு வாங்கிக்கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது அரசாங்கம் இதில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

இப்பொழுது சில நாட்களாக—ஒரு மாதம் என்று சொல்லலாம்—சில்லறை விலை, முக்கியமாக ஏழைகள் வாங்கிச் சாப்பிடுகின்ற அரிசி விலை ஓரளவுக்கு குறைந்து தான் இருக்கிறது. ஆனால், விலை நிரந்தரமாகக் குறைய வேண்டும். இப்பொழுது ஓரளவுக்கு குறைந்துதான் இருக்கிறது. குறையவே இல்லை, அப்படியே தான் இருக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. பிப்ரவரி 2-ம் தேதி "நோடிபிகேஷன்" போட்டு விலை நிர்ணயம் செய்த பிறகு, இப்பொழுது விலை படிந்துகொண்டுதான் வருகிறது. ஆனால், நிரந்தரமான பரிகாரம் ஸ்டேட் டிரேடிங் வந்தால் தான் ஏற்படும். அதை நாம் இப்பொழுது எடுத்துக்கொள்ளுவதற்கு இல்லை. இதையெல்லாம் பார்த்து சமாளிக்கவேண்டும். இன்னும் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தாலும் சரி, இன்னும் ஏதாவது சலுகைகள், வசதிகள் செய்து கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி, அல்லது இப்பொழுது போட்டிருக்கும் உத்தரவில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டியிருந்தாலும் சரி, அவைகளையெல்லாம் கவனித்து அவ்வப்பொழுது வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டுதான் இருக்கிறது. சிவில் சப்ளை இலாகாவும், இதிலே போதிய கவனம் செலுத்திக்கொண்டு தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விதைப்பண்ணைகளைப் பற்றி பேசப்பட்டது. விதைப்பண்ணைகளைப் பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டத்தில் முக்கியமாக நல்ல விதைகள் வேண்டும். எனக்கு நினைவு இருக்கிறது. நான் சிறு வயதிலே கிராமத்தில் இருக்கும்போழுது பார்த்திருக்கிறேன், ஒரு நல்ல விவசாயி தான் பயிரிடுவதற்கு நல்ல விதையாக இருக்கவேண்டுமென்று நல்ல விதையை தேடிக்கொண்டு மைல் கணக்கில் போவான். எங்கே நல்ல விதை கிடைக்கிறதோ அங்கே தேடிக் கொண்டு போவான். அங்கே நல்ல விதைக்காக 4 பேர்கள் வருவார்கள். அப்பொழுது நல்லபடியாகப் பேசி எப்படியாவது நல்ல விதையாக தேடிப் பார்த்து வாங்கிக்கொண்டு வருவான். விவசாயிகளுக்கு நல்ல விதையினுடைய அருமை தெரியும். சில விவசாயிகளிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்து, அவர்களையே சத்துள்ள நல்ல விதைகளைக் கொடுங்கள், அதை நாங்கள் விநியோகிக்கிறோம் என்று கேட்டோம். விவசாய இலாகா அதை

நிச்சயமாக ஒரு காரியத்தை என்னால் சொல்ல முடியும், கடந்த ஆண்டுகளை விட, அடுத்த ஆண்டில் நல்ல முறையில் இவைகளில் வேலை செய்யப்படும் என்பதை என்னால் சொல்ல முடியும். இதை நல்ல முறையில் நஷ்டம் ஏற்படாத முறையில் நடத்த வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம். அந்த முறையில்தான் இந்த திட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நம்முடைய லட்சியம் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்பது, அதற்காக சுத்தமான, கியாரண்டியாக இருக்கக்கூடிய விதைகளை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான். அந்த முறையில் வருஷா வருஷம் 2,650 டன் நெல் விதைகளையும், 500 டன் மில்லெட்டுகளையும் வழங்க வேண்டும் என்பதாக இருந்தது. அதன் பின்னால் 1957–58-ல் 20,400 டன்னுக்கு மேலாக சுத்தமான விதைகள் வழங்கப்பட்டன, 1958–59-ல் 11,719 டன் வழங்கப்பட்டன, அதாவது 1958 டிஸம்பர் மாதம் 31-ம் தேதி முடிய வழங்கப்பட்டன. இப்போது 1959–60-ம் வருடத்தில் நமது லட்சியம் 32,150 டன் சுத்தமான விதைகள் வழங்கப்படவேண்டும் என்பது. அந்த முறையில்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மேலும் நல்ல முறையில் விதைப் பண்ணைகளை நடத்துவதற்குரிய வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. முக்கியமாக எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் உணவு உற்பத்தி பெருக்கத்திற்கு இன்னும் பல வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். இந்த வசதிகளை எந்த அளவுக்கு அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அதிகப்படுத்தியிருக்கிறோம். இன்னும் குறிப்பாக, சிறிய நீர்ப்பாசனத்திற்காக அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கனம் அங்கத்தினர்கள் பலர் குறிப்பிட்டார்கள். இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் போதாது, இன்னும் அதிகமான பணம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். பணம் இல்லை என்ற காரணத்திற்காக எந்த திட்டத்தின் வேகமும் குறைக்கப்பட்டு விடவில்லை. சென்ற ஆண்டிலிருந்து உணவு உற்பத்தி பெருக்கத்திற்காக ஒரு தனி பகுதி இன்ஜினியரிங் இலாகாவில் இயங்கி வருகிறது. இவ்விதம் நியமித்திருப்பதே இதில் அதிகமான கவனம் செலுத்துவதற்காகத்தான். மேலும் இதில் தீவிரமான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் உணவு உற்பத்தி பெருக்க இன்ஜினியரிங் இலாகா (Food Production Engineering Department) ஒன்று சூப்பிரண்டிங் இன்ஜினியரிங் இலாகாவின் கீழ் ஏற்படுத்தப்பட்டு வேலை செய்துவருகிறது. இது ஏற்பட்ட பின்னால் இந்த திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் மிச்சமாவதில்லை. இதற்கு முன்னால் மிச்சமாவதுண்டு. இப்போது அப்படியல்ல. சென்ற ஆண்டில் தென் மண்டல ராஜ்யங்களையெல்லாம் சேர்த்து வைத்து ஒவ்வொரு ராஜ்யத்திற்கும், சிறிய நீர்ப்பாசன வசதிகளை பெருக்குவதற்குகாக என்னென்ன செய்ய வேண்டும் அதற்கு எவ்வளவு, தொகை ஒதுக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. இவ்விதம் கேட்கப்பட்டதில் நமது ராஜ்யம் நமக்கு ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து அதிகமாக 25 லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இவ்விதம் கேட்பது நமக்கு அவசியம், என்றும், நமது நாட்டில் இருக்கும் சிறிய நீர்பாசன திட்டத்தின் அவசியத்தை உணர்ந்தும் மத்திய அரசாங்கம் நாம் கேட்ட தொகையை கொடுத்தார்கள். இப்போது நாம் அதிகச் செலவு செய்து கொண்டு வருகிறோம். சில நாட்களுக்கு முன்பு இந்த உணவு உற்பத்தி நீர்ப்பாசனத் திட்டங்களைப் பார்க்கிற இலாகாவினர் இன்னும் பணம் வேண்டும்—இப்போது கொடுக்கப்பட்டுள்ளது போதாது—இன்னும் அதிகமாக வேண்டும்—இன்னும் 8 லட்சம் ரூபாய் வேண்டும்—இந்த ஆண்டுக்குள் இந்தத் திட்டங்களைப் பார்க்கிறோம் என்று கேட்டார்கள். முன்பெல்லாம் பணம் மிச்சம் என்று சொல்வார்கள்—இப்போது இன்னும் பணம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். வேறு இனத்தில் செலவாகாமல் இருக்கிற பணத்தைக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன்—



அப்படியே நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். அந்த வகையிலே எந்தெந்த திட்டங்களை அதிகப்படுத்த வேண்டுமோ அந்தந்த திட்டங்களை அதிகப்படுத்துவதிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கனம் அங்கத்தினர் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள்—சிறு சிறு நிலப் பரப்பு இருக்கக்கூடிய நிலங்கள் இருக்கின்றன, அதையெல்லாம் ஒன்றாகச் சேர்க்க வேண்டும், அப்படி ஒன்றாகச் சேர்த்தால்தான் சரிவர விவசாயம் செய்யப்படும் என்று சொன்னார்கள். அது உண்மை, நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களிலே, குறைந்த அளவு நிலம் வைத்துக் கொண்டுள்ளவர்கள்தான் அதிகம். பெரும்பாலும் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுடைய நிலம் இக்கனாமிக் ஹோல்டிங் அல்ல—அன் இக்கனாமிக் ஹோல்டிங்தான். இதற்குத் தகுந்த பரிகாரமாகத்தான் கூட்டுறவுப் பண்ணை இப்போது வற்புறுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுப் பண்ணை பற்றி தப்பு அபிப்பிராயம் பலருக்கு இருக்கிறது. நாம் இன்றைக்கு நாடெங்கும் பார்க்கிறோம். பலர் கூட்டுறவுப் பண்ணை என்றால் கலெக்டிங் பார்மிங் என்று நினைக்கிறார்கள். இப்போது கலெக்டிவ் பார்மிங் யோசனை இல்லை. இதிலே எதும் நிர்பந்தம் இல்லை. சேர்ந்து பயிரிட்டால் தான் சிறு சிறு அளவுக்கு நிலம் வைத்திருப்பவர்களுக்குப் புதிய வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். சீராக விவசாயம் செய்து உற்பத்தி பெருகினால்தான் பயிரிடுகிற விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். அதனால்தான் இப்போது கூட்டுறவுப் பண்ணை பற்றி வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதிலே கனம் தொழில் அமைச்சர் அவர்கள் நேற்று கூட்டுறவு மான்யக் கோரிக்கையின் மீது விவாதம் நடந்த போது கூறினார்கள். இதிலே அவசரம் இல்லை. அவசரப்பட்டு ஒரேயடியாக கூட்டுறவுப் பண்ணைகளை வைத்து விடுங்கள் என்று சொல்லவில்லை. இதைப் பார்த்து, கவனித்துச் செய்ய வேண்டும். முதன் முதலில் நடப்பது சீராக—சரிவர—நடக்க வேண்டும். இதுதான் தகுந்த பரிகாரம், ஆனால் பார்த்து நடத்த வேண்டும். அவசரப்பட்டு செய்து அதிலே தவறுதல் வரக்கூடாது என்ற கவலை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதனால்தான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு தேசிய அபிவிருத்தித் திட்டத்திலும் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு அங்கே கூட்டுறவுப் பண்ணைகள் ஆரம்பித்து நடத்தலாம் என்ற யோசனையைக் கூறினோம். இந்த மாதிரி ஒன்றிரண்டு அமைக்கப்பட்டது. அந்த அளவுக்குத் தொடர்ந்து அமைக்கப்படுவதைத் தவிர இது ஒன்றும் கலெக்டிவ் பார்மிங் அல்ல. 1 எக்கர், 2 எக்கர், 3 எக்கர் இப்படிக் குறைந்த அளவு நிலமுள்ளவர்கள்—50 பேர்கள்—சேர்ந்து நடத்தினால் அவர்களுக்கு ஒன்றும் ஆபத்தில்லை, அவர்களுடைய நிலத்திற்கு ஒன்றும் ஆபத்தில்லை, அவர்களுடைய நிலத்திற்கு ஏற்றவாறு அவர்கள் பலனடையலாம். இந்த கூட்டுறவுப் பண்ணைகள் மூலம் பல வசதிகளைப் பெறக்கூடும் என்ற ஒரே அடிப்படைதான் இதிலே இருக்கிறது. இருந்தாலும் இதை எல்லோரும் ஒத்துக்கொள்ளவில்லை. நேற்று அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன், தேவஸ்தான நிலங்களைப்பற்றி. தேவஸ்தான நிலங்கள் இருக்கின்றன—அதிகப் பரப்புள்ள நிலம் இருக்கின்றது—100 எக்கர், 200 எக்கர் பரப்புள்ள நிலங்கள் இருக்கின்றன. முன்பெல்லாம் இந்த நிலங்களை குத்தகைக்காரர்களுக்கு விடுவார்கள். தர்மகர்த்தாக்களுடைய நிலங்கள், மட நிலங்கள் இவைகளில் தவறுகள் இருக்கக்கூடாது என்று அரசாங்கம் வற்புறுத்தி வந்தது. பகிரங்கமாக ஏலம் விட்டு, யார் அதிகத் தொகைக்கு கேட்கிறார்களோ, அவர்களுக்கு விடுங்கள் என்று சொன்னேன். இதிலே நடு மனிதர்கள் அதை எடுத்துக்கொண்டு கீழ்க் குத்தகைக்கு விட்டுக்கொண்டு வந்தார்கள். ப்ரிவென்ஷன் ஆப் எவிக்ஷன் ஆக்ட் வந்த பிறகும், பேர் ரெண்டு ஆக்ட் வந்த பிறகும் அந்த நிலைமை மாறிவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. 60; 40 என்ற வகையிலேதான் கீழ்க் குத்தகை இருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். குத்தகை டெர்ம்ஸ் இருந்தாலும் அதன்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சொன்னோம். தேவஸ்தான நிலங்களாக இருந்தாலும்,

மடங்களுடைய நிலங்களாக இருந்தாலும், அவர்களுக்கு 40 தான் கிடைக்கும். வேறு ஒன்றும் சலுகை கிடையாது. பேர்னெஸ் என்றால், தேவஸ்தான நிலங்களுக்கு ஒரு பேர்னெஸ், தனிப்பட்டவர்களுக்கு ஒரு பேர்னெஸ் என்று இல்லை. குடியானவர்களுக்கும், குத்தகைகாரர்களுக்கும் சட்டப்படி கொடுக்க வேண்டும். தர்மஸ்தாபனங்கள் என்றால் கோவில்தான் என்று நினைக்க வேண்டாம். ஒரு பெரிய கல்லூரிக்கு—தஞ்சையில் ஒரு கல்லூரிக்கு—அதிக நிலம் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலத்தை குத்தகைக்கு விட்டுத்தான் அந்த கல்லூரிக்கு பணம் வரவேண்டும். அதே போல பல தர்ம ஸ்தாபனங்களுக்கு நிலங்கள் இருக்கின்றன. கொஞ்சம் கவனத்தில் இருக்க வேண்டும், ஒரு முதலாளி நடு மனிதனாக இருந்து கீழ்க் குத்தகைக்கு விடுவதாக இருந்தால், குடியானவனைச் சுரண்டுவதில்லையென்றால், 40 பாகத்தை எப்படி தர்மஸ்தாபனத்திற்குக் கொடுப்பார்கள்? தனக்கு லாபம் எதுவுமில்லாமல் தர்ம ஸ்தாபனத்திற்கு அத்தனையையும் கொடுத்து விடுவார்களா? 40-க்குக் குறையாமல் வரவேண்டுமானால், அதற்கு கூட்டுறவுப் பண்ணைதான் சிறந்த முறை. கூட்டுறவுப் பண்ணை முறை இருந்தால் சரியாக வசதி செய்யலாம்—வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கலாம். அரசாங்கமே பல விதமான வசதிகளைச் செய்து கொடுக்கும். அதனால்தான் கூட்டுறவுப் பண்ணை சிறந்தது என்று வற்புறுத்தப்படுகிறது. இன்றைய தினம் பல தேவஸ்தான அதிபர்கள், குடியானவர்கள், விவசாயிகள் எல்லோரும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். கூட்டுறவு பண்ணையைவிட சிறந்த சாதனம் வேறு ஒன்றுமில்லை என்று, தர்ம ஸ்தாபன நிலங்களைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு நல்ல சூழ்நிலை இருக்கிறது. இந்த மாதிரி நிலங்கள் தஞ்சை மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும்தான் அதிகமாக இருக்கிறது. இப்போதே அந்த இடங்களில் 10 அல்லது 12 இடங்களில் கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே எல்லோரும் நன்றாக ஒத்துழைக்கிறார்கள். விவசாயிகள் நன்றாக பலனை எதிர்பார்க்கிறார்கள். இதைவிட நல்ல வழி வேறு இல்லை என்று அவர்களெல்லாம் உணருகிறார்கள். இதனை நடத்துகிறவர்கள் இதுதான் சிறந்த வழி என்று இப்போது உணர முற்பட்டிருக்கிறார்கள். என்னுடைய எண்ணம் குறைந்த பட்சம் சீக்கிரத்தில் 20 கூட்டுறவுப் பண்ணை மட்டிலாவது அமைத்து குடியானவர்களும் குத்தகைக்காரர்களும் செய்கிற பண்ணையாக அமைக்க வேண்டுமென்பதுதான். நான் சொல்வது, குத்தகைகாரர்களாக கூட்டுறவுப் பண்ணை அமைத்து 300 அல்லது 400 எக்கர் நிலம் வைத்து விவசாயம் செய்து உற்பத்தியை அதிகரித்துக் காட்டினால், 2 எக்கர், 3 எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் ஏன் வைக்கக்கூடாது? அதுதான் இப்போது சொல்லப்படுகிறது. கூட்டுறவுப் பண்ணைகள் மூலம், விவசாயத்தைச் சீராக்குவதன் மூலம், உச்ச வரம்பு கட்டினால் நல்ல முறையில் உற்பத்தி அதிகரிக்கும் என்று இப்போது வற்புறுத்தப்படுகிறது. முதலில் குத்தகைகாரர்களாக கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்து நடத்திக் காட்டலாம். அதையொட்டி நிலச் சொந்தக்காரர்கள் கூட்டுறவுப் பண்ணை மிகச் சிறந்த சாதனமாக விளங்குகிறது, சிறந்த வழியாக இருக்கிறது என்று கருதி அவர்களும் முன்னுக்கு வரக்கூடிய நிலைமை ஏற்படும். அதற்காகத்தான் நான் இப்போது இதிலே கவனம் செலுத்தி வருகிறேன்—அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

மற்ற அங்கத்தினர்கள் குறிப்பிட்டவைகளையும் கவனித்து வேண்டியதைச் செய்கிறேன். விவசாய இலாகாவினர் மிகுந்த உற்சாகத்தோடு பாடுபடுகிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். அதைவிட முக்கியமாக நான் பாராட்ட விரும்புவது விவசாயிகளை. எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும், எத்தனை கவலைகள் இருந்தாலும், கடன் தொல்லைகள் இருந்தபோதிலும், அவர்கள் உற்சாகத்தோடு வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு விவசாயத்திலே ருசி இருக்கிறது. நல்ல விதையையும், நல்ல உரங்களையும் கொடுப்பதைப்போல பசுந்தாள் உரத்திற்கும் சலுகைகள் வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதே கொடுக்கிறோம். இப்போது



அதை ஒரு இயக்கமாகவே நடத்துகிறோம். இதை நான் பாத்திருக்கிறேன். எல்லா மாவட்டங்களிலும், கன்னியாகுமரி வரையில் நான் பார்த்தேன். நான் கன்னியாகுமரிக்கு ஏதோ வேலைக்குப் போனேன் என்று சொன்னார்கள். நான் அப்போது இதைத்தான் பார்த்தேன். பசுந்தாள் உரம் சம்பந்தமாக ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடினார்கள். விவசாயிகள் மிகுந்த உற்சாகத்தோடு, ஒத்துழைப்போடு வேலை செய்வதால்தான் நமது உற்பத்தி பெருகி வருகிறது என்று சொல்லிக்கொண்டு அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு இந்த மான்யத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : ஆர்டிபிஷல் ரெயினுக்கு இன்னும் அதிகப்படியான பணம் ஒதுக்குவதைப்பற்றி..............

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் நினைவுபடுத்தியதற்கு நன்றி. பரீட்சார்த்தமெல்லாம் பணம் செலவைப் பொறுத்து இல்லை. ஆஸ்டிரேலியாவிலேகூட இன்னும் ஒன்றும் புரியவில்லை. இதெல்லாம் படிப்படியாகச் செய்யப்பட வேண்டும். செலவு செய்வதால் மட்டும் ஆர்ட்டிபிஷல் ரெயின் வந்து விடாது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of information . . . 1-30 p.m.

DEPUTY SPEAKER : This is not question-hour. (The hon. Member Srimathi T. N. Anandanayaki was seen standing.) When the Chair is on its legs, it is not correct for the hon. Member to stand. So, let the hon. Member resume her seat.

I shall now put the cut motion of Sri N. K. Palanisami to vote. The question is—

"That the allotment of Rs. 3,38,20,600 under Demand XIX—Agriculture and Fisheries—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

SRI N. K. PALANISAMI : I request that the purpose for which I have moved my cut motion may also be mentioned while putting the cut motion to vote.

DEPUTY SPEAKER : All right. I shall once again put the cut motion of Sri N. K. Palanisami to vote. The question is—

"That the allotment of Rs. 3,38,20,600 under Demand XIX—Agriculture and Fisheries be reduced by Rs. 100."

"To urge upon the Government the necessity for fixing floor prices for grains procured from landholders and well as for grains sold to consumers."

The cut motion was put and lost.

# APPENDIX I.

[Vide answer to starred question No. 858 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 18th March 1959, page 553 Supra.]

*Statement showing the articles manufactured under Cottage Industries, Village Industries and Handicrafts in the Departmental units in the Madras State during 1957–58 with their value districtwar.*

| Serial number and products. | Chingleput district. | | | North Arcot district. | | South Arcot district. | | Tanjore district. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Production in | Production. | Value. | Production. | Value. | Production. | Value. | Production. | Value. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | RS. | | RS. | | RS. | | RS. |
| 1 Bullock shoe-nails .. .. | Lb. | .. | .. | .. | .. | 678 | 1,094 | .. | .. |
| 2 Oils .. .. .. .. | Lb. | 3,915 | 3,840 | 4,812 | 3,015 | 1,839 | 1,256 | 2,154 | 2,596 |
| 2A Cakes .. .. .. .. | Lb. | 6,036 | 864 | 9,697 | 6,183 | 3,612 | 332 | 3,369 | 672 |
| 3 Card boards .. .. .. .. | Lb. | .. | ... | 6,592 | 2,343 | .. | .. | 4,432 | 909 |
| 4 Soap (from non-edible oils) .. | Lb. | 3,055 | 1,885 | .. | .. | 515 | 350 | 3,459 | 2,515 |
| 5 Hides .. .. .. .. | Nos. | .. | .. | .. | .. | 152 | 2,280 | 198 | 2,970 |
| 5A Skins .. .. .. .. | Nos. | .. | .. | .. | .. | 13 | 52 | 287 | 1,148 |
| 6 Matches (from bamboo splint and veeneer). | Gross | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 7 Ambar charkhas .. .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 8 Sculpture (images) .. .. | Nos. | 42 | 360 | .. | .. | .. | .. | .. | .. |
| 9 Fancy leather goods. .. .. | Nos. | 1,202 | 7,486 | .. | .. | .. | .. | .. | .. |
| 10 Rattan articles .. .. | Nos. | .. | .. | 2,280 | 1,942 | .. | .. | .. | .. |
| 11 Glass bangles and beads .. .. | Bundles of 100 each. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12 Palm leaf products .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 13 Printing and dyeing cloths .. | Pieces | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 14 Cots, etc., from palmyrah stems .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 15 Lace and embroidery articles .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 16 Aloe fibre .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 17 Druggets from sunnhemp fibre .. | Square yards. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 18 Wooden toys .. .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 19 Bamboo articles .. .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 20 Cumblies, carpets and druggets .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | 28 | .. |
| 21 Art metals .. .. .. .. | Icons Nos. | .. | .. | .. | .. | .. | .. | 146 | 1,986 |
| 22 Bell-metals .. .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | 31 | 502 |
| 23 Paper toys .. .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 24 Coir products .. .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 25 Glass products— | | | | | | | | | |
| Block glass on .. .. .. | Maunds | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Bangles .. .. .. .. | Bundles | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Beads .. .. .. .. | Nos. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 26 Handmade paper .. .. .. | Reams | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |

| Serial number and products. | Tiruchirappalli district. Production. (11) | Value. (12) RS. | Ramanathapuram district. Production. (13) | Value. (14) RS. | Madurai district. Production. (15) | Value. (16) RS. | Tirunelveli district. Production. (17) | Value. (18) RS. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 Bullock shoe-nails | .. | .. | .. | .. | 230 | 172 | 1,544 | 478 |
| 2 Oils | .. | .. | 2,545 | 2,969 | 36,810 | 29,882 | 7,805 | 8,156 |
| 2A Cakes | .. | .. | 4,839 | 701 | 43,444 | 6,576 | 13,234 | 1,907 |
| 3 Card boards | .. | .. | .. | .. | .. | .. | 7,167 | 1,114 |
| 4 Soap (from non-edible oils) | 13,000 | 8,320 | 312 | 212 | 4,852 | 3,004 | 1,674 | 1,121 |
| 5 Hides | 171 | 2,565 | .. | .. | .. | .. | .. | .. |
| 5A Skins | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6 Matches (from bamboo splint and veeneer). | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 7 Ambar charkhas | .. | .. | .. | .. | .. | .. | 790 | 7,900 |
| 8 Sculpture (images) | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9 Fancy leather goods | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10 Rattan articles | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 11 Glass bangles and beads | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12 Palm-leaf products | 3,083 | 467 | .. | .. | .. | .. | .. | .. |
| 13 Printing and dyeing cloths | .. | .. | 634 | .. | .. | .. | .. | .. |
| 14 Cots, etc., from palmyrah stems | .. | .. | 552 | 9,799 | .. | .. | 197 | 3,887 |
| 15 Lace and embroidery articles | .. | .. | .. | .. | .. | .. | 1,081 | 970 |
| 16 Aloe fibre | .. | .. | .. | .. | .. | .. | 556 | .. |
| 17 Druggets from sunhemp fibre | .. | .. | .. | .. | .. | .. | 119 | 992 |
| 18 Wooden toys | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 19 Bamboo articles | .. | .. | .. | .. | 3,711 | 1,418 | .. | .. |
| 20 Cumblies, Carpets and druggets | 180 | 1,230 | .. | .. | .. | .. | .. | .. |
| 21 Art metals | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 22 Bell metals | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 23 Paper toys | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 24 Coir products | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 25 Glass products— | | | | | | | | |
| Block glass on | .. | .. | .. | .. | 23 | } 1,754 | .. | .. |
| Bangles | .. | .. | .. | .. | 1,770 | | | |
| Beads | .. | .. | .. | .. | 699 | | .. | .. |
| 26 Handmade paper | .. | .. | .. | .. | 141 | 3,525 | .. | .. |



| Serial number and products. | Coimbatore district. Production. (19) | Value. (20) RS. | Salem district. Production. (21) | Value. (22) RS. | Kanyakumari district. Production. (23) | Value. (24) RS. | Madras district. Production. (25) | Value. (26) RS. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 Bullock shoe nails | 1,143 | 898 | .. | .. | .. | .. | .. | .. |
| 2 Oils | 47,768 | 35,089 | 5,154 | 6,575 | .. | .. | .. | .. |
| 2A Cakes | 73,878 | 8,258 | 10,853 | 1,689 | .. | .. | .. | .. |
| 3 Card boards | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4 Soap (from non edible oils) | 4,990 | 4,262 | 180 | 158 | 2,436 | 1,435 | .. | .. |
| 5 Hides | 340 | 5,100 | 92 | 1,380 | .. | .. | .. | .. |
| 5A Skins | 63 | 252 | 11 | 44 | .. | .. | .. | .. |
| 6 Matches (from bamboo splint and veeneer). | 32 | 650 | .. | .. | .. | .. | .. | .. |
| 7 Ambar charkhas | .. | .. | .. | .. | .. | .. | 1,100 | 1,10,000 |
| 8 Sculpture (images) | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9 Fancy leather goods | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10 Rattan articles | .. | .. | 849 | 1,177 | .. | .. | .. | .. |
| 11 Glass bangles and beads | .. | .. | 849 | 1,177 | .. | .. | .. | .. |
| 12 Palm-leaf products | .. | .. | 3,962 | 866 | .. | .. | .. | .. |
| 13 Printing and dyeing cloths | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 14 Cots, etc., from palmyrah stems | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 15 Lace and embroidery articles | 773 | 913 | .. | .. | .. | .. | .. | .. |
| 16 Aloe fibre | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 17 Druggets from sunhemp fibre | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 18 Wooden toys | 1,176 | 1,410 | .. | .. | .. | .. | .. | .. |
| 19 Bamboo articles | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 20 Cumblies, carpets and druggets | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 21 Art metals | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 22 Bell metals | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 23 Paper toys | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 24 Coir products | 724 | 1,498 | .. | .. | .. | .. | .. | .. |
| 25 Glass products— | | | | | | | | |
| Block glass on | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Bangles | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Beads | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 26 Handmade paper | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |

[18th March 1959

APPENDIX II.

[Vide anwer to starred question No. 860 asked by Sri V. K. Krishnamurthy (on behalf of Srimathi T. N. Anandanayaki) at the meeting of the Legislative Assembly held on 18th March 1959, page 555 supra.]

I

*Amount of tax collected under Madras Motor Vehicles Taxation Act, 1931, district-war during the year 1958.*

| Serial number and name of the district. (1) | Amount of tax collected. (2) RS. | NP. |
|---|---|---|
| 1 Coimbatore | 55,69,790 | 09 |
| 2 Tanjore | 20,20,580 | 00 |
| 3 North Arcot | 31,51,517 | 94 |
| 4 Madurai | 39,61,566 | 00 |
| 5 Chingleput | 20,46,254 | 31 |
| 6 Tirunelveli | 27,32,447 | 46 |
| 7 South Arcot | 14,87,692 | 51 |
| 8 The Nilgiris | 14,37,311 | 95 |
| 9 Ramanathapuram | 15,60,208 | 85 |
| 10 Salem | 32,18,860 | 94 |
| 11 Tiruchirappalli | 34,27,906 | 60 |
| 12 Kanyakumari | 8,09,413 | 89 |
| 13 Madras City | 71,68,495 | 19 |
| Total | 3,85,92,045 | 73 |

NOTE.—As regards Kanyakumari district, Rs. 8,09,413·89 were collected as tax under the Travancore-Cochin Vehicles Taxation Act.

II

*Toll compensation paid to each local body during the period 1st January to 30th November 1958.*

| District Boards and Municipalities. | Amount. RS. | NP. |
|---|---|---|
| Chingleput district— | | |
| (a) District Board | 1,60,417 | 00 |
| (b) Chingleput Municipality | 15,834 | 00 |
| (c) Kancheepuram | 18,334 | 00 |
| (d) Tiruvellore | 16,332 | 00 |
| (e) St. Thomas Mount | 1,481 | 00 |



18th March 1959]

| District Boards and Municipalities. | Amount. RS. | NP. |
|---|---|---|
| 2 North Arcot district— | | |
| (a) North Arcot District Board | 1,53,542 | 00 |
| (b) Gudiyattam | 10,083 | 38 |
| (c) Tiruppattur | 17,000 | 00 |
| (d) Tiruvannamalai | 23,000 | 00 |
| (e) Vellore | 35,750 | 00 |
| (f) Vaniyambadi | 13,000 | 00 |
| (g) Walajapet | 19,000 | 00 |
| (h) Arni | 5,541 | 88 |
| (i) Ambur | 8,250 | 00 |
| 3 South Arcot district— | | |
| (a) South Arcot District Board | 1,69,880 | 38 |
| (b) Chidambaram | 18,333 | 38 |
| (c) Cuddalore | 27,500 | 00 |
| (d) Villupuram | 9,167 | 00 |
| (e) Tindivanam | 5,564 | 00 |
| 4 Tanjore district— | | |
| (a) Tanjore District Board | 2,80,500 | 00 |
| (b) Tanjore Municipality | 70,000 | 00 |
| (c) Kumbakonam | 44,000 | 00 |
| (d) Mannargudi | 10,834 | 00 |
| (e) Mayuram | 20,000 | 00 |
| (f) Nagapattinam | 16,000 | 00 |
| (g) Tiruvarur | 18,000 | 00 |
| 5 Tiruchirappalli district— | | |
| (a) Tiruchirappalli District Board | 1,74,625 | 00 |
| (b) Tiruchirappalli Municipality | 45,833 | 33 |
| (c) Pudukkottai | 46,291 | 67 |
| (d) Srirangam | 9,166 | 67 |
| (e) Rayavaram | 83 | 00 |
| (f) Karur | 6,250 | 03 |
| 6 Madurai district— | | |
| (a) Madurai District Board | 3,66,666 | 67 |
| (b) Madurai Municipality | 1,22,833 | 46 |
| (c) Palani | 16,500 | 00 |
| (d) Periakulam | 17,416 | 67 |
| (e) Kodaikanal | 7,333 | 70 |
| (f) Dindigul | 33,000 | 00 |
| (g) Bodinayakanur | 11,666 | 78 |

| District Boards and Municipalities. | Amount. Rs. | nP. |
|---|---|---|
| 7 Ramanathapuram district— | | |
| (a) Ramanathapuram District Board .. .. | 2,61,250 | 00 |
| (b) Karaikudi Municipality .. .. | 46,500 | 02 |
| (c) Sivakasi ... .. .. .. .. | 7,500 | 00 |
| (d) Srivilliputtur .. .. .. .. | 10,000 | 14 |
| (e) Virudhunagar ... .. ... .. | 25,667 | 00 |
| (f) Devakottai .. .. ... .. | 20,833 | 34 |
| (g) Aruppukottai .. .. ... .. | 10,500 | 02 |
| 8 Tirunelveli district— | | |
| (a) Tirunelveli District Board .. .. | 2,46,125 | 00 |
| (b) Palayamkottai Municipality .. .. | 22,916 | 67 |
| (c) Tirunelveli .. .. .. .. | 26,583 | 34 |
| (d) Tuticorin .. .. .. .. .. | 27,499 | 93 |
| (e) Melapalayam .. .. ... .. | 2,500 | 00 |
| 9 Coimbatore district— | | |
| (a) Coimbatore District Board .. .. | 3,75,006 | 05 |
| (b) Coimbatore Municipality .. .. | 66,000 | 00 |
| (c) Dharapuram .. .. .. .. | 28,334 | 00 |
| (d) Erode .. .. .. .. .. | 52,500 | 00 |
| (e) Pollachi .. .. .. .. | 93,500 | 00 |
| (f) Tiruppur .. .. .. .. | 35,750 | 00 |
| (g) Udumalpet .. .. .. .. | 33,000 | 00 |
| (h) Gobichettipalayam .. .. .. | 7,155 | 00 |
| (i) Mettupalayam .. .. .. .. | 26,323 | 25 |
| 10 The Nilgiris district— | | |
| (a) Nilgiris District Board ... .. ... | 1,21,916 | 85 |
| (b) Coonoor Municipality ... ... ... | 10,083 | 25 |
| (c) Ooty Municipality .. .. .. | 29,334 | 00 |
| (d) Wellington .. .. .. .. | 2,186 | 25 |
| 11 Salem district— | | |
| (a) Salem District Board .. .. .. | 2,32,834 | 00 |
| (b) Salem Municipality .. .. .. | 82,000 | 00 |
| (c) Rasipuram .. .. .. .. | 27,000 | 00 |
| 12 Kanyakumari district— | | |
| (a) Nagercoil .. .. .. .. | 22,455 | 96 |
| (b) Kuzhithurai .. .. .. .. | 711 | 05 |
| (c) Shenkottah .. .. .. .. | 10,735 | 50 |
| (d) Colachal .. .. .. .. | 271 | 60 |
| (e) Padmanabapuram .. .. .. | 2,704 | 00 |
| 13 Madras City .. .. .. ... | 3,27,250 | 00 |
| Grand total ... | 43,39,937 | 22 |



III

*Licence fee compensation paid to each local body during the period 1st January to 30th November 1958.*

| District Boards and Municipalities. | Amount Rs. | nP. |
|---|---|---|
| 1 Chingleput district— | | |
| (a) Chingleput District Board .. .. | 1,11,288 | 00 |
| (b) Chingleput Municipality .. .. .. | 2,124 | 00 |
| (c) Kancheepuram Municipality .. .. | 1,993 | 00 |
| (d) Tiruvallur Municipality .. .. .. | 1,062 | 00 |
| 2 North Arcot district— | | |
| (a) North Arcot District Board .. .. | 1,30,801 | 00 |
| (b) Walajapet Municipality .. .. .. | 3,090 | 00 |
| (c) Gudiyattam Municipality.. .. .. | 1,367 | 00 |
| (d) Tirupattur Municipality .. .. .. | 2,743 | 00 |
| (e) Tiruvannamalai Municipality .. .. | 2,042 | 00 |
| (f) Vaniyambadi Municipality .. .. | 2,402 | 50 |
| (g) Vellore Municipality .. .. .. | 6,497 | 00 |
| (h) Ambur .. .. .. .. .. | 1,410 | 00 |
| (i) Arni .. .. .. .. .. | 772 | 50 |
| 3 South Arcot district— | | |
| (a) South Arcot District Board .. .. | 51,917 | 00 |
| (b) Villupuram Municipality .. .. .. | 1,072 | 00 |
| (c) Cuddalore Municipality .. .. .. | 2,254 | 00 |
| (d) Chidambaram Municipality .. .. | 1,113 | 00 |
| (e) Tindivanam Municipality .. .. | 697 | 50 |
| 4 Tanjore district— | | |
| (a) Tanjore District Board .. .. .. | 1,30,546 | 00 |
| (b) Mayuram Municipality .. .. .. | 2,311 | 50 |
| (c) Kumbakonam .. .. .. .. | 5,129 | 00 |
| (d) Tanjore .. .. .. .. .. | 4,945 | 00 |
| (e) Mannargudi Municipality.. .. .. | 748 | 00 |
| (f) Nagapattinam .. .. .. .. | 1,347 | 00 |
| (g) Thiruvarur .. .. .. .. .. | 2,403 | 00 |
| 5 Tiruchirapalli district— | | |
| (a) Tiruchirappalli District Board .. .. | 72,517 | 00 |
| (b) Tiruchirappalli Municipality .. .. | 8,059 | 00 |
| (c) Srirangam Municipality .. .. .. | 2,837 | 00 |
| (d) Karur Municipality .. .. .. | 1,390 | 50 |
| (e) Pudukkottai Municipality.. .. .. | 9,600 | 00 |
| (f) Erstwhile Pudukkottai .. .. .. | 37,000 | 00 |

| District Boards and Municipalities. | Amount. Rs. | nP. |
|---|---|---|
| 6 Madurai district— | | |
| (a) Madurai District Board .. .. .. | 1,47,329 | 00 |
| (b) Madurai Municipality .. .. .. | 3,117 | 00 |
| (c) Dindigul Municipality .. .. .. | 972 | 50 |
| (d) Kodikanal .. .. .. .. .. | 1,201 | 00 |
| (e) Palani .. .. .. .. .. | 1,911 | 00 |
| (f) Periakulam.. .. .. .. .. | 2,916 | 00 |
| (g) Bodinayakanur .. .. .. .. | 1,111 | 25 |
| 7 Ramanathapuram district— | | |
| (a) Ramanathapuram District Board .. | 1,21,421 | 00 |
| (b) Sivakasi Municipality .. .. .. | 573 | 75 |
| (c) Srivilliputtur Municipality .. .. | 2,089 | 50 |
| (d) Virudhunagar Municipality .. .. | 2,761 | 00 |
| (e) Karaikudi Municipality .. .. .. | 1,332 | 00 |
| (f) Devakottai Mnnicipality .. .. .. | 3,650 | 00 |
| (g) Rajapalayam Municipality .. .. | 1,393 | 00 |
| (h) Aruppukottai Municipality .. .. | 825 | 00 |
| 8 Tirunelveli district— | | |
| (a) Tirunelveli District Board .. .. | 95,347 | 00 |
| (b) Tirunelveli Municipality .. .. .. | 7,651 | 00 |
| (c) Palayamcottai Municipality .. .. | 4,230 | 00 |
| (d) Tuticorin Municipality .. .. .. | 3,283 | 75 |
| (e) Melapalayam Municipality .. .. | 2,820 | 00 |
| 9 Coimbatore district— | | |
| (a) Coimbatore District Board .. .. | 1,71,538 | 00 |
| (b) Coimbatore Municipality .. .. | 6,695 | 00 |
| (c) Pollachi Municipality .. .. .. | 6,735 | 75 |
| (d) Udamalpet Municipality .. .. .. | 1,680 | 00 |
| (e) Tiruppur Municipality .. .. .. | 2,250 | 00 |
| (f) Dharapuram Municipality .. .. | 3,330 | 00 |
| (g) Erode Municipality .. .. .. | 4,458 | 00 |
| (h) Gobichettipalayam .. .. .. | 1,500 | 00 |
| (i) Mettupalayam .. .. .. .. | 1,407 | 00 |
| 10 The Nilgiris district— | | |
| (a) Nilgiris District Board .. .. .. | 27,600 | 00 |
| (b) Ootacamund Municipality .. .. | 2,147 | 00 |
| (c) Coonoor .. .. .. .. .. | 3,190 | 00 |



| District Boards and Municipalities | Amount. Rs. | nP. |
|---|---|---|
| 11 Salem district— | | |
| (a) Salem District Board .. .. .. | 1,04,203 | 00 |
| (b) Salem Municipality .. .. .. | 13,688 | 75 |
| (c) Rasipuram .. .. .. .. .. | 1,087 | 50 |
| 12 Kanyakumari .. .. .. .. .. | Nil. | |
| 13 Madras City .. .. .. .. .. | 7,843 | 00 |
| | 13,68,796 | 25 |

## Appendix III.

[Vide answer to starred question No. 864 asked by Sri T. S. Ramaswamy Pillai (on behalf of Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 18th March 1959, page 560 supra.]

*Statement showing Goshalas in the Madras State.*

| *Serial number.* (1) | — (2) | *Number of animals on their rolls.* (3) | *Whether the private Goshalas are receiving grants.* (4) | *The contribution from the Central Government, if any.* (5) |
|---|---|---|---|---|
| I. | Goshala run by Government—Nil. | | | |
| II. | Private (Goshalas recognised by the Central Council of Gosamvardhana.)— | | | |
| | 1 The Madras Pinjrapole, Madras .. | 420 | No grant is being paid. | No grant is being obtained from Central Government. |
| | 2 Shri Mayaji North Indian Ramanja Goshala, Irusappa Gramani Street, Triplicane, Madras. | 70 | | |
| | 3 Gosamvardhana Samajam, Salem .. | 30 | | |
| | 4 Goshala, Sri Nachiar Devasthanam, Srivilliputhur, Ramanathapuram district. | 262 | | |
| | 5 The S. P. C. A., Pinjrapole, Tanjore. | 9 | | |
| | 6 The Pinjrapole, Tindivanam, South Arcot district. | 17 | | |
| | 7 The S. P. C. A., Pinjrapole, Vellore, North Arcot district. | 68 | | |
| | 8 The Pinjrapole, Khajapet, Tiruchirappalli district. | 30 | | |

| | | | *Non-Recurring.* | *Cost.* Rs. | PER CENT. |
|---|---|---|---|---|---|
| | The Gandhi Memorial Farm, Alathambadi, Tiruthuraipundi. | 78 | 10 cows and 1 bull. | 6,000 | 50 |
| | | | Ad hoc grant for repairs | 5,000 | 75 |
| | | | *Recurring.* | | |
| | | | Annual maintenance. | 2,000 per annum. | 75 |
| | | | Subsidy for calves. | 600 per annum. | 50 |

| Serial number. (1) | — (2) | Number of animals on their rolls. (3) | Whether the private Goshalas are receiving grants. (4) | The contribution from the Central Government, if any. (5) |
|---|---|---|---|---|
| III. | Private institutions ready to form Goshalas and which have applied for assistance under Goshala Development Scheme— | | | |
| | 1 Mettur Dairy and Farms, Limited, Salem district. | 18 | | |
| | 2 Dairy Farm attached to Sri Seethalakshmi Ramaswamy College, Tiruchirappalli district. | 9 | | |
| | 3 Dairy Farm attached to Sri P. S. Sivaswamy Iyer High School, Tirukattupalli, Tanjore district. | 56 | | |
| | 4 Mazhankanni Gaoshala, Valivalam, Tanjore district. | 14 | Nil. | Nil. |
| | 5 Rogini Dairy Farm, Kanyakumari district. | 149 | | |
| | 6 Narendra Dairy Farm, Neikarapatti, Palani taluk, Madurai district. | 221 | | |
| | 7 Kasthuribai Gandhi Kanniya Gurukulam, Vedaranyam, Tanjore district. | 25 | | |
| | 8 Pamini Cattle Farm, Tiruthuraipoondi taluk, Tanjore district. | 24 | | |
| IV. | "Pasumadams" in temples to be maintained as 'Goshalas'— | | | |
| | 1 Sri Subramaniaswamy Devasthanam, Tiruchendur, Tirunelveli district. | 11 | | |
| | 2 Sri Subramaniaswamy Devasthanam, Tiruvengadu, Tanjore district. | 13 | | |
| | 3 Sri Dhandhayuthapaniswamy Devasthanam, Palani, Madurai district. | Not available. | Nil. | Nil. |
| | 4 Sri Agneeswaraswamy Devasthanam, Thiruppugalur, Tanjore district. | 20 | | |
| | 5 Sri Thirukuthalanathaswamy Devasthanam, Courtallam, Tirunelveli district. | 10 | | |
| | 6 Sri Tirumalaikumaraswamy Devasthanam, Ponpali, Tenkasi Taluk, Tirunelveli district. | 11 | | |

## APPENDIX IV.

[Vide answer to starred question No. 867 asked by Sri N. K. Palaniswami, at the meeting of the Legislative Assembly held on 18th March 1959, page 561 supra.]

*Statement showing the details of regeneration and afforestation schemes.*

1. *Creation of fodder banks and improvement to grazing.*—Improvements of the potential water sources inside Reserved Forests and development of fodder in the pastures by raising valuable fodder tree and grass species are the objectives of this



scheme. It has been proposed to develop 12,500 acres at a cost of Rs. 1·32 lakhs. So far about 7,212 acres have been developed by spending Rs. 0·87 lakhs.

2. *Lac cultivation.*—Under this scheme, besides stepping up the lac production, it has been proposed to raise Lac Host trees (Kusum) and so far 127 acres have been planted. The total expenditure during the plan period will be Rs. 1·20 lakhs.

3. *Cashew cultivation.*—In order to meet the growing demand for cashewnut and cashew shell oil, large scale cashew plantations have been proposed to be raised. About 46,000 acres will be planted with cashew at a total cost of Rs. 25·16 lakhs. So far about 28,222 acres have been planted at a cost of Rs. 2·31 lakhs.

4. *Teak and other timber species.*—To augment the supply of teak, rosewood and other valuable species, large scale plantations are undertaken. During the plan period it has been proposed to to raise 4,170 acres of teak and 600 acres of bamboos. In addition to this, by constructing a masonry dam across Halur-Halla near Mettupalayam, water has been diverted and will be used far raising teak in another 1,200 acres progressively, under "*Irrigated conditions*".—The cost of the scheme is Rs. 4·55 lakhs. So far about 2,321 acres with teak without irrigation and 254 acres with irrigation, 294 acres with bamboos and 105 acres of miscellaneous species have been raised, at a cost of Rs. 2·494 lakhs. Besides these, another interesting venture is the raising of plantations along the banks of rivers and canals and fringes of lakes. It has been found that teak can be successfully raised. About 4,000 acres have been proposed to be raised with Teak at a cost of Rs. 8·00 lakhs. So far about 2,247 acres have been raised at cost of Rs. 3·69 lakhs.

5. *Development of matchwood plantation.*—In order to increase the supplies of softwood species, utilised in match industries, large scale plantations are taken up. About 8,300 acres have been proposed to be raised at a cost of Rs. 5·96 lakhs. About 4,232 acres have been raised so far at a cost of Rs. 2·885 lakhs.

6. *Creation of Industrial plantations such as Wattle and Bluegum.*—The wattle bark is useful for tanning industries, while the wood, besides being a good fuel, is also used as a raw material for paper and Rayon industries. Considering the mutiple uses of wattle,

[18th March 1959

large scale wattle plantations are being raised and so also in the case of bluegum. About 19,000 acres of wattle and 1,900 acres of Bluegum were proposed to be raised at a total cost of Rs. 9·12 lakhs. So far, about 9·392 acres of wattle and 2,000 acres of bluegum have been raised at a cost of Rs. 6·95 lakhs.

7. *Afforestation of fuel forests.*—This is one of the most important and major schemes undertaken by this department to rehabilitate the badly neglected and denuded vast expanse of ex-panchayat and ex-zamin forests taken over by this department. Under this scheme, the denuded low hill-portions of ex-panchayat and ex-zamin and the plain portions of ex-panchayat, are taken up for afforestation with trees of fuel and fodder species. This scheme will also aid soil conservation besides augmenting the firewood supply of the State. It has also been proposed to raise grass farms over suitable sites both under rainfed and irrigation conditions to provide forage for the cattle population of the region. About an area of 17,750 acres of low hill portions and 85,000 acres of plain portions will be tackled under this scheme at a cost of Rs. 49·49 lakhs. So far, about 55,240 acres have been planted with fuel and fodder species.

8. *Casuarina plantations.*—In order to fix up the shifting sand dunes on the river banks and sea shores, casuarina is planted, over about 3,400 acres at a cost of Rs. 5·00 lakhs. So far about 1,566 acres have been planted with casuarina at a cost of Rs. 1·63 lakhs.

## APPENDIX V.

[Vide answer to starred question No. 875, asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 18th March 1959, page 568 supra.]

(a) The following twelve industrial establishments have agreed to train apprentices under the scheme for Apprenticeship Training :—

(1) Vikrama Engineering Company, Adyar, Madras-20.

(2) Addison and Company (Private), Limited, Workshops, Smith Road, Mount Road, Madras-2.

(3) Beehive Foundry Engineering Works, No. 95, Broadway, Madras-1.



18th March 1959]

(4) Central Workshops, K.C.P., Limited, Tiruvottiyur, Madras-19.

(5) Chitram and Company, Main Road, Rayapuram, Madras-13.

(6) Easun Engineering and Company, Limited, 5/7, Second Line Beach, Madras-1.

(7) India Pistons (Private), Limited, "Hosur Gardens", Sembiam, Madras-11.

(8) Garlick and Company, North Railway-Terminus Road, Madras-13.

(9) The Reid Co-operative Timber Works, Limited, Tiruvottiyur, Madras-19.

(10) The South Indian Export Company, Limited, 20, General Patters Road, Mount Road, Madras-2.

(11) T.I. Cycles of India, Limited, Ambattur, near Madras.

(12) Ashok Leyland of India, Limited, N.S.C. Bose Road, Madras-1.

(b) One hundred apprentices have been selected for admission in the Apprenticeship Training schemes as detailed below:—

| | |
|---|---|
| Fitters .. .. .. | 30 |
| Moulders .. .. .. | 15 |
| Machinist and Turners .. | 26 |
| Carpenters .. .. .. | 13 |
| Welders .. .. .. | 16 |
| | 100 |

(c) Sixteen candidates belonging to Scheduled Castes/Scheduled Tribes have been selected in all the five trades.

(d) The duration of the training has been tentatively fixed as three years, pending a decision by the Apprenticeship Committee constituted for the implementation of the scheme.

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## FIFTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**Volume XXI (Nos. 1 to 7).**

*11th to 14th and 16th to 18th March* 1959.

### A

PAGES

Administration Reports—
Question *re* delay in the issue of —, avoidance of .. .. .. 114–115

Agricultural Banks—
*See* Co-operation.

Agriculture—
Question *re*—
All-India Agricultural Service, establishment of — details *re* .. 293–294
Pumpsets used for —, collection of minimum charges for motors of lower capacity .. .. .. .. .. .. 11
Sample survey of cost of production of various crops, undertaking by Economics and Statistical Department, Madras .. .. 552–553

Agriculture and Fisheries—
Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. 575–638

Ambar Charka—
Question *re* operation of — by power .. .. .. .. .. 20–21

Anbazhagan, Sri K.—
Demand for Grant *re*—
Education .. .. .. .. .. .. .. .. .. 392–402, 445
Elections .. .. .. .. .. .. .. .. 258–263, 269
Excise Department .. .. .. .. .. .. .. 132, 158–162
Head of State, Ministers and Headquarters Staff .. .. 258–263, 269
Labour including Factories .. .. .. .. .. .. 346–352, 356
Police .. .. .. .. .. .. .. .. .. 132, 158–162

Privilege motion *re* report in 'The Dinamani', dated 11th March 1959 *re* proceedings of the House .. .. .. .. .. 208

Animal Husbandry—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. .. 575–638
Question *re* cattle, location of key village centres, extension centres and sheep farms .. .. .. .. .. .. .. .. 111–118

A—*cont.*

PAGES

Annamalai, Sri S. M.—
Demand for Grant *re*—
Co-operation .. .. .. .. .. .. .. .. 505–508
Elections .. .. .. .. .. .. .. .. 229–231
Excise Department .. .. .. .. .. .. .. 152–153
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 229–231
181, 186
Labour including Factories .. .. .. .. .. .. 328–329
Police .. .. .. .. .. .. .. .. .. 152–153
181, 186

Annamalai University—
*See* Universities.

Appavoo Pillai, Sri K.—
Demand for Grant *re* Education .. .. .. .. .. .. 406–408

Arumughasamy, Sri M. A. B.—
Question *re* anicut across Marudhiar, construction of .. .. .. 119

Arunachala Thevar, Sri V.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries, Animal Husbandry, Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. 583–585

Authimoolam, Sri D. S.—
Demand for Grant *re*—
Elections .. .. .. .. .. .. .. .. .. 251–253
Excise Department .. .. .. .. .. .. .. .. 138–142
186
Head of State, Ministers and Headquarters Staff .. .. 251–253
Police .. .. .. .. .. .. .. .. .. 138–142
186

B

Bee-hive—
Question *re* Farm and Nursery, establishment of—at Kodaikanal and Surilimalai, Madurai district .. .. .. .. .. .. 465–466

Bee-keeping—
Question *re* bee colonies, names and number of .. .. .. 466–467

Betel-vines—
Question *re* pest attack on —, remedial measures *re* .. .. .. 19

Bhaktavatsalam, the Hon. Sri M.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries, Animal Husbandry, Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. .. .. .. .. 575–578
626–637
Elections .. .. .. .. .. .. .. .. .. 216
Excise Department .. .. .. .. .. .. .. .. 122
140, 148, 157
173–187
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 216
Police .. .. .. .. .. .. .. .. .. 122
140, 148, 157
173–187

Bills—
District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959—
Considered and passed .. .. .. .. .. .. .. 453–461

Births—
Question *re*—
Graded tax on—, levy of .. .. .. .. .. .. .. .. 100
Number of — in 1958, details *re* .. .. .. .. .. 2–4



B—*cont.*

PAGES

Block (Development) Projects—
Question *re* Villupuram Block, inclusion of Valavanur in .. .. 469

Blood transfusion—
Question *re* number of — cases in each of Government hospitals, quantity of blood given .. .. .. .. .. .. .. 202

Boating—
Question *re* Ootacamund lake, deepening of .. .. .. .. 291

Brushes (palmyra)—
*See* Industries.

C

Capital Outlay on Agriculture—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. .. 575–638

Carpentry—
Question *re* training centres in —, details *re* .. .. .. .. 10

Chandrasekharan, Sri A. E.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries, Animal Husbandry, Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. .. 605–607

Charitable endowments—
Question *re* Sri Ramalinga Chowdambiga Devasthanam (Thevaram), appointment of trustees .. .. .. .. .. .. 300

Chidambara Bharathi, Sri R.—
Demand for Grant *re*—
Elections .. .. .. .. .. .. .. .. .. 215, 216
Head of State, Ministers and Headquarters staff .. .. .. 215, 216

Child Welfare Centres—
Question *re* — in Coimbatore district, amount allotted for — during 1958–59 .. .. .. .. .. .. .. .. .. 202

Chinnadurai, Sri P. S.—
Demand for Grant *re*—
Education .. .. .. .. .. .. .. .. .. 433–436
Excise Department .. .. .. .. .. .. .. 168–173
Labour including Factories .. .. .. .. .. .. 352–356
Police .. .. .. .. .. .. .. .. .. 168–173

Choultry—
Question *re* Sir Ramaswamy Mudaliar Choultry, Madras, lease of the site belonging to .. .. .. .. .. .. .. 299

Coconut—
*See* Research Stations.

College(s)—
Question *re*—
Agriculture —, Coimbatore, number of students admitted to .. 292
B.T. —, starting of, in Kanyakumari district .. .. .. 192–193
Engineering —, establishment of — in Tanjore district with public contribution .. .. .. .. .. .. .. .. 381
Engineering —, Madras, aid by United States Government to .. 555
Islamiah —, cancellation of scholarships to two students of .. 570
Professional and Arts —, provision of more seats for 1959 in .. 377–378

Commercial Taxes—
Question *re* sales tax, number of persons not paid — in 1957–58 .. 566

Committees—
Committee of Privileges, election of members to .. .. .. 209
Estimates Committee, election of members to .. .. .. .. 573–574
Privileges Committee, election of members to .. .. .. .. 570–571

C—*cont.*


PAGES

Community (Development) Projects—
Question *re*—
Alangulam Block Office, rectification of defects noticed by Minister for Electricity during his visit to .. .. .. .. .. 464–465
Block Advisory Committee, convening of — once every half-year .. 373–374
Block Development Officers, appointment of women as .. .. 378–379
Block offices in North Arcot district, number of — visited by Minister for Electricity in August 1958 .. .. .. .. 464–465
National Extension Service Scheme, inclusion of certain firkas under .. .. .. .. .. .. .. .. 117

Compensation to zamindars—
Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. 26–89

Co-operation—
Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. 484–544
Question *re* Co-operative Agricultural Banks, reorganization of rural banks into .. .. .. .. .. .. .. 385–386

Co-operative Banks—
Question *re* Thirukattupalli Co-operative Bank, details *re* liquidation of .. .. .. .. .. .. .. .. 22

Co-operative Development Schemes—
*See* Papers laid on the table of the House.

Co-operative societies—
Question *re*—
Agricultural Co-operative Supply and Marketing Society, establishment of .. .. .. .. .. .. .. 390
Co-operative Farming Society, registration of — in Devadhanam village, Srivilliputhur taluk .. .. .. .. .. 482
Multi-purpose —, starting of — in Kadupatti and Marukkalangulam village .. .. .. .. .. .. .. 479
Oil Producers' —, number of — in North Arcot district .. .. 297–298
Oil Producers' Co-operative Society in North Arcot district, complaints against .. .. .. .. .. .. .. 371

Copper—
Question *re* Factory for manufacture of — starting of .. .. 482

Crimes—
Question *re* steps taken to prevent — in the last three years .. .. 109–110

Cultivating Tenants (Payment of Fair Rent) Act (1956)—
Question *re* definition of 'Fair Rent' in —, revision of .. .. 113

Cyclone—
Question *re* boats in the Vedaranyam-Nagapattinam Canal, damage to .. .. .. .. .. .. .. .. 289–290


D


Daniel, Sri T. T.—
Demand for Grant *re*—
Compensation to zamindars .. .. .. .. .. .. 44–47
District Administration and Miscellaneous .. .. .. .. 44–47
Labour including Factories .. .. .. .. .. 321–324
Land Revenue Department .. .. .. .. .. 44–47
Stamps Administration .. .. .. .. .. .. 44–47

Dearness allowance—
Question *re* merger of — with pay of N.G.Os. .. .. .. .. 380

Deaths—
Question *re* number of — in 1958, details *re* .. .. .. .. 2–4
Demand for Grant *re*—
Agriculture and Fisheries—Animal Husbandry—Capital outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. 575–638
Compensation to Zamindars .. .. .. .. .. .. 26–89
Co-operation .. .. .. .. .. .. .. .. 484–544




D—*cont.*


PAGES

Demand for Grant *re*—*cont.*
Demand for Grant for further expenditure in 1958–59 .. .. 574–575
District Administration and Miscellaneous .. .. .. .. 26–89
Education .. .. .. .. .. .. .. .. 392–452
Elections .. .. .. .. .. .. .. .. 209–277
Excise Department .. .. .. .. .. .. .. 122–187
Further Expenditure in 1958–59 .. .. .. .. .. 574–575
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 209–277
Labour including Factories .. .. .. .. .. .. 307–365
Land Revenue Department .. .. .. .. .. .. 26–89
Police .. .. .. .. .. .. .. .. 122–187
Stamps Administration .. .. .. .. .. .. .. 26–89

Deputy Speaker—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries—Animal Husbandry—Capital outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. 637–638
Compensation to Zamindars .. .. .. .. .. .. 88–89
Co-operation .. .. .. .. .. .. .. 536, 544
District Administration and Miscellaneous .. .. .. .. 88–89
Education .. .. .. .. .. .. .. .. 452
Elections .. .. .. .. .. .. .. .. 277
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 276–277
Land Revenue Department .. .. .. .. .. .. 88–89
Stamps Administration .. .. .. .. .. .. 88–89

District Administration and Miscellaneous—
Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. 26–89

District Educational Officers—
*See* Education.

Doraisami Reddiar, Sri B.—
Demand for Grant *re* Agriculture and Fisheries—Animal Husbandry—Capital Outlay on Agriculture .. .. .. .. .. 603–605

Dramatic Performances Act, 1954—
Question *re* number of dramatic performances prohibited in 1958 .. 121–122

Drugs—
Question *re* manufacture of — .. .. .. .. .. .. 23–24

Dyeing and Designing Centre—
Question *re* opening of — at Tiruvannamalai .. .. .. .. 203–204


E


Education—
Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. 392–452
Question *re*—
Compulsory and free elementary —, introduction of — in Development Blocks .. .. .. .. .. .. .. .. 372–373
Compulsory Elementary —, implementation of the recommendation of the All-India Council for Elementary Education *re* .. .. 371–372
District Educational Officers, number of — appointed during 1952–58 .. .. .. .. .. .. .. .. 469–470
Text-books, publication of — by Government from 1961–62 .. 561

Educational concessions—
Question *re*—
Grant of —, details *re* communities and income-limit for .. 379–380
Raising of the income-limit for the grant of — to children of N.G.Os. .. .. .. .. .. .. .. .. 379–380

Elections—
Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. 209–277

Electrical undertakings—
*See* Municipalities.

E—*cont.*

PAGES.

Electricity—
Question *re*—
Extension of — to villagers in Udayarpalayam taluk, Tiruchirappalli district .. .. .. .. .. .. .. 5-7
Generation of — from Kollimalai water-fals .. .. .. .. 104

Electricity Board—
Question *re* Workers in —, retrenchment of .. .. .. .. 559-560

Elumalai, Sri T. P.—
Demand for Grant *re* Labour including Factories .. .. .. 329-335

Estimates Committee—
*See* Committees.

Excise Department—
Demand for Grant *re*— .. .. .. .. .. .. .. 122-187

F

Factories—
Question *re*—
— employing more than 20 workers, bringing under purview of Labour laws .. .. .. .. .. .. .. .. 389
Glass —, details *re* .. .. .. .. .. .. .. .. 303-304

Family Planning—
Question *re* cash awards granted to families of more than ten children by one Tamil Daily, effect on the Family Planning Scheme. 205-206

Famine—
Question *re* relief measures for Sathiamangalam village, details *re*. 294

Film (raw)—
Question *re* supply of raw —, increased quota for .. .. .. 566-567

Filter-point units—
Question *re* acrage benefited by — along banks of Vaigai .. .. 468

Fishermen Co-operative Societies Conference—
Question *re* resolutions passed at — held at Kumbakonam on 28th February 1958, Government's decision on .. .. .. .. 203

Foodgrains—
Question *re*—
'Atta' and wheat products, increasing the supply of .. .. 549-551
Maida and rawa, removal of restrictions on import of .. .. 549-551
Procurement of —, names of places where licences were issued to co-operative societies for .. .. .. .. .. .. .. 302-303
Rawa, supplying good quality of .. .. .. .. .. 549-551
Rice, procurement of — from rice-dealers .. .. .. 463

Forest(s)—
Question *re*—
Planting programme for — areas in Narasingapuram village — details *re* .. .. .. .. .. .. .. .. 469
Regeneration and afforestation of —, details *re* .. .. .. 561
Survey of — for obtaining full data of forest resources .. .. 551

Fruit Preservation—
Question *re* —, State aid to units of .. .. .. .. 380

G

Gazette—
Question *re* Labour —, date of issue of .. .. .. .. 304

Gazetted officers—
Question *re* number of — converted to Christianity from Scheduled Castes .. .. .. .. .. .. .. .. 111

Geological Survey of India—
Question *re* natural gas at Neyyappathur in Sirkali taluk, utilization of .. .. .. .. .. .. .. .. .. .. 475



G—*cont.*

PAGES.

Goshalas—
Question *re* number of — and places where located .. .. .. 560-561

Government departments—
Question *re* reorganization of — action taken on the report of the Special Officer on .. .. .. .. .. .. .. .. .. 587

Government servants—
Question *re*—
— number of — certified as unfit for service by District Medical Officers in 1957-58 and 1958-59 .. .. .. .. .. 195-196
Number of appeals preferred by — declared unfit for service by District Medical Officers to Medical Board .. .. .. 196

Govindasamy, Sri A.—
Demand for Grant *re*—
Compensation to zamindars .. .. .. .. .. .. .. 27
Co-operation .. .. .. .. .. .. .. .. .. 533-536
District Administration and Miscellaneous .. .. .. .. 27
Excise Department .. .. .. .. .. .. .. .. 123-129, 187
Land Revenue Department .. .. .. .. .. .. .. 27
Police .. .. .. .. .. .. .. .. .. .. 123-129, 187
Stamps Administration .. .. .. .. .. .. .. 27

Gudiyatham Municipality—
*See* Local Bodies.

Gypsum—
Question *re* firms to which lands have been leased out for mining of —, names of .. .. .. .. .. .. .. .. 22-23

H

Handlooms—
Question *re* lungis, crisis in the export market for .. .. .. 304-305

Handloom weavers—
Question *re*—
Prize Award Scheme for —, approval of — by All-India Handloom Boards .. .. .. .. .. .. .. .. .. .. 478
Prizes to —, amount allotted and spent in districts for .. .. 477-478

Harijans—
Question *re*—
Government hostels for, amount allotted for construction of — during 1958-59 .. .. .. .. .. .. .. 113-114
House-sites for — in Chidambaram firka, assignment of .. .. 197
House-sites for — in Coimbatore district, steps taken to accelerate acquisition of .. .. .. .. .. .. .. 196-197
Residential scholarships for —, amount allotted for .. .. 116-117

Head of State, Ministers and Headquarters Staff—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. 209-277

Health—
Question *re* 'Camp Grounds' in Thorapadi village, transfer to the Revenue Department .. .. .. .. .. .. .. 291-292

Health Officers—
Question *re*—
Health Officers in Kanyakumari district, appointment of .. .. 99
Re-employment of retired —, details *re* .. .. .. .. 99

Hospitals and dispensaries—
Question *re*—
Dispensary at Kulasekaram (Kanyakumari district), raising of the status of hospital .. .. .. .. .. .. .. .. 19-20
Headquarters Hospital, Tiruchirappalli, opening of dental clinic for .. .. .. .. .. .. .. .. .. 1

PAGES.

Hospitals and dispensaries—cont.
Question re—cont.
Headquarters Hospital, Vellore, number of in-patients in 1958 .. 302
Hospitals in Madras City, overcrowding in .. .. .. .. 15–16
New hospitals, plans for opening of .. .. .. .. .. 2
Tanjore Headquarters Hospital, shifting of .. .. .. .. 110
Veterinary dispensary at Vedaranyam, acquisition of land for .. 115
Women and Children's Hospital in Kanyakumari district, construction of .. .. .. .. .. .. .. .. 1–2

Hostels—
Question re — amount allotted for construction of Government— during 1958-59 .. .. .. .. .. .. .. .. 113–114

Housing—
See Papers laid on the table of the House.

I

Industrial disputes—
Question re—
Cambodia Mills, Coimbatore, imposition of new service conditions by .. .. .. .. .. .. .. .. .. 564
Madurai Mills, settlement of dispute between workers and management of .. .. .. .. .. .. 382–383
Textile mill workers, settlement of dispute re bonus for .. .. 563–564

Industrial Estates—
Question re establishment of —, amount allotted for .. .. .. 480–481

Industrial Tribunals—
Question re awards of — not implemented in last two years .. 475–476

Industries—
Question re—
Apprenticeship training, number of industrial establishments undertaking .. .. .. .. .. .. .. 567–568
Coir industry, number of persons engaged in .. .. .. .. 387–388
Cottage —, articles manufactured under .. .. .. .. 553–554
Cottage industry in Tirunelveli district, number of co-operative societies functioning .. .. .. .. .. .. .. 4
Cycle Manufacturing and Assembly Unit, starting of — in Udayarpalayam taluk .. .. .. .. .. .. .. 484
Hurricane lanterns, manufacture of — number of Harijan students trained in the .. .. .. .. .. .. .. .. 306–307
Industrial potentialities in Tiruchirappalli district, assessment of .. 392
Japanese Industrial Delegation, recommendations of — re small-scale and cottage industries .. .. .. .. .. .. 476
Matchwood Plantations in Coimbatore district, extent of acreage under .. .. .. .. .. .. .. .. 295–297
Palm-gur —, details re establishment of — in Community Development and National Extension Blocks .. .. .. 198, 199
Palmyra brushes, number of persons trained for the manufacture of .. .. .. .. .. .. .. .. .. 11–12
Paper industry, details re establishment of .. .. .. .. 305–306
Paper mills, starting of — at Ootacamund .. .. .. .. 384–385

Irrigation—
Question re—
Aiyirakalavan Peria Eri, renovation of supply channel to .. .. 193
Anicut across Marudhiar, construction of .. .. .. .. 119
Canal from the Cauvery river, construction of .. .. .. 289
Parambikulam Irrigation Project, details re .. .. .. .. 105–107
River pumping schemes, details re .. .. .. .. .. 287–289
River water pumping irrigation schemes, amount spent for .. .. 287
— schemes for Lalgudi taluk, completion of .. .. .. .. 289
Sluices for irrigation tanks in Narangampatti village, Kolathur taluk, construction of .. .. .. .. .. .. .. 103
Vaigai Project, number of workers to be discharged on completion of .. .. .. .. .. .. .. .. .. 199–200



PAGES.

Irusappan, Sri T.—
Demand for Grant re—
Agriculture and Fisheries, Animal Husbandry, Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. 610–613
Compensation to zamindars .. .. .. .. .. .. 38–41
District Administration and Miscellaneous .. .. .. .. 38–41
Land Revenue Department .. .. .. .. .. .. 38–41
Stamps Administration .. .. .. .. .. .. .. 38–41

J

Jagannathan, Sri M.—
Demand for Grant re—
Co-operation .. .. .. .. .. .. .. .. 510–513
Elections .. .. .. .. .. .. .. .. 210
222–226
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 210
222–226
Point of order re—statement that the supporters of the Communist Party were running a society and spending its money .. .. 529

Jails—
Question re—
'C' class prisoners in Madras Penitentiary and district, average cost of maintenance .. .. .. .. .. .. .. 471–472
Open air —, establishment of .. .. .. .. .. 376–377

Jangal Reddiar, Sri M.—
Demand for Grant re—
Excise Department .. .. .. .. .. .. .. 156–158
Police .. .. .. .. .. .. .. .. .. 156–158

Jayaraj, Sri P.—
Demand for Grant re—
Compensation to zamindars .. .. .. .. .. .. 60–62
District Administration and Miscellaneous .. .. .. .. 60–62
Land Revenue Department .. .. .. .. .. .. 60–62
Stamps Administration .. .. .. .. .. .. .. 60–62

K

Kakkan, the Hon. Sri P.—
Demand for Grant re—
Elections .. .. .. .. .. .. .. .. .. 212
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 212

Kalyanasundaram, Sri M.—
Demand for Grant re—
Compensation to zamindars .. .. .. .. .. .. 72–77
District Administration and Miscellaneous .. .. .. .. 72–77
Elections .. .. .. .. .. .. .. .. 210, 219
Excise Department .. .. .. .. .. .. .. 164–168
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 210–219
Land Revenue Department .. .. .. .. .. .. 72–77
Police .. .. .. .. .. .. .. .. .. 164–168
Stamps Administration .. .. .. .. .. .. .. 72–77

Kamalambuja Ammal, Srimathi—
Demand for Grant re—
Compensation to zamindars .. .. .. .. .. .. 50–52
District Administration and Miscellaneous .. .. .. .. 50–52
Land Revenue Department .. .. .. .. .. .. 50–52
Stamps Administration .. .. .. .. .. .. .. 50–52

PAGES.

Kamaraj, The Hon. Sri K.—
Demand for Grant *re*—
Co-operation .. .. .. .. .. .. .. .. 490
Education .. .. .. .. .. .. .. .. 212
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 212

Kandaswami Mudaliar, Sri M. R.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. 607–610

Kandasami Padayachi, Sri M.—
Demand for Grant *re*—
Co-operation .. .. .. .. .. .. .. .. 503–505
Education .. .. .. .. .. .. .. .. 508–409

Karia Gounder, Sri T.—
Question *re* Electricity, generation of — from Kollimalai waterfalls. 104

'Kathal Kalai'—
*See* Yellow Journals.

Kolanthai Ammal, Srimathi—
Demand for Grant *re* Education .. .. .. .. .. .. 416–420

Kothandaraman, Sri V. K.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. 576
Co-operation .. .. .. .. .. .. .. .. 518–519
Excise Department .. .. .. .. .. .. .. 146–150
Labour including Factories .. .. .. .. .. .. 317–321, 342
Police .. .. .. .. .. .. .. .. .. 146–150, 186

Krishnamurthy, Sri V. K.—
Demand for Grant *re*—
Education .. .. .. .. .. .. .. .. 404–406
Excise Department .. .. .. .. .. .. .. 129–131
Police .. .. .. .. .. .. .. .. .. 129–131

Krishnasami Naidu, Sri R.—
Demand for Grant *re* Co-operation .. .. .. .. .. 513–516

L

Labour—
*See* Papers laid on the table of the House.

Labour including Factories—
Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. .. 307–365

Lakshmipathi Raj, Sri P. S. K.—
Demand for Grant *re* Co-operation .. .. .. .. .. .. 527–530

Lands—
Question *re*—
Classification of — in the Lower Bhavani area .. .. .. 290
Extent of — brought under cultivation in the Madurai district .. 203

Land Revenue Department—
Demand for Grant *re*— .. .. .. .. .. .. .. 26–89

Latrines (bore-hole)—
Question *re* number of — in Coimbatore district, constructed during 1958 .. .. .. .. .. .. .. .. .. 5

Lazar, Sri S.—
Bills—District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 .. .. .. .. .. .. .. .. 455–457, 459–460



PAGES.

Lazar, Sri S.—*cont.*
Demand for Grant *re*—
Compensation to zamindars .. .. .. .. .. .. .. 35–38
District Administration and Miscellaneous .. .. .. .. 35–38
Education .. .. .. .. .. .. .. .. 402–404
Land Revenue Department .. .. .. .. .. .. 35–38
Stamps Administration .. .. .. .. .. .. .. 35–38

Legal aid—
Question *re* — to women deserted by their husbands .. .. .. 300–302

Leprosy—
Question *re* — sub-centre for Tiruchirappalli district, opening of .. 199

Livestock—
Question *re* Dairy Farms, starting of — at Pallapatti and Kodaikanal .. .. .. .. .. .. .. .. .. 381–382

Loans—
Question *re*—
Disbursement of — for digging wells during 1958–59 .. .. 119–120
Takkavi —, purchase of fertilizer mixtures out of .. .. .. 206–207

Local Bodies—
Question *re* Gudiyatham Municipality, sanction of loans applied for — during 1957–58 .. .. .. .. .. .. .. .. 194–195

Lourdhammal Simon, the Hon. Srimathi—
Bill—District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 .. .. .. .. .. .. .. .. 453, 454, 459, 460, 461

Lungis—
*See* Handlooms.

M

Mahalingam, Sri N.—
Demand for Grant *re*—
Co-operation .. .. .. .. .. .. .. .. .. 508–510
Elections .. .. .. .. .. .. .. .. .. 219–222
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 219–222

Mani, Sri K. B. S.—
Demand for Grant *re*—
Excise Department .. .. .. .. .. .. .. .. 153–156
Police .. .. .. .. .. .. .. .. .. 153–156

Manickam, Sri P. G.—
Question *re*—
Palm-gur industries, details *re* establishment of — in Community Development and National Extension Blocks .. .. .. 198–199
Residential scholarships for Harijans, amount allotted for .. 116–117

Manickavelu, the Hon. Sri M. A.—
Demand for Grant *re*—
Compensation to zamindars .. .. .. .. .. .. .. 27, 77–87
District Administration and Miscellaneous .. .. .. .. 27, 77–87
Land Revenue Department .. .. .. .. .. .. 27, 77–87
Stamps Administration .. .. .. .. .. .. .. 27, 77–87

Marimuthu, Sri A. R.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries, Animal Husbandry Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. 576, 613–615
Compensation to zamindars .. .. .. .. .. .. .. 27, 47–50
Co-operation .. .. .. .. .. .. .. .. .. 486–489
District Administration and Miscellaneous .. .. .. .. 27, 47–50
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 234–237
Land Revenue Department .. .. .. .. .. .. 27, 47–50
Stamps Administration .. .. .. .. .. .. .. 27, 47–50

PAGES.

Matchwood—
*See* Industries.

Matha Gowder, Sri J.—
Demand for Grant *re*—
Co-operation .. 495–498
Labour including Factories .. 312–317

Matter of Urgent Public Importance—
Salt manufacturers in Arumuganeri, calling attention to large-scale unemployment among .. 571–573

Motor vehicles—
Question *re* small cars from United Kingdom and Continent, relaxation in import of .. 207–208

Motor Vehicles Acts—
Question *re* — Taxation Act, amount of tax collected districtwar including Madras City in 1958 under .. 555–557

Motor Vehicles Taxation Act (1931), notifications issued under—
*See* Papers laid on the table of the House.

Municipalities—
Question *re* electrical undertakings under — taken over by Government .. 7

Munusami Gounder, Sri P. M.—
Demand for Grant *re*—
Compensation to zamindars .. 41–44
District Administration and Miscellaneous .. 41–44
Land Revenue Department .. 41–44
Stamps Administration .. 41–44

Murder—
*See* Police.

Museology—
Question *re* scholars for training in —, offer of West German Government to Indian nationals .. 375–376

Muthia Chettiar, Sri M. A.—
Demand for Grant *re*—
Elections .. 231–234
Head of State, Ministers and Headquarters Staff .. 231–234

N

Nagaraja Monigar, Sri S.—
Demand for Grant *re*—
Compensation to zamindars .. 52–54
District Administration and Miscellaneous .. 52–54
Education .. 410–412, 413
Land Revenue Department .. 52–54
Stamps Administration .. 52–54
Point of information *re* co-operatives to be started solely for Harijans on communal basis .. 513

Nallasivam, Sri K. R.—
Demand for Grant *re* Co-operation .. 489–492

Nallaswami, Sri T. M.—
Demand for Grant *re* Education .. 422–425

Natarajan, Sri C.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries,
Animal Husbandry,
Capital Outlay on Agriculture .. 596–598

National Extension Service—
Question *re* — Block in Merkanam, South Arcot district, amount spent up to 31st March 1958 .. 107–108



PAGES

Natural gas—
*See* Geological Survey of India.

Neyveli Project—
Question *re*—
Industries to be started in public and private sectors at — under Second and Third Five-Year Plans .. 473–474
Ryots of Kooraipettai village affected by — allotment of alternative house-sites for .. 388–389

Non-gazetted Officers—
Question *re*—
Residential quarters for —, construction of .. 120–121
Travel concessions to — in State Transport .. 391

P

Paddy (crops)—
Question *re* pest attack on —, extent of damage .. 16–18

Pakkirisami Pillai, Sri S.—
Bill—District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 .. 460–461
Demand for Grant *re* Labour including Factories .. 308–312

Palaniswami, Sri K. P.—
Demand for Grant *re* Education .. 430–432

Palanisami, Sri N. K.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries,
Animal Husbandry,
Capital Outlay on Agriculture .. 575, 579–583, 637
Compensation to zamindars .. 54–57
District Administration and Miscellaneous .. 54–57
Education .. 420–422
Land Revenue Department .. 54–57
Stamps Administration .. 54–57
Question *re* Dramatic Performances Act, 1954, number of dramatic performances prohibited under — in 1958 .. 121–122

Palaniswamy Gounder, Sri K. G.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries,
Animal Husbandry,
Capital Outlay on Agriculture .. 585–588
Excise Department .. 144–146
Police .. 144–146

Panchayat(s)—
Question *re*—
— for Ramanayinikuppam, North Arcot district, action taken on petition made for constitution of separate .. 298
Panchayats in South Arcot district, number of Class I and Class II .. 200

Panchayat Courts—
Question *re* number and place of location of — in North Arcot district .. 102

Papers laid on the table of the House—
Co-operative Development Schemes during 1958–59, review of progress made in .. 639
Housing in Madras State for 1958–59 .. 639
Kayalpattinam Panchayat, Tirunelveli district, extension of term of office of members of .. 545
Labour in Madras State for 1958–59 .. 639
Motor Vehicles Taxation Act, 1931, notification under .. 89, 187
Notification extending the term of office of members of the Ambasamudram Panchayat, Tirunelveli district .. 365

PAGES

Punjaithalaiyur—
Punjaithalaiyur Panchayat, Coimbatore district, extension of term of office of members of .. .. .. .. .. .. 545
Small-scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956, amendment of rules VII and IX of .. .. .. .. .. .. 639
Stationery and Printing Department, short review of activities of .. 639

Parambikulam Irrigation Project—
*See* Irrigation.

Pesticides—
Question *re* sale of —, amount allotted for .. .. .. .. 18–19

Pests—
*See* betelvines.
*See* Paddy.

Point of information *re*—
Co-operatives to be started solely for Harijans on communal basis .. 513

Point of order *re*—
Absence of Opposition Members including Communist Members during the debate on Demand "Labour including Factories" .. 342
Reference by a member to things which are not facts .. .. .. 583
Statement that the supporters of the Communist Party were running a society and spending its money .. .. .. .. .. 529

Police—
Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. .. 122–187
Question *re*—
Murder of one Ponnuswamy in Coimbatore taluk, withdrawal of prosecution case against persons involved .. .. .. .. 108–109
Opening of "ideal" (police station) in the City .. .. .. 118–119
Uniforms of —, change of .. .. .. .. .. .. 470–471

Ponnammal, Srimathi A. S.—
Demand for Grant *re*—
Excise Department .. .. .. .. .. .. .. 142–144
Police .. .. .. .. .. .. .. .. 142–144

Ponnian, Sri K.—
Demand for Grant *re* Labour including Factories .. .. .. 338–342

Potassium Chlorate—
Question *re* factory for manufacturing of —, opening of — in Tirunelveli district .. .. .. .. .. .. .. .. 568

Pottery industry—
*See* Industries.

Powerlooms—
Question *re* places installed with —, details *re* .. .. .. 24–26

Public Health Act—
Question *re* extension of — to Kanyakumari district .. .. .. 14

Public Works Department—
Contract system, abolition of .. .. .. .. .. .. 568–569
Workers' Union, demands of .. .. .. .. .. .. 194

Pumpsets—
*See* Agriculture.

Privileges Committee—
*See* Committees.

Privilege Motion *re*—
Proceedings, incorrect publication of — in "The Dinamani" .. 307
Report in "The Dinamani", dated 11th March 1959, *re* proceedings of the House .. .. .. .. .. .. .. 208–209

P.W.D. Workers' Union—
*See* Public Works Department.



PAGES

Questions and Answers—
Anandanayaki, Srimathi T. N.—
Question *re* Motor Vehicles Taxation Act, amount of tax collected districtwar including Madras City in 1958 under .. .. .. 555–557

Annamalai, Sri S. M.—
Question *re*—
Block Offices in North Arcot district, number of — visited by Minister for Electricity in August 1958 .. .. .. .. 464–465
Handloom weavers, prizes to —, amount allotted and spent in districts for .. .. .. .. .. .. .. 477–478
Powerlooms, places installed with —, details *re* .. .. .. 24–26
Sales tax, number of persons not paid — in 1957–58 .. .. 560

Arunachala Thevar, Sri V.—
Question *re*—
Elementary school, starting of — at Keeranur .. .. .. 468
Sluices for irrigation tanks in Narangampatti village, Kolathur taluk, construction of .. .. .. .. .. .. 103

Chinnadurai, Sri P. S.—
Question *re*—
Canal from the Cauveri river, construction of .. .. .. 289
Parambikulam Irrigation Project, details *re* .. .. .. 105–107

Daniel, Sri T. T.—
Question *re*—
B.T. Colleges, starting of — in Kanyakumari district .. .. 192–193
Dispensary at Kulasekaram (Kanyakumari district), raising to the status of hospital .. .. .. .. .. .. 19–20
Health Officer for Kanyakumari district, appointment of .. 99
Madras Engineering College, aid by United States Government to .. .. .. .. .. .. .. .. 555
Museology, scholarship for training in —, offer by West German Government to Indian nationals .. .. .. .. .. 375–376
Public Health Act, extension of — to Kanyakumari district .. 14
River water pumping irrigation schemes, amount spent for .. 287
Travancore Central Co-operative Bank at Trivandrum, reserve funds deposited and shares taken in — transfer of .. .. 21–22
Women and Children Hospital in Kanyakumari district, construction of .. .. .. .. .. .. .. .. 1–2

Govindasamy, Sri A.—
Question *re*—
Chinnaselam tank, non-flow of water in .. .. .. .. 110–111
Half-decker "Vijaya", purchase, cost and other details *re* .. 476–477
Harijans in Chidambaram firka, assignment of house-sites for .. 197
Neyveli Project, ryots of Kooraipettai village affected by — allotment of alternative house-sites for .. .. .. .. 388–389
Panamalai tank in Villupuram taluk, renovation of Nandan channel .. .. .. .. .. .. .. .. 569
Parambikulam Irrigation Project, details *re* .. .. .. 105–107
Pesticides, sale of —, amount allotted for .. .. .. 18–19
Tractors, details *re* .. .. .. .. .. .. .. 9–10
Villupuram Block, inclusion of Valavanur in .. .. .. 469

Jagannathan, Sri M.—
Question *re*—
Annamalai University students, constitution of committee to examine disturbed conditions among .. .. .. .. .. 557–558
Fishermen Co-operative Societies Conference, resolutions passed at — and Government's decision on .. .. .. .. 203
Handloom weavers, Prize Award Scheme for — approval by All-India Handloom Board of .. .. .. .. .. .. 478–479
National Extension Service Block in Merkanam, amount spent up to 31st March 1958 .. .. .. .. .. .. 107–108
Panchayats in South Arcot district, number of Class I and Class II .. .. .. .. .. .. .. .. .. 200

PAGES

Questions and Answers—*cont.*

Jayaraj, Sri P.—

Question *re* radio sets in Nannilam taluk, number of — under control of panchayats .. .. .. .. .. .. 104

Kalyanasundaram, Sri M.—

Question *re*—

Betel vines, pest attack on —, remedial measures *re* .. .. 19
Co-operative Farming Society, registration of — in Devadhanam village, Srivilliputhur taluk .. .. .. .. 482
Government departments, reorganization of — action taken on the report of Special Officer on .. .. .. .. .. 557
Gypsum, names of firms to which lands have been leased out for mining of .. .. .. .. .. .. 22–23
Handlooms producing lungis, crisis in the export market .. 304–305
Rice (imported), allotment of — to Madras State for current year .. .. .. .. .. .. .. 14–15
Tanjore Headquarters Hospital, shifting of .. .. .. 110
Text-books, publication of — by Government from 1961–62 .. 561
Vaigai Project, number of workers to be discharged on completion of .. .. .. .. .. .. .. 199–200

Kothandaraman, Sri V. K.—

Question *re*—

District Educational Officers, number of — appointed during 1952–58 .. .. .. .. .. .. .. 469–470
Dyeing and Designing Centre at Tiruvannamalai, opening of .. 203–204
Glass factories, details *re* .. .. .. .. .. .. 303–304
Gudiyatham Municipality, sanction of loans applied for — during 1957–58 .. .. .. .. .. .. ..
Panchayat Courts in North Arcot district, number and places of location .. .. .. .. .. .. .. 102
Raw film, supply of —, increased quota for .. .. .. 566–567
River water pumping schemes, details *re* .. .. .. .. 287–289
Schools under private management in North Arcot district, names of — without playgrounds .. .. .. .. 470

Lakshmipathi Raju, Sri P. S. K.—

*Question re*—

Municipal electrical undertakings taken over by Government, details *re* .. .. .. .. .. .. .. .. 7
Road from Palani to Kodaikanal, formation of .. .. .. 302

Lazar, Sri S.—

*Question re*—

Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, revision of the definition of "Fair Rent" in .. .. .. .. 113
Gazetted officers, number of — converted to Christianity from Scheduled Castes .. .. .. .. .. .. 111
Headquarters Hospital, Tiruchirappalli, opening of dental clinic for .. .. .. .. .. .. .. 1
Industrial potentialities in Tiruchirappalli district, assessment of .. .. .. .. .. .. .. .. 392
Irrigation Schemes for Lalgudi taluk, completion of .. .. 289
"Kathal Kalai", banning of the publication of .. .. .. 100–102
Leprosy sub-centre for Tiruchirappalli district, opening of .. 199
Paddy crops, pest attack on —, extent of damage .. .. 16–18
Parambikulam Irrigation Project, details *re* .. .. .. 105–107
Raw film, supply of —, increased quota for .. .. .. 566–567
Sugarcane Research Station, Cuddalore, details of .. .. 4–5
Tanjore Headquarters Hospital, shifting of .. .. .. 110



PAGES

Questions and Answers—*cont.*

Manickam, Sri P. G.—

Question *re*—

Agriculture College, Coimbatore, number of students admitted to .. .. .. .. .. .. .. .. .. 292
Agricultural Co-operative Supply and Marketing Society, establishment of .. .. .. .. .. .. .. .. 390
Apprenticeship training, number of industrial establishments undertaking .. .. .. .. .. .. .. 567–568
Births and deaths in 1958, details *re* .. .. .. .. .. 2–4
Bore-hole latrines in Coimbatore district, number of — constructed during 1958 .. .. .. .. .. .. .. 5
Carpentry training centres, details *re* .. .. .. .. 10
Cattle, location of key village centres, extension centres and sheep farms .. .. .. .. .. .. .. 111–113
Child Welfare Centres in Coimbatore district, amount allotted for — during 1958–59 .. .. .. .. .. .. 202
Compulsory and free elementary education, introduction of — in Development Blocks .. .. .. .. .. .. 372–373
Factories employing more than 20 workers, bringing under purview of labour laws .. .. .. .. .. .. 389
Foodgrains, procurement of — names of places where licences were issued to co-operative societies for .. .. .. .. 302–303
Government hostels for Harijans, amount allotted for construction of — during 1958–59 .. .. .. .. .. 113–114
Harijans, house-sites for — in Coimbatore district, steps taken to accelerate acquisition of .. .. .. .. .. 196–197
Hurricane lanterns, manufacture of — number of Harijan students trained in .. .. .. .. .. .. .. 306–307
Industrial Estates, establishment of — amount allotted for .. 480–481
Labour Gazette, date of issue of .. .. .. .. .. 304
Matchwood plantations in Coimbatore district, extent of acreage under .. .. .. .. .. .. .. .. 295–297
Palmyra brushes, number of persons trained in the manufacture of .. .. .. .. .. .. .. .. .. 11–12
Paper industry, details *re* establishment of .. .. .. 305–306

Munusami, Sri S. R.—

Question *re*—

"Health Camp Grounds" in Thorapadi village, transfer to the Revenue Department .. .. .. .. .. .. 291–292
Panchayat for Ramanayinikuppam, North Arcot district, constitution of .. .. .. .. .. .. .. .. 298

Pakkirisami Pillai, Sri S.—

Question *re*—

"C" class prisoners in Madras Penitentiary and District Jails, average cost of maintenance of .. .. .. .. .. 471–472
Rains in Madras City, number of huts damaged by — during October 1959 .. .. .. .. .. .. .. 298–299

Palanisami, Sri N. K.—

Question *re*—

"Atta" and wheat products, increasing the supply of .. .. 549–551
Cambodia Mills, Coimbatore, imposition of new service conditions by .. .. .. .. .. .. .. .. 564
City Transport, number of new buses purchased and their cost thereof .. .. .. .. .. .. .. .. 482–484
Co-operative agricultural banks, reorganization of rural banks into .. .. .. .. .. .. .. .. 385–386
Famine relief measures for Sathiamangalam village, details *re*. 294
Forests, regeneration and afforestation of —, details *re* .. .. 561

PAGES

Questions and Answers—cont.
Palanisami, Sri N. K.—cont.
Question re—cont.
Forests, survey of—for obtaining full data of forest resources. .. 551
Geological Survey of India, utilization of natural gas at Neyappathur in Sirkali taluk, by .. .. .. .. 475
"Ideal Police Station" in the City, opening of .. .. 118–119
"Kathal Kalai", banning of the publication of .. .. .. 100–102
Lands, classification of—in the Lower Bhavani area .. .. 290
Madurai Mills, settlement of dispute between workers and management of .. .. .. .. .. .. .. 382–383
Maida and rawa, removal of restrictions on import of .. .. 549–551
Murder of one Ponnuswamy in Coimbatore taluk, withdrawal of prosecution case against persons involved .. .. .. 108–109
Neyveli Project, industries to be started in public and private sectors at—under Second and Third Five-Year Plans .. 473–474
Ootacamund lake, deepening of—for boating .. .. .. 291
Paper mills, starting of—at Ootacamund .. .. .. 384–385
Parambikulam Irrigation Project, details re .. .. .. 105–107
Professional and Arts Colleges, provision of more seats for—in 1959 .. .. .. .. .. .. .. .. .. 377–378
Public Works Department, abolition of contract system in .. 568–569
Raw film, supply of—increased quota for .. .. .. 566–567
Rawa, supplying good quality of .. .. .. .. .. 549–551
Rice, procurement of—from rice-dealers .. .. .. 463–464
Sample survey of cost of production of various crops, undertaking by Economics and Statistical Department, Madras .. 552–553
Second Five-Year Plan, capital outlay for the next two years, increase in .. .. .. .. .. .. .. 369–370
Textile mill workers, settlement of dispute re bonus for .. .. 563

Rajathi Kunchithapatham, Srimathi—
Question re—
Block Development Officers, appointment of women as .. .. 378–379
Legal aid to women deserted by their husbands .. .. .. 300–302

Rasheed, Sri A. A.—
Question re—
Births, graded tax on—levy of .. .. .. .. .. 100
Cash award granted to families of more than ten children by a Tamil Daily, effect on Family Planning Scheme .. .. 205–206
Hospitals in Madras City, overcrowding in .. .. .. 15–16
Islamiah College, cancellation of scholarships to two students of. 570
Maida and rawa, removal of restrictions on import of .. 549–551
Open air Jails, establishment of .. .. .. .. .. 376–377
Parambikulam Irrigation Project, details re .. .. .. 105–107
Police uniforms, change of .. .. .. .. .. .. 470–471
Sir Ramaswamy Mudaliar Choultry, Madras, lease of the site belonging to .. .. .. .. .. .. .. 299
Tambaram-Chingleput and Madras-Arkonam lines, electrification of .. .. .. .. .. .. .. .. .. 116
Temple jewels, approximate value of .. .. .. .. 200–201

Sampath, Sri T.—
Question re Tanjore Headquarters Hospital, shifting of .. .. 110

Santhanam, Sri P. S.—
Question re—
Loans for digging wells, disbursement of—during 1958–59 .. 119–120
National Extension Service Scheme, inclusion of certain firkas under .. .. .. .. .. .. .. 117



PAGES.

Questions and Answers—cont.
Sankaran, Sri V.—
Question re—
Bee-hive farm and nursery, establishment of—at Kodaikanal and Surilimalai, Madurai district .. .. .. .. 465–466
Coconut breeding-cum-research station, starting of—at Sholavandan or Nilakottai .. .. .. .. .. .. 374–375
Dairy farms, starting of—at Pallapatti and Kodaikanal .. 381–382
Filter-point units along banks of Vaigai benefited by—acreage. 462
Fruit Research Station, starting of—in Periyakulam taluk .. 300
High schools, number of—opened in Madurai district till the present time from the beginning of Second Five-Year Plan period .. .. .. .. .. .. .. .. .. 473
Thirukattupalli Co-operative Bank, details re liquidation of .. 22
Wattle plantations, raising of—in Madurai district .. .. 111

Sarathi, Sri M. P.—
Question re—
Crimes, steps taken to prevent—in the last three years .. 109–110
Dearness allowance, merger with pay of N.G.Os. of .. .. 380
Electricity Board workers, retrenchment of .. .. .. 559–560
Headquarters Hospital, Vellore, number of in-patients in 1958. 302
Non-gazetted Officers, residential quarters for—construction of. 120–121
N.G.Os. travel concessions to—in State Transport .. .. 391
Oil producers co-operative society in North Arcot district, complaint against .. .. .. .. .. .. 371
Oil producers' co-operative societies in North Arcot district, number of .. .. .. .. .. .. .. .. 297–298
Refugees from Ceylon, number of .. .. .. .. .. 12–14
Service conditions of non-gazetted officers, legislation for regulation of .. .. .. .. .. .. .. 376
State Transport, number of new buses purchased for Madras City and Kanyakumari district .. .. .. .. 483–484

Sattanatha Karayalar, Sri K.—
Question re—
Agricultural pump-sets, collection of minimum charges for motors of lower capacity .. .. .. .. .. 11
Ambar Charka, operation of—by power .. .. .. .. 20–21
Blood transfusion, number of cases in each of Government hospitals, quantity of blood given .. .. .. .. 202
Coir industry, number of persons engaged in .. .. .. 387–388
Drugs, manufacture of .. .. .. .. .. .. 23–24
Fruit Preservation Units—State aid to .. .. .. .. 580
Goshalas, number and places where located .. .. .. 560–561
Industrial Tribunals, awards of—not implemented in last two years .. .. .. .. .. .. .. .. 475–476
Japanese Industrial Delegation, recommendations of—re small-scale and cottage industries .. .. .. .. 476
Nanjilnad Project, inclusion of—under National Water-supply and Sanitation Project .. .. .. .. .. .. 204
Parambikulam Irrigation Project, details re .. .. .. 105–107
Potassium Chlorate, factory for manufacture of—opening of—in Tirunelveli district .. .. .. .. .. 568
Pottery industry in Tirunelveli district, number of co-operative societies functioning .. .. .. .. .. .. 4
P.W.D. Workers' Union, demands of .. .. .. .. 194
Rubber, cultivation of—in Kanyakumari district .. .. 564–566
State Transport, storing of petrol in barrels by— .. .. 390

Selvaraj, Sri M.—
Question re—
Copper, manufacture of—starting of factory for .. .. 482

PAGES.

Questions and Answers—*cont.*
Selvarajan, Sri M. S.—*cont.*
Question *re*—*cont.*
Teachers' Provident Fund Compulsory Insurance Pension Rules, 1955, extension of benefits under — to non-teaching staff in High Schools .. .. .. .. .. .. .. 471
X-ray equipments, manufacture of .. .. .. .. .. 305

Srinivasa Iyer, Sri R.—
Question *re*—
Elementary Schools, number of — opened during 1958–59 .. 467–468
Kalagam-Avadayarkoil road, metalling with granite jelly of .. 371
Subbiah Mudaliar, Sri A. R.—
Question *re*—
State Transport Advisory Committee, number of small bus operators in .. .. .. .. .. .. .. .. 122
Takkavi loans, purchase of fertilizer mixtures out of .. .. 206–207

Thiagarajan, Sri N. R.—
Question *re*—
Forest areas in Narasingapuram village, planting programme for. 469
Madras-Cape Comorin Road, linking of new roads to .. .. 569
New hospitals, plans for opening of .. .. .. .. 2
Parambikulam Irrigation Project, details *re* .. .. .. 105–107
Sri Ramalinga Chowdambiga Devasthanam (Thevaram), appointment of trustees .. .. .. .. .. .. 300

Thiagaraja Pillai, Sri M. D.—
Question *re*—
Health Officers, re-employment of retired — details *re* .. .. 99

Urkavalan, Sri P.—
Question *re*—
Madras-Trivandrum Express, detachment of sleeping coach at Madurai .. .. .. .. .. .. .. .. .. 195

Vedarathnam, Sri A.—
Question *re*—
All-India Agricultural Service, establishment of — details *re*. 293–294
Bee-keeping, names and number of bee colonies established for .. .. .. .. .. .. .. .. .. 466–467
Compulsory Elementary Education, implementation of recommendation of All-India Council for Elementary Education *re*. 371–372
Cottage Industries, articles manufactured under .. .. 553–554
Cyclone in the Vedaranyam-Nagapattinam Canal, damage to boats due to .. .. .. .. .. .. .. 289–290
Engineering College, establishment in Tanjore with public contribution of .. .. .. .. .. .. .. 381
Mathematics and Science Graduate Teachers, dearth of .. .. 191–192
Rubber, cultivation of — facilities thereof .. .. .. 565–566
Steel, monthly quota of — allotted in 1958 .. .. .. 562
Teachers, prize scheme for — details *re* .. .. .. .. 102–103
Veterinary dispensary at Vedaranyam, acquisition of land for .. 115

Veluchami, Sri T.—
Question *re*—
Alangulam Block Office, rectification of defects noticed by Minister for Electricity during his visit to .. .. .. 464–465
Block Advisory Committee, convening of — once every half-year. 373–374
Educational concessions, grant of — details *re* communities and income limit for .. .. .. .. .. .. .. .. 379–380
Educational concessions to children of N.G.Os., raising of the income-limit for the grant of .. .. .. .. .. 379–380
Elementary School, opening in Kannadikulam village of .. 380
Multi-purpose co-operative societies, starting of — in Kadupatti and Marukkalangulam villages .. .. .. .. 470
Periakulam tank, details *re* .. .. .. .. .. .. 291





PAGES

Questions and Answers—*cont.*
Veluchami, Sri T.—*cont.*
Question *re*—*cont.*
Social Welfare Board in Tirunelveli district, activities of — during 1957–58 .. .. .. .. .. .. .. 374–375
Surandai-Sundarapandiyapuram road, execution of work connected with .. .. .. .. .. .. .. .. 295
Women Welfare Centres, number of — in Tirunelveli district .. 551–553

Viswanathan, Sri K. R.—
Question *re*—
Aiyrakalavan Peria Eri, renovation of supply channel to .. 198
Andimadam-Alathur road in Udayarpalayam taluk, Tiruchirappalli district, alignment of .. .. .. .. .. 8
Andimadam-Kodukkur road in Udaiyarpalayam taluk, Tiruchirappalli district, alignment of .. .. .. .. .. 8
Cycle Manufacturing and Assembly Unit, starting of — in Udayarpalayam taluk .. .. .. .. .. .. 484
Electricity supply to villages in Udayarpalayam taluk, Tiruchirappalli district, extension of .. .. .. .. .. 5–7
Government servants declared unfit for service by D.M.Os., number of appeals preferred by .. .. .. .. .. 196
Government servants, number of — certified as unfit for service by D.M.Os. in 1957–58 and 1958–59 .. .. .. .. 195–196
Jayankondam Board High School building, sanction of half-grant for construction of .. .. .. .. .. .. 472
Mathur-Vairankaval road in Udayarpalayam taluk, metalling of. 197

R

Radio sets—
Question—
Number of — under control of panchayats in Nannilam taluk .. 104

Railways—
Question *re*—
Madras-Trivandrum Express, detachment of sleeping coach at Madurai .. .. .. .. .. .. .. .. .. 195
Tambaram-Chingleput and Madras-Arkonam lines, electrification of. 116

Rains—
Question *re* damage caused by — in Madras City during October 1959. 298–299

Rajathi Kunchithapatham, Srimathi—
Demand for Grant *re*—
Excise Department .. .. .. .. .. .. .. 136–138
Police .. .. .. .. .. .. .. .. .. 136–138

Ramachandran, Sri K.—
Demand for Grant *re*—
Compensation to zamindars .. .. .. .. .. .. 27–31
Co-operation .. .. .. .. .. .. .. .. 530–533
District Administration and Miscellaneous .. .. .. .. 27–31
Education .. .. .. .. .. .. .. .. 412–413
Land Revenue Department .. .. .. .. .. .. 27–31
Stamps Administration .. .. .. .. .. .. 27–31

Ramachandra Reddi, Sri M.—
Demand for Grant *re*—
Excise Department .. .. .. .. .. .. .. 162–164
Police .. .. .. .. .. .. .. .. .. 162–164

Ramakrishna Thevar, Sri S.—
Demands for Grants *re*—
Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. 615–617

Ramalingam, Sri N. S.—
Demand for Grant *re* Co-operation .. .. .. .. .. 500–503

PAGES

Ramamirtha Thondaman, Sri T. R.—
- Demand for Grant *re*—
  - Compensation to zamindars .. .. .. .. .. .. 64–67
  - District Administration and Miscellaneous .. .. .. .. 64–67
  - Land Revenue Department .. .. .. .. .. .. 64–67
  - Stamps Administration .. .. .. .. .. .. 64–67

Ramasami Naidu, Sri S.—
- Demand for Grant *re* Education .. .. .. .. .. 426–428

Ramasami Thevar, Sri S.—
- Demands for Grants *re*—
  - Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculaure .. .. .. .. .. .. .. 588–590
  - Compensation to zamindars .. .. .. .. .. .. 62–64
  - District Administration and Miscellaneous .. .. .. .. 62–64
  - Land Revenue Department .. .. .. .. .. .. 62–64
  - Stamps Administration .. .. .. .. .. .. 62–64

Ramaswamy Mudaliyar, Sri V. K.—
- Demands for Grants *re*—
  - Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. 578, 620–626

Ramaswamy Pillai, Sri T. S.—
- Bill—District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 .. .. .. .. .. .. .. 453, 454, 458
- Demand for Grant *re*—
  - Education .. .. .. .. .. .. .. .. 432–433
  - Elections .. .. .. .. .. .. .. .. 255–258, 274
  - Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 255–258, 274
  - Labour including Factories .. .. .. .. .. .. 342–346

Rasheed, Sri A. A.—
- Question *re* small cars from United Kingdom and Continent, relaxation in import of .. .. .. .. .. .. .. 207–208

Refugees—
- Question *re*—from Ceylon, number of .. .. .. .. .. 12–14

Research Station(s)—
- Question *re*—
  - Coconut-breeding-*cum*-starting of—at Sholavandan or Nilakottai. 374–375
  - Fruit—, starting of—in Periyakulam taluk .. .. .. 300
- *See* Sugarcane.

Rice—
- Question *re* imported—, allotment of—to Madras State for current year .. .. .. .. .. .. .. 14–15
- *See* Foodgrains.

Roads—
- Question *re*—
  - Andimadam-Alathur road in Udayarpalayam taluk, Tiruchirappalli district, alignment of .. .. .. .. .. 8
  - Andimadam-Kodukkur road in Udayarpalayam taluk, Tiruchirappalli district, alignment of .. .. .. .. .. 8
  - From Palani to Kodaikanal, formation of .. .. .. .. 302
  - Kalagam-Avadayarkoil road, metalling with granite jelly of .. 371
  - Madras-Cape Comerin—, linking of new roads to .. .. .. 569
  - Mathur-Vairankaval road in Udayarpalayam taluk, metalling of.. .. 197
  - Surandai-Sundarapandiyapuram road, execution of work connected .. 295



Rubber—
- Question *re*—
  - Cultivation of—facilities thereof .. .. .. .. .. 565–566
  - Cultivation of—in Kanyakumari district .. .. .. .. 564–566

Rulings and Observations of the Chair—
- *Decorum*—
  - It is not unparliamentary to say that members belonging to a particular party run a co-operative society and handle its funds, but names of individuals need not be mentioned .. .. .. 529
  - When the Chair is on its legs, members must not stand .. .. 637
- *Debate*—
  - Members should not put the House or the Speaker in a very difficult situation in deciding which member is telling the truth. They should only refer to things that have taken place and not to those that are likely to take place. They can talk about the work of Ministers but cannot make allegations about something which happened in some municipality .. .. .. .. 213
- *Personal explanation*—
  - A member can rise on a point of personal explanation only at the end of the Minister's speech, but can rise on a point of order in the middle of a speech .. .. .. .. .. .. .. 186
- *Personal reference*—
  - Members should not make references to persons not in the House. 583
  - Members should not make remarks about particular individuals not in the House to defend themselves but can only make general remarks .. .. .. .. .. .. .. 139, 147
- *Questions*—
  - Supplementary questions—
    - Members must put questions and not give information .. .. 370
    - Members must put questions and not give opinions .. .. 555, 556
- *Rules of the Assembly*—
  - Interpretation of the rules is left to the Chair .. .. .. 556

## S

Sadayappa Mudaliar, Sri S. C.—
- Demands for Grants *re*—
  - Agriculture and Fisheries, Animal Husbandry, and Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. 590–592

Sahajananda, Sri A. S.—
- Demand for Grant *re*—
  - Elections .. .. .. .. .. .. .. .. 254–255
  - Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 254–255
  - Excise Department .. .. .. .. .. .. .. 150–151
  - Police .. .. .. .. .. .. .. .. 150–151

Sampath, Sri T.—
- Demands for Grants *re*—
  - Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. 598–600

Samuel Nadar, Sri A.—
- Demand for Grant *re* Labour including Factories .. .. .. 335–338

Sankaran, Sri V.—
- Question *re* lands brought under cultivation in Madurai district, extent of .. .. .. .. .. .. .. .. 203

Sannasi, Sri T. V.—
- Demand for Grant *re*—
  - Elections .. .. .. .. .. .. .. .. 226–229
  - Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 226–229

PAGES

Santhanam, Sri P. S.—
- Demand for Grant *re*—
  - Compensation to zamindars .. .. .. .. .. .. 69–72
  - District Administration and Miscellaneous .. .. .. .. .. 69–72
  - Land Revenue Department .. .. .. .. .. .. 69–72
  - Stamps Administration .. .. .. .. .. .. 69–72

Sathiyavanimuthu, Dr. Srimathi—
- Demand for Grant *re*—
  - Elections .. .. .. .. .. .. .. .. 247–251
  - Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 247–251

Sattanatha Karayalar, Sri K.—
- Demand for Grant *re*—
  - Compensation to zamindars .. .. .. .. .. .. 27
  - District Administration and Miscellaneous .. .. .. .. 27
  - Land Revenue Department .. .. .. .. .. .. 27
  - Stamps Administration .. .. .. .. .. .. .. 27
- Question *re* Administration Reports, delay in the issue of — avoidance of .. .. .. .. .. .. .. .. .. 114–115

Scholarships—
- Question *re* residential — for Harijans, amount allotted for .. .. 116–117

School(s)—
- Question *re*—
  - Elementary —, opening of — in Kannadikulam village .. .. 380
  - Elementary —, number of — opened during 1958–59 .. .. 467–468
  - Elementary —, starting of — at Keeranur .. .. .. .. .. 468
  - High —, number of — opened in Madurai district till the present time from the beginning of Second Five-Year Plan period .. 473
  - Jayankondam Board High School building, sanction of half-grant for construction of .. .. .. .. .. .. .. 472
  - Names of — under private management in North Arcot district without playgrounds .. .. .. .. .. .. .. 470

Second Five-Year Plan—
- Question *re* Capital outlay for the next two years of, increase in. 369–370

Selvarajan, Sri M. S.—
- Demands for Grants *re*—
  - Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. 617–620
- Question *re* Viswakarma Associations, number of — registered under Industries Department in Tiruchendur taluk .. .. .. 197–198
- Salt manufacturers in Arumuganeri, calling Minister's attention to large-scale unemployment among .. .. .. .. .. 571–573

Service(s)—
- Question *re* Legislation for regulating — conditions of Non-Gazetted Officers .. .. .. .. .. .. .. .. .. 376

Sir Ramaswamy Mudaliar Choultry (Madras)—
- *See* Choultry.

Social Welfare Board—
- Question *re* activities of — in Tirunelveli district during 1957–58 .. 374–375

Soundaram Ramachandran, Dr. Srimathi T. S.—
- Demand for Grant *re*—
  - Elections .. .. .. .. .. .. .. .. .. 237–242
  - Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 237–242

Speaker, Mr.—
- Announcement *re* Committee of Privileges, election of members to. 570–571
- Bill—District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 .. .. .. .. .. .. .. .. 453, 454, 455, 457, 460, 461



PAGES

Speaker, Mr.—*cont.*
- Demands for Grants *re*—
  - Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. 575, 576, 578, 582, 583
  - Co-operation .. .. .. .. .. .. .. .. 486, 487, 489, 518, 529
  - Compensation to zamindars .. .. .. .. .. .. 26, 27, 50
  - District Administration and Miscellaneous .. .. .. .. 26, 27, 50
  - Education .. .. .. .. .. .. .. .. 392, 398, 402, 425
  - Elections .. .. .. .. .. .. .. .. 209, 218, 224, 252, 257, 258
  - Excise Department .. .. .. .. .. .. .. 122, 123, 146, 147, 148, 186, 187
  - Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 209, 218, 224, 252, 257, 258
  - Labour including Factories .. .. .. .. .. .. 307, 308, 309, 310, 342
  - Land Revenue Department .. .. .. .. .. .. 26, 27, 60
  - Police .. .. .. .. .. .. .. .. .. 122, 123, 146, 147, 148, 186, 187
  - Stamps Administration .. .. .. .. .. .. .. 26, 27, 50
  - Estimates Committee, election of Members to .. .. .. 573–574
- Point of order *re*—
  - Reference by a Member to things which are not facts .. .. 583
  - Statement that the supporters of the Communist Party were running a society and spending its money .. .. .. .. .. 529
- Privileges Committee, election of members to .. .. .. .. 209
- Privilege Motion *re*—
  - Proceedings, incorrect publication of — in 'The Dinamani' .. 307
  - Report in 'The Dinamani', dated 11th March 1959, *re* proceedings of the House .. .. .. .. .. .. .. 208–209
  - *See* Rulings.

Srinivasa Iyer, Sri R.—
- Demand for Grant *re* Co-operation .. .. .. .. .. .. 492–495

Sri Ramalinga Chowdambiga Devasthanam (Thevaram)—
- *See* Endowments.

Stamps Administration—
- Demand for Grant *re* — .. .. .. .. .. .. .. .. 26–89

State Aid to Industries Act, 1922—
- *See* Papers laid on the table of the House.

State Transport Advisory Committee—
- *See* Transport.

Stationery and Printing Department—
- *See* Papers laid on the table of the House.

Steel—
- Question *re* monthly quota of — allotted in 1958 .. .. .. 562

Subbiah, Sri V.—
- Demand for Grant *re*—
  - Co-operation .. .. .. .. .. .. .. .. .. 498–500
  - Excise Department .. .. .. .. .. .. .. .. 134–136
  - Labour including Factories .. .. .. .. .. .. .. 324–326
  - Police .. .. .. .. .. .. .. .. .. .. 134–136

Subbiah Mudaliar, Sri A. R.—
- Demands for Grants *re*—
  - Agriculture and Fisheries, Animal Husbandry, Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. .. .. 600–603

S—*cont.*

PAGES

Subbiah Mudaliar, Sri A. R.—*cont.*
Demands for Grants *re*—*cont.*
Compensation to zamindars .. 67–69
District Administration and Miscellaneous .. 67–69
Land Revenue Department .. 67–69
Stamps Administration .. 67–69

Subramania Gounder, Sri K. S.—
Demand for Grant *re* Co-operation .. 519–524, 534

Subramaniam, Sri M. P.—
Bill—District Municipalities (Extension to the Transferred Territory) Bill, 1959 .. 458–459
Demand for Grant *re*—
Co-operation .. 524–527, 543
Education .. 429–430

Subramaniam, the Hon. Sri C.—
Demand for Grant *re*—
Education .. 392, 436–452
Elections .. 210, 213, 214, 263–276
Excise Department .. 123, 126
Head of State, Ministers and Headquarters Staff .. 209, 213, 214, 263–276
Police .. 123, 126
Demands for Grants for further Expenditure in 1958–59 .. 574–575
Estimates Committee, election of Members to .. 573–574
Privileges Committee, election of members to .. 209

Sugarcane—
Question *re*—Research Station, Cuddalore, details of .. 4–5

T

Tanks—
Question *re*—
Chinnasalem tank, non-flow of water in .. 110–111
Panamalai—in Villupuram taluk, renovation of Nandan channel .. 569
Periakulam—, details *re* .. 291
*See* Irrigation.

Temple(s)—
Question *re*—jewels, approximate value of .. 200–201

Teachers—
Question *re*—
Mathematics and Science Graduate—, death of .. 191–192
Prize scheme for—, details *re* .. 102–103
—Provident Fund Compulsory Insurance Pension Rules, 1955, extension of benefits under— to non-teaching staff in High Schools .. 471

Text-books—
*See* Education.

Thangavelu, Sri S.—
Demand for Grant *re*—
Excise Department .. 131–134
Police .. 131–134

Thiagarajan, Sri N. R.—
Point of order *re* absence of Opposition Members including Communist Members during the debate on Demand 'Labour including Factories' .. 342
Privilege Motion *re* report in 'The Dinamani', dated 11th March 1959, *re* proceedings of the House .. 208



T—*cont.*

PAGES

Tractors—
Question *re* details *re*— .. 9–10

Transport—
Question *re*—
City—, number of new buses purchased and their cost thereof .. 482–484
Half-decker 'Vijaya', purchase, cost and other details *re* .. 476–477
State—, number of new buses purchased for Madras City and Kanyakumari district .. 483–484
State Transport Advisory Committee, number of small Bus Operators in .. 122
Storing of petrol in barrels by State—, details *re* .. 390
*See* N.G.Os.

Travancore Central Co-operative Bank—
Question *re* reserve funds deposited and shares taken in—, transfer of .. 21–22

Trivandrum Express—
*See* Railways.

U

Universities—
Question *re* Annamalai University students, constitution of Committee to examine disturbed conditions among .. 557–558

V

Vagheesam Pillai, Sri G.—
Demand for Grant *re*—
Agriculture and Fisheries, Animal Husbandry and Capital Outlay on Agriculture .. 592–595

Vaigai Project—
*See* Irrigation.

Vedarathnam, Sri A.—
Demand for Grant *re*—
Education .. 413–416
Labour including Factories .. 326–328
Point of order *re* reference by a Member to things which are not facts.

Vedayyan, Sri V.—
Demand for Grant *re*—
Compensation to zamindars .. 57–60
District Administration and Miscellaneous .. 57–60
Land Revenue Department .. 57–60
Stamps Administration .. 57–60

Veluchamy, Sri T.—
Demand for Grant *re*—
Elections .. 245–247
Head of State, Ministers and Headquarters Staff .. 245–247

Venkataraman, the Hon. Sri R.—
Demand for Grant *re*—
Co-operation .. 484–486, 488, 492, 506, 507, 512, 518, 536–544
Labour including Factories .. 307, 312, 331, 346, 353, 356–365
Salt manufacturers in Arumuganeri, attention called to large-scale unemployment among .. 571–573

Veterinary—
Question *re*—dispensary at Vedaranyam, acquisition of land for .. 115

Village Panchayats Act, 1950—
*See* Papers laid on the table of the House.

V—*cont.*

PAGES

Vinayakam, Sri K.—
Privilege Motion *re* report in 'The Dinamani', dated 11th March 1959, *re* proceedings of the House .. .. .. .. .. 208

Viswakarma Associations—
Question *re* number of—registered under Industries Department in Tiruchendur taluk .. .. .. .. .. 197–198

Viswanathan, Sri K. R.—
Demand for Grant *re*— 31–35
Compensation to zamindars .. .. .. .. .. .. 31–35
District Administration and Miscellaneous .. .. .. .. 242–245
Elections .. .. .. .. .. .. .. .. .. 242–245
Head of State, Ministers and Headquarters Staff .. .. .. 31–35
Land Revenue Department .. .. .. .. .. .. 31–35
Stamps Administration .. .. .. .. .. .. ..

W

Water-supply—
Question *re* Nanjilnad Project, inclusion of—under National Water-supply and Sanitation Project .. .. .. .. 204–205

Wattle—
Question *re*—plantations, raising of—in Madurai district .. 111

Wells—
Question *re*—
Digging of—, disbursement of loans for—during 1958–59 .. 119–120
Drinking water—for Kannadikulam village, Tirunelveli district, completion of .. .. .. .. .. .. .. .. 294–295

Women Welfare Centres—
Question *re* number of—in Tirunelveli district .. .. .. 551–552

X

X-ray—
Question *re*—equipments, manufacture of .. .. .. .. 205

Y

Yellow journals—
Quesiton *re* 'Kathal Kalai', banning of the publication of .. 100–102

D
V211,31 N59
N60-2134

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
Messrs. City Book Company, Madras-4.
Messrs. Higginbothams, Limited, Madras-2.
Messrs. New Century Book House, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. The South India Saiva Siddhantha Works Publishing Society, Madras-1.
Messrs. Venkatarama & Co., Madras-1.
Messrs. V. Perumal Chetty & Sons, Madras-1.
Messrs. M. Doraisawmy Mudaliar & Co., Madras-1.
Messrs. C. Subbaiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapetta, Madras-14.
Messrs. The Free India Co-operator's Agency, Madras-4.
Messrs. Palani & Co., Triplicane, Madras-5.
Messrs. Moorthy Publications, Alwarpet, Madras-18.

### IN MUFASSAL OF MADRAS STATE.

Messrs. [illegible] Book Depot, Booksellers, Dhasarpuram P.O., Chingleput district.
Sri K. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Messrs. The Oriental Book House, Madurai.
Messrs. Vivekanandha Press, Printer, Publisher, and Bookseller, Madurai.
Messrs. J. J. M. Book Depot and Stationery Emporium, Madras.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Muthamizh Manram, Mayuram.
Messrs. Bharatha Matha Book Depot, Tanjore, Tanjore district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Tanjore district.
Messrs. Appar Book Stall, Tanjore.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. Palani Prachuram, Booksellers, Clock Tower, Pudukkottai.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. [illegible]aniappa Brothers, Tiruchirappalli district.
Sri [illegible] Sulthan Mo[illegible]ed, Alangudi, Tiruchirappalli district.
Sri S. R. [illegible]ia Pillai, Tirunelveli, Tirunelveli district.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. C.P.S. Book Shop, Chidambaram.
Messrs. The Educational Supplies Company, Coimbatore (R.S. Puram).
Messrs. Vasantham Stores, Booksellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 222, Raja Street, Coimbatore.
Messrs. Sivalinga Vilas Book Depot, Erode, Coimbatore district.
Messrs. Arivu Noolagam, Booksellers, Market, Ootacamund, Nilgiris.
Sri S. M. Jaganathan, Bookseller and Publisher, Nagercoil, Kanyakumari district.

### IN OTHER STATES.

Messrs. U. R. Shenoy & Sons, Mangalore, South Kanara district.
Messrs. Hajee K. P. Ahmed Kunhi & Bros., Cannanore, North Malabar district.
Messrs. The S.S. Book Emporium, Booksellers, "Mount-Joy" Road Basavangudi, Bangalore-4.
Messrs. People's Book House, Mysore.
Messrs. H. Venkataramiah & Sons, Vidyanidhi Book Depot, Mysore, South India.
Messrs. Panchayat Samachar, Gutala, West Godavari district.
Messrs. Book-Lovers (Private), Limited, Guntur and Hyderabad.
Sri D. Sreekrishnamurthy, Ongole, Guntur district.
Messrs. Janatha Agencies, Booksellers, Gudur.
Messrs. M. Seshachalam & Co., Masulipatnam, Krishna district.
Messrs. The Commercial Links, Governorpet, Vijayavada, Krishna district.
Messrs. Triveni Publishers, Masulipatnam, Krishna district.
Messrs. Gupta Brothers, Vizagapatam.
Messrs. Jain Book Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. C. M. Joseph & Sons, Trichur.
Messrs. The Crystal Press, Booksellers, Martandam P.O., S. Travancore.
Messrs. The Book and Review Centre, Vijayavada.
Messrs. The B.H.U. Press Book Depot, Banares.
Messrs. B. S. Jain & Co., 71, Abupura, Muzaffarnagar (U.P.).
Messrs. Andhra University General Co-operative Stores, Limited, Waltair.
Messrs. Balakrishna Book Co., Hazratganj, Lucknow.

PRINTED AND PUBLISHED BY THE CONTROLLER OF STATIONERY AND PRINTING, MADRAS, ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.